வெளியீடு—21—9—1968]
[Issued—21—9—1968]

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

*வியாழக்கிழமை, 1968 மார்ச் 14*

Thursday, 14th March 1968

தொகுதி XI—எண். 1
Volume XI—No. 1

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

*சட்டப் பேரவைத் துறை*
*சென்னை-9*
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

விலை, 50 காசுகள்]
Price, 50 Paise]

31-5-68
61437

# Tamil Nadu Legislative Assembly Debates.

**THIRD SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.**

**14th to 16th, 18th and 19th March 1968.**

**Volume XI (Nos. 1 to 5).**

## TABLE OF CONTENTS.


| | PAGES |
|---|---|
| *Thursday, 14th March* 1968. | |
| Personnel of the Government of Tamil Nadu ... | iii-iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... | v |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... | vi–xi |
| 1. Questions and Answers ... ... ... ... | 1–25 |
| 2. Adjournment Motions— | |
| (i) Decision of Mill owners to close down the Spinning Mills at Coimbatore ... ... ... | 26–27 |
| (ii) Shifting of studios to other States due to non-release of Hindi Films ... ... ... | 27–28 |
| (iii) "Thamizhar Palai's" activities in Coimbatore and Erode towns ... ... ... | 28 |
| 3. Calling Attention— | |
| Failure of monsoon in Kadambuliyur firka and post-ponement of collection of loans granted for soil conservation schemes ... ... ... | 28–30 |
| 4. Government Motion— | |
| Election to the Committee of Privileges ... | 30 |
| 5. Announcement— | |
| Election to the Committee of Privileges ... | 24 |

PAGES

*Thursday*, 14*th March* 1968—cont.

6. Voting on Demands for Grants for 1968-69—*cont.*
Demand No. 16—Agriculture ... ... ...
Demand No. 39—Capital Outlay on Agriculture ... ... ... ... ... 31-126
7. Papers laid on the Table of the House ... ... 127

*Friday*, 15*th March* 1968.

1. Questions and Answers ... ... ... ... 129-152
2. Privilege Matter—
Publication in the weekly "Silamboli" *re.* the Legislative Assembly ... ... ... 152
3. Announcements—
(i) Adjournment Motions ... ... ... 153
(ii) Election to the Committee on Estimates 155-156
(iii) Election to the Committee on Public Accounts. ... ... ... 156
(iv) One found-out hundred-rupee currency note. ... ... ... ... 180
4. Calling Attention—
Famine conditions in West Ramanathapuram District, grant of remission of land tax and postponement of collection of loan ... ... 153-155
5. Government Motions—
(i) Election to the Committee on Estimates 155
(ii) Election to the Committee on Public Accounts. ... ... ... ... 156
6. Voting on Demands for Grants for 1968-69—*cont.*
Demand No. 25—Welfare of the Scheduled Tribes, Castes and Other Backward Classes 156-180, 180-254
7. Papers laid on the Table of the House ... ... 254-255

*Saturday*, 16*th March* 1968.

1. Questions and Answers ... ... ... ... 275-297
2. Privilege Matter—
Publication in the weekly "Silamboli" *re.* the Legislative Assembly ... ... 298
3. Point of Order—
Consent for Adjournment Motions ... 299-301



PAGES

*Saturday*, 16*th March* 1968—cont.

4. Calling Attention—
Refusal to take back the workers in Coimbatore Textool Company ... ... ... 301-304
5. Voting on Demands for Grants for 1968-69—*cont.*
Demand No. 2—Motor Vehicles Acts—Administration ... ... ... ... ...
Demand No. 30—Road Transport Schemes ...
Demand No. 43.—Capital Outlay on Transport Schemes ... ... ... ... 304-379
6. Papers laid on the Table of the House ... ... 380

*Monday*, 18*th March* 1968.

1. Questions and Answers ... ... ... ... 427-448
2. Government Bill—
The Madras City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968 ... ... ... 449
3. Voting on Demands for Grants for 1968-69—*cont.*
Demand No. 3—General Sales Tax and other Taxes and Duties—Administration ...
Demand No. 1—Land Revenue Department
Demand No. 31—Famine Relief ... ... 449-552
4. Papers laid on the Table of the House ... ... 533

*Tuesday*, 19*th March* 1968.

1. Questions and Answers ... ... ... ... 553-573
2. Presentation of Report—
Report of the Committee on Estimates (action taken on the recommendations of the Committee contained in the Report on 'Police' 574
3. Voting on Demands for Grants for 1968-69—*cont.*
Demand No. 24—Labour including Factories 574-648
**4. Papers laid on the Table of the House ... ... 648**

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (சுகாதார அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொதுச் சுகாதாரம், மருந்துகள், இடவசதிக் கட்டுப்பாடு, அனாதை இல்லங்கள், இரவலர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, முகம்மதியர் அறக் கட்டளைகள், சரக்குகளின் விலைகள், வழங்கல் குறித்த சட்டம்.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, பஞ்சாயத்துகள், பூதான, கிராமதான இயக்கம், கதர் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF MADRAS

### Governor of Madras

SARDAR UJJAL SINGH

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU C. N. ANNADURAI (*Chief Minister*): *Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers and Deputy Collectors, Finance, Planning, Police, Elections, Prohibition, Indian Overseas, Refugees and Evacuees and Food production.*

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Industries*) : *Minister in-charge of Education (including Technical Education), Official Language, Industries, Textiles, Yarn, Handlooms, Mines and Minerals, Iron and Steel Control, Electricity, Employment and Training, Companies, Religious Endowment and Legislature.*

3. THE HON. THIRU M. KARUNANIDHI (*Minister for Public Works*) : *Minister in-charge of Public Works, Minor Irrigation including S.M.I.P. Works, Highways, Transport, Nationalised Transport and Ports.*

4. THE HON. THIRU K. A. MATHIALAGAN (*Minister for Food and Revenue*) : *Minister in-charge of Food, Revenue, Board of Revenue, District Revenue Establishments and Commercial Taxes.*

5. THE HON. THIRU A. GOVINDASAMY (*Minister for Agriculture*) : *Minister in-charge of Agriculture, Animal Husbandry, Fisheries, Forests and Cinchona.*

6. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare and Information*) : *Minister in-charge of Harijan Welfare, Information and Publicity, Stationery and Printing, Government Press, Cinematograph Act, Women's and Children's Welfare.*

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Law and Co-operation*) : *Minister in-charge of Law, Co-operation, Courts, Prisons, Registration, Approved Schools and Vigilance Services, Passports, Legislation on Chits, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Weights and Measures, Labour and Housing.*

## தமிழக அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழக ஆளுநர்.

**சர்தார் உஜ்ஜல் சிங்.**

1. **மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** (முதல் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : பொது, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள், துணைக் கலெக்டர்கள் ஆகியோர் குறித்த அலுவல்கள், நிதி, திட்டமிடுதல், போலீஸ், தேர்தல்கள், மதுவிலக்கு, வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், உணவு உற்பத்தி.

2. **மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** (கல்வி, தொழில் அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : கல்வி (தொழிற் கல்வி உட்பட), ஆட்சிமொழி, தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, மின்சாரம், வேலை வாய்ப்பும், பயிற்சி அளித்தலும் கம்பெனிகள், சமய அறக் கட்டளைகளும், சட்டப் பேரவையும்.

3. **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** (பொதுப்பணி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: பொதுப்பணிகள், சிறப்புச் சிறு பாசன திட்ட வேலைகள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, துறைமுகங்கள்.

4. **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** (உணவு வருவாய்த் துறை அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : உணவு, வரி வருவாய், வருவாய்த்துறைக் கழகம், மாவட்ட ரெவின்யூ நிறுவனங்கள், வாணிக வரிகள்.

5. **மாண்புமிகு திரு. ஏ. கோவிந்த்சாமி** (விவசாய அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: வேளாண்மை, கால்நடை வளர்ப்ப, மீன்வளம், காடுகள், சிங்கோனா.

6. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** (அரிசன நல, செய்தி அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள்: அரிசன நலன், செய்தி-விளம்பரத் துறை, எழுது-பொருள் அச்சுத் துறை, அரசாங்க அச்சகம், சினிமாப் படங்கள் சட்டம், மகளிர்-சிறுவர் நலன்.

7. **மாண்புமிகு திரு. செ. மாதவன்** (சட்டம், கூட்டுறவு அமைச்சர்) பொறுப்பு வகிக்கும் துறைகள் : சட்டம், கூட்டுறவு, நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், பயண அனுமதிச் சீட்டுகள், சீட்டு நிதிகள் சட்டம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், தொழிலாளர், வீட்டுவசதி.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Health*) : *Minister in-charge of Public Health, Medicine, Accommodation Control, Orphanages, Beggars, Newsprint Control, wakf, Prices and Supplies of Goods Act.*

9. THE HON. THIRU M. MUTHUSWAMY (*Minister for Local Administration*) : *Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries, Rural Industries Project and Ex-servicemen.*

## தமிழக சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. சி. பா .ஆதித்தனார்

### பேரவைத் துணைத் தலைவர்

புலவர் கா. கோவிந்தன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. வி. எஸ். கோவிந்தராசன்

திரு. பெ. மலைச்சாமி

திரு. ந. தருமலிங்கம்

திரு. எஸ். முருகையன்

திரு. வை. சுவாமிநாதன்

திரு. வி. கே. கோதண்டராமன்

### சட்டப் பேரவைச் செயலாளர்

திரு.. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்

திரு. கே. எம். நாகராஜன், பி.ஏ., எல்எல்.பி.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்எல்.பி.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி.)

திரு. ஜி. இராகவன்.

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 75 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 76 | கருணாநிதி, மு. (அமைச்சர்) | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 77 | கருப்பையா, ஆ. | கங்கைகொண்டான் (செ. வ.). |
| 78 | கருப்பையா, ஆர். | அரியலூர். |
| 79 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 80 | காசிராமன், நா. | கும்பகோணம். |
| 81 | கேசவலு, தே. | கள்ளக்குறிச்சி. |
| 82 | கிட்டப்பா, என். | மாயூரம். |
| 83 | கொளத்தூர் கோதண்டம் | மதுராந்தகம். |
| 84 | கோதண்டராமன், வி. கே. | குடியாத்தம். |
| 85 | கோதண்டராமையா, கே. எஸ். | உத்தனப்பள்ளி. |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, கு. | பழனி (செ.வ.). |
| 87 | கிருஷ்ணமூர்த்தி, சி. | கொடவாசல். |
| 88 | கிருஷ்ணமூர்த்தி, மு. | பேராவூரணி. |
| 89 | கிருஷ்ணன், அ. | மங்களூர் (செ.வ.). |
| 90 | கிருஷ்ணன், ஈ. ஆர். | சேலம்-2. |
| 91 | கிருட்டிணன், நா. | காஞ்சீபுரம். |
| 92 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. | அவினாசி. |
| 93 | குமாரசாமி, கே. என். | பல்லடம். |
| 94 | குப்பம்மாள், திருமதி சு. | போளூர். |
| 95 | மாதவன், செ. (அமைச்சர்) | திருப்பத்தூர். |
| 96 | மகாதேவன், ப. | கன்யாகுமரி. |
| 97 | மலைச்சாமி, பெ. | மேலூர். |
| 98 | மலைக்கண்ணன், வீ. | இளையாங்குடி. |
| 99 | மணி, கே.பி.எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 100 | மணி, எம். எஸ். | திருச்சிராப்பள்ளி–1. |
| 101 | மணி, வி. எஸ்.எஸ். | ஆத்தூர். |
| 102 | மாணிக்கவாசகம், இரா. | தொண்டாமுத்தூர். |
| 103 | மணியன், பி.எஸ். | சோழவந்தான். |
| 104 | மாரிமுத்து, அ. | ஆடுதுறை. |
| 105 | மாரிமுத்து, வ.ஆர். | பட்டுக்கோட்டை. |
| 106 | மாரிமுத்து, மூ. | தலைவாசல் (செ.வ.). |
| 107 | மார்டின், டி. | சாத்தான்குளம். |
| 108 | மருதாசலம், என். | பேரூர் (செ.வ.). |
| 109 | மதியழகன், கே. வ. (அமைச்சர்) | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 110 | மெய்யப்பன், சா. | காரைக்குடி. |
| 111 | மேத்தா, எம். | பெரியகுளம். |
| 112 | மூக்கையா தேவர், பி.கே. | உசிலம்பட்டி. |
| 113 | முனுசாமி கௌண்டர், பி.எம். | கிருஷ்ணகிரி. |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 114 | முனுசாமி, ரா.ரா. | மேல்மலையனூர். |
| 115 | முனியாண்டி, ஏ. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 116 | முனு. ஆதி | திருப்போரூர். |
| 117 | முருகையன், புலவர் க. | திருவையாறு. |
| 118 | முருகேசன், க. | பாலக்கோடு. |
| 119 | முருகையன், எஸ். | கலசபாக்கம். |
| 120 | முனுசாமி, செஞ்சி, வெ. | செஞ்சி. |
| 121 | முத்தையா, கே. கே. | கரூர். |
| 122 | முத்தையா, மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 123 | முத்துலிங்கம், எஸ். | வந்தவாசி (செ.வ.). |
| 124 | முத்துசாமி, பா. க.சி. | பெண்ணாகரம். |
| 125 | முத்துசாமி, மா. (அமைச்சர்) | நாமக்கல். |
| 126 | முத்துச்செல்வன், பு.செ. | முசிறி. |
| 127 | நாச்சிமுத்து, நா. | ஒட்டன்சத்திரம். |
| 128 | நாகலிங்கம், பா. | பொன்னேரி (செ.வ.) |
| 129 | நாகசுந்தரம், ஆர். | திருச்சிராப்பள்ளி-2. |
| 130 | நல்லசிவன், க. ர. | மொடக்குறிச்சி. |
| 131 | நல்லசாமி, தோ. மு. | களூர். |
| 132 | நஞ்சன், சி. | கூடலூர் (செ.வ.) |
| 133 | நரசிம்மன், வ. சி. | ஆரணி. |
| 134 | நாராயணன், இரா. | வரகூர். |
| 135 | நடராசன், மு. க. து. | லால்குடி. |
| 136 | நடராஜன், ஜி. | காட்பாடி. |
| 137 | நடராசன், ஈ. எம். | அந்தியூர். |
| 138 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர்-அவை முன்னவர்.) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்). |
| 139 | பச்சையப்பன், எஸ். பி. | சங்கராபுரம். |
| 140 | பழனி, சி. | ஓமலூர் (செ.வ.) |
| 141 | பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம் (செ.வ.) |
| 142 | பழனிவேல் ராஜன் | தேனி. |
| 143 | பன்னீர்செல்வம், எம். | ஆம்பூர் (செ.வ.) |
| 144 | பரமசிவ கவுண்டர், பி. என். | பொங்களூர். |
| 145 | பரமசிவம், எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 146 | பரிசுத்த நாடார், ஏ. ஒய். எஸ். | தஞ்சாவூர். |
| 147 | பட்டாபி நாயுடு, எ. | காவேரிப்பட்டணம். |
| 148 | பீர் முஹமது, ஹாஜி. ம. மு. | மேலப்பாளையம். |
| 149 | பெரியசாமி, பெ. | ராசிபுரம். |
| 150 | பெருமாள், ஏ. ஆர். | கரியாப்பட்டி. |
| 151 | பொன்னம்பலம், புலவர் பொ. | திருமயம். |
| 152 | பொன்னப்ப நாடார், ஆர். | விளவங்கோடு. |
| 153 | பொன்னுமலை, தி. | பனைமரத்துப்பட்டி |
| 154 | ராஜா, ஏ. எம். | பவானி. |

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழக சட்டப் பேரவை

### உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி.பா. (பேரவைத் தலைவர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜு, எஸ். | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்க தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி (செ. வ.). |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ.வ.) |
| 10 | அண்ணாமலை, சி. வி. எம். | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, எ.வி.பி. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | ஆதிமூலம், டி.எஸ். | சேரன்மகாதேவி. |
| 20 | பாலன், எம்.சி. | நாகர்கோவில். |
| 21 | பாலகிருஷ்ணன், எ.கோ. | வானூர் (செ.வ.). |
| 22 | பலராமன், இல. | கணியம்பாடி. |
| 23 | பாலசுப்பிரமணியன், செ. | பெருந்துறை. |
| 24 | பாலசுப்பிரமணியன், எ. | திண்டுக்கல். |
| 25 | பெள்ளி கௌடர், ஜெ. | கூனூர். |
| 26 | பாரதி மோகன், கோ. | குத்தாலம். |
| 27 | பூபதி, எம். | கோயம்புத்தூர்-கிழக்கு. |
| 28 | பூவராகன், கோ. | விருத்தாசலம். |
| 29 | போஜன், கே. | உதகமண்டலம். |
| 30 | சீமைச்சாமி, கரு. | மானாமதுரை. |
| 31 | சிதம்பரநாத நாடார், எ. | கொளச்சல். |
| 32 | சின்னராஜி, சி. கே. | திருப்பத்தூர். |
| 33 | சின்னச்சாமி, மு. | ஈரோடு. |
| 34 | சின்னசாமி, வி. | ஏர்க்காடு (ஆ.வா.), |
| 35 | சித்தன், என். எஸ்.வி. | திருமங்கலம். |
| 36 | தனுஷ்கோடி, பி.எஸ். | திருவாரூர் (செ.வ.). |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 37 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி. |
| 38 | துரைராஜ், சு.ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 39 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 40 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில் (செ.வ.). |
| 41 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 42 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 43 | எட்மண்ட் பெர்னாண்டோ, ஜி. ஆர். | திருச்செந்தூர். |
| 44 | இளம்வழுதி, இரெ. | கடலூர். |
| 45 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 46 | கணேசன், எல். | ஒரத்தநாடு. |
| 47 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 48 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 49 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம். |
| 50 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 51 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.). |
| 52 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 53 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் துணைத் தலைவர்). | செய்யாறு. |
| 54 | கோவிந்தராசன், சொ. | மதுரை சென்ட்ரல். |
| 55 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 56 | கோவிந்தராகன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 57 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 58 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 59 | கோவிந்தசாமி, எ. (அமைச்சர்). | முகையூர். |
| 60 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 61 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 62 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 63 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 64 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை-கிழக்கு. |
| 65 | ஜயராஜ், பி. | நன்னிலம் (செ. வ.). |
| 66 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 67 | ஜெயராமன், பி. | பேர்ணம்பட்டு (செ. வ.) |
| 68 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ.வ.). |
| 69 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 70 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 71 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 72 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 73 | கண்ணன், எம். ஆர். | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 74 | கண்ணப்பன், எம். | இணைத்துக்கடவு. |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
| --- | --- | --- |
| 155 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர். |
| 156 | ராஜமன்னார், எஸ். ஏ. | வாணியம்பாடி. |
| 157 | இராசாங்கம், மா. | கம்பம். |
| 158 | ராஜாங்கம், என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 159 | ராஜவேலு, டி. ஏ. | திருச்செங்கோடு. |
| 160 | ராமச்சந்திர துரை, ரா. | கந்தர்வக்கோட்டை. |
| 161 | இராமச்சந்திரன், க. ந. | ஆண்டிமடம். |
| 162 | ராமச்சந்திரன், எம். ஜி. | பரங்கிமலை. |
| 163 | இராமச்சந்திரன், எஸ். | பண்ருட்டி. |
| 164 | ராமலிங்கம், எஸ். | ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 165 | இராமமூர்த்தி, க. | திண்டிவனம். |
| 166 | இராமன், மு. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 167 | ராமன், ஓ. பி. | மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 168 | இராமதாசன், வ.க. | பவானிசாகர் (செ.வ.) |
| 169 | இராமசாமி, இ. | வால்பாறை (செ.வ.) |
| 170 | ராமசாமி கவுண்டர், கே.எம். | கோபிசெட்டிப்பாளையம். |
| 171 | ராமசாமி நாயுடு, எஸ். | சாத்தூர். |
| 172 | ராமசாமி, எஸ்.ஜே. | அரக்கோணம். |
| 173 | இராசு, ஜே.எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 174 | இரத்தினசபாபதி, மு. | விளாத்திகுளம். |
| 175 | ரெத்தினதேவர், ரா. | முதுகுளத்தூர். |
| 176 | சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 177 | சகாதேவக் கண்டர், கே. | தண்டராம்பட்டு. |
| 178 | சாமிநாதன், கே.என். | வெள்ளக்கோயில். |
| 179 | சங்கரய்யா, என். | மதுரை—மேற்கு. |
| 180 | சந்தானம், பி.எஸ். | செங்கம் (செ.வ.) |
| 181 | சாரதி, மா.பா. | வேலூர். |
| 182 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்) |
| 183 | சீனிவாசன், பெ. | விருதுநகர். |
| 184 | செல்லக் கவுண்டர், அ. | சேந்தமங்கலம் (ஆ.வா) |
| 185 | சேனாபதி, அ. | காங்கேயம். |
| 186 | சேதுராமன், சி. | சிவகங்கை. |
| 187 | சண்முகம், எம் | விழுப்புரம். |
| 188 | சண்முகசுந்தரம், அ.ப. | பொள்ளாச்சி. |
| 189 | சண்முகம், வி.எஸ் | விராலிமலை. |
| 190 | சிற்றம்பலம்?, தொ.க. | பரமக்குடி (செ.வ.) |
| 191 | சிவஞானம், ம. பொ. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்.) |
| 192 | சிவபெருமாள், க.ந. | ஆத்தூர். |
| 193 | சிவசாமி, மு.ச. | தூத்துக்குடி. |
| 194 | சிவசுப்பிரமணியன், எஸ். | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 195 | சோமசுந்தரம், ந. | வலங்கைமான் (செ.வ.) |
| 196 | சௌந்தரபாண்டியன், நா. | ராதாபுரம். |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
| --- | --- | --- |
| 197 | சௌந்தரபாண்டியன், பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 198 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. | பாபநாசம். |
| 199 | சுந்தர பாரதி, சௌடி. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 200 | சீனிவாசன், சு. | போடிநாயக்கனூர். |
| 201 | சுவாரெஸ், திருமதி ஏ. | நியமன உறுப்பினர். |
| 202 | சுப்பராஜா, ஏ.அ. | இராஜபாளையம். |
| 203 | சுப்பையா, ஆ.கு. | கோட்டூர் (செ.வ.) |
| 204 | சுப்பையா, கே.வி. | ஆலங்குடி. |
| 205 | சுப்பையா முதலியார், ஏ.ஆர். | கடையநல்லூர். |
| 206 | சுப்பிரமணியம், அ.லெ. | திருநெல்வேலி. |
| 207 | சுப்பிரமணிய கவுண்டர், எம். | தர்மபுரி. |
| 208 | சுப்பிரமணியம், இ.எம். | திருக்கோவிலூர். |
| 209 | சுரேந்திரன், எம். | மேட்டூர். |
| 210 | சுவாமிநாத ஒடையார், த.சி. | மன்னார்குடி. |
| 211 | சுவாமிநாதன், வை. | திருவெறும்பூர். |
| 212 | தம்பி நாயக்கர், பா. | வடமதுரை. |
| 213 | தங்கப்பன், டி. | இராமநாதபுரம். |
| 214 | தவமணி தேவர், வி. | சேடப்பட்டி. |
| 215 | தீர்த்தகிரி, ந. | ஹரூர் (செ.வ.) |
| 216 | தீர்த்தகிரி கவுண்டர், தி. | ஊத்தங்கரை. |
| 217 | திம்மராய கவுண்டர், தி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 218 | திப்பையா, டி.டி.எஸ். | மேட்டுப்பாளையம். |
| 219 | வடிவேலு, எஸ்.கே. | தொட்டியம். |
| 220 | வரதராஜன், என். | வேடசந்தூர். |
| 221 | வேதாசலம், மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 222 | வீரமணி, சி. | சங்கரி (செ.வ.) |
| 223 | வீராசாமி, ந. | ஆர்க்காடு. |
| 224 | வேலப்பன், சி. வே. | கபிலமலை. |
| 225 | வெள்ளத்துரை, ஏ. | வாசுதேவநல்லூர். |
| 226 | வேலுசாமி, பி. | சிங்காநல்லூர். |
| 227 | வெங்கடாசல தேவர், பெ. | வேதாரண்யம். |
| 228 | வெங்கடசாமி, பி. | ஹோசூர். |
| 229 | வேழவேந்தன், கா. | கும்மிடிப்பூண்டி. |
| 230 | விஜய ரகுநாத தொண்டமான், ஆர். | புதுக்கோட்டை. |
| 231 | விஜயராஜ், தா. | திருவண்ணாமலை. |
| 232 | விநாயகம், கே. | திருத்தணி. |
| 233 | விசுவநாதன், செ. கோ. | செங்கற்பட்டு. |
| 234 | வில்லியம், எம். | கிள்ளியூர். |
| 235 | வெற்றிடம் | தென்காசி |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண். (1) | பெயர். (2) |
| --- | --- |
| 1 | அண்ணாதுரை, சி. என். (முதலமைச்சர்). |
| 2 | நாராயணசாமி முதலியார், கே. (தலைமை வழக்கறிஞர்). |

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 5% அல்லது 6% ஏறுவது அல்லது இறங்குவது இருக்கலாம். அதற்கான காரணங்கள் என்ன வென்று திட்டவட்டமாகக் கண்டுபிடிப்பதற்கில்லை. இந்த மாநிலம் முழுவதிலும் ஒரே வகையில்தான் தேர்வு நடைபெறுகிற முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதைத் தனியாக ஏற்படுத்த வேண்டுமா, அதற்கென்று தனிப் புத்தகங்கள் போன்றவற்றை வைக்கவேண்டுமென்பது பொருத்தமானது என்பதுபற்றிய யோசனை இப்போது இல்லை. பொறுத்திருந்துதான் அதுபற்றி முடிவு செய்யவேண்டும்.

DR. H. V. HANDE : In the S.S.L.C. examination, one of the chronic problems every year is that the question papers become known before the examination. Another chronic problem associated with it is that the number of boys and girls who come out of these examinations is greater than the number of seats available in the Colleges. Will this Government come forward to exactly assess the probable number of students who will come out successful in the S.S.L.C. examination and the actual number of seats available in the colleges and make suitable adjustments so that this chronic problem of the mad rush of students to the colleges can be effectively and satisfactorily solved at that stage itself?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கேள்வித்தாள்கள் முன்கூட்டியே வெளிவராமல் இருக்க முன்கூட்டி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முயற்சி செய்திருக்கிறது. ஆனால் என்னென்ன நடவடிக்கைகள் என்பதுபற்றி எடுத்துச் சொல்வது பொருத்தமுடையதாக இருக்காது. ஆனால் இப்போது பாஸ், ஃபெயில் என்று கூட்டிப் போடுவதில்லை. எலிஜிபிள் டி ஃபார் காலேஜ் கோர்ஸ் என்ற அளவிற்குத்தான் கல்லூரியில் புகத் தகுதி படைத்தவர்கள் என்ற முறையில்தான் மார்க்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு மூன்று கருத்துக்கள் நிலவுகின்றன. அதைக் கல்வி ஆலோசனைக் குழுவில் வைத்து முடிவு எடுக்கலாம் என்ற கருத்தும் இருக்கிறது. பாஸ் என்ற வகையில் வைத்துக் கல்லூரியில் புகத் தனித் தகுதி வைத்து அதிகமான எண் வைத்து வைக்கலாம் என்ற யோசனையும் கூறப்பட்டிருக்கிறது. அதைக் கல்வி ஆலோசனைக் குழுவில் வைத்துத் தக்க முடிவுகளை எடுக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. கல்லூரிகளில் உள்ள இடத்திற்குத் தக்க அளவிற்குத்தான் மாணவர்களைத் தேர்வு பெற வைக்கவேண்டுமென்று சொன்னால் எல்லோருமே கல்லூரிக்குப் போவது என்றிருக்கமாட்டார்கள். எஸ். எஸ். எல். ஸி. தேர்வு பெற்ற மாணவர்கள் வேறு துறைகளுக்கும் செல்கிறார்கள். கிட்டத்தட்ட 55 அவன்யூஸ் இருக்கின்றன என்று சென்ற ஆண்டு பத்திரிகையில் வந்திருந்தது. இதுபற்றி ஆலோசனைக் குழு ஆராய்ந்து தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Is it a fact that the S.S.L.C. Examination Board sets a limit that 50 per cent of the students, whether they are below the standard or above the standard, must pass and with a view to achieve this kind of objective they used to constitute what is known as a Moderation Board which used to sit after the answer papers were valued and then add marks and thus raise the percentage of passes to 50 if unfortunately for some reason or other the percentage of passes was below 50. There used to be such a system. May I know whether this system is still in vogue ?

Secondly, last time just before the examinations commenced, I handed over a bundle of question papers to the Hon. the Chief Minister and told him that those papers related to the examinations



that were to take place some days later. I told him that those question papers were available for boys and girls just before the examination. After the examination I verified and found out that the same questions in the question papers I handed over to the Hon. the Chief Minister were given in the actual examination question papers. I told the Hon. the Chief Minister that the question papers that I gave him were in respect of the examinations to be conducted a few days later. May I know whether the Hon. the Chief Minister also verified whether my statement was correct and if so, what was the result of his verification. I, for my part, found out after verification that the question papers were the same. May I know what steps the Government propose to take to check this leakage, if any, so that the students may be judged on their own merits and are made to pass in the examination on the basis of their performance instead of by virtue of adopting some such sneaky methods?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, the hon. Member has clubbed two questions. I hope in future he need not do this. Taking up the last question first, I may tell the hon. Member that the papers that were handed over by him to me were verified and were found to be somewhat correct and departmental action has been taken. That is why this year certain modifications have been made.

As regards the first question put by the hon. Member, I would first of all like to know the source of the information of this kind, for the hon. Member. Because, this is a scheme which I do not know of. So, I do not know wherefrom he has got the information like that, namely, that 50 per cent of the students should pass whether they are below the standard or above the standard. I do not know what interest the Board has got about the percentage of passes in the examination. I do not expect the hon. Members to give such information on the floor of the House before verification and before being satisfied themselves about the correctness of their statements.

THIRU K. VINAYAKAM : On a point of personal explanation, I would like to state that our Hon. the Chief Minister and myself once used to the students in the S.S.L.C. classes. In those days, the Moderation Board used to sit at Ootacamund and they used to manipulate the S.S.L.C. results. Evidently the Chief Minister has forgotten that system. Some years before, some such system was in practice. That was only my source of information. I do not know whether it is in practice now or not. That is why I have asked in my question, "Whether that system is in vogue now? Anyway, that system was in vague when we were students in high schools and colleges.

THE HON. THIRU C. N. ANNADURAI : I should think the hon. Member forgets the fact that during the period in which we were students, we were not aware of where the question papers were sent for valuation. It is only now-a-days everything is being manipulated. That apart, to make the examinations foolproof, this

year we are contemplating a scheme wherein the answer papers to the questions will not be sent to the Examiners direct to their places, but the Examiners will be asked to come to a particular place where they will be given the answer papers and asked to value them in a week's time and after correcting the answer papers they can go away to their respective places.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** சார், இரண்டு வருஷத்திலும் ஆங்கிலத்தில் மாத்திரம் போதுமான மார்க்குகள் வாங்கவில்லை என்ற காரணத்தினால் தவறியவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும். மாடரேஷன்பற்றி ஒரு போர்டு இருக்கிறது. பல்கலைக்கழகம் அதற்கான விதிகளை வகுக்கிறது. அந்த விதிகளின் அடிப்படையிலே மாடரேஷன் போர்டு அதைப்பற்றிக் கவனிக்கவேண்டும். எந்தெந்தப் பாடங்களில் எவ்வளவு எவ்வளவு மார்க்குகள் வாங்கவேண்டுமென்று விதி இருக்கிறது. அதில் ஏதாவது மாடரேஷன் கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளை மீறி யாரும், எதையும் செய்துவிட முடியாது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** கேள்வித்தாள்கள் வெளியாகிக் கைக்குக் கிடைத்தும் அப்படிப் பரீட்சை எழுதிய மாணவர்கள் தேறியது மிகவும் குறைந்த சத விகிதமாக இருப்பதற்குக் காரணம் எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதக்கூடிய மாணவர்கள் ஒரு சப்ஜெக்டை காலையிலும், ஒரு சப்ஜெக்டை மாலையிலும் எழுதுவதால்தான். அதனால் தான் இவ்வளவு குறைந்த அளவில் பாஸ் செய்திருக்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது ஒரு தினத்திற்கு ஒரு சப்ஜெக்ட் பரீட்சைமட்டும் எழுதக் கூடிய அளவில் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் பரீட்சை எழுதிய காலத்திலிருந்து அப்படியேதான் இருந்துகொண்டு இருக்கிறது. உறுப்பினர் கூறுவதுபோல் ஏற்படுத்தினால் மாணவர்களும் ஆசிரியர்களும் 8 நாட்கள், 10 நாட்கள் தங்க நேரிடும். அதனால் உணவு வசதி மற்ற வசதிகள் ஆகியவற்றைக் கவனிக்கவேண்டிவரும். ஆகவே அதே முறை தொடர்ந்து கையாளப்படுகிறது. இதைப்பற்றி ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, முன்பெல்லாம் ஆங்கிலத்திற்கும், தமிழுக்கும் மட்டும்தான் நோட்ஸ் இருந்தது. இன்று சமூகப் பாடங்களுக்கெல்லாம்கூட நோட்ஸ் இருக்கின்றது. இத்தகைய நோட்ஸ்களை ட்யூட்டோரியல் காலேஜிலும் போடுகிறார்கள். மாணவர்கள் அதைமட்டும் படிப்பதால் அவர்களுக்கு ஒரிஜினல் திங்கிங் இருக்காது. உதாரணமாக நான் ஆசிரியர் பொறுப்புக் குழுவிலே இருந்தபொழுது மாணவர்களைப் பார்த்து 'How old are you', என்று கேட்டால் 'My old is 18' என்று சிலர் சொல்லுகிறார்கள். இதனால் 'ஒரிஜினல் திங்கிங்' போய்விடுகிறது. எனவே நோட்ஸ்களைத் தடைப்படுத்தும் முறையில் ஏதாவது திட்டம் அரசாங்கத்திடம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நோட்ஸ் போடுவதைத் தடுத்து நிறுத்தச் சட்டம் இல்லை. சில ஆசிரியர்களுக்கே அத்தகைய நோட்ஸ்கள் தேவைப்படுகின்றன. ஆனால் நோட்ஸ்களைப் படிக்காமல் 'ஒரிஜினாலிடி', தன்னிறைவு பெற்ற அறிவைச் சோதிக்கும் அளவிற்கு நிலைமை இருக்கவேண்டுமென்ற கருத்துப் பரவலாக இருக்கிறது. எந்த முறையிலே பயிற்சியையும், பாடத்திட்டத்தையும், தேர்வையும் வைக்கலாம் என்று கல்வி நிபுணர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.





**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவரவர்களே, முதல் தடவை பரீட்சை எழுதித் தேர்வு பெற்றவர்களின் சத விகிதம் அதிகமாகவும், அடுத்து 2, 3 தடவைகள் முயற்சி செய்து தேறிய மாணவர்களின் சத விகிதம் குறைவாகவும் இருக்கிறதே. முதல் தடவை எழுதும்போது ஏதோ தவறியிருக்கலாம். அடுத்த 2-வது, 3-வது தடவை எழுதும்போது சத விகிதம் குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவர்களுடைய திறமைக் குறைவுதான் காரணம். திறமையுடையவர்கள் முதல் தடவையிலேயே வெற்றிபெற்றுவிடுகிறார்கள். 2-வது, 3-வது தடவை எழுதுபவர்கள் எட்டிப்பிடிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH: With regard to percentage of passes in the S.S.L.C. Examination I wish to know whether the percentage is better in the City high schools or in the rural high schools?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இதைப் பற்றிய விவரக் குறிப்பு இல்லை.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவரவர்களே, 1965–66, 1966–67 ஆண்டுகளில் எஸ். எஸ். எல். சி.-யில் தேறிய மாணவர்களுக்கும், இவ்வாண்டு தேர்வு பெற்ற மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்க என்ன திட்டம் அரசாங்கத்திடம் உள்ளது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இது பொதுப்படையான கேள்வி. தேறிவருகின்ற அத்தனைபேருக்கும் வேலைவாய்ப்பு தேடித் தருவதற்கு எந்த அரசாங்கத்தாலும் உத்தரவாதம் கொடுக்க முடியாது. வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்தலாம் என்பதில் தனியாகக் கவனம் எடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. மு. ச. சிவசாமி:** தலைவரவர்களே, எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதியவுடன் மாணவர்கள் மதிப்பெண்கள் போடும் ஆசிரியரைத் தேடிச் செல்வதாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் சென்று பாஸ் செய்து வந்திருக்கிறார்கள். இந்த முறையை மாற்ற தமிழக அரசு எஸ். எஸ். எல். சி. தேர்வுக்கு மதிப்பெண் போடும் முறையை வேறு முறையில் மாற்ற உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இதுபற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இப்பொழுது மார்க் அதிகம் வாங்க வேண்டுமென்பதற்காக ஆசிரியர்களைத் தேடி மாணவர்களுக்குப் பதிலாக பெற்றோர்கள் போவதாகத்தான் கேள்வி.

**திரு. டி. மார்டின்:** சார், இந்த ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாக பல பள்ளிகள் மூடப்பட்டதால் மாணவர்கள் கல்வி வசதியைப் பெற முடியாமல் போய்விட்டது. அதனால் இவ்வாண்டு தேர்வு எண்களின் அடிப்படையை ஒவ்வொரு பாடத்திலும் 25 வாங்கினால் போதும் என்று அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு என்னென்ன முறைகளைக் கையாளலாம் என்பதைப் பற்றி நாம் யோசிக்கலாம். அதற்காக அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் 25 மார்க்குகள் வாங்கினால் போதுமென்று அவர்களின் தரத்தை நம்முடைய மார்டின் குறைவாக மதிப்பிடுவதற்கு நான் வருந்துகிறேன்.

year we are contemplating a scheme wherein the answer papers to the questions will not be sent to the Examiners direct to their places, but the Examiners will be asked to come to a particular place where they will be given the answer papers and asked to value them in a week's time and after correcting the answer papers they can go away to their respective places.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** சார், இரண்டு வருஷத்திலும் ஆங்கிலத்தில் மாத்திரம் போதுமான மார்க்குகள் வாங்கவில்லை என்ற காரணத்தினால் தவறியவர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும். மாடரேஷன்பற்றி ஒரு போர்டு இருக்கிறது. பல்கலைக்கழகம் அதற்கான விதிகளை வகுக்கிறது. அந்த விதிகளின் அடிப்படையிலே மாடரேஷன் போர்டு அதைப்பற்றிக் கவனிக்கவேண்டும். எந்தெந்தப் பாடங்களில் எவ்வளவு எவ்வளவு மார்க்குகள் வாங்கவேண்டுமென்று விதி இருக்கிறது. அதில் ஏதாவது மாடரேஷன் கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளை மீறி யாரும், எதையும் செய்துவிட முடியாது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கேள்வித்தாள்கள் வெளியாகிறகைக்குக் கிடைத்தும் அப்படிப் பரீட்சை எழுதிய மாணவர்கள் தேறியது மிகவும் குறைந்த சத விகிதமாக இருப்பதற்குக் காரணம் எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதக்கூடிய மாணவர்கள் ஒரு சப்ஜெக்டை காலையிலும், ஒரு சப்ஜெக்டை மாலையிலும் எழுதுவதால்தான். அதனால் தான் இவ்வளவு குறைந்த அளவில் பாஸ் செய்திருக்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது ஒரு தினத்திற்கு ஒரு சப்ஜெக்ட் பரீட்சைமட்டும் எழுதக் கூடிய அளவில் ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் பரீட்சை எழுதிய காலத்திலிருந்து அப்படியேதான் இருந்துகொண்டு இருக்கிறது. உறுப்பினர் கூறுவதுபோல் ஏற்படுத்துவதானால் மாணவர்களும் ஆசிரியர்களும் 8 நாட்கள், 10 நாட்கள் தங்க நேரிடும். அதனால் உணவு வசதி மற்ற வசதிகள் ஆகியவற்றைக் கவனிக்கவேண்டிவரும். ஆகவே அதே முறை தொடர்ந்து கையாளப்படுகிறது. இதைப்பற்றி ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, முன்பெல்லாம் ஆங்கிலத்திற்கும், தமிழுக்கும் மட்டும்தான் நோட்ஸ் இருந்தது. இன்று சமூகப் பாடங்களுக்கெல்லாம்கூட நோட்ஸ் இருக்கின்றது. இத்தகைய நோட்ஸ்களை ட்யூட்டோரியல் காலேஜிலும் போடுகிறார்கள். மாணவர்கள் அதைமட்டும் படிப்பதால் அவர்களுக்கு ஒரிஜினல் திங்கிங் இருக்காது. உதாரணமாக நான் ஆசிரியர் பொறுக்குக் குழுவிலே இருந்தபொழுது மாணவர்களைப் பார்த்து 'How old are you', என்று கேட்டால் 'My old is 18' என்று சிலர் சொல்லுகிறார்கள். இதனால் 'ஒரிஜினல் திங்கிங்.' போய்விடுகிறது. எனவே நோட்ஸ்களைத் தடைப்படுத்தும் முறையில் ஏதாவது திட்டம் அரசாங்கத்திடம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நோட்ஸ் போடுவதைத் தடுத்து நிறுத்தச் சட்டம் இல்லை. சில ஆசிரியர்களுக்கே அத்தகைய நோட்ஸ்கள் தேவைப்படுகின்றன. ஆனால் நோட்ஸ்களைப் படிக்காமல் 'ஒரிஜினலிடி', தன்னிறைவு பெற்ற அறிவைச் சோதிக்கும் அளவிற்கு நிலைமை இருக்கவேண்டுமென்ற கருத்துப் பரவலாக இருக்கிறது. எந்த முறையிலே பயிற்சியையும், பாடத்திட்டத்தையும், தேர்வையும் வைக்கலாம் என்று கல்வி நிபுணர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.





**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவரவர்களே, முதல் தடவை பரீட்சை எழுதித் தேர்வு பெற்றவர்களின் சத விகிதம் அதிகமாகவும், அடுத்து 2, 3 தடவைகள் முயற்சி செய்து தேறிய மாணவர்களின் சத விகிதம் குறைவாகவும் இருக்கிறதே. முதல் தடவை எழுதும்போது ஏதோ தவறியிருக்கலாம். அடுத்த 2-வது, 3-வது தடவை எழுதும்போது சத விகிதம் குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவர்களுடைய திறமைக் குறைவுதான காரணம். திறமையுடையவர்கள் முதல் தடவையிலேயே வெற்றிபெற்றுவிடுகிறார்கள். 2-வது, 3-வது தடவை எழுதுபவர்கள் எட்டிப்பிடிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : With regard to percentage of passes in the S.S.L.C. Examination I wish to know whether the percentage is better in the City high schools or in the rural high schools ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதைப் பற்றிய விவரக் குறிப்பு இல்லை.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவரவர்களே, 1965–66, 1966–67 ஆண்டுகளில் எஸ். எஸ். எல். சி.-யில் தேறிய மாணவர்களுக்கும், இவ்வாண்டு தேர்வு பெற்ற மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்க என்ன திட்டம் அரசாங்கத்திடம் உள்ளது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இது பொதுப்படையான கேள்வி. தேறிவருகின்ற அத்தனைபேருக்கும் வேலைவாய்ப்பு தேடித் தருவதற்கு எந்த அரசாங்கத்தாலும் உத்தரவாதம் கொடுக்க முடியாது. வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்தலாம் என்பதில் தனியாகக் கவனம் எடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவரவர்களே, எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதியவுடன் மாணவர்கள் மதிப்பெண்கள் போடும் ஆசிரியரைத் தேடிச் செல்வதாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் சென்று பாஸ் செய்து வந்திருக்கிறார்கள். இந்த முறையை மாற்ற தமிழக அரசு எஸ். எஸ். எல். சி. தேர்வுக்கு மதிப்பெண் போடும் முறையை வேறு முறையில் மாற்ற உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதுபற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இப்பொழுது மார்க் அதிகம் வாங்க வேண்டுமென்பதற்காக ஆசிரியர்களைத் தேடி மாணவர்களுக்குப் பதிலாக பெற்றோர்கள் போவதாகத்தான் கேள்வி.

**திரு. டி. மார்டின் :** சார், இந்த ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாக பல பள்ளிகள் மூடப்பட்டதால் மாணவர்கள் கல்வி வசதியைப் பெற முடியாமல் போய்விட்டது. அதனால் இவ்வாண்டு தேர்வு எண்களின் அடிப்படையை ஒவ்வொரு பாடத்திலும் 25 வாங்கினால் போதும் என்று அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு என்னென்ன முறைகளைக் கையாளலாம் என்பதைப் பற்றி நாம் யோசிக்கலாம். அதற்காக அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் 25 மார்க்குகள் வாங்கினால் போதுமென்று அவர்களின் தரத்தை நம்முடைய மார்டின் குறைவாக மதிப்பிடுவதற்கு நான் வருந்துகிறேன்.

# தமிழக சட்டப் பேரவை.

## வியாழக்கிழமை, 1968 மார்ச் 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள் – விடைகள்.

#### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 11, 12 தள்ளிவைக்கப்படுகின்றன.

#### எஸ். எஸ். எல். ஸி. தேர்வு

*** 210 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

1965–66, 1966–67-ல் S.S.L.C. தேர்வில் வெற்றி பெற்றவர்கள் முறையே எத்தனை சத வீதம் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1966 மார்ச் திங்களிலும் (பள்ளி ஆண்டு 1965–66), 1967 மார்ச் திங்களிலும் (பள்ளி ஆண்டு 1966–67) எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வில் தகுதிபெற்றவர்களாக அறிவிக்கப்பட்ட மாணவர்களின் சத விகிதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | 1966 மார்ச். | 1967 மார்ச். |
|---|---|---|
| பள்ளிகளின் மூலம் தேர்வெழுதிய மாணவர்கள் .. | 55·5% | 51·5% |
| தனியாகத் தேர்வெழுதியவர்கள் .. | 29·7% | 21·8% |

1965 நவம்பரிலும், 1966 அக்டோபரிலும் நடந்த எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் தகுதி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்ட மாணவர்களின் சத விகிதம் பின்வருமாறு :—

| | 1965 நவம்பர். | 1966 அக்டோபர். |
|---|---|---|
| தனியாகத் தேர்வெழுதியவர்கள் .. | 29% | 34·7% |

**திரு. என். எஸ். வி. சித்தன் :** 1966-ல் நடந்த தேர்வைவிட 1967-ம் ஆண்டில் நடந்த தேர்வில் குறைந்த அளவு விகிதம்தான் தேர்வு பெற்றிருக்கிறார்கள். அதற்கான காரணங்கள் என்ன ? நம் மாநிலத்தில் இப்போது அதிக அளவில். அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் எஸ். எஸ். எல். ஸி. தேர்வுப் பரீட்சை எழுதிவருகிறார்கள். அதன் அலுவலகத்தைச் சென்னையில்மட்டும் வைத்திருப்பதால் அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. மதுரைப் பல்கலைக்கழகப் பகுதியில் உட்பட்ட பகுதிகளுக்கு என்று தனியாக ஒரு அலுவலகம், அதை மதுரை அல்லது வேறு இடத்தில் வைத்து இந்த மார்க் பட்டியல், புத்தகங்கள் போன்றவற்றை அளித்தால் எளிதாக இருக்கும். அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

[1968 மார்ச் 14

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு கருத்தும் நிலவுகிறது. பள்ளித் தேர்வுகளிலே அவனுக்கு இருக்கின்ற தகுதியையும் திறமையையும் கணக்கெடுத்து, ஆண்டு இறுதியிலே நடைபெறுகின்ற தேர்விலே எடுக்கின்ற மதிப்பெண்களையும் கணக்கெடுத்து, அதற்கு 50 சத விகிதம், இதற்கு 50 சதவிகிதம் என்று கொடுக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. அதுபற்றி ஆராய்ந்து அரசினர் தக்க முடிவு எடுத்ததற்குப் பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி.-யில் ஒரு குறிப்பிட்ட மார்க்குகள் வாங்கினால்தான் தேர்ச்சி பெற முடியும், எலிஜிபில் ஃபார் காலேஜ் கோர்ஸ் என்ற நிலை இருக்கிறது. ஆனால் சில கல்லூரிகளில் மொத்தம் 400 மார்க்குகள் வேண்டும்; ஆங்கிலத்தில் 60 மார்க்குகள் வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். அப்பொழுது தான் கல்லூரியில் அனுமதி கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. சில கல்லூரிகளோடு ஹைஸ்கூலும் சேர்ந்து இருக்கிறது. அந்த ஹைஸ்கூலிலே 6 வருடம் படித்த பிறகுகூட, அதே கல்லூரியில் சேர வேண்டுமானால் மொத்தம் 400 மார்க்குகள் வாங்கவேண்டுமென்றும் ஆங்கிலத்தில் 60 மார்க்குகள் வாங்கவேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்கள். இதை மாற்றி, இப்படி கட்டாயம் விதிக்கக்கூடாது என்று சொல்கின்ற ஒரு எண்ணம் அரசாங்கத்துக்கு உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, குறிப்பாக இவ்வளவு மார்க்குதான வேண்டுமென்று பிராஸ்பெக்டஸிலே குறிப்பிடுவதில்லை. வருகிற மாணவர்களிலே அதிக மார்க்குகள் பெற்றவர்களை எடுத்துக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் ஆங்காங்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளுகிறார்கள்.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, நர்ஸஸ் கோர்ஸ், பாலிடெக்னிக் போன்ற சில பள்ளிகளில் சேருவதற்குத் தகுதியுள்ள மாணவர்கள் அந்தக் குறிப்பிட்ட சப்ஜெக்டிலே அதிக மார்க்குகள் பெற்று, ஆங்கிலம் அல்லது இதர சப்ஜெக்டிலே ஒன்றிரண்டு மார்க்குகள் குறைவாகப் பெற்றாலும் அந்த மாணவர்களை அந்தக் குறிப்பிட்ட பகுதிக்குத் தேர்ந்தெடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்த குறிப்பிட்ட பாலிடெக்னிக் போன்றவைகளுக்கு என்னென்ன தகுதிகள், திறமைகள் தேவைப்படுகிறதோ, அந்த அளவு போதுமான திறமை பெற்றவர்கள் போதுமான அளவுக்கு வருகின்ற காலத்தில் உறுப்பினர் அவர்கள் சொன்ன முறையை உபயோகப்படுத்திக் கொள்வதில்லை. ஆனால் இதிலே ஓரளவுக்கு மாணவர்கள் வராத நிலைமை ஏற்படுமானால் விதிகளைக் கொஞ்சம் தளர்த்தி மாணவர்களை சேர்த்துக் கொள்கின்ற முறை மேற்கொள்ளப்படும். அந்த வகையிலேதான் சென்ற ஆண்டுகூட, 100 மார்க்குகள் என்பதை 90 என்று ஆக்கி இந்த பிரிவுகளில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. பி. எஸ். மணி:** ஐயா, எஸ். எஸ். எல். சி. படித்து தேர்வு பெற்றும் பல மாணவர்கள் வேலையில்லாமல் அவதிப்படுகிறார்கள் ஆனால் அவர்கள் கைத்தொழில்களை செய்கின்ற நிலைமை இருக்கிறது. இப்பொழுது சில பள்ளிகளிலே ஆரம்பத்திலேயே கைத்தொழில்களிலே பயிற்சி கொடுக்கின்ற நிலை இருக்கிறது. ஆனால் முறைக்காக இருக்கிறதே தவிர, அவர்கள் தொழில் செய்யக்கூடிய அளவுக்கு இல்லை. ஆகவே, ஹைஸ்கூலிலிருந்து அவர்களுக்கு கைத்தொழிலைக் கட்டாயமாகப் பயிற்றுவிக்கிற, அதை ஒரு உப கல்வி ஆக்குகிற புதிய திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முயலுமா?



1968 மார்ச் 14]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்த நோக்கத்தினுடைய அடிப்படையிலேதான் இப்பொழுது ஜூனியர் டெக்னிகல் ஸ்கூல்களிலே 8-வது வகுப்பிலிருந்து தொழில் கல்வியையும் பயிற்றுவிக்கின்ற வழி வகைகள் உள்ளன. அப்படிப்பட்டவர்களுக்குத்தான் பாலிடெக்னிக்குகள் உள்ளன. அதிலே சேரலாம். கூடுதல் ஆங்கில அறிவையும் தமிழ் அறிவையும் சேர்த்து, தொழிலையும் கற்றுத் தருகிற ஜூனியர் டெக்னிக்கல் ஸ்கூல்களும் ஆங்காங்கு வைக்கப்பட்டு உள்ளன. ஆனால், இது எல்லா பள்ளிகளிலும் எல்லா இடங்களிலும் வைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் ஒன்றும் இல்லை. ஆனால் அதை விரிவுபடுத்துகின்ற முயற்சிகள் மட்டும் நடைபெறுகின்றன.

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, நகர்ப்புறத்து மாணவர்களையும் கிராமப்புறத்து மாணவர்களையும் நோக்குகிறபோது, கிராமப்புறத்து மாணவர்களுக்கு ஸ்டாண்டர்டு, தகுதி குறைவாக இருப்பதாகத் தெரிகிறது. எஸ். எஸ். எல். சி. தேர்விலே கிராமப்புறத்து மாணவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிற காரணத்தால், அவர்கள் தகுதியிலும் திறமையிலும் அதிகமாக வராமல் இருப்பதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அது பற்றிய ஆராய்ச்சி நடத்தப்படவில்லை. இதைப்பற்றி தக்க நடவடிக்கை எடுக்க ஆங்காங்கு இருக்கிற ஆசிரியர்களும், ஆசிரியர் குழுவினரும், கல்விக் குழுவினரும் தக்க யோசனைகளைக் கூறுவார்களானால் அதுபற்றி அரசு கவனிக்க இயலும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், மாணவர்களைவிட படித்த, அதிக சதவிகிதம் பாஸ் செய்திருக்கக்கூடியவர்கள் மாணவிகள் என்று சொல்லப்படுகிறதே அது எத்தனை சதவிகிதம் என்பதைச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கணக்குப்படி மாணவிகளுடைய எண்ணிக்கைதான் குறைவாக இருக்கிறது. ஏனென்றால், 1967-ல் நடந்த தேர்வில் எழுதியவர்களில் மாணவர்கள் 133,592 பேர், மாணவிகள் 49,491 பேர்தான். ஆகவே, மாணவிகளுடைய எண்ணிக்கைதான் குறைவாக இருக்கிறது.

THIRU K. VINAYAKAM: Sir, whereas the intention of this Government should be more to improve the quality rather than the quantity and whereas methods like the fixation of certain marks for different subjects will only impair the efficiency of the students who come out of the schools and whereas the quality of the modern S.S.L.C. student when compared to the S.S.L.C. student of our Hon. Chief Minister's time or the Hon. Education Minister's time about 30 years ago—has considerably gone down in spite of whatever the Government might say, will the Government reinstate the old method wherein every student must secure at least 40 per cent in English and Tamil and 35 per cent in other subjects and no concession should be shown in that respect? Also, the wording of the main question itself will have to be changed. The term 'depressed classes' has been mentioned in the question. Even a Brahmin can be a depressed man. So, the term 'depressed classes' must be changed into 'Scheduled Castes'. Will the Hon. Minister **make that change?**

[1968 மார்ச் 14

* 211 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : திரு. வை. சுவாமிநாதன் : } மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1967 மார்ச்சில் தமிழ் நாட்டில் நடந்த S. S. L. C. பரீட்சை எழுதிய மாணவ, மாணவியர்கள் மொத்தம் எத்தனை பேர்கள் ?

(இ) அவர்களுள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் எத்தனை பேர்கள் ?

(உ) தேறிய மாணவ, மாணவியர்கள் எத்தனை பேர்கள் ?

(எ) அவர்களுள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் எத்தனை பேர்கள் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:**

| | | |
|---|---|---|
| (அ) | மாணவர்கள் .. .. .. | 133,592 |
| | மாணவியர்கள் .. .. .. | 49,541 |
| | மொத்தம் .. | 183,133 |
| (இ) | மாணவர்கள் .. .. .. | 16,207 |
| | மாணவியர்கள் .. .. .. | 4,501 |
| | மொத்தம் .. | 20,708 |
| (உ) | மாணவர்கள் .. .. .. | 60,480 |
| | மாணவியர்கள் .. .. .. | 25,747 |
| | மொத்தம் .. | 86,227 |
| (எ) | மாணவர்கள் .. .. .. | 5,032 |
| | மாணவியர்கள் .. .. .. | 1,534 |
| | மொத்தம் .. | 6,566 |

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்த ஆண்டு S.S.L.C. பரீட்சை எந்த மாதத்தில் நடக்க இருக்கிறது ? அத்துடன் இந்த S.S.L.C. பரீட்சையில் மற்றவர்களுக்குப் போடும் மார்க்குகள்தான் ஷெட்யூல்ட் வகுப்பு மாணவர்களுக்கும் போடப்படுகிறதா ? அல்லது அவர்களுக்கு வேறு சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாணவர்களைச் சேர்ப்பதிலேதான் சலுகைகள். மற்றவைகள் தரப்படுகின்றன. மற்றபடி அவர்களுடைய அறிவு, திறமையைப் பொறுத்த வரையில் யாருக்கும் வேறுபாடு காட்டுவதில்லை.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, சென்ற ஆண்டு தேறிய எஸ். எஸ். எல். சி. மாணவர்களில் கல்லூரிக்கு வந்து படிக்கின்ற மாணவர்களின் சதவிகிதம் என்ன ?



1968 மார்ச் 14]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. வி.டி. அண்ணாமலை :** மாண்புமிகு தலைவரவர்களே, தற்போது பள்ளியிலே சேர்ந்து படிக்கும் மாணவர்கள் 15-வது வயதிலே பரீட்சைக்கு செல்லலாம். தனியாகப் படிக்கின்றவர்களுக்கு 20 வயது அல்லது 18 வயது இருக்க வேண்டுமென்று சட்டம் கூறுகிறது. தனியாகப் படிக்கும் மாணவர்களும் பள்ளியிலே படிக்கும் மாணவர்கள் எந்த வயதிலே பரீட்சைக்குச் செல்லலாமோ அந்த வயதிலேயே பரீட்சை எழுதுவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பள்ளியிலே சேர்ந்து படித்தால் 'டிஸிப்ளின்' பெற முடியுமென்ற அடிப்படையிலே தான் அவ்வாறு வைக்கப்பட்டிருக்கிறது. பரீட்சையில் தவறி விட்டவர்களும் ஏதோ காரணத்தினால் முடியாதவர்களும் பரீட்சை எழுதுவதற்காகத்தான் தனியாக எழுத வாய்ப்பு கொடுக்கப்பட்டு அவர்களுக்கு 18 வயது, 20 வயது இருக்க வேண்டுமென்று இருக்கிறது.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் பதில் கூறும்போது மாணவர்கள் அதிக நாட்கள் தங்கவேண்டியிருப்பதால் அதிகச் செலவாகும் காரணத்தால் இரண்டு வேளைகளிலும் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன என்று சொன்னார்கள். வருஷம் பூராவும் செலவு செய்து படிப்பவர்களுக்கு இவ்வாறு பத்து நாட்களுக்கு செலவு செய்வது அவ்வளவு அதிகமாக இருக்காது. ஒரு வேளை சந்தர்ப்பம் கொடுத்தால் மறுநாள் காலை நடக்கும் பரீட்சைக்கான குறிப்புகளைப் பார்க்க வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே பரீட்சையை ஒரு வேளை மட்டும் நடத்த அரசாங்கம் ஏதேனும் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** நான் முதலிலேயே கூறிய படி இதுவரை அந்த முறைதான் இருந்து வந்திருக்கிறது. இதுபற்றி கல்வி ஆலோசனைக் குழுவிலே வைத்து முடிவெடுக்க வேண்டும்.

**திரு. சோ. அழகர்சாமி :** ஐயா, இந்த வருடம் இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்து கொண்டிருந்ததால் மாணவர்கள் எஸ். எஸ். எல். சி. தேர்வு எப்பொழுது நடைபெறும் என்று தெரிய முடியாததால் சில மாணவர்கள் பணம் கட்டுவதிலே தவறி விட்டார்கள். அவர்களும் இந்த பரீட்சை எழுதக்கூடிய முறையிலே இந்தப் பணம் கட்டுவதற்கு உள்ள காலத்தை நீட்டித்துக் கொடுக்க அரசு முயலுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பணம் கட்டுகிற காலத்திற்குப் பிறகுதான் இந்தி எதிர்ப்புப் போராட்டமே தொடங்கிற்று. அக்டோபர் 31-ந் தேதிக்குள் கட்ட வேண்டுமென்பதுதான் முறை. ஆகவே அதற்கு முன்னாலே கட்டி இருக்க வேண்டும். நவம்பரிலே தேர்வு எழுதுவதற்குத் தான் ஜனவரி மாதம் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. ஆகவே, இந்தத் தேர்வுக்குப் போதுமான காலம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை இப்பொழுது ஒன்றும் நீட்டிக்க வேண்டிய அவசியம் இல்லை. இனிமேல் நீட்டிப்பதற்கும் வழி ஒன்றும் கிடையாது.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவர் அவர்களே, ஆண்டுக்கு ஒருமுறை நடத்தும் தேர்வை நீக்கி, காலாண்டு, அரையாண்டுகளில் நடக்கின்ற தேர்வின் மதிப்பெண்களை வைத்து அவர்களை மேல் வகுப்புக்கு அனுப்புகின்ற கருத்தை அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதைப் பற்றிக் கல்வி நிபுணர்களும், மற்றவர்களும் திறமையை உயர்த்துவதற்கும் தகுதியை உயர்த்துவதற்கும் உண்மையான முறையில் மாணவர்களைத் தேர்ந்து எடுப்பதற்கான முறைகளையும் அவ்வப்பொழுது ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னென்ன வழிகளைக் கொண்டு படிக்கலாம் என்பதைப் பற்றியும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அதற்காகப் பல்வேறு அரங்குகள் எல்லாம்கூட நடத்தப்பட்டன. கணக்கியலிலும், தாவர இயலிலும், விலங்கியலிலும், தனித்தனியாக அரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதிலே, எந்தெந்த வகைகளிலே மார்க்குகளைப் பார்க்கலாம என்பதைப்பற்றி யோசனைகள் கூறி வந்திருக்கிறார்கள். அதுபற்றிப் பல்கலைக் கழகம்கூட சில பல யோசனைகள் கூறி இருக்கிறது. கல்விக் குழுவிலே வைக்கிறபொழுது மார்க்குகளைப்பற்றி யோசித்துத் தக்க முடிவு எடுக்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பரீட்சை வைப்பதினால், மாணவர்கள் பரீட்சைக்குத்தான் படிக்கிறார்கள் என்னும்படியான நிலை இருப்பதனாலே, இந்தப் பரீட்சைகளையெல்லாம் எடுத்துவிட்டு, மாணவர்களுக்கு வாராவாரம் ஒழுங்காக டெஸ்டுகள் வைத்து, அதன்மூலம் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கச் சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் முதலிலேயே அப்படிப்பட்ட ஒரு கருத்தும் உண்டு என்று குறிப்பிட்டேன். இந்த வாரத் தேர்வுகளையும் ஆண்டு இறுதியில் வைக்கின்ற தேர்வுகளையும் கணக்கிடவேண்டுமென்ற ஒரு கருத்தும் உண்டு. வாராவாரம் நடத்துகிற தேர்வுகளின் நிலைமைகள் எப்படி இருக்கின்றன ? அந்தத் தேர்வுகளினுடைய முடிவு அந்த ஆசிரியர்க்கும் மாணவர்களுக்கும் உள்ள தொடர்பைப் பொறுத்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட மாணவன் ஆசிரியருக்கு ஏதோ காரணத்தினால் பகைவனாக மாறிவிடுவானானால் அவனைக் கடைசிவரையில் வெற்றிபெறச் செய்யாமல் தோற்கச் செய்கிற நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, கடைசியிலே எழுதுகின்ற பரீட்சை மார்க்கையும் கணக்கிட்டு இரண்டுக்கும் 50 சத விகிதம், 50 சத விகிதம் ஒதுக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. இதை எல்லாம் கல்வி ஆலோசனைக் குழுவில் வைத்து, ஆலோசித்து அடுத்த ஆண்டிலிருந்து அதை நடைமுறைக்குக் கொண்டு வருவது எப்படி என்ற ஒரு யோசனை இருந்து வருகிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஒவ்வொரு கிழமையும் மாணவர்கள் படித்ததை வைத்து மாணவர்கள் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதையெல்லாம் கணக்கெடுத்து. ஆண்டு இறுதியிலே அவர்களை மேல் வகுப்புக்கு அனுப்புகிற முறை நடைமுறைக்கு வரவேண்டுமானால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இபபொழுது இருப்பதைவிட நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் 15-லிருந்து 20-க்கு மேற்படாமல் மாணவர்கள் இருக்கிற நிலை ஏற்படுமானால் ஆசிரியர்கள் அந்த நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும். அந்த இலட்சிய இலக்கை அடைவதற்கு வெகு நாள் பிடிக்கும்.

*Police Officers.*

*11 *Q.*—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any Deputy Commissioner of Police, Madras City, has been kept in Madras for more than ten years; and

(*b*) if so, the reasons therefor ?





**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், இந்த மாநிலத்தில் இதுகாறும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் ஆகப் பணியாற்றி வந்த * * * * முற். பக. 19-3

MR. SPEAKER : You should not mention names as per rule 31 (2).

**திரு. டி. மார்டின் :** அதை நீக்கிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது நடவடிக்கைக் குறிப்பில் வரக் கூடாது.

**திரு. டி. மார்டின் :** இந்த மாநிலத்தில் இதுகாறும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் ஆகப் பணியாற்றிவந்த ஒரு அதிகாரி அவர்கள் திடீர் என்று மத்திய அரசின் உளவு இலாகா இயக்குநர் ஆகச் செல்வதாகப் பத்திரிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சேவையை மத்திய அரசாங்கம் வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டு, அவர்கள் அங்கு செல்கிறார்களா, அல்லது வேறு எந்தக் காரணத்துக்காக அவர்கள் மத்திய அரசின் ஊழியத்திற்குச் செல்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** வேறு ஏதாவது காரணங்கள் இருக்கின்றனவா என்று உறுப்பினர் அவர்கள் தம் மனத்தை குழப்பிக்கொள்ளவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.ஸி. படித்து பாஸ் செய்து கான்ஸ்டபிள்கள், 10 ஆண்டு சர்வீஸ் உள்ளவர்கள் இருந்தும் எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் படிக்காமலும், அதிக ஆண்டுகள் சர்வீஸ் இல்லாமலும் இருப்பவர்களை ஹெட் கான்ஸ்டபிள்களாகவும் எஸ்.ஐ. ஆகவும் வேலையில் உயர்த்துகிறார்கள் என்று பேசப்படுகிறதே, அது உண்மையா ? ஆம் எனில் அதற்கு காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கேள்வி டிப்டி கமிஷனர் ஆஃப் போலீஸ்பற்றியது. உறுப்பினர் அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புவார்களானால் தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

DR. H. V. HANDE : Sir, is there any specific rule that that the Deputy Commissioner of Police should be of the I.P.S. rank, is it a fact that we are not having I.P.S. Officers and, if so, what are the reasons for it ?

THE HON. THIRU C. N. ANNADURAI : It is but natural that after Independence the I.C.S. Officer cadre will get reduced. The information that the hon. Member wants is not available with me at present.

---

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

[1968 மார்ச் 14

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் 10 ஆண்டுகளுக்கு மேல் சென்னையில் துணை ஆணையர் இல்லை என்று சொன்னார்கள். பொதுவாகக் காவல் துறையில் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் ஒரு இடத்தில் இல்லாமல் இருக்கும் முறை இருந்தது. அந்த முறையைத் தொடர்ந்து பினபற்ற ஆவன செய்யும் உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்ற விதி இல்லை. பொதுவாக மூன்று ஆண்டு களுக்கு மேல் அவர்களை வேறு இடங்களுக்கு அனுப்புவது பழக்கத்தில் இருந்துகொண்டு வருகிறது. சில தேவைகளை உத்தேசித்து சில அதிகாரிகள் மூன்று ஆண்டுகளுக்கு மேலும் இருந்துகொண்டு வருகிறார்கள்.

* 12. *Q*—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state the number of Police Officers of this State deputed to serve the border Police as on 31st August 1967 categorywise?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இவ்வினாவுக்கு விடை அளிப்பது பொது நலனுக்கு ஏற்றதல்ல என்று அரசாங்கம் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறது.

### *State Transport*

* 212 *Q*.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether it is proposed to constitute a Committee of private bus operators to advise the Government on the working of the State Transport system?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இல்லை.

**திரு. கே. விநாயகம் :** சார், சரியோ, தப்போ, நம் பேருந்து வண்டிகளை எல்லாம் நடத்துவது என்று அரசாங்கம் ஏற்றுக்கொண்டுவிட்டது. அந்த நேரத்தில், அரசாங்கத்தைவிடத் தனிப்பட்டவர்களுக்கே அதிகமாக அனுபவம் இருக்கிறது, நல்ல முறையில் லாபமும் சம்பாதிக்கமுடியும், அதே நேரத்தில் பொதுமக்களுக்கும் நல்ல பணி செய்யமுடியும், இந்தத் துறையில் என்று கருதப்படுகிறது. நான் பேசிய பேச்சுக்குப் பிறகுதான் அமைச்சரவர்கள் எங்கோ ஒரு இடத்தில் ப்ரெஸ் ஸ்டேட்மெண்ட் விட்டார்கள். தனியார் முதலாளிகளை வைத்து அவர்கள் அனுபவத்தைப் பெற்று அவர்கள் யோசனையையும் கேட்டு நம்முடைய சர்க்கார் பஸ்களை நல்ல முறையில் ஒழுங்காக நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று அமைச்சரவர்கள் சொன்னதாகப் பத்திரிகையில் நான் பார்த்தேன். அது உண்மையா? அப்படி இருந்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க ஒரு போர்ட் ஆஃப் ப்ரைவேட் ஆபரேடர்ஸ் போடுவதில் என்ன தப்பு இருக்கமுடியும்? அது நமக்குத்தானே லாபம், அதனால் நாம் என்ன குறைந்தா போவோம்? நம்மைவிட அவர்கள் பெருத்த அனுபவசாலிகள் என்று அவர்களுக்குப் பெயர் போகுமா என்பதுபற்றி விளக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தச் சொற்பொழிவுக்கு ஒரே ஒரு பதில்தான் தனியார்துறை முதலாளிகள் அனைவரையும்கொண்ட ஒரு தனிப்பட்ட குழு அல்லது தனியார் துறையில் இருக்கிற அதிபர்களை நாம் அமைக்கிற பல்வேறு குழுக்களில் இடம் பெறச் செய்வது என்ற அடிப்படையில் ஒன்றிரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன.



1968 மார்ச் 14]

DR. H. V. HANDE: Sir, when the Members of the present Government were in the Opposition, they were making a number of charges pinpointing the exact reasons for the loss in the State Transport. After this Ministry has come to power, have they found out where exactly the losses occurred and have they succeeded at least to a certain extent in plugging the loopholes?

THE HON. THIRU C. N. ANNADURAI: We are in the process of finding out the loopholes and also in plugging them.

### லாரி விபத்துகள்

* 213 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன்: திரு. சி. கோவிந்தராஜன் :** } மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1960 முதல் 1966 வரை இரவு நேரத்தில் லாரிப் போக்குவரத்து காரணமாக எத்தனை விபத்துகள் ஏற்பட்டன?

(இ) அதனால் எத்தனை பேர்கள் மாண்டனர்?

(எ) இவ்விபத்துகளைத் தடுக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ), (இ) & (உ) : சபைமுன் விவர "அறிக்கை" [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார் இந்த விவர அறிக்கையில் 1960-ல் இருந்து 1966 வரை 6,634 விபத்துக்கள் ஏற்பட்டிருப்பதாகவும் 1,166 பேர்கள் மாண்டதாகவும் கூறப்படுகிறது. இதைத் தடுப்பதற்காக இதில் 7 அம்சங்களைக் கொண்ட ஒரு அறிக்கையும் உள்ளது. இதை வைத்து இதுவரையில் எந்தவிதத்திலும் இந்த விபத்துகளைத் தடுக்கக் கூடிய அளவுக்கு எதும் நடக்கவில்லையே, ஆகவே ஜனத்தொகையைக் குறைக்கக்கூடிய தன்மையில் இந்த விபத்துக்கள் தொடர்ந்து ஏற்பட வேண்டும் என்ற திட்டத்தில் அதுவும் ஒன்றா? அப்படி இல்லையென்றால் இரவு 12 மணிக்கு எந்த லாரி எந்த இடத்துக்குப் போவதாக இருந்தாலும் சரி, அந்தக் குறிப்பிட்ட இடத்திலேயே நின்று அதற்குப் பிறகு காலை 4 மணிக்குத் தொடர வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு விதி பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி முன் இருந்த அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பித்து அதன் காரணமாகப் போக்குவரத்தில் பெரும் இடைஞ்சல்கள் ஏற்படுவதாகவும், வாணிபத்துறையில் பலவித இடுக்கண்கள் ஏற்படுவதாகவும் முறையீடுகள் வந்ததன் காரணமாக அதைப் பழைய அரசாங்கமே மறுபடியும் திரும்பப்பெற்றுக்கொண்டது. ஆனால் உறுப்பினர் அவர்கள் கூறுவதை மீண்டும் பரிசீலிப்பதற்கு நம் போக்குவரத்து ஆலோசனைக் குழு அதை எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. சொ. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, நாள்முழுவதும் 8 மணி நேரம் அல்லது 24 மணி நேரமும், 2, 3 நாட்கள் கூட லாரி டிரைவர்கள் லாரியை ஓட்டுகிறார்கள். இதற்கு அந்த லாரி ஓனர்கள்தான் பொறுப்பாளிகள் என்று தெரியவருகிறது. இந்த விபத்துக்கள் இதனால்தான் அதிகமாக ஏற்படுகிறது. எனவே லாரி டிரைவர்களை ஒரு குறிப்பிட்ட மணி நேரத்துக்குமேல் வேலை வாங்கக்கூடாது என்ற முறையில் சட்டம் இருந்தாலும்கூட அதை மீறிச் செய்கிறார்கள். அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

---

[a] 127-128-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1968 மார்ச் 14

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாலை 6 மணியில் இருந்து மறு நாள் காலை 6 மணி வரையில் இந்த லாரிகளை ஓட்டுகின்ற வலவர்கள் ஓய்வின்மை காரணமாக லாரிகள் விபத்துக்களுக்கு ஆளாக நேரிடுகின்றன என்பதை மனதில்கொண்டு 160 (ஏ) விதிப்படி ஒரு வரைவு திருத்தம் கொண்டுவரப்படுகிறது. இடையில் அதற்கான வலவர்களை மாற்றவேண்டும் என்பதற்கான அந்தத் திருத்தத்தை வருகிற போக்குவரத்து ஆலோசனைக் குழுவில் வைத்து அது ஏற்றுக்கொள்ளப்பட்டு பிறகு அந்தத் திருத்தம் அமலுக்கு வரும்.

**திரு. எம். எஸ். மணி :** ஏற்கனவே இருந்த போக்குவரத்து அமைச்சரவர்கள் லாரிகளில் இரண்டு டிரைவர்களை வைக்கவேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவருவதாகக் கூறினார்கள். அந்தக் கருத்தை இந்த அரசு நடைமுறைக்குக் கொண்டுவருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைத்தான் இப்போது சொன்னேன். அந்தக் கருத்தை நடைமுறைக்குக் கொண்டுவருகிற வகையில் விரைவில் அடுத்த திங்களில் நடைபெற இருக்கிற போக்குவரத்து ஆலோசனைக் குழுவில் அந்தத் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அந்தக் கருத்து விரைவில் நடைமுறைக்கு வர ஏதுவாக இருக்கும்.

**திரு. எம். சுரேந்திரன் :** லாரிகளில் சாமான்களை ஏற்றிச் செல்வதால் தான் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று கூறப்படுகிறது. இருந்தாலும் சமீபகாலங்களில் அதிகமான ஆட்களை ஏற்றிச் செல்கின்ற நிலைமை ஏற்பட்டுப் பல இடங்களில் விபத்துக்கள் ஏற்பட்டிருப்பதை அரசாங்கம் அறியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சாமான்கள் ஏற்றிச் செல்வதை விட ஆட்களை ஏற்றிச் செல்கிற நிலையில் அதன் எடை குறைவாகத்தான் இருக்கிறது. ஆகவே, அதனால் விபத்துக்கள் ஏற்பட்டுவிட்டதாகச் சொல்ல முடியாது. வலவர்கள் தங்கள் பொறுப்புணர்ச்சியை நழுவவிடுவதால், அவர்களைத் தடுக்க வேண்டிய அளவுக்குக் கடமை ஆற்ற வேண்டிய அதிகாரிகள் இன்னும் சுறுசுறுப்பாக வேலை செய்யவேண்டிய நிலை இருப்பதால்தான் இந்த விபத்துக்கள் அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றன.

**திரு. நா. காசிராமன்:** நான் இப்பொழுது சொல்வது வேடிக்கையாகக் கூட இருக்கும். லாரி, பஸ்களில் பார்த்தோமானால் டிரைவர்கள் கழுத்திலே ஒரு துண்டை மப்ளர்போல் போட்டுக் கொள்கிறார்கள். அவர்களை எவ்வளவு கண்டித்தாலும் கேட்பதில்லை. வண்டி போகும் பொழுது துண்டு காற்றில் பறந்து, கண்ணை மூடுவதால், சில விபத்துக்கள் நடந்திருக்கின்றன. நான் சொந்த அனுபவத்தில் பார்த்ததை வைத்துச் சொல்கிறேன். அம்மாதிரி டிரைவர்கள் போகாமல் இருப்பதற்கு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க, அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன். இது கேட்பதற்கு என்னவோ வேடிக்கையாக இருக்கலாம். இது நடைமுறையில் நடந்த அனுபவத்தின் காரணமாகச் சொல்கிறேன். இதற்கு ஒரு விதியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இவற்றையெல்லாம் ஆராய்ந்து அதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றனவா, விபத்துகளுக்குக் காரணம் என்ன, சுமார் 6,000 விபத்துக்கள் என்னென்ன காரணங்களால் ஏற்பட்டன என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்தபிறகுதான் உறுப்பினர் அவர்கள் கூறியது சரியா, இல்லையா என்பது தெரியும்.

**திரு. ந. சோமசுந்தரம்:** ஒரு முறைக்கு மேல் விபத்துக்களை உண்டாக்கும் லாரி ஓட்டுநர்களுடைய லைசென்ஸைப் பறிமுதல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1968 மார்ச் 14]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விபத்துக்கள் எந்தக் காரணத்தினால் ஏற்பட்டன, லாரியை ஓட்டிய அந்த வலவராலே ஏற்பட்டதா அல்லது எதிரிலே வந்தவர்களால் ஏற்பட்டதா என்ற ஆராய்ச்சிக்குப் பிறகுதான். அவர்கள் எத்தனை முறை விபத்துக்கள் ஏற்படுத்துவதில் ஈடுபட்டார்கள் என்பதை எண்ணிடவேண்டும். ஆகவே, ஒரு முறையா, இரு முறையா என்பதெல்லாம் பரிசீலிக்கப்படவேண்டிய விஷயம்.

**திரு. சி. வீரமணி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அண்மையில் ஒரு கார் விபத்திற்கு உள்ளானதற்கு முழுக் காரணம் என்ன என்பது ஆராயப்பட்டதா? அத்தோடு அப்படிப்பட்ட விபத்துக்களைத் தடுக்க எடுக்கப்பட்ட தனிப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பொதுப்பணித் துறை அமைச்சருக்கு ஏற்பட்ட விபத்தைப்பற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** தலைவர் அவர்களே, பல இடங்களில் ரோடுகள் அகலம் இல்லாமல் ரொம்பவும் குறுகியிருப்பதால், இந்த மாதிரி விபத்துகள் ஏற்படுவதற்கு முக்கியக் காரணமாக இருக்கிறது. அப்படியுள்ள இடங்களில், இடத்தை அகலப்படுத்துவதற்கும், அதாவது நெடுஞ்சாலையில் பல இடங்களில் பல பேர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதால் அந்த இடம் குறுகலாக இருக்கிறது, அப்படிப்பட்டவர்கள் மீது சீக்கிரம் நடவடிக்கை எடுத்து, அந்த ரோடுகளை அகலப்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஆங்காங்கு குறுகிய சாலைகள் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், அவைகள் குறுகிய சாலைகளாக இருக்கும் காரணத்தினால் மாத்திரம் விபத்துகள் ஏற்படுகின்றன என்பது அல்ல. குறுகிய சாலைகளாக இருக்கும் இடங்களிலெல்லாம் வலவர்கள் தங்கள் வேகத்தைக் குறைத்துக்கொண்டுபோனால், அந்த இடங்களில விபத்துக்களை தடுத்துக் கொள்ளலாம்.

**திரு. எம். கண்ணப்பன்:** போக்குவரத்து விதிகளுக்குப் புறம்பாக ஓட்டக்கூடியவர்களைக் கண்டுபிடிப்பதற்குப் பறக்கும் போலீஸ் படை ஒன்று முன்பு இருந்ததாக அறிகிறேன். தற்சமயம் அது இயங்காத காரணத்தினால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தப் படையை மீண்டும் இயங்கச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** அந்தப் பறக்கும் படை என்பது வேகமாக ஓட்டிச் செல்பவர்களைப் பிடிப்பதற்கு மாத்திரம் அல்லாமல் வரி ஏய்ப்பவர்களை போன்றவர்களையும் கண்டுபிடிப்பதற்காக இருந்தது. இப்பொழுது ஹெட் கான்ஸ்டபிள் அளவில் இருக்கிற எல்லா அதிகாரிகளும் இப்படிப்பட்ட வேகமாக ஓட்டுகின்ற லாரிகளை ஆங்காங்கு நிறுத்தி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டிருப்பதால் இதைத் தடுக்கிற முறை பரவலாக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான் அந்தப் பறக்கும் படை எடுக்கப்பட்டது. அதை மறுபடியும் கொண்டுவரும் உத்தேசம் இப்பொழுது இல்லை.

**திரு. நா. காசிராமன்:** லாரிகளில் அளவுக்கு மீறிய பாரங்களையும் ஏற்றி, அனுமதிக்கப்பட்ட அளவுக்கும் அதிகமாக நீளமாக உள்ள சரக்குகளையும் ஏற்றி, அதாவது 30, 35 அடி சரக்குகளை ஏற்றி, ஒரு சிவப்புக் கொடியை மாத்திரம் பின்னால் போட்டுவிட்டால் போதும் என்று நினைப்பதால், வண்டி போகும் வேகத்தில் திரும்பும்பொழுது அல்லது டயர் பர்ஸ்ட் ஆகும்பொழுது லாரி கவிழ்ந்து, அதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அதைக் கட்டுப்படுத்த இந்த அளவுக்கு மேல் சரக்குகளை ஏற்றக் கூடாது, மிகவும் உயரமாகச் சரக்குகளை ஏற்றக்கூடாது என்று விதிகள் கொண்டுவந்து, இப்படிப்பட்ட விபத்துக்களைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இப்பொழுதே லாரிகள், வண்டிகள் கனத்தையும் ஏறத்தாழ 5 டன் சேர்த்து 12 டன்தான் அதனுடைய பாரம் இருக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. அதையும் மீறி ஏற்றுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விபத்துகளுக்குக் காரணம் அது மாத்திரம அல்ல. சில லாரிகளில் வைக்கோல் ஏற்றி திருவாரூர் தேர் மாதிரிக் கொண்டுபோவதை நமது நண்பர் பார்த்திருக்கக்கூடும். இவற்றையெல்லாம் கண்டுபிடித்து ஆங்காங்குள்ள அதிகாரிகள் விரைவு நடவடிக்கை எடுப்பதற்கு இங்கு கேட்கப்படுகிற கேள்விகள் பயன் அளிக்கும் என்று நான் நம்புகிறேன்.

**திரு. சொ. கோவிந்தராசன்:** பஸ்கள்மேல் இப்பொழுது சாமான்கள் ஏற்றிக்கொண்டு செல்கிறார்களே, அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எல்லாவற்றையும் கவனித்து நடவடிக்கை எடுக்கப்படும்

**திரு கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** இப்பொழுது எங்கு பார்த்தாலும் போக்குவரத்து அதிகப்பட்டிருக்கிறது. அதனால்தான் விபத்துகள் அதிகமாக ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கிறது. அதனால் ஒருவழிப் போக்குவரத்தை ஏற்படுத்தினால், இந்த விபத்துகளைத் தடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதைச் செய்வதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஒருவழிப் போக்குவரத்து பெரிய நகரங்களைப் பொறுத்த அளவிலே அமைய முடியுமே தவிர, இங்கு இருந்து திருச்சிக்குச் செல்லும் பாதைக்கு ஒரு வழியும், அங்கிருந்து சென்னைக்கு வருவதற்கு வேறு ஒரு வழியும் என்ற அளவில் நாம் போக்குவரத்தை அமைக்க முடியாது. நெரிசல் மிகுந்த பெரிய நகரங்களில் முன்னாலேயே நிலைமையை அனுசரித்து எங்கெங்கு சாத்தியமோ, அங்கெல்லாம் ஒருவழிப் போக்குவரத்து ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** கார், லாரிகளைக் கட்டாயம் இன்ஷூர் செய்ய வேண்டும் என்று சட்டம் இருப்பது போல், லாரி டிரைவர்களுக்கு ஏற்படுகிற விபத்துகளுக்காகவும் இன்ஷூர் செய்யவேண்டும் என்று இந்த அரசாங்கம் கட்டாயப்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வலவர்கள் மீது அனுதாபத்தோடு கேட்கிற கேள்வி இது. இப்பொழுது பேசப்படுவது, அவர்கள் ஏற்படுத்துகிற விபத்துகளைத் தடுப்பது எப்படி என்பதுபற்றி.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** ஒரு டிரைவருக்கு லைசென்ஸ் வழங்கிய ஒரு ஆண்டுக் காலத்திற்குள் அவருக்கு ஹெவி வெகிகிள்ஸ் ஓட்டுவதற்கு லைசென்ஸ் உடனடியாக வழங்கப்படுகிறது அதை மாற்றி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஹெவி வெகிகிள்ஸ் லைசென்ஸ் வழங்குகிற உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** உறுப்பினர் சொல்வதுபோல இப்பொழுது அந்த முறைதான் இருக்கிறது. அதாவது ஓர் ஆண்டிற்குள்ளாகவே இப்படிப்பட்ட ஹெவி வெகிகிள்ஸ் ஓட்டுவதற்கான லைசென்ஸ் வழங்கப்படுகிறது. இப்பொழுது அதுபற்றிக் கடந்த வாரத்தில் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இனிமேல் அப்படிப்பட்ட லைசென்ஸ் வழங்குவதற்கு இரண்டு ஆண்டுக் காலம் இருக்கவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** தலைவர் அவர்களே, இந்த லாரிகள் வருகிறபொழுது விபத்துகள் ஏற்படுவதற்கு முக்கியமான காரணம் டிரைவர்கள் வேகமாகப் போவதுதான். ஆகவே,



வேகத்தைக் கண்டு பிடிக்கின்ற கருவியைப் பொருத்தி, இந்த அளவு வேகத்திற்கு மேல் ஓட்டுகின்றவர்களுக்கு இன்ன தண்டனை கொடுப்பது என்று கண்டிப்பாக வைத்துக்கொண்டால், பெரும் பகுதி ஆக்ஸிடெண்டுகள் தடுக்கப்பட்டுவிடும் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா ? அதைச் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இது ஒரு நல்ல யோசனை. 25 மைல் வேகத்திற்கு மேல் போகக்கூடாது என்பதுதான் விதி. அதற்கு மேல் வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஏப்ரல் திங்களில் நடைபெற இருக்கிற போக்குவரத்து ஆலோசனைக் குழுவில் கனம் உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனையை எடுத்துக்கொண்டு, தனிப்பட்ட எல்லா லாரிச் சொந்தக்காரர்களும் தங்களுடைய லாரிகளில் அப்படி ஒரு மீட்டர் வைப்பதற்கு சம்மதிக்கிறார்களா என்றெல்லாம் ஆராயப்படும்.

**திரு எம். எஸ். மணி:** இந்த லாரி விபத்துகள் ஏற்படுவதற்கு வேகமாகப் போவது மாத்திரம் காரணம் அல்ல. அதிகமாக ஓவர்லோடு ஏற்றிக்கொண்டு செல்வதினாலும் ஏற்படுகிறது. இம்மாதிரி ஓவர்லோடு ஏற்றுவதற்குப் பொறுப்பு முதலாளிகள்தான், தொழிலாளர்கள் அல்ல. ஓவர்லோடு ஏற்றிக்கொள்ளாவிட்டால் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை என்ற நிர்பந்தம் காரணமாக ஓவர்லோடு ஏற்றவேண்டியிருப்பதால், ஓவர்லோடுக்கு நடவடிக்கை எடுக்கும்பொழுது லாரி ஓனர்கள்மீது எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அரசு அப்படி நடவடிக்கை எடுக்க ஒத்துக்கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சில முதலாளிகள் இந்தத் தவறினைத் தொடக்கத்திலே செய்கிறார்கள். சில தொழிலாளிகள் இந்தத் தவறினை இடைவழியில் செய்கிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இந்த விபத்துகள் பாதிக்கு மேல் அதிகப்படியான விபத்துகள் ஏற்படுவது ராணிப்பேட்டையிலிருந்து சென்னைக்கு வரக்கூடிய ரோடில் தான். அதற்கான காரணம் ஓட்டுபவர்கள் மத்தியிலேயே தூங்கக்கூடிய நிலைமையினால் தான். ஆகவே, இந்த ரோடுகளிலாவது விசேஷ கவனம் செலுத்தக்கூடிய அளவுக்கு ஏதாவது உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ராணிப்பேட்டையிலிருந்து சென்னைக்கு வரக்கூடிய ரோடில் விபத்துக்கள் ஏற்படுவதாகச் சொன்னார்கள். அவை அநேகமாக பெங்களூரிலிருந்து வருகிற வண்டிகள்தான்.

**திரு. கே. விநாயகம்:** சார், அமைச்சர் அவர்கள் கொடுத்த கணக்கு சென்ற ஆறு ஆண்டுகளுக்கானது. இந்த ஆண்டு அதிகமாக விபத்துக்கள் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதன் எண்ணிக்கையைச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** உறுப்பினர் அவர்களுக்கு இந்த அரசு வந்துவிட்ட பிறகு விபத்துக்கள் இல்லை என்று நான் சொல்லவில்லை. பெருகிக் கொண்டுதான் இருக்கின்றன. அப்படி ஏற்படும் விபத்துக்களை தடுப்பது நம் அனைவருடைய கடமையும் பொறுப்பும் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். வலவர்களும், அதிகாரிகளும் சிரத்தையோடு இவற்றைக் குறைக்க பாடுபடவேண்டும். அதற்கு இங்கே கேட்கப்படும் கேள்விகளும், கொடுக்கப்படும் பதில்களும் பயன்படவேண்டும் என்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** ஆண்டுக்காண்டு எண்ணிக்கை கூடிக்கொண்டு வரும் விபத்துக்களுக்கும், ஆட்சிக்கும் தொடர்பு ஏற்படுத்துவது கணக்குத் தெரிந்தவர்கள் செய்யும் காரியம் இல்லை. (சிரிப்பு).

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். 'வலவர்', 'வலவர்' என்று அமைச்சர் சொல்லுகிறார்களே, அதற்கு என்ன அர்த்தம் என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இலக்கியத்தில், 'வலவர்கள் இல்லா வானூர்த்தி' என்று வருகிறது. ஆகவே 'வலவர்' என்றால் ஓட்டுனர் என்று பொருள். (சிரிப்பு).

## *Rice mills in Tiruchirappalli and Thanjavur districts*

* 214 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the rice mill industry in Tiruchirappalli and Thanjavur districts is facing a crisis since paddy procured in those districts is sent to other districts by the Government for milling;

(b) whether procurement of paddy is done at the producers level or at millers level; and

(c) whether the rice millers associations of these districts represented their grievances to the Government and if so, the action taken to redress them ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) இல்லை.

(இ) இம் மாநிலத்தில் நெல் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறதேயன்றி, ஆலை உரிமையாளர்களிடமிருந்து செய்யப்படுவதில்லை.

(உ) ஆம். அரிசி ஆலை உரிமையாளர்களின் முறையீடுகள் அவ்வப்போதே ஆய்வு செய்யப்பட்டு, அவசியமான நேர்வுகளில் அவர்களது குறைகளைப் போக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

THIRU K. VINAYAKAM : Sir, is it not a fact that procurement was done to a larger extent in Tiruchirappalli and Thanjavur districts, that the mills in those districts could not cope up with the milling of the procured paddy and hence it was sent to other districts and did not the Hon. Minister issue a statement to this effect ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினரவர்கள் கூறுவது உண்மை. அதே மாதிரி அங்கே நெருக்கடி எதுவும் ஏற்படவில்லை என்பதும் உண்மை. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏறக்குறைய 10, 11 லட்சம் டன் ரைஸ் உற்பத்தியாகின்றது. அந்த மாவட்டத்தில் அரிசி ஆலைகளின் கபாசிடி, திறன் 6 லட்சம் டன்தான் அரைக்கலாம். ஆண்டுக்கு ஏறக்குறைய 4. 5 லட்சம் டன் கொள்முதல் செய்கிறோம் அங்கே அரைக்கக்கூடிய 6 லட்சம் டன்னுக்கு மேல் இருப்பதை வெளி மாநிலங்களுக்கு அனுப்புகிறார்கள். தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு வேண்டிய அரிசி அரைப்பதை தஞ்சாவூர் மில்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது 20,000 டன் குறுவை பயிரில் திருச்சிக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், அந்த ஆலைக்காரர்களே கூட பர்சேஸிங் ஏஜெண்டுகளாகவும் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை கூட வெளியே அனுப்புகிறார்கள்.



**திரு. சா. மெய்யப்பன்:** ஏ.டி.டி. 27 தஞ்சாவூர் பக்கத்திலிருந்து மற்ற பகுதிகளுக்கு வந்தது. 64 சத வீதம் அரிசி காணவேண்டும் என்று விதி இருப்பதாகத் தெரிகிறது. அந்த நெல் ராமநாதபுரம், காரைக்குடிக்கு வந்த போது, கருக்காய் அதிகமாக இருந்து, தண்ணீர் போட்டு, பதப்படுத்தி, அவற்றை அதிக லாபம் அடைவதற்காகச் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே. அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பெரிய நடவடிக்கையாக எடுக்க வேண்டும் என்றுதான், நவீன அரிசி அரைக்கும் ஆலைகளை, கூடுமான வரையில் தஞ்சாவூரிலேயே அமைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. 70 சத வீதம் அவுட்டர்ன் அரிசி இருக்கும் வகையில் ஆறு ஆலைகளையாவது துவங்க முயற்சிகள் மும்முரமாக எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறிய கிராமங்களில் சில மில் சொந்தக்காரர்கள், சர்க்கார் விதித்திருக்கும் விலையைவிட ரூ. 2 அல்லது 2½ அதிகமாகக் கொடுத்து கொள்முதல் செய்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இந்தவிதமான நடவடிக்கைகளெல்லாம், சர்க்காருக்குத் தெரியும்படியாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பது உறுப்பினருக்கே தெரியும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, பொதுவாக அரிசி அவுட்டர்ன் அதிகமாக இருக்கிறது என்றால், மேல் தவிட்டை போக்காததால்தான். அப்படி தவிட்டோடு கொடுக்கும் அரிசியை பொதுமக்கள் எப்படி உபயோகிக்கிறார்கள் என்றால், திரும்பவும் தீட்டி, தவிட்டைப் போக்கி விட்டுத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். ஆகவே, தவிட்டோடு சேர்ந்து அவுட்டர்ன் அதிகம் கிடைக்கிறது என்பதில் நாட்டுக்கு பலன் இல்லை என்பதை சர்க்கார் உணர்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவுட்டர்ன் பற்றிக் குறிப்பிடும் போது, அந்த அந்த நேரத்திற்கு ஏற்ப நிர்ணயிக்கப்படுகிறது. ஆலை முதலாளிகள் அதிகமாக லாபம் அடையவேண்டும் என்று பார்க்கிறார்கள், அரசாங்கம் பொதுமக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று செய்கிறார்கள். நமக்கும் அவர்களுக்கும் உள்ள ஓயாத போராட்டம் அது.

**திரு. ஏ. அ. சுப்பராஜு :** தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்லும் போது, 70 சத வீதம் அவுட்டர்ன் என்று சொன்னார்கள். ஏ.டி.டி. 27 குறுவைக்கும் அது பொருந்துமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** குறுவையிலும் அந்த அளவு எடுக்க முடியும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி கூறுகையில், மூட்டைக்கு இரண்டு ரூபாய் அதிகமாக ..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யார் ? எந்தக் கிருஷ்ணமூர்த்தி ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** கொடவாசல் கிருஷ்ணமூர்த்தி..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அமைச்சர் கொடுத்த விடைக்கு விளக்கம் கேட்கும் வகையில் துணை வினாவைக் கேட்க வேண்டுமே தவிர, வேறொரு உறுப்பினர் சொன்னதை வைத்துக் கேடகக்கூடாது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அதைத்தான் கேட்கிறேன்..........

[1968 மார்ச் 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் அமைச்சரில்லையே. அமைச்சர் விடையை ஒட்டிக் கேள்வியைக் கேட்கலாம்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** புட் கார்ப்பொரேஷன், சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டார், தனிப்பட்ட வியாபாரிகள் கொள்முதல் செய் கிருர்கள். கோயம்புத்தூர் வியாபாரிகள் மேற் குறிப்பிட்டவர்களிடம் இருந்து அப்படி வாங்கும்போது, கொள்முதல் விலைக்கு அதிகமாக இரண்டு ரூபாய் கமிஷன் கொடுக்கிருர்கள், இந்தப் பணம் விவசாயி களுக்குப் போய்ச் சேர ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பது ஒன்று. மேலும் ஒரு மூட்டைக்கு 57 கிலோ என்ருலும், லாரியில் ஏற்றும்போது 90 கிலோ என்று அதிகமாக ஒரு மூட்டைக்குப் போட்டு ஏற்றுகிருர்கள். ஒரு லோடு 120 மூட்டை அங்கே போய் 57 கிலோவாகப் பிரிக்கும்பொழுது மொத்தத்தில் 30, 40 மூட்டைகள் அதிகமாகக் கிடைக்கிறது. அவற்றை யெல்லாம் ஒவ்வொரு செக்போஸ்டிலும், ஓரிரு மூட்டைகளை எடுத்துப் பிரித்து, எடை போட்டுப் பார்த்தால், அரசாங்கததிற்கு உண்மை தெரியும். அப்படி அரசாங்கம் கவனம் செலுத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுப்படையாகக் குற்றம் சாட்டக் கூடாது. எந்த இடத்தில் எந்த லாரியில் இப்படி நடந்தது என்று அறிவித்தால், அந்த அடிப்படையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கலாம். இல்லாதவரையில், இது வெறும் பிரசாரத்திற்குத்தான் செய்யப்பட்டதாக இருக்கும்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, உணவுக் கார்ப்பொ ரேஷன் வடாற்காடு நெல்லை கோவைக்குக் கொண்டு போய் அரைப்பதும், தஞ்சாவூர் நெல்லை வட ஆற்காடு மாவட்டத்திற்குக் கொண்டு போவதினால், செலவு அதிகமாகிறது என்பதைக் குறித்து அரசாங்கத்திற்கு புகார் வந்திருக்கிறதா ? அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று தெரிவிக்கலாமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அரசாங்கம் எந்தெந்த நேரத் தில் எப்படிச் செய்ய வேண்டும் என்று நெருக்கடியை உணர்ந்து காரியங் கள் செய்கின்றன. முழு விவரங்களையும் சபைக்குக் கொடுப்பது பொது மக்கள் நன்மைக்கு உகந்ததாக இருக்காது என்பதால் சொல்ல முடிய வில்லை. சில வேளைகளில் சென்னைக்கு கோவையிலிருந்து பெறவேண்டி வந்தது. பொதுவாக இந்த அரசாங்கம் வந்தபிறகு, காரியங்கள் செய்வ தில் எவ்வளவுதூரம் செலவினங்களைக் குறைக்கலாமோ அந்தவகையில செயல்பட்டு வருகிறது. நேற்றையதினம் கூட, பத்து லட்சம் ரூபாய் மிச்ச மாகும் அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆகவே, உறுப்பினர் அவர்கள் இந்த அரசாங்கம் எப்பொழுதும் செலவினங்களில் விழிப்பாகவும் உன்னிப்பாகவும் இருக்கிறது என்கிற நம்பிக்கையை வைக்கலாம்.

முற் பகல் 10-00 **மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ராமச்சந்திர துரை அவர் கள் மீண்டும் ஒரு துணை வினா கேட்க விருப்பம் தெரிவிக்கிறபடியினால், அவரை ஒரு துணை வினா கேட்க அனுமதிக்கிறேன். ஆனால், 38-வது விதியின்படி, மூல வினாவுக்கு அமைச்சர் கொடுத்த விடைக்கு விளக்கம் கேட்பதாக மட்டும் அவருடைய துணை வினா இருக்கவேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தஞ்சையிலிருந்து வெளியூர்களுக்கு, குறிப்பாக கோயம்புத்தூருக்கு, ஏற்றுமதி செய்துகொண்டு போகிற லாரிகளைச் செக் செய்து பார்த்தால் நிச்சயமாக ஒவ்வொரு மூட்டையிலும் 57 கிலோவுக்கு மேல், 90 கிலோ வரையிலும் இருப்பதை ஓரளவு பிடித்துத் தர முடியும். அதைக் கவனிக்காவிட்டால் வியாபாரிகள் அதிகமாக லாபம் அடையக் கூடிய நிலையில் பிளாக் மார்க்கெட்டுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பதாக இருக்கும் என்பதை, நல்ல எண்ணத்தின் காரண மாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



1968 மார்ச் 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'பிடித்துத் தருவதாக' நீங்கள் சொல்லுகிறீர்கள். இதையெல்லாம் நீங்கள் வினா நேரத்தில் சொல்லக் கூடாது. விவாதத்தின்போது வேண்டுமானால் சொல்லுங்கள். பிடித்துத் தருவதாகச் சொல்லுவதை விட்டுவிட்டு, அருள் கூர்ந்து வினாவை மட்டும் கேளுங்கள்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டு மெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மீண்டும் சொல்கிறேன். பொறுப்புணர்ச்சியோடு இந்த மன்றத்தில் பேசவேண்டிய நிலை உறுப் பினர்களுக்கு இருக்கிறது. அம்மாதிரி ஒரு பெரிய அபவாதத்தைச சொல்லக் கூடாது. 'எந்த லாரி' என்று சொன்னால், அதைக் கவனிக்க லாம், ஒவ்வொரு செக் போஸ்டையும் அரசாங்கம் பார்த்துக்கொண்டு தான் வருகிறது. குறிப்பாகச் சொல்லாமல், இந்த அரசாங்கத்தின்மீது ஒரு தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடு சொல்வது உறுப்பினருக்கு இருக்கவேண்டிய பொறுப் புணர்ச்சிக்கு உகந்ததாகாது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள், அரசாங்கத்தின்மீது அபவாதததைக் கொண்டுவரவேண்டும் என்று சொன்னதாக நான் நினைக்கவில்லை. செக் போஸ்டகளில் இன்னும் சற்று ஜாக்கிரதையான முறைகளைப பின்பற்றவேண்டும் என்று சொல்லு கிருர்கள. அந்தச் சீரிய யோசனை தக்க முறையில் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா-விடை நேரம் முடிவடைய இருக்கும் இத் தருணத்தில், சுதந்திராக் கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களை ஒரு துணை வினா கேட்க அனுமதிக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, arising out of the answer given by the Hon. Minister for Food, I would like to know the exact role played by the Food Corporation in the Madras State and the Civil Supplies Department of the Government of Madras. What is the quantity collected by the Food Corporation, what is the quantity collected by the Civil Supplies Department, what is the outturn fixed for the private mills and what is the outturn fixed for the Government mills ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 'அவுட்டர்ன்' பற்றித் தனி யாகக் கேள்வி கேட்கலாம். உணவுக் கார்ப்பரேஷன் என்பது நம்முடைய அரசாங்கத்தோடு தொடர்புடையதலல. அது மத்திய அரசாங்கத்தினுடைய நிறுவனமாகும். ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலததிற்கும் இடையில் உணவு விநியோக முறைகளை அது கவனித்துக்கொள்ளுகிறது. அங்கிருந்து எடுத்துக்கொண்டு வருவதற்கும், இங்கிருந்து கேரளம் போன்ற மாநிலத்திற்கு எடுததுக்கொண்டு போவதற்குமான முறையில் அது இயங்கி வருகிறது இணைப்பு ஸ்தாபனமாக இருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், சில இடங்களில் அவர்கள் நம்முடைய ப்ரொக்யூர்மென்ட் ஏஜெண்டாகவும் இருக்கிருர்கள். அந்த ஸ்தாபனம் நம்முடைய உணவு வழங்குத்துறையோடு சேர்ந்ததல்ல. இரண்டு மாநிலங் களிடையே தொடர்புக்கான இந்திய அரசினுடைய நிறுவனமாகும்.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** தலைவர் அவர்களே, இந்த மன்றததில் செக் போஸ்ட்களினுடைய நடவடிக்கைகள் இன்னும் கடுமை யாக்கப்படவேண்டும் என்று உறுப்பினர்கள் சிலர் கருத்துத் தெரிவித் தார்கள். இந்த மாதம் 9-ந் தேதி, ஸ்ரீவைகுண்டத்தில் நடைபெற்ற விவசாயிகள மாநாட்டில்—காங்கிரஸ் மாநாட்டில்—செக்போஸ்ட்டை அப்புறப்படுத்தவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** செக்போஸ்ட்களில் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உறுப்பினர்கள் யோசனை சொல்லவில்லை. சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுதான் சொன்னார்கள். செக்போஸ்ட்டை எடுத்துவிடவேண்டும் என்று அவர்கள் தீர்மானம் போட்டது, அது அவர்களுக்கிருக்கும் சில அரசியல் கோட்பாட்டின் காரணமாக இருக்கலாம். அதற்கும் இந்த யோசனைக்கும் முரண்பாடு ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** மாடர்ன் ரைஸ் மில்லில் அதிக அவுட்டர்ன் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், ஆந்திராவில் ஒரு காட்டேஜ் இண்டஸ்ட்ரியாக, பம்ப் செட் வைத்துக்கொண்டிருக்கிறவர்களெல்லாம் ஒரு ஹல்லர் வைத்து, அதிக உற்பத்திக்கு வழி செய்துகொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி நாமும் நம்முடைய மாநிலத்தில் ஃப்ரீ லைசென்ஸ் கொடுப்பதன் மூலமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நல்லது. ப்ரொட்யூசருக்குக்கூட நல்ல அரிசி தயார் செய்ய வாய்ப்பு ஏற்படும். அதைச் சர்க்கார் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுபற்றி ஏற்கெனவே பரிசீலனை செய்ததில் அது நல்ல நிலைமை இல்லை என்பதனால் இப்பொழுது இந்தப் புதிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஓப்பன் மார்க்கெட்டில் அரிசி அதிகப்படியான விலைக்கு விற்பதற்கான பல காரணங்களில் ஒன்று, அதிகாரிகள் ஆலைகளிடம் வாங்கிக்கொள்ளும்படி உத்தரவிட்டதற்குப் பிறகு, அந்த ஆலைகளில் பில் போடுவது ஒரு தொகை, அதைவிட அதிகப்படியாக வாங்குவது என்ற நிலைதான் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, நேரடியாக விவசாயிகளிடத்திலேயே கொள்முதல் செய்து, வியாபாரிகளுக்குப் பங்கீடு செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் கொண்டிருக்கிற கருத்து இன்னும் சில பேருக்குக்கூட இருக்கிறது. ஆனால், அந்தக் கருத்துக்கள் நடைமுறைக்கு எந்த அளவுக்கு ஒத்து வரும் என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

### செந்துறையில் அரசினர் மாணவர் இல்லம்

* 215 வினா.—**திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தைச் சார்ந்த செந்துறையில் அரசினர் மாணவர் இல்லம் ஒன்று நிறுவுவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :**

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்தப் பகுதியின் பொருளாதாரச் சீர்குலைவு காரணமாக அங்கிருக்கும் ஏழை மக்கள் உயர் கல்வி பெற வசதி இல்லாமலிருக்கிறது. எனவே, மீண்டும் ஆய்வு செய்து, நடப்பு ஆண்டிலாவது ஒரு விடுதி திறக்க அரசு முன்வருமா ?





**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நடப்பு ஆண்டில் 12 மாணவர்கள் இல்லங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே இரண்டு மதுரை மாவட்டத்தில்—மாணவிகளுக்காக கன்னிசேர்வைப் பட்டியிலும், மாணவர்களுக்காக ஐக்கம்பட்டியிலும் துவக்கப்பட்டிருக்கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள், தங்களுடைய தொகுதியில் செந்துறையில் ஒரு அரசினர் மாணவர் இல்லம் துவக்கவேண்டும என்று மனு தந்தார்கள். அதை அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. தேவைப்படுமானால், அடுத்த ஆண்டில்தான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

### கூலி நிர்ணயக் குழுக்கள்

*216 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தொழிலாளர்களின் நலனைக் கருதி அமைக்கப்படும் சம்பளம் அல்லது கூலி நிர்ணயக் கமிட்டிகளில் முதலாளி, தொழிலாளி பிரதிநிதிகள் நியமிக்கப்படுகிறார்களா ?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

(உ) நியமனம் செய்வதற்கு முன்னால் யார் யாரிடம் ஆலோசனை கேட்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :**

(அ) ஆம்.

(இ) 1948-ம் ஆண்டு குறைந்தளவுக் கூலிச் சட்டத்தின் 5 (1) (a) பிரிவையொட்டிப் பட்டியலில் கண்ட வேலையின் குறைந்தளவுக் கூலி வீதங்களை உறுதிப்படுத்த அல்லது திருத்தியமைக்க அரசு ஒரு குழுவை அமைத்தது ; இக்குழுவில், தொழிலதிபர்களும் பட்டியலில் கண்ட வேலையில் உள்ள தொழிலாளர்களும் பங்கு பெறும் வகையில் அந்தந்த மாநில அரசு நியமிக்கக்கூடியவர்கள் உறுப்பினராக இருப்பர் ; தொழிலதிபர்களும் தொழிலாளர்களும் இதில் சம எண்ணிக்கையிலிருப்பர் ; அக்குழுவிலுள்ள மொத்த உறுப்பினர்களில் 1/3 பங்குக்கு மேற்படாத தனிப்பட்டவர்கள் அதன் உறுப்பினர்களாயிருப்பர். அத்தகைய தனிப்பட்டவர்களில் ஒருவர் 1948-ம் ஆண்டு குறைந்தளவுக் கூலிச் சட்டத்தின் 9-வது பிரிவையொட்டி இக் குழுவின் தலைவராக நியமிக்கப்படுவார்.

(உ) இக்குழுவின் தலைவர் உட்பட இதன் உறுப்பினர்கள் பொதுவாகத் தொழிலாளர் ஆணையரின் பரிவுரையின்மீது நியமிக்கப்படுகின்றனர்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பல தொழிற்சங்கப் பிரிவுகள் இருக்கின்றனவே, அத்தனைத் தொழிற்சங்கப் பிரிவுகளைச் சார்ந்தவர்களையும் இதில் பிரதிநிதிகளாகச் சேர்த்துக் கொள்ளுவதற்கான நடவடிக்கை ஏதாவது உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒவ்வொரு தொழிலுக்கும், அது பற்றி ஆராயும்போது, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர் தலைவர்கள் பலதரப்பட்டவர்களையும் சேர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. மாநில அளவில் உள்ள குழுக்களைப் பொறுத்தவரையில், பல தரப்பட்டவர்களுக்கும் அதில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, will the Government give representation to all the Labour Unions in this Committee because there is no question of one union for one industry had as there are different kinds of unions with different party affiliations ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதைத்தான் முதலில் சொன்னேன். மாநில அளவில் உள்ள கமிட்டியில் தொழிற்சங்கத்திலே ஈடுபட்டிருக்கக்கூடிய பிரதிநிதிகளில் பலதரப்பட்டவர்களுக்கும் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி., எச்.எம்.எஸ். ஆகிய இவைபோன்ற சங்கங்களின் பிரதிநிதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஒரு தொழிலைப்பற்றிப் பரிசீலிக்கக் குழு அமைக்கும்போது, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர் தலைவர்கள் யார் என்று ஆராய்ந்து, அதிலே பலதரப்பட்ட கருத்து உள்ளவர்களுக்கும் இடம் தரப்படுகிறது.

Dr. H. V. HANDE : Sir, In this Wage Committee, how many members are there and who are they ? Also, for how many days did the Committee meet and what are the recommendations made by this Committee. Will the Hon. Minister give us details about this matter ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது பொதுவாகக் கேட்கப்படுகிற கேள்வி. ஸ்டேட் கமிட்டியைப் பொறுத்தவரையில், அவர்கள் அவ்வப் போது பீடித் தொழில், சுருட்டுத் தொழில், தையல் தொழில், இப்படிப்பட்ட தொழில்களில் உள்ளவர்களைப்பற்றிக் குறிப்பாக ஆராய்ந்து, அதிலே சம்பந்தப்பட்டவர்கள் அதிலே அடிக்கடி சந்தித்து அப்போதைக்கப்போது முடிவுகள் எடுக்கிறார்கள். ஏதாவது குறிப்பிட்டு அவர்கள் தனியாகக் கேட்டால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும். ஸ்டேட் அட்வைசரி போர்டைப் பொறுத்தவரையில், மொத்தம் 21 பேர்கள் இருக்கிறார்கள். பட்டியலைப் படிப்பதற்கு அதிக நேரம் ஆகும் என்று கருதுகிறேன். பொதுவாக ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி. ஆகியவற்றில் உள்ளவர்களுக்கும், டாணரி ஒர்க்கர்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் ஒர்க்கர்ஸ் லேபர் யூனியனுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது இப்படிப் பலதரப்பட்டவர்களுக்கும் அமைப்பிலே இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி:** தலைவர் அவர்களே, பலதரப்பட்ட தொழிலாளர்கள், பலதரப்பட்ட தொழில்களுக்கு ஒவ்வொரு பிரதிநிதித்துவம் அளிப்பதற்குப் பதிலாக, தொழிலாளர்களுக்காக இருக்கப்பட்ட சம்மேளனத்திலிருந்து ஒருவரை, ஒரு முக்கியஸ்தரைச் சேர்த்துவிட்டால் நல்லதாக இருக்கும் அல்லவா? உதாரணமாக, ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி. போன்றவற்றிலிருந்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம் அல்லவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படிக் கொடுக்கப்பட்டிருப்பதாகத்தான் சொன்னேன். குறிப்பிட்ட ஒரு தொழிலுக்கு ஒரு பிரதிநிதித்துவம் என்று கொடுக்கப்படுகிறதே தவிர, அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் அளிப்பது இல்லை.

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, விவசாயக் கூலிகளுக்கு, கூலி நிர்ணயிப்பது எந்த அடிப்படையில்? ஜில்லாவுக்கு ஜில்லா இந்தக் கூலி வித்தியாசமாக இருப்பதால், அந்தந்த ஜில்லாவில் இருக்கக்கூடியவர்களை அணுகி இதை நிர்ணயிக்க உத்தேசமா? அல்லது வேறு எந்த முறையில் இந்தக் கூலி நிர்ணயிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சட்டத்தின் கீழ் விவசாயக் கூலிகளுக்கு கூலி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த மாவட்டங்களுக்கு எவ்வெப்பொழுது கொடுக்கப்பட்டது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.





## சீர்காழி மிட்டாய் தொழிற்சாலை

* 217 வினா.—**திரு. ஆ. கு. சுப்பையா:** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழியில் உள்ள மிட்டாய் தொழிற்சாலையில் கலப்படம் செய்யப்படுவதாக அரசினருக்குப் புகார் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) ஆம். அந்த தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட மிட்டாய்களில் நான்கு வகைகளை பரிசோதனை செய்ததில் அவை கலப்படமற்றவை என்று அறிவிக்கப்பட்டது.

**திரு. கே. பி. எஸ். மணி:** தலைவர் அவர்களே, அங்கே இரண்டு தொழிற்சாலைகள் இருக்கின்றன பாரத் கன்ஃபெக்ஷனரி, சக்தி கன்ஃபெக்ஷனரி என்ற இரண்டு மிட்டாய்க் கம்பெனிகள் இருக்கின்றன.

Mr. SPEAKER : Under Rule 31 (2) a question must not publish any name not strictly necessary to make the question intelligible. கூடியவரையில் பெயர்களைக் குறிப்பிடாமல் கேள்வி கேட்பது நல்லது. இரண்டு கடைகள் என்று சொல்லுங்கள். கனம் உறுப்பினரை 31(2) விதியின்படி கேள்வி கேட்குமாறு கூறுகிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி:** ஐயா, இரண்டு மிட்டாய்க் கம்பெனிகள் அங்கு இருக்கின்றன. அவைகளில் அவற்றில் எந்தக் கம்பெனியில் கலப்படம் செய்யப்பட்டது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இங்கு புகார் வந்திருப்பது நவசக்தி மிட்டாய்க் கம்பெனியைப்பற்றி.

Thiru K. VINAYAKAM : What were the repercussions of the consumption of this adulterated confectionary? Were there fatal accidents or were there only passing changes in health ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** அங்கே எடுக்கப்பட்ட மிட்டாய்கள் கலப்படமற்றவை என்று ரிப்போர்ட் வந்திருக்கிறது.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** தலைவர் அவர்களே, கலப்படம் அதிகமாகிக் கொண்டு வருவதால் விபரீதமான ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. காரைக்குடியில் விஷம் கலந்த உணவை 300 பேர் அருந்தியதில், 2 பேர்கள் இறந்துவிட்டார்கள். இந்த மாதிரியான நிலைமை நாட்டில் இருப்பதால் பயங்கரமான விளைவுகள் ஏற்படும். ஆகவே, கலப்படம் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுத்து, வேண்டுமானால் தூக்குத் தண்டனையாவது கொடுத்து, கலப்படம் ஏற்படாமல் தடுக்க அரசு வழி செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** காரைக்குடியில் ஏற்பட்ட விபத்து கலப்படம் செய்த காரணத்தால் ஏற்பட்டதல்ல. ஒரு திருவிழாவிற்கு செய்யப்பட்ட பிரியாணியை மறுநாள் சாப்பிட்டதால் அதில் விஷப்பொருள்கள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

### (i) கோவையில் பஞ்சாலைகளை மூட ஆலை முதலாளிகள் முடிவு

**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 42-வது விதியின்படி, பொது ஜனமுக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தைப்பற்றி விவாதிக்க வேண்டி, பேரவையை ஒற்றிவைக்கக் கோரி ஒரு அறிவிக்கையைக் கொடுத்திருக்கிறேன்.—

"நமது ராஜ்யத்திலுள்ள எல்லாப் பஞ்சாலைகளையும் 15 தினங்கள் மூடப்போவதாகவும், 15 தினங்களுக்குப் பிறகும் அடுத்த நடவடிக்கை என்ன என்பதைப் பற்றியும் ஆலோசிக்கப்படுமென்றும், தென்னிந்திய மில் முதலாளிகள் முடிவு செய்துள்ளதால், இதனால் பஞ்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகையால் இந்த மிக அவசர அவசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க, சபையை ஒற்றிவைக்க வேண்டுமென கோருகிறேன்."

தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்போதுள்ள நிலைமையில் ஏற்கனவே எங்கு பார்த்தாலும் கதவடைப்புகள் நடைபெற்று, அதனால் பத்தாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நேரத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய சர்க்கார் நடவடிக்கை எடுக்க முன்வந்திருக்கும் நேரத்திலே, ஏதோ மத்திய சர்க்காரை எதிர்ப்பதுபோல் பாவனை காட்டி, இந்தச் சர்க்காருக்குத் தொல்லை கொடுக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். பஞ்சாலைகளில் தேக்கம் இருக்கிறது, விற்பனையாகவில்லை என்று காரணங்களைக் காட்டித் தொல்லை தரும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இதன் காரணமாகப் பல லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலைமை ஏற்படும். அதன் காரணமாகப் பெரிய அளவில் விளைவுகள் ஏற்படும் என்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் இது சம்பந்தமாக அவசரமும், அவசியமும், முக்கியத்துவமும் வாய்ந்த இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க இந்த சபையை ஒற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு எ. ஆர். மாரிமுத்து, திரு. ஆ கு. சுப்பையா, திரு. கே. என். குமாரசாமி, திரு. எம். பூபதி முதலியவர்களும் இதே காரணத்தையொட்டி ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஆலைச் சொந்தக்காரர்கள் எடுத்த முடிவு அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஏப்ரல் 1-ம் தேதி முதல் 15 நாட்களுக்கு மில்களை மூடிவிட்டு நூல் உற்பத்தியைக் குறைக்கலாமா என்று யோசித்து வருவதாகச் செய்தி வந்திருக்கிறது. இரண்டு மூன்று ஆண்டுகளாக நூல் பிரச்சினை, மற்றப் பிரச்சினைகள் எல்லாம் இருந்து வருகின்றன. நூல் விலை திடீரென்று குறைந்துவிட்டதன் காரணமாகவும் இம் மாதிரியான பிரச்சினைகள் தோன்றுகின்றன. 175 ஆலைச் சொந்தக்காரர்கள் சவுத் இண்டியன் மில் ஓனர்ஸ் அசோசியேஷன் சார்பாக ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 56,400 பேல்கள் நூல் தேக்கமுற்றிருக்கிறது. இதன் மதிப்பு 9½ கோடி ரூபாய் பெறுமானமுள்ளது. மற்றச் செலவினங்களும் ஏற்பட்டிருக்கின்றன. 1964-ல் 4,654 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தியானது. 1966-லே 4,239 மில்லியன் மீட்டருக்குக் குறைந்து விட்டது. ஆனால் திட்டப் பிரகாரம் 4,900 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தி



மில்களுக்காக ஒதுக்கப்பட்டது, ஆகையால் இந்தத் திட்ட உற்பத்தியை மாற்றியமைக்க அவர்கள் ஒரு திட்டம் காணவேண்டுமென்று சொல்கிறார்கள். இதுபற்றி டெக்ஸ்டைல் கமிஷனருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்குப் 'பாதகம் ஏற்படாதவகையில் செய்ய வேண்டுமென்று கைத்தறி இயக்குநர் அவர்கள் வற்புறுத்தப்பட்டுள்ளார். அவர் கோவை சென்று நல்ல முடிவு எடுக்க அனுப்பப்பட்டார். அந்த வகையில் தொழிலாளர் நலன் பாதிக்கப்படாமல் எல்லா வழிவகைகளையும் காண முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதுபற்றி டெக்ஸ்டைல் கமிஷனருக்கும் மத்திய அரசுக்கும் தெரியப்படுத்தியிருக்கிறோம். இதற்காக இந்தச் சபையை ஒற்றிவைக்க வேண்டிய அவசியமில்லை. இது சாதாரண நிர்வாகத்திற்குட்பட்ட விஷயம். இந்த அரசு தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளும் என்று கூறி, இந்தப் பிரச்சினையை விவாதிக்கச் சபையை ஒற்றிவைக்க வேண்டியதில்லையென்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மில்களை மூடிவிடப்போவதாக மில் அதிபர்கள் அறிவிப்புச் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கூறியபடி, மில் அதிபர்கள், மில்களை மூடுவதாக அறிவித்தாலும், அல்லது அப்படியே மில்களை மூடிவிட்டாலும் அது அவசரமும் அவசியமும் வாய்ந்த பிரச்சினையல்ல. இது சாதாரண அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட பிரச்சினை. ஆகவே, விதி 50, உள் விதி (8)-ன்படி ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ii) இந்திப் படங்கள் திரையிட இயலாமையும், படப்பிடிப்பு நிலையங்கள் பிற மாநிலங்களுக்கு மாற்றமும்

THIRU K. RAMAMOORTHI: Sir, I have given notice of the following adjournment motion :—

"That the business of this House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the shifting of the A.V.M. and other studios from Madras to places outside our State, being the outcome of the non-release of Hindi films in this State."

இந்த மாநிலத்தில் இருந்து வேறு மாநிலத்திற்கு இந்த ஸ்டுடியோக்களை மாற்றுவதன் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும். காரணம் நம்முடைய மாநிலத்தில் இந்திப் படங்களைத் திரையிட முடியாது இருக்கிற காரணத்தினால், சென்னையில் தயாரிக்கப்படுகிற இந்திப் படங்களை மகாராஷ்டிரா போன்ற பிற மாநிலங்களில் திரையிடக் கூடாது என்று எடுக்கப்படுகிற நடவடிக்கையின் விளைவாக இது எழுந்துள்ளது. இதுசம்பந்தமாகச் சென்னையிலும் இந்திப் படங்களைத் திரையிட அனுமதிப்பதுபற்றி சமீபத்தில் நடத்திய பேச்சு வார்த்தையின் முடிவு என்னவாயிற்று என்று தெரியவில்லை. இன்றைக்கு ஏறக்குறைய 15 இந்திப் படப்பிடிப்பில் வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது. எட்டாயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன, மத்திய அரசையோ அல்லது மகாராஷ்டிரா போன்ற மாநில அரசுகளையோ அணுகி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா, தமிழகத்தை எதிர்நோக்கியுள்ள இந்த முக்கியமான, அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை எப்படித் தீர்க்கப்படும் என்பதுபற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுக்காட்டிய பிரச்சினையைப் பற்றி இந்த அரசு ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க முனைந்திருக்கிறது இந்த நேரத்தில் இந்த அவையை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க

வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் பிரச்சினை சர்க்கார் கவனத்தில் இருக்கிறது. எந்த முறையில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதைப்பற்றிச் சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு ராமமூர்த்தி கொண்டுவந்துள்ள பிரச்சினை ஏற்கனவே நிகழ்ந்துவிட்ட காரியம் அல்ல. நிகழ்ந்து விடுமோ என்று அச்சப்படுவதான ஒன்று. நம்முடைய விதி 50 (3)-இன்படி,

" The motion must be restricted to a specific matter of recent occurrence. "

எனவே இது நிகழ்ந்துவிட்ட காரியமாக இல்லையாகலால் இது ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு உரியதல்ல என்று தீர்ப்புச்சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

### (iii) கோவை, ஈரோடு நகரங்களில் 'தமிழர் படை'யின் நடவடிக்கைகள்

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** ஐயா, சட்டப்பேரவை 42-வது விதியின்படி கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைபற்றி விவாதிக்கச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி ஓர் அறிவிக்கையைக் கொடுத்துள்ளேன்:—

"ஈரோடு, கோவை ஆகிய நகரங்களில் தமிழர் படை (ஈரோடு) என்கிற பெயரால் "தனித் தமிழ்நாடு காண்போம் வாரீர்", "இந்தியனே வெளியேறு", "தமிழ்நாடு தமிழருக்கே" என்கிற கோஷங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு நாட்டின் ஐக்கியத்துக்கே ஏற்பட்டிருக்கும் ஆபத்துப் பற்றி விவாதிக்க வேண்டும். தலைவர் அவர்களே, இது எப்படி பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்க ஆசைப்படுகிறேன். கோவையில், ஈரோட்டில் தனித் தமிழ்நாடு இயக்கம் நடந்தது, தமிழ் நாட்டுக் கொடி என்று ஏற்றப்பட்டது. நாம் எல்லாம் தேசத்தின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதாகப் பிரமாணம் எடுத்துக்கொண்டு இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறோம். ஆனால் தேச ஐக்கியத்தையே பெரும் அளவில் கெடுக்கக்கூடிய அளவில் இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பின்னால் வெளிநாட்டுத் தூண்டுதல் சக்திகூட இருக்கிறதென்று நினைக்கிறேன். இதைவிட வேறு பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் எதுவும் இருக்க முடியாது. ஆகவே இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்று கோருகிறேன்."

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதுகுறித்துப் போலீஸ் இலாக்காவினர் தகவல்கள் சேகரித்துக்கொண்டு வருகிறார்கள். நாட்டின் ஐக்கியத்தைக் கெடுக்கும்படியான எந்தக் காரியத்தையும் இந்தச் சர்க்கார் அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக இந்த அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை. அன்றாட நடைமுறையை ஒட்டித்தகுந்த ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட காரியம் அரசின் சாதாரண நிர்வாகத்துக்கு மிஞ்சிய காரியமாகக் கருத முடியாததால் இதற்கு அனுமதி மறுக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

### கடம்புலியூர் உள் வட்டத்தில் பருவமழையின்மையும், மண்வளப் பாதுகாப்புத் திட்டத்திற்கு வழங்கிய கடன் வசூல் ஒற்றிவைப்பும்

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ், தென்னாற்காடு மாவட்டம், பண்ருட்டித் தொகுதியில் கடம்புலியூர் உள் வட்டத்தில் மண் அரிப்புத் திட்டத்தின்கீழ் கட்டிய அணைகளுக்கான



செலவை உடனடியாகக் கட்டவேண்டுமென்று வருவாய்த்துறை அதிகாரிகள் வற்புறுத்துவதால் வெறும் காட்டுப் பகுதியான இப்பகுதியில் வான் மழையையே நம்பி வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் அத்தொகையைக் கட்ட வழியின்றி மிக்க அல்லல்படுவதால் பணம் வசூலிப்பதை ரத்து செய்யவேண்டுமென்ற அவசரமும், பொதுமுக்கியமுமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பண்ருட்டி துணை வட்டத்தில் கடம்புலியூர் பிர்க்காவில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் 1956-57-ம் ஆண்டில் நிறைவேற்றப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் வேலை முடிந்தவுடன் அப்பணியை நிறைவேற்றியதற்கான மொத்தச் செலவு வேளாண்மைத் துறையினால் கணக்கிடப்பட்டு உரிமைகள் பொறுப்புகள் குறித்த பதிவேடுகள் தயாரிக்கப்பட்டன. குடியானவர் ஒவ்வொருவரிடமிருந்தும் வசூலிக்கப்பட வேண்டிய வீதாச்சார தொகை இப்பதிவேடுகளில் குறிக்கப்பட்டது. 1957-58 முதல் 1959-60 வரையில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான முதற்பதிவேடுகள், கடலூர் தாசில்தாருக்கு 1964, பிப்ரவரித் திங்களில் கிடைத்தன. 1960-61-ம் ஆண்டிற்கான இரண்டாவது தொகுதிப் பதிவேடுகள் 1967 ஜனவரியில் கிடைத்தன. மூன்றாவது தொகுதிப் பதிவேடுகள் அண்மையில் கிடைத்தன. இந்த நேர்வுகளிலெல்லாம் பேரேடுகள் எழுதப்பட்டு நிலுவைகளை வசூலிப்பதற்காகக் குடியானவர்களுக்கு அண்மையில்தான் அறிவிப்பு அனுப்பப்பட்டது.

1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி வரையில் சேர்ந்து வந்த ரூ. 4,29,377-35 நிலுவைத் தொகையில் இதுவரையில் ரூ. 60 369-16 மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய நிலுவை ரூ. 3,69,008-19 ஆகும். மேலும் இப் பசலியாண்டிற்காக ரூ. 1,39,122-10 சேர்ந்து வந்துள்ளது. இதில் ரூ. 3,184-10 வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய நிலுவைத் தொகை ரூ. 1,35,935 ஆகும். இவ்வாறாக 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி அன்று மொத்த நிலுவைத் தொகை ரூ. 5 04,943-19 ஆகும். மேற்படித் தொகையை ஒத்திப்போடவோ அல்லது அதனை எளிய தவணைகளில் வசூலிக்கவோ வேண்டி குடியானவர்களிடமிருந்து எந்த முறையீடும் வரவில்லை.

இந்நிலுவை குறித்து ஆண்டுவாரியான தொகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| பசலி. | நிலுவை. | |
|---|---|---|
| (1) | (2) | |
| | ரூபாய் | பைசா |
| 1371 | 11,927 | 83 |
| 1372 | 35,358 | 65 |
| 1373 | 51,851 | 90 |
| 1374 | 67,148 | 51 |
| 1375 | 62,263 | 51 |
| 1376 | 1,40,457 | 79 |
| சேர்ந்துவந்த மொத்த நிலுவைத் தொகை. | 3,69,008 | 19 |
| 1377 | 1,35,935 | 00 |
| | 5,04,943 | 19 |

நில நேர்வுகளில் குடியானவர்கள் 7 தவணைகள் நிலுவை செலுத்த வேண்டும். இவர்களுக்கெல்லாம் 1968 ஜனவரித் திங்களில் முதல் கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

வசூலை ஒத்திவைக்கும் அளவுக்குப் பருவமழை தவறிவிடவில்லை' இப்பகுதியில் கணிசமான பரப்பளவு நிலத்தில் முந்திரி மரங்கள் அல்லது பலா மரங்கள் வளர்க்கப்படுகின்றன. பிற வட்டங்களில் இத்தகைய நிலங்களிலிருந்து குடியானவர் ஒருவருக்குக் கிடைக்கும் வருவாயைவிட மேற்சொன்ன வாயில்களிலிருந்து கிடைக்கும் வருவாய் அதிகமாகும். எனவே, கடம்புலியூர் பகுதிவாழ் மக்கள் கடன் தவணைகளைச் செலுத்த முடியாது என்று சொல்லுவது சரியல்ல. ஒரே தடவையில் பல தவணைகளைச் செலுத்த வேண்டிய நிலையிலுள்ள குடியானவர்களுக்கு ஏதாவது சலுகை காட்ட வேண்டுமா என்பது பற்றி ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-30

## 4. அரசினர் தீர்மானம்

### அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையுரிமைக் குழுவிற்கு பன்னிரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றிய அரசினர் தீர்மானத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவருவார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, " தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளைச் சேர்ந்த 183-வது விதியின்கீழ், 1968–69-ம் நிதியாண்டுக்குரிய அவையுரிமைக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பன்னிரண்டு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் தேதியன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும் " என்ற தீர்மானத்தைக் கொண்டுவருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## 5. அறிவிப்பு

### அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது அதைப்பற்றிய அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், அவையுரிமைக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 19-ம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள் 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 20-ம் தேதி புதன்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 22-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, பன்னிரண்டுக்கு மேற்படுமாயின், 25–3–1968 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும.



## 6. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 16—வேளாண்மை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, நிதிக் கோரிக்கை எண் : 16, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,48,76,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. கே. என். குமாரசாமி :** ஐயா, காலாகாலத்தில் விவசாயத்திற்கு உரம் கிடைப்பது கஷ்டமாக இருப்பதாலும் கூட்டுறவுத் துறையில் உரம் சரியானபடி குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்காததாலும் இயற்கை உரம் தயாரிப்பதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,48,76,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. BOJAN : Sir, to discuss about the distribution of seeds, manure and insecticides to agriculturists, I move the following cut motion—

" That the allotments of Rs. 14,48,76,700 under Demand No. 16—Agriculture be reduced by Rs. 100. "

**திரு சோ. அழகர்சாமி :** ஐயா, விவசாயிகளுக்கு வேண்டிய பொறுக்கு விதைகளை எல்லாம் தயாரித்து மலிவான விலையில் கொடுக்க பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று வீதம் அரசாங்க விதைப்பண்ணைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,48,76,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு ஏ. அ. சுப்பராஜா :** ஐயா, அரசினர் விதைப் பண்ணைகள், பசுந்தழை உரம், பொறுக்கு விதைகள் வழங்குதல், தாவரப் பாதுகாப்பு, மருந்து தூவும் கருவிகள், மண்வளப் பாதுகாப்பு தவணைகளின்பேரில் இயந்திரக் கலப்பைகள், விசையேற்றம், விவசாயக் கருவிகளைக் குறைந்த வாடகைக்கு விடுதல் போன்றவைகள் செய்ய விவசாய வாரியம் அமைப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,48,76,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு செ. பாலசுப்பிரமணியன் :** ஐயா, பயிர் இன்சூரன்சுத் திட்டத்தை அமலாக்குவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,48,76,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1968 மார்ச் 14

**திரு கே. பி. எஸ். மணி :** ஐயா, வேளாண்மை சீரமைப்புப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண். 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,48,76,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு வி. கே. கோதண்டராமன் :** சார், கிணறுவெட்டி, பம்புசெட்டு வைத்து மின்சாரக் கட்டணம் செலுத்தி இரண்டாவது போகம் மூன்றாவது போகம் நெல் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு மின்சார ரிபேட் கொடுக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,48,76,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு ஆ. கு சுப்பையா :** ஐயா, வேளாண்மைத் துறையில் புதிய மாற்றத்தைச் செய்து விவசாயிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டியதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,48.76.700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு தோ. மு. நல்லசாமி :** ஐயா, விவசாய உற்பத்திப் பொருள்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலையைக் கொடுப்பதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,48,76,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு கே. எம். ராமசாமிக் கவுண்டர் :** சார்,

(to discuss the precarious conditions of the small ryots in the State.)

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,48,76,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, நிதிக் கோரிக்கை எண். 39, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 45,30,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

THIRU K. RAMAMOORTHI : Sir, to discuss policy, I move the following cut motion—

'That the allotment of Rs. 45,30,000 under Demand No. 39—Capital Outlay on Agriculture be reduced by Rs. 100.'



1968 மார்ச் 14]

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** என்னுடைய பெயரால் கொடுக்கப்பட்டிருக்கிற 456-வது வெட்டுத் தீர்மானம்... ........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 456-வது எண்ணுள்ள வெட்டுத் தீர்மானம் போன டிமாண்டைச் சேர்ந்தது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர் :** ஐயா, கொள்கைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 45,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** ஐயா, வேளாண்மைச் செலவு பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 45,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், மண் பரிசோதனை நிலையங்களை அதிகப்படுத்தாததைப் பற்றியும், சென்ற ஆண்டைவிட குறைத்துள்ளதைப் பற்றியும் விவாதிக்க—

"கோரிக்கை எண். 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 45,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** ஐயா, உப்புத் தண்ணீர் உள்ள இடத்தில் ஒரு வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைத்து, உப்புத் தண்ணீர் உள்ள இடங்களில் என்னென்ன பயிர்கள் சாகுபடி செய்ய முடியுமென்பதை ஆராய வேண்டியதைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 45,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் விவாதிக்கப்படுகின்றன. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றுவார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உதவித் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் நாம் சென்ற ஆண்டு அடைந்துள்ள முன்னேற்றம் குறித்தும், இந்த ஆண்டு நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைக் குறித்தும் இதன் மூலமாக வேளாண்மைத் துறையில் கணிசமான அளவுக்கு வெற்றி காண்பதற்காக கனம் உறுப்பினர்கள் ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்காக விளக்க உரை ஒன்று அச்சிடப்பட்டு அதை இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிறேன். கனம் உறுப்பினர்கள் அந்த விளக்க உரையின்மீது அவர்களுடைய சிரிய கருத்துக்களைச் சொல்வார்களேயானால், இறுதியாக என்னுடைய பதிலைத் தெரிவிக்கின்ற முறையில் கடைசியாக நான் பேச இருக்கிறேன். அதற்காகக் கடைசியில் குறைந்தது ஒரு மணி நேரமாவது ஒதுக்கித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அச்சிடப்பட்டு இருக்கிற புத்தகத்தை இந்த மன்றத்தில் நான் படித்ததாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஏ. கோவிந்தசாமி] [1968 மார்ச் 14

* உணவு உற்பத்தி, வாணிபப் பயிர்கள், வேளாண்மைக் கல்வி ஆராய்ச்சி போன்ற வேளாண்மை வளர்ச்சியில் இம் மாநிலம் எய்திய முன்னேற்றம் பற்றிய ஒரு சுருக்கமான மறு ஆய்வும் 1968–69-ம் ஆண்டிற்கான திட்டப் பணிகளின் சுருக்கமும் ஈண்டு கொடுக்கப் பட்டுள்ளன.

பொதுவாக வேளாண்மை உற்பத்தியையும் குறிப்பாக உணவு உற்பத்தி யையும், மிகக் குறைந்த காலத்தில், மிக அதிக அளவிற்குப் பெருக்குவதே இந்த அரசாங்கத்தின் கொள்கையாகும். கடந்த ஆண்டில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பிலே 1967–68-ம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்களின் விவரங்கள் சாற்றப்பட்டன. நிலைமை நமக்கு வாய்ப்பாக இராத போதிலும், சென்ற ஆண்டில் நமது குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் நாம் பெருமளவு வெற்றி கண்டோம். முதலமைச்சர் அவர்கள் தமது வரவு-செலவுத் திட்ட உரையில், இந்த ஆண்டின் கார்ப் பருவத்தைப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். இரண்டு பருவங் களிலும் போதிய அளவு மழையின்மையாலும், பெய்த நாட்களின் எண்ணிக்கையும் குறைந்ததன் காரணத்தாலும் மொத்தமாகப் பார்க்கும் போது நிலைமை மன நிறைவு அளிக்கத்தக்கதாக இல்லை என்பதையும், 1965–66-ம் ஆண்டு நிலைமையோடு ஒப்பிடும் வண்ணம் இருந்தது என்றும் கடந்த ஆண்டைப் போல் நிலைமை வசதியாக இல்லை என்பதையும் எடுத்துக் காட்டினார். தென் மேற்குப் பருவ மழை காலம் கடந்து பெய்தது. பெய்த மழையும் வழக்கம் போல் இராமல் குறைவாகவே இருந்தது. இதனால் நமது வளர்ச்சித் திட்டங்கள் எவ்வாறு இடை யூறடைந்தன என்பது பின்னர் விளக்கப்படும். கால நிலை இவ்வாறி ருப்பினும் தஞ்சாவூர் மாவட்டத்திலே குறுவைப் பயிரும், ஏனைய இடங் களில் குறுகிய கால முதற் பயிரும் நன்கு விளைந்தன. தென் மேற்குப் பருவ மழை போதிய அளவு பெய்யாததால் நீர்த்தேக்கங்களின் நீரளவு குறைந்தது. இதன் காரணமாகவும், வட கிழக்குப் பருவ மழை யின் நிலை மாறிய போக்கினாலும், முக்கிய சம்பாப் பயிரின் பாசனம் பாதிக்கப்பட்டது. சமனற்றுப் பெய்த பருவ மழையின் விளைவால் சம்பாப் பயிர் மிகவும் பாதிக்கப்பட்டது. ஆனால் டிசம்பர் திங்களில் பெய்த மழை பெரும்பகுதிக்குப் பயனுள்ளதாய் இருந்ததென்றாலும், எல்லா இடங் களிலும் அது உதவியாய் இல்லை. வானம் பார்த்த புன்செய்ப் பயிர்களும் வட கிழக்குப் பருவ மழை தவறியதால் மிகவும் பாதிக்கப்பட்டன. தஞ்சாவூர் சம்பாப் பயிர் வழக்கத்தை விட ஓரளவு குறைவாகவே விளைந்தது. மழையின்மையாலும், நீர்த் தேக்கங்களில் போதிய அளவு நீர் இன்மை யாலும், முறை மாற்றுப் பாசன ஏற்பாட்டினைச் செயலுக்குக் கொண்டு வந்த பின்னரும் இரண்டாவது குறுகிய கால அல்லது நடுத்தரப் பயிர், குறிப்பாக தஞ்சாவூர் சங்கமுகப் பகுதியின் தாளடிப் பயிர் மிகவும் பாதிக்கப்பட்டது. கிடைக்கக்கூடிய நீர் நிலைகளிலிருந்து துறையின் விசையேற்றங்களைப் பயன்படுத்தி பொதுப் பணித் துறையும், வேளாண்மைத் துறையும், வருவாய்த் துறையும் பயிர்களைக் காக்கப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டன. இவ்வாறு பெரு முயற்சி எடுக்கப்பட்டிருந்தும் தாளடிப் பயிரில் 50 சத வீதத்திற்கு மேற்பட்ட பகுதியில் விளைவு குறைவாகவே இருக்குமெனத் தெரிகிறது. கீழ்ப்பவானி நீர்த் தேக்கத்தில் குறைந்த அளவே நீர் இருந்தமையால், இரண்டாம் போகத்திற்குப் பாசன வசதி அளிக்க முடியவில்லை. எனினும், டிசம்பர் திங்களில் பெய்த மழையால் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களிலுள்ள ஏரி குளங்களில் நீர் நிறைந்துள்ள மையால் நவரைப் பயிர் விளைச்சல் நல்ல வகையில் இருக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. என்றாலும், முன்னரே குறிப்பிட்டுள்ளவாறு, குறிப்பாக திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, கன்னியா குமரி மாவட்டங்களிலே மானவாரி புன்செய்ப் பயிர்கள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளன.

* அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட உரை.



1968 மார்ச் 14] [திரு. ஏ. கோவிந்தசாமி]

2. இத்தகைய இடர்ப்பாடுகள் பல இருந்த போதிலும், இந்த ஆண்டிலே இம் மாநிலத்தின் மொத்த உணவு தானிய உற்பத்தி சுமார் 60 லட்சம் டன் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பு நோக்கின் இந்த உற்பத்தி யளவு 1966–67-ம் ஆண்டைக் காட்டிலும் 2 லட்சம் டன் அதிக மாகவும், 1965–66-ம் ஆண்டைக் காட்டிலும் 7.4 லட்சம் டன் அதிக மாகவும் இருக்கும். மிகு பயன் தரும் உணவு தானியங்களை விளைவிப்ப தற்காகவும், ஒரு போக நிலங்களை, இரு போக நிலங்களாக மாற்று வதற்கும் மேற்கொண்ட திட்டங்கள் நல்ல வெற்றியடைந்ததாலேயே இவ்வாறு உணவு உற்பத்தி பெருகியது. பருவ நிலைமை வாய்ப்பாக அமையாத இந்த ஆண்டில் இவ்வாறு உணவு உற்பத்தி பெருகியது குறிப்பிடத்தக்கதாகும்.

2-A. உழவர்களுக்கு சிக்கல்கள் என்ன என்பதையும், அந்த சிக்கல்களை தீர்க்க அரசாங்கம் என்ன செய்யவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க் கிறார்கள் என்பதையும் நன்கு கண்டறியும் பொருட்டும், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க அவர்களுக்கு உதவும் பொருட்டும், உழவர்களுக்கான கருத்தரங்குகள் மாவட்டங்களில் இம் மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சரும், வேளாண்மைதுறை அதிகாரி களும் அவை அனைத்திலும் பங்கு கொண்டனர். உழவர்களின் வேண்டு கோள்களை கவனிப்பதற்கென எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

3. இம்மாநிலத்திலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக வேளாண்மைத் துறை, (1) மிகு பயன் தரும் தானிய ரகத் திட்டம், (2) ஒரு போக நிலங்களை இரு போக நிலங்களாக்கும் திட்டம், (3) சிறு பாசன வசதிகளைப் பெருக்கும் வேலைத் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களைச் சிறப்பாக மேற்கொண்டது. கீழ்வரும் பத்திகளில் இவை விவரித்துக் கூறப்பட்டுள்ளன.

4. **மிகுபயன் தரும் தானிய வகைத் திட்டம்.**—அதிகப் பரப்பளவில் ஆடுதுறை 27 வகை நெல்லினை விளைவிப்பதே இத் திட்டத்தின் முக்கிய கூறாகும். ஆடுதுறை 27 வகை நெல்லினையும் மிகு பயன்தரும் ஏனைய நெல் வகைகளையும் மொத்தம் 16·66 லட்சம் எக்கர் பரப்பில் விளை விப்பதே இத்திட்டத்தின் நோக்கம். குறுவை, கார் அல்லது சொர்ணவாரிப் பட்டத்தில் 12·16 லட்சம் எக்கராவிலும், சம்பா, நவரை பட்டத்தில் 4·5 லட்சம் எக்கராவிலும் இவ்வாறு பயிரிடப்படும். குறுவை, கார் அல்லது சொர்னவாரி பருவத்தில் மட்டும் 8·65 லட்சம் எக்கரா பரப்பில் இவ்வகை உணவு தானியங்கள் பயிரிடப்பட்டன. இதில் ஆடுதுறை 27 வகையைச் சேர்ந்த நெல் 8·22 லட்சம் எக்கர் பரப்பில் பயிரிடப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ளவாறு தஞ்சாவூர் மாவட்டத்தில் வழக்கமாக சம்பா நெல் பயிடப்படும் 2·1 லட்சம் எக்கர் பரப்பில் ஆடுதுறை 27 வகை நெல் பயிரிடப்பட்டது. இதனால் அம் மாவட்டத்தில் மட்டும் மொத்தம் 4·8 லட்சம் எக்கர் பரப்பில் இவ்வகை நெல் பயிரிடப்பட்டது. சம்பா, நவரைப் பருவங்களில் மிகு பயன் தரும் நெல் வகைகளை உத்தேசமாக 5 லட்சம் எக்கர் பரப்பில் பயிரிட வேண்டுமென்ற குறிக்கோள் கணிசமான அளவு நிறைவுறும் என்று நம்பப்படுகிறது. ஆடுதுறை 27 நெல் வகை பயிரிடப்பட்ட எல்லா இடங்களிலுமே அதிக விளைச்சலைக் கொடுத்துள்ளது. டாய்சுங் நேட்டிவ் I என்ற நெல்வகையும் I.R. 8 என்ற நெல் வகையும் பல இடங்களில் சோதித்தும் பார்க்கப்பட்டன. இவ்வகை நெல், குறிப்பாக I. R. 8 நெல் வகை அதிகமாக விளைந்த போதிலும், போதிய அளவு பாசன வசதி இல்லா நிலைமைகளிலும், மழைக் காலத்தில் பயிரிட்டாலும் வாடல் நோய்க்கு மிகுதியும் இரையாவதாகத் தெரிய வந்தது. எனவே, இந்த நெல் வகைகள் சங்கமுகப் பகுதிகளில், சம்பா பருவத்தில் பயிரிடுவதற்கு ஏற்றவையல்ல. இம் மாநிலத்தின் மேல் பகுதியிலும், நல்ல வடிகால் வசதியுள்ள பகுதிகளிலும், நவரைப் பருவத்தில் மட்டும் I.R. 8 வகை நெல்லினை விளைவிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறையிலுள்ள வல்லுனர்களின்

ஆலோசனையின் மேல் இம்மாநிலத்தில் தாய்சுங் நேட்டிவ் I வகை நெல்லை பயிரிடவேண்டாமென உழவர்களுக்கு கூறுவதெனவும் முடிவு செய்யப் பட்டது.

மிகு பயன்தரும் கலப்புவகை சோளம், கம்பு, மக்காச்சோளம் போன்ற சிறுதானியங்களைப் பொறுத்த வரையில், முதல் பருவத்தில் 19 ஆயிரம் ஏக்கர் பரப்பில் இவற்றைப் பயிரிடுவதென எண்ணப்பட்டதற்கு மாறாக, 29,000 ஏக்கர் பரப்பில் இவை பயிரிடப்பட்டன. இந்தப் பருவத்தில் பாசன வசதியுடன் அதிக அளவில் புன்செய்ப் பயிர்கள் பயிரிடப்படவில்லை. எனவேதான், குறிக்கோளளவு குறைவாக உள்ளது. இரண்டாவது பருவத்திலும், கோடைப் பருவத்திலும் இந்த தானியங்களை 73 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடுவதெனக் குறிக்கோளளவு முடிவு செய்யப்பட்டுள்ளது. இக் குறிக்கோள் அளவினை எய்த முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

1968-69-ம் ஆண்டில் 25 லட்சம் ஏக்கர் பரப்பில் மிகு பயன்தரும் நெல் வகைகளைப் பயிரிடத் திட்டமிட்டுள்ளது. சற்றேறக்குறைய 20 லட்சம் ஏக்கரில் ஆடுதுறை 27 நெல் வகையும், எஞ்சிய பரப்பில் கோயம்பத்தூர் 25, கோயம்பத்தூர் 29, I. R. 8 முதலான நெல் வகைகளும் பயிரிடப்படும். கலப்பின சிறு தானியங்களை ஒரு லட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடுவதாகவும் திட்டமிடப்பட்டுள்ளது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் இதுவே நமது முக்கிய முயற்சியாக இருக்கும்.

**5. ஒருபோக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றுதல்.**—அதிக அளவில் ஒருபோக நன்செய் நிலங்களை இருபோக நன்செய் நிலங்களாக மாற்றுவதற்கு இந்த ஆண்டில் திட்ட வட்டமான வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒருபோக சம்பா நிலங்களில் இருபோகம் விளைவிப்பது இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். முதல் போகமாக ஆடுதுறை 27 வகை நெல் ஜூலையில் விளைவிக்கப்படும். அதன் பின்னர் இரண்டாவது பயிர் நவம்பரில் விளைவிக்கப்படும். 6 லட்சம் ஏக்கர் சம்பா நிலத்தை இவ்வாறு இருபோக நிலமாக்குவது நமது குறிக்கோளாகும். இந்த ஆண்டு தென் மேற்குப் பருவமழை காலந்தாழ்த்தியதால் மேட்டூரிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விடுவதும் தாமதப்பட்டது. இதனால் இயல்பான குறுவைப் பயிர் விடுவது தடைப்பட்டது. இதுவுமின்றி, கல்லணையில் உடைப்பேற்பட்டதால் நிலைமை மேலும் சீர்கேடுற்றது. ஒருபோக நிலத்தை இரு போகமாக மாற்றுவது புதியதாக உள்ளதால் குடியானவர்களிடையே இது இன்றும் சூடுபிடிக்காத நிலையும் இவற்றுடன் சேர்ந்து கொண்டது. இத்தகைய இடர்பாடுகள் பல இருந்தபோதிலும், 2·1 லட்சம் ஏக்கர் பரப்புள்ள சம்பா நிலத்தை, இருபோக நிலமாக மாற்ற முடிந்துள்ளது. இது கணிசமான சாதனையாகும். ஏனெனில், பன்னெடுங்காலமாகக் குடியானவர்களிடையே இருந்துவரும் பழக்கத்தை இது மாற்றுவதாகும். பழமையிலேயே ஊறிப்போன வழக்கம் என்றும், மாறுதல்களை எளிதில் ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்றும், குடியானவர்களை குறிப்பிடுவது வழக்கம். ஆனால், இம் மாற்றத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டு நல்ல வகையில் செயலாற்றியதற்காக, தஞ்சாவூர் மாவட்டக் குடியானவர்களின் ஊக்கத்தையும், முயற்சியையும் நாம் பாராட்ட வேண்டும். வேளாண்மை, பாசனம் வருவாய்த் துறைகளைச் சேர்ந்த அலுவலர்களும் இத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்குக் கடுமையாக உழைத்தனர். அவர்களுக்கும் நமது பாராட்டுதல்கள் உரித்தாகும். பருவநிலை வாய்ப்பாக அமையாத இந்த ஆண்டிலேயே நாம் இந்த அளவு முன்னேற்றம் கண்டுள்ளோம் என்றால், அடுத்து வரும் ஆண்டுகளில் நாம் அடையக்கூடிய முன்னேற்றத்திற்கு இது நல்லதோர் அறிகுறியாகும். ஒரு போக நிலத்தில் இருபோகம் பயிரிட்ட தஞ்சாவூர்க் குடியானவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், அத்தகைய நிலங்களில் இரண்டாம் போகப் பாசனப் பயிருக்குரிய தண்ணீர்த் தீர்வையைச் செலுத்த வேண்டியதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.





இந்த ஆண்டிலே சாத்தனூர், கிருஷ்ணகிரி, மஞ்சளாறு நீர்த் தேக்கங்களில் உள்ளம் ஆறுதல் பெறும் வகையில் நீர் நிரம்பி இருந்ததால், முன்னர் ஒருபோகம் பயிரிடப்பட்ட பகுதிகளில் இந்த நீர்த் தேக்கங்களின் நீரைக் கொண்டு இரண்டாவது பயிரும் செய்ய முடிந்தது. இவ்வகையில் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் சாத்தனூர்த் திட்டப் பகுதியில் 5,700 ஏக்கராவிலும், தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டப் பகுதியின் கீழ் 10,270 ஏக்கராவிலும், மதுரை மாவட்டம் மஞ்சளாறு திட்டப் பகுதியின் கீழ் 1,000 ஏக்கரிலும் இவ்வாறு இரண்டாம் போகப் பயிர் விளைவிக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரவருணி ஆயக்கட்டின் கீழ் வழக்கமாக இருபோகம் பயிரிடப்படும் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாண்டு மூன்றும் போகமும் விளைவிக்கப்பட்டது. எனவே இந்த ஆண்டில் சற்றேறக் குறைய 2·30 லட்சம் ஏக்கர் பரப்பில் மற்றொரு போகம் விளைவிக்கப்பட்டது.

அடுத்துவரும் ஆண்டுகளில் அதிக உணவு உற்பத்திக்கு நாம் எடுக்கும் முயற்சியில் இது மிக முக்கியமான வேலைத் திட்டமாக இருக்கும். ஆனால் இதில் ஒரு சிக்கல் எழுந்துள்ளது. புதிய இருபோக நிலத்தில் வழக்கமான சம்பா தாளடி வகையை எவ்வாறு பயிரிடுவது என்பது இப்போது எழுந்துள்ள சிக்கலாகும். பன்னெடுங்காலமாகச் சம்பா நெல் பயிரிடப்பட்டுவரும் நிலம் இருபோக நிலமாக மாற்றப்பட்டு ஜூலை-நவம்பருக்கிடையில் ஆடுதுறை 27 வகை நெல் விளைவிக்கப்பட்டால், அதே நிலத்தில் நவம்பர் முதற் கொண்டு குறுகிய காலப் பயிரோ, நடுத்தரக்காலப் பயிரோதான் அதில் வெற்றிகரமாக விளைவிக்க முடியும். அந்த நிலத்தில் கோயம்புத்தூர் 25 போன்ற நீண்டகால தாளடி நெல் வகைப் பயிரிடப்பட்டால், அந்தப் பயிருக்கு மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து பாசனம் இயல்பாக நிறுத்தப்படும் தேதிக்குப் பின்னரும் பாசன வசதி வேண்டி இருக்கிறது. இதுவே நம்முன் உள்ள பெரும் சிக்கலாகும். தங்கள் ஒரு போக சம்பா நிலங்களை இரு போக நிலங்களாக மாற்றுகிற நிலக்கிழார்களுக்குள்ள இச் சிக்கலைத் தவிர்ப்பதற்காக கோயம்புத்தூர்-32, அம்பாசமுத்திரம்-5 போன்ற குறுகிய, நடுத்தரகால நெல் விதைகள், அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கப்படும். இவ்வகை நெல் விதைகளை இப் பருவத்திலேயே வாங்கி தஞ்சாவூர் மாவட்டக் குடியானவர்களுக்கு இந்த ஆண்டின் பிற்பகுதியில் வழங்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏராளமான சம்பா நிலக் குடியானவர்கள் சம்பா பருவத்தின் முதல் பகுதியில் ஆடுதுறை 27 நெல் பயிரிட்டுவிட்டு, இக் குறுகிய கால அல்லது நடுத்தரக்கால நெல் வகையினை நவம்பர் முதற்கொண்டு, இரண்டாம் தாளடிப் பயிராகப் பயிரிடத் தொடங்குவர் என நம்பப்படுகிறது.

**6. சிறுபாசன வசதிகளை முனைப்பாக்குதல்.**—வேளாண்மைத் துறையில் அரசாங்க வேலைத் திட்டத்தின் மூன்றாவது முக்கியமான கூறு பாசன வசதிகளைப் பெருக்குவதாகும். தமிழ் நாட்டில் பெரும் பாசனத் திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் உள்ள சிறுபாசன வசதிகளை நாம் மேம்படுத்தியாகவேண்டும். ஏரி, குளங்கள், சமுதாயக் கிணறுகள் முதலியவை பொதுத்துறையிலுள்ள சிறுபாசன வசதிகளாகும்; கவலைக் கிணறு, குழாய்க் கிணறு, வடிமுனைக் கிணறு முதலானவை தனியார் துறையிலுள்ள சிறுபாசன வசதிகளாகும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான, குறிப்பாக ஒருபோக நிலங்களில் இரண்டாவது நன்செய்ப் பயிர் விளைப்பதற்கான வேலைத் திட்டம் வெற்றியடைவது சிறுபாசன வசதிகளை மேம்படுத்துவதையே பொறுத்திருக்கும். இதற்கு இறைவைப்பாசன வசதிகளை மேம்படுத்த வேண்டும். கவலைக் கிணறுகளை அதிக அளவில் தோண்ட வேண்டும். குழாய்க் கிணறுகளையும், துளைக் கிணறுகளையும், வடிமுனை கிணறுகளையும் அமைக்கவேண்டும். இக் கிணறுகளில் நீர் இறைக்க மின்வசதி செய்து கொடுக்க வேண்டும். ஒரு போகத்திற்கு மட்டுமே பாசன வசதி அளிக்கும் பாசன வாயில்களின் ஆயக்

ஆலோசனையின் மேல் இம்மாநிலத்தில் தாய்சுங் நேட்டிவ் I வகை நெல்லை பயிரிடவேண்டாமென உழவர்களுக்கு கூறுவதெனவும் முடிவு செய்யப் பட்டது.

மிகு பயன்தரும் கலப்புவகை சோளம், கம்பு, மக்காச்சோளம் போன்ற சிறுதானியங்களைப் பொறுத்த வரையில், முதல் பருவத்தில் 19 ஆயிரம் எக்கர் பரப்பில் இவற்றைப் பயிரிடுவதென எண்ணப்பட்டதற்கு மாறாக, 29,000 எக்கர் பரப்பில் இவை பயிரிடப்பட்டன. இந்தப் பருவத்தில் பாசன வசதியுடன் அதிக அளவில் புன்செய்ப் பயிர்கள் பயிரிடப்படவில்லை. எனவேதான், குறிக்கோளளவு குறைவாக உள்ளது. இரண்டாவது பருவத்திலும், கோடைப் பருவத்திலும் இந்த தானியங்களை 73 ஆயிரம் எக்கர் பரப்பளவில் பயிரிடுவதெனக் குறிக்கோளளவு முடிவு செய்யப்பட்டுள்ளது. இக் குறிக்கோள் அளவினை எய்த முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

1968-69-ம் ஆண்டில் 25 லட்சம் எக்கர் பரப்பில் மிகு பயன்தரும் நெல் வகைகளைப் பயிரிடத் திட்டமிட்டுள்ளது. சற்றேறக்குறைய 20 லட்சம் எக்கரில் ஆடுதுறை 27 நெல் வகையும், எஞ்சிய பரப்பில் கோயம்பத்தூர் 25, கோயம்பத்தூர் 29, I. R. 8 முதலான நெல் வகைகளும் பயிரிடப்படும். கலப்பின சிறு தானியங்களை ஒரு லட்சம் எக்கர் பரப்பில் பயிரிடுவதாகவும் திட்டமிடப்பட்டுள்ளது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் இதுவே நமது முக்கிய முயற்சியாக இருக்கும்.

**5. ஒருபோக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றுதல்.**—அதிக அளவில் ஒருபோக நன்செய் நிலங்களை இருபோக நன்செய் நிலங்களாக மாற்றுவதற்கு இந்த ஆண்டில் திட்ட வட்டமான வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒருபோக சம்பா நிலங்களில் இருபோகம் விளைவிப்பது இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். முதல் போகமாக ஆடுதுறை 27 வகை நெல் ஜூலையில் விளைவிக்கப்படும். அதன் பின்னர் இரண்டாவது பயிர் நவம்பரில் விளைவிக்கப்படும். 6 லட்சம் எக்கர் சம்பா நிலத்தை இவ்வாறு இருபோக நிலமாக்குவது நமது குறிக்கோளாகும். இந்த ஆண்டு தென் மேற்குப் பருவமழை காலந்தாழ்த்தியதால் மேட்டூரிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விடுவதும் தாமதப்பட்டது. இதனால் இயல்பான குறுவைப் பயிர் விதைப்பது தடைப்பட்டது. இதுவுமின்றி, கல்லணையில் உடைப்பேற் பட்டதால் நிலைமை மேலும் சீர்கேடுற்றது. ஒருபோக நிலத்தை இரு போகமாக மாற்றுவது புதியதாக உள்ளதால் குடியானவர்களிடையே இது இன்றும் சூடுபிடிக்காத நிலையும் இவற்றுடன் சேர்ந்து கொண்டது. இத்தகைய இடர்பாடுகள் பல இருந்தபோதிலும், 2·1 லட்சம் எக்கர் பரப்புள்ள சம்பா நிலத்தை, இருபோக நிலமாக மாற்ற முடிந்துள்ளது. இது கணிசமான சாதனையாகும். ஏனெனில், பன்னெடுங்காலமாகக் குடியானவர்களிடையே இருந்துவரும் பழக்கத்தை இது மாற்றுவதாகும். பழைமையிலேயே ஊறிப்போன வழக்கம் என்றும், மாறுதல்களை எளிதில் ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்றும், குடியானவர்களை குறிப்பிடுவது வழக்கம். ஆனால், இம் மாற்றத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டு நல்ல வகையில் செயலாற்றியதற்காக, தஞ்சாவூர் மாவட்டக் குடியானவர்களின் ஊக்கத்தையும், முயற்சியையும் நாம் பாராட்ட வேண்டும். வேளாண்மை, பாசனம் வருவாய்த் துறைகளைச் சேர்ந்த அலுவலர்களும் இத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்குக் கடுமையாக உழைத்தனர். அவர்களுக்கும் நமது பாராட்டுதல்கள் உரித்தாகும். பருவநிலை வாய்ப்பாக அமையாத இந்த ஆண்டிலேயே நாம் இந்த அளவு முன்னேற்றம் கண்டுள்ளோம் என்றால், அடுத்து வரும் ஆண்டுகளில் நாம் அடையக்கூடிய முன்னேற்றத்திற்கு இது நல்லதோர் அறிகுறியாகும். ஒரு போக நிலத்தில் இருபோகம் பயிரிட்ட தஞ்சாவூர்க் குடியானவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், அத்தகைய நிலங்களில் இரண்டாம் போகப் பாசனப் பயிருக்குரிய தண்ணீர்த் தீர்வையைச் செலுத்த வேண்டியதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.



இந்த ஆண்டிலே சாத்தனூர், கிருஷ்ணகிரி, மஞ்சளாறு நீர்த் தேக்கங்களில் உள்ளம் ஆறுதல் பெறும் வகையில் நீர் நிரம்பி இருந்ததால், முன்னர் ஒருபோகம் பயிரிடப்பட்ட பகுதிகளில் இந்த நீர்த் தேக்கங்களின் நீரைக் கொண்டு இரண்டாவது பயிரும் செய்ய முடிந்தது. இவ்வகையில் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங் களில் சாத்தனூர்த் திட்டப் பகுதியில் 5,700 எக்கராவிலும், தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டப் பகுதியின் கீழ் 10,270 எக்கராவிலும், மதுரை மாவட்டம் மஞ்சளாறு திட்டப் பகுதியின் கீழ் 1,000 எக்கரிலும் இவ்வாறு இரண்டாம் போகப் பயிர் விளைவிக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரவருணி ஆயக்கட்டின் கீழ் வழக்கமாக இருபோகம் பயிரிடப்படும் 1,000 எக்கர் நிலப்பரப்பில் இவ்வாண்டு மூன்றும் போகமும் விளைவிக்கப்பட்டது. எனவே இந்த ஆண்டில் சற்றேறக் குறைய 2·30 லட்சம் எக்கர் பரப்பில் மற்றொரு போகம் விளைவிக் கப்பட்டது.

அடுத்துவரும் ஆண்டுகளில் அதிக உணவு உற்பத்திக்கு நாம் எடுக்கும் முயற்சியில் இது மிக முக்கியமான வேலைத் திட்டமாக இருக்கும். ஆனால் இதில் ஒரு சிக்கல் எழுந்துள்ளது. புதிய இருபோக நிலத்தில் வழக்கமான சம்பா தாளடி வகையை எவ்வாறு பயிரிடுவது என்பது இப்போது எழுந்துள்ள சிக்கலாகும். பன்னெடுங்காலமாகச் சம்பா நெல் பயிரிடப்பட்டுவரும் நிலம் இருபோக நிலமாக மாற்றப்பட்டு ஜூலை-நவம்பருக்கிடையில் ஆடுதுறை 27 வகை நெல் விளைவிக்கப்பட்டால், அதே நிலத்தில் நவம்பர் முதற் கொண்டு குறுகிய காலப் பயிரோ, நடுத்தரக்காலப் பயிரோதான் அதில் வெற்றிகரமாக விளைவிக்க முடியும். அந்த நிலத்தில் கோயம்புத்தூர் 25 போன்ற நீண்டகால தாளடி நெல் வகைப் பயிரிடப்பட்டால், அந்தப் பயிருக்கு மேட்டூர் நீர்த் தேக்கத்தி லிருந்து பாசனம் இயல்பாக நிறுத்தப்படும் தேதிக்குப் பின்னரும் பாசன வசதி வேண்டி இருக்கிறது. இதுவே நம்முன் உள்ள பெரும் சிக்கலாகும். தங்கள் ஒரு போக சம்பா நிலங்களை இரு போக நிலங்களாக மாற்றுகிற நிலக்கிழார்களுக்குள்ள இச் சிக்கலைத் தவிர்ப்பதற்காக கோயம்புத்தூர்-32, அம்பாசமுத்திரம்-5 போன்ற குறுகிய, நடுத்தரகால நெல் விதைகள், அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கப்படும். இவ்வகை நெல் விதைகளை இப் பருவத்திலேயே வாங்கி தஞ்சாவூர் மாவட்டக் குடியான வர்களுக்கு இந்த ஆண்டின் பிற்பகுதியில் வழங்குமாறு ஆணையிடப் பட்டுள்ளது. இதன் காரணமாக ஏராளமான சம்பா நிலக் குடியான வர்கள் சம்பா பருவத்தின் முதல் பகுதியில் ஆடுதுறை 27 நெல் பயிரிட்டு விட்டு, இக் குறுகிய கால அல்லது நடுத்தரக்கால நெல் வகையினை நவம்பர் முதற்கொண்டு, இரண்டாம் தாளடிப் பயிராகப் பயிரிடத் தொடங்குவர் என நம்பப்படுகிறது.

**6. சிறுபாசன வசதிகளை முனைப்பாக்குதல்.**—வேளாண்மைத் துறை யில் அரசாங்க வேலைத் திட்டத்தின் மூன்றாவது முக்கியமான கூறு பாசன வசதிகளைப் பெருக்குவதாகும். தமிழ் நாட்டில் பெரும் பாசனத் திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், பொதுத் துறை யிலும், தனியார் துறையிலும் உள்ள சிறுபாசன வசதிகளை நாம் மேம்படுத்தியாகவேண்டும். ஏரி, குளங்கள், சமுதாயக் கிணறுகள் முதலியவை பொதுத்துறையிலுள்ள சிறுபாசன வசதிகளாகும்; கவலைக் கிணறு, குழாய்க் கிணறு, வடிமுனைக் கிணறு முதலானவை தனியார் துறையிலுள்ள சிறுபாசன வசதிகளாகும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான, குறிப்பாக ஒருபோக நிலங்களில் இரண்டாவது நன்செய்ப் பயிர் விளைப்பதற்கான வேலைத் திட்டம் வெற்றியடைவது சிறுபாசன வசதிகளை மேம்படுத்துவதையே பொறுத்திருக்கும். இதற்கு இறைவைப்பாசன வசதிகளை மேம்படுத்த வேண்டும். கவலைக் கிணறுகளை அதிக அளவில் தோண்ட வேண்டும். குழாய்க் கிணறுகளையும், துளைக் கிணறுகளையும், வடிமுனை கிணறுகளையும் அமைக்கவேண்டும். இக் கிணறுகளில் நீர் இறைக்க மின்வசதி செய்து கொடுக்க வேண்டும். ஒரு போகத்திற்கு மட்டுமே பாசன வசதி அளிக்கும் பாசன வாயில்களின் ஆயக்

கட்டில் கிணறுகள் தோண்டுவதன்மூலம், அந்த ஒரு போகத்திற்குப் பாசனத்தை உறுதிப்படுத்துவதுடன், கிணற்று நீரைக்கொண்டு கூடுதல் பயிர் ஒன்றை விளைவிக்க முடியும். இவ்வாறு எக்கர் அடித்துக்கிடக்கும் ஏரிகளில் தூர் எடுத்தும், பழைய ஏரிகளின் நீர் கொள்ளளவை மீட்பித்தும், இயன்ற இடங்களில் புதிய ஏரிகள் அமைத்தும், பாசன வசதிகளைக் கூடுதல் பரப்புள்ள நிலங்களுக்கு அதிகப்படுத்த முடியும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த வேலைத் திட்டங்களை முனைந்து செய்வது அவசியமாகும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பிய குறிப்பில், இம் மாநிலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு, உணவு உற்பத்தி ஆணையர் தயாரித்தனுப்பிய அறிக்கை பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் சிறு பாசனத் திட்டச் செலவினை அதிக அளவு உயர்த்துவதே அவருடைய முதன்மையான செயற் குறிப்பாகும். இச் செயற்குறிப்பினை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதனை இந்த ஆண்டு செயல்படுத்துவதற்காக, 20 கோடி ரூபாய் சிறப்பு உதவி அளிக்குமாறு இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது. இந்த உதவியை இந்திய அரசு இதுவரை தருவதற்கு, முன்வர இயலவில்லை. என்றாலும், தனியார் சிறு பாசனத் திட்டங்களுக்காக நிறுவனங்கள் தரும் நிதி உதவியை இயன்றளவு அதிகம் பயன் படுத்திக் கொள்ளும்படி இந்திய அரசு ஆலோசனை நல்கியது. இதற்கு வேண்டிய தொகையினை நிதி உதவும் நிறுவனங்கள் கொடுக்குமாறு தாங்கள் பார்த்துக் கொள்வதாகவும் இந்திய அரசினர் உறுதி கூறினர். முதலமைச்சரவர்கள் வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளதுபோல் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்தும், ஆயுள் ஈட்டுறுதி கழகத்திடமிருந்தும், வணிக வங்கிகளிடமிருந்தும் நிதி உதவி கிடைக்கும். இது கூட்டுறவுத் துறைக்குத் தரப்படும். எனவே, தனியார் சிறுபாசனத் திட்டங்களின் பெரும் பகுதிக்கு அதாவது தரைமட்டக் கிணறுகள் அமைக்கும் பணிக்கும், விசையேற்றங்களை நிறுவும் பணிக்கும் அடுத்த ஆண்டு முதல் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் கடனுதவி கொண்டே நிதி வசதி செய்து கொடுக்கப்படும்.

இந்தப் புதிய ஏற்பாட்டின்படி குடியானவர்கள் தரைமட்டக் கிணறுகள் தோண்டுவதற்கும், அவற்றில் விசையேற்றங்கள் அமைப்பதற்கும் புதிய கடன்கள் நில அடைமான வங்கிகள் மூலமாகவே கொடுக்கப்படும். புதுக் கிணறு மானியத் திட்டத்தின் கீழும், விசையேற்றத் திட்டத்தின் கீழும் அரசாங்கம் இனி நேரிடையாகக் கடன் கொடுக்காது. பெருமளவில் நிதி உதவி செய்வதற்காக மத்திய நில அடைமான வங்கிகள் கடன் ஈட்டுறுதி ஆவணங்களை வெளியிடும். இம் மாநில அரசாங்கமும், மத்திய அரசும், நிதி உதவும் நிறுவனங்களும் இவற்றை வாங்கும். நில அடைமான வங்கிகளைத் தவிர ஏற்கனவே அமைக்கப்பட்டு விரைவிலே செயலாற்றத் தொடங்கவிருக்கிற வேளாண்மைத் தொழிற் கழகமும், விசையேற்றங்களை வாங்குவதற்காகக் கடன் வசதியளிக்கும். இந்தக் கழகத்தின் பங்கு மூலதனத்தில் இம் மாநில அரசாங்கமும், மத்திய அரசும் பங்கு பெறும். கடன் ஆவணங்களின் அடிப்படையில் இந்தக் கழகம் வணிக வங்கிகளிடமிருந்து அதிக அளவில் பணம் திரட்ட முடியும். விசையேற்றங்களைத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் வாங்குவதற்காக இக் கழகம் கடன் வசதியளிக்கும். தரைமட்டக் கிணறுகளைத் தோண்டுவதற்கும், விசையேற்றங்களை நிறுவுவதற்கும் கடன் வழங்கும் இயல்பான வேலைத் திட்டத்துடன்கூட, நில அடைமான வங்கிகள் வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்தின் உதவியுடன் இம் மாநிலம் எங்கணும் அடைவாக உள்ள வட்டாரங்களில் குறிப்பாகப் பெரிய பாசன ஏற்பாடுகள் உள்ள பகுதிகளில் இரண்டாம் போகம் பயிரிடும் பரப்பினை அதிகப்படுத்துகின்ற நோக்கத்துடன் இந்த வசதிகளை அதிக அளவில் அளித்து வரும். இவ் வகையில் இரண்டு வேலைத் திட்டங்களுக்கு இக் கழகம் ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. (புதுக்கோட்டை



பகுதியில் ரூ. 92·50 லட்சம் செலவில் 2,000 கிணறுகளையும், 500 விசையேற்றங்களையும் அமைப்பது ஒரு திட்டமாகும். கோயம்புத்தூர் மாவட்டத்தின் தொண்டாமுத்தூர், பெரிய நாயக்கன்பாளையம் வட்டாரங்களில் ரூ. 168 லட்சம் செலவில் 1,000 கிணறுகளையும், 1,000 விசையேற்றங்களையும் அமைப்பது மற்றொரு திட்டமாகும். இத் திட்டங்கள் இப் பகுதிகளில் நில அடைமான வங்கிகள் மூலம் நிறைவேற்றப்படும். மேலும் ஐந்து திட்டங்கள் வகுக்கப்பட்டு, வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்தால் ஆராயப்பட்டு வருகின்றன. இவை பின் வருமாறு :—

(i) கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமராவதி திட்டப் பகுதியில் ரூ. 160 லட்சம் செலவில் 2,000 கிணறுகளையும், 2,000 விசையேற்றங்களையும் அமைத்தல்.

(ii) இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரியாறு விரிவுப் பகுதியில் ரூ. 45 லட்சம் செலவில் 900 கிணறுகளையும், 900 மின்சார மோட்டார் விசையேற்றங்களையும் அமைத்தல்.

(iii) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புதிய கட்டளை-புள்ளம்பாடி கால்வாய் பகுதிகளில் ரூ. 145·50 லட்சம் செலவில் 2,450 கிணறுகளையும் 4,000 விசையேற்றங்களையும் அமைத்தல்.

(iv) மதுரை மாவட்டத்தின் மதுரை, மேலூர் வட்டங்களில் ரூ. 100 லட்சம் செலவில் 2,000 கிணறுகளையும், 2,000 விசையேற்றங்களையும் அமைத்தல்.

(v) தருமபுரி மாவட்டத்தின் கிருஷ்ணகிரி வட்டத்தில் ரூ. 100 லட்சம் செலவில் 2,000 கிணறுகளையும், 1,000 விசையேற்றங்களையும் அமைத்தல்.)

இத் திட்டங்கள் 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் தேதிக்கு முன் ஒப்பளிப்பு வழங்கப் பெறுமாயின், மத்திய நில அடைமான வங்கிகள் வெளியிடும் கடன் ஈட்டுறுதி ஆவணங்களில் 10 சத வீதமுள்ளவற்றை மாநில அரசாங்கம் வாங்க வேண்டுமென வேளாண்மை மறு கடன் உதவிக் கழகம் வற்புறுத்தும். இத் தேதிக்குள் இத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பெறும் எனவும், இவை விரைவில் செயல்படத் தொடங்கும் எனவும் நம்பப்படுகிறது.

முதலமைச்சர் அவர்கள் தமது வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளவாறு, இத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு, நில அடைமான வங்கிகளில் நிலவி வருகின்ற நடைமுறைகளும் மரபுகளும் பெருமளவில் திருத்தியமைத்துச் சீராக்கப்பட வேண்டும். குறிப்பாக, வில்லங்கச் சான்றிதழ் எக்கால அளவுக்குப் பெறப்பட வேண்டுமென்பதை மாற்றியமைக்க வேண்டும். இவை ஆராயப்பட்டு வருகின்றன. இத் திட்டம் தங்கு தடையின்றி, இடர்ப்பாடு எதுவுமின்றி நிறைவேறுவதற்கு அவசியமான மாறுதல்கள் செய்யப்படுமென நம்பப்படுகிறது. தரை மட்டக் கிணறு வெட்டுவதற்கு ஏற்கெனவே முதல் தவணைத் தொகை அளிக்கப்பட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள நேர்வுகளில், புதிய கொள்கையின் விளைவாக இரண்டாவது, மூன்றாவது தவணைத் தொகை அளிக்க ஒப்பளிப்பு வழங்குவதற்கே வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. துளைக் கிணறுகள் அமைத்தல், வடிமுனைக் கிணறுகள் அமைத்தல், பாறைகளை வெடி வைத்துத் தகர்க்கும் பிரிவு கிணறுகளை ஆழப்படுத்தல் முதலிய தனியார் சிறு பாசனத் திட்டங்களுக்கும், சிறு பாசனச் சிறப்புத் திட்டம், ஏரிகளில் தூர் எடுத்துச் செம்மைப்படுத்தல் போன்ற பொதுத் துறை சிறு பாசனத் திட்டங்களுக்கும் அரசாங்கம் வழக்கம்போல் நேரிடையாகக் கடன் கொடுத்துவரும்.

1967–68-ல் தனியார் பாசனத் திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 7·25 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டில் இதே காரியத்திற்காக நில அடைமான வங்கிகள் ரூ. 3 கோடி வழங்குமென எதிர்பார்க்கப்

படுகிறது. ஆனால், வரும் ஆண்டில் இத்தகைய திட்டங்களுக்காகக் குடியானவர்களுக்குக் கிடைக்கும் தொகை ரூ. 11·6 கோடியாக இருக்கும். இதில், அரசாங்கம் நேரிடையாகக் கடன் கொடுப்பதற்காக, ரூ. 3·9 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன்கூட, மத்திய நில அடைமான வங்கியின் கடன் ஈட்டுறுதி ஆவணங்களை ரூ. 1 கோடிக்கு வாங்குவதன் வாயிலாகவும், வேளாண்மைத் தொழில் கழகத்தின் பங்கு மூலதனத்தில் ரூ. 20 லட்சம் பங்கு பெறுவதன் மூலமாகவும், இந்த நிறுவனங்கள் மொத்தம் ரூ 7·7 கோடி திரட்டி, கிணறுகள் வெட்டுவதற்கும் விசையேற்றங்கள் அமைப்பதற்கும் குடியானவர்களுக்குக் கடன் வழங்கும் வசதியை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும். எனவே, அரசாங்கத்தின் புதிய கொள்கையின் பயனாகக் குடியானவர்களுக்கு இம் மாநிலத்தில் பாசன வசதிகளைப் பெருக்குவதற்குக் கிடைக்கும் நிதி உதவி கூடுமேயன்றிக் குறையாது. டிராக்டர்களைத் தவணைக் கொள்முதல் செய்வதற்குக் கடன் வழங்கும் பணியை இதுவரை அரசாங்கம் கவனித்து வந்தது. இப் பணியை இப்போது வேளாண்மைத் தொழில் கழகம் மேற்கொள்ளும். இவ் வகையிலும், குடியானவர்களுக்குக் கிடைக்கும் நிதி உதவி கணிசமாகக் கூடுமேயன்றிக் குறையாது.

பெரும் பாசன ஏற்பாடுகளின் ஆயக்கட்டில் புதிய கிணறுகள் தோண்டுவதற்கும் விசையேற்றங்களை அமைப்பதற்கும் உள்ள கட்டுப்பாடுகளே அந்த ஆயக்கட்டுகளிலுள்ள நில நீரினைப் பெருமளவு பயன்படுத்துவதிலுள்ள இடர்ப்பாடாகும். பாசனப் பகுதிகளில் போதிய அளவு நீரைச் சேமித்து வைக்கவேண்டும் என்பதற்காகவே இக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. உணவு உற்பத்தியைப் பல்மடங்கும் பெருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிற இக் காலத்தே, இக் கட்டுப்பாடுகளை இயன்ற அதிக அளவு தளர்த்துவது அவசியமும் விரும்பத்தக்கதும் ஆகுமெனக் கருதப்படுகிறது. உணவு உற்பத்தி ஆணையரும் தனது அறிக்கையில் இவ்வாறே பரிவுரை செய்துள்ளார். முதன்மைக் கால்வாய்கள், கிளைக் கால்வாய் ஆகியவற்றின் கரையிலிருந்து இரண்டு பர்லாங் தொலைவிற்குள்ளும் பங்கிட்டுக் கால்வாய்களின் கரையிலிருந்து ஒரு பர்லாங் தொலைவிற்குள்ளும் பாசனத் திட்ட ஆயக்கட்டில் புதிய கிணறுகள் வெட்டக் கூடாதெனவும் கிணறுகளை ஆழப்படுத்தக் கூடாதெனவும் விசையேற்றங்களை அமைக்கக்கூடாதெனவும் முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்தது. இத் தொலைவினை முறையே 50 மீட்டர், 25 மீட்டர் என அரசாங்கம் 1967 நவம்பர் திங்களில் குறைத்தமைத்துத் தடையினைத் தளர்த்தியுள்ளது. இவற்றிலிருந்து நீர் இறைக்க மின் விசையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், பாசன வசதியுள்ள காலத்து மட்டுமே இவ்வாறு மின் விசையைப் பயன்படுத்தலாமென்று விதிக்கப்பட்டுள்ளது. மேலும் பயன்படுத்தும் மோட்டாரின் பரித்திறனும் குறிப்பிட்ட அளவுக்குள் இருக்கவேண்டும். இவ்வாறு கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது, கீழ்ப் பவானி, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதிகள் நீங்கலாக ஏனைய திட்டப் பகுதிகள் அனைத்திற்கும் பொருந்தும். இந்த இரு பகுதிகளிலும்கூட, இத்தகைய சலுகைகள் பின்னர் வழங்கப்பட்டுள்ளன.

பாசனப் பணிகளை, குறிப்பாக சிறு பாசனப் பணிகளைப் பல நிறுவனங்கள் கவனித்து வருவதால், குழப்பம் ஏற்படுகிறதென்றும், இதனால் குடியானவர்கள் பல இடர்ப்பாடுகளுக்கு ஆட்பட நேருகின்றது என்றும் பொதுமக்கள் குறை கூறுவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இம் மாநிலத்தில் எல்லா நிலையிலும் பாசனப் பணிகளைக் கவனித்துக் கொள்வதற்கு ஒரு நிறுவனமே இருக்க வேண்டுமென அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இத்தகைய நிறுவனத்தை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு இது உறுதுணையாயிருக்குமென்பது உறுதி.



**7.** வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு மேற்கொண்டுள்ள முக்கியமான வேலைத் திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

## I. பெரும் பாசனம்.

இப்போதுள்ள நிலையில், நம் மாநிலத்தில் பெரும் பாசனத் திட்டங்களை விரிவுபடுத்துவதற்கோ புதிய பாசனத் திட்டங்களை மேற்கொள்வதற்கோ உள்ள வாய்ப்பு மிகக் குறைவு. தற்போதுள்ள பாசனத் திட்டப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான பணி விழிப்புடனும் ஆர்வத்துடனும் மேற்கொள்ளப்படும்.

## II. சிறு பாசனம்.

(i) **சிறு பாசன சிறப்புத் திட்டம்.**—இது ஐந்தாண்டுத் திட்டத்தைச் சேர்ந்த ஒரு வேலைத் திட்டமாகும். விரைந்து பயன் அளிக்கத்தக்க ரூ. 15 லட்சத்துக்குமேல் செலவு மேற்படாத சிறு பாசனத் திட்டங்களை மேற்கொள்வதே இவ் வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின்கீழ், பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன :—

(1) உடைப்பெடுத்த, கைவிடப்பட்ட ஏரிகளைப் புதுப்பித்தல் ;

(2) புதிய ஏரிகள் அமைத்தல் ; அடைபட்டுப்போன ஊற்றுக் கால்களைப் புதுப்பித்தல் ; ஆறுகளிலிருந்து பிரிந்து செல்லும் வெள்ளக் கால்களில் எக்கர் அடித்திருப்பதை நீக்கி, அவற்றை மீட்பித்தல் ;

(3) பாசன ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்காக, வடிகால் நீர் நிலைகளுக்குக் குறுக்கே திருப்பு மடை அமைத்தல் அல்லது ஆறுகளுக்குக் குறுக்கே அணை கட்டுதல் ;

(4) கடற்கரை அண்மையில் உப்பங்கழியால் பாதிக்கப்பட்ட சதுப்பு நிலங்களை ஏற்புடைய வடிகால் வசதி அமைத்து மீட்டுப் பண்படுத்தல் ;

(5) ஆற்று நீர் இறைவைத் திட்டங்கள் ;

(6) குட்டையின்கீழ் 3,000 அடிக்குள் அமைந்துள்ள நீர் மட்டத்தை மேலுக்குக் கொண்டுவருவதற்காக, கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, மதுரை மாவட்டங்களில் குட்டைகள் அமைத்தல் ;

(7) ஓடைகளுக்குக் குறுக்கே புதிய அணைகள் கட்டுதல்.

1966-67-ல் இத் திட்டத்தின்கீழ் ரூ. 324·99 லட்சம் செலவிடப்பட்டது. இதனால், 73,909 ஏக்கர் நிலப் பரப்பிற்குப் பாசன வசதி உறுதிப் படுத்தவும், 23,059 ஏக்கர் பரப்பிற்குப் புதிதாகப் பாசன வசதி அளிக்கவும் பாசனத் திறன் ஏற்பட்டது. அமிழ்ந்து போவதிலிருந்து 3,416 ஏக்கர் பரப்பினைக் காக்கவும் முடிந்தது. இதனால், 23,004 டன் கூடுதல் உணவு உற்பத்தித் திறன் ஏற்பட்டது 1967-68-ம் ஆண்டிற்கு ரூ. 247·61 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இதில், 1967 டிசம்பர் திங்கள் 31-ம் தேதி வரை, ரூ. 223·10 லட்சம் செலவு செய்யப்பட்டது. இதனால், 30,349 ஏக்கர் பரப்பிற்குப் பாசன வசதி உறுதிப்படுத்தவும், 12,714 ஏக்கர் பரப்பிற்குப் புதிதாகப் பாசன வசதி ஏற்படுத்தவும் பாசனத் திறன் ஏற்பட்டது; அமிழ்ந்து போவதிலிருந்து 594 ஏக்கர் பரப்பினைக் காக்கவும் முடிந்தது. இதனால், 10,211 டன் கூடுதல் உணவு உற்பத்தித் திறன் ஏற்பட்டது.

1968-69-ம் ஆண்டுத் திட்ட மதிப்பீடு ரூ. 253 லட்சம் ஆகும். 83,500 ஏக்கர் பரப்பிற்குப் பயனளிக்கவல்ல 580 பணிகளை நிறைவேற்ற எண்ணியுள்ளது. இதில், 21,500 ஏக்கர் பரப்பு புதிதாகப் பாசன வசதி பெறும்.

[திரு எ. கோவிந்தசாமி] [1968 மார்ச் 14

மொத்தமுள்ள 14,400 முன்னுள் ஜமீன் பாசன வாயில்களில், சுமார் 5,500 பாசன வாயில்கள் இதுவரை ஏற்புடைய தரமுள்ளவை யாக்கப்பட்டுள்ளன.

**(ii) தூர் எடுத்தல் செம்மைப்படுத்தல்.**—எக்கர் அடித்ததால் கொள்ளளவுத் திறன் குன்றிப் போன ஏரிகளின் படுக்கையில் தூர் எடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின்கீழ் அந்த ஏரிகளின் முழு நீர் மட்டத்தையும் உயர்த்த எண்ணியுள்ளது. அப்போதுதான், இழந்த கொள்ளளவுத் திறனில் ஒரு பாதி தூர் எடுப்பதன் வாயிலாகவும், மறுபாதி ஏரியின் முழு நீர் மட்டத்தை உயர்த்துவதன் மூலமாகவும் சரி செய்யப்பட்டு சீர்பெறும இத் திட்டம், முதலில் முன்னோடி ஏற்பாடாக சில மாவட்டங்களில் செய்து பார்க்கப்பட்டது. இப்போது இத் திட்டம இம மாநிலம் எங்கணும் செயலிலுள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 60 லட்சம் செலவிட எண்ணியுள்ளது. இதனுல், 1,250 ஏரிவாய் நிலங்கள் மீட்கப்படுவதுடன் புதிதாக 2,500 எக்கர் பரப்பும் இத் திட்டத்தில் பயன் பெறும். இதனுல், 1,562 டன் கூடுதல் உணவு உற்பத்தித் திறன் பெருகும். 1966–67-ம் ஆண்டில், 45 எக்கர் ஏரிவாய் நிலங்கள் மீட்கப்பட்டன; 174 எக்கர் பரப்புள்ள புதிய நிலம இத் திட்டத்தின்கீழ் பயனடைந்தது. இதற்கு ரூ. 21·09 லட்சம் செலவாயிற்று. இதனுல், 98 டன் கூடுதல் உணவு உற்பத்தித் திறன் ஏற்பட்டது. 1967–68-ம் ஆண்டிற்கு, ரூ. 8·14 லட்சம் வகை செய்யப்பட்டது. ஆனுல், 1967 டிசம்பர் திங்கள் 31-ம் தேதிக்குள், இவ்வகையில் ரூ. 9·04 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 67 எக்கர் பரப்புள்ள நிலம் இதனுல் பாசனம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 67 எக்கர் ஏரிவாய் நிலங்கள் மீட்கப்பட்டன. 260 எக்கர் புதிய நிலப்பரப்பு இத் திட்டத்தின்கீழ் பயனடைந்தது.

1968–69 ஆண்டிற்கு ரூ. 7·00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 12 பணிகளை மேற்கொள்ள எண்ணியுள்ளது. இவற்றுல் 295 எக்கர் பரப்புள்ள ஏரிவாய் நிலங்கள் மீட்கப்படும். 575 எக்கர் பரப்புள்ள புதிய நிலம் இத் திட்டத்தின் கீழ் பயனடையும். இதனுல், 360 டன் கூடுதல் உணவு உற்பத்தித் திறன் ஏற்படும்.

**(iii) புதிய கிணறு மானியத் திட்டம்.**—இது மத்திய அரசின் முன் உதவியைப் பெறும் திட்டமாகும். பாதிக் கடனுகவும், பாதி உதவித் தொகையாகவும் இதற்கு, உதவி கிடைக்கிறது.

கிணறு ஒன்றுக்கு அதிக அளவாக ரூ. 5,000 வரையில் கடன் தொகை வழங்கப்படுகிறது. இக் கடன் உதவி இரண்டு சம தவணைகளில் வழங்கப்படுகிறது. முதல் தவணை, கடன் அனுமதி வழங்கப்பட்டவுடன் கொடுக்கப்படுகிறது. இரண்டாவது தவணை கிணறு வெட்டும் வேலைக்காக முதல் தவணை முழுவதும் செலவிடப்பட்டவுடன் கொடுக்கப்படுகிறது. கிணறுகள் வெட்டும் வேலை முடிந்த பிறகு கிணற்று வேலைக்கான செலவில் 25 சதவீதம் ரூ. 500 என்ற அதிக அளவு வரையறைக்குட்பட்டு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ஆனுல் கோவை மாவட்டத்தில் உள்ள தாளவாடி பிர்க்காவில் மட்டும் அதன் பின் தங்கிய நிலைமை காரணமாக கிணறு ஒன்றுக்கு அதிக அளவு வரையறை ரூ. 1,500-க்கு உட்பட்டு கிணறுக்கான செலவில் பாதி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. கடன் பெறுபவர், கிணற்று வேலை முடிந்தவுடன் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு எக்கருக்குக் குறையாத பரப்பளவில் பாசனம் செய்து பயிர் செய்ய வேண்டும். இவ் வேலைத் திட்டத்தின் கீழ் கிணறு ஒன்றுக்கு அதிக அளவு ரூ. 500 என்ற வரையறைக்குட்பட்டு கிணற்றுக்கான செலவில் வழங்கப்படும் 25 சதவீதம் உதவித் தொகை உழவர்கள் தங்களது பணத்தைக் கொண்டே அமைத்துக்கொள்ளும் தரைக் கிணறுகளும் வழங்கப்படும்.



1968 மார்ச் 14] [திரு எ. கோவிந்தசாமி]

1967–68-ல் கடன்கள் வழங்குவதற்கு ரூ. 475 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 10,000 கிணறுகளை முடிக்கும் பணிக்காக அது ஒதுக்கப்பட்டது. 1967 டிசம்பர் திங்கள் 31-ம் தேதி வரை ரூ. 429·34 லட்சம் செலவிடப்பட்டது, 23,188 நேர்வுகளில், முதல் தவணை செலுத்தப்பட்டது. அவற்றில் 8,746 நேர்வுகளில், இரண்டாவது தவணையும் பெறப்பட்டது, மொத்தத்தில் 15,235 நேர்வுகளில் இரண்டாவது தவணை வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே கூறியுள்ளது போல், இனிமேல் கிணறுகளுக்கான புதிய கடன்கள் முழுவதையும் நில அடைமான வங்கிகள் தங்களது சொந்த திட்டங்களின்கீழ் அல்லது வேளாண்மை மறு நிதிக் கழகத்திலுல் மீண்டும் நிதி உதவி பெற்ற திட்டங்களின் கீழ் வழங்கும். 1968–69-ல் ரூ. 240 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது தவணை செலுத்துவது வரையில் இத் திட்டத்தின் பயனை வரையறுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதிய நேர்வுகளைக் கூட்டுறவுத் துறை கவனித்துக் கொள்ளும். 14,000 கிணறுகளை அமைத்து 14,000 எக்கருக்கு பாசன வசதியளிக்க வேண்டுமென திட்டமிடப்பட்டுள்ளது.

**(iv) எண்ணெய்ப் பொறிகளையும் மின்சார மோட்டார் விசை யேற்றங்களையும் வழங்குவதற்கான திட்டம்.**—உழவர்கள் தங்களது நிலங்களுக்கு அதிக அளவில் பாசன வசதிக்கு வகை செய்யும் பொருட்டு எண்ணெய்ப் பொறிகளையும் மின்சார மோட்டார் விசை யேற்றங்களையும் வாங்குவது எளிதாக இருக்கும் வகையில் அவர்களுக்குக் கடன் வழங்க இவ் வேலைத் திட்டம் வகை செய்கிறது. இவ் வேலைத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை எதுவும் வழங்கப்படுவதில்லை. குடியானவர் ஒருவர் அவருக்குத் தேவைப்படும் விசையேற்றத்தின் குதிரைத் திறனை ஒட்டிக் கடன் பெறலாம். கடன் 10 ஆண்டு சம தவணையில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

1967–68-ல் இத் திட்டத்தின்கீழ் ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில், 1967 டிசம்பர் இறுதி வரையில் ரூ. 100·22 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1,055 எண்ணெய்ப் பொறிகளும், 4,439 மின்சார மோட்டார் விசையேற்றங்களும் வழங்கப்பட்டன. அதன் மூலம் 30,635 எக்கர் பாசன வசதிபெறும். 15,318 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்கும்.

ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதுபோல், 1968–69-ல், எண்ணெய்ப் பொறிகளையும் மின்சார மோட்டார் விசையேற்றங்களையும் வாங்குவதற்கான கடன்களை வழங்கும் பொறுப்பு முழுவதும் நில அடைமான வங்கிகளிடமும், வேளாண்மைத் தொழில் கழகத்திடமும் விடப்படும்.

**(v) தனியார்க் குழாய்க் கிணறுகள் திட்டம்.**—ஆறு அங்குலம் முதல் 12 அங்குலம் வரையில் விட்டமுள்ள குழாய்க் கிணறுகள் துறையில் கிடைக்கும் சாதனங்களைக் கொண்டு அமைக்கப்படுகின்றன. அவற்றை அமைக்க உழவர்களுக்கு கடனும், உதவித் தொகையும் வழங்கப்படுகின்றன. மாநிலம் முழுவதற்கும் பயனளிக்கும் முறையான திட்டத்திற்கு கூடுதலாக, மும்முறை முயற்சிகளுக்கான தனி மேம்பாட்டுத் திட்டங்கள் கீழ்க்கண்ட பகுதிகளில் செயலில் உள்ளன; அல்லது விரைவில் செயல்படுத்தப்படும்:—

(1) செங்கற்பட்டு மாவட்டம்.

(2) தென் ஆர்க்காடு மாவட்டம்.

(3) தஞ்சாவூர் மாவட்டம்.

களுக்கு விரிவுபடுத்தப்படும். இந்த ஆண்டும், அடுத்த இரண்டாண்டுகளிலும் வழங்கப்படவிருக்கிற கலிக்கற்களின் அளவு பற்றிய விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1967–68 | .. .. . .. .. | 8,000 டன். |
| 1968–69 | .. .. .. .. . | 8,000 டன். |
| 1969–70 | .. .. .. .. .. | 4,000 டன். |

1967-68 முதல் 1970-71 ஆண்டுவரை ஒவ்வொரு ஆண்டிலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,000 எக்கர் அமிலத்தன்மையுடைய நிலங்களைப் பண்படுத்துவதற்காக 1,000 டன் சுண்ணாம்பு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### நிலத்தைப் பண்படுத்தல்.

பயிர் விளைவிக்கப்படாத, தரிசு நிலங்களைப் பண்படுத்தி மீட்பதற்கு உழவர்களுக்கு உதவும் வகையில் துறை பரம்புப் பொறிகளையும் ட்ராக்டர்களையும் ட்ராக்டர் வாடகைத் திட்டத்தின்கீழ் வாடகைக்கு விடுகின்றது. மேலும், உழவர்கள் வேளாண்மைக் காரியங்களுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கென தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு ட்ராக்டர்களும் விதைத் துளைக் கருவிகளும் வழங்கப்படுகின்றன.

### ட்ராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டம்.

1967–68-ல் பயிர் விளைவிக்கப்படாத நிலங்கள் 7,360 எக்கர் குறித்தும், நடப்புத் தரிசு நிலங்கள் 16,300 எக்கர் குறித்தும் இத் திட்டத்தை நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருக்க, 1967-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் 6,835 எக்கர் பயிர் விளைவிக்கப்படாத நிலங்களிலும், 13,202 எக்கர் நடப்புத் தரிசு நிலங்களிலும் இத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. 1968–69-ல் 8,300 எக்கர் பயிர் விளைவிக்கப்படாத நிலங்களிலும், 16,300 எக்கர் நடப்புத் தரிசு நிலங்களிலும், இத் திட்டத்தை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### ட்ராக்டர் தவணைக் கொள்முதல் திட்டம்

ட்ராக்டர் தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ், பயனடைபவர்களைத் தெரிந்தெடுப்பதற்கு முன்பு பெருமளவில் விளம்பரம் செய்வதென இந்த ஆண்டில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி அது குறித்து விளம்பரப் படுத்தப்பட்டது. ஏராளமான விண்ணப்பங்கள் வரப்பெற்றன. இந்த ஆண்டில் 260 ட்ராக்டர்களை வழங்குவதெனத் திட்டமிட்டிருக்க முந்திய ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஒப்பளிப்புகளுக்கென 168 இந்த ஆண்டில் ஏற்கனவே வழங்கப்பட்டன., எஞ்சியவை விரைவில் வழங்கப்படும். 30 விதைத்துளை கருவிகள் இந்த ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் வழங்கப் படும்.

ஏற்கெனவே குறிப்பிட்டப்படி, அடுத்த ஆண்டிலிருந்து இந்தத் திட்டம் வேளாண்மை-தொழில்கள் கழகத்தின் மூலம் நிறைவேற்றப்படும்.

### தர விதைகள், அரசாங்க விதைப் பண்ணைகள்.

உழவர்களுக்கு தர விதைகளை வட்டாரங்கள் மூலமாக வழங்குவது இத் திட்டத்தின் நோக்கமாகும். அந்த விதைகளைக் கொண்டு நெற்பயிரையும், சிறு தானியப் பயிர்களையும், அதிக அளவு பரப்பளவில் விளைவிக்க அப்போது இயலும். மூல விதைகள் ஆராய்ச்சி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அடிப்படை விதைகள் அல்லது முதல்





நிலை விதைகள் வேளாண்மைத் துறையைச் சேர்ந்த அரசாங்க விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இம் மாநிலத்திற்கு தேவையான முதல் நிலை நெல் விதைகளையும், சிறு தானிய விதைகளையும் உற்பத்தி செய்ய, ஒவ்வொன்றும் 25 எக்கர் கொண்ட 230 அரசாங்க விதைப் பண்ணைகள் போதுமானவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் 25 எக்கர் கொண்ட 213 பண்ணைகள் 73 இடங்களில் 1966–67-ல் செயல்பட்டு வந்தன. இந்த ஆண்டில் சில பண்ணைகளை மூட வேண்டி வந்தது. சில பெரிய பண்ணைகள் தொடங்கப்பட்டன. இம் மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் 70 இடங்களில் உள்ள 221 பண்ணைகள் [ஒவ்வொன்றும் 25 எக்கர் கொண்டது] செயல்பட்டு வருகின்றன. 1968–69-ல் இந்த எண்ணிக்கை 230 ஆக உயர்த்தப்படும். 221 பண்ணைகளின் மொத்தம் பரப்பளவு 5,561·73 எக்கராகும்.

இவற்றில், 45 பண்ணைகளின் மூலம் 1966–67-ல் ஆதாயம் கிட்டியது. 25 பண்ணைகள் மூலம் இழப்பு ஏற்பட்டது. மொத்தத்தில், ரூபாய் 1,26,301·72 ஆதாயம் கிட்டியது. இந்தப் பண்ணைகளுக்கு கூடுதலாக 1967–68 ல் திருச்சிராப்பள்ளி மாவட்டம் குடுமியாமலையில் பெரிய அரசாங்க வேளாண்மைப் பண்ணை ஒன்று துவங்கப்பட்டது. இந்தப் பண்ணையில் மொத்தப் பரப்பளவாகிய 3,298·38 எக்கரில் 1,000 எக்கரை முதல் நிலையில் செயல்படுத்துவதற்கென எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. காடுகளை அகற்றும் வேலை நடந்தேறி வருகிறது. மேம்பாட்டு வேலைகளுக்காகவும் பயிர் விளைவிப்பது குறித்தும் ஒரு பெருந் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. இந்தப் பரப்பளவு மேம்படுத்தப்பட்டு பயிர் விளைவிக்கப்பட்டால் இப் பண்ணை மூலம் ரூபாய் 5 லட்சம் நிகர ஆதாயம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

நிலத்தைப் பண்படுத்துவதன் மூலமும், பாசன வசதிகளை ஏற்படுத்துவதன் மூலமும், விதைப் பண்டகசாலைகளையும் பணியாளர்க் குடியிருப்புகளை கட்டுவதன் மூலமாகவும், விதைப் பண்ணைகளுக்கு நிலையான மேம்பாடுகள் செய்யப்படுகின்றன. 1964–65 வரையில் 106 விதைப் பண்டகசாலைகள் கட்டப்பட்டன. 26 இடங்களில் பணியாளர்க் குடியிருப்புகள் கட்டப்பட்டன. மேலும் 28 விதைப் பண்டகசாலைகளையும், 20 பணியாளர்க் குடியிருப்புகளையும் கட்டும் வேலை 1965–66-ல் மேற்கொள்ளப்பட்டு, 1966–67-ல் முடிக்கப்பட்டது. ஒவ்வொரு அரசாங்க விதைப் பண்ணையின் மேம்பாட்டுக்காக ஓர் அடங்கல் வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. பண்ணை வேலை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும், பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் தேவையானவற்றை மதிப்பிட்டு அது தயாரிக்கப்பட்டது. பண்ணைகள் அவற்றின் விளைச்சல் திறனின் அடிப்படையில் வகைப்பாடு செய்யப்படும். ஒவ்வொரு பண்ணையின் விதை உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தயாரிக்கப்பட்டுள்ள வரைபடங்களின் அடிப்படையில், நிலத்தைப் பண்படுத்தல் பாசன வசதி ஏற்படுத்தல், விதைப் பண்டகசாலையும், பணியாளர் குடியிருப்புகளையும் கட்டுதல் ஆகிய வேலைகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும். அதற்கென 1967–68, 1968–69 திட்டங்களில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ட்ராக்டர்களையும் அவற்றிற்குத் தொடர்பான கருவிகளையும் பயன்படுத்திப் பயிர் செய்யும் முறை அரசாங்க விதைப் பண்ணைகளில் ஏற்கனவே கொண்டுவரப்பட்டுள்ளது. ட்ராக்டர்களுக்கும், கருவிகளுக்கும், படிப்படியாக வகை செய்யப்பட்டு வருகின்றது. 1966–67-ல் 20 டிராக்டர்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 18 டிராக்டர்கள் 1967–68-ல் வாங்கப்பட்டன. 1968–69-ல் 15 டிராக்டர்களை வாங்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

அரசாங்க விதைப்பண்ணைகளில் கலப்பு வகைச் சிறு தானியங்களை உற்பத்தி செய்ய ஏற்கெனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென விதைகள் பக்குவப்படுத்தும் சாதனங்களை 1967–68-ல் ஓர் இடத்திலும் 1968–69-ல் மற்றொரு இடத்திலும் நிறுவ திட்டமிடப் பட்டுள்ளது.

[திரு எ. கோவிந்தசாமி] [1968 மார்ச் 14

விதைப் பண்ணைகளில் பணிபுரியும் பணியாளர்கள் நிர்வாகத்திலும் விதை உற்பத்தி வேலையிலும், அக்கறை கொள்வதை ஊக்குவிக்கும் பொருட்டு திறமையைக் காட்டுபவர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டத்தை இந்திய அரசு தயாரித்துள்ளது. கால நிலைமைகளும் மண் வளமும் இடத்துக்கிடம் வேறுபடுவதைக் கருத்தில் கொண்டு, அப் பரிசுகள் வழங்குவதற்கென இம் மாநிலம் நான்கு கட்டுக்கோப்பான வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது. வேளாண்மைக் கால நிலைமைகளையொட்டி ஒவ்வொரு வட்டாரத்திலும் மிகவும் செவ்விய முறையில் செயல்பட்ட பண்ணையை தெரிந்தெடுப்பதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டது. 1964–65, 1965–66 ஆண்டுகளில் விளைவிக்கப்பட்ட பயிர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் இவ்வேலைத் திட்டம் தொடர்ந்து செயல்படும்.

## தர விதைகளை வழங்குவதும் பெருக்குவதும்.

1967–68-ல் 2,780 டன் முதல் நிலை நெல் விதைகள் ஆண்டுதோறும் வழங்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்க இது வரை 2,287 டன் விதைகள் வழங்கப்பட்டன. ஆண்டு முடிவிற்குள் குறிக்கோள் அளவு அடையப்படும். 1968–69-லும் 2,780 டன் வழங்கப்பட்டன. சிறுதானியப் பயிர்களை விளைவித்த அரசாங்க விதைப் பண்ணைகளில் போதிய இடம் கிடைக்கவில்லை. பாதகமான பருவ நிலைமைகள் ஆரம்ப நிலை விதைகள் உற்பத்தி செய்யப்படுவதைப் பாதித்தன. அதன் விளைவாக விதைகள் வழங்குவது பாதிக்கப்பட்டது. 1966–67-ல் 354 டன் விதைகள் வழங்கப்பட்டன. 1967–68-ல் 506 டன் விதைகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1967-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் 356 டன் விதைகள் வழங்கப்பட்டன. 1968–69 ல் 506 டன் விதைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசாங்க விதைப் பண்ணையிலிருந்து ஆரம்ப நிலை விதை தெரிந்தெடுத்த உழவர்களின் நிலங்களில் பெருக்கப்படும். அங்கு கிடைக்கும் இரண்டாம் நிலை விதைகளை அந்த உழவர்கள் மற்றெல்லா உழவர்களுக்கும் பயிர் விளைவிப்பதற்காக வழங்குவார்கள். தெரிந்தெடுக்கப்பட்ட அத்தகைய உழவர்களுக்கு "கிராம சகாயக்குகள்" என்று பெயர். அவர்களுக்கு அப்பணிக்கென உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றது. 1967–68 முதல் இந்த உதவித் தொகைக்கு உதவி வழங்குவதை இந்திய அரசு நிறுத்திவிட்டது. மேலும், இந்த வேலைத் திட்டம் முழுமன நிறைவு அளிக்கத்தக்க வகையில் செயல்படவில்லை. கூட்டுறவுச் சங்கங்கள், கிராம சகாயக்களிடமிருந்து விதைகளை வாங்கிச் சேர்த்து வைத்து வழங்கும் முறை செங்கற்பட்டிலும், மதுரையிலும் முன்னோடி அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. அம் முறை மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் செயல்படவில்லை. இந்த இரு திட்டங்களும் இப்போது கைவிடப்பட்டன. அதே சமயத்தில் 'மிகு பயன் தரும் தானிய வகைகளை பயிரிடும் முறை கொண்டு வரப்பட்டதின் மேல், விதைப் பெருக்க வேலையை வேளாண்மைத் துறை நேரடியாக மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதாவது தனியார் நிலங்களில் விதைப் பண்ணைகளுக்கு ஏற்பாடு செய்து, விதைகளை வாங்கி அவற்றை உழவர்களுக்கு வழங்கும் வேலையை துறை மேற்கொள்ள வேண்டி வந்தது. மிகு பயன் தரும் தானிய வகைகள் பயிரிட்டுள்ள பரப்பளவில் 50 சத வீதத்திற்கு வேளாண்மைத் துறை விதைகளை நேரடியாக வழங்க வேண்டுமென்று நோக்கமாகும். பிற தானிய வகைகளைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு வேளாண்மைப் பிரிவின் தேவைகளை முன்னதாக மதிப்பிட்டு, வேளாண்மைத் துறையின் மேற்பார்வையின் கீழ் போதிய அளவுக்கு விதைகளை உற்பத்தி செய்து துறை மூலம் விதைகளைப் பங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.



1968 மார்ச் 14] [திரு. எ. கோவிந்தசாமி]

கோவையிலுள்ள மத்திய விதைப் பரிசோதனை ஆய்வுக்கூடம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. உள்நாட்டில் தயாரிக்கப்படும் சாதனங்களை வாங்கும் வேலை முடிக்கப்பட்டுள்ளது. ஆய்வுக்கூடத்தில், பகுப்பாய்வுப் பணி நடந்து வருகிறது. ஓராண்டில் 10,000 மாதிரிகளை பகுப்பாய்வு செய்யும் பணி அங்கு தொடர்ந்து நடக்கும்.

## VI. ரசாயன உரங்கள்.

உணவு உற்பத்தித் திட்டத்திற்கு மிகச் சிறந்த ஊட்டமளிப்பதாக அமைவது ரசாயன உரங்களைப் பயன்படுத்துவதாகும். பயிர் வளர்ச்சிக்கு நைட்ரஜன், பாஸ்வரம், பொட்டாஷ் ஆகிய உரங்கள் ஊட்டமளிக்கும் முக்கியப் பொருள்களாகும். பாஸ்பேட், பொட்டாஷ் உரங்கள் சாதாரண வாணிப முறையில் வழங்கப்படுகின்றன. மத்திய உரங்கள் பொதுச்சேமிப்பிலிருந்து (central pool) நைட்ரஜன் உரங்கள் வழங்கப்படுகின்றன; இம் மாநிலத்திற்கு இந்திய அரசு ஒதுக்கியுள்ள உர அளவு, வருவாய்த் துறை வாரியம் (உணவு உற்பத்தி) நடத்துகிற அரசு வாணிப திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. 1967 அக்டோபர் 1-ம் தேதியிலிருந்து உள்நாட்டுத் தொழிற்சாலைகள் அவற்றின் உற்பத்தியில் 50 சதவீத அளவை பொதுச் சேமிப்பில்லாமல வெளிச் சந்தையில் விற்க இந்திய அரசு அனுமதியளித்துள்ளது. இச் சதவீத அளவை 1968 அக்டோபர் 1-ம் தேதி முதல் 70 சதவீதத்திற்கு உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் நைட்ரஜன் உரத்தைத் யூரியா தயாரிக்கும் பொதுத்துறையிலுள்ள ஒரே தொழிற்சாலையான நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பரேஷன், வெளிச் சந்தையில் விற்கக்கூடிய அளவில் பாதியை கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்ய ஒப்புக் கொண்டது. இம் மாநிலத்திற்கு மத்தியப் பொதுச் சேமிப்பிலிருந்து ஒதுக்கப்படும் நைட்ரஜன் அளவில் சுமார், 40 சதவீதம் கலவை உரங்கள் தயாரிப்பிற்காக உரக் கலவை நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. நேரடியாகப் பயன்படுத்துவதற்கான உரங்கள் பெரும்பாகம் கூட்டுறவு நிறுவனம் மூலம் வழங்கப்படுகிறது. செங்கற்பட்டு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தனியார் வாணிபம் மூலமும் குறிப்பிட்ட அளவிற்கு உரங்கள் வழங்கப்படுகின்றன.

ரசாயன உரங்களை முறையாக வழங்க கூட்டுறவு சங்கங்களுக்கு இயலாத இடங்களில் தனியார் மூலம் அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் மத்திய சேமிப்பிலிருந்து உரங்கள் வழங்க இந்த ஆண்டு முதல் எல்லா மாவட்ட கலெக்டர்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய உரப் பொதுச் சேமிப்பிலிருந்து ரசாயன உரங்கள் வழங்குவதற்காக மாநில அரசு மூலம் வருவாய்த் துறை வாரியம் உணவு உற்பத்தி) இந்திய அரசுக்கு ஆண்டுக்குத் தேவையான உர அளவுப் பட்டியலை அனுப்புகிறது. ஒவ்வோர் ஆண்டுக்கும் தேவைப்படும் உர அளவை அந்த ஆண்டுத் தொடக்கத்திற்கு முன்னதாகவே வருவாய்த் துறை வாரியம் (உணவு உற்பத்தி) உன்னிப்பாக மதிப்பிடுகிறது. பயிரிடப்பட்ட பரப்பு, உரமிடக்கூடிய அளவு, புதிய வகை விதைகளுக்கான திட்ட வேலை, பாசனம் முதலியவற்றிற்கு விடப்பட்ட புதிய பரப்பளவு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு வேளாண்மைத் துறை இயக்குநருடன் கலந்தாலோசித்த பின்னர் மேற்கண்டவாறு மதிப்பிடப்பட்டு, தேவையின் நிலைப்பட்டி இந்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது.

மாவட்ட வாரியாக உரங்கள் ஒதுக்கப்படும் பணியை வேளாண்மைத் துறை இயக்குநரின் ஆலோசனையுடன் வருவாய்த் துறை வாரியம் மேற்கொள்கிறது. மாவட்டத்திற்குள், வேளாண்மை, கூட்டுறவுத் துறை அலுவலர்களின் ஆலோசனையுடனும் நிலையங்களின் கருத்தறிந்தும் கலெக்டர்கள் உரங்களை வழங்குகின்றனர். 1967–68-ம் ஆண்டில் 1·63 லட்ச

டன்கள் நைட்ரஜன் உர வகைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உள் நாட்டில் தயாரிக்கப்படும் நைட்ரஜன் உர வகைகளின் கணிசமான பகுதி எவ்விதக் கட்டுப்பாடின்றி வெளிச் சந்தையில் விற்கப்படுகிறது. எனவே, மிகு பயன் தரும் பயிர் வகைகள் திட்டம், வேளாண்மை மாவட்ட மும் முரத் திட்டம், பலவகைப் பயிர்களைப் பயிரிடும் திட்டம், நிலக்கடலை, பருத்தி புகையிலை ஆகிய ஏற்றுமதி முக்கியத்துவம் வாய்ந்த பயிர்கள் விளைவிக்கும் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களுக்காக மட்டுமே உரவகைகள் வழங்க இந்திய அரசு வாக்களித்துள்ளது. இச் சிறப்புத் திட்டங்களுக்கான நைட்ர ஜன் உரத் தேவை 0·84 லட்சம் டன் ஆகும். இது போதாது என்றும் தமிழ்நாட்டிற்கு அதிக அளவு உரங்கள் ஒதுக்கப்படவேண்டுமென்றும் இந்திய அரசுக்கு முறையீடு செய்யப்பட்டது. இந்திய அரசு பின்னர், இந்த ஆண்டுக்காக 1·04 லட்சம் டன் நைட்ரஜன் உரவகைகளை ஒதுக்கியது. முந்திய ஆண்டுகளில் பொதுச் சேமிப்பிலிருந்து நைட்ரஜன் உரவகைகள் மட்டும் வழங்கியிருக்க, கலப்பு உரவகைகளுக்குப் பதிலாக, டி அமோனியம் பாஸ்பேட், அமோனியம் பாஸ்பேட் 14–14–14 கலப்பு உரவகைகள் போன்ற கலப்பு உரவகைகளையும் இந்திய அரசு வழங்கியுள்ளது. ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ள 1·04 லட்சம் டன் நைட்ரஜன் உரவகைகளில் 0·77 லட்சம் டன் நைட்ரஜன் உரவகைகள் ஏற்கனவே வந்துள்ளன. எனவே பொதுச் சேமிப்பிலிருந்து கிடைக்கும் உரவகைகளைப் பொறுத்த வரையில் மாவட்டங்களுக்குப் போதிய அளவு உரம் கிடைத்துள்ளது. எஞ்சிய 0·27 லட்சம் டன் நைட்ரஜன் உரவகைகள் 1967 மார்ச் இறுதிக்குமுன் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுச் சேமிப்பிலிருந்து கிடைக்கும் உரவகைகளைத் தவிர, 0·34 லட்சம் டன் நைட்ரஜன் உரவகைகள் வெளிச் சந்தையிலிருந்து கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. நெய்வேலியிலிருந்து கிடைக்கும் யூரியா, எண்ணூரிலிருந்து கிடைக்கும் அமோனியம் சல்பேட், அமோனியம் பாஸ்பேட், சென்னை உரத் தயாரிப்பு நிறுவனத்திலிருந்து கிடைக்கும் 14–14–14 கலப்பு உரவகை ஆகியவை இதிலடங்கும். வெளிச் சந்தையிலிருந்து மொத்தம் 0·17 லட்சம் டன் நைட்ரஜன் உரவகைகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிய வருகிறது. இரசாயன உரங்கள் வழங்கப்படுவதைச் சீரமைக்கும் பொருட்டு வேளாண்மைச் சிறப்புத் திட்டங்கள் அனைத்திலும் பங்குகொள்ளும் எல்லா உழவர்களுக்கும் உரங்கள் வழங்குவதற்கான அட்டைகளை வழங்கும் முறைக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் உழவர்கள் தங்களுக்குத் தேவையான உரங்களைப் பெறுவது உறுதி ஆகியதுடன் ஊழல்கள் நடப்பது தடுக்கப்பட்டது.

1968-69-ம் ஆண்டிற்காக 2·40 லட்சம் டன் நைட்ரஜன் உரவகைகள் தேவைப்படுமென கணக்கிடப்பட்டுள்ளது. மிகு பயன்தரும் பயிர்வகைகளுக்கு மட்டும் 0·65 லட்சம் டன் நைட்ரஜன் உரவகைகள் தேவைப்படும். பிற பயிர் வகைகளுக்கு 0·73 லட்சம் டன் நைட்ரஜன் உரவகைகள் தேவைப்படும். உரமிடும் திட்டத்தின்கீழ் 14–14–14 கலப்பு உர வகைகளைத் தவிர அடுத்த ஆண்டில் 1 : 2 : 1 என்ற வீதத்தில் கலக்கப்பட்ட புதிய வகை உரமொன்றை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மிகு பயன்தரும் பயிர் வகைகள் திட்டம், வேளாண்மை மாவட்ட மும்முரத்திட்டம், பல்வேறு பயிர்களைப் பயிரிடும் திட்டம், பிற சிறப்புத் திட்டங்களுக்காக இந்த ஆண்டில் உரப் பற்றுக்குறை ஏற்படவில்லை. விரைவில் சாதாரணத் திட்டத்திற்குக் கூட, உரங்கள் கிடைப்பதில் தடை எதுவுமிராதென எதிர்பார்க்கப்படுகிறது.

வழங்கப்படும் உரங்கள் தரமானவையாக இருக்கின்றனவா என்பதையும் உரங்களில் கலப்படம் எதுவும் ஏற்படாத வண்ணமும் பார்த்துக்கொள்வது அவசியமாகும். இதற்காக உரச் சோதனை ஆய்வுக்கூடம் ஒன்று கோயம் புத்தூரில் செயல்பட்டு வருகிறது. மாதிரி உரங்கள் இந்த ஆய்வுக்கூடத்திற்கு அடிக்கடி சோதனைக்காக அனுப்பப்பட்டுகின்றன. உரம் வழங்குவது குறித்த வேலை அதிகரித்துக் கொண்டே வருகிறது. உரம் வழங்கு வேலையைத் திறம்பட மேற்பார்வை செய்வதற்காகவும் தரக் கட்டுப்பாடு வேலையை



நன்கு நிறைவேற்றுவதற்காகவும் வேளாண்மைத்துறைத் துணை இயக்குநர் பதவியில் உரத் தலைமை ஆய்வாளர் பதவியொன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலகத்தில் தற்போதுள்ள மாவட்ட வேளாண்மை அதிகாரியின் பதவிக்குக் கூடுதலாக இப்பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மாநிலம் முழுவதிலும் வழங்கப்படும் உரங்களின் தரத்தினை இந்த நடவடிக்கையினால் முறைப்படுத்த முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

# VII. உள்ளூர் எரு.

## தழை எரு.

இம் மாநிலத்தில் நெல் பயிரிடப்படும் பகுதி முழுவதிலும் தழை எருவை பயன்படுத்த வகை செய்வதே இவ் வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். வேளாண்மைத் துறை பசுந்தழை விதைகளை வர்த்தக நிறுவனங்கள் மூலமாகவும் குடியானவர்கள் மூலமாகவும் வழங்குகின்றது. இக்காரியத்திற்காக காடுகளிலிருந்தும் பிற பகுதிகளிலிருந்தும் பசுந்தழை பெறப்படுகின்றது. வேளாண்மைத் துறை பசுந்தழை விதைகளை அடக்க விலையில் 85 சதவீத விலையில் வழங்குகின்றது. இந்த 15 சதவீத உதவித் தொகையையும் விட்டுவிடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இவ் விதைகள் 1962–63 வரையில் அரசாங்கக் கணக்கில் வழங்கப்பட்டன. 1963–64 முதற்கொண்டு இவ்வேலை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக் கப்பட்டது. இத்துறை வழங்குவதற்கான விதைகள் தனியார் நிலங்களில் அல்லது ஊராட்சி ஒன்றிய நிலங்களில் விதைப் பண்ணைகளை அமைப்பதன் மூலம் பெறப்படுகிறது. தனியார் நிலங்களில் விதை உற்பத்தித் திட்டம் குறித்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10 முதல் ரூ. 15 வரை விளைச்சல் முன் பணம் வழங்கப்படுகிறது. இந்த முன் பணம் விதைகளை வாங்கிக் கொள்ளும் சமயத்தில் வசூலிக்கப்படத் தக்கதாகும். பசுந்தழை விதை உற்பத்திக்கு நல்ல வாய்ப்புள்ள வட்டாரம் ஒவ்வொன்றிலும் 10 ஏக்கர் பரப்பளவில் விதைப் பண்ணையை அமைக்கும்படியும் பசுந்தழை உரத்தைப் பொறுத்த வரையில் வட்டாரம் தன்னிறைவு கொண்டதாகும் வரையில் அல்லது பசுந்தழை உர உற்பத்திக்கான வாய்ப்பு முழுவதும் தீர்ந்து போகும் வரையில் பசுந்தழை உர உற்பத்தி பரப்பளவை அதிகரித்துக் கொண்டே போகும்படியும் வட்டாரம் ஒவ்வொன்றும் கேட்கப்பட்டுள்ளது.

மிகு பயன்தரும் பயிர் வகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்ட பிறகு, பசுந்தழை உர உற்பத்திக்கான தேவை அதிக அளவில் உணரப்பட்டு வருகின்றது. பசுந்தழை உர உற்பத்தியை பெரிய அளவில் அதிகரிக்கும் நோக்கத்துடன் புறம்போக்கு நிலங்கள், கால்வாய் கரைகள், சாலையோரங்கள் ஆகிய இடங்களில் ஊராட்சி ஒன்றியங்கள், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகியவை, செடிகளையும். பசுந்தழை கொடுக்கக்கூடிய மரங்களின் பதியங்களையும் நடுவதன் மூலம் 1968–69-ல் இத் திட்டத்தை மும்முரமாகச செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை இதற்காக அவசியமான விதைகளையும், மரங்கள் நடுவதற்கான பதியங்களையும் வழங்கும். பசுந்தழை உர உற்பத்தியை அதிகரிப்பதற்கு இது பெருமளவில் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில் குறிப்பிட்ட கிராம ஊராட்சிகளில் தழை விதைகளை உற்பத்தி செய்வதற்கான முன்னோடித் திட்டமொன்று 1963–64-ல் தொடங்கப்பட்டது. விதை உற்பத்தி குறித்து குறைந்த அளவு ஒரு போகப் பசுந்தழை எருவகைத் தாவரங்களை வளர்ப்பதற்காக, இணறுகள் வெட்டுவதற்காகவும் விசையேற்றங்களை நிறுவுவதற்

காகவும் இக்குறிப்பிட்ட ஊராட்சிகளுக்கு ரூ. 5,500 நீண்டகாலக் கடன் உதவி வழங்கப்படுகிறது. நிலக்கடலை அல்லது பாசனம் பெறும் கருந் தானியங்கள் போன்ற இரண்டாம் போகப் பயிரை ஊராட்சி ஒன்றியம் விரும்பினால் பயிரிடலாம். விளைச்சலுக்கான செலவு குறித்து ஆண்டொன்றுக்கு ரூ 1,000 குறுகிய காலக்கடன் வழங்கப்படுகின்றது. இத் தொகை பசுந்தழை விதைகள் சேமிக்கப்படும் சமயத்தில் வசூலிக்கப்படுகிறது. விதை உற்பத்தித் திட்டத்தில் குறிப்பிட்ட ஊராட்சிகளுக்கு உதவுவதற்காக மேஸ்திரி ஒருவரின் பணி இலவசமாக அளிக்கப்படுகின்றது. ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் கிணறு வெட்டும் பணியை முடிப்பதும், கடன்கள் வழங்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் உற்பத்தி வேலையைத் தொடங்குவதும் 1967–68-ம் ஆண்டு வேலைத் திட்டமாகும். 1968–69-ல் நிதிப் பற்றாக்குறையினால் இத் திட்டத்தை மேற்கொண்டும் சில இடங்களுக்கு நீட்டிப்பது சாத்தியமில்லை. ஆனால், தற்போது இத்திட்டம் நிறைவேற்றப்படும் இடங்களில் உற்பத்தி நிலைமை உறுதிப்படுத்தப்படும்.

விதைப் பண்ணைகள், குடியானவர்கள், ஊராட்சிகள் ஆகிய உற்பத்திச் செய்யும் விதைகள் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 5 என்ற வீதத்தில் வழங்கப்படுகின்றது. மற்ற ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் விதைகள் நல்ல தரமுள்ளவையாக இருந்தால் அவை பரிசோதித்துப் பார்த்து வாங்கப்படுகின்றன. 1967–68-ம் ஆண்டில் 3,600 டன் விதைகளை வழங்கவும் 1968–69-ம் ஆண்டில் இதே அளவு விதைகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### நகர்ப்புறக் கலவை எரு.

நகர்ப்புறத்தில் கிடைக்கிற மலம், குப்பை முதலிய கழிவுப்பொருள்களை அறிவியல் முறையில் கலவை எருவாக மாற்றிப் பயன்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இவ்வேலைத் திட்டம் சென்னை மாநகராட்சி, 35 நகராட்சிகள், 350 பேரூராட்சி மன்றங்கள், 6 நகரியக் குழுக்கள் ஆகியவற்றினால் செயல்படுத்தப்படுகின்றது.

கலவை எரு உற்பத்தியை மேற்கொள்வதற்காக ஊராட்சி மன்றங்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஊராட்சி மன்றங்களுக்கு இதனால் ஏதேனும் விரயம் ஏற்படுமாயின் அதைச் சரிக்கட்ட அரசாங்கம் தொடர் செலவில் 25 சதவீதம் வரையில் உதவித் தொகை வழங்குகின்றது. 1967–68-ம் ஆண்டில் 7·00 லட்சம் டன்களும் 1968–69-ம் ஆண்டில் 8·00 லட்சம் டன்களும் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய அரசு குறைந்த அளவு நிதி ஒதுக்கமே செய்துள்ளதால் உற்பத்தி அளவு குறித்த இலக்கு குறையலாம்.

### கிராமக் கலவை எரு.

இம்மாநிலத்தில் கிராமப் பகுதிகளில் கலவை எரு உற்பத்தியை அதிகரிப்பதற்காக உள்ளூர் எரு ஆதாரங்களை மேம்படுத்துவதற்கான திட்டமொன்று 1957–58-ம் ஆண்டில் முதற்கண் 81 வட்டாரங்களில் தொடங்கப்பட்டது. பின்னர் இத்திட்டம் ஆண்டுதோறும் பிற வட்டாரங்களுக்கு படிப்படியாக நீட்டிக்கப்பட்டது. இப்பொழுது இத் திட்டம் எல்லா வட்டாரங்களிலும் செயலிலிருந்து வருகின்றது. கிராமப் பகுதிகளிலுள்ள கழிவுப் பொருள்கள் அனைத்தையும் கிராமக் கலவை எருவாக மாற்றுவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. இத்தகைய கலவை எருவைத் தயாரிப்பதற்கு தனிப்பட்ட குடியானவர்களுக்கும், நிறுவனங்களுக்கும் ஊக்கமளிக்கப்படுகின்றது.





கலவை எரு உற்பத்தியில் தனிப் பயிற்சிபெற்ற கலவை எரு மேம்பாட்டு ஆய்வாளர் ஒருவர் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் இத்திட்டத்திற்குப் பொறுப்பு வகிக்கின்றார். மேலும் ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் முற்போக்கு நோக்குள்ள 100 குடியானவர்களுக்கு கலவை எரு உற்பத்தி, அதன் பயன் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

நான்காவது திட்ட இறுதியில் ஆண்டுக்கு 75 லட்சம் டன் எரு உற்பத்தி செய்ய வேண்டும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. 1967–68-ம் ஆண்டில் 64 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்ற இலக்கு நிச்சயிக்கப்பட்டிருக்க, 31—12—1967 வரை 40·73 லட்சம் டன் கலவை எரு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1968–69-ல் இந்த உற்பத்தி அளவை 68 லட்சம் டன்களாக அதிகரிக்கப்படும்.

### கழிவு எரு (Night Soil Compost)

1,500 முதல் 4,000 வரை மக்கள் தொகையுள்ள கிராம ஊராட்சிகளில் தெருக்களைத் துப்புரவு செய்வது மூலம் கிடைக்கும் குப்பைக் கூளங்கள், பிற கழிவுகள், மலப்பொருள்கள் ஆகியவற்றைக் கலவை எருவாக மாற்றியமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். எரு தயாரிப்பதற்கான மனை, வண்டிகள் வாங்குவதற்காகவும் துப்புரவு ஏற்பாடுகளைப் பேணி வருவதற்காகவும் ஊராட்சிகளுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. 1967–68-ம் ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஊராட்சிகளுக்கு ரூ. 9·71 லட்சம் கடனாக வழங்கப்பட்டது. இத்திட்டம் 1968–69-ம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும். 1967–68-ம் ஆண்டு இறுதிக்குள் 1,757 ஊராட்சிகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 1967–68-ல் மேற்கொண்டும் 500 ஊராட்சிகளிலும் 1968–69-ல் மேலும் பல ஊராட்சிகளிலும் இத்திட்டத்தினை செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காவது ஆண்டு இறுதிக்குள் ஆண்டொன்றுக்கு 3 லட்சம் டன் உற்பத்தியை எய்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1967–68-ல் 2 லட்சம் டன் உற்பத்தி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டிருக்க 1968–69-ல் இந்த உற்பத்தியை 2·20 லட்சம் டன்களாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையின் ஏனைய வேலைத் திட்டம் அடுத்து வரும் பத்திகளில் சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

(அ) குறைந்த விலையில் ரசாயனப் பொருள்களை வழங்கி பூச்சிகளையும் நோய்களையும் ஒழித்தல்.

(ஆ) தெளிப்பான்களையும் தூவு கருவிகளையும் குறைந்த விலையில் வழங்குதல்.

(இ) பூச்சி ஒழிப்பு மருந்து பரிசோதனை ஆய்வுக்கூடம் ஒன்றை நிறுவுதல்.

(ஈ) தொழிற் நுட்பப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

1967–68-ம் ஆண்டில் பூச்சிக்கொல்லி மருந்துகளும் காளான் ஒழிப்பு மருந்துகளும் அடக்க விலையில் 65 சதவீத விலையில் வழங்கப்பட்டன. அவை உணவுப் பயிர்கள் குறித்து பயன்படுத்தப்பட்டாலும், வாணிபப்பயிர்கள் குறித்து பயன்படுத்தப்பட்டாலும், அவை இக் குறைந்த விலையிலேயே விற்கப்பட்டன. உணவுப் பயிர்களுக்கான உதவித் தொகையின் சதவீதத்தில் 10 சத வீதம் அதிகரிக்கப்பட்டது. வாணிபப் பயிர்களுக்கான உதவித் தொகை 15 சத வீதம் குறைக்கப்பட்டது. நடப்பாண்டில் ஏறத்தாழ ரூ. 300 லட்சம் மதிப்புள்ள பூச்சிக் கொல்லி மருந்துகள் வழங்கப்பட்டிருக்கலாம்.

நான்காவது திட்டத்தில் உணவுப்பயிர்களைப் பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் 45 லட்சம் பரப்பளவில் பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. 1967–68-ல் 36 லட்சம் எக்கர் பரப்பளவில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டுமென இலக்கு நிச்சயிக்கப்பட்டிருக்க, 38 லட்சம் எக்கர் பரப்பளவில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1968–69-ல் 40 லட்சம் எக்கர் பரப்பளவில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வாணிபப் பயிர்கள் குறித்து தனியான இலக்குகள் முடிவு செய்யப் பட்டுள்ளன.

நெற்பயிர்களின் மீது பெரிய அளவிலும் பருத்தி மீது சிறிய அளவிலும் விமானம் மூலம் பூச்சி கொல்லிகளைத் தெளிக்கும் பணி முதன் முதலாக மேற்கொள்ளப்பட்டது. இது வரையில் வேர்க் கடலைப் பயிர் குறித்து மட்டுமே விமானம் மூலம் மருந்து தெளிக்கப்பட்டு வந்தது. திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு சிறு பரப்பளவின் மீது சென்ற ஆண்டு விமான மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. இதனால் நல்ல பயன் கிட்டியது. விமான மூலம் மருந்து தெளிப்பதனால் குறுகிய காலத்தில் அதிகப் பரப்பளவில் மருந்து தெளிக்க முடிகின்றது. மேலும் ஒரே வகையான பயிர் அதிக பரப்பளவில் பயிரிடப்படுகையில் விமானம் மூலம் மருந்து தெளிப்பதனால் இடைவெளியின்றி ஒரு சீராக மருந்து தெளிப்பது சாத்தியமாகின்றது. இதனால் கிடைக்கும் பயனும் மனநிறைவு அளிப்பதாகவே உள்ளது. கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் 1,64,740 எக்கர் பரப்பளவில் நெற்பயிரின்மீது விமானம் மூலம் மருந்து தெளிக்கப்பட்டது.

| | | | | எக்கர். |
|---|---|---|---|---|
| தென் ஆர்க்காடு | .. | .. | .. | 10,000 |
| வட ஆர்க்காடு | .. | .. | .. | 13,000 |
| செங்கற்பட்டு | .. | .. | .. | 13,600 |
| மதுரை | .. | .. | .. | 22,400 |
| கோயம்புத்தூர் | .. | .. | .. | 45,940 |
| இராமநாதபுரம் | .. | .. | .. | 4,400 |
| திருநெல்வேலி | .. | .. | .. | 55,400 |

1968–69-ல் ரூ. 20 லட்சம் செலவில் 3 லட்சம் எக்கர் பரப்பளவின் மீது விமானம் மூலம் மருந்து தெளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மருந்து தெளிப்பதற்கான செலவில் மூன்றில் ஒரு பங்குச் செலவும், பூச்சி கொல்லி மருந்துகளின் விலையில் உதவித் தொகை வழங்கப்படாத பகுதிச் செலவும் குடியானவரால் ஏற்கப்படுகின்றன. மருந்து தெளிப்பதற்கான செலவில் மூன்றில் இருபங்குச் செலவு மாநிலத்தின் திட்டச் செலவில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு 50 சத வீதம் உதவித் தொகை வழங்குகின்றது.

இதைத் தவிர, திருநெல்வேலி மாவட்டத்தில் நடப்பு பிஷாணம் பருவத்தில் நெற்பயிர் மீது பெரிய அளவில் தரைமீதிருந்தே மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதனால் 48,000 எக்கர் பரப்பளவு மீது மருந்து தெளிக்கப்பட்டது.





**தெளிப்பான்களையும் தூவு கருவிகளையும் வழங்குதல்.**

கையால் இயக்கப்படும் தூவு கருவிகளும் தெளிப்பான்களும் ஓராண்டிற்கான குறைந்த விலையில் 50 சதவிகிதத்தில் வழங்கப்படுகின்றன. நான்காவது திட்டக் கால அளவில் 25,000 தெளிப்பான்களையும் 2,000 தூவு கருவிகளையும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1967–68-ல், 5,000 தெளிப்பான்களும், 400 தூவு கருவிகளும் வழங்கப்பட்டன. 1968–69-லும் இதே அளவு தெளிப்பான்களும் தூவு கருவிகளும் வழங்கப்படும்.

**பூச்சிக்கொல்லி மருந்து சோதனை ஆய்வுக்கூடம்.**

வர்த்தக நிறுவனங்கள் பொது மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் விற்பனைக்கு அனுப்பும் பூச்சி கொல்லி மருந்துகளையும் காளான் அழிப்பு மருந்துகளையும் சோதித்துச் சான்றளிப்பதற்காகவும், இத் தகைய பொருள்களுக்கான தரங்களை முடிவு செய்யவும் வகை செய்யும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இக்காரியத்திற்காக கோயம்புத்தூர், ஆடுதுறை, கோயில்பட்டி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றாக மூன்று ஆய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**வேளாண்மைக் கல்வி.**

1965 ஜூன் திங்களில் தொடங்கப்பட்ட மதுரை வேளாண்மைக் கல்லூரி 1967–68-ல் தொடர்ந்து விரைவாக முன்னேறியது. மாணவர் இல்லங்கள் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. கல்லூரிக் கட்டிட வேலை விரைவாக நடந்து வருகின்றது. இந் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக 1968–69 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 39.92 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. B. Sc. (வேளாண்மை) பாடமுறையின் இறுதியாண்டு வகுப்புகள் 1968 ஜூன் திங்களில் செயல்படத் தொடங்கும். 1967–68 கல்வி ஆண்டில், கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி—ஆராய்ச்சி நிலையத்தில் பட்டமேற்படிப்பு பாட முறைகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 46-லிருந்து 61-ஆக அதிகரிக்கப்பட்டது. வேளாண்மை நலப் பரப்புப் பாட முறையில் புதிய பட்டமேற்படிப்பு பாடமுறை ஒன்று 1968–69 முதற் கொண்டு தொடங்கப்படவிருக்கிறது. 14 வேளாண்மைப் பள்ளிகளும் மன நிறைவுதரும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி—ஆராய்ச்சி நிறுவனத்தில் செயல்பட்டுவரும் சிறுபாசன—நீர் பயன் குறித்த பயிற்சி நிலையம் 1-1-1968 முதற்கொண்டு வட்டாரப் பயிற்சி நிலையமாக மேநிலைப் படுத்தப்பட்டுள்ளது. கேரள, மைசூர் மாநில மாணவர்கள் இப் பயிற்சி நிலையத்தில் சேர்ந்ததன் காரணமாக இந் நிலையம் மேற் சொன்னவாறு மேநிலைப்படுத்தப்பட்டது. புதுச்சேரி போன்ற பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் இப்பாடமுறையில் சேருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண்மை ஆராய்ச்சி.**

1967–68-ல் கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி—ஆராய்ச்சி நிலையத்திலும் இம்மாநிலத்தில் பல்வேறு இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன. பல்வேறு வட்டார ஆராய்ச்சி நிலையங்களிலும் துணை நிலையங்களிலும் வேளாண்மை ஆராய்ச்சிப் பணி ஒரே சீராகவும் மன நிறைவு தரும் வகையிலும் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஆய்வாண்டில், மேம்படுத்தப்பட்ட ஐந்து பயிர் வகைகள் வெளி யிடப்பட்டன. அவையாவன:—பருத்தி (MCU 4) வேர்க்கடலை (TMV 7) எள் (KRR 1), நன்செய் பச்சைப் பயிர் (ADT 1), ஒட்டு மொச்சை (COI ஆகியவையாகும். இந்தியாவில் பயிர் செய்யப்பட்டுவரும் வாணிப வகையை

சேர்ந்த பருத்தியில் புதிய கண்டுபிடிப்பாகிய பருத்தி MVC 4 (பயிர் வகை EL 123) மிகச் சிறந்ததாகும். 70-ம் நெம்பருக்கு மேற்பட்ட நூற்புசக்தி கொண்டதாகும். தமிழ் நாட்டில் கோடை கம்போடியா பகுதியில் பயிரிடுவதற்கு இது மிகவும் ஏற்றதாகும். இதனைப் பயிரிடுவதனால் நல்ல ஆதாயம் கிடைக்கின்றது. மேலும் இது நோய் எதிர்ப்பு சக்தி கொண்டதாகும். MCU 2-க்குப் பதிலாக, இவ்வகை பயிர் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நிலக்கடலையில் மேநிலைப்படுத்தப்பட்ட TMV-7 என்ற புதிய வகையும் KRR-1 என்ற புதிய எள் வகையும் நல்லதரம் உடையதாகும். TMV-7 வகையைத் தமிழ்நாடு முழுவதிலும் பயிரிடலாம். KRR-1 வகை எள்ளை கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 40,000 ஏக்கர் பரப்பளவிலேயே பயிரிடமுடியும். காவிரி சங்கமுகப் பகுதி முழுவதிலும் புதிதாக வெளியிடப்பட்டுள்ள பச்சைப் பயிர் ADT-1 வகையைப் பயிரிடுவதனால் நல்ல ஆதாயம் கிடைக்கும். இப்பயிர் வகையினால், விளைச்சல் 18 சதவீதம் கூடுதலாகக் கிடைக்கின்றது. மேலும், இப்பயிர் வகை 80 நாட்களுக்குள் அறுவடைக்குத் தயாராகிவிடுகிறது. கோடைக்காலத்தில் நெல் பயிரிடப்படாதபோது நன்செய் வயல்களில் இவ்வாறு பச்சைப் பயிர்களைப் பயிரிட முடியும். பலவகையான கலப்பினங்களை மும்முரமாகச் சோதித்துப் பார்த்ததன் பலனாக ஒட்டுமொச்சை கலப்பினம் இப்போது கிடைத்துள்ளது, இது இரு வகைகளில் பயன்படும். இதற்கு டாலிசாஸ் கோயம்புத்தூர் என்று பெயர். இவ் வகைப் பயிரை எல்லாப் பருவகாலங்களிலும் பயிரிடலாம். இது சத்துணவு மிக்கதாகும். புரதப்பொருளும் கொழுப்புப் பொருளும் இதில் அதிகம். மேலும், 120 நாட்களில் இதனை அறுவடை செய்யலாம் அன்றியும் மழை நீர்கொண்டும் பாசன நீர்கொண்டும் இதனைப் பயிர் செய்யலாம்.

இந்தியாவின் பல்வேறு இடங்களில் முன்னேறிவரும் ஆராய்ச்சி வேலையை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் தானிய வகைகள், எண்ணெய் வித்துக்கள், பிற பயிர் வகைகள் ஆகியவற்றில் தேசிய அடிப்படையில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்கள் பலவற்றை வகுத்துள்ளது. ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்களின்கீழ் வரும் வேலைத் திட்டங்களுக்கு மத்திய அரசு முழு நிதி உதவியும் வழங்குகின்றது. 1-7-1967 முதற்கொண்டு பருத்தி குறித்த அனைத்திந்திய ஆராய்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எண்ணெய் வித்துக்கள் குறித்த அனைத்திந்திய ஆராய்ச்சித் திட்டம் 1-4-1968 முதற்கொண்டு செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டங்கள் தொடங்கப்பட்ட பின் வேர்க்கடலை, எள், ஆமணக்கு போன்ற எண்ணெய் வித்துக்கள் குறித்து பெரிய சிக்கல்கள் அனைத்தும் முனைந்து தீர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. கால்நடைகளுக்கான தீவன வகைகளின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் அனைத்திந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது. 1966-67-ம் ஆண்டிலும் 1967-68-ம் ஆண்டிலும் அரிசி, கம்பு, சிறு தானியங்கள் ஆகியவை குறித்து வகுக்கப்பட்ட அனைத்திந்திய ஒருங்கிணைந்த திட்டங்கள் குறித்து இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

**மண்வளப் [illegible]**

மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் தற்போது கோயம்புத்தூர், ஆடுதுறை, கோயில்பட்டி, கடலூர், மதுரை, காஞ்சீபுரம், குடியாத்தம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. அதிக அளவு எருக்களைப் பயன்படுத்துவது குறித்து குடியானவர்களுக்கு தக்க ஆலோசனை வழங்குவதற்காக இந்த ஆய்வுக் கூடங்களில் மண்வள மாதிரிகள் இலவசமாகப் பரிசீலனை செய்யப்படுகின்றன. வேளாண்மை



உற்பத்திக் குழு பரிவுரை செய்துள்ளபடி வட்டார வாரியான மண்வள விளக்கப் படங்களைத் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இம் மாநிலத்திலுள்ள பல்வேறு மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடங்களில் மண் மாதிரிகளைப் பரிசோதனை செய்ததன் விளைவாக அறிந்த வற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மாவட்ட வாரியான மண்வள விளக்கப் படங்கள் தயாரிக்கப்படும். மண் வளப் பரிசோதனை ஆய்வுக்கூடம் ஒவ்வொன்றும் திங்களொன்றுக்கு 1,250 மண் மாதிரிகளை ஆய்வு செய்யும் திறனுடையதாகும். ஆனால் ஆடுதுறை ஆய்வுக் கூடமோ மாதமொன்றுக்கு 4,000 மண் மாதிரிகளை சோதனை செய்யும் திறன் உடையதாகும். இப்பகுதியில் முனைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த அரசாங்கம் ஒப்புதல் வழங்கியதனால் இந்த ஆய்வுக் கூடத்தின் திறன் அதிகமாகியது. இம் மாநிலத்திலுள்ள மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் ஏழிலும் இதுவரை 1,13,771 மண் மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு எந்த அளவுக்கு உரங்கள் பயன்படுத்தப்படவேண்டுமென்பது பற்றியும் நிலத்தைப் பண்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை பற்றியும் இந்த ஆய்வுக் கூடங்கள் ஆலோசனை வழங்கியுள்ளன. 1968-69-ம் ஆண்டில் இந்த ஏழு ஆய்வுக் கூடங்களிலும் 1,08,000 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு உழவர்களுக்கு இலவசமாக ஆலோசனை வழங்கப்படும். மோட்டார் வண்டிகளில் இயங்கும் மண்வளச் சோதனை ஆய்வுக் கூடங்கள் சிலவற்றை இந்திய அரசு இந்த ஆண்டில் வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஊர் ஊராகச் சுற்றிவரும் இந்த ஆய்வுக் கூடங்களினால் ஏராளமான மாதிரிகளை விரைவாகச் சோதனை செய்வது சாத்தியமாகும். மேலும், சோதனை முடிவுகளையும் அந்தந்த இடங்களிலேயே தெரிந்துகொள்ளலாம்.

**வேளாண்மை மாவட்ட மும்முரத் திட்டம்.**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் பயிரிடப்படும் பரப்பு முழுவதிலும் முனைப்பு நடவடிக்கைகள் மூலமாக மும்முர வேளாண்மை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு ஒரு ஏக்கருக்கான விளைச்சலை அதிகப்படுத்துவதே இவ் வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

வேளாண்மை மாவட்ட மும்முரத் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் 13—4—1960 அன்று தொடங்கப்பட்டு 1960 ஜூன் திங்கள் முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது. இவ் வேலைத் திட்டம் முதற்கண் ஐந்தாண்டுத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டது. இவ் வேலைத் திட்டத்தை நான்காவது திட்டக்காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. 1960-ம் ஆண்டில் 23 வளர்ச்சி வட்டாரங்களில் பயிரிடப்படும் பகுதியில் 20 சத வீதப் பரப்பில் தொடங்கப்பட்ட இவ் வேலைத் திட்டம் இப்போது இம் மாவட்டத்தைச் சேர்ந்த 36 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் 13·04 லட்சம் ஏக்கர் பரப்பளவில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

காவிரி சங்கமுகத்தின் தலையாய பயிராகிய நெற்பயிர் இத் திட்டத்தின் தொடக்கத்தில் மேம்பாட்டு வேலைக்காக மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இம்மாவட்டத்தில் பயிர் செய்யப்படும் பிற முக்கிய பயிர் வகைகளும் அதாவது வாழை, கரும்பு, தென்னை, கருந்தானியங்கள், காய்கறி வகைகள், நிலக்கடலை, புகையிலை, பருத்தி, எள் ஆகியவையும் பிந்திய ஆண்டுகளில் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டன.

தஞ்சை மாவட்டத்தில் நடப்பாண்டில் மிகப் பெரிய நோக்கத்துடன் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகளில் வேளாண்மை மாவட்ட மும்முரத் திட்டம் பெரும் பங்கு ஏற்று வேளாண்மை உற்பத்தியில் முன்னேற்றம் காணும் பணியில் பேருதவி செய்தது. காலம் கடந்ததாக ஒருபோக சம்பா பயிர் விளைவிக்கப்பட்ட நிலங்களில் ஆடுதுறை—27 வகை நெல்லை முதல் போகப் பயிராக வளர்த்து இரண்டு போக நெற் பயிர் வகைகளை பயிரிட்டதன் மூலம் 2·1 லட்சம் ஏக்கர் பரப்பளவு கூடுதலாக நெல் பயிரிடப்பட்டது.

## மும்முர வேளாண்மை வட்டாரத் திட்டம்.

மும்முர வேளாண்மை வட்டாரத் திட்டத்தைச் செயல்படுத்த செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அத்திட்டம் 1965–66-ல் அம்மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. இந்த மாவட்டங்களில் உள்ள குடியானவர் ஒவ்வொருவருக்கும் முனைப்பு நடவடிக்கைகளைக் கற்பித்தல், பண்ணைத் திட்டங்களை வகுத்துக் கொடுத்தல், பண்ணைக்குத் தேவையான பொருள்களை வழங்குதல், கடன் வசதியளித்தல், தற்கால வேளாண்மை முறைகளைக் கையாளும் முறையை நடைமுறையில் செய்து காட்டுதல், பிரச்சாரம் செய்தல் ஆகிய நடவடிக்கைகள் மூலமாக நெல், சோளம், கேழ்வரகு ஆகிய முக்கிய உணவுப் பயிர்களின் உற்பத்தியையும் இவற்றுடன் மாறி மாறிப் பயிரிடப்படும் வேர்க்கடலை, பருத்தி போன்ற வாணப முக்கியத்துவம் வாய்ந்த பயிர்களின் உற்பத்தியையும் பெருக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த நான்கு மாவட்டங்களிலும் மொத்தம் 133 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில், நிலையான பாசனவசதி கொண்ட 10,000 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவு கொண்ட 83 வட்டாரங்களில் வேளாண்மை வளர்ச்சி அதிகாரி ஒருவரும், கிராம நிலையில் பணிபுரியும் ஐந்து பணியாளரும் கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குடியானவர்களுக்கும் தனிப் பண்ணைத் திட்டங்கள் அடிப்படையில் விதைகள் உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள், மேம்படுத்தப்பட்ட கருவிகள், கூட்டுறவுகள் மூலம் கடன் வழங்குதல் போன்ற உற்பத்திக்கான உதவிகளை உரிய காலத்தில் போதிய அளவிற்கு வழங்குவதே இவ்வேலைத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தர விதைகள், உரங்கள், பூச்சி கொல்லிகள், நவீன கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி குடியானவர்கள் முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இவ்வேலைத் திட்டம் வகை செய்கிறது. ஒவ்வொரு பயிருக்கும் முனைப்பு நடவடிக்கைகளின் அடிப்படையில் ஒவ்வொரு குடியானவருக்கும் தனிப் பண்ணைத் திட்டங்களை கிராம நிலைப்பணியாளர்கள் தயாரிக்கின்றனர். இதன் மூலம் கிராம நிலைப் பணியாளர்களுக்கும் குடியானவர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுகின்றது. வேளாண்மையில் நவீன முறைகளைக் கையாளும்படி குடியானவர்களுக்கு அறிவுறுத்தவும் இத்திட்டம் வகை செய்கிறது.

அந்தந்த வட்டாரத்தின் வேளாண்மைத் துறை துணை இயக்குனரின் மேற்பார்வையில் ஒவ்வொரு மாவட்டமும் உள்ளது. இத்துணை இயக்குநர் ஒவ்வொருவரும் மாவட்டத்தின் திட்டப் பகுதி அதிகாரியாவார். தெரிந்தெடுக்கப்பட்ட நான்கு மாவட்டங்களிலும் ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திற்கும் மாவட்ட வேளாண்மை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறுபாசன பயன் பெறும் பகுதிகளில் முனைந்து மாறி மாறிப் பயிரிடும் முறையையும் மேம்படுத்தப்பட்ட பயிர் சுழற்சி முறையையும் தொடங்குவதற்காக 83 செயல் விளக்கப் பண்ணைகளை 1967–68-ம் ஆண்டில் ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும். 5 ஏக்கர் கொண்ட ஒவ்வொரு பண்ணைக்கும் தனியே ரூ. 750 செலவிட திட்டமிடப்பட்டது. இவை 1968–69-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். நான்காவது திட்டக் காலத்தில் இவ்வேலைத் திட்டத்திற்கென ரூ. 67 லட்சம் செலவாகும். 1967–68-ம் ஆண்டிலும் 1968–69-ம் ஆண்டிலும் முறையே ரூ. 2·84 லட்சமும் ரூ. 2·87 லட்சமும் செலவிடப்படும்.

## தமிழ்நாட்டில் "வேளாண்மை உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்' — அமெரிக்க உதவித் திட்டம்.

இந்தியாவிற்கு வருகை தந்துள்ள அமெரிக்க உதவித் திட்டக் குழுவின் ஒத்துழைப்புடன் நமது மாநிலத்தில் 1967-ம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. வளர்ச்சிப் பணியாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியும் பயிற்சி வசதிகளும் அளிப்பதற்கெனவே இத் திட்டம் வகுக்கப்பட்டது. இதன் மூலம் நமது மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க முனையும் வளர்ச்சிப் பணியாளர்



களுக்குத் தேவையான திறமையும் வேளாண்மை அளவும் வழங்கப்படுகிறது. மிகு பயன் தரும் வகைகளில் மிகுந்த நாட்டம் செலுத்தப்படுகிறது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் வளர்ச்சிப் பணிக்கும் வேளாண்மைப் பொருளாதாரத்திற்கும் கருவிகளையும் யந்திரங்களையும் கவனித்துக் கொள்வதற்கும் மண் வளத்தையும் நீர் வளத்தையும் பயன்படுத்தி நிர்வகிப்பதற்கும் பயிர் பாதுகாப்பிற்கும் வேளாண்மைத் துறைக்கு வேண்டிய வல்லுநர்களை அமெரிக்க அரசாங்கம் கொடுத்துதவியுள்ளது. இந்த வல்லுநர்கள் அனைவரும் தத்தம் பணியினை மேற் கொண்டுள்ளனர். முதற்கண் இத்திட்டத்திற்காக இரண்டாண்டுக் கால அளவுக்கு அமெரிக்க வல்லுநர்கள் 5 பேர் நியமிக்கப்படுவர். மும்முர வேளாண்மைப் பரப்பளவைக் கொண்ட கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வெலி, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் பயன் தரத்தக்க செயல் விளக்கங்களை மேம்படுத்துவதில் இந்த வல்லுனர்கள் முனைந்து செயல்படுகின்றனர்.

மேலும் இத்திட்டத்தின் கீழ் வேளாண்மைத்துறை அதிகாரிகள் அமெரிக்க நாட்டில் பட்டமின்றி நடைமுறை பயிற்சி பெறவும் இந்த அமெரிக்க உதவித் திட்டம் வகை செய்கிறது. இதன் மூலம் அந்த அதிகாரிகள் தங்கள் பதவிக்கு திரும்ப வந்த பின்னர் தாங்கள் பெற்ற பயிற்சியை பயன்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வோராண்டும் 5 அதிகாரிகள் இப்பயிற்சி பெறுவதற்காக விரைவில் அனுப்பப்படுவர். மேலும் இம் மாநிலத்திலுள்ள வேளாண்மை வளர்ச்சி சம்பந்தப்பட்ட உயர் நிலை அதிகாரிஒருவரும் நிர்வாகப் பயிற்சி பெறுவதற்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்படுவார்.

## இந்திய-ஜெர்மன் நீலகிரி மேம்பாட்டுத் திட்டம்.

ஜெர்மன் உதவியுடன் மும்முர வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 1967-ம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. இத்தகைய திட்டம் ஒன்று முதலில் இமாசலப் பிரதேசத்தில் மண்டி மாவட்டத்தில் 1962-ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் செயல்படுவது இரண்டாவது இந்திய-ஜெர்மன் வேளாண்மைத் திட்டமாகும். வேளாண்மை உற்பத்தியில் விரைந்த முன்னேற்றம் காண்பதும் நீலகிரியிலுள்ள குடியான்வர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதுமே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். தர விதைகள், சிராக்கப்பட்ட உரம், கூடுதலான பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள், நவீன கருவிகள் ஆகியவற்றைப் பயன் படுத்தி முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த குடியானவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் தேவையான வசதிகள் செய்து தரப்படுகின்றது. வேளாண்மையில் சிறந்த முறைகளைக் கையாளுவதில் குடியானவர்கள் அனைவருக்கும் போதிப்பதும் இத்திட்ட வேலையின் முக்கியமானதொரு வேலைத் திட்டமாகும். உருளைக் கிழங்கு விளைச்சலைப் பெரிதும் பாதிக்கும் நோய் (Late blight) நீலகிரி மாவட்டத்திலுள்ள பயிர்களுக்கு ஏற்படாத வண்ணம் பயிர்ப் பாதுகாப்பு செய்வதற்கு இத்திட்டத்தில் முதன்மை அளிக்கப்படும், உருளைக்கிழங்கு பயிர்களில் தற்போது பரவி வரும் ஒருவகை பூச்சியை (Golden Nematode Pest) அழிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சிறு விசையோர்கள் மூலம் இயந்திர முறையில் உருளைக்கிழங்கு பயிரிடுவதற்கும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காக தெளிப்பு வகை பாசன முறையை மேற்கொள்வதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. மிகு பயன் தரும் வாடல் நோயை எதிர்க்கும் பயிர்வகை பயிரிடுவதற்கும் இத்திட்டம் உதவுகிறது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள குடியானவர்கள் காய்கறி வகைகளைப் பெருமளவில் பயிரிட முனைந்தாலும் வாணிகத்தில் தனிப்பட்டவர்களே ஈடுபட்டுள்ளதால் அவர்களுடைய விலைபொருள்களுக்குத் தக்க விலை கொடுக்கப்படுவதில்லை. எனவே விளைவிப்போருக்கு நல்ல விலை கிடைப்பதற்கும் அதே சமயம் வாங்குவோர் நியாயவிலையில் அவற்றைப் பெறுவதற்கும்கூட்டுறவு மூலமாகச் சந்தை வசதிகள் கிடைக்கச் செய்வதுமே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். விளைபொருள்களை எடுத்துச் செல்வதற்கு குளிர்ப்பதன வசதியும் அத்தகைய ஏனைய வசதிகளும் கொண்கு

[திரு ஏ. கோவிந்தசாமி] [1968 மார்ச் 14

வண்டிகளுக்கு ஏற்பாடு செய்வதும் இத்திட்டத்தின் வேலைத் திட்டங்களில் ஒன்றாக மேற்கொள்ளப்படும். வேளாண்மையைத் தவிர சிறந்த வகை கால்நடைகளைக் கொண்டு கால்நடை வளர்ப்பினை மேம்படுத்துவது, கோழி இனப் பறவை வளர்ப்பது, தீவனப் பயிர்களைப் பயிரிடுவது ஆகியவற்றிலும் நாட்டம் செலுத்தப்படும்.

சிறந்த வகை உருளைக்கிழங்குகள், பழவகைகள், காய்கறி வகைகள், உரங்கள், பயிர்ப்பாதுகாப்புப் பொருள்கள் (ரசாயனப் பொருள்கள்), விசையேர்கள், ஏனைய பண்ணைக் கருவிகள் ஆகியவற்றுடன் மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடம் ஆகியவற்றை இத்திட்டத்திற்கென மேற்கு ஜெர்மன் வழங்கும். துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இவ் வேலைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக வேளாண்மை வல்லுனர்களும், தொழில் நுட்ப வல்லுனர்களும் ஜெர்மனியிலிருந்து இங்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களில் 7 பேர் முன்னதாகவே நீலகிரி மாவட்டத்திற்கு வந்து தங்கள் பணியினைத் தொடங்கியுள்ளனர். ரூ. 18 லட்சம் மதிப்புள்ள கருவிகள் வந்து சேர்ந்துள்ளன. தற்போது பயன்படுத்தப்படுகின்றன.

**வாணிபப் பயிர்கள்.**

**பருத்தி.**

நான்காம் திட்டத்தில் கூடுதலாக 1·45 லட்சம் பேல் பருத்தி உற்பத்தி செய்யும் குறிக்கோள் அளவு மேற்கொள்ளப்பட்டது. இதனால் திட்டக்காலத்து இறுதியில் 5·80 லட்சம் பேல் பருத்தி உற்பத்தி அளவினை எய்த முடியும். பருத்தி வளர்ச்சித் திட்டமும் முனைப்புத் திட்டமும் மும்முரமாக நிறைவேற்றப்படும். 1968–69-ம் ஆண்டில் அடிப்படை உற்பத்தி அளவாகிய 4·35 லட்சம் பருத்திக்கு மேலாக 0·87 லட்சம் பேல் கூடுதல் உற்பத்தித் திறன் கிடைக்கச் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகையில் உற்பத்தி அளவு 5·22 லட்சம் பேலாகும். உறுதியாக பாசன வசதி பெறும் பகுதிகளில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் அண்மையில் மத்திய அரசு ஊக்குவிக்கும் முனைப்புத் திட்டத்திற்கு அண்மையில் ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 60,000 எக்கர் பரப்பளவில் பருத்தி விளைவிக்கப்படும். 1968–69-ம் ஆண்டில் இத்திட்டம் முழுவதுமாக செயல்படுத்தப்படும். 1968–69-ம் ஆண்டில் மத்திய அரசு ஊக்குவிக்கும் முனைப்புத் திட்டத்தின் கீழ் 30,000 எக்கர் பரப்பளவிலும் கூடுதலாக பருத்தி பயிர் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. எப்பொழுதும் வழங்கப்படும் தர விதைகள், உரங்களைப் பயன் படுத்துதல், பூச்சி, நோய் ஆகியவற்றிற்கு எதிராக பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவை தொடர்ந்து செயல் படுத்தப்படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் பயிரிடப்பட்ட 450 எக்கர் பரப்பளவில் P. R. S. 72 இன ரஷ்ய வகைப் பருத்தியை நடப்பு ஆண்டில் பயிரிடுவதும் வேலையினங்களின் முக்கியமான ஒரு வேலையாகும். ரஷ்ய வகைப் பருத்தியை அந்தப் பகுதியில் தொடர்ந்து பயிரிடுவதால் 1968 கோடைப் பருவத்தில் 1,500 எக்கரா பரப்பளவில் பருத்தி பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. 1969 கோடைப் பருவத்தில் இப்பரப்பளவை 2,500 எக்கராவாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பருத்தி பயிரின்மீது முதன் முதலாக 4,900 எக்கரா பரப்பளவில் விமான மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. இவ்வாறு மருந்து தெளிக்கும் வசதியை பெரும் பரப்பளவில் செயல்படுத்த இயலுமா என்பது குறித்து 1968–69-ம் ஆண்டில் ஆய்வு செய்யப்படுகிறது.

**கரும்பு வளர்ச்சிக்கான பணிகள் (சாலைப்பணிகள் உட்பட).**

மதுராந்தகம் ஆலைப் பகுதியில் 4,000 எக்கர் பரப்பில் கரும்பு பயிரிடும் முனைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும் 1967-68-ல் 16,000 பரப்பளவில் ஆம்பூர், ஆப்பிக்கூடல், பெண்ணாவு, முண்டியம்பாக்கம் ஆகிய நான்கு இடங்களில் முனைப்பு உற்பத்தி பிரிவுகள் தொடங்கப்பட்டுளன.



1968 மார்ச் 14] [திரு. ஏ. கோவிந்தசாமி]

வெல்லம் உற்பத்தி செய்வதற்கும் கரும்பு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டதால், நாட்டில் கரும்பு உற்பத்தி மொத்தத்தில் மிகவும் குறைந்துவிட்டது. இந்த நிலை சீர்படுவதற்கு சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். ஆலைகளுக்கு கரும்பு விளைவித்துத் தரும் கரும்பு பயிரிடுவோருக்கு ஊக்கமூட்டுவதற்காக அவர்கள் தரும் கரும்புக்கு உயர் விலை அளிக்கப்பட வேண்டுமென இந்திய அரசு நடப்பாண்டில் முடிவு செய்துள்ளது. இத்தகைய உயர் விலை கொடுக்கும் ஆலைகளுக்குத் தேவையான கரும்பு வந்து சேராதென கருதப்படுவதால் இம் மாநிலத்திலுள்ள ஆலைகள் டன் ஒன்றுக்கு 90 ரூபாயும் அதற்கு மேற்பட்ட தொகையும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக ஆலைகளில் பெருமளவு கரும்பு சாறு பிழியப்பட்டு அதிக அளவு சர்க்கரை உற்பத்தி செய்யப்படுமென்று நம்பப்படுகிறது. 1967–68-ம் ஆண்டில் வெல்ல உற்பத்தியின் குறிக்கோள் அளவு 8·37 லட்சம் டன் எனவும் 1968–69-ம் ஆண்டில் வெல்ல உற்பத்தியின் குறிக்கோள் அளவு 8·85 லட்சம் டன் எனவும் திட்டமிடப்பட்டது.

கரும்பை எளிதாகவும் விரைந்தும் எடுத்துச் செல்ல வசதி செய்யும் பொருட்டு கரும்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சாலை மேம்பாட்டுக்கான திட்டம் நான்காவது திட்டக் காலத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். உதவி பொறியாளர்கள் மூவரின் துணை கொண்டு ஒரு கோட்டப் பொறியாளரைக் கொண்ட தனிப்பட்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இப் பணிகளை முறை வைப்புப் பட்டியலின்படி நிறைவேற்றும் திட்ட வேலைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் அப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**எண்ணெய் வித்துக்கள் (முனைப்புத் திட்டம் உட்பட).**

1967–68-ம் ஆண்டில் 12·90 லட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. வேர்க்கடலை உற்பத்தியை பெருமளவில் அதிகரிக்கச் செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இந்த நாட்டிலுள்ள வேர்க்கடலை விளைவிக்கப்படும் எல்லா முக்கிய பகுதிகளிலும் ஏற்றுமதி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. முனைப்புத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே கொண்டுவரப்படாத செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தர்மபுரி, சேலம் மாவட்டத்திலுள்ள பகுதிகளில் இத் திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் 5·5 லட்சம் எக்கர் பரப்பளவில் எண்ணெய் வித்துக்கள் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. உற்பத்தி அளவை 1·1 லட்சம் டன்னுக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. படிப்படியாகச் செயல்படுத்தப்படும் இத் திட்டம் மூன்றாண்டுக் கால அளவினதாகும். அறிவியல் வகையில் பயிரிடுவதும் பூச்சி, நோய் ஆகியவை பயிர்களை பீடிக்காவண்ணம் பாதுகாப்பதற்கான பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதுமே இத் திட்டத்தின் முக்கிய கூறுகளாகும். 1967, டிசம்பரில் இத் திட்டம் குறித்த விவரங்கள் தெளிவாக்கப்பட்டதால் அப்பொழுதுதான் இத் திட்டம் தொடங்கப்பட்டது. எனவே, 1·4 லட்சம் எக்கரில் இந்த ஆண்டில் எதிர்பார்த்த பலன் கிட்டாது. ஜனவரியிலிருந்து தொடங்கும் பாசன பருவத்தில் 1967–68-ம் ஆண்டில் 20,000 பரப்பளவில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1968–69-ம் ஆண்டில் 1·4 லட்சம் பரப்பளவில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

இது தவிர, ஏற்கெனவே ஒப்புதலளிக்கப்பட்டுள்ள வேர்க்கடலை முனைப்புத் திட்டங்கள் 1967–68-ம் ஆண்டில் 30,000 எக்கர் பரப்பளவுக்குக் கூடுதலாக விரிவு படுத்தப்பட்டது. 1968–69-ம் ஆண்டில் இந்த 30,000 பரப்பளவுடன் மேலும் 25,000 பரப்பளவில் வேர்க்கடலை பயிரிடப்படும். முனைப்புத் திட்டத்தின் கீழ் 1966–67-ம் ஆண்டில் நடத்தப்பட்ட மாதிரி பயிர் சோதனையின் விளைவு கீழ்க்கண்டவாறு இருந்தது. வேர்க்கடலைப் பயிரிடப்படும் பாசன வசதி பெறும் பகுதிகளை முனைப்புத் திட்டம் செயல்படுத்தப்படாத பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் முனைப்புத் திட்ட

பகுதியில் உற்பத்தி 53 சத வீதம் அதிகரித்துள்ளது. மானவாரி வேர்க்கடலை பயிரிடப்படும் பகுதிகளில் உற்பத்தி 45 சத வீதம் அதிகரித்துள்ளது. தேர்ந்த நிலக்கடலைப் பருப்புகள் வழங்குதல், தக்க காலத்தில் உரங்களைப் பயன்படுத்துதல், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய வளர்ச்சிப்பணிகளை சிறப்புப் பணியாளர் செய்தல் ஆகிய பணிகள் நடந்தேறி வருகின்றன. வேர்க்கடலை, ஏனைய எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் இயல்பான மேம்பாடு குறித்து பணியினை மேற்கொண்டுள்ள எண்ணெய் வித்துக்கள் வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டம் தொடர்ந்து அப்பணியினைச் செய்து வருகிறது.

## முந்திரி வளர்ப்பு.

காடுகள் இல்லாத பகுதிகளில் முந்திரி வளர்ப்பின் கீழ் உள்ள பரப்பளவை அதிகரிக்கும் திட்டத்தின் தொடர்ச்சியாக, நான்காவது திட்டக் காலத்தின், குறிக்கோள் அளவாக 20,000 எக்கரில் முந்திரி பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு எக்கருக்கான கடன் உதவி ரூ. 80-லிருந்து ரூ. 100-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது இரண்டு ஆண்டுத் தவணைகளில் ரூ. 60 ஆகவும், ரூ. 40 ஆகவும் செலுத்தப்பட வேண்டும். 1967–68-ல் 31–12–1967 வரையில் 3,810 எக்கரில் முந்திரி பயிரிடப்பட்டது. எஞ்சியுள்ள மூன்று மாதங்களில் மேலும் 1,190 எக்கரில் பயிரிடப்படும். 1968–69-ம் ஆண்டில் 5,000 எக்கரில் முந்திரி பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## திருநெல்வேலி மாவட்டத்தில் முந்திரி, தென்னை வளர்ப்பு.

முந்திரி, தென்னை வளர்ப்புக்கான ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று 1966–67-ம் ஆண்டு முதல் திருநெல்வேலி மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நான்காவது திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் 8,000 எக்கர் பட்டா நிலங்களில் முந்திரி, தென்னை பயிரிடப்படும்; அதாவது, 2,000 எக்கர் நிலங்களில் தென்னையும், 6,000 எக்கர் நிலங்களில் முந்திரியும் பயிரிடப்படும். இதற்காக எக்கர் ஒன்றுக்கு முறையே ரூ. 350-ம், ரூ. 100-ம் நீண்டகாலக் கடனாக வழங்கப்படும். 1967–68-ல் 31–12–1967 வரையில் 1,804 எக்கரில் முந்திரியும் 246 எக்கரில் தென்னையும் பயிரிடப்பட்டுள்ளது. 2,000 எக்கரில் முந்திரி பயிரிட வேண்டும், 500 எக்கரில் தென்னை பயிரிட வேண்டும் என்ற குறிக்கோள் அளவை 31–3–1968-ல் எய்திவிட முடியும்.

1968–69-ல் 1,500 எக்கரில் முந்திரியும், 500 எக்கரில் தென்னையும் பயிரிடவேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தேவையான தென்னம்பிள்ளைகளைப் பெறுவதற்காக, இத் திட்டப் பகுதியில் தென்னம்பிள்ளை வளர்ப்பிடங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1968-ம் ஆண்டின் மத்தியில் அந்த வளர்ப்பிடங்கள் தொடங்கப்படும்.

## தென்னை வளர்ப்பு.

**(i) தென்னந் தோப்புகளின் பரப்பளவை விரிவாக்கல்.**—ஒரு எக்கருக்கு ரூ. 300 என்ற வீதத்தில் ஆண்டொன்றுக்கு 2,000 எக்கருக்கு நீண்ட காலக் கடன் வழங்குவதன் மூலம், நான்காவது திட்டக் காலத்தில் 10,000 எக்கரில் புதிதாகத் தென்னை பயிரிடப்படும். 1966–67-ம் ஆண்டில், 1,650 எக்கரில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. 1967–68-ல் 2,000 எக்கரில் தென்னை பயிரிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1968–69-ல் 1,500 எக்கரில் தென்னை பயிரிட வேண்டும் என்ற குறிக்கோள் அளவு முடிவு செய்யப்பட்டுள்ளது.





**(ii) முனைப்புத் திட்டம்.**—தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டிணம் பகுதியில், கோப்பான 1,000 எக்கர் பகுதியில் 1963–64-ல் முனைப்புத் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. தென்னை உற்பத்தியை 25 சதவிகிதம் அதிகரிப்பதற்கு முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இத் திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. இரசாயன உரங்களையும், இரசாயனப் பொருள்களையும் வாங்குவதற்காக கடன்-உதவித் தொகை கீழே குறிப்பிட்டவாறு வழங்கப்படுகிறது.

எக்கர் ஒன்றுக்கான வீதம்/ரூபாய்.

| | |
|---|---|
| ஒரு எக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலத்தின் உரிமையாளர்கள் (100 சதவிகிதம் உதவித் தொகை). | ரூ. 180 உதவித் தொகையாக வழங்கப்படும். |
| ஒரு எக்கருக்கு மேற்பட்ட ஆனால் ஐந்து எக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலம் வைத்திருப்பவர்கள் (50 சதவிகிதம் கடன்; 50 சதவிகிதம் உதவித் தொகை). | ரூ. 90 கடனாகவும் ரூ. 90 உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது. |
| ஐந்து எக்கருக்கு மேற்பட்ட நிலத்தின் உரிமையாளர்கள். (100 சதவிகிதம் கடன்). | ரூ. 180 கடனாக வழங்கப்படுகிறது. |

முதல் மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. 1963–64, 1964–65, 1965–1966 ஆகிய மூன்றாண்டுகளிலும் ஆண்டொன்றிற்கு 100 எக்கர் நிலம் குறித்து இந்தக் கடன்-உதவித் தொகை வழங்கப்பட்டது. மூன்றாண்டுக் காலம் முடிந்து விட்டதால் உதவித் தொகை கொடுப்பது நிறுத்தப்பட்டு, சிறப்புப் பணியாளர்கள் திரும்பப் பெறப்பட்டனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்கெனவே உள்ள முனைப்புத் திட்டப் பணியாளர்களால் முனைப்புத் திட்டப் பணி மேற்கொள்ளப்படுகிறது. தஞ்சாவூர் வட ஆர்க்காடு, கன்னியாகுமரி மாவட்டங்களில் 3,025 எக்கருக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, 1966–67-ல் மூன்று பிரிவுகள் தொடங்கப்பட்டன. அதே சமயத்தில் முனைப்புத் திட்டங்களால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் ஆராயப்பட்டு வருகிறது. 1967–68-ல் மேலும் ஒரு நிலையம் மன்னார்குடியில் தொடங்கப்பட்டுள்ளது.

**(iii) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் தென்னை வளர்ப்பு.**—இந்தப் பகுதியில் 500 குடும்பங்களைக் குடியேற்றி, குடும்பம் ஒன்றுக்கு ஐந்து எக்கர் நிலத்தை ஒதுக்கி அவர்களுக்கு நீண்டகாலக் கடன் வழங்குவதன் மூலம் ஒவ்வொரு குடும்பமும் குறைந்த அளவு மூன்று எக்கர் நிலத்திலாவது தென்னை வளர்ப்பு வேலைகளை மேற்கொள்ள இத் திட்டம் வகை செய்கிறது. இதனுடன் நீண்டகாலக் கடன் வழங்குவது மூலம் 7,500 எக்கர் பட்டா நிலங்களில் தென்னை பயிரிடப்படும். மூன்றாவது திட்டக் காலத்தில் 6,218 எக்கரில் தென்னை பயிரிடப்படும்.

இத் திட்டத்தின் கீழ், கடன் பெறுபவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஆறு தென்னம்பிள்ளை வளர்ப்பிடங்கள் செயல்பட்டு வந்தன. வேளாண்மைத் துறைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட எப்பகுதியும் ஒதுக்கப்படாததால் 1966–67-லும், 1967–68-ல் இது வரையிலும் புதிய குடும்பங்கள் எவையும் குடியேற்றப்படவில்லை. எனினும் 1967–68-ன் இறுதிக்குள் 50 குடும்பங்கள் குடியேற்றப்பட்டு அவர்கள் நிலத்தின் உரிமையைப் பெற்றவுடன் 150 எக்கரில் தென்னை பயிரிடப்படும். பட்டாதாரர்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் புதிதாக 1,700 எக்கரில் தென்னை பயிரிடப்படும். ஆண்டிற்கு 1·80 லட்சம் தென்னம்பிள்ளைகள் வழங்குவதென்று குறிக்கோள் அளவு முடிவு செய்யப்பட்டுள்ளது. 1968–69-ல் மேலும் 100 குடும்பங்கள் குடியேற்றப்பட்டு, 1,200 எக்கர் பட்டா நிலங்களில் தென்னை பயிரிடப்படும்.

இலங்கையிலிருந்து திரும்பி வரும் அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் கூடுதலாக 100 குடும்பங்களைக் குடியேற்றுவதற்கு 1967–68-ல் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. இது மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டமாகும். 1967–68-ல் கிழக்கு இராமநாதபுரத்தின் தென்னை வளர்ப்புத் திட்டப் பகுதியில், இலங்கையில் இருந்து திரும்பிவரும் அகதிகளின் 100 குடும்பங்களைக் குடியேற்றி, தென்னை பயிரிடுவதற்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஐந்து ஏக்கர் நிலம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டது. இது, இராமநாதபுரம் திட்டத்தின்கீழ் நிலமில்லாத ஏழைகளின் 100 குடும்பங்களைக் குடியேற்றுவதற்குக் கூடுதலாகும். மறு வாழ்வு அளிக்கும் திட்டத்தின்கீழ் இந்த வேலைத் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளித்தது. இது வரையில் அகதிகள் எவருக்கும் நிலம் ஒதுக்கப்பட்டு அவர்கள் குடியேற்றப்படவில்லை. இத்திட்டத்தின் கீழ் 1967–68-ல் செலவு எதுவும் செய்யப்படுமென்று தோன்றவில்லை. நிலம் ஒதுக்கப்பட்டால், 1968–69-ல் 100 அகதிகள் குடும்பங்களைக் குடியேற்றலாம்.

**(iv) தென்னங்கன்றுகளின் நாற்றிடும் இடங்களை நிறுவுதல்.**—தற்போதுள்ள வளர்ப்பிடங்களின் உறபத்தித் திறனை அதிகரிப்பதன் மூலமும், புதிய வளர்ப்பிடங்களைத் தொடங்குவதன் மூலமும், தென்னம்பிள்ளை உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள வளர்ப்பிடங்களின் உற்பத்தித் திறன், ஆறு லட்சம் தென்னம்பிள்ளைகளை உற்பத்தி செய்யும்படியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 1967–68-ல் தருமபுரியில் புதிய வளர்ப்பிடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1967–68-ல் 6·00 லட்சம் தென்னம்பிள்ளைகளை வழங்க வேண்டும் என்று திட்டமிட்டதில் 31—12—1967 வரையில் 3·79 லட்சம் தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டு விட்டன. 31—3—1968-க்கு முன்னர் திட்டம் நிறைவெய்திவிடும். 1968–69-லும் 6·00 லட்சம் தென்னம்பிள்ளைகள் வழங்கப்படும்.

**(v) ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்களை நடத்துதல்.**—தென்னை மரங்களை அழிக்கும் ஒரு வகைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் குடியாத்தம், கோயம்புத்தூர், நாகர்கோவில், உடங்குடி (திருநெல்வேலி மாவட்டம்), தஞ்சாவூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் இரண்டு லட்சம் மரங்கள் பயனடையும் வகையில் இந்த ஒட்டுண்ணி குடியானவர்களது தோப்புகளில் விடப்படுகின்றன. அதிகரித்துவரும் கோரிக்கைக்கேற்ப 1967–68-ல் காஞ்சீபுரம், சேலம், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உச்சிபுள்ளி ஆகிய இடங்களில் கூடுதலாக மூன்று நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. நான்காவது திட்டத்தின் எஞ்சிய காலத்தில் இந்த எட்டு நிலையங்கள் அனைத்தும் தொடர்ந்து செயல்படும்.

## தோட்டக்கலை.

**பழ உற்பத்தியைப் பெருக்குதல்.**—திராட்சை நீங்கலாக ஏனைய பழங்களுக்கு, ஒரு ஏக்கருக்கு ரூ. 300 வீதம், நீண்ட கால உதவி அளிக்கப்படுகிறது. இது ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 என்ற பேரளவுக்கு உட்பட்டது. திராட்சைத் தோட்டங்களைப் பொறுத்த வரையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 வீதமும் ஒவ்வொருவருக்கும் ரூ. 6,000 என்ற பேரளவுக்குட்பட்டும் கடன் வழங்கப்படுகிறது. நான்காவது திட்டத்தில் நீண்டகாலக்கடன் வழங்குவதன் மூலம் 15,000 ஏக்கரில் பழத்தோட்டங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1966–67-ல் 1,474 ஏக்கரில் பழத்தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. 31—12—1967 வரையில் 1,098 ஏக்கரில் பழத்தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் இறுதிக்குள் 2,000 ஏக்கரில் பழத்தோட்டங்கள் வளர்க்கப்படும். 1968–69-ல் 2,000 ஏக்கரில் பழத்தோட்டங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



**மாதிரிப் பழத் தோட்டங்கள்.**—தற்போது, மாதிரிப் பழத் தோட்டங்கள் சிறு செடிகள் வளர்ப்பிடங்கள், திம்மபுரம், பெரியகுளம், குன்னூர் குற்றாலம், கொடைக்கானல், ஆத்தூர், பூவணி, கூடப்பட்டு, மருங்குளம், ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. நான்காவது திட்டக் காலத்தில் தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒன்றாக நான்கு பழத்தோட்டங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பழத்தோட்டம் இருக்க முடியும். 1967–68-ல் சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒன்றாக இரண்டு பழத் தோட்டங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மனைகள் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டன. இந்த ஆண்டின் இறுதிக்குள் அவை இறுதி செய்யப்பட்டுவிடும். இவை பழத் தோட்டங்கள் வளர்ப்பிற்கு மாதிரியாகவும், சிறு செடிகளையும், ஒட்டுச் செடிகளையும் வழங்குவதற்கு அடிப்படையாகவும் இருக்கும்.

**வாழை பயிரிடுவதற்கான முனைப்புத் திட்டம்.**—மூன்றாவது திட்டத்தின் இறுதியில் வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் முனைப்புத்திட்டத்தின் கீழ் 7206 ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டது. நான்காவது திட்டத்தில் மேலும் 12,000 ஏக்கரில் பயிரிடுவதற்காக மூன்று நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1967–68-ல் தற்போதுள்ள பகுதிகளில் தொடர்ந்து வாழை பயிரிடப்பட்டது. 1968–69-ல் வட ஆர்க்காட்டில் 500 ஏக்கர் பரப்பளவிலும், செங்கற்பட்டில் 500 ஏக்கரிலும், திருச்சி மாவட்டத்தில் 2,000 ஏக்கரிலும், ஆக 3,000 ஏக்கருக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

**பாக்கு.**—நாற்றுப்பண்ணைகளைத் துறையினர் வளர்த்து, நல்ல தரமான நாற்றுகளை வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர், கல்லாறு, மதுரை மாவட்டத்தில் பெரியகுளம், கன்னியாகுமரி மாவட்டத்தில் குமரிமுனை, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த குற்றாலம் ஆகிய இடங்களில் நாற்றுப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன.

1966–67-ல் 1·50 லட்சம் நாற்றுகள் வழங்கப்பட்டன. 1967–68-ல், 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் 53,000 நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. நோய் வருமுன் தடுப்பதற்கும், உரமிடுவதற்கும் மும்முரம் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. உதவித் தொகை ரூ. 100 என்ற பேரளவுக்கு உட்பட்டு தெளிப்பான்கள் பாதி விலைக்கு வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டிலும் 20 தெளிப்பான்களாக 100 தெளிப்பான்களை வழங்க வேண்டும் என்பது நான்காவது திட்டத்தின் குறிக்கோள் அளவாகும். 1966–67-ல் 20 தெளிப்பான்கள் வழங்கப்பட்டன. அதே அளவு 1967–68-லும் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1968–69-லும் 20 தெளிப்பான்கள் வழங்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

**புகையிலை.**—பிரசாரத்தின் மூலமும், உதவித் தொகையுடன் கூடிய செய்முறைவிளக்க ஏற்பாடுகள் மூலமும் சிறந்த தரமான விதைகளை வழங்கியும் தாம்பூலப் புகையிலை, புகைக்கும் புகையிலை ஆகியவற்றின் விளைச்சலையும் தரத்தையும் பெருக்குவது இத் திட்டத்தின் நோக்கமாகும். ஒரு தடவை செய்முறை விளக்கம் நிகழ்த்த ரூ. 50 உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. முனைப்புப் பகுதியான 6,000 ஏக்கர் பகுதி முழுவதிலும் 1967–68-ல் புகையிலை பயிரிடப்பட்டுள்ளது. 1968–69-ல் இது தொடர்ந்து செயல்படுத்தப்படும். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஹோசூர் பகுதியில் பயிரிடப்பட்ட வர்ஜீனியா புகையிலை (புகையூட்டிப் பாடம் செய்வது) பெங்களூரில் உள்ள எம்.டி.சி. தொழிற்சாலையில் பாடம் செய்யப்பட்டது. இது நல்ல தரமுள்ளதெனத் தெரியவந்தது. இதன் காரணமாக, துறையும், இதைப் பயிரிடுவோரும் இது பயிரிடப்படும் பரப்பளவை அதி

கரிக்க ஊக்கம் ஏற்பட்டது. 1967-68-ன் விளைபொருள், வர்ஜீனியா புகையிலை (F.C.V.) உற்பத்திப் பணியில் பயிற்சிப் பெற்ற துறைப்பணியாளர்களின் தொழில் நுட்ப மேற்பார்வையின் கீழ் பாடம் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை கிடைத்துள்ள முடிவுகள் உறுதியளிப்பதாக உள்ளன. தமிழ்நாடு, குஜராத், ஆந்திரா ஆகிய மாவட்டங்களில் வர்ஜீனியா புகையிலை பயிரிடப்படும் பரப்பளவை அதிகரிப்பதற்கான தேவையை இந்திய அரசாங்கமும் வற்புறுத்தியுள்ளது. திட்டமிடப்பட்ட 200 எக்கர் பரப்பில் 1967–68-ல் இதுவரையில் 161 எக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. 1968–69-ல் 300 எக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காவது திட்டத்தின் முடிவில் புகையிலை பயிரிடும் பரப்பை 500 எக்கராக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தை எய்துவதற்காக, பாசன வசதிகளுடன் கூடிய, ஒரு எக்கர் பரப்புள்ள தகுந்த நிலம் ஒன்றில் கூடுதலாக நாற்றுகளை வளர்த்து முனைந்து பயிரிடுவோருக்கு இலவசமாக நாற்றுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் துறையின் அதிகாரிகள் இருவர், பாடம் செய்தல் முதலியவற்றில் 6 மாதங்கள் பயிற்சி பெற அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் ஒருவரை 1968–69-ல் அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

வர்ஜீனியா (F.C.V.) புகையிலை உற்பத்தி செய்வோர் அதில் ஊக்கம் காட்டுவதற்காக, கீழ்க்காணும் இனங்களின் கீழ் உள்ள உதவித் தொகைகள் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன:

1. உரங்களுக்கான உதவித் தொகை (விலையில் 25 சத விகிதம்).

2. பாடம் செய்வதற்காக, உற்பத்தியாளர்களுக்கு உதவித்தொகை (ஒரு எக்கருக்கு 50 ரூபாய்).

3. பதனிடும் நிலையம் கட்டுவதற்கான உதவித் தொகை (நிலையம் ஒன்றுக்கு ரூ. 1,000).

4. பயிர்ப் பாதுகாப்பு ரசாயனப் பொருள்கள் வாங்குவதற்காக 35 சதவிகிதம் ஒருபடித்தான உதவித் தொகை.

போதிய நிதிவசதியற்றவரும், பதனிடும் நிலையம் கட்டும் அதிகச் செலவை மேற்கொள்ள முடியாதவருமாகிய வர்ஜீனியா புகையிலை பயிரிடுவோருக்கு பதனிடும் நிலையம் ஒன்றிற்கு ரூ. 4,000 கடனாகக் கொடுக்கப்படும். இந்தத் தொகையானது 5 ஆண்டுகளில் 6 சதவிகிதம் வட்டியுடன் திருப்பி வசூலிக்கப்படும்.

**கோக்கோ உட்பட தோட்டச் சிறு பயிர்கள்.**—மூன்றுவது திட்டத்தின்கீழ் மதுரை (மங்கள கொம்பு), திருநெல்வேலி (பாபநாசம்), கன்னியாகுமரி (பேச்சிப்பாறை) ஆகிய மாவட்டங்களில், ஒவ்வொன்றிலும் 100 எக்கர் பரப்பளவில், கோக்கோ பயிரிடுவதற்கான முன்னோடித் திட்டம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. கோக்கோ தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1965–66-ம் ஆண்டில் இந்த நிலங்களுக்கருகில் தனியார் நிலங்களில் ஏறக்குறைய ஐந்து எக்கர் பரப்பளவில் கோக்கோ பயிரிடப்பட்டது. 1966–67-ம் ஆண்டில் மூன்று நிலங்களும் தொடர்ந்து பணியாற்றின. 23 எக்கர் நிலப் பரப்பில் கோக்கோ பயிரிடுவதற்காக எக்கர் ஒன்றிற்கு 300 ரூபாய் வீதம் நீண்டகாலக் கடன் வழங்கப்பட்டது. நான்காவது திட்ட காலத்தில் நீண்டகாலக் கடன் வழங்கி 200 எக்கர் பரப்பளவில் கோக்கோ பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிராம்பு, சாதிக்காய், ஏலக்காய் போன்ற தோட்டச் சிறு பயிர்களையும் மஞ்சள், மிளகாய் போன்ற சுவையூட்டும் பொருள்களையும் பயிராக்கும் பணி மூன்றும் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை. நான்காவது திட்டக்காலத்தில் மும்முரமாகப் பயிரிடும் நடவடிக்கைகள் மூலமும், பயிரிடும் பரப்பினைக் கூடுமான இடங்களில் விரிவுபடுத்துவது வாயிலாகவும் இப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கக் கீழே காட்டியுள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்படும்:—



**காய்கறிகள்.**—பெரிய நகரங்களைச் சுற்றி 30 மைல் பரப்பளவில் உள்ள பகுதிகளில் காய்கறி உற்பத்தியை மும்முரப்படுத்தும் திட்டமும், சமவெளிகளிலும், குன்றுகளிலும் காய்கறி உற்பத்தியை மும்முரப்படுத்தும் திட்டமும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் பூச்சி கொல்லி மருந்து, காய்கறி விதைகள், நாற்றுகள் ஆகியவை பாதி விலைக்கு விற்கப்படும். இத்துடன், காய்கறி உற்பத்தியாளர்களுக்கு உதவும்படியாக, காய்கறிப் பருவக் காலத்தில் குறுகிய காலக்கடன் வழங்கப்படுகிறது. சமவெளியில் பயிரிடப்படும் காய்கறிகள் குறித்து எக்கர் ஒன்றுக்கு ரூ. 120, குன்றுகளில் பயிரிடப்படும் காய்கறிகள் குறித்து எக்கர் ஒன்றுக்கு ரூ. 200-ம் குறுகிய காலக் கடனாக வழங்கப்படுகிறது. பயிர்ப்பாதுகாப்பு இரசாயனப் பொருள்கள் குறித்து 1967-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ம் தேதி முதல் 35 சதவிகிதம் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. சென்னை மாநகரத்திலும், அதைச் சுற்றியும் காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், அரசாங்கப் புறம்போக்குகளையும், பயிரிடக்கூடிய ஏனைய தரிசு நிலங்களையும் பயன்படுத்தி காய்கறிகளை உற்பத்தி செய்து அதன் மூலம் காய்கறிகளின் விலையைக் குறைப்பதற்கும், "பெருமளவில் காய்கறிகள் பயிரிடும் வேலைத் திட்டம்" என்று திட்டமிடப்பட்டு அரசாங்கத்தில் ஆலோசனையில் உள்ளது. இத் திட்டத்தின் கீழ் உடனடியாக 150 எக்கரில் காய்கறிகள் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. பின்னர் பெரும் பகுதியில் பயிரிடப்படும்.

**உருளைக் கிழங்கு.**—நோய் பற்றாத உருளைக் கிழங்கு விதைகளைப் பெருக்குவதற்கான திட்டமும், கொடைக்கானலில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக உள்ள திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன. உருளைக் கிழங்கு விதைகளை உற்பத்தி செய்தல், பயிரிடுதல், நோய்களை அழித்தல் ஆகிய சிக்கல்கள், இந்திய ஜெர்மனி, நீலகிரி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கவனிக்கப்படுவதால் வேலை நடைபெற்று வருகிறது. 1967–68-ம் ஆண்டில் ஹோசூர் பகுதியில் காட்டு வளத்துறை அளித்துள்ள 137 எக்கர் பரப்பில் உருளைக் கிழங்கு பயிரிடப்பட்டது. இதில் உள்ள இடர்பாடுகள் காரணமாக உருளைக் கிழங்கு பயிரிடுவோருக்கு நல்ல தரமான விதைகள் குறிப்பிட்ட விலையில் 90 சதவிகித விலையில் அளிக்கப்பட்டன. பயிர்ப் பாதுகாப்பு இரசாயனப் பொருள்கள் பாதி விலையில் வழங்கப்பட்டன. அறுவடைக் காலத்தில் திரும்பப்பெறும் வகையில் ரூ. 400 குறுகிய காலக் கடனாக அளிக்கப்பட்டது. ஹோசூர் வட்டத்தில் உருளைக் கிழங்கு பயிரிடுவதை மெதுவாக விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மரவள்ளிக் கிழங்கு.**—துணை உணவுப் பொருள்களான மரவள்ளிக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான தேவை உணரப்பட்டுள்ளது. சேலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிராகிறது. முக்கியமாக மாவுபொருள் தயாரிப்பதற்காக, சேலம் மாவட்டத்தில் ஏறத்தாழ 55,000 எக்கர் பரப்பினில் மரவள்ளிக் கிழங்கு விளைவிக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறக்குறைய 49,000 எக்கர் பரப்பினில் மரவள்ளிக் கிழங்கு பயிராகிறது. அங்கு அது முக்கிய உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், 1967–68-ம் ஆண்டிலிருந்து இரண்டாண்டுகளுக்கு சுமார் 4,000 எக்கர் பரப்பளவில் முனைப்பு அல்லது மேம்பட்ட முறைகளை மேற்கொண்டு, மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கண் கிள்ளியூர் வட்டாரத்தில், 500 எக்கரில் 1967–68-ல் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பின்னர் மற்றப் பகுதிகளிலும் முனைப்புத் திட்டத்தை நிறைவேற்ற செய்முறை விளக்கப் பண்ணைகள் நிறுவப்படும். 1968–69-ல் இத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும். 2,000 எக்கரில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படும்.

**சர்க்கரை வள்ளிக் கிழங்கு.**—இம் மாநிலம் முழுவதிலும் பரவலாக 8,387 எக்கர் பரப்பளவில் சர்க்கரை வள்ளிக் கிழங்கு பயிராக்கப்படுகிறது. துணை உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கையாக

இப் பயிர் 10,000 எக்கர் பரப்பளவில் 70,000 டன் விளைவிக்கப்படும். பயிரிடும் பரப்பளவில் தரமான முறைகளை மேற்கொள்வதன் மூலமாகவும் பரப்பளவை அதிகரிக்கப்படுவது மூலமாகவும் இவ்வாறு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. பயிரிடுவோருக்கு, எக்கர் ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் கடன் வசதி அளிக்கப்படும். இக் கடன் தொகை ரொக்கமாகவோ அல்லது பொருளாகவோ கொடுக்கப்படலாம். கடன் தொகை ரூ. 1,000 என்ற பேரளவுக்கு உட்பட்டு அளிக்கப்படும். உற்பத்தி பெருக்கு நோக்கத்துடன் இக் கடன் வழங்கப்படுகிறது. பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் அடக்க விலையில் 35 சதவிகிதத்தில் அளிக்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் 500 எக்கருக்கு ஒன்று என்ற அளவில் ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 செலவில் 20 செய்முறை விளக்கப் பண்ணைகள் நிறுவப்படும். நிலம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் எருக் கலவை, உரம், பயிர் பாதுகாப்பு, இரசாயனப் பொருள் ஆகியவை இலவசமாக வழங்கப்படும்.

1967–68-ல் ஒரு திட்டம் தொடங்கப்பட்டு, 990 எக்கரில் இந்தப் பயிரைப் புதிதாகப் பயிரிடுவதற்காக ரூ. 1·49 லட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள பகுதிகளில் பயிரிடுவதை மும்முரப்படுத்துவதற்குக் கூடுதலாக, 1968–69-ல் 2,000 எக்கர் பரப்பளவில் சர்க்கரை வள்ளிக்கிழங்கு பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

* **திரு. தோ. மு. நல்லசாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய 16-வது மானியக் கோரிக்கை மீதும் 39-வது மானியக் கோரிக்கை மீதும் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் முன் வருகிறேன். "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்பது பழமொழி. அதை நாம் எல்லோரும் உணர்கிறோம். சொல்கிறோம். ஆனால் அதனுடைய முக்கியத்துவத்தைப் பரிபூரணமாகப் புரிந்துகொண்டு அதற்குத் தேவையான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறோமா? மற்றத் துறைகளுக்குச் செலுத்தக்கூடிய கவனம் இந்தத் துறைக்கும் செலுத்தப்படுகிறதா என்று பார்க்கும்பொழுது இல்லை என்றுதான் என் போன்றவர்கள் சொல்ல முடிகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் மானியம் கோரப்படும்பொழுது முன்பு நம்முடைய அரசாங்கங்கள், அரசாங்கங்கள் என்று ஏன் சொல்கிறேன் என்றால், இன்றைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய அரசும், இதற்கு முன்பு இருந்த அரசும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள்பற்றி ஓரளவுக்கு கவனிக்கக்கூடியவர்களாய் நாம் இருக்கிறோம்.

ஒரு துறையானது செயல்படும்போது அதனுடைய விளைவுகளை வைத்துத்தான் கணக்கிட வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த அடிப்படையில் பார்க்கும்போது 1965-66-ல் அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டாக இருக்கும் என்று கருதுகிறேன். அடைய வேண்டிய இலக்கை அடைய முடியவில்லை. அறுபது லட்சம் டன் உற்பத்தியாகும் என்று எதிர்பார்த்த இடத்தில் 52 லட்சம் டன்தான் உற்பத்தியாயிற்று. எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவான உற்பத்திதான் கிடைத்தது. அந்த இலட்சிய எல்லையை அடைய முடியாததற்குக் காரணம் ஏற்கனவே இருந்தவர்களின் கவனக் குறைவோ அக்கறையின்மையோ காரணம் என்ற பொருள்படும்படி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப்பிறகு இன்று 1967–68-ம் ஆண்டு முடிந்து 1968–69-க்கு மானியக் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற நேரத்தில், உற்பத்தி இலக்கைவிடக் குறைந்திருப்பதற்குக் காரணமாக முந்திய அரசாங்கம் சொன்ன அதே காரணத்தைத்தான் கூறியிருக்கிறார்கள். எதிர்பார்த்தது $64\frac{1}{2}$ லட்சம் டன்; ஆனால் அடைந்துவிட்டோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்வது 60 லட்சம் டன்தான், $4\frac{1}{2}$ லட்சம் டன் குறைவாகக் கிடைத்திருக்கிறது. அதற்குக் காரணமாக மழை குறைவு, பருவ மழை தவறி விட்டது என்ற பழைய காரணங்களையேதான் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். 1965–66-ல் இந்தத் துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதி 8,72,39,200 ஆகும். 1967–68-ன் ஒதுக்கிய தொகை 14 கோடி ரூபாய். எட்டேமுக்கால் கோடி ரூபாய் ~~செலவு~~ செய்த இடத்தில் 14 கோடி ரூபாய் செலவு செய்து, அதாவது மேலும் கிட்டத்தட்ட





5 கோடி ரூபாய் செலவு செய்த பிறகு 7 லட்சம் டன் உணவு தானியத்தை அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறார்கள். இதிலே அவர்களுக்கே திருப்தி இல்லை. ஆகவேதான் இயற்கை கோளாறு காரணமாக இலக்கை அடைய முடியவில்லை என்ற காரணத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

"விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி"

என்று வள்ளுவர் கூறியிருப்பது போல், யார் ஆட்சி செய்தாலும் இந்தத் துறைக்கு அடிப்படை மழை. மழை மிகவும் அவசியம் என்பதை உணருகிறோம்.

இந்த ஆண்டு நிதி ஒதுக்கத்தைப் பார்க்கும்போது 16-வது மானியக் கோரிக்கையிலே சென்ற ஆண்டை விட சுமார் 44 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை வைத்து பெரிய தொகையை அதிகப்படியாக ஒதுக்கியிருப்பதாகச் சொல்ல முடியாது. 39–வது மானியக் கோரிக்கையிலே, மூலதனச் செலவு என்ற அடிப்படையிலே சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. உணவின் தேவையைப் பற்றிச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டிய அவசியம் இல்லை. சட்டசபைக் கூட்டம் ஒன்றரை மணிக்கு மேல் 15, 20 நிமிடங்கள் கூடுதலாக நடக்கின்றதென்றால் உடனே சாப்பாட்டைப் பற்றி ஞாபகம் வருகிறது. ஜனத்தொகை பெருகி வருகிற நிலையில், ஏழை மக்களுக்கு நல்ல முறையில் உணவு தானியங்களை வழங்க வேண்டுமென்ற நிலையில், உற்பத்தி பெருக வேண்டுமென்று திட்டமிடுகிற நிலையில், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் (அக்ரோ இண்டஸ்ட்ரிஸ்) பெருக வேண்டுமென்ற நிலையில் இந்தத் துறைக்கு அதிகமாக நிதி ஒதுக்க வேண்டியிருக்க அதைக் குறைத்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில் சென்ற ஆண்டு தமிழ் நாடு பூராவிலும் விவசாயக் கருத்தரங்குகளை நடத்தி மூன்று அம்சங்களைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த மூன்று அம்சங்களில் ஒன்று மிகுந்த பயன் தரக்கூடிய தானிய வகைகளைப் பயிரிடுவது. இரண்டாவது ஒரு போக ~~நிலங்களை எல்லாம்~~ இரு போகங்களாக மாற்றுவது. மூன்றாவது சிறு பாசன வசதிகளைப் பெருக்கக் கூடிய திட்டம். இந்த மூன்று அம்சங்களிலும் கவனம் செலுத்தி விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்ற ஆவலை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மிகுந்த பயன்தரக்கூடிய திட்டம் என்ற அடிப்படையில் அரசாங்கமே முன் வந்து விதைப் பண்ணைகளை நடத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். முன்பு இருந்த அரசாங்க காலத்திலும் சரி, இப்போதும் சரி விதைப் பண்ணைகள் வருந்தத்தக்க சூழ்நிலையில்தான் நடந்து வருகின்றன. 221 விதைப் பண்ணைகள் இருப்பதை 230 ஆக உயர்த்த வேண்டுமென்ற ஆவலைத் தெரிவித்திருக்கிறார்கள். 221 விதைப் பண்ணைகள் உள்ள விஸ்தீரணம் 5,561 எக்கர். இதிலே விவசாயம் செய்து அடைந்திருக்கக்கூடிய லாபம் என்னவென்று பார்த்தால் ரூ. 1,26,301 தான். இந்த அடிப்படையில் விவசாயிகள் விவசாயம் செய்வதாக இருந்தால் அவர்கள் விவசாயத்தை விட்டு விட்டு வேறு தொழிலை நாடி ஓடிவிட வேண்டியதுதான். இவ்வளவு குறைந்த லாபத்தில் பண்ணைகள் இயங்குவதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி ஆராய வேண்டும். ஆராய்ச்சிக்காகச் செலவிடப்படுகிற தொகையை இதிலே குழப்பிக் கொள்ளவில்லை. சில ~~பண்ணைகள் நஷ்~~டத்தில் வேலை செய்கின்றன, சில பண்ணைகள்தான் லாபத்தில்வேலை செய்கின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மிகு பயன் தரக்கூடிய தானிய ரக விதைப் பண்ணைகளில் கவனம் செலுத்தி அவை லாபகரமாக இயங்க வேண்டுமென்பதிலே அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு போகமாக விவசாயம் பண்ணுவதிலே இரண்டு வகை உண்டு ஒன்று. நீண்டகாலப் பயிர்களைக் குறுகிய காலத்தில் பயிரிட்டு விளையக் கூடிய அமைப்பை உண்டாக்கி இரண்டு போகத்திற்குப் பதிலாக மூன்று போகம் பயிரிடுவது, மற்றொன்று ஒரு போகம் பயிரிடுகின்ற இடத்தில் இரண்டு போகம் பயிரிடுவது என்பதிலே கவனம் செலுத்துவது. ஏ. டி. டி. 27 என்ற உயர்ரக நெல்லை ஜூன், ஜூலை மாதத்தில பயிரிட்டு அறுவடை செய்து விட்டு அதற்கு அடுத்தாற்போல் சி. ஓ. 25 என்ற நீண்ட காலப் பயிரைப் பயிர் செய்வதற்குப் பதிலாக, குறுகிய காலப் பயிரான சி. ஓ. 32 அல்லது வேறு ரக நெல்லைப் பயிர் செய்து இரண்டு போகங்களாக மாற்ற வேண்டுமென்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி நல்ல முயற்சிதான்.

ஒரு போகம் விளையக் கூடிய நிலங்களை கேணிகள் வெட்டி க்ரவுண்ட் வாட்டரை எடுத்து இன்னொரு போகம் விளைவிக்கக் கூடிய திட்டமும் உண்டு. இந்த இரண்டிலும் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அறிக்கையில் இன்னொரு இடத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. இருபோக சாகுபடியில் மேட்டூர் அணை பிப்ரவரி மாதத்தில் மூடப்பட்ட பிறகும் வயலில் நெல் பயிர் விளையாமல் இருக்கும் நிலை இருக்கிறது. அது ஒரு புதிய சிக்கல் என்று சொல்லப்பட்டிருக்கிறது இரண்டு போக சாகுபடி என்பது சாத்தியப்படாததல்ல. பூமிக்கடியில் உள்ள தண்ணீரை எடுத்து இரு போக சாகுபடியை அதிக அளவில் செய்ய முடியும். அதைத் தீவிரப்படுத்த வேண்டும். இது இதுவரையில் தனியார் முயற்சியில் விடப்பட்டு வந்திருக்கின்றது. இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர் ஒரு கேணி வைத்து அல்லது பில்டர் பாயின்ட் போட்டு இன்னொரு போகம் பயிர் செய்யலாம். இன்று நிலச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு துண்டு துண்டு நிலங்கள் அதுவும் சொந்தக்காரர்களிடம் இல்லாமல் குத்தகைக்காரர்களிடம் இருப்பதினால் குத்தகைக்காரர்கள் உற்சாகமற்ற நிலையில் கேணிகள் அல்லது பில்டர் பாயின்ட்ஸ் போட முடியாததொரு சூழ்நிலை இருந்து வருகிறது. இதனால் உற்பத்தி குறைவு ஏற்படுகிறது. அதன் காரணமாக இரு போக சாகுபடி செய்ய முடியாததொரு சூழ்நிலை ஏற்படுகிறது.

அடுத்தபடியாக, மாவட்ட அடிப்படையில் மும்முர வேளாண்மை திட்டம் என்ற முயற்சி நல்லதொரு முயற்சிதான். கடந்த காலத்தில் கூட அது அமுலாக்கப்பட்டது. அதிலுள்ள சிக்கல்கள் என்னவென்று பரிபூர்ணமாக புரிந்து கொண்டு அதை நல்ல விதத்தில் நீங்கள் என்ன எண்ணுகிறீர்களோ அதை நடைமுறைக்குக் கொண்டு வரும் விதத்தில் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். மும்முர வேளாண்மை வட்டாரத் திட்டம் என்பது நல்லதொரு திட்டம்தான். 133 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும் 83 வட்டாரங்களில் வேளாண்மை வளர்ச்சி அதிகாரி ஒருவரும், ஐந்து கிராம மட்ட ஊழியர்களும் அமைப்பது என்று யோசனை செய்திருக்கிறார்கள். ப்ளாக்குகளில் அதிகப்படியான ஆள்கள் இருக்கிறார்கள் என்றும், செய்யக்கூடிய செலவிற்குத் தக்க வகையில் வேலைகள் நடைபெறவில்லை என்றும் சிக்கன அடிப்படையில் ஆள் குறைப்பு செய்வது என்ற திட்டத்தில் இறங்கினோம். இப்போது அவசியத்தை உணர்ந்து ஆள்களை அதிகப்படுத்தும் சூழ்நிலைக்கு வந்திருக்கிறார்கள். இந்த அரசானாலும் சரி அல்லது முந்திய அரசாகட்டும் தீவிரமாக சில காரியங்களை செய்ய முற்படும்போது அதற்கு வேண்டிய பணியாளர்களை அந்த அந்த மட்டத்தில் வைத்து காரியங்களை செய்யவேண்டும். ஆள்கள் அதிகமாக இருக்கிறார்கள் அந்த அளவிற்கு வேலைகள் நடைபெறவில்லை என்று அன்று எதிர் கட்சியாக இருந்தபோது குற்றச் சாட்டு சாட்டினார்கள். இன்று மீண்டும் அதே நிலைக்கு வந்திருக்கின்றார்கள். இந்தத் திட்டம் நல்லதொரு திட்டந்தான். இதை அமுலாக்க முயற்சிக்கும்போது 1967–68-ல் 2·84 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள். இந்த பட்ஜெட்டில், 68–69-ல் 2·87 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இதை தீவிரமாக அமுலாக்கவேண்டுமென்று விரும்பினால் இன்னும் அதிகப்படியான தொகை ஒதுக்கப்பட



வேண்டும். முன்மாதிரியாக மதுரை, திருநெல்வேலி, செங்கற்பட்டு,
கோவை மாவட்டங்களில் மட்டும் இதைச் செய்ய முற்பட்டிருக்கிறார்கள்.
மற்ற மாவட்டங்களிலும் இதைச் செயல்படுத்த வேண்டும். குறிப்பாக
விவசாய அதிகாரிகள்தான் விவசாய மக்களிடையே கூச்சம் இல்லாமல்
பழகுபவர்கள், விவசாயிகளும் அதிகமாக ஏற்று உட்கார்ந்து பேசிப்
பழகுவது இந்த விவசாய அதிகாரிகளுடன்தான். ஆகவே விவசாயி
அதிகாரிகளை எவ்வளவு அதிகப்படுத்தினாலும் நான் அதை வரவேற்
கிறேன். அந்தந்த மட்டங்களில் அவர்கள் எண்ணிக்கையை அதிகரித்து
அவர்கள் விவசாயிகளுடன் கலந்து பேசி உற்பத்தி பெருக்குவதற்கு
காரணமாக இருக்கவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்று கூறிக்
கொள்ளவிரும்புகிறேன். கரும்பு வளர்ப்பு பற்றி, கரும்பு பயிர்
செய்வதில் தமிழகத்தில் அதிகக் கவனம் செலுத்தப்படவேண்டும் என்
பது என் அவா. தென் மாநிலங்களில் ட்ராப்பிக்கல்களை மேட்டில் உள்ள
பிரதேசங்கள் கரும்பு பயிர் செய்வதற்கு உகந்த இடமாகும். நாம்
அதிகப்படியான சர்க்கரை ஆலைகளை கூட்டுறவு அடிப்படையில் ஆரம்பித்
திருக்கிறோம். தனியார்கள் நடத்தும் சர்க்கரை ஆலைகளும் வெற்றிகர
மாக நடந்து வருகின்றன. ஆனால் 1967–68-ல் நம் அனுபவம் என்ன?
அறவைச் சக்தியளவிற்கு நம் நாட்டில் கரும்பு பயிராக்கப்படவில்லை.
பயிரான கரும்பும் வெல்ல விலை உயர்வினால் வெல்லமாகக் காய்ச்சப்
பட்டு அவை போதுமான அளவிற்கு சர்க்கரை ஆலைகளுக்கு வரவில்லை.
அதோடு, அதிகப்படியான விஸ்தீர்ணத்தில் கரும்பு பயிர் செய்வதால்
நம் உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்ற எண்ணமும் நல்லதல்ல.
சர்க்கரை ஆலை என்று எண்ணும்போது அவற்றினால் நம் மாநிலத்தில்
ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ஜீவிக்கும் நிலைமையையும், அதை வெளி
நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிலையில் நமக்குக் கிடைக்கும் அன்னிய
செலாவாணியையும் மனதில் கொண்டு அதில் இன்னும் அதிகப்படியான
கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கரும்பு அபி
விருத்தி பொறுத்த வரையில் செஸ் நிதி வசூல் செய்கிறோம். டன்
னுக்கு ஐந்து ரூபாய் என்று அந்தத் தொகை பொது நிதியில் சேர்க்கப்பட்டு
வருவதாக அறிகிறேன். அதை தனியாக வைத்து ஒவ்வொரு ஆலைப்
பிரதேசத்திலும் எந்த அளவிற்கு செஸ் நிதி வருகிறதோ அது அந்
தந்தப் பிரதேசங்களில் செலவு செய்யப்படவேண்டும். கரும்பின் இனங்
களை அதிகப்படுத்துவது, ஸாயில் டெஸ்டிங், பாதை அபிவிருத்தி செய்
வது, பயிர் பாதுகாப்பிற்கான மருந்துகள் அளிப்பது, என்டமாலஜி
அபிவிருத்தி செய்வதற்காக இவற்றிற்காக அந்த நிதியை அந்தந்த
ஆலைப் பிரதேசங்களுக்கு என்று கொடுக்கவேண்டும். மரவள்ளிக் கிழங்கு
பற்றி அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு நல்லதொரு எதிர்
காலம் இருக்கிறது. குறிப்பாக சேலம் மாவட்டம், திருச்சியில் ஒருசில
பகுதிகள், கன்னியாகுமரியில் சில பகுதிகள் இவ்விடங்களில் மரவள்ளி
கிழங்கு நல்ல அளவில் பயிராகிறது. அவை பூச்சிகளால் தாக்கப்பட்டு
வியாதிகள் ஏற்பட்டு வருகின்றன. அதைத் தவிர்க்க அரசாங்கம் நல்ல
பாதுகாப்பு முறைகளைச் செய்ய வேண்டும். அதோடு அவை விற்பனை
செய்யப்படும்போது விவசாயிகள் வஞ்சிக்கப்படாமல் இருப்பதற்கும்
அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்து, வேளாண்மைக் கல்வி. இந்த வேளாண்மைக் கல்வி என்பது
நம் நாட்டுக்கு ஏற்ற முறையில், நம் நாட்டு விவசாயத்திற்கு ஏற்ற
தாக அமைய வேண்டும். நான்கு ஆண்டுகள் விவசாயக் கல்லூரியில்
படித்து விட்டு பி. எஸ்ஸி. (அக்ரி.) பட்டம் பெற்றவர் சாதாரணமாக 30, 40
ஏக்கர் பண்ணையை வைத்து நடத்தக் கூடிய அனுபவம் பெற்றவராகக்
கூட இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
ரிசர்ச் வொர்க் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஏடிடி. 27. நெல்
CSH1 கோதுமை ஹைப்ரிட் 1 கம்பு என்றெல்லாம் ஒட்டு விதைத் தானி
யங்களைப் பற்றிப் பேசுகிறோம். இன்று ஏடிடி. 27-யைக் கண்டு பிடித்தது
முந்திய அரசில் இருந்த அமைச்சர்களா அல்லது இப்போதுள்ள அமைச்
சர்களா என்பதல்ல கேள்வி, எந்த அமைச்சரும், எந்த அரசியல்வாதி
யும் அவற்றை கண்டு பிடிக்கவில்லை. இதைக் கண்டு பிடித்த இடம்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள். ரிசர்ச் வொர்க்கில் ஈடுபட்டிருக்

கிறார்களே, அந்த அன்-நோன் வாரியேர்ஸ்தான். அவர்களுக்கு போக வேண்டிய பெருமையைப் பற்றி நாம் இங்கு சண்டை போட்டுக்கொண்டி ருக்கிறோம். ஆகையால் இதற்கு அவர்களுக்கு உரிய இடத்தைக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நாங்கள் கண்டு பிடித்ததாகச்
மு. ப. 11—00 சொல்லவில்லை.

**திரு. தோ. மு. நல்லசாமி :** இது நம் சமாச்சாரம் அல்ல. இவற்றை ஆராய்ச்சி செய்து, விஞ்ஞானம் படித்து, கவனம் செலுத்திக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு கொடுக்க வேண்டிய உத்தி யோகத் தரத்தை கொடுக்கவில்லை என்பது என் கருத்து. அவர்களுக்குத் தக்க உத்தியோக உயர்வும், கெஜட் பதவி போன்ற உத்தியோக கௌரவமும் கொடுக்கப்பட வேண்டும்.

(திரு. வி. எஸ். கோவிந்தராஜன் தலைமை)

இந்த விவசாய ரீசர்ச்சையொட்டிய விவசாய ஆயுதங்கள், டிராக்டர்கள் போன்ற இயந்திரங்கள் ஆகியவைகளை அமுலாக்குவதில்லை. அவைகளை பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும். உலகக் கண்காட்சியிலே பெரிய பெரிய இயந்திரங்களைக் காட்டினார்கள். அவைகளை நம் ஊரில் பயன்படுத்த முடியுமா என்றால் முடியாது. நம் ஊருக்குத் தேவையான இயந்திரங் கள் எவை என்று ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

மண்வளப் பாதுகாப்பு அடிப்படையிலே பார்த்தால் தமிழ்நாட்டில் சில பகுதிகளிலே வாரிகள் விழுந்து பயனற்றதாக இருக்கின்றன. அவைகளைத் தடுத்து 30 ஏக்கர், 40 ஏக்கர் கொண்ட அளவில் மாதிரிப் பண்ணைகளை அமைக்கவேண்டும். இதற்காக அதிகம் செலவானாலும் அதை ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நேரம் குறைவாக இருப்பதனால் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ளுகின்றேன். மார்க்கெட்டிங் பற்றி, விவசாய விலைகளைப்பற்றி நாம் அதிக அக்கறை செலுத்த வேண்டும். இப்பொழுது செலுத்தப்படும் அக்கறை போதாது. கட்டுப்படியாகக்கூடிய அளவில் உரிய விலையை விவசாயிகளுக்குக் கொடுத்தாலொழிய நாம் எதிர்பார்க் கும் விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியாது. (மணியடிக்கப்பட்டது) நேரம் இல்லாத காரணத்தால் இத்துடன் விடை பெற்றுக்கொள்ளு கின்றேன்.

**திரு. எஸ். கணேசன் :** பேரவை மாற்றுத் தலைவரவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களை அவை முன் வைக்க விரும்புகிறேன். நமது அரசு இன்றையத்தினம் உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும், இந்த நாட்டிற்கும் மக்களுக்கும் மிகச் சரளமாக உணவுப் பண்டங்கள் கிடைக்க வேண்டு மென்ற நல்லெண்ணத்திலும் வேளாண்மைத் துறையில் அதிக அளவு அக்கறை செலுத்தியிருப்பது உள்ளபடியே நம் அனைவராலும் பாராட்டப் பட வேண்டிய ஒன்று. ஆனால் இன்றையத் தினம் உணவு உற்பத்தியை எந்த அளவுக்கு வேகமாகப் பெருக்க வேண்டுமென்று நாம் நினைத்தா லும் அதற்கு அவ்வப்போது சில இடையூறுகளும் உண்டாவது இயற்கையாக நடந்துகொண்டு வருகிற சம்பவமாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நிலச்சுவான்தார்களுக்கும், விவசாயிகளுக்கும் ஆண்டாண்டு காலமாக இருக்கின்ற கூலித்தகராறின் காரணமாக அங்கு வேளாண்மையில் ஈடுபட்டவர்கள் பாதிக்கப்படும் நிலையிருக்கிறது. விவ சாயத் தொழிலாளர்களுக்கு மாவட்டவாரியாக அல்லது கோட்டவாரியாக நிரந்தரக் கூலியினை அரசு நிர்ணயித்து அறுவடை, நடவு போன்ற காலங்களில் விவசாயிகளுக்கும், நிலச்சுவான்தார்களுக்கும் தகராறு ஏற்படாவண்ணம் காத்திட நம் அரசு நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.





விவசாயத்துறை இலாக்காவிலே பணிபுரியும் தோழர்கள் அத்தனைபேரும் பயிர் இருக்கும் காலங்களிலே விவசாயிகளுக்குத் துணைநின்று அதற்கான நல்ல யோசனைகளைச் சொல்லிவருவது போல அறுவடை முடிந்த பின்ன ரும் காய்ந்து கிடக்கும் நிலங்களை அவ்வப்போது பார்வையிட்டு அந்த நிலத்தின் தன்மையையும், தரத்தையும், தேவையையும் ஆய்ந்து விவ சாயிகளுக்கு ஆலோசனை கூறும் நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்பொழுதிருக்கும் நிலையில் மேட்டூர் நீர்த்தேக்கத்திலுள்ள தண்ணீரை மட்டும் நம்பி தஞ்சை மாவட்டத்திலும், இதர சில பகுதிகளிலும் உள்ள வர்கள் விவசாயத்தில் ஈடுபடுவது என்பது இன்று முடியாத காரியமாக இருக்கிறது. சென்ற முறை இதே மாமன்றத்தில் ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசும்போது நான் குறிப்பிட்டிருக்கிறேன். இப்பொழுது அரசாங்கம் இதில் அக்கறை செலுத்துகிறது என்றாலும் இன்னும் அதிவேகமாக இந்தப் பிரச்சினையிலே கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஒவ்வொரு ஊரிலும், கிராமத்திலும் கண்ணிகள் என்று சொல்லும் சிறு சிறு வாய்க் கால்களில் குழாய்க்கிணறுகள் வைத்து மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தண் ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும்பொழுது இந்தப் பம்பு செட்டுகள் மூலம் தண்ணீர் கொடுத்து பயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். சிறு கண்ணிகளிலே வைக்கப்படும் பம்பு செட்டு களுக்கு ஆகின்ற செலவை அதைப் பயன்படுத்தும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகின்ற தீர்வையில் தண்ணீர்த் தீர்வையாக அதை வசூலித்து அந்தச் செலவை சரிக்கட்டிக்கொள்ளலாம் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்கள் தொகுதிக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் வருகைதந்தபொழுது பூம்புகார் என்ற நகரத்தில் காவிரியின் கடைமடைப் பகுதியாக இருக்கும் நிலத்தைக் காண்பித்தோம். அமைச்சரவர்களையும், அலுவலர்களையும் அழைத்து இது போன்ற கடைமடைப் பகுதிகளில் நீரூற்று உள்ள இடங்களாகப் பார்த்து பம்பு செட்டுகளை வைத்தால் வெற்றிகரமான பயனைத்தரும் என்பதைத் தெரிவிக்கும் வகையில் காண்பித்தோம். அவர்களும் அதற்குத் தேவை யான நடவடிக்கைகளை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அண்மையிலே அங்கு வருகைதரவிருக்கும் பொதுப்பணித் துறை அமைச்சரவர்களும், அதைப்பார்வையிட்டு இதுபோன்ற பம்பு குழாய்க் கிணறுகள் திட்டத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாயூரம் வட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கிருக்கும் பெரும்பகுதி விவசாய மக்கள் மடாலயங்களுக்குச் சொந்தமான, ஆதீனங்களுக்குச் சொந்தமான நிலங்களை நம்பி வாழும்படியாக இருக்கிறார்கள். நமது அரசு வேளாண்மைத் துறையிலே உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென் பதற்கு எந்த அளவிற்குச் சலுகைகள் கொடுத்தாலும் அந்த மடத்தின் நிலங்களை நம்பி தங்கள் வாழ்வை நடத்திச் செல்லும் குடியானவர்களுக்கு, விவசாயிகளுக்கு அரசு அளிக்கும் எந்த நல்ல பலனும் கிடைப்பதில்லை. எனவே, இதிலே அரசு அதிக அக்கறை செலுத்தி அவர்களுக்கு விவசாயத்துறையிலே அரசு அளிக்கும் அனைத்துக் கடன்களும், மற்றச் சலுகைகளும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** கனம் தலைவரவர்களே, விவசாய மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சிக்கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். நூற்றுக்கு எண்பது சதவிகிதம் விவ சாயத்தை நம்பியிருக்கும் இந்த நாட்டில் விவசாயிகளுக்கு நல்ல ஊக்கம் தரும் வகையில் இன்று தமிழக அரசு பல திட்டங்களைக் கொண்டுவந்திருப்பது வரவேற்க வேண்டிய நல்ல அம்சமாகும். அதே நேரத்தில் இன்று நாட்டிலே பல தொழில் மந்தங்கள் ஏற்பட்டிருக் கின்றன. அதற்குக் காரணம் கிராமப்புறத்தில் வாழும் மக்கள், நூற்றுக்கு நாற்பது சதவிகிதம் விவசாயக்கூலிகளாக இருக்கும் மக்களுக்கு வாங்கும் சக்தி குறைவாக இருப்பதுதான். அதனால்தான் பல தொழில் மந்தங்கள்

ஏற்படுகின்றன. இதற்குப் பரிகாரம் காணும் வகையில் விவசாயிகளுக்குப் புதிய மாறுதலைச் செய்யவேண்டும். விவசாயச் சீர்திருத்தங்களைக் கொண்டுவரவேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். திட்டக்கமிஷனில் ஆரம்பத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து சதவிகிதம் வார அடிப்படையிலே சாகுபடிதாரர்களைக் கொண்டுவந்தால் கிராமப்புறப் பொருளாதாரத்தைக்கொண்டு வரமுடியுமென்று கூறியிருக்கிறார்கள். அந்த முறையிலே அந்த நல்ல புரட்சிகரமான திட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். மற்ற விவசாயிகளுக்கும் நிலம் கிடைப்பதற்கு நிலச் சீர்திருத்தத்தை விரைவாகக் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தமிழக அரசு 13,000 குழாய்க் கிணறுகளைத் தோண்ட திட்டமிட்டு இருக்கிறது. இந்தக் குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதில் குறிப்பாக 75 சதவிகிதமாவது வெற்றிபெற வேண்டுமானால் பல நீர் ஆராய்ச்சிகளை நடத்தி பிறகு அந்தக் குழாய்க் கிணறுகளைத் தண்ணீர் இருக்கும் இடத்தில் தோண்ட வேண்டும். இல்லையென்றால் வீண்விரயம் ஏற்படும் நிலைமையில்தான் போய்முடியும். அப்படி இல்லாது ஆராய்ச்சி நடத்தி குழாய்க்கிணறுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் விதைப்பண்ணைகளில் குழாய்க்கிணறுகள் வைக்கப்பட்டிருப்பதால் இன்றையதினம் அதன்மூலம் கிடைக்கின்ற பலன்கள் ஒன்றும் இல்லாமல் அந்த முறை தோற்றுப் போயிருக்கிறது. அதைத் தடுக்க வேண்டுமானால் இன்றைய தினம் ஆராய்ச்சி நடத்தவேண்டும். ஆராய்ச்சி நடத்தி அந்தக் குழாய்க் கிணறுகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் விவசாய உற்பத்திக்கு இன்றையதினம் அதிகப்படியாக செலவாகிறது. இன்றைக்குப் பலவிதமான நிருபண சாகுபடி முறைகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அந்த நிருபண சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 50 இனமாகக் கொடுக்கப்படுகிறது. அதிலே புதிய மாற்றம் ஒன்றும் கிடையாது. எப்பொழுதும் சாகுபடி செய்வது போல்தான் இன்றைய தினமும் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதை மாற்றி விவசாயிகளுக்குக் குறைந்த விலையிலே விதை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்ற வருஷம் 2,500 டன் விதைகள் ஸ்டாக் இருப்பதாக தெரிய வருகிறது. இன்றையதினம் அந்த விதைகள் ஸ்டாக் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்க வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இந்த விதைகளை யாரும் வாங்காமல் இருப்பதால்தான் அவ்வளவு ஸ்டாக் இருக்கிறது. கீவளூர் பஞ்சாயத்து யூனியனில் விதைகள் ஸ்டாக் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கு வேலை செய்கிற ஆசியர்களுக்குக் காசு வலை வாங்குவதற்குப் பணம் கொடுப்பதற்குப் பதிலாக, இந்த விதைகளையே அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இன்றைய தினம் விதைகளை விவசாயிகள் வாங்காமல், அவர்களாகவே தயார் செய்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான விதைகளைக் கணக்கிட்டு, எல்லா விவசாயிகளிடமும் தேவை இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்துகொண்டு அந்த மொத்தத் தேவையை பூர்த்தி செய்வதற்கு சர்க்கார் யோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி விவசாயத்திலும் இன்றைய தினம் பல பிரிவுகள் இருக்கின்றன. அதாவது பொருளாதாரப் பிரிவு, விவசாயப் பிரிவு என்று தனித்தனியே இருக்கின்றன. அவை ஒன்றாக இணைந்து நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் நடைபெறுவதைப்பற்றி யோசிக்க வேண்டும்.



அதே மாதிரிதான், கடலை, பஞ்சி, கரும்பு, விவசாயம், பருத்தி இவைகளுக்கெல்லாம் தனித்தனி டைரக்டர்கள் இருக்கிறார்கள். இத்தனை டைரக்டர்கள் தேவைதா என்பதை யோசிக்க வேண்டும். ஒரு விவசாய நிபுணர் குழுவைப் போட்டு, அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு, அந்த ஆலோசனைகளை விவசாயிகளுக்குச் சொன்னால் நல்ல முறையிலே விவசாயிகள் விவசாயத்திலே ஈடுபடுவதற்கு, வேலை செய்வதற்கு உதவிகரமாக இருக்கும். அந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***திரு எஸ். பி. பச்சையப்பன் :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்திலே மிகவும் பிற்பட்ட வட்டமாக கள்ளக் குறிச்சி வட்டம் உள்ளது. அதிலும் விவசாயத்திலே மிகவும் பிற்பட்ட வட்டமாக உள்ளது. இப்பொழுதுதான் அது கொஞ்சம் சீருள்ள நிலையிலே வருகின்றது. குறிப்பாக, என்னுடைய வட்டத்திலே அரிய பெருமானூரிலே "ஐ. ஆர்." என்ற நெல் நட்டு ஒரு ஏக்கருக்கு 66 மூட்டை நெல்லை அடைகின்ற நிலை இப்பொழுதுதான் அந்த ஊரிலே வந்திருக்கிறது. ஆகவே, அதையெல்லாம் அனுசரித்து என்னுடைய வட்டத்திற்கு வேண்டிய சலுகைகளைத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசினரால் கொடுக்கப்படுகின்ற டிராக்டர்களை வட்டவாரியாகக் கொடுத்தால் நலமாக இருக்கும். என்னுடைய வட்டத்திலே கொடுத்திருக்கின்ற டிராக்டர்களை வைத்துக்கொண்டு நாங்கள் மேன்மேலும் வளர்ச்சிபெற வட்டவாரியாகக் கொடுக்கவேண்டுமென்று கூறி, அப்படிக் கொடுத்தால் நாங்கள் மேன்மேலும் வளர்ச்சிபெற ஏதுவாக இருக்குமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய வட்டத்திலே வடக்கநந்தல் பகுதியிலே ஒரு விதைப் பண்ணை உள்ளது. அந்த விதைப் பண்ணையிலே இருக்கிற விதைப் பொருள்களை எடுத்து கள்ளக்குறிச்சி வட்டத்திற்குக் கொடுத்துவிட்டு, மீதி இருக்கின்றதை மற்ற வட்டங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, அங்கே விவசாய பயிற்சிப் பள்ளி ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்த நேரத்திலே விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கங்காபுரம் பகுதியிலே கவிராயன்மலை என்ற மலைப்பகுதியில் வசிக்கிற மலைவாசிகள் செடி, முள் இவைகளை வெட்டி விவசாயம் நடத்தி வருகிறார்கள். அப்படி விவசாயம் நடத்தி வருகின்ற அவர்களுக்கு நல்ல ஊக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே காபி பயிரிடவும் அரசாங்கம் உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கிற புளி, மா, பலா போன்ற மரங்களை சிலர் வெட்டி கரியாக்கி, அதனை அரசாங்க உத்திரவில்லாமல் வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்கிறார்கள். அதனையும் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உரத்தைப் பொறுத்தவரை உரம் குறைந்த விலையிலே கிடைப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாட்டினைச் செய்து தரவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

எப்படிச் சுகாதாரக் கேடு வருவதை அரசாங்கம் முன்கூட்டி தடுப்பதற்கு ஏற்பாடு செய்கின்றதோ அதே போல பயிர்களுக்கு நோய் வராமல் தடுக்க அரசாங்கம் தன்னுடைய சொந்த செலவிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

[திரு. எஸ். பி. பச்சையப்பன்] [1968 மார்ச் 14

கழிநீர் திட்டத்தின் கீழ் கோமுகி அணையின்கீழ் 11 அணைகள் உள்ளன. அந்த அணைகளிலிருந்து கழிநீர் வருகின்றதை நிலங்களுக்குப் பாய்ச்சி அதன் மூலம் விவசாய உற்பத்தி செய்ய வசதி செய்து தரவேண்டு மென்று இந்த நேரத்திலே மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள் கிறேன்.

கள்ளக்குறிச்சியிலே நெய்வாநத்தம் என்று ஒரு ஊர் உள்ளது. அங்கே மணிமுத்தா நதியில் ஒரு அணை கட்டுகிருர்கள். அதனுல் அந்த நெய்வாநத்தம் ஊரிலே இருக்கிற கிராம மக்கள் மிகவும் பாதிக்கப் பட்டு, அவர்கள் வெளியே செல்லவேண்டிய நிலையிலே இருக்கிருர்கள். அவர்களுக்கு நல்ல ஒரு இடம் பார்த்து உடனடியாகக் கொடுக்கவேண்டு மென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக இருப்பிடம் தராவிட்டால் அவர்கள் எல்லாம் தெளிவற்ற நிலையிலே, திக்கற்ற நிலையிலே, வெளியிலே அவதிக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்படும் ஆகவே, அவர்களுக்கு உடனடியாக ஒரு இடம் கொடுத்து உதவ வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய வட்டத்திலே அரசம்பட்டு பக்கமாக ஒரு அணை கட்ட வேண்டுமென்று வெள்ளையர் காலத்திலே இருந்து பிரப்போசல் இருந்து வருகிறது. நம்முடைய அரசானது உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி வட்டத்திலே ஒரு சர்க்கரை ஆலை உள்ளது. அந்த சர்க்கரை ஆலைக்கு அங்கே இருக்கிற விவசாயிகள் கரும்பு எடுத்துச் செல்வதற்கு ரோடு வசதிகள் இல்லை. ஆகவே, இந்த அரசு ரோடு போட்டுத் தரவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த சர்க்கரை ஆலைக்கு 75 சதவிகிதம் கள்ளக்குறிச்சியிலிருந்துதான் கரும்பு கொடுக் கிருேம். இதனுல் இந்தக் கரும்புகளை ஆலைக்கு எடுத்துச் செல்வதற்கு கள்ளக்குறிச்சி வட்டத்திற்குப் போதுமான ரோடு வசதி செய்து தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, சுமார் 210 மாணவர்களுக்கு, வேளாண்மை பாதுகாப்பு பயிற்சி அளிக்க வேண்டுமென்று வேளாண்மைத் துறையின சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு மேற்பார்வையாளரின்கீழ் சுமார் 3,000 ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது. அப்படி பயிற்சி பெற்றவர்கள் 6, 7 வருஷங்களாக தற்காலிகமாகத்தான் பணியாற்றிக் கொண்டு வருகி ருர்கள். (அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

*** திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பாக கொடுக்கப் பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து இரண்டொரு அபிப்பிரா யங்கள் கூறலாமென்று கருதுகிறேன்

இந்த நாட்டிலே, விவசாயிதான் முதுகெலும்பு என்பது எல்லோ ருக்கும் தெரியும். பெரும்பாலான அரசியல் மட்டத்திலேயும் அப்படிப்பட்ட ஒரு கருத்துதான் இருக்கிறது. அந்த முதுகெலும்பு ஒரு மனிதனுக்கு எந்த விதத்தில் ஆதாரமாக, நிமிர்ந்து நிற்கத் தேவையோ அதே போன்றுதான் இந்த நாடு உயர்வுபெற விவசாயிகள் தான் அடிப்படை யானவர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆனுல் இன்றைக்கு விவசாயிகள் ஒதுக்கப்பட்டிருக்கிருர்கள் என்பது பரவலாக இருக்கக்கூடிய ஒரு அபிப்பிராயமாக இருக்கிறது. இந்த விவசாயி முன்னேற்றத்திற்கு எந்தவிதத் திட்டமோ செயல் குறிப்போ புதிதாக வைத்திருக்கவில்லை யென்று நாம் கூறமுடியும்.



1968 மார்ச் 14] [திரு. இல. பலராமன்]

விவசாயிகள் அடிப்படையாக நிலத்தில் பயிரிடவேண்டுமென்ருல், அந்த நிலத்தினுடைய தரத்தை அவர்கள் முதலாவதாகத் தெரிந் திருக்கவேண்டும். அந்த நிலம் எந்த அளவுக்கு எந்த எருவை ஏற்றுக்கொள்கிறது, எந்த எரு தேவையில்லை என்ற உணர்வு அவர் களுக்கு இருக்க வேண்டும். இன்றைக்கு விஞ்ஞான ரீதியிலே பல ரசாயன உரங்களை நாம் உபயோகிக்கும்பொழுது, அந்த ரசாயன உரங்களை கல்வி அறிவு இல்லாத விவசாய மக்கள் உபயோகிக்கும்பொழுது, ஒரு சிலர் அதிகமாக சில உரத்தைப் போட்டுவிடுவதால் அந்த நிலத்தின் தரம் கெட்டுவிடுகிறது. அதனுல் அவர்களுடைய சொத்தே பறிபோகிறது என்றேகூடக் கூறலாம். அதற்கு மண் ஆராய்ச்சிக் கூடங்கள் மண் ஆராய்ச்சி செய்து இந்த நிலம் இன்ன தரம் என்று கூறவேண்டும். அதில் இன்றைக்கு அதிகமான சிரத்தை இல்லை. நடமாடும் மண் ஆராய்ச்சிக்கூடம் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று, இரண்டு நாட்கள் அங்கே தங்கி பட்டாவாரியாக நிலச் சொந்தக்காரர்களுக்கு மண் ஆராய்ச்சியைப் பற்றி விளக்கி, அவர்கள் எந்த எரு போட்டால் நலமாக இருக்கும் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். தாலூகா நகரங்களிலும் மண் ஆராய்ச்சிக் கூடங்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும். நடமாடும் மண் ஆராய்ச்சி சாலைகளும் இருக்கவேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டு கோள்.

அடுத்தபடியாக, பூச்சி மருந்து இன்றைக்கு அதிகமான விலை விற்கிறது. தனிப்பட்ட ஒரு சில கம்பெனிகள் அந்த மருந்துகளை தயாரிப்பதினுல் அவர்கள் நிர்ணயித்த விலையை அரசாங்கமும் அப்படியே ஏற்றுக்கொள்கிறது என்ற எண்ணம்தான் மக்களிடையே நிலவி வருகிறது. இந்த நிலைமையை மாற்றி, அரசாங்கமே பூச்சி மருந்துகள் தயாரிக்கக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும். மற்ற என்னென்ன வற்றிற்கோ நாம் பணத்தை செலவழிக்கிருேம். குறைந்த விலையில் விவசாய மக்களுக்கு பூச்சி மருந்து கிடைக்க ஏதுவாக இருக்கும், அரசாங்கமே பூச்சி மருந்துகளை தயாரித்தால் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். மனிதர்களுக்கு வரும் மலேரியா போன்ற வியாதி களைத் தடுப்பதற்கு மலேரியா இராடிகேஷன் ஸ்கீம் என்றெல்லாம் பல திட்டங்களைப் போட்டு தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொள்கிருேம். சாதாரண விவசாயிகள் கால் காணி, அரைக்காணி வைத்திருப்பவர்கள் பூச்சி மருந்து அடிக்காத காரணத்தினுல், பல வியாதிகள் பயிர்களை பாதிக்கின்றன. இப்படி பூச்சி மருந்து அடிக்காதவர்கள் நிலத்திலிருந்து அடித்தவர்கள் நிலத்திற்கு நோய்கள் பரவி விடுகின்றன. ஆகவே, ஏரியல் ஸ்ப்ரே என்ற முறையில் எல்லா விவசாயிகளுடைய நிலத்திற்கும் ஒரே காலத்தில் மருந்து தெளிக்கக்கூடிய ஒரு திட்டத்தை அமுல் நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டு கோள். இதனுல் எல்லா இடங்களிலும் உள்ள பூச்சிகளை ஒரே நேரத்தில் போக்க முடியும், அதனுல் வியாதிகள் பரவாமல் தடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

விவசாயிகள் உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் கொஞ்சம் கவனக் குறைவாக இருக்கிருர்கள். ஆகவே வேளாண்மைத்துறை அமைச்சரும், உண வுத் துறை அமைச்சரும் ஒன்றுபட்டு இயங்கினுல்தான் அரசாங்கம் கொள் முதல் செய்கிற நெல்லுக்கு மக்களுக்கு நல்ல விலை கொடுக்க முடியும். அப்பொழுது தான் விவசாய மக்களும் ஊக்கத்துடன் நல்ல மாதிரியாக செயல்பட முடியும் என்பதை இந்த நேரத்தில் இந்த அவைக்கு ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

கிணறு வெட்ட மானியம் மற்ற மாவட்டங்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனுல், பட்ஜெட்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் கிணறு வெட்ட எந்தவிதமான குறிப்பும் இல்லாதது மிகவும் வருத்தத்துக் குரிய விஷயமாகும். வட ஆற்காடு மாவட்டம் கிணறு வசதியை நம்பி யிருக்கக்கூடிய ஒரு மாவட்டம். விளைச்சல் அதிகமாக உற்பத்தி பண்ணக் கூடிய ஒரு மாவட்டம், ஆகவே, அந்த மாவட்டத்தில் மேலும் கிணறுகள்

தோண்டுவதற்கு அதிகமான மானியங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே போன்று மாடு வாங்கவும், மற்ற வசதிகள் செய்து கொள்வதற்கும் அரசாங்கம் அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நாகநதி என்ற நதியின் குறுக்கே ஒரு அணை கட்டுவது பற்றி ஏற்கனவே அரசு பரிசீலனை செய்திருக்கிறது. அதைப் பற்றி சில குறிப்பும் இருக்கிறது. ஆகவே, விரைவிலே இந்த நதிக்குக் குறுக்கே ஒரு டாம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி தான் சிவனாதபுரம் கிராமத்தில் ஒரு பெரிய ஏரி கட்ட வேண்டும் என்று இந்த மன்றத்தில் பணிவோடு கேட்டுக்கொண்டு, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவாதத்தில் இருக்கக்கூடிய வேளாண்மைத் துறை மான்யம் குறித்து நான் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். என்னுடைய தீர்மானத்தினுடைய நோக்கம் விவசாயத் துறையிலே நல்ல விதமான மாற்றத்தை ஏற்படுத்தி, புரட்சிகரமான திட்டங்களை நிறைவேற்றி, நமது ராஜ்யத்தில் அதிகமான உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது தான். அதையொட்டி நமது அரசாங்கம் கடந்த ஒரு ஆண்டு காலத்தில் எடுத்து வந்திருக்கக்கூடிய தீவிரமான ஆலோசனைகளையும், வேலைகளையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த ஆண்டில் இது வரையிலும் உற்பத்தியான உணவைவிட மேலும் 2, 2½ லட்சம் டன் அதிக உற்பத்தி பண்ண வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு போக நிலத்தை இரு போகமாக்குவது நல்ல விதமான திட்டம் தான். தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆரம்பத்திலே 3 லட்சம் ஏக்கராவில் இரு போகம் விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். சென்ற ஆண்டு மேலும் 4 லட்சம் ஏக்கராவில் இருபோக விவசாயம் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு, அது இரண்டு லட்சம் ஏக்கராவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. நான்கு லட்சம் ஏக்கரா வரையில் ஆடுதுறை 27 இருபோகம் சாகுபடி செய்யப்பட்டதால் நல்ல விளைச்சல் பார்க்க முடிந்தது. விவசாயிகளுக்கு நன்மை அளிக்கக்கூடிய ஒரு திட்டமாக அது அமைந்தது. அவ்வாறு அமைந்திருக்கிறபொழுது, அந்த மாவட்டத்தில் ஒரு விசேஷமான அம்சம் என்னவென்று பார்க்க வேண்டும். அதாவது முதல் போகம் அறுவடை சமயத்தில் மழை காலமாக இருப்பதனால் மழைத் தண்ணீரில் கதிர்கள் மூழ்கி தானியங்கள் கெட்டுப்போகக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அதற்கு பாத்தியாக முன்கூட்டியே தண்ணீர் விடுவதற்கு ஏதேனும் செய்ய முடியுமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். அணையில் போதுமான அளவுக்கு தண்ணீர் இருந்தால், மே மாத இறுதியிலேயே தண்ணீரை திறந்துவிடுவதன் மூலமாக மழை ஆரம்பமாவதற்கு முன்னாலேயே குறுவை மகசூல் அறுவடையை முடித்துவிட முடியும். அந்த முறையில் அரசாங்கம் செய்தால் உதவிகரமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மேலும் கிணறுகள் வெட்டும் வேலையை நாடு முழுவதிலும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். இப்பொழுது துண்டு துக்காணியாகக் கொண்டு வரப்படுகிறது. நாடு முழுவதும் பரவலாக இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதன் மூலம் விவசாயத்தை இன்னும் அபிவிருத்தி செய்வதற்கு முடியும், அதிக உற்பத்தி செய்வதற்கும் முடியும். தஞ்சை போன்ற மாவட்டங்களில் தண்ணீர் அதிக ஆழத்தில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதிக ஆழத்தில் கிணறு வெட்ட வேண்டுமென்று சொன்னால், சாதாரணமாக கையால் வெட்டுவதற்கு முடியாது. ஆகவே, பரிசோதனை செய்து பார்க்க முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது அதற்காக நிறைய பவர் டிரில்ஸ் தேவை. பவர் டிரில்ஸ் இல்லை என்று சொன்னால், அங்கு ஆட்கள் மூலம் கிணறுகள் வெட்ட முடியாமல் மிகமிகக் கஷ்டமாக



இருந்து கொண்டிருக்கிறது. மற்றொரு ஆலோசனை தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகமான பம்பு செட்டுகள் கொடுக்க வேண்டும். இதற்கு முன்னால் பம்பு செட்டுகள் கொடுக்கப்பட்டு வந்தது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிகம் கொடுப்பது சரியாக இருக்க முடியும்.

கோவில், மடங்களுக்குச் சொந்தமான கிராமங்களில் பாசன வசதி இல்லாத காரணத்தினால் விவசாயத்துறையில் தீவிரமான திட்டங்களை நிறைவேற்றுவது மிக மிக கஷ்டமாக இருப்பதன் காரணத்தினால் அங்கு சமுதாயக் கிணறுகள் வெட்டி, சமுதாயக் கிணறுகள் மூலம் பாசன வசதி செய்து கொடுத்தால், சாகுபடி செய்வதற்கு உதவியாக இருக்க முடியும்.

தரிசு நிலங்கள் நம்முடைய ராஜ்யத்தில் சமமான நிலங்கள் திருச்சி, இராமனாதபுரம், தஞ்சை மாவட்டங்களில் மூன்று லட்சம் ஏக்கராவுக்கு மேல் இருக்கிறது என்று கணக்கு சொல்லப்படுகிறது. இந்த 3 லட்சம் ஏக்கராவும் இன்றைய தினம் காட்டு இலாகாவின் கீழ் இருந்து கொண்டிருக்கிறது. இதை மாற்றி விவசாய இலாகாவுக்கு எடுத்துக் கொண்டு, விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகள் கடன்காரர்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். கடனைத் முற்பகல்
திருப்பித் தரமுடியாத நிலைமை ஏற்படுகின்றது. அதை ரத்து செய்வதா 11—30
அல்லது தவணையில் வசூலிக்க வேண்டுமா என்பதை அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்ய வேண்டும்.

குத்தகை நெல் அளக்க முடியாத நிலைமை இருப்பதால் இந்த குத்தகை பாக்கியை எவ்வாறு வசூல் செய்வது அல்லது எந்த அளவுக்கு தள்ளுபடி செய்வது, மீதம் கொடுக்க வேண்டியதை எத்தனை தடவைகளில் வசூல் செய்வது என்ற சட்டத்தையும் அரசாங்கம் இயற்றுவதன் மூலமாகத்தான், நிலத்தின் சொந்தக்காரர்களையும், விவசாயிகளையும் பாதிக்காத அளவுக்கு செய்யமுடியும் அதை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மழை காலங்களில் ஈர நெல்லை உலர்த்துவதற்கு, சென்ற ஆண்டு நெல் உலர்த்தும் ஆலைகள் வட்டாரத்துக்கு ஒன்று வீதம் ஆரம்பிக்கப்பட்டது, இப்போது தான் பூர்த்தியாகி இருக்கிறது. சென்ற ஆண்டு அது விவசாயிகளுக்கு உதவியாக இல்லை. 15, 20 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. இம்மாதிரி தொலைவில் இருப்பதனால் அரசாங்கமே விவசாய இலாகா மூலமாக லாரிகளை வைத்து அந்த தானியங்களை எல்லாம் விவசாயிகளிடமிருந்து சேகரித்துக் கொண்டு வந்து உலர்த்துவது தான் சரியாக இருக்கும். அதையும் செய்ய வேண்டும். ஆடுதுறை—27 என்ற நெல் அதிகமாக உற்பத்தி ஆகிறது. அந்த ஆடுதுறை—27 நெல் தண்ணீரில் நனைந்தால் முளைத்து விடுகிறது. முளைக்காமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதை ஆராய்வது நலமாக இருக்க முடியும். இப்படி மழையில் நனைவதினால் முளை வந்து சேதம் ஏற்படுகிறது. இம்மாதிரி சேதத்தை தடுப்பதற்காக அரசினர் ஒரு ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உரத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய ராஜ்யத்துக்கு, விவசாயிகளுக்குத் தேவையான உரம் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கக் கூடாது. ஆங்காங்கு விவசாயிகளுக்கு எந்தெந்த ஜில்லாக்களில் எவ்வளவு உரம் தேவை என்பதை கண்டறிந்து, முன்கூட்டியே கொண்டு வந்து வைத்துக்கொண்டு விவசாயிகளுக்கு அவ்வப்போது உரம் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். தழை உரத்தைப் பொருத்த வரையில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியம் கொடுக்கிறோம். அந்தந்த பஞ்சாயத்துக்களின் பொறுப்பிலே தழை உரம் சாகுபடி செய்ய வேண்டும். பஞ்சாயத்துக்கள் அதற்குக் காவல் போட்டு செஸ்பானியா போன்ற தழை உரங்களையும்

வளர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமாக விவசாயத்தில் அதிகமான உற்பத்தி செய்ய முடியும், அதிக உணவு உற்பத்தி செய்ய உதவியாக இருக்கும். இம் மாதிரி தீவிரமான ஒரு பெரிய புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த அரசு முன்வரவேண்டும். நல்ல முறையில் திட்டத்தைத் தயாரித்து, அதிகாரிகள் மிகவும் சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு இன்னும் அதிக ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுத்தாக வேண்டும். வட்டார லெவலில் இருக்கும் அதிகாரிகளைப் பொருத்தவரையில் அவர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே இன்னும் அதிகத் தொடர்பு ஏற்படுத்தக்கூடிய நிலையை உருவாக்கினால் இன்னும் நல்ல முறையில் விவசாயத்தை நடத்த முடியும் என்பதை கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வி. எஸ். சண்முகம் :** தலைவர் அவர்களே, இந்த 1968-69 ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மான்யத்தை வரவேற்று என்னுடைய ஒரு சில கருத்துக்களை கூற ஆசைப்படுகிறேன்.

சென்ற ஆண்டில் மிகப் பெரிய அளவில் இயற்கை நமக்கு விரோதமாக இருந்தும் கூட, நாம் கேட்ட 20 கோடி கிடைக்காமலிருந்தும் கூட நாம் 2 லட்சம் டன்னுக்கு அதிகமான உணவை அதிகமான அளவில் உற்பத்தி செய்திருக்கிறோம், என்றால் உள்ளபடியே சென்ற ஆண்டில் இந்த அரசு எந்த அளவுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுத்திருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும். இதைக் குறிப்பிடும் இந்த நல்ல நேரத்தில் புதுக்கோட்டையில் வாழ்கின்ற மக்கள் நீண்ட நெடுங்காலமாக ஒரு பிரச்னையை இந்த மன்றத்திலும் பாராளுமன்றத்திலும் வலியுறுத்தி வலியுறுத்திச் சொல்லி வந்திருக்கிறார்கள். புதுக்கோட்டை பகுதிக்கும் அதைச் சார்ந்த விராலிமலை, ஆலங்குடி, திருமயம் பகுதிகளுக்கும் காவேரி ஆற்றிலிருந்து தண்ணீர் வரவேண்டும் என்ற அந்தப் பிரச்னையை நீண்ட நெடுங்காலமாக இந்த மன்றத்திலும், பாராளுமன்றத்திலும்—20 ஆண்டு காலமாக அங்கே இருந்து வருகிற பிரதிநிதிகள் வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு அது தேவை என்று நினைக்கிறார்கள். அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் மிகப் பெரிய அளவுக்கு உழைக்கின்ற தன்மை படைத்த விவசாயிகள். அந்தப் பகுதி நிலங்கள் மிக நல்ல விளைச்சல் நிலங்கள். காலத்தில் மழை பெய்யாத காரணமாக எடுக்கப்படுகின்ற எந்த நல்ல முயற்சிகளும் கடைசி நேரத்தில் பயன் அற்று போகும் காரணத்தினால் புதுக்கோட்டை மக்கள் இந்த பிரச்னையை வலியுறுத்துகிறார்கள். திருச்சியிலும், புதுக்கோட்டையிலும் நடத்தப்பட்ட விவசாய மாநாட்டிலும்கூட நான் பேசிய போது மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களிடம் இதை வலியுறுத்தி பேசினேன். காவேரித் தண்ணீர் புதுக்கோட்டைக்கு கொண்டு வரவேண்டும் என்ற முக்கியமான பிரச்னையை வலியுறுத்தும் இதே நேரத்தில் அது வருவதற்கு ஏதேனும் வாய்ப்பு இல்லாமல் போனால் அமராவதி ஆற்றில் இருந்தாவது புதுக்கோட்டைப் பகுதிக்கு தண்ணீர் கொடுக்கின்ற முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த மாமன்றத்தை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கோவை தாளவாடி பிர்க்காவில் அந்தப் பகுதியின் பின்தங்கிய நிலைமையின் காரணமாக 1,500 ரூபாய்க்கு குறைந்து கொடுக்கின்ற கிணற்று மானியங்களில் பாதியை தள்ளுபடி செய்திருப்பதாக அமைச்சரவர்கள் உரையிலே இருக்கிறது. புதுக்கோட்டை பகுதிக்கு சுற்றி இருக்கின்ற பகுதிகளும் இன்றைய தினம் பின்தங்கிய பகுதிகள் என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்த கோவை மாவட்டத்தில உள்ள தாளவாடி பகுதிக்குக் கொடுக்கின்ற சிறப்புச் சலுகையை எங்களுக்கும் தரவேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் அமைச்சரவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த கிணறுகளுக்கும் பம்பு செட்டுகளுக்கும் புதுக்கோட்டை பகுதிக்கு இந்த மானியத்தில் 92·50 லட்சம்



ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு அவர்களை பாராட்டுகிறேன். பாராட்டுகிற அதே நேரத்தில் இந்தத் தொகையை பாங்கியிடமிருந்து நாங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற முறை புதிதாக இருக்கிறது. இந்த நல்ல நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால்—அந்தப் பகுதியில் வாழ்கின்ற விவசாயப் பெருமக்கள் அந்த பாங்குக்கு போவதற்கே ஒரு விதமான பயம் கொண்டிருக்கிறார்கள். அந்த பயத்திற்கு எடுத்துக் காட்டாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். லோன் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லியதன் பேரில் அப்ளிகேஷன்கள் போட்டு 6 மாதங்கள் ஆகியும் இதுவரையில் பணம் கிடைக்கவில்லை. பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் விவசாயத்துக்கு பணம் தருகின்றபோது 15, 20 நாட்களில் விவசாயியின் கைக்கு பணம் வருகிறது. ஆனால் பாங்குகள் மூலமாக வருகிறபோது காலதாமதம் ஆகிறது. இதற்கான சிறப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக அங்கு அந்த சட்டத்தையே திருத்தி விவசாயிகளுக்கு சாதகமான அளவுக்கு அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டுகிறேன். அந்தப் பகுதியில் வாழும் மக்கள் மிகப் பெரும் அளவு மின்சார இணைப்பு கிடைக்காமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு பணம் கட்டிய கேணிகளுக்குக்கூட இன்னும் மின்சார இணைப்பு கிடைக்காமல் அந்த பகுதியில் விவசாய உற்பத்தி ஓரளவு குறைந்து வருகிறது. இதை நாங்கள் விவசாய மாநாட்டிலும் கூட குறிப்பிட்டுச் சொன்னோம். இந்த விவசாய கிணறுகளுக்கு மின் இணைப்பு கிடைப்பதில் காலதாமதம் தயவுசெய்து தவிர்க்கப்படவேண்டும் என்று இப்போது விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். அந்தப் பகுதியில் இருக்கும் புறம்போக்கு நிலங்களில் சில களர் நிலங்களாக இருக்கின்றன. அதை மேய்ச்சல் களம் என்று ஒதுக்கி வைத்து கணக்கப்பிள்ளை மணியக்காரர் ஆகியவர் வசதி படைத்தவர்களுக்கு 5, 10 எக்கர் நிலம் உள்ளவர்களுக்குக் கூட பட்டாபோட்டு கொடுத்து விடுகிறார்கள். ஏழை எளியவர்கள், நிலம் இல்லாதவர்கள் கேட்டால அந்த களர் நிலத்தை மேய்ச்சல் தளத்திற்காக ஒதுக்கியிருப்பதாகச் சொல்லி ஏழைகளுக்கு பட்டா கொடுப்பது இல்லை. இந்த நிலைமைகளை எல்லாம் கவனித்து பட்டா நிலங்களை ஏழை விவசாய மக்களுக்கு அடைமானம் செய்ய வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புல் முளைக்காத களர் நிலங்கள் எல்லாம் மேய்ச்சல் தளம் என்ற பெயரில் எங்களுடைய தொகுதியிலும் அதைச் சுற்றிலும் இருந்துகொண்டிருக்கின்றன. அதை ஏழை விவசாய மக்களுக்கு இந்தக் காரணங்களை சொல்லி அடைமானம் செய்ய மறுக்கிறார்கள். ஆகவே, இத்தகைய மேய்ச்சல் தளங்களை விவசாயிகளுக்கு பயன்படுவதற்கான நிலைமையில் இப்போதுள்ள சட்டதிட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே கடன் கொடுப்பதிலும் ஆற்று பிரச்னைகளுக்கு ஆவன செய்வதிலும் மின்சார இணைப்புகளை கிணறுகளுக்கு கொடுப்பதிலும் அரசு நல்ல நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பு நல்கிய தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* **திரு. கே. போஜன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே 1968-69-ம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களை கூற விரும்புகிறேன். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக, குறிப்பாக ஓராண்டு காலத்தில் வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அதிக கவனம் செலுத்தி அதிக உற்பத்தியைப் பெருக்க எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டிலே 2 லட்சம் டன் அதிகமாக உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம். நாம் எடுத்துக்கொண்ட முயற்சி

[திரு. கே. போஜன்] [1968 மார்ச் 14

களுக்கு இன்னும் அதிகமாகவே உற்பத்தி இருந்திருக்க வேண்டும். இயற்கையின் கோளாறின் காரணமாக உற்பத்தி சிறிது பாதிக்கப்பட்டது. நாம் வேளாண்மையில் இன்னும் அதிக கவனம் செலுத்தி, விவசாயிகளுக்கு வேண்டிய எல்லாவித உதவிகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் சுமார் 570 லட்சம் ரூபாய் செலவில் 9 ஆயிரத்திற்கு மேற்பட்ட புதிய கிணறுகள் வெட்டுவதற்கும், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட விசை ஏற்றங்கள் அமைப்பதற்கும் திட்டம் தீட்டப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நடுத்தர, சிறு பாசனத் திட்டங்களுக்கு அதில் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நில அடிமட்டத்திலுள்ள நீரைக் கொண்டு வரும் திட்டங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. அதையும் உடனடியாக நிறைவேற்றினால் நிலமட்டத்திலுள்ள நீர்வளங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 'இண்டோ–ஜெர்மன் நீலகிரி டெவலெப்மெண்ட் ஸ்கீம்" என்ற திட்டத்தின்மீது உருளைக்கிழங்கு பயிரிடப்படும் திட்டம் இருந்து வருகிறது. இந்தப் பயிருக்கு 'லேட் பிளைட்' என்ற நோய் ஏற்படுவதால் பயிர்கள் பாதிக்கப்பட்டு விளைச்சல் குன்றி விடுகிறது. ஆகவே இந்த நோய் ஏற்படாமல் பாதுகாப்பதற்கான வழி வகைகளைத் தேடவும், இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கும் வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். தவிர, பூச்சி மருந்துகள் தெளிப்பதற்காகவும் இந்தத் திட்டத்திற்கு 22·2 லட்சம் ரூபாய் அரசாங்கம் அளித்திருக்கிறது. அதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நீலகிரி மக்களின் சார்பாக மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் திட்டத்திலே கால்நடைப் பண்ணையும், கோழிப் பண்ணையும், பால் பண்ணையும் ஏற்படுத்தப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இது விவசாய மக்களுக்கும், விவசாயத்திற்கும் உதவும்படியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் அடிக்கடி பூச்சி தொல்லைகள் ஏற்படுவதால் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, பூச்சி மருந்துகளைத் தெளிக்கலாம் என்று விவசாயி எண்ணினால், அந்தந்த சமயத்தில் மருந்து கிடைப்பதில்லை. பூச்சி மருந்துகள் அவ்வப்பொழுது உடனடியாகக் கிடைக்க வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரியிலே உருளைக்கிழங்கைத் தவிர, தேயிலை விவசாயமும் நடைபெறுகிறது. தேயிலை விவசாயிகளுக்குப் புதிதாகத் தேயிலை பயிர் செய்ய ஏககருக்கு 2,500 ரூபாய் வேளாண்மை மறுகடன் உதவித் திட்டத்தின்கீழ் நில அடைமான வங்கிகளின் மூலமாகக் கடன் உதவி தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு அரசு இசைந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விஷயமாகும். தேயிலை சாகுபடி செய்யும் திட்டத்தின்மீது 50 லட்சம் ரூபாய் செலவிட முன்வந்திருப்பதை மிகவும் பாராட்டுகிறேன். மேலும், ஏற்கெனவே உள்ள சிறிய தேயிலைத் தோட்ட விவசாயிகளுக்கும் இந்தக் கடன் உதவியை அளிக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த நான்கைந்து ஆண்டுகளாக நீலகிரியில் மழை இல்லாத காரணத்தால் தேயிலை விவசாயம் நசித்து வருகிறது. நில அடைமான வங்கிகளின் மூலமாக இவர்களுக்கும் கடன் வழங்கினால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில், மற்ற இடங்களைப்போல் நீர்ப்பாசன வசதி இல்லை. ஆகையால், மற்ற வசதிகளைப் பெருக்கி, விவசாய மக்களுக்குவேண்டிய சலுகைகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என் உரையை முடித்துக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.



1968 மார்ச் 14]

*திரு. செ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.* முதலிலே, விவசாயம் என்பது கட்சி சார்பற்ற பிரச்சினை என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஆகவே, இந்த மானியக் கோரிக்கையில ஒதுக்கியிருக்கின்ற தொகையைக் குறைக்க வேண்டுமென்று சொல்வது எந்த விதத்திலும் நியாயம் இல்லையென்பதைப்பற்றி, யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்காது. கொடுக்கப்பட்டிருக்கின்ற பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்பட்டு, அந்தப் பலனை எல்லோரும் அனுபவிக்கிறார்களா என்றுதான் பார்க்கிறார்களே தவிர, உண்மையில் இந்தத் துறைக்குப் பணம் குறைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்பது நோக்கமல்ல.

இரண்டாவதாக, தமிழ்நாட்டிலே, கோவையிலும், ஆடுதுறையிலும் பல விவசாய ஆராய்ச்சிக் கழகங்கள் ஏற்பட்டு, புதிய புதிய கண்டு பிடிப்புகள் விவசாயத் துறையிலே கண்டுபிடித்து, இன்றைய தினம் உலகம் எங்கிலும் இருந்து பாராட்டுகள் கிடைக்கின்றன என்பதை இந்த அவையிலே கூறி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்திலே எவ்வளவுதான் அதிக உற்பத்தி செய்தாலும், எவ்வளவுதான் முன்னேற்றகரமான திட்டங்களைப் போட்டாலும், நாட்டினுடைய நலனை மனதிற்கொண்டு விவசாயப் பொருட்களுக்கு, விவசாய விளைபொருள்களுக்கு நாம் கட்டுபடியாகக்கூடிய முறையில் விலை கொடுக்காத வரையில் நாம் முன்னேற்றம் காண முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெளிநாடுகளில் நடத்துவது மாதிரி விவசாயத்தை ஒரு தொழில்மாதிரி நடத்த முற்பட வேண்டும். அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளிலும் விவசாயத்தை ஒரு தொழில்மாதிரி நடத்துகிறார்கள். ஆனால் நம் தேசத்தில் மட்டும்தான் விவசாயத்தை ஒரு ஜீவனோபாயத்திற்காக நூற்றுக்கு எழுபது பேர் நடத்தி வருகிறார்கள். இன்றையதினம் விவசாயம் ஒரு கட்டுபடியாகாத தொழிலாக இருந்து வருகிறது. இந்த மாநில அரசும், மத்திய அரசும், விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய முறையில விலையை நிர்ணயிக்க வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பருத்திக்குச் சரியான விலை கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். சென்ற ஆண்டைக் காட்டிலும் இப்போது 50 ரூபாய் குறைவாக இருக்கிறது. விவசாயிகளிடத்தில் குறைந்த விலைக்கு வாங்கிப் போய், வியாபாரிகள் 50 ரூபாய் ஏற்றி விடுகிறார்கள். இடையில் இடைத்தரகர்களுக்கு இந்த 50 ரூபாய் போய்ச் சேருகிறது. ஆகவே, விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையில் விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெல்லுக்குக் கொடுக்கும் விலை கூட விவசாயிகளின் உற்பத்திச் செலவுகளுக்குக் குறைந்து போகக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய நண்பர் ஒருவர் விவசாயி. அவர் முன்னேற்றகரமான திட்டங்களை தன் நிலத்தில் செயல்படுத்துகிறவர். அவர் தன்னுடைய நிலத்தில் ஐ.ஆர். 8 என்ற நெல்லை விதைத்து ஏக்கர் ஒன்றுக்கு 80 மூட்டை நெல் அறுவடை செய்தார். அந்த 80 மூட்டை நெல் கிடைப்பதற்காக அவர் தன்னுடைய நிலத்திற்காகச் செலவிட்டது ரூ. 1,200. தன்னுடைய நெல்லை அரசாங்கத்திற்கு விற்றதனால் அவருக்குக் கிடைத்த தொகை 2,200 ரூபாய் ஆகிறது. ஆகவே அவருடைய செலவு போக மீதி 1,000 ரூபாய்தான் கையில் மிஞ்சும். இந்த ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு அவர் என்ன செய்ய முடியும்? ஆகவே, நெல்லுக்கு மாத்திரம் அல்ல, எல்லாப் பொருள்களுக்கும் கட்டுபடியாகக்கூடிய முறையில் விலையை நிர்ணயிக்க வேண்டும். விளைபொருள்கள் மார்க்கெட்டுக்கு வரும்போது விலைகள் இறங்காதவாறு மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஐ.ஆர். 8, எ.டி.டி. 27 என்ற விதைகளைப் பெருக்கு வதற்காக முயற்சிகள் எடுத்துக்கொள்ள இருப்பது பாராட்டத்தக்கது. ஒரு கருத்தை விவசாய நிபுணர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். இந்த விதைகள் எல்லாம் ஒட்டு விதைகள். ஒரு நெல்லிலிருந்து, ஒரு பயிரிலிருந்து தோன்றியவை. இரண்டு ரக விதைகளை எடுத்து ஒட்டி உண்டாக்கியது. இவை எல்லாம் மூலவிதைகளைப்போல கடைசி வரையில் இருப்பதில்லை. மூன்று, நான்கு, ஐந்து தலைமுறைகளுக்குப் பிறகு இந்த விதைகளினுடைய வீரியம் குறைந்து பின்னேக்கிப் போகக் கூடும். இந்த விஷயத்திலே விவசாய ஆராய்ச்சி நிபுணர்கள் கவனம் செலுத்திவர வேண்டும். ஐந்தாறு தலைமுறைகளுக்குப் பிறகு மீண்டும் புதியதோர் ஒட்டு விதைகளை உண்டாக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, எல்லா நிபுணர்களும் அதிகக் கவனம் எடுத்துக்கொண்டு இதனு டைய வீரியம் குறையாமல் பாதுகாக்க வழிவகை காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அமைச்சரவையில் விவசாயத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் குறைவாக இருக்கிறது. விவசாயத் துறைக் கும் நீர்ப்பாசனத் துறைக்கும் தொடர்பு இருக்க வேண்டும். இந்த வருடம் கிராண்டு அணைக்கட்டில் ஒரு உடைப்பு ஏற்பட்டது. பட்டுக்கோட்டைக்கு அருகில் 50 ஆயிரம் ஏக்கருக்குத் தேவையான நாற்று விடப்பட்டிருந்தது. இந்த உடைப்பின் காரணமாகப் பாழாயிற்று. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. மேலும் அவர்கள் இரண்டாம் போகத்திற்குப் பயிரிட முடியாத நிலைமை ஏற்பட்டது.

இரண்டாம் போகம் தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் அதிகரித்துக் கொண்டு போவது சரியல்ல. காரணம், தஞ்சை ஜில்லாவில் உற்பத்தி செய்யக்கூடிய சராசரி விளைச்சல் மிகவும் குறைவு. ஏக்கருக்கு 20 மூட்டை கூட இருக்காது. ஆனால், கோவை மாவட்டத்தில் ஏக்கரொன்றுக்கு முப்பது மூட்டை, நாற்பது மூட்டை என்று விளைவிக்கக்கூடிய நிலை இருக்கிறது. சராசரியாக முப்பது, நாற்பது மூட்டை விளைவிக்கிறார்கள். விவசாயத்தில் முன்னேற்றகரமான கருத்தை வைத்துக்கொண்டு, அந்த முறைகளை யெல்லாம் அனுஷ்டித்து அவர்கள் செய்து வருகிறார்கள். அங்கும் இரண்டாம் போகத்தை விஸ்தரிப்பது என்று சொல்லும் அளவுக்கு, கீழ் பவானிப் பகுதியில் நாம் ஏற்கனவே விட்ட அளவுக்குமேல் தண்ணீர் விட்டால், நிச்சயமாக நிரூபித்துக் காட்டுவோம், இந்தத் தேசத்தில் உற்பத் தியைப் பெருக்கிக் காட்டுவோம், தஞ்சை ஜில்லாவையும் விட, என்பதை அமைச்சரவை மனத்தில் கொள்ளவேண்டும்.

* **திரு. ஏ.ஆர்.சுப்பையா முதலியார் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர் களே, வேளாண்மைத் துறை மானியத்தின் பேரில் சில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன். இன்று முக்கியமாகத் தேசீய வருமானத் தில் 50 சதவீதம் விவசாயத்தின் மூலமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதில் மிகக் குறைந்த காலத்தில், மிக அதிக அளவுக்கு உற்பத்தி செய்யவேண்டும் என்ற திட்டத்தின்கீழ், இன்று வேளாண்மைத் துறை நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு நான் ஒரு யோசனை சொல்ல ஆசைப் படுகிறேன். மிகக் குறைந்த காலத்தில், குறைந்த அளவு தண்ணீரை வைத்துக்கொண்டு, அதிக அளவுக்கு எப்படி மகசூலைப் பெருக்குவது என்பதைத்தான் நாம் இன்றைக்கு ஆராய்ச்சி செய்யவேண்டிய தேவை இருக்கிறது. காரணம், கிட்டத்தட்ட 150 லட்சம் ஏக்கர் நம்முடைய நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. அதில் நெல் உற்பத்தியாகக்கூடிய பரப்பு 62 லட்சம் ஏக்கர். அதில் 1968–69-ல் 25 லட்சம் ஏக்கரில் மிகப் பலன்தரும் நெல் பயிர் செய்வதாகத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஏ. டி. டி. 27, சி. ஓ. 5, ஐ. ஆர். 8 என்ற வகைகளைப் பயிரிடுவதாகத் திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது. மொத்தம் 62 லட்சம் ஏக்கரில் நெல் பயிராகும் இடத்தில் 25 லட்சம் ஏக்கரில் மிகப் பலன் தரக்கூடிய நெல் பயிர் செய்யப்படுவதாகத் திட்டம் போட்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் கிட்டத்தட்ட நாலில் ஒரு பகுதியில்தான் அதிக உற்பத்திக்கு இன்று நாம் திட்டம் போட்டிருக்



கிறோம். முக்கியமாக நமக்குத் தேவையானது, குறைந்த தண்ணீரைக் கொண்டு அதிக உற்பத்தி பண்ணக்கூடிய 'ஸெமி ட்ரை பேடி' ஆகும். அந்த வகையில்தான் நம் நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு முயற்சி எடுக்கவேண்டும். இப்பொழுது எடுத்திருக்கும் முயற்சி, அதிக இடங்களுக்குப் பிரயோஜனப்படக்கூடிய நிலைமை இல்லை. காரணம், இன்று நாம் போட்டிருக்கிற திட்டமெல்லாம். அதிகத் தண்ணீர்த் தேவை உள்ளது. அதிகத் தண்ணீர் வைத்து, அதிக உற்பத்தி செய்யக்கூடிய திட்டம் போட் டிருக்கிறோம். என்னுடைய வேண்டுகோள், நாட்டில் நான்கில் ஒரு பகுதிக் காகத் திட்டம் போடுகிறோம். அந்த அளவிற்கு அதை நான் வரவேற் கிறேன், ஆனால், நான்கில் மூன்று பகுதியுள்ள நிலத்தையும் கவனிக்க வேண்டும். கிட்டத்தட்ட 110 லட்சம் ஏக்கரில் 25 லட்சம் ஏக்கருக்கு நாம் திட்டம் போடுகிறோம். பாக்கி முக்கால் பகுதிக்கு நாம் முக்கியமான திட்டம் ஒன்றும் போடவில்லை. அதற்கும் தீவிரத் திட்டம் வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அதற்கு என்னுடைய யோசனை என்னவென்றால், "ஸெமி ட்ரை பேடி" வேண்டும் என்பது. எங்கள் பகுதியில், நான்கு வருஷம் விளையாவிட்டாலும் நாங்கள், எனக்கு முன் பேசிய நண்பர் சொன்னபடி, முப்பது மூட்டை எடுக்கக்கூடிய நெல் தினுசு வைத்துக் கொண்டிருக்கிறோம். இது பற்றியெல்லாம் ஆராய்ச்சி தேவை. ஒரு பக்கம் ஆராய்ச்சி இருந்து கொண்டிருக்கிறது என்றாலும், முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆளும கட்சியில் இருப்பவர்களுடைய எண்ணம் அதிகத் தண்ணீர் தேவைப் படக்கூடிய நெல் தேவை என்பது. அதை மனத்தில்கொண்டு, குறைந்த தண்ணீர் வைத்து, அதிக உற்பத்தி பண்ணக்கூடிய நெல் திட்டத் தையும் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விதைப் பண்ணைக்கு இப்பொழுது போடப்பட்டிருக்கக்கூடிய திட்டம் வர வேற்கத் தக்கதுதான். ஓரிடத்தில் 3,200 ஏக்கர் வைத்து, விதை உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொன்னது மிகவும் வரவேற்கத்தகுந்தது. ஆனால், மேற்கொண்டும் கேட்டுக்கொள்வது விதைப் பரிசோதனை (ஸீட் டெஸ்ட்) தேவை என்பது. விதைப் பரிசோதனை செய்து, அதன் மூலமாக நல்ல விதைகள் எல்லோருக்கும் கொடுக்கக் கூடிய நிலைமை வேண்டும். பொது வாக, சர்க்காரிலிருந்து வரக்கூடிய விதைகள் எல்லாம் தரமுள்ளவைதான் என்கிற க்யாரண்டி இல்லை. சர்க்கார் விதைகள் 'ஸ்டாண்டர்ட்' ஆக இல்லை என்ற குறை இருந்துகொண்டிருக்கிறது. அதனால் ரெஸ்பான்சிபிலிடி ஃபிக்ஸ் பண்ணி, நல்ல தரமுள்ள விதையாகக் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து என்னுடைய முக்கியமான வேண்டுகோள், மரவள்ளிக் கிழங்கு இருக்கிறது, அதைப் பயிரிடுவதற்குத் தண்ணீரே வேண்டாம், அது நல்ல புரதச் சத்துள்ளது, நாட்டுக்கு அது மிகவும் தேவை, மலையாளத்தில் எல்லோரும் அதைக்கொண்டே வாழ்கிறார்கள் என்று சொல்லலாம், குறைந்த தண்ணீரில் நன்றாக விளையக்கூடிய மரவள்ளிக் கிழங்கு பயிரிட்டு அதை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளை நமது மாநிலத்தில் ஏற்படுத்த வேண்டும்.

வேளாண்மை ஆராய்ச்சியைப் பற்றி, எம். யூ. சி. 4, பருத்தி விதை; டி.எம். 7, நிலக்கடலை விதை ஒட்டு மொச்சை என்றெல்லாம் ஆராய்ச்சி செய்யப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1967–68-ல் இந்த ஆராய்ச்சி யாருக்காவது தெரியுமா? வேளாண்மைத் துறையில் நேரடியாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்குத் தெரியுமா என்றால், தெரியாது. ஒன் றிரண்டு ரகங்கள்தான் என் போன்றவர்களுக்கே தெரியக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, விவசாய ஆராய்ச்சி முடிந்தவுடன், அதனுடைய பயன் விவசாய மக்களுக்குப் போய்ச் சேரக்கூடிய நிலைமையில் 'ஃபாலோ–அப்' தேவை. விளம்பரம் தேவை. மக்களிடம் தொடர்பு வைத்து, அதைப் பயன்படுத்தக்கூடிய நிலைமையில் ஆராய்ச்சியின் முடிவுகள் மக்களுக்குப் போகக்கூடிய நிலையில் ஒரு செயின் ஆஃப் ஆக்ஷன் வேண்டும்.

[திரு. எ. ஆர். சுப்பையா முதலியார்] [1968 மார்ச் 14

மண் வளப் பரிசோதனை (ஸாயில் டெஸ்ட்) நிலையங்களை ஆறு, எழு இடங்களில் வைத்திருக்கிறார்கள். அதுவும் வரவேற்கத் தக்கதுதான். மோபைல் வான்மூலம் அந்த வசதியை மேலும் பயனுள்ளதாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மும்முரா வேளாண்மைத் திட்டம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் வரவேற்கத் தக்கது. ஆனால், அது செயல்படும் முறை சற்றுக் குறைவாக இருக்கிறது. வேளாண்மைத் துறைபற்றிய குறிப்பின் 32-வது பக்கத்தில், "இதன்மூலம் கிராம நிலைப் பணியாளர்களுக்கும் குடியானவர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுகின்றது. வேளாண்மையில் நவீன முறைகளைக் கையாளும்படி குடியானவர்களுக்கு அறிவுறுத்தவும் இத்திட்டம் வகை செய்கிறது.' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், எங்களுடைய ஜில்லா சம்பந்தப்பட்ட வரையில், தொடர்பைக் குறைக்கக் கூடிய நிலைமையில் 'ஃபார்ம் ப்ளான்' வேண்டாம் என்று கலெக்டர் நினைக்கிறார். இது இரண்டு இலாக்கா இருப்பதனால் ஏற்படக்கூடிய தொந்தரவாகும். திட்டங்களெல்லாம் ஒரு இலாக்காவிடம் கொடுக்க வேண்டும். நன்றாகச் செயல்படுகிறதா என்று பார்க்க வேண்டும். அதன் மூலமாக விரிவுபடுத்தினால் பொறுப்பு ஏற்படும்.

கிணறு வெட்டும் திட்டம் வரவேற்கக் கூடியதுதான். ஆனால், அதிலே கொஞ்சம் வருத்தத்தைத் தரக்கூடியது என்னவென்றால், 1968-69-ம் ஆண்டில், 16,000 கிணறுகள் வெட்டுவதற்காக மூன்று கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், 11 கோடி ரூபாய் செலவுக்கு வழி வகுக்கப் படுகிறது. வேளாண்மைத் தொழில் கழகம், நில அடைமான வங்கி மூலமாக என்று கண்டு இருக்கிறது. உடனடியாகச் செய்ய முடியுமா, இந்த வருஷத்திற்கு வருமா என்று ஐயப்பாடாக இருக்கிறது. ஆகையால், நம்முடைய மாநிலத்திற்குரிய பணத்தை அதிகமாக ஒதுக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சமுதாயக் கிணறு சம்பந்தமாகத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதெல்லாம் ஒரு முனையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம் பஞ்சாயத்தில்கூட சமுதாயக் கிணறு திட்டம் இருக்கிறது. ஆனால், ஒரு இலாக்காமூலம் செயல்பட்டால் நன்றாகச் செயல்படும்.

பவர் ஸ்ப்ரேயர் சம்பந்தப்பட்டமட்டில், ஒவ்வொரு கிராம சேவக் எரியாவுக்கும் ஒரு பவர் ஸ்ப்ரேயர் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி விட்டால் பயிர்ப் பாதுகாப்பு நல்ல முறையில் அமையும். அதைச் செய்ய வேண்டும் என்றால், ஒரு பவர் ஸ்பேரயர் ஒவ்வொரு கிராம சேவக் பொறுப்பில் இருக்கும்படி ஒரு திட்டம் வகுக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டு, க்ராப் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைக் குறித்து ஞாபகப்படுத்தி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

நண்பகல் 12-00

* **திருமதி சு. குப்பம்மாள்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாய அமைச்சர் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன். நமது அரசு, பதவிக்கு வந்தவுடன் மாவட்ட வாரியாக விவசாயக் கருத்தரங்குகளுக்கு ஏற்பாடுசெய்து, விவசாயிகளைக் கூட்டி வைத்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டு, ஆங்காங்கேயுள்ள அதிகாரிகளைச் சந்தித்து நடக்கவேண்டிய ஏற்பாடுகளை அவ்வப்போது செய்து வருகிறார்கள். இதுபோல எல்லாம் இதற்கு முன் இருந்த மந்திரி சபை செய்தது இடையாது. விவசாயிகளை அவர்கள் மறந்து செயல்பட்டு வந்ததற்கு விவசாயப் பெருங்குடி மக்கள் அவர்களுக்கு நல்ல பாடத்தைக் கற்பித்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன்தான் விவசாயிகளுக்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அவற்றை எல்லாம் செய்து கொண்டு வருகிறார்கள். விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய உரம் கிடைக்காமல் அல்லல்படும் நிலைபோகும் என்று சொல்லிக்கொள்கிற நிலை வந்திருக்கிறது. நல்லபொறுக்கு விதைகள் கொடுக்கப்படுகின்றன. கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஏராளமாக மின்சாரம் வழங்கப்படுகிறது.



1968 மார்ச் 14] [திருமதி சு. குப்பம்மாள்]

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் உள்ள சில குறைகளைச் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் அவற்றை நீக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செய்யாற்றில் இருந்து போளூர் ஏரிக்கு தண்ணீர் வரக்கூடிய கால்வாய் தூர் வாரப்படவேண்டும். சண்பகதோப்பில் நல்ல அணைகட்டக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தப்படியாக மண்டகுளத்தூர் ஏரியை சீர்திருத்த வேண்டும். ஜவ்வாது மலையில் விவசாயிகள் பயிரிடக்கூடிய நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போளூர் டவுனில் உள்ள விவசாய மக்களுக்கு விவசாயக் கடன் பாங்கு ஒன்று ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போளூர் தாலுக்காவில் கரும்பு பயிரிடும் விவசாயிகளின் நலனுக்காக அங்கே சர்க்கரை ஆலை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கே. சகாதேவக் கண்டர்:** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை மானியத்தின்மீது இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல முனைந்துள்ளேன். தமிழக அரசு வேளாண்மைத் துறையில் வேகமாகவும், துரிதமாகவும் செயல்படுவதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் விவசாய மக்கள் படும் கஷ்டங்களையும், அல்லல்களையும் கண்டு வேதனைப்படுகிறேன். ஏனெனில் இந்த ஆண்டில் விவசாய மக்கள் புதிய கிணறு வெட்ட மானியம் பெற்று முதல் தவணை வாங்கி ஓராண்டு ஆகியும், இரண்டாவது தவணை கொடுக்கப்படவில்லை. அதனால் அவர்களது வாழ்க்கையே ஸ்தம்பித்துவிட்டது. விவசாயம் பாதிக்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இரண்டாவதாக என்னுடைய வடஆற்காடு மாவட்டத்தில், ஒவ்வொரு இடத்திலும் புதிதாக பத்து, இருபது பம்பு செட்டுகள் அமைத்திருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு அமைத்து ஓராண்டு ஆகியும் இன்னமும் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. அதனால் பயிர் செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் வேதனைப்படுகிற நிலை இருக்கிறது. உடனடியாக கனெக்ஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக மனுக்கள் வந்துள்ளன. அதை அமைச்சருக்கு அனுப்பியுள்ளேன். 1968-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதிக்குள்ளாகவாவது அந்தக் குறைகள் நிவர்த்திக்கப்படவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் ஒரு போக நிலத்தை, இருபோகமாக மாற்றிச் சாகுபடி செய்திருக்கிறவர்களுக்கு நில்வரி ரத்து செய்யப்படுவதாக இங்கே குறிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் வரவேற்க வேண்டிய விஷயம். வட ஆற்காடு மாவட்டத்திலும் கிருஷ்ணகிரி வட்டத்திலும், சாத்தனூர் பகுதியிலும் அதுபோல இருபோகமாக மாற்றப்பட்டிருக்கிறது. இவர்களுக்கும் அந்தச் சலுகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைக் கழகத்தின்மூலம் கிணறுகள் வெட்டவும், விசையேற்றங்கள் ஏற்படுத்தவும் கோவை மாவட்டத்திற்கு 160 லட்சம்ரூபாயும், ராமநாதபுரத்திற்கு 45 லட்சம் ரூபாயும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு 145·50 லட்சம் ரூபாயும், மதுரை மாவட்டத்திற்கு 100 லட்சம் ரூபாயும், தருமபுரி மாவட்டத்திற்கு 100 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. அது வரவேற்கவேண்டிய விஷயம். வடஆற்காடு மாவட்டத்திற்கு ஏன் ஒதுக்கப்படவில்லை? அங்கே விசையேற்றம் வேண்டியதில்லையா, கிணறுகள் வெட்ட வேண்டியதில்லையா என்பதைச் சிந்தித்து நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீரிய விதை வழங்குவதில் கலப்படம் செய்யப்படுகிறது. ஒருவருக்கு வீரிய கம்பு என்று கொடுக்கப்பட்டது. அது சாதாரணக் கம்பாக இருக்கிறது. அதுபோல ரசாயன உரங்கள் வழங்குவதிலும் கலப்படம் செய்யப்படுகிறது.

யூரியா மூட்டையில் மணல் கலந்து விநியோகிக்கப்படுகிறது. போளூரில் தி. மு. க. செயலாளர் அவர்களின் சகோதரர் வாங்கிய மூட்டையிலேயே 10 சதவிகிதம் மணல் கலப்படம் செய்யப்பட்டிருந்தது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தி. மு. க. செயலாளர் வாங்கியதா ? அல்லது வழங்கியதா ?

**திரு. கே. சகாதேவக் கண்டர்:** அவர் வாங்கியதில்தான் கலப்படம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் கார்டு முறை வந்துவிட்டால் நல்லது. கலப்படம் செய்வதைத் தடுக்க கார்டு முறை வரவேண்டும்.

சிறுபாசனத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டிலே சுமார் 71 லட்சம் குறைக்கப்பட்டுள்ளது, இது வேதனைப்படவேண்டிய விஷயம். இப்படி 71 லட்சம் குறைத்தால் சிறுபாசனத் திட்டமே க்ஷீணதசை அடைந்துவிடும். எனது தொகுதியில் புயலால் பாதிக்கப்பட்ட அணைகள் உடைந்திருக்கின்றன. சிறு சிறு ஏரிகள் உடைந்து கிடக்கின்றன. டி. டி. வி. மீட்டிங்கில் வற்புறுத்தியும் செயல்படாமல் இருக்கிறது. அவற்றை உடனடியாகச் செப்பனிட 1968–69-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திருமதி. கே. பி. ஜானகியம்மாள்:** தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். சென்ற ஆண்டுகளில் பெரும் அணைக்கட்டுகள் கட்டுவதற்கும், மற்றப்பல காரியங்களுக்கும் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்பட்டிருந்தும், விவசாயம் பெருகுவதற்கும், ஏழை விவசாய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கும் எந்த விதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வேளாண்மைக்காகச் சிறுபாசனத் திட்டங்களில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டது. அதைச் செய்வதற்காக இன்றைய தினம் தமிழக அரசு கொடுத்திருக்கிற மானியக் கோரிக்கைகளில், சிறுபாசனத்திற்காக அதிக கவனம் செலுத்தியிருப்பதற்காக நான் வரவேற்கிறேன். 1967–68-ம் ஆண்டில் 223·10 லட்சம் செலவழிக்கப்பட்டது. 1968–69-க்கு 253 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பது வரவேற்கக் கூடியது. சிறு பாசனத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்கு ஆவல்கொண்டு இருப்பது இதிலிருந்து தெரிகிறது. இம்மாதிரி ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் அதிகப்படியாகக் கவனிக்கப்படாமல் இருப்பதை பார்க்க முடியும். என்னுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் மேலக்காலிலிருந்து மாடக்குளம்வரையில் ஒரு கால்வாய் இருக்கிறது. அதில் இருபக்கமும் தென்னை மரங்கள் வளர்ந்து அந்தக் கால்வாய் மூடிப்போய்க் கிடக்கிறது. அந்தக் கால்வாயை மராமத்து செய்தால், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யப் பயன்படும். அதேமாதிரி தஞ்சை மாவட்டத்திலும் வடிகால் திட்டத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்வதை விட்டுவிட்டு, ஒரு மாஸ்டர் பிளான் அதற்காகப் போட்டு விசேஷ கவனஞ் செலுத்தினால் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு அதிகப் பயன் கிட்டும். லட்சக்கணக்கான டன் உணவு உற்பத்தி பெருக உதவும். ஒரு ஏக்கருக்கு 15 மூட்டை அல்லது 20 மூட்டைதான் தஞ்சையில் இப்பொழுதுகிடைக்கிறது. இந்தவடிகால் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் மதுரை மாவட்டத்தில் விளைவதைப்போன்று ஒரு ஏக்கருக்கு 30 மூட்டை முதல் 40 மூட்டைவரையிலும் விளையச் செய்வதற்கு வழியிருக்கிறது. ஆகவே, அதற்காக ஒரு மாஸ்டர் பிளான் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மண்வளப் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மண்வளப் பரிசோதனையும் செய்ய வேண்டிய ஒன்றுதான். பிரிட்டிஷ் சர்க்கார் காலத்திலே மண் வளப் பரிசோதனை நடந்து எப்படிப்பட்ட நிலங்கள் என்று தரம் பார்த்து அப்பொழுது தீர்வையை நிச்சயம் செய்தார்கள். இப்பொழுது பார்த்தால், அந்த நிலம் நல்ல நிலமாக இருக்கும், முதல் தரமான நஞ்சை நிலமாக இருக்கும், அதற்கு 10 ரூபாய் கிஸ்தி என்று இருக்கும், அதே சமயத்தில் உப்பு நிலமாக இருக்கும், அதற்கு 40 ரூபாய் என்று கிஸ்தி இருக்கும். ஆகவே அப்



படி இல்லாமல் நல்ல நிலங்கள் எவையெவை, உப்பு நிலங்கள் எவையெவை என்று பார்த்து அதற்குப்பிறகு தீர்வையை நிர்ணயம் செய்தால் அதன்மூலம் அரசாங்கத்திற்கு அதிகப்படியான வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேயிலைத் தோட்டங்களில் பார்த்தால் ஒருவருக்கு 1,000 ஏக்கர் சொந்தம் என்றால், பக்கத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தையும் சேர்த்துக்கொண்டு அதுவும் எனக்கு சொந்தம் என்று சொல்கிறார்கள். அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்ற அப்படிப்பட்ட நிலங்களைப் பொறுத்தவரையில், பட்டா இருக்கிறதா என்று பார்த்து பட்டா இல்லையென்றால் அவற்றை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும், பட்டா இருந்தால் அதற்கும் சேர்த்துத் தீர்வை வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் அரசாங்கத்திற்கு வருமானமாகக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடமலைக்குண்டு பகுதியில் 40 ஆயிரம் ஏக்கர் வரையில் விவசாய மக்களுக்குக் கொடுக்கக்கூடிய சாதனையை ஏற்படுத்திய நம்முடைய சர்க்காரை நான் வரவேற்கிறேன். வாழ்த்துகிறேன். அதே மாதிரி ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு தரிசு நிலங்கள் இருக்கின்றது என்று பார்த்து, சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு அப்படிப்பட்ட நிலங்களைப் பிரித்துக் கொடுக்கவேண்டும். அடுத்தது சிறு விவசாயிகள் பட்டிருக்கின்ற கடனைப் பற்றியும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது என்ன நிலைமை இருக்கிறது என்று சொன்னால் விவசாயிகளுக்கு அதிகமாகக் கடன் தேவைப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஊருக்களிலே எல்லாம் புதிய புதிய வட்டிக் கடைகளும் பெருகி விட்டன. அந்தக் கடைகளிலே விவசாயிகள் கடன்கள் அதிகமாகப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் கடன் வாங்காமல் இருக்கவேண்டுமானால் விவசாயிகளுக்கு காலத்தில் கடன் கிடைக்கவேண்டும். கூட்டு பட்டா என்ற காரணத்தால் கடன் கிடைக்காமல் போகிறது. உடனடியாகக் கிடைக்கக் கூடிய வழியைச் செய்தால் அவர்கள் புதிய வட்டிக் கடைகளுக்குப் போய் வாங்க வேண்டிய நிலைமை ஏற்படாது. மேலும் கரும்பு அல்லது நிலக்கடலை, பருத்தி, மிளகாய் போன்றவற்றை விவசாயம் செய்யக்கூடிய சிறிய விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்க வேண்டும். நியாயமான விலை கிடைப்பதற்கு ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் என்பதை அமைத்து அதன் மூலம் உதவி செய்யலாம். அப்படி இன்று சில ஜில்லாக்களிலே இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் அது கிடையாது. அதுமாதிரி அமைத்து பருத்தி, கடலை, வெல்லம் மிளகாய் எள்ளு, முந்திரி, போன்றவற்றிற்கு நியாயமான விலை கிடைப்பதற்கு வழி செய்தால்தான் சிறு விவசாயிகள் எல்லாம் பயன் அடைவார்கள். ஒரு ரூபாய்க்கு விவசாயி பொருளை விற்கிறான் என்று சொன்னால் உண்மையாக 50 பைசாதான் விவசாயிக்கு கிடைக்கிறது. மீதி 50 பைசா இடைத் தரகர்களுக்கு சுரண்டலாகப் போய்விடுகிறது. இடைத் தரகர்கள் அவற்றை சுரண்டக் கூடிய நிலையைத் தடுத்து உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை அமைத்து பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உரம் தயாரிக்கக் கூடிய நேரத்திலே ரசாயன உரம் என்பதோடு பசுந்தாள் உரத்தையும், கம்போஸ்டு உரத்தையும் பஞ்சாயத்து யூனியன்களிலே அதிகப்படியாக விசேஷ கவனஞ்செலுத்தி அதன் உற்பத்தியில் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க செய்தால் தழை உரங்களும் கம்போஸ்டு உரங்களும் ஏழை விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் கிடைக்கக் கூடிய வசதி ஏற்படும். இந்த குறைபாடுகளையெல்லாம் எடுத்துச் சொல்லும்பொழுது பல நல்ல அம்சங்களையும் வரவேற்று, சிறுபாசனத் திட்டங்களையும் ஏழை எளிய மக்களையும் கவனத்தில் வைத்துக்கொண்டு எதிர் காலத்திலே ஒரு நல்ல வேளாண்மைப் பெருக்கத்தை உண்டாக்கி இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன் இதற்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொன்னது போல் உணவு உற்பத்தி என்பது மிகவும் முக்கியமான பிரச்னையாகும்.

எந்தத் தொழிலிலே நாம் முன்னேறி இருந்தாலும் உணவு உற்பத்தியிலே ஒரு கணிசமான அளவுக்கு முன்னேறாவிட்டால் அது தன்னிறைவு பெற்றதாகச் சொல்லமுடியாது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலே, ஒரு போகத்தை இரண்டு போகங்கள் ஆக்குவோம், நிறைய கிணறுகளைத் தோண்டுவோம், விவசாயிகளுக்குப் பம்புசெட்டுகள் கொடுப்போம் என்று சொல்வதினாலேயே உணவு உற்பத்தி பெருகிவிட்டது என்று சொல்லமுடியாது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முன்னால் உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய விவசாயிகள் நிலைமை மோசமாக இருக்கிறது, அவர்கள் கடன்பட்டிருக்கிறார்கள், அவர்கள் அறுவடை செய்தவுடனேயே கடன் கொடுத்தவர்கள் பாக்கிக்காக நெல்லை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் என்ற நிலைமையைப் பார்க்க வேண்டும். விவசாயிகளின் கடன் எந்த அளவிலே இருக்கிறது என்பதை மாநில முழுவதற்கும் ஒரு சர்வே செய்து அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில கல்டிவபிள் வேஸ்ட் லேண்ட் எங்கு எங்கு இருக்கிறது, விவசாயம் செய்யக்கூடிய புறம்போக்கு நிலங்கள் எங்கு எங்கு இருக்கிறது என்று சர்வே செய்ய வேண்டும். ஒரு போகத்தை இரண்டு போகமாக மாற்றுவதற்கு முன்னால் சர்வே செய்து, அவற்றை எந்த அளவுக்கு விவசாயத்திற்கு கொண்டு வரமுடியும் என்று பார்க்கவேண்டும். இந்த மானியக் கோரிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதாது என்றுதான் சொல்லமுடியும். மற்ற டிமாண்டுகளுக்கு ஒதுக்கியிருப்பதைக் காட்டிலும் குறைவுதான், விவசாயத்திற்கு 50 சதவீதமாவது ஒதுக்கியிருந்தால் என்போன்ற விவசாயிகள் வரவேற்க முடியும். சிறு பாசனத் திட்டங்களுக்காக 1966-67-ல் 324·99 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1967-68-ல் 247·61 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1968–69-ல் 253 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 72 லட்சம் வரை குறைந்திருக்கிறது. சிறு பாசனத்தைப் பொறுத்தவரையில் முழு கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ரயத்வாரி கண்மாய்கள் 12,231 இருக்கின்றன. அவற்றில் கடந்த 12 ஆண்டுக்கால ஆட்சியிலே 1,390 தான் வேலை செய்யப்பட்டிருக்கின்றன. ஜமீன்தாரி கண்மாய்களை எடுத்துக் கொண்டால் 12,418 இருக்கின்றன. அவற்றிலே கடந்த 15 ஆண்டுக்கால ஆட்சியிலே 3,767 கண்மாய்கள் தான் வேலை செய்யப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றியெல்லாம் ராயப்பா ரிப்போர்ட்டிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் பொழுது பெரிய பெரிய நீர்த்தேக்கங்களை எல்லாம் முடித்துவிட்டோம் சிறு பாசனத்திற்குத்தான் கவனம் செலுத்தவேண்டும், அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. அதைப் பார்க்கும்பொழுது கிட்டத்தட்ட 20 ஆயிரம் கண்மாய்கள் மராமத்துச் செய்யப்படாமல் இருக்கின்றன ஆகவே இவற்றில் அதிகமான கவனஞ்செலுத்தினால்தான் உணவு உற்பத்தியைப் பெருக்கமுடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தூர் எடுப்பது, செம்மைப்படுத்துவது என்ற வகையில் ஒதுக்கப்பட்ட பணம் 1967–68-ல் 8·14 லட்சம் ரூபாய் 1968–69-ல் 7 லட்சம் ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முன்பு ஒதுக்கப்பட்டதைவிட 1,14,000 ரூபாய் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் அதிகமான பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு அதிகமான விலை கொடுக்கவேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக பொருள்களின் விலை எந்த அளவு இருந்தது, இப்போது எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை ஒப்பிட்டு பார்த்து நெல் விலையை அதிகமாக்கிக் கொடுக்கவேண்டும் முன்பு ஒரு மூட்டை புண்ணாக்கு 3 ரூபாயாக இருந்தது, இப்போது 50 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஒரு





மாடு பத்து வருடத்துக்கு முன்னால் 100 ரூபாய் என்றால் இப்போது 500 ரூபாயாக விற்கிறது. அப்போது ஆண்களுக்கு ஒரு நாளைக்குக் கூலி 36 காசாக இருந்தது. இப்போது கிட்டத்தட்ட 2½ ரூபாய், 3 ரூபாய் என்ற அளவுக்குக் கொடுக்கப்படுகிறது. ஒரு பித்தளைப் பாத்திரம் ஆறணாவுக்கு வாங்கியது, இப்போது 16 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. முன்பு ஒரு ரூபாய் எடுத்துக்கொண்டு போனால் ஒரு வேஷ்டி, துண்டு. சட்டையெல்லாம் வாங்கலாம். இப்போது பத்து ரூபாய் எடுத்துக் கொண்டு போனால்கூட எல்லாவற்றையும் வாங்க முடியாது. தீப்பெட்டி 2 காசாக இருந்தது 7 காசாக உயர்ந்திருக்கிறது. மண்ணெண்ணெய் 12 காசாக இருந்தது 40 காசாக உயர்ந்திருக்கிறது. இப்படிப் பத்துப் பதினைந்து மடங்குக்கு மேல் மற்றப் பொருள்களின் விலைகள் ஏறியிருக்கும்போது நெல்லின் விலையை மட்டும் உயர்த்தாமல் இருப்பது வருந்தத்தக்கது.

முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் 1959-ல் ஒரு ரிப்போர்ட் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதிலே—

'The greatest incentive to the agriculturists is to go all out and increase the yield in their lands to the utmost extent and to assure them of a reasonable price for the produce.'

என்று சொல்லியிருக்கிறார்கள். விவசாய சம்பந்தமாக என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி கமிட்டிகள் அமைக்கப்பட்டு, அதிலே சொல்லப்பட்ட கருத்துக்கள் எதுவும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. ஒரு கடிகாரத்தை எடுத்துக் கொண்டால் 100 ரூபாய் விலை, இவ்வளவு அசல் இவ்வளவு லாபம் என்று கூறுகிறான். ஆனால் ரத்தத்தை வியர்வையாகப் பாடுபடுகின்ற விவசாயி தான் விளைவித்த பொருளுக்கு என்ன விலை என்பதைச் சொல்ல முடியாத நிலையிலே வைக்கப்பட்டிருக்கிறான். ஆகவே இன்றையத் தினம் உள்ள விலைவாசி நிலைமைக்கேற்ப நெல்லுக்கு விலையை உயர்த்திக் கொடுத்தால்தான் விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரம் உயரும், விவசாயி முன்னேற முடியும் என்று கூற விரும்புகிறேன்.

சாதாரணமாக, இப்போது ஒரு ஏக்கரிலே 560 ரூபாய் வருமானம் வருகிறது என்று வைத்துக் கொள்வோம். அதிலே செலவு 250 ரூபாய் போக 310 ரூபாய் மிச்சமாகிறது. ஆக, மூன்று ஏக்கர் வைத்திருக்கக் கூடிய விவசாயிக்கு ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது. அந்த ஆயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு அந்த விவசாயி திருவிழாவுக்குப் போகவேண்டும், கல்யாணச் செலவு செய்யவேண்டும், பிள்ளைகளைப் படிக்கவைக்கவேண்டும், வைத்திய வசதி செய்ய வேண்டும். அந்த ஆயிரம் ரூபாயிலே இவற்றையெல்லாம் செய்துக் கொள்ள முடியுமா என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதே சமயத்தில் ஒரு ரயில்வேத் தொழிலாளிக்கு 2,500 ரூபாய் வருமானம் வருகிறது. வைத்திய வசதி, வீட்டு வசதி எல்லாம் கொடுக்கிறார்கள். மில் தொழிலாளியை எடுத்துக் கொண்டால் 3,000 ரூபாய் வருமானம் வருகிறது. வைத்திய வசதி, வீட்டு வசதி கொடுக்கிறார்கள், போனஸ் கொடுக்கிறார்கள். இவ்வாறு பார்க்கும்போது விவசாயிகளின் நிலைதான் மோசமாக இருக்கிறது.

(மணி அடிக்கப்பட்டது)

* **திரு. கே. என். சாமிநாதன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச சந்தர்ப்பம் அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்று ஓராண்டுக்குள்ளாக விவசாயத் துறையில் தமிழகம் எவ்வளவோ முன்னேறி இருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. தஞ்சை மாவட்டத்தில் ஒரு போக நிலங்களை இரு போகமாகவும், இரு போக நிலங்களை மூன்று போகமாகவும் ஆக்கியது மகத்தான சாதனையாகும். கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் சென்ற ஆண்டு மழை மிகக் குறைவாக இருந்தும், அணைக்கட்டுப் பகுதிகளில் மழை மிகக் குறைவாக இருந்தும் கூட நல்ல முறையில் நெல் மகசூல் கிடைத்திருப்பது அரசின் முயற்சியை எடுத்துக்

காட்டுவதாக இருக்கிறது. கடந்த 20 ஆண்டுகளாக நாட்டை ஆண்டவர்
கள் விவசாயத் துறையில் சரியான அக்கறை காட்டாததன் விளைவாகத்
தான், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப்போட்டு நிறைவேற்றியும்
உணவுப் பொருள்களுக்கு வெளிநாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்
நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய திராவிட முன்
னேற்றக் கழக அரசு கடந்த ஓராண்டுக் காலத்தில் விவசாயத்திற்கு
மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்பதை நான் உறுதியாகச்
சொல்ல முடியும்.

உதாரணமாக, விவசாயிகளுடைய குறைகளைக் கேட்டறிவதற்காக
மாவட்டந்தோறும் விவசாயக் கருத்தரங்குகளை நடத்தி, அவற்றிலே
கூறப்பட்ட கருத்துகளுக்கு மதிப்பளித்து உடனடியாக சம்மந்தப்பட்ட
அதிகாரிகள் வந்து இருக்கின்ற குறைகளை நிவர்த்தி செய்திருக்கிறார்கள்.
சென்ற முறை இதே மன்றத்தில விவசாய மானியக் கோரிக்கைமீது
பேசுகின்றபோது குறிப்பிட்டேன். "விவசாயிகள் ஒவ்வொருவரும் தனிப்
பட்ட முறையில் டிராக்டர்கள் வாங்கி வைத்து உபயோகிக்க முடியாது.
ஏனென்றால் டிராக்டர் விலை 30,000 ரூபாய்க்குக் குறைவில்லாமல் இருக்
கிறது. ஆகவே ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் டிராக்டர்களை
வாங்கி மலிவான வாடகைக்கு விவசாயிகளுக்குக் கொடுக்க
வேண்டும்" என்று குறிப்பிட்டேன். ஆறுமாத காலத்திற்குள்
ளாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் டிராக்டர்கள் வாங்கி
வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்குக் கொடுத்து வருகிற நிலைமை
இன்றையதினம் இருந்து வருகிறது. அதேபோல் கோவை மாவட்டத்
தில் நடந்த விவசாயக் கருத்தரங்கில் பேசியபோது என்னுடைய தொகுதி
யில் உள்ள சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றிக் குறிப்பிட்டேன்.
15 நாட்களுக்குள்ளாக அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என்னிடம் வந்து
அந்தச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றித் தருவதற்கான
ஆலோசனைகளை நடத்தினார்கள். விவசாயிகளுடைய குறைகளைக் கேட்ட
உடனேயே அதற்குத் தகுந்த பரிகாரங்களைத் தேடுகின்ற நடவடிக்கை
யில் சர்க்கார் உடனடியாக ஈடுபடுகிறது என்பதைச் சுட்டிக்காட்டவே
இவற்றைக் கூறினேன்.

இனி, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை உள்ள சில
குறைபாடுகளைச் சொல்ல விரும்புகிறேன். வெள்ளக்கோயில் ஊராட்சி
ஒன்றியம், மூலனூர் ஊராட்சி ஒன்றியம் ஆகிய இரண்டு பகுதிகளும்
சேர்ந்தது என்னுடைய தொகுதி. வெள்ளக்கோயில் ஊராட்சி ஒன்றி
யத்தில் இரண்டு மூன்று கிராமங்கள் கீழ் பவானி பகுதியில் பாசனம்
பெறுகிறது. மற்றப் பகுதிகள் மிகவும் வறண்ட நிலைமையில், குடிப்ப
தற்கே தண்ணீர் இல்லாத நிலைமையில் ஆண்டுதோறும் லாரிகள்
மூலமாகத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது.
வெள்ளக்கோயில், தீத்தாம்பாளையம் ஆகிய இரண்டு ஊர்களுக்கு
தண்ணீர் ஊற்றுவதற்காகக் கொடுக்கப்பட்ட லாரி வாடகை ஏறத்தாழ
பத்து ஆண்டுகளுக்கு 50,000 ரூபாய் ஆகியிருக்கிறது. இதற்கு முன்பு
ஆட்சியில் இருந்தவர்களிடம் எவ்வளவோ சொல்லியும் கவனிக்காமல்
இருந்து விட்டார்கள். நம்முடைய அரசு, புதிய அரசு, அறிஞர்
அண்ணாவின் தலைமையில் இயங்குகின்ற அரசு, குடிதண்ணீர்ப் பிரச்சி
னையைத் தீர்க்கும் வகையில் அதற்கான திட்டத்தை உடனடியாக
நிறைவேற்றித் தரும் என்று நம்பிக்கையோடு இருக்கிறேன். அந்தப்
பகுதி மக்களும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

மூலனூர் பகுதிக்கு எந்தவித நீர்ப்பாசனத் திட்டமும் பயன்தர
வில்லை. அந்தப் பகுதி அமராவதி நீர்ப்பாசனத் திட்டத்திலோ, பரம்பிக்
குளம் நீர்ப்பாசனத் திட்டத்திலோ பயன்பெற வசதி இல்லை. ஒரே
வழி, கண்ணடிப்புத்தூர் என்ற இடத்தில் அமராவதியிலிருந்து
வாய்க்கால் வெட்டித் தண்ணீரைக் கொண்டுவருவதன்மூலம் அந்தப்
பகுதி நிலங்கள் பசுமையாக முடியும் என்ற நிலை இருக்கிறது.
இதற்கு முந்தி இருந்த அரசுகூட நில ஆராய்ச்சி செய்துபார்த்து
100 அடிக்கு ஒரே பாறையாக இருக்கிறது, தண்ணீர் இல்லை என்று





முடிவைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இந்த அரசு
எப்படியாவது மனம் வைத்து நிறைவேற்றித் தந்தால் அந்தப் பகுதி
செழிப்பாக முடியும். வெள்ளக்கோயில் பகுதிக்கு வாய்க்கால் வர
வேண்டுமென்றால் கேரள முதலமைச்சருடன் பேரறிஞர் அண்ணா
அவர்கள் கலந்துபேசி ஒப்பந்தம் செய்தால் ஆனைமலையாறு, நீராறு
தண்ணீர் நம்முடைய பகுதிக்கு வர முடியும். அதன்மூலம் பரம்பிக்
குளம் ஆளியாறு வாய்க்காலை வெள்ளக்கோயில் பகுதிவரை நீட்ட
முடியும். இந்தத் திட்டங்கள் அறிஞர் அண்ணா அவர்களின் திறமை
யினாலும், ஆற்றலினாலும் நிறைவேறும் என்ற நம்பிக்கையைத் தெரி
வித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சா. மெய்யப்பன்:** அவைத் தலைவர் அவர்களே, இந்த
வேளாண்மைத் துறை மானியத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்வ
தற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியை முதலில் தெரி
வித்துக்கொள்கிறேன். வேளாண்மையைப் பொறுத்தவரையில்,
வேளாண்மை செய்ய இடம் வேண்டும், தகுந்த ரகங்கள் வேண்டும்,
நல்ல தரம் வேண்டும், உரம் வேண்டும், நீர் வேண்டும், பிறகு நிதி
வேண்டும். இவை அனைத்தும் இருக்கின்றன. இருந்தாலும் நிறைய
இடம் இருக்கும் இடத்தில் நல்ல தரமான விதைகள் போட்டு, நல்ல
உரங்கள் போட்டுச் செய்தாலும் நீர் மிக மிக அவசியமானது. சில
பகுதிகளில் நீர் வளம் இயற்கையாகவே நன்றாக அமைந்திருக்கிறது.
குறிப்பாக சோழநாட்டை எடுத்துக் கொண்டால், அங்கு நீர் வளம்
நிறைந்து ஆறுகள் பல நன்றாக ஓடுகின்றன. ஆறுகளில் நிறையத்
தண்ணீரும் ஓடுகிறது. ஆனால் ராமநாதபுரம் போன்ற பகுதிகளை
எடுத்துக்கொண்டால், அங்கு ஆறுகள் இருந்தாலும் அவற்றில் தண்ணீர்
ஓடுவதில்லை, மணல்தான் ஓடுகிறது. அங்கு ஆற்று நீர் இல்லாவிட்டா
லும் ஊற்று நீர் அதிகமாக இருக்கிறது. காரைக்குடியில் எலக்ட்ரோ
கெமிக்கல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டில் மூன்று ஆழ் கிணறுகள் வெட்டப்
பட்டன. ஒவ்வொரு கிணறிலும் ஒவ்வொரு நாளும் லட்சம் காலன்
தண்ணீர் கொடுக்கிறது என்ற நல்ல தகவல் கிடைத்து அது ஒப்புக்
கொள்ளப்பட்டிருக்கிறது. காரைக்குடி பகுதியில் நல்ல வளமான
ஊற்றுகள் இருக்கின்றன. இப்படி நல்ல பல ஊற்றுகள் இருந்த
போதிலும், அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தும் வகையில்
விசை இயந்திரங்களைக் கொடுத்து அதன் மூலம் வேளாண்மை
உற்பத்தியைப் பெருக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தஞ்சை
மாவட்டத்தில் நிறையத் தண்ணீர் இருந்தாலும் அந்தத் தண்ணீரைப்
பயிருக்குமட்டும் பயன்படுத்துவதில்லை. மின்சாரம் தருவதற்காகவும்
அது பயன்படுத்தப்படுகிறது. அங்கு நிலம் அதிகமாக இருக்கிறது.
ஆகவே அதிகமான நிலம் உள்ள இடத்தில் கைத்தொழில்களை வளப்
படுத்தவேண்டுமென்று நினைக்கக் கூடாது. நிலம் அதிகமாக உள்ள
இடத்தில் விவசாயத்தைத்தான் வளப்படுத்தவேண்டும். நிலம் அதிக
மாக இருந்தும் நீர்வளம் இல்லாதவிடங்களில் நீர்வளத்தைக் கொடுக்
கும் விதத்தில் ஊற்றுக் கிணறுகளை அதிகமாகத் தோண்டி மின்சார
வசதியோடுகூட அந்த நீரை எடுத்து வேளாண்மை வளர்ச்சிக்கு உப
யோகப்படுத்தவேண்டும். தண்ணீர் இல்லாத இடங்களில் ஒவ்வொரு
ஏரியாவிலும் போக்குமடை வைத்து ஆழ்கிணறுகள் தோண்டப்பட
வேண்டும். அவற்றில் பம்ப்செட்களைப் பொருத்தி தண்ணீர் எடுத்து
வழங்கப்படவேண்டும்.

காரைக்குடிப் பகுதியிலிருந்து வருகிற அரிசி, மிகுந்த ருசி உள்ள
அரிசி என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். முள்ளிக்குண்டு,
புதுப்பட்டி, ராயபுரம் கத்திரிக்காய் சிறியதாக இருந்தாலும் நல்ல
ருசியாக இருக்கும். அப்படி ருசியாகவுள்ள அரிசி, கத்திரிக்காய் இவை
கிடைக்கவேண்டுமென்றால் அவ்விடங்களில் தண்ணீர் வசதி செய்து
தரப்படவேண்டும். அதற்கான திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். அத்
திட்டங்கள் இப்போது இல்லை என்று நான் சொல்லவில்லை. இருந்
தாலும் அவற்றை வலுப்படுத்தி விவசாயிகளுக்கு நல்லமுறையில்
தண்ணீர் கொடுக்கக்கூடிய அளவிற்கு வழிவகை செய்யவேண்டும்.

குறிப்பாகத் திட்டங்கள் வகுக்கப்பட்டு இலாகாக்களுக்குப் பிரித்துக் கொடுக்கும்போது, தென்னைக்காக கடன் வாங்குவதற்கு எந்த இலாகாவிற்குச் செல்லவேண்டும் என்று விவசாயிகளுக்குத் தெரியாத நிலையில் பாதிக் காலம் அதில் ஓடிவிடுகிறது. அங்கு பேப்பர் சுற்றுகிற நிலையில் பாதிக் காலம் ஓடிவிடுகிறது. கடைசியில் அந்த விவசாயி கடன் வாங்கும்போது அவருக்கு வருவது கால் பகுதிதான் வருகிறது. இந்த நிலை அகற்றப்பட்டு விவசாயிகளுக்குத் தெரியக்கூடிய அளவில் செய்து பேப்பர்களைத் துரிதமாக அனுப்ப, அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

அடுத்தபடியாக, உரம் தயார் செய்வதுபற்றி ஒன்று கூற விரும்புகிறேன். செயற்கை உரங்கள் தயார்செய்யப்பட்டு கொடுக்கப்படுகின்றன. மண்ணில் எந்த வளம் இருக்கிறதோ, அதைச் சற்று அதிகப்படுத்த இந்தச் செயற்கை உரங்கள் பயன்படுகின்றனவே தவிர, மண் வளத்தை மேம்படுத்தும் அளவிற்குச் செயற்கை உரங்கள் பயன்படுவதில்லை. ஆகவே இயற்கை உரங்களை நல்லமுறையில் ஏராளமாக உற்பத்தி செய்யவேண்டும். இயற்கை உரங்களை யார் எங்கு அதிகமாகத் தயார் செய்கிறார்களோ, அவர்களுக்குப் பரிசு கொடுக்கவேண்டும். இப்படிப் பரிசு வழங்கும் ஒரு முறையைக் கிராமங்களில் ஏற்படுத்தினால் நல்ல லாபகரமாக இருக்கும். இயற்கை உரங்கள்மூலம், தழை உரம், பசுந்தாள் உரம், கம்போஸ்ட் உரம் இவைமூலம் மண்ணை வளப்படுத்தவேண்டும், இப்போது செயற்கை உரங்கள்மீது ஒரு மோகம் ஏற்பட்டிருக்கிறது. அதில் நாம் அதிகக் கவனம் செலுத்தத் தேவையில்லை. இயற்கை உரங்களை அதிகப்படியாக உற்பத்தி செய்வதில்தான் நாம் அதிகபடியான கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, நான் ஒன்றை முக்கியமாகக் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்கள், கம்ப்யூட்டேர்ஸ் வந்தவுடன் எங்களுக்கு வேலை போய்விடுகிறதே என்று சொல்கிறார்கள். இப்போது அதேமாதிரி ஒரு நிலை விவசாயத் துறையில் இருக்கிறது. எந்த இடங்களில் நிலப் பரப்பு அதிகமாக இருக்கிறதோ, அந்த இடங்களில் மக்கள் தொகை அதிகமாகயிருந்தால் அங்கு ட்ராக்டர்கள், இயந்திர ஹார்வெஸ்டேர்ஸ், டிரான்ஸ்ப்ளான்டேர்ஸ், இவற்றை உபயோகப்படுத்துவது என்பது சரியல்ல. அது அவ்வளவு நல்லதல்ல. கம்ப்யூட்டேர்ஸ் வைப்பதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது என்று படித்தவர்கள் சொல்கிறார்கள். அதேபோல் இந்த வாயில்லாப் பூச்சிகள், எங்களுக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது என்று ஒரு காலத்தில் சொல்லக் கூடும், இந்த இயந்திரச் சாதனைகள் அதிகமானால். ஆகவே நில வளம் அதிகமாக இருந்து மக்கள் தொகை குறைவாக இருக்கும் இடங்களில், வேலை செய்வதற்குத் தகுந்த அளவில் ஆள்கள் இல்லாத இடங்களில், ட்ராக்டர்கள் போன்றவற்றைப் பயன்படுத்த உதவி செய்யலாமே தவிர, நிலப்பரப்புக் குறைவாக இருந்து மக்கள் தொகை அதிகமாகயிருக்கும் இடங்களில் அங்குள்ளவர்களுக்கு ட்ராக்டர்கள் போன்றவை வழங்கப்படக்கூடாது, அப்படி வழங்குவதினால் அங்குள்ளவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். ஆகவே இதில் தக்க கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு சிகப்பு லைட் எரிவதால் இத்துடன் முடித்துக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

* **திரு. ஆர். கருப்பையா:** சட்டமன்றத் தலைவர் அவர்களே வேளாண்மைத் துறை மானியத்தின்மீது பேச எனக்கு அனுமதி கொடுத்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்று நம் தமிழகம் விவசாயப் பெருங்குடி மக்களைக் கொண்டதொரு மாநிலமாயிருந்தாலும், விவசாய வளர்ச்சியில் நாம் பின்தங்கித்தான் இருக்கிறோம். விவசாயிகள் வாழவேண்டும், அவர்கள் வளரவேண்டும் என்று பேசுகிறோம். ஆனால் அரசாங்கம் கொடுக்கிற சலுகைகள் முழுமையும் விவசாய மக்களுக்குக் கிடைக்கக் கூடிய வழி இல்லாமல் இருக்கிறது. ஆகவே அரசாங்கம் விவசாயிகளுக்காகச் செய்கிற ஒவ்வொரு திட்டத்தின் பலனும் விவசாயிகளுக்கு





நெருக்கடியில்லாமல், தாமதம் இல்லாமல் போய்ச் சேருவதற்கு வழிவகை காணவேண்டும். விவசாயத் துறையில் நவீன இயந்திர முறைகளைக் கையாண்டால்தான் உணவுப் பற்றாக்குறையை நாம் போக்க முடியும். ஆகவே விவசாயிகள் நவீனப் படிப்பினைப் பற்றியதை அறிந்து கொள்ளத்தக்க வசதிகளை அந்த அந்த மாவட்டத்தில் ஏற்படுத்தித் தர அரசு வழிவகுக்கவேண்டும். ஆகவே குறிப்பாக தஞ்சை, திருச்சி போன்றயிடங்களில் விவசாயக் கல்லூரிகள் அமைத்து அங்குள்ள மக்களுக்கு எளிதான முறையில் விவசாயத்தைப் பற்றிய அறிவை வளர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இப்போது விவசாயிகள் ஊக்கம் குன்றியிருக்கிறார்கள்: காரணம், அவர்களுக்கு கிடைக்கக்கூடிய வருமானம் போதுமானதாக இல்லை. விவசாயத் தொழில் செய்யக்கூடிய மக்கள் பின்தங்கிய பகுதிகளில் இருப்பதால் மற்றத் தொழில்கள் செய்யக்கூடியவர்களுக்கு கிடைக்கக்கூடிய வருவாய் இவர்களுக்குக் கிடைக்காது, கிடைப்பதும் இல்லை. இவர்கள் வருவாயும் குறைகிறது, வசதிகளும் குறைகின்றன. ஆகவேதான் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் நகர்ப்புறங்களை நோக்கி, 'கெட்டாலும் பட்டணம் சேர்' என்று பட்டணங்களுக்கு வந்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட எண்ணம் அவர்கள் மனதிலிருந்து அகற்றப்படவேண்டும். ஆகவே விவசாயிகளுக்கு நல்ல பலன் தரும் திட்டங்களை, அவர்கள் வளர்ச்சி அடைவதற்கான திட்டங்களை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக விவசாயத்திற்கு மிக மிகத் தேவையானது உர வகைகள். இன்று உரவகைகள் உற்பத்தி செய்வதில் ஆளுக்கொரு கம்பெனி வைத்து நடத்திவருகிறார்கள். அதனால் நல்ல முறையில் கலவை செய்யாத உரங்கள் இன்று நாட்டில் நடமாடி வருகின்றன பல கம்பெனிகள் உர வகைகளைத் தயார் செய்கிறார்கள். மண், கல் போன்றவற்றைக் கலந்து, குறிப்பிட்ட அளவு யூரியா, சல்ப்பேட், சத்துப் பொருள் கலக்கப்படாத உரங்கள் இன்று விற்பனைக்கு வருகின்றன. இதைக் கண்காணித்து நல்ல உர வகைகள் விற்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். ரசாயன உரத்தை விட இயற்கை உரங்கள்தான் நல்ல பலனைத் தரும். ஆகவே புதுத்திட்டத்தை வகுத்து கால்நடை உரங்களை அதிகப்படுத்த வேண்டும். அதற்காக கால்நடைகளுக்கு அதிகப்படியான மேய்ச்சல் தரை ஒதுக்கப்படவேண்டும். விவசாயிகள், நாலைந்து மாடுகள் வைத்திருப்பவர்கள்கூட மேய்க்க இடமின்றி கஷ்டப்படுகிறார்கள். அதனால் மாடுகளை வைத்துக்கொள்ளாமல் முழுமையும் கலப்பு உரம் வாங்கிப்போடுகிறார்கள். கலப்பு உரம் போடுவதால் பூச்சிகள் தோன்றி பயிர்கள் சாவியாகின்றன. இந்நிலை போக்கப்படவேண்டும். தஞ்சையைப் போன்று திருச்சி மாவட்டத்தையும் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் கொண்டுவரவேண்டும். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கட்டளை புள்ளம்பாடி வாய்க்கால் பகுதிகளில் கிணறுகளுக்காக 150 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அந்தக் கிணறுகளுக்கு மின்சாரமும் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல கிணறுகளுக்கு மின்சார இணைப்பு வேண்டுமென்று அங்குள்ள விவசாய மக்கள் மோட்டார்கள் போன்றவைகளை வாங்கி வைத்திருந்தும் மின்சார இணைப்பு செய்து தரப்படவில்லை. அடுத்தபடியாக விவசாயக் கடன். இப்போது $8\frac{3}{4}$ சதவிகிதத்துக்கு கடன் கொடுக்கிறார்கள். எனவே விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை எப்படிக் குறைந்த விலைக்குக் கொடுக்க முற்படுகிறார்களோ அதற்கேற்ப விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன்களுக்கு வட்டியில்லாமல் திரும்ப வாங்கிக்கொண்டால் நன்றாக இருக்கும். வட்டித் தவணைகூட பத்து வருஷமாக இருக்கிறது. இதை 15 ஆண்டாகவோ அல்லது 20 ஆண்டாகவோ உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விவசாய உற்பத்தி நாட்டிலே பெருகவேண்டுமென்று சொன்னால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அவசியம் ஒரு டிராக்டர் இருக்க வேண்டும். ஊராட்சி மன்றம் கொடுக்கக்கூடிய கடன் ரூ. 3,000 லிமிட்டிலேயே இருக்கிறது. அதற்குமேல் வேண்டுமென்றால் ஆர்.டி.ஓ., கலெக்டர் அனுமதி வேண்டுமென்றிருக்கிறது. அதை 5,000 ரூபாய்வரை

குறிப்பாகத் திட்டங்கள் வகுக்கப்பட்டு இலாகாக்களுக்குப் பிரித்துக் கொடுக்கும்போது, தென்னைக்காக கடன் வாங்குவதற்கு எந்த இலாகாவிற்குச் செல்லவேண்டும் என்று விவசாயிகளுக்குத் தெரியாத நிலையில் பாதிக் காலம் அதில் ஓடிவிடுகிறது. அங்கு பேப்பர் சுற்றுகிற நிலையில் பாதிக் காலம் ஓடிவிடுகிறது. கடைசியில் அந்த விவசாயி கடன் வாங்கும்போது அவருக்கு வருவது கால் பகுதிதான் வருகிறது. இந்த நிலை அகற்றப்பட்டு விவசாயிகளுக்குத் தெரியக்கூடிய அளவில் செய்து பேப்பர்களைத் துரிதமாக அனுப்ப அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

அடுத்தபடியாக, உரம் தயார் செய்வதுபற்றி ஒன்று கூற விரும்புகிறேன். செயற்கை உரங்கள் தயார்செய்யப்பட்டு கொடுக்கப்படுகின்றன. மண்ணில் எந்த வளம் இருக்கிறதோ, அதைச் சற்று அதிகப்படுத்த இந்தச் செயற்கை உரங்கள் பயன்படுகின்றனவே தவிர, மண் வளத்தை மேம்படுத்தும் அளவிற்குச் செயற்கை உரங்கள் பயன்படுவதில்லை. ஆகவே இயற்கை உரங்களை நல்லமுறையில் ஏராளமாக உற்பத்தி செய்யவேண்டும். இயற்கை உரங்களை யார் எங்கு அதிகமாகத் தயார் செய்கிறார்களோ, அவர்களுக்குப் பரிசு கொடுக்கவேண்டும். இப்படிப் பரிசு வழங்கும் ஒரு முறையைக் கிராமங்களில் ஏற்படுத்தினால் நல்ல லாபகரமாக இருக்கும். இயற்கை உரங்கள்மூலம், தழை உரம், பசுந்தாள் உரம், கம்போஸ்ட் உரம் இவைமூலம் மண்ணை வளப்படுத்தவேண்டும், இப்போது செயற்கை உரங்கள்மீது ஒரு மோகம் ஏற்பட்டிருக்கிறது. அதில் நாம் அதிகக் கவனம் செலுத்தத் தேவையில்லை. இயற்கை உரங்களை அதிகப்படியாக உற்பத்தி செய்வதில்தான் நாம் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, நான் ஒன்றை முக்கியமாகக் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்கள், கம்ப்யூட்டேர்ஸ் வந்தவுடன் எங்களுக்கு வேலை போய்விடுகிறதே என்று சொல்கிறார்கள். இப்போது அதேமாதிரி ஒரு நிலை விவசாயத் துறையில் இருக்கிறது. எந்த இடங்களில் நிலப் பரப்பு அதிகமாக இருக்கிறதோ, அந்த இடங்களில் மக்கள் தொகை அதிகமாகயிருந்தால் அங்கு ட்ராக்டர்கள், இயந்திர ஹார்வெஸ்டேர்ஸ், டிரான்ஸ்ப்ளான்டேர்ஸ், இவற்றை உபயோகப்படுத்துவது என்பது சரியல்ல. அது அவ்வளவு நல்லதல்ல. கம்ப்யூட்டேர்ஸ் வைப்பதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது என்று படித்தவர்கள் சொல்கிறார்கள். அதேபோல் இந்த வாயில்லாப் பூச்சிகள், எங்களுக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது என்று ஒரு காலத்தில் சொல்லக் கூடும், இந்த இயந்திரச் சாதனைகள் அதிகமானால். ஆகவே நில வளம் அதிகமாக இருந்து மக்கள் தொகை குறைவாக இருக்கும் இடங்களில், வேலை செய்வதற்குத் தகுந்த அளவில் ஆட்கள் இல்லாத இடங்களில், ட்ராக்டர்கள் போன்றவற்றைப் பயன்படுத்த உதவி செய்யலாமே தவிர, நிலப்பரப்புக் குறைவாக இருந்து மக்கள் தொகை அதிகமாகயிருக்கும் இடங்களில் அங்குள்ளவர்களுக்கு ட்ராக்டர்கள் போன்றவை வழங்கப்படக்கூடாது; அப்படி வழங்குவதினால் அங்குள்ளவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். ஆகவே இதில் தக்க கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு சிகப்பு லைட் எரிவதால் இத்துடன் முடித்துக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

* **திரு. ஆர். கருப்பையா:** சட்டமன்றத் தலைவர் அவர்களே வேளாண்மைத் துறை மானியத்தின்மீது பேச எனக்கு அனுமதி கொடுத்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்று நம் தமிழகம் விவசாயப் பெருங்குடிமக்களைக் கொண்டதொரு மாநிலமாயிருந்தாலும், விவசாய வளர்ச்சியில் நாம் பின்தங்கித்தான் இருக்கிறோம். விவசாயிகள் வாழவேண்டும், அவர்கள் வளரவேண்டும் என்று பேசுகிறோம். ஆனால் அரசாங்கம் கொடுக்கிற சலுகைகள் முழுமையும் விவசாய மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வழி இல்லாமல் இருக்கிறது. ஆகவே அரசாங்கம் விவசாயிகளுக்காகச் செய்கிற ஒவ்வொரு திட்டத்தின் பலனும் விவசாயிகளுக்கு





நெருக்கடியில்லாமல், தாமதம் இல்லாமல் போய்ச் சேருவதற்கு வழி வகை காணவேண்டும். விவசாயத் துறையில் நவீன இயந்திர முறைகளைக் கையாண்டால்தான் உணவுப் பற்றுக்குறையை நாம் போக்க முடியும். ஆகவே விவசாயிகள் நவீனப் படிப்பினைப் பற்றியதை அறிந்து கொள்ளத்தக்க வசதிகளை அந்த அந்த மாவட்டத்தில் ஏற்படுத்தித் தர அரசு வழிவகுக்கவேண்டும். ஆகவே குறிப்பாக தஞ்சை, திருச்சி போன்றயிடங்களில் விவசாயக் கல்லூரிகள் அமைத்து அங்குள்ள மக்களுக்கு எளிதான முறையில் விவசாயத்தைப் பற்றிய அறிவை வளர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இப்போது விவசாயிகள் ஊக்கம் குன்றியிருக்கிறார்கள்: காரணம், அவர்களுக்கு கிடைக்கக்கூடிய வருமானம் போதுமானதாக இல்லை. (விவசாயத் தொழில் செய்யக்கூடிய மக்கள் பின்தங்கிய பகுதிகளில் இருப்பதால் மற்றத் தொழில்கள் செய்யக்கூடியவர்களுக்கு கிடைக்கக்கூடிய வருவாய் இவர்களுக்குக் கிடைக்காது, கிடைப்பதும் இல்லை. இவர்கள் வருவாயும் குறைகிறது, வசதிகளும் குறைகின்றன.) ஆகவேதான் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் நகர்ப்புறங்களை நோக்கி, 'கெட்டாலும் பட்டணம் சேர்' என்று பட்டணங்களுக்கு வந்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட எண்ணம் அவர்கள் மனதிலிருந்து அகற்றப்படவேண்டும். ஆகவே விவசாயிகளுக்கு நல்ல பலன் தரும் திட்டங்களை, அவர்கள் வளர்ச்சி அடைவதற்கான திட்டங்களை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக (விவசாயத்திற்கு மிக மிகத் தேவையானது உர வகைகள். இன்று உரவகைகள் உற்பத்தி செய்வதில் ஆளுக்கொரு கம்பெனி வைத்து நடத்திவருகிறார்கள். அதனால் நல்ல முறையில் கலவை செய்யாத உரங்கள் இன்று நாட்டில் நடமாடி வருகின்றன பல கம்பெனிகள் உர வகைகளைத் தயார் செய்கிறார்கள். மண், கல் போன்றவற்றைக் கலந்து, குறிப்பிட்ட அளவு யூரியா, சல்ப்பேட், சத்துப் பொருள் கலக்கப்படாத உரங்கள் இன்று விற்பனைக்கு வருகின்றன. இதைக் கண்காணித்து நல்ல உர வகைகள் விற்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். ரசாயன உரத்தை விட இயற்கை உரங்கள்தான் நல்ல பலனைத் தரும். ஆகவே புதுத்திட்டத்தை வகுத்து கால்நடை உரங்களை அதிகப்படுத்த வேண்டும். அதற்காக கால்நடைகளுக்கு அதிகப்படியான மேய்ச்சல் தரை ஒதுக்கப்படவேண்டும். விவசாயிகள், நாலைந்து மாடுகள் வைத்திருப்பவர்கள்கூட மேய்க்க இடமின்றி கஷ்டப்படுகிறார்கள். அதனால் மாடுகளை வைத்துக்கொள்ளாமல் முழுமையும் கலப்பு உரம் வாங்கிப்போடுகிறார்கள். கலப்பு உரம் போடுவதால் பூச்சிகள் தோன்றி பயிர்கள் சாவியாகின்றன. இந்நிலை போக்கப்படவேண்டும். தஞ்சையைப் போன்று திருச்சி மாவட்டத்தையும் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் கொண்டுவரவேண்டும். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கட்டளை புள்ளம்பாடி வாய்க்கால் பகுதிகளில் கிணறுகளுக்காக 150 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அந்தக் கிணறுகளுக்கு மின்சாரமும் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல கிணறுகளுக்கு மின்சார இணைப்பு வேண்டுமென்று அங்குள்ள விவசாய மக்கள் மோட்டார்கள் போன்றவைகளை வாங்கி வைத்திருந்தும் மின்சார இணைப்பு செய்து தரப்படவில்லை. அடுத்தபடியாக விவசாயக் கடன். இப்போது $8\frac{3}{4}$ சதவிகிதத்துக்கு கடன் கொடுக்கிறார்கள். எனவே விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை எப்படிக் குறைந்த விலைக்குக் கொடுக்க முற்படுகிறார்களோ அதற்கேற்ப விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன்களுக்கு வட்டியில்லாமல் திரும்ப வாங்கிக்கொண்டால் நன்றாக இருக்கும். வட்டித் தவணைகூட பத்து வருஷமாக இருக்கிறது. இதை 15 ஆண்டாகவோ அல்லது 20 ஆண்டாகவோ உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விவசாய உற்பத்தி நாட்டிலே பெருகவேண்டுமென்று சொன்னால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அவசியம் ஒரு டிராக்டர் இருக்க வேண்டும். ஊராட்சி மன்றம் கொடுக்கக்கூடிய கடன் ரூ. 3,000 லிமிட்டிலேயே இருக்கிறது. அதற்குமேல் வேண்டுமென்றால் ஆர்.டி.ஓ., கலெக்டர் அனுமதி வேண்டுமென்றிருக்கிறது. அதை 5,000 ரூபாய்வரை

ஊராட்சி ஒன்றியங்கள் விவசாயிகளுக்கு வழங்கலாம் என்று ஒரு சட்டத்தை, நியதியைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

குறிப்பாக விவசாயிகளுக்குப் பயிர் பாதுகாப்புத் திட்டம் இல்லாததால் தங்கள் பயிர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று கவலைப்படுகிறார்கள். அவர்கள் நிம்மதியாக இருக்க பயிர்ப் பாதுகாப்பை இந்த அரசு கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

**திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர் :** தலைவரவர்களே, வேளாண்மைத் துறை மானியக்கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். தமிழக அரசாங்கம் விவசாயத்துறையில் நல்ல ஊக்கம் காட்டி செய்துகொண்டு வருகிறது. முன்னாலிருந்த காங்கிரஸ்காரர்கள் விவசாயிகளுக்கு நல்ல ஊக்கம் கொடுக்காத காரணத்தால் விவசாயிகள் உற்பத்தியை நல்ல முறையில் செய்யாமல் உணவு உற்பத்தியில் மிகவும் பிற்போக்கான நிலையிலிருந்துகொண்டு வந்தார்கள். அதனால் மக்கள் உண்பதற்கு நல்ல உணவு கிடைக்காமல் அல்லல்பட்டு, அவதிப்பட்டுக்கொண்டிருந்ததை நாம் அறிந்தோம். நமது விவசாய அமைச்சரவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் விவசாயக் கருத்தரங்குகளை அமைத்து ஆங்காங்குள்ள விவசாயிகளுக்கு என்னென்ன குறைபாடுகள் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்து, விவசாயிகளுக்கு நல்ல முறையிலே அரசாங்கம் கடன்களை அவ்வப்போது கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்தார்கள். நில அடைமான பாங்குகள் மூலமாக விவசாயிகளுக்கு நல்லமுறையில் பணம் கொடுக்கவும், கிணறு தோண்டுவதற்கு உதவியும், பம்பு செட்டுகளை அமைத்துக்கொடுக்கவும், ஏரிகளைச் செப்பனிடவும், கால்வாய்களைத் தூர் எடுத்து நல்லமுறையில் செய்யவும் ஆங்காங்கு சென்று பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். விவசாயத் துறையில் நீர்ப்பாசனம், மின்சாரம், உரம் முதலிய எல்லாம் அமைந்திருக்கிறது. தர்மபுரி மாவட்டம் விவசாயத்துறையிலே மானம் பார்த்த பூமியாக இருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கு மலைக் காடுகள் நிறைந்திருக்கிறது. அங்கே இருக்கும் காடுகளெல்லாம் எஸ்டேட் காடுகளாக இருக்கிறது. அந்த எஸ்டேட் ஃபாரஸ்டிலே இருபதாயிரம் ஏக்கரா போன்ற அளவில் செந்தரக்கோட்டை பகுதியில் முள்காடுகளாக இருக்கின்றன. அந்த முள்காடுகளை அப்புறப்படுத்தி அங்கே நல்லமுறையிலே பயன்படுத்தி அரசாங்க மாதிரிப் பண்ணைகளை அமைத்தால் நன்றாக இருக்கும். அவ்வாறு அமைத்தால் தமிழகத்தில் பருப்பு முதலான பண்டங்கள் கிடைக்காது அல்லல்பட்டு இருக்கும் சூழ்நிலையில், அந்த இருபதாயிரம் ஏக்கர் நிலத்தில் பருப்பு போன்ற பயிர்களை, துவரை, கடலை போன்ற விதைகளைப் போட்டு பயிரிட்டு மாதிரிப் பண்ணையாக அமைத்தால் இந்தப் பருப்புப் பஞ்சத்தைப் போக்க முடியும்.

தர்மபுரி மாவட்டத்திலே ஒவ்வொரு கிராமத்திலும் பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கிடைக்காமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் குறிப்பிட்டு ஒரு கிராமத்தை சொல்வதற்கில்லை. ஏனென்றால் ஒரு கிராமத்திற்கு மட்டும் பம்பு செட்டிற்குக் கனெக்ஷன் கிடைக்காமலிருந்தால் ஒன்றைச் சொல்லிவிடலாம். பல கிராமங்களிலே விவசாயிகள் பணத்தைக் கடனாக வாங்கி வைத்து, அவர்கள் கிணற்றையும் வெட்டிவிட்டு கனெக்ஷன் கிடைக்காமல் அல்லல்படக்கூடிய நிலையில் அங்கே இருக்கிறார்கள். பல கிராமங்களிலே 40 பம்பு செட்டு, 50 பம்பு செட்டு, 20 பம்பு செட்டு என்று அமைத்து கனெக்ஷன் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாகப் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கிடைக்க இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

என்னுடைய பகுதியில் பல ஏரிகளைத் தூர் எடுக்கவும், செப்பனிடவும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பஞ்சாயத்து யூனியனிலே பெருவாரியாக இருப்பவர்கள்





காங்கிரஸ்காரர்கள்தான். அந்தப் பஞ்சாயத்து யூனியனிலே, பொதுப் படையான உணவு உற்பத்தியைச் செய்யக்கூடிய ஏரிகளைத் தூர் எடுக்கும் முறையில் பாகுபாடான முறையில் இதைச் செய்யலாம், இதைச் செய்யக் கூடாது என்ற முறையில் நடந்துகொள்கிறார்கள். அந்த ஏரிகளை அரசாங்கமே மேற்கொண்டு தூர் எடுத்து, சிறுசிறு கால்வாய்களைச் செப்பனிட்டு அந்த ஏரிகளில் நல்ல முறையிலே தண்ணீர்வர விவசாய அமைச்சரவர்கள் உத்தரவைப் பிறப்பித்து நல்ல முறையில் எங்கள் பகுதி விவசாயிகளுக்குச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோன்று எங்கள் பகுதி காட்டுப்பிரதேசமாக இருப்பதால் அங்கே சிறுசிறு எஸ்டேட் ஃபாரஸ்டுகள் இருக்கின்றன. அங்கேயுள்ள விவசாயிகள் தழைகளை அவ்வப்போது எடுத்துப்போடவும், எஸ்டேட் ஃபாரஸ்ட்டுகளில் ஆடுமாடுகளை மேய்க்கவும் பஞ்சாயத்து வாயிலாகவோ அல்லது அரசாங்கத்தின் வாயிலாகவோ செய்து ஆடுமாடுகளை மேய்க்கவும், தழை உரம் கிடைக்கவும் வேண்டியதைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எங்கள் பகுதியில் பஞ்சப்பட்டி ஸ்கீம் என்று ஒரு ஸ்கீம் இருக்கிறது. அது பலவருஷமாக அப்படியே நிறுத்தப்பட்டிருக்கிறது. பஞ்சப்பட்டி ஸ்கீம் கீழ்பகுதியில் அணை கட்டுவதனால் தாமபுரி வட்டத்திலேயுள்ள ஒவ்வொரு ஏரியிலும் தண்ணீர் தாராளமாக வந்து நிரம்பும். அதனால் தர்மபுரி நகரத்திலேகூட தண்ணீர் பஞ்சம் வராது. அத்தகைய பஞ்சப்பட்டி ஸ்கீம் தடைப்பட்டுக்கொண்டிருக்கிறது. முன்னாலேயிருந்த அரசாங்கத்தால், பல காங்கிரஸ்காரர்களின் நிலம் அதனால் போகிறது என்பதால் அந்த பஞ்சப்பட்டி ஸ்கீம் நிறுத்தப்பட்டது. ஒரு இன்ஜினியரும் வந்து பார்த்துவிட்டுப் போயிருக்கிறார். அதை உடனடியாக எடுத்து அமல் நடத்தினால் விவசாயிகளுக்கு நல்ல ஏதுவாக இருக்கும். அந்தப் பகுதி புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறி விவசாயத்திற்கு ஆவன செய்ய முடியும். அரசாங்கம் அதையெல்லாம் ஏற்று நடத்தி விவசாயிகளுக்கு நல்லமுறையிலே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

***திரு. என். மருதாசலம் :** தலைவர் அவர்களே, இன்று இந்த வேளாண்மைத் துறை மானியத்தின்பேரில் என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு இந்த நாட்டிலே விவசாயம்தான் முக்கியமான பிரச்சினையாகும். விவசாயம் செழித்தால்தான் இந்த நாடு செழிக்கும். ஆகையினாலே, விவசாயத்திலேயுள்ள சிறுசிறு குறைபாடுகளை அப்பொழுதைக்கப்பொழுது நிவர்த்தி செய்தால் விவசாயிகள் உற்சாகமாக வேலை செய்வார்கள்.

இன்றைக்கு விவசாயத்திலே உள்ள குறைபாடுகளில் ஒன்று உர விநியோகம். உர விநியோகத்தைப் பொறுத்தவரையில் சாதாரண விவசாயிகள் இதைப் பெற முடியவில்லை. பெருநிலச் சொந்தக்காரர்கள் உரங்களை வாங்கி சேமித்து வைத்துக்கொள்ளுகிறார்கள். அதனால் சாதாரண விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. ஆகையினாலே உர விநியோகத்தைப் பொறுத்தமட்டில், பங்கீடு முறையைக் கொண்டுவந்து எல்லா விவசாயிகளுக்கும் சரளமாகக் கிடைக்கும் முறையிலே ஏற்பாடு செய்யவேண்டும்.

இரண்டாவது, மின்சார இணைப்பு சம்பந்தப்பட்டது. ஒரு விவசாயி மின்சாரம் வேண்டுமென்று விண்ணப்பித்தால் அந்த மின்சாரம் வாங்குவதற்கு ஒரு வருஷம் நடக்கவேண்டியிருக்கிறது. அந்த முறையிலே மின்சார இணைப்பு நிரம்ப காலதாமதம் ஆகிறது. விவசாயிகளுக்கு உடனடியாக மின்சார இணைப்புக் கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது, இந்த விதை அபிவிருத்தி சம்பந்தப்பட்டது. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் விதைப் பண்ணை ஏற்படுத்தி, அந்தந்த பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு சுலபமான முறையிலே விதை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

நான்காவதாக, இன்றைக்கு விவசாயிகளுக்குக் கிணறு வெட்ட பணம் கொடுக்கப்படுகிறது. அதாவது, அடிவெட்டுக் கிணறு வெட்ட விவசாயிகளுக்கு 5,000 ரூபாய் கடன் கொடுக்கப்படுகிறது. அந்தப் பணத்தை வாங்குவதற்கு மணியக்காரரிடம் சர்டிபிகேட் வாங்கவேண்டும். அவருக்கு ரூ. 100, 200 கொடுத்தால்தான் கையெழுத்துப் போடுவேன் என்று சொல்வதன் மூலம் விவசாயிகள் நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள். அதனால் விவசாயிகள் கிணறு வெட்டுவதற்காக அந்தப் பணம் வாங்குவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. மணியக்காரர்கள் பணம் வாங்குவதை நிறுத்தச் செய்யவேண்டுமென்று சொல்லி, என்னிடத்திலே மகஜர் கொடுத்திருக்கிறார்கள். நான் அதை அமைச்சர் அவர்களிடத்திலும் கொடுத்திருக்கிறேன். அதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு, என்னுடைய பகுதியை எடுத்துக்கொண்டால், அங்கு விவசாயத்தை நம்பித்தான் பெரும்பாலான மக்கள் வாழ்கிறார்கள். மதுக்கரைப் பஞ்சாயத்து யூனியன் போன்ற இடங்களிலெல்லாம் வாழ்பவர்கள் சாதாரண விவசாயத்தை நம்பித்தான் இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே எந்தவிதமான குளத்துப் பாசனமோ வாய்க்கால் பாசனமோ கிடையாது. கிணற்றை நம்பித்தான் அந்தப் பகுதியிலே விவசாயத்தைச் செய்யமுடியும். அப்படி இருக்கும்பொழுது அந்தக் கிணறுகளிலே தண்ணீர் கிடையாது. அடிவெட்டு வெட்டினாலும் தண்ணீர் கிடையாது. போர் வெல் போட்டாலும் தண்ணீர் கிடையாது. இதனால் விவசாயமெல்லாம் காய்ந்து வெயிலிலே சுளித்துவிட்டது. அதன் காரணமாக, வாங்கிய கடனையும் கொடுக்கமுடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அதன் காரணமாக, சர்க்கார் தன்னுடைய கடன்களை வசூலிப்பதை ஒரு வருடத்திற்கு தள்ளிவைக்க வேண்டுமென்று அவர்கள் அரசாங்கத்திற்கு மனு கொடுத்திருக்கிறார்கள். அந்த முறையிலே விவசாயிகள் வாழ ஊக்கம் அளிக்கின்ற வகையிலே, அவர்களுடைய கடன் வசூலை ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயப் பண்ணை என்று ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. அந்த விவசாயப் பண்ணையிலே விதைகள் எல்லாம் உற்பத்தி செய்யப்படுகிறது. அந்த விதைப் பண்ணைகளிலே வேலை செய்யக் கூடியவர்கள் ஏழைத் தொழிலாளிகள். அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு தினம் ரூ. 1, ரூ. $1\frac{1}{4}$ கூலி கிடைக்கிறது. சர்க்கார் பண்ணையிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கே இவ்வளவு குறைந்த கூலி கொடுத்தால், மற்ற தனிப்பட்ட முதலாளிகள் இதைவிடக் குறைந்த கூலி கொடுக்க ஏற்பாடு செய்வார்கள். ஆகையினாலே, உடனடியாக சர்க்கார் பண்ணையிலே வேலைசெய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு அதிகமான கூலியைக் கொடுத்தால், அவர்கள் இன்னும் உற்சாகமாக வேலை செய்வார்கள். நல்ல முறையிலே விதைகளை உற்பத்தி செய்வதற்காகவும் அவர்கள் ஊக்கத்துடன் வேலை செய்வார்கள். அந்த முறையிலே சர்க்கார் விதைப் பண்ணையிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு அதிகக் கூலி கொடுப்பதுடன் மாதா மாதம் அவர்கள் வேலை செய்கிறார்கள், அவர்களை பர்மனெண்ட் செய்வதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்வதுடன் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாதாரண விவசாயிகள் பல இடங்களிலே வேலை இல்லாமல் இந்தக் காலங்களிலே கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிற அதே நேரத்தில், இன்றைக்கு பல இடங்களிலே மராமத்து வேலை நடைபெறாமல் இருக்கிறது. மராமத்து வேலைகளில்—தூர் எடுத்தல்



கண்மாய்களை வெட்டுதல் போன்ற வேலைகளில்—அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்தோமானால் அவர்களும் வாழ முடியும், வேலைகளும் முடியும். அவர்கள் வாழ வழி ஏற்படும். அந்த முறையிலே சர்க்கார் நடவடிக்கை எடுக்குமானால் இன்றைக்கு இந்த நாட்டிலே விவசாய உற்பத்தியை அதிகப் படுத்த முடியும். இன்றைக்கு விவசாயத்தை நம்பி வாழக்கூடிய மக்களும் நல்ல முறையிலே வாழ முடியும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். வில்லியம்:** தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியத்தின்மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையில் இப்பொழுது நமது அரசு நல்ல ஊக்கம் கொடுத்திருப்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் சில அங்கத்தினர்கள் சொல்வதுபோல முன் அரசு வேளாண்மைத் துறையில் அதிகக் கவனம் செலுத்தவில்லையென்றும், அதன் காரணமாக உணவு உற்பத்தி குறைந்து போயிற்று என்றும் சொல்வது ஆதாரமற்றது என்றே நான் கூற விரும்புகிறேன்.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் உணவு உற்பத்தி அதிகமாக இருந்தது என்பதையும் மூன்றாவது திட்டக் காலத்தில் எதிர்பார்த்த அளவு உற்பத்தி இல்லை என்பதையும் நாம் அனைவரும் அறிவோம். அதற்குக் காரணம் திட்டத்தில் குறைபாடு இருக்கிறது என்பதல்ல. வானம் பொய்த்ததுதான் காரணம் என்பதை நாம் அறியவேண்டும். 1965–66-ல் நமது மாநிலத்தில் மட்டுமல்லாமல் அநேக மாநிலங்களில் பருவநிலை தவறிவிட்டதன் காரணமாக உற்பத்தி குறைந்து விட்டது. ஆகையால் முன் அரசுதான் காரணம் என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்றும் நான் கூற விரும்புகிறேன்.

பெரும் பாசனத் திட்டங்கள் முழுவதும் பூர்த்தி அடைந்து விட்டன. ஆகவே, சிறு பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் உற்பத்தியை பெருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எந்தெந்த முறையிலே அபிவிருத்தி செய்து விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியுமோ அந்த முறைகளையெல்லாம் கையாள வேண்டும். சிறு பாசனத் திட்டங்களைப் பொறுத்த அளவிலே நல்லமுறையிலே ஆராய்ச்சி செய்து ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில், பல இடங்களில் 3,000, 4,000 ரூபாய்கள் செலவு செய்தும் பிரயோஜனப்படாமல் போய்விடுகிறது. ஆகவே, நல்ல முறையில் ஆராய்ச்சி செய்து எந்த எந்த இடங்களில் தண்ணீர் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, அதன்பிறகு நடைமுறைக்குக் கொண்டு வந்தால் நஷ்டம் ஏற்படாமலிருக்கக் கூடும் என்று நான் கூற விரும்புகிறேன்.

இயற்கை உரத்தை உபயோகிப்பதை நாம் இப்பொழுது விட்டுவிட்டோம். விவசாயிகள் இப்பொழுது அதிகமாக இயற்கை உரத்திலே கவனம் செலுத்தாமல் விட்டுவிட்டார்கள். முன்பெல்லாம் பசுந்தாள் போன்ற இயற்கை உரங்களை நல்ல முறையில் மேற்கொண்டதால், உபயோகித்ததால், நல்ல பலனை அடைந்தார்கள். ஆனால், இப்பொழுது அதை விட்டுவிட்டு இந்த இரசாயன உரத்தை கட்டாயமாக உபயோகப் படுத்த ஆரம்பித்து விட்டார்கள். அதன் காரணமாக நிலங்கள் சாரம் அற்று, சத்து அற்றுப் போய்விட்டது என்று நான் கூற விரும்புகிறேன். ஆகவே, இயற்கை உரத்தையும் அதிகமாக உபயோகிக்கத்தக்க வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மண் வள ஆராய்ச்சி மிக முக்கியம், அவசியம். சில நிலங்களில் யூரியா உபயோகிப்பதால் மண் பலன் தராமல் போய் விட்டது. ஆகையால் மண் வளத்தைப் பற்றி யோசிக்க வேண்டும். மண்ணை ஆராய்ச்சி செய்து அங்கு விவசாயம் செய்தால் நல்லமுறையில் பலன் இருக்கும். அதற்கேற்ற முறையில் மண் வள ஆராய்ச்சி எல்லா இடங்களிலும் அதிகமாக, பரவலாகச் செய்யப்படவேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். வில்லியம்] [1968 மார்ச் 14

மண்வள ஆராய்ச்சி நிலையங்கள் ஒரு சில மாவட்டங்களில்தான் இருக்கின்றன. அவைகளை எல்லா இடங்களிலும் ஆரம்பித்து, பஞ்சாயத்து யூனியன் மூலமாக அவைகள் நல்ல முறையில் செயல்பட வழிசெய்வதன் மூலம் விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்யாறு இடதுகரை சானலில் அபிவிருத்தி வேலைகள் நடத்த குழித்துறையில் ஒரு சப்டிவிஷன் சமீப காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. அதற்காக எஸ்டிமேட் எல்லாம் தயாரித்து ரிபோர்ட் அனுப்பியிருக்கிறார்கள். சுமார் 15 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஆகும் என்று ரிபோர்ட் கொடுத்திருக்கிறார்கள். ரிப்போர்ட்டில் கூறியிருக்கும் வேலைகள் செய்து முடித்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை சாகுபடிக்குக்கொண்டு வரலாம். ஆகவே, ரிபோர்ட்படி அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று நான் வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை என்ற ஒரு இடத்தில் ஒரு விவசாயக் கல்லூரி துவக்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. 150 ஏக்கர் இடமும் இருக்கிறது. மிகவும் வசதியான பிரதேசம். அந்த இடத்தில் ஒரு அக்ரிகல்சுரல் காலேஜ் ஆரம்பிக்க வேண்டுமென்று நான் முன் இருந்த அரசிடம்கூட வற்புறுத்திக் கொண்டிருந்தேன். ஆனால், அது நடைமுறைக்கு வரவில்லை. இந்த அரசாவது அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிணற்றுப்பாசன வசதி குமரி மாவட்டத்தில் அதிக
பிற்பகல் 1-00. மாக இல்லை. ஆனால், சில பிரதேசங்களில் அதற்கேற்ற வாய்ப்புகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பிரதேசங்களில் கிணற்றுப் பாசன வசதி செய்து கொள்வதற்காக தனியார் கடன் வேண்டும் என்று கேட்டால், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை சர்க்கார் அளிக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

***திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத்துறை மான்யத்தின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல முன் வருகிறேன். இந்த மான்யத்துறை நம்முடைய தேசத்தில் மிகப் பெரிய ஒரு அவசரமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடிய துறையாக மாறிவிட்டது. காரணம், மக்களுடைய உணவு பற்றுக் குறைதான். கடந்த கால அரசைச் சார்ந்த கட்சிக்காரர்கள் எங்களுடைய திட்டத்தைத் தானே இந்த அரசு நிறைவேற்றுகிறது என்று வாய்ப் பேச்சுக்கு வேண்டுமானால் சொல்லலாமே தவிர, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற முறையிலும், மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற முறையிலும் அந்த அரசு தவறிவிட்டது என்பதை அவர்களே ஒத்துக்கொள்ளாமல் இருக்க முடியாது. எடுப்பாகச் சொல்ல வேண்டுமானால், இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு முறையாக செயல்பட்டதன் காரணமாகத்தான் அதிகமான விளைச்சல், மகசூல் ஏற்பட்டு மக்களுக்கு ஓரளவுக்கு திருப்தி அளிக்கக்கூடிய நிலை வந்திருக்கிறது என்பதை அவர்கள் ஒத்துக்கொள்ளாமல் இருக்க முடியாது. ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற முறைகளில் இந்த அரசு வெற்றி கண்டிருக்கிறது. கடலோரப் பகுதிகளில் கிராமங்களில் கழிவு நீர் வீணாகப் போகாமல், லிப்ட் இர்ரிகேஷன் மூலம், ரிவர் பம்ப் ஸ்கீம் மூலம் மறு முறை அந்தத் தண்ணீரை வயலுக்கு அனுப்புகிற ஒரு முறையை பயன்படுத்துவதற்கு ஆராய்ச்சியை துரிதப்படுத்தி, அதைப் பரிசீலனைக்குக் கொண்டுவந்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தண்ணீரை சிக்கனப்படுத்துவதில் இந்த அரசு சற்று கவனம் செலுத்தவேண்டும். வருகிற தண்ணீரை வைத்துக் கொண்டே ஒரே காலத்தில் சிக்கனமாக சாகுபடி செய்துவிட முடியும். அதில் அங்கு இருக்கிற விவசாயிகளுடைய கஷ்டங்கள் என்னவென்றால்



1968 மார்ச் 14] [திரு. கே. பி. எஸ். மணி]

5 ஏக்கர், 4 ஏக்கர், 3 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டு சாகுபடி செய்பவர்கள் தண்ணீர் வந்த உடனேயே சாகுபடி செய்ய முடியாத ஒரு தரமற்ற நிலையில் வாழ்கிறார்கள். இதற்காக ஒரு திட்டம் வகுத்து, பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டு, அங்கிருக்கிற டிராக்டர்களை வைத்துக்கொண்டு, தண்ணீர் வந்த ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளேயே, 10, 20 நாட்களுக்குள், அல்லது 30 நாட்களுக்குள் எல்லா நிலங்களையும் சாகுபடி செய்யக்கூடிய ஒரு பெரிய திட்டத்தை பஞ்சாயத்து யூனியன்கள் வகுக்க வழிவகைகள் செய்தால், உண்மையாகவே முதல் ஸ்டேப்பிலேயே கழிவு நீர் வீணாகாமல் சாகுபடி செய்துவிடலாம். ஆற்றில் தண்ணீர் வந்தவுடன் ஒரு சில மிராசுதாரர்கள் சாகுபடி செய்துவிடுகிறார்கள். பாக்கி கழிவு நீர் வீணாகப் போகிறது. அதைத் தடுத்து நிறுத்த, அதே சந்தர்ப்பத்தில் பெரிய நிலச்சுவான்தாரர்கள் சாகுபடி செய்யக்கூடிய காலத்திலேயே சிறிய நிலசொந்தக்காரர்களும் சாகுபடி செய்வதற்கான திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். இம்மாதிரி திட்டத்தை இந்த ஆண்டு கொள்ளிடம் பஞ்சாயத்து யூனியனில் நடத்த முடிவு எடுத்து, எங்கள் கவுன்சிலிலும் முடிவு செய்திருக்கிறது. அப்பேர்ப்பட்ட ஒரு திட்டத்தை இந்த அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

61437

அடுத்து, எலிகள் தொல்லையை ஒழிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் எல்லா இடங்களிலும் வரப்பு பெரியதாக இருக்கிறது. ஆகவே, வரப்புகளை அழித்து அவைகளைச் சிறியதாக ஆக்கிவிட்டால், எலிகள் குடியிருப்பதற்கு வழியில்லாமல் போய்விடும். ஆகவே, இந்தத் திட்டத்தை மேற்கொண்டு எலிகளின் கொல்லையை ஒழிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோவில் மடாலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை எடுத்துக்கொண்டால், தர்மபுரம் ஆதீனத்திற்கு 12 000 வேலி நிலம் இருக்கிறது. திருவாடுதுறை ஆதீனத்திற்கு 6,000 வேலி நிலம் இருக்கிறது. இப்படி ஆயிரக்கணக்கான வேலிகள் நிலம் இருந்தும், விவசாயிகள் இந்த நிலங்களை முறையாகப் பயன்படுத்தி சாகுபடி செயய முடியவில்லை. அவைகளை அபிவிருத்தி செய்து நல்ல முறையில் கொண்டுவர முடியாமல் இருப்பதற்குக் காரணம் கண்காணிப்பு இல்லை. கடந்த கால அரசு எப்படி கண்காணிப்பு இல்லாமல் விட்டுவிட்டதோ, அதேபோல் கோவில், மடங்களுக்குச் சொந்தமான நிலங்கள் கண்காணிக்கப்படாமல் இருப்பதனால்தான் இந்த நிலைமை ஏற்படுகிறது. ஆகவே சர்க்காருடைய விவசாயத் திட்டங்களை அவர்கள் உடனடியாக ஏற்று, அதாவது மராமத்து செய்வது, காமன் போர் வெல்ஸ், சமுதாய நலத் திட்டங்களின் கீழ் மக்களுக்குத் தேவையான தண்ணீர் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்வது, அதாவது வறட்சியான பிரதேசங்களுக்கு, மேடான பிரதேசங்களுக்கு தண்ணீர் வருவதற்கு பொதுக்கிணறுகளை ஏற்படுத்துவது போன்ற முறைகளை எண்டவ்மெண்டு போர்டும், கோவில் ஸ்தாபனங்களும் ஏற்றுக்கொண்டு அமல் நடத்த முன்வந்தால்தான், ஆயிரக்கணக்கான டன் நெல்லை நாம் உற்பத்தி செய்ய முடியும். அது விஷயமாக கோவில், மட நிர்வாகிகளை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த அரசு தரிசு நிலங்களைச் சாகுபடி செய்ய தீவிரமான திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். நாம் ரயிலில் போகும் பொழுது இரண்டு பக்கமும் ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள் தரிசாகக் கிடப்பதைக் காணலாம். சாகுபடி செய்யப்பட்ட நிலங்களின் இரண்டு பக்கங்களிலும், நடுவிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யப்படாமல் கிடக்கின்றன. செங்கற்பட்டு, வடஆற்காடு மாவட்டங்களில் ஏது காரணமோ தெரியவில்லை, ஆயிரக்கணக்கான நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அப்பேர்ப்பட்ட நிலங்களை தீவிரமாக சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு ஒரு தீவிரத் திட்டம் தயாரிக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களுக்கு அப்படிப்பட்ட திட்டத்தைக் கொடுத்து, அவசரமாக நடவடிக்கை எடுத்து, இந்த ஆண்டுக்குள்ளேயே அந்தத் திட்டத்தை

நிறைவேற்ற ஏற்பாடு செய்தால், லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். மேலும், பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாரெஸ்டு இலாகாவின் கையில் விடப்பட்டிருக்கிறது. அந்த நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவந்தால், ஆயிரக்கணக்கான ஏக்கர் உபயோகம் இல்லாத நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வந்துவிட முடியும்.

இறுதியாக, பெர்டிலைஸர், உரம் உற்பத்தி சம்பந்தமாக, உர உற்பத்தி சாலையிலிருந்து நேரடியாக பிளாக்குகளுக்கும், அவைகளினால் இயங்கு கின்ற சங்கங்களுக்கும் கொடுக்கப்பட்டால் நிச்சயமாக உர விலையைக் கம்மியாக்கிக் கொடுக்க முடியும் என்று சொல்லிக்கொண்டு, இந்தத் திட்டத்தை நிறைவேற்றும்படி கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. மு. அலங்காரம்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து பேசுகிறபொழுது, அண்மையில் கிழக்கு ராமநாதபுரம் பகுதி இரு பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு மக்கள் அவதிப்பட்ட நேரத்தில் தமிழக அரசு மகத்தான ஒத்தாசை செய்திருக்கிறது.

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்பதுபோல், நமது சட்ட அமைச்சர் ஓடியோடி வந்தார். மேலும் ரெவின்யூ போர்டு மெம்பர் திரு. ராயப்பா அவர்களும், மாவட்ட கலெக்டர், துணைக்கலெக்டர் அவர்களும் உதவி செய்தது, நிவாரண வேலைகளைச் செய்தது கிழக்கு ராமனுதபுரத்திற்கே ஒரு பெருமைக்குரிய ஒன்றாகும். அப்படி உதவி செய்தது விவசாயிகள் பிரச்சினையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எந்த அளவுக்கு அணுகுகிறது என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறது. மாவட்ட விவசாயக் கருத்தரங்குகளை நடத்தி விவசாயிகளுக்குள்ள பிரச்னையைப் பரிசீலித்து, விவசாய சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்களைச் சேகரித்து, பிரச்னைகளுக்கெல்லாம் பரிகாரம் தேடுவதற்கு மாவட்டவாரியாக விவசாய மாநாடுகள் நடத்தி வருவது திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின் ஒரு சிறப்பு அம்சமாகும்.

மேலும் இந்த ஆண்டு ஏறக்குறைய உணவு உற்பத்தி சுமார் 60 லட்சம் டன்னாகப் பெருகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 1966–67-ல் உற்பத்தியானதைவிட இரண்டு லட்சம் டன் அதிகமாகவும், 1965–66-ல் உற்பத்தியானதைவிட 7·4 லட்சம் டன் அதிகமாகவும் உற்பத்தியாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் உணவு உற்பத்திப் பெருக்கம் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியினுடைய திறமையினால் பெருகியிருக்கிறது. இது மேலும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிகாட்டியாக உள்ள புள்ளி விவரம் என்று தெரிகிறது. ஆகவே, தமிழக அரசின் நல்ல நிர்வாகத் திறமையினால் இன்றைக்கு விவசாயத்தில் நல்ல நிலைமை ஏற்படுவதற்கான சூழ்நிலை இருக்கிறது.

நான் கிழக்கு ராமனுதபுரத்தைப் பற்றி சிறு சிறு விஷயங்களைச் சொல்லிக்கொள்ள முற்படுகிறேன். பெரிய பெரிய திட்டங்களை நாம் செயல்படுத்துவதோடுமட்டுமல்லாமல் பாசன வசதிக்குரிய அடிப்படையான சிறிய திட்டங்கள் சிலவற்றையும் நிறைவேற்றினால்தான் உற்பத்திப் பெருக்கம் அதிகமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை)

முதுகுளத்தூர் தாலுகாவில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பல கண்மாய்கள் உடைப்பெடுத்திருக்கின்றன. அந்தக் கண்மாய்களில் தற்காலிகக் கரைகள் அமைத்து தண்ணீரைத் தேக்கி வைத்து விவசாயம் செய்கிறார்கள். அங்கெல்லாம் நிரந்தரமாக கரை போட்டு விவசாயிகளுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மேலும், அந்த வட்டாரத்தில் பல கண்மாய்களில் தத்து போட்டிருக்கிற முறை தவறானதாக இருக்கிறது. கண்மாய்களில் நீர்மட்டத்தை, அதாவது லெவலை சரியாக நிர்ணயிக்காமல் தத்தை சில கண்மாய்களில் மேடான இடத்திலும். சில கண்மாய்களில் தாழ்வான இடத்திலும் கட்டியிருக்கிறார்கள். அதனால் சில இடங்களில் நீர் தேங்காமல் ஓடிவிடுகிறது. சில கண்மாய்களில் அதிகமாக நீர் தேங்கி வெள்ளம் வந்துவிடுகிறது. ஆகவே கிழக்கு ராமனுதபுரத்தில் இந்தக் குறையை பரிசீலித்து, அது சம்பந்தமாக வருகிற மனுக்களை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளம் ஏற்படுகிறபோது, வீணாகப் ' போகும் நீரை ஓட்டுவதற்கு வடிகால் வசதி செய்யவேண்டும். வடிகால் வசதி இல்லாததன் காரணமாக, பல நஞ்சை, புஞ்சை நிலங்களை அடித்துச் செல்கின்றன. அதனால், பல கிராமங்கள் சேதப்படுகின்றன. மேலும், நீர்மட்ட லெவல் சரியாக இல்லாததால், கண்மாய், உள்புறத்தில் இருக்கும் ரயத்துக் களுக்கும், கண்மாய் வெளிப்புறத்தில் இருக்கும் ரயத்துக்களுக்கும் அடிக்கடி தகராறுகள் முற்றி வருகின்றன.

முதுகுளத்தூர் தாலுகாவில் ஏறக்குறைய 113 கிராமங்கள் இனும் கிராமங்களாக இருக்கின்றன. இதனால் அவர்களுக்குச் சரியானபடி உதவி செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. 113 கிராமங்களிலுள்ள ரயத்துக்களுக்கு நபர் ஜாமீன் மீது கடன் வழங்கி, விவசாயத்தை ஊக்கப்படுத்துவதற்கு நமது தமிழக அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பரம்பரையாக, தலைமுறை தலைமுறையாக உழைத்து வந்த விவசாயிகளுக்கு ரயத்துவாரிப்பட்டா வழங்கி அந்த விவசாயிகளை நாம் ஊக்குவிக்கவேண்டும்.

மேலும், சில அடிப்படைத் திட்டங்களை நாம் அந்தத் தாலூகாவிற்கு தனிக்கவனம் செலுத்திச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உடைப்பு எடுத்த பல கண்மாய்களையும், ஏரிகளையும் தூர் எடுத்து புதுப்பிக்கப்படவேண்டிய நிலை இருக்கிறது. தாலூகா லெவலில் உள்ள மேஜர் டாங்குகளை புல்டோசர்களைக்கொண்டு அகலப்படுத்தி, கரையைச் செப்பனிட்டு, ஸ்க்குரூ ஷட்டர்ஸ் போட்டு தண்ணீரைத் தேக்கினால் நல்ல மகசூல் கிடைக்க ஏதுவாக இருக்கும்.

ஓடைகளின் குறுக்கே புதிய அணை கட்டுதல் என்ற சிறு பாசனத் திட்டத்திலே முதுகுளத்தூர் தாலூகாவில் ரகுநாதபுரம் என்ற குண்டாறு ஓடுகிறது. அதிலே கமுதிக்கு அருகிலுள்ள கீழடி என்ற இடத்திலே மலட்டாறு அணை கட்டி, முதுகுளத்தூர் தாலூகாவில் நீர்ப்பாசன வசதி செய்துகொடுத்தால், அந்தத் தாலூகா நல்ல நிலையை அடைய முடியும். அந்தத் தாலூகா மக்கள் சிறிய விவசாயிகளாக இருப்பதாலும், நிலமற்ற ஏழை விவசாயிகளாக இருப்பதாலும், அங்கு நிலையாகத் தங்க முடியாமல், தஞ்சை போன்ற மாவட்டங்களுக்கு வந்து, அறுவடை செய்து, இறந்த பிணத்தைக்கூட ஆற்றில் தூக்கி எறிந்துவிட்டு வரவேண்டிய நிலை இருக்கிறது. ஆகையால் அந்த மக்களுக்கு நிரந்தரமான வாழ்க்கையைக் கொடுப்பதற்கான நல்லதொரு திட்டத்தை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தத் தமிழக அரசு வந்த பிறகு அந்த வட்டாரத்து மக்களுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டிருக்கிறது. அந்தத் திருப்தி தொடர்ந்து நீடிக்கும் வகையில் நாம் நல்ல முறையில் அவர்களுக்கு வேண்டிய நல்ல பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

வைகையிலிருந்து பிரிந்து செல்கிற ஒவ்வொரு கால்வாயையும் நல்ல படியாகச் சீர்படுத்தி, அந்தக் கால்வாய் மூலமாகப் பாசன வசதி செய்யக் கூடிய பெரிய பெரிய மேஜர் டாங்குகளுக்குத் தண்ணீர் விடும் நிலையை ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக, வைகையிலிருந்து பிரிகிற கூத்தங்காலுக்கு எஸ்டிமேட் போட்டுப் பல வருஷங்கள் ஆகியும், வேலை இன்னும் நடைபெறவில்லை. அதற்குக் காரணம், அந்தக் கால்வாயின்

நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்து அந்த நிலத்தை உழுது வருகிறார்கள். அவர்களை அப்புறப்படுத்தி, அந்தக் கால்வாயைச் சீர்படுத்தினால் ஏறக்குறைய 100 கிராமங்களுக்கு நல்ல பலன் ஏற்படும். வைகை நதியில் பார்த்திபனூரிலிருந்து காக்கூருக்கு பிரிகிற அந்தக் கால்வாயை காக்கூர் கண்மாய்க்கு வரச்செய்ய வேண்டும். மூன்று மைல் நீளம் ஒரு மைல் அகலமுள்ள கண்மாய் அது. அதை ஆழப்படுத்தி அதிலுள்ள வடிகால் (தத்தின்) மூலமாக ரகுநாதபுரம் என்ற குண்டாற்று வழியாக ஷட்டர்ஸ் போடப்பட்டுள்ள பல கண்மாய்களுக்குப் பாயக்கூடிய தொடர்பாக இருக்கிறது. இதுபோன்ற பல கண்மாய்கள் இருக்கின்றன. தொடர்ச்சியான சில முக்கியமான கண்மாய்களைச் செப்பனிட வேண்டும்.

சாயக்குடி வட்டாரத்தில் சக்கிலியன் ஓடைத்திட்டம் இருக்கிறது. அந்த ஓடை பழுதுபட்டு மேடாக இருக்கிறது. அதையும் சீர்படுத்தினால் கடலாடி வட்டாரத்தில் உள்ள பல கண்மாய்கள் சீர்படும்.

மேலும், மேஜர் கண்மாய்களை பஞ்சாயத்து யூனியன்கள் எடுத்து ஆழப்படுத்தினால், அங்கு நிலையான வாழ்க்கை வசதி ஏற்படும் என்று கூறிக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றி கூறி, உரையை முடிக்கின்றேன்.

* **திரு. மு. மாரிமுத்து :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று, என்னுடைய ஓரிரு கருத்துக்களைச் சொல்ல நான் முற்படுகிறேன்.

கடந்த 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ந் தேதியில் ஆத்தூர் வட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயக் குடிகளுக்கு உரிய காலத்தில் நிவாரணம் அளித்தமைக்கும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலத்தைச் சீர்செய்ய இரண்டரை லட்சம் ரூபாய் கடன் வழங்கியமைக்கும் விவசாயத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டி எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத் திட்டத்தில், விதைப் பண்ணை அமைத்தல், எரு உற்பத்தி செய்தல், இரசாயன உரங்கள், நவீனக் கருவிகள், வாணிகப் பயிர்கள், பழ உற்பத்தி, கிழங்கு வகைப்பயிர் உற்பத்தி, வேளாண்மைக் கல்வி, வேளாண்மை ஆராய்ச்சி, தீவிர சாகுபடி செய்தல், பயிர்ப் பாதுகாப்பு, சிறு பாசனம் போன்ற பல்வேறு திட்டங்கள் வகுத்து, வேளாண்மையைப் பெருக்க, அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையில் பல திட்டங்களை எடுத்துக் கூறியுள்ளார்கள். இத்திட்டங்களில் மிக முக்கிய இனங்களுக்கும் பலன்தரும் இனங்களுக்கும் அதிக நிதி ஒதுக்கி, வேளாண்மையைப் பெருக்க, வழிவகை செய்திருப்பது மிகவும் பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

குறிப்பாக, சேலம் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாகும். அப்படியிருந்தும், இவ்வருடம் புதிய மானியக் கிணறுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படாதது வருந்தத்தக்க ஒன்றாகும். விவசாயம், 75 சதவீதம் கிணற்றுப் பாசனத்தை நம்பியிருப்பதால், அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் குறைந்தது 2000 கிணறுகளுக்காவது நிதி ஒதுக்கிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். கடன்தொகை நில அடைமான வங்கியில் பெறும் போது "D" கார்டு, கண்டிஷன் ஆகிய பட்டா நிலங்களுக்கு ஒருசில காரணத்தால் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு வருகிறது. இதனால் அரிசனக் குடிகளும் ஏழை விவசாயிகளும் பாதிக்கப்படுகிறார்கள். விதியைத் தளர்த்தி, மேற்கண்ட பட்டாதாரர்கள் கடன் பெற வழிவகை செய்து தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த விண்ணப்பங்களை மீண்டும் பரிசீலனை செய்து, கடன் தொகை வழங்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சேலம் மாவட்டத்தில் மின் உற்பத்தி செய்யப்பட்டபோதிலும் இன்னும் ஒருசில பகுதிகளுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படாமலிருக்கிறது. குறிப்பாக விவசாயத்திற்கு அதிகம் தேவைப்படுவதால் எல்லாக் கிராமங்களுக்கும் மின் விஸ்தரிப்பை அதிகரிக்கவும், மின்சார மோட்டார்கள் வழங்கவும்,





அதிகப்படியான கடன் தொகை வழங்கவும் இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் 100 கிராமங்களில் இன்னும் 45 கிராமங்களுக்கு மின் விஸ்தரிப்பு இல்லாமல் இருக்கிறது. இந்த இடங்களுக்கு மின் விஸ்தரிப்பு அளிப்பதுடன் மின்சார மோட்டார்களுக்குக் கடன் தொகை வழங்க மாவட்ட அளவில் அதிக நிதி ஒதுக்க ஆவன செய்து தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனது தொகுதியைச் சுற்றிலும் மலைகள் இருப்பதால் மழைக் காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிப் பயனில்லாமல் கடலில் கலந்து விடுகிறது. இந்த நீரை, உளியபுரம், காட்டுக்கோட்டை, வலசைக்கல்பட்டி, கவர்பனை, சிறுவாச்சூர் ஆகிய இடங்களில் தேக்கி வைத்து பயிர்களுக்குப் பயன்படுத்த ஏரிகள் அமைக்க அரசு ஆவன செய்து தரும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக எனது தொகுதியில் 5,000-க்கும் மேற்பட்ட மேய்ச்சல் தரிசு நிலங்கள், புத்தூர், நாவக்குறிச்சி, நாவலூர், வீரகனூர், கெடாவூர் ஆகிய கிராமங்களில் இருக்கிறது. மலையைச் சார்ந்து இக்கிராமங்கள் இருப்பதால் மேய்ச்சல் தரைக்கென நிலம் ஒதுக்கப்படவேண்டியதில்லை. ஆகவே, இந்த நிலங்களில் நிலமற்ற அரிசனக் குடிகளை குடியேறச்செய்து, மத்திய அரசின் உதவியுடன் கூடிய திட்டத்தல், காலனிகள் அமைத்து, விவசாயத்தைப் பெருக்க ஆவன செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் தற்போது பழப் பண்ணை எதுவும் இல்லை. தலைவாசல் தொகுதியில் நிறைய தரிசு நிலங்கள் இருப்பதால் ஒரு பழப் பண்ணையுடன் கூடிய நாற்றங்கால் நிறுவி, செயல்படுத்த ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டம் லாபகரமான ஒன்றாகும். மேலும், இதன்மூலம் பழச்செடிகள் விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்க ஏதுவாகும். சேலம் மாவட்டத்தில் ஏற்கனவே இருந்த திம்மாபுரம் பழப் பண்ணை தர்மபுரி மாவட்டத்தில் சேர்ந்துவிட்டதால், சேலம் மாவட்டத்திற்கென ஒரு பழப் பண்ணை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு ஒரு முக்கியப் பயிராகும். கிழங்கிலிருந்து ஸ்டார்ச், சவ்வரிசி முதலியவைகள் தயார் செய்யப்படுகின்றன. இப்பொருட்கள் அந்நிய செலாவணிக்குப் பயன்படும் வகையில் இருப்பதால் உற்பத்தியைப் பெருக்க, விவசாயிகளையும், தயாரிப்பாளர்களையும் ஊக்குவிக்க ஒரு திட்டம் வகுத்துச் செயல்பட ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சின்னக்கல்வராயன்மலை, பெரியக் கல்வராயன்மலை ஆகிய இடங்களில் கடுக்காய் விளைகிறது. கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் இதன் உற்பத்தி குறைந்துகொண்டே வருகிறது. இது ஒரு லாபகரமான வணிகப்பொருளாக இருப்பதாலும், மலைகளில் அதிகப்படியாக உற்பத்தி ஆவதாலும், மலைவாசி மக்கள் இதன் பலனை அடைய ஒரு திட்டம் வகுத்து, உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்து தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன நலத் துறையின் கீழ், அரிசன முன்னேற்றத்திற்காக நிலக் காலனிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டத்தில் ஒரு நபருக்கு 1,500 ரூபாய் கடன் தொகை கொடுக்கப்படுகிறது. இந்தக் கடன் தொகை கிணறு வெட்டவும், மாடு வாங்கவும், சாலைகள் அமைக்கவும், நிலத்தைத் சீர்திருத்தம் செய்யவும் கொடுக்கப்படுகிறது. இது மிகவும் குறைந்த தொகையாதலால், இந்த நான்கு வேலைகளும் ஒழுங்காகச் செய்ய முடிவதில்லை. இதனால் திட்டம் செயல்படுத்தப்பட முடியாமல் இருக்கிறது. ஆகவே, இத்திட்டத்தில் நபர் ஒருவருக்கு குறைந்தது மூவாயிரம் ரூபாயாவது அளிக்க வழிவகை செய்துதரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

துளைபோடும் கருவி (Rock Blasting) சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உரிய காலத்தில் கிடைப்பது இல்லை. சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் சேலம் உதவிப் பொறியாளரிடம், விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. மேற்கொண்டு பத்து துளைபோடும் கருவி வழங்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல நிலத்தைச் சீர்ப்படுத்த புல்டோசர்கள் மாவட்டத்தின் அளவில் அளிக்க ஆவன செய்து தரும்படி அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பாறைகளை உடைக்க தோட்டாக்கள் சேலம் மாவட்டத்தில் எளிதில் கிடைப்பதில்லை. இந்த மாவட்ட மக்கள் வெளி மாவட்டங்களிலிருந்து வாங்கிக்கொண்டு வந்துதான் உபயோகிக்கிறார்கள். மாவட்ட அளவில் ஏற்காட்டில் தோட்டாக்கள் விநியோகிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மைத் துறையிலே பணியாற்றக்கூடிய இயக்குநர் அவர்கள் தொழில் நுட்பம் வாய்ந்தவராக இருக்க வேண்டுமென்ற என் அவாவைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக மருத்துவத் துறை, கால்நடை, மராமத்து போன்ற துறைகளில் இருப்பது போல் தொழில் நுணுக்கமுள்ளவராக இயக்குநர் இருந்தால் மிகவும் நலமாக இருக்கும் என்ற என் கருத்தை தெரிவித்துக்கொள்கிறேன். அப்பொழுதுதான் இத்துறையில் உள்ள எல்லா திட்டங்களையும் செயல்படுத்தவும், புதிய திட்டங்களை உருவாக்கவும் முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இத்துறையின் ஆணிவேர்களாக இருக்கக்கூடிய மேஸ்திரி, ஃபீல்ட்மேன், கம்போஸ்ட் இன்ஸ்பெக்டர், டெப்போ கிளார்க், என்ஜின் டிரைவர்கள், சாயில் கன்சர்வேஷன் அசிஸ்டெண்டு ஆகியவர்களின் பணியை ஊக்குவிக்கும்பொருட்டு ஊதிய உயர்வும், பதவி உயர்வும் உரிய காலத்தில் கொடுக்கப்பட்டால், மேலும் விவசாயத் திட்டங்கள் துரிதமாக நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த ஊழியர்களுடைய குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்து விவசாயத்தைப் பெருக்க அரசு வழிவகை செய்ய வேண்டும். மேலே கூறிய ஊழியர்களில் 75 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய பதவி உயர்வு விகிதாசார அளவில் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறி இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. என். குமாரசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு விவசாயத் துறையிலே அதிக கவனம் செலுத்தி வந்திருக்கிறது. இருந்தபோதிலும். இன்னும் பெரிய அளவிலே கவனம் செலுத்தி விவசாயத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்தை முன்னுக்குக் கொண்டுவருவதில் சில சிரமங்கள் ஏற்பட்டாலும், அதைப் பொருட்படுத்தாமல் விவசாய அபிவிருத்திக்கு தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு இடமில்லையென்ற அடிப்படையிலே அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பல பகுதிகளிலே வீணாகப் போகின்ற தண்ணீரை பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தலாம். குறிப்பாக லோயர் பவானி பகுதியிலே வீணாகும் தண்ணீரைக் கொண்டு இன்னும் அதிக பூமியில் பாய்ச்சி உணவுப்பயிரை விளைவிக்கலாம். இதனால் உற்பத்தி அதிகமாகும். கோவை மாவட்டத்தில் பல்லடம் பகுதி வறண்டுபோய்விட்டது. அந்தப் பகுதியில் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டு



மென்று நான் முன்பு சட்டசபையிலும் பேசியிருக்கிறேன். இந்த அரசுக்குக்கூட கடிதம் எழுதியிருந்தேன். அதுபற்றி பரிசீலனையில் இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இந்தத் திட்டம் பல வருடங்களுக்கு முன்னாலே போடப்பட்டு, சில செல்வாக்குள்ளவர்களால் தடைப்பட்டுவிட்டது என்று அறிகிறேன். செல்வாக்குள்ளவர்கள் தங்கள் பூமிக்கு மட்டும் நீர் கிடைக்கும்படியான நிலைமையை உருவாக்கியிருந்தார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதி விவசாய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் 100,120 அடி ஆழம் கிணறு வெட்டினாலும் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே, மேல்பவானி, குந்தா கழிவுநீர்த் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். தற்போதைய நிலையில் அந்தப் பகுதியில் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. 150 அடி ஆழம் வெட்டினாலும் தண்ணீர் வருவதில்லை. இதன்காரணமாக அந்தப் பகுதியிலுள்ள மூன்று நான்கு லட்சம் ஏக்கர் நிலங்கள் பாலைவனமாக மாறிவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மேல்பவானி, குந்தா கழிவுநீர்த் திட்டத்தைக் கொண்டுவருவதன் மூலமாக லோயர் பவானிப் பகுதிகளில் பயிர் பாதிக்கப்படுமோ என்று பயப்பட வேண்டியதில்லை. அதிகமாக வரும் தண்ணீரைக் குளம், குட்டைகளில் தேக்கிவைத்துக்கொள்ளக் கூடிய வசதி செய்து கொடுக்க வேண்டும். அதில் காலதாமதமோ, பண நஷ்டமோ ஆகும் என்று அரசு பயந்தால், அந்த நஷ்டத்தை அங்குள்ள விவசாய மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய அபிவிருத்திக்காக நாம் முதலில் விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும். இன்றைக்கு விவசாயிகளின் உற்பத்திச் செலவு அதிக அளவில் இருக்கிறது. வேளாண்மை கட்டுபடியாகவில்லையென்று சில விவசாயிகள் ஒதுங்கிவிடுகிறார்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படும் மின்சாரக் கட்டணம் மிகக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டும். இன்றைக்கு விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்காவிட்டாலும், அடிசனல் செக்யூரிட்டி டிபாஸிட்டையாவது அதிகப்படியாக வசூலிக்காமல் இருந்தால் போதும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். மின்சார விஸ்தரிப்பிற்காக அடிசனல் செக்யூரிட்டி டிபாஸிட்டாக 600, 700, 1,000 ரூபாய் என்று விவசாயிகளிடம் வசூலிக்கிறார்கள். அவர்கள் பணம் கட்ட முடியாத நிலையில் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளிடத்தில் பணம் வசூல் செய்துதான் மின்சாரத்தை விரிவுபடுத்த வேண்டுமென்ற நிலைமை நாட்டிலே இருந்தால் நல்லது அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஓட்டுகின்ற யூனிட்டுக்குப் பணம் கொடுக்கிறார்கள். ஆனால் நாங்கள் அதிகமாக மின்சாரத்தை ஓட்டிவிட்டோம் என்பதற்காக வசூல் செய்வது அநியாயமானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய அபிவிருத்தி வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் ஏராளமான பூமி வளப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அந்த நிலங்களையெல்லாம் வளப்படுத்தி, விளைநிலமாக மாற்றுவதற்கு அதிக மூலதனம் வேண்டும். அவர்கள் குத்தகை விவசாயிகளாக இருப்பதால் பெரும் மூலதனம் செலவு செய்து விளைநிலமாக மாற்றினால் பின்னால் என்ன ஆகுமோ என்று பயப்படுகின்ற குத்தகை விவசாய மக்கள் இருக்கிறார்கள். அதன் காரணமாக ஏராளமான பூமி வளமடையாமல் அப்படியே இருக்கின்றன. பதினைந்து இருபது ஆண்டுகளாக அவர்கள் அப்படியே குத்தகைக்குப் பார்த்துக்கொண்டு இருக்கின்றனர். ஆகவே அந்தப் பூமிகளை அவர்களுக்குச் சொந்தமாக்குவதன் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு, விளைநிலமாக மாற்றுவதற்கு, பண்படுத்தி விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு அவர்களுக்கு உறுதி உண்டாக்க நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் பழத்தோட்டம், பால்பண்ணை, தென்னந் தோப்புகள் முதலியவற்றிற்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நல்ல விளை நிலங்களைக்கூட பால்பண்ணை என்ற திட்டத்தின்மூலம் விதிவிலக்குப்பெற்று வைத்திருக்கிறார்கள். அவைகளை அவர்கள் தரிசு நிலமாகப் போட்டு

வைத்திருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் விவசாய உற்பத்தி செய்வதற்கான முறையில் உருவாக்கிக் கொடுத்தால் உணவு உற்பத்தியை மேலும் அதிகம் உண்டாக்க முடியும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் இந்தமாதிரியான நிலங்களையெல்லாம் விதிவிலக்கின்கீழ் கொண்டுவரக் கூடாது. இன்றைக்கு நிலத்திலே பாடுபடுகின்றவர் ஒருவர், பலனை அனுபவிக்கிறவர் வேறு ஒருவர் என்ற நிலை இருந்து வருகிறது. இந்த நிலைமையை மாற்றியாக வேண்டும். ஒருவனுக்கு நிலம் சொந்தம் என்ற உரிமை இருக்கும்போது, அதில் பாடுபடுகிறவனுக்கும் உரிமை இருக்கத்தான் வேண்டும். அந்த நிலைமை இன்று நாட்டிலே இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலத்திலே வேலை செய்கின்றவர்களுக்குச் சீரான உரிமை இன்று கொடுக்கப்படவில்லை. தான் செய்த வேலைக்குக் கூலி கொடுத்தால் போதும் என்று கூலிக்காரர்கள் எண்ணிக்கொண்டு விடுகிறார்கள். இது நல்ல போக்கு அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல்லாயிரக் கணக்கான நிலமில்லாத விவசாயிகள்தான் இன்று பாடுபடுகிறார்கள். ஆனால் அவர்களுக்குச் சொந்தமாக நிலம் இல்லை. அப்படி நிலத்தில் நேரடியாகப் பாடுபடக்கூடிய விவசாயிகளுக்கு ஃபாரஸ்டு நிலங்களையெல்லாம் ஒதுக்கிக்கொடுத்தால் உணவு உற்பத்தி பெருகும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். யார் யார் நேரிடையாக நிலத்தில் பாடுபடுகிறார்களோ அவர்களுக்கே நிலம் உரிமையாக்கப்பட வேண்டும். அதற்கான வழிவகைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற் பகல் 1–30. அடுத்தபடியாக பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் பற்றி ரொம்ப காலமாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். பூச்சியினால் விவசாயப் பயிர்கள் அழிக்கப்படுகிறது. மருந்து அடித்தாலும் கூட அதையும் மீறிக்கொண்டு பயிர்களை அழித்துவிடுகின்றன. இப்படி இரண்டு வெள்ளாமை போகுமானால் அடுத்த வெள்ளாமைக்குப் பயிர் வைக்க அவனால் முடியாது. ஆகவே கண்டிப்பாக இந்த அரசு பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் விவசாயிகள் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களுக்கு ஊக்கம் இருக்கும்.

அமோனியம் சல்பேட் அதிகமாக நிலத்திற்குப் போடுவதனால் பூமியின் இயற்கைச் சத்து மிகவும் குறைந்து வருகிறது, விளைச்சல் குறைகிறது, தரமும் கெட்டுப்போகிறது. இயற்கை உரங்களை அதிகப்படுத்துவதன்மூலம் தான் நிலத்தின் தரத்தைக் காப்பாற்ற முடியும். விளைச்சல் அதிகமாகக் கிடைக்கின்ற சந்தர்ப்பம் ஏற்படும். பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக இயறகை உரத்தை விவசாயிகளின் உதவியோடு அதிகப்படுத்த எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிறுபாசனத் திட்டத்தின் மூலமாக எங்கள் பிரதேசத்தில் உள்ள குளம் குட்டைகள் நல்லமுறையில் செப்பனிட்டாக வேண்டும். புதுக்கிணறு எடுப்பதற்கு அந்தப் பிரதேசத்தில் இன்றைக்கு 5 ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். அது போதாது. ஒரு கிணறு எடுக்க அந்தப் பிரதேசத்தில் 20 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. ஆகவே அரசாங்கம் 10 ஆயிரம் ரூபாயாவது கடனாகக் கொடுத்து, விவசாயிகளைப் பத்தாயிரம் போட்டுக் கொள்ளச் சொல்லலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக குந்தா கழிவுநீர்த் திட்டத்தைச் சரியாகக் கண்காணிப்போடு நடத்த வேண்டுமென்று கோரி, இந்த மானியத்தில் பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் :** அவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பைக் கொடுத்ததற்கு என் நன்றி. இன்று உணவு உற்பத்தித் துறையில் நெல் விவசாயம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை எல்லோரும் உணர்வார்கள். அதிலும் குறிப்பாக தமிழகத்தின் நெற்களஞ்சியமாகிய தஞ்சை மாவட்டத்தில் நெல் விவசாயம் எந்த அளவு இருக்கிறது, அந்த விவசாயத்தைச் செய்கின்ற மக்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கிடைக்கிறது என்பதை நாம் முக்கியமாக உணர்தல் வேண்டும்.



குறிப்பாக அவர்களது ஊக்கமும் ஆக்கமும் கெடுகின்ற வகையில் தான் கடந்த ஆட்சியில் போட்ட வருமான வரியை இந்த அரசு 3 மடங்காக்கி இருக்கிறது. அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் என்றால் நெல் விவசாயம்தான். ஏக்கருக்குத் தீர்வை 8 ரூபாய்க்குக் குறைந்த நிலம் 5-இல் இருந்து 8 சதவீதம் வரையில் தான் இருக்கும். அம்மாதிரி இருக்கிற நிலையில் வரிச்சலுகை நிச்சயம் கிடைக்காது என்பதை உணர்தல் வேண்டும். ஒரு பக்கம் நிலவரி, இன்னொரு பக்கம் விவசாய வருமான வரி, ஆக இரண்டுவித வரி நிலத்தின் மீது போடப்படுகிறது- உணவு உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும் என்கிற நேரத்தில் இப்படி இரட்டை வரியைப் போட்டாக வேண்டுமா என்பதை முதலில் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தில் குறுவையில் ஓரளவுக்கு வருமானம் வந்தபோதிலும் அதை நம்பி தாளடி சம்பாப் பயிரில் கிடைத்த வருமானத்தையும் போட்டுவிட்டார்கள். அவை அழிந்துபோய் இன்றைக்கு விவசாயிகள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதே நிலை நீடித்தால் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் தேதியிலிருந்து டிசம்பர் மாதம் 1-ம் தேதிக்குள் 7 லட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்ததுபோல வருகிற ஆண்டில் எதிர் பார்க்க முடியாது. நெல் சாகுபடியில் வருமானம் வராததால் வருமானம் கிடைக்கக்கூடிய பணப்பயிர்களை விரும்பியே பலர் சென்றுவிடக்கூடும். எந்தக் கட்சியினுடைய பிரச்சாரத்தைக் கேட்டோ சொல்வதாகக்கொள்ளக்கூடாது, லாபம் இருக்கிற பக்கம்தான் மக்கள் திரும்புவார்கள். லாப நோக்கோடு நெல் விவசாயம் செய்வதைத் தவறு என்று சொல்லக் கூடாது. நிலவரி மீது இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கான சர்சார்ஜ் 50 சதவிகிதத்தில் இருந்து 100 சதவிகிதம் வரைக்கும் கொடுக்கிறோம், இந்தமாதிரி வரிச்சுமை ஏறிக்கொண்டே போவதை இந்த அரசு குறைத்தாக வேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற இந்த அரசின் கொள்கைக்கு வரிச்சுமையை ஏற்றிக்கொண்டே செல்வது நன்மை பயக்காது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக் மின்சார பம்பு செட்டு, ஆயில் பம்பு செட்டு வைத்திருக்கிற மக்களுக்காவது வரிச்சுமையைக் குறைத்து ஆக்கமளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பம்பு செட்டுகளுக்காக சில இடங்களில் 1,200 கடன் வழங்கப்படுகிறது. இதை ஐந்தாண்டுக்குள் திரும்பத் தரவேண்டும் என்று இருப்பதற்குப் பதிலாக முழுமானியக் கிணறு அடிப்படையில் 10 ஆண்டுகளில் திரும்பப்பெற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட்டார வளர்ச்சி அதிகாரிகள் விவசாயிகளுக்குக் கடன் வழங்கும்போது ஆவணங்களைப் பெறுவதில் சங்கடங்கள் இருக்கின்றன. அதை நிவர்த்திக்கவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, ஒவ்வொரு பஞ்சாயத்து கூட்டு மன்றத்திலும் டிராக்டர்கள் புல்டோசர்கள், ஸ்ப்ரேயர்கள் இருக்கின்றன. அவை பழுதுபட்டால் உடனடியாக பழுது பார்க்க மெக்கானிக்ஸ் இல்லை. மேலே அனுப்பி பழுது பார்ப்பதற்குள் காலதாமதமாகிறது. ஆகவே விவசாய இலாகா ஒவ்வொரு மாவட்டத்திலும் இதற்கென தனி வசதி செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரசாயன உரங்கள் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் இருக்கிற இடங்களில் நல்லமுறையில் கிடைக்கின்றன. மற்றும் ஐ. எம். எஸ். போன்ற இடங்களிலும் பரவாயில்லை. மற்ற இடங்களில் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே விவசாயிகளுடைய தேவையை முன்கூட்டியே கணக்கிட்டு, நம்மிடம் உள்ளனவற்றுக்குத் தகுந்தாற்போல காலத்தில கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்தபடியாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்துவது பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தீவிர விவசாயச் சாகுபடித் திட்டத்தின்கீழே நல்ல சாலைகளை அமைத்துக் கொடுக்க வேண்டும். உற்பத்தி

செய்யப்பட்ட பொருள்களை உடனுக்குடன் சந்தைகளுக்கு எடுத்துச் செல்வதற்கு ஏற்ற முறையில் இந்தத் தீவிரச் சாகுபடித் திட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : கனம் சபாநாயகர் அவர்களே, அவை முன் இருக்கும்படியான இந்த வேளாண்மைத் துறை மானியங்களிலே என் கட்சியின் சார்பிலே கொண்டுவந்திருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் மிகவும் விளக்கமாகவும் விரிவாகவும் 44, 45 பக்கத்திலே இந்த அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். விவசாயத் துறையே இப்பொழுதுதான் கவனிக்கப்படுகிறது. இதுவரை முன்னால் இருந்த பழைய அரசாங்கம் செய்ததும் சரியே, அதற்கு முன்னாலே இருந்தவர்களும் சரியே, விவசாயம் ஒரு மூன்றும் தரமாகத்தான் கருதப்பட்டதே தவிர அது முதல் தரமாகக் கருதப்படவில்லை. விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாத நிலைதான் இருந்தது. உணவுப் பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினாலேதான் குடியானவர்களை மனிதர்களாகக் கருதும்படியான நிலை ஏற்பட்டது, அந்தப் பற்றாக்குறை வாழ்க வாழ்க என்று விவசாயிகளின் சார்பாக நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். உணவுப் பற்றாக்குறை இல்லாதிருந்து இருக்குமானால் விவசாயிகள் கவனிக்கப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் அதே நேரத்தில் விவசாயிகள் குற்றவாளிகளாக, திருடர்களாகக் கவனிக்கப்பட்டுக் கொண்டு இருப்பதைப் பற்றியும் நான் என்னுடைய வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறேன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து ரெவின்யூ டிபார்ட்மெண்டில் வேலை பார்க்கின்ற உத்தியோகஸ்தர்களை உயர்வாகவும், பாக்கியிருக்கிற டிபார்ட்மெண்டில் இருக்கிறவர்களைக் குறைவாகவும் கருதப்பட்டது. ஏனென்றால் புள்ளி விவரங்கள் தவறாக கொடுப்பதிலே அவர்களைப்போல் யாரும் முடியாது. இப்பொழுது விவசாய இலாகாவிற்கு அந்தப் பழி வந்திருக்கிறது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு விவசாயப் பண்டங்களின் விலை ஏறியதினாலே, பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினாலே ஜனத்தொகை அதிகமாகிவிட்ட காரணத்தினாலே ஓரளவுக்கு விவசாயம் கவனிக்கப்படுகிறது. பாரத தேசத்திலே உணவுப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நான் வெளிநாடுகளுக்குச் சென்ற சமயத்திலே இது எனக்கு அவமானகரமாக இருந்தது. இந்தியாவிலிருந்து வந்தாலே பிச்சையெடுப்பதற்காகத்தான் வந்திருக்கிறார்கள் என்று எண்ணும்படியான நிலை இருந்தது. பூமாண்ட் என்ற இடத்திலே நடந்த விவசாயிகள் மாநாட்டிலே அப்படிப் பேசிக்கொண்டார்கள். அப்பொழுது கிரேக்மென் என்பவர் என்னை அங்கே அறிமுகப்படுத்திப் பேசச் சொன்னார்கள், நான் இந்தத் தேசத்திலே விவசாயத்தைப் பொறுத்தவரையில் நல்ல எதிர்காலம் இருக்கிறதென்று சொன்னேன். பாக்கி இருக்கும்படியான தேசங்களிலே உணவு உற்பத்தி ஓரளவுக்கு எட்டியாகிவிட்டது. இன்னும் இதைப்போல் இரு மடங்கு உணவு உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வசதிகள் நம்முடைய தேசத்திலே இருக்கின்றன, எக்கருக்கு 2,000 பௌண்ட் ஆக இருப்பதை 4,000 பௌண்ட் ஆக ஆக்குவதற்கான சக்தியும் திறமையும் இந்த நாட்டிலே இருக்கிறது. சரியான முறையிலே நவீனமான முறையிலே விவசாயத்தைக் கையாள்வோமானால் 90 மிலியன் டன் என்று சொல்கிறார்களே அதை 190 மிலியன் டன் என்ற அளவிலே அந்த இலக்கை எட்டிப்பிடிக்க முடியும் என்ற நம்பிக்கையிலேதான் நாங்கள் இருக்கிறோம். நம்முடைய நாட்டிலே நம்முடைய சென்னை மாநிலம், பஞ்சாப் மாநிலம் இந்தத் துறையில் பல நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். ஆராய்ச்சிகள் பலனுள்ளவையாக இருக்கின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே 30 லட்சம் டன்னாக இருந்தது. இன்றைக்கு 60 லட்சம் டன் அளவுக்கு ஏறியிருக்கிறது. இப்பொழுது இருக்கிற அரசாங்கம் 7 லட்ச டன் உற்பத்தி செய்திருக்கிறோம், அதிகமாக என்று பெருமையாக



சொல்லிக்கொள்ளலாம். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அதே சமயத்திலே முன்னால் இருந்த அரசாங்கம் போட்ட திட்டங்களின் காரணமாகத்தான் 52 லட்சம் டன் வரை உற்பத்தி செய்ய முடிந்திருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டால் மிகையாகாது என்று கருதுகிறேன். பருவ மழை சரியாக இருந்து விவசாயம் சரியான முறையில் செய்யப்படுமானால் உற்பத்தி அதிகமாகும். ஆனால் பருவ மழை தவறிப் பெய்யக் கூடிய அல்லது பொய்க்கக்கூடிய காரணத்தால் உற்பத்தி பாதிக்கப்படும். பருவத்தை உத்தேசித்து, காலத்தை உத்தேசித்து, பயிரை உத்தேசித்துத்தான் உற்பத்தியிருக்கும். இப்படிப்பட்ட பலவிதமான சூழ்நிலைகளின் காரணமாகத்தான் உற்பத்தி பெருகுமே தவிர இதிலே கெட்டிக்காரத்தனம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆறு மாதங்களுக்கு முன்னால் பற்றாக்குறை ராஜ்யமாக இருந்ததை உபரி ராஜ்யமாக மாற்றிவிட்டோம் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது அப்படி இல்லை. நாங்கள் சொன்னது தப்பு, பருவ மழை தவறிவிட்டது. அதனால்தான் இப்படிப்பட்ட நிலை என்று சொல்கிறார்கள். இதையேதான் முன்னால் இருந்த அரசாங்கமும் சொன்னார்கள். இரண்டு பருவ மழை பெய்தவுடன் அவர்கள் அது எங்கள் சாமர்த்தியம் என்று சொன்னார்கள், இரண்டு மழை இல்லை என்று சொன்னவுடன் இப்பொழுது அதைத் திருத்திக்கொள்கிறார்கள். ஒரு வருஷத்திலே இப்படித் திருத்தம் என்றால் இன்னும் எத்தனை திருத்தங்கள் வரும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

1966–67-லே மேட்டூரிலே தண்ணீர் இல்லை, மழையில்லை. அதனால் உற்பத்தியில்லை. இப்பொழுது மழையிருக்கிறது என்பதால் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. 8 கோடி, 9 கோடி ரூபாய் செலவிலே 52 லட்சம் டன் உற்பத்தி செய்தார்கள் என்றால், இப்பொழுது 5 கோடி 6 கோடி அதிகமாகச் செலவு செய்து 7 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறார்கள். இருக்கக்கூடிய பருவ நிலவரத்தைப் பொறுத்துத்தான் உற்பத்தி இருக்கும். நெல் பயிரைப் பொறுத்தும் இருக்கிறது. தண்ணீரை அதிகமாக விட்டு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பது பழங்காலத்திற்குள்ள நிலை. இன்றைக்கு அப்படியல்ல. எவ்வளவுக்கெவ்வளவு குறைந்த தண்ணீரிலே சிறந்த விதையை உபயோகப்படுத்தி ஜாக்கிரதையாகப் பாசன வசதிகளைச் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்னும்படியான நவீன நிலைதான் இன்றைக்கு இருக்கின்ற நிலை. 30, 40 வருடங்களுக்கு முன்னால் வாய்க்காலில் 20 டியூட்டி என்று சொல்வார்கள். இப்பொழுது 60 டியூட்டி என்று சொல்கின்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது. குறைந்த தண்ணீரிலே அதிகமான உற்பத்தி செய்வதற்கேற்ற வகையில் விவசாயிகளுக்குச் சௌகரியங்களைச் செய்துகொடுப்போமானால், உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். விவசாயத்தை நாங்கள் நன்கு உணர்ந்தவர்கள்தான். விவசாயிகளுக்குப் பயனுள்ள திட்டங்கள் இருக்கின்றனவா அவர்களுக்கு உடனடியாக வசதிகள் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஆராய்ச்சி செய்து பார்த்து பலன் தந்த வித்துக்களை எல்லாம் காலாகாலத்தில் நல்லமுறையில் கொடுத்தால் உற்பத்தியைப் பெருக்க முடியும். கோயம்புத்தூரில் விவசாயப் பண்ணை நல்லமுறையிலே நடந்துகொண்டு வருகிறது. அப்படிப்பட்ட வித்துக்களை எல்லா இடங்களுக்கும் கொடுக்க வேண்டும். அதேபோல் ஆடுதுறை விவசாயப் பண்ணையும் இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. அதையும் எல்லாஇடங்களுக்கும் கொடுக்கவேண்டும். அங்கே வேலை செய்கிறவர்களைப் பாராட்டுகிறோம். அந்த ஆராய்ச்சிப் பண்ணையிலே இருக்கிறவர்கள் நிபுணர்கள்தான், சிறந்தவர்கள்தான், அவர்களுக்கு வசதிகள் இல்லை. போதிய ஊதியம் இல்லாததால் மனச்சோர்வோடு இருக்கிறார்கள், அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க வேண்டும். தமிழ்நாட்டிலே விவசாயச் சர்வகலாசாலை அமைக்கவேண்டும். கோயம்புத்தூரிலே அதை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்தால் மத்திய சர்க்கார் அதற்கு உதவி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நல்லது. அப்படிச் செய்தால் மதுரையில் இருக்கிற ஆடுதுறையில் இருக்கிற விவசாய ஆராய்ச்சிகளுக்கு எல்லாம் நல்ல

முறையில் பயன்படுத்த முடியும். முன்னுல் கலவியறிவு இல்லாதவர்கள் பலர் இருந்தார்கள், எல்லோரும் கூலியாக வேலை செய்தார்கள். இப்பொழுது 100-க்கு 70 சதவீதம் 60 சதவீதம் கல்வியறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். குழந்தைகளை எடுத்துக்கொண்டால கல்வியறிவு பெருதவர்களே கிடையாது என்று சொல்லலாம். பழைய காலத்திலே வறுமை வாட்டிக்கொண்டிருந்ததினுலே விவசாயத்தை நாடிக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது அதிகமாக வருமானம் கிடைத்தால்தான் விவசாயத்தை நம்பி வருகிறார்கள். அதிக தண்ணீர் வேண்டுமென்பதல்ல, குறைந்த தண்ணீரை வைத்துக்கொண்டு நல்ல வித்துக்களைக் கொண்டு விவசாயம் செய்யக்கூடிய முறையில் புதுப்புது நெல் வரவேண்டும். நண்பர் திரு எ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் சொன்னதைப்போல மானுவாரி, தோட்டக்கால் இவற்றில் செமி டிரைபேடி கிராப்-ஐ அதிகம் பயிரிடவேண்டும். தஞ்சாவூரில் இருக்கும்படியான வித்துக்களை தோட்டக்காலிலே இறைவைப் பாசனத்திலே உற்பத்தி செய்தால் இரண்டு பங்கு வேளாண்மை கொடுக்கசுடிய நிலை இருக்கிறது.

கீழ்பவானி அணைக்கட்டுப் பிரதேசத்தில் 'டிரை எரியா இருக்கிறது என்று சொன்னுர்கள். அதாவது. கம்பு, சோளம், கேழ்வரகு போன்றவற்றைப் பயிரிடக்கூடிய பகுதி. கோவையைப் பொறுத்தவரை இரண்டு பகுதியாகப் பிரித்து நெல்லுக்கு என்று ஒரு பகுதி விடப்பட்டு நான்கு மாத காலத்திலே நிறைந்த உற்பத்தியைச் செய்து காட்டியிருக்கிறார்கள் கோவை விவசாயிகள். விவசாயிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தால் எல்லாக் காரியத்தையும் தீர்த்துக் கொடுக்கும் ஆற்றல் விவசாயிகளுக்கு இருக்கிறது. இன்று விவசாயிகளுக்கு நஷ்டமாகாமல் பார்த்துக்கொள்ள எந்த விதமான பாதுகாப்பும் இல்லை. பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் அவனுக்கு லாபம் இல்லையென்றாலும் அவனுக்கு நஷ்டமாவது ஏற்படாமல் தடுக்க முடியும். அதை ஒரு பைலட் ஸ்கீமாகவாவது அரசாங்கம் ஆரம்பித்துக் கொடுக்க வேண்டும்.

கைத்தொழில் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றால் விவசாயம் சிறப்பாக இருக்கவேண்டும். விவசாய உற்பத்திப் பெருக்கத்தில்தான் நாட்டின் சுபிட்சம் இருக்கிறது. நாட்டின் சுபிட்சம் பட்டணத்தில் இல்லை, சிமெண்ட் ரோடுகளில் இல்லை, தார் ரோடுகளில் இல்லை. கிராமங்களில் விவசாயிகளுடைய உழைப்பில்தான் நாட்டினுடைய சுபிட்சம் இருக்கிறது. அப்பேற்பட்ட சுபிட்சத்தைப் பெறுவதற்கு விவசாயிகளுக்கு என்ன பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது ? தொழிலிலே முதல் போடுகிறவனுக்கு ஒரு விண்ணப்பம் போட்டால் 50 லட்சம் ரூபாய் வரை கூட கடன் கொடுக்கப்படுகிறது, விவசாயி ஆயிரம் ரூபாய் கடனைக் கூடக் காலாகாலத்தில் வாங்க முடிவதில்லை. தொழிலில் உற்பத்தி செய்யும்படியான பொருள்களுக்கு நிர்ணயிக்கும்படியான விலை, வேலை செய்பவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம், வாடகை, வட்டிப் பணம், டிப்ரிசியேஷன் ஆகியவை எல்லாம் போட்டு அதற்கு மேல் லாபம் வைத்து விலை நிர்ணயிக்கப்படுகிறது. ஆனுல் விவசாயி உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு சர்க்கார் சொல்லுகிற விலைதான். முந்திய சர்க்காரும் சரி, இப்போதைய சர்க்காரும் சரி இதிலே ஒரே மாதிரிதான் இருக்கிறார்கள். 'நீங்கள் தியாகம் செய்யவேண்டும்' என்று விவசாயிகளுக்கு உபதேசம் செய்கிறார்கள். அவனுடைய உற்பத்திச் செலவு எவ்வளவு, விவசாயினுடைய உழைப்பு என்ன, அவனுடைய குடும்பத்திற்கு என்ன செலவாகும் இதையெல்லாம் எண்ணிப் பார்ப்பதே இல்லை. மக்களுக்கு அத்தியாவசியமான பொருள் என்று நீங்கள் கூறுகிறீர்கள். விவசாயிக்கு அத்தியாவசியம் இல்லையா ? மூன்று ஏக்கர், ஐந்து ஏக்கர் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் என்ன நிலைமையில் இருக்கிறார்கள்? செகரடேரியட்டில் ஐந்தாம் தரத்தில் உள்ள பியூன்கள் இருக்கிறார்களே, அவர்களையும்விட மோசமான நிலைமையில் நடுத்தர விவசாயிகள் என்று சொல்லக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அந்த பியூன்களுக்கு மாதம் 100 ரூபாய் வீதம் வருஷத்திற்கு 1,200 ரூபாய் வரும். அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் பத்து ஏக்கர் வைத்திருக்கக்கூடிய விவசாயிக்கு





ஏக்கருக்கு 100 ரூபாய் வீதம் 1,000 ரூபாய்தான் வரும். இங்குள்ள கீழ்த்தர சிப்பந்தியைவிட நடுத்தர விவசாயி மோசமான நிலையில் இருக்கிறான். சர்க்கார் பண்ணையில் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு செலவாகியிருக்கிறது என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்கட்டுமே.

இப்போது இருக்கும்படியான நிலைமையில் விவசாயிக்கு விவசாயி பாகுபாடு இருக்கிறது. கரும்பு விவசாயம் செய்கின்ற விவசாயிக்கும், நெல் விவசாயம் செய்கின்ற விவசாயிக்கும் இடையே பொத்த வித்தியாசம் இருக்கிறது. கரும்பு பயிர் செய்கின்றவன் ஒரு ஏக்கருக்கு குறைந்தது 35 டன் விளைவை அடையமுடியும். அதிலிருந்து 3,500 ரூபாய் வருமானத்தைப் பெறமுடியும். ஆனுல் அதே நேரத்தில் நெல் விவசாயம் செய்தவன் பெறுவது 150 ரூபாய்தான். (குறுக்கீடு) ஆம், அதிலிருந்து வரக்கூடிய வருமானம் 450 ரூபாயிலே செலவுகள் போக மீதி இருப்பது 150 ரூபாய்தான். உங்களுடைய கட்சியிலே விவசாயம் தெரிந்தவர்களை வைத்துக்கொண்டு இதைப் பற்றிப் பேச நான் தயாராக இருக்கிறேன். அரசியலுக்காக எது வேண்டுமானுலும் பேசலாம். நான் பொறுப்புணர்ச்சியோடு கணக்குப் போட்டுச் சொல்லுகிறேன். உணவு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள்தான் இன்று இந்த நாட்டிலேயே தியாகம் செய்கிறார்கள். அவர்களுக்கு அனுதாபம் காட்டப்படவில்லை. அப்பேற்பட்ட விவசாயியைத் திருடன் என்றும், கொள்ளைக்காரன் என்றும், கள்ளமார்க்கெட்காரன் என்றும் சொல்லக்கூடிய நிலைதான் இருக்கிறது. ஒரு ஏக்கர் கரும்பு விவசாயம் செய்யக்கூடியவனுக்கு 2,000 ரூபாய் லாபம் கிடைக்கிறது, பருத்தி பயிர் செய்தால் 700 ரூபாய் கிடைக்கிறது, நிலக்கடலை பயிர் செய்தால் 500 ரூபாய் கிடைக்கிறது. நெல்லைத் தவிர மற்றவற்றைப் பயிர் செய்கிறவர்கள் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். அதற்காக நான் பொறுமைப்படவில்லை. நெல்லை வெளியிலே விற்கும்போது இரண்டு பங்கு விலைக்கு விற்கப்படுகிறது என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். அந்த அளவுக்கு விலை கொடுத்து வாங்க சக்தி இருக்கிறது. இப்படி வெளியில் விற்கும்போது சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலை சமூகத் துரோகமானது என்று கூற விரும்புகிறேன். ஆந்திராவில் குவிண்டாலுக்கு 70 ரூபாய் வரை கொடுத்திருக்கிறார்கள். மேற்கு வங்காளத்தில் விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பற்றிச் சொன்னுல் ஜெகஜீவன்ராமே சொல்லிவிட்டார் என்று சொல்லுவார்கள். சரியான விவசாயியாக இருப்பாரானுல், உற்பத்திச் செலவு மற்றவற்றையெல்லாம் கணக்குப் பார்த்து முடிவு செய்யவேண்டும். நான் நேரடியாக அவரிடத்திலே பேசினேன. 'ராஜ்ய சர்க்கார் இவ்வளவு விலை அதிகமாகக் கூட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொல்வார்களானுல் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார்' என்று என்னிடம் சொன்னுர்கள். யாராவது குறைந்த விலைக்குக் கொடுத்தால் எல்லோரும் சரி என்றுதான் சொல்லுவார்கள். பத்தாயிரம் ரூபாய் பெறுமான வீட்டை ஏழாயிரம் ரூபாய்க்கு வாங்கினுல் 'ஆமாம், சரிதான்' என்றுதான் மற்றவர்கள் சொல்லுவார்கள்.

நேற்று முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்காகத்தான் கிராமங்களுக்காகத்தான் எல்லாக் காரியங்களையும் செய்கிறோம் என்று சொன்னுர்கள். வரவேற்கிறேன். படியரிசித் திட்டம் பொருளாதாரப் பிரச்சினை, சிரமமான காரியம். அதை அதிகமாக விஸ்தரிக்கப் போவதில்லை. எல்லா இடத்திற்கும் கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள். அந்தத் திட்டத்தை விஸ்தரிப்பது என்ற நிலையில் இந்த விலையை உயர்த்திக் கொடுக்க முடியாது என்று சொன்னுர்கள். இப்போதாவது என் கட்டுபடியாகக்கூடிய விலையை விவசாயிக்குக் கொடுக்கக்கூடாது ? எட்டு லட்சம் டன் வசூல் செய்துவிட்டோம், நீங்கள் யார் கேட்பதற்கு என்கிறார்கள். அவர்கள் சந்தோஷமாகவா கொடுத்தார்கள் ? வெளியில் இரண்டு பங்கு விலை விற்கும்போது சந்தோஷமாகவா உங்களிடம் கொடுத்தார்கள்? தைரியமிருந்தால் நீங்கள் ஒரு சட்டம் போடுங்கள். இந்த விலைக்கு உங்களிடம் இருக்கும் எல்லா நெல்லையும் சர்க்காருக்குக் கொடுத்துவிடுங்கள் என்று கொண்டு வாருங்கள். அதற்கு

[திரு. பி. ஜி. கருத்திருமன்.] [1968 மார்ச் 14

பிறகு நீங்கள் கிராமத்திற்குள் போக முடியுமா ? ரோட்டில் நடக்க முடியுமா ? அதற்குப் பிறகு ஒரு மாத காலமாவது இந்த மந்திரிசபை நீடிக்க முடியுமா ? 'ஃபைன் வெரைட்டி' என்று சொல்லுகிறார்கள். நம்முடைய நாட்டில் ஃபைன் வெரைட்டி இல்லையா ? சி.ஓ. 19 நெல்லுக்கு 48 ரூபாய் கொடுக்கிறார்கள் ; சி.ஓ. 25-ம் அதே மாதிரி ரகந்தான். அது தரத்தில் குறைந்தது என்று சொல்லி 46 ரூபாய்தான் தருகிறார்கள்.

பிற்பகல் 2-00. இது என்ன நியாயம் ? ஷார்ட் டேர்ம் க்ராப்ஸ், மீடியம் டேர்ம் க்ராப்ஸ், லாங்க் டேர்ம் க்ராப்ஸ் என்று பிரித்திருக்கலாம். ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு விலை போடுங்கள். என்னவோ போன ப்ரொக்யூர்மெண்ட்காரன் போட்டது போட்டதுதான். 50, 60, 70 கிலோஸ் என்று எடுக்கிறார்கள். வெளியில் இரண்டு பங்கு விலை கிடைக்கும்போது கொஞ்சம் கொடுத்து சிலரை தவறாக நடக்கும் நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். எட்டு லட்சம் டன் வந்திருக்கிறது. திட்டவட்டமான ஒரு சட்டத்தைப் போட்டு இதுதான் சர்க்காரின் விலை என்று போட்டால் ஒரு மாதத்திற்குள் இந்த அமைச்சரவை எந்த அளவுக் கஷ்டத்திற்காளாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெல் மட்டுமல்ல, பழ வர்க்கங்கள், மற்ற எவ்வளவோ தானிய வகைகளை உற்பத்தி செய்ய வேண்டும். ஆகவே, இனிமேல் சமுதாயத்தில் படித்தவர்கள் விவசாயத்தை ஏற்று நடத்தவேண்டுமென்றால், அறிவுள்ளவர்கள் விவசாயத்தை ஏற்று நடத்த வேண்டுமென்றால், திறன் உள்ளவர்கள் விவசாயத்தை ஏற்று நடத்த வேண்டுமென்றால் எல்லா வசதிகளையும் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்பதே என் வேண்டுகோள். விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும், கட்டுபடியான விலை கிடைக்க வேண்டும். கணக்குப் போட்டுப் பார்த்து இன்ன விலை என்று தீர்மானம் செய்யுங்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தால்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். அரிசியை அரசியல் பிரச்சினையாக ஆக்காமல் பொருளாதாரப் பிரச்னையாகக் கருதவேண்டும். பொருளாதார நிலையில் எவ்வளவோ கோடி நஷ்டம் என்று சொல்கிறார்கள். கொள்கைகளை வகுப்பது ஒரு அமைச்சர், நிறைவேற்றுபவர் இன்னொரு அமைச்சர். உணவு அமைச்சர் வேறு, விவசாயத் துறை அமைச்சர் வேறு. திட்டங்களை வகுப்பது முதல் அமைச்சர் அவர்கள் என்ற நிலை இருக்கிறது. விவசாயத் துறை அமைச்சர் சொல்வதற்கெல்லாம் சலாம் போடும் நிலையிருந்தால் அவர் விவசாயிகளின் பிரதிநிதியாக இருக்க முடியாது. அவர் சண்டை போட வேண்டும். எங்கள் விவசாயிகளுக்கு இவ்வளவுதானே கொடுக்கிறீர்கள், இதோ பார் என்று சொன்னால் அவரை விவசாயிகளின் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ள முடியும். மக்கள் மனதைப் புரிந்து கொள்ளவேண்டும். இதை அரசியல் பிரச்சினையாக ஆக்காமல் அரிசியல் பிரச்சினையாகச் செய்ய வேண்டும். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது சர்ச்சில் சொன்னார்,

"Give us the tools, we will finish the job,"

என்று. வேண்டிய ஆயுதங்களை கொடுங்கள், விஷயத்தை முடித்து விடுகிறேன் என்று சர்ச்சில் அப்போது சொன்னார். அதைத்தான நான் தமிழக விவசாயிகள் சார்பில் சொல்கிறேன். எங்களுக்கு வேண்டிய வசதிகளையும், கட்டுபடியான விலையையும்—லாபகரமான விலை என்று சொல்லவில்லை—கொடுங்கள், இந்தப் பிரச்சினையை நாங்கள் தீர்த்து விடுகிறோம். இல்லாவிடில் இப்போதில்லாவிட்டாலும் பிறகு அதற்காக பொது மக்கள் திரண்டெழுவார்கள் என்று எச்சரித்துச் சொல்லி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவசாயிகள் பிரச்சினையைக் குறித்து அதிகம் அக்கறையோடு 26 உறுப்பினர்கள் சீரிய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துச் சொன்ன நல்ல கருத்துக்களுக்கெல்லாம் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவற்றில் செயல்படுத்தக்கூடிய திட்டங்களைச் செயல்படுத்தத் தயாராயிருக்கிறோம். சாத்தியக்கூறுகளுக்கு



1968 மார்ச் 14] [திரு. ஏ. கோவிந்தசாமி]

அப்பாற்பட்ட விஷயங்களைக் கவனிக்க முடியாத நேரத்தில் அவர்கள் அதற்காகக் கவலைப்படக் கூடாது. இது விவசாயத்துறை மானியமாக இருந்தாலும் இந்த மானியத்தின்மீது பேசும்போது உணவு இலாகா குறித்தும், மின்சார இலாகா குறித்தும், நீர்ப்பாசன இலாகா குறித்தும், கூட்டுறவு இலாகா குறித்தும்—இவ்வளவு இலாகாக்களின் பிரச்சினைகளையும் சேர்த்து இதில் பேசியிருக்கிறார்கள். அவ்வளவிற்கும் நான் பதில் சொல்லமுடியாவிட்டாலும் ஒருசிலவற்றைக் குறிப்பிட நான் தயாராயிருக்கிறேன்.

திரு. கருத்திருமன் விஷயத்திற்கு நான் பிறகு வருகிறேன். புதிய அரசு ஏற்பட்ட பிறகு ஒருபோக சாகுபடி தஞ்சை மாவட்டத்தில் இருந்ததை இருபோக சாகுபடியாக மாற்றியமைத்தோம். ஏற்கனவே இருந்த காங்கிரஸ் ஆட்சியின்போது அவர்கள் இதையெல்லாம் செய்திருக்கலாம், நாங்கள் அந்தத் திட்டத்தைத் துணிந்து செய்ததால் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறோமே தவிர குறைபாடு எதுவும் வந்துவிடவில்லை. இருபோக சாகுபடி மூலம் ஏற்கனவே குறுவை சாகுபடி செய்யக்கூடிய மூன்று லட்சம் ஏக்கரையும், சம்பா சாகுபடி செய்து வந்த ஆறு லட்சம் ஏக்கரையும் இருபோக சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டுமென்று முயற்சித்தபோது ஐந்து லட்சம் அளவிற்குத்தான் இருபோக சாகுபடிக்குக் கொண்டுவர முடிந்தது. சாத்தனூர் பாசனத்தில் உள்ள வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் 5,700 ஏக்கர்களும், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் 10,000, தாம்பரபரணியில் 1,000, மஞ்சளாற்றில் 1,000 ஏக்கர்கள் இருபோக சாகுபடிக்குக் கொண்டுவரப் பட்டன. அதன் விளைவாக இன்று இரண்டு லட்சம் டன் கூடுதலாக உற்பத்தியாகியிருக்கிறது. இதை எதிர்கட்சித் தலைவர் அவர்கள்கூட மறுக்கமாட்டார்கள். வானம் பொய்த்து மழை காலாகாலத்தில் பெய்யாத நேரத்திலும் தஞ்சையில் எடுத்த முடிவின் காரணமாக ஒருபோக சாகுபடியை இரண்டு போக சாகுபடிக்குக் கொண்டு வந்ததால் அமோக விளைச்சல் தரக்கூடிய ஐ.ஆர். 8, ஆடுதுறை 27-ஐ விவசாயிகள் போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க விவசாயிகளின் முயற்சியால் இன்றைய தினம் அமோக விளைச்சல் திட்டத்தின்கீழ் 66–67-ல் 5·2 லட்சம் ஏக்கர் விவசாயத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அது 1967–68-ல் 14 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இதை முன்னேற்றம் என்று ஏற்றுக் கொள்ளக்கூடாதா ? இதை ஏற்றுக்கொள்ள எதிர்கட்சித் தலைவர் அவர்கள் மறுத்தால் அவர்கள் கட்சிக் கண்ணோட்டத்துடன் மறுக்கிறார்களே தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. 1968–69-ல் 20 லட்சமாக உயர்த்த இருக்கிறோம். விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளை நல்ல முறையில் பயன்படுத்தி வருகிறோம். இன்று விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் எல்லாம்—கொடவுன்களில் தங்கி மருந்துகள் விற்கக்கூடிய, பொருள்களை விற்கக்கூடிய அதிகாரிகளாக இருந்தவர்கள் இன்று நேரிடையாக வயல்களுக்குச் சென்று விவசாயிகளோடு விவசாயிகளாக பழகவேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்றைய தினம் விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் எல்லாம் நிலங்களுக்குச் செல்லும் சூழ்நிலையில் அவர்கள் பி.எஸ்ஸி. படித்திருந்தும் அரைக்கால் சட்டையோடு வயல்களுக்குச் செல்லவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். அவர்களும் அதைச் செய்து வருகிறார்கள். அந்தக் காரியத்தைச் செய்வதற்காக 141 டிப்போ க்ளார்க்குகளை நியமித்திருக்கிறோம். லோயர் டிவிஷன் கிளார்க்குகளாக இருந்தவர்களை அப்பர் டிவிஷன் கிளார்க்குகளாக நியமித்து விஸ்தரிப்பு அதிகாரிகளை அந்தயிடத்திலிருந்து அப்புறப்படுத்தி விவசாயிகளோடு நெருங்கித் தொடர்பு கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நேற்றைய தினம் கூட முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள் விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளை நீக்கிவிடுவோம் என்று யாரோ அமைச்சர் பேசியதாகச் சொன்னார்கள். அந்தத் துறையைப் பொறுத்தவரை யாருமே சொல்லியிருக்க மாட்டார்கள். கூடுதலாக நியமிக்கவேண்டுமென்ற கோரிக்கைதான் பலயிடங்களில் இருந்து வந்துகொண்டிருக்கிறது. பி.டப்ள்யூ.டி. இலாகாவில் வேலை பார்க்கக்கூடிய ட்ராக்டர் ட்ரைவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம்

விவசாய இலாகாவில் வேலை பார்க்கும் ட்ரைவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்தது. அதையும் ஏற்றுக்கொண்டு அந்த ட்ரைவர்களுக்கும் கொடுக்க ஒத்துக்கொண்டிருக்கிறோம். தாற்காலிக பதவியில் உள்ள மஸ்தூர்களைப் படிப்படியாக 25 சதவிகிதம் நிரந்தர ஊழியர்களாக மாற்ற முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே இவர்கள் கதை எல்லாம் கவனிக்கப்படாத நிலை இருந்தது. அதை நாங்கள் கவனித்திருக்கிறோம். அதனால் விவசாய துறையில் பணியாற்றும் ஊழியர்கள் அந்த அரசைப் பாராட்டும் நிலையில் இருக்கிறார்கள். மேலும் அவர்கள் ஊதியத்தை உயர்த்துவது எங்கள் பொறுப்பு என்பதை உணருகிறோம். சந்தர்ப்பம் வரும்போது செய்வோம்.

அடுத்தபடியாக, ரசாயன உரம். தமிழகத்திற்கு 1,63,000 டன் நைட்ரஜன் தேவை. மத்திய அரசு நமக்கு ஒதுக்கியது 83,000 டன். நாம் வற்புறுத்திய பிறகு கூடுதல் ஒதுக்கியது 21,000 டன். மொத்தம் மத்திய சர்க்கார் ஒதுக்கியது 1,04,000 டன். இதுவரையில் வந்து சேர்ந்திருப்பது 77,000 டன். மீதி 27,000 டன் விரைவில் கிடைக்கும். வெளி மார்க்கட்டில் விற்க அனுமதிக்கப்பட்ட உரத்தில் 17,000 டன் நைட்ரஜன் கிடைத்திருக்கிறது. விவசாயிகளுக்கு உரத் தட்டுப்பாடு இல்லாமல் கொடுத்திருக்கிறோம். அந்தக் குறைபாடுகள் விவசாயிகளிடமிருந்து இந்த ஆண்டு வரவில்லை. அதற்கு மாறாக உரம் தேங்கியிருக்கிறது என்ற நிலைமைதான் தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறது. திரு. சகாதேவக் கவுண்டர் அவர்கள் கலப்படம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். கலப்படம் உரம் வாங்கிச் சென்றவர் யார் என்று சொல்லும் நேரத்தில் அதை விற்றவர் யாராக இருக்கக்கூடும் என்பதை அவர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருமுறை கலப்படக் குற்றம் சம்பந்தமாகத் தண்டிக்கப்படும் நேரத்தில் வண்டி ஓட்டி வந்தவனும், மூட்டை தூக்கியவனும் தான் தண்டிக்கப்பட்டானே தவிர முதலாளி தண்டிக்கப்படவில்லை. இதுபற்றிய விவரத்தை நமது எதிர்க்கட்சித் தலைவரவர்களைக் கேட்டால் உங்களுக்குச் சொல்வார்கள்.

கார்டு முறை பரவலாக வேண்டுமென்று கட்மோஷன்கள் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு உரம் வழங்குவதில் உள்ள பல குறைகளை எடுத்து கருத்தரங்குகளிலே கூறியதின் விளைவாக அத்தகைய குறைகள் எதிர்காலத்தில் ஏற்படாவண்ணம், முதன் முதலில் உயர் விளைச்சல் தரும் ரகப்பயிர்களுக்கு கார்டு முறை மூலம் உரம் வழங்க உத்திரவிடப்பட்டது. முதலில் இம்முறை தஞ்சையில் மட்டும் நடைமுறையில் இருந்தது. உரத்தின் விலை ஏறியிருக்கிறது என்ற கருத்து இருந்தது. உரத்தின் விலை ஏறியதற்குக் காரணம் மத்திய சர்க்காரின் 'டீவேல்யூஷன்' தான். மேலும் மத்திய சர்க்கார் 1967-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதிவரை, ரூபாயின் மதிப்பைக் குறைப்பதற்கு முன் இருந்த விலைக்கும் அதன் பின்பிருந்த விலைக்கும் உள்ள வித்தியாசத்தை மான்யமாக கொடுத்தனர். அதன் பின்பு நிறுத்திவிட்டார்கள். அதன் காரணமாகத்தான் உரத்தின் விலை ஏறியிருக்கிறது. உரம் நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டுமென்பதற்காக வட ஆர்க்காடு, தஞ்சாவூர், செங்கல்பட்டு, கோயம்புத்தூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்படுகிறது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் சரியாக இயங்கவில்லை என்று வந்தால் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் எல்லா நிலங்களுக்கும் பூச்சி மருந்து ஏககாலத்தில் அடிக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். 1,64,740 ஏக்கர் நிலங்களுக்கு நெற்பயிருக்கு ஆகாய விமானம் மூலம் தெளிக்கப்பட்டிருக்கிறது. கொள்கைக் குறிப்பிலே ஆகாய விமானம் பறப்பதாகக் காட்டப்பட்டிருப்பது இதைக் குறிப்பதற்காகத்தான். வெள்ளையாக இருக்குமிடம் மருந்து தெளித்துக்கொண்டிருப்பதைக் காட்டுகிறது. சிகப்பு, குளங்கள இருக்கிறது. அங்கு தேவையில்லை என்பதற்காக. அடுத்த ஆண்டு 20 லட்ச ரூபாய் செலவில் 3 லட்சம் ஏக்கருக்கு ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்



டத்தின்கீழ் விவசாயியிடமிருந்து பூச்சி மருந்தின் மொத்த விலையில் மான்யம் போக 65%ம், மருந்து தெளிப்பதில் ஏற்படும் செலவில் 1/3 பங்கையும் வசூலிக்கப்பட்டது. மீதி 2/3 பங்கு செலவை மாநில அரசும், மத்திய அரசும் ஏற்றுக் கொள்கிறது.

விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளிலிருந்து வெளியிடப்படும் விதைகளை மாநில விதைப்பண்ணைகளில் பெருக்கி விவசாயிகளுக்கு வழங்குகிறோம். இந்த 'பிரைமரி ஸீட்ஸ்' கிராம சகாயக்குகள் மூலம் தயார் செய்யப்படுகிறது. அதற்காக 100 கிலோ விதைக்கு 5 ரூபாய் மான்யமாக வழங்கப்பட்டது. முன்பு தரமில்லாத, தண்ணீர் வசதியில்லாத நிலத்தை, வெளியார் நிலத்தை எடுத்தார்கள். பக்கத்தில் 100 ரூபாய் கொடுக்கக் கூடியவற்றை 200 ரூபாய், 300 ரூபாய் என்று கொடுத்து வாங்கினார்கள். 1,000 பெறக்கூடியதை 2,000, 3,000 கொடுத்து வாங்கினார்கள். இதனால் அதிக நஷ்டம் ஏற்பட்டு திறந்த அந்தப் பண்ணைகளை மூடக்கூடிய நிலைமை ஏற்பட்டது. தண்ணீர் வசதியில்லாததாலும், தரம் இல்லாத காரணத்தாலும் லாபம் ஏற்படுவதற்குப் பதிலாக பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. அதனால்தான் மூடக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இன்று 70 பண்ணைகள் தான் இருக்கின்றன. அந்தப் பண்ணைகளையும் மூடும்படியான நிலைமைதான் இருக்கிறது. தரமாக, நல்ல முறையில் பணியாற்றக்கூடிய பண்ணைகள் 50 இருக்கின்றன. மெச்சத்தகுந்த முறையில் எல்லா வசதிகளுடன் கூடிய பண்ணைகள் குறைவு. சர்க்கார் புறம்போக்கு நிலங்களையும், வேண்டியவர்களின் நிலங்களையும் எடுத்தார்கள். மூடப்பட்டவைகளைப்பற்றி இங்கு எடுத்துச் சொன்னால் நேரம் போதாது என்ற காரணத்தினால் இத்துடன் நிறுத்திக்கொள்ளுகின்றேன். சென்ற அரசாங்கம் அவசரம் அவசரமாக இவ்வாறு செய்ததால் விதைப் பண்ணைகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. இவ்வாறு ஏற்கெனவே இருந்த அரசாங்கத்தால் தவறுகள் ஏற்பட்டன. தவறு எங்களால் ஏற்பட்டது அல்ல. அதற்குப் பதிலாக ஒவ்வொரு பண்ணையையும் நேராகப் பார்த்து சரியான முறையில் செய்யவேண்டுமென்ற பொறுப்பில் செய்துவருகிறோம். நமது மாநிலத்தில் கோயம்புத்தூரில் இயங்கக்கூடிய மத்திய சோதனைக்கூடம் சிறப்பாக அமைந்திருக்கிறது என்று எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அதைத் திரு. கருத்திருமன் அவர்களும் ஒத்துக்கொண்டு பேசியதை நான் வரவேற்கிறேன். ஆடுதுறை பண்ணையில் பணியாற்றுபவர்களுக்கும், கோயம்புத்தூர் ஆய்வுக்கூடத்தில் பணியாற்றுபவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் இப்போதாவது அவர்களுக்கு வந்தது குறித்து பாராட்டுகிறேன். பத்தாண்டு காலமாக இருந்தவர்கள் என்றாவது கோயம்புத்தூர் ஆராய்ச்சிப் பண்ணையிலிருப்பவர்களுக்கும், ஆடுதுறைப் பண்ணையில் இருப்பவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. காங்கிரஸில் கருத்திருமன் அவர்கள் சுதந்திராக் கட்சியினராகத்தான் கருதப்பட்டாரே தவிர உண்மையிலே காங்கிரஸ்காரர் என்று கருதப்படவில்லை. முதலமைச்சர் எப்படிச் சொல்கிறாரோ அப்படி நான் நடந்துகொள்வதாகக் கூறினார்கள். அதுதான் என் கடமை. மத்திய சர்க்கார் உணவு அமைச்சரையும், விவசாய அமைச்சரையும் உணவு உற்பத்தியில் அதிக அக்கறை காட்டவில்லை என்று திரு. ஜெகஜீவன்ராம் அவர்களை வெளியிலே மட்டுமல்ல இந்த அவையிலும் எதிர்த்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த நிலையை அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும், உணவு உற்பத்தி அமைச்சர், விவசாய அமைச்சர் என்று இரண்டு பேர்கள் இருக்கலாமா என்று கேட்கிறார்கள். ஏற்கெனவே இருந்த நிலைமை என்ன? உணவு அமைச்சர் திரு. இராமையா, விவசாய அமைச்சர் திரு. கக்கன். அப்பொழுதில்லாத இந்த யோசனை இப்பொழுது எப்படி வந்தது? அண்ணா அவர்கள் கொடுக்கிற திட்டங்களை நிறைவேற்றத்தான் நாங்கள் இருக்கிறோம். திரு. கருத்திருமன் அவர்கள் நல்ல யோசனைகளைச் சொன்னால் ஏற்றுக்கொள்ளலாம், அவர்கள் கூறுவதை எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலிருக்கிறோம்.

புதிய முறையிலே நில அடைமான பாங்கின் மூலமும், 'அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பொரேஷன்' மூலமாகவும் கடன்கள் வழங்கப்படும்.

இதில் அரசாங்கம் தன் பங்குத் தொகையாக ரூ. 100 இலட்சத்தை தந்தால் சுமார் 10 கோடியாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவு பாங்கு மூலமாகக் கொடுப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்கள் அதைத் தவிர்க்கத்தான் கூட்டுறவு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் அந்தச் சட்டத்தைத் திருத்தி அமைக்க சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறார்கள். பழைய முறையில் இல்லாமல் புதிய முறையில் இயங்கி, கிணறு வெட்டக் கடன், பம்பு செட்டுகளுக்குக் கடன் வாங்கவும், அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலம் பம்பு, டிராக்டர்கள் வழங்கவும் வசதிகள் கிடைக்குமென்று சொல்லிக் கொள்கிறேன். இவைகள் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது.

சமுதாய நலக் கிணறுகள் மதுரை மாவட்டம் மல்லம்பட்டியிலும், திருநெல்வேலி மாவட்டம் செம்மரிகுளம், ஆழ்வார்த்தோப்பு, சீலத்திகுளம் ஆகிய மூன்றிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தொழுதாங்குடியிலும் ஆக இந்த ஐந்து இடங்களில் வெட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

முந்திரித் தொழிலில் முக்கியத்துவம் காட்டவேண்டுமென்று திரு. பூவராகன் அவர்கள் சொன்னார்கள். முந்திரி வளர்ச்சித் திட்டத்திற்காக 2 500 ஏக்கரைப் பயன்படுத்தி புதிய ஊக்கத்தைக் கொடுத்து விவசாயிகளுக்குச் சலுகை கொடுத்து செய்ய இருக்கிறோம். அதில் இந்த ஆண்டு 1,000 ஏக்கரும், அடுத்த ஆண்டு 1,500 ஏக்கரும் எடுத்துக்கொள்ளப்படும். குறிப்பாக அவர்களுடைய ஊருக்கு அருகில் உள்ள குறிஞ்சிப்பாடி பகுதி பயன்படுத்தப்படவிருக்கிறது.

அடுத்து, கரும்பு அபிவிருத்தி திட்டத்தின்கீழ் இப்பொழுது ரோடு போடப்படுகிறது. நான் பொறுப்புக்கு வந்த பிறகு இதற்கு வேண்டிய வேலைத் திட்டங்களையெல்லாம் துரிதப்படுத்தி, அதற்கு வேண்டிய வேலைகளை எல்லாம் நல்ல முறையிலே ஆரம்பிக்கவேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறேன். ஏற்கனவே, இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே பல கரும்பாலைச் சொந்தக்காரர்களிடமிருந்து பணம் பாக்கியிருக்கிறது. அதையும் வற்புறுத்திப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். சில கரும்பு ஆலைச் சொந்தக்காரர்களிடமிருந்து பணம் வராத நிலை இருக்கிறது. அதையும் வசூலிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்காக 1968–69-ல் 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். தேவைப்பட்டால் இன்னும் அதிக நிதி ஒதுக்கவும் தயங்க மாட்டோம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ரோடுகள் போடுவதற்கு வேண்டிய எஸ்டிமேட்டுகளை தயாரித்து அனுப்பும்படி சொல்லியிருக்கிறோம். எங்களுக்கு கரும்பெடுத்துச் செல்லக்கூடிய வழிகளில் ரோடு போட்டுத் தரவேண்டுமென்ற நோக்கம்தான் இருக்கிறது. கள்ளக்குறிச்சியிலே உடனடியாக 12 ரோடுகள் போடுவதற்கு ஏற்பாடு செய்து, எஸ்டிமேட் போடச் சொல்லியிருக்கிறோம். மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தஞ்சையிலே விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று சென்ற ஆண்டிலே கூட கோரிக்கை இருந்தது. இந்த ஆண்டிலே கூட அந்தக் கோரிக்கையைச் சொன்னார்கள். இந்த ஆண்டு கோயம்புத்தூரிலே 162 மாணவர்களும், மதுரையிலே 80 மாணவர்களும், அண்ணாமலை நகரிலே 75 மாணவர்களும் பரீட்சை எழுதுவார்கள். இதிலே 17 பேர் தவிர்த்து மீதி 300 பேருக்கும் வேலை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் ஒரு விவசாயக் கல்லூரி வேண்டுமானால் 2 கோடி ரூபாயும் 500 ஏக்கர் நிலமும் தேவை. ஆனால் அவ்வளவும் முதலிலே தேவையில்லை. முதலிலே 25 இலட்சம் ரூபாயும் 400 ஏக்கர் நிலமும் மாவட்டத்திலிருந்து தேவை. சில மாவட்டங்களிலே பணம் தருவதாகச் சொல்கிறார்கள். சில மாவட்டங்களிலே நிலம் தருவதாகச் சொல்கிறார்கள். பணம் கிடைத்தால் நிலம் கிடைக்கவில்லை. நிலம் கிடைத்தால்





பணம் கிடைக்கவில்லை. ஆகையினால் இந்த ஆண்டு அதைச் செயல்படுத்த முடியாத நிலையிருக்கிறது. தஞ்சையிலே அதை உண்டாக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். தஞ்சையிலே பெரிய நிலப்பிரபுக்காரர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் பணமும் கொடுக்கலாம்; நிலமும் கொடுக்கலாம். இந்த நேரத்தில் தூத்துக்குடியிலிருந்து ஆறுமுகசுவாமி நாடார் என்பவர் 17 இலட்சம் ரூபாய் தருவதாகவும், அந்தக் கல்லூரிக்கு ஆறுமுகசுவாமி அக்ரிகல்சுரல் காலேஜ் என்று பெயர் வைக்கும்படியும் சொன்னார்கள். அதுவும் போதாது என்ற காரணத்தாலே அதைச் செயல்படுத்தமுடியாமல் இருக்கிறோம். அவசியமானால் பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம் என்ற நிலையில் அதை இப்பொழுது செயல்படுத்த முடியவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நமது நல்லசாமி அவர்கள் இடத்திலே இல்லாவிட்டாலும் அவருக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1965-66-லே பட்ஜெட்டிலே ஒதுக்கிய தொகை 8 கோடியே 72 இலட்சம் ரூபாய். ஆனால் 1967-68-லே பட்ஜெட்டிலே 14 கோடியே 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உற்பத்தி அதிகரிக்கவில்லையென்று சொன்னார்கள். இன்றைய நிலையில் இருக்கிற சூழ்நிலையில் கட்டடங்களைக் கட்டியிருக்கிறோம். மக்களுக்குத் தேவையானதெல்லாம் வழங்கியிருக்கிறோம். இந்த ஆண்டைப் பொறுத்தவரையிலே உற்பத்தியைப்பற்றி அவர்கள் குறை சொல்லவேண்டுமென்று சொன்னார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். ஏதோ அவசரத்திலே அவ்வாறு சொல்லியிருக்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன். இந்த ஆண்டு உற்பத்தி பெருகித்தான் இருக்கிறது என்பதையும் அவர் தெரிந்துகொள்ளவேண்டும்.

காப்பிட்டல் அவுட்லே-யிலே (டிமாண்ட் 39-லே) பணம் குறைவாக ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். எங்களுடைய திட்டமே கட்டிடம் கட்டுவதையெல்லாம் விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய காரியங்களுக்குச் செலவிட வேண்டுமென்பதுதான். அதன் காரணமாகவே காபிட்டல் அவுட்லேயில் ஒதுக்கியிருக்கிற தொகையைக் குறைத்திருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

விதைப்பண்ணையைப்பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டேன்

அடுத்து ஷுகர்கேனைப்பற்றிச் சொன்னார்கள். ஷுகர்கேன நல்ல முறையில்தான் பயன்படுத்துகிறோம். அந்தந்த கரும்பு ஆலைகளுக்குப் பக்கத்தில் உள்ள கரும்பையே கொண்டுவரக்கூடிய ஒரு சூழ்நிலையில் அதைப் பயன்படுத்துகிறோம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனுஷ்கோடி அவர்கள் பேசுகின்றபொழுது ஏடிடி 27 விதை பாக்கியிருக்கிறது என்று சொன்னார்கள். விதை தேங்கி இருப்பதனால் ஒன்றும் தவறில்லை. விதைக்குத் தட்டுப்பாடு இருப்பதனால் இந்த ஆண்டு உற்பத்தி கணிசமான அளவு இருப்பதனால் விதைகளைத் தேக்கி வைத்திருக்கிறோம். மற்ற இடங்களில் பயன்படுத்த உதவும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆடுதுறை 27 நெல்லை நெல்லை பீஹார் மாநிலத்திற்கு 3,000 டன் விலைக்குத்தான் கொடுத்தோம்; இலவசமாகக் கொடுக்கவில்லை. மற்ற மாநிலங்களுக்கும் அதை இன்ட்ரட்யூஸ் பண்ணக்கூடிய நிலை இருக்கறது.

திரு. கருத்திருமன் அவர்கள் ஒன்று சொன்னார்கள். நல்ல தரமான விதைகளை எல்லாம் அரசாங்கம் அளிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் கூட பிலிப்பைனிலிருந்து விதைகொண்டு வந்தார்கள். இந்த ஆடுதுறை நெல்லை உபயோகப்படுத்துகிறார்கள்; நாம் கொண்டுவந்த நெல்லை உபயோகிக்கவில்லையேயென்று அவர்களுக்குக் கொஞ்சம் கோபம். அவர்கள் அங்கிருந்து கொண்டு வந்திருக்கிறார்கள். அதை உபயோகிக்கவில்லையேயென்று அவருக்குக் கொஞ்சம் கோபம் இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அமைச்சர் அவர்கள் பிலிப்பைன் நெல் என்ன விலையென்று கேட்டார்கள். நான் விலை கொஞ்சம் அதிகம்தான், ஆனால் நரமான விதை என்று சொன்னேன். நான் இலவசமாக அனைவருக்கும் கொடுத்திருக்கிறேன் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** ஆனால் அந்த நெல்லை வாங்க வேண்டுமென்று அவர் வற்புறுத்திய விஷயம் எனக்குத் தெரியும். அதை அவர் மறுப்பதற்கு இல்லை. இப்பொழுது வேண்டுமானாலும்—இந்த சபையிலே வேண்டுமானாலும்—அதை ஒத்துக் கொள்ளுவதற்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் அந்த நெல்லை இலவசமாக மற்றவர்களுக்கு வழங்கியதற்கு. . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:**—அதே பிலிப்பைன் நெல்லை கோயம்புத்தூர் அக்ரிகல்சுரல் காலேஜுக்கு இலவசமாகக் கொடுத்திருக்கிறேன் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியாது போல இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கொடுத்த விஷயத்தை எனக்குச் சொன்னால்தானே தெரியும். இரகசியமாகக் கொடுத்தால் எனக்கு என்ன தெரியும்?

இன்னும், புதுக்கோட்டைக்குப் பக்கத்திலே காட்டு நிலங்கள் நிறைய இருக்கின்றன. அதை விவசாயத்திற்குத் தரவேண்டுமென்று சொன்னார்கள். அதை வன இலாகா மானியத்திலே பேசும்பொழுதே குறிப்பிட்டிருக்கிறேன்.

மின்சாரத் துறையைப் பொறுத்தவரையிலும் இந்த ஆண்டு சென்ற ஆண்டைவிட—காங்கிரஸ் ஆட்சியிலே செய்ததைவிட—அதிகமாக 6,000 பம்ப் செட்கள் நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்றும் அதிலே ஒன்றும் குறைவு ஏற்படவில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சகாதேவ கவுண்டர் அவர்கள் பேசும்போது ஒன்று சொன்னார்கள். கிணற்றுக் கடன் விஷயத்தில் இரண்டாவது தவணைத் திட்டத்தின்கீழ் அவர்களுக்குப் பணம் கிடைக்கவில்லையென்று சொன்னார்கள். அதற்கும் தொகை ஒதுக்கித்தான் இருக்கிறோம். 15,000 கிணறுகளை இரண்டாவது திட்டத்தின்கீழ் ஏற்படுத்த வேண்டுமென்று இருக்கிறோம். அதற்கு வேண்டிய பணமும் ஒதுக்கியிருக்கிறோம். அவருடைய பகுதியில் கிடைக்கவில்லையென்று அவர் சொன்னால், அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதை கவனித்து வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

15,325 பேர்களுக்கு இரண்டாம் தவணைக் கடன் கொடுக்க உத்திரவு போட்டிருக்கிறோம். மேலும் 240 இலட்சம் ரூபாய் புதிய கிணறுகள் வெட்டுவதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிணறு வெட்டுவதற்குக் கடன் வசதிகளையெல்லாம் நமது சர்க்காரே செய்திருக்கிறது. அதை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளுவதற்கு வழி வகை இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த பவர் ஸ்ப்ரேயர்ஸ் பொறுத்தவரையில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 4 பவர் ஸ்ப்ரேயர்ஸ் வாங்கி வைக்க வேண்டுமென்று உத்திரவு போட்டிருக்கிறோம். ஏற்கனவே, தஞ்சை மாவட்டத்திலே இது கட்டாயமாக வாங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்தும் அவர்களுடைய பொது நிதியிலிருந்து இதை வாங்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் சொந்தத்திலே ஒரு டிராக்டர் வாங்கி வைத்திருக்க வேண்டுமென்று சொன்னார்கள். தீவிர சாகுபடி உள்ளவர்கள் தற்போதே வாங்கியிருக்கிறார்கள். நிதி வசதி இல்லாதவர்களைக் கூட பொது நிதியிலிருந்து வாங்கும்படியாகச் செய்திருக்கிறோம். நாங்கள் பொறுப்புக்கு வந்தபிறகு 260 டிராக்டர்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அதிலே 168 டிராக்டர்களுக்கு கடந்த அரசு உத்தரவு மட்டும் 2, 3 ஆண்டு



காலத்திற்கு முன்னேயே போட்டு, வாங்கிக் கொடுக்காமல் விவசாயிகளை நடுத்தெருவிலே விட்டுவிட்டுப் போனார்கள். அந்தக் காலத்திலேயெல்லாம் திரு. கருத்திருமன் அவர்கள் சர்க்காரைக் கண்டித்துப் பேசவில்லை. என்னோடு அவர்கள் 10 ஆண்டு காலம் இருந்தார்கள். அப்பொழுதுகூட இதற்காக அவர் சண்டை போட்டதை நான் பார்க்கவில்லை. ஆனால் கடந்த அரசாங்கம் உத்தரவுப் போட்டுவிட்டுப் போன அந்த 168 டிராக்டர்களையும் நாங்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். நாங்கள் பொறுப்புக்கு வந்தபிறகு 92 டிராக்டர்கள்தான் இப்பொழுது புதிதாக வழங்கியிருக்கிறோம். அவர்கள் விவசாயத்திலே அதிக அக்கறைக் காட்டவேண்டும்; சண்டை போடவேண்டும் என்று சொன்னார்கள். சண்டைதான் போட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த அளவிலே டிராக்டர்கள் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற அளவிலே தான் 20 டிராக்டர்கள் கிடைத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கென்று அதிகமானத் தொகையைப் பெற்று அதிகமான டிராக்டர்களை வாங்கிக் கொடுத்திருக்கிறோம். ஏற்கனவே இருந்த நிலையில் டிராக்டர்களை வாங்குவது கஷ்டமாக இருந்தது. வசதி உள்ளவர்கள் தான் வாங்கக் கூடிய நிலை இருந்தது. ஆனால் நாங்கள் குறைந்த நிலம் வைத்திருப்பவர்களுக்கும், மத்திய நிலையில் இருப்பவர்களுக்கும், ஏழைகளுக்கும், 5 ஏக்கர் நஞ்சை அல்லது 10 ஏக்கர் புஞ்சை இருக்கக்கூடியவர்களுக்கும் டிராக்டர் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறோம். ஆனால், அது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லை. 600 பேர்களுக்கு மேல் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். சிபாரிசோடு டிராக்டர்கள் வேண்டுமென்று 300 வந்தாலும் கூட நாங்கள் முறைப்படி எடுக்கின்றபொழுது 212, 211 பேர்களுக்குத்தான் கொடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கும். அதிலே 105, 106 டிராக்டர்கள்தான் இந்த ஆண்டு கொடுக்கப்படும். மீதமுள்ளவை அடுத்த ஆண்டிலே அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக உத்தரவாதத்துடன் முதல் பிரையாரிட்டியிலே வழங்கப்படும் என்றும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் துறையிலே அதிக அக்கறை காட்டக்கூடிய சூழ்நிலைதான் இப்பொழுது இருக்கிறது. அது தனிப்பட்டவர்கள் கையில் இருந்தாலும், நாம் எப்படி விவசாய கருத்தரங்கு நடத்தி பலருடைய கருத்தையறிகிறோமோ, அதைப் போலவே அவர்களும் கருத்தரங்குகள் நடத்தி நீர்ப்பாசனத் துறையிலே அதிக அக்கறை எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

அதே போல் இங்கே திரு. கருத்திருமன் அவர்கள் நெல் விலையை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். எதற்கெடுத்தாலும் இதைச் சொல்லுகிறார்கள். உணவு மானிய விவாதத்திலே பேசும்பொழுது கூடச் சொன்னார்கள். இப்பொழுதும் தவறாமல் பேசுவார் என்று அறிந்துதான் அதற்கு வேண்டிய புள்ளி விவரங்களைக் கொண்டுவந்திருக்கிறேன். அவர்கள் நிலத்துக்கு வட்டி போட்டீர்களா என்று கேட்டார்கள். நிலத்திற்குக்கூட 6 சத வீதம் வட்டி போடப்பட்டிருக்கிறது.

Cost of labour and inputs Rs. 277. Interest at 6 per cent on the cost of the land Rs. 75. Interest on working capital at 8½ per cent Rs. 12. Water Cess and land revenue Rs. 15. Survey charges Rs. 5.

1966-67-லே உற்பத்தி செலவு 384, அது 1967-68-லே 409 ஆக உயர்ந்திருக்கிறது. அதிலும் அந்த வைக்கோலினுடைய விலையை சேர்த்திருக்கிறோம். ரூ. 75-ஐ சேர்த்திருக்கிறோம். அந்த வகையிலே சென்ற ஆண்டு 277 ரூபாய் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டிலே நிகர வருமானம் 202 ரூபாய் கிடைத்திருக்கிறது. கரும்பு விவசாயத்தில் 2,000 ரூபாய் கிடைக்கிறது என்று தன்னுடைய உரையிலே திரு. கருத்திருமன் அவர்கள் சொன்னார்கள்.

[திரு. ஏ. கோவிந்தசாமி] [1968 மார்ச் 14

[பிற் பகல் 2-30]

ஆனால், அதே நேரத்தில் விவசாய வருமான வரி போடவேண்டும் என்று கரும்பு உற்பத்தியாளர்களை அழைத்து 'உங்களுக்கு எவ்வளவு வருமானம் வரும்?' என்று கேட்ட நேரத்தில் அப்பொழுது ரூ. 2,000 கிடைக்குமே என்று கேட்காமல், 'உங்களுக்கு ரூ. 200 தான் கிடைக்குமா என்று கேட்டால், ஆமாம் என்று தலையை அசைத்துவிட்டு போங்கள்' என்று திரு. கருத்திருமன் சொல்லக்கூடிய நிலைமையைத்தான் நான் பார்த்தேன். உணவு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** காஸ்டு ஆஃப் கல்டிவேஷன் எவ்வளவு என்பதை மறுபடியும் விளக்கமாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** நான் விளக்கமாகத்தான் சொன்னேன். மறுபடியும் ஒரு முறை சபையில் சொல்ல வேண்டுமென்றால் சாப்பாட்டிற்கு நேரமாகிவிட்டது. அவர்களுக்கு வேண்டுமென்றால் நான் அதைத் தருகிறேன். அவர்கள் சொன்னபடி வட்டியையும் சேர்த்துத் தான் சொல்லியிருக்கிறேன். திரு. கருத்திருமன் அவர்கள் போல் பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்த காரணத்தினால்தான், வட்டியையும் சேர்த்துத்தான் கணக்குக் கொடுத்தேன்.

ஆந்திர மாநிலத்தில் அதிகமாக விலை கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆந்திராவில் நெல்லை வாங்கி வியாபாரம் செய்கிறார்கள். (குறுக்கீடு) அதை மறுக்க வேண்டாம். நாங்கள் இங்கு நெல்லை வாங்கி வியாபாரம் செய்யவில்லை. குறைந்த விலைக்கு வாங்கி, இன்னும் அதற்கு மேல் அதிகமாக சப்ஸிடி கொடுத்து ஒரு படி அரிசித் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். லாப நோக்கததோடு வாங்கி விற்கவில்லை. கேரளத்தில் அவர்கள் அதிக விலை கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அங்கு ப்ரொக்யூர்மெண்டு கிடையாது. ஏதாவது கொஞ்சம் ப்ரொக்யூர் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் கூடுதலாக விலை கொடுத்து ப்ரொக்யூர் செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தமிழ்நாட்டில் நாம் கொடுக்கிற விலை நியாயமான விலை. அந்த விலை குறைவு என்று திரு. கருத்திருமன் அவர்கள் போன இடங்களிலெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் சொல்லியிருக்கிறேன், உணவு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார், முதல் அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார், நியாயமான விலைதான் என்று. ஆனால், என்ன சொன்னாலும் அவர் ஒத்துக்கொள்ளாததில் ஆச்சரியம் இல்லை. ஆத்திரப்படுவதில் ஆச்சரியம் இல்லை. திரு. ஜகஜீவன் ராம் போன்றவர்கள் சொல்வதையே ஒத்துக்கொள்ளாமல் இருக்கும்பொழுது, நான் சொல்வதை அவர் ஒத்துக் கொள்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. விவசாயிகளை இப்பொழுதாவது இந்த அரசு கவனிக்கக்கூடிய சூழ்நிலை வந்திருக்கிறது, உணவுப் பஞ்சத்தை தவிர்க்கக்கூடிய சூழ்நிலை வந்திருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்கள். அதற்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிய மற்ற அரிய கருத்துக்களுக்கும் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. கருத்திருமன் அவர்கள் சட்டமன்றத்தில் மட்டுமல்லாமல் எப்பொழுது வேண்டுமானாலும் யோசனை சொல்லலாம். முதல் அமைச்சர் சொல்கிறபடியெல்லாம் கேட்கிறார்கள் என்று சொன்னார்கள். அதுதான் கடமை, கட்சித் தலைவர் சொல்வதைக் கேட்பதுதான் கடமை. கட்சித் தலைவரைக் காற்றில் விடுவது என்றால், அது கட்சிக் கட்டுப்பாடு ஆகாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கட்சித் தலைவரைக் காற்றில் விடுவது என்பதை வாபஸ் பெறவேண்டும். எதற்காக காற்றில் விடுவது, நம்பிக்கை இருக்கும்பொழுது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** காற்றில் விடுவது என்றால், அப்படிச் சொல்வது எக்காளமாகிறது. ஏதோ அவர்களுக்கு விவசாயம் தெரியாது போலவும்; விலை நிர்ணயம் செய்தது தவறு என்பது போலவும் சொல்லுகிறார்கள். இங்கு மட்டுமல்ல, வெளியிலும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.. .........



1968 மார்ச் 14]

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** திரு. ஜெகஜீவன்ராமை நான் நேரில் கேட்டிருக்கிறேன். அவர்கள் ராஜ்ய சர்க்கார் இன்ன விலைதான் என்று சொன்னால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன் என்று என்னிடம் சொல்லியிருக்கிறார். அதைத்தான் நான் சொல்லுகிறேன். அதற்காக எனக்கும் அவருக்கும் ஏதோ அபிப்பிராயபேதம் இருப்பதைப்போல் மூட்டிவிட்டு, நீங்கள் ஒன்றும் தப்பித்துக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** எதற்கு எடுத்தாலும், மத்திய சர்க்காருக்கு யோசனை சொல்லுங்கள், விலையை ஏற்றுங்கள், நீங்கள் சொன்னால் மத்திய சர்க்கார் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று திரு. ஜெகஜீவன் ராம் சொல்லியிருக்கிறார் என்று கூறுகிறார். அது அவர்களிடத்தில் ரகசியமாகச் சொன்னது. ஆனால் பத்திரிகை நிருபர்கள் கேட்டபொழுது, திரு. ஜெகஜீவன்ராம் வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார். உங்களுக்கு விவசாயம் தெரியவில்லை என்று கருத்திருமன் சொல்கிறாரே என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டபொழுது, எனக்கு விவசாயம் தெரியாது என்று சொன்னவர்களுக்குத்தான் விவசாயம் தெரியாது; எனக்குச் சொந்தமாக பண்ணை இருக்கிறது. 25 ஏக்கர் நிலம் இருக்கிறது, நீண்ட கால அனுபவம் இருக்கிறது என்று திரு. ஜெகஜீவன்ராம் சொல்லியிருக்கிறார், அப்படிப்பட்ட தலைவர் பேசுகிறதையே அவர் ஒப்புக்கொள்ளாதபொழுது, நாங்கள் சொல்வதையா ஒத்துக்கொள்ளப் போகிறார்கள்? அவர்கள் சுதந்திராக் கட்சியில் இருக்க வேண்டியவர் என்று ஏற்கனவே சிலர் கருதுகிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அடிக்கடி என்னுடைய நண்பர் இப்படி சொல்லிக்கொண்டிருக்கிறார். சுதந்திரமாக என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு சுதந்திர நாட்டில் உரிமை இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்,

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** சுதந்திராக் கட்சியின் மூலக் கொள்கையும் அதுதான். அப்படி சுதந்திரம் இல்லாத நிலையில் கட்டுண்டு இருக்கிறவர், விலையைப்பற்றி பேசும்பொழுது மட்டும் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்கவேண்டிய சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்.

$2\frac{1}{2}$ மணிக்கு மேலாகியும் சட்டமன்ற உறுப்பினர்கள் இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு இந்த விவாதத்தின்பொழுது தங்களுடைய உயர்ந்த கருத்துக்களை தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், நான் பதில் சொல்கிற நேரத்திலும் இருந்து என்னுடைய உரையைக் கேட்டுக்கொண்டிருந்ததற்கு நான் நன்றி செலுத்துகிறேன். இந்த மாமன்றத்தில் இந்த மான்யத்தின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், உண்மையிலேயே ஒதுக்கப்பட்ட தொகை போதாது, அதை உயர்த்த வேண்டும் என்றுதான் பேசினார்கள். உறுப்பினர்கள் கூறிய அத்தனை கருத்துக்களையும் குறிப்பு எழுதி வைத்திருக்கிறேன். மற்றவர்களும் குறிப்பு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து, நடைமுறைக்கு உகந்ததாக உள்ள திட்டங்களை அவசியம் அமலுக்குக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, இந்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமல் இந்த மான்யக் கோரிக்கையை பூரணமாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I want to seek one small clarification from the Hon. Minister. The Hon. Minister has stated that in the Thanjavur district, there is a lot of surplus fertilizer and I think there must be a lot of fertilizer in the entire State. In view of the fact that we have got surplus fertilizer, the Hon. Minister can come

forward with a token suggestion to reduce the price of fertilizer by the State Government itself subsidising it or as the hon. Leader of the Opposition, Thiru Karuthiruman, has suggested, to increase the procurement price of paddy.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உறுப்பினர் அவர்களுடைய முதல் கேள்வி நியாயம். இரண்டாவது கேள்விக்கு உங்கள் துணைக்கு திரு. கருத்திருமன் அவர்களையும் அழைத்துக்கொண்டது பற்றி எனக்கு மகிழ்ச்சி. 78,000 டன் உரம் தஞ்சாவூரில் இருக்கிறது. வருகிற ஆண்டுக்கு வேண்டிய உரம், ஹையீல்டிங்குக்கு வேண்டிய உரம் இப்பொழுதே ஸ்டாக் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் தேவையான உரம் அதிகமாக வந்தால், நார்மல் ப்ரொகிராம் உள்ள இடங்களுக்கும் கொடுக்கலாம் என்ற திட்டம்தானே ஒழிய, இதற்கு சப்ஸிடி கொடுப்பதற்கு இயலாத நிலையில் இருக்கிறோம். வருமானத்திற்கு வழி காட்டுங்கள். அதன் பிறகு விலையைக் குறைப்பதுபற்றி யோசிக்கலாம். வரியும் போடக் கூடாது, விலையையும் இறக்க வேண்டும், ஒரு படி அரிசி திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும், நெல்லுக்கு கொள்முதல் விலையையும் ஏற்றிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை, என்ற அளவுக்குத்தான் நிலைமையை உண்டாக்கும். திரு. கருத்திருமன் விலையை உயர்த்தும்படி கேட்டார்கள் என்றால், உங்கள் கட்சியின் சார்பிலே கேட்டுவிட்டார்கள், இனி நீங்கள் கேட்க வேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒரு விளக்கம். என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளில் விலை உயர்த்த வேண்டும் என்பது ஒன்று. ரசாயன உரத்தின் விலையை ஏற்றியிருப்பதன் காரணமாக, போன டிசம்பர் மாதத்தில், குறைந்த விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ. 46·5-லிருந்து ரூ. 56 வரைக்கும் என்று கோர்ஸ் வெரைடிக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையைத் திருப்பி நிர்ணயம் செய்யும் பொழுது அதைக் குறைத்துவிட்டார்கள், அந்த அளவிலாவது விலையை ஏற்றிக்கொடுப்பார்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதுகூட உணவு இலாகாவையும் சேர்த்து, நீர்ப்பாசன இலாகாவையும் சேர்த்து, மின்சார இலாகாவையும் சேர்த்து, கூட்டுறவு இலாகாவையும் சேர்த்துப் பேசுகிறார்கள். உணவு இலாகா அமைச்சர் ஏற்கனவே அவருக்கு பதில் சொல்லிவிட்டார். இப்பொழுதும் சொல்வார்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த அரசு மத்திய அரசு நிர்ணயித்திருக்கிற விலையைத்தான் கொடுக்கிறது என்று திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், அவர்கள் சொல்வதையே மறுபடியும் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் சொல்கிறமாதிரி அவர்களுக்கு வருகிற தபால் புது மாதிரி தபால். ஏறக்குறைய புதுமாதிரி தபால்களாக இருக்கலாம். ஆனால் அதற்கு வேண்டிய தஸ்தாவேஜுகள் என்னிடம் இருக்கின்றன; மத்திய அரசு இந்த விலையைக் கொடுங்கள் என்று நிர்ணயித்த விலையைத்தான் இந்த அரசு கொடுத்துக்கொண்டு வருகிறது. அவர் இரண்டு விதமாகவும் சொல்கிறார்கள். திரு. ஜெகஜீவன்ராம் ஒரு பெரிய தலைவர், அவர் தன்னிடம் ஒருவிதமாகச் சொன்னதாகச் சொல்லி திரு. கருத்திருமன் திருப்தி அடைகிறார்கள். அதே சமயத்தில் அவர் மீது கோபமும் கொள்கிறார். எனக்குப் பொருள் விளங்கவில்லை. திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள், 'என்னைவிட யார் குடியானவன் இருக்கிறான்' நான் இப்பொழுதும் விவசாயம் செய்கிறேன்' என்று ரொம்பத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள் என்ற காரணத்திற்கு மட்டுமில்லை. இந்த அரசாங்கத்தின் விலை நிர்ணயக் கொள்கை 'ப்ரொட்யூஸர் அண்டு கன்ஸ்யூமர் ஓரியண்டெட்' இரண்டு பேர்களுடைய நன்மையையும் சேர்த்துக் கருதிச் செய்வது. ப்ரொட்யூஸர் என்பது அல்ல, கன்ஸ்யூமர் என்பது அல்ல, பீபிள் ஓரியண்டெட் பிரைஸ் பாலிஸி. இந்த அரசாங்கத்தினு





டைய கொள்கை அக்ரிகல்சரல் பிரைஸ் கமிஷன் சொன்னாலும் சரி, திரு. ஜெகஜீவன்ராம் சொன்னாலும் சரி, யாருக்கும் பின்னாலே ஒளிந்து கொண்டு விலை நிர்ணயிக்கப்படவில்லை. நியாயமான விலைதான் கொடுக்கப்படுகிறது. விவசாயிகளுக்கும் கெடுதல் இல்லை; விவசாயிகளுக்கு வேறு வகைகளில், பெர்டிலைஸர், இன்னும் கடன் போன்ற மற்ற வசதிகள் இவை மூலம் வேண்டிய உதவியைச் செய்துகொண்டிருக்கிறது இந்த அரசு. இந்த அரசுக்கு விவசாயிகளிடத்தில் கொஞ்சம்கூட அக்கறை குறையவில்லை. எனவே மிகத் தெளிவாக இந்த அரசின் விலை நிர்ணயக் கொள்கை என்னவென்றால், கன்ஸ்யூமர்ஸ், ப்ரொட்யூஸர்ஸ் இரண்டு பேர்களுக்கும் கட்டுபடியாகும்படியான கொள்கை என்பதை மீண்டும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. திரு. ஜெகஜீவன்ராம் இந்த விலையைக் கொடுங்கள் என்று போட்ட உத்தரவை இந்த அவையின் முன்னால் வைப்பார்களா ? இந்த விலையைத்தான் கொடுக்க வேண்டும். இதற்குமேல் கொடுக்கக் கூடாது. இதுதான் நிர்ணயித்த விலை என்று போட்டிருக்கிற உத்தரவை இந்தச் சபையின் முன்னால் வைக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கண்டிப்பாக வைக்க முடியும். நாங்கள் மறைத்துக் கொண்டு எங்கேயும் போய்விட முடியாது. இந்திய அரசாங்கம் விலையை நிர்ணயிக்கிறது. அந்த விலை அக்ரிகல்சரல் ப்ரைஸ் கமிஷன் அங்கீகரித்த விலைதான். அவர்களுக்கு வேண்டும் என்றால், இப்பொழுதே கூட, இன்னும் இரண்டு நிமிஷத்திலேயே காண்பிக்க முடியும். ஆனால், அவர்கள் இப்படி விவாதிப்பது, சபைக்கு மரியாதை காட்டுகிறார்களா என்பதைக் கூடச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. மத்திய சர்க்கார் சிபாரிசு செய்த விலையைத்தான் கொடுக்கிறோம். அப்படியிருந்தும், 'சொன்னார்கள், சொன்னார்கள்' என்றால் அவர்களுக்கு இருக்கும் அந்தரங்கமான போக்குவரத்து எனக்குத் தெரியாது. எதிர்க் கட்சித் தலைவர் என்றுகூட இல்லாமல் இப்படிப் பேசுகிறார்கள். கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போதுகூட குறிப்பிட்டிருக்கிறேன். அந்த வகையில் ரூ. 43, 45, 48 என்று கொடுக்கிறோம். ஆந்திரா மாநிலத்திலும் அதேபோலததான் மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலையைத்தான் கொடுக்கிறார்கள். ஆகவே, புதிதாக அதற்கு மேல் ஒன்றும் சொல்வதற்கில்லை, என்பதைமட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. சுப்பையா முதலியார் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. சுப்பையா முதலியார் வேளாண்மைத் துறை அமைச்சர் உரையை ஒட்டிய விளக்கம் கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தலைவர் அவர்களே, பலவகையிலும் கஷ்டப்படும் தொகுதி என்னுடைய தொகுதி. அங்கே 'ஸெமி ட்ரைபேடி' சம்பந்தமாகக் குறிப்பிட்டேன். அதற்கு விளக்கம் இல்லை. அதைப் பற்றி விளக்குமாறு அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் குறிப்பிட்ட அந்த ரகத்தைக் குறித்து, சம்பந்தப்பட்ட இலாகா நிபுணர்களைக் கலந்து கொண்டு, அதற்கு வேண்டிய முயற்சியை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பேசும்போது ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துவிட்டேன். தாளடிப்பயிரில் கோ. 25 போட்டதால் நஷ்டம் ஏற்படும் நிலைமை ஏற்பட்டது. அந்தப் 'பேட்டர்ன்' மாற்றப்பட வேண்டும் என்று அதை மாற்றி, ஏ.எஸ்.டி. 5, கோ. 24 போன்றவற்றை புதிதாக புகுத்த இருக்கிறோம். அதோடு ஏடிடி. 3 குறைந்த அளவில் தண்ணீர் தரப்பட்டு, விவசாயிகள் பிழைக்கும் அளவில் இருப்பதால் அந்த விதையை

[திரு. ஏ. கோவிந்தசாமி] [1968 *மார்ச்* 14

1000 டன் வாங்கும்படி உத்தரவிட்டிருக்கிறது என்கிற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன். இதை தஞ்சாவூரில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன். இந்த நேரத்தில் உணவுத் துறையில் முன்னேற்றம் காண ஒத்துழைத்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு **என்** நன்றியையும் தெரிவிக்கிறேன்,

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை. ஆனால், 434-வது வெட்டுத் தீர்மானம், மிகவும் நியாயமானது, நேர்மையானது. ஆகவே, அதில் கண்டவற்றிற்கு உடனடியாக பதில் சொல்ல முடியாவிட்டாலும், ஒரு தலைப்பட்சமாகச் செய்யாமல், கிணறு வெட்டி, மின்சாரக் கட்டணம் கொடுத்து, விவசாயம் செய்கிற, நெல் உற்பத்தி செய்கிறவர்களுக்கு 'ரிபேட்' கொடுக்க வேண்டும் என்பது மிக மிக அவசியமானதாக இருக்கிறது. ஆகையினால் அதை மீண்டும் பரிசீலனை செய்து ஆவன செய்வார்கள் என்று நம்பி, அந்த அடிப்படையில் என் வெட்டுத் தீர்மானத்தை நான் வற்புறுத்தவில்லை.

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி :** மின்சாரம் யூனிட் 17 காசுக்கு உற்பத்தி செய்து, 8½ காசு என்று குறைவான விலையில் கொடுக்கிறோம். இது மற்ற மாநிலங்களில் கொடுப்பதைவிட மிகக் குறைவானது. வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தாமல் இருந்ததற்காக நன்றி.

**மாண்புகு பேரவைத் தலைவர் :** இனி நிதிக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் அவற்றை வற்புறுத்தவில்லை என்று கருதுகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

அவை முன் உள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,48,76,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்"

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லை என்று கருதுகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது அவைமுன் உள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 45,30,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

பிற் பகல் 2-45 **மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.





**7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்**

A. *Statutory Rules and Orders.*

*Nil.*

B. *Reports, Notifications and other papers.*

* 44. Note on Community Development and Panchayat Development (English and Tamil).

* 45. Financial Supplement under Demand Community Development (English and Tamil).

@ 46. Speech by Hon. Minister for Local Administration (Tamil).

இணைப்பு

**(13-ம் பக்கத்திலுள்ள 213-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க,)**

**இம்மாநிலத்தில் 1960 முதல் 1966 வரை இரவு நேரத்தில் லாரி போக்குவரத்தின் காரணமாக ஏற்பட்ட விபத்துக்களின எண்ணிக்கை, இறந்தவர்களின எண்ணிக்கை, அத்தகைய சாலை விபத்துக்களைத் தடுப்பதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள்,**

| | |
|---|---|
| 1960 முதல் 1966 வரை இரவு நேரத்தில் லாரிகள் போக்குவரத்தின் காரணமாக ஏற்பட்ட விபத்துக்களின் மொத்த எண்ணிக்கை .. | 6 634 |
| மேற்சொன்ன விபத்துக்களில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை .. .. .. | 1,166 |

இந்த மாநிலத்தில் அத்தகைய சாலை விபத்துக்களைத் தடுப்பதற்கு எடுத்துக்கொண்ட பல நடவடிக்கைகளில் கீழ்க்கண்டவையும் அடங்கும்.

(1) முக்கியமான இடங்களில் தக்க அறிவிப்புப் பலகைகளை வைத்தல்.

(2) வேகமாகவும், அசட்டையாகவும் ஓட்டுபவர்களைத் திடீர் சோதனை மூலம் கண்டுபிடித்தல், அவ்வாறு குற்றம் செய்யும் வண்டி ஓட்டிகள் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுத்தல்.

(3) அதிக வேகத்தில் ஓட்டுபவர்களை வேகமானி மூலம் கண்டு பிடித்து நடவடிக்கை எடுத்தல்.

---

* Despatched to Members on 12th March 1968.

@ Placed on the Table of the House on 13th March 1968.

## இணைப்பு



(4) வண்டிகளின் முன்புறமுள்ள பெரிய விளக்குகள் எதிர்புறத்திலிருந்து வரும் வண்டி ஓட்டிகளின் பார்வையை மறைக்கும் வகையில் அதிக வெளிச்சமுள்ளவைகளாக இருப்பதைத் தடுப்பதற்காக, தக்கவாறு மறைக்கப்பட்டிருக்கும்படி பார்த்துக் கொள்ளல்.

(5) தேவையான இடங்களில் ஒரு வழிப் போக்குவரத்துத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருதல்.

(6) முறையான பிரச்சாரம் மூலம் வண்டி ஓட்டிகளையும் பொது மக்களையும் போக்குவரத்து விதிகளைச் சரிவரப் பின்பற்றும்படி அறிவுறுத்தல்.

(7) தேவையான இடங்களில் சாலைகளை அகலப்படுத்துதல்.

*Number of accidents caused by lorries during night from 1960 to 1966, number of deaths and steps taken to prevent such road accidents in this State.*

| | |
|---|---|
| Total number of accidents caused by lorries during night from 1960 to 1966 ... | 6,634 |
| Number of deaths in the above accidents ... | 1,166 |

The following are among the several steps taken to prevent such road accidents in this State :

(1) Putting up of proper sign boards at important places.

(2) Conducting surprise checks to detect cases of rash and negligent driving, and prosecuting the erring drivers.

(3) Conducting of regular speed traps.

(4) Ensuring that the head lights of vehicles are suitably covered as not to blind the drivers of vehicles coming in the opposite direction.

(5) Introduction of one way traffic system wherever necessary.

(6) Educating the drivers and the general public regarding better observance of the traffic rules, through regular propaganda.

(7) Broadening of narrow roads wherever necessary.

# தமிழக சட்டப் பேரவை

---

## வெள்ளிக்கிழமை 1968 மார்ச் 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### I.—வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் வெளியே போக இருக்கிற காரணத்தால் வினா எண் 225 முதலில் எடுத்துக்கொள்ளப்படும்.

*Bonus to textile workers*

*225 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) whether the managements of textile mills in Coimbatore represented by the Southern India Mill Owners' Association and Trade Union representatives have arrived at an agreement on the payment of bonus to textile workers for the year 1966-67; and

(b) if so, the details of this settlement?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) 86 நூற்பாலைகள் இவ்வொப்பந்தத்திற்கு உடன்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய போனஸ் தொகை, ஒவ்வொரு தொழிலாளியின் மொத்த ஊதியத்தில் 4 சதவிகிதத்திலிருந்து 16·7 சத விகிதம் வரையில் ஒவ்வொரு ஆலைக்கும் தனித் தனியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. வினயகம்:** இப்போது கோயம்புத்தூரில் இருக்கிற மில்களை 15 நாட்களாக மூடிவிட்டிருப்பதாக முதலாளிகள் அப்படி ஏற்பாடு செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன், இது உண்மையா? இதனால் எத்தனை தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இதைப் பற்றி ஏற்கெனவே நமது தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகள் அனுப்பப்பட்டு அதை அவர்கள் பரிசீலித்து வருகிறார்கள். நம்முடைய மாநிலத்திற்கும் இந்தப் பிரச்சினைக்கும் சம்பந்தம் கிடையாது. மத்திய அரசோடு தொடர்பு கொண்டு தொழிலிலே ஏற்பட்டிருக்கின்ற தேக்கத்தைப் போக்குவதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அவற்றை செய்து வருகிறோம் என்று ஏற்கெனவே தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இதில் கைத்தறி போர்டு அதிகாரியும் அனுப்பப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதிலே லேபர் கமிஷனரையும் மற்ற அதிகாரிகளையும் கவனம் செலுத்தச் செய்தால் நலமாக இருக்கும் என்பதால் அவர்களையும் கலந்துகொண்டு ரிபோர்ட்டு கொடுக்கும்படி ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தொழிலிலே ஏற்பட்டிருக்கின்ற தேக்கத்தைப் பரிசீலித்து நம்முடைய மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு என்னென்ன செய்ய வேண்டுமென்பதை ஆராய்வதற்கு அந்த அதிகாரிகள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்குப் பாதகமான சூழ்நிலை ஏதாவது ஏற்படுமானால் அதை எப்படித் தடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்பது பற்றி நம்முடைய தொழிலாளர் இலாக்கா கவனம் செலுத்தும்.

**திரு. கே. விநாயகம்:** தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதிலே மில் அதிபர்களுக்கும் தொழிலாளர்கள் அசோசியேஷன்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதன் விளைவாக வேலைக்குத் திரும்பினார்களா? தகராறு வந்ததற்குப் பின் மூடப்பட்டது. அதற்குப்பின்தான் திறக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மில்கள் மூடப்பட்டதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இப்போது தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் இடையே இது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடக்கும். இந்த ஆண்டு இது சம்பந்தமாக கோவை மாவட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்து எல்லோருடைய சம்மதத்துடன் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக அரசாங்கம் கருதுகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஒப்பந்தம் ஏற்படும்போது மில்களில் லாப நஷ்ட கணக்குப் பார்க்கப்பட்டதா? மில்களில் எவ்வளவு லாபம் இருந்தது என்பதை அரசாங்கம் ஆராய்ந்ததா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அரசாங்கத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. போனஸ் சட்டம் என்று மத்திய சட்டம் இருக்கிறது. போனஸ் சட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு என்ன போனஸ் கொடுக்க வேண்டுமென்பது பற்றி பார்முலா இருக்கிறது. அதை அடிப்படையாக வைத்துத்தான் லாபத்திலே எவ்வளவு பங்கு, எப்படிப் பிரித்து கொடுப்பது, ஒவ்வொரு தொழிலாளருக்கும் எவ்வளவு, தொழிலாளர்களுக்கு வேறு தொழில்கள் கொடுப்பது என்பதுபற்றியெல்லாம் பரிசீலிக்கப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சுமுகமான தீர்வு காண்பது என்பது நாம் எல்லோருமே வரவேற்கக்கூடிய அம்சம் என்றபோதிலும் மூடி இருக்கின்ற மில்கள் மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் மூடப்பட்டிருக்கிற காரணத்தால் தொடர்ந்து லேஆப் கொடுக்கப்படுகிறதா? அப்படி இல்லையென்றால் தொடர்ந்து கொடுக்கக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுவதைப் பற்றி ஏற்கெனவே தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். குறிப்பிட்ட மில்களைப் பற்றிக் கேட்டால் அதற்குப் பதில் அளிக்கலாம்.

## பாடப்புத்தக வெளியீடு

*** 218 வினா—திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :**
**திரு. வை. சுவாமிநாதன்:** } மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—



தனிப்பட்ட கம்பெனிகள் பாடப் புத்தகங்கள் பிரசுரிப்பதால் ஏற்படும் காலதாமதத்தைப் போக்கும் வகையில் அரசினரே அனைத்துப் புத்தகங்களையும் பிரசுரம் செய்து உரிய காலத்துக்குள் புத்தகங்கள் கிடைக்க ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பாடப் புத்தகங்களை அரசு வெளியிடும் திட்டத்தின்கீழ், I முதல் VII வகுப்புகளுக்குரிய தமிழ், ஆங்கில பாடப் புத்தகங்களை அரசு வெளியிடுகிறது. பாடப் புத்தகக் குழுவின் ஒப்புதலைப் பெற்று, தனி நிறுவனங்கள் வெளியிடும் பாட புத்தகம் குறித்த காலத்தில் கிடைப்பதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** தலைவர் அவர்களே, பாடப் புத்தகங்களை பிரைவேட் கம்பெனிகள் வெளியிட்டால் காலதாமதம் ஏற்படுகிறது என்பது ஒருபுறம் இருக்க இதில் பலவிதமான ஊழல்கள் ஏற்படக்கூடிய நிலைமை இருப்பதால் பாதகம் ஏற்படுகிறது. ஆகையால் எல்லா பாட புத்தகங்களையும் அரசே வெளியிடும் உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தனியார் துறையிலே புத்தகங்கள் வெளியிடுவதில் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லப்படுகிறது. இதற்கான முழுப் பொறுப்பையும் கல்வி இயக்குநர் அவர்கள் ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. பாட புத்தகங்களை 7-ம் வகுப்பு வரையிலும் தமிழ், ஆங்கிலப் புத்தகங்கள் வெளியிடும் பணியை இந்த ஆண்டு அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அடுத்த ஆண்டு 8-ஆம் வகுப்பு வரையிலும் தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் பாடப் புத்தகங்கள் வெளியிடும் பணியை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவற்றை மெள்ள மெள்ளத்தான் செய்யமுடியும். அதற்கான வசதிகளை நாம் பெருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எல்லா புத்தகங்களையுமே அரசாங்கமே வெளியிட வேண்டுமானால் இன்னும் அதிகமாகக் காலதாமதம் ஆகுமே தவிர குறைப்பதற்கான வழியில்லை. அந்த முறையிலேதான் தமிழ், ஆங்கிலம் இரண்டு பாடப் புத்தகங்களையும் அரசு மெள்ள மெள்ள ஏற்றுக்கொண்டு வெளியிட்டு வருகிறது. உடனடியாக காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அவற்றைக் கல்வி இயக்குநர் எடுத்து வருகிறார்கள்.

**திரு. வை. சுவாமிநாதன்:** பாட புத்தகங்களை வெளியிடுவதில் எந்தப் புத்தகங்களை வைப்பது என்பதை முடிவு செய்வதற்கு மே, ஜூன் மாதமாகிவிடுகிறது. அப்படியில்லாமல் எந்தப் பாடப் புஸ்தகங்களை வைப்பது என்பது பற்றி எப்ரல் 30-ம் தேதிக்குள்ளேயே முடிவு செய்ய வேண்டுமென்று கல்வி அதிகாரிக்கு அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்கள் திறப்பதற்கு முன்னால் என்னென்ன புத்தகங்களை இந்த ஆண்டு வைக்க வேண்டும் என்பது பற்றிய முடிவு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்படுகின்றது. இந்த வேலையில் கல்வி இயக்குநர் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

**திரு. பெ. மலைச்சாமி :** உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு பாடக் குழு, கல்லூரிப் பாடத்திற்கு ஒரு குழு அமைத்து, அதற்குப் பிறகு அவற்றைத் தொகுத்து அரசு வெளியிடுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** டெக்ஸ்ட் புக்ஸ் கமிட்டி என்பது உயர்நிலைப் பள்ளிகளுக்கு இருந்து வருகிறது. கல்லூரிகளுக்கு அல்ல. கல்லூரிக்கான குழுவைப் பல்கலைக் கழகந்தான் அமைக்க வேண்டும்.

[1968, மார்ச் 15

**திரு. கரு. சீமைச்சாமி:** தனிப்பட்ட கம்பெனிகள் பாடப்புத்தகங்கள் வெளியிடுவதால் காலதாமதம் ஆவதாகச் சொன்னார்கள். அரசாங்கமே வெளியிடுகின்ற எஸ். எஸ். எல். சி. புத்தகங்கள் காலதாமதமாகின்றதே, அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** காலதாமதம் எந்தத் துறையிலே ஏற்பட்டாலும் தடுக்கப்பட வேண்டும். தனியார் துறையிலே காலதாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

**திரு. சு. துரைசாமி:** தலைவர் அவர்களே, பாடப் புத்தகங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுத்துவிடுவதாகச் சொல்லி ஏற்றுக் கொண்டு, அப்படிக் கொடுக்காத கம்பெனிகளுக்கு அடுத்த ஆண்டு புத்தகங்கள் தயாரித்துக் கொடுக்கும் உரிமை மறுக்கப்படுமா? அத்தகைய விதிகள் ஏற்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தவறு செய்பவர்களைப் பொறுத்து, அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கலாம். அம்மாதிரி ஒரு தடவை தவறிவிட்டால், மறுபடியும் கொடுக்காமல் நிறுத்திவிடும் முயற்சியை மேற்கொள்ளுமாறு இயக்குநர் அவர்கள் கூறப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** எல்லாப் பாடப் புத்தகங்களையும் அரசே வெளியிட முயற்சிக்குமானால், பாடங்கள் எழுதும் ஆசிரியர்களுக்குத் தனியார் கம்பெனியில் கொடுப்பதைவிட அதிக ஊதியம் கிடைக்கக்கூடும், பாடப் புத்தகங்கள் வெளியிடுவதில் அரசாங்கத்திற்கும் அதிக லாபம் கிடைக்கும். அதனால் மதிய உணவுத் திட்டம் போன்ற நல்ல காரியங்களுக்கும் நிதி கிடைக்கக்கூடும் இதற்காகப் போதிய அச்சகங்கள் இல்லாவிட்டாலும், மதுரை போன்ற இடங்களில் பெரிய அச்சகம் ஏற்படுத்தியாவது இம்முறையில் எல்லாப் பாடப்புத்தகங்களையும் அரசு வெளியிட முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன்:** அந்த நோக்கத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான், ஏழாம் வகுப்பு வரையில் அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. அடுத்த ஆண்டு எட்டாம் வகுப்புக்கும் புத்தகம் வெளியிட இருக்கிறோம். இப்படி ஆண்டுக்காண்டு புதிய புதிய வகுப்புகளுக்கு வெளியிடுகின்ற வாய்ப்பினை நாம் அதிகமாக்கிக்கொள்ளலாம். 'ஃபேஸ்டு ப்ரொக்ராம்' என்ற அளவுக்கு படிப்படியாகத்தான் செய்ய வேண்டியிருக்கிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தனியார் பாடப் புத்தகங்கள் அச்சிடுவதனால், அவற்றிலே சாதி சமயப் பிணக்குகள் நிறைந்த புராணக் கருத்துக்களும், இதிகாசக் கருத்துக்களும் புகுத்தப்படுகின்றன. பகுத்தறிவுக்கேற்ற முறையில் இளைஞர்களை வளர்ப்பதற்காக அரசினரே அந்தப் பாடப் புத்தகங்களை வெளியிடுவதற்கு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** பாடப் புத்தகங்களை என்ன என்ன வகைகளிலே தயாரிக்கவேண்டும் என்பதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதி முறைகளுக்கு உட்பட்டும், ஸிலபஸுக்கு உட்பட்டும்தான் தயாரிக்கிறார்கள். அதற்குப் பிறகு டெக்ஸ்ட் புக்ஸ் கமிட்டி அதை ஆராய்கிறது. ஒருவர் அல்ல; பலர் சேர்ந்து ஆராய்கிறார்கள். அதற்குப் பிறகுதான் புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று குற்றச்சாட்டுகள் வரும் அளவுக்கு எதுவும் வெளியிடுவதில்லை. அப்படி ஏதாவது இருந்து, சுட்டிக்காட்டப்படுமானால், அதை நீக்குவதற்குரிய ஏற்பாடு செய்வதுபற்றி முயற்சிக்கலாம்.



1968 மார்ச் 15]

**திரு. எம். பூபதி :** வெளிநாட்டினர் பேப்பர் இலவசமாக நமது சர்க்காருக்குக் கொடுக்கிறார்களே, அந்தப் பேப்பர்களைக் கொண்டு ஏழை எளிய குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகங்கள் அச்சிட்டுக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** வெளிநாட்டிலிருந்து வரும் பேப்பர் பற்றிய விவரக் குறிப்பு இப்பொழுது என்னிடம் இல்லை. ஆனால், ஏழை மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்கள் கொடுக்க ஒரு முயற்சி நமக்கு இருந்து கொண்டு வருகிறது, ஒரு சிறு அளவிலே அந்த முயற்சியும் செய்யப்பட்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Mere nationalisation of text-books will not solve the problem. It will suppress private enterprise and initiative. At the time of scrutiny by the Committee if proper steps are taken and if correct information is given to private publishers, we can get good books. Therefore will the Government encourage writers of books and private companies?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனியார் துறையில் இரண்டு வகையினர் இருக்கிறார்கள். நல்ல முறையில் அச்சடித்து, அடக்கமான விலையில், அதிக லாபத்திற்கு இடமில்லாமல், நாணயமாக, நேர்மையாகக் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள். அதே சமயத்தில், அளவுக்கு மீறி விலைகள் போட்டு, வேறு பல வகைகளைச் செய்து வெளியிடுபவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட குறைபாடுகளுக்கு இடமில்லாத வகையில் இருக்கவேண்டும் என்பதற்காக, அரசே அத்தகைய பொறுப்பைப் படிப்படியாக ஏற்றுக்கொண்டு வருகிறது. பாடப் புத்தகங்களை அரசே வெளியிடுவதன் மூலம், வரும் லாபத்தை அரசு மதிய உணவு போன்றவற்றிற்கும், மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டது போன்று, ஏழை எளிய மாணவர்களுக்குப் புத்தகங்கள் கொடுப்பது, ஸ்லேட்டுகள் கொடுப்பது போன்ற நல்ல காரியங்களுக்கும் பயன்படுத்தலாம் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அது மட்டுமல்ல. அரசாங்கத்தின் சார்பாகக் கொடுக்கும் போது, தனியார் கொடுத்ததைவிடக் குறைவான விலைக்குக் கொடுப்பதற்குக் கூட வழி இருக்கிறது. இதையெல்லாம் யோசித்துத்தான், படிப்படியாக, புத்தகங்களை வெளியிடும் முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது. இப்போதும், தனியார் துறையில் நல்ல முறையில், விதிகளுக்கு உட்பட்டு, வெளியிடுகிற புத்தகங்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

**திரு. ந. தருமலிங்கம் :** தனியார் வெளியிடும் பாடப் புத்தகங்களில் பல தவறுகள் இருக்கின்றன என்ற புகார் பரவலாக வெளிவருவதை அடிப்படையாக வைத்து, நமது அரசுத் தரப்பில், இதுபோன்று தனியார் வெளியிடும் புத்தகங்களைப் பார்வையிட்டுத் தணிக்கை செய்வதற்கான குழு ஏதேனும் உண்டா? இல்லையென்றால், அப்படிப்பட்ட குழு ஒன்றை அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப்படையான குற்றச்சாட்டு சொல்கிறார்கள். இதெல்லாம் பரிசீலிப்பதற்கு டெக்ஸ்ட் புக்ஸ் கமிட்டி இருக்கிறது. அதில் பலர் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்து ஆராய்ந்து, அதிலே ஏதாவது ஆட்சேபகரமான பகுதி இருந்தால், "இந்தப் பகுதிகளெல்லாம் நீக்கப்பட வேண்டும்; நீக்கப்பட்டு, மறுபடியும் புத்தகம் வருமானால் கவனிப்போம்" என்று அவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். அதற்குப் பிறகு, ஆட்சேபகரமான பகுதிகளையெல்லாம் அவர்கள் நீக்கிவிட்டு மறுபடியும் கொண்டு வந்து தருகிறார்கள். அதற்குப் பிறகு பரிசீலனை செய்து, ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருந்தால் ஏற்றுகொள்கிறார்கள். அப்படியும் அவர்களுடைய கவனத்திலும் படாமல் ஏதாவது தவறு வருமானால், அது சுட்டிக்காட்டப்படுமானால், அது பற்றிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. டி. மார்டின் :** எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புக்கான பாடப் புத்தகங்கள், குறிப்பாக ஆங்கிலமும், தமிழும், பள்ளிகள் தொடக்கப்பட்ட நேரத்தில், உடனே வராது, காலங்கடந்து வருவதற்குக் காரணம் என்ன ? அந்தக் குறையை நீக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அச்சிட்டு வெளியிடுகின்ற தன்மையில்தான் கொஞ்சம் காலத் தாழ்வு ஏற்பட்டது. சென்ற ஆண்டில். அதை இந்த ஆண்டு இல்லாத அளவு ஆக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. அதற்கான எல்லா முயற்சிகளையும் இப்பொழுதிருந்தே இயக்குநர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அடுத்த ஆண்டு அந்தக் குறைபாடு இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE : There are a number of complaints against the functioning of the Text Book Committee. In my last year's speech on Education Demand, I pointed out some of them. The books of some persons among those who applied after the time-limit are accepted, while the books of other persons are not accepted; some discrimination is made. Will the Government find out what exactly the loopholes are and the defect is in the working of the Committee?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்ற ஆண்டு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகப் புத்தகங்கள் தரப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. அப்பொழுது புயல் நிலைமைகள் ஏற்பட்டு, பல இடங்களில் வேலை நின்றுவிட்டதன் காரணமாக, காலத்தைக் கொஞ்சம் நீட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதையொட்டி, குறிப்பிட்ட காலம் தரப்பட்டு, அதற்கிடையில் வந்தவையும் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதற்குப் பிறகும் சில பேர்கள் கொண்டுவந்தார்கள். இவ்வளவு நாள் நீட்டினீர்களே, இன்னும் கொஞ்சம் நீட்டிக்கக்கூடாதா என்று கேட்டுக்கொண்டார்கள். அதன் பேரிலும் சிறிது காலம் நீடித்து, அதற்கிடையில் வந்தவையும் எடுத்துக்கொள்ளப்பட்டன. டெக்ஸ்ட் புக் கமிட்டி ஒரு முறைப்படிதான் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காலக் கெடு இருக்கிறது. அதன்படி ஆராயப்படும் நிலைமை இருக்கிறது. அது எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது, எப்பொழுது என்பது பற்றிய விவரக் குறிப்பு இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் கொடுக்கலாம்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** அரசினர் பாடப் புத்தகங்களை விநியோகிக்கும் உரிமை தனிப்பட்ட சிலருக்கு மட்டுமே தரப்படுகிறது. அதனால் அவர்கள் சில நெருக்கடிகளை உண்டாக்கி விடுகிறார்கள். அதை மாற்றி, எல்லாப் புத்தக நிலையங்களிலும் அரசினர் வெளியிடும் புத்தகங்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முன்பு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவர் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட நிலை இருந்தது. அது இந்த ஆண்டு மாற்றப்படுகிறது. கல்வி மாவட்டங்கள் 33 இருக்கின்றன. அந்த 33 கல்வி மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவரைப் பொறுப்பாக ஏற்படுத்தவேண்டும் என்ற அந்த முறையை மேற்கொள்ள வேண்டும் என்றும், ஒருசில மாவட்டங்களில் கூட்டுறவு முறையில் விநியோகிக்கும் முறையையும் மேற்கொண்டு பார்த்து, அதில் ஏதாவது சரியான பலன் ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டால், அதுபற்றி எதிர்காலத்தில் யோசிக்கலாம் என்ற அளவுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபற்றிய நடவடிக்கைகளில் இயக்குநர் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** தனியாரால் தயாரிக்கப்படும் புத்தகங்களின் விலை மிகவும் அதிகமாக இருக்கிறது. அவர்கள் டெக்ஸ்ட் புக் கமிட்டியில் காட்டும்போது ஒரு மாதிரியான நல்ல பேப்பர் போட்டுத் தயாரித்துவிட்டு, பிறகு மாணவர்கள் மத்தியில் மோசமான பேப்பர் போட்டுத் தயாரிக்கப்பட்ட புத்தகங்களைக் கொடுக்கிறார்கள். இதனால் ஒரு வருஷத்திற்குக்கூட புத்தகம் சரியாக வருவதில்லை. இவற்றையெல்லாம் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் ?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்படிப்பட்ட ஐயப்பாட்டைப் போக்குவதற்காகத்தான் அரசாங்கமே புத்தகங்களை வெளியிடுவது என்ற முயற்சியை மேற்கொண்டு படிப்படியாகக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற குற்றச்சாட்டு வரும்போதெல்லாம் கவனிக்கப்பட்டுத் திருத்தப்படவேண்டும், அப்படித் திருத்திக்கொள்ளாவிட்டால், அவர்களுக்கு மறுபடியும் தரக்கூடாது என்ற முறைதான் மேற்கொள்ளப்படுகிறது.

**திரு. டி. தங்கப்பன் :** புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவை பாடப் புத்தகங்களில் பாடமாக வருவதை தவறு என்றோ, குற்றம் என்றோ அரசு கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தவறு என்றோ, குற்றம் என்றோ அரசு கருதுவதில்லை. அந்தக் கருத்துக்களெல்லாம் வருகின்றன. அதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருந்தால் ஏற்றுக்கொள்ளுவார்கள். சிலர் கதைக்காக ஏற்றுக்கொள்வார்கள். சிலர் கருத்துக்காக ஏற்றுக்கொள்வார்கள். அதில் இருக்கும் நீதிக்காகவும் ஏற்றுக்கொள்ளுவார்கள். சிலர், அந்தக் காலத்தில் எப்படி எப்படி இருந்திருக்கிறது என்கிற வரலாற்றையெல்லாம் தெரிந்துகொள்ள ஏற்றுக் கொள்ளுவார்கள். ஆகவே, அதை நீக்குகிற நிலைமை இல்லை. அதைக் குற்றமாகவோ தவறாகவோ கருதுகிற நிலைமை இல்லை.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, மற்றப் பாடங்களிலாவது புத்தகம் தயாரிக்கும் உரிமையை தனியார் துறைக்கு விட்டால் நன்றாக இருக்கும். தனியார் துறையில்தான் அரசினர் தலையீடு இல்லாமல், போட்டா போட்டி என்ற முறையில் புத்தகங்கள் எல்லாம் நல்ல முறையில் தயாரிக்கப்படும். ஆகவே தொடர்ந்து தனியார் துறைக்குப் புத்தகங்கள் தயாரிக்கும் உரிமையை இந்த அரசு வழங்கி வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழ், ஆங்கிலம் பாட நூல்கள் மட்டும்தான் அரசினர் துறையில் வெளியிடுகிறார்கள். மற்றப் புத்தகங்கள் எல்லாம் தனியார் துறையில்தான் வெளிவருகின்றன. இப்பொழுது எட்டாவது வகுப்புவரையில் தனியார் துறையிலுள்ள புத்தகங்களை அரசு வெளியிட்டு வருகிறது. இன்னும் 11-வது வகுப்பு வரையில் உள்ள புத்தகங்களை அரசாங்கமே பதிப்பித்தால் சரியாக இருக்குமா என்ற நிலைமை ஆராயப்பட்டு வருகிறது. நிலைமை ஆராயப்பட்ட பின்னர்தான் அதுபற்றித் திட்டவட்டமான முடிவு எடுக்கப்படும்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, பாடப் புத்தகங்களை தனியார் தயாரிப்பதைவிட அரசாங்கமே தயாரிப்பதை வரவேற்கிறேன். அரசாங்கம் தயாரிக்கும் பாடப்புத்தகங்களை மாவட்ட அளவில் விற்பனை செய்வதற்கு குறிப்பிட்ட சிலருக்கே ஏஜென்சி கொடுக்கிறார்கள். பாடப் புத்தகத்தின் விலை 30 காசாக இருந்த போதிலும், உறையூரிலே இருந்து கோட்டைக்கு புத்தகம் வாங்கச் சென்றால், பஸ்ஸுக்காக 30 காசு ஆகிறது. ஆகவே, பாட புத்தகங்களை விற்பனை செய்யும் ஏஜென்சி உரிமை பரவலாக விண்ணப்பித்துக்கொள்ளும் அத்தனை பேருக்கும் கிடைக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அத்தனை பேருக்கும் ஏஜென்சி கொடுப்பதிலே பல சங்கடங்களும், குழப்பங்களும் இருக்கின்றன. பரவலாக பிராஞ்சுகளை ஏற்படுத்தி, எல்லோருக்கும் எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எங்கேயாவது குறைபாடுகள் இருந்து, அதைச் சுட்டிக்காட்டு

வார்களானால், அதுபற்றி மேலதிகாரிகள் மூலம் நடவடிக்கைகள் எடுத்து, குறைகளை அகற்றி, எல்லோருக்கும் புத்தகங்கள் எளிதில் கிடைக்க தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, அரசு வெளியிட்டுள்ள முதல் வகுப்புப் பாடப் புத்தகத்தில் 'யானை' என்பதற்குப் பதிலாக 'ஆனை' என்று எழுதப்பட்டிருக்கிறதே, எது சரியான சொல் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழ் இலக்கணப்படி 'யானை' என்றும் 'ஆனை' என்றும் சொல்லலாம்.

**திரு. ஆலடி அருணா :** தலைவர் அவர்களே, இவ்வாண்டில் சிறப்புத் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் ஏன் இதுவரை வெளியிடப்படவில்லை ? கடந்த நான்கு ஆண்டுகளாக 7-வது, 8-வது வகுப்புகளுக்கு புவியியல், வரலாறு ஆகிய புத்தகங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. 7-வது வகுப்புப் புத்தகத்தையே 8-வது வகுப்புக்கும் வைத்து நடத்துகிறார்கள். எதிர்காலத்திலாவது இந்தக் குறை தவிர்க்கப்பட்டு 8-வது வகுப்புக்குத் தனியாக புத்தகங்கள் தயாரிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் சுட்டிக்காட்டுகின்ற நிலைமை இருக்கிறதா, இல்லையா என்பது ஆராய்ந்து பார்த்தபிறகுதான் தெரியவரும். 7-வது வகுப்புப் புத்தகத்தையே 8-வது வகுப்புக்கு வைத்து வருகிறார்கள் என்ற குறைபாடுகள் எல்லாம் இதுவரையில் என் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அது ஆராயப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். சிறப்புத் தமிழ் இரண்டாவது பாடமாக வைத்திருக்கிறோம். 9-வது, 10-வது, 11-வது வகுப்புகளுக்கான ஸிலபஸ் புதிதாக தயாரிக்கும் நிலைமை இருக்கிறது. நாம் இப்போது இரண்டாவது பிரிவை எடுத்துவிட்ட காரணத்தால், இது அவசியமில்லாத நிலையில் இருக்கிறது.

**திரு. கோ. இர. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, நம் நாடு ஒரு 'செக்யூலர் ஸ்டேட்'. எனவே, குழந்தைகளுக்கும் அம்மாதிரியான உணர்வை அளிக்கக்கூடிய வகையில் பாடபுத்தகங்களை அரசு வெளியிடுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த நாடு மதச் சார்பற்ற நாடு. இந்த அரசு மதச் சார்பற்ற அரசே தவிர, மத எதிர்ப்பு சர்க்கார் அல்ல. ஒரு குறிப்பிட்ட மதத்தின் சார்பாக வழிபாடு செய்யவும், நம்பிக்கை கொள்ளவும் மக்களுக்கு உரிமை இருக்கிறது. அரசு இவ்விஷயங்களில் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தாது. 'Liberty of thought, expression, belief, faith and worship' என்றுதான் சட்டத்தின் அடிப்படையில் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அவரவர்கள், தங்கள் தங்கள் விருப்பப்படி வழிபாடு செய்யவும், நம்பிக்கை கொள்ளவும் உரிமை இருக்கிறது. யாரையும் மதத்தின் சார்பாக வற்புறுத்தும் கொள்கை இந்தச் சர்க்காருக்கு இல்லை. எல்லோருக்கும் மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

### ஈச்சன்கொட்டையில் பட்டுப்பூச்சி வளர்ப்பு

* 219 வினா.—**திரு. ஆ. கு. சுப்பையா :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் தாலூகா, ஈச்சன் கொட்டை கிராமத்தில் பட்டுப் பூச்சி வளர்க்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஈச்சன்கொட்டை கிராமத்தில் பட்டுப் பண்ணை 1963-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது.





**திரு. ஆ.கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, எத்தனை எக்கர் நிலத்தில் பட்டுப்பூச்சி வளர்க்கப்படுகிறது ? இதற்காக ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் செலவாகிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஈச்சன்கோட்டைப் பகுதியில் 15 எக்கர் பரப்புள்ள, அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தில பட்டுப் பண்ணை வைக்கலாம் என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அது நீர்வளம் இல்லாத தரம்பாக இருந்த பகுதி. ஆகவே, 1963 டிசம்பர் மாதத்தில் 6 எக்கர் நிலத்தில் மல்பரிச் செடிகளைப் பயிராக்கத் திட்டமிடப்பட்டு, பயிர் செய்யப்பட்டது. தண்ணீர் வசதி குறைவாக இருக்கும் காரணத்தால் ஒரு கிணறு தோண்டப்பட்டு மேலும் 3 எக்கர் நிலத்தில் மல்பரிச் செடிகளைப் பயிராக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அந்தத் திட்டங்களுக்கு இதுவரையில் கீழ்க்காணும் பணம் செலவிடப்பட்டிருக்கிறது. 1963–64-ல் 3,862 ரூபாய் 14 காசும், 1964–65-ல் 18,751 ரூபாய் 91 காசும், 1965–66-ல் 7,741 ரூபாய் 58 காசும், 1966–67-ல் 5,280 ரூபாய் 36 காசும் செலவிடப்பட்டது. ஆனால் இந்தப் பண்ணையிலிருந்து 1965–66-ல் 941 ரூபாயும் 1966–67-ல் 1,750 ரூபாயும் வருமானம் கிடைத்திருக்கிறது. திட்டத்தின் பயன் இப்போதுதான் ஆரம்பமாகியிருக்கிறது. வருமானம் ஆண்டுகள் செல்லச்செல்லத்தான் கூடுதலாகும். இந்தத்திட்டம் நம்பிக்கையூட்டத்தக்க விதத்தில், நல்ல பயன் அளிக்கத்தக்க விதத்தில் இருக்குமா என்பது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இல்லாவிட்டால் மாற்றுத் திட்டங்கள் வகுக்கவும் வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, சில்க் தொழிலுக்கு வேண்டிய பட்டுப் பூச்சிகள் வளருவதற்குத் தகுந்த தட்ப வெப்ப நிலை இந்த இடத்தில அமைந்திருக்கிறதா? இந்த தட்ப வெப்ப நிலையை ஆராய்ந்து பார்த்த பிறகுதான் இந்த இடம் தகும் என்று அமைக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் கூறுகிற கருத்து ஆராயப்பட்டு வருகிறது. தட்ப வெப்ப நிலை கொஞ்சம் அதிகமாக இருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஆராயப்பட்டு, தகுந்த சோதனை நடைபெற்று வருகிறது. இந்த இடம் சரியாக இல்லாவிட்டால் இந்த இடம் கைவிடப்பட்டு, சரியான தட்ப வெப்ப நிலை உள்ள இடத்தில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, ஈச்சன்கோட்டை கிராமத்திலிருக்கும் பட்டுப் பூச்சி பண்ணைக்கு நான் மூன்று மாதங்களுக்கு முன் சென்றிருந்தேன். பாக்கி இடங்களில் இருக்கும் பண்ணைகளைவிட இந்தப் பண்ணையில் அதிகமான பட்டு உற்பத்தியாவதாகவும், இந்தப் பட்டுப்பூச்சிகள் சாப்பிடக்கூடிய இலைதான் பற்றாக்குறையாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இங்கே தண்ணீர் பற்றாக்குறையாக இருப்பதால் மல்பரி செடிகள் வளரமுடியவில்லை. இந்தப் பண்ணையை அடுத்துள்ள நிலங்கள் நீர்வளம் பெற்று உணவு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அந்த நிலங்களில் 15 எக்கர் நிலங்களை அரசாங்கம் வாங்கிக் கொடுத்தால் மல்பரிச் செடிகள் வளருமென்றும், பட்டுப்பூச்சிகள் நன்றாக வளருமென்றும் கூறினார்கள். ஆகவே, அரசாங்கம் இதைக் கவனத்தில் கொண்டு, இந்தப் பண்ணையை அடுத்த 15 எக்கர் நிலங்களை வாங்கி, இந்தப் பண்ணையோடு இணைக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதையெல்லாம் கண்டறிய செரி கல்சரல் இன்ஸ்பெக்டர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் நிலைமைகளை ஆராய்ந்து அம்மாதிரியான கருத்துக்களைத் தெரிவித்தால் மேற்கொண்டு தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1968 மார்ச் 15

திரு. ஏ. எம். ராஜா: தலைவர் அவர்களே, தமிழகத்தில் பட்டுப் பூச்சி எந்தெந்த மாவட்டங்களில் வளர்க்கப்படுகிறது? ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு பட்டு நூல் உற்பத்தியாகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

திரு. சி. நஞ்சன்: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த மாயாறு, மசினகுடி பகுதியில், பட்டுப்பூச்சி வளர்க்க வசதியான இடமாக இருப்பதால், அந்தப் பகுதியில் பட்டுப்பூச்சிகளை வளர்க்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி விவரக் குறிப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்து கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்வி ஈச்சன் கோட்டை கிராமத்தில் பட்டுப் பூச்சி வளர்ப்பு திட்டத்தையொட்டியது. மூலக் கேள்வியை ஒட்டி, திரு. பி. வெங்கடசாமி அவர்கள் ஒரு துணை வினாவைக் கேட்டார்கள்.

Thiru B. VENKATASWAMY: Hon. Deputy Speaker, Sir, may I know from the Hon. Minister for Education the number of acres of mulberry plantations in our State and which is the suitable place for the mulberry plantations?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 15 ஏக்கர் நிலத்தில் 6 ஏக்கர் நிலம் பரப்பளவு மல்பரி பயிரிடப் படுகிறது. அந்த இடத்தில் நன்றாகத் திட்டத்தை நடத்த முடியுமா என்று ஆராயப் பட்டு வருகிறது. அந்த இடம் பயன் தராவிட்டால், அதற்கான மாற்றுத் திட்டங்கள் வகுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது திட்டம் ஆராய்ச்சி நிலைமையில்தான் இருந்து வருகிறது.

முற்பகல் 9-30

திரு. எம். எஸ். மணி: தலைவர் அவர்களே, உஷ்ணப் பிரதேசங்களைவிட குளிர்ப் பிரதேசங்களில்தான் பட்டுப்பூச்சி வளர்க்க முடியும். ஆகவே, குளிர் பிரதேசங்களான ஊட்டி, கொடைக்கானல் போன்ற புல்வெளிப் பிரதேசங்கள் பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கு ஏற்ற இடமாக இருக்கும். ஈச்சன்கோட்டையில் வளர்க்கப்படும் பூச்சிகள் வெயில் காலத்தில் இறந்துவிடும் என்று கருதப்படுவதால் இந்தப் பூச்சிகளை வளர்க்கும் திட்டத்தை ஊட்டி அல்லது கொடைக்கானலுக்கு மாற்றுவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் முதலில் குறிப்பிட்டேன் இது ஆராய்ச்சி நிலையில் இருக்கிறதென்று. It is known that silk worm crops can be successfully grown only in certain cooler months of the year. என்ற கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. குளிர்ச்சி நிலை வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஆராய்ச்சி நிலையில் இங்கே பயன்படுகிற நிலை, வளரும் நிலை இருந்தால் மேலும் பயன்படுத்தலாமா என்று ஆராயப்படுகிறது. தோல்வி ஏற்பட்டால் உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல இதைவிட தட்பம் நிறைந்த பகுதிக்கு மாற்றப்படும். இதுவே பலன் தருமானால் விரிவுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும். இப்போது ஆராய்ச்சி கட்டத்தில் இருக்கிறது.



1968 மார்ச் 15]

திரு. செ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, டெரிலின் போன்ற செயற்கைப் பட்டுகள் மலிவான விலையில் கிடைக்கும் இந்த நேரத்தில் ஈச்சன்கோட்டை போன்ற இடங்களில் பட்டுப்பூச்சி வளர்ப்பதை அதிகப்படுத்துவது லாபம் என்று அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதிகப்படுத்தும் முயற்சி இப்போது இல்லை. ஆராய்ச்சி அளவில்தான் இருக்கிறது. வருகின்ற முடிவைப் பொறுத்து மேற்கொண்டு முடிவு எடுக்கப்படும்.

## அரசுப் போக்குவரத்துத் துறை

* 220 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இந்த ஆண்டு ஆடிட் ரிப்போர்ட்டில் கூறப்பட்டுள்ளபடி அரசாங்க பஸ் போக்குவரத்திற்கு சுமார் ரூபாய் 35 லட்சம் நஷ்டம் ஏற்படக் காரணம் என்ன என்பதைப் பரிசீலனை செய்ய உத்தேசம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதைப்பற்றிய முழு விவரம் சட்டமன்றத்தில் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) & (இ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம்: சார், போன ஆண்டு 35 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. அந்த நேரத்தில் நஷ்டத்தைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்டால் The conditions detailed above are such that no remedial measures can be taken by the department. இந்த நஷ்டத்தைப் போக்குவதற்கு எந்தவிதமான முயற்சியும் எடுக்கமுடியாது, எடுத்தாலும் நஷ்டம்தான் வருமேதவிர லாபம் வராது என்று அறிக்கை கூறுகிறது. அதுதான் அரசாங்கத்தின் முடிவா? அப்படியானால் ஏன் இப்படி இந்தப் பேருந்து வண்டிகளை எல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தக் கேள்வி, தேசியமயமாக்கப் படுகின்ற கொள்கையை இதிலிருந்து விட்டுவிடலாம் என்ற யோசனையை திரு. விநாயகம் அவர்கள் இந்த அமைச்சரவைக்கு விடுகிற தோரணையிலே அமைந்திருக்கிறது. அது அவருடைய தனிப்பட்ட கொள்கையானாலும் அல்லது அவருடைய கட்சியின் கொள்கையானாலும் நான் அதுபற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் நகரத்தில் ஓடுகின்ற பேருந்துகளில் ஏன் நஷ்டம் ஏற்படுகின்றன, அவை எப்படி தவிர்க்கும்படியான அளவுக்கு இருக்கின்றன என்பதற்கான விவரங்கள்தான் இந்த அறிக்கையில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்தை எப்படி ஈடு செய்யமுடியும் என்று கருதுகிறது என்றால் வெளியூர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட பஸ்களை அதிகமாக விடுவதன் மூலம், அத்தகைய பஸ்களை அதிகமாக்க அதிகமாக்க, அவை இந்த நஷ்டத்தை ஈடுகட்டும் என்று எண்ணுகிறது. நகரத்தில் என்ன என்ன இடர்ப்பாடுகள் இருக்கின்றன. எவை எவை நஷ்டம் ஏற்படும் நிலையில் இருக்கிறது என்பதை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சி முடிவுற்று விடவில்லை. இன்னும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறது.

@ 255-259-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1968 மார்ச் 15

**திரு. நா. காசிராமன் :** இதில் குறிப்பிட்டுள்ள பல காரணங்களை சென்ற வருஷம் மோட்டார் வாகன வரி உயர்த்தும்போது நான் சொன்னேன். ஆனால் டௌன் சர்வீஸ் பஸ்களில் அப்படி நஷ்டம் வராது என்று சொல்லி ஒரு நாளைக்கு 250 ரூபாய் கூடுதல் வருமென்று சொன்னார்கள். மைலேஜ் 250 கூடுதல் இருப்பதாகவும் சொன்னார்கள். இப்பொழுது செலவுகள் அதிகமாகி நஷ்டம் ஏற்பட 5, 6 காரணங்களில் காஸ்ட் ஆஃப் ஃப்யூயல் என்று போடப்பட்டு இருக்கிறது. சென்னையில் ஓடுகிற பஸ்களைப் பார்த்தால்............ நான் குற்றம் சொல்வதாக எடுத்துக் கொள்ளவேண்டாம், திருத்துவதற்கான ஒரு வழியாகத்தான் சொல்ல ஆசைப்படுகிறேன்.. . வார் ஃப்ரண்டுக்கு போவது போல ஸ்மோக்—ஸ்க்ரீன் ஸ்மோக்கை போட்டுக் கொண்டு போகிறது. டீசல் ஆயில் ஒழுகுகின்றது இவற்றைக் கவனித்து நிறுத்தினால் மிச்சம் ஏற்படுமே, ஆகவே, டீசல் ஆயில் கன்சம்ஷனைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தால் லட்சக்கணக்கான ரூபாய்கள் மிச்சம் ஏற்படுமே. இதைச் செய்ய அரசு முற்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வி அந்தப் பேருந்துகளை ஓட்டிச் செல்பவர்களின் கவனத்தை ஈர்க்கும் என்று கருதுகிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** முன்பு அரசினர் போக்குவரத்தில் ஏற்பட்டு வந்த நஷ்டம் எவ்வளவு ? இப்போது ஏற்படுகின்ற நஷ்டம் எவ்வளவு ?

**மண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த விவரங்களை நாளையத் தினம் மானியக் கோரிக்கை மீது விவரமாகச் சொல்லப்படும்.

**திரு. என். வரதராஜன் :** பொதுவாக பஸ் போக்குவரத்து லாபமான ஒரு தொழிலாக கருதப்படுகிற இந்த காலத்தில் நமக்குப் பக்கத்தில் உள்ள அண்டை மாநிலங்களில் இவ்வாறு லாபகரமாக இருக்கக்கூடிய ஒரு தொழிலில் நம் மாநிலத்தில் நஷ்டம் என்ற நிலை ஏற்படுவது பரிசீலனைக்குரிய ஒரு விஷயமாக இருப்பதால் ஒரு கமிஷனை அமைத்து விவரங்களைத் தெரிந்துகொள்ள அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அண்டை மாநிலங்களில் லாபகரமாக இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எந்த மாநிலத்தை அவர்கள் மனதில் வைத்துக்கொண்டு பேசுகிறார்கள் என்று தெரியும், கேரளா என்று கருதுகிறேன். கேரளா மாநிலத்தில் லாபம் வருவதாக சொல்லப்படுகின்ற அளவுக்கு, அவர்கள் கருதுகிற அளவு தொகை அல்ல. அது லட்சக்கணக்கில்தான் இருக்கிறது. கோடிக்கணக்கில் என்று பத்திரிகைகளில் விவரங்கள் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். லட்சக்கணக்கில்தான் லாபம் வருகிறது. ஒரு வித்தியாசத்தை நாம் மறந்துவிடக்கூடாது. திருவனந்தபுரம் நகரத்தில் ஓடுகிற பஸ்கள் 120, 130 தான். வெளியூர்களுக்கு ஆயிரக்கணக்கான பஸ்கள் ஓடுகின்றன. அதற்கு மாறாகத் தமிழ்நாட்டில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பஸ்கள் நகரத்திலும் வெளியூர்களில் நூற்றுக்கணக்கிலும்தான் ஓடுகின்றன என்பதை மறந்து விடுவதற்கில்லை. கமிஷன் நியமிப்பது பற்றி அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்த நஷ்டத்தைச் சரிப்படுத்துவதற்குப் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் என்னென்ன திட்டங்களையும் முயற்சிகளையும் செய்து வருகின்றது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைத்தான் ஏற்கனவே சொன்னேன், அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது என்று. அதற்காக சில குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றை ஆராய்வதற்கான நிலையை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.



1968 மார்ச் 15]

**திரு. கே. என். குமாரசாமி :** சார், சர்க்காருக்கு பஸ் துறையில் நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் டிரைவர்கள் தனியார் துறையில் நன்கு கவனித்து ஆட்களை சேகரித்துக்கொண்டுபோவதுபோல் சர்க்கார் துறையில் செல்வது இல்லை. அவர்கள் அந்த நிமிஷத்தில்தான் பஸ்களை எடுத்துக்கொள்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு கலெக்ஷன் பாட்டா கொடுப்பதன் மூலம் ஓரளவுக்கு கலெக்ஷனை அதிகமாக்கச் செய்வதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது, இதன்பேரிலும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுபற்றி முன்பே யோசித்துக் கொண்டிருக்கிறது. இந்த யோசனை பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, நகரப் பேருந்து வண்டிகளில் நஷ்டம் வருவதற்குக் காரணம்—நான் நினைக்கிறேன்—பேருந்துகளில் கட்டணம் வசூலிப்பவர் ஒருவராகத்தான் இருக்கிறார். மூன்று தினங்களுக்கு முன்னர் நான் திருவல்லிக்கேணியிலிருந்து எம். எல். ஏ. ஹாஸ்டலுக்கு இந்தப் பேருந்து வண்டியில் வரும்போது, பின்பக்கம் இருந்த 4 சீட்களில் கட்டணம் வசூலிக்க அந்த இடத்திற்கு கண்டக்டரால் வரமுடியவில்லை. அதற்குள் இறங்கும் இடம் வந்துவிடுகிறது டிக்கட் எடுக்காமலே இறங்கிவிடுகிறார்கள். இதை நான் நேரிடையாக கண்டேன். ஆகவே, ஒரு பஸ்ஸுக்கு இரண்டு கண்டக்டர்களைப் போட்டால் ஓரளவுக்கு நஷ்டம் குறையலாம். இதை அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்களுக்கு கொடுக்கிற சம்பளம் போனஸ் ஆகிய இந்தச் சலுகைகளையெல்லாம் கவனித்தால் இன்னும் நஷ்டம் பெருகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நாளைய தினம் இந்த மானியக் கோரிக்கை மீது கருத்துக்களைக் கூற வாய்ப்பு இருப்பதால் நான் அடுத்த கேள்விக்குப் போகிறேன்.

**THIRU K. VINAYAKAM :** On a point of personal explanation.

நானோ அல்லது என் கட்சியோ ஏதோ தேசீயமயமாக்கப்படுவதற்கு விரோதமாக இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது சரி இல்லை. எங்கள் கட்சிதான் முதலில் தேசீயமயமாகியது. இதற்குப் பிறகுதான் ~~நீங்களும்~~ தொடர்ந்து நடத்துகிறீர்கள். நாங்கள் ஏதோ விரோதமாக இருக்கிறோம் என்பதல்ல. நஷ்டத்தைத் தடுப்பதற்கான முயற்சி இருக்கிறதா, முயற்சி இல்லையென்று சொன்னால் திரும்பவும் அதையே செய்வதில் என்ன லாபம் என்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** அவர்களுடைய கேள்வி நஷ்டம் வரும்போது தேசீயமயமாக்கி என்ன பயன் என்று கேட்டார்கள். அந்தக் கேள்விதான் என்னை அவ்வாறு நினைக்கத் தூண்டியது. அவர் கட்சிக்கு அந்தக் கொள்கை இல்லை, தேசீயமயமாக்கப்படவேண்டாம் என்ற கொள்கை இல்லை என்பதற்கு அவர்கள் விளக்கம் அளித்ததற்கு நன்றி. பத்திரிகைகளில் இது தவறாக வந்துவிடுமோ என்று அச்சப்பட்டிருக்கிறார்கள். அவருடைய கட்சி அரசாங்கம்தான் தேசீயமயமாக்கியது என்று குறிப்பிட்டார்கள். இப்போது ஆக்கப்படுவதுதான் முழுமையான தேசீயமயமாகும். தேசீயமயம் என்பது பெயரில், அது கொஞ்சம் நயம்.

**DR. H. V. HANDE :** Sir, my Party of twenty members has not been given the opportunity of putting even one supplementary question on this important issue.

[1968 மார்ச் 15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பொதுவாக, 10, 20 துணைக் கேள்விகளுக்குமேல் நான் அனுமதித்திருக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister in his reply has stated that as far as the Madras City is concerned, it is running at a loss. But in the Bombay City, a bigger City than the Madras City with great complications than those listed in the Paper placed on the table of the House, it is getting on well. The average vehicle mileage done in the Madras City during 1965–66 was 137 whereas, according to the Hon. Minister, the economic mileage is 146 miles. That means that it is nearly 9 miles less than the economic mileage. For that a number of reasons are given but those reasons are flimsy. In the Bombay City they are having profit. . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கனம் உறுப்பினர் அவர்கள் முதலிலேயே ஒன்றைத் தெரிந்துகொள்வது நல்லது. பம்பாயில் நகரப் போக்குவரத்துமூலம் லாபம் வருவதாகச் சொன்னார்கள். நான் அதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே பம்பாய் போயிருந்தேன். பம்பாய் நகர மேயருடன் பேசினேன். அங்கும் நட்டம்தான் வருகிறது. நமக்கு லட்சக்கணக்கில் நட்டம் என்றால் அவர்களுக்கு கோடிக்கணக்கில் நட்டம்.

DR. H. V. HANDE : Sir, on the one hand we are having heavy losses which are increasing in arithmetic progression and on the other hand dissatisfaction is also piling up—I am not speaking about the loss. So, will the Hon. Minister reconsider the whole matter?

(No reply)

### சாணிப்பட்டியருகில் பெரியருவி ஆற்றின் குறுக்கே பாலம்

* 221—வினு. **திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா.—

மேலூர் வட்டம், சாணிப்பட்டிக்கு அண்மையில் ஓடும் பெரியருவி ஆற்றின் மீது பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்தப் பாலம் கட்டப்பட வேண்டுமென்னும் வேண்டுகோள் குறித்து ஆராயப்பட்டது. ஆனால் இப்பணி நான்காம் திட்டம்வரையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களில் சேர்க்கப்படவில்லை. நிதி நிலை சீர் பெறும்போது, பின்னால் இது குறித்து ஆலோசிக்கப்படும்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்த ஆற்றைக் கடந்து பல பேருந்து வண்டிகள் செல்கிற காரணத்தால் மழை காலங்களில் தடங்கல் ஏற்படுகிறது. தற்போது பெரிய பாலமாகக் கட்ட முடியாவிட்டாலும் சிறிய பாலமாவது கட்ட அனுமதி வழங்கப்படுமோ என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு கேள்விக்கு, 2 பாலங்கள் கட்டப்பட்டு வருவதான மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொன்னேன். அதோடு அவர் திருப்தி அடைந்திருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1968 மார்ச் 15]

### *Mohini allowance*

* 222 Q.—THIRU K. VINAYAKAM, THIRU N. KASIRAMAN } Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the action taken by the Government regarding the revision of "Mohini allowance" to certain temples, as recommended by the Committee on Estimates?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** புதிதாக அமைக்கப்பட்ட இந்து சமய—அறக்கட்டளைகள் (நிர்வாகத்) துறை ஆலோசனைக்குழு கோயில்களுக்கு அளிக்கப்படும் மோகினிப் படியைத் திருத்தியமைக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தது. அரசு இந்தக் கருத்தை ஆராய்ந்து பார்த்து, மோகினிப் படியை உயர்த்தவேண்டாம் என்று முடிவு செய்தது. மதிப்பீட்டுக் குழுவும் பின்னர் இதற்கொப்ப ஒரு கருத்தைக் கூறியது. வருவாய்த் துறை வாரியத்தைக் கலந்தாலோசித்து அரசு தற்போது இதனை ஆராய்ந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மோகினிப் படி என்றால் என்ன என்று விளக்கவேண்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. The Chair can never put a question.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அதை விளக்கிவிடும்படியாகத்தான் சொன்னேன்.

**திரு. கே. விநாயகம்:** இந்தப்படிக்கு மோகினி, ரம்பை, ஊர்வசி என்று பெயர் எப்படி வந்தது. இந்த மோகினி எங்கே இருந்து வந்தாள்? (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தோற்றத்திற்கு இது மற்ற கற்பனையைத் தூண்டிவிட்டாலும் தேவாலயங்களுக்குக் கொடுக்கப்படுகிற மானியமாகும். 19-ஆம் நூற்றாண்டில் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை வெள்ளைக்கார அரசாங்கம் எடுத்துக்கொண்டபோது, அதற்கு ஈடுகட்ட இப்படி மானியம் கொடுத்து வந்தார்கள். அப்போதிருந்த விலைவாசிகள் நிலைமை, ரூபாயின் மதிப்பு இவற்றைக்கொண்டு 19-ஆம் நூற்றாண்டில் இந்த மானியத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. இப்போது அப்படிக் கொடுப்பது என்பதில்லை. எனக்குத் தோன்றுவது. ஸ்ரீரங்கம் ரங்கநாதர் மோகினிவேஷம் போட்டுக் கொண்டதன் அடிப்படையில் ஒரு இரவு அந்த சுவாமிக்கு அப்படி வேஷம் போட்டே உற்சவம் நடத்துகிறார்கள். அந்த அடிப்படையில் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட இந்த மானியம் மோகினி மானியம் என்று பெயர் பெற்றிருக்கக்கூடும். பெண் யாருக்கும் கொடுக்கப்படுகிற மானியம் அல்ல இது. தேவாலயங்களுக்குக் கொடுக்கப்படுகிற மானியம்.

**திரு. நா. காசிராமன்:** இப்போது பல கோயில்களில் செலவுக்குப் பணம் இல்லை. குத்தகை பாக்கியும் விழுந்துவிடுகிறது. வசூல் செய்ய முடியவில்லை. ஆகவே மோகினி மானியப் பணத்தைக் கோயில்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அறநிலையக் கட்டளை இலாக்கா இதைக் கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்ததற்கு முன்பு இருந்த நிதி இலாக்கா காரியதரிசியும் இப்போதுள்ளவரும் தேவையில்லை என்று எழுதிவிட்டார்கள். இப்படி மோகினி மானியம் என்று கொடுக்க ஆரம்பித்தால் அதற்கு முடிவே இருக்காது என்று தள்ளிவிட்டார்கள். ஸ்ரீரங்கநாதர் கோயிலில் இருந்து அவை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வந்தது. திரு டி.எம். நாராயணசாமி பிள்ளை அவர்களைப் போட்டு இதைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டுமென்ற நிலைமை கூட இருந்தது. ஸ்ரீரங்கநாதர் கோயிலில் திரும்ப அதை வற்புறுத்த

வில்லை. இருந்தாலும் எஸ்டிமேட் கமிட்டிகூட இதுபற்றி சிபார்சு செய்திருப்பதால் இதுபற்றி வருவாய்த்துறையுடன் அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது.

**திரு கே. இர. ஞானசம்பந்தன்:** மோகினிப் பணம் என்று இருப்பது போல ரம்பைப் பணம், ஊர்வசிப் பணம் என்று இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினருடைய கற்பனையை விரித்துக்கொண்டே போவது நல்லதல்ல.

**திரு என். மருதாசலம்:** மோகினிப் படி எந்த எந்தக் கோயில்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அதுபற்றிய விவரம் தற்போது இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** ஸ்ரீரங்கநாதர் மோகினி வேஷம் போட்டுக் கொண்டதால் மோகினிப் படி கொடுக்கப்படுகிறது என்பதனால் இதை வைஷ்ணவக் கோயில்களுக்கு மட்டும் கொடுப்பதுபற்றி சர்க்கார் ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ரங்கநாதர் பெண் வேஷம் போட்டு சிவனைத்தான் மயக்கினார். ஆகவே சிவன் கோயில்களுக்கும் கொடுக்கலாம். (சிரிப்பு.)

## தீ விபத்துக்களினால் இழப்பு

*223—வினா. **திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 1957 முதல் 1966 வரை நமது ராஜ்யத்தில் தீப்பிடித்துபற்றி எரிவதன் மூலமாக வருடா வருடம் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது?

(இ) அதற்காக சர்க்கார் எவ்வளவு நஷ்ட ஈடு கொடுத்தது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) & (இ) 1957-ம் ஆண்டிலிருந்து 1966-ம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகளுக்கு, தீ விபத்துக்களின் காரணமாக இழக்கப்பட்ட தொகையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட இடர் உதவித் தொகையும்பற்றிய புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | தீ விபத்துக்களின் காரணமாக இழக்கப்பட்ட தொகை. | அளிக்கப்பட்ட இடர் உதவித் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1957 | 12,55,346 | 1,96,569 |
| 1958 | 6,84,074 | 1,25,917 |
| 1959 | 7,25,361 | 2,77,743 |
| 1960 | 11,04,392 | 4,06,893 |
| 1961 | 10,20,182 | 3,55,428 |
| 1962 | 12,54,688 | 2,97,852 |
| 1963 | 16 01,411 | 3,22,230 |
| 1964 | 20,74,599 | 3,68,448 |
| 1965 | 53,18,343 | 5,70,512 |
| 1966 | 27,79,158 | 3,56,061 |
| மொத்தம்.. | 1,78,17,554 | 32,78,653 |



இப்படி கடந்த பத்தாண்டுகளில் தீ விபத்துக்களின் காரணமாக மொத்தம் 1,78,17,554 ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்காக அளிக்கப்பட்ட உதவித் தொகை கடந்த பத்தாண்டுகளில் மொத்தம் ரூ. 32,78,653 ஆகும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், இந்தக் கோடிக்கணக்கான ரூபாய்கள் எல்லாம அரசாங்க அதிகாரிகள் கொடுக்கக்கூடிய புள்ளி விவரம. அது எந்த அளவுக்குச் சரி அல்லது சரியல்ல என்பது வேறு விஷயம். ஆகவே இப்பேர்ப்பட்ட ஏழை மக்களுக்கு ஆறில் ஒரு பகுதி அல்லது ஏழில் ஒரு பகுதி கொண்ட நஷ்டஈடு கொடுக்கப்படுகிறது. இது போனாலும் மேலும் தீ விபத்துக்கள் ஏற்படாத அளவுக்குத் திட்டமிட்டு தீ அணைப்பு நிலையங்களை அதிகப்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** புதிய அரசு வருவதற்கு முதலிலே கேஷ் கிராண்ட் ஆக 30 ரூபாயும் துணிமணிகளுக்காக 10 ரூபாயும் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது புதிய அரசின் ஆணைப்படி குடிசைகளைச் சீரமைத்துக்கொள்வதற்காக கொடுக்கப்பட்ட 30 ரூபாய் 60 ரூபாயாகவும், துணிமணிக்காகக் கொடுக்கப்பட்ட 10 ரூபாய் 20 ரூபாயாகவும உயர்த்தப்பட்டு முன்னால் 40 ரூபாயாகக் கொடுக்கப்பட்டது இப்பொழுது 80 ரூபாயாக ஆக்கிக் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் பல இடங்களிலே ஏற்படுகின்றன. கிராமங்களிலே அஜாக்கிரதை காரணமாக ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கும் பெரு நகரங்களிலே ஏற்படுகின்றவற்றைத் தடுக்கவும் தமிழக அரசு எடுத்துக்கொண்டு வருகின்ற முயற்சிகளை இந்த மன்றம் அறியும்.

**திரு. முனு ஆதி:** தலைவர் அவர்களே, 1957-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரை எத்தனை தீ விபத்துக்கள் நடந்தன என்ற புள்ளி விவரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** 1957 முதல் 1966-ஆம் ஆண்டு வரை மொத்தம் 20,803 தீ விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன.

**திரு. எம். சுரேந்திரன்:** தீ விபத்துக்களினாலே நஷ்டம் அடைந்தவர்களுக்கு உதவித் தொகை என்ன அடிப்படையில் அளிக்கப்படுகிறது? நஷ்டத்தில் எவ்வளவு சதவீதம் அளிக்கப்படுகிறது என்பதற்கு விதி முறைகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பொதுவாக மாத வருமானம் 50 ரூபாய்க்கு குறைவாக வருகிறவர்களுக்கும் 10 ரூபாய்க்குக் குறைவாக கந்தாயம் கட்டுகிறவர்களுக்கும் அந்த அடிப்படையில்தான் ஏழை மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி:** சென்னையில் தீ விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்போவதாகச் சொல்லப்பட்டதே அது எப்பொழுது கட்டிக் கொடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை.

**திரு. ப. மகாதேவன்:** நெருப்புப் பிடித்து வீடுகள் எரியும்பொழுது ஏழை மக்கள் வைத்திருக்கக்கூடிய ரூபாய் நோட்டுக்கள் 100 ரூபாய் நோட்டுக்கள்கூட சில சமயங்களில் எரிந்துவிட்டால், அவற்றில் நம்பர் இருக்கும்படியான நிலைமை இருந்தால்கூட ரிசர்வ் பாங்கில் கொடுத்தால் ஈடு செய்ய முடியாத நிலைமை இருக்கிறதே, அதற்கு ஈடு செய்ய ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** குறிப்பிட்ட சம்பவங்களைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் சர்க்கார் தன்னாலான உதவியைச் செய்யும்.

தயாரிக்கப்பட்டு வருவதாக அறிவித்தார்கள். அந்தத் திட்டமானது கட்டாயப் பயிர் பாதுகாப்புத் திட்டமாக உருவாக இருக்கிறது. அதற்கு முன்னோடித் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று பாராளுமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். அங்கே நிறைவேற்றப்பட்ட பிறகு நாங்களும் அதை நிறைவேற்றுவதிலே எந்த விதமான சங்கடமும் இருக்க முடியாது. ஆகவே கைவிட்டுவிட்டதாக அவர்கள் குறிப்பிட்டதற்கு அவர்களுடைய மனப்பான்மைதான் காரணம்.

முற்பகல் 10-00 **திரு. முனு ஆதி:** தலைவர் அவர்களே, சிறு தானியப் பயிர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை இனிமேலாவது கொண்டு வர உத்தேசம் உண்டா? 1967 ஜூன் 5-ம் தேதியன்று மத்திய அரசாங்கம் இந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டம் குறித்து ஏதோ முடிவு செய்ததாகச் செய்தி வந்ததே அதன் விவரங்கள் என்ன?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** திரு. வினாயகம் அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லும்போதே குறிப்பிட்டேன். சிறு தானியப் பயிர்களுக்குப் பயிர் காப்புறுதி திட்டத்தைக்கொண்டு வருவதுபற்றி வேளாண்மைத்துறை நெறியாளர் அவர்கள் ஆராய்ந்து அதற்கு வேண்டிய சில புள்ளி விவரங்களை எல்லாம் சேகரித்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டைப் பொருத்தவரையில், அதனை அமலாக்கலாமா என்பது குறித்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கம் சட்டத்தை நிறைவேற்றியதும் சிறு தானியங்களைப் பொறுத்தவரை அந்தத் திட்டத்தை அமல் நடத்திப் பார்க்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றாததற்கு முன்பு இருந்தவர்கள் சொல்லியிருக்கின்ற காரணம், பருவ மழை இப்போது தவறி விடுகிறது. பருவ மழை தவறாமல் இருக்கும்போது இந்தத் திட்டத்தைக் கொண்டு வரலாம் என்பதாகும். ஆனால் பருவ மழை தவறும்போதுதான் விவசாயிக்கு உதவி செய்ய வேண்டியது அவசியம். அத்தகைய காரணத்தை முன்பு இருந்தவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை மத்திய அரசு செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி இருந்தாலும்கூட இந்த அரசைப் பொறுத்தவரை, அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி மிகத் தீவிரமாகப் பேசி வந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைப் பற்றி மத்திய சர்க்காரிடம் வலியுறுத்துவதற்கு என்ன நடவடிக்கைகளை இதுவரை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** ஏற்கெனவே இருந்தவர்கள் (காங்கிரஸ் அரசு) இந்த திட்டத்தைப்பற்றிப் பரிசீலனைசெய்து நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தியும், மத்திய அரசு இதைப்பற்றி ஆராய்ந்து வருவதாகவே கூறி வந்திருக்கிறார்கள். புதிய அரசு இந்தத் திட்டத்திற்கு எதிர்பாக இல்லை. மத்திய அரசை இன்றும் வற்புறுத்துவோம், நாளையும் வற்புறுத்துவோம், இந்தத் திட்டம் வருகின்ற வரையில் வற்புறுத்துவோம்.

**திரு. ஆர். கருப்பையா:** மழை குறைவாக இருந்தால் மட்டுமல்லாமல் மழை அதிகமாகப் பெய்து விட்டாலும் பயிர்கள் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் அப்போதும் இந்தப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் வேண்டும். ஆகவே, இந்தத் திட்டத்தை ஏதாவது ஒரு மாவட்டத்திலாவது பரிட்சார்த்தமாக எடுத்து நடத்துவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசு விவசாயிகள் நலனை முன்னிட்டு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மழை குறைந்தாலும், மழை அதிகமானாலும் பயிர்கள் பாதிக்கப்படும். இந்த நிலைமைகளைப்பற்றியெல்லாம் மத்திய அரசுக்குத் தெரிவித்து அந்தத் திட்டத்தைக்கொண்டு வருவது பற்றி வலியுறுத்தி வருகிறோம்.





**திரு. ந. வீராசாமி:** நெற்பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக்கொண்டு வரும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தின் கீழ் இருந்தாலும், மோட்டார் இன்ஷூரன்ஸை தனியார் துறையினர் நடத்துவது போல் நெற்பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தையும் தனியார் துறையினர் எடுத்துக்கொள்ள முன் வந்தால் அந்த வகையில் இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** இன்ஷூரன்ஸ் என்பதே மத்திய அரசாங்கம் நிறைவேற்றவேண்டிய ஒன்று. தனியார் துறையினர் நடத்துவதாக இருந்தாலும், அரசாங்க சார்பில் நடத்துவதாக இருந்தாலும் மத்திய அரசாங்கம் அனுமதிகொடுத்தாலொழிய நடத்த முடியாது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Crop Insurance is a very good and useful thing to agriculturists. So, will our Government write to the Central Government to constitute a Committee consisting of Agriculture Ministers of all States and thus come to a common decision?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அதற்காக கமிட்டி நிறுவவேண்டிய அவசியம் இடையாது. மத்திய அரசாங்கத்திற்கு ராஜ்ய அரசாங்க சார்பில் வற்புறுத்தப்படும்.

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்

* 226 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜீப்புகள் வழங்கப்படாத ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Primary Health Centres) மாலை நேரங்களிலும் செயல்படச் செய்யும் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** ஜீப் இல்லாத பிரைமரி சென்டர்களில் மாலை நேரங்களில் டாக்டர்கள் வந்து பார்ப்பதில்லை. அப்படி ஜீப் இல்லாத பகுதிகளிலாவது இருக்கின்ற பிரைமரி ஹெல்த் சென்டர்களை மாலை நேரங்களில் திறந்து வைக்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஜீப் இல்லாத இடங்களில் பஸ்களில் சென்று சப்-சென்டர்களைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று விதி இருக்கிறது. எங்கெங்கு டாக்டர்கள் அவ்வாறு நடக்கவில்லையோ அங்கெல்லாம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி.எஸ்.எஸ். மணி:** இன்று ஒரு பிளாக்குக்கு ஒரே ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர்தான் இருக்கிறது. மக்கள் தொகை அடிப்படையில் பார்த்து மேலும் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டரை ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ஜே. எஸ். இராசு:** தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்காக ஏற்கனவே தக்காவி பணத்திலிருந்து கொடுக்கப்பட்டது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது, அதுபோன்று மீண்டும் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சீமைச்சாமி அவர்கள் கேள்விக்குச் சொன்ன பதிலையே இதற்கும் சொல்கிறேன்.

**திரு. டி.எஸ். ஆதிமூலம்:** உதவித் தொகை 40 ரூபாயை 80 ரூபாய் ஆக்கியிருப்பது நல்ல அம்சம்தான். இருந்தபோதிலும் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் ஏழைகள்தான், அவர்களுக்கு உதவித் தொகை கொடுத்தாலும் அதற்காக ரெவின்யூ அதிகாரி ஒருவரைப் போட்டு பாதிக்கப்பட்டவை எவ்வளவு என்று அஸெஸ்மெண்ட் கணக்கு எடுத்து அதிலிருந்து கணிசமான தொகை கொடுப்பதற்கும் அரசாங்கம் யோசனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அவர்கள் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு தக்காவிலோன் என்ற முறையிலே கடன் வாங்கி சீர்திருத்திக்கொள்ளலாம்.

**திரு. ரா. ராமச்சந்திரதுரை:** துணைத் தலைவர் அவர்களே, தீ விபத்து ஏற்பட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் நஷ்டஈடு தொகையைவிட, புயலால், மழையினால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் நஷ்டஈடு குறைவாக, அதில் பாதியாகத்தான் இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? தீ விபத்து ஏற்பட்டதினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற தொகையையே அவர்களுக்கும் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

(பதில் இல்லை)

**திரு. வி. டி. அண்ணாமலை:** தீ விபத்துக்கள் கிராமப் பகுதிகளிலே நேரிடுகின்ற காரணத்தினாலே, சென்னையிலே வீடு கட்டிக்கொடுப்பதைப் போல கிராமங்களிலும் கட்டிக்கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

(பதில் இல்லை)

**திரு. வி. எஸ். கோவிந்தராஜன்:** தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் 50 ரூபாய் வருமானத்திற்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களாக இருந்தால் உதவித் தொகை அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். 50 ரூபாய் என்பது மிகவும் குறைந்ததாக இருக்கிறது. அப்படிக் குறைந்திருப்பதால் பலர் உதவியைப் பெறமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அதை உயர்த்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** 50 ரூபாய் என்று விதிமுறை இருக்கிறது. அதைப்பற்றி பரிசீலிக்கின்ற நேரத்திலே அதிகாரிகள் தாராளமாக நடந்துகொள்ளுகிறார்கள்.

## பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம்

***224. வினா.—திரு. கரு சீமைச்சாமி :**
**திரு. கே. விநாயகம் :**
**திரு. க. இராமமூர்த்தி :**
**திரு. ஆர். கருப்பையா :**
} மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வருவதைக் கொள்கையளவில் சென்னை அரசு ஒப்புக்கொண்டிருக்கிறதா?

(ஆ) ஆம் என்றால் அதன் விபரம் என்ன?



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்த திட்டம் மிக முக்கியமான திட்டம். விவசாயிகளுக்கு மழையினாலும், பூச்சியினாலும் பயிர்கள் பாதிக்கப்படுவதால் பாதகம் ஏற்படுகிறது. அந்த நஷ்டத்திலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக இது முக்கியமான திட்டம் ஆக இருக்கிறது. ஆகவே மத்திய சர்க்கார்கூட இதை மாநில சர்க்கார் ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது சம்பந்தமாகப் பரிசீலிக்க ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி போட்டு ஆராய அரசாங்கம் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பயிர் காப்புறுதித் திட்டமானது மத்திய அரசாங்கம் நிறைவேற்றவேண்டிய சட்டம். அது சம்பந்தமாக பயிர் காப்புறுதி வரைவுத் திட்டத்தில் அவசியமான நிதிகளை மாநில அரசு சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தெரிவித்தார்கள். ஆனால் பொதுமக்கள், விவசாயிகள், கல்வியறிவு பெற்றிராத காரணத்தினாலே பயிர் காப்புத் திட்டத்தை உணர்ந்து செயல்படுவார்களா என்ற சந்தேகம் இருந்த காரணத்தினாலே, அதை செயல்படுத்தாமல் விட்டுவிட்டார்கள். அதற்குப் பிறகு சிறுதானிய பயிர்கள் சம்பந்தமாகப் பயிர் காப்புத்திட்டம் ஒன்று வேளாண்மை நெறியாளர் அவர்களால் ஆராயப்பட்டு தமிழ்நாட்டிலே தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் புஞ்சை நிலங்களிலே பயிராகின்ற சோளம் கம்பு, கேழ்வரகு இவற்றிற்கு முதலில் பயிர்காப்புத் திட்டம் செய்வதற்காகப் புள்ளிவிவரங்களை ஆராய்ந்தார்கள். அதற்கு வேண்டிய முழு விவரங்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. கே. விநாயகம்:** இந்த கிராப் இன்ஷூரன்ஸ் ஸ்கீமைப் பொறுத்த வரையில் இப்பொழுது எதையும் ஆராயவில்லை என்று சொல்கிறார்கள். இந்த கட்சி எதிர்க்கட்சியாக இருந்தபொழுது அப்போதே இந்த கிராப் இன்ஷூரன்ஸ் ஸ்கீமைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அமைச்சர் ஆக இருக்கிறவர்களே அப்பொழுது என்னுடன் இருந்தார்கள். அப்பொழுது சொன்னதாக ஞாபகம் இருக்கிறது. அவர்கள் இனிமேலாவது இப்படிப்பட்ட உருப்படியான திட்டங்களை ஆராய்ந்து நிறைவேற்ற ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் விநாயகம் அவர்கள் நான் சொன்னதையும் பேசியதையும் ஞாபகப்படுத்தினார்கள். அதற்காக நன்றி. 1949-லே இந்தத் திட்டம்பற்றி பொருளாதார நிபுணர் அப்போது இருந்த அரசுக்கு ஆலோசனை சொன்னார்கள். அதன்படி 10-7-1950-ல் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டு நில உடமையாளர்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையே உள்ள எதிர்கால அமைப்பில் இது சம்பந்தமாக ஏற்படக்கூடியவற்றை ஆராய்கின்ற முறையில் நிலக் குழுவிடம் அந்தத் திட்டத்தை அனுப்பவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அவர்கள் தீர்மானித்த ஷரத்துக்களையெல்லாம் மீண்டும் அரசுக்கு அனுப்பினார்கள். அப்பொழுது அதை நிறைவேற்றுவதற்கு சாத்தியமில்லை. 1950-லே இருந்த அரசாங்கம்தான் முடிவுசெய்தது. இருந்தாலும்கூட இதை நாம் ஒரு சட்டமாக ஆக்க வேண்டிய முறையில் அடிப்படையை வகுத்து வைத்துக்கொள்ளலாம் என்ற அளவில் சட்ட இலாக்காவிற்கு புள்ளி விவரங்கள் சேகரிப்பதற்காக அனுப்பிவைத்தார்கள். அப்பொழுது இருந்த சட்ட இலாக்கா இதை மத்திய அரசாங்கம்தான் நிறைவேற்றவேண்டும். ராஜ்ய அரசாங்கம் நிறைவேற்றுவது இயலாது என்று கருத்துத் தெரிவித்தார்கள். ஆகவே நாங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு முன்பே இந்த ராஜ்யம் நிறைவேற்றக்கூடிய சட்டம் அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். 26-7-1966-லே துணை உணவுத்துறை அமைச்சர் மிஸ்ரா அவர்கள் இதற்காக வேண்டிய சட்டம்

[1968 மார்ச் 15

## கைக்குத்தலரிசி சங்கங்கள்

* 227 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் 1966–67-ம் ஆண்டில் கைக்குத்தலரிசி தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டவை எத்தனை?

(இ) அவைகளுள் ஹரிஜனங்களுக்கென நிறுவப்பட்டவை எத்தனை?

(உ) 1967–68-ல் எத்தனை புதிய கைகுத்தலரிசி கூட்டுறவு தொழிலாளர் சங்கங்கள் எங்கெங்கு துவங்க இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) இரண்டு

(இ) ஒன்று

(உ) கீழ்க்கண்ட இடங்களில் 10 கைக்குத்தல் அரிசி சங்கங்கள் பதிவு செய்வதற்கான யோசனைகள் அந்தந்த மாவட்ட அலுவலர்களின் ஆய்வில் உள்ளன:—

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி மாவட்டம் | | .. | தாழக்குடி |
| 2 | தஞ்சாவூர் | ,, | .. | நாகப்பட்டினம் |
| 3 | சேலம் | ,, | .. | புதுக்கவி கவுண்டனூர் |
| 4 | மதுரை | ,, | .. | வாடிப்பட்டி வட்டாரம் |
| 5 | தென் ஆற்காடு | ,, | .. | ஐந்து இடங்களில் (இடங்கள் நிர்ணயிக்கப்படவில்லை) |
| 6 | கோயம்புத்தூர் | ,, | .. | (இடம் நிர்ணயிக்கப்படவில்லை) |

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** கைக்குத்தல் அரிசி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதில் சர்க்கார் கடைப்பிடிக்கும் கொள்கை என்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஆங்காங்கு கிடைக்கக்கூடிய நெல் அளவு, சேருகின்ற அங்கத்தினர்களின் அடிப்படை ஆகியவற்றைப்பார்த்துத் தான் இந்தச் சங்கங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்ற முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** மாவட்டவாரியாகப் படித்தார்கள். தென்னாற்காடு மாவட்டம் என்று கூறினார்களே தவிர, எந்த இடத்தில் என்று சொல்லவில்லை. எந்த இடம் என்று கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** "இடங்கள் இன்னும் நிர்ணயிக்கப் படவில்லை" என்பதையும் படித்தேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** ஏற்கெனவே உள்ள கைக்குத்தல் அரிசி கூட்டுறவுச் சங்கங்களில் எத்தனை இயங்குகின்றன? எத்தனை மூடப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஏற்கெனவே 138 கைக்குத்தல் அரிசி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. அவற்றில் 2 மூடப்பட்டன.

**திரு. ந. தருமலிங்கம்:** இப்போது வளர்ந்து வரும் விஞ்ஞான காலத்தில் கைக்குத்தல் அரிசி தொழிலாளர் சங்கங்கள் போன்றவற்றை ஊக்குவிப்பது. மானியங்கள் வழங்குவது சிறப்புடையதுதானா?



1968 மார்ச் 15]

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இன்னும் முழுமையாக விஞ்ஞானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**திரு. ப. மகாதேவன் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழக்குடி என்ற ஊரில் அரிசன மக்களும், ஏழை மக்களும், பெண்களும் கைக்குத்தல் அரிசி தொழிலில் ஈடுபட்டிருப்பதால் அந்த சொசைடிகளை விரைவில் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அப்படிப்பட்ட பிற்போக்கான பகுதிகளில் இருந்து விண்ணப்பங்கள் வருமானால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். ஆரம்பிக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருப்பது விரைவுபடுத்தப்படும்.

**திரு. இல பலராமன்:** இந்த கைக்குத்தல் அரிசியில் உள்ள வைட்டமின்ஸ் அழியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை மக்கள் உண்பதால் நல்ல சத்து அவர்களுக்கு கிடைக்கிறது என்பது உண்மையா ? அதை ஊக்குவிக்க அரசாங்கம் மேலும் என்ன நடவடிக்கைகள் எடுக்கும் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கைக்குத்தல் அரிசி உடலுக்கு மிகவும் நல்லது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதனால் தான் மருத்துவமனைகள், சிறைச்சாலைகள் போன்றயிடங்களில் கைக்குத்தல் அரிசியைக் கொடுக்கிறார்கள். இதை மேலும் விரிவுபடுத்துவதற்கு உறுப்பினர்களைப் போன்றவர்கள் ஆதரவு தருவார்களானால் அதைப்பற்றி நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

**திரு. ஆலடி அருணா :** இதுகாறும் துவக்கப்பட்ட கைக்குத்தல் அரிசிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு எவ்வளவு மானியம் வழங்கியிருக்கிறது ? அந்த மானியத்தின் அடிப்படையில் இந்த கூட்டுறவு சங்கங்கள் விருத்தி அடைந்திருக்கின்றனவா ? பயன் பெற்றிருக்கின்றனவா ? இதற்கான விவரங்களைத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அது பற்றிய விவரங்கள் அளிக்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்தக் கைக்குத்தல் அரிசியில்தான் விஞ்ஞானமே அடங்கியிருக்கிறது. இதில் வைட்டமின் 'பி' ஃபுல்லாக இருக்கிறது. அது இல்லாத காரணத்தினால்தான் பெரி பெரி போன்ற வியாதிகள் வருகின்றன. அதனால் கை வலி, கால் வலி, கழுத்து வலியால் கழுத்தைத் திருப்ப முடியாமல் சுளுக்கிக்கொள்வது இவையெல்லாம் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம் என்றிருக்கிறதே அதன்படி இந்த கைக்குத்தல் அரிசிதான் ரூபாய்க்கு ஒரு படி என்ற அளவில் ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** உறுப்பினர் அவர்களின் இந்த யோசனையை உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** அரிசி மில்காரர்கள் பெரும்பாலும் லாப நோக்கோடு நடந்து வருவதால் அரிசியின் தரம் குறைந்துவிடுகிறது என்ற காரணத்தினால் இனிமேல் கைக்குத்தல் அரிசிதான் சொஸைட்டிகளில் அதிகமாக வழங்கி தமிழகத்தில் அதை ஊக்குவிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கைக்குத்தல் அரிசி ஆலைகளை அதிகப்படுத்தவேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அதற்கேற்ற வாய்ப்புகள் வசதிகளைப் பொறுத்து அந்தக் காரியங்கள் நடைபெறுகின்றன. ஆலைகளை எல்லாம் மூடிவிட்டு கைக்குத்தல் அரிசியை ஏற்படுத்துகிற அளவிற்கு இன்னும் நாம் அந்த அளவிற்கு வளர்ச்சியைப் பெறவில்லை என்பதால்தான் ஆலைகள் இருந்துகொண்டிருக்கின்றன.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னுண்டோ :** பாளையங்கோட்டையில் இயங்கிக்கொண்டிருந்த பெண்கள் கூட்டுறவு கைக்குத்தல் அரிசிச் சங்கம் நிறுத்தி வைக்கப்பட்டதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அது பற்றிய விவரம் இல்லை.

**திரு. கே. விநயகம் :** கைக்குத்தல் அரிசி நல்ல சத்துள்ளது என்று எல்லோராலும் கருதப்படுகிறதே. அதை ஏதோ ஆஸ்பத்திரிகளிலும், சிறைச்சாலைகளிலும்தான் தருகிருர்கள் என்று சொன்னுர்கள். அதை நாம் எல்லோரும் உண்ணுகிறேமா ? அப்படியிருந்தால் அமைச்சர்களில் எவ்வளவு பேர்கள் கைக்குத்தல் அரிசியை தினந்தோறும் உண்ணுகிருர்கள் என்று கேட்க விரும்புகிறேன். ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** முதலில் உறுப்பினர் அவர்கள் உண்ணுகிருர்களா என்பதை தெளிவுபடுத்திய பிறகு மற்றவர்கள் யார் யார் உண்ணுகிருர்கள் என்பது பற்றிய கணக்குகளை எடுத்துத் தரலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அவையுரிமைக் கேள்வி.

### 'சிலம்பொலி' வார இதழில் சட்டப்பேரவை குறித்து வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, திரு. ந. தருமலிங்கம் அவர்கள் ஒரு அவையுரிமைக் கேள்வியைக் கொண்டு வந்திருக்கிருர்கள். சென்னையிலிருந்து வெளியாகும் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் தேதியிட்ட 'சிலம்பொலி' என்ற வார ஏட்டில் 4-ம் பக்கத்தில், "இது என்ன சட்ட சபையா ? சந்தைக் கடையா ? சட்டசபை மெம்பர்கள் தூங்குகிருர்களா ?" என்று எழுதப்பட்டுள்ளது. இந்த சொற்றொடர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையின் மானத்தையும், மரியாதையையும் பாதிக்கும் வகையில் இருப்பதால், இதைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்று கொண்டு வந்திருக்கிருர்கள். இதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : On a point of order. I wish to know what happened to the privilege motion given notice of by my hon. Friend S. Balasubramanian with regard to publication of certain speeches made by Mr. R. Krishnaswami Gounder.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதை பேரவைத் தலைவர் அவர்கள் பார்த்து தீர்ப்பளிப்பதாக இருக்கிருர்கள். பார்த்து, பின்னர் தீர்ப்பு அளிக்கப்படும்.



## 3. அறிவிப்புகள்.

### (i) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, ஒற்றிவைப்புத் தீர்மானங்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிருர்கள். திரு. சித்தன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிருர்கள். திரு. ஜேம்ஸ் அவர்கள் இன்னொரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிருர்கள். திரு. கோதண்டராமன் அவர்கள் இன்னொரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிருர்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் இன்னொரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிருர்கள். ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் எல்லாம் அவை முதல்வரோடு அறையில் பேசி நாளைக்கு நான் முடிவு கூறுகிறேன்.

DR. H. V. HANDE : I am withdrawing my adjournment motion.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்களின் ஒற்றிவைப்புத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

## 4. கவனஈர்ப்பு.

### மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்சநிலைமையும், வரி தள்ளுபடியும், கடன் வசூல் ஒத்திவைப்பும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, 41-வது விதியின் கீழ் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் ஒரு கவனஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகிருர்கள்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரமும், பொது முக்கியமுமான காரியம் ஒன்றை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

"மேற்கு இராமநாதபுரம் ஜில்லாவில் மழை இல்லாத காரணத்தால் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டு, பஞ்ச நிலைமை ஏற்பட்டு இருப்பதால் நிலவரி வஜா செய்து, சர்க்கார் கடன் வசூல்களை ஒத்தி வைக்கவும், பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பிக்கவும், அஜ்மாஷ் செய்து முடிவு எடுக்கும் வரை எல்லாவிதமான வசூல்களையும் நிறுத்தி வைக்கவும் வேண்டிய அவசியம் பற்றியதான அவசரமும், பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்."

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் சீர்கேடான பருவநிலைமைகள் காரணமாக பஞ்ச நிலைமை ஏற்பட்டுள்ளதெனவும் நிலவரியைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும், கடன் வசூலை ஒத்தி வைக்கவேண்டும என்றும், பஞ்சத் தணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் நாட்ட ஈர்ப்பு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர் வட்டங்களையும் இராஜபாளையம் விருதுநகர் துணை வட்டங்களையும் கொண்ட மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் 1967-ம் ஆண்டு அக்டோபர், நவம்பர் திங்கள்களில் மழை பெய்தது. இதனுல் பெரும்பான்மையான ஏரிகளின் ஆயக்கட்டு நிலங்களில் பயிரிடுவதற்கு நீர்வழங்க அவற்றிற்கு நீர் கிடைத்தது. ஆனுல்,

[திரு. கே. ஏ. மதியழகன்] [1968 மார்ச் 15

பிற்பட்டு மழை பெய்யாத காரணத்தினால் மேற்படி ஏரிகளில் இருந்த நீர் ஒரு பயிரைச் செவ்வனே விளைவிப்பதற்குப் போதுமானதாக இல்லை. மேலும், இவ்வாண்டில் வடகிழக்குப் பருவமழையும் இப்பகுதியில் பொய்த்துவிட்டது. இயல்பாகவே நீர் மிகுந்து காணப்படும் ஏரிகளின் ஆயக்கட்டு நிலங்களில்கூட இம்முறை கிணற்று நீரின் உதவியின்றி பயிர்கள் விளைந்துவிடும்படிச் செய்வதற்கு இயலவில்லை. எதிர்பார்த்த காலத்திற்கு முன்னமேயே பல ஏரிகளில் நீர்வற்றிவிட்டது. கிணற்றுப் பாசன வசதியைப் பெற்றுள்ள உழவர்கள் கிணற்று நீரைக்கொண்டு பாசனம் செய்து சிறந்த பலன் கிடைக்கத்தக்க வகையில் பயிர்கள் விளையும்படிச் செய்துள்ளனர். ஆனால், மற்றவர்கள் மிகக் குறைவான விளைச்சலையே பெறுவார்கள்.

இராஜபாளையம் துணை வட்டத்தில் 14,891 எக்கர் நிலங்களில் பயிர் செய்யப்பட்டது. இவற்றில் 962·28 எக்கர் பரப்பில் பயிர் சாவியாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில், 150 ஏரிகளில், 25 ஏரிகளுக்கு 50 சதவீதத்திற்கு மேல் நீர் கிடைத்தது. 74 ஏரிகளுக்கு 50 சதவீதத்திற்குக் குறைவாக நீர் கிடைத்தது. 18 ஏரிகளுக்கு நீர் எதுவுமே கிடைக்கவில்லை. கிணற்றுப் பாசன வசதியுடைய ஆயக்கட்டு நிலங்களில் தற்போது வளர்ந்து வருகிற நெற்பயிர், மற்றும் பிற பயிர்களின் நிலைமை மன நிறைவளிப்பதாக உள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, மல்லி உள்வட்டங்களில் கிணற்றுப் பாசன வசதி இல்லாத நெற்பயிர்கள் நீரில்லாக் காரணத்தினால் வாடிக்கொண்டு இருக்கின்றன. விருதுநகர் துணை வட்டத்தில் 16 ஏரிகளின் ஆயக்கட்டு வயல்களில் மட்டும் பயிரிடப்பட்ட பயிர்கள் ஒரு பகுதியோ முற்றிலுமோ சாவியாகிவிட்டன. ஏனைய ஏரிகளின் ஆயக்கட்டு நிலங்களில் நல்ல விளைச்சல் கிடைக்கும். சாத்தூர் வட்டத்தில் பெரும்பான்மையான ஏரிகள் ஓரளவுக்கே நீர்பெற்றன அல்லது போதிய அளவிற்கு நீர்பெறவில்லை, இந்த ஏரிகளின் ஆயக்கட்டில் விளைவிக்கப்பட்ட நெற்பயிர்கள் வாடிக் கொண்டிருக்கின்றன. நெல் பயிரிடப்பட்ட சுமார் 700 எக்கர் பரப்பில் கிணற்று நீரின் உதவியினால் நல்ல அறுவடை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கு இராமநாதபுரத்தில் 1377-ம் பசலியில் பருவமழை பொய்த்து விட்டபோதிலும், வருவாய்த்துறை வாரிய நிலையாணை 14-ன்கீழ் சிறப்பு வகையில் தீர்வைத் தள்ளுபடி வழங்கத்தக்க நிலைமையில்லை. ஆனால் வருவாய்த்துறை வாரிய நிலையாணை 13-ன் விதித்துறைகளின்கீழ், சாவியாகிவிட்ட எல்லாப் புன்செய் பயிர்களுக்கும், கிணற்றுப் பாசனத்தினால் விளையும்படிச் செய்யப்பட்ட பயிர்கள் ஆகிய அனைத்துக்கும் சாதாரணமான வரித்தள்ளுபடி வழங்கப்படும். வருவாய்த்துறை வாரிய நிலையாணை 13-ன்கீழ்த் தீர்வைத் தள்ளுபடி வழங்குவதற்காக அந்த அந்த வட்டத்தின் அதிகாரிகள் முழு விவரங்களையும் திரட்டி வருகின்றனர். அவசியமான நேர்வுகளில் சாதாரணத் தீர்வைத் தள்ளுபடி வழங்கப்படும். நிலவரிவசூலையும் கடன் நிலுவைகள் வசூலையும் ஒத்திவைப்பதைப் பொறுத்த வரையில், இப்போதுள்ள நிலைமை, எவ்வித ஒத்திவைப்புச் சலுகை வழங்கவும் அனுமதிப்பதாக இல்லை.

மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் நூற்பு ஆலைகள் முதலிய பல தொழில்கள் உள்ளன. இத்தொழில்களில் மக்கள் வேலை பெறமுடியும். மேலும் இப்பகுதி முழுவதிலும் நியாய விலைக்கடைகள் உள்ளன. இவை மூலமாக போதுமான அளவிற்கு உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, on a point of order. I moved an adjournment motion a few days ago to discuss the drought conditions in the Hosur taluk which is experiencing worse condition when compared to the conditions prevailing



1968 மார்ச் 15 ] [ திரு. எஸ். ராமலிங்கம்]

சலுகைகளை விட, எடுத்துக்கொள்ளுகின்ற முயற்சியைவிட, காட்டுகின்ற அக்கறையைவிட அதிகமான சலுகை இவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள்மேல் அதிகமான அக்கறை காட்டப்பட வேண்டும். இந்த தீண்டாமை இந்த ஒரு நாட்டிலேதான் இருக்கிறது. வேறு எங்கும் கிடையாது. 'பெகுலியாரிட்டி' என்று ஆங்கிலத்திலே சொல்வார்களே அதைப்போல இது ஒரு 'பெக்கூலியர் டிஸீஸாக' இருக்கிறது. அந்தமாதிரியான இந்த நோயைப் போக்குவதற்கு மிகவும் விசேஷ கவனம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் அந்த இலாகாவிற்கு எவ்வளவு தொகையை ஒதுக்க முடியுமோ அவ்வளவு தொகையை ஒதுக்கினோம். அவ்வளவு தொகையை ஒதுக்கி, அதற்கென்று அதிகாரிகளைப் போட்டு, அந்த அதிகாரிகளின் மூலமாக மாநில அளவிலே, ஜில்லா அளவிலே, கிராம அளவிலே அதை செயல்படுத்திக் கொண்டு வந்தார்கள். செயல்படுத்திக்கொண்டு வருகிறபொழுது, நடைமுறையிலே கொண்டு வருகிறபோது கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டு, சிக்கல் ஏற்பட்டு, தடை ஏற்பட்டு, சமுதாயத்தினுடைய பிடிப்பிலே அவைகள் எல்லாம் செயல்படுகின்ற பொழுது, பல தடைகள் ஏற்பட்டன. அந்தத் தடைகளின் காரணமாக எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்படவில்லை. எனவே காந்தியடிகள் அதற்கு போராடியதுபோல, மறைந்த எங்கள் தலைவர் நேருஜி அவர்கள் அதற்கு வாதாடியதுபோல, எங்கள் தலைவர் காமராஜ் அவர்கள் அதிகமான முயற்சிகள் எடுத்துக் கொண்டார். அதிலே நாங்கள் மிகவும் வேகமான அக்கறை காட்டியும் கூட சொல்லிக் கொள்ளத் தக்க அளவுக்கு நாங்கள் முன்னேற்றம் காட்ட முடியவில்லை. அந்தமாதிரியான முன்னேற்றம் ஏற்பட வேண்டுமே என்ற கவலையிலே தான் இந்த மன்றத்திலே எல்லோரும் இருக்கிறார்கள்.

இந்த அரிஜனநலத் துறைப் பொறுப்பேற்றிருக்கிற அம்மையார் அவர்கள், அமைச்சர் அவர்கள், இந்த சபையிலே அங்கத்தினராக இருந்த பொழுது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். என் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்தும் எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை? காங்கிரஸ் அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியிலே ஏதோ கோளாறு இருக்கிறது; அவர்கள் காட்டுகிற பாதை தவறாக இருக்கிறது என்று முன்பொரு முறை இதே சபையிலே சொல்லியிருக்கிறார்கள்.

காங்கிரஸ்காரர்கள், காந்தியார் காட்டிய வழியிலே, காமராஜ் அவர்கள் காட்டிய வழியிலே, அவர்களைச் சேர்ந்த பெரியார் ராமசாமி அவர்கள் காட்டிய வழியிலே வந்து இந்தப் பிரச்னையை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று அக்கறை எடுத்து இந்த அளவு பாடுபட்டும் எதிர்பார்த்த அளவு பலன் கிட்டவில்லை. அமைச்சர் அவர்கள் சொன்ன வார்த்தைகளை இப்பொழுது பார்த்தேன். பழைய நிகழ்ச்சிகளிலே அந்த வார்த்தைகள் இருக்கின்றன. இந்தமாதிரி காங்கிரஸ்காரர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி சரியாக இல்லை; அவர்கள் காட்டுகின்ற பாதை சரியாக இல்லை; அது மிகமிகத் தவறான பாதை என்றெல்லாம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அமைச்சர் பொறுப்பை எடுத்துக்கொண்டால் ஒரு நல்ல பாதையைக் காட்டுவார்கள் என்றுதானோ என்னவோ முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்கு அந்தப் பொறுப்பை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இந்த ஓராண்டு காலமாக ஒரு நல்ல பாதையைக் காட்டுவார்கள் என்றுதான் நாங்கள் எண்ணியிருந்தோம்; காங்கிரஸ்காரர்களுக்குத்தான் அந்தப் பாதை தெரியவில்லை; ஏதோ சரியான பாதையிலிருந்து தவறிப்போய்விட்டார்கள்; அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிற அம்மையார் அவர்கள் நல்ல பாதையைக் காட்டுவார்கள் என்று எதிர்பார்த்தோம். இந்தக் குறிப்பிலே ஏதாவது வழி சூசகமாகவாவது இருக்கிறதா என்று சொன்னால் இல்லை. அமைச்சர் பதவி வரும் என்று தெரிந்து அந்தப் பாதையை மிகவும் பத்திரமாக வைத்திருந்திருக்கிறார்கள்; அமைச்சராக ஆனபிறகு அந்தப் பாதை தெரியுமோ என்னமோ—ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு அந்தப் பாதையைக் காட்டுவார்கள் என்றெல்லாம் நாங்கள் ஓராண்டுகாலமாக மிகவும் கவனத்துடன் அவர்களுடைய நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு வருகிறோம். அம்மையார் அவர்கள் காட்டுவதாகச் சொன்ன பாதை சென்ற பட்ஜட்டிலே காணோம்; இந்த பட்ஜெட்டிலே காணோம்; இந்த மானியத்திலே பார்க்கின்றபொழுதும்

காணோம். அவர்கள் காட்டுகிற பாதையும் காங்கிரஸ்காரர்கள் காட்டிய பாதைதான் என்றும் சொல்லிக்கொள்கிறேன். இன்றையதினம் கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்திலே அவர்கள் கொள்கை விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் முன்பு போட்ட அதே படத்தைத் தான் இப்பொழுதும் போட்டிருக்கிறார்கள். அவர்கள் போட்ட அதே படத்தைத் தான் அம்மையார் அவர்களும் போட்டிருக்கிறார்கள். அதிலே

‘ சாதிகள் இல்லையடி பாப்பா ;—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் ;
நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.’

என்று சொல்வதைப் போல ஒரு குழந்தையைப் போட்டு, இந்த அரசினுடைய நோக்கம் அதிலே காட்டப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கின்றபொழுது முந்தைய காங்கிரஸ் சர்க்கார் எடுத்துக்கொண்ட அக்கறையாகத்தான் இது இருக்கிறது.

கல்வித் துறையிலே அவர்கள் முன்னேற வேண்டுமென்று கல்வித் துறைக்காக பெரிய அளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்வியிலே அவர்கள் முன்னேறிவிட்டால், அவர்களுக்கு உற்சாகமான அபிவிருத்தி வந்துவிடும் என்ற ஒரு காரணத்திற்காக கல்விக்காக அதிக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஸ்காலர்ஷிப் கொடுக்கின்ற முறையிலே, பள்ளிக்கூடங்கள் கட்டுகின்ற முறையிலே அவர்களுக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். கல்வியிலே அவர்களுக்கு அதிக ஊக்கம் கொடுக்கும், ஸ்காலர்ஷிப் கொடுத்தும்கூட அவர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லவில்லை. அவ்வளவு ஏழ்மையில் இருக்கிறார்கள். ஒரு முறை எங்கள் தலைவர் காமராஜ் அவர்கள் கிராமப் புறங்களில் டூர், சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது பள்ளிக்கூடங்கள் இருந்தும் ஏன் அவர்கள் பள்ளிக்குப் போகவில்லை என்று கேட்டார்கள். எங்களுக்குச் சோறு இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். சோறு போட்டால் வருவார்களா என்று தலைவர் அவர்கள் கேட்டார்கள். எனவே, அவர்களுக்கு இலவசமாக சோறு போடப்பட்டது. சோறு போடப்பட்டும் அவர்கள் வரவில்லை. இலவசமாக உடை கொடுத்தோம், சிலேட்டு, புத்தகம், பலப்பம், துணிகளும் கொடுக்கப்பட்டன. இவ்வளவு கொடுத்தும் கூட இன்னும் சில பகுதியிலே நிரம்ப சிரமப்படுகிறார்கள். இவ்வளவு சலுகைகளை கொடுத்தும் அவர்கள் வராமலே கஷ்டப்படுகிறார்கள். காரணம் பெற்றோர்கள் வறுமையிலே வாடுகிறார்கள். எனவே அவர்களுக்கு ஏதாவது சலுகை கொடுக்கவேண்டும் ; அவர்களுடைய முழுமையைப் போக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அமைச்சர் பொறுப்பை ஏற்றவுடனே அவர்கள் ஒரு அறிக்கையில் அந்தமாதிரி குறை இருக்குமானால் போனஸ் தரலாம் என்று சொன்னார்கள். இந்த ஸ்காலர்ஷிப், மற்ற எல்லாச் சலுகைகளையும் மீறி போனஸ் கொடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். உடனே எங்களுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. அம்மையார் அவர்கள் ஏதோ புதிய திட்டத்தை, புதிய வழியைக் காட்டுகிறேன் என்று சொன்னார்களே அதில் இதுவும் ஒரு வழியாக இருக்குமோ என்னவோ என்று நாங்கள் எண்ணினோம். அந்த போனஸ் இப்பொழுது என்ன ஆனது என்றே தெரியவில்லை. வேறு பல இடங்களிலே போனஸ் தகராறு இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இங்கே அந்த போனஸ் என்ற வார்த்தையையே காணோம். என்ன சொன்னோம், ஏன் விட்டோம் என்ற குறிப்பு கூட இல்லை—இந்த கொள்கை விளக்கப் புத்தகத்தில் காணோம். பல துறைகளிலேயும் முன்னேறுவதற்கு கல்வி முக்கியமானது என்று அதிலே அதிக நிதி ஒதுக்கி நாம் செலவு செய்துகொண்டு வருகிறோம்.

அடுத்தபடியாக, இவர்கள் தொழில் துறையிலே, வியாபாரத் துறையிலே முன்னேற வேண்டும். எப்படியிருந்தாலும் ஜாதிகள் ஒழியாவிட்டாலும் கூட, அவர்கள் பின்தங்கிய நிலையில் இருந்தால் ஒரு பய உணர்ச்சி, தொழிலில் முன்னேற வேண்டுமே என்னும் எண்ணம் ஏற்படும்போது



‘இன்ஃபீரியாரிட்டி காம்ப்லெக்ஸ்’ வந்துவிடுகிறது. எனவே அவர்களைப் பொருளாதாரத் துறையிலே உயர்த்த வேண்டும். மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற சலுகைகளை மட்டும் கொடுத்தால் போதாது. மற்றவர்களுக்கு எவ்வளவோ சலுகை கொடுக்கிறோம். ஆயிரம் ரூபாய் கொடுத்து, டீ கடை வைத்து வாழ் என்றால் அவனால் வாழ முடியும். வாழைப் பழக் கடை வைத்து வாழ் என்றால் அவனால் வாழ முடியும். டீ கடை வைத்துக்கொள், வாழைப் பழக்கடை வைத்துக்கொள் என்று சொன்னால்கூட அவர்களால் பிழைத்துக்கொள்ள முடியும். ஆனால் அரிஜனங்கள் டீ கடை வைத்தால் யார் அங்கு சாப்பிடுவது, வாழைப்பழக் கடை வைத்தால் யார் அதை தொட்டு வாங்குவது என்ற நிலை தான் இப்பொழுது இருக்கிறது. இது சமுதாயத்தால் பீடிக்கப்பட்டுள்ள பயங்கரமான பேய். இதை நினைத்தவுடனே பேய் விஷயம் அவர்களுக்கு வந்துவிடுகிறது. பேய் என்ற உடனே நாம் எல்லாம் பயப்படுகிறோம். அந்தமாதிரி தீண்டாமைப் பேய் நிரம்ப இருக்கிறது. உங்களுக்கு வேண்டுமானால் இந்திப் பேய் கண் முன்னால் வந்து நிற்கலாம். ஆனால், இது அதை விட பயங்கரமான பேய் மூத்த பேய் ; இந்திப் பேய் உங்களை பயமுறுத்துகிறது என்று சொல்கிறீர்கள். ஆனால் இந்தப் பேய் உங்களை மட்டுமல்ல ; எல்லோரையும் அமிழ்த்திவிடுகிறது. சமுதாயத்திலுள்ள எல்லோரையும் அமிழ்த்திவிடுகிறது. ஆகவே, உயர்ந்த நிலையிலுள்ளவர்கள், படித்த பெருமக்கள், இவர்களையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்று உண்மையிலேயே முயலுவார்களானால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமானால் அவர்கள் மேலே உயர்வதற்குப் பாதை ஏற்படும். எனவே இந்த தீண்டாமைப் பேய் மிகக் கொடூரமானது, கொடுமையானது. அந்தப் பேயை ஒழிக்கவேண்டும். அதை நீக்கவேண்டும். அவர்களுக்கு சலுகை கொடுக்கும்பொழுது தீண்டாமை சம்பந்தப்படாத முறையிலே சலுகை கொடுக்கவேண்டும். பஸ் பெர்மிட் கொடுக்கிறார்கள். அந்தமாதிரி பொருளாதாரத் துறையிலே அவர்களுக்குச் சலுகை கொடுக்கவேண்டும். தையல் கடை வைத்துக்கொடுக்கிறார்கள். அதுமாதிரி வருமானம் வருகிற துறையில் அவர்களுக்கு சலுகை அளிக்கவேண்டும். சிறு சிறு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ் அமைத்துக் கொடுக்கிறார்கள். உத்தியோகத் துறையிலே அவர்களுக்கு மேற்கொண்டு சலுகைகள் கொடுக்க வேண்டும். உத்தியோகத் துறையிலே அவர்களுக்குக் கொடுக்கும் சலுகைகள் முன்பு கொடுத்ததைவிட கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கிறதென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். முன்மாதிரி இருந்த அளவுக்கு இல்லை. முன்னால் அவர்கள் படித்து வெளியே வந்த மாத்திரத்திலே அவர்களுக்கு உத்தியோகம் கிடைத்து வந்தது, அவர்கள் ஆங்காங்கு உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டார்கள். இப்பொழுது புதிய அரசு வந்த பிற்பாடு என்ஜினீயரிங் படித்த மாணவன் கூட ஒரு வருஷம் வேலையில்லாமல்தான் இருக்கவேண்டிய நிலை இருக்கிறது. அந்தமாதிரி சூழ்நிலை இருக்கிறது. டாக்டர் பட்டம் பெற்றாலும்கூட உத்தியோகம் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. படித்துவிட்டு வந்தாலும்கூட உத்தியோகம் கிடைக்குமா என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு விசேஷமான, தனித்த சலுகைகள் கொடுக்கப்படவேண்டும். தயவுசெய்து ஏற்கனவே இருந்த அரசாட்சியில் செய்யவில்லையே என்று எங்களைப் பார்த்து கேட்கவேண்டாம். இது எல்லோருக்கும் பொதுவான பிரச்னை. எல்லோரும் தலை குனியவேண்டிய பிரச்னை. இந்தப் பிரச்னை தலை விரித்தாடினால் எல்லோரும் தலை குனிய வேண்டும். இந்த அரசு இதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். உத்தியோகத் துறையில் அவர்களுக்கு அதிகமான வாய்ப்புக் கொடுக்க வேண்டும். முன்பெல்லாம் சர்வீஸ் கமிஷன் தேர்வைப் பொறுத்தவரையில் 30 மார்க் வாங்கினால்கூட இன்டர்வியூவிற்குக் கூப்பிடுவார்கள். அதாவது நேர்முகத் தேர்வில் கொஞ்சம் நன்றாகச் சொன்னால், அவர்களை தேர்ந்தெடுத்துவிடுவார்கள். இப்பொழுது 40 மார்க்குகள் வாங்கவேண்டும் என்று சொல்வதாக நான் கேள்விப்படுகிறேன். தாழ்த்தப்பட்டவர்கள் கூட 40 மார்க் வாங்கவேண்டுமென்று சொல்வதாக நான் கேள்விப்படுகிறேன். அம்மாதிரி நிலைமை இல்லாமல் அவர்களுக்கு விசேஷ சலுகைகள் கொடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அவர்களுக்கு ஏற்கெனவே இருந்த சலுகைகள்கூட

இப்பொழுது கொடுக்கப்படவில்லை; மறுக்கப்படுகிறது. இந்த அரசாங்கம் இதைக் கவனித்து அவர்களுக்கு மேலும் தனிச் சலுகைகளை அளிக்கவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, நான் இன்னொன்று சொல்வேன். கோவில்கள், மடங்களுக்கு ஏராளமாக வருமானம் வருகிறது. கோவிலில் கையை வைப்பதற்கு எங்களுக்குக் கொஞ்சம் அச்சமாக இருந்தது. நீங்கள் கோவில் வருமானத்தில் தாராளமாக கையை வைக்கலாம். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் சாமியைப் பார்த்து கொஞ்சம் பயந்தோம். சாமியைச் சார்ந்தவர்களைப் பற்றி பயப்படாமல் இருந்தால்கூட, சாமியைப்பற்றி எங்களுக்குக் கொஞ்சம் பயம் இருந்தது, கவலை இருந்தது. ஆனால், உங்களைப் பொறுத்தவரையிலே நீங்கள் கவலைப்பட வேண்டாம். கோவில்களுக்கு வருமானம் ஏராளமாக இருக்கிறது. கோவில் வருமானத்தை வைத்துக்கொண்டு ஏதேதோ செலவு செய்கிறார்கள். கோவில் வருமானத்தை எடுத்து இந்த முக்கியமான காரியத்திற்கு செலவு செய்யலாம், வரி கூட போடவேண்டியதில்லை. இந்த சமுதாயத்தினரை எடுத்துக்கொண்டால், அவர்களின் பெர்செண்டேஜை எடுத்துக்கொண்டால், ப்ரொப்போர்ஷனாக நீங்கள் கொடுக்கின்ற பணம் போதுமா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் கொடுக்கிற ஒரு லட்சம் ரூபாய் போதுமா என்று பார்க்க வேண்டும். பணக் கஷ்டமாக இருக்கிறது என்று நீங்கள் சொல்லலாம். பணக் கஷ்டம் இருப்பதை நாங்களும் உணர்கிறோம். பணக் கஷ்டம், அதனால் கொடுக்க முடியவில்லை என்று சொல்லவேண்டாம். இம்மாதிரி உங்களுக்கு பல வாய்ப்புகள் இருக்கின்றன. கோவில்களுக்கு ஏராளமாக வருமானம் வருகிறது. அந்த கோவில் வருமானத்திலிருந்து எடுத்து இந்த நல்ல காரியத்திற்கு செலவு செய்யலாம்.

“ குடிக்கவும் நீரற்றிருக்கும் ஏழைக் கூட்டத்தை எண்ணாமல்
கொடுந்தடியருக்கு மடம் கட்டி வைத்ததினாலே
தம்பி ! வசங்கெட்டுப் போனது நமது நல்நாடு ”

என்று கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடியிருக்கிறார். அம்மாதிரி குடிப்பதற்குக்கூட நீர் இல்லாமல் இருப்பவர்களுடைய கஷ்டத்தைப் போக்கவேண்டும், எப்படியாவது அவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டும். கோவிலைச் சார்ந்தவர்களிடம் இங்கிதமாகச் சொல்லி கோவில் வருமானத்திலிருந்து இந்த நல்ல காரியத்திற்கு செலவு செய்யவேண்டும். கோவில்களுக்கு ஏராளமாக வருமானம் வருகிறது. நீங்கள் ஒரு லட்சம் ரூபாய் கொடுத்திருப்பது போதவே போதாது. தமிழகம் பூராவுக்கும், 90 லட்சம் மக்களுக்கும் ஒரு லட்சம் ரூபாய் என்றால் எப்படிப் போதும் ? முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள் ‘உங்கள் நெஞ்சில் கையை வைத்துப் பாருங்கள், உங்கள் மனச்சாட்சியைக் கேட்டுப் பாருங்கள்’ என்று. அதுமாதிரி நானும் சொல்கிறேன். உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுப் பாருங்கள். இந்த ஒரு லட்சம் ரூபாய் போதும் என்று உங்கள் மனச்சாட்சி சொன்னால் நான் ஒத்துக்கொள்கிறேன். உண்மையில் ஒரு லட்சம் ரூபாய் போதவே போதாது. எனவே நான் சொன்ன மாதிரி இன்னும் அதிகத் தொகை செலவழிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு, கோவில்களுக்கு வரும் வருமானத்திலிருந்து பணத்தை எடுத்து இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு நீங்கள் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். ஒரு லட்சம் ரூபாய் அழுத பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுவதுபோல்தான். அதிலும் உரித்த வாழைப்பழத்தோல் என்றுதான் சொல்ல வேண்டும். வாழைப் பழமாக இருந்தால்கூட உள்ளே கொஞ்சம் இருக்கும்.

இப்பொழுது பல பிரச்னைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்னைகளில் மிகவும் அத்தியாவசியமான ஏதாவது ஒரு பிரச்னையை முதலில் எடுத்துக் கொண்டு, அதைத் தீர்த்து வைக்கவேண்டும். எங்கள் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் அப்படித்தான் ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிரச்னையை மட்டும் எடுத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அதைத் தீர்த்துவைக்க வேண்டும் என்று சொல்வார். எனவே, வீட்டு மனைப் பிரச்னையை எடுத்துக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அதைத்





தீர்த்து வைக்கவேண்டும். குருவிக்குக்கூட கூடு இருக்கிறது. நரிக்கு ஒரு குழி இருக்கிறது. கொடுமையான புலிக்குக் கூட ஒரு குகை இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களும், அமைச்சர் கருணாநிதி அவர்களும் இதையெல்லாம் பற்றி பாட்டுகளையே எழுதியிருக்கிறார்கள் என்பதற்காகத் தான் நான் இதையெல்லாம் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைத் தலைவருடைய இடத்தைப் பார்த்துக்கொண்டு பேசவேண்டும். இல்லாவிட்டால், லைட் எரிவது தெரியாமல் போய்விடும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்களுக்கு பேசுவதற்கு கொஞ்சம் அதிகமாக நேரம் கொடுக்கவேண்டும். இல்லையென்றால், ‘போன ஆட்சியில் நிறைய நேரம் கொடுத்தார்கள், இந்த ஆட்சியில் அதைக்கூட குறைத்துவிட்டார்கள்’ என்று சொல்லக் கூடும். நேரம் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கலாம்.

**திரு. எஸ். ராமலிங்கம் :** ஆகவே, இம்மாதிரி ஏதாவது ஒரு பிரச்னையை எடுத்துக் கொண்டு, வீட்டு மனைப் பிரச்னையை எடுத்துக் கொண்டு அதைத் தீர்க்க வேண்டும். அவர்களுக்கு குடியிருப்பதற்கு ஏதாவது கொஞ்சமாவது இடம் வேண்டும். அந்தப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும். அந்தப் பிரச்னை முழு அளவில் தீர்க்கப்படாமலேயே இருக்கிறது. அதற்காக பரமேஸ்வரன் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை முன்பு போட்டார்கள். 1963–64-ல் அந்தக் கமிட்டி தமிழகம் முழுவதிலும் சுற்றுப்பிரயாணம் செய்தது. அதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு விரைவிலே அவர்களுக்கு வீட்டுமனை வழங்கப்படவேண்டும். அதை வைத்தாவது அவர்களுக்கு மரியாதை இருக்கும். ஏதாவது ஒன்றை வைத்துக்கொண்டிருந்தால்தான் மரியாதை இருக்கும். தனக்கு ஒரு வீடு இருக்கிறது, வீட்டு மனை இருக்கிறது என்றாவது அவர்கள் சொல்லிக் கொள்ளலாம். அப்பொழுது தான் மரியாதை இருக்கும். புல்வெளியில் கட்டாந்தரையாக இருந்தால் கூட, கட்டாந்தரை தனக்குச் சொந்தம் என்று சொல்லி பாயை விரித்து, தலையை வைத்து படுத்துக்கொள்ளக் கூடிய உரிமையாவது அவர்களுக்கு இருக்கும். அவர்களுக்கு சொந்தம் என்று உரிமை கொண்டாட ஏதாவது இருந்தால்தான் மரியாதை இருக்கும். தமிழகம் பூராவிலும் இந்தப் பிரச்சினையை தீர்க்கவேண்டு மானால் ரூ. 15 கோடியாகும். மத்திய சர்க்கார் உதவியோடு, பினான்ஸ் கமிஷன் தொடர்போடு இந்தப் பிரச்னை தீர்க்கப்படவேண்டும். இது ஒரு பெரிய தேசியப் பிரச்னை. பல ஆண்டுகளாக தீர்க்கப்படாத பிரச்னை. இதை மூன்று ஆண்டிற்குள் முடித்துவிடலாம், ரூ. 15 கோடி நிதியை வைத்துக்கொண்டு. இப்பொழுது நில ஆர்ஜிதம் பொறுத்தவரையிலே ஏதோ பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஒதுக்கப்பட்ட பணம் முழுதும் செலவு செய்யப்படவில்லை. அந்த அளவுக்கு ஆங்காங்கே ‘ஸ்டே’ வாங்கி விடுகிறார்கள். மற்றவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். யாராவது ஏதாவது சொல்லி சரிக்கட்டிவிடுகிறார்கள். இப்படியெல்லாம் புகார் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த வீட்டு மனைப் பிரச்னையை எடுத்துக் கொண்டு, அந்தப் பிரச்னையை தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது மிகவும் முக்கியமான பிரச்னை. இந்தப் பிரச்னையை எடுத்துக்கொண்டு, இதைத் தீர்த்துவைப்பதில் வெற்றி கண்டோம் என்ற முறையில் இதைத் தீர்த்துவைக்க முன்வரவேண்டும்.

இம்மாதிரி பொறுப்பைக் கொடுக்கிறபொழுது ஏற்கனவே உள்ள காங்கிரஸ் அரசாங்கம் அரிஜனங்கள் கையிலேயே, இந்த சமுதாயத்தைச் சார்ந்தவர் கையிலேயே ஒரு முக்கியமான பொறுப்பையும் பதவியையும் கொடுத்திருந்தது. போலீஸ் நிர்வாகம் அப்படிப்பட்டவர் கையில் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் காரணம் என்னவென்றால் தீண்டாமையை ஒழிப்பதற்கு அம்மாதிரியான பொறுப்பு, இரண்டும் ஒன்றாகச் சேர்ந்திருந்தால் ஆங்காங்கு வருகிற இடையூறுகளை, எதிர்ப்புகளை எளிதில் சமாளிக்கலாம், சிக்கல்களை நீக்கலாம். முதல் அமைச்சர் அவர்கள் பாராமுகமாக இருப்பார் என்று நான் சொல்ல வரவில்லை.

[திரு. எஸ். ராமலிங்கம்] [1968 மார்ச் 15

இரண்டும் சேர்ந்து, இரண்டு பொறுப்பும் சேர்ந்து ஒருவர் கையில் இருந்தால், அந்த சமுதாயத்தினர் கையில் இருந்தால், இந்தப் பிரச்னைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு பயனுள்ளதாக இருக்கும். சிக்கல், காலதாமதம் இவைகளை எளிதில் தவிர்க்க முடியும். ஆகவே, தான் இந்த இரண்டு பொறுப்பையும் ஒன்ருகச் சேர்த்து ஒருவரிடம் கொடுத்திருந்தார்கள் முன்னுள் ஆட்சியில். இப்பொழுது இருக்கிற போக்கைப் பார்த்தால், அவர்கள் சொல்லிய அளவுக்கு, பிரசங்கம் செய்த அளவுக்கு அரசாங்கம் இதில் கவனம் செலுத்தவில்லையோ, பாராமுகமாக இருக்கிருர்களோ என்று சந்தேகப்படவேண்டியதாக இருக்கிறது. இசெல்லாம் ஒரு தேசியப் பிரச்னை, பொதுப் பிரச்னை என்ற முறையில் சொல்கிறேன். இதையெல்லாம் இந்த அரசு மனதில் வைத்து, இது ஒரு ஆழ்ந்த பிரச்னை என்று கருதி, அதைத் தீர்த்து வைக்க முன்வரவேண்டும். இந்தப் பிரச்னையையெல்லாம் புரையோடிய புண்ணை தீர்ப்பதுபோல் தீர்க்கவேண்டும். புரையோடிய புண்ணை ஆற்றுவதற்கு பாடுபடவேண்டும். யாருக்கு புண் இருக்கிறதோ அவனே கூட அதை ஆற்றுவதற்கு அச்சப்படலாம். பக்கத்தில் பார்த்துக்கொண்டிருப்பவர்கள் கூட அவன் கஷ்டப்படுவானே என்று கூட கண்ணை மூடிக்கொள்ளலாம். ஆகவே, அவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று சொன்னல் யாராவது எதிர்ப்பு தெரிவிக்கலாம். புரையோடிய புண் இருந்தால், அவர் மனம் நோகுமோ, இவர் மனம் நோகுமோ என்று பார்த்துக்கொண்டிருக்க முடியாது, புண்ணை உடனே ஆற்ற வேண்டும். ஆகவே, எதிர்ப்பைக் கருதாமல் அவற்றையெல்லாம் சமாளித்து பிரச்னையைத் தீர்க்க முன்வரவேண்டும். இந்த வீட்டு மனைப் பிரச்னையையாவது முதலில் தீர்த்துவைக்கவேண்டும். உண்மையான புண்ணை ஆற்றி புணுகு தடவியாகவேண்டும் என்று சொல்லி, எனக்குப் பேச அவகாசம் தந்த சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி செலுத்தி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(iv) கண்டெடுக்கப்பட்ட நூறு ரூபாய் நோட்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு அறிவிப்பு. இந்த மன்றத்திலே நேற்று ஒரு நூறு ரூபாய் நோட்டு கிடைத்திருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்கினிராஜ் அவர்கள் செயலாளரிடத்தில் கொடுத்திருக்கிருர்கள். அந்த நோட்டிற்குடையவர் சான்றுகளைக் கூறி செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கிறேன்.

6. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையின் பேரில் பேசுவதற்கு அதிக வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ருர்கள். ஆனல் நான் இருக்கும் நேரத்தைக் கட்டுப்படுத்த வேண்டியிருப்பதால், அப்படி அதிகமாகக் கொடுப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். 25 உறுப்பினர்கள் பேச இருக்கிருர்கள். ஒவ்வொருவருக்கும் 6 நிமிஷத்திற்கு மேல் கிடைக்காது. ஆகவே, அந்த வரையறைக்குள் பேசுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது திரு. பி. துரைராஜ் அவர்கள் பேசுவார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, தயவு செய்து மாலை நேரத்தில் சபையை வைத்துக் கொள்ள முடியுமா என்று பார்க்க வேண்டும். அரிசன மானியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது இவ்வளவு குறைவாக, 5, 6 நிமிஷம் என்ருல்



1968 மார்ச் 15] [திரு. வி. கே. கோதண்டராமன்]

நாம் ஏதோ அந்தத் துறையையே குறைவாக மதிப்பிடுவதுபோல் இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 நிமிஷத்திற்குக் குறையாமல் கொடுத்து, இப்பொழுது அவகாசம் இல்லையென்ருலும், மாலையிலும் சபையை வைத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய விருப்பத்திற்கு இணங்க, இப்பொழுது ஒன்றரை மணியோடு காலை நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு, மாலையில் திரும்பவும் மூன்று மணி முதல் $4\frac{1}{2}$ அல்லது 5 மணிவரை வைத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதேபோன்று மற்ற உறுப்பினர்களைக் கொண்டுவந்து சேர்க்க வேண்டிய பொறுப்பையும் இந்த உறுப்பினரே ஏற்றுக் கொண்டால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை அவை ஒத்துக்கொள்கிறது என்று கருதுகிறேன். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 10 நிமிஷம் கொடுக்கப்படுகிறது.

* **திரு. பி. துரைராஜ் :** தலைவர் அவர்களே, இந்த மாண்புமிகு மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் மீது, அதை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கொடுத்தமைக்கு உள்ளபடியே நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது இங்கே இந்த அரிசன மானியத்தின் கீழ் கணிசமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். எனக்கு முன்னுல் பேசிய காங்கிரஸ் நண்பர் கடந்த இருபது ஆண்டு காலமாக காங்கிரஸ் அரிசனங்களுக்காக பெரிய பெரிய தலைவர்களெல்லாம் செய்ய முடியாத அளவிற்கு அவர்களை பொருளாதாரத்தில் செம்மைப் படுத்துவதிலும், தீண்டாமைப் பேயை ஓட்டுவதிலும், திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தப் பணியை செவ்வனே செய்யக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். அதற்கு மகிழ்ச்சி, அவர்களுக்கு நன்றி. அதே நேரத்திலே இன்னென்றையும் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 67 தேர்தலுக்கு முன், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தால் அரிசன மக்களுக்கு தற்போது காங்கிரஸ் சர்க்காரால் தரப்படுகிற சலுகைகளைக் கூடக் கொடுக்க மாட்டார்கள், நிச்சயமாக அவற்றை ரத்து செய்து விடுவார்கள் என்று பேசினுர்கள். இப்பொழுது அந்த நிலை மாறி; இப்பொழுது அவர்கள் பெரிய பெரிய தலைவர்களாலும் செய்ய முடியாதுபோன காரியங்களை நமது மாநில முதல் அமைச்சர், பேரறிஞர் அண்ணு அவர்களுடைய காலத்தில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னென்று அவர்கள் குறிப்பிட்டது, கோவில் நிலங்களில் வரும் வருமானத்திலிருந்து குறைந்தது ஒரு ஐந்து சதவிகிதத்தையாவது அரிசன நலத் துறைக்கு பயன்படுத்தவேண்டும் என்று சட்டம் கொண்டு வரவேண்டும் என்பது. கடந்த 20 ஆண்டு காலத்தில் அப்படிப்பட்ட முயற்சி எடுத்துக் கொண்டிருந்தால் மிக்கப் பயன்பட்டிருக்கும். ஆனுலும், அது நல்ல ஆலோசனை. இப்பொழுது உள்ள நம் திராவிட முன்னேற்றக் கழக அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற பேரறிஞர் அண்ணு அவர்கள் அப்படிப்பட்ட சட்டத் திருத்தத்தைச் செய்து, கோவில் நிலங்கள் வருமானத்திலிருந்து ஒரு சிறிது பாகத்தை அரிசனத் துறைப் பணிக்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மகாத்மா காந்தி அடிகள் தாழ்த்தப்பட்டவர்களை கடவுளுடைய குழந்தைகள் என்று அரிசன் என்று அழைத்தார்கள். அப்படிப்பட்டவர்களுடைய நலனுக்காக, கடவுளின் இருப்பிடமாகிய கோவில் நிதியிலிருந்து ஒரு பாகத்தை ஒதுக்குவதில் எல்லா உறுப்பினர்களும், இந்த நாட்டிலுள்ள எல்லா சமூகத்தினரும் மறுக்க மாட்டார்கள், அதற்கு தடை சொல்ல மாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

[திரு. பி. துரைராஜ்] [1968 மார்ச் 15

இப்பொழுது அரிசனத் துறைக்கு ஒதுக்கி உள்ள தொகை மிகவும் குறைந்ததாக இருந்தாலும், மாநில நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, அந்த வசதிக்கு ஏற்ப கணிசமான தொகையே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நம்புகிறேன். கடந்த 20 ஆண்டு காலத்தில் கொடுக்கப்பட்ட சலுகைகளை விட கூடுதலான சலுகைகளை தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவிக்கிறார்கள். கடந்த 10 ஆண்டு காலமாக வருமான உச்சவரம்பை உயர்த்த வேண்டும் என்று நாங்கள் கேட்டு வந்திருக்கிறோம். கடந்த காலத்தில் இந்த மன்றத்திலேயே அப்படிக் கேட்கும் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. ஆனால், கடந்த ஆண்டில் மாண்புமிகு முதல் அமைச்சர், பேரறிஞர் அண்ணா அவர்களிடம் தாழ்த்தப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்டவரையில் வருமான உச்சவரம்பை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். அந்த வரம்பை 2,000 என்று உயர்த்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம். அதே விதமாக 2,000 என்று உயர்த்தியிருக்கிறார்கள். மேலும், அரிசன மாணவர்களுக்கு உணவு விடுதியில் உதவித் தொகை கொடுப்பது போதாது, குறைந்தது ரூ. 2-ஆவது உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். நிதி நிலைக்கு ஒட்டியவாறு உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கேள்விக்குப் பதில் சொல்லும்போது, அரிசன நலத் துறை அமைச்சர் ஒரு சில நாட்களுக்கு முன், கடந்த கால அரசாங்கமே அரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தைக் கைவிட்டது என்று சொன்னார்கள். இப்பொழுது நம்முடைய அரசாங்கம் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு இருப்பதாக அறிக்கையில் காண்கிறேன். அஸ்திவாரம் போடும் அளவிற்கு ரூ. 25 ரொக்கமாகவும், மேலும் மேல்கூறைக்கு ரூ. 125 பெறுமானமுள்ள சாமான்களும் கொடுக்கத் திட்டம் அமுல் செய்யப் படுகிறது. அதுவும் காங்கிரஸ் ஆட்சியில் கைவிடப்பட்டது. அதை இந்த அரசு கொள்கையளவில் எடுத்து நடத்துவதற்காகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அரிசன, பிற்பட்ட மக்களுக்கு புதியதாக, வாணிபத்தில், தொழில் துறையில் வளம் பெறும் வகையில் ஒரு இலட்ச ரூபாய்களை ஒதுக்கி சிறப்பு அம்சமாகச் செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொகை போதாது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். உண்மை தான். இருந்தாலும், அரிசன மக்கள் வாணிபத்தில் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல அறிகுறிதான் என்பதைச் சொல்லிக் கொண்டு, இந்தத் திட்டமானது நடைபெற்று அரிசன மக்கள் உயர்த்தப்பட்டால், பெரியதொரு முன்னேற்றம் ஏற்படுமானால், வருகின்ற ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்னும் அதிகமான தொகைகளை ஒதுக்கி, இலக்கை உயர்த்துவார்கள் என்கின்ற நம்பிக்கை இருக்கிறது.

அடுத்தபடியாக, அரிசனங்களுடைய குறைகளைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், அந்தக் குறைகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு ஏற்பட்டவையல்ல. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே அரிசனங்களுக்கு பல சலுகைகளைக் கொடுத்தார்கள் என்றாலும், அரசாங்க உத்தியோகம் பெறக்கூடிய வகையில், பதவி உயர்வுகள் கொடுப்பதில், நல்லமுறையில் அவை அவர்களுக்கு வழங்கப்படவில்லை. உதாரணமாக, அரிசன மக்களுக்கு சென்னை நகரத்தில் போதிய வீட்டு வசதி கிடையாது. அரசு ஊழியர்கள் வீடுகளுக்குக் கஷ்டப்படுகிறார்கள். இப்பொழுது இருக்கும் நம் அரசாங்கம் அந்த மக்களுக்கு சலுகைகள் கொடுத்து வீட்டு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்றும், பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். பதவி உயர்வுகள் கொடுப்பதிலும், மாற்றங்கள் செய்வதிலும் கூட, அரிசன மக்கள் என்றால் அவர்களுக்குப் பாதகமான சூழ்நிலையைத்தான் ஏற்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையைப் போக்கி, நல்ல



1968 மார்ச் 15] [திரு. பி. துரைராஜ்]

முறையில் அவர்களுக்கு வேண்டிய பதவி உயர்வுகள் காலாகாலத்தில் கொடுக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். முன்பு உயர்திரு வைத்தியநாதன், ஐ.ஸி.எஸ். அவர்கள் குறிப்பிட்டிருந்த அளவில் பதவி உயர்வுகள் அரிசன மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அவர்களுடைய சிபாரிசை கடந்த கால அரசாங்கமே ஜி. ஓ. எம். எஸ். 39, பப்ளிக் சர்வீஸஸ், 18—1—1965, என்ற எண்ணுள்ள ஆர்டரில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவில் பதவி உயர்வுகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். பி. டி. ஓ., பஞ்சாயத்துக் கமிஷனர்கள் போன்ற பதவிகள் 50 சத வீதம் கொடுக்கப்படவேண்டும் என்று இருந்தாலும் இன்றைக்கு இருக்கும் அதிகாரிகள் 20 அல்லது 22 தான் இருக்கிறார்கள். அந்த விகிதாசாரத்தை நிரப்ப வேண்டும். தகுதி பெற்றவர்களுக்கு இ. ஓ. பஞ்சாயத்து, இண்டஸ்ட்ரீஸ் இ. ஓ. போன்ற பதவிகளுக்கும் உயர்வுகள் கொடுத்து, அந்த விகிதாசாரத்தை நிரப்ப வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கோவில் நிலங்களில் தாழ்த்தப்பட்ட அரிசன மக்கள் பயிர் செய்து வருகிறார்கள். அந்த நிலங்களில் பயிர் செய்து வரும் அரிசனங்களுக்கு நல்ல முறையில் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தாழ்த்தப்பட்ட இந்து சமூகத்தைச் சேர்ந்த அரிசன மக்களுக்கு அளித்துவரும் சலுகைகளை கிறிஸ்துவ தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தர வேண்டும் என்று கடந்த கூட்டத்திலும் நான் சொன்னேன். அறிஞர் அண்ணா அவர்கள் மனமுவந்து அத்தகைய ஒரு தீர்மானத்தைச் செய்து தமிழக அரசின் சார்பாக மத்திய அரசுக்குச் சிபார்சு செய்யவேண்டும் என்று மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு மீண்டும் நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

முற்பகல் 11-00

* **திரு. மு. முத்தையா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரிசன மானியக் கோரிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக அன்புகலந்த நன்றியை நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அரிசனங்கள் பல்லாண்டுகளாக ஒதுக்கப்பட்டவர்களாக இருந்து வருகிறார்கள். மகாத்மா காந்தியடிகள், எங்கள் மாபெரும் தலைவர் ராஜாஜி, மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்களைப் போன்ற அரும் பெரும் தலைவர்கள் எல்லோரும் எடுத்த முயற்சியின் பயனாக இன்று ஒரு வகையில் அரிசன மக்களுடைய நிலை சீர்திருந்தி வந்திருக்கிறது என்று சொல்லலாம். ஆனால், கிராமப்புறங்களில் பல இடங்களில் தீண்டாமை என்னும் தொத்து நோய் இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது.

1967-ம் ஆண்டில் நமது மாண்புமிகு அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் எனது தொகுதியாகிய ஓட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள புதியம்புத்தூர் பஞ்சாயத்து ஆபீஸ் திறப்பு விழாவுக்காக வந்திருந்தார்கள். அங்கே ஒரு சம்பவம் நடந்தது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஒரு அரிசனன் இன்னொரு வகுப்பைச் சேர்ந்தவர் தோட்டத்தில் வேலை செய்யும்போது ஒரு சொம்பைத் தொட்டதற்காக, அந்தச் சொம்பை அந்த அரிசனனுக்கே கொடுத்துவிட்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை வாங்கி அந்த ஊர் பஞ்சாயத்து ஆபீசுக்கே அன்பளிப்பாகவும் கொடுத்துவிட்டு வந்தார்கள். இத்தகைய நிலைமை கிராமப்புறத்தில் இருக்கிறது. ஆகையால், கிராமப்புறத்தில் தீண்டாமை ஒழிப்பைப்பற்றி மிகத் தீவிரமாகப் பிரசாரம் செய்வதன் மூலமாகவும், அதற்குரிய மற்ற நடவடிக்கைகளையும் கிராமப்புறங்களில் செய்வதன் மூலமாகவும்தான் இதற்கு ஒரு பரிகாரம் காணமுடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன.

கிராமப்புறத்திலுள்ள அரிசன தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பாலும் நடுத்தர விவசாயிகளாகவும், விவசாயக் கூலிகளாகவும்தான் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கூலிக்கு வேலை செய்யக்கூடியவர்களாகத்தான் இருக்கிறார்கள். காலையில் கதிரவன் உதிக்கும் முன்னால் கஞ்சிக்கலயம் கொண்டு, காட்டிலும் மழையிலும் வெய்யிலிலும் நின்று, அல்லும் பகலும் அயராது உழைத்து உருக்குலைந்து அவன் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் இன்றி பலர் திண்டாடுகிறார்கள். அதை இந்த அரசு அறியும். முன்பிருந்த அரசு செய்த முறையிலேயே இந்த அரசும் செய்து வருகிறது என்றே நான் கருதுகிறேன்.

இந்த அரசு அரிசனங்களுக்காகச் சில குடிசைத் தொழில்களை ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். சுண்ணாம்புக் காளவாய், கூடை முடைதல், பாய் முடைதல் போன்ற குடிசைத் தொழில்களை அரிசனங்களுக்காகச் செய்து வந்தாலும், அடிமையாகப்பட்டவர்கள் அடிமையாகத்தான் இருக்கிறார்கள். இதை அரசாங்கம் உணர்ந்து, வேறு ஏதாவது முன்னேற்றகரமான தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தி, அவர்களுடைய வாழ்வை வளம்பெறச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அரசாங்கம் அரிசனங்களுக்காக கல்விச் சலுகை அளிக்கிறது. அந்த வகையில், ஸ்காலர்ஷிப்புக்கான பாரத்தில் கையெழுத்துப் போடும்போது 'அரிசன்' என்று போட்டால் போதாது. அவர் எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுப் போட வேண்டியிருக்கிறது. இது என் என்று புரியவில்லை. அரிசன் என்றால், கடவுளின் மக்கள் என்றே மகாத்மா காந்தியடிகள் சொன்னார்கள். அதைப் போன்று மற்ற அறிஞர் பெருமக்களும் ஒத்துக்கொண்டார்கள். அரிசன் என்று போட்டால் போதாது, வகுப்பைக் குறிப்பிடவேண்டும் என்று கட்டாயப் படுத்துவது எப்படியிருக்கிறது என்றால், ஒரே வகுப்பாக இருக்க வேண்டும் என்ற நிலையை உண்டாக்குவதற்குப் பதிலாக அரிசன மக்கள் பல வகுப்புகளாகத் தொடர்ந்து இருக்கவேண்டும் என்ற நிலையே தொடர்ந்து இருக்கவேண்டும் என்று கருதுவதாகத் தோன்றுகிறது. அதை முதல் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்த்து, அத்தகைய முறை இருப்பதைத் திருத்தியமைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரிசன மக்கள் பெரும்பாலும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டவர்களாக இருப்பதால், அவர்களுக்கு விவசாயத்தில் நல்ல ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டும். விவசாயத் தொழிலில் அவர்கள் முன்னேறி கொஞ்சம் செல்வந்தர்களாக வரும் நிலை ஏற்பட்டுவிடுமானால் அவர்களையும் மற்றவர்கள் மதிக்கக்கூடிய நிலை ஏற்படும். ஏழையாக இருக்கும்போது எவரும் இவர்களை மதிக்கவும் மாட்டார்கள், இவர்கள் முன்னேறவும் வழி இருக்காது. ஆகவே இவர்களை விவசாயத்தில் மேலும் சிறப்பாக முன்னேற்றுவதற்கான வழி வகைகளை இந்த அரசு செய்யவேண்டும். இவர்களை விவசாயத்தில் ஊக்குவிக்க வேண்டும். விவசாயத்தில் ஊக்குவித்தால்தான் இவர்கள் பல வழிகளில் முன்னேறுவார்கள்.

கல்வி சம்பந்தப்பட்ட வரையில் அரிசன மக்கள் ஓரளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள் என்று அரசாங்கம் பெருமையுடன் கூறிக்கொள்ளலாம். என்னுடைய தொகுதியாகிய ஓட்டப்பிடாரத்தில், சாலிக்குளம் என்ற ஊரில் காட்டிலாக்கா சம்பந்தப்பட்ட இடம் இருக்கிறது. அதில் சுமார் 100 அடிக்குள் தண்ணீர் இருக்கிறது. அந்த இடத்தில் பல கிணறுகளை அரசாங்கத்திலிருந்து வெட்டிக் கொடுத்து, பம்ப் செட் அமைத்துக்கொடுத்தால் அரிசன ஏழைகளும், மற்ற வகுப்பைச் சார்ந்த ஏழைகளும் நன்கு பிழைத்துக் கொள்ளுவார்கள். அதைச் செய்தால் மிகவும் உசிதமாக இருக்கும், உணவு பற்றாக்குறையும் தீரும்.



மாண்புமிகு அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் திருநெல்வேலியில் நடந்த விவசாயக் கருத்தரங்கிற்கு வந்திருந்தார்கள். அப்போதே சொன்னேன். அதுபற்றி அவர்கள் ஆராயவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

முந்திரி சாகுபடிக்காக எத்தனையோ கோடி ரூபாய் செலவு செய் [illegible] என்றாலும், அந்த சீதோஷ்ண நிலைக்குப் பொருந்தாத காரணத்தால் அவர்கள் செலவு செய்த தொகை கூட வரவில்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை [illegible] உருவாகிக் கொண்டிருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரிசன மக்கள் பெரும்பாலும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றாலும், அவர்களும் மற்ற சமூகத்தினருடன் ஒத்து வாழ்வதற்காக [illegible] சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் அவர்களுக்குத் தனி 'ஸீட்' கொடுத்திருப்பது போல ஊராட்சி [illegible] திலும் அரிசனங்களுக்குத் தனி 'ஸீட்' [illegible] ஊராட்சி ஒன்றியத் தேர்தலிலும், மன்றத் தலைவர் தேர்தலிலும், அரிசனங்களுக்கு என்று தனி 'ஸீட்' ஒதுக்குப்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டு பட்ஜெட் கூட்டம் இங்கே நடந்துகொண்டிருந்த பொழுது சென்னை நகரத்தில் தீ விபத்து நடந்தது. அந்த நேரத்தில் [illegible] 60 [illegible] பாதிக்கப்பட்டவர்களுக்கு [illegible] எல்லா இடங்களில் உள்ளவர்களுக்கும் [illegible] கொடுக்க தரவேண்டும். எல்லா கிராமங்களுக்கும் ஒரே மாதிரியாகக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் அங்கத்தினர் அவர்கள், தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முப்பது [illegible] வழங்குவதாகச் சொன்னார்கள். [illegible] மேற்கொண்டு வழங்க [illegible] முறையாக குறிப்பிட்டு எழுதி அனுப்பினால் பெற்றுக்கொண்டு [illegible] செய்யலாம்.

**திரு. மு. முத்தையா:** அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் மிகவும் வரவேற்கிறேன். நன்றி.

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு"

என்று வள்ளுவர் கூறியுள்ளார். அதாவது, குறையாத விளைபொருளும், தக்க அறிஞரும், கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிய பெருந்தியுள்ள நாடே நாடாகும். [illegible] பகுதி பெரும்பாலும் மானாவாரிக் காடுகளாக இருக்கிறது. அங்கே [illegible] கொடுக்க அங்கு விவசாயம் செய்யும் மக்களுக்கு [illegible] திருநெல்வேலிப் [illegible] வேண்டும். [illegible] பகுதியில் [illegible] பம்ப் செட் வைத்து [illegible]. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அந்த [illegible] வானம் பார்த்த [illegible] தண்ணீர் இல்லையென்றால், பக்கத்தில் உள்ள பம்ப் செட் அமைத்து கிணறுகளை வைத்துக்கொண்டிருக்கிறவர்களிடம் வாடகை கொடுத்து தண்ணீர் கொண்டு வருகிறார்கள். அப்பொழுது 3

ஹார்ஸ் பவர் மோட்டார் பொருத்தியுள்ளதாக இருந்தால் ஒரு மணி நேரத்தில் மூன்று ரூபாயும், 5 ஹார்ஸ் பவர் மோட்டார் பொருத்தியுள்ளதாக இருந்தால் ஐந்து ரூபாயும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இறைத்து அவர்கள் விளைச்சலைப் பெருக்கும்போது, அதற்கு அரசாங்கத்தின் கொள்முதல் விலையும் ஒரே அளவில்தான் இருக்கிறது. பாசன வசதி உள்ள இடத்திற்கும் அதே ரேட்தான். நாங்கள் பம்ப் செட் வைத்துக்கொள்வதற்கும் அதே ரேட்டாகத்தான் இருக்கிறது. மானவாரி காட்டு பூமியைப் பொறுத்தவரையில், இதற்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப் பார்க்கிறபொழுது சைனா பஜாரில் ப்ளாஸ்டிக் சாமான்களை வைத்துக்கொண்டு, 'எதையெடுத்தாலும் ஒரு ரூபாய்' என்று சொல்வார்களே, அதுபோலத்தான் அரசாங்கம் கொள்முதல் விலையும் இருக்கிறது. பம்ப் செட் வைத்து விவசாயம் செய்கிறவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கின்றேன்.

* **திரு. எஸ். முத்துலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிஜன நலத் துறை மானியத்தை ஆதரித்து நான் சில பல கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நமது மேன்மைதங்கிய தமிழக அரசாங்கம் பல முன்னேற்றத் திட்டங்களுக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி நாட்டை வளப்படுத்துகிறது. கல்வித் துறையில் சிறப்பாக அரிஜன மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளித்து, பின்தங்கிய வகுப்பினரை முன்னேற்றப் பாடுபடுவது மிகவும் பாராட்டத்தக்கது. ஆனால் அரசாங்கத்தின் பணம் ஒருசிலரால் சரியாக வினியோகிக்கப் படாமல், ஏழை மாணவர்களுக்குப் போய் கிடைக்காமல் ஏமாற்றப் படுகிறது. அவ்வாறு ஏமாற்றுகிறவர்களைக் குறித்துப் புகார் செய்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுப்பதில்லை

உதாரணத்திற்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டம் ஆரணி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் 1966–67-ம் ஆண்டில் இரும்பேடு கிராமத்திலுள்ள ஏகாம்பரம் குமாரன் முத்து என்பவர் பத்தாம் வகுப்பிலும், மாளிகைப்பட்டு கிராமத்திலுள்ள கோபால் குமாரன் ஜி. ஜெயராஜ் என்பவர் எட்டாம் வகுப்பிலும் படித்தார்கள். இருவரும் பெயிலாகி விட்டதால், 1967 ஜூன் மாதம் டி. சி. பெற்றுக் கொண்டனர். திரு இ. முத்து என்பவர் சத்தியவிஜயநகரம் அரசினர் உயர்நிலைப்பள்ளியிலும், திரு ஜி. ஜெயராஜ் என்பவர் மேல்மட்டை விண்ணமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளியிலும் சேர்ந்துவிட்டார்கள். மேலே கூறிய இரண்டு மாணவர்களுக்கும் 1967–68-ம் ஆண்டிற்கு ஆரணிப் பள்ளிக்கு சாங்ஷன் ஆகிய 'அரிஜன ஸ்காலர்ஷிப்' பணத்தை அப்பள்ளித் தலைமை ஆசிரியர் அவர்கள் அந்தப் பையன்களும், பையன்களின் பெற்றோர்களும் கையெழுத்துப் போட்டுப் பணம் பெற்றுக் கொண்டதாக போலி தஸ்தாவேஜு தயாரித்தார். அந்த போலி தஸ்தாவேஜை வேலூர் டிஸ்ட்ரிக்ட் அரிஜன் வெல்ஃபேர் ஆபீசருக்கு அனுப்பி விட்டு அப்பணத்தைக் கையாடல் செய்துவிட்டதாக அம்மாணவர்களின் பெற்றோர் அனுப்பிய மனுக்களால் தெரிய வந்தது. இதுகுறித்து, புகாரை மாண்புமிகு அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும், மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து அவர்களுக்கும், கல்வி இலாகா டைரக்டருக்கும், கோவை மண்டலக் கல்வி அதிகாரி அவர்களுக்கும், வேலூர் மாவட்டக் கலெக்டர் அவர்களுக்கும், வேலூர் டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபேர் ஆபீசர் அவர்களுக்கும் 21—1—1968-ம் தேதியன்று செய்துள்ளேன். அந்த இரண்டு மாணவர்களுமே 1967 ஜூன் மாதத்திலேயே டி. சி. பெற்று வேறு பாடசாலைகளுக்குச் சென்றுவிட்டார்கள். டி. சி. பெற்று போய்விட்டபிறகு முன்பு படித்த ஆரணி பாடசாலையில் அம்மாணவர்கள் பேரில் பணம் பட்டுவாடா ஆகஸ்டு மாதத்தில் செய்யப் பெற்றுள்ளதாகவும், பட்டுவாடா ரிஜிஸ்டரில் அம்மாணவர்களின் கையொப்பமும், அவர்களுடைய பெற்றோர்களின் கையொப்பமும் பிறரால் போடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. கீழ்வகுப்பு மாணவர்களுக்கு, அதாவது 6, 7, 8-ம் வகுப்புகளுக்கு . . . (மணியடிக்கப்பட்டது)





**மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே ஐந்தாண்டுக்காலம் இந்த மன்றத்தில் இடம் பெற்றிருப்பவராக இருக்கிறார். அரிஜன சமுதாயத்திற்கு என்னென்ன நன்மைகள் செய்ய வேண்டும், எந்தெந்த முறைகளில் செய்யவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் விரிவாக எடுத்துப் பேசினால் அரிஜன சமுதாயத்திற்கு நன்மை கிடைத்ததாக இருக்கும். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள், புகார்கள், கையாடல்கள் இவற்றையெல்லாம் தனியாக எடுத்துச் சொன்னால் தக்க நடவடிக்கை எடுக்க நாங்கள் முன்வருவோம். அதற்காக இந்த மன்றத்தினுடைய பொன்னான நேரத்தையெல்லாம் வீணாக்க வேண்டாம். அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிய காலத்திற்குள் அரிஜன சமுதாயத்திற்குச் செய்யப்படவேண்டிய நன்மைகளைக்குறித்து தன்னுடைய ஆலோசனைகளைக் கூறினால் நலமாக இருக்கும். கனம் உறுப்பினர் அவர்கள் இன்னும் அதிகமாக தங்கள் ஆலோசனைகளைக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

**திரு. எஸ். முத்துலிங்கம் :** விளக்கம் கூறியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக நான் இதைச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், இம்மாதிரியான நிலைமைகள் அரிஜன மாணவர்களுக்கு ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான். இதை யாரும் கவனிப்பதே கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே நான் 21—1—68-ம் தேதியன்று அனுப்பிய புகார் மனுக்களுக்கு இரண்டு மாதங்களாகியும் இதுவரையிலே யாரிடமிருந்தும் எந்தவிதமான தகவலும் எனக்குக் கிடைக்கவில்லை. என்னுடைய புகாரின் பேரில் யாரும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினன் என்ற முறையிலும், மாகாண அரிஜன நலக் கமிட்டி மெம்பர் என்ற முறையிலும், டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபேர் கமிட்டி மெம்பர் என்ற முறையிலும் புகார் செய்த எனக்கே இந்த நிலையென்றால், மற்றவர்களுடைய நிலை எப்படியிருக்கும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும் இம்மாதிரியான நிலைமைகள் ஏற்படுவது மிகவும் வருந்தத்தக்க செய்தியாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரியான செயல்கள் மேலும் நீடிக்கக் கூடாது. அரிஜன மாணவர்களுக்கு இம்மாதிரியான நிலைமைகள் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இதைக் கூறிக்கொள்கிறேன். ஆகவே அரசாங்கம் நல்ல முறையிலே கவனம் செலுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கோருகிறேன்.

அடுத்தபடியாக, மாணவர்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் ஸ்காலர்ஷிப் பாரங்கள் கிடைக்காமல் போவதால், மாணவர்கள் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள். அந்தப் பாரங்களை அரசாங்க அச்சகத்திலே பெருவாரியான அளவில் அச்சிட்டு, ஏழை மாணவர்களுக்கு காலாகாலத்தில் கிடைக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் ஏழை அரிஜன மாணவர்களுக்கு வழங்கும் பணம் காலாகாலத்தில் கிடைக்க வழிவகை செய்யவேண்டும். மேலும் ஏழை அரிஜனங்களுக்கு வழங்கும் கடன்களை தாமதமின்றி உடனடியாக வழங்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிஜனங்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து கொடுப்பதிலும், வீட்டுமனைகள் வழங்குவதிலும், அரிஜன காலனிகளுக்கு மின்விளக்குகள் அமைத்துக் கொடுப்பதிலும் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை நல்ல முறையில் துரிதமாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அரிஜன மக்களைப் பொறுத்தமட்டிலே அன்று எப்படி நிலைமை இருந்ததோ அதேபோன்றுதான் இன்றும் இருக்கிறது. இதில் மாறுதல் எதுவும் இல்லையென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். காரணம்

[1968 மார்ச் 15

**திரு. மா. இராசாங்கம் :** சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இந்த அரிசன மானியத்தை ஆதரிக்கிறேன். இது பலவிதமான செல வினங்களைக் கொண்ட பொதுபட்ஜெட் போல இருக்கிறது. எப்படி என்றால் பொதுபட்ஜெட்டில் கல்வி மானியம் உண்டு. இதிலும் கல்வி மானியம் இருக்கிறது. அங்கே விவசாயம் இருக்கிறது. இதிலும் விவசாயத்திற்கு ஒதுக்கப்படுகிறது. சாலை வசதிகளுக்கு அங்கே பணம் ஒதுக்கப்படுவதுபோல இங்கும் ரோடுகள் போடுவதற்குப் பணம் ஒதுக்கப்படுகிறது. மின்சாரத் திற்கும் ஒதுக்க வேண்டியதாக இருக்கிறது. இப்படி ஒரு பொதுபட்ஜெட் போலவே இது இருக்கிறது. எந்த அளவுக்கு சர்க்கார் இந்த இனத்தின் கீழ் அதிகமாகப் பணம் ஒதுக்கிச் செலவு செய்தாலும் அரிசனப் பெரு மக்கள் அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் 41·/. மக்கள் தொகையை உள்ளடக்கிய மானி யம் இது. நிதி போதாத நிலைமையில் இருக்கக்கூடியதைக் கொண்டு அதிகமானதை ஒதுக்கி சரிக்கட்டியிருக்கிறோம் என்பதைத் தவிர இது போதும் என்று யாரும் சொல்லவில்லை. இருக்கிற வசதியை வைத்துக் கொண்டுதான் செய்திருக்கிறோம். புதிதாக ஒன்றும் இல்லை என்று சொல்ல முடியாது. சில காரியங்களைப் புதிதாகவும் செய்திருக்கிறோம். முன்பு மாணவர்களுக்கு உடை கொடுப்பது கிடையாது. இப்போது உடை கொடுக்க வகை செய்திருக்கிறோம். மேலும் கடை ஏற்படுத்திக்கொடுக்கிற வாய்ப்பைச் செய்திருக்கிறோம். திரு. இராமலிங்கம் பேசுகிறபோது யார் போய். அந்தக் கடையில் வாங்குவார்கள் என்று சொன்னார். அந்தக் கடையில் போய் வாங்குங்கள் என்று பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கிற நாம்தான் பிரச்சாரம் செய்து அந்தச் சமுதாய மக்கள் தொழில்துறையில் ஊன்றிக்கொள்ள வழிசெய்ய வேண்டும். மேலும் வொர்க்ஷாப் வைப்ப தற்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சைக்கிள்ஷாப் வைக்க ஒதுக்கப் பட்டிருக்கிறது. இவை எல்லாம் பாராட்டப்பட வேண்டிய புதிய அம்சங்கள். உதவித்தொகை இப்போது கொடுக்கிறார்கள். முன்பு எல்லாம் உதவித் தொகை மாணவர்களுக்கு வருடக் கடைசியில் கையில் மீதிப்பணம் வாங்குகிற நிலைமை இருந்தது.

முற் பகல் 11-30 உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் விடுதிச்செலவு டிவைடிங் லிஸ்டமாக இருப்பதால் மாதத்துக்கு 20–25 ரூபாய் பற்றுக்குறையாகப் போய் விடுகிறது. வருஷத்துக்கு 300 ரூபாய் பற்றுக்குறை ஆகிவிடுகிறது. சில வேளைகளில் பரீட்சை எழுத முடியாமல் கூட அரிசன மாணவர்கள் தவிக்கிறார்கள் என்ற நிலையை இங்கே சுட்டிக் காட்டாமல் இருக்க முடிய வில்லை.

மதிய உணவைப்பற்றிச் சொல்லும்போது, திரு. கோதண்டராமன் அவர்கள் மற்றவர்களுக்குக் குறைவாகவும் அரிசனங்களுக்குக் கூடுதலாகவும் இருப்பதாகச் சொல்கிறார்கள். உள்ளபடியே அதில் பெருந்தன்மை இருக்கிறது. ஆனால் அந்த உணவு கொடுக்கும் வகையில் ஏதோ ருசிக்குச் சோறு கொடுக்காமல் பசிக்குத்தான் மாணவர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆகவே இன்னும் அவர்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பண்டங்களைக் கொடுக்க வேண்டும். எங்கெங்கே அரிசன விடுதிகள் நடத்துகிறார்களோ, எங்கெங்கே மதிய உணவு திட்டம் உருவாகிறதோ அங்கெல்லாம் கண்ட்ரோல் விலையில், நியாயமான விலையில் அரிசி கிடைக்க சர்க்கார் வழி செய்தால் தான் இன்னும் நல்ல வாய்ப்புக்கள் ஏற்படும் என்ற நிலைமையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நல்ல துறையில் கூடுமான வரையில் சம்பந்தபட்டவர்களையே அதிகாரிகள் ஆகப் போடுவது தான் நல்லது. அப்போதுதான் தனி ஆர்வம் காட்டப்படும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இருந்தால்தான் அவர்களுக்கே ஒரு தனி ஆர்வம் ஏற்படும். நான் ஏதோ சொல்வதாகக் கருதவேண்டாம். பெரியவர்கள் கூடச் சொல்கிற கருத்துத்தான் இது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இருந்தால்தான் அவர் களுக்கே ஒரு தனி ஆர்வம் ஏற்படும், வேறு வகுப்பினர் இருக்கக் கூடாது என்ற கருத்தல்ல. ஆனால் வேறு வகுப்பினர் இருக்கும் இடங்களில் அக்கறை குறைவாகத் தோன்றுகிறது. உதாரணமாக கள்ளர் ரிக்ளமேஷன் கலெக்டர் ஆக நியமிக்கப்பட்டவர் இதுவரையில் ஒரு முறைகூட அந்த இனத்தைச் சேர்ந்தவா, அதற்கு நியமிக்கப்படவில்லை. இதைக் குறைபாடாகச்



1968 மார்ச் 15] [திரு. மா. இராசாங்கம்]

சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் நியமிக்கப்படுவார்கள் என்று நம்பிக்கை இருக்கிறது. அரிசனநலத் துறையில் உள்ள சில அதிகாரிகள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக் காட்டுகிறார்கள் என்று பல இடங்களில் பேசப் படுகிறது. இதை நான் இன்று மட்டும் அல்ல. பொதுவாக 4, 5 ஆண்டு காலமாகவே சொல்லிக்கொண்டு வருகிறேன். புதிய அரசு மதுரையிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அண்மையில்கூட மாற்றங்கள் ஏற் படுத்தினார்கள். அரிசன மக்கள் உண்மையிலேயே நல்ல நிலைமைக்கு வர வேண்டுமானால் அந்த ஆசை உள்ளவர்களைத்தான் அதில் அதிகாரியாகப் போட வேண்டும. அப்படிப் போட்டால் மிகப் பலன் அளிக்கும்.

இஸ்லாமிய மதத்தினருக்கும் கிருஸ்துவ மதத்தினருக்கும் மதம் மாறிய காரணத்தினால் உதவிப் பணம் கிடைக்காமல் போகிறது. மதம் மாற்றம் என்றால் மனமாற்றமே தவிர பொருளாதாரத்தில் மாற்றம் இல்லை. ஏதோ மதம் மாறிவிடும் காரணத்தால் பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்படுவதுபோல் இங்கு சட்டச் சிக்கல் இருக்கிறது. அரிசன மக்களா என்ற ஒரே கேள்வி கேட்டு அவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கிறார்கள். மதம் மாறியிருக்கிறார்கள் என்ற காரணத்தைக் காட்டி மற்றவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்காமல் இருப்பது சரி அல்ல. அவர்கள் மதம் தான் மாறியிருக்கிறார்கள். என்று மிக நன்றாகத் தெரியும். மேலும் செக்யூலர் ஸ்டேட் என்ற கொள்கையை வைத்திருக்கிற நிலையில், மதச் சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறோம் என்று சொல்கிற நிலையில் நாம் அரிசன மாணவர்களானாலும் மதம் மாறினவர் களானாலும் அவர்களைப் பொருளாதாரத்தில் முன்னேற்ற வேண்டும் என்ற ஒரே லட்சியத்தை மட்டும் கருத்தில் கொண்டு அரிசனங்களுக்கும் அளிக்கும் சலுகைகளை மதம் மாறிய இஸ்லாமிய கிருஸ்துவ மதத்தினருக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகரசுத்தித் தொழிலாளர்களைப் பற்றி ஒரு விசித்திரமான நிலை இருக்கிறது. நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு, வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் அரிசன நல மானியத்தில் இருந்து பாதித் தொகையும் மத்திய அரசிட மிருந்து பாதித் தொகையும் கிடைக்கிறது. ஆனால் நகராட்சியில் கொடுக்கப் படுகிற வீட்டுக்கு வாடகை கொடுத்துதான் அவர்கள் இதுவரையில் இருக் கிறார்கள். ஏதோ இனாமாகக் கட்டிக் கொடுத்த வீடுபோலப் பேசப்படுகிறது. ஆனால் கொடுப்பது அப்படி இல்லை. வேலையை விட்டுப் போகும்போது இதுபோன்ற வீடுகளிலிருந்து வெளியே போகும் நிலை இருக்கிறது. அப்படிப் பட்ட நிலை இல்லாமல் அந்த வீட்டை அவர்களுக்கே உடைமை ஆக்குவதற்கு சட்டத்திலே வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீண்டாமையை பொருத்தவரையில் இப்போது எல்லாம் எங்கள் பகுதியில் அது அறவே ஒழிந்திருக்கிறது என்று நாங்கள் துணிச்சலாக சொல்லலாம். அவர்களுக்கு இப்போது பொது வாழ்வில் இருக்கிறவர்கள் தான் ஊக்கம் அளிக்க வேண்டும். திரு. கோதண்டராமன் அவர்கள் சொல்லும்போது ஸ்தல ஸ்தாபனங்களில் சில வேலைகளை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் இதுவரையில் அவர்கள் தேடிச் சென்ற நிலை இருக்கிறதே அல்லாமல் அவர்களைத் தேடி வரும் நிலை இல்லை. அவர்களைத் தேடிவரும் ஏற்பாட்டைச் செய்தால்தான் இறங்கிவரும் மனப்பான்மை மாறி ஏறி வரும் மனப் பான்மை வரும். உத்தியோகங்கள் இவர்களைத் தேடி வரும் நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி என் உரையை முடிக் கிறேன். வணக்கம்.

* **திரு. கே. பி. எஸ். மணி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது பேசுவதில் நான் பெருமை அடைகிறேன். இந்த அரசு கடந்த காலச் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால், ஒரு நாட்டின் பொருளாதாரமும் அதன் செல்வாக்கும் உலகத்தில் முன்னேற வேண்டும் என்றால் வாழ்க்கையின் அடித்தளத்தில் இருக்கும் மக்களுடைய முன்னேற்றம்தான், பெண்களுடைய முன்னேற்றம்தான் தேசத்தின் பெரிய முன்னேற்றமாக பெரியவர்கள் எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள்.

நடந்து வருகின்ற முறையும் அப்படித்தான். அதைப் போலவே இந்த தேசத்தில் வாழும் பெரும் பகுதியான தொழிலாளர் சமுதாயமாக இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களும் மிக பிற்பட்ட மக்களும் இந்த நாட்டின் முதுகெலும்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. தேசத்தின் அமைப்பு முறையை நீங்கள் மாற்றவேண்டும். பிற்பட்ட வகுப்புகளையும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளையும் முன்னுக்குக் கொண்டு வந்தாலொழிய எந்தவிதமான மாறுதலையும் பிற்பட்டவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் மாற்ற முடியாது என்ற எண்ணத்தைக் கொண்டு மேற்கொண்டு காரியங்களைச் செயல்படுத்துவோம். நாங்கள் முதுகெலும்பாக உபயோகப் படுகிறோமே தவிர எங்களுக்கு முதுகெலும்பு இல்லை. காரணம் பல விதமான சிக்கல்களில் நாங்கள் கட்டுண்டு கிடக்கிறோம். இந்தக் கட்டுகளை அவிழ்ப்பதற்கு நீங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும். ஏதோ கண்களைத் துடைக்கும் மாதிரி எங்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதுவோ, பள்ளி கூடங்களில் சலுகை கொடுப்பதனாலோ நாங்கள் முன்னேறி விட வேண்டுமென்று நினைத்தால் அது வீண் கனவாகத்தான் முடியும். கல்வி மானியத்தின்போது பேசும்போது நான் இதைக் குறிப்பிட்டேன். கல்வியிலே நாங்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிறோம். கல்வி படிக்காமல் அல்ல, கல்வி போதிக்கப்படும் முறையிலே நாங்கள் தாழ்த்தப் பட்டவர்களாகக் கருதப்படுகிறோம். அதை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டும். கல்வித் துறையில் வருகின்ற பாட புத்தகங்களிலே பறையன்–பறைச்சி, குறவன்–குறத்தி, புலையன்–புலைச்சி என்ற இழிச் சொற்கள் கொண்ட எந்த இலக்கியமாக இருந்தாலும் அதனை நீக்கியெறிய வேண்டும். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டாலொழிய அடிப்படையிலே சிறு குழந்தைகளாக இருக்கும் மக்களுக்கு மனமாற்றம் ஏற்படுத்த முடியாது. பெரிய பட்டத்தில் வந்தபோது மனமாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்றால் அது அவ்வளவு சாத்தியம் அல்ல. தொட்டில் பழக்கம் சுடுகாட்டு வரையில் என்று சொல்வோம். ஆகவே, சமூகங்களைப் பற்றிக் குறிக்கும் இழி சொற்களை பாடபுத்தகங்களில் இருந்து அறவே ஒதுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

தீண்டாமையைப் பற்றி பிரச்னை வரும்போது, தீண்டாமை என்னும் விஷயம் மனமாற்றத்தினால் வரவேண்டும் என்று சுலபமாகப் பதில் சொல்லி விட முடியும். ஆனால் மனமாற்றம் வருமா என்பதுதான் பிரச்னை. மனமாற்றம் அவ்வளவு சுலபமாக வரமுடியாது. அத்தகைய மனமாற்றம் வரும் அளவுக்கு இந்த தேசத்தில் இருக்கும் ஜாதி சமய பிணைப்புக்கள் ஒதுக்கி விடவில்லை. மதத்தில் பிரசாரம் தடைபட்டால் என்று சொன்னால் அத்தகைய மாற்றம் எப்படி வரும்? நீங்கள் அரசாங்கத்திலே திட்டம் போடும்போது மதவாதிகளிடமிருந்து எதிர்ப்பு வரும். மதத்தை கட்டுப்படுத்துவதற்கு முடியாது என்று சொல்கிறார்கள். கோவில்கள் எங்களுக்குச் சொந்தம், அவைகளை எங்களுக்கு உரிமை ஆக்கவேண்டும் என்றுகூட நான் சொல்ல முடியும். எங்களுக்கு பெரும்பான்மை வசதி இருக்குமானால் இன்றைக்கு ஹைகோர்ட்டிலே கூட நாங்கள் கேஸ் போடமுடியும். மதுரையில் இருக்கும் மீனாட்சி ஒரு சக்கிலிச்சி என்பது புராணம். காசியில் உள்ள விஸ்வநாதர் ஒரு வெட்டியான். அவருடைய பெயரால் கோவில் கட்டப்பட்டது. அப்படி ஒவ்வொரு கோவிலையும் எடுத்துக்கொண்டு நாங்கள் சொல்லமுடியும். இந்து மதத்தில் உள்ளவர்களே சொல்கிறார்கள். பரமசிவனுடைய நடை, உடை பாவனைகளைப் பார்த்தாலே தெரியும். படித்தவர்கள் நீங்கள், ஆகவே அந்தக் கோவில்களின் சொத்துக்களை தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்குச் செலவிடலாம் என்றால், அது மதத்திலே தலையிடுவதாகும், எண்டோமெண்ட்–படி அது சரியல்ல என்று சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டு எத்தனை நாளைக்குத்தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? ஆகவே, தயவுசெய்து இப்படிப்பட்ட விஷயங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. கோவிலுக்கு இவ்வளவு சொத்து இருக்கவேண்டியதன் அவசியம் என்ன? கோவிலின் உள்ளே பாராங்கல் பரப்ப 10 லட்சம் ரூபாய், உணவு செலவுக்கு 60 லட்சம் ரூபாய், கும்பாபிஷேகத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய் என்று இப்படி எல்லாம் பணம் வீணாகச் செலவு செய்யப்படுகிறது. ஆகவே, அந்தப் பணத்தைக் கொண்டு எங்களுக்கு வசதிகள் செய்யப்படவேண்டும்.



கடந்த கால அரசு நில ஆர்ஜிதத் திட்டங்களுக்கு 79 லட்சம் ரூபாய் செல விட்டது. ஆனால் கண்காணிக்க ஆள் இல்லை. யானை வாங்கிக் கொடுத்தார்களே தவிர ஓட்டுவதற்கு ஒரு அங்குசம் போட வழி இல்லாமல் செய்துவிட்டார்கள். ஆகவே தயவு செய்து ஆர்ஜிதம் செய்த நிலங்களை எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கும் வகையில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

பட்டுக்கோட்டை தாலுக்காவில் ஒரே இடத்தில் 110 ஏக்கர் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. ஆனால் செயல்படுகிறதா என்றால் இல்லை. கண்காணிப்பு ஏற்படவில்லை. ஆகவே, இந்த அரசு இம்மாதிரியான இடங்களில் கண்காணிப்பு முறைகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நில ஆர்ஜிதம் பற்றி சென்ற 10 ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் சகல அதிகாரங்களையும் சென்னையில் கொண்டு வந்து வைத்துக்கொண்டு மாவட்டங்களில் வெள்ளைக்கார ஆட்சிக்கு ஏஜண்டுகளைப்போல கலெக்டர்கள், ஆர்.டி.ஓ. தாசில்தார் ஆகிய அதிகாரிகளை வைத்துக் கொண்டார்கள். அந்த முறையில்தான் இன்று வரையில் நடந்து கொண்டிருக்கிறது. அதை நீங்கள் ஒழித்தால் ஒழிய நில ஆர்ஜிதம் வீட்டுமனைக்கோ ரோடு களுக்கோ செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டம்பற்றி ஸ்டேட் வெல்ஃபேர் கமிட்டியில் சிபாரிசு செய்யப்பட்டிருக் கிறது, கலெக்டர் மட்டத்தோடு நிறுத்தப்பட வேண்டுமென்று. ஆகவே தயவுசெய்து அதைப் பரிசீலித்து புனர்வாழ்வு கொடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக வெல்ஃபேர் டிபார்ட்மெண்ட், இப்பொழுது அது ட்ரெயினிங் செண்டராகத்தான் இருக்கிறது. தாசில்தாராகவோ அல்லது மேல் உத்தியோகத்திற்கோ செல்ல வேண்டுமென்றால் இந்த வெல்ஃபேர் டிபார்ட்மெண்டில் ஆறு மாதம் வேலை செய்தால் போதும் என்ற நிலைமைதான் இருக்கிறதே ஒழிய அதிலே அக்கறை இல்லை. ஏதோ செய்ய வேண்டும், செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிற நீங்கள் இப்படி வெல்பேர் டிபார்ட்மெண்ட் டிரெயினிங் செண்டராக இருந்தால் அதனால் யாருக்கு என்ன பலன் என்பதைப் பார்க்க வேண்டும். அங்கே வருகிறவர்கள் 6 மாத காலம் தள்ள வேண்டுமென்றுதான் வருகிறார்கள், அந்த நிலைமையையும் மாற்றவேண்டும்.

நிலம் வழங்குவதை எடுத்துக் கொண்டால், 12 ஆயிரம் வேலி நிலம் தருமபுரி ஆதினத்திற்குச் சொந்தமாக இருக்கிறது, ஐந்தாறு மடங்களுக்குச் சொந்தமாக ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. இப்பொழுதுதான் லேண்ட் சீலிங் ஆக்ட் வந்ததால் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்கள் எல்லாம் பரம்பரையாக—அமைச்சர் அவர்களைக் கூட்டிப்போய் காண்பிக்கலாம்—கள்ளர்கள், தேவர்கள், வன்னியர்கள், அரிசனங்கள் நூற்றுக்கணக் கானவர்கள் அங்கே வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட அவர்களுக்கு இதுவரையில் நிலம் சொந்தமாகக் கிடையாது. இதைப் போலக் கொடுமை வேறு எங்கும் இருக்க முடியாது. பிற்பட்ட மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் நீங்கள் குறைந்தபட்சம் இந்த உதவியையாவது அவர்களுக்குத் தயவுசெய்து கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடன் கேட்டால் ஜாமீன் வேண்டும் என்று சொல்கிறார்கள். பக்கத்தில் உள்ளவர்கள் ஐயர், முதலியார் இருப்பதால்—நான் சாதியைப்பற்றிக் குறிப்பிடுவதாக யாரும் எடுத்துக் கொள்ள வேண்டாம். நான் சாதியைப் பற்றிச் சொல்லவில்லை—ஜாமீன் கொடுப்பதற்கு வசதியில்லை. எங்களுக்கு ஜாமீன் கொடுப்பதற்கு ஆளில்லை. அதனால் கடன் பெறமுடியாத நிலை வந்துவிடுகிறது. அதனால் ஏர் கட்ட முடியவில்லை, காலாகாலத்தில் உழவு செய்யமுடியவில்லை. கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாவிட்டால் கோர்ட்டிலே போட்டு எவிக்ஷன் வேறு செய்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டங்களை எல்லாம் தீர்ப்பதற்கு உடனடியாக முயற்சி செய்ய வேண்டும்.

நடந்து வருகின்ற முறையும் அப்படித்தான். அதைப் போலவே இந்த தேசத்தில் வாழும் பெரும் பகுதியான தொழிலாளர் சமுதாயமாக இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களும் மிக பிற்பட்ட மக்களும் இந்த நாட்டின் முதுகெலும்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. தேசத்தின் அமைப்பு முறையை நீங்கள் மாற்றவேண்டும். பிற்பட்ட வகுப்புகளையும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளையும் முன்னுக்குக் கொண்டு வந்தாலொழிய எந்தவிதமான மாறுதலையும் பிற்பட்டவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் மாற்ற முடியாது என்ற எண்ணத்தைக் கொண்டு மேற்கொண்டு காரியங்களைச் செய்ய பழகுவோம். நாங்கள் முதுகெலும்பாக உபயோகப் படுகிறோமே தவிர எங்களுக்கு முதுகெலும்பு இல்லை. காரணம் பல விதமான சிக்கல்களில் நாங்கள் கட்டுண்டு கிடக்கிறோம். இந்தக் கட்டுகளை அவிழ்ப்பதற்கு நீங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும். எந்தக் கண்களைத் திறக்கும் மாதிரி எங்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதுபோல, பள்ளிக்கூடங்களில் சலுகைகள் கொடுப்பதனாலோ நாங்கள் முன்னேறி விட வேண்டுமென்று நினைத்தால் அது வெறும் கனவாகத்தான் முடியும். கல்வி மானியத்தின்போது பேசும்போதுகூட நான் இதைக் குறிப்பிட்டேன். கல்வியிலே நாங்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிறோம். கல்வி படிக்காமல் அல்ல, கல்வி போதிக்கப்படும் முறையிலே நாங்கள் தாழ்த்தப் பட்டவர்களாகக் கருதப்படுகிறோம். அதை இந்த அரசாங்கம் களைய வேண்டும். கல்வித் துறையில் வருகின்ற பாட புத்தகங்களிலே பறையன்-பள்ளி, குறவன்-குறத்தி, புலையன்-புலைச்சி என்ற இழிச் சொற்கள் கொண்ட எந்த நிலைமையாக இருந்தாலும் அதனை நீக்கியெறிய வேண்டும். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டாலொழிய அடிப்படையிலே சிறு குழந்தைகளாக இருக்கும் மக்களுக்கு மனமாற்றம் ஏற்படுத்த முடியாது. மேல் மட்டத்தில் எந்தப்போது மனமாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்றாலும் அது அவ்வளவு சாத்தியம் அல்ல. தொட்டில் பழக்கம் சுடுகாட்டு வரையில் என்று சொல்வோம். ஆகவே, சமூகங்களைப் பற்றிக் குறிக்கும் இழி சொற்களை பாடபுத்தகங்களில் இருந்து அறவே நீக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

தீண்டாமையைப் பற்றி பிரச்னை வரும்போது, தீண்டாமை என்னும் விஷயம் மனமாற்றத்தினால் வரவேண்டும் என்று சுலபமாகப் பதில் சொல்லி விட முடியும். ஆனால் மனமாற்றம் வருமா என்பதுதான் பிரச்னை. மனமாற்றம் அவ்வளவு சுலபமாக வரமுடியாது. அத்தகைய மனமாற்றம் வரும் அளவுக்கு இந்த தேசத்தில் இருக்கும் ஜாதி சமய பிணைப்புகள் ஒதுங்கி விடவில்லை. மதத்தில் அரசாங்கம் தலையிடாது என்று சொன்னால் அத்தகைய மாற்றம் எப்படி வரும்? நீங்கள் அரசாங்கத்திலே திட்டம் போடும்போது மதவாதிகளிடமிருந்து எதிர்ப்பு வரும். மதத்தை கட்டுப் படுத்துவதற்கு முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். கோவில்கள் எங்களுக்குச் சொந்தம், அவைகளை எங்களுக்கு உரிமை ஆக்கவேண்டும் என்றுகூட நான் சொல்ல முடியும். எங்களுக்கு போதுமான வசதி இருக்குமானால் இன்றைக்கு ஹைகோர்ட்டில்கூட நாங்கள் கேஸ் போடமுடியும். மதுரையில் இருக்கும் மீனாட்சி ஒரு சக்கிலிச்சி என்பது புராணம். காசியில் உள்ள விஸ்வநாதர் ஒரு வெட்டியான். அவருடைய பெயரால் கோவில் கட்டப்பட்டது. அப்படி ஒவ்வொரு கோவிலையும் எடுத்துக்கொண்டு நாங்கள் சொல்லமுடியும். இந்து மதத்தில் உள்ளவர்களே சொல்கிறார்கள். பரமசிவனுடைய நடை, உடை பாவனைகளைப் பார்த்தாலே தெரியும். படித்தவர்கள் நீங்கள், ஆகவே அந்தக் கோவில்களின் சொத்துக்களை தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்குச் செலவிடலாம் என்றால், அது மதத்திலே தலையிடுவதாகும், எண்டோமெண்ட்-படி அது சரியல்ல என்று சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டு எத்தனை நாளைக்குத்தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? ஆகவே, தயவுசெய்து இப்படிப்பட்ட விஷயங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. கோவிலுக்கு இவ்வளவு சொத்து இருக்கவேண்டியதன் அவசியம் என்ன? கோவிலின் உள்ளே பாராங்கல் பரப்ப 10 லட்சம் ரூபாய், உணவு செலவுக்கு 60 லட்சம் ரூபாய், கும்பாபிஷேகத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய் என்று இப்படி எல்லாம் பணம் வீணாகச் செலவு செய்யப்படுகிறது. ஆகவே, அந்தப் பணத்தைக் கொண்டு எங்களுக்கு வசதிகள் செய்யப்படவேண்டும்.



கடந்த கால அரசு நில ஆர்ஜிதத் திட்டங்களுக்கு 79 லட்சம் ரூபாய் செல விட்டது. ஆனால் கண்காணிக்க ஆள் இல்லை. யானை வாங்கிக் கொடுத்தார்களே தவிர ஓட்டுவதற்கு ஒரு அங்குசம் போட வழி இல்லாமல செய்துவிட்டார்கள். ஆகவே தயவுசெய்து ஆர்ஜிதம் செய்த நிலங்களை எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கும் வகையில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

பட்டுக்கோட்டை தாலுக்காவில் ஒரே இடத்தில் 110 ஏக்கர் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. ஆனால் செயல்படுகிறதா என்றால் இல்லை. கண்காணிப்பு ஏற்படவில்லை. ஆகவே, இந்த அரசு இம்மாதிரியான இடங்களில் கண்காணிப்பு முறைகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நில ஆர்ஜிதம் பற்றி சென்ற 10 ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் சகல அதிகாரங்களையும் செயலையில் கொண்டு வந்து வைத்துக்கொண்டு மாவட்டங்களில் வெள்ளைக்கார ஆட்சிக்கு ஏஜண்டுகளைப்போல கலெக்டர்கள், ஆர்.டி.ஓ. தாசில்தார் ஆகிய அதிகாரிகளை வைத்துக் கொண்டார்கள். அந்த முறையில்தான் இன்று வரையில் நடந்து கொண்டிருக்கிறது. அதை நீங்கள் ஒழித்தால் ஒழிய நில ஆர்ஜிதம் விட்டுமனைக்கோ ரோடு களுக்கோ செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டம்பற்றி ஸ்டேட் வெல்ஃபேர் கமிட்டியிலே சிபாரிசு செய்யப்பட்டிருக் கிறது, கலெக்டர் மட்டத்தோடு நிறுத்தப்பட வேண்டுமென்று. ஆகவே தயவுசெய்து அதைப் பரிசீலித்து புனர்வாழ்வு கொடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக வெல்ஃபேர் டிபார்ட்மெண்ட், இப்பொழுது அது ட்ரெயினிங் சென்டராகத்தான் இருக்கிறது. தாசில்தாராகவோ அல்லது மேல் உத்தியோகத்திற்கோ செல்ல வேண்டுமென்றால் இந்த வெல்ஃபேர் டிபார்ட்மெண்டில் ஆறு மாதம் வேலை செய்தால் போதும் என்ற நிலைமைதான் இருக்கிறதே ஒழிய அதிலே அக்கறை இல்லை. ஏதோ செய்ய வேண்டும், செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிற நீங்கள் இப்படி வெல்பேர் டிபார்ட்மெண்ட் டிரெய்னிங் சென்டராக இருந்தால் அதனால் யாருக்கு என்ன பலன் என்பதைப் பார்க்க வேண்டும். அங்கே வருகிறவர்கள் 6 மாத காலம் தள்ள வேண்டுமென்றுதான் வருகிறார்கள், அந்த நிலைமையையும் மாற்றவேண்டும்.

நிலம் வழங்குவதை எடுத்துக் கொண்டால், 12 ஆயிரம் வேலி நிலம் தருமபுரி ஆதினத்திற்குச் சொந்தமாக இருக்கிறது, ஐந்தாறு மடங்களுக்குச் சொந்தமாக ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. இப்பொழுதுதான் லேண்ட் சீலிங் ஆக்ட் வந்ததால் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்கள் எல்லாம் பரம்பரையாக—அமைச்சர் அவர்களைக் கூட்டிப்போய் காண்பிக்கலாம் —கள்ளர்கள், தேவர்கள், வன்னியர்கள், அரிசனங்கள் நூற்றுக்கணக் கானவர்கள் அங்கே வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட அவர்களுக்கு இதுவரையில் நிலம் சொந்தமாகக் கிடையாது. இதைப் போலக் கொடுமை வேறு எங்கும் இருக்க முடியாது. பிற்பட்ட மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் நீங்கள் குறைந்தபட்சம் இந்த உதவியையாவது அவர்களுக்குத் தயவுசெய்து கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடன் கேட்டால் ஜாமீன் வேண்டும் என்று சொல்கிறார்கள். பக்கத்தில் உள்ளவர்கள் ஐயர், முதலியார் இருப்பதால்—நான் சாதியைப்பற்றிக் குறிப்பிடுவதாக யாரும் எடுத்துக் கொள்ள வேண்டாம். நான் சாதியைப் பற்றிச் சொல்லவில்லை—ஜாமீன் கொடுப்பதற்கு வசதியில்லை. எங்களுக்கு ஜாமீன் கொடுப்பதற்கு ஆளில்லை. அதனால் கடன் பெறமுடியாத நிலை வந்துவிடுகிறது. அதனால் ஏர் கட்ட முடியவில்லை, காலாகாலத்தில் உழவு செய்யமுடியவில்லை. கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாவிட்டால் கோர்ட்டிலே போட்டு எவிக்‌ஷன் வேறு செய்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டங்களை எல்லாம் தீர்ப்பதற்கு உடனடியாக முயற்சி செய்ய வேண்டும்.

நடந்து வருகின்ற முறையும் அப்படித்தான். அதைப் போலவே இந்த தேசத்தில் வாழும் பெரும் பகுதியான தொழிலாளர் சமுதாயமாக இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களும் மிக பிற்பட்ட மக்களும் இந்த நாட்டின் முதுகெலும்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. தேசத்தின் அமைப்பு முறையை நீங்கள் மாற்றவேண்டும். பிற்பட்ட வகுப்புகளையும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளையும் முன்னுக்குக் கொண்டு வந்தாலொழிய எந்தவிதமான மாறுதலையும் பிற்பட்டவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் மாற்ற முடியாது என்ற எண்ணத்தைக் கொண்டு மேற்கொண்டு காரியங்களைச் செய்ய தவறுவோம். நாங்கள் முதுகெலும்பாக உபயோகப்படுகிறோமே தவிர எங்களுக்கு முதுகெலும்பு இல்லை. காரணம் பல விதமான சிக்கல்களில் நாங்கள் கட்டுண்டு கிடக்கிறோம். இந்தக் கட்டுகளை அவிழ்ப்பதற்கு நீங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும். எதோ கண்களைத் துடைக்கும் மாதிரி எங்களுக்கு உபாயச் சம்பளம் கொடுப்பதனாலோ, பள்ளிக்கூடங்களில் சலுகைகள் கொடுப்பதனாலோ நாங்கள் முன்னேறிவிட வேண்டுமென்று நினைத்தால் அது வீண் கனவாகத்தான் முடியும். கல்வி மானியத்தின்போது பேசும்போது நான் இதைக் குறிப்பிட்டேன். கல்வியிலே நாங்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிறோம். கல்வி படிக்காமல் அல்ல, கல்வி போதிக்கப்படும் முறையிலே நாங்கள் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டிருக்கிறோம். அதை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டும். கல்வித் துறையில் வருகின்ற பாட புத்தகங்களிலே பறையன்–பறைச்சி, குறவன்–குறத்தி, புலையன்–புலைச்சி என்ற இழிச் சொற்கள் கொண்ட எந்த நூல்களாக இருந்தாலும் அதனை நீக்கியெறிய வேண்டும். அப்படிப்பட்ட இழிவு நீக்கப்பட்டாலொழிய அடிப்படையிலே சிறு குழந்தைகளாக இருக்கும் மக்களுக்கு மனமாற்றம் ஏற்படுத்த முடியாது. மேல் மட்டத்தில் வந்தபோது மனமாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்றால் அது அவ்வளவு சாத்தியம் அல்ல. தொட்டில் பழக்கம் சுடுகாட்டு வரையில் என்று சொல்வோம். ஆகவே, சமூகங்களைப் பற்றிக் குறிக்கும் இழி சொற்களை பாடபுத்தகங்களில் இருந்து அறவே ஒதுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

தீண்டாமையைப் பற்றி பிரச்னை வரும்போது, தீண்டாமை என்னும் விஷயம் மனமாற்றத்தினால் வரவேண்டும் என்று சுலபமாகப் பதில் சொல்லி விட முடியும். ஆனால் மனமாற்றம் வருமா என்பதுதான் பிரச்னை. மனமாற்றம் அவ்வளவு சுலபமாக வரமுடியாது. அத்தகைய மனமாற்றம் வரும் அளவுக்கு இந்த தேசத்தில் இருக்கும் ஜாதி சமய பிணைப்புகள் இருக்கின்றன. மதத்தில் அரசாங்கம் தலையிடாது என்று சொன்னால் அத்தகைய மாற்றம் எப்படி வரும்? நீங்கள் அரசாங்கத்திலே திட்டம் போடும்போது மதவாதிகளிடமிருந்து எதிர்ப்பு வரும். மதத்தை கட்டுப்படுத்துவதற்கு முடியாது என்று சொல்கிறார்கள். கோவில்கள் எங்களுக்குச் சொந்தம், அவைகளை எங்களுக்கு உரிமை ஆக்கவேண்டும் என்றுகூட நான் சொல்ல முடியும். எங்களுக்கு பொருளாதார வசதி இருக்குமானால் இன்றைக்கு ஹைகோர்ட்டிலே கூட நாங்கள் கேஸ் போடமுடியும். மதுரையில் இருக்கும் மீனாட்சி ஒரு சக்கிலிச்சி என்பது புராணம். காசியில் உள்ள விஸ்வநாதர் ஒரு வெட்டியான். அவருடைய பெயரால் கோவில் கட்டப்பட்டது. அப்படி ஒவ்வொரு கோவிலையும் எடுத்துக்கொண்டு நாங்கள் சொல்லமுடியும். இந்து மதத்தில் உள்ளவர்களே சொல்கிறார்கள். பரமசிவனுடைய நடை, உடை பாவனைகளைப் பார்த்தாலே தெரியும். படித்தவர்கள் நீங்கள், ஆகவே அந்தக் கோவில்களின் சொத்துக்களை தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்குச் செலவிடலாம் என்றால், அது மதத்திலே தலையிடுவதாகும், என்டோமெண்ட்–படி அது சரியல்ல என்று சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டு எத்தனை நாளைக்குத்தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? ஆகவே, தயவுசெய்து இப்படிப்பட்ட விஷயங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பதிலே பயன் இல்லை. கோவிலுக்கு இவ்வளவு சொத்து இருக்கவேண்டியதன் அவசியம் என்ன? கோவிலின் உள்ளே பாராங்கல் பரப்ப 10 லட்சம் ரூபாய், உணவு செலவுக்கு 60 லட்சம் ரூபாய், கும்பாபிஷேகத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய் என்று இப்படி எல்லாம் பணம் வீணாகச் செலவு செய்யப்படுகிறது. ஆகவே, அந்தப் பணத்தைக் கொண்டு எங்களுக்கு வசதிகள் செய்யப்படவேண்டும்.





கடந்த கால அரசு நில ஆர்ஜிதத் திட்டங்களுக்கு 79 லட்சம் ரூபாய் செலவிட்டது. ஆனால் கண்காணிக்க ஆள் இல்லை. யானை வாங்கிக் கொடுத்தார்களே தவிர ஓட்டுவதற்கு ஒரு அங்குசம் போட வழி இல்லாமல் செய்துவிட்டார்கள். ஆகவே தயவு செய்து ஆர்ஜிதம் செய்த நிலங்களை எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கும் வகையில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

பட்டுக்கோட்டை தாலுக்காவில் ஒரே இடத்தில் 110 ஏக்கர் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. ஆனால் செயல்படுகிறதா என்றால் இல்லை. கண்காணிப்பு ஏற்படவில்லை. ஆகவே, இந்த அரசு இம்மாதிரியான இடங்களில் கண்காணிப்பு முறைகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நில ஆர்ஜிதம் பற்றி சென்ற 10 ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் சகல அதிகாரங்களையும் செயலில் கொண்டு வந்து வைத்துக்கொண்டு மாவட்டங்களில் வெள்ளைக்கார ஆட்சிக்கு ஏஜண்டுகளைப்போல கலெக்டர்கள், ஆர்.டி.ஓ. தாசில்தார் ஆகிய அதிகாரிகளை வைத்துக் கொண்டார்கள். அந்த முறையில்தான் இன்று வரையில் நடந்து கொண்டிருக்கிறது. அதை நீங்கள் ஒழித்தால் ஒழிய நில ஆர்ஜிதம் வீட்டுமனைக்கோ ரோடுகளுக்கோ செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டம்பற்றி ஸ்டேட் வெல்ஃபேர் கமிட்டியிலே சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது, கலெக்டர் மட்டத்தோடு நிறுத்தப்பட வேண்டுமென்று. ஆகவே தயவுசெய்து அதைப் பரிசீலித்து புனர்வாழ்வு கொடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக வெல்ஃபேர் டிபார்ட்மெண்ட், இப்பொழுது அது ட்ரெயினிங் சென்டராகத்தான் இருக்கிறது. தாசில்தாராகவோ அல்லது மேல் உத்தியோகத்திற்கோ செல்ல வேண்டுமென்றால் இந்த வெல்ஃபேர் டிபார்ட்மெண்டில் ஆறு மாதம் வேலை செய்தால் போதும் என்ற நிலைமைதான் இருக்கிறதே ஒழிய அதிலே அக்கறை இல்லை. ஏதோ செய்ய வேண்டும், செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிற நீங்கள் இப்படி வெல்பேர் டிபார்ட்மெண்ட் டிரெய்னிங் சென்டராக இருந்தால் அதனால் யாருக்கு என்ன பலன் என்பதைப் பார்க்க வேண்டும். அங்கே வருகிறவர்கள் 6 மாத காலம் தள்ள வேண்டுமென்றுதான் வருகிறார்கள், அந்த நிலைமையையும் மாற்றவேண்டும்.

நிலம் வழங்குவதை எடுத்துக் கொண்டால், 12 ஆயிரம் வேலி நிலம் தருமபுரி ஆதினத்திற்குச் சொந்தமாக இருக்கிறது, ஐந்தாறு மடங்களுக்குச் சொந்தமாக ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. இப்பொழுதுதான் லேண்ட் சீலிங் ஆக்ட் வந்ததால் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்கள் எல்லாம் பரம்பரையாக–அமைச்சர் அவர்களைக் கூட்டிப்போய் காண்பிக்கலாம் —கள்ளர்கள், தேவர்கள், வன்னியர்கள், அரிசனங்கள் நூற்றுக்கணக்கானவர்கள் அங்கே வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட அவர்களுக்கு இதுவரையில் நிலம் சொந்தமாகக் கிடையாது. இதைப் போலக் கொடுமை வேறு எங்கும் இருக்க முடியாது. பிற்பட்ட மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் நீங்கள் குறைந்தபட்சம் இந்த உதவியையாவது அவர்களுக்குத் தயவுசெய்து கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடன் கேட்டால் ஜாமீன் வேண்டும் என்று சொல்கிறார்கள். பக்கத்தில் உள்ளவர்கள் ஐயர், முதலியார் இருப்பதால்—நான் சாதியைப்பற்றிக் குறிப்பிடுவதாக யாரும் எடுத்துக் கொள்ள வேண்டாம். நான் சாதியைப் பற்றிச் சொல்லவில்லை—ஜாமீன் கொடுப்பதற்கு வசதியில்லை. எங்களுக்கு ஜாமீன் கொடுப்பதற்கு ஆளில்லை. அதனால் கடன் பெறமுடியாத நிலை வந்துவிடுகிறது. அதனால் ஏர் கட்ட முடியவில்லை, காலாகாலத்தில் உழவு செய்யமுடியவில்லை. கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாவிட்டால் கோர்ட்டிலே போட்டு எவிக்ஷன் வேறு செய்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டங்களை எல்லாம் தீர்ப்பதற்கு உடனடியாக முயற்சி செய்ய வேண்டும்.

[திரு கே. பி. எஸ். மணி] [1968 மார்ச் 15

இதிலே மிகப் பிற்பட்ட வகுப்பினர் என்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்றும் இரண்டு வகுப்பினர்களாக வைத்திருக்கிறார்கள். வன்னியர்கள், கள்ளர்கள், ஆதித்திராவிடர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயரில்தான் மாற்றமே தவிர, அவர்களுக்கு உணவு, உடை, இடம் இவை கிடைப்பதிலே எல்லோருக்கும் கஷ்டங்கள் ஒன்றாகத்தான் இருக்கின்றன. இந்த நிலைமையையும் மாற்றவேண்டும்.

ஐ.ஏ.எஸ். டிரெயினிங்குக்காக மத்திய சர்க்காரிலிருந்து கொடுக்கக்கூடிய பணத்தையெல்லாம் செலவழிப்பதோடு மட்டுமல்லாமல் அந்த பிள்ளைகளை ஸ்டிரிக்ட் டிஸிப்ளின் ஒழுங்குமுறை இருக்கக்கூடிய வகையில் அவர்களை பயிற்றுவிக்கவேண்டும். ஒழுங்கு இல்லாத முறையில் படிக்க வைத்தால் அவர்களால் இந்த சமூகத்திற்கும் தேசத்திற்கும் எந்தவித நன்மையும் கிடையாது, அவர்கள் பயன்படமாட்டார்கள். ஆகவே ஸ்ட்ரிக்ட் டிஸிப்ளின் கொண்டுவருவதற்கு முயற்சிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, ஸ்காலர்ஷிப் பற்றிப் பேசினார்கள். கிட்ட தட்ட இதிலே 6 கோடியே 51 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; மொத்த பாபுலேஷனில் பிற்பட்ட வகுப்பினரும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் 1 கோடியே 40 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையை வைத்து அவர்களுக்கு ஆளுக்கு எவ்வளவு வருகிறது என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் ஆறு ரூபாய்தான் வருகிறது. இந்த நாட்டின் பேக்போன் நாங்கள்தான், விவசாயம் செய்வதும் நாங்கள்தான், ரோடுகள் போடுவதும் நாங்கள்தான், பங்களாக் கட்டுவதும் நாங்கள்தான், பிணம் புதைக்கின்றவர்களும் நாங்கள்தான். ஆனால் எங்களுக்கு ஆளுக்கு ஆறு ரூபாய் என்ற அளவில் கொடுத்து இந்தச் சபையை வைத்துக்கொண்டு 19 ஆண்டுக் காலம் அவர்கள் செய்தார்கள், நாங்களும் செய்கிறோம் என்று சொன்னால் இதைப்போலக் கொடுமை வேறு எங்கும் கிடையாது. சண்டை போட்டால்தான், புரட்சி பண்ணினால்தான் கொடுப்போம் என்று சொன்னால் நாங்கள் அப்படியே செய்கிறோம். ஆளுக்கு ஆறு ரூபாய் என்பதை வைத்துக் கொண்டு எப்படி நாங்கள் முன்னேறுவது ? ஆகவே விகிதாச்சாரப்படி எங்களுக்குக் கொடுங்கள். நேஷனல் டிபென்ஸ், எஜுகேஷன் இவற்றிற்குப் போக மொத்தப் பணத்தில் பாக்கியிருக்கிற தொகையை எங்கள் வீதாச்சாரப்படி எங்களுடைய பங்கைக் கொடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளுக்கு ஒரு ரூபாய் என்று சொன்னார்கள் (திரு. கே. பி. எஸ். மணி : ஆறு ரூபாய்) ஆறு ரூபாய் வருகிறது என்று சொன்னார்கள். நான் கூறியது இந்த இலாகாவின்மூலம் தனி அக்கறையோடு செய்கிற புள்ளிவிவரம் தான். பொதுவாக இதைத்தவிர கல்விக்காக, சுகாதாரத்திற்காக, வேலை வாய்ப்புக்காகச் செய்கிறவற்றிலும் அவர்களுக்குப் பங்கு உண்டு.

**திரு கே. பி. எஸ். மணி :** அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. எல்லாவற்றையும் கணக்குப் பார்த்தால் 76% இருக்கிறோம், எல்லா சலுகைகளையும் பார்த்தால் எங்களில் எத்தனை பேர்கள் ஐ.ஏ.எஸ். இருக்கிறார்கள், டைரக்டர்களாக எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் அவற்றையும் கணக்கு வைத்துப் பார்த்தால் ஆளுக்கு 12 ரூபாய்க்கு மேல் வராது.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** எந்தத் துறையிலும் முன்னேற்றம் அடையாமல் இருப்பவர்களைத்தான் பிற்பட்ட இனம் என்று சொல்வது. கல்வித் துறையிலும் மற்ற மற்றத் துறைகளிலும் முன்னேற வேண்டும். பிற்பட்ட இனம் அல்லது தாழ்த்தப்பட்ட இனம் என்ற நிலையிலிருந்து மாறுதல் வேண்டும். இதுவரையிலும் நாங்கள் தாழ்த்தப்பட்ட இனம் தாழ்த்தப்பட்ட இனம் அதனால் உதவிசெய்ய வேண்டும் என்று சொல்லுகின்ற நிலை அவர்களை அந்நிலையிலிருந்து உயர்த்தக்கூடிய வாதம் ஆகாது.



1968 மார்ச் 15]

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** அப்போது அவர்களுக்கு நல்ல இலாகாக்களைக் கொடுத்தார்கள். இப்போது இவர்களை விளம்பர அமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள். இந்தச் சமுதாயத்திற்கு விளம்பரந்தானா தேவை ? எவ்வளவோ வித விளம்பரங்களை எங்கு பார்த்தாலும் போட்டிருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் தான் செய்ய வேண்டுமா ? எங்கள் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் முதல் மந்திரியாக இருந்தபோது இரண்டு பேர்களுக்கு மந்திரி பதவி கொடுத்திருந்தார்கள். இப்போது 42 சட்டசபை மெம்பர்கள் உள்ள இடத்தில் ஒரே ஒருவருக்குத்தான் அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் விளம்பரத் துறையா என்று கேட்கிறேன். திரு. காமராஜ் அவர்கள் செய்த ஒரு பெரிய காரியத்தைச் சொல்லாமல் இருக்கமுடியாது. அறநிலையப் பாதுகாப்பு துறையை திரு. பரமேஸ்வரன் அவர்கள் கையில் கொடுத்து தீண்டாமை ஒழிப்பு வேலைகளைச் செய்து கொள்ளுங்கள் என்று கோவில்கள் சம்பந்தப்பட்ட இலாகாவைக் கொடுத்தார்கள். அது பெரியதொரு திட்டமல்லவா ? அமைச்சர் திரு கக்கன் அவர்களிடம் பொது மராமத்து துறையையும், போலீஸ் துறையையும் கொடுக்கவில்லையா ? இதை முதல் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே இப்போதிருக்கும் அமைச்சர் அவர்களுக்கு நல்ல துறைகளைக் கொடுங்கள். இன்னொரு அமைச்சரையும் போடுங்கள்.

அரிசன மானியம் என்று சொல்லும்போது எனக்கு ஒரு கஷ்டம் வருகிறது. ஏன் இந்தச் சமுதாயம் இன்னும் பின்னடைந்து நிற்கவேண்டும் என்று தோன்றுகிறது. போராட்டம் என்று மணி அவர்கள் சொன்னார்கள். போராட்டம் வேண்டியதில்லை. அரிசனங்கள் இல்லை என்றால் மற்றச் சமுதாயங்கள் வாழ முடியாது. இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு உண்ண உணவையும், உடுக்க உடையையும் கொடுக்கக்கூடியவர்கள் யார் ? இதை நினைத்துப் பார்க்கவேண்டும். ஆதி திராவிடர்கள் இல்லை என்று சொன்னால், பிற்பட்ட வகுப்பினர் இல்லை என்று சொன்னால், குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள் இல்லை என்று சொன்னால் இந்த நாடு அல்ல, இந்த உலகமே வாழாது, இந்தச் சமுதாய மக்கள் இல்லாவிட்டால் யாரும் வாழ முடியாது. என் போன்ற ஊழியர்களும் வாழ முடியாது. ஆகவே இப்போதிருக்கக்கூடிய அமைச்சர் அவர்களுக்கு நல்ல துறைகளைக் கொடுங்கள்.

திரு. காமராஜ் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது சிதம்பரம் தாலுகாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். அப்போது ஒரு கிராமத்திற்குச் சென்றார். சென்று ஒரு குடிசைக்குள் நுழைந்தார். அங்கு ஒரு பாட்டியம்மையார் இருந்தார்கள். அம்மா, பாட்டி, சௌக்கியமா என்று கேட்டார். சௌக்கியமாக இருக்கிறேன் என்று பாட்டி சொன்னார்கள். உங்களுக்கு பிள்ளைகள் இருககிறார்களா ? எத்தனை பிள்ளைகள் ? என்று கேட்டார்கள். எனக்கு நான்கு பிள்ளைகள் என்று பதில் அளித்தார்கள் அந்தப் பாட்டி. அவர்களுக்கு எவ்வளவு பிள்ளைகள் என்று கேட்டார். ஒவ்வொருவருக்கும் ஆறு ஆறு பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று பதில் சொன்னார்கள். மொத்தம் 19 பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் எல்லோரும் எங்கிருக்கிறார்கள் என்று திரு காமராஜ் அவர்கள் கேட்டார்கள். எல்லோரும் இந்தக் குடிசையில்தான் இருக்கிறார்கள் என்று அந்தப் பாட்டி பதிலளித்தார்கள். இந்த மூன்று, நான்கு அடிக் குடிசையிலா எல்லோரும் இருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். நினைத்தார் திரு. காமராஜ அவர்கள். சுற்றுப்பிரயாணத்தை முடித்துவிட்டு இங்கு திரும்பிவந்து எல்லா அமைச்சர்களையும் கூப்பிட்டு, உட்காருங்கள், இதற்கு என்ன வழி செயயலாம் ? என்று கேட்டார்கள்.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** கதை சொல்ல ஆரம்பித்து கணக்கு தவறாக இருக்கிறது என்பதற்காகக் கவலைப்படுகிறேன். திரு. காமராஜ் அவர்களை இதில் இணைத்திருப்பதால், நான்கு பேர்கள், ஒவ்வொருவருக்கும் ஆறு குழந்தைகள் என்றால் மொத்தம் 24 என்றிருக்க வேண்டும். 19 என்று சொல்கிறார்கள். அவர்கள் சொன்னதை காமராஜ் அவர்கள் கேட்டுக்கொண்டு வந்தார்கள் என்று சொல்வது அவருக்கு கணக்குத் தெரியாது என்று உறுப்பினர் கருதுவதாகும்.

இதிலே மிகப் பிற்பட்ட வகுப்பினர் என்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்றும் இரண்டு வகுப்பினர்களாக வைத்திருக்கிறார்கள். வன்னியர்கள், கள்ளர்கள், ஆதித்திராவிடர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயரில்தான் மாற்றமே தவிர, அவர்களுக்கு உணவு, உடை, இடம் இவை கிடைப்பதிலே எல்லோருக்கும் கஷ்டங்கள் ஒன்றாகத்தான் இருக்கின்றன. இந்த நிலைமையையும் மாற்றவேண்டும்.

ஐ.ஏ.எஸ். டிரெயினிங்குக்காக மத்திய சர்க்காரிலிருந்து கொடுக்கக்கூடிய பணத்தையெல்லாம் செலவழிப்பதோடு மட்டுமல்லாமல் அந்த பிள்ளைகளை ஸ்டிரிக்ட் டிஸிப்ளின் ஒழுங்குமுறை இருக்கக்கூடிய வகையில் அவர்களை பயிற்றுவிக்கவேண்டும். ஒழுங்கு இல்லாத முறையில் படிக்க வைத்தால் அவர்களால் இந்த சமூகத்திற்கும் தேசத்திற்கும் எந்தவித நன்மையும் கிடையாது, அவர்கள் பயன்படமாட்டார்கள். ஆகவே ஸ்ட்ரிக்ட் டிஸிப்ளின் கொண்டுவருவதற்கு முயற்சிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, ஸ்காலர்ஷிப் பற்றிப் பேசினார்கள். கிட்ட தட்ட இதிலே 6 கோடியே 51 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மொத்த பாபுலேஷனில் பிற்பட்ட வகுப்பினரும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் 1 கோடியே 40 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையை வைத்து அவர்களுக்கு ஆளுக்கு எவ்வளவு வருகிறது என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் ஆறு ரூபாய்தான் வருகிறது. இந்த நாட்டின் பேக்போன் நாங்கள்தான், விவசாயம் செய்வதும் நாங்கள்தான், ரோடுகள் போடுவதும் நாங்கள்தான், பங்களாக் கட்டுவதும் நாங்கள்தான், பிணம் புதைக்கின்றவர்களும் நாங்கள்தான். ஆனால் எங்களுக்கு ஆளுக்கு ஆறு ரூபாய் என்ற அளவில் கொடுத்து இந்தச் சபையை வைத்துக்கொண்டு 19 ஆண்டுக் காலம் அவர்கள் செய்தார்கள், நாங்களும் செய்கிறோம் என்று சொன்னால் இதைப்போலக் கொடுமை வேறு எங்கும் கிடையாது. சண்டை போட்டால்தான், புரட்சி பண்ணினால்தான் கொடுப்போம் என்று சொன்னால் நாங்கள் அப்படியே செய்கிறோம். ஆளுக்கு ஆறு ரூபாய் என்பதை வைத்துக் கொண்டு எப்படி நாங்கள் முன்னேறுவது? ஆகவே விகிதாச்சாரப்படி எங்களுக்குக் கொடுங்கள். நேஷனல் டிபென்ஸ், எஜுகேஷன் இவற்றிற்குப் போக மொத்தப் பணத்தில் பாக்கியிருக்கிற தொகையை எங்கள் விதாச்சாரப்படி எங்களுடைய பங்கைக் கொடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளுக்கு ஒரு ரூபாய் என்று சொன்னார்கள் (திரு. கே. பி. எஸ். மணி: ஆறு ரூபாய்) ஆறு ரூபாய் வருகிறது என்று சொன்னார்கள். நான் கூறியது இந்த இலாகாவின்மூலம் தனி அக்கறையோடு செய்கிற புள்ளிவிவரம் தான். பொதுவாக இதைத்தவிர கல்விக்காக, சுகாதாரத்திற்காக, வேலை வாய்ப்புக்காகச் செய்கிறவற்றிலும் அவர்களுக்குப் பங்கு உண்டு.

**திரு கே. பி. எஸ். மணி:** அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. எல்லாவற்றையும் கணக்குப் பார்த்தால் 76% இருக்கிறோம், எல்லா சலுகைகளையும் பார்த்தால் எங்களில் எத்தனை பேர்கள் ஐ.ஏ.எஸ். இருக்கிறார்கள், டைரக்டர்களாக எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் அவற்றையும் கணக்கு வைத்துப் பார்த்தால் ஆளுக்கு 12 ரூபாய்க்கு மேல் வராது.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை:** எந்தத் துறையிலும் முன்னேற்றம் அடையாமல் இருப்பவர்களைத்தான் பிற்பட்ட இனம் என்று சொல்வது. கல்வித் துறையிலும் மற்ற மற்றத் துறைகளிலும் முன்னேற வேண்டும். பிற்பட்ட இனம் அல்லது தாழ்த்தப்பட்ட இனம் என்ற நிலையிலிருந்து மாறுதல் வேண்டும். இதுவரையிலும் நாங்கள் தாழ்த்தப் பட்ட இனம் தாழ்த்தப்பட்ட இனம் அதனால் உதவிசெய்ய வேண்டும் என்று சொல்லுகின்ற நிலை அவர்களை அந்நிலையிலிருந்து உயர்த்தக்கூடிய வாதம் ஆகாது.





அவர்கள் ஆறு ரூபாய் என்று சொன்னார்கள். மற்றவர்களுக்குக் கொடுப் பதைப்போல் கொடுப்பதைவிட அதற்குக்கூட ஆளுக்கு ஆறு ரூபாய். அவர்கள் ஆறு ரூபாய் போதாது என்று சொன்னால் அதை நான் வரவேற்கிறேன். ஆறு ரூபாய் தானா ஆறு ரூபாய் தானா என்று சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் அதைப் பத்திரிகையிலே அரிசனங்களுக்கு ஆளுக்கு 6 ரூபாய்தான் என்று வருமானால் மக்கள் ஆளுக்கு ஆறு ரூபாய்தானா என்று எண்ணத் தோன்றும். அந்த எண்ணம் அதைப் படிக்கிறவர்களுக்கு வருகிறது. அப்படி வரவேண்டுமென்ற கருத்து திரு. மணி அவர்களுக்குக் கிடையாது என்று நினைக்கிறேன். சர்க்கார் செய்கின்ற செலவு இருநூறு கோடிக்கும் அதிகமான செலவில் பெறுகின்ற தொகையோடு ஆறு கோடி ரூபாய் அதிகம் பெறுகின்ற அளவுக்குத் தனிச் சலுகை அவர்களுக்குக் காட்டப்படுகிறது. பெறுகின்ற தனிச் சலுகைகளையும் வேறு சலுகைகளோடு கூட்டிப்போட்டுக் கணக்குச் சொல்ல வேண்டும். ஆளுக்கு ஆறு ரூபாய் போதாது என்று சொன்னால் அது யாரும் மறுக்க முடியாத வாதம்.

**திரு. கே. பி. எஸ். மணி:** முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். எம்.எல்.ஏ., எம்.பி. எல்லாவற்றிலும் எங்களுக்குப் பாகம் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் முக்கியமாக இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன் சேர்மன் பதவிகளில் எங்களுக்கு ஒன்றுகூட கிடைக்கவில்லை. 375 சேர்மன்களிலே நாங்கள் இரண்டு பேர்கள்தான் வந்திருக்கிறோம் அத்தி பூத்த மாதிரி. இதைப் பற்றி பஞ்சாயத்து யூனியன் மாநாட்டில் மன்னார்குடி சேர்மன் திரு. முருகையன் அவர்கள் சொன்னபொழுது அவரை அடிக்கவே வந்து விட்டார்கள், வந்துவிடு வெளியே என்று நான் சொன்னேன். சர்க்கார் எங்களுக்கு ஏதாவது கொடுத்துவிடப் போகிறதோ என்று அவர்கள் நினைக் கிறார்கள். நீங்கள் எவ்வளவோ பெரிய பெரிய சாதனைகளைச் செய்வோம், செய்வோம் என்று சொல்லித் திட்டமிட்டிருக்கிறீர்கள். படி அரிசித் திட்டம், முடியாது, முடியாது என்று சொன்னார்கள், நீங்கள் அதைக் கொண்டு வந்து ஒரு ஆண்டு முடிந்து இரண்டாவது ஆண்டு வந்துவிட்டது. ஆகவே இதை இரண்டாவது பெரிய சாதனையாக எடுத்துக் கொண்டு தாழ்த்தப் பட்ட மக்களுக்கு வரப்போகின்ற பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களிலே குறிப்பிட்ட ஸ்தானங்கள் ஒதுக்குகின்ற முறையிலே சட்டத்திலே ஏற்பாடுகள் செய்தால் தீண்டாமையை ஒழித்ததாக அது மிகப் பெரிய சாதனையாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொண்டு எனக்கு இவ்வளவு நேரம் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, அரிசன நலத்துறை மானியத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற 6,51,21,100 ரூபாயை அனுமதிப் பதிலே எவ்விதமான மாறுபாடும் கிடையாது. ஆனால் என்னுடைய கருத்தின்படி இந்தப் பணம் போதாது என்று கூற விரும்புகிறேன். நாட்டிலே இருக்கின்ற வருவாய் குறைந்தவர்கள், கல்வியில் தாழ்ந்த வர்கள், சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள், நோய் நொடி களால் பாதிக்கப்பட்டவர்கள், அங்க ஹீனர்கள் போன்றவர்களை யெல்லாம் பாதுகாக்கின்ற, பராமரிக்கின்ற பொறுப்பை ஒரு சேம நல அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டியது கடமையாகும். அப்படி எடுத்துக்கொள்ள வேண்டிய கடமையினுடைய ஒரு பகுதியாகத்தான் அரிசனங்களும், மலைவாசியினரும், குற்றப்பாம்பரையிலே இருந்து நீக்கப்பட்டவர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படிபட்ட வர்கள் கணிசமான எண்ணிக்கையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அப்படி கணிசமான பகுதியினராக இருக்கின்ற அவர்களுக்கு இந்தச் சமுதாயத்திலே இழைக்கப்பட்டிருக்கும் தீங்கு கொஞ்சநஞ்சமல்ல. மிகக் கொடுமையான முறையிலே கடந்த காலத்திலே அவர்கள் நடத்தப்பட்டிருக்கிறார்கள். மேல் சாதிக்காரர்களிலே ஏழைகளாக உள்ளவர்கள் மீது பொருளாதாரத் திலே செழுமையாக உள்ளவர்கள் மட்டுந்தான் ஆதிக்கம் செலுத்துவார் கள். ஆனால் இவர்கள் மீது பொருளாதாரத்தில் செழுமையானவர்களாக

இதிலே மிகப் பிற்பட்ட வகுப்பினர் என்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்றும் இரண்டு வகுப்பினர்களாக வைத்திருக்கிறார்கள். வன்னியர்கள், கள்ளர்கள், ஆதித்திராவிடர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயரில்தான் மாற்றமே தவிர, அவர்களுக்கு உணவு, உடை, இடம் இவை கிடைப்பதிலே எல்லோருக்கும் கஷ்டங்கள் ஒன்றாகத்தான் இருக்கின்றன. இந்த நிலைமையையும் மாற்றவேண்டும்.

ஐ.ஏ.எஸ். டிரெயினிங்குக்காக மத்திய சர்க்காரிலிருந்து கொடுக்கக்கூடிய பணத்தையெல்லாம் செலவழிப்பதோடு மட்டுமல்லாமல் அந்த பிள்ளைகளை ஸ்டிரிக்ட் டிஸிப்ளின் ஒழுங்குமுறை இருக்கக்கூடிய வகையில் அவர்களை பயிற்றுவிக்கவேண்டும். ஒழுங்கு இல்லாத முறையில் படிக்க வைத்தால் அவர்களால் இந்த சமூகத்திற்கும் தேசத்திற்கும் எந்தவித நன்மையும் கிடையாது, அவர்கள் பயன்படமாட்டார்கள். ஆகவே ஸ்ட்ரிக்ட் டிஸிப்ளின் கொண்டுவருவதற்கு முயற்சிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, ஸ்காலர்ஷிப் பற்றிப் பேசினார்கள். கிட்ட தட்ட இதிலே 6 கோடியே 51 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மொத்த பாபுலேஷனில் பிற்பட்ட வகுப்பினரும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் 1 கோடியே 40 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையை வைத்து அவர்களுக்கு ஆளுக்கு எவ்வளவு வருகிறது என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் ஆறு ரூபாய்தான் வருகிறது. இந்த நாட்டின் பேக்போன் நாங்கள்தான், விவசாயம் செய்வதும் நாங்கள்தான், ரோடுகள் போடுவதும் நாங்கள்தான், பங்களாக் கட்டுவதும் நாங்கள்தான், பிணம் புதைக்கின்றவர்களும் நாங்கள்தான். ஆனால் எங்களுக்கு ஆளுக்கு ஆறு ரூபாய் என்ற அளவில் கொடுத்து இந்தச் சபையை வைத்துக்கொண்டு 19 ஆண்டுக் காலம் அவர்கள் செய்தார்கள், நாங்களும் செய்கிறோம் என்று சொன்னால் இதைப்போலக் கொடுமை வேறு எங்கும் கிடையாது. சண்டை போட்டால்தான், புரட்சி பண்ணினால்தான் கொடுப்போம் என்று சொன்னால் நாங்கள் அப்படியே செய்கிறோம். ஆளுக்கு ஆறு ரூபாய் என்பதை வைத்துக் கொண்டு எப்படி நாங்கள் முன்னேறுவது ? ஆகவே விகிதாச்சாரப்படி எங்களுக்குக் கொடுங்கள். நேஷனல் டிபென்ஸ், எஜுகேஷன் இவற்றிற்குப் போக மொத்தப் பணத்தில் பாக்கியிருக்கிற தொகையை எங்கள் விதாச்சாரப்படி எங்களுடைய பங்கைக் கொடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளுக்கு ஒரு ரூபாய் என்று சொன்னார்கள் (திரு. கே. பி. எஸ். மணி : ஆறு ரூபாய்) ஆறு ரூபாய் வருகிறது என்று சொன்னார்கள். நான் கூறியது இந்த இலாகாவின்மூலம் தனி அக்கறையோடு செய்கிற புள்ளிவிவரம் தான். பொதுவாக இதைத்தவிர கல்விக்காக, சுகாதாரத்திற்காக, வேலை வாய்ப்புக்காகச் செய்கிறவற்றிலும் அவர்களுக்குப் பங்கு உண்டு.

**திரு கே. பி. எஸ். மணி :** அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. எல்லாவற்றையும் கணக்குப் பார்த்தால் 76% இருக்கிறோம், எல்லா சலுகைகளையும் பார்த்தால் எங்களில் எத்தனை பேர்கள் ஐ.ஏ.எஸ். இருக்கிறார்கள், டைரக்டர்களாக எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் அவற்றையும் கணக்கு வைத்துப் பார்த்தால் ஆளுக்கு 12 ரூபாய்க்கு மேல் வராது.

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** எந்தத் துறையிலும் முன்னேற்றம் அடையாமல் இருப்பவர்களைத்தான் பிற்பட்ட இனம் என்று சொல்வது. கல்வித் துறையிலும் மற்ற மற்றத் துறைகளிலும் முன்னேற வேண்டும். பிற்பட்ட இனம் அல்லது தாழ்த்தப்பட்ட இனம் என்ற நிலையிலிருந்து மாறுதல் வேண்டும். இதுவரையிலும் நாங்கள் தாழ்த்தப்பட்ட இனம் தாழ்த்தப்பட்ட இனம் அதனால் உதவிசெய்ய வேண்டும் என்று சொல்லுகின்ற நிலை அவர்களை அந்நிலையிலிருந்து உயர்த்தக்கூடிய வாதம் ஆகாது.



அவர்கள் ஆறு ரூபாய் என்று சொன்னார்கள். மற்றவர்களுக்குக் கொடுப்பதைப்போல் கொடுப்பதைவிட அதற்குக்கூட ஆளுக்கு ஆறு ரூபாய். அவர்கள் ஆறு ரூபாய் போதாது என்று சொன்னால் அதை நான் வரவேற்கிறேன். ஆறு ரூபாய் தானா ஆறு ரூபாய் தானா என்று சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் அதைப் பத்திரிகையிலே அரிசனங்களுக்கு ஆளுக்கு 6 ரூபாய்தான் என்று வருமானால் மக்கள் ஆளுக்கு ஆறு ரூபாய்தானா என்று எண்ணத் தோன்றும். அந்த எண்ணம் அதைப் படிக்கிறவர்களுக்கு வருகிறது. அப்படி வரவேண்டுமென்ற கருத்து திரு. மணி அவர்களுக்குக் கிடையாது என்று நினைக்கிறேன். சர்க்கார் செய்கின்ற செலவு இருநூறு கோடிக்கும் அதிகமான செலவில் பெறுகின்ற தொகையோடு ஆறு கோடி ரூபாய் அதிகம் பெறுகின்ற அளவுக்குத் தனிச் சலுகை அவர்களுக்குக் காட்டப்படுகிறது. பெறுகின்ற தனிச் சலுகைகளையும் வேறு சலுகைகளோடு கூட்டிப்போட்டுக் கணக்குச் சொல்ல வேண்டும். ஆளுக்கு ஆறு ரூபாய் போதாது என்று சொன்னால் அது யாரும் மறுக்க முடியாத வாதம்.

**திரு. கே. பி. எஸ். மணி :** முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். எம்.எல்.ஏ., எம்.பி. எல்லாவற்றிலும் எங்களுக்குப் பாகம் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் முக்கியமாக இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன் சேர்மன் பதவிகளில் எங்களுக்கு ஒன்றுகூட கிடைக்கவில்லை. 375 சேர்மன்களிலே நாங்கள் இரண்டு பேர்கள்தான் வந்திருக்கிறோம் அத்தி பூத்த மாதிரி. இதைப் பற்றி பஞ்சாயத்து யூனியன் மாநாட்டில் மன்னார்குடி சேர்மன் திரு. முருகையன் அவர்கள் சொன்னபொழுது அவரை அடிக்கவே வந்து விட்டார்கள், வந்துவிடு வெளியே என்று நான் சொன்னேன். சர்க்கார் எங்களுக்கு ஏதாவது கொடுத்துவிடப் போகிறதோ என்று அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் எவ்வளவோ பெரிய பெரிய சாதனைகளைச் செய்வோம், செய்வோம் என்று சொல்லித் திட்டமிட்டிருக்கிறீர்கள். படி அரிசித் திட்டம், முடியாது, முடியாது என்று சொன்னார்கள், நீங்கள் அதைக் கொண்டு வந்து ஒரு ஆண்டு முடிந்து இரண்டாவது ஆண்டு வந்துவிட்டது. ஆகவே இதை இரண்டாவது பெரிய சாதனையாக எடுத்துக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வரப்போகின்ற பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களிலே குறிப்பிட்ட ஸ்தானங்கள் ஒதுக்குகின்ற முறையிலே சட்டத்திலே ஏற்பாடுகள் செய்தால் தீண்டாமையை ஒழித்ததாக அது மிகப் பெரிய சாதனையாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொண்டு எனக்கு இவ்வளவு நேரம் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, அரிசன நலத்துறை மானியத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற 6,51,21,100 ரூபாயை அனுமதிப்பதிலே எவ்விதமான மாறுபாடும் கிடையாது. ஆனால் என்னுடைய கருத்தின்படி இந்தப் பணம் போதாது என்று கூற விரும்புகிறேன். நாட்டிலே இருக்கின்ற வருவாய் குறைந்தவர்கள், கல்வியில் தாழ்ந்தவர்கள், சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள், நோய் நொடிகளால் பாதிக்கப்பட்டவர்கள், அங்க ஹீனர்கள் போன்றவர்களையெல்லாம் பாதுகாக்கின்ற, பராமரிக்கின்ற பொறுப்பை ஒரு சேம நல அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டியது கடமையாகும். அப்படி எடுத்துக்கொள்ள வேண்டிய கடமையினுடைய ஒரு பகுதியாகத்தான் அரிசனங்களும், மலைவாசியினரும், குற்றப்பாம்பரையிலே இருந்து நீக்கப்பட்டவர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படிபட்டவர்கள் கணிசமான எண்ணிக்கையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அப்படி கணிசமான பகுதியினராக இருக்கின்ற அவர்களுக்கு இந்தச் சமுதாயத்திலே இழைக்கப்பட்டிருக்கும் தீங்கு கொஞ்சநஞ்சமல்ல. மிகக் கொடுமையான முறையிலே கடந்த காலத்திலே அவர்கள் நடத்தப்பட்டிருக்கிறார்கள். மேல் சாதிக்காரர்களிலே ஏழைகளாக உள்ளவர்கள் மீது பொருளாதாரத்திலே செழுமையாக உள்ளவர்கள் மட்டுந்தான் ஆதிக்கம் செலுத்துவார்கள். ஆனால் இவர்கள் மீது பொருளாதாரத்தில் செழுமையானவர்களாக

உள்ளவர்கள் மட்டுமல்லாது சாதாரண நிலையில் இருக்கக்கூடிய மேல் சாதிக்காரர்களும் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிக் துன்பத்திற்குள்ளான மக்கள், கொடுமைக்குள்ளான மக்கள் கொதித்தெழுந்து இந்தச் சமுதாய அமைப்பை பொடிசூரணம் செய்ய வேண்டுமென்று விரும்பினால் அதை நியாயமானது என்றே கருத வேண்டும். அப்படிப்பட்ட ஒரு கருத்தை வைத்துக் கொண்டு பார்த்தால் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதுமானதாக இல்லை. ஏதோ புள்ளி விவரங்களைக் காட்டி அவர்களுக்கு அதிகப்படியான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறதே தவிர, அவர்களுடைய வாழ்க்கையிலே அடிப்படையான மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதை பேசிய உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கூறினார்கள் என்று கருதுகிறேன்.

1955-ம் வருஷத்திலிருந்து இங்கே தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருக்கிறது. பதின்மூன்று ஆண்டுகள் ஆன பிறகு அந்த நோக்கம் எந்த அளவுக்கு நிறைவேறி இருக்கிறது என்று அரசாங்கம் மதிப்பீடு போட்டிருக்கிறதா ? அவ்வாறு ஒரு மதிப்பீடு போட்டுப் பார்த்தால் அந்தச் சட்டமானது மிக அதிகமாகப் பயன்படவில்லை என்பதும், இன்னும் பல இடங்களில் தீண்டாமை அப்படியே இருக்கிறது என்பதும் தெரியும். அந்த மக்களுக்கு எல்லா இடங்களிலும் குடி தண்ணீர் கிடைப்பதற்காவது வழி செய்திருக்கிறோமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்காகக் கூற விரும்புகிறேன். அரிசன மக்களுடைய நிலை எந்த அளவுக்கு இன்றையதினம் மாறுதல் அடைந்திருக்கிறது, இன்னும் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டு பணியாற்றிக் கொண்டு வருகிறது. அதற்கான அறிக்கைகள் முடிவடைகின்ற தருவாயில் இருக்கின்றன. அதற்கு நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள்தான் தலைவராக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த விளக்கத்திற்கு நன்றி கூறிக் கொண்டு மேலும் தொடருகிறேன்.

என்னுடைய தொகுதியிலே பாலமலை என்ற பகுதி இருக்கிறது. அங்கே மலைவாசிகள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள் அங்கிருந்து வேறு பகுதிகளுக்குச் செல்வதற்குப் பாதைகள் கூடக் கிடையாது. குடி தண்ணீர் கிடையாது. விளக்கு வசதிகள் கிடையாது. அதற்கு அடுத்தாற்போல் உள்ள கொளத்தூர் பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் பல இடங்களில் அரிஜனங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கும் குடி தண்ணீர் வசதியோ, மற்ற வசதிகளோ இல்லை. அவர்களுடைய வீடுகளும் மற்றவர்களுடைய நிலத்தில் கட்டப்பட்டிருக்கின்றனவே தவிர, அவர்களுக்காகவே வீடுகள் கிடையாது. அவர்கள் விவசாயம் செய்வதற்கும் மேல் வகுப்பிலுள்ள விவசாயிகளை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குடி தண்ணீருக்காகக் கவலை இறைக்கின்ற கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்வதற்கும் நிலக்காரர்கள் விரும்பினால்தான் முடியும். அவர்கள் விரும்பவில்லையென்றால் அந்த அரிசனங்கள் தண்ணீர் இல்லாமல் சாக வேண்டிய நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குடிப்பதற்குத் தண்ணீர் எடுத்துக்கொள்வதற்குக் கூட உரிமை இல்லாத நிலையில் இருக்கிறார்கள், அப்படித் தண்ணீர் எடுத்துச்செல்லும்போது மேல் சாதிக்காரர்கள் பெண்களுடைய குடங்களை உடைப்பதும், அவமதிக்கின்ற காரியங்கள் செய்வதும் நடைபெறுகின்றன. இந்தச் சம்பவங்களைப் பற்றிப் போலீசில் புகார் செய்தால் அவர்களுடைய வாழ்வே பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. பஞ்சண்டியூர் என்ற பகுதியில் அரிசனங்கள் மிகுந்த தாழ்வான பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களைச் சுற்றி பக்கத்தில் உயர்வான பகுதியில் வயல்கள் இருக்கின்றன. வயல்களில் தண்ணீர் வரும்போது இவர்களுடைய வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்து பாம்புகளும், பூச்சிகளும் நுழையக்கூடிய நிலைமை





இருக்கிறது. வெளிக்குப் போக வசதி இல்லை. அந்த இடங்களில் வசதியான முறையில் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று ஜில்லா மட்டத்தில் உள்ள அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியும், விண்ணப்பம் அளித்தும் எவ்விதமான பரிகாரமும் ஏற்படவில்லை. நங்கவள்ளி என்ற பகுதியில் அரிசனச் சேரி இருக்கிறது. அவர்கள் செல்லுவதற்குப் பாதை போட ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நிலத்தைச் சேர்ந்தவர்கள் செல்வாக்கைக் கொண்டு பாதை போடாமல் தடுத்து விட்டார்கள். ஓரளவுக்கு அரிசனங்கள் மேம்பாடு அடைந்திருக்கிறார்கள் என்று சொன்னாலும்கூட, கிராமப்புறங்களில் அவர்களுடைய நிலை சிரமமானதாகவே இருக்கிறது.

அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் நகரங்களில் அரிசன வாரங்கள் அரிசன நலத்திற்காகக் கூட்டங்கள் நடத்துவதற்கும் அதிகமான ரூபாயும், கிராமங்களுக்குக் குறைந்த ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நகரங்களில் இருப்பவர்களிடையே இப்போது தீண்டாமை என்ற நிலை கிட்டத்தட்ட போய்விட்டது என்று சொல்லலாம். நகரங்களில் ஆங்காங்கு தொழிற்சாலைகள் மற்ற வேலைகள் செய்கின்ற நிலை இருப்பதால் தீண்டாமை அவ்வளவாக இல்லை. கிராமங்களில் பழமையான மனோபாவம், பழக்கவழக்கங்கள் எல்லாம் இன்னும் மாறாமல் இருக்கும் காரணத்தால் கீழ்ச் சாதிக்காரர்கள், மேல் சாதிக்காரர்கள் என்ற நிலை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. அங்கேதான் பிரசாரம் செய்ய அதிகமான பணம் செலவிடப்பட வேண்டுமே தவிர, நகரங்களில் செலவிட வேண்டிய அவசியம் இல்லை.

அரிசன மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக இருக்கக்கூடிய அதிகாரிகள்கூட, அவர்கள் இனத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தாலும்கூட, கீழ்மட்டத்தில் இருக்கக்கூடிய அவர்களுடைய இனத்தைச் சேர்ந்தவர்களின் நிலையை உயர்த்துவதற்குப் பதிலாக, உறுதியாக, திடமாக, தைரியமாக நின்று காரியங்களைச் செய்வதற்குப் பதிலாக, தங்களுடைய பதவி நிலையை உயர்த்திக்கொள்ளும் வழிவகைகளில் மட்டும் கவனம் செலுத்திக் கொண்டு அந்த மக்களின் உயர்வுக்கான காரியங்களில் ஈடுபடாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலையை உள்ளபடியே உயர்த்த வேண்டுமென்றால் அவர்களுடைய நலனிலே அக்கறை கொண்டவர்களை அதிகாரிகளாகவும், சிப்பந்திகளாகவும் நியமிக்க வேண்டுமே தவிர, ஐ.ஏ.எஸ். படித்து விட்டதாலோ, ரெவின்யூ இலாகாவிலே பணி புரிந்தார் என்ற காரணத்தாலோ நியமிக்கக் கூடாது. இந்த அமைப்பிலே இன்றைய சமூக நீதியை உணர்ந்தவர்களை, அவர்களுடைய வாழ்க்கையிலே உள்ள துன்ப இன்பங்களை உணர்ந்தவர்களை, தியாகம் செய்யும் மனப்பான்மையுள்ளவர்களை அந்தப் பணியில் ஈடுபடுத்த வேண்டும். அவ்வாறு இல்லாது மற்ற அதிகாரிகளைப் போல் இவர்களையும் நியமித்தால் அவர்களுக்கு உண்மையான நன்மை கிடைக்க முடியாது. அத்தகைய முயற்சியிலே இந்த அரசு ஈடுபட வேண்டும். (மணி அடிக்கப்பட்டது—திரு. எஸ். சிவசுப்பிரமணியம் பேச அழைக்கப்பட்டார்.) நண்பகல் 12-00

மன்னிக்கவேண்டும்; விளக்கு எரிந்ததைக் கவனிக்காமல் பேசிக் கொண்டிருந்துவிட்டேன்.

*** திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே ! இந்த மானியக் கோரிக்கையின்மீது நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல முற்படுகிறேன் நம் சட்டசபையில் எவ்வளவோ மானியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த மானியமானது ஒரு சமுதாயத்தைப் பற்றிய மானியம். எல்லாருடைய கவனமும் இந்த மானியத்தின் மீது பாய்ந்து கொண்டு எல்லோரும் இதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மானியத்திற்காக அமைச்சர் அவர்கள் குறைந்த பட்ச தொகை ஒதுக்கி இருக்கிறார்களே தவிர இந்தச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக வேண்டிய தொகை ஒதுக்கப்படவில்லை, பள்ளிக்கூட வசதிகள், மற்ற வசதிகள் எல்லாம் இருந்தாலும், தனிப்பட்ட முறையில் அந்தச் சமுதாயத்திற்கு வேண்டிய தொகை தனியாக ஒதுக்கப்படவில்லை. எல்லாவற்றையும் சேர்த்து ஒதுக்கியிருக்கிறார்கள். அது போதாது. இந்த அரசாங்கம்

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** கணக்கு ஒரு பக்கம் இருக்கட்டும். திரும்பி வந்து அமைச்சர்களைக் கூப்பிட்டு, "சீக்கிரத்தில் இரண்டு ஆண்டு காலத்திற்குள் அவர்களுக்குத் தமிழ்நாடு பூராவும் மனைக்கட்டுகள் வழங்க வேண்டும். அவர்களுக்கு வீட்டுவசதி செய்யவேண்டும். ரோடு வசதி செய்ய வேண்டும். சுடு காட்டிற்குப் பாதைகள் அமைத்துக் கொடுக்கவேண்டும். இதற்கு என்ன வழி" என்று கேட்டார்கள். வழியிருக்கிறது என்று சொன்னார்கள். அதன்படி திரு. பரமேஸ்வரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டி போட்டு, ஏழு சட்டசபை மெம்பர்களையும் அதில் அங்கத்தினர்களாகப் போட்டு அவர்கள் தமிழ்நாடு பூராவும் சுற்றுப்பயணம் செய்து ஒரு அறிக்கை கொடுத்தார்கள். அதில் நானும் ஒரு மெம்பராக இருந்தேன் என்பதையும் தெரிவிக்கிறேன். மூன்று செண்ட் என்பதை ஐந்து செண்ட்கள் ஆக ஆக்கவேண்டுமென்றார்கள். உடனடியாக அவர்களுக்குப் புறம்போக்கு நிலங்களைக் கொடுக்கவேண்டும். புறம்போக்கு அல்லது புன்செய் நிலங்கள் இல்லை என்றால் நன்செய் நிலங்களாவது கொடுக்கவேண்டும். . .

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** அரிசன மக்களுக்கு நிவாரணம் அளிக்கத் தக்க வகையில் அவர்களுக்கு வீட்டு வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். அவர்களுக்கு இடுகாட்டிற்குப் பாதைகள் அமைத்துக்கொடுக்க வேண்டும் என்ற யோசனையை திரு. காமராஜ் அவர்கள் கூறி அதற்கான கமிட்டியைப் போட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன? அது என் செயல்படவில்லை?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** 1964–65-ல் அது போடப்பட்டது. இப்போது 1968. இதுவரை என்ன செய்தார்கள்? என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள்?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அந்த அறிக்கை 1964–65ல் கொடுக்கப்பட்டபோது காங்கிரஸ்தான் ஆட்சியில் இருந்தது. அந்த அறிக்கைப்படி என் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவில்லை என்றுதான் அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். அவர்கள்தான் எடுத்துக்கொள்ளவில்லை நீங்களாவது எடுத்துக்கொள்ளுங்கள் என்றால் கனம் உறுப்பினர் ராமலிங்கத்தின் பாதையைப் பின்பற்றுவது நல்லது.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** அதைத்தான் நான் சொல்கிறேன். நம் முதலமைச்சர் கவனம் செலுத்தி அந்த அறிக்கையை நடைமுறைக்குத் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அதில் நல்ல திட்டங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டின் தனிப்பெரும் தலைவர் பரமேஸ்வரன் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டுவந்த திட்டம். அரிசன டைரக்டர் திரு. சங்கரன் செயலாளராக இருந்து முடித்துக்கொடுத்த திட்டம். அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தீண்டாமை விஷயமாகப் பல நண்பர்கள் பேசினார்கள். தீண்டாமை என்று சொல்லும்பொழுது நான் ஒரு விஷயத்தை சபாநாயகர் மூலமாக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கிருக்கக்கூடிய எம். எல். ஏ.க்கள் தங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லட்டும். எம். எல். ஏ. க்கள் தீண்டாமையை ஒழிக்க என்ன திட்டம் இருக்கிறது? தீண்டாமையை ஒழித்து விட்டார்களா? தீண்டாமையை ஒழிக்க இவர்கள் என்ன திட்டத்தை வைத்திருக்கிறார்கள் என்பதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் எம். எல். ஏ.க்களிடம் தீண்டாமை இருக்கக்கூடாது. முதலமைச்சர் அவர்கள் அதற்கு வழி செய்கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் திட்டம் கொடுத்தார்கள் என்றால் ஏற்றுக்கொள்கிறோம். திட்டம் இருக்கிறது என்றால் ஒத்துக்கொள்கிறோம். அதை நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள், பரிபூர்ணமாக ஆதரிக்கிறோம். எம். எல். ஏ.-க்கள் மனத்தில் தீண்டாமையை ஒழிக்கக் கங்கணம் கட்டிக்கொள்ளவேண்டும். அன்பர் இராஜாங்கம் அவர்கள் சொன்னார்கள். அரசியல்வாதிகள்தான் அதைச் செய்ய வேண்டுமென்று, நிச்சயமாக எம். எல். ஏ.-க்கள் ஒவ்வொரு கிராமத்திலும் சென்று தீண்டாமையை ஒழிக்கப் பிரச்சாரம் செய்யவேண்டும். நம்முடைய பிரச்சாரம் எப்படியிருக்கிறது என்றால் அரிசனத் தெருக்களிலே மட்டும் தான் நடக்கிறதே தவிர வெளியிலே நடப்பதில்லை. "அரிசன் வெல்ஃபேர் கமிட்டி"யானது சேரிகளுக்குச் செல்வதைவிட ஜாதி இந்துக்கள் வசிக்கின்ற தெருக்களுக்குச் சென்று அவர்களிடம் தீண்டாமை ஒழிப்பது பற்றிக்கூறி, அரிசனன் இந்த நாட்டிலே வாழப்பிறந்தவன், அவன் ஆதி திராவிடன், ஆதியிலிருந்தே இருந்து வருபவன், அவனும் எல்லோருடனும் வாழ வேண்டும் என்று சொன்னால் நன்மை பயக்கும்.



**திரு. எம். கோபால்:** சட்டமன்ற உறுப்பினர்கள் தீண்டாமையை ஒழிக்க என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி அவர்கள் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. உறுப்பினர் பேச்சை முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** அடுத்து, அரிசன இலாக்கா, காலேஜ் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு 500 ரூபாய் என்று கொடுக்கிறது. மற்ற மாணவர்களுக்கு 800 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இது என்? நம் இலாக்கா, நம் டைரக்டர், நம் ஸ்பெஷல் ஆபீஸர், நம் டிஸ்டிரிக்ட் வெல்ஃபேர் ஆபீஸர் இருக்கிறார்கள். நமக்கு மாதம் 500 ரூபாய். அவர்களுக்கு 800 ரூபாய். என்? இரண்டு பேரும் ஒரே ஹாஸ்டலில், ஒரே இடத்தில், ஒரே கறியைச் சாப்பிட்டுக்கொண்டு ஒரே வழியில் இருக்கிறார்கள். அப்படியிருக்க என் இவர்களுக்கு 500 ரூபாய், அவர்களுக்கு 800 ரூபாய், என்டதைப் பரிசீலனை செய்யவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இவைகளெல்லாம் தவறான புள்ளிவிவரங்கள். புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களை கவனித்து இனி கனம் அங்கத்தினர்கள் பேசும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** எங்கள் தாலுகாவிலே ஒரு பஞ்சாயத்து யூனியனிலே செய்யப்படும் திட்டங்கள் அரிசனங்கள் வசிக்கும் இடங்களுக்கு வருவதில்லை. இதைச் சபாநாயகர் மூலமாக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குற்றச்சாட்டாகக்கூட கூறவில்லை. கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தண்ணீர் பம்புகள் வைத்தால் அது ஜாதி இந்துக்கள் பக்கம் இருக்கிறது. மின்சார விளக்குகள் என்றால் அரிசனங்கள் இருக்கும் பக்கம் வருவதில்லை. ஜாதி இந்துக்கள் பக்கம் இருக்கிறது. எனவே பஞ்சாயத்து யூனியன்கள் அரிசனங்கள் வசிக்கும் பகுதிகளுக்கும் சேர்த்துச் செய்யவேண்டுமென்று அறிக்கையை அனுப்பி அதற்கு நல்லதொரு நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **திரு. எம். கோபால்:** அவைத்தலைவரவர்களே, இந்த அரிசன மானியத்தின்மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நான் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஒரு சில வார்த்தைகள் பேச முற்படுகிறேன். எல்லா மானியத்தையும்விட இந்த மானியத்தின் மேல் எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களும் அக்கறை கொண்டு ஒவ்வொருவரும் உரிமையோடு பேச முற்படுகிறார்கள். ஆனால் அவ்வாறு பேசும்பொழுது ஒரு சில உண்மைகளை மறந்து பேசுகிறார்கள். நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தத் தீண்டாமை என்பது காங்கிரஸ்காரர்களால்தான் ஒழிக்கப்படவில்லை. சுமார் முப்பது ஆண்டு காலமாக எங்கள் முன்னாள் தலைவர் பெரியார் அவர்களும், இப்போது இருக்கக்கூடிய எங்கள் ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும் தீண்டாமையை ஒழிப்பதற்காகச் செய்த தொண்டு சாதாரணத் தொண்டு அல்ல. பேச்சால் மட்டும் அல்ல,

எழுத்தால் மட்டுமல்ல, நாடகத்தின் மூலமும் எங்கள் அறிஞர் பெருந்தகை அவர்கள் இதற்காகத் தொண்டாற்றியிருக்கிறார்கள். இதை யாரும் மறக்க முடியாது. அவ்வாறு படிப்படியாகச் செய்துவந்த காலத்திற்குப் பிறகுதான் ஆண்டுகொண்டிருந்த காங்கிரஸ் சர்க்கார் கொஞ்சம் ஊக்கம் தந்தார்கள். ஆனால் அந்த ஊக்கத்தைத் தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. பல காங்கிரஸ்காரர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். எங்கேயாவது ஒரு ஆதிதிராவிட சட்ட மன்ற உறுப்பினரோடு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ஒன்றாகச் சாப்பிட்டதாகக் கேள்விப்படவில்லை. ஆனால் எங்கள் ஒப்பற்ற தலைவர் எல்லா ஆதிதிராவிட மக்களோடும் சேர்ந்து உண்ணவும், உறங்கவும் பழகிக்காட்டிவருகிறார்கள். அதை மற்றவர்கள் பின்தொடர்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாகச் சொல்கிறேன். பல்லாண்டுகளாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தொண்டு செய்துவரும் தனிப்பெரும் தலைவராக எங்கள் தலைவர் இருக்கிறார். அதனால்தான் நாங்கள் மனம் விட்டுப் பேசுகிறோம். தொண்டுகள் செய்கிறோம். ,இல்லாவிட்டால் நாங்கள் எல்லோரும் தெருவிலே நடக்க முடியாது, குடியிருக்க முடியாது, பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்காது. இப்படி யெல்லாம் அடிமைப்படுத்தினார்கள். இதைப்பற்றித் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து தொண்டாற்றினார்கள் அறிஞர் பெருந்தகை அவர்கள். இதை நான் மிகைப்படுத்திப் பேசவில்லை. உள்ளபடியே சொல்கிறேன். எந்த காங்கிரஸ்காரரும் இதை மறக்க முடியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, அங்கத்தினர் அவர்கள் பெருமையாகப் பேசுவதைப்பற்றிக் குறை சொல்லவில்லை. காங்கிரஸ்காரர்கள் குறைவாக நடந்துகொள்கிறார்கள் என்று சொல்லியதற்கு நான் ஒரு குறிப்பைச் சொல்ல ஆசைப்படுகிறேன். 1952-ஆம் ஆண்டு நான் போட்டியிட்டபோது பொதுத் தொகுதியும், ரிசர்வ் தொகுதியும் சேர்ந்திருந்த சமயத்திலே 46,560 ஓட்டுகள் அதிகமாகப் பெற்ற மாணிக்கம் என்பவரோடு எங்கள் வீட்டிலே சாப்பிட்டிருக்கிறேன். அந்த நிலைமை 15 வருஷத்திற்கு முன்னாலிருந்தே எங்களிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. எம். கோபால் :** ஏதோ ஒரு சில காங்கிரஸ்காரர்கள் அவ்வாறு இருக்கலாம். பெருவாரியான காங்கிரஸ்காரர்கள் செய்தது கிடையாது. அடுத்து, சட்டத்தால் மட்டும் இந்த நாட்டு மக்களை உள்ளபடியே ஒன்றுபடுத்த முடியாது. எங்கள் தலைவரும் நானும் ஒன்றாகச் சாப்பிட்டிருக்கிறோம். எங்கள் வீட்டிலேயே சாப்பிட்டு இருக்கிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னையும் கனம் அங்கத்தினர் சாப்பிட அழைத்தால் சாப்பிடத் தயாராக இருக்கிறேன்.

**திரு. பா. நாகலிங்கம் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், சாப்பிடுவேன் என்று சொல்வதைவிட சாப்பிட்ட தலைவராக எங்கள் தலைவர் இருக்கிறார் என்பதிலே பெருமைப்படுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல.

**திரு. எம். கோபால் :** இங்கே பல திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். உள்ளபடியே ஓராண்டு காலமாகச் செய்த சாதனைகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அம்மையார் அவர்கள் எந்தெந்தப் புகார்கள் வந்தாலும் அதை அப்போதே ஏற்றுக்கொண்டு நேராகச் சென்று அந்தக் குறையைக் கவனிக்கிறார்கள். ஆனால் எனக்கு முன் பேசிய சிதம்பரம் சட்ட மன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் கக்கன் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். திரு. கக்கன் அவர்களிடம் போலீஸ் இலாக்கா இருந்தது. அந்தக் காலத்தில் அரிசன மக்களை அடி அடி என்று அடித்தார்கள், சுட்டார்கள் அது மட்டுமல்ல, அரிசனங்களைத் தூங்கக்கூட விடவில்லை சென்னையிலே நானும் தூங்க முடியாது. எப்போதும் போலீஸார்



வருவார்களோ என்று பயந்து கொண்டிருக்கவேண்டியிருக்கும். கக்கன்ஜி அவர்களால் ஏறத்தாழ 500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் செத்தார்கள். அதை மறக்க முடியாது. பலபேர்கள் சாகடிக்கப்பட்டார்கள். அது மட்டுமல்ல, எங்கெங்கு சேரிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் போலீஸார்கள் நிற்பார்கள். தூங்கமுடியாது. அதை நண்பர் மறந்துவிட முடியாது. சிதம்பரத்திலே அப்படி கிடையாது போலிருக்கிறது. சென்னையிலே அவ்வாறு நடந்தது.

இந்த இலாக்காவிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸார் காலத்தில் ஒவ்வொரு தாலுக்காவிற்கும் மாடு தருவார்கள். ஒரு ஜில்லாவுக்கு சுமார் 20 மாடுகள் கிடைக்கும். மாடு கொடுப்பதற்கென்று ஒரு விழா நடக்கும். நான் சொல்கிறேன். இவ்வாறு மாடுகள் கொடுக்கத் தேவையில்லை. அந்தப் பணத்தைப் பொதுவாகத் தாலுகாவிற்கு, எந்தெந்த தாலூகா பிற்பட்ட தாலூகாவாக இருக்கிறதோ அந்தத் தாலூகாவிற்கு கிணறோ, மருத்துவ மனையோ, பிரசவ விடுதியோ கட்ட பயன்படுத்தலாம். இந்த அரசு அதை பரிசீலனை செய்யவேண்டும். ஏதோ ரூ. 300 கொடுத்துவிட்டால் போதாது. 10 பேர்களுக்கு மாடு கொடுத்தால் போதாது. அந்தப் பணத்தைக் கொண்டு நல்ல திட்டம் தீட்ட அரசு ஆராயவேண்டும், இரானால் ஒரு சில அரிசனங்கள் பயன் பெற்றால் போதாது. எல்லோரும் பயன்பெற வேண்டும்.

அதேபோல, அரிசனங்கள் தொழிற்சாலை நடத்துவதற்கும் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதையும் நான் பாராட்டுகிறேன். தொழிற்சாலையிலேயும் வியாபாரத்திலேயும் முன்னுக்கு வந்தால்தான் இந்தச் சமுதாயம் முன்னுக்கு வர முடியும். அவர்களுக்காக நாங்கள்தான் ஒப்பாரி வைக்கிறோம். அனுதாபப்படுகிறோம் என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் நாங்கள்தான் அவர்களுக்காக இருக்கிறோம். நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த அரிசன மக்களை எநத வகையில் முன்னுக்குக் கொண்டுவர முடியும் ; எந்த வகையிலே இந்த ஜாதி முறையை ஒழிக்க முடியும் என்றெல்லாம் நல்லெண்ணத்தோடு ஒன்றுகூடி முயற்சி எடுக்கவில்லையென்றால், இந்த ஜாதி முறை ஒழியவே ஒழியாது. ஆகவே, விகிதாசார முறைப்படி, நியாயமான முறைப்படி, அந்த மக்கள் வாழ நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து பாடுபட்டு வழி தேடவேண்டும்.

கடந்த 20 ஆண்டு காலமாக இருந்த காங்கிரஸ் சர்க்காரைவிட, அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ரூ. 1,500 வருமானமுள்ள பெற்றோர்களின் குழந்தைகளுக்குக் கொடுத்த சலுகையை ரூ. 2,000 வரை வருமானம் உள்ளவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். அதோடு விடவில்லை, போனஸ் பற்றியும் அறிவிப்பு செய்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்த அதிகாரிகளுக்கும் அப்பொழுதைக்கப்பொழுது சலுகைகள் செய்திருக்கிறார். ஆகவேதான், இந்த அரசை நாம் எப்பொழுதும் என்றைக்கும் மறந்துவிட முடியாது. இந்த காரணங்களால் எங்களுக்கெல்லாம் தெய்வமாகப் பிறந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள். ஆகவே, இநதச் சலுகைகளை அதிகமாகப் பெறுவதற்கு நாம் எல்லோரும் ஒன்றுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. பி. எஸ். எல்லப்பன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையைப்பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். இது பார்க்கவேண்டிய விஷயம். ஒவ்வொரு வருஷமும் எங்கள் குறைகள் என்று சொல்லி அதை நிவர்த்தி பண்ணவேண்டுமென்ற முறையிலே எல்லோரும் சொல்லுகிறார்கள். எதைப்பற்றி எல்லோரும் பேசுகிறார்கள் ? எல்லோரும் இருக்கிறதைத்தான் சொல்கிறார்கள் ; இல்லாததையும் கொஞ்சம்கூட சொல்கிறார்கள். நான் அந்த முறையில் பேச வரவில்லை. தீண்டாமை, தீண்டாமை, தீண்டாமை என்று 20 வருஷமாக சர்க்கார் ஏற்பட்டதிலிருந்து

சொல்லிக்கொண்டு வருகிற கதை. இதைப்பற்றி 1932-லேயே நாமக்கல் கவிஞர் அவர்கள் ஒரு பாட்டின் மூலமாகச் சொன்னார்.

‘ தீண்டாமை என்கின்ற தீய வழக்கம்
தீரத் தொலைந்திட நாளாச்சு ;
இந்த வழக்கம் நாளுக்கு நாளாக
இந்து மதத்தை வெட்டுது வாளாக.
சாதித்து யாரையும் சண்டாளம் என்கின்ற
சாஸ்திரம் சத்தியமா வேதத்தில் இல்லை ;
கீதையில் இல்லை ; வேறுள்ள சாஸ்திரங்கள்
யாருக்கு இனி ; நால்வர் உரைத்த தேவாரத்தில்
இல்லை ; நந்தன் குலந்தனை நிந்தனை சொல்ல’

ஆழ்ந்து, அனுபவித்து, ஆராய்ச்சி பண்ணி இப்படியெல்லாம் சொன்னார். நால்வர் உரைத்த தேவாரத்தில் இல்லை என்று சொல்கிறபொழுது சும்மா கிடக்கிற அரசாங்கம் என்ன செய்துவிடப் போகிறார்கள் என்று சொன்னார். இப்படி பெருந்தன்மையான ஒரு சமூகம் இது. ஆனால், இத்தனை காலமாக இது நிரம்ப பொறுமையோடு இருந்துகொண்டு வருகிறது. ஒவ்வொரு வருஷமும் இவர்களை என்ன விதத்திலே முன்னேற்றலாம், எந்த வகையிலே இவர்கள் முன்னேறுவார்கள் என்று அதற்காக மானியம் கொண்டு வருகிறார்கள். இப்பொழுது இருக்கிற சர்க்காரைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. வந்த ஒரு வருஷத்தில் என்ன செய்ய முடியும் ? பறந்து பறந்து பாடுபட்டாலும் ஓராண்டில் 10 விஷயத்தைத்தான் அவர்கள் செய்ய முடியும். ஆகவே, நாங்கள் செய்து விடுவோம், நாங்கள் செய்து விடுவோம் என்று சொல்லாதீர்கள் கூடுமானவரையில் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவுதான் எந்த சர்க்காராக இருந்தாலும் செய்ய முடியும். ஆகவே 20 வருஷமாக இருந்தவர்கள் இந்தக் கதியிலே விட்டிருக்கிறார்கள் என்றால் ஒரு வருஷமாக இருந்தவர்கள் எந்த நிலையிலே இருப்பார்கள். ஆகவே, நான் என்ன சொல்லுகிறேன் என்றால், ‘ கையாற ஏற்றி அங்கணம் தின்று’, என்று பட்டினத்தார் சொன்னார். இங்கே ஒதுக்குகிற பணமெல்லாம் எங்கே போகிறது ? ஒரு நல்ல சந்நியாசி, ஒரு வீட்டுக்குப் போய் ‘அம்மா’ என்று கையேந்தினால் ஒரு பிடி சாதத்தை போடுவார் அந்த அம்மையார். அவர் ‘அங்கணம் தின்று’, என்று சொன்னார். அதைப்போல ஒவ்வொரு வருஷமும் இந்திந்த விதமாக பட்ஜெட் போட்டு, அடுத்து வருஷம் பட்ஜெட் போடும்பொழுது எவ்வளவு ஒதுக்கலாம், எவ்வளவு குறைக்கலாம் என்று இந்த வகையிலேதான் செயலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவை எல்லாம் கூடுமானவரைக்கும் ஏதோ கொஞ்சம்தான் செய்ய முடியும்.

ஆகவே, இதையெல்லாம் விட்டு விட்டு முதலிலே குடியிருப்பதற்கு ஒரு இடத்தைப் பார்த்துக் கொடுங்கள். குடி தண்ணீரை ஏற்படுத்திக் கொடுங்கள். ஏதோ சர்க்கார் உங்களிடத்தில் இருப்பதால் அதைச் செய்யலாம். சர்க்கார் நிலம் எவ்வளவோ இருக்கிறதாம். அதில் ஒரு எக்கரோ, அரை எக்கரோ, கால் எக்கரோ அவர்களுக்குக் கொடுத்து உதவி செய்யுங்கள். இப்பொழுது குடியிருப்பு இல்லாமல் அந்த மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்பொழுதுகூட 3 நாட்களாக 3 கிராமத்து ஜனங்கள் என்னைப் பார்க்கவந்தார்கள். அதிலே 21 குடும்பம் ஒன்று ; 42 குடும்பம் ஒன்று, 9 குடும்பம் ஒன்று. அவ்வளவு பேர்களும் அந்த ஊரில் நிரம்ப காலமாகக் குடியிருக்கிறார்கள். அங்கு இருக்கிற மிராசுதாரர்கள் அந்த இடத்திற்கு நோட்டீஸ் கொடுத்து, எல்லோரையும் அனுப்பிவிட்டார்கள். இப்பொழுது பணக்காரர்கள் ஒரு சூழ்ச்சியான காரியத்தைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். இப்பொழுது சர்க்காரிலே நிலத்தை அரிஜனங்களுக்கு சும்மா கொடுக்கிறார்கள் ; இந்த நேரத்திலே நாம் சர்க்காருக்கு நிலத்தைக் கொடுத்தால் அதிகமான பணம் வரும் ; சர்க்காருக்கு இதைக் காண்பித்தால் அதிகமான பணம் வரும் என்ற முறையிலே அவர்கள்





அங்கே குடியிருக்கிறவர்களை காலி செய்யச் சொல்லி வெளியிலே அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே, உடனடியாக அவர்களுக்குக் குடியிருப்பு இடத்தைக் கொடுக்கவேண்டும். ஒரு சாண் நிலம்கூட சும்மா இருக்கக் கூடாது ; அப்படி இருந்தால் யார் வேண்டுமானாலும் சொல்லாமல் பயிரிடலாம் என்று சொன்னார்கள். இப்பொழுது உழ ஆரம்பித்தால் எல்லோரையும் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் விட்டுவிடுகிறார்கள். ‘இலையிலிருந்த அன்னத்தை இருக்கிற நாயும் சாப்பிடாமல் வருகிற நாயும் சாப்பிடாது’ என்று பழமொழி சொல்வார்கள். அதைப்போல் இவர்கள் பண்ணுகிறார்கள். இவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள்? ஒரு நிலத்தை எடுத்தால் உடனே தாசில்தாரிடம் போய், சப்-கலெக்டரிடம் போய் அந்த நிலத்தை யாரும் உபயோகிக்க முடியாத நிலையைப் பண்ணி விடுகிறார்கள். ஆகவே, புறம்போக்கு நிலங்களை அவர்களுக்குக் கொடுங்கள் ; குடி தண்ணீர் வசதியையும் செய்து கொடுங்கள். இந்த அவையிலே யாராவது அவர்கள் முன்னேறவில்லை. படிக்கவில்லை யென்று சொன்னால் அது பொய் என்றே நான் சொல்வேன். ஏனென்றால், இவ்வளவுபேர் படித்துவிட்டு முன்னேறிவந்திருக்கிறார்கள் ; இல்லையென்று சொல்லலாமா ? ஏதோ முடிந்தவரை அவர்களுக்கு சவுகரியம் பண்ணிக் கொடுக்கவில்லையா ? அதற்காக இந்த சர்க்காருக்கு நன்றி சொல்ல வேண்டும். அவர்களுக்குக் குடியிருப்பு மனை கொடுக்கவேண்டும், தண்ணீர் வசதி செய்துதரவேண்டும் , ரோடு வசதி செய்து தரவேண்டும். இந்த மூன்றையும் நீங்கள் செய்து கொடுங்கள். அவ்வளவுதான் எல்லோரும் சொல்லுகிறார்கள். என்ன சொல்லி என்ன பிரயோஜனம் ? நான் வருகிறேன்.

* **திரு. சு. ம. துரைராஜ் :** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த அரிசன நலத் துறை மானியத்தை யொட்டி சில கருத்துக்களை சொல்லுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு எனது நன்றி. எனது மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசும்பொழுது மகாத்மா காந்தி அவர்களும், நேருஜி அவர்களும், காமராஜ் அவர்களும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு நல்ல விதத்திலே பாடுபட்டார்கள் என்று சுட்டிக்காட்டினார்கள். அந்த நல்லவர்களுக்கு நான் ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட சமுதாயம் தலை நிமிர்ந்து வாழக்கூடிய நிலைமையை வகுத்துத் தந்தவர் டாக்டர் அம்பேத்கார் என்பதை இந்த நாடு மறுக்காது என்றே நினைக்கிறேன். அப்படிப்பட்ட டாக்டர் அம்பேத்காரை எனது மதிப்பிற்குரிய காங்கிரஸ்காரர்கள் அழைத்து சட்டத்தை வகுக்கச் சொன்னார்கள் என்று ஒரு காங்கிரஸ் உறுப்பினர் பேசினார்கள். அதே நேரத்திலே சட்டத்தை வகுத்த அதே டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதல் விரோதி மகாத்மா காந்தி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை விளக்கமாக நமது மதிப்பிற்குரிய நண்பர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அவர் எழுதிய ‘What Gandhiji and Congress had done to the Untouchability’ என்ற ஆங்கிலப் புஸ்தகத்தைப் படித்தால் அவர் தோற்றத்தை அதிலே அவர்கள் தெரிந்துகொள்ள முடியும் என்று நான் நினைக்கிறேன்.

எனது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பேசும்பொழுது தாழ்த்தப்பட்ட நலத்துறை சம்பந்தப்பட்டவரை அவர்களே அதிகாரத்திலே இருக்க பிற்பகல் 12-30.
வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மற்றவர்கள் பேசும்பொழுது 6 மாதத்திலே அவர்களை எடுத்துவிடுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்த சமுதாயத்தை நல்ல முறையில் வாழவைக்க வேண்டுமென்று நினைத்து அந்த அதிகாரிகள் ஏதோ சில நல்லதைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்தால் மறுநாளே அவர்கள் பதவி மாற்றப்படுவதை நாம் பார்க்கின்றோம். அப்படிப்பட்ட நிலையை இந்தப் புதிய ஆட்சி செய்யாது என்ற நம்பிக்கையிலே இப்பொழுது இந்த மானியத்திலே பேசமுன்வந்திருக்கிறேன். குறிப்பாகச் சொல்கிறேன 20 ஆண்டு காலமாக தாழ்த்தப்பட்டவர்கள் வணங்கிய தலையை நிமிர்த்த முடியாத வகையில்தான் காலம் தள்ளி வந்திருக்கிறார்கள். இந்தப் புதிய அரசு வந்தவுடன் அவர்கள் தலை நிமிர்ந்து வாழ முடியும் என்ற நம்பிக்கை இருப்பதால், இந்த மான்யக் கோரிக்கையைப் பாராட்டிப பேச நான் முன்வந்திருக்கிறேன். கல்வி வளர்ச்சி

ஏற்பட்டு தாழ்த்தப்பட்ட மக்கள் நல்ல விதத்தில் வாழ்வதற்கு வழிவகை செய்யவேண்டும், ஜாதி, மத பேதம் ஒழிந்து அவர்கள் சமுதாயத்தில் நல்வாழ்வு வாழவேண்டும் என்று டாக்டர் அம்பேத்கார் கண்ட கனவை நினைவாக்கக்கூடிய முறையில் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் பாடுபடுகிறார்கள். நடமாடும் அம்பேத்காராக அவர் விளங்குகிறார் என்றால், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரை உயர்த்துவதற்குப் பாடுபடுகிறார் என்றால், நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, கல்விக்கு எவ்வளவோ பணம் செலவழிக்கப்படுகிறது. அரிஜன நலத்துறை பள்ளியில் படிக்கும் மாணவனைப் பார்த்தாலே ஒரு கேவலமாகப் பேசக்கூடிய நிலைமை இருந்துவருகிறது. அந்த நிலைமையைப் போக்கவேண்டுமென்று இந்தப் புதிய அரசை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் படித்துவிட்டு உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றால் அப்படிப்பட்ட மாணவர்களுக்குத் தனியார் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகளில் இடம் கொடுக்க மறுக்கிறார்கள். அந்த நிலைமையை இந்த அரசாங்கம் போக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, எனக்கு முன்பு காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசும்பொழுது காங்கிரஸ் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் சுபிட்சமாகவும், சுகமாகவும், சுகாதாரத்தோடும் வாழ்ந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். அப்படிக் குறிப்பிட்டவர்களை என்னுடைய தொகுதிக்கு அழைத்து செல்ல கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் பெருமாள்பேட்டை என்ற ஒரு கிராமம் இருக்கிறது. இதுவரைக்கும் அந்தக் கிராமத்து மக்கள் கிணற்றையே பார்த்ததில்லை. அங்குள்ள தாய்மார்கள் சொல்லக்கூடிய ஒரு கதையை நான் இங்கே சொன்னால், அவர்கள் அதைக் கேட்டு வெட்கப்படவேண்டிய நிலைமைதான் ஏற்படும். அந்தத் தாய்மார்களுடைய குழந்தைகளைத் திருமணம் செய்துகொள்ள வெளியே இருப்பவர்கள் யாரும் முன்வருவதில்லை, வெளியிலிருந்தும் இவர்கள் பெண் வாங்குவதில்லை. காரணம் என்னவென்றால், கிராமத்தில் தண்ணீர் இல்லாமல் திண்டாடுகிறார்கள், ஒரு மைல் தொலைவிலுள்ள ஒரு குளத்திற்குச் சென்று அங்கிருந்து அவர்கள் குடத்தைத் தலையில் சுமந்து வரக்கூடிய காட்சியைத்தான் நாம் பார்க்க முடியும். குடத்தைத் தலையிலே தூக்கி, தூக்கி, குடம் தலையிலே முட்டி, முட்டி தலை வழுக்கையாகியிருப்பதை அந்தத் தாய்மார்கள் அருவருப்பாகச் சொல்கிறார்கள். அதனால்தான் அவர்கள் வெளியில் பெண் கொடுப்பதும் இல்லை, வெளியிலிருந்து பெண் வாங்குவதுமில்லை என்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை அரசாங்கம் நல்ல விதத்தில் கவனித்து, ஆவன செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. புதிய அரசாங்கம் நல்ல சில நன்மைகளைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செய்து கொடுத்திருக்கிறார்கள். நிச்சயம் அப்படிச் செய்ய அவர்கள் கடமைப்பட்டவர்கள் என்பதுதான் என்னுடைய ஒரு சிறிய கருத்தாகும். தாழ்த்தப்பட்ட மக்களால் ஆதரிக்கப்பட்டு வந்த இந்தச் ஆட்சியில், மாண்புமிகு அண்ணா அவர்களின் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்லவகையில் பல நன்மைகள் செய்துதரப்படும் என்ற நம்பிக்கையோடு நாங்கள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறோம். இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கிற ஆட்சி அப்பேர்ப்பட்ட நல்லவர்களுக்கு நல்லவிதமாக வீடுகளைக் கட்டித் தரவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஒரு சில வீடுகள் கட்டாமலேயே, யாருக்கும் பயன்படாமலேயே இருந்துகொண்டிருக்கக்கூடிய நிலைமையைக் காண்கிறோம். அப்பேர்ப்பட்ட நிலைமையைப் போக்கி, நல்லவிதமாக வீட்டு வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஜாதிக் கொடுமை ஒழியவேண்டுமென்றால், உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொருளாதார நிலைமை உயரவேண்டும். அந்த அடிப்படையில்தான் வியாபாரத் துறையில் இந்த மக்களுக்கு உதவி





செய்ய பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். நல்ல உள்ளம் படைத்த இந்த ஆட்சியை நான் வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறேன். அப்பேர்ப்பட்டவர்களை நல்ல முறையில் நினைவு வைத்துக்கொண்டு, அவர்களுக்கு நல்லவிதமாக விரைவிலே வசதிகள் கிடைக்கும்படியான அளவுக்கு இந்த அரசாங்கம் வழிவகைகளை செய்துதரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, தீண்டாமையைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் தீண்டாமை நல்லவிதமாக ஒழிந்துவிட்டது என்று பேசினார்கள். எனது தொகுதியில் காங்கிரஸ்காரர்களே சில கெடுதல்களைச் செய்துவருகிறார்கள். காங்கிரஸ் நண்பர்கள் இப்படிச் செய்யாமல் இருந்தால்தான் தீண்டாமையை ஒழிக்க முடியும். நான் இது சம்பந்தமாக ஒரு உதாரணத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது தொகுதியில் ஒரு கிராமத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவருக்கு டீ கடையில் டீ கொடுக்க மறுத்தார்கள். அந்த நேரத்தில் நான் அந்தத் தொகுதி உறுப்பினர் என்ற முறையில் என்னை அங்கே அழைத்துச் சென்றார்கள். அங்கு இருக்கும் காங்கிரஸ் நண்பர்கள் என்னை தாழ்த்தப்பட்ட உறுப்பினர் என்று சொன்னார்கள். உண்மையிலேயே தாழ்த்தப்பட்டவன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படக்கூடிய அளவுக்கு நான் உங்கள் முன்னிலையிலே காட்சி அளிக்கிறேன். 'தாழ்த்தப்பட்டவனா நமக்கு புத்தி சொல்வது' என்று காங்கிரஸ்காரர்கள் கேட்டார்கள். இந்த நிலைமையை அரசாங்கம் நல்லவிதத்தில் போக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வசதியைப் பெருக்கவேண்டுமென்ற நிலையிலே இந்த ஆட்சி இருக்கிறது. நல்ல விதத்தில், எங்களுடைய கஷ்டங்களைத் தீர்த்துவைத்தால், அந்த நல்ல தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், நல்ல சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இந்த ஆட்சியைப் பாராட்டுவார்கள் என்று சொல்லிக் கொள்ள இந்த நேரத்தில் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், சுப்ரீம் கோர்ட்டு தாழ்த்தப்பட்ட கெஜடெட் ஆபீசர்கள் இல்லாதவர்கள் பற்றி ஒரு தீர்ப்பை அளித்திருப்பதை நாம் கண்டோம். அந்தந்த மாநில சர்க்கார்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு அப்பேர்ப்பட்ட தாழ்த்தப்பட்ட என். ஜி. ஓ.க்களுக்கு கெஜடெட் ஆபீசர் பதவிகளை அளிக்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த ஆட்சியைப் பாராட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் வீதியில் தலை நிமிர்ந்து நடக்கக்கூடிய முறையில் நிலைமையை மாற்றவேண்டும் என்று இந்த ஆட்சியைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேண்டியதை நல்ல விதத்தில் இந்த ஆட்சி செய்து கொடுக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு, இப்பேர்ப்பட்டவர்களுக்கு நல்ல முறையில் பயன்படக்கூடிய இந்த மான்யக் கோரிக்கையை நான் பாராட்டி முடிக்கிறேன். வணக்கம்.

***திரு. கொ. இர. ஞானசம்பந்தன்:** தலைவர் அவர்களே, இந்த மான்யத்தைப்பற்றி பேசும்பொழுது, வாஸ்தவமாகவே சமுதாய அமைப்பிலே இருக்கக்கூடிய கோளாறு காரணமாக இழைக்கப்பட்ட கொடுமை என்றே நான் இதைக் கருதுகிறேன். நிச்சயம் இதிலே ஒரு பெரிய முன்னேற்றம் ஏற்படவேண்டும். இந்த அரசைப் பொறுத்தவரையில் சில திட்டங்களை அறிவித்திருக்கிறது. அவைகளுக்கு வேண்டிய பணத்தையும் ஒதுக்கியிருக்கிறது. அது நிச்சயம் வரவேற்கக் கூடிய அம்சம் தான் என்பதில் எனக்கு எந்தவிதமான மாறுபாடும் கிடையாது. 1961–62-ல் ரூ. 355 லட்சம் ஒதுக்கப்பட்டது. இப்பொழுது கூடவே ஒதுக்கியிருக்கிறார்கள். ரூ. 6 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். அதில் ஒன்றும் எனக்கு எந்தவிதமான மாறுபாடும் கிடையாது. அரிஜன நல முன்னேற்றத்தில் ஒரு பெரிய

மாற்றம் ஏற்படவேண்டுமானால், இப்பொழுது முதலமைச்சராக இருக்கக்கூடியவர் அப்பொழுது இந்த மன்றத்தின் உறுப்பினராக இருந்த சமயத்தில் பேசியபொழுது, இதில் ஒரு பிரத்யேக அணுகும் முறை வேண்டும் என்று கூறினார். இதிலே இன்னும் 'டைனமிக் அப்ரோச்' இருந்தால் தான், நிச்சயம் பெரிய முன்னேற்றம் காணமுடியும்.

இம்மாதிரி ஓரளவுக்கு குறிப்பிட்ட பணத்தை மட்டும் வைத்துக் கொண்டு சமுதாயத்தில் ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்திவிட முடியுமா என்று கேட்டால், நிச்சயம் முடியாது. பொருளாதாரம், அரசியல், மற்ற எல்லாவற்றிலும் சுரண்டப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட ஒரு பெரிய சமூகம் இது. எனக்கு முன் பேசிய பல நண்பர்கள் இதைப்பற்றிச் சொன்னார்கள். அந்த விவரங்களைக் கூற இப்பொழுது நேரமில்லை. 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், அவர்களுக்கு இழைத்த கொடுமை கணக்கில் அடங்காது, அதைப்பற்றிப் பேசினால் இப்பொழுது நேரம் போதாது. அதைப்பற்றி ஒரு கவிதையே எழுதலாம். 20 ஆண்டு காலத்தில், சுதந்திரம் பெற்ற பிறகு இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், அரிஜன மக்கள், விவசாயத்திற்கே முதுகெலும்பாக இருக்கக்கூடியவர்கள், உழைத்து, உழைத்து பாடுபட்டார்களே தவிர, பல்லாயிரக்கணக்கான ரூபாய் திட்டங்களைப் போட்டு நிறைவேற்றயிருந்தபோதிலும், கொஞ்சம் கூட அவர்களுடைய நிலையில் முன்னேற்றம் காணமுடியவில்லை என்பதை அப்பட்டமாக நான் எடுத்துச் சொல்வதற்கு முடியும். அதை நிச்சயம் யாரும் மறுக்க முடியாது. அவர்களுக்கு குடியிருப்பதற்கு வீடு இல்லை, சுடுகாடு இல்லை, பாதை இல்லை, தண்ணீர் வசதி இல்லை, பள்ளிவசதி இல்லை. இதைவிட காங்கிரஸ் ஆட்சியில் அவர்களுக்கு இழைத்த கொடுமைக்கு வேறு என்ன சான்று வேண்டும்? 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில், குறிப்பாக எனது மாவட்டத்தில் நிலப்பிரபுக்கள் ஆதிக்கத்தில் வளர்ந்தவர்கள் இந்த சமுதாயத்தினருக்கு எந்தவிதமான உரிமையும் கொடுக்கவில்லை. 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் நிச்சயம் அவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்றால், மத்திய அரசிடம் இதற்கு அதிகப் பணம் ஒதுக்கும்படி நாம் வற்புறுத்த வேண்டும். நாம் இப்பொழுது அளிக்கிற ரூ. 6 கோடி போதுமா என்றால், நிச்சயம் போதாது. இந்த அறிக்கையிலே பார்த்தேன், மூன்றாவது வகுப்பு வரையில் உடை கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். அதனால் மட்டும் இந்தப் பிரச்னையை தீர்த்துவிட முடியாது. அந்த அறிவிப்பை வரவேற்கிறேன். ஆனால், அது போதாது. மூன்றாவது வகுப்பு வரையில் இல்லாமல், 8-வது வகுப்பு வரையில் கூட உடை அளித்தாக வேண்டும். அவர்களுடைய பிள்ளைகள் பள்ளிகளுக்கு வரவேண்டுமென்றால் அவர்களுடைய குழந்தைகளுக்குச் சாப்பாடு, உடை கொடுப்பதோடு மட்டுமல்லாமல், அந்தக் குடும்பத்தினுடைய பொருளாதார நிலைமை உயர வேண்டும். அந்தக் குடும்பத்தினுடைய பொருளாதார நிலைமை உயர்ந்து, அதிகமாக பிள்ளைகள் பள்ளிக்கு வரவேண்டுமென்றால், நிரந்தரமாக அவர்களுக்கு 'ஸ்டைபெண்டு' (உதவித் தொகை) கொடுக்கவேண்டும். அதற்கு நிதி வசதி எங்கே? உண்மையிலேயே காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கு இந்த அரிஜன முன்னேற்றத்தில் அக்கறை இருக்குமானால், பிற்பட்ட வகுப்பினர் முன்னுக்கு வரவேண்டுமென்று அக்கறை இருக்குமானால், காந்தியடிகள் சொன்ன நடைமுறையை உண்மையிலேயே அவர்கள் அமல் நடத்தவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்குமானால், நமது அரசு மத்திய அரசை வற்புறுத்தி, அவர்களுடைய முன்னேற்றத்திற்கு. படிப்பு முன்னேற்றத்திற்கு, பொருளாதார முன்னேற்றத்திற்கு, மத்திய அரசு நிதி அதிகம் ஒதுக்கித்தரவேண்டும். இந்தச் சமூகத்தினருக்கு இந்த நாட்டின் ஒரு பிரஜை என்ற முறையில் பாரதியார் சொன்னபடி இந்த நாட்டின் மன்னர் என்ற அளவுக்கு அவர்களுக்கு சமுதாயத்தில் சம உரிமை கிடைக்கவேண்டும். அதற்கு மத்திய அரசிடமிருந்து அதிக மான்யம் கிடைக்கவேண்டும். அதற்காக இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். அப்பொழுதுதான் இந்தப் பிரச்னையை தீர்க்க முடியும். எனவே கூறுகிறேன், அணுகும் முறை, 'டைனமிக் அப்ரோச்' ஆக இருக்க வேண்டும். அப்படி இருந்தாலொழிய, அடிப்படையில் மாற்றம் ஏற்படுத்தாவிட்டால், ஒன்றும் நடக்காது. ஆகவே அந்த முறையில் அணுகவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.





அரிசனச் சேரிகளைப் பொருத்தவரையில் அவற்றின் முன்னேற்றம் அவசியம் என்று உணர்ந்திருப்பதற்குத் தக்க முறையில் செயல்படவேண்டும். எங்கள் மாவட்டத்தில், நாகப்பட்டினத்திற்கு அருகில் ஜகன்னாதபுரம் என்ற ஊர் இருக்கிறது. சமீபத்தில் பெருமழை பெய்த காலத்தில், கடல்நீரும் உயர்ந்து வந்து, மாரளவு தண்ணீரில் குடிசைகளை விட்டு, தவித்த மக்களுக்கு, பக்கத்தில் இருந்த மேட்டுத் தரிசு பயன்படவில்லை. காங்கிரஸ் ஆட்சியாளர்கள், அதை ஒரு நிலப்பிரபுவிற்கு ஜாரி செய்து ஜாரிப் புறம்போக்காக ஆக்கிவிட்ட காரணத்தால், அந்த அரிசன ஏழை மக்கள் தங்க இடம் இல்லாமல் தவித்தார்கள். இம்மாதிரிச் சேரிகள் தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல, வேறு பல இடங்களிலும் இருக்கின்றன. அவர்கள் குறைந்த பட்சம் மேடான இடங்களிலாவது குடியேறச் செய்யவேண்டும். அந்த வகையில் நம்முடைய அரசாவது இப்பொழுது உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அதில் என்ன சிக்கல்கள் இருந்தாலும் சரி, என்ன கஷ்டங்கள் இருந்தாலும் சரி, அதைச் செய்தே ஆகவேண்டும்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் நிர்வாகத்தில் பலவகையான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன: அவற்றையெல்லாம் ரீ-க்ளாஸிபை செய்து, குறைந்த பட்சம இந்த அரிசன மக்களை மேடான இடத்திலாவது குடியேற்ற வேண்டும் என்பது என்னுடைய முதலாவதான கோரிக்கை. அடுத்து, எலெக்ட்ரிசிடி டிபார்ட்மெண்டார், இந்த அரிசன மக்களை இன்னமும் அரிசனங்களாகவேதான் நடத்துகிறார்கள். எங்கள் பகுதியில், புதுச்சேரி என்ற கிராமத்தில், அதற்கான பணத்தையும் கட்டி விட்டார்கள். ஆனால், மூன்று, நான்கு ஆண்டுகள் ஆகியும்கூட இன்னமும் லைட்டுகள் போடப்படவில்லை. டி.டி.வி.யிலும் சொல்லியாகிவிட்டது. எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பஞ்சாயத்து அபிவிருத்தியிலும் கூட, ஜாதி இந்துக்கள் இருக்கும் தெருக்களுக்கு விளக்குகள் போடுகிறார்களே அல்லாது, அரிசனத் தெருக்களுக்கு விளக்குகள் வருவதேயில்லை. இந்தக் கொடுமையை இந்த ஆட்சியிலாவது ஒழித்தாக வேண்டும்.

அதே நேரத்திலே இன்னொரு பெரிய பிரச்சினை என்னவென்றால் சுடுகாட்டுப் பிரச்சினை. எங்கள் மாவட்டத்திலே சுடுகாட்டுக்குப் போக ரோடு இருக்கும். ஆனால், அரிசனப் பிணங்களை அந்த வழியாக எடுத்துப் போகக் கூடாது என்று வழக்குகள் நடக்கும். அப்படிப் பல கலகங்கள் நடந்திருக்கின்றன. காங்கிரஸ் ஆட்சியில், இருபது ஆண்டு காலத்தில், அரிசனங்களை வாழத்தான விடவில்லை. செத்த பிறகாவது, சுடுகாட்டுக்குச் செல்ல வசதி செய்யத் தவறிவிட்டது. நம் ஆட்சியிலாவது அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி பல கலகங்களை, தீர்த்து வைத்திருக்கிறோம். சமீபத்திலே கூட, மாவட்டக் கலெக்டரையும் வைத்துக் கொண்டு சமாதானம் செய்திருக்கிறோம். இருந்தாலும் பிரேதங்களை சுடுகாட்டுக்கு எடுத்து போகும் வகையில் அவர்களுக்கு நிச்சயமாக, உடனடியாக, ஏற்பாடுகள் செய்து தரவேண்டும். அது ஒரு உடனடியான பிரச்சினை.

எனக்கு ஒரு ஐயப்பாடு இருக்கிறது, அமைச்சரவர்கள் விளக்குவார்கள் என்று நம்புகிறேன். 'வசதியுள்ளவர்களுக்கு, தகுதியுள்ளவர்களுக்கு உழவு மாடுகள் ஏற்பாடு செய்யப்படுகிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், அறிக்கையில். பெரும்பாலான விவசாயத் தொழிலாளர்கள், அரிசன மக்கள் பாதிக்கப்படுவார்கள். 'வசதியுள்ளவர்களுக்கு, என்பதை மாற்றி விட்டு, 'அவசியப்படடவர்களுக்கு' என்று திருத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப் போட்டால்தான் பெரும்பாலான ஏழை அரிசன மக்களுக்கு உதவி செய்தவர்களாக ஆவோம. ஆகவே அந்த வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** வசதியுள்ளவர்கள் என்று குறிப்பிட்டிருப்பதற்குக் காரணம், நிலம் உடையவர்களுக்குத்தான் கொடுக்கப்படும் என்பதற்காக. அப்படிப் பட்டவர்களுக்கு உழவு மாடுகள் தரப்படுகின்றன. நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

**திரு கொ. இர. ஞானசம்பந்தன் :** அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். சொந்த நிலம் இல்லாதவர்கள் என்றாலும், அவர்கள் சாகுபடி செய்கிறார்கள். ஆம், சொந்த நிலம் இல்லை அவர்களுக்கு. ஆனாலும் உண்மையிலேயே சாகுபடி செய்கிறார்கள். வசதியில்லாததால், உழ முடிய வில்லை. எனவே, சாகுபடி செய்கிறவர்களுக்கு, பயிர்களின்பேரில் உத்தரவாதப் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டாவது, மாடு கொடுக்கவேண்டும். அதை இந்த அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அறிக்கையில் மூன்றாவது வகுப்புவரையில், துணி கொடுப்பது என்பது வரவேற்கத்தக்க அம்சம். ஆனாலும், அதையே எட்டாவது வகுப்புவரை உடை வழங்கத் தக்க வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தப் பிரச்சினையை பரிவோடும், அனுதாபத்தோடும் கவனிக்க வேண்டும்.

போன சட்டமன்றக் கூட்டத்திலே கனம் முதலமைச்சர் அறிவித்தார்கள், படிப்புக்கு வருகிற ஹரிஜன மாணவர்களுக்கு போனஸ் தருவதாக. அதை அமல் நடத்தவேண்டும் என்றாலும், அரிசனப் பிள்ளைகள் எட்டாவது வரையிலாவது பள்ளிகளுக்கு வரவேண்டும் என்றால், நிச்சயமாக ஓரளவுக் காவது, ஒரு குறிப்பிட்ட அளவிற்காவது, அவர்களுக்கு 'ஸ்டைபெண்ட்' கொடுக்க நடவடிக்கை நம் அரசு மேற்கொள்ளவேண்டும். பணம் இல்லை யென்றாலும் கூட, இம்மாதிரியாகச் செய்வது மிக மிக அவசியமானது. ஆகவே, அந்த விஷயத்தைக் கவனிக்கவேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக அந்த டிபார்ட்மெண்டைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அந்த டிபார்ட்மெண்ட் அரிசனங்களை அரிசனங்களாகவே நடத்துகிறார்கள். அந்த நிலைமை நம்முடைய அரசிலாவது இருக்கக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். பல அரிசன நலத்துறை அதிகாரிகள் பிரச்சினைகளை அணுகும் முறையை மாற்றுவதற்கு நம்முடைய அரசு காலத்திலேயே நடக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த ஐ.ஏ.எஸ். பயிற்சி பள்ளியில் மாணவர்களுக்கு ரூ. 80 உணவுக்கென்று கொடுக்கப் படுகிறது, அது போதாது, ரூ. 100 கொடுக்கவேண்டும் என்று விரும்பு கிறார்கள். இதனால் ஏற்படும் செலவு குறைவானது என்பதால் அந்த உதவியை நம்முடைய அரசு அளிக்கவேண்டும்.

இந்த விதங்களில் நன்மைகள் செய்ய வேண்டும் என்று கூறி, இந்த சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

**திரு என். கிட்டப்பா :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் கோரி யுள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து, சில வார்த்தைகள் சொல் வதற்கு விரும்புகிறேன். நம்முடைய புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால், நீண்ட நெடுங்காலமாக சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டிருந்த, பழங்குடி மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தங்கள் அரசு அமைந்திருக்கிறது என்று தமிழகத்திலே பூரிப்படைந்தார்கள். அந்த வகையில் அவர்கள் எப்படி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்களோ, அதை நன்றாக உணர்ந்திருக்கிற நம் மாண்புமிகு அண்ணாவின் ஆட்சியில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க மாற்றங்கள் ஏற்பட்டு, ஆதிதிராவிட சமுதாயத் தினர் நல்ல முறையில் உருவாகி வருவதை நாம் காண்கிறோம். சென்ற ஆண்டில் ரூ. 2,000-க்கு குறைவான வருமானம் உள்ள ஆதிதிராவிட மாணவர்களுக்கு கல்லூரி புகுமுக வகுப்புகளுக்கு கட்டணச் சலுகை வழங்கப்படவேண்டும் என்று நல்ல உள்ளத்தோடு, நல்ல எண்ணத்தோடு தெரிவித்து, இன்று வரையில், அந்தப் பகுதி மக்கள், அதை வர வேற்றுப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசிய நேரத்திலே நினைத்துக் கொண்டேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்து நடத்திவந்திருக்கிற நம்முடைய இயக்கத்திற்குக் கிடைத்த பாராட்டு, இன்றையதினம் அரிசன நலத் துறைக் கோரிக்கையில் பேசுவது பொருத்தமானது என்று கருதுகிறேன். எவ்வளவோ இழிவாகவும் கேழ்த் தரமாகவும், முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், அதன் மூலமாகிய





திராவிடக் கழகத்தைப் பற்றியும் இழிவான பாஷையில் பேசி, அதைப் பறையர் கட்சி என்றும், பள்ளர் கட்சி என்றும் ஒரு காலத்தில் பேசி வந்திருக்கிறார்கள் என்பதால், அந்த அடைமொழிகளைக் கொண்ட கட்சி யின் ஆட்சி இந்த நேரத்தில் நடக்கிறது என்றால், அந்தப் பழங்குடி மக்கள் நிச்சயமாக, அந்த ஆட்சியை வாழ்த்தவும், வரவேற்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த மானியக் கோரிக்கையில், நான்காவது திட்டத்தில் அரிசன நலத் துறைப்பள்ளி ஆசிரியர்களுக்கு வீடுகள் கொடுக்க முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாக எடுத்துக் கூறியிருப்பதை வரவேற்று, பாராட்டக் கடமைப்பட் டிருக்கிறேன். 1968–69-ல் இந்த நிதி ஆண்டில், அரிசன மாணவர்கள் இல்லங்கள் துவங்க ரூ. 1·62 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கான இடங்களைத் தேடிக்கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இடங்களைத் தேடிக்கொண்டிருக்கிற இந்த நல்ல நேரத்திலே என்னுடைய தொகுதியில், மணமேட்டில், அத்தகைய நிலம் சிறப்பாக இருக்கிறது. அப்படிப்பட்ட கோரிக்கையும் நீண்ட நாளாக இருக்கிறது. அதை நிறைவேற்றித்தரவேண்டும் என்றும் இந்த நல்ல நேரத்திலே அமைச்சர்வர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் இல்லக் காப்பாளர்களுக்கு ரூ. 200 மானியம் என்றும், ஒன்றாவது முதல், மூன்றாவது வரை மாணவர்களுக்கு இலவச சீருடை என்றும், குடியிருப்பு மனைகளில் வீடு கட்ட ரூ. 25 ரொக்கம், அதே போல சாதனங்கள் வாங்க ரூ. 125 என்றும், இம்மாதிரியான விவரக் குறிப்புகள் மானியக் கோரிக்கையிலே அடங்கியிருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல அம்சங்களை நல்ல எண்ணம் படைத்த அத்தனைபேரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நானும் என்னுடைய தொகுதி சார்பில் பாராட்டுகிறேன்.

குடியிருப்பு மனையைப் பற்றி இங்கு பல பெரியவர்கள் எடுத்துச் சொன்னார்கள். உண்மையான நிலைமையை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லவேண்டியிருப்பதற்காக நான் வெட்கப்படுகிறேன். பல ஆண்டுக் காலமாக இருந்த அந்த நிலைமை இந்த ஓராண்டுக் காலமாக மாறி விட்டதா என்று பார்த்தால், நிச்சயமாக மாறவில்லை என்னுடைய மாய வரம் தொகுதியைப் பொறுத்த வரையில், எழெட்டு ஆண்டுக் காலத் திற்கு முன்னாலிருந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, வட்ட அரிசன நல அதிகாரி அவர்களிடம் அந்த மனு சென்று, அவர்கள் அந்த இடத்தைப் பார்த்து, அந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டதற்கு அடை யாளமாகக் குச்சிகள் அடித்து, அந்தக் குச்சிகளும் மக்கிப் போய், அதற்கு பின்னாலும் அந்த இடம் அப்படியே இருக்கிறது. எட்டாண்டுக்குப் பின்னா லும் இந்த ஓராண்டுக் காலம் பல தடவைகள் நானும் நடந்து பார்த்து விட்டும், அது நடைமுறைக்கு சாத்தியமாக வருகிறதா என்று கேட்டால், வருவதற்கு வழி இருக்கிறதா என்று கூடப் புரியவில்லை. அதற்கு முன்னால் இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள், எங்கள் தொகு தியைச் சார்ந்தவர்கள் ஒரு 15 ஆண்டுக் காலமாக சட்ட மன்றத் திலே சிறப்பாகப் பணியாற்றி வந்திருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு பாடுபட்டு இருப்பார்கள் என்பதை ஓராண்டுக்கால அனுபவம் எனக்குச் சிறப்பாக உணர்த்துகிறது என்று நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் காட்டுகிறேன். அரிசனங்களுக்கு நல்ல குடியிருப்பு மனைகளை வழங்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் நமது அரசுக்கு நிச்சயமாக இருக் கிறது. அவர்களுக்குச் சிறப்பான வழிவகைகளைக் காட்ட வேண்டும். அவர் களும் சமுதாயத்திலே தலை நிமிர்ந்து நடக்கவேண்டும் என்ற சகோதர பாசமான எண்ணம் இந்த அரசுக்கு இருந்தாலும் அதை நடத்திக் காட்டவேண்டிய அதிகாரி, குறிப்பாக மாவட்ட அளவில் இருக்கும் அதி காரி, அவர்களுக்குக் கீழே பணியாற்றிக் கொண்டிருக்கிற தாசில்தார், வட்ட அளவில் இருக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்ப்பதே அரிதாக இருக்கிறது எப்பொழுது சென்றாலும், 'டூர் போய் விட்டார்' என்று அங்கே இருக்கிறவர்கள் சொல்லுகிறார்கள். எந்த ஊருக்கு அதிகாரிகள் சென்றாலும், அந்த ஊரில் இருக்கும் பொறுப்பு

வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ கூட அந்த விவரம் அறிவிக்கப்படுவது இல்லை. இப்படிப் பார்க்கும்போது ஒரு எட்டாண்டுக் காலம், ஒன்பதாண்டுக் காலம் மனைகள் வழங்குவதில் எந்த விதத்தில் தடை ஏற்படுகிறது என்பதை நமது மதிப்பிற்குரிய அமைச்சரவை சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏராளமான மகசர்களை ஆதி திராவிட சமுதாயத்தினர் பல இடங்களில் கொடுக்கிறார்கள். இன்னும் மகசர்கள் கொடுக்கவேண்டிய அளவுக்கு இருபதாண்டுக் காலம் இந்தநாட்டை ஆண்டு கொண்டிருந்தவர்கள், மகசர்களை அப்படியே வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்றுதான் கருதுகிறேன். ஏராளமான மகசர்களைப் பார்க்கும்போது, இவ்வளவு மகசர்களுக்கும் வேலை நடந்தல்லாத காரணத்தால், அவர்கள் மகசர்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குடியிருப்புக்குப் பாதை வேண்டும், குடி தண்ணீர் வேண்டும், மின்விளக்கு வேண்டும், இடுகாட்டுக்குப் பாதை வேண்டும் என்று நாங்கள் இன்னும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய நிலையில் அரிசன மக்களை இருபதாண்டுக் கால ஆட்சியில் விட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். இந்த வசதிகளையெல்லாம் சென்ற இருபதாண்டுக் காலத்தில் அவர்கள் முடிக்காத காரணத்தால்தான் நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையை மாற்றியமைக்க தனிக் கவனம் நமது அமைச்சரவை செலுத்துகிறது. என்றாலும், அதற்குப் பிரத்தியேகமாக இன்னும் தனியான முறையைக் கையாளுவது உசிதம் என்று நான் மிக மிகப் பணிவுடன் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுவேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பல இடங்களில் தப்பித் தவறி ஒதுக்கியிருக்கிற இடங்களில், நஞ்சை நிலங்களைக் கூட ஒதுக்கியிருக்கிறார்கள். குடியிருப்பு மனை என்று சொல்லிவிட்டு, எட்டு ஆண்டு அலைய விட்டுவிட்டு, பரிதாபத்திற்குரிய ஆதி திராவிட சமூகத்தினருக்கு ஒதுக்கியிருக்கும் இடங்களைப் பார்த்தால், என்னுடைய பரண்டூர் போன்ற இடங்களில் மிகவும் தாழ்வான இடங்கள், பள்ளமான பகுதிகளை அவர்களுக்கு அளித்துவிட்டோம் என்று பெருமை அடைந்து விட்டார்களே தவிர, ஆதி திராவிட சமுதாயத்தினர் அங்கு வீடு கட்டிக்கொண்டு வாழ்வதற்கு ஏற்ற இடங்களாக அவை அமைக்கப்படவில்லை. எனவே, நமது அரசு, அத்தகைய இடங்களை மறுபடியும் சீர்தூக்கிப் பார்த்து, அவர்களுக்குக் குடியிருப்புக்கு ஏற்ற இடங்களாகத் தருவதற்கு முன்வரவேண்டும். முன்வரும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

ஆதி திராவிட சமுதாயத்தினரை, எந்த இடத்திலும் தாழ்த்தப்பட்டவர்களாகவோ அல்லது சமுதாயத்தில் தாழ்வான நிலையில் இருக்கக்கூடியவர்களாகவோ பிரித்துக் காட்டக்கூடாது என்று சட்டம் நடைமுறையில் இருந்தாலும், தஞ்சை மாவட்டத்தில் சில பல இடங்களில், உயர்ந்த ஜாதி என்று தங்களை எண்ணிக்கொள்ளக்கூடிய பொது மக்கள், கிராமங்களில் தேனீர்க் கடைகளில் என்ன நிலைமையை உண்டாக்குகிறார்கள் என்று பார்த்தால், கண்ணீர் விடக்கூடிய நிலையில்தான் இன்னும் ஆதி திராவிட சமுதாயத்தினர் நடத்தப்படுகிறார்கள் என்பதை என்னால் நிரூபிக்க முடியும். ஒரே கடையில் இரண்டு இடங்களில் இரண்டு பகுதிகளாகப் பிரிந்து உட்கார்ந்து கொண்டிருப்பார்கள். பார்த்தால் திடீர் என்று தெரியாது. உள்ளே நுழைந்தால் தெரியும். ஒரு புறத்தில் ஆதி திராவிட மக்கள் உட்கார வேண்டும். இன்னோர் இடத்தில் தனியாக உயர்ஜாதியினர் என்ற எண்ணத்திலே உள்ளவர்கள் உட்காரவேண்டும். இப்படி இரண்டு இடங்களாகத் தடுத்து அந்த முறையைக் கையாண்டு வருகிறார்கள். இல்லை என்று யாரும் மறுத்துவிட முடியாது. இந்த நிலையை மாற்றுவதற்கு இதற்கு முன்னாலிருந்த அரசு முன்வரவில்லை என்று நான் சொல்ல மாட்டேன். என்றாலும், தேவையான நல்ல அழுத்தமான சட்டங்களை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். சட்டம் இருந்தாலும் அது சரிவர அமல்படுத்தப்பட வேண்டும். அத்துடன், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரைப் பிரித்துக் காட்டும் இம்மாதிரி நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டக்கூடியவர்களை, ஓட்டல் முதலாளிகள் போன்றவர்களுக்கு லைசன்சை ரத்து செய்வது மட்டுமல்லாமல், அம்மாதிரி நடத்துகிறவர்களுக்கு ஆயுள் தண்டனைகூட விதிக்க இந்தச் சட்டமன்றம் சட்டங்களை உருவாக்கினால்



அதைவிடப் பெருமைப்படக்கூடிய காரியம், அதைவிட அவர்களுக்கு நல்லது செய்யக்கூடிய காரியம் வேறு இருக்க முடியாது என்று திடமாக நம்பி இந்த மானியக் கோரிக்கையை நான் மனமார வரவேற்று என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

***திரு. மு. ராமன்** : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த அரிசன—நலத் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று, இதில் பேச வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருபதாண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியில் அநேக காரியங்களை அரிசனங்களுக்குச் செய்ததாக எனக்கு முன் பேசிய மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. சிவசுப்பிரமணியம் அவர்களும், திரு. ராமலிங்கம் அவர்களும் கூறினார்கள். காமராஜ் அவர்கள்தான் ஆதித் திராவிட சமுதாயத்திற்குச் செய்தார்கள். திரு. நேருஜி அவர்கள்தான் செய்தார்கள் என்று இந்த மன்றத்திலே பேசினார்கள். நான் அவர்களுக்கு ஒன்று கூறிக்கொள்வேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக இந்த சமுதாயத்தின் தலைவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள், அரசியல் சட்டத்திலேயே அரிய பல சாதனைகளைச் செய்து வைத்திருக்கிறார்கள். அந்த அரிய பல சாதனைகளையெல்லாம் காங்கிரஸ் ஆட்சி சென்ற இருபதாண்டுக் காலத்தில் நடத்தியிருப்பார்களானால், இந்தச் சட்ட மன்றத்தில் ஆளும் கட்சித் தரப்பில் இன்று தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் உறுப்பினர்களாக இத்தனை பேர்கள் நாங்கள் வந்திருக்க முடியாது. இன்று நாங்கள் 37 பேர்கள் இங்கே வந்திருக்கிறோம் என்றால், அதற்கு என்ன காரணம்? காங்கிரஸ் ஆட்சி நல்ல முறையில் அரிசன சமுதாயத்திற்குச் சேவை செய்திருந்தால், இன்றைக்கு எதிர்க்கட்சித் தரப்பிலே, அதாவது காங்கிரஸ் தரப்பிலே, அரிசன நண்பர்கள் ஐந்து பேர்கள்தான் இந்த மன்றத்தில் இருக்கிறார்கள் என்றால், இதற்கு என்ன காரணம் என்பதை மதிப்பிற்குரிய காங்கிரஸ் தரப்பில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் உணர வேண்டும்.

காங்கிரஸ் ஆட்சியில் ஏதோ செய்தது, செய்தது என்று சொல்கிறார்கள். எங்கே செய்தார்கள்? ஒரு சில இடங்களில், அரிசனத் தலைவர் என்று சொல்லிக் கொண்டு, அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக, காங்கிரஸ் தலைவர்களாகிய முன்னாள் முதலமைச்சர் மதிப்பிற்குரிய பக்தவத்சலம், முன்னாள் முதலமைச்சர் மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் ஏதோ செய்திருக்கிறார்கள். குறிப்பாக, தென்னாற்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், சிதம்பரம் வட்டாரத்தில் உள்ள அரிசன மக்களுக்குச் சில காரியங்கள் செய்திருக்கிறார்கள். வேண்டுமென்றால் எடுத்துப் பாருங்கள், புள்ளி விவரங்களை, 1947-இல் சுதந்திரம் கிடைத்து இன்றுவரை ஆட்சிப் பொறுப்பில் இருபதாண்டுக் காலம் இருந்த காங்கிரஸ் தலைவர்கள் இந்தச் சமுதாயத்திற்குச் செய்திருப்பதாகச் சொல்லுகிறார்களே, அவர்கள் எங்கே செய்திருக்கிறார்கள்? செய்திருந்தால், இன்றைக்கு என் ஐந்து பேர் காங்கிரஸ் தரப்பிலும், 37 பேர் எங்கள் தரப்பிலும் இருக்கிறோம்? தீண்டாமையை ஒழிப்பதற்காக டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அரசியல் சட்டத்தில் புகுத்திய கருத்துக்களை, மதிப்பிற்குரிய தந்தை பெரியார் அவர்களும், எங்களுடைய கட்சியின் தலைவர், தவப் புதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களும் நடைமுறையில் நிறைவேற்றி வருகின்றார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் தங்களுடைய பேச்சின் மூலமும், எழுத்தின் மூலமும், நாடகத்தின் மூலமும் தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்பதற்காகப் பல காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். தீண்டாமையை ஒழிக்க கலப்புத் திருமணங்கள் அநேக இடங்களில் அவர்கள் செய்து வைத்திருக்கிறார்கள். இத்தகைய காரியங்களைச் சென்ற காலத்தில் இருந்த காங்கிரஸ் தலைவர்கள் செய்தார்களா? என்று நான் எதிர்த்தரப்பில் உள்ள காங்கிரஸ் உறுப்பினர்களைக் கேட்கின்றேன். நல்ல கருத்துக்களைச் சொல்லவேண்டும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு இன்னும் பல சலுகைகளை வழங்கவேண்டும் என்று கேட்கவேண்டும். நியாய

மான கோரிக்கை என்றால், ஒத்துக்கொள்ளவேண்டிய வாதம்தான். எதை வைத்து, எங்கள் தலைவர் காமராஜ்தான் செய்தார். எங்கள் தலைவர் நேருஜிதான் செய்தார் என்று சொல்லுகிறீர்கள். சென்ற காலத்தில் எங்கள் கட்சியில ஐம்பது பேர்கள் எதிர்த்தரப்பில் இருந்தபோது, எங்களுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களும், இப்பொழுது நம்முடைய கல்வி அமைச்சராக இருக்கும் நாவலர் அவர்களும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக அநேக கருத்துக்களை எடுத்து எடுத்து இந்த மன்றத்தில் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்த கருத்துக்களை முன்னாள் முதலமைச்சர் திரு பக்தவத்சலமோ, திரு. காமராஜோ, அரிசன மக்களின் நலன் பற்றிய அமைச்சராக இருந்த திரு. கக்கன் அவர்களோ செய்தாரா? அரிசன மாணவர்களுக்குப் பள்ளிக்கூடத்தில் உடை வசதி செய்து தந்தார்கள். அந்த உடை வசதி பெண் குழந்தைகளுக்கு மட்டும் தான் கொடுத்தார்கள். எதிர் கட்சித் தரப்பில் பலபேர் எடுத்துக்கூறியிருந்தும் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் செவி சாய்த்தார்களா?

பிற்பகல் 1-00 இப்போது பள்ளிகளில் 1-வது முதல் 3-வது வகுப்புள்ள மாணவர்கள் அனைவருக்கும் சீருடை வழங்குவதற்காக 1968-69-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அதிகமான தொகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இது நம் பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சியில் செய்யப்பட்ட காரியம் அல்லவா? "நாங்கள் செய்தோம், நாங்கள் செய்தோம்" என்று காங்கிரஸ் தரப்பில் பேசப்படுகிறதே, இவற்றிற்கெல்லாம்,' அரிஜன மக்களின் முன்னேற்றத்திற்கெல்லாம் மூலகாரணம் அறிவுலக மேதை டாக்டர் அம்பேத்கார் அல்லவா? அவரைப்பற்றிப் பேசியிருந்தால் இந்த மாமன்றம் வரவேற்றிருக்கும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் சட்டத்தில் இருந்த சலுகைகளைக் கூடச் சரியாகச் செய்ய முடியவில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இருபதாண்டுக் காலம் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இருந்தமாதிரி, திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தால் "அரிஜனங்களுக்கு வீட்டுமனைக் கட்டுகள் இல்லை, குடிநீர் வசதிகள் இல்லை, சாலை வசதிகள் இல்லை, தீண்டாமை இல்லை," என்று சொல்லப்படும் குறைகள் எல்லாம் களையப்பட்டு, மொத்தத்தில் அரிஜன மக்களுக்குக் குறைகளே இல்லை என்ற நிலையை உண்டாக்குவார்கள் என்பதில் எங்களுக்குப் பெருத்த நம்பிக்கையிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். 1938-ல் தீண்டாமை நாடு பூராவிலும் நிலவிவந்த நேரத்தில் பெரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் அரிஜன மக்களை மதுரை மீனாட்சி கோயிலுக்குள் அழைத்துச் சென்றார்கள். அன்று தொட்டு இன்றுவரை தாழ்த்தப்பட்ட மக்களின் நலனில் அண்ணா அவர்கள் பெரும் அக்கறை கொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை போதாது என்று குறிப்பிட விரும்புகிறேன். அதற்குமேல் ஒதுக்க நிதிநிலை இடம் கொடுக்கவில்லை. இந்தியப் பேரரசு 1967-68-லும், 1968-69-லும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக ஒதுக்கிய தொகை மிகக் குறைவாக இருக்கிறது. இது 'வேதனைக்குரிய விஷயம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய அரசு இதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

இருபதாண்டுக் காலமாக அரிசனங்களுக்கு இருந்துவந்த குறைகள் எல்லாம் தீர்க்கப்படாமல் அப்படியே இருந்து வருகின்றன. இப்பொழுது ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தபோது இக்குறைகள் எல்லாம் எடுத்துக்கூறப்பட்டும், காங்கிரஸ் ஆட்சி பல நல்ல காரியங்களைச் செய்யாமல் விட்டுவிட்டார்கள் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். ஓராண்டுக் காலத்தில் நாங்கள் அரிசன மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்ய வழிவகை செய்து வருகின்றோம். வளவனூர் காலனி, வழுதாவூர் காலனி, சாலையாம்பாளையம் காலனிகளுக்காக, அரிசன மக்களுக்கு வீடு கட்டுவதற்காக காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மனைக்கட்டுகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் நிலச் சொந்தக்காரர்கள் அந்த இடத்தை அரிசனங்களுக்குக் கொடுக்கக் கூடாதென்று உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டு, பல ஆண்டுகளாகியும்கூட, அந்த வழக்கு இன்னும் முடிவடையாமல் இருந்து வருகிறது. அரிசன மக்களுக்கு மனைக்கட்டு கிடைக்கவில்லை. இதைக் காங்கிரஸ் கட்சியினர் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.





அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் வளவனூர் உயர்நிலைப் பள்ளியிலும், உக்கிரவாண்டி உயர்நிலைப் பள்ளியிலும் படிக்கும் மாணவர்களுக்கு அரசினர் உணவு விடுதி இருக்கின்றது. அந்த உணவு விடுதியில் தற்போது 45 மாணவர்கள் வரை சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அளவை உயர்த்தி 75 மாணவர்கள் வரை உணவு விடுதியில் சேர்க்கப்பட்டால் இன்னும் அதிக மாணவர்கள் படிக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கண்டமங்கலம் உயர்நிலைப்பள்ளி, வழுதாவூர் உயர்நிலைப்பள்ளி, சித்தளம்பட்டு உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கும் ஏழை அரிசன மாணவர்கள் தினமும் ஐந்து மைல், ஏழு மைல் தூரம் நடந்து வந்து உணவு இல்லாமல் படித்து வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும் பின்தங்கிய சமுதாயத்திற்கும் உதவியளிக்கும் வகையில் 1968-69-ம் ஆண்டுத் திட்டத்தில் இந்தப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு அரசினர் உணவு விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்த அவைத் தலைவருக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு ந. தீர்த்தகிரி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நாட்டிலே அரிசன சமுதாயம் பின்தங்கிய சமுதாயமாக இருந்துவந்ததை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் 'காங்கிரஸ் அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன செய்தது?' என்று கேட்டார். அரிசன மக்கள் தீண்டப்படாத நிலையிலே, கல்வியிலே, பொருளாதாரத்திலே கீழ்மட்டத்திலிருந்துகொண்டு ஜாதி இந்துக்களிடத்தில் எவ்வளவு கொடூரமான முறையில் அழுத்தப்பட்டவர்களாக இருந்தார்கள் என்பதை உறுப்பினர் மறந்துவிட்டிருக்கலாம். அரிசன மக்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் காங்கிரஸ் ஆட்சி பெரும்பாடுபட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் மனிதனாக மதிக்கத் தலைப்பட்டதே காங்கிரஸ் அரசாங்கம் செய்த நன்மைகளினால்தான் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். காங்கிரஸ் அரசாங்கமும், அண்ணல் மகாத்மா காந்தியடிகளும் அன்று செய்த, செயலினால், உழைத்த உழைப்பின் பலனைத்தான் இன்று இந்த மன்றத்திலே நாம் 42 பேராக அமர்ந்திருக்கிறோம்.

அரிசன மக்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் முன்னேறினால் தான் தீண்டாமை என்ற நோய் அறவே நீங்கும். காங்கிரஸ் அரசாங்கத்தின் உழைப்பினால்தான் நாம் இன்றைக்கு ஓரளவுக்கு மனிதனாக நிறைவு பெற்றிருக்கிறோம் என்று சொல்ல முடிகிறது. புதிய அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கம் செய்ததைவிட இன்னும் அதிகமாகச் செய்தால் நான் வரவேற்பேன். புதிய அரசாங்கம் அதிகமாகச் செய்யும் என்று தான் சில மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கை வந்தபிறகு அந்த மக்களின் எண்ணமெல்லாம் நம்பிக்கையற்றுப் போய் அவர்கள் வருந்துகிறார்கள். ஜாதி இந்துக்களின் கொடுமை என்பது சாதாரண காரியம் அல்ல. காங்கிரஸ் அரசாங்கத்தைத் தவிர வேறு யாராலும் தீண்டாமையை ஒழித்துவிட முடியாது. அப்படிச் செய்தாலும் ஏதோ ஓரளவுக்குத்தான் செய்யமுடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம், எதிர்காலம் எல்லாம் இந்தப் புதிய அரசாங்கத்திடம் தான் இருக்கின்றது என்று எதிர்பார்த்திருந்த மக்களின் நினைவு எல்லாம் இன்று கனவாகத்தான் காட்சியளிக்கிறது. கிராமப்பகுதி மக்களின் வாழ்வுக்கு வேண்டிய வசதிகள் இன்னும் செய்யப்படவில்லை. விவசாயக் கூலி,

ஊதிய உயர்வு போன்றவற்றில் இன்னும் அரசு கவனம் செலுத்தவில்லை. இன்றைய தினம் கூலி, தினம் ஒன்றுக்கு எட்டணா, ஒரு ரூபாய் என்று இருந்தால் கூலிவேலை செய்யும் ஒருவனுக்குத்தான் சாப்பாட்டுக்குக் கட்டுபடியாகும். ஒரு நாளைக்கு அவன் வேலைக்குப் போகாவிட்டாலும், அல்லது வேலை கிடைக்காவிட்டாலும் அன்றையதினம் அவன் பட்டினிதான் இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களுடைய நிலையை எண்ணிப் பார்க்கிறபோது ஏன் பிறந்தோம், ஏன் இந்த நிலையை அனுபவித்துக்கொண்டிருக்கிறோம் என்று வருந்தவேண்டியதாக இருக்கிறது. புதிய அரசு ஏதாவது நல்ல உபகாரத்தைச் செய்தால்தான் அந்தச் சமுதாயம் முன்னேற முடியும். அவர்களுக்கென்று சிறுசிறு தொழில்களை ஆரம்பிக்க வசதி செய்து தரவேண்டும். விவசாயக் கூலிகளாகவே செத்துக்கொண்டிருக்கிற நிலையில் விட்டுவிடக்கூடாது. கூலியையும் உயர்த்திக்கொடுக்க ஆவன செய்யவேண்டும். என் பகுதியை எடுத்துக்கொண்டால் ஒருமாதம் அல்லது இரண்டு மாதம்கூட அவர்களுக்கு கூலி வேலை இருக்காது. பண்ணையாட்களாகவே காலம் தள்ள வேண்டிய நிலை இருக்கிறது. என் பகுதியில் மூள்ளிக்காட்டணை என்று இருக்கிறது. அதில் தண்ணீர் தேக்கி பத்து ஏரிகளுக்குத் தண்ணீர் விடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அணைகளைப்பற்றி இந்த மானியத்தில் பேசக்கூடாது.

**திரு ந. தீர்த்தகிரி :** அந்தச் சமுதாயத்திற்கு வேலை வாய்ப்பை அதிகபடுத்திக்கொடுக்க இந்த அணையைக் கட்டிக்கொடுக்கவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாணவர்களுக்கு மதிய உணவுக்காக கொடுக்கப்படுகிற தொகை போதாது. அதை அதிக படுத்தவேண்டும். வீட்டு வசதியை அதிகப்படுத்த வேண்டும். சென்ற அரசாங்கம் வீடுகள் கட்டிக் கொடுத்தது. அதன்பிறகுதான் சேரிகள் போய் காலனிகள் என்ற பெயரே வந்திருக்கிறது. இல்லையென்றால் உயர்சாதிக்காரர்களின் மத்தியில் பழைய ஓலைக் குடிசைகளாக-சேரிகளாகவே இருந்து கொண்டிருக்கும். அவர்கள் செய்த காரியத்தைத் தொடர்ந்து இந்த அரசும் அங்கங்கே அரிசனக் காலனிகள் அமைத்துக்கொடுக்குமாறு வேண்டிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு சி. வீரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நல மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறிக் கொண்டு இந்த மானியத்தை ஆதரித்துப் பேசவிரும்புகிறேன்.

நம்முடைய நாட்டிலே எத்தனையோ மதங்கள் இருக்கின்றன, நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு மதமும் தனிப்பட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் அவை எல்லாமே ஓர் உயர்ந்த பொருளை, உண்மை அன்பு வடிவங்களின் ஒருமித்த தோற்றத்தை விளக்குவதுபோல் இன்று நாட்டிலே பல்வேறு கட்சிகள் பல கொள்கைகளை உள்ளடக்கியனவாக இருந்தாலும் மக்களின் நலனை கருதி, மக்களின் அடிப்படைத் தேவைகளுக்குப் போராடக் கூடியவைகளாகவே அமைந்துள்ளன. மக்களின் அடிப்படைத் தேவைகள் என்பதைக் கருத்தில் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை அணுகும்போது கட்சி வேறுபாடற்ற நிலையில் மனிதாபிமான தர்ம நிலையில் இருந்து பார்க்கவேண்டும். அந்தமாதிரியான நிலையில் இருந்து சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரைப் பற்றிக் கூறுகிறபோது, அருந்ததிய சமுதாயத்தைப் பற்றிக் கூறாமல் இருக்கமுடியாது. காரணம் விவசாயம் நாட்டின் முதுகெலும்பாகக் கருதப்படுகிறது. அந்த விவசாயத்தில் குடியானவர்களுக்கு முதுகெலும்பு போன்று இருந்து பரம்பரை பரம்பரையாக உழைத்து வருகிறவர்கள் சக்கிலிய மக்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிச் சொல்லும்போது யாரும் காங்கிரஸ் ஆட்சியைக் குறைகூறுவதாக எண்ணிக்கொள்ளாதீர்கள். உண்மையைச் சொல்லப்போனால் கடந்த இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் இந்த அருந்ததியர்களின் இனம் புறக்கணிக்கப்பட்டே





வந்திருக்கிறது என்பதை என்னால் எடுத்துச்சொல்ல முடியும். அதைப் பற்றி நான் சொல்வதைவிட அரிசன வெல்ஃபேர் கமிட்டியினர் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதையே இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

I am quoting from the Report of the Harijan Welfare Committee, Madras, 1948. (Page 48).

" The three main groups of Harijans in the Tamil country are the Pallars, the Parayars and the Chucklers. Though it is very difficult to assess the respective places of these communities in the social scale, yet there is no doubt that materially the Pallars are better off than the rest, while the Chucklers are the lowest. "

என்பதனை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இன்றைய தினம் அவர்கள் வீட்டு வசதி இல்லாமல், வாழ்க்கையின் அடிப்படை வசதி எதுவுமே இல்லாமல், மிகவும் அல்லற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதனை நாம் உணர்ந்தாக வேண்டும். மேலும் இந்தப் பேரவையிலே 1960-ஆம் ஆண்டு அரிசன மானியக் கோரிக்கையின் மீது பேசுகிறபோது ஒரு உறுப்பினர்,

"அருந்ததியர்கள் என்று சொல்லக்கூடியவர்களை எடுத்துக்கொள்ளுவோம். அருந்ததியர்கள் என்று சொல்வதற்கே எனக்கு மனம் வரவில்லை. அதாவது சக்கிலியர்கள் என்று சொல்லக்கூடியவர்கள், இவர்கள் ஹரிஜனங்களைவிட தாழ்த்தப்பட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்களாகத்தான் இருக்கிறார்கள். எங்கு சென்றாலும் அவர்களுடைய எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது. ஆயிரத்திற்கு ஒருவர்கூட இருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் எவ்வளவோ தாழ்த்தப்பட்டிருந்தாலும் அவர்களைக் கொஞ்சம்கூடக் கவனிப்பதாகவே இல்லை" என்பதாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்.

நான் இந்த இனத்தவர் என்பதனால் சொல்லவில்லை. உண்மையில் அந்த இனம் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்த அமைச்சரவையும், அரிசன இலாகாவும் இந்தச் சக்கிலிய இனத்தின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுக்க வேண்டும். அறிஞர் பெருந்தகை அவர்களின் ஆட்சியின்கீழ் அருந்ததிய இன மக்கள் விரைவான முன்னேற்றமடைய வழிவகைகள் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நில ஆர்ஜிதம் செய்யும்போது பெரும் ஊழல்கள் ஏற்பட்டு வருகின்றன. எந்த விதத்திலும் பயன் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்யும்போது நிலச்சுவான்தார்கள் நீதிமன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். நீதிமன்றத்திற்குப் போய்விடுகிற காரணத்தினால் பத்தாண்டுகள் ஆகியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள முடியவில்லை. அரிசன நல இலாகாவின்கீழ் நில ஆர்ஜிதம் செய்வது சட்டப்படி செல்லாது என்பதாக சமீபத்தில் உயர்நீதி மன்றத் தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது. இது அந்த மக்களின் வாழ்க்கையை பெரிதும் பாதிக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தீண்டாமை என்று எடுத்துக்கொண்டால் இன்று தீண்டாமை என்ற பெயரால் நாட்டில் வகுப்புக் கலவரங்கள் பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக நாட்டின் ஒற்றுமை என்கிற ஆணிவேரே வெட்டப்படும் அச்சம் இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின்பால் அன்புகொண்டு காந்தியார் ஹரிஜன் என்ற பெயரையே வைத்தார். ஆனால் காலப்போக்கில் இன்றைக்கு ஹரிஜன் என்ற அந்தச் சொல்லையே இழிசொல்லாகக் கருத ஆரம்பித்துவிட்டார்கள்.

எனவே அரிசன் என்ற வார்த்தையையே அரசிதழ் ஏடுகளிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும். அதற்குப் பதிலாக வள்ளுவர் என்ற பெயர் வைக்கப்படவேண்டும். இந்த இலாகாவின் பெயரையும் "வள்ளுவர் இன நல இலாகா" என்று மாற்ற வேண்டும். வள்ளுவரை ஆதி என்ற புலச்சிக்கும் பகவன் என்ற பார்ப்பனருக்கும் பிறந்தவர் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. அதோடு தமிழ்காத்த வள்ளல் கலைஞர் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பேருந்து வண்டிகளில் எல்லாம் வள்ளுவரின் புகழ்பாடச் செய்திருக்கிறார்கள். அப்படிச் சிறப்பிக்கிற பெயரே—வள்ளுவர் என்ற பெயரே—இந்தச் சமூகத்திற்கு இடவேண்டும்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** ஆதி என்ற புலச்சிக்கும், பகவன் என்ற பார்ப்பனருக்கும் வள்ளுவர் பிறந்ததாகச் சொல்வது கட்டுக்கதையே தவிர ஆதாரபூர்வமானது அல்ல.

**திரு. சி. வீரமணி:** இதை நான் ஆராய முன்வரவில்லை. அந்த அளவுக்கு எனக்கு அறிவும் இல்லை. அரிசன நலத்துறை என்பதை வள்ளுவர் நல இலாகா என்று மாற்றினால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அது ஒரு சிறப்பைத் தரும் என்று கருதுகிறேன்.

ஆறில் ஒரு பங்கினர் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். செலவுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகையில் 228 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் அதில் 38 கோடி கேட்பதற்கு உரிமை இருக்கிறது என்று கருதுகிறேன். அப்படி உரிமை இருந்தாலும் அப்படி நாங்கள் கேட்க முன்வரவில்லை. ஆனால் அப்படி ஒதுக்கப்படுகின்ற தொகை, எவ்வளவு தொகையாக இருந்தாலும் சரி, கொடுக்கப்படுகின்ற சலுகைகள் சரிவரப் பகிர்ந்தளிக்கப்படுகிறதா என்பதை அரசு கண்காணிக்க வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகளைப் பெறுவதற்காக மற்ற ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் தாங்களும் தாழ்த்தப்பட்டவர்களாக வருகிறார்கள். இதையெல்லாம் அரசு ஆடிட்டர் நியமித்து கணக்குகள் சரிபார்க்கப்படுவதைப்போல அரிசனங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகளும் நல்ல முறையில் கொடுக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க அதற்காக ஆடிட்டர் நியமிக்க வேண்டும். அவர் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் சென்று ஒவ்வோர் ஆண்டும் தணிக்கை செய்து அரசாங்கத்திற்கு அதைப்பற்றிய அறிக்கை அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலை வாய்ப்புகளைப் பொறுத்த வரையில் முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷன் அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் நடத்தப்படுகின்ற தொழில்களில் 16 சதவீதம் வேலை வாய்ப்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படவேண்டும். ஆனால் அது சரியாகச் செய்யப்படுகிறதா என்று பார்ப்பதற்காக ஒரு தனிப்பட்ட அலுவலரை நியமிக்கவேண்டும்.

கல்லூரிகளில் விடுதிக் கட்டணம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 1948–49 நிர்ணயிக்கப்பட்டபடி தான் இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு விலைகள் அதிகரித்ததன் காரணமாக அவர்கள் எல்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களிலே சலுகைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்பட்டபோதிலும், அங்குள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் அவற்றைக் கொடுப்பதில்லை. அதற்குப் பல காரணங்கள் சொல்கிறார்கள். அரிசன நலத் துறை இருப்பதால் அங்கு உங்களுக்குச் சலுகை செய்கிறார்கள் என்று எல்லாம் சொல்கிறார்கள். ஆகவே அப்படியில்லாமல் சலுகைகள் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, பஸ் ரூட்களை வழங்குவதிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிகச் சலுகைகள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்டோர் பஸ் கூட்டுறவு சங்கம் இருக்கிறது, அது தொடங்கப்படாமல் இருக்கிறது. அதைத் தொடங்கி வைத்து நல்ல முறையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு சோ. அழகர்சாமி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அரிசன நல மானியத்தின்மீது ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே பெரும் பகுதியான அரிசன மக்கள் பொருளாதார நிலையில் மிக மிகப் பின்தங்கிய நிலையில் இருப்பதால் தான் சமூகத்திலும் அவர்கள் பிற்பட்டவர்களாக அடிமைகளாக மிகவும் பின்தங்கிய நிலையில் கஷ்டப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். மகாத்மா காந்தி அவர்கள் அரிசன மக்கள் படுகின்ற துன்பங்களையும் கஷ்டங்களையும் கண்டு அவற்றைப் போக்குவதற்காகப் பாடுபடுவதில் அதிதீவிரமாக இருந்தார்கள். ஆனால் அவர்களுக்குப் பிறகு இந்த நாட்டை ஆண்டுகொண்டு வந்தவர்கள் மேலெழுந்தவாரியாகத்தான் அரிசன மக்களுக்கு ஏதாவது செய்கிறார்களே தவிர அடிப்படையாக அவர்களுடைய பொருளாதார நிலையை மாற்றியமைக்க வழி செய்தார்களா என்றால் இல்லை. அவர்கள் பொருளாதார நிலையை மாற்றியமைக்காமல் இருந்ததால்தான் அவர்கள் ஆடுமாடுகள் போகும் இடங்களுக்குக்கூட இவர்கள் போய் தண்ணீர் எடுக்க முடியாத நிலையிலும் பொதுக் கிணறுகளிலே தண்ணீர் எடுக்க முடியாத நிலையிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னமேயே புறம்போக்கு நிலங்களையும், சாகுபடி செய்யக்கூடிய நிலங்களையும் கொடுத்து இருந்தார்களானால் ஓரளவுக்கு அவர்களுடைய பொருளாதார நிலையில் அவர்கள் மேம்பாடு அடைந்திருக்க முடியும். சென்ற அரசு அதைச் செய்யவில்லை. இந்த அரசு அவர்களுக்குச் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களைச் சொந்தமாக்கக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல இடங்களில் வீட்டு மனைகள் இல்லாத கஷ்ட நிலைமை இருக்கிறது. அவர்கள குடியிருக்கிற இடங்கள் பல இடங்களில் பண்ணையாருக்கே சொந்தமாக இருப்பதால் அவர்களுக்கு கஷ்டமான நிலைமை இருக்கிறது. நம்முடைய அரசு அவர்களுக்கு ஒரு சிறப்புத் திட்டத்தைத் தயாரித்து அதன் மூலம் மனை இல்லாத சகல அரிசன மக்களுக்கும் 1972-ம் ஆண்டிற்குள் வீட்டுமனைகளைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன மக்களுக்கு அவர்கள் குடியிருப்புக்களில் மின்சாரம், குடிநீர் இல்லாதது பற்றிச் சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன் மூலமாக அவை நிறைவேற்றப்படக்கூடிய திட்டமாக இருந்தாலும், பஞ்சாயத்தில் மெஜாரிட்டியாக எல்லோரும் இருக்கிற காரணத்தினால் அரிசன மெம்பர் ஒருவர் தான் இருப்பார், அப்படியிருக்கின்ற காரணத்தினால் மெஜாரிட்டியாக உள்ளவர்கள் அவர்கள் இஷ்டம்போல் தீர்மானம் நிறைவேற்றி அவர்களுடைய தெருக்களுக்கு மட்டும் குடிநீர், மின்சாரம் போன்றவற்றை ஏற்பாடு செய்துகொள்கிறார்கள். என்னுடைய தாலுகாவைப் பொறுத்த வரையில் இதைப்பற்றிப் பல புகார்கள் வந்திருந்து, அதைப் பற்றி அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னாலும்கூட அவக்கள் அரிசன மக்கள் குடியிருப்புக்களில் மின்சாரம், குடிநீர்க் குழாய்கள் போட தீர்மானம் போட்டுக் கொடுக்க மறுப்பதோடு மட்டுமல்லாமல், அதைப்பற்றி பஞ்சாயத்து யூனியனிடம் சொன்னால் அவர்கள் பஞ்சாயத்துக்கள் எந்த எந்த இடங்களில் அவை செய்யப்படவேண்டுமென்று அவர்கள் தீர்மானிக்கிறார்களோ அங்கேதான் போடலாம் நாங்கள் இதில் எதும் செய்வதற்கில்லை என்று சொல்கிறார்கள். ஓவர்ஹெட் டாங்க் வைத்து குடிநீர் வழங்கும் பல கிராமங்களில் குழாய்கள் மூலம் அரிசன குடியிருப்புப் பகுதிகளுக்குப் போகவில்லை, பெரும்பகுதியினராக இருக்கக்கூடிய மெஜாரிட்டி சமூகத்தார் இருக்கக்கூடிய பகுதிகளுக்குத்தான் போகிறது. இதற்காக நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். அரிஜனக் குடி-

[திரு. சோ. அழகர்சாமி] [1968 மார்ச் 15

யிருப்புகளுக்கு மின்சாரம், குடிநீர் சம்பந்தப்பட்ட வரையில் இரண்டையும் அரிசன நலத்துறையே நேரடியாக கவனிக்க வேண்டும். பொருளாதார முன்னேற்றத்தை எற்படுத்துவதற்காக அவர்களுக்குச் சிறு தொழில்களுக்கு கடன்கள் மற்ற வசதிகள் செய்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்போவதாகச் சொல்லப்பட்டது. அது ஒன்றிரண்டு இடங்களில்தான் இருக்கிறது. அதை எல்லாப் பகுதி களிலும் விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு செய்ய முயற்சிக்க வேண்டும். அவர் களுக்குப் பொருளாதார முன்னேற்றத்திற்கு கிணறுகளை வெட்டுவதற்கும் மாடுகள் வாங்குவதற்கும் சீட்டுக் குலுக்கி போடக்கூடிய முறையில் கொடுக்கப்பட்டு வருகிறது. 1,500 ரூபாய் கிணறு வெட்டுவதற்காகக் கொடுக்கப்படுகிறது. அதை வைத்துக் கொண்டு கிணறு வெட்ட முடியாத நிலைமை இருக்கிறது. 2 எக்கர், 4 எக்கர் வைத்து இருக்கும் விவசாயிகள் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகக் கடன் பெறக் கூடிய நேரத்திலே அவர்கள் பெற முடியாத நிலைமை இருக்கிறது. கிணறுக்காகக் கடன் கேட்டால் அதற்கு சொத்து ஜாமீன் கேட்கிறார்கள். ஜாமீன் கொடுப்பதற்கு வேறு யாரும் முன்வரமாட்டார்கள். இந்த நிலையில் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இனாம் என்று சொல்லக்கூடிய 1,200 ரூபாய்க் சீட்டு குலுக்கு முறைப்படி கொடுக்கப்படுவதால் ஒன்றிரண்டு பேர்களுக்குத்தான் அது கிடைக்கிறதே தவிர எல்லா விவசாயிகளும் உற்பத்தியைப் பெருக்குகின்ற அளவில் விவசாயம் செய்து அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்று வதற்கான நிலைமை இல்லை. ஆகவே அப்படியில்லாமல் கிணறு வெட்டக் கடன் கேட்டால் தகுதியான நிலமாக இருந்தால் எந்த விதமான ஜாமீனும் கேட்காமல் மொத்த தொகையில் 1,500 ரூபாய் இனாமாகக் கொடுத்துவிட்டு மீதியைக் கடனாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற அளவிலேயே கடன் கொடுத்து அதில் 1,500 இனாமாக கொடுத்தது போக மீதியை கடனாகக் கொடுக்க வேண்டும்.

அடுத்ததாக நகரங்களை துப்புரவு செய்கிறவர்கள் நகரங்களைத் துப்புரவு செய்தாலும் அவர்கள் இருக்கக்கூடிய இடங்களை பார்த்தால் சாக்கடை ஓரத் திலே சிறு குடிசைகளிலே வாழ்கிறார்கள். மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். நகரசபைகளிலே அதற்கான திட்டம் இருக்கிறது. நகரசபை பாதியும் சர்க்கார் பாதியும் இருப்பதாகக் கொடுக்கிறது. ஆனால் நகரசபை யிலே வேறு பல திட்டங்கள் நிறைவேற்ற வேண்டியிருப்பதால் அவர் களால் இந்தத் தொகையைக் கொடுக்க முடியவில்லை. ஆகவே சர்க்கார் கட்டாயமாக அவர்களுக்காக வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். அப்படிக் கட்டும்பொழுது அவர்கள் இருக்கும் பகுதிகளிலேயே கட்ட வேண்டும். ஒரு மைல், ½ மைல் தூரத்திலே அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகிறது, அப்படியில்லாமல் ஊரையொட்டியே அவர்கள் இருக்கிற பகுதிகளிலே கட்டிக்கொடுக்க வேண்டும்.

பிற்பகல் 1–30 அடுத்தபடியாக, படிப்புக்காக ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுவதில் முன்னால் இருந்த முறையே நல்லது. அந்தந்த ஜில்லா மட்டத்தில் அரிசன நல இலாகா அதிகாரிகள் படிப்புக்காக உதவித் தொகை கொடுக்கும்போது கொஞ்சம் தகுதி குறைவாக இருந்தாலும் அவர் களாகவே பார்த்து கொடுக்கக்கூடிய நிலை இருந்தது. இப்போது சர்க்காருக்கு அனுப்பவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, முன்பு இருந்த முறையில் அந்த மாவட்ட நல அதிகாரிகளே தகுதியைப் பார்த்து உதவித் தொகை கொடுப்பதற்கு முடிவு செய்வது நலமாக இருக்கும்.

இன்று அரிசன நலத்துறைப் பள்ளிகளில் மட்டும் மாணவர்களுக்கு உடையும், புத்தகங்களும் இனாமாக வழங்கப்படுகின்றன. மற்றப் பள்ளி களில் பயிலக்கூடிய அரிசன பிள்ளைகளுக்கும் உடையும், புத்தகமும் இனாமாக கொடுக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுறுகின்றன. மீண்டும் மாலை 3 மணிக்குப் பேரவை கூடும்.

பிற்பகல் 1–31 *பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.*



1968 மார்ச் 15]

*மீண்டும் பேரவை 3–00 மணிக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமையில் கூடியது.*

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே, முதல் முதலாக நான் அரிசன, நல இலாகா அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த மான்யத்திலே ஆறு கோடி ரூபாய் அளவுக்குத் தான் ஒதுக்கி வைக்கக்கூடிய நிலைமை இருந்தாலும் இந்த விவாதத் திற்குக் கொஞ்சம் அதிக நேரம் கொடுத்தது பற்றி முதலில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தாழ்த்தப்பட்டவர்களுடைய நிலைமை ஓரளவுக்காவது முன்னேறி இருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது என்றால் அதற்கு நாம் பாராட்ட வேண்டியவர்கள் யார் என்றால், முதலில் மகாத்மா காந்தி, அடுத்து டாக்டர் அம்பேத்கார், அதற்கு அடுத்து நம்முடைய ஒப்பற்ற தலைவர் ராஜாஜி ஆகிய மூவரைத்தான் பாராட்ட வேண்டும். மகாத்மாகாந்தி டெல்லியில் அரிசனங்கள் வசிக்கும் பகுதியான லோடி காலனியிலேயே வசித்து வந்தார். அவரை யாரும் பார்க்க வேண்டுமென்றால் அரிசனங்கள் இருக்கும் பகுதியில் வந்துதான் பார்க்க வேண்டுமென்ற உணர்ச்சியோடு அவர்கள் அங்கே வசித்தார்கள். அம்பேத்கார் ஆற்றிய பணிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை, அந்த அளவுக்குப் பெரும் பணியாற்றியிருக்கிறார்கள். ராஜாஜி அவர்கள் சேலத்தில் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருந்த நேரத்தில் நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கு தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவரை ராஜாஜி அவர்கள் அதிகாரியாக நியமித்தார்கள். அந்த பகுதியில் இருந்த மக்களில் பெருவாரியானவர்கள் அக்கிரகார மக்களாக இருந்தார்கள். அந்த மக்கள் ராஜாஜி அவர்கள் இவ்வாறு ஒரு தாழ்த்தப்பட்டவரை அந்தப் பகுதியில் அதிகாரியாக நியமிக்கலாமா என்று ஒரு பெரிய போராட்டத்தையே நடத்தினார்கள். யாராக இருந்தாலும் அவரும் மனிதர்தான், இதிலே மறுபரிசீலனை கிடையாது என்று ராஜாஜி அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லி விட்டார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே கலப்புத் திருமணத்தைச் செய்து வைக்கக்கூடிய அளவுக்கு வழி காட்டியாக இருந்தார்கள்.

இன்று தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கை உயர்வதற்காக எவ்வளவுதான் கோடி கோடியாகச் செலவு செய்தாலும் கூட, மிக மிக மோசமான நிலைமையில் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய தொகுதியான பெரம்பூர் தொகுதியில் ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அதிலே குறிப்பாக 33-வது வட்டத்தை எடுத்துக் கொண்டால் மனிதன் இந்த அளவுக்கு மோசமான சூழ்நிலையில் வாழ முடியுமா என்று எண்ணத் தக்க அளவுக்கு மோசமான நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் கள். அடிப்படை சுகாதார வசதிகள் எதுவும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பயங்கரமான நிலைமை என்னவென்றால் பக்கத்திலே பக்கிங்காம் கால்வாய் இருக்கிறது. அது ஆரம்பிக்கக்கூடிய இடம் அமிஞ்சிக்கரையில் நான் டிஸ்பென்சரி வைத்திருக்கக்கூடிய இடத்திற்கு அருகாமையாகும். (திரு. கே. விநாயகம் உட்கார்ந்தபடியே குறுக்கீடு) குறுக்கே பேசாமல் இருந்தால் அரிசனங்களுக்கு நன்மையாக இருக்கும்.

THIRU K. VINAYAKAM : Sir, the hon: Member is quoting wrong geography. The Buckingham Canal is on the shores of the City of Madras and not in Aminjikarai.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அவர் திருத்தணியிலே போய் நின்றதால் ஒன்றும் தெரியாது. ஓட்டேரியில் அந்தக் கால்வாய் ஓடுகிறது. 47-வது வட்டத்தில் கால்வாய் ஓரத்தில் குடிசைகள் இருக்கின்றன. ஒரு முறை புயல் அடித்தால் அந்தக் குடிசைகளில் பிறகு வாழ முடியாது. சென்ற ஆண்டில் புயல் அடித்தபோது முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூட

அந்தப் பகுதிக்குப் வந்து பார்த்தார்கள். நானும் இருந்தேன். அதற்குப் பிறகு கால்வாய் 32, 33-வது வட்டத்திற்குப் போகிறது. அதற்கு பிறகு சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கமாக வருகிறது. இந்தக் கால்வாய் சீர்திருத்தப் படவில்லை.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கனம் உறுப்பினர் அவர்கள் என்னுடைய தொகுதியைக் குறித்துக் குறிப்பிட்டதற்காக நன்றி. ஓட்டேரி பகுதியில் அந்தக் கால்வாயில் (ராம்பர்ட் வால்) கைப்பிடிச் சுவர் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிப் பொதுப் பணித் துறை ஆராய்ந்து வருகிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சந்தோஷந்தான். அதை மிக சீக்கிரமாக முடித்துக் கொடுக்க வேண்டும். பல ஆண்டுகளாகத் தள்ளிப் போடப்பட்டு வந்திருக்கிறது. உடனடியாக அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் ஏறத்தாழ ஒரு கோடி பேருக்கு மேல் இருக்கிறார்கள். 3½ கோடி மக்களில் 1 கோடி பேர் தாழ்த்தப்பட்ட மக்கள் நம்முடைய நாட்டில் இருக்கிறார்கள். அந்த ஒரு கோடி பேருக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைப் பார்த்தால் ஆள் ஒன்றுக்கு ஆறு ரூபாய்தான் வருகிறது. இதைப் பெரிய சலுகை என்று சொல்ல முடியாது. இன்றைய தினம் அந்த மக்கள் இந்த அரசாங்கத்திடம் இருந்து பெரிதும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் தான் இந்த கட்சிக்கு அரசாங்கத்தை அமைக்கும் அளவுக்கு ஓட்டு வந்தது. அவர்களுடைய நம்பிக்கைக்கு அருகதையாக நாம் இருக்க வேண்டும். திட்டங்களைப் பேப்பரில் போட்டுவிட்டால் மட்டும் போதாது. உடனடியாக செயல்படுத்தி காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சலுகை கொடுப்பது போல் பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்ற மக்களுக்கும் சலுகை கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். பொருளாதாரத்தில் எவ்வளவுதான் பின் தங்கியிருந்தாலும், " heredity and environment " பிறக்கக்கூடிய நிலைமையிலேயே மோசமாக பிறந்த காரணத்தால் அவர்களுக்கு எவ்வளவு சலுகை கொடுத்தாலும் தகும். பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்ற சமூகத்தினரையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் ஒரே மாதிரி கருத வேண்டுமென்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த ஹரிஜனங்கள் பிறக்கும்போதே எந்தவிதமான சலுகைகளும் இல்லாமல் பிறக்கிறார்கள். நான் பட்டதாரி தொகுதியில் தேர்தலுக்கு நின்றிருப்பதால் நான் சொல்கிறேன். 38-வது வட்டத்தில் 10,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். மைலாப்பூர், அடையாறு வட்டங்களில் 10,000 வாக்காளர்கள் வீதம் இருக்கிறார்கள். அடையாறு பட்டதாரித் தொகுதியை எடுத்துக் கொண்டால் அங்கு இந்த சமுதாயத்தைச் சேர்ந்த 1,100 வாக்காளர்கள் பட்டதாரிகள் இருக்கிறார்கள். ஆனால் 38-வது வட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கு இரண்டு வாக்காளர்கள் தான் இருக்கிறார்கள், பட்டதாரிகள். இதுவே நான் முன்னர் கூறியதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

நான் இந்து ரிலிஜியனில் உள்ளவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த ஹரிஜன மக்களுக்குச் சலுகைகள் கொடுப்பதால் முன்னணியில் உள்ள வகுப்புகளைச் சார்ந்தவர்கள் தங்கள் சலுகைகள் போய்விடும், நாடே அதனால் அழிந்துவிடும் என்று தவறான கணக்கு போடக்கூடாது. இந்த நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றம் அடையவில்லை என்று சொன்னால் நாம் இந்த நாட்டிலே வாழ்வதற்கு யோக்கியதை இல்லை. மனிதனைப் பிறந்து அவன் மனிதனாக வாழ முடியாததொரு தன்மையைக் கண்டு கொண்டிருக்க முடியாது. அதைப் பொறுத்துக் கொண்டும் இருக்க முடியாது. இன்று கன்னியாகுமரி ஜில்லாவை எடுத்துக்கொண்டால்





அங்கு ஏராளமான ஹரிஜன் கான்வெர்ட்ஸ் இருக்கிறார்கள். அவர்கள் ஏன் கிருஸ்துவ மதத்திற்குச் சென்றார்கள் என்றால், ஹிந்து ரிலிஜியனில் அவர்களுக்கு எந்தவிதச் சலுகைகளையும் கிடைக்கவில்லை, அவர்களை மனிதர்களாக மதிக்கவில்லை என்பதற்காகவும், கிருஸ்தவ மதத்தில் சேர்ந்தால் அவர்களுக்கு சில சலுகைகள் கிடைக்கும் என்பதினாலும், பொருளாதாரத் துறையில் முன்னணிக்கு வரமுடியும் என்ற ஆசையினால்தான் அவர்கள் கிருஸ்துவ மதத்தில் போய்ச் சேர்ந்தார்கள். ஆனால் இப்போது அப்படி மதம் மாறிச் சென்றவர்களுக்கு எந்தவிதச் சலுகைகளும் இல்லை. அவர்கள் கான்வேர்ட்ஸ்—ஸாகப் போனதினால் பொருளாதாரத்தில் அவர்கள் முன்னேற்றம் அடைந்து விட்டார்கள் என்று கணக்குப் போடக் கூடாது. ஆகவே கிருஸ்தவ மதத்திற்கு மதம் மாறிச் சென்றுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், இந்து மதத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் அத்தனையும் அவர்களுக்கும் கொடுக்கவேண்டும். அடுத்த ஆண்டிலாவது அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவவற்கு வேண்டியதைச் செய்யவேண்டும். சிதம்பரம் தொகுதி உறுப்பினர் அவர்கள் எம்.எல்.ஏ-க்களைப் பற்றிச் சொன்னதால் சொல்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் என் இல்லத்திற்கு யார் வேண்டுமானாலும் வந்து சாப்பிடலாம். நானும் யார் இல்லத்திற்கு வேண்டுமானாலும் சென்று சாப்பிடுவேன். அந்த விதத்தில் பல வருடங்களாக நான் வாழ்க்கை நடத்தி வருகிறேன். எம்.எல்.ஏ.-க்கள் அல்லது மினிஸ்டர்கள் சுற்றுப்பயணம் செல்லும்போதும், அல்லது ஏதாவது கிராமத்திற்குச் சென்றாலும், மகாத்மா காந்தி அடிகளின் பாதையைப் பின்பற்றி, முதன்முதலாக அவர்கள் கால் வைக்கவேண்டிய இடம், அவர்கள் தங்கவேண்டிய இடம் தாழ்த்தப்பட்டவரின் இல்லமாகத்தான் இருக்கவேண்டும். கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள பகுதி, நல்ல நிலையில் வாழ்பவர்கள் உள்ள பகுதி என்று இரண்டு பகுதிகள் இருப்பதைப் பார்க்கும்போது இது ஒரு நாடா, இங்கு ஜனநாயகம் இருக்கிறதா என்று எண்ணத் தோன்றுகிறது. நாம் சுதந்திரம் வாங்கிக் கொண்டது உண்மைதானா என்று கூட தோன்றுகிறது. என் மனதில் உள்ள கஷ்டங்களை இங்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்ற காரணத்தினால்தான் இந்த விவாதத்தில் நான் கலந்துகொண்டேன் என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. ந. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த ஹரிஜன மானியக் கோரிக்கையை நான் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்று காலை சட்டமன்றத்தில் நடந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்று உரையாற்றிய எதிர்கட்சி உறுப்பினர்கள் கடந்த இருபது ஆண்டுகளாக தாங்கள் ஆண்டு அனுபவித்த காலத்தில் ஹரிஜனங்களைப் பற்றியே எண்ணிப் பாராதவர்கள் இந்த ஒரு ஆண்டு காலத்திற்குள் ஏதோ கொடுமைகள் நிகழ்ந்து விட்டதுபோல் நினைத்துக்கொண்டு எங்களுக்கு இதுதானா, இன்னுமா எங்களுக்கு இந்தக் கொடுமை என்று யாரையோ பார்த்துக் கேட்பதுபோல் கேட்டார்கள். உள்ளபடியே, திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பிறகு இருபது ஆண்டு காலத்தில் காங்கிரஸ்காரர்கள் செய்த சலுகைகளை இந்த அரசு வந்ததும் இன்னின்ன விதத்தில் இன்னின்னதை நிறுத்திவிட்டது என்று ஆதாரம் காட்டிப் பேசியிருந்தால் உள்ளபடியே அது வரவேற்கக் கூடியதாக இருக்கும். அவர்கள் கட்சி ஆட்சியில் இருந்தபோதே ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டுகிற திட்டத்தை கைவிட்டு விட்டார்கள். அதேபோல் சமுதாய மண்டபங்கள் அமைக்கிற திட்டத்தையும் கைவிட்டு விட்டார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு உடனடியாக கல்லூரிகளில் சேருவதற்கு மாணவர்களுக்கு உரிமைக் கார்டுகள் வழங்கியும், நுழைவுக் கட்டணம், விசேஷக் கட்டணங்கள் இவைகளினால் ஏற்பட்ட இன்னல்களை துடைத்தும் மாணவர்கள் கல்லூரிகளில் சேருவதற்கு வழிவகை செய்து கொடுத்திருக்கிறது. இன்னும் பல காரியங்களை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆற்றிக் கொண்டிருக்கிறது. காலையில் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் திரு. கோபால் அவர்கள் அழைத்தால் அவர்கள்

வீட்டில் கூட உணவு அருந்த தயாராயிருக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இன்று நாட்டில் நடப்பதெல்லாம் ஏதோ சம்பிரதாயத்திற்காக ஆதி திராவிடர் இல்லங்களுக்குச் சென்று மூக்கைப் பிடித்துக்கொண்டாவது சாப்பிடுகிறார்களே தவிர நம் சுதந்திராக் கட்சி அங்கத்தினர் பெருமதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியதுபோல் என் வீட்டில் வந்து அவர்கள் சாப்பிடலாம், நான் அவர்கள் வீடுகளுக்குச் சென்று சாப்பிடத் தயார் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இன்னும் காங்கிரஸ்காரர்கள் வரவில்லை. திரு. கோபால் அவர்கள் வீட்டுக்கு வேண்டுமென்றால் செல்கிறேன் என்று சொல்கிறார்களே தவிர என் வீட்டுக்கு அவர்கள் வரவேண்டுமென்று சொல்லவில்லை. ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். 1947-48-ல் என்று நினைக்கிறேன், நீடாமங்கலத்தில் காங்கிரஸ் அரசியல் மாநாடு நடந்தது. அதற்கு இங்கு முதல் மந்திரியாக இருந்த திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அங்கு சமபந்தி போஜனம் என்று போட்டுவிட்டு அதைப் பார்த்து நீடாமங்கலத்திலுள்ள இரண்டு ஆதிதிராவிடர்கள் உள்ளே வந்து சாப்பிட்ட காரணத்திற்காக அவர்கள் இரண்டு பேர்களையும் அவர்கள் தலையை மொட்டை அடித்து அவர்களை கழுதை மேல் ஏற்றி ஊர்வலம் விடுகிற அளவில் கடைசியில் போலீசார் வந்து தடுத்து அப்படிச் செய்தவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து, வழக்கு வழக்குமன்றத்தில் நடந்து அவர்களுக்கு தண்டனை கூடக் கொடுக்கப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே காங்கிரஸ்காரர்கள் ஏதோ ஜோடனை செய்வதுபோல் செய்து வந்தார்களே தவிர உள்ளபடியே அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. காந்திஜி காலத்தில், நேருஜி காலத்தில் செய்யாதவர்கள் இனி செய்ய மாட்டார்கள். சான்றாக சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டு இன்று மத்திய அரசில் உணவு அமைச்சராக இருக்கக்கூடிய திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் மத்திய பாராளுமன்றத்திலேயே கேட்டிருக்கிறார்கள். இந்த பதினேழு ஆண்டு காலத்தில் காங்கிரஸ் அரசாங்கம் ஆதிதிராவிடர்களுக்கு பல கொடுமைகளைச் செய்துவிட்டது, இன்னும் தீண்டாமைக் கொடுமை விட்டபாடில்லை, ஏதோ வோட்டு பெறவேண்டும் என்பதற்காக பிச்சை இடுவது போல் ஏதோ அளிக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை என்று அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த அரசை நடம் புரளச் செய்ய ஆறு கோடிதானா ஆறு கோடிதானா, என்று எதிர்கட்சியினர் கேட்கிறார்கள். மத்திய அரசின் நிதி உதவி கூட இப்போது குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த அளவிற்காவது இந்த அரசு செய்வதைக் குறித்து உள்ளபடியே நாம் பாராட்டி நன்றி தெரிவிக்கவேண்டும். ஆதிதிராவிட மக்கள் இந்த அரசையே நம்பிக்கொண்டிருக்கிறார்கள். சான்றாக இந்த மன்றத்தில் வந்திருக்கக்கூடிய 41 ஆதிதிராவிட அங்கத்தினர்களில் மூன்று நான்கு பேர்கள்தான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். இதிலிருந்து. சென்ற அரசு இந்த மக்களுக்கு செய்த நன்மைகளையும், திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தால் என்ன நன்மைகள் செய்யும் என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்பதை இதிலிருந்து கண்டு கொள்ளலாம். ஆதிதிராவிட சமயத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பெருவாரியாக ஆளுங் கட்சியாகச் சேர்ந்துள்ளார்கள் என்றால் உள்ளபடியே இந்தக் கட்சியும் அதனை வழிநடத்திச் செல்லும் நம்முடைய முதலமைச்சர் பெருமதிப்பிற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்களும் அவர்களிடம் மதிப்போடு நடந்து கொள்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது. இந்த மன்றத்திலே ஒரு முறை நண்பர் திரு. விநாயகம் அவர்கள் ஆதிதிராவிடர்கள் மட்டும்தானா ஏழை எளியவர்கள், ஆதிதிராவிடர்களுக் மட்டும்தானா வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்ட வினாவிற்கு அறிஞர் அண்ணா அவர்கள் ஆதி திராவிடர்கள் என் வீட்டு ஓரத்திலே செல்லக்கூடாது என்று உயர் ஜாதிக்காரர்கள் கூறுகின்ற மனோபாவம் ஏற்படுவதனாலே நிச்சயமாக அவர்களுக்கு மட்டும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டியது அவசியம் என்பதில் இந்தச் சர்க்கார் இன்னும் தீவிரமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு ஆதிதிராவிடர்களின் பேரில் பற்றும் பாசமும் கொண்டிருக்கிறது பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இயங்குகின்ற அமைச்சரவை. இந்த அமைச்சரவை இன்னும் சில நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். சென்ற ஆண்டு கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கவிருக்கிறோம்



என்று கூறப்பட்டது. அந்த முறையை இன்னும் ஆராய்ந்துகொண்டிருக்கிறோம் என்று சொல்வது தாமதத்திற்கு அறிகுறியாக இருக்கிறது. அதை அமைச்சரவர்கள் விரிவாகப் பரிசீலனை செய்து நல்ல நடிவடிக்கைகளை எடுப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

மதிய உணவிற்காக 15 காசு கொடுப்பது என்பது போதாது என்று சொல்லிக்கொள்கிறேன். அது மிகமிகக் கட்டாத காரியம். அவைகளைக் கூட்டித்தர அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். உறுப்பினர்கள் கூறியதைப்போல் கிறித்தவ தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் எல்லாச் சலுகைகளும் வழங்கவேண்டும்.

சென்ற ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் பட்ஜெட்டைக் கொண்டு வந்த சமயத்தில் இரண்டாயிரம் ரூபாய் வருட வருமானம் உடையவர்களின் பிள்ளைகளுக்குக் கல்விச் சலுகை உள்ளது என்றார்கள். ஆனால் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த சாதாரண ஆரம்ப ஆசிரியர் கூட அந்தச் சலுகையைப் பெறமுடியாத அளவிற்கு அந்த வருட வருமானம் இருக்கிறது. எனவே வருட வருமானத்தின் வரம்பைக கூட்டி ரூ 2,000 என்பதை ரூ. 3,000 ஆக உயர்த்தினால்தான் சாதாரண ஆசிரியர்களாக இருக்கின்றவர்கள்கூட தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்க முடியும்.

அதோடு உரிமைக் கார்டுகள் வழங்கப்பட்டன. சில கல்லூரி முதல்வர்கள் அந்த உரிமைக் கார்டுக்கு உரிய மதிப்பை அளிக்காமல் மாணவர்களை வெளியேற்றியிருக்கிறார்கள். அதற்கும் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னும் இந்த மானியத்தில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து கூட்டு மன்றங்களுக்கு மானியம் கொடுத்து ஆதிதிராவிட மக்களுக்கு ரோடு போடவும், குடி தண்ணீர் வழங்கவும் வகை செய்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை கடந்த 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் அரசு செய்து பார்த்தது. நிச்சயம் அதை ஒருநாளும் பஞ்சாயத்து கூட்டுமன்றமோ, பஞ்சாயத்துக்களோ செய்ய முன் வருவதில்லை. காலணா காசு கூட பஞ்சாயத்துக்களுக்குச் செலவில்லாமல் அரசாங்கம் மானியம் கொடுத்து ரோடு போடவும், குடிதண்ணீர் வசதி செய்யவும் சொல்லியும் ஒரு தீர்மானத்தைப் பஞ்சாயத்தில் நிறைவேற்றி பஞ்சாயத்து கூட்டுமன்றத்திற்குக் கொண்டு சென்று, பஞ்சாயத்து கூட்டு மன்றம் யாரோ காண்டிராக்டருக்கு விட்டுச் செய்வதற்குக்கூட எந்த பஞ்சாயத்துத் தலைவரும் முன்வரவில்லை. எனவே இத்தகைய நிலைமைகளைப்பற்றி அமைச்சரவர்கள் மறு பரிசீலனை செய்து, கூட்டு மன்றத்திற்குக் கொடுக்காமல் அந்த இலாக்காவே நேரடியாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்தால் நிச்சயமாக நல்ல பலனை அளிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தீண்டாமைக் கொடுமைகள் எவ்வளவோ இருக்கின்றன, மஞ்சள் விளக்கு எரிவதால் விரைவில் முடித்துக்கொள்கிறேன். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைக் கண்டுபிடிக்க போலீஸார் எப்படித்தேடித் தேடித் துருவித் துருவிப் பார்த்து வருகிறார்களோ அதேபோன்று எந்தெந்த ஓட்டல்காரர்கள் வெவ்வேறாகப் பாகுபடுத்தி நடத்துகிறார்களோ அவர்களைக் கண்டு பிடித்து அந்த ஒட்டல் உரிமையாளரின் லைசென்ஸ் ரத்து செய்துவிட நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னொன்று. இந்த இலாக்காவில் தயவு செய்து வேறு எந்த ஜாதிக்காரரையும் ஒரு காலவரையறைக்கு நியமிக்காமல் இந்த இனத்தவர்களையே நியமித்தால் நிச்சயம் பரிகாரம் காணமுடியும். இன்று தஞ்சையிலிருந்து ஒரு தபால் வந்திருக்கிறது. அதில், 'அடிஷனல் அலாட்மெண்ட் ஃபார் ஸ்காலர்ஷிப்' உண்டா என்று கேட்ட மாணவர்களைப் பார்த்துப் பொதுநல அதிகாரி அலுவலகத்தில் இருந்து இரண்டு பிராமண வகுப்பைச் சேர்ந்த எழுத்தர்கள் 'அண்ணா ஆட்சியிலே அலாட்மெண்ட் கிடையாது' என்று கூறியதாக அந்த மாணவர்கள் தங்கள் குறையை எழுதியிருக்கிறார்கள். இதைப் போலவே மற்ற எல்லாக் காரியங்களிலும். ஆகவே இந்த இனத்தவர்களையே அலுவலகத்தில் நியமித்தால் நன்மை பயக்கும். சென்ற ஆண்டுகூட போதிய அளவு அதிகாரிகள் கிடைக்கவில்லை என்றாலும்.....

[1968 மார்ச் 15

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாணவர்கள் எழுதியுள்ளதாகக் கூறும் அந்தக் கடிதத்தை உறுப்பினரவர்கள் இந்த இலாக்காவிற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ந. சோமசுந்தரம் :** அதிகாரிகள் கிடைக்கவில்லை யென்றால் அதற்கான கட்டு திட்டங்களைத் தளர்த்த வேண்டும். சென்ற ஆண்டு 375 பஞ்சாயத்து கூட்டுமன்றத்தில் இருபதே இருபது ஆணையர்கள்தான் ஆதி திராவிடர்கள். எனவே அவர்களுக்கு ஓரளவு சலுகை கொடுத்து, தகுதியை பார்ப்பதிலே ஓரளவு கருணை காட்டி எத்தனை சதவிகிதம் அந்த இனத்தவர்கள் இருக்கவேண்டுமோ அத்தனைபேர்களும் இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இதுவரையிலே காங்கிரஸார் வீடு கட்டுவது, சமுதாயநல மண்டபம் கட்டுவது ஆகிய இவைகளை விட்டுவிட்டார்கள். மனை ஆர்ஜிதமும் கடந்த இரண்டாண்டு காலமாக செய்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. எனவே மந்தமாக இருக்கின்ற காரியங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். எங்கள் மாவட்டத்தில் மாவட்ட நிலக்குழு மாற்றி அமைக்கபபடுவதில் தாமதப் படுகிறது. அவைகளை மாற்றியமைக்கவும் மாவட்ட நலக்குழு பல காரியங்களைச் செய்யவும் வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

* **திரு. என். மருதாசலம் :** உதவி சபாநாயகரவர்களே, இந்த அரிசன நலத் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அரிசனங்கள் முன்னேற்றத்திற்காகப் பல நன்மைகளை அரசு செய்திருக்கிறது. அரிசனங்கள் முன்னேறவேண்டுமானால் அவர்கள் மூன்று துறைகளிலே முன்னேறியிருக்கவேண்டும். இந்த மூன்று துறைகளிலும் முன்னேறினால்தான் அவர்கள் முன்னேறுவார்கள். அப்போதுதான் மற்ற ஜனங்களோடு நெருங்கிப் பழக முடியும். அதாவது தொழிற்துறையிலே முன்னேறவேண்டும், கல்வித் துறையிலே முன்னேற வேண்டும், பொருளாதாரத் துறையிலே முன்னேற வேண்டும். ஆக இந்த மூன்று துறைகளிலேயும் முன்னேறினால்தான் அவர்களுக்கு நாட்டிலே நல்ல மதிப்பு உண்டாகும், அந்தஸ்தோடு வாழ்வதற்குச் சநதர்ப்பம் உண்டாகும். இந்த மானியத்துறையில் மூன்று வகையும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மானியத்திற்கு 6 கோடியே 51 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 6 கோடியே 51 லட்சமும் அரிசன நலனுக்கு அப்படியே வருகிறதா என்றால் இல்லை. இந்த 6 கோடியே 51 லட்சத்தில் அரிசன வெல்பேர் டிபார்ட்மெண்டிலே இருக்கிற டைரக்டர், சிப்பந்திகள் சம்பளம், மற்றும் தாலூக்காவிலிருக்கின்ற அரிசன இலாக்கா சிப்பந்திகள் சம்பளம் போக மற்றதுதான் அரிசன நலனுக்கு வருகிறது. அப்படியானால் இந்த முன்னேற்றத்திற்கு இந்தத் தொகை போதாது. அதிகமாக ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஆகையால் இந்த மானியக் கோரிக்கையினாலே அரிசனங்களுக்கு சிறுசிறு சலுகைதான் செய்ய முடியும். அதனால் அரிசனங்கள் முன்னேறுவதற்குச் சந்தர்ப்பமும், வாய்ப்பும் கொஞ்சம் கொஞ்சம்தான் ஏற்படும். ஆகவே இதில் பல குறைபாடுகள் இருந்தாலும் கோயம்புத்தூர் பகுதியிலே முன்னேற்றத்திற்கு ஒதுக்கியிருப்பது குறைவாகயிருக்கிறது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது அரிசனங்களுக்கு வீடு கட்டும் சந்தர்ப்பம் 12, 5, 9 என்ற முறையிலே கோயம்புத்தூரிலே இருக்கிறது. மற்ற இடங்களிலே, சின்ன ஜில்லாவிலேகூட அதிகமாக இருக்கிறது. அதேபோல் காதி என்ற இலாக்காவிலே 6 பேர்தான் கோயம்புத்தூர் ஜில்லாவிலே இருக்கிறார்கள். மற்ற இலாக்காவிலேயெல்லாம் 8, 9 என்ற முறையிலே அதிகபட்டிருக்கிறது. ஆகவே தொழில் துறையை எடுத்துக்கொண்டாலும் என்னுடைய ஏரியாவிலே கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கிறது. பெண்கள் நல விடுதி ரொம்பக் குறைந்து ஒன்றுமே கிடையாது என்பதாக எழுதப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டத்தைக் காட்டிலும் கோவை மாவட்டம்



1968 மார்ச் 15] [திரு. என். மருதாசலம்]

தொழில் பிரதேசமானது, பெரிய பரந்த தேசமாக உள்ளது, அந்த ஜில்லாவிலே மற்ற ஜில்லாக்களை காட்டிலும் குறைவாக யிருக்கிறது. ஆகையால் அதிகப்படியான வசதிகளை அந்த ஜில்லாவிற்கு தேடித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்றைக்கு, ஹரிஜனங்களுக்கு வீட்டு வசதி வேண்டுமென்று பல விண்ணப்பங்களை பல பேர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பற்றி பலர் பேசினார்கள். எவ்வளவுதான் பேசினாலும் அந்த வீட்டு வசதி முன்னே நடந்த மாதிரியேதான் நடந்து கொண்டிருக்கிறது. இன்றைக்குப் பல இடங்களிலே வீட்டு மனைகள் இருக்கின்ற காரணத்தால் அவை வேண்டுமென்று பலர் விண்ணப்பித்திருக்கிறார்கள். ஆனால் அந்த வீட்டு மனையை பேச தாசில்தாரோ, ரெவினியூ இன்ஸ்பெக்டரோ வந்து பார்த்தவுடனே, அதனுடைய விலைக் கூடிவிடுகிறது. விலை கூடிவிடுவதால் அதை வாங்குவதிலே ஹரிஜன நல இலாகாவிலே காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த மனைகளுக்கு ஒரு விலையை அரசாங்கம் நிர்ணயிக்கவேண்டும். இந்த விலைக்குத்தான் அதை விற்கவேண்டுமென்று நிர்ணயிக்கவேண்டும். இந்த விலைக்கு மேலே அவர்கள் சொல்வார்களானால் அந்த வாங்க முடியாது என்ற அளவில் ஒரு விலையை அரசாங்கம் நிர்ணயிக்கவேண்டும். அப்படியிருந்தால் பாக்கி ஜாதி இந்துக்கள் மற்ற ஹரிஜனங்களுக்கு வீடு கொடுக்கும்போது இடைஞ்சல் செய்யமாட்டார்கள். அவர்கள் வீடு கட்டும் போது எந்த விதமான இடைஞ்சலும் செய்யாமல் இருக்க முடியும் என்றும் அந்த முறையை அரசு கையாள வேண்டுமென்றும் கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-30

முனிசிபாலிட்டியிலே தள்ளுவண்டி வைத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக இதிலே கூறப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கிராமப் பகுதியிலேயிருக்கிற பஞ்சாயத்துக்களிலேயும் முனிசிபாலிட்டியிலும் தள்ளுவண்டி வசதி கிடையாது. சில முனிசிபாலிட்டியிலே இருக்கலாம். நகர்ப்புறத்திலே அதுவும் பஞ்சாயத்து யூனியன்களிலே தொழிலாளர்களுக்குத் தள்ளுவண்டி கிடையாது. பழைய மாதிரியேதான் பக்கெட்டிலே தூக்கி தோளிலே சுமந்துகொண்டு செல்கிறார்கள். ஆகவே, இந்த் முறையை மாற்றி தள்ளுவண்டி முறையை அமுல் படுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வீட்டுவசதிப் பொறுப்பை ஹவுசிங் போர்டார் ஏற்றிருக்கிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவிலே 500, 600 ஏக்கர் நிலத்தை எடுத்திருக்கிறார்கள். 500 ஏக்கர் நிலத்தை எடுத்து, வீடு கட்டி, முனிசிபாலிட்டியிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட ஹரிஜனங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் வேலையிலே இருக்கும் வரையிலே அந்த இடத்திலேயிருக்கலாம்; அவர்கள் வேலையைவிட்டு நீங்கிவிட்டால் அந்த வீட்டை காலி பண்ணிக்கொண்டு போகவேண்டிய நிலைதான் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு நிரந்தரமாக ஒரு இடத்தைத் தேடிக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னொரு திட்டம் வைத்திருக்கிறார்கள். அத்திட்டத்தின்கீழ் 3 செண்ட் அளவுள்ள நிலத்தில் பிளாட்பார்ம் கட்டிக் கொடுத்துவிட்டு வீடு கட்டுவதற்கு வேண்டிய மரம் மட்டைகளையெல்லாம் கொடுத்து, அந்த வீட்டை வாங்குபவர்களே கட்டிக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, அதற்கு வாடகையாக ரூ. 3-ஐ ஹவுசிங் போர்டுக்குத் தரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த முறை இல்லாமல் அவர்களுக்கே அந்த வீட்டை கொடுத்து விட வேண்டும். அந்த முறையை அரசாங்கம் கையாள வேண்டும்.

சிறுசிறு மாற்றங்களையெல்லாம் அரசாங்கம் உடனடியாகச் செய்ய வேண்டும். வீட்டு வசதி வேண்டுமென்று பல விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. பல இடங்களிலே வீட்டு வசதிக்காக நிலம் 'அக்கொயர்' செய்யப்படுகிறது ஹரிஜனங்களுக்கென்று. உடனே, ஜாதி இந்துக்கள் தடைபோடுகிறார்கள். இந்தத் தடைகளுக்கெல்லாம் ஒரு முட்டுச்கட்டை போட்டு அந்த ஹரிஜனங்களுக் கெல்லாம் வீட்டு வசதி உண்டுபண்ணுகிற முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படியில்லை யென்றால் வருஷாவருஷம்

ஹரிஜன நல இலாகாவிலே குறைகளைச் சொல்லிக் கொண்டுதான் இருக்க வேண்டும். அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் அது நிறைவேற்றுமல் இருந்து கொண்டிருக்கும். ஆகையால் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு அந்தந்த ஏரியாவிலே ஒரு கமிட்டி அமைத்து, எந்தெந்த பகுதியிலே ஹரிஜனங்களுக்கு வீடு இல்லை, வீடில்லாத ஹரிஜனங்கள் இத்தனை பேர், என்று அந்த கமிட்டியின் மூலமாக ஒரு முறைப்படுத்திக் கொண்டு பின்னால் அதை நடைமுறைப் படுத்தினால் முறையாக இருக்கும். என்று சொல்லிக் கொள்கிறேன். அந்த முறையிலே இந்த ஹரிஜன மானியத்தின்மீது பேசுகின்றபோது இன்னும் பல குறைபாடுகள் இருக்கின்றன. ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் பணம் கொடுத்தல் இதையெல்லாம் முறையாக அந்தந்த காலத்திலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி ஏற்பாடு செய்தால்தான் ஹரிஜனப் பிள்ளைகளும் கொஞ்சம் படிக்கும்படியும். அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் பணத்தை முன்னாலேயே கொடுத்தால்தான் புஸ்தகம் வாங்க வழி ஏற்படும். இதையெல்லாம் நடைமுறையில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. பா. நாகலிங்கம்:** பேரவை உதவித் தலைவர்கள் அவர்களே, அரிஜன நலத்துறை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை சொல்ல முன்வந்திருக்கிறேன்.

பொதுவாகவே, தமிழக அரசு பொறுப்பை இந்த அரசு ஏற்றபிறகு அரிஜனங்களுக்கு தனித்தொழில் செய்வதற்காக மானியம் ஒதுக்கியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் ஜாதி இந்துக்களாயிருந்து மதம் விட்டு மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கும் சலுகை கொடுக்கப் பட்டிருக்கிறது. பொதுவாகவே காங்கிரஸ்காரர்கள் இங்கே திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் ஏதோ ஜாதி உணர்ச்சியை கொண்ட ஒரு இயக்கத்தின் சர்க்கார் என்ற முறையில் பேசினார்கள். இதற்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் அரிஜன் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் செய்யாது என்ற அவர்கள் வெளியே பேசியதும் உண்டு. குறிப்பாக, இங்கே காங்கிரஸ்காரர் ஒருவர் பேசுகின்ற நேரத்தில் ஜாதியை ஒழிக்க வேண்டுமென்றெல்லாம் சொன்னார். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் இல்லாத நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை மாநகராட்சியினுடைய பொறுப்பை ஏற்ற நேரத்தில், இன்றைக்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிற சிவசங்கரன் அவர்களுக்குத் துணை மேயர் பதவியைக் கொடுத்திருக்கிறது என்பதை காங்கிரஸ் நண்பர்கள் மறந்துவிடக்கூடாது. அதோடு மட்டுமல்லாமல், ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று இன்றைக்குப் பேசுகின்ற காங்கிரஸ்காரர்கள் கடந்த 20 ஆண்டு கால ஆட்சியிலும் இன்றைக்கும் 'வால் போஸ்டரில்' காமராஜ நாடார், இராம கிருஷ்ண நாயுடு என்று போடுகின்றதைப் பார்க்கின்ற நேரத்தில் உள்ளபடியே இதிலே இருவர்கள் தான் ஜாதி இந்துக்களில் உயர்ந்தவர்கள் போல், மற்றச் சம்பந்தப்பட்ட பேச்சாளர்கள் எல்லாம் தாழ்ந்தப் பட்டவர்கள் என்ற நிர்மானத்தின்பேரில் போடுகின்ற வகையில் தென்படுகிறது. அல்லது வேறு எந்த ஜாதியையும் சேராதவகையில்தான் அன்றிலிருந்து இன்றுவரை அவர்கள் வால்போஸ்டர்களைப் போட்டிருப்பதைப் பார்த்தால் நன்றாகத் தெரியும். அவைகளையெல்லாம் உணர்ந்திருக்கின்ற வகையிலேதான் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் ஆதி திராவிட மக்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக, என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ, 20 ஆண்டுகாலமாக ஆண்ட சர்க்காருடைய உறுப்பினர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தும் அங்கு குடித் தண்ணீர் கிடையாது. 1962 பொதுத் தேர்தலில் இந்த சட்டமன்றத்திற்கு போட்டியிட்ட நேரத்தில் நானும் நம்முடைய பாராளுமன்ற உறுப்பினரும் எடுத்துச் சொன்னதனுடைய விளைவு இன்றைக்கு முடிவுற்றது. அங்கே சில் காலனிகளிலே தண்ணீர் எடுப்பதற்காக கிணறு வெட்டுகிறார்கள். குறிப்பாக, 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் தேதி அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை தத்தமிஞ்சி என்கிற ஒரு அரிஜனக் காலனிக்கு அழைத்துச் சென்றேம். அங்கே கடந்த சர்க்காரினுடைய 20 ஆண்டுகால ஆட்சியிலே தண்ணீர் கிடைக்காத நிலைதான் இருந்தது. அதை மாற்று





கின்ற வகையில், புதிய அரசுப் பொறுப்பேற்றபிறகு, அரிஜன நலத் துறை இயக்குனர் அவர்கள் மூலமாக ஏறத்தாழ ரூ. 80,000-க்கு மேற்பட்ட பணத்தை ஒதுக்கி அங்கு குடி நீர் பிரச்சினையை போக்குவதற்கு வழிவகை செய்திருக்கிறது. அதன் விளைவாகத்தான் இந்த மேல்நீர் திட்டத் திறப்பு விழா நடைபெறப்போகின்ற 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் தேதியன்று மாண்புமிகு அரிஜன நலத்துறை அமைச்சரவர்கள் வர இருக்கிறார்கள். அப்படிப் பட்ட நிலையில் கடந்த காங்கிரஸ் அரசில் இருந்த சட்டமன்ற உறுப்பினர்களாகட்டும், அமைச்சரவையாகட்டும், சட்டமன்றத்தில் இந்தப் பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார்களா? நிச்சயமாக இல்லை.

பல பேர்கள் இங்கே பேசுகிற நேரத்தில் அரிஜன மக்களுக்கு ஒதுக்கப் பட்டிருக்கிற பணம் குறைவு என்றும் ஒரு நபருக்கு ரூ. 6 தான் ஒதுக்கியிருக்கிறார்களென்றும் சொன்னார்கள். அந்தப் பணம் நிச்சயமாகப் போதாது தான். கடந்தகால உங்களுடைய நிர்வாகத்திலே, 20 ஆண்டுகாலத்தில் நீங்கள் அதிகப்படியான சலுகைகளைக் கொடுத்து அந்த மக்களை நல்ல முறையிலே வாழவைத்திருப்பீர்களே யானால் நிச்சயமாக இப்பொழுது நீங்கள் சொல்வதை நாங்கள் எடுத்துக்கொள்ள முடியும். அந்தக் காலத்திலே செய்யத் தவறியவர்கள் இன்று என்னென்னவோ பேசுகிறார்கள்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை அங்கே 200-க்கு மேற்பட்ட அரிஜனக் காலனிகள் இருக்கின்றன. அந்தக் காலனிகளில் பெரும்பாலான இடங்களில் தண்ணீர் கிடையாது. மணலி எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை வேறு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக கிரவுண்ட் வாட்டர் செல் என்று துளைகளைப் போட்டு தண்ணீர் எடுக்கிறார்கள். அதன் விளைவாக கிணறு வெட்டினால் கிணற்றிலே தண்ணீரில்லை. ஆனால் பஞ்சாயத்து யூனியன்களில் கிணறு வெட்டுவதற்காக பணம் ஒதுக்கீடு செய் திருக்கிறார்கள்.

அந்த ரூ. 12,000-க்கு நான்கு கிணறுகள் தான் எடுக்க முடியும். நான்கு கிணறுகளை எடுத்தாலும், கிணறு எடுக்கப்பட்ட பிறகு தண்ணீர் இல்லை என்ற நிலைமை தான், நீண்ட நெடுங்காலமாக 20 ஆண்டு காங்கிரஸ் கட்சியின் ஆட்சி வரலாறு நமக்கு எடுத்துக் காட்டி வருகிறது. அரிஜன நலத் துறையில் சில தீர்மானங்கள் போட்டு, நம்முடைய இயக்குனர் அவர்களையும் மாவட்ட நலத் துறை அதிகாரி அவர்களையும் நாங்கள் அழைத்துச் சென்று பல கிராமங்களில் இதுவரையில், தாழ்த்தப் பட்ட பெருங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதியிலே சுடுகாட்டுக்கு வழியில்லாத அப்படிப்பட்ட நிலைமைகளை எடுத்துச் சொல்லியும், இது நாள்வரையில் சில நடைமுறையில் நடந்தும், சில நடக்காமலும் இருக்கிறது. அப்படிப் பட்ட நிலைமைகளை உடனடியாக இந்த இலாகாவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பரிசீலனை செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டு என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களுக்கு 20 ஆண்டு காலமாக வீடு கட்டிக் கொள்ள வீட்டு மனைக் கொடுக்கிறோம், 3 செண்டு நிலம் கொடுக்கிறோம் என்றெல்லாம் தேர்தல் காலத்தில் பேசினார்கள். இன்றைக்கு நாங்கள் சட்டமன்றத்தில் பொறுப்பேற்று ஒரு வருடமும் சில நாட்களும் ஆகின்றன. நாங்கள் எங்கள் பகுதிக்குச் சென்றால், எங்கேயாவது தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களுக்கு 3 செண்டு நிலம் இருக்கிறதா. சர்க்காரோ, அரிஜன நலத்துறையோ வாங்கிக் கொடுத்திருக்கிறார்களா என்றால், இல்லை. நாங்கள் வாங்கிக் கொடுப்பதற்கு கலெக்டர், தாசில்தார் அல்லது மற்ற அதிகாரிகள் மூலம் முற்படலாம் என்றாலும், நிலம் இல்லை. ஆகவே, இன்றைக்கு நாட்டு மக்களை ஏமாற்றுகிறவர்கள் காங்கிரஸ்காரர்களா, அல்லது திராவிட முன்னேற்றக் கழகமா என்பதை தயவு செய்து காங்கிரஸ் நண்பர்கள் உணரவேண்டும். இதை நான் எதற்காக சொல்லுகிறேன்

என்றால், என்னுடைய பகுதியிலே பெரும்பாலான பணக்காரர்கள் எத்தனையோ ஏக்கர் நிலங்களை, புறம்போக்கு நிலங்களை தங்களுடைய கைவசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் அதிகாரப் பீடத்தில் இருந்த நேரத்தில் காங்கிரஸ்காரர்கள் அதற்கு உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு அந்த நிலங்கள் பட்டா செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது. வண்டிக்காவலூர் என்ற இடத்தில் ஒரு ஏக்கர் 7 சென்டு நிலம் பாதைப் புறம்போக்கு, பாதைக்கு பயன்படவில்லை. தாசில்தாரைப் பார்த்து அந்த நிலத்தை வீட்டு மனைக்குக் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அந்த அதிகாரியும் அதற்கு சம்மதம் தெரிவித்தார்கள். ஆனால், கடைசிவரையில் அந்த அதிகாரி தாழ்த்தப்பட்ட மக்கள் பக்கத்தில் அதே நிலையில் நின்றாரா என்றால் இல்லை. அவர்கள் குடிசை போடுகிற நேரத்தில் அந்த நிலத்திற்குப் பக்கத்தில் இருக்கிற சொந்தக்காரர், மஞ்சாகரணியிலிருந்து வண்டிக்காவலூர் வரையிலுள்ள நிலத்தைப் பயிரிடுகிற நிலச் சொந்தக்காரர்களுடைய உதவியை ஏதோ எதிர்பார்த்து அந்த அதிகாரி தன்னுடைய நிலையை மாற்றிக்கொண்டு, அவர்கள் போட்ட குடிசையை பிய்த்து எறிந்துவிட்டார்கள். அதுகுறித்து சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் சொல்லியிருக்கிறேன். ஆனால், இதுவரையிலும் எந்தவிதமான வழிவகைகளும் நடைபெறவில்லை. இந்த மாதிரி நிலைமையை மாற்றி அமைக்க அரிஜன நலத்துறை அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும். இனியாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு புறம்போக்கு நிலமிருந்தால், வீடுகட்டிக்கொள்ள வீட்டு மனை தர முன்வரவேண்டும் கடந்தகால ஆட்சியில் போலீசுக்குச் சொல்லி அந்த வீடுகளை பிய்த்து எறிந்துவிட்டார்கள். ஆனால், இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமை இல்லை. நமது தமிழக அரசில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற போலீஸ் நிர்வாகத்தில் காங்கிரஸ்காரர்களுடைய ஜம்பம் இன்றைக்கு பலிக்காது. அரிஜனநல அமைச்சருக்கு செய்தித் துறையை கொடுத்து விட்டார்கள், தங்கள் சர்க்கார் காலத்தில் திரு கக்கன் அவர்களுக்கு போலீஸ் துறையைக் கொடுத்திருந்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை வாழவைக்க வேண்டுமென்றால். வளரவைக்க வேண்டுமென்றால், அவர்களை இந்த நாட்டு நல்ல மக்களாக்க வேண்டுமென்றால், அவர்களுக்கு ஒரு பதவி கொடுத்து, ஆசாபாசத்தைக் காட்டி அந்த் சமுதாயத்தை நல்லபடியாக ஆக்கிவிடலாம் என்பது எந்த அரசின் இயக்கமாக இருந்தாலும், அது சரியல்ல என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

அரிஜன நலத் துறையிலிருந்து தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களுக்கு ரூ. 1,500 கிணறு எடுப்பதற்குக் கொடுக்கிறார்கள். இன்றைக்கு வேளாண்மைத் துறையிலே ரூ. 5,000 வரையில் அந்த விவசாயிகளுக்குக் கொடுத்து கிணறு எடுத்தாலும், எடுக்கப்பட்ட கிணற்றில் போர் போட்டால் தான், தண்ணீர் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. ரூ. 1,500 ஏதோ அரிஜனங்களுக்குப் பணம் கொடுக்கிறோம் என்பதை வைத்துக்கொண்டு பெருமைப்பட்டுக் கொண்டிருக்கலாமே தவிர, மண்ணைத் தோண்டி, கல்லைப்போட்டுக் கட்டி, தண்ணீர் இல்லாத நிலைமைதான் ஏற்படுகிறது. ஆகவே, இந்த அரிஜனநலத் துறையினரால் கொடுக்கப்படுகிற ரூ. 1,500 என்பதை பயன்படும் வகையில் ரூ. 3,000 என்று மாற்றிக் கொடுத்தால் உண்மையாகவே அரிஜன மக்களுக்கு கிணறு எடுப்பதற்குக் கொடுக்கக் கூடிய சலுகையாக அது பயன்படும்.

இன்னொன்றும் சொல்கிறேன். தாழ்த்தப்பட்டோர் லீக் என்றும் மாதர் சங்கம் என்றும் கடந்தகால சர்க்கார் ஜாதிமத வேறுபாடுகளைப் போக்குவதற்கு என்று சொல்லி பல ஸ்தாபனங்களை அமைத்துக்கொண்டு அவைகளை காங்கிரஸ் வளர்ப்பதற்குத் தான் பயன்படுத்திக் கொண்டார்கள். அப்பேர்ப்பட்ட நிலைமையை மாற்றி, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக பணியாற்றுகிறவர்களைக் கொண்டு மாவட்ட வாரியாக, வட்ட வாரியாக குழுக்களை அமைத்து, ஜாதியை அகற்றவேண்டும் என்கிற பெரிய முயற்சியில் தாழ்த்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை தவிர மற்றவர்களும் தீவிரமாக ஈடுபட்டால்......(மணி அடிக்கப்பட்டது).





* THIRU K. VINAYAKAM: Mr. Deputy Speaker, Sir, on this Demand I am in complete agreement with the Government about their incapacity to satisfy the growing needs of the communities concerned. Whatever Government may be in power and however laudable their purposes may be and in spite of their goodwill either to the Scheduled Castes or the Backward Classes or the Most Backward Classes, unless enough finance is available, they cannot put them into action. That is the handicap with which this Government as well as the other Governments have been suffering from. So, there is no want of warmth either in the then Congress Government or in the D.M.K. Party Government now. This is the only field where we can agree, I believe. I have no quarrel with this Government in regard to whatever they want to do for the Scheduled Castes. In fact, I would rather go out of the way to plead that more and more amount should be allotted to them and the handicaps under which they are suffering should be removed.

Now, I shall concentrate my attention on the points mentioned in the cut motion which I had the privilege to more. That is with regard to the Backward Classes and the Most Backward Classes. After all, what is the present Government doing for the Backward Classes and the Most Backward Classes? They are only repeating what the previous Government have done. Let the Hon. Minister come forward and show me something strange in her Government or in her portfolio and point out that whatever the Congress Government had missed doing, this Government are doing for these communities. Let her come forward to show me one instance of such kind. I can take it for granted that they have not done anything that can instil in us more confidence. They are only doing things which are a replica of what the Congress Party had done when they were in power.

Mr. Deputy Speaker, Sir, I have no malice or bad intention towards either the Hon. Minister for Harijan Welfare or the Director of Harijan Welfare. She is doing her job pretty well. But my concern is that since they are in charge of not only the backward communities but also the Harijans, the interests of the backward communities might not receive the same consideration as they deserve. I want to make a plea that to safeguard the interests of the backward communities and the most backward communities, a separate Department will have to be constituted. I wish that our Hon. Chief Minister were here in this House now. In fact, I suggested to him that he should make it convenient to come back to the House again but unfortunately I miss him now and I am just addressing mostly empty benches. Sir, I wish that the Government should create a separate portfolio to look after the interests of the backward classes and the most backward classes. The Department should look after only Backward Classes. That does not mean that she is not fair to us-she has done certain good things for us and that does not mean that the Director of Harijan Welfare is not kind to me and is showing step-motherly treatment to us but we are interested more in improving ourselves. That is why I plead that there should be a

separate Minister, at least a Deputy Minister if not a Cabinet Minister, to be in charge of this portfolio for safeguarding our interests. I do not mean any malice against the present Minister. They could as well do a better job, they could concentrate more on our problems and lift us from the dirty mire in which we have sunk for so many years.

Mr. Deputy Speaker, I would like to go to the history of the preparation of the list of backward classes. The list was prepared not during my (the Congress) regime, not during your (the D.M.K.) regime, but during the Advisers' regime. When the War broke out, the Ministry headed by Mr. C. Rajagopalachari resigned and the Assembly was dissolved. During that period the Governor carried on the administration and he was advised by I.C.S. Advisers. The list was prepared in those days and many communities, whether they liked it or not and without their knowledge, were included in it. There was an Iago who played the villain of the piece in the Home Department and he drafted many communities which were not really backward. There are 154 communities and many of them are not really backward. For all social purposes they claim they are a forward community; they enjoy a better social status. But for purposes of scholarship, admission in educational institutions, promotion and provision of jobs, they style themselves as backward communities. I do not want to mention the names of the communities. But if anybody provokes me, I will mention the names. That list the Congress Government got and the very same list the D.M.K. Government also is following. It is high time that the list is revised. That is all my plea. Such of those communities which are really backward or most backward should find a place and not those communities which are already forward, well educated and well placed in society. They should not sneekily get in. I am in agreement with the Deputy Speaker. He belongs to a community like mine.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தப் பட்டியலிலே எந்த எந்த வகுப்பினர் விலக்குவதற்குரியவர்கள் என்று தெரிவித்தால் நலமாக இருக்கும்.

THIRU K. VINAYAKAM : In privacy I will speak to the Education Minister and let him know. It is not in good taste to say all those things on the floor of this House. However much you may scratch me, I will not walk into your trap.

The Constitution provides that the President shall appoint a backward class commission soon after the Constitution comes into operation. The then President appointed a Backward Class Commission under the chairmanship of Kaka Saheb Kalelar. The purpose of the Commission was to go all over the country, find out the grievances of the backward classes and suggest means for redressing them. That Commission produced a report, a bulky volume of about eight hundred pages, and I think the Minister would have read it. It contains a lot of suggestions which, if put into practice, will lift us. To quote from the report, Backward Classes are a source of national danger if their grievances are not



redressed in time. Every third, fourth, fifth or sixth man is a backward community man in our country. I am at a loss to know how we are going to solve their problems and redress their grievances. I suggest to the Ministry that they appoint a small commission so far as our State is concerned. The Chief Minister was in agreement with me when I talked to him on this subject. The commission may consist of some legislators, educationists and some outsiders. They should study the position for the past fifteen or twenty years, what the measures taken by the Government were, how much the people profited by them and what the progress is that we have made after throwing tons of money in the field. Never mind whether it was the Congress Ministry or the D.M.K. Ministry that was in office. You may be educated, I may be educated. Some graduates and lawyers have come up. That is what the Chief Minister also was telling me. If he is here, he will appreciate it. I suggest that a commission should be appointed to go into the conditions of Harijans and backward community people in our State.

The object of my cut motion is to urge that whatever educational, social and other facilities are given to Harijans must be extended to the Most Backward Classes. There is still a distinction between the Harijans and the Most Backward Classes. I asked the Director of Harijan Welfare as to what exactly was the difference between the Backward Classes and the Most Backward Classes. The only difference is that if the Most Backward Classes get a minimum of 45 per cent of marks in schools and colleges, they get Central aid. For the Backward Classes the minimum is 50 per cent.

I am very glad that the Chief Minister has come. I request that the Deputy Speaker will allow me a few more minutes.

The extra benefit which a Most Backward Community candidate gets is after all 5 per cent. I know the Chief Minister belongs to a Backward Community. He has told me many times not only in this House but also outside that he also studied with the aid of scholarship. I do not know about our Education Minister. He comes from a forward community. We are proud of what we are, in spite of our educational backwards inherited from our parents. In those days I had to run up to the Justice Party Headquarters or the Cosmopolitan Club to get the signature of one of the Ministers or Secretaries. I am not sorry for it. Now the Government are having a democratic scheme. We must uplift the backward

people. As long as people are backward in our country, we will not progress. They will have to be lifted from the mire. I understand your handicap. If you have tons of money, you will spend and do everything. Paucity of funds is the handicap. What is the meaning in the D.M.K. Members asking what the Congress Ministry has done and my Friends asking what the D.M.K. Ministry has done? That is the wrangle. Every member said

[Thiru K. Vinayakam.] [1968 மார்ச் 15

the same thing. ஒரே பாட்டு, ஒரே தாளம்; வேறு பாட்டு இல்லை. வேறு தாளம் இல்லை. When you scratch us, we scratch you. Where are we heading to? That is not the way to tackle the problem. It is a national problem. That is what Kaka Saheb Kalelkar has said. Backward Classes are a source of national danger. Unless you solve their problems, they will suddenly burst and create confusion in our country.

Our Chief Minister agreed with me some time ago on the point that a backward class commission should be appointed. Let it be above politics; let there be no D.M.K. Members or Congress Members. Let there be some educationists, economists and social workers and let them go into the position of Backward Classes from the time of the Advisers Regime when the list was formulated. It is high time that we draw up a new list. There is an agitation in the Centre. But the Centre is expecting the States to lead the agitation so far as Backward Classes are concerned.

பிற்பகல் 4·00.

I know one, Dr. Punjab Rao Deshmukh who was the Minister for Agriculture in the Central Government and he belonged to the backward community. Once when he came down here, he almost incited us to revolt against our own Government. I refused to do it in the interests of politics. So, what I want to say is that the problem is common to everybody and the problem affects everybody. For instance, out of 100 people, 75 people belong to either the Harijan Community or the Backward Community. The other 25 people are willing to come into our list but their social status and many other things keep them out of it. If we extend this facility to them, even the Brahmins are willing to be known as backward community because they want the same kind of support from the Government.

Now, I come to another point. We have launched upon a good programme of giving special training to the trainees to compete in the examinations like the I.A.S. examination. But you will all be surprised to learn that in Bangalore all the applicants had failed and there was 'Nil' result. In the Uttar Pradesh only 3 out of 75 applicants passed the examination. It is only in our State that 16 out of 42 applicants passed it. What a marvellous achievement for the then Congress Government. Sir, You will grant me this small pleasure of saying so. That is the way how we must uplift our boys and the Principal who was manning that College which gave training to them has been removed for no fault of his, and posted to some other place. That is the treatment that we are meeting out to our own good officers. This aspect of the matter must be looked into.

Now, I come to the last point. Our boys appear for the competitive examinations conducted by the Madras Public Service Commission for the recruitment of first-grade officers. What happens is that the M.P.S.C. selects only boys who secure 60 or 70 marks. Because our boys do not get more than 42 or 45 marks,



1968 மார்ச் 15] [Thiru K. Vinayakam]

they do not select them even for an interview. So, most of the boys belonging to the backward community are not able to take advantage of having even an interview. I represented the matter even three years ago and now I request this Government to look into the lacuna and rectify it if it is possible.

Lastly, the small dole which we give to our Harijan boys staying in the hostel was fixed in the days of the late Thiru Bashayam Iyengar who was then the Director of Harijan Welfare. In those days it was thought to be a credit for a Brahmin to be the Director of Harijan Welfare. At that time it was Rs. 40. Now much water has flowed under the bridge. Prices of articles have increase as also the Dearness Allowance and the City Compensatory Allowance. Everything is going up but still you want to 'kill' the boy by paying him only Rs. 40. Will the Hon. Minister look into the matter and do something for these boys? With these words, I reiterate my cut motion.

**திரு. எம். பன்னீர்செல்வம் :** சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரிசன் நலத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இப்பேரவை முன் வைக்க நான் முன் வந்துள்ளேன். ஆம்பூர் நகரம் ஐம்பதாயிரம் மக்கட்தொகை கொண்ட நகரமாகும். அங்கே குடியிருக்கின்றவர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட அரிசன மக்களும், நெசவாளர் பெருங்குடி மக்களும் ஆவார்கள். அங்கு குடும்பக் காட்டு திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள விண்ணமங்கலம் கிராமத்தில் காட்டிலாக்காவைச் சேர்ந்த ஏறக்குறைய 500 ஏக்கர் நிலம் தரிசாகக் கிடக்கின்றது. அந்த தரிசு நிலத்தை ஏழை எளிய அரிசன மக்களுக்குக் கொடுத்து, அங்கு சாகுபடி செய்யும் நிலையை உருவாக்கினால் அங்கிருக்கும் அரிசன மக்களிடையே உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் நிலையைச் சமாளிக்க முடியும். சர்க்காரப் புறம்போக்கு நிலம், டி. சி. புறம்போக்கு நிலம் இவற்றில் பெரும்பகுதியை ஆங்காங்கு இருக்கும் பெரும் பெரும் விவசாயிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்தை ஏழை அரிசனங்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் கொடுத்து, அதைச் சாகுபடி செய்ய முற்பட்டால், அங்கிருக்கும் ஏழை அரசினங்கள் முன்னேற்றம் அடைய முடியும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கு வீட்டு மனைப் பிரச்சினை மிகப் பெரிய அளவில் இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எல்லோரும் அவரவர் தொகுதியில் உள்ள இத்தகைய நிலையை எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ முப்பது கிராமங்களுக்குச் சம்பந்தப் பட்டவர்கள் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளாக அந்த வீட்டு மனைப்பிரச்சினையைக் குறித்து மனுச் செய்துகொண்டிருந்தும், கடந்த அரசு அதைச் செயல்படுத்தாத நிலையில் இருக்கிறார்கள். குறிப்பாக, அங்கு அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் காலனியில் அவர்கள் எப்படி வாசம் செய்கிறார்கள் என்று பார்த்தால், மனித சமுதாயத்திற்கு அப்பாற்பட்டவர் போல் வாசம் செய்கிறார்கள். அதைக்குறித்து அரிசன நலத்துறை அதிகாரிகள் சரிவரச் செயல் படாத நிலை இருந்து வருகிறது. வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மாவட்ட நல அதிகாரியிடம் நாங்கள் நேரடியாகச் சென்று மனுக் கொடுத்திருக்கிறோம். வீட்டு மனை கோரி, அந்த மாவட்ட அரிசன மக்கள் நேரடியாகவும் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். மனுக் கொடுத்ததையொட்டி, நானும், என்னுடைய அருமை

நண்பர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களும் அமைச்சர் அவர்களிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரி அவர்களிடமும் மனுச் செய்திருந்தோம். இருந்தாலும் இதுவரை அதற்கு எந்தவிதமான தகவலும் தெரியவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அரிசன நலத்துறை நடத்துகிற பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு, 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருப்பதை மாற்றி 25 மாணவர்களுக்கு ஓராசிரியர் என்று நியமித்திருப்பதைப் பற்றி இந்த சர்க்காரைப் பாராட்ட தாழ்த்தப்பட்ட அரிசன மக்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

அரிசன ஆஸ்டலில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற உதவிப்பணம், இப்பொழுது விலைவாசி ஏற்றத்தின் காரணமாக போதவில்லை என்ற காரணத்தால், இப்பொழுது சர்க்கார் அதை உயர்த்தியுள்ளது, அதை இன்னும் சற்று உயர்த்தியிருந்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால், அந்த ஆஸ்டல் கமிட்டியில் நானும் மெம்பராக இருப்பதால், அந்த மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் உணவை நான் பார்க்க முடிகிறது அப்படி பார்க்கும் போது, அந்த மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் போதுமான அளவுக்கு இல்லாமல் பற்றாக்குறையாக இருக்கிறது. அதிகாரிகளை அதுபற்றிக் கேட்கும்போது, விலைவாசி ஏறியிருப்பதால் நாங்கள் கொடுக்கும் உணவு இருபது நாட்களுக்குத்தான் வருகிறது என்று சொல்லுகிறார்கள். இந்த நிலையில், நமது சர்க்கார் உணவுக்காக ஒரு ரூபாய் வீதம் உயர்த்தியிருப்பதைப் பார்க்கும் போது, அதற்காக அந்த மாணவ சமுதாயத்தின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

காட்டிலாகாவைப் பொறுத்தவரையில், அங்கு விடும் காண்டிராக்டை அரிசனக் கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுப்பார்களானால், அந்த அரிசன மக்கள் வியாபாரத்தில் முன்னேறி, மற்ற சமுதாயத்தோடு சமமாக வாழும் அளவுக்கு வந்து விடுவார்கள். எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் நண்பர்கள் எல்லாம், காங்கிரஸ் ஆட்சிதான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏதோ நல்லது செய்திருப்பதாகச் சொன்னார்கள். மறைந்த மாமேதை காந்தியார் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை நாம் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகனொருவன் பிரதமராக வந்தால்தான் சமதர்மம் இருக்கிறது என்று சொல்ல முடியும் என்று நமது காந்தியார் அவர்கள் சொன்னார்கள்.

இப்பொழுது அந்த வழியைப் பின்பற்றி நம்முடைய மாபெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் செயல் படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதைக் குறித்து, தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்று இந்த மாமன்றத்தில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

அரிசனங்களுக்குரிய வீடு கட்டும் திட்டத்திற்கு மத்திய சர்க்கார் மானியம் கொடுக்கிறார்கள். நமது சர்க்கார் ஏற்கனவே 750 ரூபாய் மானியமாகக் கொடுக்கிறது, மதிப்பிற்குரிய திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் 750 ரூபாய்க்கு வீடு கட்டிக் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார். அதை இந்த சர்க்கார் பயன்படுத்திக்கொள்ளுமானால் நல்லது. 750 ரூபாய் செலவில் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் கட்டிக்கொடுக்கக் கூடியதைப் போன்று, தாழ்த்தப்பட்ட ஹரிஜன பெருங்குடி மக்களுக்கு கட்டிக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று இந்த சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, காங்கிரஸ் கட்சி அரிஜன சமூகநல சேவா சங்கம் என்ற பெயரில் அமைப்புகளை ஏற்படுத்திக்கொண்டு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்தும், அரிஜன சமுதாயத்திலிருந்தும் தேர்தல் நேரங்களில்





அவர்களுடைய ஓட்டுகளைப் பெற்று வந்தது, இந்த சமூக சேவா சங்கங்களை தன்னுடைய வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொண்டதே தவிர, இந்த மக்களின் வளர்ச்சிக்கும் வாழ்க்கைத்தரம் உயருவதற்கும் ஒருவித நன்மையும் செய்யவில்லை. இன்றைய தினம் தமிழக அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரிஜன மக்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்ய வேண்டும், என்னென்ன நன்மைகளைச் செய்யமுடியும் என்பதைக் குறித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். அதன் பொருட்டு இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே அதிகமான நிதியை ஒதுக்கியிருப்பதற்காக அரிஜன மக்களின் சார்பாகவும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரிஜன நலத் துறை மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. கோ. பூவராகன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் அரிஜன நல மானியக் கோரிக்கையின் மீது என் கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கும் வெட்டுப்பிரேரணையை யொட்டி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் ஆளும் கட்சியிலுள்ள உறுப்பினர்கள் பேசும்போது, "ஏற்கனவே இருந்த காங்கிரஸ் அரசாங்கம் அரிஜன மக்களுடைய நலனிலே அதிக கவனம் காட்டவில்லை. இன்றையதினம் பொறுப்பேற்றிருக்கும் புதிய அரசாங்கம் மேலும் நன்றாக கவனம் செலுத்தி நன்மைகளைச் செய்ய வேண்டும், செய்துகொண்டு வருகிறார்கள்" என்று கூறினார்கள். இந்தத் துறை அமைச்சர் அவர்கள் இந்த சபை முன்னே சென்ற ஆண்டு ஒரு அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே, ஏற்கனவே இருந்த காங்கிரஸ் அரசாங்கம் செய்த காரியங்கள் என்னென்ன, 1966–67லே எத்தனை பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன, எவ்வளவு பேருக்கு வீட்டு மனைக் கட்டுகள் ஒதுக்கப்பட்டன, எத்தனை அதிகாரிகள் இந்தத் துறையிலே நியமிக்கப்பட்டார்கள், என்னென்ன தொழில்களுக்கு வாய்ப்பு அளித்திருந்தார்கள், எத்தனை அரிஜன மாணவர்களுக்கு உணவு வசதி, உடை வசதி செய்து கொடுக்கப்பட்டது என்பன போன்ற விவரங்களை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புத்தகம் நாங்கள் தயாரித்து, அச்சிட்டு வழங்கியது அல்ல. அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட புத்தகம் இந்த மன்றத்திலே எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. நாங்கள் செய்த காரியங்கள் அத்தனையும் பெருந்தன்மையாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் அந்தப் புத்தகத்திலே எல்லாம் விவரமாக அடங்கியிருக்கிறது. நேரம் அதிகமாக இல்லாத காரணத்தால் ஒவ்வொன்றாக படித்துக்காட்ட நான் விரும்பவில்லை.

குறிப்பாக நண்பர் திரு கே. விநாயகம் அவர்கள் சொன்னதுபோல் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு எழுதுவதற்கு பயிற்சி பெறுவதற்காக பயிற்சிப் பள்ளி காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. இன்றையதினம் சமுதாயத்தில் தாழ்ந்திருப்பவர்கள் எல்லோரையும் மேல்மட்டத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தில்தான் எல்லோரும் பரிவுகாட்டிப் பேசுகிறார்கள். இதில் யார், யார் அதிகமாகப் பரிவுகாட்டிப் பேசினார்கள் என்பது அல்ல பிரச்சினை. இப்படிப் பரிந்து பேசினால் மேலும் சில தனிச் சலுகைகளைப் பெற்று அந்த மக்களுக்குத் தரமுடியும் என்ற நிலையில்தான், அரிஜன மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அதிக சலுகைகளை கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். இப்படி சலுகை கொடுக்கும்போது சென்ற ஆண்டு எந்த அளவிற்குப் பணத்தை அதிகமாக ஒதுக்கினார்கள்? ஒதுக்கிய பணத்தை எந்த அளவிற்குச் செலவு செய்திருக்கிறார்கள் என்றுதான் பார்க்கவேண்டும்.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தப் பணத்தில் பெரும்பகுதி இந்தத் துறையிலே பணிபுரிகிற அதிகாரிகளுக்கு ஸ்பெஷல் அலவன்ஸ், டியர்னஸ்

அலவென்ஸ், எக்ஸ்ட்ரா அலவென்ஸ் போன்றவைகளில்தான் செலவாகிறது. தோட்டத்திலே பாதி, கிணற்றிலே பாதி என்று சொல்வார்களே, அது போல ஒதுக்கிய பணத்திலே பாதி இந்தத் துறை அதிகாரிகளுக்குப் போய்ச் சேருகிறது. சென்ற அரசாங்கத்தைவிட அதிகமாக ஒதுக்கியிருந்தும், பள்ளிக்கூட கட்டட அமைப்பு, பாதைகள், கிணறுகள் தோண்டுதல், மனைக் கட்டுகள் வழங்குதல் போன்றவைகளில் செலவழித்த பணம் மிக்க குறைவாக இருக்கிறது. ஒதுக்கிய பணத்தில் கிட்டத்தட்ட 3 லட்சம் குறைவாகவே செலவு செய்திருக்கிறார்கள். பின்தங்கிய தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும் அரிஜன சமுதாயத்திற்கும் வசதிகளைச் செய்ய அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று எல்லோரும் ஒன்று சேர்ந்து சொல்லும்போது மிகக் குறைந்த அளவிலே செலவு செய்ததன் காரணம் என்ன என்று தெரியவில்லை. இந்த ஆண்டு கூட குறைவாக பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். மொத்தத்தில் 6 கோடி ரூபாய்க்கு மேலே ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் நடைமுறைச் செலவுகள், இலாகாவில் இருந்து பணியாற்றுகிறவர்களுக்கு ஆகும் செலவுகள் போன்றவைதான் அதிகமாக இருக்கிறது. ஒதுக்கியபணம் முழுக்க முழுக்க மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்த்தால் இல்லையென்றே கூறவேண்டும். ஆகவே, இன்னும் இதில் கொஞ்சம் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிஜன நலத் துறையை ஏற்படுத்தியதன் நோக்கம், அந்த சமூக மாணவர்களுக்கு நல்ல கல்வி அளித்து, தனிச் சலுகைகள் அளித்து, முன்னேற்றப்படுத்த வேண்டுமென்பதுதான். அதற்காக ஆங்காங்கே பள்ளிகள் ஏற்படுத்தப்பட வேண்டும், நல்ல முறையில் கல்வி போதிக்கப்பட வேண்டும், அரிஜன மாணவர்களுக்கு உணவும், உடையும் இலவசமாக வழங்கப்பட வேண்டும். தனிச் சலுகைகள் அளித்து சமூகத்தை உயர்த்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் காரணமாகவே இத்துறை ஏற்படுத்தப்பட்டது. தனிச் சலுகை கொடுக்கும்போது, அரசாங்கம் இந்த அரிஜன நலப் பள்ளிகளில் படித்துவரும் மாணவர்களில் எத்தனை சதவிகித மாணவர்கள் நன்றாகப் படித்து முன்னேறி வருகிறார்கள், தேர்வு எப்படி இருக்கின்றது? இன்னும் முன்னேற்றம் அடைய எந்தெந்த வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பவைகளில் கவனம் செலுத்த வேண்டும். எல்லா இடங்களிலும் அரசாங்கமே அரிஜனப் பள்ளிகளை ஏற்படுத்த முடியாது. சில இடங்களில் தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிகளுக்கு உதவியளித்து, அரிஜன மாணவர்களுக்கு வேண்டிய சலுகைகளைப் பெற்றுத்தர வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசாங்கத்தின் உதவி பெற்று மற்றவர்களும் பள்ளிகளை நடத்துகிறார்கள். முன்னாலிருந்த அரசாங்கம்கூட இதைத்தான் செய்துவந்தது. கொஞ்சம் கொஞ்சமாக ஆண்டு ஒன்றுக்கு நான்கைந்து தனியார் நடத்தும் பள்ளிகளை அரசாங்கத் துறைக்குக் கொண்டுவந்துவிட வேண்டும். தனியார் நடத்தும் பள்ளிகள் நல்ல முறையில் நடந்தால் பரவாயில்லை. தனியார் நடத்தும் பள்ளிகள் சரியான முறையில் நடக்கவில்லையென்ற புகார் வரும்போது, அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வது பொருத்தமாக இருக்கும், அதை உடனடியாகச் செய்ய வேண்டும். ஒதுக்கிய பணத்தைச் சரியாகச் செலவழிக்க வேண்டும்.

நாம், அரிஜனக் காலனிகள் அரிஜன நலப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டும். அரிஜனங்கள் எந்த அளவிற்குக் கல்வியிலும், பொருளாதாரத்திலும் முன்னேற்றம் அடைய வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அந்த அளவிற்கு நாம் அவர்களை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும். அரிஜனங்களை நல்ல பழக்க வழக்கங்களிலே முன்னேற்றம் அடையச்செய்ய வேண்டும். பள்ளிகளில் சீருடை அணியச் செய்து அவர்களுடைய நடைமுறைப் பழக்கங்களை மாற்றி முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். மேலும், அரிஜன மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி கொடுத்து கல்வியில் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும். இப்போது ஐ. எ. எஸ்., ஐ. பி. எஸ்., படிக்கும் மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறோம். அதேபோல அரிஜன வகுப்பைச் சேர்ந்த எஸ். எஸ். எல். சி. படிக்கும் மாணவர்களுக்கும் ஆங்காங்கே தனிப் பயிற்சியளிக்க அரசாங்கம்



வேண்டிய வழிகளைச் செய்ய வேண்டும். மேலும் பல மாணவர்கள் பி. யூ. சி. படிக்கிறார்கள். பட்டப் படிப்பு, பொறியியல், விவசாயம் வைத்தியத் துறை, பட்ட மேற்படிப்பு போகவேண்டுமென்று சொன்னால் நல்ல மதிப்பு எண்கள் பி. யூ. சி. யில் வாங்க வேண்டும். அதற்குத் தனிப் பயிற்சி கொடுக்க வேண்டும். பி.யூ.சி. யில் நல்ல மதிப்பெண் பெற்றால்தான் பட்ட மேற்படிப்பு படிக்க வசதியாக இருக்கும். அண்ணாமலை நகர், மதுரை நகர் போன்ற பெரிய பெரிய நகரங்களில் தனிப் பயிற்சிகள் நடத்தி, அவர்களை முன்னேற்றம் அடையச் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். பி. யு. சி. படிப்பு அதிகமாக அரிஜன மாணவர்கள் படிக்கும் இடங்களில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். இதற்குத் தேவையான நிதியை அரசாங்கம் ஒதுக்கித் தரவேண்டும்.

அரிஜன மாணவர்களுக்கும், பின்தங்கிய வகுப்பில் இருக்கும் மாணவர்களுக்கும் ஆங்காங்கு உணவு விடுதிகள் அமைத்துத் தர வேண்டும். ஒவ்வொரு தாலுகாவிலும் அரிஜன ஆண்களுக்கும், அரிஜன பெண்களுக்கும் ஒரு உணவு விடுதி ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக தற்போது மூன்று நான்கு மாவட்டங்களில்தான் அரிஜன மக்களும் மிக பின்தங்கிய வகுப்பினரும் அதிகமாக இருப்பவர்கள் என்று கருதுகிறேன். மாவட்டத் தலைநகரங்களிலும், பெரிய பெரிய நகராட்சிகள் இருக்கும் இடங்களிலும் உணவு விடுதிகளை ஏற்படுத்தி, அரிஜன மாணவர்களுக்குக் கல்வியைப் போதிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மிகப் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் இவ்வாறு விடுதிகள் வைத்து கல்வி போதிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வேண்டுமானால் ஓரளவு வருமான வரம்பு வைத்து அதற்குள் உள்ளவர்களையாவது சேர்த்துக்கொள்ள வேண்டும். காரணம் அவர்கள்தான் வருங்காலச் சந்ததியினர்—இளம் கன்றுகள். அவர்களை நல்ல முறையில் பயிற்றுவித்தால்தான் நாம் போடுகிற திட்டங்களை அவர்களால் தொடர்ந்து நல்ல முறையில் செயல்படுத்தவும் நல்ல காரியங்களைப் பாதுகாத்து வரவும் முடியும். நாம் செய்கிற எல்லாக் காரியங்களும் வருங்காலச் சந்ததிக்குப் பயன்படுகிற அளவில் இருக்கவேண்டும்.

அடுத்து அரிஜனங்களுக்கு மனைகள் வழங்குகிற முறையில்கூட நாம் திட்டவட்டமான ஒரு கொள்கையைப் பின்பற்ற வேண்டும். முதற்படியாக எந்த எந்த இடங்களில் சர்க்கார் மண்ணில் யார் யார் குடியிருந்து வருகிறார்கள், எவ்வளவு வருடங்களாகக் குடியிருந்து வருகிறார்கள் என்பது பற்றி சர்வே எடுக்க வேண்டும். அவர்களுக்கே அதை பட்டா செய்து கொடுக்க வேண்டும். நானே நான்கைந்து ஆண்டுகள் பரிட்சார்த்தமாக தென்னாற்காடு மாவட்டத்தில் பார்த்தேன். அந்த மாவட்டத்தில் எங்கெங்கே சர்க்கார் புறம்போக்கில் அரிஜனங்கள் ஏழை மக்கள் குடியிருக்கிறார்கள் என்று சர்வே எடுத்து ஆட்சேபணை இல்லாத நிலங்களை அவர்களுக்கே மாதாமாதம் ஆயிரம் பட்டாவாவது வழங்கப்பட வேண்டும் என்ற முறையான அடிப்படையில் 18 ஆயிரத்திற்குமேல் பட்டா வழங்கியிருக்கிறோம். இந்த மாவட்டத்தைப் போலவே மற்ற மாவட்டங்களும் கூடச் செய்ய வேண்டுமென்று கலெக்டர்களுக்குத் தாக்கீது அனுப்பப்பட்டது என்று நினைக்கிறேன். அப்படி முறையாக ஒரு சர்வே எடுத்து—ஆட்சேபணை இல்லாத, தகராறு இல்லாத நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்துகொடுக்க இந்த அரசு திட்டமிட்ட முறையில் செயல்பட வேண்டுமென்று இந்தச் சமயத்தில் சொல்ல விரும்புகிறேன். இதுபோல அரிஜனங்கள் மட்டும் அல்ல—சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள எல்லா மக்களுக்குமே பட்டா வழங்க ஒரு முறையை வகுத்துக்கொள்ள வேண்டும். மனைக்கட்டு வழங்குவதில் உள்ள சங்கடங்களைப்பற்றி பரமேசுவரன் கமிட்டியின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. நாம் ஒரு இடத்தைக் கொடுத்தால் அவர்கள் ஒரு இடத்தில் கேட்கிறார்கள், அங்கே கொடு, இங்கே கொடு என்கிறார்கள். சில இடங்களில் நிலத்துக்காரர்கள் கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள். இப்படிச் சங்கடங்கள் பல வருகின்றன.

[திரு. கோ. பூவராகவன்] [1968 மார்ச் 15

பல உறுப்பினர்கள் கூடச் சொன்னார்கள், அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்பட்டு விடுகிறார்கள் என்று அரிஜனங்களுடைய நன்மைக்காக நாம் போடுகிற அதிகாரிகளை இரண்டாண்டோ மூன்றாண்டோ, அல்லது பொதுமக்களிடமிருந்து புகார் எதுவும் வாராதவரையில், நிரந்தரமாக வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் எடுத்த காரியத்தை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும். தாசில்தார்களைப் போலவே ஜில்லா அரிஜன நல அதிகாரிகளையும் அடிக்கடி மாற்றக்கூடாது.

நாம் தொழில் துறையில் அவர்கள் மேம்பாடு அடைய உதவி செய்கிறபோது அந்தத் தொழில் துறையில் அவர்கள் எப்படி முன்னேறி வருகிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். சிலர் தங்களுக்கு இந்தத் தொழில் வேண்டும் என்பார்கள். அதனைச் சரியாக அவர்களால் நடத்த முடியாது இருக்கலாம். குறிப்பாக எட்டுபேர், பத்துபேர் சேர்ந்து கூட்டுறவுத் துறையில் இணைந்து அவர்கள் தொழில் நடத்தி முன்னேறுவதற்கான வாய்ப்புகளையும் அளிக்கவேண்டும்.

பரமேசுவரன் கமிட்டியினர் தம் அறிக்கையில் 60 லட்சம் பேர்களில் 40 சதவிகித பேர்களுக்கே மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன, பாக்கி 60 சதவிகிதம் பேர்கள் மனைக்கட்டுகள் வழங்கப்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதற்கு குறைந்தது 15 கோடி ரூபாய் வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். பிற்பட்ட இனத்தவர்களையும் சேர்த்தால் அதற்கு ரூ. 15 கோடி, ஆக முப்பது, முப்பத்தைந்து கோடி ரூபாய் மனைக்கட்டு வழங்க நமக்குத் தேவைப்படும். ஒரே சமயத்தில் இத் தொகையை நம்மால் சமாளிக்க முடியாது. ஆகவே திட்டமிட்டமாக ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு ஆண்டுக்கு இத்தனை கோடி ரூபாய் என்பதாக ஒதுக்கி—ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இந்த அரசு முன்வர வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு நிலத்தின் மதிப்பு உயர்ந்து கொண்டே போகிறது. சில ஆண்டுகள் போனபிறகு இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வது என்றால் அப்போது இதற்கென 100 கோடி தேவைப்படும் என்கிற நிலை வந்துவிடும். எனவேதான் இத்தனை ஆண்டுக்குள் முடித்துவிடுவது என்று இதுபற்றி முடிவு செய்யவேண்டும். இந்த ஆண்டு அரசாங்கம் லாட்டரிச் சீட்டு போட்டு அதன்மூலம் ஒரு கோடி வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். இதுகூட அந்த ஏழை மக்களின் பணமாகவேதான் இருக்கும். பணக்காரர்கள் அதிக அளவு அதில் ஈடுபட மாட்டார்கள். ஆகவே இந்த லாட்டரிச் சீட்டுமூலம் வருகிற ஒருகோடி பணத்தையும் முதல் அமைச்சர் அவர்கள் தாழ்த்தப்பட்ட, மிகவும் பின்தங்கிய, பின்தங்கிய சமூகத்தினர்களுக்கு மனைக்கட்டு வழங்கும் திட்டத்துக்கே பயன்படுத்துவது நல்ல முறையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து இந்த ஆண்டு ஸ்காலர்ஷிப் பணம் இதுவரை மாணவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்று கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் பல உறுப்பினர்களே சொன்னார்கள். முன்பு ஜில்லா அதிகாரிகள் சாங்ஷன் செய்து வந்தார்கள். அதை வாங்கி அமைச்சர்கள் அவர்கள் இப்போது தம் கையில் வைத்திருப்பதனால்தான் அதைப் பார்த்து பரிசீலனை செய்து கொடுப்பதற்குக் காலதாமதமாகிறது என்றார்கள். இந்த அதிகாரம் ஜில்லா அதிகாரிகளிடத்தில் இருந்தால்தான் இந்தக் குறை தவிர்க்கப்படும் அவர்கள் தவறாக நடந்து கொண்டார்கள் என்று தெரிந்தால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். கொடுத்த பணத்தைக் கூடத் திரும்பப் பெற நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அந்த அதிகாரம் அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறது.

கனம் கோபால் என்று நினைக்கிறேன். அவர் பேசும்போது கக்கன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது அரிஜன சமூகத்தைச் சேர்ந்த எல்லோரையும் கொன்றுவிட்டுப் போய்விட்டார்கள், அழித்துவிட்டுப் போய்விட்டார்கள் என்று சொன்னார்.



1968 மார்ச் 15]

48. Notification issued with G.O. Ms. No. 1809, Revenue, dated the 17th October 1967, regarding reduction in payment of stamp duty for one year from 1st April 1967, in respect of the Mortgage Deeds executed under the scheme for deepening of wells under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

@ 49. Policy Note on Demand No. 29—1968-69 (English and Tamil).

£ 50. Policy Note on Demand No. 16 (Tamil).

## இணைப்பு I

[139-ம் பக்கத்திலுள்ள 220-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்துள்ளது.

(இ) அரசாங்கப் பேருந்துப் போக்குவரத்துக்கு இழப்பு ஏற்பட்டதற்கான காரணங்கள், செலவைச் சிக்கனப்படுத்த தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துக் துறை மேற்கொண்ட முயற்சிகள் குறித்த விவரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1962-63 முதல் 1965-66 வரையுள்ள கால அளவில் தமிழ்நாடு அரசாங்கப் பேருந்துப் போக்குவரத்தின் சென்னை மாநகரப் போக்குவரத்தில் இழப்பு ஏற்பட்டது. 1964–65-ல் ரூ. 23·88 லட்சம் இழப்பு ஏற்பட்டிருக்க 1965–66-ல் ரூ. 33·91 லட்சம் இழப்பு ஏற்பட்டது. இழப்பு ஏற்பட்டதற்கான காரணங்கள், செலவுகளைச் சிக்கனப்படுத்த அத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) பேருந்து ஒன்றை வழித்தடத்தில் ஓடவிடுவது கட்டுபடியாக வேண்டுமானால், செல்லவேண்டிய குறைந்த அளவு தொலைவுப் பயணத்துக்கென அதை இயங்கப் பிடிக்கும் மாறுபடும் செலவுகளையும் நிலையான செலவுகளையும் சரிக்கட்டிக் கொண்டு போகிறவகையில் அப்பேருந்து குறிப்பிட்ட குறைந்த அளவு மைல்கள் பயணம் செய்திருக்க வேண்டும். தற்போதைய வரவுகள் செலவுகளின் அடிப்படையில், சென்னை மாநகரில் ஒரு பேருந்தை ஓட்டுவது கட்டுப்படியாக வேண்டுமானால், அது நாள் ஒன்றுக்குக் குறைந்தது 146 மைல் பயணம் செய்யவேண்டுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் பேருந்துகள் நாள் ஒன்றுக்குச் சராசரி 135 மைல்தான் ஓடுகின்றன. பேருந்துகளை இயக்குவது கட்டுப்படியாகிற அளவிற்கு அவை ஓடாவிட்டால், அவற்றை இயக்குவதன் மூலம் இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. கடினமான போக்குவரத்து நிலைமைகளாலும், 1965–ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் விதிகளின் விதித்துறைகளின்படி செயல்படவேண்டி வந்ததாலும், பேருந்துகள் ஓடும் தொலைவுகளை அதிகரிக்க இயலவில்லை. சென்னை மாநகரில் சாலைகளைப் பயன்படுத்தும்

£ Despatched to Members on 13th March 1968.

* Placed on the Table of the House on 14th March 1968.

@ Despatched to Members on 12th March 1968.

வண்டிகளின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக விரைவில் அதிகரித்து வந்துள்ளது. வாடகைக் கார்கள், சரக்குப் பேருந்துகள் (lorries) தனியார் வண்டிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் போன்ற பலவகை வண்டிகள் சாலைகளில் ஓடிக்கொண்டிருக்கின்றன. சாலைகளில் ஓடும் வண்டிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், சாலைகளில் போக்குவரத்து நெரிசல் மிகுந்துள்ளது. இதன் விளைவாக, போக்குவரத்துத் துறைப் பேருந்துகளின வேகம், இருக்கக்கூடிய அளவைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. பல இடங்களில் பல சமயங்களில் வலவர்கள் வண்டியை அடிக்கடி நிறுத்தி ஓட்ட வேண்யுள்ளது. பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கையில், போக்குவரத்து ஒழுங்கிற்கான அடையாள அறிவிப்புகள் இடங்களில் வண்டிகளை நிறுத்த வேண்டியுள்ளது. பேருந் போக்குவரத்தை இயக்குவது குறித்து, இந்த இடர்ப்பாடுகளனைத்தும் மேலே குறிப்பிட்டுள்ள கடினமான போக்குவரத்து நிலைமைகள் ஆகும். பேருந்துப் பணியாளர்களுக்கு அவர்களது பணி நேரத்திலேயே ஓய்வு இடைவேளை விடுவதற்கு 1965-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் விதிகள் வகை செய்கின்றன. பேருந்துப் பணியாளர்களுக்கு ஓய்வு இடைவேளைகள் வழங்குவது அவசியமாயுள்ளதால், ஒரு பேருந்து செய்யும் பயணங்களின் எண்ணிக்கை குறைந்து போகிறது. தோராயமாக, ஒரு பேருந்து இயங்குகிற 18 மணி நேரத்தில், 2 மணி நேரம், பேருந்துப் பணியாளர்களுக்கான ஓய்வு இடைவேளை நேரமாக அமைகிறது. இந்த அவசியம் காரணமாக, உரிய அளவுத் தொலைவிற்கும் பேருந்துகளால் பயணம் செய்வது இயலாமற் போகின்றது. 1965-66-ல் சென்னை மாநகரில் ஒரு பேருந்து நாள் ஒன்றுக்கு 137 மைல் ஓடியது. 1966-67-ல் அது நாள் ஒன்றுக்கு 137 மைலுக்கும் குறைவாக ஓடும் என்று தோன்றுகிறது. மேற்கூறிய நிலைமைகளை நோக்குமிடத்து, அவற்றைச் சீர் செய்ய இத்துறையால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது என்பது புலனாகும்.

(2) நெரிசல் நேரங்களில் போக்குவரத்தை சீர்ப்படுத்துவதன் அவசியம் எல்லா நகரப் போக்குவரத்து நிறுவனங்களுக்கும் உள்ளது. நெரிசல் நேரங்களில் கூடுதல் பேருந்துகள் விடவேண்டியுள்ளது. நெரிசல் நேரங்களில் நெரிசலைக் குறைக்கத் தனிப்பேருந்துகள் விடப்படுகின்றன. மாணவர்களுக்கான தனிப் பேருந்துகளும் விடப்படுகின்றன. இந்தப் போக்குவரத்துக்கள் மூலம் உரிய அளவு ஆதாயம் கிடைப்பதில்லை. பொதுமக்களின் நலனைக் கருதியே இவற்றை நடத்த வேண்டியுள்ளது.

(3) முழுவதும் ஆதாயங்களை எதிர்நோக்கியே புதிய வழித்தடங்கள் தெரிந்தெடுக்கப்படுவதில்லை. சென்னை மாநகரைச் சுற்றிலும் புதிய குடியிருப்புப் பகுதிகள், குடியிருப்பு இல்லத்தொகுதிகள் முதலியன ஏற்பட்டு வருகின்றன. அப்பகுதிகளில் குடியிருப்பவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, கூடுதலான வழித்தடங்களை இயக்க வேண்டியுள்ளது. அந்த வழித்தடங்கள் குறிப்பாக அவற்றின் தொடக்க நிலைகளில், உரிய ஆதாயம் அளிக்காது. ஆயினும், சமூகத் தேவையை முன்னிட்டு அவற்றை இயக்க வேண்டியுள்ளது.

(4) சென்னை மாநகரப் பேருந்துப் போக்குவரத்துப் பணிகளில் பேருந்து நிற்கும் இடங்கள் பல உள்ளன. அத்தகைய பல இடங்களில் வண்டிகளை நிறுத்த வேண்டியுள்ளது. போக்குவரத்து நெரிசல் காரணமாகவும் பல இடங்களில் பேருந்துகளை அடிக்கடி நிறுத்த வேண்டியுள்ளது. இக்காரணங்களால் டயர்களும், உதிரிப் பாகங்களும் பெருமளவுக்குத் தேய்ந்து போகின்றன. எனவே, நகரப் போக்குவரத்துக்களை நடத்துவதற்கு ஏற்படுகிற செலவு வெளியூர் போக்குவரத்துக்களை இயக்குவதற்கு ஏற்படுகிற செலவைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. ஆனால் வருவாயைப் பொருத்த மட்டில் நகரப் போக்குவரத்து மூலம் கிடைக்கும் வருவாய் வெளியூர்ப் போக்குவரத்தால் கிடைக்கும் வருவாயை விடக் குறைவாகவே உள்ளது.





(5) கீழ்க்கண்ட இனங்களின் கீழ் துறைக்குப் பெருமளவுக்குச் செலவு ஏற்படுகின்றது :—

(அ) எரிப்பொருள் செலவு ;

(ஆ) மோட்டார் வண்டி வரிகள் ;

(இ) பழுது பார்த்தலும், சீர்செய்தலும் ;

(ஈ) டயர்களும், ட்யூப்களும் ;

(உ) தொழிலாளர்களின் ஊதியம்.

கடந்த சில ஆண்டுகளில் மேற்சொன்ன தலைப்புகளின் கீழ் செலவு பெருகியுள்ளது. விலைகள் அதிகரித்து விட்டதும், தொழிலாளர் களுக்கு கூடுதலான படிகள் முதலியன வழங்கியதும் அதற்குக் காரணங்களாகும். எடுத்துக்காட்டாக, 1964–65 ஆண்டுடன் ஒப்பு நோக்கு கையில், 1965–66-ல் கீழ்க்கண்ட இனங்கள் காரணமாகச் செலவு பெருகியுள்ளது :—

(ரூபாய் லட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| (அ) | 1—3—65 முதல் 1—7—65 வரை அதிகரிக்க அகவிலைப்படி வழங்கியது .. | 11·15 |
| (ஆ) | 1965–66-ல் கடுவேக டீசல் எண்ணெய் விலைகள் அதிகரித்தது .. .. .. | 5·03 |
| (இ) | மூலதனத்தின் மீதான வட்டி $5\frac{3}{4}$ சதவீதத்திலிருந்து $6\frac{1}{2}$ சதவீதமாக அதிகரித்த வகையில் .. .. .. .. .. | 3·57 |
| (ஈ) | அகவிலைப்படி வீதங்கள் அதிகரித்ததின் விளைவாக தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கான உதவித் தொகையில் அதிகரிப்பு .. .. .. .. .. | 0·70 |
| | மொத்தம் .. | 20·45 |

“மோட்டார் வண்டி வரிகள், தொழிலாளர்களின் ஊதியங்கள்” என்ற தலைப்புகளின் கீழ் மிகக் குறைந்த அளவுக்கே சிக்கனம் செய்ய இயலும். ஏனைய செலவினங்களில செலவைக் குறைக்க இத் துறை தன்னால் ஆனதையெல்லாம் செய்து வருகிறது.

(6) நகரப் போக்குவரத்துக்களில் பல்வேறு வழித்தடங்களின் மூலம் கிடைக்கிற வருவாய் குறித்து திங்கள்தோறும் ஆய்வு செய்யப்படுகினறது. வருவாயைப் பெருக்குவதற்காக மாறுதல்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அடிக்கடி வழித்தடங்கள் பிற முக்கிய இடங்களுக்கு நீட்டிக்கப்படுகின் றன. சில சமயங்களில் சாலைகளில் ஓட்டப்படும் பேருந்துகளின் எண் ணிக்கை குறைக்கப்படுகிறது. வழித்தடங்கள் மூலம் கிடைக்கும் வரு வாயைப் பெருக்குவதில் இத்துறை தொடர்ந்து நாட்டம் செலுத்து கின்றது.

**A.—**

(*a*) The matter has been examined by Government.

(*b*) The reasons for losses and the efforts made by the Madras State Transport Department to economise expenditure are as follows :—

During the years from 1962–63 to 1965–66 the Madras city services of the Madras State Transport Department have sustained losses. The loss during the year 1965–66 was Rs. 33.91

lakhs as against Rs. 23.88 lakhs in the previous year (1964-65). The reasons for the losses and the efforts made by the department to economise expenditure are mentioned below :—

(1) If the operation of a bus is to be economic it has to do a minimum mileage so as to earn the fixed costs as well as the variable costs of operation of the minimum mileage. Based on the present receipts and expenditure, it has been worked out that the economic mileage for operation of buses in Madras city is 146 miles per bus per day. The average mileage done by the buses in the Madras city is only 135 miles per bus per day. When buses are not able to do the economic mileage loss is inevitable. It has not been possible to increase the mileage done by the buses due to difficult traffic conditions and the necessity for complying with the provisions of the Motor Transport Workers' Rules, 1965. The number of vehicles using the roads in the Madras city has been increasing rapidly during the last few years. There are various types of vehicles using the road, e.g., taxies, lorries, private vehicles, auto-rickshaws, etc. As the number of vehicles using the roads is great, there is heavy congestion on the roads. The result is that the speed of the vehicles of the department is not as much as it would be otherwise. Drivers have to apply the brakes at several points and on several occasions. During the course of the trips the vehicles have to be stopped at several signal points. All these difficulties in operating vehicles are 'difficult traffic conditions' referred to above. The Motor Transport Workers' Rules, 1965 provide for giving period of rest to the crew during their hours of work. Because of the necessity to give periods of rest to the crew, the number of trips which a vehicle makes is reduced. Roughly, in a period of 18 hours of operation of a vehicle, 2 hours are consumed by rest given to the crew. Because of this necessity, a vehicle is unable to make as much mileage as it would otherwise do. The average vehicle mileage done in Madras city during the year 1965-66 was 137 and during the year 1966-67 it is likely to be less than 137. The conditions detailed above are such that no remedial measures can be taken by the department.

(2) Necessity for clearing traffic during peak hours is a problem which is common to all city undertakings. During peak hours, additional buses have to be operated and shuttle services are operated. Students specials are also operated. All these services are not wholly remunerative. They have to be continued in the interest of the public.

(3) The choice of new routes is not made entirely with an eye on profits. New residential areas, housing colonies, etc., are springing around the Madras city. Additional routes have to be operated in order to cater to the needs of the population living in those areas. Those routes, especially, in their initial stages will not be remunerative but they have to be operated as a social necessity.



(4) In city services, there are a number of bus stops. Vehicles have to be stopped at several bus stops. They have also to be stopped frequently because of traffic congestion. Because of these reasons, there is greater wear and tear of tyres and spare parts. Expenditure on operation of city services is accordingly higher than that of mofussil services while the revenue brought in by the city services is not as much as the revenue brought in by the mofussil services.

(5) Bulk of the expenditure of the department is under the following heads :—

(a) Cost of fuel;

(b) Motor Vehicles Taxes;

(c) Repairs and servicing;

(d) Tyres and tubes; and

(e) Wages of workers.

During the last few years there has been increase of expenditure under the above heads due to increase in prices and additional allowances, etc., granted to the workers. For example during the year 1965-66, as compared to the year 1964-65, there were increased expenditure on account of the following items :—

| | (RUPEES IN LAKHS). |
|---|---|
| (a) Payment of increased dearness allowance from 1st March 1965 to 1st July 1965. | 11·15 |
| (b) Increase in rates of high speed diesel oil during 1965-66. | 5·03 |
| (c) Increase in interest on capital from 5¾ per cent to 6½ per cent. | 3·57 |
| (d) Increase in contribution to Employees' Provident Fund consequent on the enhancement of rates of dearness allowance. | 0·70 |
| Total .. | 20·45 |

Very little economy is possible under the heads "Motor Vehicles Taxes and Wages of workers". The department is striving its best to economise expenditure under the other heads of expenditure.

(6) A review of the earnings of the various routes in the city services is done monthly. Changes are introduced in order to improve the earnings. Often routes are extended to other important places. Sometimes, the number of buses put on the road are reduced. The question of making routes earn better is constantly kept in view by the department.

## பிற்சேர்க்கைகள்

[158—174-ம் பக்கங்கள் வரையிலுள்ள உரையைக் காண்க.]

### பிற்சேர்க்கை I.

1967-68-ல் நிலக் கையகப்படுத்தும் வேலைக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண். (1) | மாவட்டத்தின் பெயர். (2) | தாசில்தார். (3) | மேல்நிலை எழுத்தர். (4) | கீழ்நிலை எழுத்தர். (5) | தட்டச்சர். (6) | வருவாய்த் துறை சிறப்பு ஆய்வாளர் (7) | நில அளவை செய்பவர்கள். (8) | நிறுபாசன ஓவியர். (9) | வரைவாளர். (10) | தட்டச்சர் எழுத்தர். (11) | மேஸ்திரி. (12) | கடைநிலை ஊழியர். (13) | சங்கிலி அளவை செய்பவர். (14) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வட ஆர்க்காடு .. .. | 4 | 8 | 4 | 4 | 7 | 4 | .. | .. | .. | .. | 4 | 4 |
| 2 | தென்னார்க்காடு .. .. | 4 | 7 | 4 | 3 | 10 | 4 | .. | 1 | 1 | .. | 8 | 8 |
| 3 | இராமநாதபுரம் .. .. | 3 | 6 | 1 | 3 | 9 | 5 | 1 | 1 | .. | 1 | 7 | 8 |
| 4 | செங்கற்பட்டு .. .. | 4 | 5 | 2 | 4 | 6 | 4 | .. | .. | .. | .. | 6 | 4 |
| 5 | திருநெல்வேலி .. .. | 4 | 5 | 5 | 4 | 8 | 4 | .. | .. | .. | .. | 8 | 8 |
| 6 | மதுரை .. .. | 4 | 5 | 4 | 4 | 8 | 4 | — | .. | .. | .. | 8 | 8 |
| 7 | திருச்சிராப்பள்ளி .. .. | 5 | 5 | .. | 4 | 7 | 5 | .. | .. | .. | .. | 6 | 5 |
| 8 | தஞ்சாவூர் .. .. | 4 | 5 | 4 | 4 | 4 | 4 | .. | .. | .. | .. | 4 | 8 |
| 9 | கோயம்புத்தூர் .. .. | 3 | 6 | 3 | 3 | 6 | 3 | .. | . | .. | .. | 6 | 6 |
| 10 | கன்னியாகுமரி .. .. | .. | 1 | .. | .. | 1 | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| 11 | சேலம் .. .. | 4 | 3 | 3 | 3 | 7 | 3 | .. | 1 | .. | .. | 3 | 6 |
| 12 | தருமபுரி .. .. | 2 | 2 | 1 | 2 | 4 | 1 | .. | 1 | .. | .. | .. | 2 |
| | மொத்தம் .. | 41 | 58 | 31 | 38 | 77 | 42 | 1 | 4 | 1 | 1 | 60 | 68 |



### பிற்சேர்க்கை II

அரிசனங்களுக்கு வீட்டுமனைக்காக கையகப்படுத்திய நிலப் பரப்பைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண். (1) | மாவட்டத்தின் பெயர். (2) | 1956–61 இரண்டாவது திட்டக் கால அளவு. (3) | 1961–66 மூன்றாவது திட்டக் கால அளவு. (4) | 1966–67. (5) |
|---|---|---|---|---|
| | | ஏ. செ. | ஏ. செ. | ஏ. செ. |
| 1 | செங்கற்பட்டு .. .. .. .. .. .. | 174·23 | 335·42 | 85·39 |
| 2 | வட ஆர்க்காடு .. .. .. .. .. .. | 648·38 | 839·76 | 119·39 |
| 3 | தென் ஆர்க்காடு .. .. .. .. .. | 365·52 | 1,169·73 | 1,775·36 |
| 4 | தஞ்சாவூர் .. .. .. .. .. .. | 334·32 | 395·46 | 85·19 |
| 5 | திருச்சிராப்பள்ளி .. .. .. .. .. | 297·16 | 710·03 | 129·78 |
| 6 | மதுரை .. .. .. .. .. .. .. | 255·61 | 497·70 | 80·53 |
| 7 | இராமநாதபுரம் .. .. .. .. .. | 408·48 | 880·76 | 176·33 |
| 8 | திருநெல்வேலி .. .. .. .. .. | 210·92 | 484·99 | 99·48 |
| 9 | கன்னியாகுமரி .. .. .. .. .. .. | 24·86 | 41·71 | 2·15 |
| 10 | சேலம் .. .. .. .. .. .. | 230·95 | 345·17 | 159·19 |
| 11 | தருமபுரி .. .. .. .. .. .. | .. | 15·97 | 96·46 |
| 12 | கோயம்புத்தூர் .. .. .. .. .. | 179·62 | 598·47 | 125·09 |
| 13 | நீலகிரி .. .. .. .. .. .. .. | 36·85* | .. | .. |
| | மொத்தம் .. | 3,146·89 | 6,209·20 | 2,934·34 |

* மலைப்பகுதிகளில் நிலத்தை கையகப்படுத்துவதற்கு போதிய வசதிகள் இல்லை.

## பிற்சேர்க்கைகள்

[158—174-ம் பக்கங்கள் வரையிலுள்ள உரையைக் காண்க.]

### பிற்சேர்க்கை I.

*1967-68-ல் நிலக் கையகப்படுத்தும் வேலைக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண். (1) | மாவட்டத்தின் பெயர். (2) | தாசில்தார். (3) | மேல்நிலை எழுத்தர். (4) | கீழ்நிலை எழுத்தர். (5) | தட்டச்சர். (6) | வருவாய்த் துறை சிறப்பு ஆய்வாளர். (7) | நில அளவை செய்பவர்கள். (8) | இருப்பாசன ஓவியர். (9) | வரைவாளர். (10) | தட்டச்சர் எழுத்தர். (11) | மேஸ்திரி. (12) | கடைநிலை ஊழியர். (13) | சங்கிலி அளவை செய்பவர். (14) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வட ஆர்க்காடு .. .. | 4 | 8 | 4 | 4 | 7 | 4 | .. | .. | .. | .. | 4 | 4 |
| 2 | தென்னார்க்காடு .. .. | 4 | 7 | 4 | 3 | 10 | 4 | .. | 1 | 1 | .. | 8 | 8 |
| 3 | இராமநாதபுரம் .. .. | 3 | 6 | 1 | 3 | 9 | 5 | 1 | 1 | .. | 1 | 7 | 8 |
| 4 | செங்கற்பட்டு .. .. | 4 | 5 | 2 | 4 | 6 | 4 | .. | .. | .. | .. | 6 | 4 |
| 5 | திருநெல்வேலி .. .. | 4 | 5 | 5 | 4 | 8 | 4 | .. | .. | .. | .. | 8 | 8 |
| 6 | மதுரை .. .. | 4 | 5 | 4 | 4 | 8 | 4 | — | .. | .. | .. | 8 | 8 |
| 7 | திருச்சிராப்பள்ளி .. .. | 5 | 5 | .. | 4 | 7 | 5 | .. | .. | .. | .. | 6 | 5 |
| 8 | தஞ்சாவூர் .. .. | 4 | 5 | 4 | 4 | 4 | 4 | .. | .. | .. | .. | 4 | 8 |
| 9 | கோயம்புத்தூர் .. .. | 3 | 6 | 3 | 3 | 6 | 3 | .. | | .. | .. | 6 | 6 |
| 10 | கன்னியாகுமரி .. .. | .. | 1 | .. | .. | 1 | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| 11 | சேலம் .. .. | 4 | 3 | 3 | 3 | 7 | 3 | .. | 1 | .. | .. | 3 | 6 |
| 12 | தருமபுரி .. .. | 2 | 2 | 1 | 2 | 4 | 1 | .. | 1 | .. | .. | .. | 2 |
| | மொத்தம் .. | 41 | 58 | 31 | 38 | 77 | 42 | 1 | 4 | 1 | 1 | 60 | 68 |



### பிற்சேர்க்கை II

அரிசனங்களுக்கு வீட்டுமனைக்காக கையகப்படுத்திய நிலப் பரப்பைக் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண். (1) | மாவட்டத்தின் பெயர். (2) | 1956–61 இரண்டாவது திட்டக் கால அளவு. (3) | 1961–66 மூன்றாவது திட்டக் கால அளவு. (4) | 1966–67. (5) |
|---|---|---|---|---|
| | | ஏ. செ. | ஏ. செ. | ஏ. செ. |
| 1 | செங்கற்பட்டு .. .. .. .. .. .. | 174·23 | 335·42 | 85·39 |
| 2 | வட ஆர்க்காடு .. .. .. .. .. .. | 648·38 | 839·76 | 119·39 |
| 3 | தென் ஆர்க்காடு .. .. .. .. .. | 365·52 | 1,169·73 | 1,775·36 |
| 4 | தஞ்சாவூர் .. .. .. .. .. .. | 334·32 | 395·46 | 85·19 |
| 5 | திருச்சிராப்பள்ளி .. .. .. .. .. | 297·16 | 710·03 | 129·78 |
| 6 | மதுரை .. .. .. .. .. .. .. | 255·61 | 497·70 | 80·53 |
| 7 | இராமநாதபுரம் .. .. .. .. .. | 408·48 | 880·76 | 176·33 |
| 8 | திருநெல்வேலி .. .. .. .. .. | 210·92 | 484·99 | 99·48 |
| 9 | கன்னியாகுமரி .. .. .. .. .. .. | 24·86 | 41·71 | 2·15 |
| 10 | சேலம் .. .. .. .. .. .. | 230·95 | 345·17 | 159·19 |
| 11 | தருமபுரி .. .. .. .. .. .. | .. | 15·97 | 96·46 |
| 12 | கோயம்புத்தூர் .. .. .. .. .. | 179·62 | 598·47 | 125·09 |
| 13 | நீலகிரி .. .. .. .. .. .. | 36·85* | .. | .. |
| | மொத்தம் .. | 3,146·89 | 6,209·20 | 2,934·34 |

* மலைப்பகுதிகளில் நிலத்தை கையகப்படுத்துவதற்கு போதிய வசதிகள் இல்லை.

[1968 மார்ச் 15

22. குலசேகரப்பட்டினத்தில் பனை ஓலையிலிருந்து பயன்படக்கூடிய சாமான்கள் தயாரிப்பதற்குப் பயிற்சி நிலையம்.

23. வள்ளியூரில் பிரம்புப் பொருட்கள் தயாரிப்பதற்குப் பயிற்சி நிலையம்.

24. திருச்சி தோல் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

25. தண்டரை கிராமத்தில் மர விளையாட்டுக் கருவிகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

26. சென்னையில் தையற் பயிற்சி நிலையம்.

27. உண்ணியூரில் பாய் நெசவு உற்பத்தி நிலையம்.

28. ஆண்டிக்காட்டில் பனை ஓலைப் பொருட்கள் பயிற்சி நிலையம்.

29. வாணியம்பாடி காலணி தயாரிப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

30. திண்டுக்கல் தோல் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

**கதர் வாரியம்—**

31. வீரப்பூர் தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம்.

32. கீழ வீராணம் பனை ஓலைப் பொருள் பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

33. ராதாபுரம் சுண்ணாம்புக் காளவாய்ப் பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில சங்கம், திருநெல்வேலி.

34. கீழ வீராணம், சுண்ணாம்புக் காளவாய் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

35. ஏருவாடி செங்கற் சூளை பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

36. ஈரத்தூரில் சுண்ணாம்புக் கிளிஞ்சல் பணியாளர்கள் கூட்டுறவுத் தொழில் சங்கம், கன்னியாகுமரி.

37. விளானூர் செங்கற் சூளை-ஓடு பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், தஞ்சாவூர்.

38. துலுக்கங்குளம் செங்கற் சூளை பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி மாவட்டம்.

39. கரம்பகுடி, எண்ணெய் பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம் திருச்சிராப்பள்ளி.

40. புளியங்குடி செங்கற் சூளை பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருச்சிராப்பள்ளி.

41. மணக்கால் அய்யாம்பேட்டை செங்கற் சூளை—ஓடு பணியாளர்கள் அரிசன கூட்டுறவுத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

42. இருப்புளிக் பாய் நெசவாளர் கூட்டுறவுத் தொழில் சங்கம், சேலம்.

43. இராமநாதபுரம் மேல்ராஜகுலராமன் (கிராமத்தில்) அயன் புரத்தில் சக்கிலிகள் வேலை செய்வதற்குப் பொதுக் கூடாரம் ஒன்று கட்டுதல்.

44. அய்யனூர்குளம் செங்கல் தயாரிப்போர் கூட்டுறவுத் தொழில் சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

45. ஸ்ரீமுஷ்ணம் கைக்குத்தலரிசி பணியாளர்கள் கூட்டுறவுத் தொழில் சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.



1968 மார்ச் 15]

46. பெரியநாகலூர் செங்கல் சூளைப் பணியாளர்கள் கூட்டுறவுத் தொழில் சங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

47. செக்கிபாளையம் சுண்ணாம்புக் கல் பணியாளர்கள் கூட்டுறவுத் தொழில் சங்கம், வட ஆர்க்காடு மாவட்டம்.

48. கத்தாளம்பட்டி கிராம பனை ஓலை குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி மாவட்டம்.

49. தோட்டப்பட்டி தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம், கோயம்புத்தூர்.

50. வளையம்பட்டு தோல் பதனிடும் அரிசன கூட்டுறவுச் சங்கம், வட ஆர்க்காடு மாவட்டம்.

51. பெரிய கிருஷ்ணபுரம் கைக்குத்தலரிசி அரிசன (மகளிர்) கூட்டுறவுச் சங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

52. சென்னிபுரம் செங்கற்சூளை பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், இராமநாதபுரம் மாவட்டம்.

53. ராஜன் நகர் தோல் பதனிடும் பணி கூட்டுறவுச் சங்கம், கோயம்புத்தூர்.

54. கோயிலூர் கைக்குத்தலரிசி பணியாளர்கள் அரிசன கூட்டுறவுச் சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

55. நாங்குனேரி செங்கற்சூளை பணியாளர்கள் அரிசன கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி.

56. துத்திவிளை செங்கற்சூளை-ஓடுபணியாளர்கள் அரிசன கூட்டுறவுச் சங்கம், கன்னியாகுமரி.

## 1967-68.

**மகளிர் நலத் துறை—**

1. விற்பனை நிலையம், ஊட்டி.

2. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கணேசபுரத்தில் தையல் வேலைப் பிரிவு.

3. கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழ்கடையத்தில் பனை ஓலைப் பொருள் தயாரிப்போர் நிலையம்.

4. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ராஜானூரில் பிரம்புத் தொழில் நிலையம்.

5. மதுரை மாவட்டத்தில் மங்கலக் கொம்பு தயாரிப்புப் பிரிவு.

6. சேலம், பொன்னம்மாபேட்டையிலுள்ள தையல் வேலை நிலையம.

**தொழில் துறை—**

7. மதுரை மாவட்டத்தில் உள்ள கம்பத்தில் தையல்-பூவேலைப் பயிற்சி நிலையம்.

8. மதுரை மாவட்டத்திலுள்ள சத்திரப்பட்டியில் பனை ஓலை-மூங்கில் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

9. இராமநாதபுரம் மாவட்டத்தில் விருதுநகரில் தோலினால் செய்யப் பட்ட பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

10. தையல் வேலைப் பயிற்சி நிலையம், குன்னூர்.

[1968 மார்ச் 15

11. நாமக்கல் தோல் தொழில் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

12. அரசின் செங்கற்சூளை பிரிவு, பரமக்குடி.

13. ஈரோடு தோல் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

14. பெலாக்குப்பத்தில் பாய் நெய்யும் பயிற்சி நிலையம்.

15. கயத்தாறு கூடை முடைவோர் கூட்டுறவுச் சங்கத்திற்காக தொழிற் கூடாரம் கட்டுவதற்காக மானியம்.

16. அருப்புக்கோட்டை மூங்கில் பணியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்காக மானியம்.

17. திருவண்ணாமலை, தோலினால் செய்த பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

18. இராப்பள்ளி பாய் பின்னுவோர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

19. குன்னூர் தோல் பணியாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

20. மேலநீலிதநல்லூர் கூடை முடைவோர் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

21. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மார்த்தாண்டத்தில் தையல் வேலைப் பயிற்சி நிலையம்.

22. குலசேகரப்பட்டினத்தில் பனை ஓலையிலிருந்து பயன்படக்கூடிய சாமான்கள் தயாரிப்பதற்குப் பயிற்சி நிலையம்.

23. வள்ளியூரில் பிரம்புப் பொருட்கள் தயாரிப்பதற்குப் பயிற்சி நிலையம்.

24. திருச்சி தோல் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

25. தண்டரை கிராமத்தில் மர விளையாட்டுக் கருவிகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம்.

26. சென்னையில் தையற் பயிற்சி நிலையம்.

27. உண்ணியூரில் பாய் நெசவு உற்பத்தி நிலையம்.

28. அந்திக்காட்டில் பனை ஓலைப் பொருட்கள் பயிற்சி நிலையம்.

29. வாணியம்பாடி காலணி தயாரிப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

30. திண்டுக்கல் தோல் பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்.

கதர் வாரியம்—

31. வீரப்பூர் தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம்.

32. கீழ வீராணம் பனை ஓலைப் பொருள் பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில்கள் சங்கம், திருநெல்வேலி.

33. ராதாபுரம் சுண்ணாம்புக் காளவாய் பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

34. கீழ வீராணம் சுண்ணாம்புக் காளவாய் கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

35. வருவாடி செங்கற்சூளை பணியாளர்கள் அரிசன கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி.

36. கீரத்தூரில் சுண்ணாம்புக் கிளிஞ்சல் பணியாளர்கள் கூட்டுறவுத் தொழில் சங்கம், கன்னியாகுமரி.

37. விளானூர் செங்கற் சூளை-ஓடு பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், தஞ்சாவூர்.



1968 மார்ச் 15]

38. துலுக்கன்குளம் செங்கற்சூளை பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருநெல்வேலி மாவட்டம்.

39. கரம்பகுடி எண்ணெய் பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருச்சிராப்பள்ளி.

40. புளியங்குடி செங்கற்சூளை பணியாளர்கள் அரிசன கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம், திருச்சிராப்பள்ளி.

41. மணக்கால் அய்யாம்பேட்டை செங்கற்சூளை-ஓடு பணியாளர்கள் அரிசன கூட்டுறவுத் தொழிற் சங்கம், திருநெல்வேலி.

42. இருப்புளி பாய் நெசவாளர் கூட்டுறவுத் தொழில் சங்கம், சேலம்.

43. இராமநாதபுரம் மேல்ராஜகுலராமன் (கிராமத்தில்) அயன்புரத்தில் சக்கிலிகள் வேலை செய்வதற்குப் பொதுக் கூடாரம் ஒன்று கட்டுதல்.

44. அய்யனார்குளம் செங்கல் தயாரிப்போர் கூட்டுறவுத் தொழில் சங்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

45. ஸ்ரீமுஷ்ணம் கைக்குத்தலரிசி பணியாளர்கள் கூட்டுறவுத் தொழில் சங்கம், வட ஆர்க்காடு மாவட்டம்.

46. பெரியநாகலூர் செங்கல்சூளைப் பணியாளர்கள் கூட்டுறவுத்தொழில் சங்கம், திருச்சி மாவட்டம்.

47. செக்கிபாளையம் சுண்ணாம்புக்கல் பணியாளர்கள் கூட்டுறவுத் தொழில் சங்கம், வடஆர்க்காடு மாவட்டம்.

48. கத்தாளம்பட்டி கிராம பனைஓலை குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி மாவட்டம்.

49. தோட்டப்பட்டி தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம், கோயம் புத்தூர்.

50. வளையம்பட்டு தோல் பதனிடும் அரிசன கூட்டுறவுச் சங்கம், வட ஆர்க்காடு மாவட்டம்.

51. பெரிய கிருஷ்ணாபுரம் கைக்குத்தலரிசி அரிசன (மகளிர்) கூட்டுறவுச் சங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

52. சென்னிபுரம் செங்கற்சூளை பணியாளர்கள் அரிசன கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், இராமநாதபுரம் மாவட்டம்.

53. ராஜன்நகர் தோல் பதனிடும் பணி கூட்டுறவுச் சங்கம், கோயம் புத்தூர்.

54. கோயிலூரி கைக்குத்தலரிசி பணியாளர்கள் அரிசன கூட்டுறவுச் சங்கம், தென் ஆர்க்காடு.

55. நாங்குனேரி செங்கற்சூளை பணியாளர்கள் அரிசன கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி.

56. துத்திவிளை செங்கற்சூளை ஓடு பணியாளர்கள் அரிசன கூட்டுறவுச் சங்கம், கன்னியாகுமரி.

57. ஆதியூர், முருகம்பட்டி, தின்னனூர் ஆகிய இடங்களிலுள்ள செங்கற் சூளை-ஓடு பணியாளர்கள் அரிசன கூட்டுறவுச் சங்கம், வடஆர்க்காடு.

58. ஊராம்பட்டி, செங்கற்சூளை பணியாளர்கள் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், இராமநாதபுரம்.

59. மண்ணமங்கலம் தோல் பதனிடுவோர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், திருச்சிராப்பள்ளி.

60. பாரதி தோல் பதனிடுவோர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், திருச்சிராப்பள்ளி.

[1968 மார்ச் 15

61. காந்திகுப்பம் கைக்குத்தலரிசி அரிசன பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம், தென் ஆர்க்காடு.

62. கீழவீராணம் செங்கற்சூளை பணியாளர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி.

63. மேட்டுப்பாளையம் செங்கற்சூளை பணியாளர்கள் அரிசன கூட்டுறவுச் சங்கம், கோயம்புத்தூர்.

64. கதலி தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம், தென் ஆர்க்காடு.

65. தேனி தோல் பதனிடுவோர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், மதுரை.

66. பங்களப்பட்டி செங்கற்சூளை பணியாளர் அரிசன கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், மதுரை.

67. அத்தமணஞ்சேரி செங்கற்சூளை பணியாளர் அரிசன கூட்டுறவுச் சங்கம், செங்கற்பட்டு.

68. பரமித்தநாங்கல் தோல் பதனிடுவோர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம், தென் ஆர்க்காடு.

## பழங்குடி மக்கள்.

### 1966-67.

**மகளிர் நலத் துறை—**

1. கீழ்கோத்தகிரியில் உள்ள தையல் வேலைப் பிரிவு.

தொழில்-வாணிகத் துறை இயக்குநர்—

2. திருச்சிகடியில் உள்ள (நீலகிரி மாவட்டம்) சிவப்பு மட்பாண்டங்கள் செய்யும் பயிற்சி—தயாரிப்பு நிலையம்.

3. ஜம்னா மருதூரில் உள்ள ஆதாரத் தச்சு வேலை-கொல்லுப்பட்டறை வேலையில் பயிற்சி அளிக்கும் நிலையம்.

4. நெடுங்குன்றம், அட்டப்பாடி ஆகிய இடங்களில் உள்ள பிரம்பு-மூங்கில் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தையல் வேலை நிலையம்.

5. பார்த்திபனூரில் உள்ள பாய் நெசவுப் பயிற்சி நிலையம்.

**கதர் வாரியம்—**

6. ஜம்னா மருதூரில் உள்ள தேனீ வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம்.

7. நீலகிரி மாவட்டம் குன்னூரில் ஸ்ரீசற்குரு ராஜயோக ஆசிரமத்தில் உள்ள பழங்குடி மக்கள் தங்கிப் பயிலும் பள்ளியில் தச்சுவேலை-மூங்கில் வேலையில் பயிற்சி—தயாரிப்பு நிலையம்.

8. வட ஆர்க்காடு மாவட்டம் ஏலகிரி மலையில் தேனீ வளர்ப்புத் தொழில்.

### 1967-68.

**மகளிர் நலத் துறை—**

1. கீழ்கோத்தகிரியில் உள்ள தையல் வேலைப் பிரிவு.



1968 மார்ச் 15]

**தொழில் துறை—**

2. திருச்சிகடியில் உள்ள சிவப்பு மட்பாண்டங்கள் செய்யும் பயிற்சி—தயாரிப்பு நிலையம்.

3. ஜம்னமருதூரில் உள்ள ஆதாரத் தச்சு வேலை-கொல்லுப்பட்டறை வேலையில் பயிற்சி அளிக்கும் நிலையம்.

## குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர்.

### 1966-67.

**மகளிர் நலத் துறை—**

1. சேலம் மாவட்டம், முத்தம்பட்டியில் கயிறு தயாரிப்புப் பிரிவு.

2. திருநெல்வேலி மாவட்டம், தேவர்குளத்தில் ஆயத்த உடைகள் தைக்கும் நிலையம்.

**தொழில் துறை—**

3. பார்த்திபனூரில் பாய் நெசவுப் பயிற்சி நிலையம்.

4. அஜீஸ் நகரில் கயிற்றுப் பணி பயிற்சி நிலையம்.

5. பம்மல் செட்டில்மென்டில் பாய் நெசவு-தையல் வேலை நிலையம்.

### 1967-68.

**மகளிர் நலத் துறை—**

1. சேலம் மாவட்டம், முத்தம்பட்டியில் கயிறு தயாரிப்புப் பிரிவு.

2. திருநெல்வேலி மாவட்டம், தேவர்குளத்தில் தையல் வேலை ஆயத்த உடைகள் தைக்கும் நிலையம்.

**தொழில் துறை—**

பார்த்திபனூரில் பாய் நெசவுப் பயிற்சி நிலையம்.

அஜீஸ் நகரில் கயிற்றுப் பணி பயிற்சி நிலையம்.

பம்மல் செட்டில்மென்டில் பாய் நெசவு-தையல் வேலை நிலையம்.

## பிற்சேர்க்கை V.

அரிஜனங்கள் பயனடைவதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் திற்குப் பிறகு (1966-67)-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களின் பட்டியல் :—

| தொடர் எண். | சங்கத்தின் பெயர். | மாவட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | கே. பெருமாள்பட்டி .. .. .. | மதுரை. |
| 2 | விரகனூர் .. .. .. .. | ,, |
| 3 | எம்.எம்.ஆர் சுப்பராம நகர் .. .. | ,, |
| 4 | ஷெனாய்நகர் .. .. .. .. | ,, |
| 5 | அவனியாபுரம் .. .. .. .. | ,, |

| தொடர் எண். | சங்கத்தின் பெயர். | மாவட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 6 | குன்னூர் | ராமநாதபுரம். |
| 7 | கோட்டையூர் | ,, |
| 8 | ராமசாமியாபுரம் | ,, |
| 9 | கோபாலபுரம் | ,, |
| 10 | பெரும்பச்சேரி | ,, |
| 11 | மணியம்பட்டி | ,, |
| 12 | காரை | வடஆர்க்காடு. |
| 13 | பள்ளிகொண்டா | ,, |
| 14 | செதுவாலை | ,, |
| 15 | மாதனூர் | ,, |
| 16 | ஏமச்சேரி | செங்கல்பட்டு. |
| 17 | சின்னாண்டிமடம் | ,, |
| 18 | மன்னஞ்சேரி | ,, |
| 19 | கல்லாடிப்பட்டு | ,, |
| 20 | சோமங்கலம் (மேலாத்தூர்) | செங்கல்பட்டு. |
| 21 | பனப்பட்டு | தென் ஆர்க்காடு. |
| 22 | முகையூர் | ,, |
| 23 | துணிசிரமேடு | ,, |
| 24 | சீ. தண்டேஸ்வர நல்லூர் | ,, |
| 25 | தில்லைவிடங்கன் | ,, |
| 26 | கொடியாலம் | ,, |
| 27 | தாதயன்பட்டி | சேலம். |
| 28 | மேல் கால் பாளையம் | ,, |
| 29 | சிக்கனாம்பட்டி | ,, |
| 30 | பொட்டிபுரம் | ,, |
| 31 | மணக்கால் | திருச்சிராப்பள்ளி. |
| 32 | அமிருதநாயர்நல்லூர் | ,, |
| 33 | திம்மராயசமுத்திரம் | ,, |
| 34 | ஆலக்குடி | தஞ்சாவூர். |
| 35 | வண்ணாரப்பேட்டை | ,, |
| 36 | சவரியார்கோயில் | ,, |
| 37 | பாளையூர் | ,, |
| 38 | நேமம் | ,, |



## பிற்சேர்க்கை VI

அரிஜனங்களுக்கான கூட்டுறவு நிலக் குடியேற்றச் சங்கங்களின் பட்டியல்.

| தொடர் எண்களும் சங்கத்தின் பெயரும். | ஒப்பளிக்கப்பட்ட நிதியுதவி — கடன். | ஒப்பளிக்கப்பட்ட நிதியுதவி — உதவித் தொகை. | பயிரிடும் பரப்பளவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ஏ. செ. |
| **செங்கற்பட்டு மாவட்டம்—** | | | |
| 1 தம்மனூர் | | | |
| 2 கரணைப் புதுச்சேரி | | | |
| 3 கருங்குழிப் பள்ளம் | 1,45,285 | 1,32,275 | 863·74 |
| 4 பொன்பாடி | | | |
| 5 நெமனூர் | | | |
| **வட ஆர்க்காடு மாவட்டம்—** | | | |
| 6 கெங்கவரம் | | | |
| 7 அய்பேடு | 77,588 | 73,338 | 576·05 |
| 8 பெருங்களத்தூர் | | | |
| **தென் ஆர்க்காடு மாவட்டம்—** | | | |
| 9 வேலூர் | | | |
| 10 மரவநத்தம் | | | |
| 11 தென் பொன் பரப்பை (திட்டம் I). | | | |
| 12 தென் பொன் பரப்பை (திட்டம் II), | | | |
| 13 ராயர்பாளையம் | | | |
| 14 கூகையூர் | 4,80,687 | 3,68,887 | 3,981·20 |
| 15 பொக்கம்பாடி | | | |
| 16 மூங்கில்பாடி | | | |
| 17 பங்காரம் | | | |
| 18 புல்லூர் | | | |
| 19 இண்டேலி | | | |
| 20 கிளியானூர் | | | |
| 21 திருவாமூர் | | | |

| தொடர் எண்களும் சங்கத்தின் பெயரும். | ஒப்பளிக்கப்பட்ட நிதியுதவி — கடன். | உதவித் தொகை. | பயிரிடும் பரப்பளவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ஏ.செ. |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்** | | | |
| 22 சிறுகுடி .. .. | 63,400 | 84,640 | 1,048·45 |
| 23 நெற்குணம் .. | | | |
| **தஞ்சாவூர் மாவட்டம்—** | | | |
| 24 பிச்சன்கோட்டம் .. | 69,087 | 40,737 | 269·56 |
| 25 கொடியாலம் பரவத்தூர். | | | |
| 26 சன்னுரப்பட்டி .. | | | |
| 27 சோளகம்பட்டி .. | | | |
| **ராமநாதபுரம் மாவட்டம்—** | | | |
| 28 தாரகனேந்தல் .. | 27,900 | 55,975 | 269·17 |
| 29 வேலங்குளம் .. | | | |
| 30 அருப்பனேந்தல் .. | | | |
| **மதுரை மாவட்டம்—** | | | |
| 31 கள்ளங்காடு .. | 1,96,750 | 1,44,000 | 1,314·00 |
| 32 கேசம்பட்டி .. | | | |
| 33 பூஞ்சுத்தி .. | | | |
| 34 கோட்டக்குடி .. | | | |
| 35 சின்னமநாய்க்கன்பட்டி | | | |
| 36 சந்தையூர் .. .. | | | |
| 37 கோபாலபுரம் .. .. | | | |
| **திருநெல்வேலி மாவட்டம்—** | | | |
| 38 கோட்டைக்காரன்குளம் | 1,36,825 | 1,21,565 | 775·96 |
| 39 பனங்குடி .. .. | | | |
| 40 கனந்தனேரி .. | | | |
| 41 பிடனுரி .. .. | | | |



| தொடர் எண்களும் சங்கத்தின் பெயரும். | ஒப்பளிக்கப்பட்ட நிதியுதவி — கடன். | உதவித் தொகை. | பயிரிடும் பரப்பளவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ | ஏ.செ. |
| **நீலகிரி மாவட்டம்—** | | | |
| 42 எருமாடு .. .. | 28,875 | 23,175 | 221·22 |
| 43 மாவனஹள்ளி .. | | | |
| **கோயம்பத்தூர் மாவட்டம்—** | | | |
| 44 சிக்கசம்பாளையம் .. | 1,03,906 | 87,214 | 919·24 |
| 45 பராங் நகர் .. | | | |
| 46 வடுகப்பட்டி .. | | | |
| 47 நெய்த்தல்புரம் | | | |
| **சேலம் மாவட்டம்—** | | | |
| 48 நாவலூர் .. .. | 4,62,965 | 37,550 | 1,723·48 |
| 49 நத்தக்கரை .. | | | |
| 50 சிறுவாச்சியூர் (திட்டம் I). | | | |
| 51 பெரியேரி .. .. | | | |
| 52 மண்மலை .. .. | | | |
| 53 தம்மன்பட்டி .. | | | |
| 54 உணத்தூர் .. | | | |
| 55 சிறுவாச்சியூர் (திட்டம் II). .. | | | |
| 56 சிங்கிபுரம் .. | | | |
| 57 புதுப்பட்டி N .. | | | |
| 58 சொக்கானூர் அக்ரஹாரம். (தொடங்கப்படவில்லை.) | | | |
| **தருமபுரி மாவட்டம்—** | | | |
| 59 மாந்தபள்ளி .. | 1,01,275 | 1,02,475 | 847·92 |
| 60 கக்கன்புரம் .. | | | |
| 61 தல்லி .. .. | | | |
| **பெரு மொத்தம் ..** | **18,94,543** | **16,09,782** | **12,809·99** |

[1968 மார்ச் 15

## பிற்சேர்க்கை VII

பழங்குடி மக்கள், அரிஜனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காக 1961-62-லிருந்து 1966-67 வரை செலவழித்த மொத்தத் தொகை, 1967-68-ல் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படும் தொகை, 1968-69-ம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை :—

| ஆண்டு. | | | செலவழித்த தொகை. (ரூ. இலட்சத்தில்). | | |
|---|---|---|---|---|---|
| 1961-62 | .. | .. | 363 | 82 | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம். |
| 1962-63 | .. | .. | 415 | 60 | |
| 1963-64 | .. | .. | 452 | 95 | |
| 1964-65 | .. | .. | 488 | 42 | |
| 1965-66 | .. | .. | 538 | 09 | |
| 1966-67 | .. | .. | 617 | 12 | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குப் பிறகு. |
| 1967-68 (அரசாங்கத்தால் முடிவு செய்யப்பட்ட திருத்த மதிப்பீடு). | | | 634 | 83 | |
| 1968-69 (அரசாங்கத்தால் முடிவு செய்யப் பட்ட திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு). | | | 651 | 21 | |

# தமிழக சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1968 மார்ச் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## I. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண்கள் 13-ம், 23-ம் ஒற்றி வைக்கப்படுகின்றன.

### இறவை இயந்திரங்களுக்கு மின் இணைப்பு

*228 வினா.—**திரு கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுராந்தகம் வட்டத்தில் 1965 முதல் 1967 மார்ச மாதம் வரை விவசாயத்திற்காக பம்பு செட்டுகளுக்கு மின்சாரக் கனெக்ஷன் கேட்டு எத்தனை பேர் மனு போட்டிருக்கிறார்கள் ?

(இ) இதில் எத்தனை பேர்களுக்கு மின்சார பம்பு செட்டு கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

(உ) என்ன காரணங்களுக்காக மற்றவர்களுக்கு கொடுக்கப்படவில்லை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) 1542.

(இ) 829.

(உ) எஞ்சியுள்ளவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்குரிய காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) மனு செய்தவர்கள் மின்சாரம் பெறவேண்டிய தங்கள் அமைப்புகளைத் தயாராக வைத்திருக்கவில்லை.

(2) ஒப்பளிக்கப்பட்ட வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளும் வரையில் மனுதாரர்களில் 50 சதவிகிதத்தினர் கூட, மின் இணைப்பைப் பயன்படுத்திக்கொள்ள முன் வரவில்லை.

(3) மின் இணைப்பு வேண்டியவர்கள் வருவாய்த்துறை அதிகாரிகளிடமிருந்து பாலாற்றுப் பாசனம் குறித்த சான்றிதழ்களைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம்.

(4) இதற்குமுன் எப்போதும் ஏற்பட்டிராத வகையில் 1966 நவம்பரில் வீசிய புயலால் விளைந்த சேதத்தைச் சரி செய்வதில் 3 மாத காலதாமதம்.

[1968 மார்ச் 15

## பிற்சேர்க்கை VII

பழங்குடி மக்கள், அரிஜனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காக 1961–62-லிருந்து 1966–67 வரை செலவழித்த மொத்தத் தொகை, 1967–68-ல் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படும் தொகை, 1968–69-ம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை :—

| ஆண்டு. | | | செலவழித்த தொகை. (ரூ. இலட்சத்தில்). | |
|---|---|---|---|---|
| 1961–62 | .. | .. | 363 82 | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம். |
| 1962–63 | .. | .. | 415 60 | |
| 1963–64 | .. | .. | 452 95 | |
| 1964–65 | .. | .. | 488 42 | |
| 1965–66 | .. | .. | 538 09 | |
| 1966–67 | .. | .. | 617 12 | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குப் பிறகு. |
| 1967–68 (அரசாங்கத்தால் முடிவு செய்யப்பட்ட திருத்த மதிப்பீடு). | | | 634 83 | |
| 1968–69 (அரசாங்கத்தால் முடிவு செய்யப் பட்ட திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு). | | | 651 21 | |

# தமிழக சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1968 மார்ச் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## I. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண்கள் 13-ம், 23-ம் ஒற்றி வைக்கப்படுகின்றன.

### இறவை இயந்திரங்களுக்கு மின் இணைப்பு

*228 வினா.—**திரு கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுராந்தகம் வட்டத்தில் 1965 முதல் 1967 மார்ச் மாதம் வரை விவசாயத்திற்காக பம்பு செட்டுகளுக்கு மின்சாரக் கனெக்ஷன் கேட்டு எத்தனை பேர் மனு போட்டிருக்கிறார்கள் ?

(இ) இதில் எத்தனை பேர்களுக்கு மின்சார பம்பு செட்டு கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

(உ) என்ன காரணங்களுக்காக மற்றவர்களுக்கு கொடுக்கப்படவில்லை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) 1542.

(இ) 829.

(உ) எஞ்சியுள்ளவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்குரிய காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) மனு செய்தவர்கள் மின்சாரம் பெறவேண்டிய தங்கள் அமைப்புகளைத் தயாராக வைத்திருக்கவில்லை.

(2) ஒப்பளிக்கப்பட்ட வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளும் வரையில் மனுதாரர்களில் 50 சதவிகிதத்தினர் கூட, மின் இணைப்பைப் பயன்படுத்திக்கொள்ள முன் வரவில்லை.

(3) மின் இணைப்பு வேண்டியவர்கள் வருவாய்த்துறை அதிகாரிகளிடமிருந்து பாலாற்றுப் பாசனம் குறித்த சான்றிதழ்களைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம்.

(4) இதற்குமுன் எப்போதும் ஏற்பட்டிராத வகையில் 1966 நவம்பரில் வீசிய புயலால் விளைந்த சேதத்தைச் சரி செய்வதில் 3 மாத காலதாமதம்.

[1968 மார்ச் 16

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மின்சார இணைப்பு கொடுக்கலாம் என்று சர்ட்டிபிகேட் வாங்கிய பிறகும் பம்ப் செட்டுகள் வைப்பதற்கு கடன் பெற்ற பிறகும் அந்த உரிய விவசாயிகளுக்கு, அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்த பிறகும் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. இதைப் பற்றி அதிகாரிகளுக்கு எழுதியும் எந்தவிதமான பதிலும் வரவில்லை. அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதுராந்தகத்தைப் பொறுத்தவரை அனுமதி தரப்பட்டு வேலை செய்யப்படவேண்டியவை 107 இருக்கின்றன. அனுமதி வழங்கப்பட்டிருப்பவை 207. திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆனால் அனுமதி வழங்கப்படவேண்டிய நிலையில் உள்ளவை 107. பரிசீலனையில் உள்ளவை 102. வருவாயிட்டு துரித இனங்களாக உள்ளவை மேலும் மின் இணைப்பு வழங்கப்பட்டால்தான் அனுமதிக்க முடியும் என்ற நிலையில் உள்ளவை 87. பரிசீலனையில் உள்ளவை 43. அனுமதிக்கப்பட்டவைகள் உடனடியாக நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மற்ற நிபந்தனைகள் எல்லாம் நிறைவேற்றக்கூடிய அளவில் மேற்கொள்ளப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், உடனுக்குடன் மின் இணைப்பு கொடுக்கமுடியாத நிலைமைக்குக் காரணம் போதுமான அளவிற்கு டிரான்ஸ்பார்மர் அல்லது ஒயர்கள் இதர சாமான்கள் இல்லாததுதான் காரணம் என்று சொல்லப்படுகிறதே அவைகளைப் போதுமான அளவிற்கு உடனடியாக வாங்குவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைகள் காரணமாக இருக்குமானால் இதைப்பற்றி கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். நான்கு, ஐந்து காரணங்களாக இருப்பதால் காலத்தாழ்வு ஏற்படுகிறது. இதைத் தவிர வேறு காரணங்களால் காலத்தாழ்வு எங்கெங்கே ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்டினால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே சகாதேவ கண்டர் :** உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார கனெக்ஷன் கொடுப்பதற்காக எஸ்டிமேட் தயாரிக்கும்போது இரண்டு கிராமங்களை சேர்த்துத் தயாரிக்கிறார்கள். ஒரு கிராமத்தில் இருப்பவர்கள் 10, 15 பம்பு செட்டுகள் வாங்கிப் போட்டுவிடுகிறார்கள். ஆனால் இன்னொரு கிராமத்தில் இருப்பவர்கள் ஒன்றுமே செய்யாமல் இருக்கிறார்கள். அப்படி அந்த கிராமமும் செய்தால்தான மின்சார கனெக்ஷன் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். ஆகையால் ஒரு கிராமத்தில் தேவைப்படுகிற மின்சாரம் 100 ஹார்ஸ் பவராக இருந்தால் அதற்காகத் தனியாக டிரான்ஸ்பார்மர் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே இரண்டு கிராமங்களையும் சேர்ப்பது என்பது அல்ல பிரச்சினை. 10 சதவிகிதம் ரெம்யுனரேடிவ் வருவாயாக இருக்கக்கூடிய நிலையில் இருந்தால் அதை எடுததுக்கொண்டால் நலமாக இருக்கும். அப்படி இல்லாவிட்டால் நஷ்டம் தான் ஏற்படும். ஆகையால் மின் இணைப்பு போதுமான அளவிற்கு வருகின்ற வரையில் 10 பேர்கள் இருந்து 5 பேர்கள் செய்து 5 பேர்கள் செய்யாமல் இருந்தாலும்கூட செய்யாமல் இருக்கும் 5 பேர்களையும் இணைத்துக் கொள்வதற்கு காலத்தாழ்வு ஏற்பட்டால் அவற்றை நிறைவேற்றுவதற்கு உறுப்பினர்கள் அங்கங்கே சென்று அறிவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்வார்களேயானால் உடனடியாக நிறைவேற்றக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

**திரு. எம். பூபதி :** விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுப்பதற்கு முட்டுக்கட்டையாக முன்பணம் கட்டுதல் போன்று பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. ஆகையால் அவற்றை நீக்கி சுலபமாக மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?



1968 மார்ச் 16]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முறைகள், திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். அவற்றில் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகள், அவற்றைத் தடுப்பதன் மூலம் ஏற்படும் காலதாமதத்தை தடுக்க தக்க கவனம் செலுத்தப்படும். அவற்றைப்பற்றிய குறைகளைக் குறிப்பாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க கவனம் செலுத்தப்படும்.

**திரு. ஏ. நோ. பாலகிருஷ்ணன் :** மின்சார விஸ்தரிப்பு சீக்கிரமாக நடைமுறையில் கொண்டுவரமுடியவில்லை. அதற்குக் காரணம் சில்லரை சாமான்கள் இல்லாததுதான் என்று சொல்லப்படுகிறது. கம்பி இருந்தும் கம்பம் இருந்தும் சில சில்லரை சாமான்கள் இல்லாத காரணத்தால்தான் ஒன்று இரண்டு வருஷம் காலதாமதமாகிறது. ஆகையால் அதைப் போககுவதற்கு உடனடியாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மின்சார இணைப்பு கோருபவர்களினுடைய எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. அவைகளைப் பரிசீலித்துதான் மின்சார இணைப்பு வழங்கப்படுகிறது. 1965–66-ல் 26 580 பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டது. 1966–67-ல் 35.029 இணைப்புகள் கொடுக்கப்பட்டன. 1967-68 டிசம்பர்வரை 37,263 இணைப்புகள் தரப்பட்டன. ஒதுக்கப்படுகின்ற பணத்தைப் பொருத்துத்தான் பகிர்ந்து அளிக்கப்படும். கோருபவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஒதுக்கப்படுகின்ற பணத்தைப் பொருத்து மின்சார சாமான்கள் வாங்கமுடியாத நிலைமையில் சிலபல கட்டுபாடுகள் ஏற்படலாம். வாங்குவதற்குக் குறிப்பிட்ட தடையிருக்குமானால் அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** கிராமப்புறங்களில் மின்சாரம் விஸ்தரிக்காததற்குக் காரணம் நிதி பற்றாக்குறை என்று சொல்லுகிறார்கள். மின்சார உற்பத்திக்கு மூலதன செலவு ஒரு ரூபாய் ஆகிறது, ஆனால் மின்சார விஸ்தரிப்பிற்கு 2½ ரூபாய் ஆகிறது என்று சொல்லுகிறார்கள். சென்ற வருஷம் கிராமப் புறங்களில் மின்சார விஸ்தரிப்பிற்கு 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் 9 கோடி ரூபாய் செலவழிந்திருக்கிறது. அதை மனதிலே வைத்துக்கொண்டு இந்த ஆண்டு 9 கோடி ரூபாயாக ஒதுக்க சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்ட தொகையைவிட அதிகமாக ஒதுக்குவதற்கு எந்த வகையில் வருவாய் பெறமுடியுமோ, அந்த வகையில் பணிகள் நடை பெறுகின்றன. எல். ஐ. சி. யில் கடன் கேட்கிறோம். அந்த கடன் மூலம் மின்சார உற்பத்தியைச் செய்யமுடியும். மின்சார வாரியத்தின் வசதியைக் கணக்கிட்டுப் பார்த்து ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் இணைப்புகள் தரலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. நிதி வசதிகள் ஏற்பட ஏற்பட அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யலாம்.

**திரு. டி. மார்டின் :** மின் இணைப்பு கொடுக்கும்போது இந்த மாநிலத்திலே பற்றாக்குறையாக இருக்கிற பகுதிகளுக்கும் வறண்ட பிரதேசமாக இருக்கக்கூடிய பகுதிகளுக்கும் மின் இணைப்பு சீக்கிரமாக கொடுக்கக் கூடிய வாய்ப்பை இந்த அரசு மேற்கொள்ளுமா ? அப்படி செய்தால் நெல்லை மாவட்டத்திலே சாத்தாங்குளம் சப்தாலுக்காவிற்கு மின் இணைப்பு கோரி பல மாதங்களாகி, வருஷக்கணக்கிலேகூட மின்சார இணைப்பு கிடைக்குமென்று ஏராளமான விவசாயிகள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சீக்கிரமாக மின் இணைப்பு கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஏற்கெனவே நஷ்டத்திலே இருக்கிற காரணத்தினால் நஷ்டம் ஏற்படாதவகையில் என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றை மேற்கொள்ளலாம். குறிப்பிட்ட சில பகுதி

களிலுள்ள தன்மைகளையும், வாய்ப்புகளையும் வைத்துப்பார்த்து பிற்காலத்தில் நன்மை ஏற்படுமா? அல்லது பெரும் செலவு ஏற்படுமா? என்பதையெல்லாம் கவனித்து செய்யலாம். மின்சார வாரியத்தின் நிபந்தனைக்கு உட்பட்டுத்தான் செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, வடஆர்க்காடு மாவட்டத்திற்கும் செங்கல்பட்டு மாவட்டத்திற்கும் அதிகமாக மின் இணைப்பு கொடுக்காமல் இருப்பதற்கு நிலையான காரணம் பாலாறு பேசின் ரூல்ஸ் தான் என்று சொல்லப்படுகிறது. அது நீண்ட நாட்களாக இருக்கிறது. அதை உடனடியாக ரத்து செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எல்லா மாவட்டங்களைவிட வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் அதிகமாக மின் இணைப்புகள் நடைபெற்றிருக்கின்றன. அவர்கள் சில குறைகள் சொல்கிறார்கள். அவற்றை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க மின்சார வாரியம் மேற்கொள்ளும்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas the demand for electric energy in the rural parts is on the increase, whereas the Board is not able to cope up with the demand, is it not at face that small things which could easily be got over stand in the way of giving electricity connections? I refer to poles and other such articles which could very well be got locally. At present, these poles have got to be manufactured in certain places and then they will have to be transported to a particular place which involves lot of delay. Will the Government take interest in the matter and issue suitable instructions to the Board to manufacture these poles, etc., at the work-spot itself and get them through flowing river channels? When arrangements could be made by which things which are necessary for giving electric connections could be easily purchased in the local market, why not instructions on those lines be issued to the Board so that the Board will be in a position to give electric connections quickly and expeditiously?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** துணை வினாவைச் சுருக்கமாகக் கேட்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member's suggestion will be studied if it is so simple as he tries to make it out.

**திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர் :** தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே ஒவ்வொரு கிராமத்திலும், 30, 40 பம்பு செட்டுகள் வாங்கி, கடன் வாங்கி அவற்றை வாங்கியிருப்பதால் கையிலிருந்து வட்டி கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பம்பு செட்டுகளுக்கு உடனடியாக கனெக்‌ஷன் கொடுக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மதுராந்தகத்தைப் பற்றியது. தனிக் கேள்வி போட்டால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். அதிகாரிகளிடத்தில் சொன்னாலும், தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

DR. H. V. HANDE : Sir, this question is with regard to Madurantakam. But the general feeling in the whole of Tamil Nad is that the electric connections are not given immediately. There is a lot of redtapism in regard to this matter. My hon. Friend,





Thiru Murugaiyan, has just now stated the position clearly and in fact I had been to his constituency also. The ryots there came and told us that the concerned officer whom they had given a bribe last time had ben changed. Of course, this is not a thing to be told in this House but the tragic fact is the bitterness with which the ryots are talking to us. In view of the fact that the ryots are very much bitter about it and in view of the fact that there is surplus current, will the Hon. Minister find out where exactly is the trouble and why these officers come in the way of giving connections to these small ryots .

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, hon. Members should co-operate with the Government in finding out where exactly bribe takes place. There is no use of merely making vague allegations because the Government cannot act upon allegations. If the ryots make certain complaints, hon. Members should enthuse them by saying, 'Please give us salient facts' and this Government are determined to root out corruption whenever specific points are made out.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, தற்போது எலெக்ட்ரிசிடி சம்பந்தமாக விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் கரண்ட் தேவையில்லை என்று நினைக்கிறேன். பகலில் பாதிநேரமும், இரவில் பாதி நேரமும் கொடுத்தால், இன்னும் இப்பொழுது இருக்கும் அளவு பம்பு செட்டுகள் வைத்து, இன்னொரு கம்பத்தை இழுத்து விவசாயிகளுக்கு அதிகமான பம்பு செட்டுகள் கொடுக்க வாய்ப்பு இருக்குமே, அந்த வகையில் செயல் பட முயற்சி எடுப்பார்களா? அதைப் பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறும் யோசனை ஆராயப்படவேண்டிய ஒன்று. இப்பொழுது விவரக் குறிப்பு இல்லை. அது பற்றி ஆராய வேண்டும்.

* 229 வினா—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களில், மின்சார துறையினரால் கிணறுகளுக்கு விவசாயத்திற்காக பம்பு செட்டு வைப்பதற்கு வேலைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு (work load sanction) இன்னும் மின்சார சப்ளை கொடுக்காத கிணறுகள் எத்தனை?

(இ) தாமதத்திற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1202 இறைவை இயந்திரங்கள் மதுரை மாவட்டத்தில் 3043 இறைவை இயந்திரங்கள்.

(இ) விண்ணப்பத்தார்கள் தங்கள் இறைவை இயந்திரங்களுடன் ஆயத்த நிலையில் இல்லாமையே அவைகளுக்கு இணைப்புகள் தர தாமதத்திற்கு முக்கிய காரணமாகும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், மோட்டார் வைத்து மின்சார இணைப்புக் கொடுக்க வேண்டும் என்று, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் பிற்பட்ட பகுதிகளில், ஒரு ஆண்டுக்கு மேல் ஆகிறது. அமைச்சர் அவர்கள் தக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்பது உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையில், மின்சார இணைப்புக்களைக் கொடுக்க கவனம் செலுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முன்பே கூறியது போல, 50% வரமுடியாத நிலை இருப்பதால் காலத் தாழ்வு ஏற்படுகிறது. அப்படிப்பட்ட இடங்களில், அங்கெல்லாம் இருப்பவர்கள் முன்னின்று, அவற்றை நிறைவேற்றித்தர முன் வந்தால், காலத் தாழ்வு ஏற்படக்கூடிய நிலைமைகள் ஏற்படாது. உணவு உற்பத்தியும் நல்ல வகையில் நடைபெற முடியும். இது பற்றி வாரியத்திற்குக் கட்டளைகள் போடப்பட்டிருக்கின்றன. இங்கேயும் சொல்லப்பட்டிருப்பதால், குறிப்பிட்ட பகுதியில் என்று தெரிவித்தால், மேற்கொண்டு ஆராயப்பட்டு, விரைவில் நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** ஐயா, மின்சார இணைப்புக் கொடுக்கும் போது, மோட்டார் வாங்கி வைத்து விட்டீர்களா என்று கேட்கிறார்கள்; மோட்டார் வாங்க சர்க்கார் கடன் கேட்கப் போகும்போது, மின் இணைப்புக் கிடைக்கும் என்கிற உத்தரவைக் காட்டுங்கள் என்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையின் காரணமாக அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. அதைப் போக்க சர்க்கார் முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால், அதைப் பற்றித் தெரிவித்தால், ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யலாம்.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, இப்பொழுது மின்சார இணைப்பு கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகின்ற நிலைக்கு மிக முக்கியமான காரணம், ஒவ்வொரு இடத்திலும் மின்சார இணைப்புக்கு விண்ணப்பிக்கும் போது அதோடு கூடவே ஒரு எஸ்டிமேட்டும் தயாரிக்கிறார்கள். அது ரூ. 20,000-க்கு அதிகமாக இருந்தால், சூப்ரெண்டெண்டிங் எஞ்ஜினியர் அதை நிர்ணயிக்க முடியாமல், சென்னைக்கு வந்து, மீண்டும் இங்கிருந்து சாங்க்ஷன் ஆகிப் போவதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இப்பொழுது இருக்கும் 20,000 என்கிற லிமிட்டை அதிகமாக்கிக் கொடுத்தால் சூப்ரெண்டெண்டிங் எஞ்ஜினியரே சாங்க்ஷன் கொடுக்கும் நிலை ஏற்படும், கால தாமதமும் ஏற்படாமல் இருக்கும். இது பற்றி சர்க்காருக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று, தக்க முறையில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. வரதராஜன் ஒரு துணை வினா போடுவார்கள்.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, . . . . . .

**திரு. என். மருதாசலம்.**—தலைவர் அவர்களே, மின்சார மோட்டார் வைக்கும் போது இரண்டு பூமிக்காரர்கள் சம்மந்தப்பட்டதாக இருக்கிறது. ஒரு பூமிக்காரர் வைக்கும போது, இன்னொரு பூமிககாரர் ஆட்சேபணை செய்கிறார். இதையும் கவனித்து மோட்டார் விண்ணப்பத்திற்கு அனுமதி கொடுக்க உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கூப்பிட்டது திரு. வரதராஜன் மருதாசலம் இல்லை. இப்பொழுது வரதராஜன் கேள்வியைப் போடுவார்கள்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, சில கிராமங்களில், மனுப்போட்டு ஐந்தாண்டுகள் ஆகியும் இணைப்புக் கிடைக்கவில்லை; அதே நேரத்திலே சில கிராமங்களில் 6, 9 மாதங்களிலேயே கிடைத்துவிடுகிறது என்கின்ற புகார் இருக்கிறது. ஆகவே, ஏ. இ., ஜே. இ. அலுவலங்களில் பதிவு ஏட்டில் எந்தெந்த மனுக்கள் முன்னால் வந்தன என்பது பற்றிய விவரங்களைக் குறித்து வைக்க ஏற்பாடு செய்தால், தாமதத்தைத் தவிர்க்க முடியும். ஊழல்களையும் தவிர்க்க முடியும். அது பற்றி முயற்சி எடுக்க சர்க்கார் ஆலோசிக்குமா?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுதே அப்படிப் பட்ட பதிவு ஏ. இ. ஆபீசில் செய்யப்பட்டு, மனுக்கள் வரிசைப்படுத்தப்பட்டு, எண் தரப்படுகின்ற முறை இருக்கிறது. முறையைப் பயன்படுத்தாத சூழ்நிலை இருந்தால், அதைக் கவனத்திற்கு கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, our Government are taking electric power from the Mysore State and they have got surplus power also. Since Dharmapuri district is very near the Mysore border, will it not be possible and profitable to construct a power station at Hosur and supply electric power to the Dharmapuri district?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதை பற்றிக் குறிப்புக்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் ஆராயலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, பம்புசெட்டுக்களுக்கு மின்சார இணைப்புக் கொடுப்பதில், கம்பங்கள் நடுவது ஒரு பகுதியினராகவும், கம்பிகளை இழுப்பவர்கள் இன்னொரு பகுதியினராகவும் இருக்கிறார்கள். ஆகவே, அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. இவ்விரண்டு பகுதிகளையும் ஒன்றாக இணைத்து, கம்பி இழுப்பது மின் இணைப்புக் கொடுப்பது இரண்டையும் ஒரு பகுதியில் கொண்டுவந்தால் காலதாமதம் தவிர்க்கப்படும். எனவே, அந்த ஏற்பாடு செய்யப்படுமா? மேலும், என்னுடைய தொகுதியில், பம்புசெட் வைத்தும் இணைப்புக் கிடைக்கவில்லை. மதுரை சூப்ரெண்டெண்டிங் என்ஜினியரிடம் அனுகிக் கேட்டதில், கம்பங்கள், கம்பிகளுக்கு ஆர்டர் கொடுத்து, அவை இன்னும் வரவில்லை என்று சொல்கிறார்கள். அவற்றைத் துரிதப்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே காலதாமதத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுதான் காரணம் என்று இருந்தால், அதை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. மனுக்கள் அனுப்புவதிலேயே தவறுகள் இருக்கின்றன. அவை சரியாக நிறைவேற்றப்படவேண்டும் என்று சொல்லும் போது தாமதம் ஏற்படுகிறது. எல்லா நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டு விட்டால், அப்படி நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களானால், விரைவில் இணைப்புக் கொடுக்க முடியும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டம் நடக்கும் போது, மின்சார துறையில், உதவி என்ஜினியர் அல்லது மாவட்ட எஞ்ஜினியர் வந்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் கூறுவதைக் கேட்டு தாமதத்திற்கு என்னென்ன காரணம் என்று அறிய முடியும். ஆனால் சூபர்வைசர்களை அனுப்புகிறார்கள். அவர்கள் என்னிடம் விவரம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே டி. டி. ஸி. கூட்டத்திற்கு எஸ். இ. அல்லது ஏ. இ. போன்றவர்களை அனுப்ப உத்தரவு இட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுதே அப்படிப்பட்ட அதிகாரிகள் வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. வருவதில்லை என்று ஏதாவது குறிப்பாகக் கொடுத்தால் அதை பார்க்கலாம்.

THIRU K. VINAYAKAM : I said in the previous question that the malady was great. People want more current and there is no quick possibility of giving current to them from the departmental resources. Will the Government consider the possibility of

appointing a small committee for every district consisting of Members of the Assembly belonging to all political parties so that every month they will meet, the applications sent to the departments will be placed before it, the officials will explain why there was delay and what the difficulty was and thus allay the fears of the people at large apart from the fears of the Members of the House?

THE HON. THIRU C. N. ANNADURAI : There is an opinion that the formation of a committee by itself causes delay. If my hon. Friend wants a committee, there is no difficulty in constituting it. But it is only a duplication of the work already being done by the District Development Council where all representations of political parties and non-officials are considered. The District Development Council can look into this question also.

திரு. கே. என். குமாரசாமி : விவசாயத்திற்கு இரவு நேரங்களில் மின்சார சப்ளை கொடுப்பதினால் விவசாயிகளுக்கு மிகப் பெரிய அபாயம் விளைகிறது. இரவு நேரங்களில் தண்ணீர் பாய்ச்சுகின்றபோது, விஷ ஜந்துக்களினால் அவர்களுக்கு அபாயம் விளையக்கூடிய நிலைமை இருக்கிறது. பூச்சி மருந்துகளை இரவு நேரங்களில் பயிர்களுக்கு அடிக்கும்போது, அதுவும் அபாயகரமாக இருக்கும். இவைகளையெல்லாம் தவிர்க்க பகலில் விவசாயத்திற்கு மின்சார சப்ளை கொடுக்க அரசு அனுமதி அளிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மின்சாரத்தைப் பொறுத்த வரையில், அதை ஓரிடத்தில் தேக்கி வைப்பதற்கு இடமில்லை. மின்சாரம் உற்பத்தியாகிக் கொண்டே இருக்கும்போது, பகல், இரவு, இரண்டு வேளைகளிலும் அதைப் பயன்படுத்திக்கொள்ளும் நிலைமைகள் வரவேண்டும் விவசாயத்திற்கு இரவு வேளைகளில் மின்சாரம் கொடுப்பது சிரமமாக இருக்கிறது என்று கருத்துத் தெரிவிக்கப்படுவதையொட்டி, இரவு வேளைகளில் வேறு வகைகளுக்குப் பயன்படுத்த முடியுமானால், அவ்வாறு பயன்படுத்திக்கொண்டு, விவசாயத்திற்குப் பகல் வேளைகளில் கொடுக்கலாமா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, எந்த அளவுக்குப் பகல் வேளையில் எந்த எந்த வகைக்குத் திருப்பி விடுவது எந்த அளவுக்கு இரவு வேளையில் எந்த எந்த வகைக்குத் திருப்பி விடுவது என்றெல்லாம் முறை வகுக்க வேண்டியிருக்கிறது. உற்பத்தியாகும் மின்சாரத்தை இரவு—பகல் இரண்டு வேளைகளிலும் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், மின்சார உற்பத்தி அவ்வளவும் வீணாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட முடியும். அதனால் மின் உற்பத்தியைக் குறைக்கவேண்டிய நிலைமை ஏற்படும். எந்த அளவுக்குக் கூடுமான வரையில் பகலில் கொடுக்கக் கூடுமோ அந்த அளவுக்குக் கொடுத்தது போக, இரவிலும் கொடுக்கக் கூடிய அத்தியாவசியமான நிலைமை ஏற்படுகின்றபோதுதான், இரவு நேரத்தில் விவசாயத்திற்கு, மின்சாரம் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

*Hotles and catering establishments.*

* 230 Q.—THIRU. K. VINAYAKAM :<br>THIRU. V. K. KOTHANDARAMAN : } Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the Central Government have instructed the State Government to close all the hotels and catering establishments one day in a week; and

(b) if so, the action taken thereon?



மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: உணவு நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் அல்லது அதன் நிர்வாக பொறுப்பிலுள்ள ஏனைய எவரும் திங்கட்கிழமைகளில் மாலை 5 மணிக்குப் பின்னர் அந்த உணவு நிறுவனத்தைத் திறந்து வைக்கக்கூடாது என்று முந்திய அரசு 1965-ம் ஆண்டின் இறுதியில் ஆணைகள் பிறப்பித்திருந்தது. சிற்றுண்டிச் சாலைகளிலும் உணவு நிறுவனங்களிலும் திங்கட்கிழமை இரவு நேரங்களில் தானிய உணவு வழங்கப்படக்கூடாது என்பதுடன், வாரத்தின் மற்றொரு நாளில் சோறு இடுவதைத் தடைசெய்து ஆணைகள் பிறப்பிக்குமாறு இந்திய அரசு மாநில அரசாங்கங்களை வேண்டிக்கொண்டது. ஆயினும், வியாழக் கிழமைகளிலும் மாலை 5 மணிக்குப்பிறகு தடைசெய்த உணவுப் பண்டம் எதையும் அதாவது தானியங்களினால் தயாரிக்கப்பட்ட உணவையும் அதன் உணவுப் பண்டங்களையும் வழங்கக்கூடாது என்று தடை விதித்து முந்திய அரசு ஆணைகள் பிறப்பித்திருந்தது. ஒரு வாரத்தில் ஒரு நாள் முழுவதும் தானிய உணவு வழங்கப்படக் கூடாது என்று அறிவிக்கப்பட வேண்டும் என்பது தன் கருத்து என்றும், உணவு நிறுவனங்கள் முதலியவற்றை மாலை 5 மணிக்குப்பின்னர் மூடும்படி மட்டும் ஆணையிடுவது அல்ல என்றும் 1966-ம் ஆண்டு நவம்பர் திங்களில் இந்திய அரசு குறிப்பிட்டது. முந்திய அரசு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை; உணவு நிறுவனங்களில் உணவு வழங்கப்படுவதற்கு விதிக்கப்பட்டிருந்த அக்கட்டுப்பாடுகள் பொது மக்களுக்கும் உணவு நிறுவனங்களை நடத்துவோருக்கும் பெரிதும் துன்பமளித்து வந்தன. இந்த அமைச்சரவை பதவி ஏற்றதும், முந்திய அரசினால் விதிக்கப்பட்டிருந்த இக்கட்டுப்பாடுகள் மறு ஆய்வு செய்யப்பட்டன. சிற்றுண்டி சாலைகளும் உணவு நிறுவனங்களும் தடை செய்யப்பட்ட உணவுப் பண்டங்களை வழங்குவதற்கு முந்திய அரசினால் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் 13—4—67 முதற்கொண்டு அதாவது தமிழ் வருஷப் பிறப்பு அன்றிலிருந்து விலக்கப்படும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

THIRU K. VINAYAKAM : This question was given notice of by me when the closure was in vogue. Now it has been given up. The object of the question was to elicit information as to whether the ban on the supply of food in hotels was not in consonance with the shortage of foodgrains available in the State Now that the D.M.K. Ministry has came to power and has rescinded that order, does it, mean that foodgrains are freely available in Madras or are the foodgrains feely given to the caterars when ever they demand?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நிலைமை சரியாகிவிட்டது என்பது அதற்குப் பொருளல்ல. பொதுவாக இந்தியாவில் நிலவியிருந்த உணவு நெருக்கடியை உத்தேசித்து, இவைகளில் சிக்கனம் காட்ட வேண்டும் என்று மத்திய அரசு அடிக்கடி ஆணைகள் பிறப்பித்தது, ஒரு நாள் முழுமையும் அரிசி உணவு கூடாது என்பது அந்த ஆணையினுடைய முக்கியமான சாராம்சமாகும். அதை முந்திய அரசும் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் உணவுப் பொருள் நெருக்கடி சற்று தளர்ந்தவுடன், கல்யாணம் ஆகாதவர்களின் நன்மையை அனுசரித்தும், தினந்தோறும் வந்துபோகிற இரண்டு, மூன்று லட்சம் மக்களுடைய நன்மையை அனுசரித்தும், மற்றும் ஓட்டல்களையே நம்பியிருக்கிறவர்களுடைய நிலைமையை அனுசரித்தும், அவர்களுக்குரிய கஷ்டங்களைக் குறைக்க வேண்டும் என்பதற்காக மறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : மத்திய சர்க்கார் அந்த ஆலோசனையைச் சொன்னதற்கான அடிப்படைக் காரணம், போதுமான அளவுக்கு அரிசி ஸ்டாக் இல்லை என்பதா? அதை வைத்து அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா? அப்படியானால், இதை மாற்றுவதன் காரணமாக, போதுமான [illegible] முடியுமா? அதுபற்றி இந்த சர்க்கார் என்ன கருதுகிறது? அந்த நேரத்தில், ஓட்டல்காரர்

களுக்கு லாபத்தை உண்டாக்கக்கூடிய தன்மையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அதைப்பற்றி இந்தச் சர்க்காரினுடைய கருத்து என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து முற்றிலும் தவறானதாகும். ஓட்டல்களுக்கு லாபம் இருக்கலாம். நான்கு மணி நேரம் வியாபாரம் நடந்தால், அந்த அளவுக்கு அதிக லாபம் இருக்கலாம். அது வெளிப்படையான ஒன்று. முந்தைய அரசுக்கு ஏற்பட்ட கெட்ட பெயர் இந்த அரசுக்கு வரக்கூடாது. தமிழகத்திற்கே தலைநகரமாக இருக்கும் இந்த நகரத்தில் தினந்தோறும் மூன்று நான்கு லட்சம் மக்கள் ஓட்டல்களை நம்பி வாழ்ந்து போகிறார்கள். முந்தைய அரசு இருந்த காலத்திலேயே, முதலில் பிற்பகல் 3·00 மணியோடு ஓட்டல்கள் மூடப்படவேண்டும் என்ற நிலை இருந்தது. மூன்று மணிக்கு மேல் ஓட்டல்களைத் திறந்து வைத்திருக்கக்கூடாது என்று சொல்லி ஆரம்பித்து, அந்தத் திட்டம் ஒரு மாதம் அமலில் இருந்தது. அதற்குள், அது ஐந்து மணி என்று மாற்றப்பட்டது. காரணம், அந்த அளவுக்குப் பொது மக்களிடத்திலேயிருந்த பெரிய அதிருப்திதான். வெளி மாவட்டங்களிலிருந்து பல்வேறு காரியங்களை முன்னிட்டு இந்தத் தலைநகரத்திற்கு மக்கள் லட்சக் கணக்கில் வந்து போகிறார்கள். அரசாங்கத்தில் பணி புரியும் சர்க்கார் ஊழியர்கள், மற்ற நிறுவனங்களில் வேலை பார்க்கக்கூடியவர்கள், கல்யாணம் ஆகாத பிரம்மசாரிகள், ஓட்டல்களையே நம்பியிருக்கிறவர்கள் ஆகிய இப்படிப்பட்டவர்களுக்காகத்தான் இந்தக் காரியம் செய்யப்பட்டதே தவிர, ஓட்டல்காரர்களுடைய லாபத்திற்காக அல்ல.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்தோடு, கனம் உறுப்பினர் அவர்களுக்கே தெரிந்திருக்கக்கூடிய, மற்றொரு விளக்கத்தையும் நான் தர விரும்புகிறேன். பழைய உத்தரவு அமலில் இருந்த நேரத்தில், ஓட்டல் கதவு ஒரு பக்கத்தில் மூடப்பட்டு, இன்னொரு பக்கத்தில் திறந்து வைக்கப்பட்டிருந்தது, உறுப்பினர் அவர்களுக்கும் தெரிந்திருக்கும்.

**திரு. ஆலடி. அருணா :** தலைவர் அவர்களே, தமிழக அரசு அந்த உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பித்ததைப் போன்று, பிற மாநிலங்களிலும் இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா? தமிழக அரசு அந்த உத்தரவை ரத்து செய்ததன் காரணமாக, மத்திய அரசிலிருந்து ஏதாவது எதிர்ப்பு குறிப்புகள் வந்திருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டது போல, "நீங்கள் செய்தது தவறானது, ஓட்டல்களை மீண்டும் முன் போல மூடிவிடவேண்டும். அதைச் செய்யுங்கள்" என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டே இருக்கிறது. ஆனால், இந்த அரசைப் பொறுத்த வரையில், நாங்கள் அதைப் பரிசீலனை செய்வதற்கில்லை, எங்களுக்கிருக்கும் நிலைமையில், மக்களுடைய நலனைக் கருத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது, உங்கள் யோசனைக்காக இப்பொழுது எங்களுடைய உத்தரவுகளை மாற்றுவதற்கில்லை என்று மத்திய அரசுக்கு நாம் தெரிவித்திருக்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** பழைய அரசாங்கத்தினுடைய இந்த உத்தரவால் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் ஏற்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், இந்த நாட்டினுடைய நன்மைக்காக ஓரளவு தியாகம் செய்யுங்கள் என்பதுகூட, மக்களிடையே கெட்ட பெயரை விளைவிக்கும் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா? அப்படிப்பட்ட அளவில் தியாகங்களைத் தடுத்தாவது நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் விரும்புகிறார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அதற்கான உத்தரவை மட்டும்தான் சர்க்கார் வெளியிட்டதே தவிர, பொது மக்களிடத்திலே அதுபற்றிய ஒரு நல்ல சூழ்நிலையை உண்டாக்கத் தவறிவிட்டது என்பதுதான், [illegible] முறையில் அறிந்துகொண்டவர்கள் எடுத்துச் சொல்லுகிற கருத்தாகும்.



DR. H. V. HANDE : It is quite possible that the order was passed with all good intention and nobody questions the intention. Will the Chief Minister tell us whether there was any reduction in the offtake of rice and other foodgrains during that period so that we may know whether it was partially at least succesful or not? Though this happened before the present Ministry came to power, the figures should be available with them.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால், இது நம்முடைய கண்ணிலே அகப்படக்கூடியதல்ல. ஓட்டல்காரர்கள், பல்க் கன்ஸ்யூமர்ஸ் என்ற நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற வகையில் நாம் அரிசி கொடுப்பதில்லை. அவர்களுக்கு லாபம் கொஞ்சம் குறைந்திருக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வது போல, பொது மக்களும் ஒத்துக்கொள்ளவில்லை, ஓட்டல்காரர்களும் ஒத்துக்கொள்ளவில்லை, கேலிக்கூத்தாகத்தான் அந்தச் சிக்கன நடவடிக்கை மாறியிருந்தது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த உத்திரவை மீறியதாக யார் மீதாவது வழக்குத் தொடரப்பட்டதா? அப்படியிருந்தால் அதைத் தெரிவிக்கமுடியுமா? முற்பகல் 9–30

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** யாராவது அந்த உத்திரவை மீறியதாகத் தகவல் இருக்கிறதா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அந்தத் தகவல் சேகரிக்கப்படக்கூடும் என்று கருதுகிறேன். இப்போது அது இல்லை.

***231 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :**
**திரு. க. இராமமூர்த்தி :**
**திரு. ஏ. எம். இராஜா :**
**திரு. எஸ். ராமச்சந்திரன் :**
**திரு. இல. பலராமன் :**
**திரு. கே. விநாயகம். :**
} மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) குறைந்த விலையில் அரிசி விற்கப்படுவதன் காரணமாக ஓட்டல்களில் விற்கப்படும் இட்லி, தோசை முதலிய உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) & (இ) ஓட்டல்கள், உணவு விடுதிகள் போன்று அதிக அளவில் அரிசி வாங்குபவர்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கொடுக்கப்படுவதில்லை. சீர் உணவை (Standard meals) வழங்கவேண்டுமென ஓட்டல்காரர்களை உணவு வழங்கல் அதிகாரிகள் கடந்த பல திங்கள்களாகக் கேட்டுவருவது பயனளிக்கவில்லை. ஒரு மாநாடு நடத்தி ஓட்டல் உரிமையாளர்களை நாம் கேட்டு கொண்டதற்கிணங்கி 80 காசுக்கு சீர் உணவு வழங்குவது என்று ஒத்துக்கொண்டு அதன்படி இன்று நடைமுறையில் இருந்து வருகிறது. இட்டிலி, தோசை ஆகியவற்றின் விலை அப்படியே உள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், உணவுப் பொருள்களின் விலைவாசிகள் மிகப் பெரிய அளவுக்கு குறைந்து விட்டது என்று அமைச்சரவர்கள் இந்த வாரத்தில் ஏற்றுக்கொண்டார்கள். அப்படி இருக்க, விலைவாசிகள் உயர்ந்து கொண்டு போகக்கூடிய நேரத்தில் ஓட்டல்களில் இட்டிலி,

பலகாரங்கள் இவற்றின் விலைகளை உயர்த்திக் கொண்டே போகிறார்கள். குறையக்கூடிய நேரத்தில் குறைக்கக்கூடிய நிலைமை கிடையாது. அதிகம் உயரும் நேரத்தில் அதை ஏற்றுக் கொண்டு சர்க்கார் குறையக்கூடிய நேரத்தில் அதைக் கட்டுப்படுத்த வேண்டிய அளவுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதைத்தான் நான் குறிப்பிட்டேன். 80 பைசாவிலிருந்து 1 $1\frac{1}{4}$, $1\frac{1}{2}$ வரைகூட சென்னை நகரத்தில் இருந்தது. இன்றைக்கு 600, 700 ஓட்டல்களுக்கு மேலாக எல்லா இடங்களிலும் மலிவு சாப்பாடு என்று கூட சொல்வது தவறாகும். தரமான ஒரு ஸ்டாண்டர்ட் மீல் 80 பைசாவுக்கு இப்போது கொடுக்கிறார்கள். வெளியூர்களிலும் பல ஊர்களில் நல்ல மாதிரி கொடுத்து வருகிறார்கள். அங்கத்தினர் அவர்கள் சொல்வது போல் அதை வாங்கிச் சாப்பிடுபவர்களின் கிளர்ச்சியும், விழிப்புணர்ச்சியும் இதற்கு உறுதுணையாக இருந்து வருகிறது. அதனால் மற்ற பண்டங்களின் விலையும் மலிவாகிக் கொண்டு இருக்கிறது. இன்னும் குறைப்பதற்கான முயற்சிகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ளும்.

திரு. க. இராமமூர்த்தி : கடந்த காலத்தில் அரிசி கிடைக்காமல் இருந்த காலத்திலே இட்டிலி மிகவும் இளைத்துவிட்டதாக இருந்தது. அதை இந்த சட்டமன்றத்தில் கூட நிரூபிக்கிற நிலை இருந்தது. இப்போது அரிசி அதிகமாக இருக்கிற நிலை ஏற்பட்டும்கூட இட்டிலி போன்ற பண்டங்கள் ஊதவும் இல்லை, பருக்கவும் இல்லை. அது மட்டுமல்ல விலையில்கூட இன்றையத்தினம் உயர்கின்ற நிலையைப் பார்க்கின்றோம். நமது கான்டீனில்கூட 15 பைசாவுக்குக் கொடுத்து வந்த காப்பி இன்றையத்தினம் 20 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தடுப்பதற்காக அமைச்சர் அவர்கள் ஏதேனும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்களா ? ஏன் இதுவரையில் அதைச் செய்ய சிபாரிசு செய்யவில்லை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உறுப்பினர் அவர்கள் எங்கோ கூட்டத்திலே பேசுவதைக் கேட்டுக்கொண்டு பேசுகிறார்கள். அவர் ஹோட்டல்களுக்குப் போகிறாரா என்று தெரியவில்லை. இங்கே கூட 80 பைசா சாப்பாட்டை 75 பைசாவுக்கு கான்டீனிலே குறைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றவர்களுக்கும் தரமான சாப்பாடாக போட இந்த ஹோட்டல் உரிமையாளர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்களிடம் கலந்து பேசி, அவர்களுக்கு உற்ற ஒரு இடம் கேட்பதாக இருக்கிறேன். இடம் சௌகரியமாக இல்லாத படியாலதான் ஹோட்டலை விரிவுபடுத்த முடியவில்லை. வெளியில் 80 பைசாவாக இருப்பதை இங்கே 75 பைசாவுக்கு, தரமான சாப்பாடாக கிடைப்பதற்கான ஏற்பாட்டை பரிசீலிக்கலாம். வெளியே உணவுப் பண்டங்களின் தரமும் உருவமும் மாறித்தான் இருக்கின்றன. பார்க்கும் முறையில் தான் இருக்கிறதே தவிர அவைகளில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. மற்றவர்கள் விழிப்பாக இருந்தால் நல்ல அபிவிருத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

THIRU K. RAMAMOORTHY : Sir, my question has been misunderstood.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்புறம் ஒரு கேள்வியாக கேளுங்கள்.

திரு. ஏ. எம். ராஜா : ஹோட்டல்களில் நாளுக்கு நாள் இட்டிலி தோசை இவைகளின் விலைகள் ஏறிக்கொண்டே போகின்றன. இட்டிலி தோசை இவைகளின் எடையையும் உருவையும் நிர்ணயிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?





மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்போது சாப்பாட்டின் விலைகள் இயற்கையாக நிர்ணயிக்கப்படுகின்றன. அதிலும் மற்றவர்கள் விழிப்புடன் இருந்தால் மேலும் இதில் நல்லதொரு வெற்றி அடைய முடியும். இப்போது விலைவாசிகள் சரிந்து இருக்கின்றன. சமீபத்தில் ரொம்ப சரிந்து இருக்கிறது. அதன் அடிப்படையில் நல்லதொரு அபிவிருத்தி ஏற்படும். அதை ஹோட்டல் உரிமையாளர்களும் செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. கே. விநாயகம் : சார், 80 பைசாவுக்கு ஒரு ஸ்டாண்டர்ட் மீல் போடலாமென்று நாம் அவர்களோடு பேசி முடிவுக்கு வந்ததாக சொல்லப்படுகிறது. அந்தச் சாப்பாட்டை அமைச்சரவர்கள் சாப்பிட்டார்களா ? அதில் அப்பளம், சட்டினி, ஊறுகாய் இவைகள் இல்லாது, ஒரே ஒரு பொறியலுடன் .... கூட்டும் இல்லை. ....கொஞ்சம் அளவு சோறு, ரசம், மோர் என்று தான் போடுகிறார்கள். மோர் இரண்டாவது கப் கேட்டால் இல்லை என்கிறார்கள். இது என் அனுபவம். நான் ஒரு ஹோட்டல் நடத்துகிறேன் என்று உங்களுக்குத் தெரியும். ஆகவே, தின்பண்டங்களின் விலையைக் குறைப்பதற்கு ஹோட்டல் முதலாளிகளை அழைத்து மிரட்டுவதால் லாபம் இல்லை. மற்ற விலைவாசிகள் . அரிசி மட்டும் தான் ரூபாய்க்கு ஒரு படி என்று சொல்லி அதுவும் கொடுப்பது இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.. ..ஏறுகிற நேரத்தில் அவர்களை அழைத்து இப்படித்தான் செய்யவேண்டும் என்று வற்புறுத்துவது நியாயமா ? அது அவர்களுக்கு நஷ்டத்தைத்தான் தரும் என்பதை அரசாங்கம் உணருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர்கள் ஹோட்டல் நடத்துவதாக தெரியாது, ஹோட்டலை வாடகைக்கு விடுவதாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். அவர்கள் சொல்வது சரி அல்ல. குறைவாக கொடுக்கிறார்கள் என்று சித்தரிப்பதற்காகச் சொன்னார்களே தவிர சாப்பாட்டுக்கு அப்பளம் பொறியல் எல்லாம் போடுகிறார்கள். ஆகவே தான் தரமான சாப்பாடு என்று பெயர் அதற்கு. அவர்கள் சீப் மீல்ஸ் என்று கருதிக்கொண்டு இருக்கிறார்கள். இது சீப் மீல்ஸ் இல்லை. ஒருவருக்கு வேண்டிய அளவு 1, $1\frac{1}{2}$ ரூபாய்க்கு வேண்டுமானாலும் சாப்பிடலாம். ஒரு பொறியல், அப்பளம், மோர் இவைகளை வைத்து மரியாதையாக சாப்பாடு வழங்கப்படுகிறது. அவர்கள் ஹோட்டலில் சமீபத்தில் சாப்பிட்டிருக்கிறார்களா என்று தெரியவில்லை. இப்போதைய விலை கட்டுப்படியாகக் கூடிய விலைதான். 200, 300 ஹோட்டல் உரிமையாளர்களிடம் பேசினேன். அவர்கள் கணக்குப்போட்டு, இவ்வளவு ஆகும் என்று கணக்குப்போட்டு, பிறகுதான் இது வந்தது. கோயமுத்தூர், சென்னை போன்ற நகரங்களில் இந்த புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தான் என்னென்ன செலவாகிறது என்பதை கணக்கிட்டு இது நிர்ணயிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்களைப் போல ஹோட்டல் நடத்தி எனக்கு பழக்கம் இல்லை. என்றாலும் சாதாரண வியாபாரமுறை கணக்குப்படி தரமான உணவு மலிவான விலையில் விடுதிகளில் தரவேண்டுமென்றால் அவர்களுக்கு அன்றாடம் எவ்வளவு வியாபாரம் ஆகிறது என்பதை பொருத்து அமைந்திருக்கிறது. உதகையில் அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவருடைய முயற்சியால் கூட்டுறவுத் துறையில் இப்படிப்பட்ட ஒரு ஹோட்டலை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே சென்று நான் சாப்பிட்டுப் பார்த்திருக்கிறேன். நல்ல உணவு மலிவான விலையில் தரப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு நாளைக்கும் இவ்வளவு பேர்களுக்குத்தான் என்று கணக்கு இருக்கிறது. அந்த அளவுக்குத்தான் அவர்களுக்கு பண்டங்கள் கிடைக்கிறது. இப்படி மலிவான விலையில் கொடுத்தாலும் அவர்களுக்கு கைநஷ்டம் ஏற்படாத அளவுக்கு இருக்கிறது. அதே முறையில் உணவு விடுதிகள் அமைக்கப்படுகிற இடங்களில் அவர்களுக்கு போதுமான அளவு வியாபாரம் ஆகக்கூடிய இடமாகப் பார்த்து அவர்கள் விடுதிகள் அமைத்துக்கொள்வார்களானால் அமைச்சரவர்கள் சொன்னதுபோல் விலை போட்டு லாபத்தையும் பெறமுடியும்.

[1968 மார்ச் 16

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** சென்ற ஆண்டு உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைக்கவேண்டும் என்று கேட்டிருந்தபோது இட்டிலி, தோசை இவற்றின் விலைகளை வேண்டுமானால் குறைக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் சட்டினி, சாம்பாருக்கு தனி விலை நிர்ணயிக்க வேண்டிவரும் என்று தெரிவித்து இருந்தார்கள். அது என்னவா யிற்று என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்கள் இதற்கு பதில் சொல்ல வேண்டிய இடத்தில் இல்லை.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** காங்கிரஸ் கட்சியின் உபதலைவர்களில் ஒருவராக இருக்கும் திரு. விநாயகம் அவர்கள் எந்தக் கடையில் சாப்பிடு கிறார்கள் என்று சொல்லமுடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நீங்கள் அவர் பக்கத்தில் இருக்கிறீர்கள், அவர்களையே கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

**திரு. கே. விநாயகம் :** நானும் உணவு அமைச்சரவர்களும் சேர்ந்து ஒரே ஹோட்டலில்தான் சாப்பிடுகிறோம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** பொதுவாக ஒரு தவறான கருத்து இருக்கிறது. பருமன் உள்ளவர்கள் அதிகமாக சாப்பிடுகிறார்க ளென்று. உண்மையிலே சொல்லப்போனால் திரு ராமமூர்த்தி, திரு சிததன் இவர்களைப் போல மெல்லிய உருவம் உடையவர்கள்தான் அதிகம் சாப்பிடுவதாகத் தோன்றுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, நான் அதிகம் சாப்பிடு வதில்லை. என்னைப்பற்றித் தவறான கருத்து எடுத்துச் சொல்லப்படுவ தால் நான் உரிமைப் பிரச்சினையை எழுப்பலாமா ?

**மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :** அதிகம் சாப்பிடுவது குற்றம் அல்ல.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இப்போது ஓட்டல்களும் காபிக் கடைகளும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகின்றன. இவைகளின் தேவையும் அதிகமாகிக் கொண்டு வருகிறது. இப்பொழுது ஆண்களும், பெண்களும் வேலைக்குப்போவதால், ஓட்டல்களில் வாங்கிச் சாப்பிடும் நிலைமை இருக்கிறது. ஆகவே, ஓட்டல் பலகாரங்கள், உணவு இவைகள் தரமாகவும், சுத்தமாகவும் இருக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஓட்டல்களின் முக்கியத்து வத்தை உணர்ந்து, அவைகளில் செய்யப்படும் உணவு வகைகள் தரமாக வும், செம்மையாகவும் இருக்க வேண்டுமென்பதற்காக உணவு வழங்கு துறை தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, சேலத்தில் கூட்டு றவுத் துறையில் சிற்றுண்டிச்சாலை ஒன்று குறைந்த விலையில் இளநீர் கொட்டை நீர் போன்ற உணவுப் பண்டங்களைக் கொடுத்து வருகிறது. அதைப்போல அரசு மலிவான விலையில் வெளியூர்களில் உணவுப் பண்டகள் கிடைக்க சிற்றுண்டிச்சாலைகள் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தற்போது அதைப்பற்றி உத்தேசம் இல்லையென்றாலும் பின்னர் யோசிக்கப்படும். நீலகிரி மாவட்டத் தில் நடைபெறுகிற ஓட்டலைத் தொடர்ந்து குன்னூரிலும் மலிவான விலையில் உணவுப் பண்டங்கள் கிடைக்கும் ஓட்டலைத் துவக்கியிருக்கிறார்கள். நானும் அங்கே சாப்பிட்டுப் பார்த்தேன். மிக நன்றாக இருக்கிறது. நண்பர் திரு. கே. விநாயகம் அவர்களும் கமிட்டியில் போகும்போது அங்கு சாப்பிட்டுப் பார்க்கலாம். ஓட்டல்காரர்கள் சரியான விலையில் உணவுப்



1968 மார்ச் 16]

பண்டங்களை விற்காவிட்டால், அதைச் செம்மைப்படுத்தும் முறையில் ஆங் காங்கே கூட்டுறவுத் துறையில் சிற்றுண்டிச்சாலைகளை அமைக்கலாமா என்பதுபற்றி அரசாங்கம் பின்னர் யோசிக்கும். கனம் உறுப்பினர் சொன்னபடி அரசாங்கம் இதுபற்றி பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** தலைவர் அவர்களே, இப். பொழுது டிரெயின்களில் ரூ. 1·85-க்கு சாப்பாடு கொடுக்கிறாகள். அந்தச் சாப்பாடு சாப்பிடுவதற்கே லாயக்கில்லை. நமது மாநிலத்திலே இப்போது மலிவான விலையில் பொருள்கள் கிடைத்தும், டிரெயின்களில் மட்டும் விலை கூடுதலாக இருக்கிறது. ஆகவே, நமது அரசாங்கம் சென்டரல் கவர்ன்மெண்டுக்கு எடுத்துக்கூறி விலையைக் குறைக்க ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் :** இப்படிப்பட்ட ஆட்சேபக் குறிப்பு ஒன்றை தமிழக அரசின் சார்பிலே மத்திய அரசாங்கத்திற்குத தெரி விக்கப்பட்டிருக்கிறது. ஆட்சேபம் தெரிவிக்கப்பட்ட பிறகும் விலை அப்படியே தான் இருக்கிறது. மீண்டும் அரசாங்கம் இதைப்பற்றி வலியுறுத்தி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

**திரு. மு. ச. சிவசாமி:** தலைவர் அவர்களே, 300 ரூபாயாக இருந்த உளுத்தம் பருப்பு மூட்டை 120 ரூபாய்க்கு விற்கிறது. துவரம் பருப்பு தற்போது 90 ரூபாயாக இருக்கிறது. கடலை எண்ணெய் டின் ஒன்றுக்கு 90 ரூபாய்க்கு விற்றது இப்போது 45 ரூபாய்க்கு விற்கிறது. புளி கிலோ 4 ரூபாய் விற்றது இப்பொழுது 1½ ரூபாய்க்கு விற்கிறது. இப்படி விலைகள் எல்லாம் குறைந்து இருக்கும்போது நம்முடைய கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் இருக்கும் பொன்னுசாமி ஓட்டலில் சாப்பாடு ஒரு ரூபாய் 85 பைசாவுக்குப் போடுகிறார்கள். ஓட்டலுக்கு வாடகை இல்லாமல் இடம் கொடுத்திருக்கிறார்கள். இப்படியிருந்தும் அங்கு போடப் படும் சாப்பாட்டின் விலை அதிகமாக இருக்கிறது. ஆகவே இந்த விலையைக் குறைக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் சொன்ன கருத்து, நம்முடைய சட்டசபைக் கமிட்டி பரிசீ லித்துத் தீர்மானிக்க வேண்டிய விஷயம். பொதுவாக விலைவாசிகள் குறைந்திருப்பதைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் விளக்கியதற்கு நன்றி.

## அயல்நாட்டு சேவலினங்கள்

* 232 வினா.—**திரு வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒயிட் லெஹகான், ரோடு ஐலண்ட் போன்ற மேனாட்டு சேவல் கள் வெய்யில் தாங்காமல் இறந்து விடுகின்றன என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** (அ) வெப்பமிக்க நிலைகளில் அயல்நாட்டுக் கோழிகளை வளர்ப்பதில் உள்ள சிக்கல்களை அரசாங்கம் அறியும்.

(இ) கோடையில் வெப்பம் தாக்குவதனால் கோழிகள் குறிப்பாக அயல்நாட்டுக் கோழிகள் பெருமளவு இறந்துவிடாமல் தடுப்பதற்குக் கீழ்க் கண்ட முயற்சிகளைக் கால்நடை வளர்ப்புத் துறையினர் எடுத்துள்ளனர்:—

(1) இப்பண்ணைகளுக்குப் போதுமான அளவு மருந்து உதவி யுடன் தொழில்நுட்ப வல்லுநர் கருத்துரையும் அளிக்கப்பட்டு வருகிறது.

(2) பறவைகளின் தலைகளிலும் சுற்றுப்புறங்களிலும் நீர் தெளிக்கப்படுகிறது. சில வேளைகளில் மிகுந்த வெப்பம் உள்ளபோது பறவைகள் அப்படியே நீரில் அமுக்கி எடுக்கப்படுகின்றன.

(3) பறவைகளுக்கு அதிக அளவு நீர் வசதி செய்வதற்காக நீர்த் தொட்டிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. குடிநீரில் சில சமயங்களில் அவசியமான குணப்படுத்தும் மருந்துகளும் கோழி உணவில் பூச்சிகொல்லிப் பொருள்களும் சேர்க்கப்படுகின்றன. பெருமளவு கீரைகள் வழங்கப்படுகின்றன.

(4) குறிப்பாகக் கோடை மாதங்களில் அதிகக் கூட்டமாகப் பறவைகள் குழுமி இருப்பது தவிர்க்கப்படுகிறது.

(5) இயன்ற அளவு நல்ல காற்றோட்ட வசதியுடன் இடைவெளியும் அளிக்கப்படுகின்றது.

(6) கோணித் திரைகளில் அடிக்கடி நீர் தெளிக்கப்படுகிறது. இப்பறவைகளுக்கு விழல் வேய்ந்த கூடாரங்கள் அல்லது வைக்கோல் அல்லது ஓலை வேய்ந்த கூடாரங்கள் அமைக்கப்படுகின்றன.

(7) கூண்டுகளில் உள்ள பறவைகளுக்கு அதிக நிழல் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

(8) பறவைகள் இருக்க இயன்ற அளவு இடவசதி நல்ல முறையில் அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, ஒயிட் லெஹகான், ரோடு ஐலண்ட்ரெட போன்ற மேனாட்டுக் கோழிகள் அதிகமாக வளர்ப்பதற்கான நட்ப வெப்ப நிலை சரியாக இல்லையென்று சொல்லப்படுகிறது. ஒயிட் லெஹகான், ரோடு ஐலண்ட்ரெட்போன்ற மேனாட்டுக் கோழிகளையும், நம்நாட்டுக் கோழிகளையும் இணைத்து புதிய இனங்களை உண்டாக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அதைத்தான் அரசாங்கம் இப்பொழுது செய்துகொண்டிருக்கிறது. இப்போது வெளிநாட்டுக் கோழிகள் எங்கும் கிடையாது.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister for Agriculture the tracts which are having conditions suitable for rearing White Leghorn and Rhodes Island varieties?

**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி:** தலைவர் அவர்களே, குளிர்ப் பிரதேசமான இடங்களில் இந்தக் கோழிகளை வளர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். குறிப்பாக, கனம் அங்கத்தினருடைய தொகுதி வசதியான இடமாக இருக்குமென்று கருதுகிறேன்.

**திரு. டி. மார்டின்:** தலைவர் அவர்களே, எந்தக் கோழிப்பண்ணையில் அதிகமான கோழிகள் இறந்திருக்கின்றன?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி கேட்டால் விவரமான அறிக்கை தருகிறேன்.

**திரு செ. பாலசுப்பிரமணியன்;** தலைவர் அவர்களே, 'டீப் லிட்டர் மெதெட்' (Deep-litre method) மூலம் கோழிகளை உற்பத்தி செய்கிறார்கள். இந்தக் கோழிகளை ஒரே கொட்டகையில் போட்டு அடைத்து வைப்பதால், அந்த இடத்தில் கழிவுப் பொருள்கள் எல்லாம் அதிகமாகச் சேர்ந்துவிடும் காரணத்தால், சில வியாதிகள் வருகின்றன. இதைத் தடுக்க கொட்டகையை அடிக்கடி சுத்தம் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளுமா?



**மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி;** கோழியினுடைய கழிவுப் பொருள்கள், சாணம் எல்லாம் விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டு மென்ற கருத்திலேதான் அவை சேகரிக்கப்படுகின்றன. இந்த உரம் விவசாயத்திற்கு நல்ல பலனை அளிக்கக்கூடியது. கொட்டகையை அடிக்கடி சுத்தம் செய்யும் நிலைமை இருந்து வருகிறது.

## *Tourist homes in Tirunelveli district*

* 233. Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state whether there is any proposal to construct tourist homes in Ovari, Manapad and Alanthalai in Tirunelveli district?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இல்லை.

**திரு டி. மார்டின்;** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே திருச்செந்தூர் தாலூகாவில் மணப்பாடு, ஆலந்தலை என்ற கிராமங்களும், நாங்குனேரி தாலூகாவில் உவரி என்ற கிராமமும் கிறிஸ்தவர்களுடைய புண்ணிய க்ஷேத்திரமாக இருக்கின்றன. தமிழகம் எங்கிருந்தும் ஏராளமான கிறிஸ்தவர்கள் இந்த இடங்களுக்கு வரும்படியான நிலைமை இருக்கிறது. பிரயாணிகள் தங்குவதற்கு இடமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த இடங்களில் பிரயாணிகள் தங்குவதற்காக சுற்றுலா மாளிகை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யுமா? அல்லது தனியார் யாராவது மாளிகை அமைக்க முன்வந்தால் அரசு உதவி செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** நடப்பு ஆண்டில் திருச்செந்தூர், குற்றாலம் ஆகிய இரண்டு இடங்களிலும் சுற்றுலா மாளிகை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டங்கள் முடிவுற்றதும், அடுத்த ஆண்டிலே திருநெல்வேலி மாவட்டத்திலே புதிதாகச் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம் பரிசீலிக்கப் பட்டு மேற்கொள்ளப்படும்.

**திரு. நா. சௌந்திரபாண்டியன்:** திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உவரி புண்ணிய க்ஷேத்திரத்திற்கு மாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வசதிகள் இல்லை. மேலும் இது கடற்கரையோரமாக இருப்பதால், பிரயாணிகள் தங்குவதற்கும் வசதியில்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, பிரயாணிகள் விடுதி கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்ட திருச்செந்தூர், குற்றாலம் திட்டங்கள் முடிவுற்றதும் இது பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**ஹாஜி ம. மு. பீர்முகம்மது:** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பொட்டல்புதூரில் இருக்கும் மொகைதீன் ஆண்டவர் தர்க்காவுக்கு ஜாதி சமய பேதமுற்று எல்லா சமய மக்களும் வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வசதியான இடமில்லை. ஆகவே பொட்டல் புதூரிலே ஒரு சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சிகள் எடுத்துக்கொள்ளுமா? பிரயாணிகளின் சௌகரியத்தை முன்னிட்டு இந்த பிரயாணிகள் விடுதியைக் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** ஊரே பொட்டல் புதூர் என்ற பெயராக இருக்கிறது. (சிரிப்பு) ஏற்கெனவே நான் கூறியபடி திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு திட்டங்களும் முடிவுற்ற பிறகு, மற்ற இடங்களில் பிரயாணிகள் விடுதி கட்டுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.

## முத்துப்பேட்டை கூட்டுறவு அர்பன் பாங்கு

*234. வினா.—**திரு ஆ. கு. சுப்பையா:** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தஞ்சாவூர் மாவட்டம், முத்துப்பேட்டை கோவாப்பரேடிவ் அர்பன் பாங்கில் கையாடல் நடந்தது உண்மையா ?

(இ) ஆமெனில் எவ்வளவு ரூபாய் கையாடல் நடந்துள்ளது ?

(உ) கையாடல் செய்தவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம். உண்மை.

(இ) ரூ. 17,429·91 கையாடல் செய்யப்பட்டது.

(உ) அந்த வங்கியின் சில பணியாளர்களே இந்தக் கையாடலுக்குப் பொறுப்பாளிகள் என்று தெரியவருகிறது. இது காவல் துறையின் புலனாய்வில் இருந்து வருகிறது. வங்கியின் பணியிலிருந்து அந்தப் பணியாளர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள்.

வங்கியின் நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர் ஒருவர் இதன் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். கையாடப்பட்ட தொகையை இவ்வங்கியின் முன்னாள் நிர்வாகிகளிடமிருந்து வசூலிப்பதற்கான ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**திரு ஆ. கு. சுப்பையா:** இந்தக் கையாடல் தொகை வசூலிக்கப்பட்டுவிட்டதா ? இல்லை என்றால் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏழாயிரத்துச் சொச்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டுவிட்டது. மீதி பத்தாயிரத்துச் சொச்சம் வசூலிக்கப்படவில்லை. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** இம்மாதிரிக் கையாடல் செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் தஞ்சை மாவட்டத்தில் அதிகம் இருப்பது போலத் தோன்றுகிறது. இப்படி நடப்பதைத் தவிர்ப்பதற்கு கூட்டுறவுச் சட்டத்தையே திருத்தி அமைக்க கூடிய சீக்கிரம் அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தக் கையாடல் 1—3—64-இல் கண்டுபிடிக்கப்பட்டது. 18—8—65-இல் தான் என்க்வயரி ஆரம்பமாயிற்று. 28—9—65-இல் தான் முடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டிருப்பது உண்மை. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை எடுத்துக்கொண்டவுடன் 9—4—67-இல் நடவடிக்கை எடுக்க போலீஸ் துறையினிடத்தில் உடனடியாக ஒப்படைத்துவிட்டது. பொதுவான நிலைமைகளைப் பற்றி ஆராய இந்த அரசால் நியமிக்கப்பட்டுள்ள குழு வேலையைத் தொடங்கிவிட்டது.

**திரு. பெ. சீனிவாசன்:** கூட்டுறவு சங்கங்களில் ஊழல் ஏற்படுகிறபோது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வந்தவுடனேயே உயர் நீதிமன்றத்திற்கு வந்து ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். ஸ்டே விடுபடுவதற்கு அதிக நாட்கள் ஆகின்றன. சங்கப் பணத்தை எடுத்தே இந்த நேரத்தில் போக்குவரத்துச் செலவுகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். ஆகவே தனி நீதிபதியையாவது நியமித்து கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்படுகிற ஊழல்களை உடனுக்குடன் பரிசீலித்து பைசல் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய குறை நியாயமானது. ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கு ஷோ காஸ் நோட்டீஸ் கொடுத்தவுடனேயே ஹைகோர்ட்டில் ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். ஸ்டே கொடுக்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஸ்டே கொடுக்கிற காரணத்தினால் பல நிர்வாகத் தொந்தரவுகள் அதிகப்பட வாய்ப்பு இருக்கிறது. அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் உயர் நீதிமன்றத்திற்கு இவற்றை எடுத்துக்காட்டி, இதுபோன்ற நிலைமையை மாற்ற முயற்சி எடுத்து வருகிறது.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** கையாடல் செய்தவர்களுடைய பெயரைக் குறிப்பிட முடியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒருவர் பெயர் திரு கே. கிருஷ்ணன், இன்னொருவர் திரு ஜி. வேலுநாயகன், மற்றொருவர் திரு. ஆர். கோவிந்ததாஸ்.

**திரு. ந. சோமசுந்தரம்:** கூட்டுறவுத் துறையில் இதுபோன்ற கையாடல்கள் அதிகரித்துக்கொண்டு வருவதால், கிராம உத்தியோகத்திற்கு விண்ணப்பம் போடுகிறவர்களுக்குச் சொத்துக்கள் இருக்க வேண்டும் என்பது போல, இந்தத் துறையில் சொத்து உடையவர்கள்தான் நிர்வாகிகளாக வரமுடியும் என்பதாகச் செய்ய முடியுமா ? கையாடல் செய்தவர்கள் தற்கொலை செய்து கொண்டுவிட்டாலும் அதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏராளமான நட்டம் வருவதைத் தவிர்க்க, அந்தப் பணத்தை அவர்களுடைய சொத்தின்மூலம் வசூலித்துக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த அரசு பதவிக்கு வந்தபிறகு கையாடல் கேசுகளில் வழக்குப் போட்டவுடனேயே சிலர் தற்கொலை செய்து கொண்டுவிட்டதான செய்தி உண்மை. அதற்காக இப்படி ப்ராபர்டி க்வாலிபிகேஷன் அமைக்க முடியுமா என்பது சட்டப்படி ஆராயப்படவேண்டிய விஷயம்.

**திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர்:** கூட்டுறவு சங்கங்களில் கையாடல் கண்டுபிடிக்கப்பட்டால் கூட்டுறவு டெபுடி ரிஜிஸ்திரார் மூலம் கேஸ் தொடங்குகிறார்கள். கேஸ் சீக்கிரத்தில் முடிக்கப்படுவதில்லை. 3 ஆண்டுக் காலமாக எங்கள் ஊரிலேயே ஒரு கேஸ் அப்படி இருந்து கொண்டிருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்த முடியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதுபற்றிய வழக்குகளில் காலதாமதம் ஏற்படுவது உண்மை. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன்—ஆடிட் விங்கை அதிகப்படுத்தினால் காலதாமதம் குறைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. போலீஸ் இலாகாவில் இதற்காக அதிக அதிகாரிகள் போடவேண்டியதாக இருக்கிறது என்று சொல்லப்பட்டது. அப்படிப் போடுவதை அரசாங்கம் ஒப்புக்கொண்டு உடனடியாக உத்தரவு போடப்பட்டிருக்கிறது. சட்ட விதிகளுக்குட்பட்ட ப்ரொசிஜரல் முறையை எளிதாக்க வேண்டும் என்பதற்கு அதுபற்றி இப்போது அமைக்கப்பட்டுள்ள குழு பரிசீலிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, whereas misappropriation of funds is considered to be a criminal offence and whereas steps are being taken after the establishment of the crime to recover the money that has been misappropriated, has any criminal action been taken against the persons concerned when the offence has been proved beyond any reasonable doubt?

[1968 மார்ச் 16

மாண்புமிகு திரு செ. மாதவன்: இந்த வழக்குகளில்கூட கனம் உறுப்பினர் சொன்னமாதிரி கிரிமினல் குற்றத்தின்கீழ் போலீஸ் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறது. அடுத்து சர்சார்ஜ் ப்ரோசீடிங்ஸ் அடிப்படையில் கையாடல் செய்தவர்களிடம் இருந்து அந்தப் பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

THE HON. THIRU C. N. ANNADURAI: Sir, I would like to get a clarification from the hon. Member. He speaks about the criminal action being taken. What does he mean by that.

THIRU K. VINAYAKAM: Under I.P.C., misappropriation of funds is a crime and if the crime is established, separate action can be launched against him in a criminal court and if it is proved, he can be sent to prison.

THE HON. THIRU C. N. ANNADURAI: It is not a criminal act but the hon. Member speaks about criminal action.

THIRU K. VINAYAKAM: Remedial action (laughter).

### புத்தூர்-மா. கொத்தங்குடி சாலை

*235—வினா. திரு எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, புத்தூரிலிருந்து மா. கொத்தங்குடி கிராமத்திற்கு ரோடு போடும் வேலை எந்த நிலைமையிலுள்ளது ?

(இ) அது எப்போது முடிவு பெறும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) புத்தூர் கிராமத்திலிருந்து ஆறு பர்லாங் தொலைவிற்கு அச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

(இ) 1968 ஜூன் திங்களில் இந்த வேலை முடிவுறுமென எதிர் பார்க்கப்படுகிறது.

### *Retiring age of Govenment servants.*

*13. Q.—THIRU A. M. RAJA: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government are contemplating to fix the retiring age of Government servants as 50 as in the case of Central Government servants?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இல்லை.

திரு. ஏ. எம். ராஜா: முற்பட்ட வகுப்பினர் அரசாங்க வேலைகளில் இருக்கின்றனர். தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் இப்போதுதான் உதவிப் பணம் பெற்று படித்து முன்னுக்கு வருகின்றனர். இவர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு கிடைக்க அதிகாரிகள் ஓய்வுபெறும் வயதைக் குறைக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1968 மார்ச் 16]

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை: தலைவர் அவர்களே, கொடுத்திருக்கிற கேள்வியில்

'Whether the Government are contemplating to fix the retiring age of Government servants as 50 as in the case of Central Government servants'

என்றுதான் இருக்கிறது. மத்திய அரசு செய்திருக்கிற ஏற்பாட்டை நாமும் மேற்கொள்ள வேண்டும் என்று அவர்களிடமிருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இப்போது நம்முடைய அரசில் சில குறிப்பிட்ட வேலைகளுக்கு 55 வயதை 58 ஆக உயர்த்துவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் சொன்னதுபோல நிரம்பப்பேர் வேலைகளுக்கு வருவதை—ஓய்வு வயதை நீட்டிக்கொண்டே போனால்—தடை செய்யும், தேக்கம் ஏற்படச் செய்யும் என்பதை உணர்ந்த இந்த அரசு அதைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: ஐயா, நம்முடைய அரசிலேயும் 55 வயதிலிருந்து 58 வயதாக சில குறிப்பிட்ட வேலைகளைப் பொறுத்த வரை உயர்த்தப்பட்டிருக்கிறது. இதை மாற்றி எல்லோருக்கும் பொதுவாக எந்த டிபார்ட்மெண்டாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் ஒரேமாதிரியாக 55 வயது என்று முடிவு செய்து அதைக் கைக்கொள்ள அரசாங்கம் முன்வருமா ? முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: 55 வயதிலிருந்து 58 வயது வரையில் நீடிப்புத் தருவது என்பது சில குறிப்பிட்ட துறைகளிலே அவசியமானால் மேற்கொள்ளப்படுகிறது. அது எல்லாத் துறைகளுக்கும் பொருந்துமென்ற முறையில் 55 வயதிலிருந்து 58 வயதாகப் பொதுவாக நீடிக்கப்படவேண்டுமென்பதை, இந்த அரசு கொள்கையாக ஏற்றுக் கொள்ளவில்லை. மத்திய அரசு, 50 வயதிலே விலகக் கொள்ளலாம் என்பது பற்றி இன்னமும் யோசனையில்தான் இருக்கிறது என்று உணர்கிறேன். அதிகப்பேர்கள் வேலைக்கு வரவேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்பதால் 55-இல் விலகவேண்டியது தேவை, நியாயம் என்பதை இந்த அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: 50 வயதாக ஆக்குவதற்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 55 வயது வரையிலாவது இருக்கக்கூடிய முறையிலே அதற்குமேல் போகாமல் இருக்கவேண்டும். நீடிப்பு அவசியம் என்கின்ற பெயராலே அவசியமற்ற சன்னையிலே இருக்கிறதே, அதைப் போக்குவதற்கு 55 வயதுக்கு மேல் நீடிக்கக்கூடாது என்பதற்கு உறுதியாக முடிவு எடுக்கப்படுகிறதா ? மத்திய சர்க்காரிலே 55 வயதிற்கு மேல் எக்ஸ்டென்ஷன் செய்யக்கூடாது என்று இதே அவையிலே தீர்மானம் போட்டு அங்கே அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் அவர்களுடைய இரண்டாவது யோசனைக்கு இப்பொழுது எந்தவிதமான அவசியமும் இல்லை. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் சில குறிப்பிட்ட வேலைகளுக்குத்தான் 55 வயதிற்கு மேலும் பதவி நீடிப்பு சில வேளைகளில் தேவைப்படுகிறது. பொதுவாக அது தேக்காமல் பார்த்துக்கொள்வதைப் பற்றி இந்த அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு எஸ். இராமச்சந்திரன்: பொறியியல் வல்லுநர்கள் விலகிக்கொள்ளும் வயது 58 ஆக இருக்கிறது. 55 வயதிலே அவர்கள் விலகக்கூடிய நிலைமை ஏற்பட்டால் அவர்கள் பெற்ற அனுபவமும் அறிவும் அவர்கள் தனித் தொழில்கள் ஆரம்பிப்பதற்குப் பயன்படலாம். நாட்டில் தொழில் வளர்ச்சியும் பெருகும். ஏராளமான பொறியியல் வல்லுநர்கள் வேலையில்லாமலிருப்பதாலே அவர்களுக்கு வேலை தரும் வகையில் ஓய்வுபெறும் வயதை 58-லிருந்து 55-ஆகக் குறைக்க அரசு யோசனை செய்யுமா ?

[1968 மார்ச் 16

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினர் எடுத்துச் சொன்ன யோசனையின் முறையிலேதான் அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. டி. மார்டின்:** நீதிபரிபாலனத் துறையிலே எக்ஸ்பீரியன்ஸ் மிகவும் அவசியப்படுகின்ற காரணத்தால் தமிழகத்தில் இப்பொழுது பணியாற்றுகின்ற சப் ஜட்ஜ்களின் ரிடையர்மெண்ட் வயதை 55-லிருந்து 58-ஆக உயர்த்துவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ? இல்லையென்றால், அதைப்பற்றி பரிசீலனை செய்து சீக்கிரம் ஒரு முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** 55 வயதிலிருந்து 58 வயதாக உயர்த்துவது என்ற திட்டமே நீதித்துறையிலே இருந்துதான் ஆரம்பமாயிற்று. கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனை கவனிக்கப்படும்.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ:** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலே வேலை செய்கின்ற ஆசிரியர்களின் ஓய்வுபெறும் வயது 60-ஆக இருக்கிறது. ஆனால் அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், அதிகாரிகள் இவர்களின் ஓய்வுபெறும் வயது 58-ஆக இருக்கிறது. இந்த பாரபட்சம் நீக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினர் சொன்ன யோசனை உரிய நேரத்தில் உரிய முறையில் கவனிக்கப்படும்.

### *Complaints of corruption charges*

*23 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to State the number of complaints of corruption charges received against I.A.S. Officers in the State from the years 1965 to 1967?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஒன்று மட்டும்.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது விசாரணை நடக்கவேண்டுமென்றால், தலைமைச் செயலாளரின் அனுமதி பெறவேண்டுமென்று விதி இருக்கிறது. தலைமைச் செயலாளரும் ஐ.ஏ.எஸ். ஆக இருப்பதால் சந்தேகத்திற்கு இடம் இருக்கிறது. ஆகவே இந்த விதியை மாற்றி தலைமைச் செயலாளரின் அனுமதி பெறுவதற்குப் பதிலாக முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற வேண்டுமென்று விதியை மாற்ற அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் அங்கத்தினருடைய மறைமுகமான குற்றச்சாட்டு ஆதாரமற்றது. தலைமைச் செயலாளர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பதாலே மற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது குற்றங்கள் வந்தால், அவற்றைக் கவனிக்கமாட்டார்கள் என்று கூறுவது தவறு. ஏனென்றால், இப்பொழுது தலைமைச் செயலாளர் அவர்களால்தான் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தாலும் கவனிக்கப்பட்டு இருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, for the past several years we have been stressing that the root of corruption is political corruption, not even the corruption of officers. When the present ruling party was in the Opposition, the present Hon. Minister for Law was good enough to bring forward a Bill enjoining the declaration of



1968 மார்ச் 16]

assets of all members including ministers. Unless the members of the Legislature including the ministers take a decision that they will lay their cards on the table, there will not be much improvement. Will the Chief Minister, in whom the entire Tamilnad has great confidence, show us the way?

THE HON. THIRU C. N. ANNADURAI : While accepting the suggestion of the hon. Member I will add that that will not be the end of corruption. Corruption takes place by various other methods. Whenever there is greater economic activity and whenever there is the desire to get quick returns and greater profits by underhand methods, corruption is bound to take place. But more depends upon the depravity of human nature than the political aspect of it. Anyhow in order to exonerate ourselves, we politicians are prepared, just as our hon. Friend is prepared, to disclose all our assets. But my only apprehension is that even in that disclosure, there should not be corruption.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, அகில இந்திய சர்வீஸை மத்திய சர்க்கார் அதிகரித்துக்கொண்டே போகிறதே, இதைத் தடுத்து நிறுத்துவதற்கு நம்முடைய மாநில அரசு முயற்சியெடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இது இந்தக் கேள்வியோடு தொடர்பு கொண்டதல்ல என்றாலும், அகில இந்திய சர்வீஸ்களை அதிக அளவுக்கு விரிவாக்கிக் கொண்டு வருவதை இந்த அரசு விரும்பவில்லை என்று மத்திய அரசுக்கு இந்த அரசு பலமுறை வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, whereas I am not interested in the name of the person who committed the offence, what was the offence committed, the amount involved, the *modus operandi* which the Government followed to find out the corruption and how was it disposed of? Will the Chief Minister agree with me when I say that, unless the average national character of every human being, let him be an officer or politician or anybody else, improves, there will not be an end to corruption in our country?

THE HON. THIRU C. N. ANNADURAI : While accepting the general thesis of my hon. Friend that a particular section of society will be only in the nature of the society as a whole, as far as this particular case is concerned, the hon. Member wants to know what has been done. The enquiry has been completed, the report has been submitted to the Government and it is under study and my Friend will accept that it will not be prudent at the present stage to divulge all the facts concerned with that.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் உறுப்பினர்களால் அவ்வுரை சரிப்பார்க்கப்பட்டது என்பதை **குறிக்கும்.**]

## 2. அவையுரிமைக் கேள்வி

### "சிலம்பொலி" வார இதழில் பேரவை குறித்து வந்துள்ள செய்தி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, திரு. ந.தருமலிங்கம் அவர்கள் ஓர் அவையுரிமைக் கேள்வியைக் கொண்டு வருகிறார்கள்.

**திரு. ந. தருமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்ட பேரவையின் 187-வது விதி (1) (2) உட்பிரிவுகளின்படி அடியிற்கண்ட அவையுரிமைக் கேள்வியை நான் எழுப்புகிறேன்.

"மதுரையிலிருந்து வெளியாகும் 11—3—1968 தேதியிடப்பட்ட சிலம்பொலி என்ற வார ஏட்டில் 4-ம் பக்கத்தில் "இது என்ன சட்ட சபையா? சந்தைக்கடையா? சட்டசபை மெம்பர்கள் தூங்குகிறார்களா?" என்று எழுதப்பட்டுள்ளது என்பதால் நான் அவையுரிமைக் கேள்வியைக் எழுப்புகிறேன்."

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எழுப்பட்டிருக்கின்ற பிரச்னை உரிமைப் பிரச்னையா என்று பார்த்தால் உரிமைப் பிரச்னையின் கீழேதான் வருகிறது. அது உரிமைப் பிரச்னையின்கீழ் வருகிறதா இல்லையா என்பது தலைவர் அவர்களின் முடிவைப் பொறுத்தது. சட்டசபையா சந்தைக்கடையா என்று கேட்டிருப்பதிலிருந்து அதிலிருந்து வருகின்ற பொருள் சந்தைக்கடைதான் என்ற தன்மைக்குத் தான் பொருள் வருகின்றது. இங்கே நான் மதுரையைப் பற்றி பேசுகின்ற பொழுது கைது செய்யப்பட்டதாகக் கூறியதாக போடப்பட்டிருக்கிறது. நான் இங்கே பேசியபொழுது இதுவரை யாருமே கைது செய்யப்படவில்லை என்பதைத்தான் சொல்லியிருக்கிறேன். நான் குறிப்பிடும்பொழுது "இது சம்பந்தமாக இரண்டு வழக்குகள் வந்திருக்கின்றன என குறிப்பிட்டுள்ளேன்.

Under sections 341 and 323 a case is registered against Velu and three others. Under sections 147, 341 and 323 a case is registered against Nedumaran and five others.

ஆக, இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன" என்று சொன்னேனே தவிர, யாரும் கைது செய்யப்பட்டதாகச் சொல்லவில்லை. 'உண்மைக்குப் புறம்பானதைக் கூறியிருக்கிறார்கள், ஆகவே, சட்ட மன்றமா சந்தைக் கடையா' என்று எழுதப்பட்டிருக்கிறது. அவ்வாறு எழுதியிருப்பதிலே உரிமைப் பிரச்சினை இருக்கிறது. ஆயினும் அந்தப் பத்திரிகை கவனிக்கப்பட வேண்டிய அளவுக்கு உள்ளதல்ல. ஆகவே, இதை உரிமைக் குழுவுக்கு விட வேண்டிய அவசியமில்லை. எச்சரிக்கை செய்து விட்டால் போதுமானது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மதுரையில் 4-ம் தேதி நடை பெற்ற சம்பவங்கள் குறித்து 5-ம் தேதியன்று மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பொன்னப்ப நாடார், இராமமூர்த்தி, சித்தன் ஆகியோர் இந்தச் சட்டப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தெளிவான விளக்க உரையைத் தந்திருக்கிறார்கள். இந்த மன்றம் அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. 'சட்டசபை மெம்பர்கள் தூங்குகிறார்களா?' என்று கேட்பது முறையற்றதாகத்தான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது போல், கைது செய்யப்பட்டதாகக் கூறாத ஒரு கூற்றை, அவ்வாறு கூறியது போல் அந்தப் பத்திரிகை வெளியிட்டிருக்க கூடாது மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது அது இந்த மன்றத்தின் நிலையைப் பாதிப்பதாக இருக்கிறது. இருப்பினும், இந்தச் சபையின் முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், இந்தப் பத்திரிகை அவ்வளவு விளம்பரம் உள்ள பத்திரிகை அல்ல என்ற காரணத்தால். இப்படிப்பட்ட சிறு செய்திகளுக்கெல்லாம் இந்த மன்றம் பெரிய அளவுக்கு மதிப்பளிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால், அந்தப் பத்திரிகையை எச்சரிக்கிறோம் என்ற அளவோடு இதை முடித்துக் கொள்கிறேன்.



## 3. நடைமுறைக் கேள்வி,

### ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி.

THIRU J. JAMES : Sir, on a point of order. On 14th March 1968 I gave notice of a motion under Rule 42 of the Assembly Rules. The Hon. Speaker also did not refuse to give his consent to the motion in his Chamber. Yesterday also the Chair announced in the House that the matter would be taken up today. But unexpectedly I received a communication from the Secretary this morning that the Hon. Speaker has withheld his consent to the above motion. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். இந்த மன்றத்திலே பல முறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எந்தெந்த நிகழ்ச்சிகளுக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்க வேண்டுமோ, அவற்றை மட்டுமே ஒத்தி வைப்புத் தீர்மானம் என்பதன் கீழ் கொண்டு வரவேண்டுமென்றும், கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்கீழ் வருகின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ் கொண்டு வரக் கூடாது என்றும் இந்த மன்றத்திலே பல முறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. 196[illegible]-ல

'If in spite of the Chair's pointing out that certain matters could not farm subject-matter of adjournment motion and the Assembly could not be made the forum for settling these matters in view of there being other machinery available for these purposes outside adjournment motions on such matters were given notice of, the Chair would rule them out of order in the Chamber itself and would not bring them before the House at all.'

என்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அறையிலே கொடுக்கப்பட்ட தீர்ப்பைப் பற்றி இந்த மன்றத்திலே விவாதிப்பது முறையல்ல. ஆகவே, ஏதாவது உறுப்பினர் அவர்கள் பேச வேண்டுமென்றால் அறையிலே வந்து சபாநாயகர் அவர்களோடு பேசிக் கொள்ளலாம்.

THIRU J. JAMES : Sir, I was not permitted to say whatever I wanted to say.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அறையிலே கொடுக்கப்பட்ட தீர்ப்பைப் பற்றி மறுபடியும் இந்த மன்றத்திலே எழுப்ப வேண்டாம்.

THIRU J. JAMES : Sir, I may be permitted to say what I have to say with regard to this matter. I do not want to say anything against the ruling of the Chair.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைப் பற்றிச் சொல்லுங்கள்.

THIRU J. JAMES : Sir, if it was ruled out in the Chamber I would not have raised this issue in this House. But on the other hand what took place yesterday was that the Chair announced in the House that the matter would be taken up today. Even otherwise, the practice allowed in this House so far is that the Member who has given notice of that motion will be permitted

to raise the matter in the House and also explain how it comes under Rule 50 (viii) of the Assembly Rules. But in regard to this matter no such opportunity is given. That is all that I wanted to say.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் அன்று கூறியது, இதைப்பற்றி நாளைக்கு முடிவு கூறுகிறேன் என்பதுதான். இந்த மன்றத்திலே எடுத்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லவில்லை. தயவு செய்து நிகழ்ச்சிக் குறிப்புகளைப் பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நான் ஏற்கெனவே கூறியது போல் அறையிலே தீர்ப்பு கொடுப்பதற்கு சபாநாயகர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அறையிலே கொடுத்த முடிவைப் பற்றி இந்த மன்றத்திலே எழுப்புவது முறையல்ல. அந்த ஒழுங்குப் பிரச்சினையாக எழுப்புவது ஒழுங்குப் பிரச்சினைக்கு உரியதல்ல.

Dr. H. V. HANDE : Sir, with regard to Rule 41 of the Assembly Rules, I want to say one thing. The main difficulty with regard to the motion under Rule 41 is that it is not taken up immediately. It takes about half-a-dozen days or one week or even ten days. So, my request is that if the Chair takes us into his confidence and asks the Government to give a reply to it immediately, there would not be any difficulty. If the Hon. Deputy Speaker gives a categorical assurance and the Hon. Leader of the House and the entire Cabinet view this matter much more seriously than what they are doing now and give the reply quickly there would not be this difficulty. That is all I wanted to say regard to this matter.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டு வருகிறபோது கூடியவரையில் விரைவாகச் செய்ய வேண்டுமென்ற முறை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. அதற்கான விவரங்களைச் சேகரித்து முழுமையாகத் தர வேண்டியிருப்பதால், உரிய துறைகளுக்குச் சென்றுவர சிறிது காலதாமத மாகிறது. கூடுமானவரையில் காலதாமதம் ஏற்படாமல் விரைவுபடுத்து வதற்கான முயற்சிகளில் அதிகக் கவனம் செலுத்தப்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். அது பற்றிய முடிவை இன்று கூறுவதாகச் சொன்னார்கள். இப்போது சனம் அங்கத்தினர் அலுவலகத்தில் இருந்து நோட்டீஸ் வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அலவ் பண்ணுவது, டிஸ்அலவ் பண்ணுவது என்பது வேறு விஷயம். இந்த சபையின் கவனத்திற்கு வந்துவிட்ட பிரச்னையின் மீது தீர்ப்பு, இந்தச் சபையிலே கூறப்பட வேண்டும். அவ்வாறு செய்வதற்கு பதிலாக நோட்டீஸ் கொடுப்பது சரியானதுதானா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சபாநாயகர் அவர்கள் இத்தகைய ஒத்தி வைப்புத் தீர்மானங்களின் பேரில் முடிவு எடுப்பதற்கு அதிகாரம் பெற்றவர். அதற்கான முறைகளும், அதிகாரமும் அவரிடத்தில் இருக்கின்றன. அதைப் பற்றிச் சபையில் விவாதிப்பது கூடாது என்பதற்கான விதிகள் இருப்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** 42-வது விதிப்படி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கக்கூடிய நேரத்தில் அதை அனுமதிப்பதற்கோ, நிராகரிப்பதற்கோ சபாநாயகர் அவர்களுக்கு பரிபூரண அதிகாரம் உண்டு. அனுமதிக்கலாம் அல்லது மறுக்கலாம் அல்லது 41-வது விதியின்கீழ்





கொண்டுவா என்று சொல்லலாம். அவ்வாறு சொல்வதை வரவேற்கிறேன். தங்களுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு தயாராக இருக்கிறேன். ஆனால் 41-வது விதிப்படி நான் கொடுத்த தீர்மானம் 1½ மாத காலம் ஆகியும் இதுவரைக்கும் வரவில்லை. பிரிவிலேஜ் மோஷன் கொடுத்து 10 நாளைக்கு மேல் ஆகிறது, இதுவரை வரவில்லை. இதற்கெல்லாம் விதி இல்லையா ? இந்தச் சபையில் உடனுக்குடன் வரக் கூடிய பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. இதைப்பற்றி அமைச்சர் களுக்கே நன்றாகத் தெரியும். அவர்களே சென்ற காலத்தில் வீறுடன் போராடி இருக்கிறார்கள் என்பது தெரிந்த விஷயம். ஆகவே, இது போன்றவற்றை உடனுக்குடன் கொண்டு வருவது நலமாக இருக்கும் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையிலே அதிலிருந்த ஒரு வாசகங்களை நீக்கி விட்டு கொடுக்குமாறு கேட்டார்கள். அவற்றை நீக்கி திருத்திக் கொடுத்த பிறகு நான் கொடுத்த இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங் களில் இன்றைய தினம் ஒன்றையும், நாளைய தினம் ஒன்றையும் எடுத்துக் கொள்வதாக உறுதி கொடுத்தார்கள். இவ்வாறு கூறியது குறிப்பில் கூட இருக்கிறது. இந்த அளவுக்கு எனக்கு அனுமதி கொடுத்த பிறகு இன்றைய தினம் அதற்கு அனுமதி இல்லை என்று சொல்வது முறையா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அறையில் கொடுக்கிற அனுமதியெல்லாம் அனுமதியாகாது. இந்த அவையில் கொடுக்கிற அனுமதிதான் அனுமதியாகும். காரியாலயத்திலிருந்து வந்தது என்று சொன்னார்கள். அது, பேரவைத் தலைவர் அவர்கள் கையெழுத்து இட்ட பிறகு அதைச் செயல்படுத்தும் வகையில் செயலாளர் அவர்கள் அறிவித்தது—அதை செயலாளர் அவர்கள் கொடுத்தாலும் பேரவைத் தலைவர் அவர்கள் கொடுத்ததுதான். அவை முன்னவர் அவர்கள் கொடுத்த உறுதிமொழியை எந்த அளவிற்கு நிறைவேற்றினால் இந்த கவன ஈர்ப்புகளுக்கான ஸ்டேட்மெண்ட்களை கொடுக்க முடியுமோ அப்படி கொடுக்க நானும் அவர்களோடு சேர்ந்து உறுதி கூறிக்கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### கோவை டெக்ஸ்டூல் கம்பெனியில் தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படாமை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. [illegible] அவர்கள் சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட அவசரமும், பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு சட்ட அமைச்சர் கவனத் திற்குக் கொண்டு வர ஒரு அறிவிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

"கோயம்புத்தூர் என்ஜினீயரிங் டெக்ஸ்டூல் கம்பெனியின் நிர்வாகத் தினர் கதவடைப்பு செய்தபோது லேபர் கமிஷனர் தலையிட்டு கம்பெனியை திறக்க நடவடிக்கை எடுத்தபடி ஆணையிட்டும், நிர்வாகத்தினர் எல்லா தொழிலாளர் களையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளாததால், பல தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பது பற்றியும், அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரமும், பொது முக்கியமுமான காரியத்தை திரு. என். மருதாசலம் அவர்கள், மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள்."

The Hon. Thiru S. MADHAVAN : Mr. Deputy Speaker, Sir, in September 1966, the Textool Company Limited, one of the leading textile machinery manufacturers in Madras State having about 4,000 workers, represented that, owing to the slump in the Textile Machinery trade, they are trying to diversify their lines

of production by manufacturing diesel engines, special steel, tractors and rice mill machinery. But, for this purpose, they could not raise the necessary finance from the banks due to credit squeeze, and also were unable to float debentures as their fixed assets have all been mortgaged. The Bank of India, Bank of Baroda and Canara Bank with whom the company is having transactions, were unable to finance further on account of heavy overdrafts already taken. The company's efforts to raise additional loans from the Madras Industrial Investment Corporation and Industrial Financial Corporation have also proved futile. They, therefore, came up to the Government for guarantee assistance to the tune of Rs. 50 lakhs, to enable them to raise the required funds from the Commercial Banks, on the strength of the Government guarantee. They have also made the following requests so as to enable them to overcome their crisis :—

(1) The labour union of the mill should agree to the "no work no wages" provision at least for a temporary period of one year;

(2) the Madras Industrial Investment Corporation should extend financial assistance by relaxing relevant rules;

(3) at least a couple of co-operative textile mills should place orders with the Textool Company for machines required for expansion and pay 30 per cent cost as advance; and

(4) the Government should grant loan assistance to the tune of about Rs. 20 lakhs.

This Government recommended the company's case at Ministerial level, for guarantee assistance to the tune of Rs. 30 lakhs to the Government of India, but the Government of India have declined to extend any financial assistance in this individual case, as they are taking general revival measures to put the textile machinery trade on a sound footing.

The workers of the company had been putting up with delayed payment of wages and non-payment of lay-off compensation and other dues for several months prior to July 1967. As the management were not able to find the money even to pay gratuity for some 500 and more workers who are ready to leave the company to avoid surplus labour, the workers went on strike from 31st July 1967 and the management declared lock-out with effect from 1st August 1967. The total number of workers affected is about 4,000.

The Commissioner of Labour has pointed out, that the ailment of the company is chronic and drastic remedial measures are necessary. The Commissioner therefore, suggested that this is a fit case for investigation by the Government of India under the provisions of Industrial (Development and Regulation) Act, 1951 and has recommended that the Government of India may be addressed in the matter. The proposals are under consideration of Government.



The Special Deputy Commissioner of Labour held several rounds of discussion with the representatives of the management and the labour and an agreement has since been arrived at under which the company was to be reopened with effect from 20th November 1967 forenoon. The salient features of the agreement are detailed below :

(1) To absorb about 1,614 workers in the first instance which will improve within a fortnight to about 1,800 workers and finally 2,100 workers by 15th December 1967;

(2) Rs. 15 each to be paid as compensation to the workers of permanent category who remain unabsorbed by 15th December 1967;

(3) constitution of a Committee representing the Government, the management and the labour to discuss and settle other outstanding issues and also to explore the possibilities for improving the absorption of labour after 15th December 1967;

(4) the management shall take all reasonable steps to ensure that the amount advanced by the Government are utilised for the purchase of raw materials used in the reopened sections and the payment due to workers; and

(5) other outstanding issues will be discussed in the Tripartite meeting by the end of November 1967.

In order to enable the Textool Company to continue to function and give employment to labour, the Government have approved the proposal of the Madras State Khadi and Village Industries Board, to place orders for the supply of 200 sets of 12 spindle charka sets at an estimted total cost of Rs. 9,09,000 (each Rs. 4 545) and to advance a loan of Rs. 7 lakhs from the Khadi Board in instalments with Government guarantee for the repayment of the loan. A loan of Rs. 2 lakhs has already been advanced to the company by the Khadi Board.

In accordance with the settlement, the strike has been called off and lock-out lifted from the forenoon of 20th November 1967. The Textool Company has since been reopened with the workers resuming duty in stages since 20th November 1967. The management have so far absorbed 2,094 workers and have assured that they will do their best to absorb steadily the targeted number of workers. A Committee has also been proposed to discuss and settle the outstanding issues. The Commissioner of Labour is pursuing the matter further.

திரு. என். மருதாசலம்: லேபர் கமிஷனர் எல்லாத் தொழிலாளர்களையும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று உத்தரவிட்டும் 300 தொழிலாளர்கள் எடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அந்த 300 தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த ஒப்பந்தப்படி கொஞ்சம் கொஞ்சமாக எவ்வளவு தொழிலாளர்களை எடுக்க வேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது இரண்டாயிரத்து சொச்சம் பேர்களை எடுத்திருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தில் ஏதாவது மீறப்பட்டிருக்குமானால் அது பற்றியும் பரிசீலிக்க இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக லேபர் கமிஷனர் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

## 5. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,64,200 க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, புதிதாக வழித்தடங்களுக்கு அனுமதி வழங்கும்போது சிறு உடைமையாளர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள:—

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,64,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் புதிய பஸ் ரூட்டுகள் திறக்க வேண்டியதின் அவசியத்தைப்பற்றி விவாதிக்க

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,64,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பாராவ் :** தலைவர் அவர்களே, தமிழக மோட்டார்—வண்டி வரி வசூல் செய்வதில், பணியாளர்கள் செலுத்தும் கவனத்தைப் பற்றி விவாதிக்க:—

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,64,200 ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**THIRU N. KASIRAMAN :** Sir, to discuss the measures to be taken to prevent tax evasion, I move :—

"That the allotment of Rs. 31,64,200 under Demand No. 2—Motor Vehicles Acts—Administration—be reduced by Rs. 100."



**திரு. என். வரதராஜன் :** ஐயா, லாரி விபத்துகளை தடுக்கும் முறையில் இரவு 12 மணி முதல் 3 மணி வரை லாரி போக்குவரத்தை தடுத்து முற்பகல் 10-30
நிறுத்தவேண்டியதன் அவசியத்தைப்பற்றி விவாதிக்க.

"கோரிக்கை எண் 2—மோட்டார்வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,64,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 30. மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் பேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,96,02,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து வெட்டுத் தீர்மானங்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஐயா, பஸ் ரூட்டுகளை தேசியமயமாக்க கூடாது என்பது பற்றி விவாதிக்க:

"கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,96,02,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஐயா, ஐம்பது மைலும் அதற்கு மேலுமுள்ள பஸ் ரூட்டுகளை அரசு உடைமையாக்கக் கோரி விவாதிக்க:

"கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,96,02,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஐயா, மோட்டார் போக்குவரத்தை இரவு நேரங்களிலும் நடத்துவது குறித்து விவாதிக்க:

"கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,96,02,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். பூபதி :** ஐயா, மோட்டார் போக்குவரத்தில் பொதுமக்களுக்கு அதிக வசதிகள் செய்யவேண்டியது பற்றி விவாதிக்க:

"கோரிக்கை எண். 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,96,02,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த ஒப்பந்தப்படி கொஞ்சங் கொஞ்சமாக எவ்வளவு தொழிலாளர்களை எடுக்க வேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது இரண்டாயிரத்து சொச்சம் பேர்களை எடுத்திருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தில் ஏதாவது மீறப்பட்டிருக்குமானால் அது பற்றியும் பரிசீலிக்க இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக லேபர் கமிஷனர் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

## 5. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,64,200 க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, புதிதாக வழித்தடங்களுக்கு அனுமதி வழங்கும்போது சிறு உடைமையாளர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள:—

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,64,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் புதிய பஸ் ரூட்டுகள் திறக்க வேண்டியதின் அவசியத்தைப்பற்றி விவாதிக்க

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,64,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பாராவ் :** தலைவர் அவர்களே, தமிழக மோட்டார்—வண்டி வரி வசூல் செய்வதில், பணியாளர்கள் செலுத்தும் கவனத்தைப் பற்றி விவாதிக்க:—

"கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,64,200 ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU N. KASIRAMAN : Sir, to discuss the measures to be taken to prevent tax evasion, I move :—

"That the allotment of Rs. 31,64,200 under Demand No. 2—Motor Vehicles Acts—Administration—be reduced by Rs. 100."



**திரு. என். வரதராஜன் :** ஐயா, லாரி விபத்துகளை தடுக்கும் முறையில் இரவு 12 மணி முதல் 3 மணி வரை லாரி போக்குவரத்தை தடுத்து நிறுத்தவேண்டியதன் அவசியத்தைப்பற்றி விவாதிக்க. முற்பகல் 10-30

"கோரிக்கை எண் 2—மோட்டார்வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 31,64,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 30. மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,96,02,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து வெட்டுத் தீர்மானங்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஐயா, பஸ் ரூட்டுகளை தேசியமயமாக்க கூடாது என்பது பற்றி விவாதிக்க:

"கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,96,02,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஐயா, ஐம்பது மைலும் அதற்கு மேலுமுள்ள பஸ் ரூட்டுகளை அரசு உடைமையாக்கக் கோரி விவாதிக்க:

"கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,96,02,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஐயா, மோட்டார் போக்குவரத்தை இரவு நேரங்களிலும் நடத்துவது குறித்து விவாதிக்க:

"கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,96,02,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். பூபதி :** ஐயா, மோட்டார் போக்குவரத்தில் பொதுமக்களுக்கு அதிக வசதிகள் செய்யவேண்டியது பற்றி விவாதிக்க:

"கோரிக்கை எண். 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,96,02,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, to discuss the general policy and effecting improvements in the working of transport schemes, I move the following cut motion :—

" That the allotment of Rs. 13,96,02,500 under Demand No. 30—Road Transport Schemes be reduced by Rs. 100."

திரு. ஏ. அ. சுப்பராஜா : ஐயா, மதுரையிலிருந்து செங்கோட்டைக்கு அதிக சர்க்கார் மோட்டார் வண்டிகள் ஓட விடுவது குறித்து விவாதிக்க:

"கோரிக்கை எண் 30—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,96,02,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**கோரிக்கை எண் 43—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.**

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** அடுத்து மானியக் கோரிக்கை எண் 43. மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

கோரிக்கை எண் 43—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,30,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து வெட்டுத் தீர்மானங்கள்.

THIRU N. KASIRAMAN : Sir, to discuss about the maintenance of the buses of the State Transport Department, I move the following cut motion :—

" That the allotment of Rs. 2,30,00,000 under Demand No. 43—Capital Outlay on Road Transport Schemes be reduced by Rs. 100."

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஐயா, to discuss the necessity for organising in land water-ways transports in the City of Madras : — land warke-way transports in the duty of Madras,

"கோரிக்கை எண் 43—மோட்டார் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,30,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வருகின்றன. மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் பற்றி ஆய்வுரைகளும்* இதைப்பற்றி நான் ஆற்றுகின்ற உரையும் அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் படித்து அதுபற்றிப் பேசுவதற்கு ஆயத்தமாக இருப்பார்கள் என்று எண்ணுகிறேன். முன்னுரை எட்டு பக்கங்களைத் தான் கொண்டிருக்கிறது. யாராவது ஒரு உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் மற்றவைகளைப் படிக்காமல் போனாலும் கூட இந்த எட்டு பக்கங்களையாவது படித்து அறிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று எண்ணுகிறேன். ஆகவே மற்றவர்களுக்கு நேரத்தை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நான் முன்னுரையாக ஆற்றாமல் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும் கருத்துக்களைக் கேட்டு என்னுடைய முடிவுரையிலே பதிலளிக்கிறேன் என்று கூறிக்கொண்டு உறுப்பினர்களின் கருத்துக்களை அறிய விழைகின்றேன்.

†தமிழக அரசு போக்குவரத்துத்துறையின் 1967–68 ஆண்டு செயல்கள் குறித்து விரிவான ஆய்வுரை *ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியாக வழங்கப்பட்டுள்ளது. அதில் கடந்த ஆண்டில் இத்துறையில் பல்வேறு பிரிவுகளில் எய்திய முன்னேற்றங்களை விரிவாக விளக்கியிருப்பதோடு சிறப்பான பல சாதனைகளையும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது,

இந்த அரசு, பயணிகள் பேருந்து போக்குவரத்தை படிப்படியாக நாட்டுடமையாக்குவது என்று எடுத்துள்ள முடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் விளக்கமும் தரப்பட்டது. அக்கொள்கைக்கு இணங்க கீழ்க்கண்ட வழித்தடங்களை நாட்டுடமையாக்கும் பணியில் அரசு முனைந்துள்ளது—

(அ) சாதாரணப் பேருந்துகளும், கடுவிசைப் பேருந்துகளும் செல்கின்ற 75 மைலும் அதற்கு மேற்பட்டத் தொலைவுமுள்ள வழித்தடங்கள் அனைத்தும் ;

(ஆ) வழித்தடம் என்ன தொலைவுள்ளதாய் இருப்பினும், சென்னை நகரிலிருந்து கிளம்பி, சென்னை நகரில் வந்து அடைகின்ற வழித்தடங்கள் அனைத்தும் ;

(இ) கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து புறப்படுகிற அல்லது அங்கே முடிவடைகிற வழித்தடங்கள் உட்பட, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வழித்தடங்கள் அனைத்தும்.

இதன்படி 1-8-1967 முதல் 12-3-1968 வரை மேற்கொள்ளப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | மாவட்டம். | பேருந்துகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு .. .. .. .. | 111 |
| 2. | தென்ஆற்காடு .. .. .. .. | 3 |
| 3. | வடஆற்காடு .. .. .. .. | 2 |
| 4. | தர்மபுரி .. .. .. .. | 18 |
| 5. | சேலம் .. .. .. .. | 9 |
| 6. | கோயம்புத்தூர் .. .. .. .. | 13 |
| 7. | நீலகிரி .. .. .. .. | 4 |
| 8. | திருச்சிராப்பள்ளி .. .. .. | 12 |
| 9. | இராமநாதபுரம் .. .. .. .. | 6 |
| 10. | மதுரை .. .. .. | 10 |
| 11. | கன்னியாகுமரி .. .. .. .. | 34 |
| 12. | மாநிலப் போக்குவரத்து அதிகாரியின் அனுமதியின் பேரில் ஓட்டப்படுபவை. | 14 |
| | மொத்தம் .. | 236 |

*107-152-ம் பக்கங்களில் [illegible] அச்சிடப்பட்டுள்ளன.

†அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அமைச்சரின் உரை.

**1968–69-ல்** நாட்டுடைமையாக்கும் கொள்கையின்படி **146** பேருந்துகள் **தமிழக அரசு போக்குவரத்துத் துறையின் கீழ் ஓடத் தொடங்கும்.**

பேருந்து வழித்தடங்களை நாட்டுடைமையாக்கும் கொள்கையினால் தனிப்பட்ட பேருந்து உரிமையாளர்களிடம் பணியாற்றியவர்கள் பலர் வேலையிழக்க நேர்ந்தது. அங்ஙனம் வேலையிழந்தவர்கள் இன்றியமையாத தகுதிகளைப் பெற்றிருந்து அவர்கள் போதிய ஆதாரங்களுடன் போக்குவரத்து துறைக்கு விண்ணப்பித்துக்கொள்வார்களேயானால் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளுமாறு இவ்வரசு ஆணையிட்டுள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இத்தொழிலாளர்கள் பதிவு செய்யவேண்டிய தேவையில்லை. அவர்கள் நேரிடையாகவே விண்ணப்பித்துக்கொள்ளலாம் என்ற சலுகையும் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு போக்குவரத்துத் துறையில் வேலையிலமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 253 ஆகும்.

பல்வேறு வழித்தடங்களை நாட்டுடைமையாக்கும் நோக்குடன் போக்குவரத்து துறை இயக்குநர் அவர்கள் 1939-ம் ஆண்டு மோட்டார் வண்டி சட்டத்தின் 68-சி பிரிவின் கீழ் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். அந்த நடவடிக்கைகளும் அவர் வெளியிட்ட திட்டங்களும் செல்லத்தக்கன அல்ல என்று கூறி தனிப்பட்ட சில பேருந்து அதிபர்கள் நீதிமன்றம் சென்றனர். அந்த வழக்கில் உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பின் விளைவாக இம்மாநில ஆளுநர் தமிழ்நாடு அரசாங்க அலுவல்களின் விதிகளில் (பிஸினஸ் ரூல்ஸ்) சில திருத்தங்களை செய்தார். அதன்படி மோட்டார் வண்டி சட்டத்தின் 68-சி பிரிவின் கீழ் மாநில போக்குவரத்து நிறுவனத்துக்குள்ள அதிகாரங்களையும் அலுவல்களையும் செயல்படுத்துவதற்கு வேண்டிய அதிகாரங்களை தொழில்-தொழிலாளர்-வீட்டு வசதித் துறை செயலாளருக்கு அளித்தார். மோட்டார் வண்டிகளின் சட்டத்தின் 68-டி. பிரிவின்கீழ் உள்ள அதிகாரங்களை செலுத்தவும் அலுவல்களை செய்யவும் வேண்டிய உரிமையை இந்த அரசின் உள்துறை செயலாளருக்கு வழங்கினர். இப்போது அதன்படி சம்பந்தப்பட்ட செயலாளர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

புதிதாக நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் அதிகரித்திருப்பதினால் அவைகளை பல்வேறு இடங்களில் பேணி பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே மதுரை, தஞ்சாவூர், தர்மபுரி, நாகர்கோவில், திருநெல்வேலி, விருதுநகர், பழனி, கும்பகோணம். புதுக்கோட்டை, வேலூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் பணிமனைகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

விரைவு பேருந்துகளில் மைலுக்கு 6 காசாக இருந்ததை இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் 5 காசாக குறைத்ததனால் வருமானம் குறையவில்லை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 1966–67-ல் பயணக் கட்டணம் 6 காசாக இருந்த போது ரூ. 46,000 மட்டுமே நாள் வருமானமாக இருந்தது. அந்த நிலை மாறி 1967–68 இறுதியில் சராசரி நாள் வருமானம் ரூ. 52,000 ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பயணக் கட்டணத்தை குறைத்ததன் பயனாக பயணிகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது. பயணக் கட்டணத்தை குறைக்கும் பொழுதே விரைவு வண்டிகளில் இருக்கைகளின் எண்ணிக்கையை 35-லிருந்து 39-ஆக பெருக்க வேண்டும் என இந்த அரசு முடிவு செய்தது. அதன்படி புதிய விரைவு வண்டிகள் அனைத்திலும் இருக்கைகளின் எண்ணிக்கை 39-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சுமார் 55 சத வீத பழைய விரைவு வண்டிகளில் இருக்கைகளின் எண்ணிக்கை 39-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

புதிதாக நாட்டுடைமையாக்கப்பட்ட மாவட்ட வழித்தடங்களிலும் புறநகர் வழித்தடங்களிலும் கட்டண அமைப்பை தக்கவாறு மாற்றியமைத்தல் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. புறநகர் வழித்தடங்களில் ஓடும் சாதாரண பேருந்துகளுக்கு கிலோ மீட்டருக்கு 2 காசு வீதப்படி கட்டணம்



வசூலிக்கப்பட்டது. தனிப்பட்ட பேருந்து அதிபர்கள் சாதாரண பேருந்து வண்டிகளுக்கு கிலோ மீட்டருக்கு 3 காசு வீதம் கட்டணம் வசூலித்து வருகின்றனர். அரசினர் துறைக்கும் தனியார் துறைக்கும் இருந்த இந்த போட்டியை தவிர்ப்பதற்காக, நாட்டுடைமையாக்கப்பட்ட மாவட்ட வழித்தடங்களில் அரசினர் பேருந்துகளில் கிலோ மீட்டருக்கு 2·5 காசு வாங்குவது என இந்த அரசு முடிவு எடுத்துள்ளது. சென்னை மாநகரிலிருந்து புறப்பட்டு செல்கின்ற மாவட்ட பேருந்துகளிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து இயங்கும் மாவட்டப் பேருந்துகளிலும், மற்ற மாவட்டங்களிலுள்ள 75 மைலும் அதற்கு மேலும் தொலைவுள்ள வழித்தடங்களில் செல்லும் பேருந்துகளிலும் இந்த விகிதப்படி கட்டணம் வசூலிக்கப்படும். சென்னை மாநகரிலிருந்து புறப்பட்டுச் செல்கின்ற புறநகர் பேருந்துகளிலும், குமரி மாவட்டத்தின் உள்ளும் புறமும் இயங்கும் புறநகர் பேருந்துகளிலும், நகரக் கட்டணம் நகரிலும், புறத்தில் கிலோ மீட்டருக்கு 2·5 காசும் வசூலிக்கப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் நகர பேருந்துகளிலும், நாகர்கோவிலிலிருந்து 10 மைலுக்கு செல்லக்கூடிய வண்டிகளிலும் சென்னை மாநகரப் பயணக் கட்டணம் வசூலிப்பது என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் அமுலாக்கப்பட்ட கட்டண சீரமைப்பு பயணிகளுக்கும் நடத்துனருக்கும் இடையே இதுவரை இருந்துவந்த சிக்கல்களை தவிர்ப்பதற்கு பெரிதும் பயன் பட்டுள்ளது. மூன்று கட்டங்களைத் தவிர 20-க்கு மேற்பட்ட கட்டங்களில் கட்டண சீரமைப்பால் சட்டணக் குறைவு ஏற்பட்டுள்ளது.

பேருந்து பயணிகளுக்கு மேலும் வசதியும் வாய்ப்பும் அளிக்கும் நோக்கத்துடன் ஞாயிற்றுக் கிழமைகளிலும், ஏனைய விடுமுறை நாட்களிலும் அவரவர் விருப்பம் போல் பயணம் செய்யும் பயணச் சீட்டு முறை (டிராவல் ஆஸ் யு பிளீஸ் டிக்கட்) அமுலாக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒருவர் ரூ. 1–50-க்கு பயணச்சீட்டு வாங்குவதன்மூலம் அவர் மாநகர் பேருந்துகளில் எங்குவேண்டுமானாலும் எத்தனை முறை வேண்டுமானாலும் அந்த நாள் முழுவதும் பயணம் செய்யலாம்.

பார்வையிழந்தோர்களுக்கும், உடல் ஊனமுற்றோர்களுக்கும் சலுகை அளிக்க இந்த அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது. இது மனிதாபிமானத்தின் அடிப்படையில் எடுத்த முடிவு. அதன்படி அவர்கள் சிகிச்சை பெற்று வரும் காலம் முழுவதும் அரசாங்கப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யலாம்.

பாராளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்க விரைவு வண்டிகளில் 5-வது, 6-வது எண்களுள்ள இருக்கைகள், வண்டி புறப்படும் ஒரு மணி நேரம் வரை ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும். குறிப்பிட்ட நேரத்திற்குள் அந்த சலுகையைப் பயன்படுத்திக்கொள்ளவில்லையென்றால் அந்த இருக்கைகள் மற்ற பயணிகளுக்கு அளிக்கப்படும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரிலும் நீண்டதூர வழித்தடங்களிலும் பயணம் செய்யும் மக்களுக்கு போதிய வசதிகள் செய்து தரவேண்டும் என்ற நோக்குடன் 494 வண்டிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசு போக்குவரத்துத்துறை போன்ற வளர்ந்து வரும் நிறுவனங்களில் பல்வேறுபட்ட தொழிலாளர்கள் பணி புரிவதால் பல வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்களின் ஆர்வம் நிறைந்த கூட்டுறவு இன்றியமையாததாகும். அதைக் கருத்தில் கொண்டு தொழிலாளர்கள் நன்மைக்கு ஒத்த நடவடிக்கைகள் பலவற்றை இந்த அரசு எடுத்துள்ளது. அவைகளில் சிறப்பான நடவடிக்கைகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது என் கடமையாகும் :—

(1) 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் பேணுதல் பணியாளர்களின் செயலூக்க பூரிப்பு ஊதியம் (இன்சென்டிவ் போனஸ்) அவர்களுடைய மாத அடிப்படை ஊதியத்தின் 10-சத வீதத்திலிருந்து 15-சத வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

(2) குரோம்பேட்டையிலுள்ள அரசாங்கப் போக்குவரத்து மத்திய பணிக்களரியிலும், நாகர்கோயில் ராணி தோட்டம் பேருந்து வண்டி கட்டும் பணிக்களரியிலும் செயலூக்க மாத பூரிப்பு ஊதியத்தின் உயர் வரம்பு அடிப்படை ஊதியத்தில் 20-சத வீதமாக இருந்தது 40-சத வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

(3) நாளும் ஒழுங்காகப் பணிக்கு வருவதற்குரிய பூரிப்பு ஊதியத் திட்டம் (அட்டெண்டன்ஸ் போனஸ் ஸ்கீம்) 1966-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் குரோம்பேட்டை அரசாங்கப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரிக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்களரியிலுள்ள பணியாளர்கள் ஒவ்வொருவரும் இத்திட்டத்தின் கீழ் பூரிப்பு ஊதியமாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 90 பெறுவர்.

(4) வலவர், நடத்துனர், பயணச்சீட்டு சோதிக்கும் மேற்பார்வையாளர் நேரக் கண்காணிப்பாளர் ஆகிய போக்குவரத்துப் பணியாளரின் படி 10 காசு உயர்த்தப்பட்டுள்ளது.

(5) தொழில் நுட்பப் பணியாளருக்கான இரவு அலுவல் படி, ஒவ்வொரு தொழிலாளருக்கும் இரவு ஒன்றுக்கு 10 காசு உயர்த்தப்பட்டுள்ளது.

(6) உடைகளுக்காகத் தொழிலாளர் விரும்பிய வண்ணமே கதர்த் துணிக்குப் பதிலாக கைத்தறித் துணி வழங்கப்பட்டு வருகிறது.

(7) தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் தையல் செலவு, ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 10 லிருந்து ரூ. 12 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

(8) இத்துறையில் அன்றாடம் ஊதியம் பெறும் பணியாளர் அனை வருக்கும் நகர ஈட்டுப்படி வழங்கப் பட்டுள்ளது.

(9) தொழிலாளர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூட்ஸ்கள் வழங்கியதற்குப் பதிலாக, அவர்கள் விரும்பியவாறே, ஓரளவு மேல்புறம் மூடப்பட்டுள்ள "பட்டான்" காலணி ஆண்டிற்கொரு முறை வழங்கப்படுகின்றன.

(10) சிறு தண்டனை பெற்றவர்களும் ஒழுங்கு வருகை பூரிப்பு ஊதியம் (அட்டெண்டன்ஸ் போனஸ்) பெறும் வண்ணம் அவர்களின் சிறு தண்டனைகளை வருகை பூரிப்பு ஊதியத்திட்ட விதிகளிலிருந்து அரசாங்கம் நீக்கி விட்டது.

(11) போக்குவரத்துத் துறை நியாய விலைக் கடைகளை நகரப் பணிமனைகளின் தொழிலாளர்களின் நலனுக்காக நடத்தி வருகிறது. அந்தக் கடைகளில் பொருள்கள் தொழிலாளர்களுக்கு கடன் அடிப்படையில் விற்கப்படுகின்றன. அண்மையில், அரசினர் திருச்சிராப்பள்ளியிலும் அங்குள்ள தொழிலாளர்களின் நலனுக்காக ஒரு நியாயவிலைக் கடை திறக்க உத்திரவிட்டிருக்கிறது.

பேருந்து இயக்கச் செலவினங்களை இயன்ற வரை குறைக்கும்பொருட்டு அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தேவைக்கு வேண்டிய அளவுக்கு மட்டும் பொருட்களை வாங்குவது, அவற்றைக் கணக்கெடுப்பது, நல்லவகையில் பயன்படுத்துவது இவைகளின் மூலம் செலவை கணிசமாக குறைக்க முடியும். இதை நன்கு ஆராய்ந்து அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற வல்லுநர் குழு ஒன்றை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இக் குழு விரைவில் செயல்படும்.

நிர்ணயிக்கப்பட்ட தூரத்தையும் நிர்ணயிக்கப்பட்ட கால அளவையும் எட்டிய பேருந்துகள் பயனற்றவை என தீர்மானிக்கப்பட்டால் அவ்வப்போது ஏலத்தில் விற்கப்படுகின்றன. அம்மாதிரி விற்கப்படும் வண்டிகளை மதிப்பீடு செய்வதற்கும், அவை நல்ல முறையில் நல்ல விலைக்கு ஏலம் விடப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதற்கும் 'ஏல கண்காணிப்பு குழு' ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் விரைவில் செயல்படத் துவங்கும்.



மாநகர் போக்குவரத்தில் ஏன் நஷ்டம் ஏற்படுகிறது, அதை எப்படி சீர்படுத்தலாம் என்பதைப் பற்றியும் இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. மாநகர் போக்குவரத்து ஆலோசனைக் குழு இதைக் குறித்து தனது சிறப்பான கருத்துக்களை தெரிவிக்குமென நம்புகிறேன். நாட்டுடைமையாக்கப்பட்ட மற்ற பேருந்துகளையும் எங்ஙனம் செவ்வனே நடத்துவது, வருவாயை எப்படிப் பெருக்குவது என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்த அரசின் தேசீய மயமாக்கும் திட்டம் செம்மையாக செயல் படவும், நகர் பேருந்துகளில் தொடர்ந்தாற்போல் ஏற்பட்டுவரும் இழப்பை குறைத்து லாபம் காண்பதற்கான வழிவகைகளையும் அரசாங்கப் போக்கு வரத்துத் துறை செவ்வனே பணியாற்ற வேண்டிய செயல்முறை குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களை தெரிவிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

* **திரு. நா. காசிராமன்:** சார், மோட்டார் வாகனச் சட்டங்கள் பற்றி இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துகள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

நமது தமிழ்நாட்டிலே பலவகைகளிலே வரி வசூலித்தாலும் அப்படி வசூலிப்பதில் அதிகமாக வரக்கூடிய வரி, மோட்டார் வாகனச் சட்டத்தின் மூலமும், விற்பனை வரி மூலமும், முத்திரைத்தாள்கள் மூலமும் வரக் கூடியதேயாகும். மோட்டார் வாகனச் சட்டத்தின் மூலம் வரி வசூலிப் பதில் நாம் செலவிடுவது 31 இலட்சம். அதன் மூலம் வரக்கூடிய வருமானம் 1,760 இலட்சமாகும். அதாவது 55 மடங்கு வருமானம் வருகிறது. இந்த அளவில் அதிகப்படியாக வருமானம் வரக்கூடியது வேறு எதுவுமே இல்லை. முத்திரைத் தாள்களுக்கு 20 இலட்சம் செலவு செய்தால் 1,035 இலட்சம் வருமானம் வருகிறது. அதாவது 51 மடங்குகள். விற்பனை வரிக்கு 159 இலட்சம் செலவு செய்தால் 6,554 இலட்சம் வருமானம் வருகிறது. இது 41 மடங்கு. எனவே இதில் அதிகமாக வரக் கூடியது மோட்டார் வாகனச் சட்டத்தின் மூலம்தான். இப்படியெல்லாம் அதிக வருமானம் தரக்கூடிய இந்த இலாகாவிலே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் என்ன? அங்கிருக்கக்கூடிய R.T.O.வுக்கு சம்பள விகிதம் ரூ. 325—25—650 என்றிருக்கிறது. அதாவது மெட்ராஸ் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டெப்போ சூப்பிரண்டெண்ட் சம்பளம் அவர்களுக்கு இருக்கிறது. இந்த ஆர். டி. ஓக்களின் அதிகாரம் எவ்வளவு என்றால், 300 லிருந்து 400 பஸ்கள் வரையில் ஒவ்வொரு பஸ்ஸும் சுமார் 70,000 ரூபாய் பெறக்கூடியது—பார்த்து, கண்ட்ரோல் செய்ய வேண்டிய அளவுக்கு இருக்கிறது. அவ்வளவு பெரிய பொறுப்புகளைக் கொடுக்கும் பொழுது அந்த அதிகாரியின் வருமானத்தையும் உயர்த்தினால்தான் எந்த விதமான சந்தேகமும், சங்கடமும் இல்லாமல் இருக்கும். 'அபௌ போர்டில்' பணியாற்ற முடியும். அதற்கு இந்தச் சர்க்காரிலே ஆவன செய்ய வேண்டும்.

மோட்டார் வெகிகில்ஸ் இன்ஸ்பெக்டர் ஒரு நிமிஷத்தில், எந்தவித நோட்டீஸும் கொடுத்து வண்டியை நிறுத்த முடியும். அந்த அதிகாரம் அவருக்கு இருக்கிறது. அவர் செய்தால் அதற்கு அப்பீலே கிடையாது. அத்தகைய அதிகாரத்தை கொடுத்திருக்கும் அவருக்கு கிட்டதட்ட ஒரு தாசில்தாரின் சம்பளம்தான் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு மெட்ராஸ் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இலாக்கா 'ஃபோர்மேனு'க்குக் கொடுக்கக்கூடிய 225 ரூபாய் சம்பளத்திலே ஆரம்பிக்கிறோம். இதை இன்னும் அதிகமாகச் செய்தால் நன்றாகயிருக்கும். சாதாரணமாகக் கூறுவார்கள், "கக்கக் கக்கச் சோறு போட்டு கதறக்கதற வேலை வாங்க வேண்டும்" என்று. அதுபோலக் கொடுப்பதை நிறையக் கொடுத்து வேலையையும் நிறைய வாங்கவேண்டும். அவ்வாறு செய்தால் குறை இல்லாமல் இருக்க முடியும். இதை மனதில் கொண்டு செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக 'சிவில் சப்ளைஸ்' இலாக்காவிலிருந்து ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கு R. D. O.க்களைக் கொண்டு வருகிறோம். சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மெண்டிலே புரமோஷனுக்கு வாய்ப்பும், வசதியுமிருக்கிறது. ஆனால் டிரான்ஸ்போர்ட் இலாக்காவிலேயே ஊறி வெகுகாலமாகப் பணியாற்றியவர்கள், 15, 20 வருஷகாலம் பணியாற்றியவர்கள் 'மோட்டார் வெகிகில்ஸ் இன்ஸ்பெக்டராகவோ, அல்லது ஆர். டி. ஓ. வாகவோ, அல்லது அசிஸ்டெண்ட் செக்ரடரி, செக்ரடரி என்ற அளவிலோதான் வரமுடியுமே தவிர, வேறு எந்த விதத்திலேயும் புரமோஷனுக்கு வாய்ப்பில்லை. அப்படியிருக்கும்போது வெளி இலாக்காக்களிலிருந்து கொண்டு வருவது நல்லது அல்ல. இதைப்பற்றி சென்ற 66-ம் வருஷத்திலேயும், 65-ம் வருஷத்திலேயும்கூட பல சட்டமன்ற உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். இதைக் கருத்தில்கொண்டு வெளி இலாக்காக்களிலிருந்து கொண்டுவராமல் போக்குவரத்து இலாக்காவிலேயே இருப்பவர்களுக்கு ப்ரமோஷன் கொடுத்தால் அது அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதாக இருக்கும்.

அடுத்து, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு மோட்டார் வெகிகிள்ஸ் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். இப்பொழுது 2 கூடப் போட்டிருக்கிறார்கள். 300, 400 வண்டிகள் அவர்கள் கண்ட்ரோலில் இருக்கின்றன. எனவே ஒவ்வொரு ஜில்லாவிலும் 3 டிவிஷன்களை ஏற்படுத்தி ஒவ்வொரு டிவிஷனுக்கும் ஒவ்வொரு இன்ஸ்பெக்டரைப் போட்டு அவரது கண்ட்ரோலில் 200 வண்டிகளைக் கொடுத்தால் அவர்கள் அடிக்கடி பிரயாணம் செய்து வண்டிகளைக் கவனிக்கவும், கண்காணிக்கவும் வழியேற்படும். ஆகவே அவ்வாறு டிவிஷன்களை ஏற்படுத்த வேண்டும்.

பர்மிட் கொடுப்பது சம்மதமாக டிராப்ட் ஜீ. ஒ. கெஜட்டில் போடப்பட்டிருக்கிறது. அது வரவேற்க வேண்டியது. அதில் இரண்டொரு மாறுதலைச் செய்ய வேண்டும். அதைப் பற்றி நான் எழுதியிருக்கிறேன். முக்கியமாக, ஆக்டின்படி இம்மாதிரி செய்வதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறதா என்ற சர்ச்சை சுப்ரீம் கோர்ட்டில் எழுப்பப்பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். ஆகவே இந்த ஜீ. ஒ. வானது கோர்ட்டில் அடிபடாமல் இருக்கும் முறையில் மோட்டார் வெகிகில்ஸ் ஆக்டில் திருத்தம் செய்து இந்த ரூலைக் கொண்டு வந்தால் எந்தவிதமான சங்கடமும் இல்லாமல் நல்லவிதத்தில் இருக்கும். டிராப்ட் ஜீ. ஒ.வை நான் படித்துப் பார்த்தேன். மிக்க நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஆகவே. இந்த ஜீ. ஒ. வானது கோர்ட்டில் சென்று அடிபடாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

மோட்டார் போக்குவரத்து ஸ்தாபனங்களை நடத்துகிறவர்கள் யாராகயிருந்தாலும், ஒரு பஸ் வைத்திருந்தாலும்கூட அவர்கள் உடனடியாக மோட்டார் டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் ஆக்டின்படி ரிஜிஸ்தர் செய்து கொள்ள வேண்டும் என்றிருக்க வேண்டும். அப்பொழுதுதான் தொழிலாளர்களுக்கு வசதியாக இருக்கும். குறிப்பாக நான் இதைச் சொல்வதற்குக் காரணம், மோட்டார் தொழிலிலே ஈடுபட்டு மாதம் மாதம் 8 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு அந்தத் தொழிலில் முன்னேறியவரின் மகன் என்ற முறையில்தான் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தொழிலாளர்களுக்குச் செய்ய வேண்டிய அத்தனையையும் நல்லமுறையில் செய்தால்தான் அவர்கள் அந்தத் தொழிலிலே சிறப்பாகப் பணியாற்ற முடியும். எனவே ஆப்பரேட்டர்கள் இரண்டாவது முறை, மூன்றாவது முறை என்று பஸ் பர்மிட்டுக்கு விண்ணப்பம் செய்தால்கூட இவ்வாறு ரிஜிஸ்தர் செய்து கொண்ட அடையாளம் இருக்கிறதா என்பதைக் கவனிக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதையும் முறைப்படுத்திச் செயல்படச் செய்ய வேண்டும்.

அடுத்து, இந்த மோட்டார் வாகன வரியைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு டிரெஷரியிலும் ஊருக்கு ஊர் தனித்தனியாக கட்டுகிறோம். அவர்கள் இதை ரிஜிஸ்தர் பண்ணுகிறார்கள். பிறகு அது ஆர். டி. ஒ. வுக்கு அனுப்பப்படுகிறது. இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. அவர் (R.T.O.) பரிசீலனை செய்வதற்கு வேறு காலம் பிடிக்கிறது. இதனால் காலா



காலத்தில் வரி கட்டாமல் ஏய்ப்பவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படி கண்டுபிடிக்க வேண்டுமென்றாலும் 20 நாட்களுக்கு மேல் ஆகிவிடுகிறது. பெர்மிட் கொடுக்கும பொழுது R. T. O. ஆபிஸில் எந்தெந்த ரூட்டில் எந்தெந்த பஸ் போகிறது; யார் யார் எப்பொழுது வரி கட்டினார்கள் என்ற லிஸ்டெல்லாம் இருக்கிறது. இவ்வளவு வண்டிகளுக்குப் பர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது; இவ்வளவு வண்டிகளுக்குக் கொடுக்கப்படவில்லை; இவ்வளவு வண்டிகள் டாக்ஸ் கட்டி இருக்கின்றன; இவ்வளவு வண்டிகள் டாக்ஸ் கட்டவில்லை போன்ற விவரங்கள் எல்லாம் அந்த R. T. O. ஆபீஸில் இருக்கும். அதைக் கொண்டு அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே, R. T. O. ஆபீஸிலேயே வரி கட்ட வேண்டுமென்று வைத்தால் வரி ஏய்ப்பையும் கண்டிப்பாகத் தடுத்து விடமுடியும். இதைப் பற்றி இந்தச் சட்டமன்றத்திலேகூட பல அங்கத்தினர்கள் சொல்லியிருக்கிறார்கள். 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் தேதி அன்று அப்பொழுது போக்குவரத்து அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்டராமன் அவர்கள்கூட இதற்கான வழிவகைகளைச் செய்துவருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

முன்பு மொபைல் ஸ்க்வாட் என்று ஒன்று இருந்தது. அது ஓவர் ஸ்பீடில் போகிறவர்கள் மேல் நடவடிக்கை எடுத்தது. அது இப்பொழுது இருப்பதாகத் தெரியவில்லை. மறுபடியும் அதை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் இப்பொழுது நாட்டிலே வண்டிகள் வெகு வேகமாகப் பெருகிக் கொண்டு வருகின்றன. லாரிகளும் அதிகமாகப் பெருகிக்கொண்டிருக்கின்றன. அவர்கள் ஓவர் ஸ்பீடாகப் போவதைத் தடுக்க வேண்டுமானால் இந்த மொபைல் ஸ்க்வாட் தேவை. அந்த மாதிரி வேகமாகப் போகிறவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கவும் வேகமாகப் போவதைத் தடுக்கவும் இந்த மொபைல் ஸ்க்வாட் ஏற்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, இப்பொழுது லாரிகள் தான் அதிக வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்த லாரிகளினால்தான் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. விபத்துக்களுக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பல லாரிகளைச் சேர்ந்தவர்கள் ஸ்மக்லிங்கிலே ஈடுபடுகிறார்கள். தஞ்சை, மற்ற இடங்களிலேயிருந்து கொட்டைப் பாக்கு, சூடம், போன்ற பொருள்களை கடத்திச் செல்கிறார்கள். அப்படிக் கடத்திச் செல்கின்ற காரணத்தினால் வெகு வேகமாக ஓட்டுகிறார்கள். இதனால் சில விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அதோடு, ஒரு லாரி இரண்டு லாரி வைத்திருக்கக் கூடியவர்கள் தங்களுடைய பணியாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஊதியம் மிகமிகக் குறைவு அவர்கள் அதிகமாக வேலை செய்து முதலாளியிடம் நல்ல பெயர் வாங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு வேகமாக ஓட்டுகிறார்கள். வெகு வேகமாக ஓட்டி விபத்துக்களிலே ஈடுபடுகிறார்கள். ஆகவே, இந்த லாரியில் வேலை செய்கின்ற பணியாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியத்தையாவது சர்க்கார் நிர்ணயித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அதோடு, இரவு 9 மணிக்குமேல் காலை 6 மணிக்குள் லாரிகளில் எப்படிச் சென்றாலும் சரி—இரண்டு டிரைவர்கள் இருக்க வேண்டும். ஒருவர் களைப்படைந்தால் மற்றவர் ஓட்ட முடியும்—இந்த நிலை அமையுமானால். இவ்வாறு செய்தால், கூடுமான வரையில் 100-க்கு 90 விபத்துக்களை தடுக்க முடியும். இதன் மூலம் வேலை வாய்ப்பு வசதியும் கிடைக்கிறது. விபத்துக்களை தடுப்பதற்கும் இது வசதி செய்து கொடுக்கிறது.

லாரிகளில் சில பேர்கள் அதிகமான லோடுகளை ஏற்றிக்கொண்டு செல்கிறார்கள். அதுவும் இரவு நேரங்களில் காலைக்குள் சேர்பிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் வேகமாகப் போவதோடு அதிக லோடுகளையும் ஏற்றிக்கொண்டு செல்கிறார்கள். ஓரிரண்டு நாட்களுக்கு முன்னால் கூட, பாலாறு பக்கத்திலே செங்கல்பட்டு சமீபம் பார்த்தேன். ஒரு பெரிய மெஷினை—12 அடி உள்ள மெஷினை ஒரு லாரி ஏற்றிக்கொண்டுசென்றது. அப்பொழுது லாரியின் வலது டையர் பர்ஸ்ட் ஆகிவிட்டது. அதன் காரணமாக அந்த மெஷின் வலதுபுறமாக

அழுத்த அந்த லாரி தலை குப்புற புரண்டுவிட்டது. டிரைவரும் கண்டக்டரும் அதிர்ஷ்டவசமாகத் தப்பினார்கள். அந்த லாரி தூள்தூளாக ஆகிவிட்டது. அதை இன்னொரு லாரி வந்து எடுத்துச் செல்லக்கூடிய அளவு விபத்து ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவு அதிகமான சரககுகளை எடுத்துச் செல்கிறார்கள். நீண்ட குழாய்களையும் கம்பிகளையும் லாரியில் ஏற்றுகிறார்கள். இந்த கம்பிகள் கருப்பாக இருப்பதனால் இரவிலே இருட்டிலே தூரத்திலே அந்த கம்பிகள் இருப்பதே தெரியவில்லை. அவர்கள் ரொம்ப வேகமாகப் போகிறார்கள். அருகில் போகிறவரை அந்த லோடு தெரிவதில்லை. இதனால் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இந்த லாரிகளில் வைக்கோல் போரையும் ஏற்றிச் செல்கிறார்கள். இந்த வைக்கோல் போர் பெரிய தேர் மாதிரித் தெரிகிறது. போக்குவரத்து அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள், திருவாரூர் தேர் மாதிரி என்று. அந்தத் திருவாரூர் தேர் மாதிரி இந்த வைக்கோல் போர் இருக்கிறது. நான் சிறு குழந்தையிலே அந்தத் தேரைப் பார்த்தேன். ஓட்டுகிறவன் தானாக ஒதுங்கிப் போனால்தான் அவனை நாம் தாண்டிப் போகமுடியும். பின்னால் வருகிறவன் முடிந்தால் முந்திப் போகட்டுமேயென்று அவர்கள் வண்டியை நிறுத்தாமலேயே செல்கிறார்கள். நாம் அவர்களை நேரடியாக ஓவர்டேக் செய்வது என்பது முடியாத காரியம்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டிலே போக்குவரத்துத் துறை மற்ற எல்லா மாநிலங்களையும் விட, மற்ற மாநிலங்களில் நடப்பதைவிட வெகு நன்றாக செம்மையாக நடக்கிறது என்பதை நாம் சந்தோஷமாகச் சொல்லிக் கொள்ளலாம். தனியார் துறையினரும் சரி, தேசியமயமாக்கப்பட்ட துறையினரும் சரி, எந்த போக்குவரத்துத் துறையாக இருந்தாலும் இந்த அதிகாரிகள் மிக நல்லமுறையிலே பணியாற்றுகிறார்கள். இந்த போக்குவரத்துத் துறைக்கு முன்னால் இருந்த அமைச்சர்களும் சரி, இப்பொழுது இருக்கிற அமைச்சரும் சரி, இநத இலாகா அதிகாரிகளும் இந்த இலாகா மிக நல்லமுறையில் இயங்க வேண்டுமென்பதற்காக நல்லமுறையில் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நன்றியையும் பாராட்டையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த தேசியமாக்கப்பட்ட இலாகா சிறபபாக நடக்கவேண்டும். நஷ்டம் இல்லாத வகையில் நடைபெற வேண்டும். இலாபம் இல்லாவிட்டால்கூடப் பரவாயில்லை. நஷ்டம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். 'நோ பிராஃபிட் நோ லாஸ்' பேஸிலே கூட நடத்தலாம். 75 மைல்களுக்கு மேலுள்ள பஸ்களை நேஷனலைஸ் செய்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். தேசியமயமாக்குகிற கொள்கை வேண்டிய கொள்கைதான். டிரான்ஸ்போர்ட், கம்யூனிக்கேஷன், ரெயில்வே, தபால் போன்றவைகள் எல்லாம் தனியாரால் ஆரம்பிக்கப்பட்டாலும் கூட நாளாக ஆக அது சர்க்காரினுடைய ஆதிக்கத்தின்கீழ்தான் இருக்கவேண்டும். அந்த முறையிலே இதை நான வரவேற்கிறேன். தற்போது 75 மைல்களுக்குமேல் உள்ள ரூட்டுகளில் பஸ் வைத்திருக்கிறவர்கள் பணம் கொடுத்துத்தான் அந்த பஸ்களை வாங்கியிருக்கிறார்கள். நம் தேசத்துப் பணம் கொடுக்கப்பட்டு வாங்கப்பட்டது. அந்த பஸ்கள், எல்லாம் ஐடிலாக இருக்கின்றன. அப்படி வைக்காமல் அவர்களுக்கும் ஆல்டர்னேட் ரூட் கொடுத்தால், அவர்கள் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அந்த தொழிலிலிருந்து வேறு தொழிலுக்குப் போய்விடுவார்கள். இப்படி பஸ்களை ஓடாமல் வைத்திருப்போமானால் மற்ற தொழில் ஆரம்பிக்க எண்ணுபவர்கள்கூட நமக்கும் இந்த கதி வந்தால் என்ன செய்வது என்று எண்ணி, தொழிற்சாலையை ஆரம்பிக்க துணிச்சல் இல்லாத நிலையிலிருப்பார்கள். அப்படி இருந்தால் மந்தநிலை ஏற்படும்; தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும்; முன்னேற்றமெல்லாம் பாதிக்கப்படும்; தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு பாதிக்கப்படும்; எல்லாமே பாதிக்கும். இதனால் உடனடியாக அவர்களுக்கு ஆல்டர்னேட் ரூட் கொடுத்து ஒரு செம்மையான நிலையை உருவாக்கவேண்டும். அதைப் பற்றி பரிசீலிப்பதையும் நான் வரவேற்கிறேன்.





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.** இப்படி பேசுகின்ற இந்த கருத்துக்களை அடிப்படையாக வைத்து ஆங்காங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அதாவது இந்த உரிமை வழங்குகிறவர்கள் ஆர். டி. ஓ. என்று அழைக்கப்படுகிறவர்களுடைய பரிந்துரையின் பேரில் அவர்களுக்கு மாற்றுத் தடங்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. நா. காசிராமன்.** இது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. இதை நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸ் என்று ஒரு புஸ்தகம் கொடுத்திருக்கிறார்கள். பட்ஜெட் டிமாண்ட்ஸ் என்றும் ஒரு புஸதகம் கொடுத்திருக்கிறாகள். இந்த கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸ் என்ற புத்தகத்திலே இந்த நேஷனலைஸ்டு மோட்டார் டிரான்ஸ்போர்ட் மூலமாக 8 லட்சம் ரூபாய இலாபம் வருவதாகக் காட்டப்பட்டிருககிறது. அப்படியானால் சென்ற ஆண்டு 37 இலட்சம் ரூபாய் நஷ்டம். இப்போது எப்படி இலாபமாக வந்தது? கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸ் என்ற புத்தகத்தையும் பட்ஜெட் டிமாண்டையும் நான் ஒத்திட்டுப் பார்க்கும்போது சில குறைகள் எனக்குத் தென்பட்டன. அந்தக்குறைகளைத் தெரிவிப்பது என் கடமையாகக் கருதுகிறேன். கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸ்ஸிலே 8-ஆம் பக்கத்திலே வேஜஸ் ஆஃப் டிராஃபிக் அண்டு டெக்னிகல் ஸ்டாஃப் 216 இலட்சம் ரூபாய் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பட்ஜெட் டிமாண்டிலே 1159-60-ம் பக்கததிலே 231 இலட்சம் ரூபாய் என்று கொடுககப்பட்டிருக்கிறது. இதிலே 15 இலட்சம் கூடி இருக்கிறது. அதாவது டிமாண்டைவிட 15 இலட்சம் குறைவாக கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸிலே காட்டப்பட்டிருக்கிறது. அதைப்போல் பெட்ரோல் டீஸல் ஆயில் அண்டு அதர் ஃபூயல் என்பது பட்ஜெட் டிமாண்டிலே 173 இலட்சம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸிலே 160 லட்சம் என்று காட்டப்பட்டிருக்கிறது. இதிலே 13 இலட்சம் குறைவாக காட்டப்பட்டிருக்கிறது. அதேபோல் டையர்ஸ் அண்டு டியூப்ஸிலே 1966–67-ஐ விடக் குறைச்சலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட் டிமாண்டிலே 7·6 இலட்சம் என்று காட்டப்படுகிறது. ஆனால், கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸிலே 7 இலட்சம் என்று காட்டப்பட்டிருக்கிறது. மோட்டார் வெஹிகிள்ஸ் டாக்ஸஸ் அண்டு லைசென்ஸ் ஃபீஸ் என்ற பிரிவிலே பட்ஜெட் டிமாண்டிலே 104 இலட்சம் என்று காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸிலே 93 இலட்சம் என்று காட்டப்பட்டிருக்கிறது. அதேபோல் சர்சார்ஜிலே 1966–67-லே 68·16 இலட்சம் செலவானதைவிட குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலேயும் பட்ஜெட் டிமாண்டிலே 61 இலட்சம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸிலே 55 இலட்சம் என்று காட்டப்பட்டிருக்கிறது. ஆக பட்ஜெட் டிமாண்டிலே கொடுக்கப்பட்டிருக்கும் தொகைக்கும் கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸிலே கொடுக்கப்பட்டிருக்கும் தொகைக்கும் வித்தியாசம் பார்த்தால் 45·6 இலட்சம் ரூபாய் கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸிலே குறைவாக கொடுக்கப்பட்டிருக்கிறது. கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸிலே கொடுக்கப்பட்டிருக்கிற 8 36 இலட்சம் ரூபாய் இலாபத்தை கழித்தால் 37·24 இலட்சம் ரூபாய் நஷ்டம் வரும். ஆக இந்த கணக்குகளையெல்லாம் பார்த்தால் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் நஷ்டத்திலே ஓடுவது நன்றாகத் தெரிகிறது. நஷ்டம் வராது என்று சொல்லவில்லை. அதைப்பற்றி ஆராயவேண்டும். இலாபத்திலே நடத்தினாலும் நஷ்டத்திலே நடத்தினாலும் ஜனங்களுடைய வரிப்பணத்திலேதான் அது நடக்கிறது. நஷ்டத்திலே நடத்தினால் ஜனங்களிடமிருந்து அதிக வரி வாங்க வேண்டியிருக்கும். ஆகவே, நஷ்டத்தை ஒழித்தாலொழிய, குறைந்தபட்சம் நோ பிராஃபிட்–நோ லாஸ் என்ற நிலையை ஏற்படுத்தினாலொழிய இந்த தொழிலுக்குப் பாதகம் ஏற்படாமல் இருக்காது. நஷ்டமில்லாமல் நடத்தினால்தான் ஓரளவு பிற்காலத்திலே அது பாதகமான தொழில் என்ற நிலை ஏற்படாமல் இந்தத் தொழிலை நடத்த முடியும். இப்பொழுது பல இலட்சக் கணக்கான ரூபாய்களைபபோட்டு நடத்துகிற சூப்பா மார்க்கெட் நஷ்டத்திலே ஓடுவதால் அதை மூடிவிடலாமா என்று மயாசலா தோன்றுவதுபோல்

பின்னாலே இதற்கும் தோன்றினால் தேசிய உடைமையினுடைய மொத்த வலிவும் போய்விடும். அதற்காக வழிவகை செய்து இந்த நஷ்ட நிலையைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த பஸ்கள் வேகமாக ஓடுகின்றன. அதிலும் ஸ்டேட்டிரான்ஸ் போர்ட் பஸ்கள் மிக வேகமாக ஓடுகின்றன. நான் அடிக்கடி சென்னையிலிருந்து கும்பகோணத்திற்கு காரிலே போகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஒவ்வொரு பஸ்ஸும் 50 மைல், 60 மைல் வேகத்தில் போகிற பொழுது பின்னால் நாம் சென்றால் அவனாகத்தான் நிறுத்தவேண்டும். நாமாக அவனை ஓவர்டேக் செய்யமுடியாது. நேச்சுரல் காலஸுக்காக அல்லது டீ குடிப்பதற்காக அல்லது வேறு ஏதாவது கடைக்குப் போக வேண்டியிருந்தாலொழிய வண்டியை நிறுத்துவதே கிடையாது. ஆகவே, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் ஒரு நாளும் ஸ்பீடாகப் போகச் செய்யக் கூடாது. அவர்கள் 40 மைல் வேகத்திலே போவதுகூட அதிகம்தான். தனியார் துறை பஸ்களும் டிரங்க ரோடிலே வேகமாக ஓடுகின்றன. அதிலும் ஜில்லாக்களிலே போகும்போது மிகவும் குறைந்த வேகத்தில் போக வேண்டும். இந்த ஓவர் ஸ்பீடுகள் அதிகமாக இருப்பதனால் ஆக்ஸிடெண்டுகள் அதிகமாக ஏற்படுகின்றன. ஆக்ஸிடெண்ட் என்றாலே எதிர்பாராமலே நடப்பது என்பதுதான் பொருள். தஞ்சையிலிருந்து கும்பகோணம் ரோடுக்கு வருவதற்கு—25 மைல் தூரம் உள்ள பாதைக்கு—ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்ஸில் 45 நிமிஷம் தான் கொடுத்திருக்கிறார்கள். 45 நிமிஷத்திலே போகவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். அப்படியென்றால் அந்த நேரத்தில் போய்சேருவதற்கு எவ்வளவு வேகமாக ஓட்ட வேண்டும்? தஞ்சை ஜில்லா விவசாயம் நிறைந்த ஜில்லா. கால்நடை, மாட்டுவண்டிகள், விவசாயிகள், இதர வண்டிகள் அதிகமாக இருக்கிற இடம். அந்த ரோடுகளில் சாதாரணமாகச் செல்லக்கூட நிரம்ப கஷ்டமாக இருக்கிறது. அதுவும் திருவிழாக் காலங்களில் சொல்ல வேண்டியதில்லை. அந்த வண்டிகள் வரக்கூடாது என்று சொல்லவில்லை. ஸ்டேட் டிரான்ஸ் போர்ட் வண்டிகளினுடைய வேகத்தைக் குறைக்கவேண்டும்; அதோடு மற்ற வண்டிகளினுடைய வேகத்தையும் கட்டுப்படுத்த வேண்டும். ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களில் நாம் ஓட்டுகிறவர்களை பார்க்கவேண்டுமென்றால் ஸ்டூல் போட்டுக்கொண்டுதான் பார்க்கவேண்டி இருக்கிறது. அவர்கள் அவ்வளவு குள்ளமாக சிறிய டிரைவர்களாக இருக்கிறார்கள். டிரைவர் உட்கார்ந்திருப்பதே தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.** வேகத்தைக் குறைக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால், விரைவு போக்குவரத்து வண்டிகளின் நேரத்தைக் குறைத்து, வேகத்தை அதிகப்படுத்த வேண்டும் என்பது பற்றி விவாதிக்க திரு. ஆர். கருப்பையா அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. நா. காசிராமன்.** போக்குவரத்துத் தொழிலில் அனுபவம் இல்லாத காரணத்தினால் அப்படிச் சொல்லியிருக்கலாம். நான் அனுபவத்தில் சொல்கிறேன். அது நல்லது அல்ல. வேகமாக போவது பார்ப்பதற்கு வேண்டுமானால் அழகாக பெருமையாக இருக்கலாம். ஆனால் நாம் வேகமாகப் போனால் நாம் நினைத்த ஊருக்குப் போகாமல், நாம் எந்த ஊருக்குப் போகவேண்டாம் என்று நினைப்போமோ அந்த ஊருக்குப்போய்ச் சேர்ந்துவிடுவோம். அது நல்லது அல்ல.

சென்னை நகரத்தில் அதிகமான பேர்களை ஏற்றுகிறார்கள். ஓவர் கிரௌடிங் ஜாஸ்தியாக இருக்கிறது. 35 பேர்கள் என்பது, 65 பேர்கள் வரை ஏறுகிறார்கள். அதற்கு குறைந்து இருக்காது. இப்படி இருக்கும் பொழுது ஜனங்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. தனியார் துறையிலே ஓவர்லோடு ஏற்றினால், கண்டக்டர், ஓனர் இரண்டு பேர்களையும் சேர்த்து சார்ஜ் செய்கிறார்கள், ஆனால் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களில் அப்படியில்லை. ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களுக்கு பெர்மிட்டே இருந்தால் தானே? பெர்மிட் இருந்தால் தானே பெர்மிட் கண்டிஷன், பெர்மிட் கண்டிஷன் இருந்தால் தானே வயலேஷன் ஆஃப் பெர்மிட் கண்டிஷன். ஓவர்லோட்



அதிகமாக ஏற்றுகிறார்கள். அது நல்லது அல்ல. ஜனங்களுக்கும் நல்லது அல்ல. வண்டிக்கும் நல்லது அல்ல. ஓட்டுகிறவர்களுக்கும் நல்லது அல்ல. ஓவர்லோட் எல்லா ரூட்களிலும் நிறைய இருக்கிறது. (குறுக்கீடு) கண்டிப்பாக ஓவர்லோட் லாங் டிஸ்டன்ஸ் பஸ்களில் இல்லை, ஸ்டேட் டிரான்ஸ் போர்ட் லாங் டிஸ்டன்ஸ் பஸ்களில் இல்லை. எனக்கு தெரிந்த வரையிலும் பிரைவேட் ஆபரேடர்ஸ் பஸ்களிலும் கூடுமான வரையிலும் இல்லை.

ஒரு பொதுவான அபிப்பிராயம் கண்டக்டர்கள், டிரைவர்கள் மரியாதையாக நடந்துகொள்வதில்லை என்பது. ஆனால் அவர்கள் சுத்தமாக மரியாதையாக நடந்துகொள்வதில்லை என்று சொல்லமுடியாது. எனக்குத் தெரியும் தினமும் அவர்கள் ஆயிரக்கணக்கான மக்களோடு பழகவேண்டியிருக்கிறது. பல்வேறுவிதமான டெம்பரமெண்டு உள்ளவர்களோடு பழக வேண்டியிருக்கிறது. 'டெம்பரமெண்ட்ஸ் டிஃபர்'. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்கிறார்கள். 'எனக்கு முதலாளியைத் தெரியும்' என்று ஒருவர் சொல்வார். 'எனக்கு அமைச்சரையே தெரியும்' என்று இன்னொருவர் சொல்வார். யாருக்கு பயப்படுவான் தொழிலாளி? டிரைவர்கள், கண்டக்டர்கள் நல்லவிதமாக மரியாதையுடன் நடக்க வழிவகைகள் செய்யவேண்டியது தான். அதே சமயத்தில் அவர்களை அதிகமாக துன்பத்துக்கு ஆளாக்கக் கூடாது என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

டீசல் கன்ஸம்ஷன் டிரான்ஸ்போர்ட் பஸ்களில் நிறைய ஆகிறது. இதைக் கவனிக்க வேண்டும். சில பஸ்களில் பார்த்தால் வார் ஃப்ரண்டு மாதிரி ஸ்மோக் ஸ்கிரீன் பஸ்களுக்குப் பின்னாலிருந்து வந்துக் கொண்டிருக்கும். இன்னும் சிலபஸ்களில் பார்த்தால், பழைய காலத்தில் இரட்டை மாட்டு வண்டிகள் ரோடில் போனால், ரோடில் மாடுகள் கோடு போட்டுக்கொண்டே போகும், அம்மாதிரி பஸ் போகிற இடங்களிலெல்லாம் பின்னாலேயே ஆயில் ஒழுகி ரோடில் கோடு போட்டுக் கொண்டே போகும். இம் மாதிரியெல்லாம் டீசல் ஆயில் வேஸ்ட் ஆவதைக் கண்காணிக்க வேண்டும். எவ்வளவு செலவழிகிறது என்பதைப் பார்த்து, டீசல் ஆயில் கன்ஸம்ஷனைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும், பஸ்கள் நிற்கும் பொழுது 'engines are allowed to run idle' அதனால் மூன்றுவிதமான கெடுதல்கள் ஏற்படும். ஒன்று எஞ்ஜின் தேய்மானம், இரண்டு டீசல் ஆயில் வேஸ்ட், மூன்று கொஞ்சம் வைப்ரேஷன் ஆகி கியர் மாறிவிட்டால், யார் எதிரில் வருகிறார்களோ அவர்கள் மீது போய் பஸ் பாய்ந்துவிடும். இதையெல்லாம் சரிவர கண்காணிக்கவேண்டும். இது மாதிரி வேஸ்டேஜ் நிறைய இருக்கிறது. பஸ்களை ரோடில் நிறுத்திவிட்டு, கண்டக்டர், டிரைவர் எஞ்ஜினை ஆஃப் பண்ணாமல் காபி, டீ சாப்பிடப் போய்விடுகிறார்கள். இது நல்லது அல்ல. இது ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கு கெட்ட பெயரை உண்டாக்கும். இதனால் ஜனங்களுக்கும் கெடுதல் உண்டாகும். அரசாங்கத்திற்கும் கெட்ட பெயர் உண்டாகும்.

1966-67-ல் 174 பஸ்கள், 129 சர்வீஸஸ், 44 ரூட்கள் இருந்தபொழுது ஸ்பேர் பார்ட்களுக்காக செலவானது அக்சுவலாக ரூ. 15·78 லட்சம். ஆனால் 1968-69-ம் ஆண்டுக்கு 188 பஸ்கள், 146 சர்வீஸ்கள், 55 ரூட்கள் இருக்கும்பொழுது ஸ்பேர் பார்ட்ஸுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 15 லட்சம்தான். முன்பிருந்ததைவிட பஸ்களும் கூடுதலாகியிருக்கிறது. ஸ்பேர் பார்ட்ஸ் விலையும் உயர்ந்திருக்கிறது. இருந்தும் நாம் ஒதுக்கியிருக்கிறது ரூ. 15 லட்சம் தான். பஸ்களின் எண்ணிக்கை குறைவாகவும், விலையும் குறைவாகவும் இருந்தபொழுது செலவாகிய தொகையைவிடக் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இது போதாது. இந்த இனத்திற்கு அதிகமாக ஒதுக்கவேண்டும். அதே மாதிரி தான் 1966-67-ல், 174 பஸ்கள் 129 சர்வீஸ்கள், 44 ரூட்கள் இருந்தபொழுது பெட்ரோல், டீசல் ஆயிலுக்கு ரூ. 35 28 லட்சம் செலவாகியிருக்கிறது. ஆனால் இப்பொழுது 1968-69-ம் ஆண்டுக்கு, 188 பஸ்கள், 146 சர்வீஸ்கள். 55 ரூட்கள் இருக்கும்பொழுது பெட்ரோல் டீசல் ஆயிலுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 38 லட்சம் தான். இப்படியெல்லாம் குறைவாக ஒதுக்கினால் லாபம் இருக்கிற

மாதிரி பொய்யான நிலைமையைக் காட்டும். ஆனால் நடைமுறையில் நஷ்டத்தில் கொண்டுவந்து விட்டுவிடும். ஆகவே, கூடுமான அளவுக்கு ஃபாக்ட் (fact)களுக்குத் தகுந்தாற்போல் இந்த இனங்களுக்கு தொகை ஒதுக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் இவைகளையெல்லாம் அடிக்கடி கண்காணித்து, எதாவது மார்ஜினல் லாஸ் வந்தாலும்கூட, அதை நல்ல விதமாக மேக்கப் செய்யலாம். ஆகவே, இதற்கெல்லாம் அதிகப்படியான தொகை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பட்ஜெட்டில் டெவலப்மெண்டு ஸ்கீம்-க்கு முன்பு அதிகமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழு குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும், டெவலப்மெண்டு பண்டுக்கு பணம் ஒதுக்கப்படவில்லை. பாஸெஞ்சர்ஸ் அமினிடி பண்டுக்கு பணம் ஒதுக்கப்படவில்லை. வொர்கர்ஸ் ஹவுஸிங் ஸ்கீமுக்கு ஒதுக்கப்படவில்லை. இதற்கெல்லாம் பணம் ஒதுக்கினால், நமக்கு லாபம் குறைந்து, வித்தியாசம் நஷ்டத்தில்தான் வரும். கலெக்ஷனை நன்றாக கண்காணிக்க வேண்டும். இப்பொழுது பாசஞ்சர்கள் தொகை அதிகமாகிக்கொண்டிருக்கிறது, அதனால் கலெக்ஷன் நிறைய ஆகிறது. அந்த கலெக்ஷன் எல்லாம் சரியாக வந்து சேருகிறதா, எந்தவிதத்திலாவது லீகேஜ் இருக்கிறதா, சரியாக டிக்கெட் கொடுக்கிறார்களா, கொடுத்த டிக்கெட்டையே மறுபடியும் கொடுக்கிறார்களா. வேறு எந்தவிதமான விவகாரங்கள் நடக்கின்றனவா என்பதெல்லாம் செக்கர்ஸ் வைத்து நல்ல முறையில் கண்காணித்து, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதை ஒரு தொழிலாகக் கருதி நல்ல விதத்தில் நடத்திக்கொண்டு வர வேண்டும். ஜனங்களுக்கு சௌகரியம் செய்ய வேண்டியதுதான். அதற்காக நஷ்டப்பட்டுத்தான் சௌகரியம் செய்யவேண்டும் என்பது அவசியம் அல்ல. செய்யவேண்டும், ஆனால் செய்வதை நன்றாகச் செய்ய வேண்டும்.

கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் அமைச்சர் அவர்கள் 2, 3 நாட்களுக்கு முன்னால் சொன்னார்கள். இந்த பஸ் சார்ஜ் கட்டண விகிதம் பற்றி. அது பற்றியும் கொடுக்கப்பட்ட அறிக்கையில் வந்திருக்கிறது. எந்தெந்த ரூட்களில் தனியார் ரேட் கிலோமீட்டருக்கு 3 பைசாவாகவும், அரசாங்கப் பஸ் ரேட் 2 பைசாவாகவும் இருக்கிறதோ அந்த இடங்களில் பஸ் தொழிலில் ஈடுபட்டவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி, அவர்கள் மூன்றிலிருந்து 2·5 பைசாவாகக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்றும், சர்க்கார் ரேட் 2 பைசாவிலிருந்து 2·5 பைசாவாக உயர்த்திக்கொள்ள வேண்டும் என்றும், சமரசத்திற்கு வந்து, அதன் பிரகாரம் செய்யப்படும் என்று சொன்னார்கள், ஆனால் மக்களிடத்திலே ஒரு தவறான அபிப்ராயம் இருந்துவருகிறது. எல்லா இடங்களிலும், எல்லா ஜில்லாக்களிலும் கட்டண விகிதம் 3 பைசாவிலிருந்து 2·5 பைசாவுக்கு வந்துவிடுமோ என்ற அச்சம் தொழில் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்கு இருக்கிறது. நான் அந்த தொழிலில் ஈடுபட்டவன் சொல்கிறேன் என்ற ஒரு காரணத்தைமட்டும் வைத்துக்கொண்டு நோக்காமல், இது ஒரு தொழில், தொழில் நன்றாக நடக்கவேண்டும், அதற்கு வேண்டிய வசதிகள் இருக்கவேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். இது பற்றி திட்டவட்டமான விளக்கத்தை புத்தகக் குறிப்பில் கொடுத்திருப்பது நல்ல காரியமாக இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் விளக்கமாக அறிவித்துவிட்டால் மனதில் எந்தவிதமான சங்கடங்கள், ஐயப்பாடுகள் இருப்பினும் அவை நீங்கிவிடும்.

இப்பொழுது விலைவாசி ஏறியிருக்கிறது. சம்பளம் ஏறி இருக்கிறது. டிரான்ஸ்போர்ட் வொர்க்கர்களுக்கு இண்டரிம் ரிலீஃப் கொடுத்திருக்கிறார்கள். அதுவே ஒரு பெரிய பூதமாக இருக்கிறது. இன்னும் முழு நிவாரணம் அளிக்கக்கூடிய ரிபோர்ட் வந்தால், அது எப்படி வரும், எந்த மாதிரி அளவுக்கு இருக்கும் என்று தெரியாது. மேலும் சார்ஜை குறைத்துக்கொண்டே போனால், நஷ்டம்தான் ஏற்படும். ஜனங்களுக்கு உபயோகப்படக்கூடிய சர்வீஸ் என்றாலும், அதில் நஷ்டப்படுவது நல்லது அல்ல. அதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஜனங்களுக்கு குழப்பம் இல்லாத அளவுக்கு விளக்கம் தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



டிரான்ஸ்போர்ட் தொழிலானது வெகுகாலத்திற்கு முன்னால் இருந்த நிலைமையைவிட, இப்பொழுது நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. தனிப்பட்டவர்கள் நடத்திவந்தபொழுதும், சர்க்கார் அதில் ஈடுபட்டு, எடுத்துக்கொண்ட பின்பும் நல்ல முறையில் நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஆனால், அந்த தொழிலுக்கு கெடுதல் ஏற்படாவண்ணம், அதை ஒரு தொழில் என்று கருதி நல்ல விதத்தில் நடத்தவேண்டும். நமது தமிழகத்தில் நடக்கும் இந்தத் தொழிலைப் பற்றி யாரும், மற்ற மாநிலங்களிலுள்ளவர்களும் குறைகூறா வண்ணம் இதை நஷ்டம் இல்லாமல் நடத்தவேண்டும். லாபம் வேண்டும் என்ற அவசியமில்லை என்று கூறிக்கொண்டு, தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.** திரு. காசிராமன் அவர்கள் பட்ஜெட்டில் இருக்கும் வித்தியாசத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதாவது பட்ஜெட்டில் எஸ்டிமேட் ஃபார் கமர்ஷியல் அண்டர்டேக்கிங்கில் முதலில் கொடுக்கப்பட்டிருப்பதற்கும், மெமோராண்டத்தில் கொடுக்கப்பட்டிருப்பதற்கும் வித்தியாசம் இருப்பதாகச் சொன்னார்கள்.

**திரு நா. காசிராமன்.** பட்ஜெட் டிமாண்டில் வால்யூம் 3, 1159-1160-ம் பக்கத்தில் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.**—அந்த வித்தியாசம், தொடர்ந்து வருகிற கணக்கிலும், அந்தந்த ஆண்டு குறித்து சரிக்கட்டுகிற கணக்குக்கும் உள்ள வித்தியாசம், அந்தந்த ஆண்டு குறித்து சரிகட்டி வருகிற லாப நஷ்டக் கணக்கிற்கும் அவ்வப்பொழுது இருக்கிற காஷ் பாலன்ஸ் என்ற அளவில் இருக்கிற ரெவின்யூ கணக்கிற்கும் உள்ள வித்தியாசம் தான் அது. அதைத் தான் உறுப்பினர் அவர்கள் வித்தியாசம் இருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். ஒன்று ரெவின்யூ கணக்கில் இருப்பது. கமர்ஷியல் அண்டர்டேகிங் தலைப்பில் அவ்வப்பொழுது அந்தந்த வருஷத்தில் ஆகிற வரவு-செலவு, லாப நஷ்டம் என்கிற அளவிலே நாம் பார்க்கிற பொழுது, இந்த ஆண்டில் போன ஆண்டைவிட ரூ. 30 லட்சம் குறைவாக நாம் நஷ்டத்தை ஆக்கியிருக்கிறோம். அடுத்த ஆண்டு லாபத்தை எதிர்நோக்கிச் செல்லலாம் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது என்பதைத்தான் அது விளக்குகிறது.

**திரு. நா. காசிராமன்.** எனக்கு அப்பொழுதே அந்த சந்தேகம் வந்தது. நான் 2, 3 வருஷங்களுக்கான பட்ஜெட் டிமாண்ட் ஃபார் கமர்ஷியல் அண்டர்டேக்கிங்களில் பார்த்தேன். 1964-65, 1965-66, 1966-67 இப்படி ஒவ்வொரு வருஷத்திலும் இரண்டு figures-ஐயும் கம்பேர் செய்து பார்த்தேன். கமர்ஷியல் அண்டர்டேக்கிங்கில் என்ன figure போட்டிருக்கிறதோ அதே figure தான் பட்ஜெட் டிமாண்டிலும் இருக்கிறது. ஆனால் இந்த வருஷம் பட்ஜெட் டிமாண்ட் பிகரையும், கமர்ஷியல் அண்டர்டேகிங் பிகரையும் பார்த்தால் குறைவான தொகை போடப்பட்டிருக்கிறது. அப்படி போடப்பட்டிருப்பதால் லாபம் வருகிறது என்று பொதுவாகத் தெரிகிறது. ஆனால் பட்ஜெட் டிமாண்டு பிகர் இதில் பிரதிபலித்தால் அது நஷ்டத்தில் கொண்டுவந்து விடும். முற் பகல் 11-00

***திரு. எம். எஸ். மணி.** சட்ட மன்றத் தலைவர் அவர்களே; நாட்டுடைமையாக்கப்பட்ட, பேருந்துப், போக்குவரத்துத் துறை குறித்து, பொதுப் பணித் துறை அமைச்சர் கொண்டுவந்துள்ள கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் பஸ்களை தேசிய மயமாக்கத் துவங்கி 21 ஆண்டுகள் இன்றையதினம் ஆகின்றன. தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு அதை நல்லபடியாக தேசியமாக்கத் துவங்கி, அதே நேரத்திலே யாரும் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு, 75 மைலும் அதற்கு மேற்பட்ட தூரம் ஓடும் பஸ்களை தேசிய மயமாக்கும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. அப்படித் திட்டத்தை மேற்கொள்ளும்போது, தனியார் பஸ்களை எடுத்துவிட்டு, அரசாங்க

மாதிரி பொய்யான நிலைமையைக் காட்டும். ஆனால் நடைமுறையில் நஷ்டத்தில் கொண்டுவந்து விட்டுவிடும். ஆகவே, கூடுமான அளவுக்கு ஃபாக்ட் (fact)களுக்குத் தகுந்தாற்போல் இந்த இனங்களுக்கு தொகை ஒதுக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் இவைகளையெல்லாம் அடிக்கடி கண்காணித்து, எதாவது மார்ஜினல் லாஸ் வந்தாலும்கூட, அதை நல்ல விதமாக மேக்கப் செய்யலாம். ஆகவே, இவைகளெல்லாம் அதிகப்படியான தொகை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பட்ஜெட்டில் டெவலப்மெண்டு ஸ்கீம்-க்கு முன்பு அதிகமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழு குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும், டெவலப்மெண்டு பண்டுக்கு பணம் ஒதுக்கப்படவில்லை. பாஸெஞ்சர்ஸ் அமினிடி பண்டுக்கு பணம் ஒதுக்கப்படவில்லை. வொர்கர்ஸ் ஹவுஸிங் ஸ்கீமுக்கு ஒதுக்கப்படவில்லை. இதற்கெல்லாம் பணம் ஒதுக்கினால், நமக்கு லாபம் குறைந்து, வித்தியாசம் நஷ்டத்தில்தான் வரும். கணக்குகளை நன்றாக கண்காணிக்க வேண்டும். இப்பொழுது பாசஞ்சர்கள் தொகை அதிகமாகிக்கொண்டிருக்கிறது, அதனால் கலெக்ஷன் நிறைய ஆகிறது. அந்த கலெக்ஷன் எல்லாம் சரியாக வந்து சேருகிறதா, எந்தவிதத்திலாவது லீகேஜ் இருக்கிறதா, சரியாக டிக்கெட் கொடுக்கிறார்களா, கொடுத்த டிக்கெட்டையே மறுபடியும் கொடுக்கிறார்களா, வேறு எந்தவிதமான விவகாரங்கள் நடக்கின்றனவா என்பதெல்லாம் செக்கர்ஸ் வைத்து நல்ல முறையில் கண்காணித்து, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதை ஒரு தொழிலாகக் கருதி நல்ல விதத்தில் நடத்திக்கொண்டு வரவேண்டும். ஜனங்களுக்கு சௌகரியம் செய்ய வேண்டியதுதான். அதற்காக நஷ்டப்பட்டுத்தான் சௌகரியம் செய்யவேண்டும் என்பது அவசியம் அல்ல. செய்யவேண்டும், ஆனால் செய்வதை நன்றாகச் செய்ய வேண்டும்.

கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் அமைச்சர் அவர்கள் 2, 3 நாட்களுக்கு முன்னால் சொன்னார்கள். இந்த பஸ் சார்ஜ் கட்டண விகிதம் பற்றி. அது பற்றியும் கொடுக்கப்பட்ட அறிக்கையில் வந்திருக்கிறது. எந்தெந்த ரூட்களில் தனியார் ரேட் கிலோ மீட்டருக்கு 3 பைசாவாகவும், அரசாங்கப் பஸ் ரேட் 2 பைசாவாகவும் இருக்கிறதோ அந்த இடங்களில் பஸ் தொழிலில் ஈடுபட்டவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி, அவர்கள் மூன்றிலிருந்து 2·5 பைசாவாகக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும், சர்க்கார் ரேட் 2 பைசாவிலிருந்து 2·5 பைசாவாக உயர்த்திக்கொள்ள வேண்டும் என்றும், சமரசத்திற்கு வந்து, அதன் பிரகாரம் செய்யப்படும் என்று சொன்னார்கள், ஆனால் மக்களிடத்திலே ஒரு தவறான அபிப்ராயம் இருந்துவருகிறது. எல்லா இடங்களிலும், எல்லா ஜில்லாக்களிலும் கட்டண விகிதம் 3 பைசாவிலிருந்து 2·5 பைசாவுக்கு வந்துவிடுமோ என்ற அச்சம் தொழில் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்கு இருக்கிறது. நான் அந்த தொழிலில் ஈடுபட்டவன் சொல்கிறேன் என்ற ஒரு காரணத்தைமட்டும் வைத்துக்கொண்டு நோக்காமல், இது ஒரு தொழில், தொழில் நன்றாக நடக்கவேண்டும், அதற்கு வேண்டிய வசதிகள் இருக்கவேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். இது பற்றி திட்டவட்டமான விளக்கத்தை புத்தகக் குறிப்பில் கொடுத்திருப்பது நல்ல காரியமாக இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் விளக்கமாக அறிவித்துவிட்டால் மனதில் எந்தவிதமான சங்கடங்கள், ஐயப்பாடுகள் இருப்பினும் அவை நீங்கிவிடும்.

இப்பொழுது விலைவாசி ஏறியிருக்கிறது. சம்பளம் ஏறி இருக்கிறது. டிரான்ஸ்போர்ட் வொர்கர்களுக்கு இண்டரிம் ரிலீஃப் கொடுத்திருக்கிறார்கள். அதுவே ஒரு பெரிய பூதமாக இருக்கிறது. இன்னும் முழு நிவாரணம் அளிக்கக்கூடிய ரிபோர்ட் வந்தால், அது எப்படி வரும், எந்த மாதிரி அளவுக்கு இருக்கும் என்று தெரியாது. மேலும் சார்ஜை குறைத்துக் கொண்டே போனால், நஷ்டம்தான் ஏற்படும். ஜனங்களுக்கு உபயோகப்படக்கூடிய சர்வீஸ் என்றாலும், அதில் நஷ்டப்படுவது நல்லது அல்ல. அதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஜனங்களுக்கு குழப்பம் இல்லாத அளவுக்கு விளக்கம் தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



டிரான்ஸ்போர்ட் தொழிலானது வெகுகாலத்திற்கு முன்னால் இருந்த நிலைமையைவிட, இப்பொழுது நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. தனிப்பட்டவர்கள் நடத்திவந்தபொழுதும், சர்க்கார் அதில் ஈடுபட்டு, எடுத்துக்கொண்ட பின்பும் நல்ல முறையில் நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஆனால், அந்த தொழிலுக்கு கெடுதல் ஏற்படாவண்ணம், அதை ஒரு தொழில் என்று கருதி நல்ல விதத்தில் நடத்தவேண்டும். நமது தமிழகத்தில் நடக்கும் இந்தத் தொழிலைப் பற்றி யாரும், மற்ற மாநிலங்களிலுள்ளவர்களும் குறைகூறா வண்ணம் இதை நஷ்டம் இல்லாமல் நடத்தவேண்டும். லாபம் வேண்டும் என்ற அவசியமில்லை என்று கூறிக்கொண்டு, தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.** திரு. காசிராமன் அவர்கள் பட்ஜெட்டில் இருக்கும் வித்தியாசத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதாவது பட்ஜெட்டில் எஸ்டிமேட் ஃபார் கமர்ஷியல் அண்டர்டேக்கிங்கில் முதலில் கொடுக்கப்பட்டிருப்பதற்கும், மெமோரண்டத்தில் கொடுக்கப்பட்டிருப்பதற்கும் வித்தியாசம் இருப்பதாகச் சொன்னார்கள்.

**திரு. நா. காசிராமன்.** பட்ஜெட் டிமாண்டில் வால்யூம் 3, 1159–1160-ம் பக்கத்தில் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.**—அந்த வித்தியாசம், தொடர்ந்து வருகிற கணக்குக்கும், அந்தந்த ஆண்டு குறித்து சரிக்கட்டுகிற கணக்குக்கும் உள்ள வித்தியாசம், அந்தந்த ஆண்டு குறித்து சரிகட்டி வருகிற லாப நஷ்டக் கணக்கிற்கும் அவ்வப்பொழுது இருக்கிற காஷ் பாலன்ஸ் என்ற அளவில் இருக்கிற ரெவின்யூ கணக்கிற்கும் உள்ள வித்தியாசம் தான் அது. அதைத் தான் உறுப்பினர் அவர்கள் வித்தியாசம் இருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். ஒன்று ரெவின்யூ கணக்கில் இருப்பது. கமர்ஷியல் அண்டர்டேகிங் தலைப்பில் அவ்வப்பொழுது அந்தந்த வருஷத்தில் ஆகிற வரவு-செலவு, லாப நஷ்டம் என்கிற அளவிலே நாம் பார்க்கிறபொழுது, இந்த ஆண்டில் போன ஆண்டைவிட ரூ. 30 லட்சம் குறைவாக நாம் நஷ்டத்தை ஆக்கியிருக்கிறோம். அடுத்த ஆண்டு லாபத்தை எதிர்நோக்கிச் செல்லலாம் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது என்பதைத்தான் அது விளக்குகிறது.

**திரு. நா. காசிராமன்.** எனக்கு அப்பொழுதே அந்த சந்தேகம் வந்தது. நான் 2, 3 வருஷங்களுக்கான பட்ஜெட் டிமாண்ட் ஃபார் கமர்ஷியல் அண்டர்டேக்கிங்களில் பார்த்தேன். 1964–65, 1965–66, 1966–67 இப்படி ஒவ்வொரு வருஷத்திலும் இரண்டு figures-ஐயும் கம்பேர் செய்து பார்த்தேன். கமர்ஷியல் அண்டர்டேக்கிங்கில் என்ன figure போட்டிருக்கிறதோ அதே figure தான் பட்ஜெட் டிமாண்டிலும் இருக்கிறது. ஆனால் இந்த வருஷம் பட்ஜெட் டிமாண்ட் பிகரையும், கமர்ஷியல் அண்டர்டேகிங் பிகரையும் பார்த்தால் குறைவான தொகை போடப்பட்டிருக்கிறது. அப்படி போடப்பட்டிருப்பதால் லாபம் வருகிறது என்று பொதுவாகத் தெரிகிறது. ஆனால் பட்ஜெட் டிமாண்டு பிகர் இதில் பிரதிபலித்தால் அது நஷ்டத்தில் கொண்டுவந்து விடும். முற் பகல் 11-00

***திரு. எம். எஸ். மணி.** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நாட்டுடைமையாக்கப்பட்ட, பேருந்துப், போக்குவரத்துத் துறை குறித்து, பொதுப் பணித் துறை அமைச்சர் கொண்டுவந்துள்ள கோரிக்கைகளை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் பஸ்களை தேசிய மயமாக்கத் துவங்கி 21 ஆண்டுகள் இன்றைய தினம் ஆகின்றன. தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு அதை நல்லபடியாக தேசியமாக்கத் துவங்கி, அதே நேரத்திலே யாரும் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு, 75 மைலும் அதற்கு மேற்பட்ட தூரம் ஓடும் பஸ்களை தேசிய மயமாக்கும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. அப்படித் திட்டத்தை மேற்கொள்ளும்போது, தனியார் பஸ்களை எடுத்துவிட்டு, அரசாங்க

பஸ்கள் ஓட்டும்போது பாதிக்கப்பட்ட தொழிலாளிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, கூடுமான வரையில் இன்றைய தினம், அரசாங்க போக்குவரத்துக்களில் அவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். தனியார் பஸ்களிலே இருந்தவர்கள் பாதிக்கப்பட்டாலும் அரசாங்க பஸ்களிலே, 75 மைலுக்கு மேலே அரசாங்கம் பஸ்களை ஓட்டுவதாலும் அதிகம் பேர்கள் பாதிக்க பட மாட்டார்கள். அதோடு தனியார் பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டதன் காரணமாக ஷெட்டுகளில் சும்மா இருந்து பழுதாகி விடாமல் இருப்பதற்காக, 75 மைலுக்குக் குறைந்த ரூட்டுகளில் அவர்கள் ஓட்ட முதல் சலுகையாக பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த பஸ்களும் இன்றையதினம் ஓடிக்கொண்டிருக்கின்றன. அப்படிப் பார்க்கும்போது இன்றையதினம் 236 வழித்தடங்களை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல், இனி கொடுக்கப்படும் ரூட்டுகளும் பொதுவாக கூட்டுறவு முறையிலும், தொழில் சங்கங்கள் சார்பில் கேட்டால், சிறு சிறு ரூட்டுகளை முதலிலே கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அது மட்டுமல்ல, ஐந்து பஸ்களுக்கு மேல் யாருக்கும் கொடுக்கக்கூடாது. மாக்ஸிமம் ஐந்து பஸ்கள் தான் இருக்கவேண்டும் என்கிற முறையைக் கடைப்பிடித்தால், இந்த நாட்டில் எல்லோரும் பிழைக்க வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் திரு. காசிராமன் மோட்டார் வாகன வரிமூலம் ஏராளமான வருவாய் வருகிறது. ஆனாலும் அதில் பணியாற்றுகின்ற உத்தியோகஸ்தர்களுக்கு குறைவான சம்பளம் தான என்று குறிப்பிட்டார்கள். இருபது ஆண்டு காலமாகவே அப்படித்தான் இருக்கிறது. என்ன காரணம் என்று ஒரு முறை சட்ட மன்றத்திலே கேட்டபோது, அப்பொழுது இருந்த அமைச்சர் சொன்னார்கள், அவர்களுக்கு வேறு வழியில் பணம் வருகிறது என்று வேறு வழியைத் தடுக்க ஊதியத்தை உயர்த்தலாம் என்று நான் யோசனை கூறினேன். அப்பொழுது அந்த யோசனையைக் கேட்டிருந்தால், இன்றையதினம் இந்த நிலை வந்திருக்காது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாகவே, முன்பு ஏராளமான குறைகள் சட்ட மன்றத்திலே எடுத்துகாட்டப்பட்டன. எடுத்துகாட்டாத பிரச்சனைகளே இல்லை. ஆனால் அப்பொழுது கவனிக்கவில்லை. இந்தத் துறைக்கு அமைச்சராக கலைஞர் கருணாநிதி வந்தார்கள். நானும் துருவித் துருவிப் பார்த்தேன், ஏதாவது குறைகளை எடுத்து வைக்கலாம் என்று; ஆனால், அத்தனை குறைகளமீதும் அமைச்சரவர்கள் கைவைத்து விட்டார்கள். அப்படி எல்லாவற்றையும் கொடுக்கிற காரணத்தாலே. இன்றைய தினம் தொழில் சங்கத்தலைவர்களால் எதையும் புதிதாக உற்பத்தி செய்ய முடியவில்லை. ஏன்? மனிதாபிமானத்தோடு குறைகளைத் தீர்க்கிறார்கள். எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும், இன்னும் பத்து ரூபாய் வேண்டுமென்றுதான் ஆசை இருக்கிறது. ஒரு தொழிலாளிக்கு ஒரு பஸ் இனமாகக் கொடுத்தாலும், அடுத்த ஆண்டே, ஏன், இரண்டு பஸ்களாகக் கொடுத்தால் என்ன என்கிற குறை வரும். ஆகவேதான், பொதுவாக அவர்களுடைய குறைகளைத் தீர்க்க ஒரு 'ஹைபவர் கமிட்டி' ஒரு உயர் மட்டக் குழு ஒன்றை இங்கே அமைக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். அந்த உயர் மட்டக் குழு என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும், எவற்றைச் சாதிக்க வேண்டும் என்று அதைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னால், அது அமைச்சரவர்களுக்கும் நல்ல வாய்ப்பாக இருக்கும், நடத்துவதற்கு நல்ல வழியாக அமையும் என்று கருதுகிறேன். பஸ்களிலெல்லாம ஏன் நட்டம் ஏற்படுகிறது என்பதை ஆராயவேண்டும்; என்னென்ன காரணங்களால் நட்டம் ஏற்படுகிறது இந்த நட்டத்தைத் தவிர்த்து, லாபத்தை அடையும் வழியை எவ்வாறு காணவேண்டும், அதற்கான வழிகள் என்னென்ன என்றெல்லாம் ஆராயவேண்டும். தேசியமயமாக்கப்பட்ட பஸ்கள் செல்லுகின்ற ரூட்டுகளிலே, தனியார் பஸ்களும் செல்லும் தொல்லை இல்லாமல் இருக்க வேண்டும். ஏனென்றால், அரசாங்க பஸ் ஓடும்போது, தனியார் பஸ் இடைமறித்து, இடைமறித்து ஓடுமேயானால், அரசாங்கத்திற்கு வருமானம் குறையும். அரசாங்க வருமானம் பாதிக்கப்படும். அப்படிப்பட்ட ரூட்டுகளில், கூடுமான வரையில், தனியார்களுடைய பஸ்களைக் குறைத்துக்



கொண்டே வரவேண்டும். தனியார், இந்த பஸ்களில் ஒருமுறையைக் கடைபிடிக்கிறார்கள். ஒரு ஷெட்டிலே அல்லது பஸ் நிற்கக்கூடிய ஸ்டாண்டிலே ப்ரோக்கர் என்று சிலரை வேலைக்கு வைத்துக் கொள்கிறார்கள். ஒரு பஸ்ஸிலே, லால்குடிக்குப் போகவேண்டும் என்றால், அவர்கள் 'லால்குடி' 'லால்குடி' என்று தேடி பிரயாணிகளை அழைக்கிறார்கள். ஆனால் அரசாங்கத் துறையில் அப்படிப்பட்ட புரோககர்கள் இல்லை. ப்ரோக்கர்கள் இருக்கும் பஸ்களுக்கு அதிகமான கலெக்ஷன் கட்டாயம் வரும். ப்ரோக்கர்கள் இல்லாததால் நம்முடைய பஸ்களில் கலெக்ஷன் குறையத்தான் செய்யும். ஆகவே, அரசாங்க பஸ்களுக்கும், முக்கியமான இடங்களில், ஜங்ஷன்களில் ப்ரோக்கர்களை ஏற்படுத்தவேண்டும். இல்லையென்றால், தனியார் பஸ்களில்தான் மக்கள் ஏறிப்போவார்கள்.

இந்த நிர்வாகத்தில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் பல இடங்களிலே இருக்கிறார்கள். அதேபோல இன்னும் சில இடங்களில் தேவைக்குக் குறைவாகவும் இருக்கிறார்கள். தேவைக்கு அதிகமாக இருப்பவர்களை தேவைக்குக் குறைவாக இருக்கும் இடங்களுக்கு மாற்றியும் அதிகமான ஆட்களைக் குறைக்கவும் கண்காணிக்க வேண்டும்.

ரிடையர் ஆன தொழிலாளிகள் கணக்குகளை முடிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. வேலையை விட்டுப் போய்விட்டாலும், குறிப்பிட்ட காலத்தில அவர்களுக்குச் சேரவேண்டிய தொகைகளாக கொடுப்பதில் உடனடியாக முடிவுகள் எடுத்து, அதற்கான வழிகளைக் காண அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன்.

சர்வீஸ் கண்டிஷன் மிக முக்கியமானது; அதோடு, 'அதர் பெனிஃபிட்ஸ்' தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகள் என்னென்ன, எவ்வாறு அவற்றைக் கொடுக்கலாம், என்னென்ன குறைகள் ஏற்படுகின்றன. எந்த எந்த வகைகளில் அவற்றைத் தீர்க்கலாம், சம்பள விகிதத்தை உயர்த்துவது எப்படி, இது போன்ற நிலைகளை விவாதித்து, நல்ல முடிவு எடுக்க அந்த உயர் மட்டக் குழு இன்றைய தினம் அமைக்கப்பட்டாக வேண்டும். அந்த உயர் மட்டக் குழுவில் ஐந்து பேர்கள் இருக்கலாம்; அப்படி ஐவர் கொண்ட குழுவாக அமைப்பதில் யார் யார் இருக்கவேண்டும் என்பதையும் இங்கே நிர்ணயிக்கவேண்டும். அந்த ஐந்து பேர்களில் போக்குவரத்துத் துறையில் உள்ள அனுபவம் பெற்ற அதிகாரியைப் போடலாம்; தொழில் சங்கத்தில் நல்ல அனுபவம் உள்ள, இந்தத் தொழிலோடு தொடர்பு உள்ள தலைவர் ஒருவரைப் போடலாம்; சட்டமன்றத்திலே பஸ் தொழிலிலே அனுபவம் மிகுந்த சட்ட மன்ற உறுப்பினர் ஒருவரைப் போடலாம்; தனியார் பஸ் நடத்தி அதிக அனுபவம் உள்ள ஒரு தொழில் அதிபரைப் போடலாம்; இன்னும் அனுபவமுள்ள ஆர். டி. ஓ.வையும் போடலாம். இப்படி ஐந்து பேர்கள் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து, இப்படிப்பட்ட பிரச்சினைகளை ஆராய்ந்தால், தொழில் தகராறுகள் ஏற்படாமல் சமாளிக்க முடியும். அரசாங்கம் நடத்தும் பஸ் துறையில், போராட்டம், வேலைநிறுத்தம் போன்றவைகள் ஏற்பட்டால், மக்களுக்கு நட்டம் என்ற ஹேதுவால், அப்படி எந்த தகராறுகளும் ஏற்படாமல் இருக்கும் நிலையை உண்டுபண்ண, தொழில் சங்கம், 'ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அண்ட ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன் இந்தக் கோரிக்கைகளைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இவைகளை பரிசீலனைசெய் அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நன்மைகளைப் பார்த்தபோது, சட்ட மன்றத்திலே கடந்த காலத்திலே நான் கேட்கிறபோதெல்லாம், என்னைப் பார்த்து அப்பொழுது இருந்த அமைச்சர்கள் சிரிப்பார்கள், செருப்பு கொடுங்கள் என்று கேட்கிறேன என்றால், செருப்பு வேண்டுமா என்று கேட்பார்கள். ஆனால் இன்று, அப்பொழுது நாங்கள் என்னென்ன கேட்டோமோ, என்னென்ன கொடுக்கவேண்டுமென்று சொன்னோமோ, அவற்றை யெல்லாம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லப் போனால், வெளியூர் பஸ் கட்டணம் குறைக்க வேண்டும் என்பது ஒன்று

சென்னையிலிருந்து திருச்சிக்குப் போக ரூ. 13 என்று கட்டணம் இருந்தது. நாங்கள் அமைச்சரிடம அன்றைக்குச் சொன்னோம், ரயிலிலே போகாமல், பஸ்ஸிலே போகிறோம், ஏனென்றால், நம்முடைய பணம் நம் சர்க்காருக்குப் போகவேண்டும் என்பதற்காக, ஆகவே, அதை குறைக்க வேண்டும் என்றோம். கேட்கவில்லை, ஆனால், இன்றைக்கு குறைத்து விட்டார்கள். அவாகள் உயர்த்திய மூன்று ரூபாயை இன்றைக்குக குறைத்து, ரூபாய் 10 எனறு செய்திருக்கிறார்கள். இதை பொது மக்கள் வரவேற்கிறார்கள்.

அதேபோலத்தான், நகரத்தில் பஸ்களில் சில்லரை இல்லாத தகராறுகள் நிறைய வருகின்றன. தயவுசெய்து, தலைவர் அவர்களே, ஐந்து நிமிஷம் கூட்டிக்கொடுக்க வேண்டும். பேச வேண்டியது நிறைய இருக்கிறது. நகர பஸ்களில் 12 பைசாவாக இருந்ததை, 15 பைசாவாகவும், 17 பைசாவாக இருந்ததை 15 பைசாவாகக் குறைத்தும் சில்லரைத் தகராறுகள் ஏற்படாத முறையில் இன்றையதினம் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரணங்களால் பொதுமக்கள், கண்டக்டர்கள், இவர்களிடையே தகராறுகள் குறைக்கப்பட்டிருககின்றன. அதோடு மட்டுமல்ல, நகரத்தில் ஓடும் பஸ்களில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்று குறைந்த கட்டணச் சீட்டுகள் போடுங்கள் என்று கேட்டோம். அன்றைக்குப் போடவில்லை. ஆனால் இன்றையதினம் நகரத்தில் விரும்பும் இடங்களுக்கெல்லாம் போகலாம, காலை ஐந்து மணியிலிருந்து, இரவு 11 மணிவரை ஒன்றரை ரூபாய் கட்டணத்தில், சென்னையைப் பார்க்கலாம், அதன் சுற்றுப்புறத்தைப் பார்க்கலாம் என்று செய்திருக்கிறார்கள். அதனால், வெளியூர்களிலிருந்து வருகின்ற பிரயாணிகள் சுலபமாகச் சுற்றிப் பார்க்க வசதியளிக்கப்பட்டிருக்கிறது

ஈவு இரக்கம் காட்டும் எண்ணத்திலே, நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள், ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிற குருடர்கள், கால், கை இழந்தவர்கள் ஆகிய அப்படிப்பட்டவர்கள அனுமதிச் சீட்டோடு வந்தால், அவர்கள் எங்கிருந்து ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டுமோ அதற்கு அவர்கள் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை, இலவசமாகப் பயணம் செய்யலாம் என்ற அளவுக்குச் சலுகை தந்திருக்கிறார்கள்.

அதைப் போல, பஞ்சப்படி, நகர ஈட்டுப்படி, ஊக்க போனஸ், ஓர்க்ஷாப் தொழிலாளர்களுக்கு அட்டென்டென்ஸ் போனஸ் உயர்வு, பயிற்சியாளர்க்கு உதவிப்பணம், கிளீனர்களுக்கு உதவித் தொகை, மலை நாட்டில் பணியாளர்கட்கு குளிர்கால அலவன்ஸ் ஆகிய அத்தனையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, தொழிலாளர்கள் சங்கம் வைத்து நடத்துவதற்காக ஒரு கட்டடம், அதற்கு வாடகை இல்லாமல் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த அரசாங்கத்தையும் அமைச்சரவர்களையும் நான் பாராட்டுகின்றேன். தையல் கூலி அதிகமாக இருக்கிறது, அதைக் கூட்டவேண்டும் என்றுகேட்டும், பல நேரங்களில் கொடுக்கப்படவில்லை. இப்பொழுது 12 ரூபாய் அளவுக்கு அதை உயர்த்தியிருக்கிறார்கள். பணியாளர்கட்கு சீருடை இரண்டு செட்தான் முன்பு கொடுத்தார்கள். இப்பொழுது மூன்று சீருடை கொடுக்கும் அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். எனவே, தொழிலாளர்கள் மனமார இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறார்கள். டிரைவர், கண்டக்டர்களுக்குக் கொடுத்து வந்த பாட்டாவில் பத்துபைசா கூடுதலாக்கியிருக்கிறார்கள், அவர்கள் விரும்பியது 25 பைசா. ஆனால், இன்றிருக்கும் பொருளாதார நிலையில், பத்துபைசா கூடுதலாக அமைச்சரவர்கள் கொடுத்து, இதோடு நின்றுவிடவில்லை. இனி லாபத்தை எதிர்பார்த்து, நீங்கள் கேட்ட கோரிக்கையை நிறைவேற்ற நான் காத்திருக்கிறேன் என்ற உத்தரவாதத்தையும் கொடுத்தார்கள். அதைத்தான் நம்முடைய எதிர்க்கட்சியில் இருக்கும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவர், இது கஞ்சத்தனம் அல்லவா ? என்று கேட்க, அதற்கு அமைச்சர் அவர்கள், நீங்கள் இதுகூட கொடுக்கவில்லை அது 'படு கஞ்சத்தனம் அல்லவா? என்று குறிப்பிட்டார். ஆகவே, இந்த பத்து பைசா கொடுத்திருப்பது தற்காலிகம் என்றே கருதுகிறேன். எதிர் காலத்தில் அதையும் கூடுதலாக ஆக்க வேண்டும் என்று ஆசையைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.



இரவில் 12 மணி, 1 மணி ஷிப்ட் முடிந்து வீட்டுக்கு வரும் தொழிலாளர்களுக்கு பஸ் வசதி இல்லாமல் இருந்தது. இரண்டு மணிக்கு வேலை முடிந்து வீடு செல்வதற்கு, அசோக் நகர் போன்ற பகுதியில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இரவிலே பஸ் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள்.

அண்மையில் உலகத்தமிழர் மாநாடு நடைபெற்றது. அதிலே போக்குவரத்து ஸ்தம்பிக்காமல் ஏராளமான பஸ்களை விட்டு, பொது மக்களுக்கு வசதி செய்திருக்கிறார்கள். உலகத் தொழில் கண்காட்சி நடைபெற்றபோதும் போக்குவரத்துப் பிரச்சினை இல்லாமல் ஏராளமான பஸ்களை விட்டு பொதுமக்களுக்கு வசதி செய்திருக்கிறார்கள். அந்தக் கண்காட்சிக்குள்ளே இரண்டு அரசாங்க பஸ்கள் ஓடிக்கொண்டே இருந்தன. பூம்புகார் தேர் போல் அலங்கரிக்கப்பட்டு, அதற்காக புதிதாக பாடி கட்டி உள்ளே விட்டிருந்தார்கள். அதைக் கண்காட்சிப் பொருளாகப் பார்க்கும் அளவுக்கு நல்லமுறையில் அதைத் தயாரித்து இருந்தார்கள்.

'ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்' என்று சொல்லிக் கொண்டே இருந்தோம். அதை இன்றையதினம் 'தமிழக அரசாங்கப் போக்குவரத்து' என்று தமிழ்படுத்தியிருக்கிறார்கள். தமிழ்ப்படுத்தியது மட்டுமல்ல. அதிலே நம்முடைய திருவள்ளுவர் படத்தையும் மாட்டியிருக்கிறார்கள். தனியார் பஸ்களிலும் இன்றையதினம் அதை கடைபிடிக்கிறார்கள், திருவள்ளுவர் படத்தை மாட்டியது மட்டுமல்லாமல், ஒவ்வொரு திருக்குறளையும் எழுதியிருக்கிறார்கள். அந்தத் திருக்குறளைப் படிக்கும் மாணவர்கள், அதற்கு என்ன அர்த்தம், என்ன விளக்கம், அதற்கு இப்படி அர்த்தம் இருக்குமா, அப்படி அர்த்தம் இருக்குமா என்று வாதித்து, தங்களுடைய அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கும், அந்தத் திருக்குறட் கருத்தைக் கடைபிடிப்பதற்கும் நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

தமிழ் முழங்கும் அளவிற்கு இன்றையதினம் நல்ல வாய்ப்பு எற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். முன்பு 'பாரீஸ் கார்னர்' என்று சொன்னார்கள். அதை 'பாரிமுனை' என்று இப்பொழுது மாற்றியிருக்கிறார்கள். பாரியைப்பற்றிப் புத்தகத்திலே படித்திருக்கிறோம். பாரிமுனையை இன்று நேரில் பார்க்கிறோம். 'கெல்லீஸ்' என்று இருந்ததை 'கீள்ளியூர்' என்று மாற்றியிருக்கிறார்கள். 'பட்டினப்பாக்கம்' என்ற பழைய புறநானூற்றுச் சொற்களை நாம் பார்க்கும் அளவுக்கு அங்கே நிலைமை உயர்ந்திருக்கிறது.

இவ்வளவு வசதிகளையும் செய்து கொடுத்துவிட்டிருக்கிறோம், என்றாலும், சில குறைகளும் அங்கே ஏற்படுகின்றன. அந்தக் குறைகளை நாம் திருத்துவதற்கு முயலவேண்டும். திருத்தினால்தான் லாபமாக இருக்கும் என்பதற்காகச் சொல்லுகிறேன். ஓர்க்ஷாப்பிலே மெயின்டினென்ஸ் போதுமானதாக இல்லை. அதை நாம் ஒத்துக் கொண்டுதானாக வேண்டும். ஒரே இடத்தில் அதிகமான பஸ்களை நிறுத்தக் கூடாது. சென்னை நகரத்தில் ஏராளமான வண்டிகள் வந்து நிறுத்தப்படுகின்றன. திருச்சியில் 100 வண்டிகள் நிறுத்தலாம். அந்த ரூட்களுக்கு திருச்சி சென்டராக இருக்க வேண்டும். ஒரே இடத்தில் இருப்பதால் பலபேரிடம் வேலை வாங்குவது கடினமாக இருக்கிறது. பல தொழிலாளர்கள் ஏமாற்றும் நிலைமை அங்கே வந்துவிடுகிறது. எனவே, ஒரே இடத்தில் அதிக பஸ்களை தேக்கிவைக்கக் கூடாது. பல பிரிவுகளாக இருக்கவேண்டும். சென்னை நகரில் வரும் பஸ்களைப் பல இடங்களுக்கு மாற்றவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

டிரைவர்கள் காலையில் வண்டியை எடுத்துக் கொண்டுபோய், மாலை ஷெட்டுக்கு வந்து வண்டியை விடும்போது, இன்ன இன்ன குறை இருக்கிறது என்று ரிபோர்ட் புக்கில் எழுதி வைத்தால், அதை இரவுக்குள்ளாக உடனே பார்த்தாக வேண்டும். பி.ஸி.க்குப் போகும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டால் பஸ் கெட்டுவிடும். ஆகவே, இரவு குறைகள் எழுதப்பட்டால், மறுநாள் காலைக்குள் ரிப்பேர் செய்ய வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வண்டி ஒர்க்ஷாப்பிலிருந்து போகிறபோது அந்த வண்டிக்கு ஆறு டயர் போட்டு அனுப்புவோம். இந்த ஆறு டயர்களும் அதே நிலையில் மாலையில் வருகிறதா என்பதை கண்காணிக்கவேண்டும். முன்பு நிலைமை எப்படியிருந்தது என்றால், புது டயர் போட்டு அனுப்பினால் திரும்பிவரும் போது, பழைய டயரோடு வரும். இதிலெல்லாம் மிகுந்த கவனமாக இருக்கவேண்டும். அதேபோல் ஸ்பேர் பாட்ஸ் விஷயத்திலும் கவனமாக இருக்கவேண்டும். புதிய ஹாரன் போட்டு அனுப்பியிருப்போம். ஆனால், பழைய ஹாரன் போட்டு திரும்பி வரும். என்னபோட்டு அனுப்பினோம், என்ன போட்டு வருகிறது என்பதெல்லாம் ஒன்றுமே தெரியாத அளவுக்கு, தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு முன்பெல்லாம் வண்டி வந்து நிற்கும். அதை உடனே செக் பண்ணவேண்டும், இல்லையென்றால், டிரைவர், கண்டக்டர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வண்டிகளுக்கு க்ரீஸ் சரியாகப் போடப்படுவதில்லை என்று திரு காசிராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள். க்ரீஸெல்லாம் சரியாக அடிப்பதில்லைதான். உள்ளே எங்கு பார்த்தாலும் டீசல் இருக்கும். ரோடிலேகூட டீசல் எண்ணெய் இருப்பதற்கு என்ன காரணம் என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும். மெயின்டினென்ஸ் சரியாக இல்லை. இப்படி வேஸ்ட் ஆவதால் நமக்கு ஏராளமான செலவு கூடுதலாகிறது. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

டிரைவர்களை வேலைக்குச் சேர்க்கும் முறையைப் பார்த்தால், சிரிப்பு வருகிறது. 18 வருஷம், 20 வருஷம் சர்விஸ் ஆயிருக்கக்கூடியவர்கள் வேலை கோரி வந்தால், உடனே அவர்களுக்கு இந்த இலாகாவில் வேலை கொடுக்க வேண்டும். அப்படியில்லாமல், புதிதாக 30 நாள், 80 நாள் பயிற்சி பெற்று லைசன்ஸ் எடுத்த இளைஞர்களை எடுத்துக்கொண்டு, அவர்கள் வண்டி ஓட்டும்போது, அவனால் மெயின்டெயின் பண்ண முடியாமல் திருப்ப முடியாமல், இடிக்கக்கூடிய நிலைதான் ஏற்படக்கூடும். ஆகவே இருபது வருஷ சர்விஸ் ஆனவர்கள் வேலைக்கு வந்தால், அவர்களை ஒரு நாள் டெஸ்ட் செய்து, மறுநாள் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் 80 நாள் பயிற்சி பெற்று வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர்களிடம், பலகாலம் பஸ், லாரி முதலிய பெரிய வண்டிகள் ஓட்டி அனுபவம் பெற்றவர்களை அனுப்பிவிடுகிறார்கள். அனுபவம் இல்லாதவர்களுக்குச் சலுகையளித்து, அனுபவம் உள்ளவர்களுக்குச் சலுகை இல்லையென்றால், உள்ளபடியே இந்த இலாகா நல்ல முறையில் வேலை செய்ய முடியாது. டி. வி. எஸ். ஸ்தாபனத்திற்கு நட்டம் ஏற்படவில்லையென்றால், அதற்குக் காரணம் பெரும் பகுதி கிழவர்களாக, சுமார் 45 முதல் 50 வயதுவரையில் உள்ளவர்களை டிரைவர்களாக எடுத்துக்கொள்ளுவதுதான். காரணம் டிரைவர்களாக உள்ளவர்களுக்குக் கோபம் வரக்கூடாது; பொறுமையை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் இளைஞர்களைத்தான் சேர்த்துக்கொள்வோம் என்றால், வேகம், 60, 70 என்று ஓட்டி, வண்டியை இடித்துவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனக்கு முன் பேசிய நண்பர் அதிக வேகம் போகிறது என்று சொன்னார்கள். சிலபேர்கள் வேகம் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். லேலண்டு அதிக வேகம் போனால்தான் சிக்கனமாக இருக்கும். எக்ஸ்பிரஸ் பஸ்கள் வேகமாகத்தான் போகவேண்டும்; நின்று நின்று போக முடியாது. ஆனால் 50, 60 மைல் வேகம் போவது கிடையாது. வேகமாகப் போகக்கூடாது என்று சொல்லி, வேகத்தைக் குறைப்போம் என்றால், 8 மணி நேரத்தில் போகவேண்டியதற்குப் பதிலாக பத்து மணி நேரம் ஆகிறது என்று குறைசொல்ல இடம் ஏற்படும். ஆகவே, இந்தக் குறைகளையெல்லாம் நாம் திருத்திக்கொள்ள வேண்டும்.

அடுத்து பணம் கொடுத்து டிக்கெட் வாங்குகிறோம், அந்த நாளில் பயணம் செய்ய முடியாத அசந்தர்ப்பம் ஏற்பட்டால், அந்த டிக்கட்டைத் திருப்பிக் கொடுத்து பணத்தைத் திருப்பிப் பெறலாம் என்றால், பணம் திரும்பி வருவதற்கு ஆறு மாதம் ஆகிறது. அதற்குள் நமக்கே மறந்துவிடும் நிலை ஏற்படுகிறது. இரயில்வே டிக்கெட் என்றால், ஏதோ நாலணாக் குறைத்துக்கொண்டு பணத்தைத் திருப்பிவிடும் நிலை இருக்கிறது. பஸ்



டிக்கட்டைப் பொறுத்தவரையில், நாலணா இல்லாவிட்டாலும் ஒரு ரூபாய் வேண்டுமானாலும்கூட, குறைத்துக்கொண்டு பாக்கி பணத்தை உடனே கொடுப்பதில் என்ன தவறு இருக்க முடியும்? இரயில்லே உடனேயே கொடுத்து விடுகிறார்கள். ரயில் புறப்பட்டுப் போனாலுங்கூட 25 சதவிகிதம் கட் பண்ணி உடனே கொடுக்கப்படுகிறது. ஆனால், நம்முடைய பஸ்ஸில் அப்படிப்பட்ட நிலை இல்லை. இதை உடனடியாகக் கவனித்து, ஏதோ ஒரு சிறிய தொகையைக் கழித்துக்கொண்டு, பாக்கிப் பணத்தை திருப்பித் தரவேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரோட் டிராபிக் ஆபீஸைப்பற்றிச் சொன்னார்கள். அவர்களையெல்லாம் கண்காணிக்க வேண்டும். அந்த அலுவலகத்தில் நாம் கண்காணிப்பு செய்யவில்லை என்றால், நமது அரசாங்கத்திற்கே கெட்ட பெயர் வரும். அதைக் கண்காணித்து நல்ல முறையில் செயல்படச் செய்தால்தான் பஸ் ஓட்டுவதன்மூலம் அரசாங்கத்திற்கு நல்ல பெயர் ஏற்படும்.

இந்த பஸ் போக்குவரத்தை நல்ல முறையில் திறமையாக நம்முடைய அரசாங்கம் செயல்படுத்துகிறது. அதில் பொறுப்பேற்றுக்கொண்டிக்கிற பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், மற்றவர்கள் யாரும் குறை சொல்ல முடியாத அளவுக்கு, மற்றவர்கள் குறை கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நல்ல முறையில் இந்தத் துறையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எங்களைப் போன்ற, இந்தக் துறையில் ஈடுபட்டுள்ளவர்களும்கூட, குற்றங்குறை காணமுடியாத அளவுக்கு எங்களையும் முந்திக்கொண்டு, தொழிலாளர்கள் சில கோரிக்கைகளை வைத்தார்கள் என்றால், "ஆன் தி ஸ்பாட்"டிலேயே தீர்த்து வைக்கும் நிலைமை வந்திருக்கிறது. அவ்வாறு தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுமானால், இந்த நாட்டில் தொழிலாளர்கள் பிரச்சினையே வராது என்று கூறி, இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் பேசுவதற்கு 16 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் இனிமேல் 7 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 7 நிமிடங்களுக்கு மேல் நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் அவர்கள் பேசுவார்கள்.

* **திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து மானியக் கோரிக்கைமீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பேச வாய்ப்புக் கிடைத்தமைக்காக மகிழ்ச்சியடைகிறேன். போக்குவரத்துத் துறையை தேசியமயமாக்குவதிலே தமிழக சர்க்கார் முனைந்து வருவது எல்லோருக்கும் தெரியும். அதேசமயத்தில் போக்குவரத்துத் துறையில் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதையும் நாம் பார்க்கிறோம். நஷ்டம் உண்டாகாமல் இருப்பதற்கான எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். அரசு போக்குவரத்துத் துறையை மேற்கொண்டபோது இரண்டு காரணங்களைக் குறிப்பிட்டது. பொதுமக்களின் சௌகரியத்தை முன்னிட்டு இந்தத் துறையில் நஷ்டம் ஏற்பட்டாலும் தொடர்ந்து நடத்துவது என்பது முதலாவது கொள்கை. இரண்டாவதாக, தேசியமயமாக்கும் கொள்கையை எவ்வளவு விரைவாக மேற்கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாக போக்குவரத்துத் துறையை விரிவுபடுத்துவது என்பதாகும். போக்குவரத்துத் துறையில் ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு நாம் எல்லாவித முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தேசியமயமாக்குவதைத் துரிதப்படுத்துவதை கொஞ்சம் யோசித்துச் செய்ய வேண்டும். தொழில் நிறுவனங்கள், எவ்வளவுக்கெவ்வளவு பெரிதாகிக்கொண்டே போகிறதோ அவ்வளவுக்கவ்வளவு செலவு அதிகமாகி நஷ்டத்தில்தான் வேலை செய்யும் என்று ஒரு கருத்து நிலவி வருகிறது. சிறிய நிறுவனம், சிறிய கம்பெனிகள் தனியார் நடத்தும் போக்குவரத்துகளில் எல்லாம் முதலாளியே நேர்முகமாக ஒவ்வொன்றையும் கவனிக்

கிறார். நிர்வாகச் செலவு குறைகிறது. நேர்முகக் கண்காணிப்பு இருப்பதால் கம்பெனி நஷ்டம் இல்லாமல் நடக்க வழி ஏற்படுகிறது. அரசாங்கத் துறையில் அவ்வளவு கண்காணிப்பு கிடையாது. நமது போக்குவரத்து இந்த மாநிலம் முழுவதும் பரவலாக இருக்கிறது. அண்டை மாநிலங்களுக்குக்கூடச் செல்கின்ற பேருந்து வண்டிகள் இருக்கின்றன. இவைகளை நிர்வகிப்பதிலே சிக்கல்கள் இருக்கின்றன. எனக்கு முன் பேசிய உறுப்பினர் கூறியபடி, டயர்–டியூப், ஸ்பேர் பார்ட்ஸ் இவைகள் எல்லாம் ஒழுங்காகத் திரும்பி வருகின்றனவா என்று தெரியவில்லை. இதில் வேலை செய்யும் அத்தனைபேரும் சம்பளம் வாங்குகிறவர்கள். தங்களுடைய உடைமை என்று யாரும் நினைப்பதில்லை. சர்க்கார் சொத்துத்தானே என்று அலட்சியமாக இருந்துவிடுகிறார்கள். "உடையான் பாராத பயிர் ஒரு முழம் கட்டை" என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதாவது சொந்தக்காரன் நேர்முகமாகப் பார்க்கவில்லையென்றால், நஷ்டம் வருவதற்கு, ஊழல்கள் ஏற்படுவதற்கு, நிறைய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. எங்கள் கட்சிக் கொறடா திரு. கரு. சிமைச்சாமி அவர்கள் வெட்டுப் பிரேரணை, தேசியமயமாக்கக் கூடாது என்று கூறுகிறது. தேசியமயமாக்கும் கொள்கையிலே நாம் இன்னும் கொஞ்சம் மெதுவாகப் போகவேண்டும். இப்பொழுது இருப்பதைக் கட்டுப்படுத்தி, நன்றாக நிர்வகித்துப் பார்த்து, அதற்குமேல் இந்தத் துறையை விரிவுபடுத்த வேண்டும். உடனடியாக விரிவுபடுத்திக்கொண்டே போனால் நஷ்டம் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகிக்கொண்டே போகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். என்றைக்கும் சென்னை நகரத்தில் ஓடும் பஸ்களில் ஏற்படும் நஷ்டத்தை நாட்டுப் புறங்களிலே ஓடும் பஸ்களிலிருந்து வரும் லாபத்தைக் கொண்டு ஈடு கட்டலாம் என்ற நிலை இருக்கக்கூடாது. எந்த இடமாக இருந்தாலும், அங்கங்கே ஓடுகின்ற பஸ்களிலிருந்து லாபம் வருகின்றதா, நஷ்டம் வருகின்றதா என்று தனித்தனியாகப் பார்க்க வேண்டுமேயொழிய, எல்லா இடங்களையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு இடத்திலும் நஷ்டம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

எல்லா நிறுவனங்களையும், எல்லா போக்குவாத்துக்களையும் தேசியமயமாக்கக்கூடாது என்று நாம் சொல்ல முடியாது. சிலவற்றை தேசியமயமாக்கத்தான் வேண்டும். உதாரணமாக ரயில் போன்றவற்றை தனி மனிதனால் நடத்த முடியாது. அப்படிப்பட்டவைகளை தேசியமயமாக்க வேண்டும் டிராம் போன்ற போக்குவரத்து சென்னைமாநகரில் இன்றைய தினம் இருந்திருந்தால் அதை சர்க்கார்தான் நடத்த முடியும். வெளி நாட்டுக் கம்பெனியும் இதை நடத்த முடியாது. எஸ். ஐ. ஆர்., எம். எஸ். எம்., ரயில்வேக்களையெல்லாம் இன்னைதினம் சர்க்கார் மயமாக்கி விட்டமாதிரி, 75 மைல், 50 மைல் தூரத்திற்கு அப்பால் செல்லும் பேருந்து வண்டிகளை தேசியமயமாக்கினாலும் அல்லது புதிதாக சிறுவழித் தடங்களை சர்க்கார் எடுத்துக்கொண்டாலும் இவைகளையெல்லாம் நேரடியாக நிர்வகிப்பது கஷ்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட உடனே, வழித்தட எண் 93, சென்னை–ஆரணி வழித்தடத்தை 1967 ஆகஸ்டு 1-ம் தேதியன்று எடுத்துக்கொண்டது. அரசு இந்த வழித்தடத்தை எடுத்துக்கொண்ட பின்னர் சில பயணிகள் புகார்கள் தெரிவித்திருக்கிறார்கள். சென்னையிலிருந்து ஆரணி செல்லும் வழியில் உள்ள ஊர்களுக்கும் தனிப்பட்டவரால் நடத்தப்படும் பஸ்களில் கண்டக்டர்கள் டிக்கெட் கொடுப்பார்கள். அரசாங்க பஸ்களில் இடை வழியில் உள்ள ஊர்களுக்கு டிக்கெட் கொடுப்பதில்லை என்று சொல்கிறார்கள். சென்னையிலிருந்து காவேரிப்பாக்கம், ஆர்க்காடு, வேலூர், ஆரணி என்ற ஊர்களுக்கு டிக்கெட் கொடுக்கப்படுகிறது. சென்னையிலிருந்து காவேரிப்பாக்கம் 60 மைல், காவேரிப்பாக்கத்திலிருந்து சுமைதாங்கி 2 மைல். அரசாங்க பஸ்ஸில் சுமைதாங்கிக்கு டிக்கெட் கொடுக்கப்படுவதில்லை. கேட்டால் ஸ்டாப் கிடையாது என்று சொல்கிறார்கள். சாதாரண வண்டிகளாக இருந்தால் இரண்டு மைல்களுக்காவது ஒரு பஸ் ஸ்டாப் இருக்க வேண்டும். விரைவு வண்டிகளைப்பற்றி கவலையில்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் சனிக்



கிழமையன்று மாலை வேளைகளில் அங்கு போய்ப் பார்த்தால் பொது மக்களுடைய கஷ்டம் தெரியும். தேசியமயமாக்கும் கொள்கை மக்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்காதிருக்க வேண்டும்.

உயர் மட்டக் குழுவைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள், திரு. நா. காசிராமன் அவர்களும் நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ்களைப்பற்றிச் சொன்னார்கள். டிரான்ஸ்போர்ட் இலாகாவை எலக்ட்ரிசிடி போர்டு மாதிரி ஒரு போர்டாகவோ, கார்ப்பரேஷனாகவோ மாற்றி அமைத்து திறம்பட நடத்தலாம் என்ற யோசனையைக் கூறி, உயர்மட்டக் குழு நியமிக்கப்பட்டால் இதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

திரு. என். நாச்சிமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டுக்கான மோட்டார் போக்குவரத்து மானியக் கோரிக்கைமீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக ஒரு பகுதி மக்கள் கல்வி, வாழ்க்கைத்தரம், மற்றும் பொருளாதாரம் போன்றவைகளில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால், அதற்கான அடிப்படையான வசதிகளில் போக்குவரத்துத் துறையும் ஒன்றாகும்—என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துத் துறை சரியாக இருந்தால்தான், அந்தப் பகுதி மக்கள் தங்களுடைய சரக்குகளை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லவும், அந்தப் பகுதிகளிலிருந்து சரக்குகளை எடுத்து வரவும் முடியும்.

உதாரணமாக கல்வியை எடுத்துக்கொண்டால், சென்னை நகரத்தில் முற்பகல் 11–30
சாதாரணமாக 200, 300 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய ஒரு நபர் தன்னுடைய மகனையோ மகளையோ எவ்வளவு வேண்டுமானாலும் படிக்கவைக்க முடியும். ஏனென்றால் இங்கு அத்தனை கல்வி வசதிகளும் கீழே இருந்து மேல்மட்டம் வரையில், இங்கு கல்லூரிகளிலும் மற்ற கல்வி நிலையங்களிலும் இருக்கின்றன. ஆனால் இதே அளவு கல்வியை இதைவிட அதிக வருமானம் வரக்கூடிய, கிராமப் புறங்களில் இருக்கக் கூடிய ஒரு நபர் தன் மகனை அதிகமாகப் படிக்க வைக்க வேண்டுமென்றால் ஏறக்குறைய ஒரு குடும்பத்திற்கு செலவு செய்யக்கூடியதில் பாதியை விட அதிகமாக செலவு செய்யவேண்டி ஏற்படுகிறது இப்படி போக்குவரத்து வசதி இல்லாததினால் அந்தப் பகுதி மக்களுடைய குழந்தைகள் கல்வி வசதி அற்றவர்களாகப் போய்விடுகிறார்கள். இதே போல ஒரு அரசாங்கத்திலே ஒரு திட்டம் போட்டு அதை செயல்படுத்த விரும்பினால்கூட அந்த பகுதியின் அதிகாரிகள் போக்குவரத்து வசதி இல்லாத ஒரு காரணத்தால், அந்த திட்டங்களை அவர்கள் செயல்படுத்த முனையும்போது போக்குவரத்து வசதி எந்தெந்த பகுதியில் இருக்கிறதோ அந்தப் பகுதிகளுக்கு அந்தத் திட்டங்களை செயல்படுத்த முனைகிறார்கள். இப்படி பல காரணங்களால் போக்குவரத்து என்பது ஒரு பகுதி மக்களுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு அடிப்படையாக அமைந்துவிடுகிறது.

போக்குவரத்துத் துறையில் எவ்வளவு முயற்சி செய்தாலும் சில தேவையற்ற சிக்கல்கள் நேர்ந்துவிடுகின்றன. உதாரணமாக ஒரு புதிய வழித்தடத்திலே புதிதாக ஒரு போக்குவரத்து பஸ் ரூட்டை விடவேண்டும் என்று நாம் ஆர். டி. ஓ. விடம் மனுச் செய்தால் உடனே அந்த டிவிஷனல் என்ஜினியருக்கு சாலை சரியாக அமைந்திருக்கிறதா என்று ஒரு அத்தாட்சி கடிதம் கேட்கிறார்கள். இது அந்தத் துறையிலே சாதாரணமாக குறைந்த அறிவு உள்ள, பகுத்தறிவு உள்ளவர்கள்கூட சாலையை பார்த்ததும் அதிலே பஸ் போகுமா போகமுடியாதா என்று சொல்லிவிட முடியும். இப்படிப்பட்ட சின்னக் காரியங்களுக்குக்கூட தொழில் நுட்ப அறிவு என்ற பெயரால் தேவையில்லாமல் தொழில் நுட்ப அறிவை எதிர்பார்த்து அந்த அனுமதிக்காக 6 மாதம் அல்லது ஓர் ஆண்டுகூட காத்திருந்து அந்தப் பகுதியில் புதிய ரூட்டுகள் ஏற்பட முடியாமல் இருக்கிறது. இப்படி போக்குவரத்துத் துறையில் சில அதிகாரங்களை, பழைய அதிகாரங்களை ஆர். டி. ஓ. அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்—ஆர். டி.ஓ.க்களுக்கு எவ்வளவோ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள், அவ்வளவு பெரிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தும் இப்படிப்பட்ட சின்ன காரியங்களுக்குக்கூட ஒரு துறையிலிருந்து தேவையில்லாமல் மற்றொரு துறையின் அனுமதிக்கு எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. கல்வி மட்டுமல்ல இன்னும் எத்தனையோ பிரச்னைகள் இருக்கின்றன.

போதிய அபிவிருத்தி அடையாமல் இருக்கும் ஒரு பகுதியில் நாம் சாலைகள் போடவேண்டும் என்று பெருவழித்துறை எஞ்சினியரிடம் கேட்கும்போது என்ன, அங்கு பஸ் போக்குவரத்து இருக்கிறதா என்று கேட்கிறார். பஸ் போக்குவரத்து எங்கள் பகுதிக்குத் தேவை என்று கேட்கும்போது அவர்கள் நல்ல சாலை அமைந்திருக்கின்றனவா என்று கேட்கிறார்கள். இப்படி முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. இப்படி அந்தப் பகுதிகளில் நல்ல சாலை அமைப்புக்கள் இல்லாது போவதால் பஸ் போக்குவரத்து ஏற்பட முடியாமல் போகிறது. இது முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக அமைகிறது. இதையெல்லாம் நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனித்து இந்தச் சிக்கல்களைத் தீர்த்து, இந்தத் துறை நன்கு செயல்பட்டு நல்ல சாலைகளை ஏற்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்கள் பக்கத்திலே கள்ளிமந்தயம்—மஞ்சநாயக்கன்பட்டி—பழனி வரையில் ஒரு பஸ் போக்குவரத்து வேண்டுமென்று நாங்கள் பலமுறை கேட்டிருக்கிறோம். அப்படி கேட்டிருந்தும் நாங்கள் சொன்ன குறைபாடுகளை நீக்க செயல்படாமல் எவ்வளவு தடுக்க முடியுமோ அவ்வளவு தடுப்பதுடன்கூட காலம் கடத்திக்கொண்டும் இருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு துறையிலும் பல சிக்கல்கள் தேவையில்லாமல் ஏற்பட்டு ஒரு முன்னேற்றமும் நடைபெறுவது இல்லை.

குறிப்பாக ஒரு பகுதியை எடுத்துக்கொண்டால், அந்தப் பகுதியிலே மக்கள் எப்படி நெருக்கமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்றால், ஓடை, குளம் மற்றும் இதுபோன்ற நீர்நிலை வசதிகள் உள்ள பகுதிகளில்தான் மக்கள் அதிகம் நெருக்கமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பகுதிகளில்தான் ரோடு அமைப்பதும் பஸ் விடுவதும் அதிக தேவையாக இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட இடங்களில்தான் நல்ல பாலங்களும் சாலை அமைப்புக்களும் இருப்பது இல்லை. அப்படி பாலங்களும் சாலை அமைப்புகளும் இல்லாத காரணத்தினால் போக்குவரத்து அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறது, இப்படி போக்குவரத்து ஒரு பக்கம் பாதிக்கப்படுவதனால் மக்களுடைய முன்னேற்றமும் நல்ல வளர்ச்சியும் தடைப்படுகிறது. இப்படி முன்னேற்றமும் வளர்ச்சியும் பாதிக்கப்படும்போது நாட்டில் வேறொரு தேவையற்ற பிரச்னை உண்டாகி விடுகிறது. ஆகவே, இதையெல்லாம் சீர்செய்து; இத்துறை நல்ல முறையில் செயலாற்றச் செய்யவேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்

***திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, மோட்டார் போக்குவரத்து திட்டத்திற்காக அமைச்சரவர்கள் 14 கோடி ரூபாய் கோரியுள்ளார்கள். அதே சமயத்தில் நாட்டுடமை ஆக்குகின்ற அந்தத் திட்டத்தை குறிப்பாக, 75 மைல்களுக்கு அதிகமாக ஓடுகின்ற பஸ்களை, சென்னையிலே புறப்படுகிற, சென்னைக்கு வந்து சேருகிற பஸ்களை கன்யாகுமரி ஜில்லாவில் உள்ள பஸ்கள் அத்தனையையும் நாட்டுடமை ஆக்கும் திட்டத்தை வைத்துள்ளார்கள். அதன் அடிப்படையில் பல்வேறு ரூட்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இது பெருவாரியாக, சாதாரணமாக மிகக் குறைந்த பஸ்களை வைத்திருப்பவர்களையே பாதிக்கும் நிலையில் உள்ளது. ஆகவே, நாட்டுடைமை ஆக்குகின்ற அந்த முறையில், குறிப்பாக நாட்டிலே, பெருவாரியாக பொருளாதாரத்தை ஆட்டிப் படைக்கின்ற வல்லமை படைத்த அப்பேர்பட்ட பஸ் மன்னர்கள் பஸ்களை முதலில் எடுக்கவேண்டும். அந்தத் துறையில்தான் அணுகும் முறை இருக்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்ராயமாகும்.



ஆகவே, எனக்கு முன்னர் ஒரு உறுப்பினர் எடுத்துக் காட்டியது போல் இந்தத் துறையில் 5 பஸ், 6 பஸ் வைத்திருப்பவர்களைத் தொடாமல் நூற்றுக்கணக்காக பஸ்களை வைத்து நடத்துகின்ற அப்படிப்பட்டவர்களிடம் இருக்கும் பஸ்களை முதற்கண் எடுத்துக்கொள்ள வேண்டும். அதைப் படிப்படியாகக் குறைத்து, 10 பஸ், 5 பஸ் என்ற நிலைக்கு கொண்டு வருவதுதான் சாலச்சிறந்தது. அப்படிச் செய்யும் போது சர்க்கார் கைக்கும் அதிகமான வருவாய் கிடைக்கும், நாட்டு மக்களுக்கும் அதிக நன்மை செய்யமுடியும். வருவாயை அதிகமாகக் கொடுக்கின்ற பொதுமக்கள் இருக்கிறார்களே அவர்களுக்கு இந்தத் திட்டத்திலே போதுமான அளவு வசதிகள் செய்யப்படவில்லை. குறிப்பாக அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற ஒருசில நிதிகள் கூட சரியான முறையிலே உபயோகப்படுத்தப்படவில்லை.

வளர்ச்சி நிதிக்கு ஒதுக்கப்பட்டிருப்பதை குறித்து இந்த ஆய்வுரையின் 7, 8 பக்கங்களிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1967-ம் ஆண்டு எப்ரல் திங்கள் 1-ம் நாள் அன்று இந்த நிதியில் 24·26 லட்சம் ரூபாய் இருந்தது. சென்ற 1967–68-ம் ஆண்டில் சேர்ந்த தொகை 1·64 லட்சம் ரூபாய். ஆக மொத்தம் 25·90 லட்சம் ரூபாய் இருக்கிறது. இதிலே சென்ற ஆண்டு ஒரு நயாபைசா கூட செலவழிக்கப்படவில்லை. பயணிகள் வசதி என்ற முறையில் ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தில் ஒரு நயாபைசா கூட செலவழிக்கப்படவில்லை. ஆகவே அதிகமான பணத்தைக் கொடுக்கும் மக்களுக்கு வசதிகளை அதிகரிக்கவேண்டும்.

பணத்தை ஈட்டுகின்ற தொழிலாளர்களுடைய பிரச்னைகளை தீர்ப்பதற்கு அமைச்சரவர்கள் சில பிரச்சனைகளில் கவனம் செலுத்தியிருக்கிறார் என்றாலும், அவை போதுமான அளவுக்கு இல்லையென்பது நாங்கள் சொல்லாமலே விளங்கும். தொழிலாளர்களுக்கான விபத்து சேமிப்பு நிதி, துயர் துடைப்பு நிதி என்ற முறையிலே சில ஆயிரக் கணக்கான ரூபாய்கள் செலவிடப்பட்டிருக்கின்றன. ஆனால் அது மிக மிகக் குறைவு. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் இந்தத் துறையில் அவர்களுக்கு அடிப்படையான மாற்றத்தை உருவாக்கவேண்டும். அவர்கள் இன்றைக்கு அடிப்படையான மாற்றம் கோருவது என்னவென்றால் சம்பளம், பஞ்சப்படி, போனஸ், வீட்டு வசதி இவைகளில் போதுமான அளவு செய்து கொடுக்கப்படவில்லை என்பதுதான். அவைகளை கொடுப்பதற்கு அமைச்சு உடனடியாக முன்வர வேண்டும்.

டிரான்ஸ்போர்ட்டிலே இப்போது அதிகமான நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அந்த நஷ்டத்தை பொருத்தவரையில் அது எவ்வாறு இருக்கிறது என்பதை நான் பின்பு கூற விரும்புகிறேன். நமது மாநிலத்தில் போக்குவரத்துத் துறையை செம்மையாக்க, பக்கத்து மாநிலங்களில் போக்குவரத்தை நடத்துகிற சிலர் எவ்வாறு அதை நடத்துகிறார்கள். அவர்கள் கொடுக்கிற சம்பளம் எவ்வளவு? அதே சமயத்தில் நமது மாநிலத்தில் இருக்கும் தனியார்துறையில் இருப்பவர்கள் கொடுக்கும் சம்பளம் எவ்வளவு என்பதை நாம் சற்று பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது அரசு டிரைவர்களுக்கு; ரூபாய் 80–2–100 என்ற அடிப்படையில் முதல் கிரேட் டிரைவர்களுக்கும், ரூபாய் 90–3–120 என்று இரண்டாவது கிரேட் டிரைவர்களுக்கும் கொடுக்கிறது. முதல் கிரேட் கண்டக்டர்களுக்கு ரூபாய் 70–2–90 என்ற அடிப்படையிலும் இரண்டாவது கிரேட் கண்டக்டர்களுக்கு ரூபாய் 80–3–110 என்ற அடிப்படையிலும் கொடுக்கிறது. செக்கிங் இன்ஸ்பெக்டர்களுக்கு முதல் கிரேட்க்கு ரூபாய் 80–3–110 என்ற அடிப்படையிலும், இரண்டாவது கிரேட்க்கு 90–3–125 என்ற அடிப்படையிலும் சம்பளம் வழங்கப்படுகிறது. கார்ப்பரேஷன் 90 ரூபாய் சம்பளம் கொடுக்கிறது. ஆனால் தனியார் ஸ்தாபனங்களை எடுத்துக்கொண்டால் டி. வி. எஸ். கம்பெனியில் டிரைவர்களுக்கு 175 ரூபாய் அடிப்படைச் சம்பளம் தருகிறார்கள். ஆனைமலை பஸ் டிரான்ஸ்

போர்ட்டில் ரூபாய் 150 தருகிறார்கள். கேரளத்தில் ரூபாய் 210 தருகிறார்கள். கேரள அரசு இன்றையதினம் டிரைவர்களுக்கு ரூபாய் 130-8-170-10-210 என்ற அடிப்படையில் சம்பளம் கொடுக்கிறார்கள். கண்டக்டர்களுக்கு ரூ. 120-8-160-10-200 என்ற அடிப்படையில் சம்பளம் கொடுக்கிறார்கள். செக்கிங் இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 200-12-260-15-320 என்ற அடிப்படையில் சம்பளம் கொடுக்கிறார்கள். நமக்கு அருகாமையில் இருக்கிற மாநிலத்தில் இப்படிக் கொடுக்கப்படும் சம்பள விகிதம் இங்கே இருக்கிற நம்முடைய டிரான்ஸ்போர்ட் ஊழியர்களுக்கு நன்றாகத் தெரியும் அது அவர்களுடைய உற்சாகத்தை பாதிக்கத்தான் செய்யும். வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்துவிட்டன. அவர்கள் வாழ முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். தினப்படி பாட்டாவை எடுத்துக்கொண்டாலும் இன்றையதினம் டி.வி.எஸ். ஸ்தாபனத்தார் ரூ. 1–75–இல் இருந்து ரூ. 2–50 வரை கொடுக்கிறார்கள். ஏ.பி.டி. கம்பெனியார் ரூ. 2–20-இல் இருந்து ரூ. 6–00 வரை கொடுக்கிறார்கள். நமக்குச் சமீபத்தல் உள்ள கேரள அரசாங்கத்தினர் ரூ. 1–50-இல் இருந்து ரூ. 5–00 வரை கொடுக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் இன்றையதினம் ரூ. 1–10–இல் இருந்து 1–25 வரைதான் கொடுக்கப்படுகிறது. இப்போது 10 நயா பைசா அதிகரித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இது போதாது. தினப்படி பாட்டாவை எந்த அளவுக்கு உயர்த்தினால் அவர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்த முடியும் என்பதைக் கண்டு பாட்டாவை உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனிப்பட்ட கம்பெனிக்காரர்களும், மற்ற மாநிலத்தில் உள்ளவர்களும் இன்றையதினம் தங்களிடம் உள்ள டிரான்ஸ்போர்ட் ஊழியர்களுக்கு போனஸ் கொடுக்கிறார்கள். குறிப்பாக ஏ.பி.டி. கம்பெனியார் 6½ மாத அடிப்படைச் சம்பளத்தை போனசாக வழங்கியிருக்கிறார்கள். கேரள மாநிலத்தை எடுத்துக்கொண்டால் 65–66-க்கு அவர்கள் 10½./· போனஸ் வழங்கினார்கள். 1966–67-இல் அதை 12½ சதவிகிதத்திற்கு உயர்த்தினார்கள். 67–68-இல் கிட்டதட்ட 17½ சதவிகிதத்திற்கும் அதிகமாக போனஸ் கொடுத்திருக்கிறார்கள். இதுபோல பம்பாய் மாநிலத்தில் கொடுத்திருக்கிறார்கள். கல்கத்தாவில் கொடுத்திருக்கிறார்கள். மைசூரிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆந்திராவிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நமது தமிழகத்தில் போனஸ் கொடுக்கப்படவில்லை. மற்ற லீவு போன்ற வசதிகளை எடுத்துக்கொண்டாலும் மற்றவர்கள் கொடுப்பதைவிட குறைவாகத்தான் நாம் கொடுக்கிறோம். கடந்த எட்டாண்டுகளாக டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்த்தார்கள். சென்ற அரசு அவர்களுக்குச் செய்யவேண்டிய போதுமான வசதிகளைச் செய்யவில்லை. இந்த அரசாவது அவசியம் செய்யும் என்று எதிர்பார்த்தார்கள். குறைந்தபட்சம் அவர்களுடைய கஷ்டங்களைக் குறைகின்ற அளவு வசதி செய்துகொடுக்கப்படவில்லை. அவர்கள் மத்தியில் இன்றையதினம் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. கன்னியாகுமரியில் இருக்கிற தொழிலாளர்கள் 7-ஆம் தேதி ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். 25-ஆம் தேதி முதல் ஸ்ட்ரைக் செய்ய இருக்கிறார்கள். அதேமாதிரி சென்னையில் இருக்கிற தொழிலாளர்கள் நேற்று 15—3—68-இல் ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கின்ற கஷ்டத்தைப் பரிசீலிக்க வேண்டும். அரசுக்கு நிலைமை புரியாமல் இல்லை. ஆகவே எப்படியாவது அவர்களுடைய நியாயமான குறைகளை நிறைவேற்றி ஸ்ட்ரைக்கைத் தவிர்க்கவேண்டும். யாருமே ஸ்ட்ரைக் வேண்டுமென்று விரும்புவது கிடையாது.

இன்றையதினம் தேய்மான நிதி என்ற அடிப்படையில் 1—4—64 முதல் 31—3—67 முடிய 374 லட்சம் ரூபாய் இருந்தது. அடுத்த ஆண்டு 1968 மார்ச் 31-ஆம் தேதி முடிய அந்த தேய்மான சேமிப்பு நிதியில் 5 கோடியே 41 லட்சம் ரூபாய் இருக்கிறது. தேய்மான



சேமிப்பு நிதி என்பது மெஷின்களுக்கு மட்டும் அல்ல. டிரான்ஸ்போர்ட் இலாக்கா தொழிலாளர்களும் தினசரி தேய்ந்துகொண்டே இருக்கிறார்கள். ஆகவே பணம் இல்லை என்று சொல்லாது இந்தத் தேய்மான நிதியில் இருந்தாவது எடுத்து அவர்களுக்கு உதவி செய்தாக வேண்டும்.

அதேசமயத்தில் இப்போது கிலோமீடருக்கு ½ பைசா உயர்த்தியிருக்கிறார்கள். ஒரு பஸ் ஒரு நாளில் ஓடும் தூரம் 150 கிலோமீடர் என்றாலும் ஒரு பஸ்ஸில் 50 பேர் பயணம் செய்கிறார்கள் என்று கொண்டாலும், நம்மிடம் உள்ள 1,500 பஸ்களில் 1,000 பஸ்கள் தான் ஓடுகின்றன என்றாலும் ஒரு ஆண்டில் கிட்டதட்ட 1½ கோடி ரூபாய் வருவாய் வரக்கூடும். டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நமக்கு 5 லட்சம் ரூபாய்க்குமேல் ஆகாது. ஆக நமக்கு கிலோமீட்டருக்கு ½ பைசா வீதம் உயர்த்திருப்பதன் மூலம் வரக்கூடிய 1½ கோடி ரூபாயில் ஒரு கோடிக்கு மிச்சம் ஏற்படும். ஆக இந்த அரசு பல வருடங்களாக ஏமாற்றம் அடைந்து வந்திருக்கிற தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை இனியும் தட்டிக்கழிக்காமல் நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தினசரி பாட்டாவை குறைந்தபட்சம் 3 ரூபாயாக உயர்த்தவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். தனியார் நடத்துகின்ற டிரான்ஸ்போர்ட்டில் அட்ஜுடிகேஷனுக்கு விட்டு, இப்போது இடைக்கால தீர்ப்பு வந்திருக்கிறது. இப்போது இடைக்கால நிவாரணம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் கூடச் சொன்னார்கள். அதை கவனத்தில் வைத்துக்கொண்டு தனியார் கொடுக்கின்ற அளவுக்காவது நாம் கொடுக்காமல் இருப்பது சரியாக இருக்காது. ஆகவே உடனடியாக இடைக்கால நிவாரணமாவது கொடுக்கவேண்டும். அடுத்து ஒரு குழுவைப போட்டு அவர்களுடைய குறைகளை எந்த எந்த வகையில் தீர்த்துவைப்பது என்பதைப்பற்றி பரிசீலனை செய்து 6 மாதத்திற்குள் முடிவுக்கு வரக்கூடிய நிலையை உருவாக்கவேண்டும். எப்படியாவது அவர்களுடைய தினப்படியை உயர்த்தி, இடைக்கால நிவாரணம் அளித்து அவர்களுடைய ஸ்ட்ரைக்கைத் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தனியார் நடத்துகின்ற பஸ்களில் ஊழல்கள் இருக்கின்றன. சீட் ரிஜிஸ்தர் செய்யாமலேயே ஓட்டுகிறார்கள். அதையும் கட்டுப்படுத்தியாக வேண்டும். மேலும் திருச்சி சுந்தரம் டிரான்ஸ்போர்ட்டில் 3—3—68 முதல் கதவடைப்பு நடந்துகொண்டிருக்கிறது. அதையும் தவிர்த்து தொழிலாளர்களைப் பாதுகாக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** திருச்சியில் நடைபெறுகிற வேலை நிறுத்தத்திற்கு என்ன காரணம்? தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் என்ன?

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** தொழிலாளர்களுடைய கோரிக்கை எதுவும் இல்லை. நிர்வாகத்தினர் திடீரென்று செய்திருக்கிறார்கள். இது பற்றி சட்டத்துறை அமைச்சரிடம் விளக்கமாகக் கூறியிருக்கிறேன்.

**திரு. எம். பூபதி:** இவற்றை எல்லாம் அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு; தொழிலாளர்களுடைய கஷ்டத்தை நீக்குவதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ந. வீராசாமி:** தலைவர் அவர்களே, நாட்டுடமையாக்கப்பட்ட பேருந்து மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில கருத்துக்களை நான் இந்த மாமன்றத்தின் முனவைக்க விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சில கருத்துக்களை இங்கே குறிப்பிட்டார்கள். இன்றையதினம் ஆளுகின்ற திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் நேரத்தில் வெற்றிபெற்றால் போக்கு

வரத்துத்துறையை தேசியமாக்குவோம் என்று சொன்னார்கள். அப்படியே செய்தார்கள். 1—6—67 முதல் இதை அமுலாக்கியிருக்கிறோம். இதைப் போன்றே காங்கிரஸ்காரர்கள் தேர்தல் நேரத்தில் சில வாக்குறுதிகளைத் தந்தார்கள். காங்கிரஸ் தேர்தலில் வெற்றிபெற்றால் பாங்குகளைத் தேசியமாக்குவதாகச் சொன்னார்கள். பாங்குகள் தேசியமாக்கப்பட வேண்டிய அளவுக்கு வாய்ப்புகள் இருந்தும் காங்கிரஸ் கட்சியினர் தங்களுடைய வாக்குறுதியை தேர்தலில் வெற்றிபெற்ற பிறகு நிறைவேற்றவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் பஸ்களை தேசியமாக்கியதோடு மட்டும் அல்ல, அந்த பஸ்களில் எங்கும் தமிழ் மயம் என்ற அளவுக்கு உருவாக்கியிருக்கிறார்கள். அருமையான குறளை ஒவ்வொரு பஸ்ஸிலும் எழுதி வைத்திருக்கிறோம். இன்றைய தினம் நாம் எல்லாம் பயணம் செய்யவேண்டுமென்றால் அரசாங்க பஸ்ஸிலே சட்டணம் கொடுத்துத்தான் பயணம் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் கட்டணம் இல்லாது ஒருவர் பயணம் செய்துகொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்தான் நாம் எல்லோரும் போற்றி வணங்கத் தக்க அளவுக்கு இருக்கிற வள்ளுவர் ஆவார். அப்படிப்பட்ட ஒரு நல்ல நிலையை இன்றைய தினம் இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

மெட்ராஸ் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் என்று இருந்ததை தமிழக அரசு போக்குவரத்து என்று மாற்றியிருக்கிறோம்.

தொழிலாளர்களின் பிரச்னையைப் பார்க்கிற நேரத்திலே இந்த அளவுக்கு இதற்கு முன்னால் இருந்த அரசு தொழிலாளர் பிரச்னையைத் தீர்த்து இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தொழிலாளர்களுக்கு டி. ஏ. என்ற பெயரிலே இந்த ஆண்டு 19 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். சி.சி.ஏ. என்று சொல்லப்படுகின்ற நகர ஈட்டுப்படி 9 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். அங்கே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு இன்சென்டிவ் போனஸ் என்ற முறையிலே, சென்னை, கன்னியாகுமரிக் கிளைகளின் பணிமனைகளிலுள்ள பேருந்துகளைப் பெறுவதற்கு வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழில் நுட்பத் தொழிலாளர்களுக்கு ஊக்கப் பூரிப்பு என்ற முறையிலே 10 சதவீதமாக இருந்ததை 15 சதவீதமாக உயர்த்தியிருக்கிறோம். அதேபோல் உற்பத்தித் திறனின் அடிப்படையில் ஊக்கப் பூரிப்பு ஊதியம் 20 சதவீதமாக இருந்ததை இப்பொழுது 40 சதவீதமாக உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். கிளீனர்ஸ் என்று இருக்கின்ற சுத்தப்படுத்துகின்ற தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 50 காசுகள் அதிகம் என்ற அளவுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுத்து இருக்கிறோம். இதற்கு முன்னால், அங்கே பணியாற்றிய தொழிலாளர்கள் கதர்தான் அணியவேண்டுமென்ற நிலை இருந்த காரணத்தால் அந்த ஆடைகள் அதிக நாட்களுக்கு உழைக்காமல் இருந்த நிலைமை இருந்ததால் தொழிலாளர்களின் விருப்பம்போல் இப்பொழுது கைத்தறி ஆடையையும் அணியலாம் என்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறோம்.

தொழிலாளர்களின் முக்கியப் பிரச்னையாக இருப்பது இன்றையதினம் அவர்களுடைய தொழிற் சங்கங்களுக்கு இடம் வேண்டுமென்பது ஆகும். தமிழகத்திலே பல இடங்களிலே தொழிற் சங்கங்களுக்கு அலுவலகங்கள் இல்லை. இன்றைய தினம் போக்குவரத்துத் துறை அலுவலகத்திலே உள்ள ஒரு இடத்தை தொழிற் சங்க அலுவலகத்திற்காக நாம் இலவசமாகக் கொடுத்திருக்கிறோம். இப்படிப்பட்ட நல்ல காரியங்களை இந்த அரசு செய்திருப்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு பஸ் போக்குவரத்து எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று பார்த்தால், சென்னையைப் பொறுத்தவரையில் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 1,026 பஸ்களாக இருந்தது, இன்றைய தினம் 1,327-ஆக உயர்ந்திருக்கிறது. [illegible] எடுத்துக்கொண்டாலும் 1967-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2,012 மைல் என்ற அளவில் இருந்தது. இன்றைய தினம் 17,600 மைல் என்ற அளவுக்கு ஏறக்குறைய எட்டு



மடங்கு அதிகரித்திருப்பதைக் காண்கிறோம். அதைப்போன்று சராசரி வசூலை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் 1967-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1,50,000 ரூபாய் என்ற அளவிலே இருந்தது. இன்றையதினம் 2,50,000 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இந்த அளவுக்கு இந்தத்துறை வளர்ச்சியடைந்திருப்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இதைத்தவிர நாட்டுடமையாக்கப்பட்ட பஸ்களில் தனியாக பஸ்களிலே வேலை பார்த்த தொழிலாளர்களை நியமித்துக் கொள்வதற்கான உத்தரவுகளையும் இந்த அரசு வழங்கியிருக்கிறது.

இவையெல்லாம் நல்ல சாதனைகள் என்று சொல்கின்ற நேரத்தில் அங்கே இருக்கிற சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதால் இந்த இலாகாவிற்கும் அரசாங்கத்திற்கும் நல்லது என்று நான் கருதுவதால் அவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். முன்பு இருந்த கட்டண விகிதங்களுக்கும் மாற்றப்பட்டிருக்கிற கட்டண விகிதங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் பார்த்தால் ஏழை மக்கள், நடுத்தர மக்கள், அதிகமாக பஸ் பயணம் செய்கிறவர்கள் ஓரளவுக்கு நிச்சயமாகப் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் காலத்திலே ஒரு இடத்திற்கும் இன்னொரு இடத்திற்கும் எவ்வளவு கட்டணம் இருந்தது, இப்பொழுது எவ்வளவு கட்டணம் உயர்த்தியிருக்கிறோம். இடையிலே இருக்கிற வித்தியாசம் தேவைதானா என்று பார்க்கவேண்டும். உதாரணமாக சென்னைக்கும் ஆற்காட்டிற்கும் பஸ் கட்டணம் காங்கிரஸ்காரர்கள் ஆட்சி செய்த காலத்தில் 2·50 ஆக இருந்தது. நம்முடைய அரசு ஆட்சிக்கு வந்தவுடனே அதை 2·10 ஆகக் குறைத்தோம். அதை ஏழை மக்கள் வாழ்த்த ஆரம்பித்தார்கள். ஆனால், இப்போதைய புதிய கொள்கையின்படி ஒரு கிலோவுக்கு 2¼ காசு என்ற கொள்கைப் படி கட்டணத்தை உயர்த்தி, அந்தக் கட்டணம் இப்பொழுது 2·90 ஆக ஆகிவிட்டது. இப்படி இருப்பதன் காரணமாக இந்த அரசாங்கத்தையும் நிர்வாகத்தையும் மக்கள் குறை கூறுகிறார்கள். அமைச்சர் அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டார்கள். தனியார் துறையும் அரசாங்கத் துறையும் ஒப்பந்தத்திற்கு வந்திருக்கின்றதன் காரணமாக இரண்டு காசுகளிலிருந்து 2¼ காசுகளாக உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். தனியார் துறைக்கு நாம் அவ்வளவு பரிந்துரை செய்யவேண்டுமா? அவர்களோடு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமா? என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே, இப்பொழுதுள்ள கொள்கையை கைவிட்டுவிட்டு முன்பு இருந்த கட்டணத்தை வைத்துக்கொள்வது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், செய்யாறிலிருந்து சென்னைக்கு வருவது என்றால் தனியார் பஸ்ஸிலே கட்டணம் 2¼ ரூபாயாக இருந்தது. எக்ஸ்பிரஸ் பஸ்ஸாக இருந்தால் 2½ ரூபாயாக இருந்தது. ஆனால் இன்றைக்கு அரசாங்க பஸ்களில் கட்டணம் 2·70 ஆகவும், எக்ஸ்பிரஸ் பஸ்ஸாக இருந்தால் 3.30 ஆகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் ஏழை மக்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, முன்பு தனியார் துறையில் வாங்கிய கட்டணம் இப்போது அரசாங்கக் கொள்கைப்படி கிலோவிற்கு 2¼ காசு—இதில் எது குறைவாக இருக்கிறதோ அதை வசூலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் ஒரு குறிப்பிட்ட ஊரிலிருந்து இன்னொரு குறிப்பிட்ட ஊருக்குச் செல்லவேண்டுமானால் இரண்டு மூன்று வழிகள் இருக்கின்றன. முன்பெல்லாம் தனியார் பஸ்களில் எந்த வழியில் வந்தாலும், புறப்படுகின்ற இடத்திலிருந்து போய்ச் சேரும் இடம் வரையில் ஒரே கட்டணம் தான் வசூலித்து வந்தார்கள். உதாரணமாக ஆரணியிலிருந்து சென்னைக்கு வரவேண்டுமானால் செய்யாறு வழியாக வருவது ஒரு வழி. ஆரணியிலிருந்து கலவை வழியாக சென்னைக்கு வருவது ஒரு வழி, ஆரணியிலிருந்து ஆற்காடு வழியாக சென்னைக்கு வருவது ஒரு வழி, எப்படி வந்தாலும் தனியார் பஸ்களில் ஒரே கட்டணத்தைத்தான் வசூலித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது அரசாங்க பஸ்ஸிலே கிலோமீட்டர் கணக்குப் போட்டிருக்கிற காரணத்தினாலே ஆரணியிலிருந்து செய்யாறு வழியாக

சென்னைக்கு வரவேண்டுமானால் ஒரு கட்டணம், ஆரணியிலிருந்து கலவை வழியாக சென்னைக்கு வரவேண்டுமானால் ஒரு கட்டணம், ஆரணியிலிருந்து ஆற்காடு வழியாக வரவேண்டுமானால் ஒரு கட்டணம். இப்படி வேறுபட்ட கட்டணங்களை வசூலித்துக்கொண்டிருப்பதால் பொது மக்கள் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்னைகளையெல்லாம் இந்த அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ந. தருமலிங்கம் தலைமை]

இறுதியாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது 75 மைல்களுக்கு அப்பால் நாட்டுடைமையாக்கப்பட்ட அரசாங்க பஸ்கள் போகவேண்டுமென்ற சட்டத்தை இந்த அரசு உருவாக்கியதற்குப் பிறகு, இந்த ஆட்சிக்குக் கெட்ட பெயர் உண்டாக்கவேண்டுமென்ற காரணத்தாலோ வேறு எதனாலோ சில அதிகாரிகள் சில வழித் தடங்களுக்கு அனுமதி வழங்கும்போது சில தவறுகள் செய்து இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னமும் தி.மு.க. ஆட்சியில், காங்கிரஸ்காரர்கள்தான், அதிகாரிகளின் துணையோடு சலுகைகள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லுகின்ற நேரத்தில் ஈரோடுக்கும் பொள்ளாச்சிக்கும் இடையே 76 மைல்களுக்கும் அதிகமாக இருக்கிறது என்பது எல்லோரும் அறிந்ததே, ஆனால், ஈரோடுக்கும் பொள்ளாச்சிக்கும் இடையே இன்றையதினம் தனியார் துறையிலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கு ஏ.பி.டி. துறையினருக்கு, ரூட் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. எப்படிக் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் ஈரோடு நகர எல்லையிலிருந்து கணக்கு எடுத்து பொள்ளாச்சி நகர எல்லை வரை கணக்குப்போட்டு 74 மைல் தூரம் இருக்கிறது என்று சொல்லி ரூட் வழங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதின்மூலம் இப்படிப்பட்ட தவறுகள் இனி நடக்காமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். அறிஞர் அண்ணா அவர்களின் புனிதமான சோஷலிஸ தத்துவத்திற்கு மாசு கற்பிக்கக்கூடாது என்பதற்காகத்தான் இதை நான் வலியுறுத்துகிறேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய கருத்துக்களை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது காங்கிரஸ்காரர்களுக்குத் தான் இந்த அரசாங்கத்திலே சலுகை இருக்கிறது என்ற பெரிய குற்றச்சாட்டைச் சொன்னார்கள். காங்கிரஸ்காரர்களுக்குத் தவறான முறையில் சலுகைகள் தருகிறார்கள் என்ற அளவுக்கு இந்த அரசு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** காங்கிரஸ்காரர்கள் சலுகைகள் பெறுகிறார்கள் என்பது இந்த ஆட்சியின் ஜனநாயகத்தைக் காட்டுகிறதே தவிர அது குற்றச்சாட்டு அல்ல. 75 மைல்களுக்கு மேல் நாட்டுடமையாக்க எடுத்துக்கொள்கின்றபோது கோவை மாவட்டத்திலே 76 மைல்கள் இருந்தும் 74 மைல்களாகக் காட்டி கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். 76 மைல்களை 74 மைல்கள் என்று வேண்டுமென்றே திருத்தியிருந்தால் அது தவறு ஆகும். கோவையில் உள்ள ஆர்.டி.ஏ. அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டு செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இது கவனிக்கப்படவேண்டிய ஒன்று ஆகும்.

நண்பகல் 12–00 **திரு. ஏ. ஆர். பெருமாள் :** மதிப்பிற்குரிய நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை ஒழுங்கு பிரச்சினை தானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்) :** அது ஒழுங்குப் பிரச்சினையின் கீழ் வராது.



**திரு. ப. மகாதேவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது சில வார்த்தைகள் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி. நாட்டுடைமையாக்கும் கொள்கை நல்ல கொள்கை என்று இன்றைய அரசும், எங்கள் கட்சியும், இங்கிருக்கும் பெரும்பான்மையானவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சென்னை நகரிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் அந்தத் துறையிலே சில இழப்புகள் ஏற்படுகின்றன என்று சொல்லும்போது அடிப்படைக் கொள்கையே ஆட்டம் கண்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. மக்களுக்கு நன்மை செய்யவேண்டும், வசதிகள் செய்து கொடுக்க வேண்டும், தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்பது நாட்டுடைமையாக்கப்படும்போது பெரிதும் கவனிக்கப்படுகிறது. ஆனால் இதிலே இழப்பு ஏற்படுகிறது என்று சொல்லும்போது இவ்வாறு நாட்டுடைமையாக்குவது கூடாது என்று சொல்லுகிறவர்களுடைய வாதத்திற்குப் பலன் கிடைக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு இந்த வகையிலே இழப்பைத் தவிர்க்க என்ன செய்யவேண்டுமென்று யோசிக்கவேண்டும்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த மாநிலத்திலே உள்ள பெரிய ஃப்ளீட் ஓனர், இயக்குநர் அவர்கள் மானேஜிங் டைரக்டர், பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் எல்லாம் அந்த பஸ்களுக்குத் தாங்கள்தான் உரிமையாளர்கள் என்ற முறையில் பணிபுரியவேண்டும். இன்றைய தினம் தொழிலாளர்களுக்கு அவர்கள் நல்ல முறையில் பணியாற்றும்போது பூரிப்பு ஊதியம் என்று கொடுக்கப்படுகிறது. அதேபோன்று இழப்பு ஏற்படுகின்ற நிலைமை அவர்களால் ஏற்பட்டால், அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் முறையில் இன்கிரிமெண்டை ஒரு வருஷம் நிறுத்தி வைப்பது உதவியாக இருக்காதா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்யவேண்டும்.

சர்ப்ரைஸ் செக்கிங் என்ற முறையில் 40 பேரை ஏற்பாடு செய்வோம் என்று முன்பு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நடத்துனர்கள் அல்லது இடவர்கள்—ஓட்டுபவர்கள் வலது பக்கத்தில் இருக்கிறார்கள் ; அவர்களை வலவர்கள் என்று சொன்னார்கள், இவர்கள் இடப்பக்கத்தில் இருப்பதால் இடவர்கள் என்று சொல்லலாம்—சரியாக நடக்கவில்லை என்ற காரணத்தால் அந்த சர்ப்ரைஸ் செக் செய்யப்படும் என்று சொன்னார்கள்.

முன்பு நம்முடைய அமைச்சர் அவர்கள் திடீரென்று கட்டணத்தைக் குறைத்தார்கள். அதனால் ஒரு பஸ்ஸில் லாபம் 42,000 வருவதாக இருந்தால் 52,000 வரும் என்று சொன்னார்கள். பொதுவாக, பெருவாரியான மக்கள் தனியார் பஸ்களில்தான் சென்று வந்தார்கள். ஏனென்றால் அதிலே மிகுந்த மரியாதையுடன் பிரயாணிகளிடம் நடந்து கொள்வதோடு குழந்தைகளை எல்லாம் அரவணைத்து பஸ்களில் ஏற்றிக் கொண்டார்கள். ஆனால் பஸ்களில் திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்வதற்கான கட்டணத்தை ரூ. 2–40-ல் இருந்து 2 ரூபாயாகக் குறைத்தவுடன் மக்களெல்லாம் நம்முடைய பஸ்களில் வரத் தொடங்கினார்கள். நடத்துனர்கள் சரியான முறையில் நடந்து கொள்ளாததால் தான் முன்பு மக்கள் தனியார் பஸ்களில் சென்றார்கள் என்பது தெரிகிறது. அதனால்தான் நடத்துனர்கள் ஸ்டிரைக் செய்யும்போதுகூட பொதுமக்கள் அனுதாபம் காட்டாத நிலை ஏற்பட்டது. நம்முடைய சட்ட மன்ற பஸ்ஸில் இருக்கின்ற நடத்துனர் மிகவும் மரியாதையாக நடந்துகொள்ளுகிறார். இதே முறையில் எல்லோருக்கும் இருக்கவேண்டுமென்ற முறையில், நேரடிப் பேட்டியின்போது அவர்கள் "இல் டெம்பர்டு" ஆக இருக்கிறார்களா, சீக்கிரம் சினம் கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்களா என்பதையும் பார்த்து வேலைக்கு எடுத்துக்கொள்வது நல்லது.

மக்களுக்கு வசதி செய்யும் வகையில் குறைந்த கட்டணங்களை வசூலிப்பது நல்லதுதான். இருந்தாலும் துரித வண்டிகளில் ரயிலில் செல்வதைவிட அதிகமான வசதிகள் இருக்கின்றன. திருநெல்வேலியி

லிருந்து நாகர்கோயில்; மதுரையிலிருந்து நாகர்கோயில் என்று தொலைதூரம் போகின்ற பஸ்களில் கட்டணத்தை உயர்த்தினால்கூட நல்லதுதான். குறைந்த தூரக் கட்டணத்தைப் பொருத்தவரை 10 காசு என்று இருப்பதை முடிந்தால் இன்னும்கூடக் குறைக்கலாம். இப்போது நோயாளிகள் போன்றவர்கள் ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லுவதற்கு இலவசமாக அனுமதிக்கவேண்டுமென்று செய்திருக்கிறார்கள். அதே போன்று தொழிலாளர்களுக்கு இலவசமாகச் செல்ல வசதி செய்து கொடுக்கலாம். ஆனால் தொலைதூரம் செல்லக்கூடிய பஸ்களில் அதிகக் கட்டணம் வசூலிப்பது நல்லது, இழப்பை ஓரளவு சரிக்கட்ட உதவும்.

எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் எங்கள் ஊரில் உள்ள ஸ்டிரைக் நிலைமை பற்றிச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அடிக்கடி பேர் செய்து தொழிலாளர்களுக்கும், நடத்துனர்களுக்கும், வலவர்களுக்கும் பல சலுகைகளைக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். ஆனால், வாக்குறுதிகளை அவசரப்பட்டுக் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். பழங்கால மன்னர்கள் மாதிரி சொல்லவேண்டாம். ஓட்டுநர் சங்கத் தலைவர் அந்த வாக்குறுதிகளைச் செயல்படுத்தவில்லை என்று சொல்லுகிறார். குமரி மாவட்டத்தில் சொன்னதைச் செயல் படுத்தவில்லை என்கிறார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முத்தரப்பு மாநாடு கடந்த இரண்டு திங்களுக்கு முன்னால் சென்னையிலே நடந்தது.

**திரு. ப. மகாதேவன் :** குமரி மாவட்டத்தில் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று குறை கூறுகிறார்கள். அதனால்தான் ஸ்டிரைக் செய்வதாக பாலட் எடுத்திருக்கிறார்கள். அண்டை மாநிலத்தில் லாபகரமாக ஓடுகிறது என்று சொல்லுகிறார்கள். நகரத்தில் ஓடும் பஸ்களைப் பொருத்தவரை திடீர் திடீரென்று நிறுத்தி நிறுத்தி ஓட்ட வேண்டியிருக்கிறது. அதனாலும் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். இதைப்பற்றி டெக்னிகலாக ஆராய்ச்சி செய்து முடிவு செய்யலாம். தொழிலாளர்களைப் பொருத்தவரை இங்குள்ளவர்கள் அங்கு போகிறார்கள், அங்குள்ளவர்கள் இங்கு வருகிறார்கள். ஆகவே, இருக்கின்ற வித்தியாசம் பெரியதாகப் பாதிக்கிறது. என்ன முறையில் இதைச் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் ஆலோசித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

எங்கள் மாவட்டத்தில் "பீக் அவர்" சர்வீசில் எல்லா மாணவர்களும் கல்லூரிக்கு நாகர்கோயிலுக்குத்தான் வரவேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த நேரத்தில் ஓடும் பஸ் எண்ணிக்கை போதாது. அதை உயர்த்திக் கொடுக்கவேண்டும். குறிப்பாக 26 பஸ்கள் நிறுத்தப் பட்டதாக அறிகிறேன். அதையும்கூட தேசீயமயமாக்கி அந்த இடங்களுக்கும் பஸ் விடவேண்டும். முழுமையாக நாட்டுடைமையாக்கப்பட்ட எங்களுடைய மாவட்டத்தில் உடனுக்குடன் பஸ்களை விடவேண்டும். தானக்குடி, புவியூர், சனகப்பபுரம், ஆண்டார்குளம் ஆகிய வழித்தடங்களில் பஸ்கள் விட ரெகமண்ட் பண்ணப்பட்டிருக்கிறது. இலந்தேடி எக்ஸ்டன்ஷனை மணக்குடிக்குப் பஸ் விடவேண்டும். களியக்காவிளை வழியாக திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயிலுக்குச் செல்லும் பஸ்ஸில் ரூ. 1·70 காசாக இருந்த கட்டணம் இப்போது 2 ரூபாயாக்கப் பட்டிருக்கிறது. பயனீர் கம்பெனியை தேசீயமயமாக்கியபோது அதோடு இணைந்திருந்த அவுட் ஏஜென்சி பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டது பாராட்டப்பட்டது. அதிலே, திருநெல்வேலியிலிருந்து நாகர் கோயிலுக்குச் செல்லுவதற்கு 2 ரூபாய் கட்டணம் என்று விதித் திருக்கும்போது, அவுட் ஏஜென்சி என்ற முறையில் ரயில் கட்டணத்தைச் சேர்த்து வாங்கும்போது ரூ. 2·40 காசு வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு அதற்கு அதிகமாக 40 காசு வாங்குவது முறையல்ல. அது எக்ஸ்பிரஸ் கூட அல்ல, சாதாரண பஸ்தான் விடப்படுகிறது.



திருச்சிக்குப் போகிற பஸ்ஸிலே வழியிலே மதுரையிலே ஏதாவது சிறு ரிப்பேர் செய்யவேண்டுமென்றால்கூட, ஒரு டேப்பைச் சுற்றவேண்டுமென்றால்கூட ஒர்க்ஷாப்புக்குப் போ என்று சொல்லுகிறார்கள். இதனால் டிரைவர் வழியில் கத்தாழைப் பாலைத் துணியில் பிழிந்து சுற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த நிலைமைகளைக் கண்காணிக்க வேண்டும்.

எக்ஸலிவ் ஸ்பீட் பற்றிச் சொன்னார்கள். துரித பஸ்களில் நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தாமல் தங்களுக்கு வேண்டிய இடங்களில் காப்பி, சாப்பாடு சாப்பிடுவதற்காக நிறுத்திவிட்டு அதைச் சரிக்கட்ட 70, 75 மைல் வேகத்தில் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. அதையும் கண்காணிக்கவேண்டும். முத்தரப்பு மாநாட்டில் கொடுத்த வாக்குறுதிகளையும், கன்னியாகுமரி மாவட்ட தொழிலாளர் பிரச்சினையையும் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று பொதுவாக தேசீயவுடைமையாக்க வேண்டுமென்ற கருத்து ஒருபக்கத்தில் வலுத்து வரும்போது மறுபக்கத்தில் தேசீயவுடைமையாக்குவது நல்லதல்ல என்ற கருத்தும் ஒரு பக்கத்தில் பேசப்பட்டு வருகிறது. இந்த போக்குவரத்து தேசீயமயமாக்கப்பட்ட பகுதிகளை எடுத்துப் பார்க்கிறபோது இவை ஒன்றும் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் மோசமான நிலையில் நடைபெற்றுவருகின்றன என்று சொல்லக்கூடிய நிலையில்லை, இந்தக் கணக்குகளை எல்லாம் பரிசீலனை செய்து பார்க்கிறபோது. இது நிச்சயமாக லாபகரமாகத்தான் இருக்கிறது என்பதை இந்தக் கணக்குகளில் இருந்து நாம் புரிந்துகொள்ள முடியும். 37 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று கணக்கு கொடுக்கப்பட்டிருந்தாலும் இந்த நஷ்டம் எப்படி வந்தது என்று பார்க்கிறபோது இது லாபமாகத்தான் முடிந்திருக்கிறது. தனியார் துறையினர் கணக்கு இடுகிறபோது மூலதனத்திற்கு வட்டி போட்டு கழிப்பது கிடையாது. 1967–68 இறுதியில் இதில் சர்க்கார் மூலதனம் 12 கோடி ரூபாய் இருந்திருப்பதாக கணக்கிருக்கிறது. அதற்காக 63 லட்சம் ரூபாய் வட்டியாக இதில் கழிக்கப்பட்டிருக்கிறது. வளர்ச்சி நிதி, பயணிகள் நிதி, வீட்டு வசதி நிதி என்ற முறையில் ரூ. 5½ லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக 68½ லட்சம் ரூபாய் இதில் லாபம் கிடைத்து அப்படி ஒதுக்கப்பட்டு பிறகு 37 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று சொல்லும்போது உண்மையிலே 31½ லட்சம் ரூபாய் லாபத்தில்தான் இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் நஷ்டம் இல்லை. லாபமாகத்தான் இது நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே இதை இன்னும் லாபகரமான முறையில் எப்படி நடத்துவது என்பதுதான் இப்போது நம் முன்னுள்ள பிரச்னை. 12 கோடி ரூபாய் மூலதனமுள்ள ஒரு தொழிலை தனியார் துறையில் நடத்தினால் அவர்கள் எவ்வளவு டிவிடண்ட் கொடுக்கிறார்கள் என்றால் 6% லிருந்து 12% வரையில் டிவிடண்ட் கொடுக்கிறார்கள். நாம் நம் மூலதனத்தில் ஒரு 10% அளவிற்காவது லாபம் கிடைக்கக்கூடிய விதத்தில் இதை நடத்த முற்படவேண்டும். அப்படி நடத்தினால் 1¼ கோடி ரூபாய் லாபம் வரத்தக்க விதத்தில் இதை நடத்த முடியும், அப்படி நடத்துவதற்கு முயலவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக என் இதில் குறைந்த அளவிற்கு லாபம் வருகிறது என்று பார்த்தால் தனியார் துறையில் உள்ள பஸ்களில் பஸ் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 250 ரூபாய்க்கு குறைந்த வசூல் என்றால் அதை நஷ்டம் என்று சொல்கிறார்கள். நகரில் ஓடுகின்ற நம் பஸ்களில் நாள் ஒன்றுக்கு ஒரு பஸ்ஸிலிருந்து ரூ. 165 தான் வசூலாகிறது. கன்னியாகுமரியில் ரூ. 192 வசூலாகிறது. 1966–67 கணக்கைச் சொல்கிறேன். எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் ரூ. 270 வசூலாகிறது. ஆகவே இந்த 165, 192, 270 என்று வசூலாவது உயர்த்தப்படவேண்டும். அதாவது அதிகப்படியான வசூல் நமக்கு கிடைக்கவேண்டும். நாள் ஒன்றுக்கு 250 ரூபாய்க்கு கம்மியில்லாமல் வசூலிக்கக்கூடிய நிலையை நாம் ஏற்படுத்தினால் நிச்சயமாக நமக்கு நல்ல லாபம் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. அந்த அளவிற்கு கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று பஸ் போக்குவரத்து, லாரிப் போக்குவரத்து நம் மாநிலத்தில் மூன்றில் ஒரு பங்குதான் சர்க்கார் கையில் இருக்கிறது. இரண்டு பங்குகள் தனியார் துறையில் இருக்கின்றன. ஆகவே இதைப் படிப் படியாக மேற்கொள்ளவேண்டுமென்ற கருத்தை நான் ஆதரிக்கிறேன். படிப்படியாக இந்த ஐந்தாண்டு முடிவதற்குள் அதிகப்படியான அளவில் பஸ்களை சர்க்கார் துறையில் கொண்டுவர முயற்சிக்கவேண்டும். கடைசி எல்லை, பஸ், லாரி, டிரான்ஸ்போர்ட் எல்லாம் சர்க்கார் துறையில் இருக்கவேண்டும் என்ற நிலையை அடைவதற்கு தக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும். தனியார் துறையில் உள்ள பெரிய பஸ்களில் 62 ஸீட்கள் போட அனுமதிக்கிறார்கள். சர்க்கார் துறையில் உள்ள பஸ்களில் அதிகபட்சமாக 56 ஸீட்கள் தான் வைத்திருக்கிறார் கள். ஆகவே இதை சற்று அதிகப்படுத்தினால் நம் வருவாய் பெருகும். இதையும் ஆலோசிக்கவேண்டும். எக்ஸ்ப்ரஸ் பஸ்களை நான் சொல்ல வில்லை. நீண்டதூர பஸ்களைச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, இரவு சர்வீஸ் நம் மாநிலத்தில் இல்லை. கேரளா மாநிலத்தில் இரவில் எக்ஸ்ப்ரஸ் பஸ்கள் ஓடுகின்றன. ஏன் அப்படி நம் மாநிலத்திலும் இரவு எக்ஸ்ப்ரஸ் பஸ்களை விடக்கூடாது? அப்படி நாம் விட்டால் அதிகப்படியான பிரயாணிகள் பிரயாணம் செய்ய வசதி ஏற்படுவதோடுகூட நமக்கும் அதன்மூலம் நல்ல வருமானமும் கிடைக்கும். ஆகவே இரவு சர்வீஸ்களை அமைக்க வழிமுறைகள் ஆராயப்படவேண்டும். மைசூர் மாநிலத்தில் பெங்களூரில் ரோட் ட்ரெயின்ஸ் ஓடுகின்றன. ஒரு பஸ்ஸோடு இன்னொரு பஸ்ஸை இணைத்து ஒரே ட்ரைவர், ஒரே எண்ணெய் செலவில் ஓடும் முறை இருக்கிறது. அப்படிப்பட்ட ரோட் ட்ரெயின் சர்வீஸை சென்னையிலும் ஓட்டுவதில் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

லாபகரமான பல ரூட்கள் இருக்கின்றன. அந்த வழிகளை சர்க்கார் தானே எடுத்துக்கொண்டு நடத்துவதற்கு தக்க முயற்சிகளை மேற் கொள்ளவேண்டும். தனியார் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கும் முறையை வைத்திருக்கிறார்கள். ஆனால் அரசாங் கத்தில் அதைச் செய்யமுடியாது. அப்படிக் கொடுப்பது சிரமம்தான். ஆனால் இந்த பஸ் போக்குவரத்துத் துறைக்கு என்று தனியாக ஒரு போர்டு அமைத்து இந்த டிரான்ஸ்போர்ட் நிர்வாகத்தை அவர் களிடம் மாற்றிவிட்டால் ஊழியர்களுக்கு போனஸ் கொடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து பார்த்து வேண்டியதைச் செய்து தொழி லாளர்கள் ஊக்கத்தோடு வேலை செய்ய வழிமுறைகளை வகுக்க முடியும். ஆகவே இதிலும் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஓடுகிற எக்ஸ்ப்ரஸ் பஸ்கள் சில ரூட்களில் சில ஊர்களுக்குச் செல்லாமல் போகின்றன. அந்த ஊர்களுக்கும் சென்றால் இன்னும் அதிகப்படியான பிரயாணிகள் பிரயாணம் செய்ய வசதியாக இருக்கும். அதோடு நல்ல வருவாயும் கிடைக்கும். நாகபட்டணம்—தூத்துக்குடிக்குச் செல்கிற பஸ் மன்னார்குடி, பட்டுக்கோட்டை வழி செல்கிறது. அது அதிராமபட்டணம் வழி சென்றால் அதிகப் பிரயாணிகள் பிரயாணம் செல்ல வாய்ப்பு ஏற்படுவதுடன் வருமானமும் அதிகம் கிடைக்கும். அதையும் ஆராயவேண்டும். இராமநாதபுரம்—தூத்துக்குடி செல்கிற பஸ் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வழி செல்வது பேராவூர் வழி சென்றால் இன்னும் அதிக வருவாய் கிடைக்கும். இந்த வழிமுறைகளை எல்லாம் சர்க்கார் ஆராய்ந்து லாபகரமான முறையில் போட்டிருக்கிற மூலதனத்திற்கு குறைந்தது 10% அளவிலாவது லாபம் பெறத்தக்க வகையில் இத்தொழிலை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சி. பாலன்:** பெருமதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேசுவதற்கு சந்தர்ப்பம் தந்தமைக்காக என் நன்றி





யறிதலை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். தேசியமயமாக்கும் கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் சென்னையிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் சென்னையைத் தொடுவதையும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகிற அல்லது அங்கிருந்து செல்கிற எல்லா பஸ்களையும் தேசியமயமாக்கும் கொள்கை யின்கீழ் கிட்டத்தட்ட 125 தடங்களையும், 236 பஸ்களையும் இன்றைய தினம் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் எங்கள் மாவட்டத்தில் தனியார் துறையில் ஓடிக்கொண்டிருந்த பஸ்கள் எல்லாம் தேசியமயமாக்கப்பட்ட வுடன் அங்கு வேலை செய்து வந்த ட்ரைவர்கள், கண்டக்டர்கள் போன்றவர்கள் வேலையில்லாது துடித்துக்கொண்டிருந்தபோது இங்கிருந்து இயக்குநர் அவர்கள் எங்கள் மாவட்டத்திறகு வந்து—நான் பெருமை யோடு சொல்லிக்கொள்கிறேன்—54 வயதாகி ஆறுமாதங்கள் தாண்டி யிருக்கும், இன்னும் ரிட்டயர் ஆக ஆறு மாதங்கள்தான் இருக்கும் ஒருவருக்குக்கூட, இப்படி எல்லோருக்கும் வேலை தந்திருக்கிறார்கள். எல்லா ட்ரைவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் அங்கு வேலை தரப் பட்டிருக்கிறது. ஆனால் அங்கு வேலை செய்து வந்த க்ளார்க்ஸ், டைம் கீப்பேர்ஸ், செக்கிங் இன்ஸ்பெக்டர்ஸ் இவர்களுக்கு வேலை தரப்பட வில்லை. அவர்களுக்கும் வேலை தரப்படவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பஸ் கட்டணங்களுக்கும், சென்னை யில் உள்ள பஸ் கட்டணங்களுக்கும் இடையே சில வேறுபாடுகள் இருக்கின்றன. அந்த வேறுபாடுகள் 1—4—68 தேதியோடு தீரப்போகிறது என்று அறிக்கையில் கூறியிருப்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். அதேபோல் விடுமுறை நாள் சலுகைப் பயணச் சீட்டு. குருடர்கள், கால் இல்லாது நடக்க முடியாதவர்கள் இவர்களைப் போன்றவர்கள் ஆஸ்பத்திரிக்குச் செல்கிறநேரத்தில் அவர்கள் டிக்கட் பெறவேண்டாம் என்ற முறை கொண்டுவரப்பட்டிருப்பது உள்ளபடியே பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

ஒன்றை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன். இங்கே இருக்கின்ற அறிக்கைகளைப் பார்த்த பிறகு எங்கள் மாவட்டத்திலிருந்து வந்திருக்கின்ற காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள் என்று எண்ணுகிறேன். சென்ற மாதம் 25-ஆம் தேதி "உரிமை தினம்" என்ற ஹோதாவில் எம். எல். ஏக்கள் கலந்து கொண்டு கொண்டாடினார்கள். அப்பொழுது நஷ்டம், நஷ்டம் 61 இலட்சம் நஷ்டம் என்று அங்கே பெரிய கோஷங்களை எழுப்பிக்கொண்டு அந்த ஊர்வலம் நடைபெற்றது. இப்பொழுது இந்த அறிக்கையைப் பார்த்த பிறகாவது அவர்கள் இந்த வரிசையிலே 1966–67-இல் இருந்தபொழுது ஏற்பட்ட நஷ்டம்தான் என்பதைத் தெரிந்துகொண்டிருப்பார்கள் என எண்ணுகிறேன். அன்றையதினம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் உள்ளபடியே இன்று பார்த்தால், அதற்குப்பிறகு தினப்படி, அகவிலைப் படி என்று 19 இலட்சம் ரூபாயும், நகர ஈட்டுப்படி என்று 9 இலட்சம் ரூபாயும் தொழிலாளர்களுக்குக் கொடுத்த பிறகும் இன்று 37 இலட்சம் தான் நஷ்டம் ஏற்படுகிற நிலையில் இருக்கிறோம் என்று தெரிகிறது. இதிலிருந்து நாம் எந்த அளவிற்கு இந்தத் துறையில் நஷ்டத்தைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம் என்பது தெரியும். முன்னாலே நாம் கொடுத்து வந்த கட்டணத்தைக் குறைத்தும், பல வசதிகளைச் செய்தும் கூட நஷ்டம் குறைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நேரத்தில் நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முன்னாலேயிருந்த அதிகாரிதான், இயக்குனர்தான், பொறியியல் வல்லுனர்தான் இப்பொழுதும் அந்தச் சக்கரத்தை அசைத்துக்கொண் டிருக்கிறார்கள். ஆனால் முன்பிருந்த ஆட்சியாளர்கள் நடத்திச்சென்ற முறையினால்தான் அவ்வாறு அதிக நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் இப் பொழுது நமது அமைச்சரவர்கள் மிகத் திறமையாக நடத்தியதால் அந்த நஷ்டம் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் சென்னையிலே ஓடக்கூடிய பஸ்களினால் மிக அதிகமாக நஷ்டமேற்படுகிறது என்றும், அந்த நஷ்டத்தை வெளியூர்களில் ஓடக்கூடிய பஸ்களிலிருந்து வரும் லாபத்தைக்கொண்டு சரிக்கட்ட வேண்டுமென்ற முறையை ஓரளவு மாற்ற முற்பட வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன். சென்னையிலே நஷ்டம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் தரப்பட்டிருக்கிறது. சில மக்களுக்கு வசதி செய்வதற்காக வருவாய் இல்லாவிட்டாலும் அவர்களுக்குப் பஸ் விடப்படுகிறது, தேய்மானச் செலவு ஏற்படுகின்றது என்று சொல்லப்பட்டது. நான் ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கேரளாவிலே—அதை மலையாளம் என்றே சொல்வார்கள்—ஒவ்வொரு பக்கத்திலும் ஐந்து மைல் தூரத்திற்குள் 600 வளைவுகள், நெளிவுகள் உள்ளதாகத்தான் வழிகள் இருக்கும். அங்கும் டயர் தேய்மானச் செலவு அதிகமாக ஏற்படும். தவிர அங்கேயிருக்கிற டிரைவர்களுக்கும், இங்கே இருக்கிற டிரைவர்களுக்கும் சம்பள வேறுபாடு நூற்றுக்கணக்கிலே இருக்கும். கண்டக்டர்களுக்கும், செக்கிங் இன்ஸ்பெக்டர்களுக்கும் கூட சம்பள விகிதத்தில் 50 அல்லது 100 என்ற அளவில் இங்குமங்கும் வேறுபாடு இருக்கிறது. இருந்தும் அங்கே லாபம் வருகிறது. நமது அமைச்சரவர்களோ அல்லது டைரக்டரோ அல்லது ஒரு குழுவை நியமித்தோ கேரள டிரான்ஸ்போட்டை இயக்கும் நிர்வாகத்தோடு தொடர்புகொண்டு எப்படி நஷ்டம் ஏற்படவில்லை. இவ்வளவு சம்பளம் கொடுத்தும் எப்படி இவ்வளவு லாபம் வருகிறது என்பதைப்பற்றி அறிய வேண்டும். எனவே அவ்வாறு ஒரு குழுவை நியமித்து கேரளாவிற்கு "ஸ்டடி டூர்" என்று முறையிலாவது சென்று ரிப்போர்ட் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்ய வேண்டும்.

எங்கள் மாவட்டத்தில் வேலைபார்த்த டிரைவர்கள், கண்டக்டர்கள், பத்தாண்டு காலம் வேலை செய்தவர்கள் இங்கே வந்தபிறகு, "ஏன் இங்கே வந்தோம், அங்கேயே இருந்திருந்தால் 100 ரூபாய்க்கூட கிடைக்குமே" என்று நினைக்கிறார்கள். இப்பொழுது ஸ்டிரைக் நோட்டீஸ் தந்திருக்கிறார்கள். அது குறித்து திரு. மகாதேவன் பிள்ளை அவர்களும் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றைக் கூறிக்கொள்ளுகின்றேன். அமைச்சரவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வந்தபொழுது தொழிலாளர்களோடு பேச்சு நடத்தினார்கள். அப்பொழுது சங்கத்திலிருந்து 20 கோரிக்கைகள் வைக்கப்பட்டன. அதில் 10 கோரிக்கைகளை உடனே செய்ய உத்தரவிட்டார்கள். ஒன்றோ, இரண்டோ தவிர மற்றவை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. எனவே திரு. மகாதேவன் பிள்ளை அவர்கள் சொல்வது சரியல்ல என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்கள் மாவட்டத்தில் 1965-இல் கண்டக்டர்களுக்காகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்கள், எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்தவர்கள், பதிவு செய்து கொண்டு மூன்றாண்டு காலமாக வேலைக்காகக் காத்திருக்கிறார்கள். அதேபோல சென்னையிலேயும் பலர் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இண்டர்வியூவிற்குச் செல்லும் நேரத்தில் அவர்களுக்கு மலையாளம் தெரிந்திருப்பதால் வேலையில்லை என்று சொல்லியிருப்பதாகச் சில கண்டக்டர் நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி டைரக்டர் அவர்களோடும் கலந்தாலோசித்தேன். இப்பொழுது நாம் பஸ்களில் அழகிய குறளைக் காண்கிறோம். ஆனால் அன்று அங்கு நான்கோ, ஐந்தோ தமிழ்ப் பள்ளிகள்தான் இருந்தன. அந்த நடைமுறைதான் ஏற்பட்டிருந்தது. ஆகவே அவர்கள் மலையாளம் படித்திருந்தாலும் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். ஆகவே மலையாளி என்ற முறையில் பிரிக்காமல் அவர்களுக்கு வேலை தர வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, எங்கள் மாவட்டத்தில் டி. டி. எஸ்.; அதாவது டிஸ்டிரிக்ட் டிரான்ஸ்போர்ட்டேஷன் சூப்பரிண்டெண்ட் ஒருவர் இருக்கிறார். நல்ல இன்ஜினியர், பொறியியல் வல்லுனர். அந்த மாவட்டத்திலிருக்கின்ற 1500 தொழிலாளர்களை நடத்திச் செல்லத்தக்க நிர்வாகத்திறன் அவர்களுக்கு



இருக்குமா? என்று பார்க்க வேண்டும். ஒரு கோவாப்பரேட்டிவ் ஸ்பின்னிங் மில்லில், 250 பேர் வேலை செய்யக்கூடிய இடத்தில் சப்-கலெக்டர் ரேங்கிலே உள்ளவர் நிர்வாகத்தை இயக்குகிறார். இராணித்தோட்டத்திலே இருக்கிறது. ஏ. ஈ. க்களைப்போட்டு, முழு நிர்வாகத்தையும் கவனிப்பதற்கு சப்-கலெக்டர் ரேங்கில் ஒருவரைப் போட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகின்றேன். (மணியடிக்கப்பட்டது)

தலைவரவர்களே, எனக்கு இன்னும் ஐந்து நிமிஷம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனென்றால் நீண்ட நாட்களாக நான் தொழிலாளர்களோடு பழகியவன். இப்பொழுது ஸ்டிரைக் நோட்டீஸ் வேறு போட்டுக்கொண்டிருக்கிற நேரம். ஆகவே நான் சொல்ல வேண்டியவைகளைச் சுருக்கமாகச் சொல்லி முடித்து விடுகிறேன்.

எங்கள் மாவட்டத்தில் மாணவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் அடிக்கடி மோதல் ஏற்படுகிறது. மாணவர்களைக் கண்டக்டர் அடித்துவிட்டால் மாணவர்கள் ஸ்டிரைக் செய்கிறார்கள். ஒருவேளை மாணவர்கள் கண்டக்டரை அடித்துவிட்டால் பஸ் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்கிறார்கள். பஸ்கள் ஓடாமல் அப்படியே கிடக்கும். இப்படிப்பட்ட நிலை அடிக்கடி ஏற்படுகிறது. இதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டுபிடித்து மாற்றங்களைச் செய்தால் இத்தகைய நிலைமைகளைத் தவிர்க்கலாம். உதாரணமாக இரணியலில் காலை 9 மணிக்கும், 10 மணிக்கும் பஸ் விடுகிறார்கள். அதில் இருநூறு பேர் வரையில் ஏறுவார்கள். 600 பாஸ் கொடுக்கிறோம். எல்லோரும் உள்ளே ஏற வருகிறார்கள். கண்டக்டர் 'ஓவர் லோட்' ஏற்ற மாட்டேன் என்று சொல்கிறார். இதனால் மோதல் வருகிறது. இதேபோல பொது மக்களுக்கும், கண்டக்டர்களுக்கும் மோதல் வருகிறது. எப்படியென்றால், ஒருவர் 50 கிலோ வரையில் சாமான்களை பஸ்ஸிலே கொண்டு போனால் அது அவர் உண்பதற்காக எடுத்துச் செல்லப்படுவதாக இருந்தால் அதற்கு ஒரு ரேட்டும், வியாபாரத்திற்காக எடுத்துச் சென்றால் வேறொரு ரேட்டும் வசூலிக்கப்படுகிறது. அந்தக் கண்டக்டர் இது அவர் உண்பதற்காகத்தான் செல்வதா அல்லது வியாபாரத்திற்காகப் போவதா என்று எப்படி அறிவார்? கொண்டு வந்தவர் சொல்வார் இது தான் உண்பதற்காகத்தான் என்று. கண்டக்டர் இல்லை, இல்லை, இது வியாபாரத்திற்காகத்தான் என்பார். இதனால் பல மோதல்கள் ஏற்படுகின்றன. இவற்றைத் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஸ்டேட் பஸ்களில் டிரைவர்கள், கண்டக்டர்கள் போகிறார்கள். ஸ்டேட் பஸ்களில் மலைக்குப் போகிறார்கள். ஆனால் அவர்கள் இரவில் தங்குவதற்கு இடமில்லை. ஒரு நாள் ஒரு கண்டக்டர் அந்த பஸ்ஸிலேயே படுத்திருந்தார். அப்பொழுது கள்ளனொருவன் வந்து அவரிடமிருந்த பணத்தைப் பறித்தான். உடனே கண்டக்டரும், அந்தக் கள்ளனும் கட்டிப்புரண்டு அங்கே குஸ்தி வைத்தார்கள். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் ஸ்டேட் பஸ்களில் செல்பவர்களுக்குத் தங்குவதற்குச் சரியான இடமில்லை. பஸ்ஸிலேயேதான் தூங்குகிறார்கள். எனவே அவர்கள் இரவில் தங்குவதற்கு ஆங்காங்கே விடுதிகளை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எங்கள் மாவட்டத்தில் பல பகுதிகளில் நூற்றுக்கணக்கானவர்கள் பஸ்ஸில் ஏறிய பிறகு டிக்கெட் கொடுக்க வேண்டிய நிலைமையிலிருக்கிறது. அதனால் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே பஸ் வருவதற்கு முன்னாலேயே ஒரு கண்டக்டர் அந்த இடத்தில் இருந்துகொண்டு டிக்கெட்டுகளைக் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்து பஸ் வந்தவுடன் ஏறிச் செல்வதற்கு வசதியாக, இங்கே இருப்பதைப்போல அங்கேயும் அந்த ஏற்பாட்டை அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுகொள்ளுகின்றேன்.

அங்கு பஸ் ஸ்டாண்ட் என்று போர்டு எழுதுவது இடையாது. கண்ட இடத்தில் நிற்பார்கள். கண்ட இடத்தில் ஏறுவார்கள். பிரயாணிகள் கையைக் காட்டினால் கண்டக்டர் இது பஸ் ஸ்டாண்ட் இல்லை

என்று சொல்லிவிட்டுப் போய் விடுவார். கண்டக்டர் திரும்பி வருகிற பொழுது பிரயாணிகளுக்கும், அவர்களுக்கும் மோதல் ஏற்படுகிறது. ஆகவே இன்னின்ன இடங்கள்தான் பஸ் ஸ்டாண்ட் என்று எழுதிப்போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பிரயாணிகளுக்குப் பல இடங்களில் தங்குவதற்குத் தகுந்த இடம் இல்லை. அந்தக் குறையையும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தக்கலை, மண்டே மார்க்கெட், கோட்டாயம், கொளச்சல், சுசீந்தரம் ஆகிய இடங்களில் இன்னும் டைம் கீப்பர்கள் போடப்படவில்லை. அங்கே டைம் கீப்பர்களைப் போட்டுதர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதேபோன்று பல கண்டக்டர்கள் கேரளாவிற்குச் செல்லும் பஸ்களிலே போகிறார்கள். அந்த பஸ்களிலே பிரயாணிகள் அரிசியை மூட்டையிலே வைத்திருக்கிறார்கள். அந்த பார்டருக்குப் போனவுடனே அதிகாரிகள் செக் செய்கிறார்கள். அரிசி இருந்ததற்காகக் கண்டக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே ஒவ்வொரு பஸ்ஸிலும் குறிப்பாகக் கேரளாவிற்குச் செல்லும் பஸ்களில் ஒரு போலீஸ்காரரைப் போடவேண்டும். இல்லாவிட்டால் கண்டக்டர்கள் மீது பொறுப்பு ஒன்றுமில்லை என்று இருக்க வேண்டும்.

பிற்பகல் 12-30 அடுத்தபடியாக, அமைச்சரிடத்தில் நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். நமது அமைச்சரவை பதவியேற்றதற்குப் பிறகு நாம் 10 பைசா கூட்டிக்கொடுத்திருக்கிறோம். அதைக்கூட என்னுடைய பகுதியிலேயிருக்கிற காங்கிரஸ்காரர்கள் 10 பைசா கூட்டிக் கொடுத்திருக்கிறார்கள் என்று வேடிக்கையாகப் பேசினார்கள். அமைச்சரவர்கள் அந்த 10 பைசாவை முதல் முதலாக டோக்கனாகத் தான் நான் தருகிறேன். பண வசதி ஏற்பட்டதற்குப் பிறகு அதுக் கூட்டித் தரப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். நமது அமைச்சரிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். அந்த 10 பைசாவை 25 பைசாவாக நீங்கள் உயர்த்தித் தரவேண்டும். இன்னமும் இப்படிக்கூடச் செய்யலாம். அதாவது எவ்வளவு காஷ் கொண்டு வருகிறார்களோ அந்த அளவுக்கு போனஸ் என்ற முறையை அமுல்படுத்தினோமேயானால் அது சிறந்த முறையாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது மாவட்டத்திலுள்ள தொழிலாளத் தலைவர்களும் நமது டைரக்டர் அவர்களும் கலந்து முடிந்த அளவு பொருளாதாரச் சிக்கல இல்லாத பிரச்சினைகளைத் தீர்த்துவிடவேண்டும். அப்படி செய்தால் சௌகரியமாக இருக்கும் என்று டைரக்டர் அவர்களை கேட்டுக் கொண்டு அங்கே இருக்கிற தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் மிகச் சரியாகத்தான் இருக்கிறார்கள். நமது மகாதேவன் பிள்ளை அவர்கள் சொன்னார்கள். ஆனால், அந்த சங்கத்தின் தலைவராக இருப்பவர்களுக்குத்தான் உண்மை விஷயம் தெரியும். காங்கிரஸ் நண்பர்கள் தான் ஸ்டிரைக் செய்யவேண்டுமென்பதற்காக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதோடு நமதருமை கம்யூனிஸ்டு நண்பர்கள் இந்த டிரைவர்களையும், கண்டக்டர்களையும் பயன்படுத்தி அந்த மாவட்டத்தை குழப்புவதற்காக ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். நமது அமைச்சரவர்களும், டைரக்டர் அவர்களும் இதில் கவனத்தை செலுத்தி, சுமுகமான வழி காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இந்த வெட்டுத் தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்கள் சொல்லலாம் என்று நினைக்கிறேன். பொதுவாக, இன்றைக்கு டிரான்ஸ்போர்ட் தொழிலிலே இருக்கிற பிரச்சினைகளிலே இரண்டு முக்கியமானவை. மக்களுக்கு வரி போடுகின்ற அந்த நேரத்திலே அந்த வரியைக் குறைத்து அவர்கள் முறை



யாக வரி செலுத்தக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கக்கூடிய தொழில் இது. அதோடு சிட்டியிலே இந்த பஸ்கள் நல்லமுறையில் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஏதோ ஒரு சூழ்நிலை காரணமாக சிட்டியிலே கொஞ்சம் நஷ்டம் இருந்துகொண்டிருக்கிறது. இருந்தபோதிலும் கூட நல்ல விதத்திலே இந்த நஷ்டத்தைப் போக்கவேண்டுமானால் கிராமப் பகுதிகளிலே இருக்கிற பஸ்களை அரசாங்கம் கவனிக்க வேண்டும். கிராமப் புறத்திலே தனியார் பஸ்கள் தான் ஓடுகின்றன. அந்த பஸ்களோடு நம்முடைய பஸ்களையும் விட்டு நோ பிராஃபிட் என்ற முறையில் அவர்களுக்கு மொனாப்பலி ஏற்படுத்தி கொடுக்காத முறையில் நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். நமது ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களையும் அந்தப் பகுதிகளில் விட்டு அவர்களுக்கு அதிகமாக இலாபம் கிடைப்பதை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி நல்ல முறையில் இந்த தொழிலை ஊக்குவிக்கவேண்டியது நமது முக்கியமான நோக்கமாக இருக்கவேண்டும்.

அடுத்து, எவ்வளவுதான் நாம் சட்டங்கள் போட்டாலும், அதற்கு வேண்டிய திட்டங்களை போட்டாலும் கூட அதை செயல்முறைப்படுத்த நல்ல திறமையான அரசு வேண்டும். அதற்கும் சில யோக்கியதாம்சங்கள் வேண்டும். முன்பு பேசிய நண்பர்கள் எல்லாம் தெளிவாகச் சொன்னார்கள். இந்த தொழிலை அவசியமாக மேம்படுத்த வேண்டுமென்று. அரசாங்க பஸ் என்று சொன்னால், அதிலே போகிற பொழுது தன்னுடைய பஸ், தன்னுடைய நாடு என்ற ஒரு எண்ணம் வரவேண்டும். அது கூடிய சீக்கிரத்திலே வரும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த முறையிலே பார்க்கும்போது இன்றைக்கு ஹெல்த்தி காம்ப்பெடீஷன் இருக்கவேண்டும். தனியார் துறையினருக்கும் நமது சர்க்கார் துறையினருக்கும் ஹெல்த்திகாம்பெடீஷன் இருக்கவேண்டும். அது இருந்தால் தான் மிக நல்லது. ஒரேயடியாக மொனாப்பலியை பிரைவேட் ஆப்பரேட்டர்ஸ்க்கு கொடுத்து விட்டோம் என்று சொன்னால் அவர்கள் வைத்ததுதான் சட்டம் என்ற நிலை ஏற்படும். அமைச்சர் கருணாநிதி அவர்கள் இருக்கிறார். அவர் அரசாங்க பஸ் ரேட்டைக் குறைத்தவுடனே, எல்லோரும் உடனே அவரிடம் வந்த பொழுது நீங்களும் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள். இருவரும் ஒரே நிலையில் இருக்கலாம் என்ற முறையில் நிலைமையை ஏற்படுத்தினார்கள். ஆகவே ஹெல்த்திகாம்பெடீஷன் இருக்க வேண்டுமென்பது நல்ல முறை. ஆக, அந்த முறையில் ஒரு சூசகத்தையும் நாம் கண்டுபிடித்திருக்கிறோம். அந்த முறையிலே இந்த காம்ப்பெடிஷனிலே அதிகமான பங்கு தனியார்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று யார் சொன்னாலும் இந்த விஷயத்திலே அதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை. இப்பொழுது 75 மைலுக்கு மேலே உள்ளதை நாம் நேஷனலைஸ் செய்கிறோம். அதையும் குறைத்து 50 மைலுக்கு மேலே உள்ளதை நேஷனலைஸ் செய்தால் கூட நன்றாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

இந்தச் சூழ்நிலையிலே 75 மைலுக்கு மேலுள்ளதை நாம் நேஷனலைஸ் செய்யும்போது இந்த அசெஸ்மெண்ட்டிலே அங்காங்கே 75 மைல்களுக்குள்ளே இருக்கிற பஸ்களிலேயே இருக்கிற ரூட்டை விட்டுவிட்டு, அதைக் குறைக்கின்ற நிலைமையும் இன்று இருக்கிறது. இதிலே அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கவனம் செலுத்தி அங்கங்கே இந்த அரசாங்க பஸ்களிலே இருக்கக்கூடிய ஆதாயத்தைக் குறைக்கக் கூடிய சூழ்நிலையைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

அடுத்து, மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், இன்றைக்கு ஸ்மால் ஆப்பரேட்டர்ஸ் பிழைப்பதற்கே வழியில்லை. ஏனென்று கேட்டால் முன்னாலே இந்த வழிகளிலே இருந்த பெரிய தொழில் அதிபர்கள் இந்த வழிகளை வைத்துக்கொண்டு நல்ல நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, ஸ்மால் ஆப்பரேட்டர்களை வாழ விடுவதில்லை. எந்த ஒரு ரூட்டை Small Operators கேட்டாலும் கூட அவர்கள் நியூ என்ட்ரன்ட்ஸாக வந்து உள்ளே நுழைந்த உடனே, வசதி வாய்ப்பு உடைய Fleet Owners நேராகக் கோர்ட்டுக்கு போய்விடுகிறார்கள். அங்கிருந்து ஹைக்கோர்ட்டுக்கு போய், அங்கேயிருந்து சுப்ரீம் கோர்ட்டு வரையிலும் போகிற நிலைதான் இப்பொழுது இருக்கிறது. இந்த நிலையில் ஸ்மால் ஆப்பரேட்டர்ஸ் பஸ் ரூட்

கதி சட்டப்படி அதோகதியாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. இப்படி, அவர்களுக்கு ஒரு இடம் சட்டரீதியாகப் பெறக்கூடிய சூழ்நிலை இருந்தாலும்கூட பெற முடியாமல் போய்விடுகிறது. இது எதில் கொண்டுபோய் விடுமென்று சொன்னால் கடைசியிலே பெரிய பஸ் ஆப்பரேட்டர்ஸ் மொனாப்பலியாகத்தான் போய் சேரும். அந்த முறை தான் இன்றைக்கு இருக்கிறது. அதற்காக அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் ஒன்று செய்யவேண்டும். இனிமேல் 5 ரூட்டுக்கு மேல் யாருக்கும் கொடுக்கக்கூடாது—அனுமதி. 5 ரூட்டுக்கு அவர்களுக்கு பர்மிட் கொடுத்து விட்டோம் என்று சொன்னால் அதற்கு மேலே அவர்கள் போகக்கூடாத நிலை இருக்க வேண்டும். அதன் மூலம் நல்ல நிலை ஏற்படும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

அடுத்து, இந்த ரூட்ஸ் பர்மிட்டை சில ஆப்பரேட்டர்ஸ் டிரான்ஸ்ஃபர் பண்ணிவிடுகிறார்கள். இந்த பர்மிட்டுகளை சிலபேர் ஒரு இலட்ச ரூபாய், இரண்டு இலட்ச ரூபாய்களுக்குக்கூட விற்கக்கூடிய நிலை இருக்கிறது. அதை நாம் ஒழிக்க வேண்டும். அதிலே அவர்கள் போட்ட முதலை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அந்த பர்மிட் வேண்டாமென்று சொன்னால் உடனே அதை கவர்ன்மெண்ட்டிடம் சரண்டர் பண்ணவேண்டும். அதை அவர்கள் சரண்டர் பண்ணினால் நாம் அந்த பர்மிட்டை புதிதாக வரும் நல்லவர்களுக்குக் கொடுத்தால் நல்ல விதத்திலே ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு சௌகரியமாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான யோசனையாகும்.

அதற்கடுத்தபடியாக, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் சம்பந்தமாகப் பார்க்கப் போனால் 'பாஸஞ்ஜர்ஸ் அமெனிட்டீஸ் ஃபண்டு'க்காக 5 சதவீதம் என்று இந்த ஆய்வுரையில் கூறப்பட்டிருக்கிறது. அந்த 5 சதவீதத்தை எவ்வளவு கூட்டினாலும் தகும். இதைக் கொஞ்சம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும்.

இப்பொழுது ஆக்ஸிடெண்டுகள் நிரம்ப அதிகமாக இருக்கின்றன. ஆக்ஸிடெண்டு என்றாலே அது தவிர்க்க முடியாமல் ஏற்படுகின்ற விபத்து என்பதுதான் பொருள். வேண்டுமென்றே ஏற்படும் என்பதல்ல அதன் பொருள். இருந்தாலும், அதற்கு முன்னாலே 'பிரிவெண்ட்டிவ் மெஷர்ஸ்' செய்யப்படவேண்டும். இதைப்பற்றியும் நாம் கொஞ்சம் கவனிக்கவேண்டும். சில இடங்களிலே இந்த ஆக்ஸிடெண்டுகளினால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் தொழிலாளிகளாக இருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் குடும்பத்திலே மிகவும் கஷ்டப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த 'ஆக்ஸிடெண்ட் ரிசர்வ் ஃபண்ட்டை' கூடியமட்டும் கூட்டிக்கொடுக்க வேண்டுமென்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

அமைச்சர் கருணாநிதி அவர்கள் இதுபற்றி முன்னாலே சொன்னார்கள். ஒருவன் ஒழுங்காக நேரத்திற்கு வந்துவிட்டால் வெள்ளைக்காரன்போல் பங்க்சுவலாக இருக்கிறான் என்று சொல்வார்கள். பங்க்சுவலாக இருந்தால் அப்படிச் சொல்வார்கள். ரயில்வே ஸ்டேஷன்களிலே புறப்பட்ட வண்டி அடுத்த ஸ்டேஷனுக்கு இத்தனை மணிக்கு வரும் என்று தெரிந்துவிடும். அந்த முறையில் 50 மைல்களுக்கு ஒரு இடத்தில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் ஆபீஸ் இருக்க வேண்டும். அந்த முறையில் 50 மைல் தூரத்திற்குள் வண்டியிருந்தாலும் அல்லது 50 மைலுக்கு மேல் இருந்தாலும் வண்டி இந்த இடத்திலிருக்கிறது என்று நமக்குத் தெரிந்துவிடும்படி செய்ய வேண்டும். டெலிபோன் இணைப்பு அமைக்கவேண்டும். இதன் மூலமாக வண்டி உடனே வருமா, எப்பொழுது வரும் என்பதெல்லாம் நமக்குத் தெரியும். என்னைக்கேட்டால் ஒயர்லெஸ் வைத்தால்கூட இன்னும் நலமாக இருக்கும்.

அதிக அளவிலே ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்ஸ் ஆக்ஸிடெண்டுகளைக் குறைக்க வேண்டும். கவர்ன்மெண்ட் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டிலே பிரயாணம் செய்தால் வீட்டிலே குடும்பத்திலிருப்பவர்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும். அவர்கள் பாதுகாப்பாக வீடு வந்து சேருவார்கள் என்ற எண்ணத்தை அவர்கள் பெறவேண்டும். அந்த நிலையை நாம் ஏற்படுத்தித் தரவேண்டும்.



அதோடு நைட் சர்வீசும் கொஞ்சம் இருந்தால் நல்லது என்று நான் நினைக்கிறேன். ஆந்திரா, கேரளா, மைசூரிலேயெல்லாம் நைட் சர்வீஸ் இருக்கிறது. அவர்களுடைய உள் நோக்கம் பகலிலே பெரிய பிஸினெஸ் காரர்கள் எல்லாம் வேலையாக இருப்பார்கள். ஆகையால் 'நைட்'டிலே பிரயாணம் செய்யலாம் பகலிலே வேலைகள் நடக்கும். இரவு நேரத்திலே நைட் பஸ் சர்வீஸ் இருந்தால் அதில் போய்வந்துவிடுவார்கள். ஆக, அது நிரம்ப சௌகரியமாக இருக்கும். அந்த முறையிலே நைட் சர்வீஸை ஏற்படுத்திக் கொடுத்தால் நிரம்ப நன்றாக இருக்கும்.

சில சமயங்களில், சில இடங்களில், திருவிழாக்காலங்களில் கூட்டம் நிறைய இருக்கிறது. கூட்டம் இருக்கிற இடங்களில் ஒரு பஸ் போனவுடன் இன்னும் கூட்டம் அதிகமாக இருக்கிறது என்றால் திடீரென்று அடுத்த பஸ் விட்டு கூட்டத்தைக் குறைத்து, மக்களுக்கு சௌகரியம் உண்டாக்கக் கூடிய சூழ்நிலையும் இருக்க வேண்டும். அப்படியே உடனே அடுத்த பஸ் விடுவதென்றாலும், அதற்கு பஸ் டிரைவர், டீஸல் ஆயில் போன்ற செலவெல்லாம் அதிகமாகும். அடுத்த மாநிலத்தில மைசூர் என்று நினைக்கிறேன். அந்தமாதிரி சமயங்களில், ஒரு பஸ்ஸோடன் கூடவே ஒரு டிரைலர் மாதிரி அட்டாச் பண்ணி, அதாவது டிரக் மாத்திரம் என்ஜின் இல்லாமல் பஸ்ஸோடு கூட 'அட்டாச்' பண்ணி விடுகிறார்கள். அதுமாதிரி செய்தால் மக்களுக்கு ரொம்பவும் சௌகரியமாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

தொழிலாளர் சம்பந்தமாக சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஓரிரண்டு லாரிகள் வைத்திருப்பவர்கள் லாரி டிரைவர் களுக்கு சம்பளம் ஜாஸ்தி கொடுப்பதில்லை. ரூ. 60, 70 தான் கொடுக்கி றார்கள். அதை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி காலம் தள்ள முடியும்? ஆகவே, அவர்கள் ஊரை விட்டு புறப்பட்ட உடனேயே—முதலாளி ஒரு பக்கம் ஊரில் இருக்கிறார்—வழியில் யார் வந்தாலும் சரி சென்னைக்கு போகவேண்டுமென்றால், காசு வாங்கிக்கொண்டு ஏற்றிக்கொண்டு போகிறார்கள். இது மாதிரி ஓவர்லோட் ஏற்றிக்கொண்டு போகிறார்கள்; அப்படி ஏற்றிக்கொண்டு போகும்பொழுது, வழியில் ஏறியவர் 'எனக்கு காலை 5 மணிக்குள் மெட்ராஸ் போகவேண்டும், வேகமாக விடு' என் றெல்லாம் சொல்வதால், மெட்ராஸுக்கு ரொம்ப வேகமாக ஓட்டுகிறார்கள். அதனால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் தவிர்க்க வேண்டும்.

டி. ஏ. ரூ. 1–25-லிருந்து ரூ. 1–30-க்கு உயர்த்தியிருக்கிறார்கள். அது போதாது. ரூ. 2 வரைக்கும் கொடுத்தால் அது நலமாக இருக்கும். சாதாரணமாக எல்லா டிரைவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் பாட்டா மைலுக்கு 1½ பைசா என்று ஒரு விதி கொண்டுவந்துவிட்டால் மிகவும் உதவியாக இருக்கும். சம்பளம்பற்றி ஒரு ஜி. ஓ. முன்னால் வந்திருக் கிறது என்று நினைக்கிறேன், அதாவது குறைந்த பட்சம் ரூ. 90 கொடுக்கவேண்டும் என்று ஜி. ஓ. இருக்கிறது. அதையாவது எல்லா இடங்களிலும், பிரைவேட் ஸ்தாபனங்களிலும் கூட அமுலுக்குக் கொண்டு வந்து, ஒரு ஒழுங்கான முறைக்குக் கொண்டுவந்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஜீப் பஸ்களை நிறைய விடவேண்டும். கிராமப்புறங்களில் பொருளாதாரம் முன்னேறவேண்டுமானால் போக்குவரத்து வசதியைப் பெருக்கவேண்டும். ஆங்காங்கு இருக்கிற ரோடுகளிலெல்லாம் ஜீப் பஸ்களை விட்டு, வியாபாரம் நடக்கக்கூடிய சென்டர்களுக்கு கிராமப்புறத்து ஜனங்கள் வருவதற்கும், போவதற்கும் வசதி செய்து கொடுக்கவேண்டும். அதனால் மக்கள் ஆதாயம் அடைவார்கள். சில இடங்களில் பஞ்சாயத்து பகுதிகளில் ரோடு மோசமாக இருக்கலாம். அங்கெல்லாம் ஜீப் பஸ்கள் விட்டு கிராம மக்களுக்கு உதவ வேண்டும். அப்பொழுதுதான் கிராமப்புறத்தில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட முடியும்.

டாக்ஸ் எவேஷன் ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது. இரண்டு இன்வாய்ஸ் போடக்கூடிய முறையெல்லாம் இருக்கிறது. தேர்தல் தகராறை வைத்துக் கொண்டு அவர்கள் ஏற்ற முடியாது என்று கூட சொல்கிறார்கள். நிலைமை அந்த அளவுக்கு இருக்கிறது. தேர்தல் சண்டையை வைத்துக்கொண்டு சில பஸ்களில் உள்ளே ஏறினால் இடம் கிடையாது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இதையெல்லாம்பற்றி ஆபீஸர்களுக்கு கம்ப்ளெண்டு கொடுத்திருக்கிறேன். அதற்கெல்லாம் எப்பொழுது நிவாரணம் கிடைக்கப் போகிறதோ? ஏன் இதையெல்லாம் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், இம்மாதிரி சிறு சிறு பிரச்னைகளில நல்லவிதத்தில் கவனம் செலுத்தி, சரியான முறையில் அவைகளைத் தீர்த்து வைக்க வேண்டும்.

ராஜபாளையத்தைப்பற்றி சில வார்த்தைகள். ராயனூதபுரத்தில் ஜனத்தொகை ஜாஸ்தி. 82,000, 85,000 ஜனத்தொகை இருக்கிறது. அங்குதான் மில் இண்டஸ்ட்ரீஸ் நிறைய இருக்கிறது. ஸ்பின்னிங மில்ஸ். வீவிங் மில்ஸ், டெக்ஸ்டைல மில்ஸ் நிறைய இருக்கின்றன. அபபேர்ப்பட்ட இடத்திலிருந்து மதுரை, செங்கோட்டை வழியில் அரசாங்க பஸ்கள் இல்லை. அவையெல்லாம் வியாபாரம் நடக்கும் இடங்கள். போவதற்கும், வருவதற்கும். ஏழை ஜனங்களுக்கும் வியாபாரிகளுக்கும் நல்லவிதமாக அனுகூலமாக இருக்கவேண்டுமென்றால் குறைந்தது 2, 3 பஸ்கள் விட்டு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஃபிளையிங் ஸ்குவாட் மூலம் கண்காணிப்பை இன்னும் தீவிரமாக்க வேண்டும். இப்பொழுது ஓவர் லோட் நிறைய இருக்கிறது. ஓவர் ஸ்பீட் இருக்கிறது. டாக்ஸ் எவேஷன் இருக்கிறது. இனவாய்ஸை மாற்றி இதில போட்டு, அதில் போட்டு, எப்படியெல்லாமோ செய்கிறாகள். இம்மாதிரி நிறைய நடககின்றன. இதையெல்லாம் ரொம்பவும் தீவிரமாக கணகாணிபப தற்கு ப்ளையிங் ஸ்குவாட் ஸ்ட்ரெங்கதை கூட்டி செக பண்ண வேண்டும். தீவிர கண்காணிப்பின மூலம் அரசாங்கத்திற்கு அதிகமாக இன்கம் கொண்டு வந்து, அதனால் வரி போடுவதைககூட நிறுத்தி, மக்களுக்கு க்ஷேமத்தை உண்டாககவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, I rise on a point of order. I wanted to raise it even while the hon. Member was speaking but I did not want to disturb the trend of his thought or speech. Sir, it is the usual Parliamentary practice to refer to a Minister by the portfolio which he holds and not by his name. In fact, I know the Hon. Chief Minister very intimately but that does not mean that I should mention his name on the floor of the House. I refer to him as the Chief Minister. So also the hon. Member should refer to him as the Minister for Transport and not by the name, Karunanidhi or Annadurai. It is not in good taste to say so at least on the floor of the House. When we go outside or chat with them, we can call them by their names but not on the floor of the House. Likewise, Hon. Ministers should refer to the Members by the constituencies from which they have been elected and for instance, they should not refer to me as " Vinayakam ". That is the British Parliamentary practice. I want a ruling from the Chair.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பெயர்கூடச் சொல்லலாம். அப்படிச் செல்லும்பொழுது, 'திரு' என்றாவது 'மாண்புமிகு' என்றாவது முன்னால் போட்டுவிட்டால்கூட அது தவறாகத் தெரியாது.





**திரு. ஏ. அ. சுப்பராஜா:** திரு. கே. விநாயகம் அவர்கள் சில நடை முறைகளைப்பற்றிச் சொன்னார்கள். முதலில் ரெஃபர் பண்ணுவதற் காகத்தான் பெயரைச் சொனனேன். அப்படி ரெஃபர் பண்ணும்பொழுது கூட அமைச்சர் அவர்கள் என்று முதலில் சொன்னேன். அமைசசர் என்றால் 2, 3 அமைச்சர்கள் இருப்பதால், அப்படிப் பெயரைச் சொன்னேன். இப்பொழுது திரு. என்று சொல்கிறேன். அதனால் திருத்தணி உறுப்பினர் அவர்கள் கோபப்படவேண்டாம்.

***திரு. ஆலடி அருணா:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து எனது கருத்துக்களை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பொதுப்பணித் துறை நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது. வளர்ந்து வருகிற சமுதாயத்தில வாணிபத்தைப் பெருக்குவதற்கும், தொடர்புகளை அதிகரிப்பதற்கும், வசதிகளைப் பெருக்குவதற்கும் போக்குவரத்து மகத்தான சாதனமாக இருக்கிறது என்பதில் இரண்டுபட்ட கருத்துக் களுக்கு இம் மாமன்றத்தில் இடம் இருக்காது என்று நான் நம்புகிறேன். போக்குவரததை தனியார் நடத்துவதற்கும், அரசு பொறுப்பேற்று நடத்து வதறகும அடிப்படையில் கொள்கை வித்தியாசம் இருப்பதை அனைவரும் அறிந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். தனியார் நடத்துகிற சந்தர்ப்பத்தில் வாணிப நோக்கத்தில் ஆதாயத்தை முக்கியமாகக் கருதி அந்தத் தொழிலை மேற்கொள்கிறார்கள். அரசு போக்குவரத்தை மேற்கொள்கிற நேரத்தில், வசதிகளைப் பெருக்குவதற்கும், தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், தேவையான நிதியில் தேயவு ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் மக்களுடைய நலனையே முக்கியமாகக் கருதி அரசு பொறுப்பேற்று நடத்திக்கொண்டு வருகிறது. இந்த நியாயங்களை உணர்ந்துதான் இரண்டாவது உலகப் போருக்குப்பின் அமைக்கப்பட்ட குழு 1944-ல் இந்தப் போக்குவரத்துத் துறையை தேசியமயமாக்க வேண்டும என்று பரிந்துரை நல்கியது. நேற்று கேள்வி நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் போக்குவரததை நாட்டுடமை யாக்கியது காங்கிரஸ் ஆட்சிதான், அந்தப் பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்து சேராது என்ற கருத்துப்படச் சொன்னார். ஆனால், பஸ் போக்குவரத்துத் துறையை தேசியமயமாக்கவேண்டும் என்ற கொள்கை 1944-ல் பரிந்துரை செய்யப்பட்டு, 1946 டிசம்பர் மாதத்தில் அந்தக் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டு, 1947-ம் ஆண்டுக்குப்பின் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபொழுது அது அமுல் செய்யப்பட்டது. எனவே, இந்தக் கொள்கை கருவாகி, உருவாகி வந்தது காங்கிரஸ் ஆட்சி பீடத்திற்கு வருவதற்கு முன்பு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதை நடைமுறையில் ஏற்றுக்கொண்ட காங்கிரஸ் கட்சி கடந்த 20 ஆண்டு காலத்தில் அந்தக் கொள்கையை சரியாக நிறைவேற்றியிருக்கிறதா? தீவிரம் காட்டி அந்தக் கொள்கையை அமுல் செய்ததா? அந்தக் கொள்கையில் ஆர்வம் காட்டியிருக்கிறதா ? என்றால் இல்லை. எனவே கடந்த 20 ஆண்டு வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், முன்னால் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த கட்சி முழுக்க முழுக்க பஸ் முதலாளிகளின் தாழ்வாரத்தில் தங்களை வளர்த்துக்கொள்ள அந்தக் கொள்கையை பயன்படுத்தியதே தவிர, அந்தக் கொள்கையில் தீவிரம் காட்டவில்லை. 1948-ல் சென்னை நகரத்தில் போக்குவரத்து நாட்டுடமையாக்கப்பட்டது. ஆனால், 1948-க்குப் பிறகு 1949, 1950, 1951 இந்த ஆண்டுகளில் நாட்டுடமையாக்குகின்ற கொள்கையை காங்கிரஸ் வலியுறுத்தவில்லை. ஆனால், 1956-ல் குமரி மாவட்டம் சென்னையோடு இணைந்ததன் காரணமாக, அரசியல் நிர்ப் பந்தம் காரணமாக, ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக, குமரி மாவட்டப் பேருந்துகளை அரசே ஏற்கும் நிலை ஏற்பட்டது. காங்கிரஸ் ஆட்சியில் இரண்டாவது தேசிய உடைமையாக்கும் கட்டம் 1956-ல வந்தது. மூன்றாவது கட்டம் 1959-ல் சென்னை மாநிலத்திலிருந்து டெங்களூருக்கு அரசினர்

பேருந்து விடத் தொடங்கினார்கள். இவற்றை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், தேசியமயமாக்கும் கொள்கையை காங்கிரஸ் கட்சி படிப்படியாக நிறைவேற்றுவது என்பதை ஒப்புக்கொள்ளவில்லை. மாறாக அந்தக் கொள்கையை தூங்கித் தூங்கி நிறைவேற்றிக்கொண்டிருந்தது. அதை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டாமல், அதை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டாமல் இருந்து வந்திருக்கிறார்கள். இன்று பொறுப்பேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம், பஸ் முதலாளிகளிடமிருந்து, நாட்டிலே மாற்றத்தைக் காணவேண்டும் என்றும், அவர்களுடைய ஆதிக்கத்திலிருந்து பொருளாதார விடுதலை காணவேண்டும் என்றும், பொறுப்பேற்ற பின்பு நாட்டுடைமைக் கொள்கையில் தீவிரம் காட்டத் தொடங்கியது. ஆனால், காங்கிரஸ் கட்சியோ அவர்கள் ஆளுகையில் எந்தக் கொள்கை வலியுறுத்தப்பட்டதோ, எது தேசியமயமாக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டதோ, அவற்றை, காங்கிரஸ் ஆட்சியின்போது இருந்த குழுவின் பரிந்துரைகளையும் செயல்படுத்தத் தவறியிருக்கிறார்கள், மறந்திருக்கிறார்கள், மறுத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றையதினம் குமரி மாவட்ட பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் அளவிற்கு திட்டங்களை, சட்டங்களை உருவாக்கி வைத்திருக்கிறோம் என்றாலும், அந்த லட்சியத்தை 1964–65-ல் பணியாற்றிய மதிப்பீட்டுக்குழு தன்னுடைய பரிந்துரையில் தெளிவுபடுத்தியிருக்கிறது.

"The Committee therefore recommends to the Government that all the routes in Kanyakumari district should be nationalised and taken over by the Madras State Transport Department as early as possible."

என்று பரிந்துரை கொடுக்கப்பட்டிருக்கிறது. சோஷலிஸம் பேசுகிற இந்த காங்கிரஸ் கட்சி கடந்த காலத்தில் இந்தப் பரிந்துரையைப் பின்பற்றவில்லை.

"The Committee strongly recommends that routes which exceed 75 miles should also be nationalised and Express Serices thereon should be operated by the Madras State Transport Department."

என்று 75 மைல்களுக்குமேல் ஓடும் பஸ் வழித்தடங்களை நாட்டுடைமையாக்கவேண்டும் என்று 1964–லேயே குறிப்பிட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் நான் மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணம், காங்கிரஸ் கட்சிக்கு சோஷலிஸத்தில் நம்பிக்கை கிடையாது; நாட்டுடைமையில் நம்பிக்கை கிடையாது; வார்த்தை ஜாலங்களைக் காட்டி நாட்டிலே மக்களை ஏமாற்றி அரசியலை நடத்துவதிலேயே காங்கிரஸ் கட்சி அக்கறை காட்டி வந்திருக்கிறது. அதைத்தான் இவைகளெல்லாம் குறிப்பிடுகிறது. கழகம் அரசுப் பொறுப்பை ஏற்றதன்பிறகு நாட்டுடைமையாக்குவதில் தீவிரம் காட்டி பஸ் வழித்தடங்களை தேசியமயமாக்குவதிலும் புதிய மார்க்கங்களில் அரசினர் பேருந்துகளை விடுவதிலும் அக்கறை காட்டியுள்ளது. ஆண்டுக்கு 10 சதவிகித பேருந்துகளை சர்க்கார் அதிகரிக்க வேண்டும் என்று அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் ஆட்சி காலத்தில் 4 அல்லது 4·5 சதவிகிதம் தான் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 8 அல்லது 9 சதவிகிதம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அதிகமான பஸ்களையும், மேலும் அதிகமான பஸ்களையும் நாட்டுடைமையாக்கத் திட்டங்களை சர்க்கார் இன்றைக்கு ஏற்றிருக்கிறது. பல தொல்லைகளுக்கும் மத்தியில், பல சிரமங்களுக்கும் மத்தியில், பல்வேறு எதிர்ப்புகளுக்கும் மத்தியில், இத்தகைய சாதனைகளை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் புரிந்திருக்கிறார்கள் என்பதை நாமும், நல்லோரும், மற்றோரும் ஏற்பர்.



கொடுக்கப்பட்ட காலம் குறுகியது என்பதால் சிலவற்றை மட்டும் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். இந்த நிர்வாகத்தில் புதிய செலவினங்கள் வந்திருக்கின்றன. அகவிலைப்படி உயர்வு, நகரீட்டுப்படி, போன்ற வகைகளில் புதிய செலவினங்கள் வந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் சந்தித்தும், கடந்த காலத்திலிருந்தது போன்ற இழப்பு ஏற்படாமல், நட்டம் ஏற்படாத வகையில் இந்த ஆண்டு அரசு நிலைமையை உருவாக்கியிருப்பதற்கு உண்மையிலேயே பாராட்டுகிறேன்.

ஒரே ஒரு பிரச்சினையைப் பற்றி மட்டும் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றையதினம் சர்க்கார் பேருந்துகள் வெறும் பேருந்துகளாக மட்டும் இல்லாமல் நடமாடும் குறள் மன்றங்களாக திருக்குறளையும், திருவள்ளுவர் திருவுருவத்தையும் தாங்கிச் செல்லுகின்றன. தமிழின் மீது உள்ள ஆர்வம், தமிழின் மீது உள்ள பற்றின் காரணமாக இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள், நம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள். அதைக் கூட எதிர் வரிசையில் இருக்கும் காங்கிரஸ் நண்பர்கள் 'போக்குவரத்து' என்று இருக்கிறது, 'போக்கு, வரத்து'' என்று பிரித்துச் சொல்லி, யாரோ ஒரு பெண் பேருந்தில் ஏறி, டிக்கட்டு வாங்கி, அது போவதற்கும் வருதற்குமா என்று கேட்டதாக பொறுப்பற்றமுறையில் முன்னால் பொறுப்பிலிருந்த ஒருவர் சொல்கிறார்; இன்னும் குறிப்பாக ஒரு நண்பர் விரைவு வண்டி என்பதை விறகு வண்டி என்று சொன்னதாகக்கூடச் சொல்லப்பட்டது. அவர்களுக்கு தமிழ் மீது எவ்வளவு பற்று இருக்கிறது என்பதைமட்டும் இது காட்டவில்லை, எவ்வளவு தூரம் அவர்களுடைய தரம் தலைகீழாகப் போய்விட்டது என்பதையும் காட்டுகிறது என்பதைக் கூறி, பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் பேசுவதற்கு 7 உறுப்பினர்கள் பெயர் கொடுத்தவர்கள் இருக்கிறார்கள். ஆகவே கொடுக்கும் நேரத்திற்கு மேல் எடுத்துக் கொள்ளவேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசக் கிடைத்த வாய்ப்பிற்கு நன்றி. பஸ்களையெல்லாம் தேசியமயமாக்குவது என்பது ஏற்கனவே காங்கிரஸ் கட்சியின் சோஷலிஸப் பாணி சமுதாயம் என்கிற கொள்கை அடிப்படையில் ஆக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது அது இன்னும் சற்று தீவிரமாக்கப்பட்டிருக்கிறது. பஸ்கள் அத்தனையையும் தேசியமயமாக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு தீவிரமாக நடத்தி வருகிறது. உண்மையிலேயே அதைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் அதைப்பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே இருந்த அரசு நட்டத்திலே நடத்தியிருக்கிறது. இப்பொழுது லாபம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிச் சொல்லப்பட்டாலும் கூட, உண்மையிலேயே அத்தகைய லாபம் வராது என்பதுதான் கணக்கைக் கூர்ந்து பார்த்தால் தெரிகிறது. சாதாரணமாக தேசியமயமாக்கினால், அதனால், அரசுக்கு ஆதாயம் இருக்க வேண்டும். மக்களுக்கு வாய்ப்பு, வசதிகள் அதிகமாக வேண்டும். தொழிலாளிகளுக்கு நியாயமான போனஸ், சம்பள உயர்வு போன்றவைகள் கிடைக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு உள்ள நிலைமை என்ன என்பதையும் சிந்தித்துப்பார்க்க வேண்டும். தனியார் துறையைவிட நாம் கொடுக்கும் சம்பளம், படி இவைகள் குறைவாகத்தான் இருக்கிறது. மக்களுக்கும் கட்டணம் உயர்வு, வாய்ப்பு வசதிகளும் குறைவாக இருக்கிறது. தனியார் பஸ்களில் சாமான்களைப் போட்டுக்கொண்டு போகலாம். ஆனால் ஸ்டேட் பஸ்ஸிலே கட்டணம் கட்டவேண்டும். பஸ்ஸில் ஏற்ற தனி ஆள்களும் வேண்டும். நான் இப்படி வருணிப்பது நானே அனுபவித்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன். அதோடு லாபமும் இல்லை என்று இந்தக் கணக்கிலிருந்து தெரிகிறது. அவற்றில் சிலவற்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, இங்கே கணக்கில் ஒவ்வொரு ஆண்டும் ஏற்பட்ட லாப நஷ்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1959-60-லிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. 1960 முதல் 1964 வரை கொடுக்கப்பட்ட கணக்கில் தேய்மானத்திற்காக 17% ஒதுக்கப்பட்டிருக்கிறது ஆனால், 1964-65-ல் கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டது. அதன் விளைவாக அது 15% என்று குறைக்கப்பட்டது. மேலும் பின்னால் நஷ்டம் ஏற்பட்டதன் காரணமாக அது இன்னும் குறைக்கப்பட்டு 10% என்று ஆக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த வகையில் 17% என்றே வைத்திருந்தால் நஷ்டம் இன்னும் சற்று அதிகமாகவே இருந்திருக்கும். ரூ. 50 லட்சம் அல்லது ஒரு கோடி வரை போயிருக்கும். ஆகவே, லாபமும் குறைவு, சார்ஜ் அதிகம், மக்களுக்கு கிடைக்கும் புதிய வாய்ப்பு, வசதி இல்லை என்பதையெல்லாம் நாம் அறிகிறோம். என்னுடைய கணக்கு தப்போ தவறோ, அன்றொரு நாள் அமைச்சர் நன்றாக விளக்கமாகச் சொன்னார்கள். பம்பாயிலே தேசியமாக்கியதில் நட்டம் கோடிக்கணக்கில் ஏற்பட்டிருக்கிறது. நட்டம் குறையவில்லை. ஆந்திராவில் ஏற்பட்ட நட்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. தேசியவுடமையிலிருந்து திரும்பவும் சில பகுதிகள் மாற்றப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் எங்குமே லாபமில்லாமல் இருக்கும் போது ஏன் இதைத் தொடர்ந்து செய்யவேண்டும் என்பதுதான் புரியவில்லை. அதிலும் நகரத்தில் நடக்கும் பஸ்களுக்கு நஷ்டம் தவிர்க்க முடியாது என்று ஏற்கனவே பல முறை சொல்லியிருக்கிறார்கள். தனியார் நடத்தும் பஸ் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டாலும், இன்கம்-டாக்ஸ் வாங்காமல் விடுகிறார்களா? நிச்சயமாக லாபம் இல்லாவிட்டால் ஓட்டுவார்களா? ஓட்டமாட்டார்கள், விட்டுவிடுவார்கள் என்கிறார்கள். அவர்களுக்கு லாபம் வருகிறது என்று சொல்லும் போது, நாம் நஷ்டப்படும் காரணம் என்ன? நான் ஏதோ முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு, சுதந்திராக் கட்சியில் பேசுகிறேன் என்று நினைக்கவேண்டாம். எங்களுடைய கொள்கை உண்மையிலேயே "ஹெல்தி காம்பெடிஷன்" நேர்மையான போட்டி மனப்பான்மை இருக்கவேண்டும், குறைந்த செலவில் ஓட்ட வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும், மக்களுடைய அக்கறை, திறமை, ஊக்கம் இவையெல்லாம் நல்ல முறையில் நாட்டுக்குப் பயன்படுத்தப்படவேண்டும், மக்களுக்கு வாய்ப்புக்களும், வசதிகளும் பெருக வேண்டும் என்பதுதான்,
பிற்பகல் 1-00 வேறொன்றுமில்லை. ஆகவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆட்சியாளர்கள், நட்டம் வரும் என்று நிச்சயமாகத் தெரிந்தும் அதைத் திரும்பத் திரும்பச் செய்வது வேண்டாத காரியமாகும்.

சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்

என்பது வள்ளுவர் வாக்கு. நாம் ஒரு திட்டம் போடுகிறோம். அது நிச்சயமாக நடப்பதில்லை என்றால், அதை மாற்றிக்கொள்ளுவதுதான் நல்லதே தவிர மேலும் மேலும் வலிந்து அதையே மேற்கொள்ளுவது மிகவும் தவறான காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அக்கறையும், திறமையும் உள்ளவர்களையெல்லாம் விடுத்து, அக்கறை இல்லாதவர்களை வைத்து வேலை வாங்குவதனால் பலவிதமான தொல்லைகள், பலவிதமான சங்கடங்கள் உண்டாகின்றன. உதாரணமாக, இரும்பு உருக்காலை போன்றவற்றை எடுத்துக்கொண்டாலும் கூட, டாடா ஸ்டீல் கம்பெனி லாபகரமாக ஓடும்போது, பிலாய், துர்க்காபூர், ரூர்கேலா போன்ற ஆலைகள் நட்டத்தில் வேலை செய்கின்றன. தனிப்பட்டவர்கள் பல ஸ்தாபனங்களைத் திறம்பட நடத்தி அவர்களும் சம்பாதித்து, அரசாங்கத்திற்கும் வரிகள் மூலம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை கொடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள். அப்படிப் பல துறைகளில் பார்க்கும்போது, மிகக் கஷ்டமான நிலைமையில் அரசாங்கம் தன்னுடைய தொழில்களை நட்டத்தில் நடத்துவதன் காரணமாக, அதை ஈடுகட்டும் வகையில் மக்களுக்கு வரி போட்டுத்தான் தீரவேண்டும். உண்மையிலேயே அக்கறையும், திறமையும் உள்ளவர்கள் ஒழுங்காக வேலை செய்யும் வண்ணம் அவர்களை ஊக்குவித்து நல்ல முறையில் கண்காணிக்கும் ஆட்சியில்தான் பொது மக்களுக்கு வாய்ப்பும் வசதியும், வரிக் குறைப்பும் ஏற்படும். ஆகையால், நாம் ஏதோ



செய்கிறோம் என்று பெருமைக்காகச் செய்துகொண்டு, நட்டத்தை உண்டாக்கி, அதை ஈடுகட்டுவதற்காக வரி போடுவதென்றால், அது ஒழுங்கான முறையில் அமைவதாக இருக்காது. கம்பர், நாட்டைக் காப்பாற்றுகிற முறையை வருணித்திருக்கிறார். 'வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர் செய்யெனக் காத்தினிது அரசு செய்கின்றான் தசரதன்' என்று கூறுகிறார். அதுபோல், சிறிய அளவில் ஒருவன் தனக்குரிய ஒன்றிரண்டு, நான்கு பஸ்களை வைத்துக்கொண்டு சிக்கனமாகச் செய்தால் லாபகரமாக நடத்துவான். நாட்டுக்கு லாபம், அவர்களிடமிருந்து நிரம்ப வரி வாங்கலாம், வருமான வரி மூலம் அரசாங்கத்திற்கும் வருவாய் கிடைக்கும். அது நாட்டுக்குப் பிரயோசனப்படும். போட்டி மனப்பான்மையைக் கெடுக்காத நிலையில் அரசு நன்றாகக் கண்காணித்து நாடு நல்ல முறையில் நலம்பெற ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பல இடங்களில் பஸ்களில் கட்டணம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. முன்பெல்லாம் குறைவாக இருந்தது. இப்பொழுது பல பேர்கள் சொன்னார்கள். ஆளும் கட்சியில் உள்ளவர்களே கூடச் சொல்லுகிறார்கள். ஆகையால் அதைப்பற்றி நான் அதிகம் கூறவேண்டாம் என்று விட்டுவிடுகிறேன்.

மற்றும் பல கருத்துக்களைப் பலரும் தெரிவித்துவிட்ட காரணத்தால், நான் தெரிவித்த கருத்துக்களை மாத்திரம் வலியுறுத்தி, இத்துடன் என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

***திரு. டி.டி. எஸ். திப்பையா :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பட்டணங்களில் இருக்கக்கூடிய வசதிகள் கிராமப் பகுதிகளில் இல்லை என்பதைக் கவனத்தில் கொண்டு கிராமப் பகுதிகளுக்கு அதிகப்படியாக பஸ்களை விடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய மேட்டுப்பாளையம் தொகுதியில் கிராமப் புறங்களில் அதிகப்படியாக மக்கள் இருப்பதால், விவசாயிகள், தொழிலாளிகள், வியாபாரிகள், பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் அதிகப்படியாக இருப்பதால் அந்தப் பகுதிகளுக்கு பஸ் வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று பஞ்சாயத்துக்களின் மூலமாகவும், பஞ்சாயத்து யூனியன்களின் மூலமாகவும் தீர்மானங்கள் போட்டு, கோரிக்கை அனுப்பியிருந்தும், நீண்ட நாட்களாக அது கவனிக்கப்படாமல் இருக்கிறது. அந்தக் கோரிக்கையைச் சீக்கிரம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அந்தப் பகுதிகளுக்குப் பஸ் வசதிகள் உடனடியாகச் செய்துகொடுக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

டவுன் பஸ்கள் விடப்படுகின்றன. டவுன் பஸ்களில் உட்காருகிறவர்களுக்கும் நின்றுகொண்டு போகிறவர்களுக்கும் இத்தனை பேர்கள்தான் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும் நடைமுறையில் அது கடைப்பிடிக்கப்படுவதில்லை. காலேஜ் செல்லக் கூடிய மாணவ மாணவிகள் பஸ்களில் தொங்கிக்கொண்டும், உட்கார வசதி இல்லாமல் நின்று கொண்டும் மிகவும் அவதிப்பட்டு பயணம் செய்வதைப் பார்க்கிறோம். அந்த நிலை மாற வேண்டும். ஓரளவு ஜனத்தொகை அடிப்படையில் டவுன் பஸ்களை அதிகப்படியாக்குவதோடு, கிராமப் பகுதிகளுக்கும் டவுன் பஸ்களை இன்னும் ஐந்து மைல், பத்து மைல் என்ற அளவுக்கு நீட்டிக்கொடுப்பதற்குண்டான வழிவகையைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பட்டணத்திற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய கிராமங்களில் பட்டணத்தில் வேலை பார்க்கக்கூடியவர்கள் குடி போவதைப் பார்க்கிறோம். காரணம், பட்டணங்களில் வசதிகள் இல்லை. வீடுகள் இல்லை, அரிசி, பருப்பு கிடைக்காத நிலை. அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களெல்லாம் பத்து, பதினைந்து, இருபது மைல்களுக்கு அப்பாலுள்ள இடங்களுக்கு தினசரி வேலைக்குச் சென்று வருகிறவர்களை கிராமங்களில் பார்க்கக்கூடும். அப்படியிருக்கும்போது, கிராம மக்களுக்கு எந்தவிதமான

நன்மையும் இல்லாமல், வெளியிலே பட்டணங்களிலிருந்து வரக்கூடிய வர்கள், பட்டணங்களில் வேலை செய்யக்கூடியவர்கள் இவர்களுக்கு மாத்திரம் அந்த பஸ் வசதி இருக்கிறதே தவிர, மற்ற பொதுமக்களுக்கு எந்தவிதமான ஒரு வசதியும் இல்லை என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில், நீண்ட தூரம் இருக்கக் கூடிய பஸ்களையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொண்ட காரணத்தால், அம்மாதிரி பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்தக் கிராமப் பகுதிகளிலே செல்லக் கூடிய ரூட்களைக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஐந்து பஸ்களுக்கு மேல் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சில நண்பர்கள் வற்புறுத்தினார்கள். ஆனால், என்னைப் பொறுத்த வரையிலும், ஐந்து பஸ்கள் வைத்துக்கொண்டு ஒரு நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த முடியாது என்றுதான் சொல்வேன். பஸ் ரூட் கேட்கும் போது சில நிபந்தனைகளைக் கேட்கிறார்கள். ஒர்க்ஷாப் வசதி இருக்கிறதா, பஸ்களைக் கழுவுவதற்கு தண்ணீர் வசதி இருக்கிறதா என்று இப்படி யெல்லாம் கேட்டு, அதையெல்லாம் செய்துகொடுத்தால்தான் பஸ் ரூட் கொடுக்க முடியும் என்று சொல்லக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். ஐந்து பஸ் வைத்துக்கொண்டு இருப்பவர்கள் அதை விற்றுவிடலாமா என்று யோசிக்கும் நிலை உருவாகி இருக்கிறது. காரணம், கட்டுபடியாவதில்லை. ஐந்து பஸ் வைத்து நிர்வாகம் செய்வது என்பது கடுமையான காரியம். குறைந்தபட்சம் பத்து பஸ்களாவது ஒருவருக்குக் கொடுக்க வழிவகை செய்யவேண்டும். பத்து பஸ்களுக்கு மேலே வைத்திருப்பவர்களை வேண்டு மானால் ஏதாவது செய்துகொள்ளலாமேயொழிய, பத்து பஸ்கள் ஒருவர் வைத்துக்கொள்ள தட்டுத்தடங்கல் இல்லாத நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

இந்த மாநிலத்தில் பேருந்துகளின் பணி எண்ணிக்கை 1967 மார்ச் 31-ம் தேதி வரையில் 861. அதிலே 1968 மார்ச் 31-ம் தேதி எதிர் பார்க்கப்படுவது 1,120. வழித்தடங்களின் எண்ணிக்கை 185. அன்றாடம் பயணம் செய்த பயணிகளின் சராசரி எண்ணிக்கை 850,000. 1968 மார்ச் 31-ம் தேதி எதிர்பார்க்கப்படுவது 9 லட்சம். இந்த விவரங் களெல்லாம் ஆய்வுரையில் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஜனத்தொகை அடிப்படையில் பஸ்களை அதிகப்படுத்தவில்லை என்பது இதிலிருந்து நன்றாகத் தெரிகிறது. ஒவ்வொரு பகுதியிலும் இருக்கும் நிலைமையை உத்தேசித்து, குறிப்பாக கிராமப் பகுதிகளில் இருக்கும் நிலைமையை அனுசரித்து, ஜனத்தொகை அடிப்படையில் பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

*திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக் கையை வரவேற்று, ஆதரித்து, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றையும் நான் கூற ஆசைப்படுகிறேன். புதிய அரசு பொறுப்பேற்று ஏறக்குறைய ஓராண்டு ஆகின்றது. இந்த ஓராண்டுக் காலத்தில் பஸ் வழித்தடங்கள்—குறிப்பாக 75 மைல்களுக்கு அதிகமாக உள்ள பஸ் வழித்தடங்கள் நாட்டுடைமையாக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ் வழித்தடங்களின் மூலம் வருமானம் அதிகரித்திருக்கிறது. அதற்கு வேண்டிய எல்லாவித முயற்சிகளையும் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய நன்முயற்சியினாலும், நடவடிக்கையினாலும் இன்று போக்குவரத்துத் துறையில் வருவாய் அதிகரித்திருக்கிறது. இதை நாம் பாராட்ட வேண்டும். இது போற்றப்பட வேண்டிய செயலாகும்.

அதே நேரத்தில், இந்தப் போக்குவரத்துத் துறையில் செலவு அதிகரித்து இருக்கிறது. அதுவும் குறிப்பாக நான் கூறுவது என்னவென்றால், டிரைவர்—கண்டக்டர்களுக்குச் செலவழிக்காமல், க்ளார்க், ஆபீசர்கள் போன்ற வகையில் அட்மினிஸ்ட்ரேடிவ் எக்ஸ்பென்ஸஸ் என்ற வகையில் செலவு அதிகரித்து இருக்கிறது. 1966–67-ல் ஏறக்குறைய 21 லட்ச ரூபாய்தான் செலவாகிக் கொண்டிருந்தது. 1967–68-ல் நாம் செலவு



செய்யும் தொகை ஏறக்குறைய 43 லட்சம் ரூபாய். பஸ் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. மூன்றில் ஒரு பங்குதான் அதிகரித்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அலுவலகங்களில் வேலை செய்கின்றவர்களுக்காகச் செலவு செய்வது 100 பங்கு அதிகரித்திருக்கிறது. இதை டிரைவர்கள், கண்டக்டர்கள் போன்றவர்களுக்குக் கொடுத்தால்கூட இன்னும் வருவாய் அதிகரிக்க வழி இருக்கிறது. ஆனால் அதற்கு மாறாக க்ளார்க்குகள், ஆபீசர்கள் போன்றவர்களைத்தான் நாம் அதிகமாக நியமித்திருக்கிறோம். இதைக் குறைக்க வேண்டும். அரசாங்கம் பஸ்களை நாட்டுடைமையாக்கும் அதே நேரத்தில் நிர்வாகச் செலவுகளைக் குறைக்க வேண்டும்.

மற்றொன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1967–68-ல் சில்லறைக் கடன் தொகை ஏறக்குறைய 67 லட்சம் ரூபாய் என்று கொடுக்கப்பட்டிருக் கிறது. யார் யாருக்குக் கொடுக்கவேண்டும், இதுவரை ஏன் கொடுக்கப்பட வில்லை என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் டெம்பரரி அட்வான்ஸ் என்ற முறையில் ஏறக்குறைய 40 லட்சம் ரூபாய், சாமான்கள் சப்ளை செய்பவர் களுக்கு முன்பணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாமான்கள் கொடுத்த பிறகுதான் நாம் பணம் கொடுக்கவேண்டும். முன்பணம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். முன்பணமாகக் கொடுத்தால், அவர்கள் நல்ல சாமான்களைக் கொடுப்பதில்லை. மேலும் குறிப்பிட்ட காலத்தில் சாமான்களைக் கொடுப்பதில்லை. நாம் கொடுக்கும் பணத்தை வைத்துக் கொண்டு வேறு உபயோகங்களுக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே, முன்பணம் கொடுக்கும் முறையை தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று; சென்னை போன்ற நகரங்களிலே ஸ்டூடண்ட்ஸ் ஸ்பெஷல் பஸ்கள் விடப்படுகின்றன. இது ஒரு நல்ல ஏற்பாடுதான். சென்னை போன்று கோவை, மதுரை போன்ற பெரிய நகரங்களிலும் ஸ்டூடண்ட்ஸ் பஸ்களை விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தொழிலாளர்களுக்காக தொழிலாளர் ஸ்பெஷல் பஸ்களை தொழிலாளர்கள் மிகுந்திருக்கும் நகரங் களிலும், தொழிற்சாலை புதிதாக ஆரம்பிக்கும் இடங்களிலும் விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாம் இந்த ஆண்டில், அதாவது 1966–67-ல் ஏறக்குறைய 44 லட்சம் ரூபாய்க்கு டயர் ட்யூப்கள் வாங்கியிருக்கிறோம். ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய 50 லட்சம் ரூபாய்க்கு டயர் ட்யூப்கள் வாங்குகிறோம். நாம் இப்படிப் பணத்தைச் செலவழிப்பதற்குப் பதிலாக, 'டயர் ட்யூப் ஃபேக்டரி' ஒன்று ஆரம்பித்தால் நம்முடைய தேவைகளுக்குப் போக மீதியை வெளிமார்க்கெட்டில் விற்க வழிவகை செய்யலாம். மேலும் இத்தொழிற்சாலையை ஆரம்பிப்பதன் மூலமாக பலருக்கு வேலை வாய்ப்பும் அளிக்க முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி டயர் ட்யூப் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்துறையில் அதிகாரிகள், க்ளார்க்குகள் போன்ற வர்களுக்கு ஏற்படும் நிர்வாகச் செலவுகளைப் பெருமளவில் குறைப்பதற்கு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. டி. எஸ். ஆதிமூலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையைப்பற்றி, நம்முடைய பொதுப்பணி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்தப் புத்தகத்தில் நல்ல பல அம்சங்கள் இருப்பதை முறையாகக் கவனித்தேன். முதலாவதாக தனியார் துறையில் வேலையிழந்த 253 பேர்களை ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட்டில் வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டா வதாக லாங் ரூட்டுகளில் ஓடும் துரித பஸ்களில் மைலுக்கு 6 காசாக இருந்ததை 5 காசாகக் குறைத்திருக்கிறார்கள். இதற்காக இந்த மந்திரி சபையையும், முக்கியமாக இந்தத் துறை மந்திரியையும் பாராட்டுகிறேன். மூன்றாவதாக, 'சட்டசபை' பார்லிமெண்ட் மெம்பர்களுக்கு அரசாங்க பஸ் களில் கொஞ்சம் வசதி செய்து தரவேண்டும். 'இனமாக டிக்கெட், ஒரு

சீட்டையாவது மெம்பர்களுக்கு ஒதுக்கிக் கொடுக்க வேண்டும்" என்றெல்லாம் கேட்கலாமென்று நினைத்திருந்தேன். பல உறுப்பினர்களும் அதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துறையை ஏற்றிருக்கும் மந்திரி அவர்கள் தாமாகவே முன்வந்து சட்டசபை, பார்லிமெண்ட் மெம்பர்களுக்கு துரித பஸ்களில் சீட்டுகளை ஒதுக்கிக் கொடுத்திருப்பதைப்பற்றி ரொம்ப சந்தோஷப்படுகிறேன். இந்த மந்திரிசபையில் குறிப்பாக இந்த மந்திரி அவர்கள் அல்லும் பகலும் வேலை செய்துவருகிறார்கள் என்பது மெச்சத்தகுந்த விஷயம்.

மந்திரி என்று சொல்லும்போது, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கு ஒரு மந்திரி, மற்ற பஸ்களுக்கு வேறொரு மந்திரி என்று இருந்து வந்தது. இவர், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட், மற்ற தனியார் பஸ்கள் எல்லாவற்றையும் நிர்வகித்து வருகிறார். அதோடு, பொதுமராமத்து இலாக்காவையும் உள்ளடக்கிய மந்திரியாக இருப்பது சாலச்சிறந்தது. இதை நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, வழக்கமாக சுதந்திரா கட்சி சொல்லும் சங்கதிக்கு வருகிறேன். (சிரிப்பு) எல்லோரும் சிரிக்கிறார்கள். நாம் இருபது வருஷ காலமாக 'நேஷனலைஸ் செய்ய வேண்டும், எல்லாம் தேசியமயமாக்கப்பட வேண்டும்" என்று சொல்லுகிறோம். இந்த 'இசங்கள்" எல்லாம் வந்து இந்த நாடு இப்பொழுது 'டிவால்யுவேஷனில்' வந்து சேர்ந்திருக்கிறது. டெமாக்ரசி என்று சொல்லும் தேசத்தில், நேஷனலைஸ் என்று அளவுக்கு மீறி பேசப்படுவது வேடிக்கையான விஷயம். நான் நான்கு நாட்களுக்கு முன் பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். பார்லிமெண்டில் சர்க்கார் துறையிலுள்ள ஒரு தொழிற்சாலையைப்பற்றி ஒரு மெம்பர் பேசும்பொழுது, தொழிற்சாலையின் மூலம் கிடைத்த லாப நஷ்டம் எவ்வளவு? என்று கேட்டிருக்கிறார். அதற்கு உருக்குத் துறை மந்திரி அவர்கள், '72 கோடி ரூபாய் நஷ்டம்" என்று பதிலளித்திருக்கிறார். அந்தத் தொழிற்சாலைக்குப் போடப்பட்டுள்ள மூலதனம் 950 கோடி ரூபாய். சர்க்கார் துறையில் 950 கோடி ரூபாய் மூலதனம் போட்டு நடைபெறும் தொழிற்சாலையில் நஷ்டம் 72 கோடி ரூபாய் வருகிறது. தனியார் துறையில் ஒருவர் 25 கோடி ரூபாய் மூலதனம் போட்டு ஒரு தொழிலை நடத்தினால் அதன்மூலம் வருஷம் ஒன்றுக்கு 50 கோடி ரூபாய்கூட சம்பாத்தியம் செய்துகொள்கிறார். இப்படியாக சர்க்கார் துறையிலுள்ள தொழிற்சாலையில் மட்டும் நஷ்டம் வரக் காரணம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொதுவாக வரி கொடுக்கும் மக்களுடைய பணம் 'வேஸ்ட்ஃபுல் எக்ஸ்பெண்டிச்சராகப்' போகாமல் பார்த்துக் கொள்வது ஒவ்வொருவருடைய கடமையாகும். ஆனால் நமது நாட்டில் இது தலைகீழ்ப் பாடமாக இருக்கிறது. இன்னும் டிவால்யுவேஷன் வந்து இன்னும் பணம் வேஸ்ட் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'நமது முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவுக்குச் செல்லப் போகிறார்கள்" என்ற செய்தியை நான் பத்திரிகையில் படித்தேன். முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தவுடன்தான் இந்த மந்திரிசபைக்குள்ள ஒரு மயக்கம் தீரும் என்று நினைக்கிறேன். வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று வந்த நமது கல்வியமைச்சர் அவர்கள்கூட அங்கு நடப்பவைகளை எடுத்துச் சொல்லவில்லையே என்று கவலையாக இருக்கிறது. அமெரிக்காவில் டெலிபோன் சிஸ்டம் கூட தனியார் துறையால் நடத்தப்பட்டு, சர்க்காருக்கு நல்ல பெயரை வாங்கித் தருகிறது. டெலிபோன் சிஸ்டம் அமெரிக்காவில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தனியார் துறையில் நடத்துவதால் நாடு சுபிட்சமாக இருக்கிறது, ஒன்றும் கெட்டுவிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு செய்தி என் நினைவிற்கு வருகிறது. ஓர் அமெரிக்கர் சோவியத் நாட்டிற்குப் போயிருந்தாராம். அங்கே ஒரு ஃபாக்டரியைச் சுற்றிப் பார்த்து வரும்போது சில கார்கள் வெளியே நிறுத்தப்பட்டிருந்ததைப் பார்த்து, 'இவைகள் எல்லாம் யாருடைய கார்கள் ?" என்று கேட்டாராம். சோவியத் நாட்டுக்காரர் பதிலளிக்கும்போது, 'இவைகள் எல்லாம் இந்த





ஃபாக்டரியில் வேலைசெய்யும் ஆபீஸ் மானேஜர், பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களுடைய கார்கள் என்று கூறினாராம். பிறகு சோவியத் நாட்டில் இருந்து அவருடைய நண்பர் அமெரிக்க நாட்டுக்கு வந்தாராம். வந்து பார்த்தால் ஃபாக்டரியில் ஏராளமான கார்கள் நின்றன. என்ன இப்படி இருக்கிறது என்று கேட்டதற்கு உங்கள் நாட்டில் மானேஜர்களுக்கு மட்டும்தான் கார்கள் இருக்கும். ஆனால் இங்கே ஒவ்வொரு தொழிலாளரும் கூடக் கார் வைத்திருக்கிறார்கள். அதனால்தான் ஆயிரக்கணக்கில் கார்கள் நிற்கின்றன என்று சொன்னாராம். சோவியத் நாட்டைச் சேர்ந்தவர் பிரமித்துப்போய்விட்டார். எதற்காகச் சொல்கிறேன் என்றால் அமெரிக்க நாட்டைப்போல தனியார் துறையும் வளர்ச்சி அடையவேண்டும், சர்க்கார் துறையும் வளர்ச்சி அடையவேண்டும். அப்போதுதான் ஹெல்தி காம்பெடிஷனில் நல்லமுறையில் போக்குவரத்துத்துறை இயங்கும். நட்டம் தவிர்க்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எல்லோரும் அப்போதுதான் க்ஷேமமாக இருப்பார்கள். அப்படியின்றி சர்க்காரே எல்லாவற்றையும் தலையில் வாரிப் போட்டுக்கொண்டே போனால் நஷ்டம்தான் வரும். இப்போது சென்னை நகரப் போக்குவரத்தின் மூலம் 30 லட்சம் நஷ்டம் என்கிறார்கள். இன்னும் சில வருடங்களில் ஒரு கோடிக்கு மேலே கூட நஷ்டம் போய்விடும்.

இன்னொரு பெரிய ஆபத்து இருக்கிறது. எல்லாவற்றையும் நாட்டுடைமையாக்கிவிட்டால் யாரும் யாரையும் மதிக்கமாட்டார்கள்; டிசிப்ளினே போய்விடும். தாங்கள் சர்க்கார் ஊழியர்கள் என்ற எண்ணம் வந்துவிடும். நாகர்கோவிலில்கூட 28-ஆம்தேதி ஸ்டிரைக் செய்யப்போவதாக சொல்லுகிறார்கள். இப்படி சர்க்காரிடம் முறையிட ஆரம்பித்துவிடுவார்கள். தனியார்களிடம் வேலை செய்கிறபோது சிறுசிறு குறைகளைக் கூட உடனுக்குடன் பேசி தீர்த்துவிட முடிகிறது. தீர்க்க முடியாததற்கு சர்க்காரிடம் பஞ்சாயத்துக்கு வர முடிகிறது. ஒரு தலைவர் ஒரு பழமொழி சொல்லியிருக்கிறார். மங்கை சூதகமானால் கங்கையில் நீராடலாம், கங்கை சூதகமானால் எங்கே போய் நீராடுவது ? அதுபோல நாட்டுடைமை என்று சர்க்காரே எல்லாவற்றையும் தலையில் வாரிப் போட்டுக்கொண்டால் தகராறு என்கிறபோது யாரிடம் பஞ்சாயத்துக்குப் போவது ? ஆகவே இந்த நாட்டுடைமை என்கிற மனப்பான்மையை விட்டுவிடுங்கள். நமது முதல் மந்திரி அவர்கள் அமெரிக்கா போய்வந்தவுடனே மந்திரிசபையின் மனப்பான்மையே மாறிவிடும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** முதல் அமைச்சர் அவர்கள் அமெரிக்கா போய்வந்தவுடன் ரஷ்யாவுக்கும் போக இருக்கிறார்கள். (சிரிப்பு.)

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** அதுவும் நல்லதுதான். கம்பாரிடிவ் ஸ்டடி கிடைக்கும். ஆகவே நாஷணலைஸ் செய்வதை தயவுசெய்து அப்படியே நிறுத்தி வையுங்கள். எடுத்தவை இருந்து விட்டுப் போகட்டும். அதையும் கமர்ஷியல் முறையில் ஒரு கார்ப்பரேஷன் ஏற்படுத்தி நல்ல முறையில் லாபகரமாக நடக்க சட்டம் உண்டுபண்ணுங்கள். இன்றைக்கு சர்க்கார் வரிப்பணம் நஷ்டமாகிறது. சர்க்கார் என்ன பஸ் நடத்துகிறது என்ற எண்ணம் மக்களிடம் ஏற்படுகிறது. அதேசமயம் தொழிலாளர்களும் டி. ஏ. போதவில்லை, போனஸ் கொடுக்கவில்லை என்று அதிருப்தி அடைந்து வருகிறார்கள். ஆகவே தேசியமாக்குவதையே விட்டுவிடுங்கள். திருநெல்வேலியில் இருந்து டி. வி. எஸ். பஸ் நூறு மைல் ஓடுகிறது என்றால் நீங்களும் விடுங்கள் நல்ல காம்பெடிஷன் இருக்கட்டும். வியாபாரத் துறையில் போட்டி மனப்பான்மைதான் இருக்கவேண்டும். Every pie of the taxpayer's money should be spent carefully. இடையிடையே இப்படி இங்கிலீஷில் சொல்வதற்கு எனக்கு ஆசையுண்டு. ஆகவே மன்னித்துக்கொள்ளவேண்டும். மேற்கொண்டு தேசவுடமையாக்குவதை விரிவுபடுத்த வேண்டாம். அதனால் சர்க்காருக்கும் நன்மை இல்லை பொது ஜனங்களுக்கும் நன்மை இல்லை.

சென்னையில் உள்ள பஸ்களில் ஒன்று பார்த்தேன். எல்லோருக்கும் தமிழில் ஆர்வம் உண்டு. அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் என்றால் தமிழ் அவர்களிடமே குடியிருக்கிறது என்று சொல்லலாம்,

தமிழுக்கு திருக்குறளே இருதயம் மாதிரி உள்ளது. ஒவ்வொரு பஸ்ஸிலும் திருக்குறளைப் பொறித்திருக்கிறார்கள். எனக்கு திருக்குறளைப்பற்றி அதிகம் தெரியாது—இருந்தாலும் கடவுள் வாழ்த்து என்று ஒரு அதிகாரம் இருக்கிறது. அந்த திருக்குறள் அதிகாரம் எதுவும் பொறிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எழுதப்பட்டிருக்கிறது.) அப்படியானால் சரி. என் கண்ணில் படவில்லை. தவறாக இந்த மந்திரிசபையை கணக்குப் போட்டுச் சொல்ல வந்தேன். கடவுள் வாழ்த்துப் பகுதி திருக்குறளும் எழுதப்பட்டிருப்பதற்குச் சந்தோஷம்.

மேலும் ரோடு டிரான்ஸ்போர்ட்டைப் பற்றி ஒரு வார்த்தை. கிராமங்களில் அங்கே ரூட் வேண்டும், இங்கே ரூட் வேணடும் என்கிறார்கள். எல்லாம் வோட் காஸ்டிங் தானே, முன்னே இருந்தவர்களும் ரூட்டை விரிவுப்படுத்தினார்கள். நாமும் செய்கிறோம். ஆனால் ஒரு பஸ்ஸுக்கு, 50 சீட் கொண்டதற்கு பத்து வருடத்திற்கு முன் 1,500 ரூபாய் வரி என்றால் இப்போது 4,500 ரூபாய் என்று நினைக்கிறேன். பஸ் முதலாளி பக்கத்தில் இருந்தார் அவரைக் காணோம். அது சரியாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன. இப்படி 3 மடங்கு தீர்வையை கூட்டியிருக்கிறோம். ஒரு ஜில்லாவில் முன்பு 400 பஸ்கள் இருந்தால் இப்போது 1400 பஸ்கள் ஓடுகின்றன. ஆலடி அருணா கேட்கிறாரே என்று நானும் கூட ஆர். டி. ஓ. யிடம் கேட்டு ஒன்றிரண்டு வாங்கினேன். தகராறு வந்தால் சொந்தமாக்கிக்கொள்ள அமைச்சரிடம் வருகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : He is making an imputation against an hon. Member of this House. A Member should not make imputations.

**திரு டி. எஸ். ஆதிமூலம் :** மன்னித்துக்கொள்ளவேண்டும். அவருடைய முயற்சியை—மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்ற எண்ணத்தை எடுத்துக்காட்ட சொன்னேன்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** சுதந்திராக் கட்சியினுடைய உதவித் தலைவர் அவர்களே கூட அப்படி ஆர். டி. ஓ. யிடம் சென்று கேட்டிருக்கக்கூடாது. அவரும் கேட்டதை வைத்துக்கொண்டு கொடுத்திருக்கக்கூடாது. ஆகவே இப்படிப்பட்ட சிக்கலான நிலையை அவையில் கூறுவது சரியானது அல்ல.

**திரு டி. எஸ். ஆதிமூலம் :** ஆலடி அருணா அவர்களும் தவறான முறையில் வாங்கிக்கொள்ளவில்லை. நானும் தவறான முறையில் வாங்கிக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இன்றைக்கு பஸ்கள் நிறைய நான்கு மடங்கு அளவில் பெருகி இருக்கின்றன. 60, 70 லாரிகள் ஓடிக்கொண்டிருந்த ஜில்லாவிலே இன்றைக்கு 600, 700 லாரிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவற்றிறகாக தீர்வை, டாக்ஸ்களும் மூன்று மடங்கு பெருகியிருக்கிறது. இதன் மூலம் மோட்டார் வாகன வருவாய் 15 வருடத்திற்கு முன்னால் 1½ கோடியாக இருந்தது இன்றைக்கு 20 கோடி வருமானமாக வருகிறது. இவ்வளவு வருவதால் நம்முடைய ரோடுகளை, ஹைவேஸ் ரோடுகளையும் கிராமாந்திர ரோடுகளையும் சரிசெய்வதற்கு ஏராளமான தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏராளமான பஸ்கள், லாரிகள் போக்குவரத்து உள்ள ரோடுகளை நல்ல ரோடுகளாகப் போடுவதன் மூலம் ரோடு டிராபிக்கை நல்ல முறையில் அமைக்க வேண்டும். இதற்காக பணம் அதிகமாக ஒதுக்கவேண்டும். இதை அந்த மானியத்தில் நான் பேசவேண்டும் என்று இருந்தாலும் இந்த மானியத்திலே நான் அதை ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். இந்த முறையில் நீங்கள் எப்படியாவது ஏராளமான பணத்தை ஹைவேஸ ரோடுகளுக்காகவும், கிராமாந்திர ரோடுகளுக்காகவும், யூனியன் ரோடுகளுக்காகவும் ஒதுக்கவேண்டும். பஸ் போகக்கூடிய யூனியன் ரோடுகளை நல்ல

பிற்பகல் 1–30



முறையில் சீர்திருத்த திட்டமிடவேண்டும். பஸ்கள் ரிப்பேரானால் ஏராளமான கஷ்ட நஷ்டங்கள் பஸ் முதலாளிகளுக்கும் சர்க்கார் பஸ்களுக்கும் ஏற்படுகிறது. அதையும் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு நேரம் அதிகம் இல்லாத காரணத்தால் நான் இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையின் மீது நான் பேசும் பொழுது தொழிலாளர் சம்பந்தமான பிரசனைகளை அமைச்சர் அவர்கள் அனுதாபத்தோடு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் நோக்கத்திற்காகவோ குழப்பம் விளைவிப்பதற்காகவோ தொழிலாளர்கள் முயற்சி செய்கிறார்கள் என்று பார்க்கலாகாது. அவர்கள் கோரிக்கைகளை அனுதாபத்துடன் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுப் போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் தனியார் துறையிலே இருக்கின்ற பணியாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளத்தை அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். உதாரணமாக சென்னை கார்ப்பரேஷன் குப்பை லாரி டிரைவருக்குச் சம்பளம் 90 ரூபாய் என்று சொன்னால் அரசாங்க பஸ்களை ஓடுகின்ற டிரைவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 80 ரூபாய்தான் இருக்கிறது. இப்படி இருந்தால் அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்தமுடியும்? எட்டு வருட காலமாக எந்தவிதமான மாறுதலும் அடிப்படைச் சம்பளத்திலே இல்லை அதை மாற்றிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம் கேரளாவிற்கு அருகாமையில் இருக்கிறது. கேரளாவில் உள்ள தொழிலாளர்கள் இங்கே வருகிறார்கள், இவர்கள் அங்கே போகிறார்கள். அவர்களுக்கு ஒருவிதமான சம்பளமும், இவர்களுக்கு ஒருவிதமான சம்பளமும் இருக்கிறது; இதைப்பற்றிய குறைகளையெல்லாம் திரு எம். சி. பாலன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்த அடிப்படையான குறையைத் தவிர்க்க வேண்டுமென்று சொல்கிறார்களே தவிர குழப்பம் விளைவிக்கவேண்டுமென்பதால் அல்ல. நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்பொழுது சென்னையைச் சுற்றிச் செல்கின்ற பஸ்கள் நஷ்டத்தில் ஓடினாலும் சமூகத்தில் உள்ளவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய அந்த நஷ்டம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நஷ்டம் ஏற்படுவதால் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யமுடியவில்லை என்று சொல்லாமல் சமூகத்திற்குச் சேவை செய்கிறார்கள், சமூகத்தினரின் தேவையைப் பூர்த்தி செய்கிறார்கள் என்ற நிலையிலேயும் விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன, வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்டது என்ற அடிப்படையிலேயும் அவர்களுடைய சம்பளத்தில் மாறுதல் செய்ய வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். நஷ்டம் 60 லட்சமாக இருந்ததை 37 லட்சமாக ஈடு கட்டியிருக்கிறார்கள். அரைக் காசு கிலோ மீட்டருக்கு உயர்த்தும்பொழுது ஓரளவுக்கு வருமானம் அதிகமாகும் நிலை இருக்கிறது. ஆகவே அதை வைத்துக்கொண்டு இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு உடனடியாக ஒரு இடைக்கால நிவாரணம் அளித்துவிட்டு அவர்களுடைய முழுக் கோரிக்கையையும் பரிசீலனை செய்ய ஒரு குழு அமைக்கவேண்டும். அதற்கான முன்முயற்சிகளை இப்பொழுதே எடுத்துக்கொள்ளவேண்டும், இதை மனிதாபிமானப் பிரச்னையாக கவனிக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கார் போக்குவரத்துத் துறையிலே நஷ்டம் ஏன் ஏற்படுகிறது என்று பார்ப்பதற்காக ஒரு ஆலோசனைக் கமிட்டி நியமிக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டிலே ஒரு பழமொழி சொல்வார்கள், நண்டைச் சுட்டு நரியின் கையில் கொடுத்ததைப்போல் என்று, அப்படியில்லாமல் இதில் பஸ் முதலாளிகளையே போட்டுவிடாமல் அப்புறப்போட்டு தேசியமயமாக்குகின்ற கொள்கைக்கு இழுக்கு உண்டாக்காமல் சில தொழில் நிபுணர்களை மட்டும் போட்டு ஆலோசனை

செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு தனியாக ஒரு குழுவும், தொழிலாளர்களின் பிரச்னைகளைக் கவனிப்பதற்காக தனியாக ஒரு குழுவும் அமைக்கவேண்டும். தனியார் துறையிலிருந்து நாட்டுடைமையாக்கும்பொழுது தொழிலாளர்களை எடுத்துக் கொள்ளுகின்ற முறையில் அவர்களின் திறமை முதலியவற்றைப் பார்த்து எடுத்துக்கொள்வதாக அமைச்சர் கூறினார். ஒரு முதலாளியிடமிருந்து இன்னொரு முதலாளி ஒரு தொழிற்சாலையையோ பஸ் தொழிலையோ வாங்கினால் அந்தத் தொழிலாளர்களையும் அவர்கள் அப்படியே எடுத்துக்கொள்கிறார்கள். அப்படி எடுத்துக்கொள்ளும்போது அரசாங்கப் போக்குவரத்துத் துறையிலே தனியார் துறையிலிருந்து வருகிறவர்களை எடுத்துக்கொள்ளுமாறு செய்யவேண்டும். 10, 20 வருஷம் வேலை செய்த தொழிலாளர்களை திறமை இல்லை என்று காரணம் காட்டி போகச் சொல்லிவிடுவதால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அப்படியில்லாமல் எல்லோரையும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

லாரி விபத்துக்களைத் தடுப்பதிலே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அவற்றிலே கஷ்டங்கள் இருந்தாலும்கூட உயிர்களும் சொத்துக்களும் நஷ்டமடைகின்றன. இரவு நேரங்களில் தனியார் துறையில் ஓடுகின்ற வண்டிகளை சில மணி நேரத்திற்கு நிறுத்திவிட்டு பிறகு செல்கிறார்கள். ஆகவே டிரைவர்கள் தூங்குவதற்கு வசதி செய்து கொடுத்து சட்டத்தில் ஏற்பாடு செய்யவேண்டும். அப்பொழுதுதான் இந்த விபத்துக்களைக் குறைக்கமுடியும். ஆர். டி. ஓ. ஆபீசில் இன்றைக்கு ஊழல்கள் அதிகமாகியிருக்கின்றன. அதை எவ்வாறு சொல்வது என்று எனக்கு வார்த்தைகள் வரவில்லை. அதுவும் தடுக்கப்படவேண்டிய பிரச்னையாக இருக்கிறது. பெர்மிட் இல்லாமல் சில பஸ்கள் ஓடிக்கொண்டிருப்பது என்பது இந்த மாமன்றத்தின் விவாதத்திற்கு வந்துள்ளது நானும் பார்த்தேன். இரவு நேர பஸ் போக்குவரத்தைப்பற்றியும் யோசிக்கவேண்டும். திருநெல்வேலி, கன்னியாகுமரி, திண்டுக்கல், கரூர், மதுரை-லோயர் கேம்ப் போன்ற ரயில் போக்குவரத்து இல்லாத இடங்களிலாவது இரவு நேரத்தில் பஸ் விட்டால் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு கடைசியாக ஒரு கருத்தை மட்டும் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

தேசியமயமாக்குதல் என்ற கொள்கை பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கொள்கையாக ஆகிவிட்டது. அதை எவ்வாறு சரியாக அமல் நடத்த வேண்டும் என்பதுதான் பிரச்னை. அதைக் கைவிடுகின்ற பிரச்னை கிடையாது.

19-வது நூற்றாண்டில் நிலப் பிரபுக்களிடமிருந்து தொழில் முதலாளிகள் சுதந்திரம் கேட்டார்கள். அன்று அவர்களுக்காக வாதாட சுதந்திரா கட்சி இருந்திருந்தால் நம்மால் புரிந்து கொள்ளமுடியும். இன்று முதலாளிகளை பாதுகாக்கும் கோஷம் கேலிக்குரியதாக மாறிவிட்டது. தேசியமயமாக்கும் கொள்கையை விரைவாக, திறமையாக நிறைவேற்றவேண்டும் எனக் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*திரு நா. கிருட்டிணன் : தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவை முன் வைத்துள்ள போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். முதலிலே இந்தத் துறையிலுள்ள பாராட்டுவதற்குரியவற்றைப்பற்றிக் கூற விரும்புகிறேன். இந்தத் துறையிலே அன்றாட வசூலை எடுத்துக்கொண்டால் 1966-67-இல் 1 லட்சத்து 50 ஆயிரம் ஆக இருந்தது. 1967-68-இல் 2 லட்சத்து 50 ஆயிரம் என்று சென்னை கிளையைப் பொறுத்தவரை உயர்ந்திருக்கிறது. நெடுந்தொலை சம்பந்தப்பட்டவரையில் 1966-67-இல் 46,000 ரூபாயாக இருந்தது. 1967-68-இல் 52,000 ஆக உயர்ந்திருக்கிறது. இது பாராட்டுக்குரியது. அதைப்போல் மொத்த வருவாயைப் பொறுத்தமட்டில் 1966-67-ஐ விட





1967-68-ல் 179·58 லட்ச ரூபாய் அதிகமாகக் கிடைத்திருக்கிறது. இதுவும் பாராட்டுக்குரியதுதான். இழப்புக் குறைப்பு என்ற வகையில் 1966-67-ல் 61 லட்சமாக இருந்ததை 37·35 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் 23·65 லட்ச ரூபாய் இழப்பை இந்த அரசு குறைத்திருப்பதற்காக நான் இந்த அமைச்சரவையைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, குரோம்பேட்டையிலும், ராணித் தோட்டத்திலும் இருக்கிற பட்டறைகளில் வண்டி மேற்பகுதிகள் கட்டுவதில் உற்பத்தித் திறன் பெருகியிருக்கிறது. குரோம்பேட்டையில் திங்களுக்கு 50 வண்டிகளுக்கு மேற்பகுதிகள் கட்டுவதற்கும், இராணித் தோட்டத்தில் திங்களுக்கு 15 வண்டிகளுக்கு மேற்பகுதிகள் கட்டுவதற்கும் வழிவகை செய்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

போக்குவரத்து நெரிசலற்ற நேரங்களில், அதாவது பகல் 12 மணி முதல் 3 மணி வரையிலும் நீண்ட இடைவெளியில் வண்டிகளை விடுவது என்று திட்டமிட்டு நஷ்டத்தைக் குறைக்க வழி வகுத்திருப்பது பாராட்டத்தக்கது. நீள்தொலை வண்டிகளில் இருக்கைகளை 35-ல் இருந்து 39 ஆக அதிகப்படுத்தும் முடிவின்படி ஏறத்தாழ 55 சதவிகிதம் வண்டிகளில் மாற்றியமைத்திருப்பதும் பாராட்டுக்குரியதாகும். நாட்டுடைமையாக்குத திட்டத்தின் காரணமாக வேலை இழந்த தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் முறையில் 253 பேர் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தமிழக அரசு தொழிலாளர் நல அரசாக எந்த வகையில் பணியாற்றுகிறது என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் அகவிலைப்படி வீதத்தை உயர்த்திக் கொடுப்பதால் 19 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும், நகர ஈட்டுப்படி கொடுப்பதால் 9 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும், அவற்றைத் தர முன்வந்திருப்பது பாராட்டுதற்குரியது என்று தெரிவித்துக்கொள்கிறேன். பூரிப்பு ஊதியம் என்ற வகையில் ஒவ்வொரு தொழிலாளியும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 90 பெறுவதற்கு வழி செய்திருப்பது பாராட்டுக்குரியது. கைத்தறித் தொழில் நசித்து வரும் இந்நாளில் தொழிலாளர்களுக்குப் பயன்படுத்தும் நிகர அடைகள் கைத்தறித் துணியாகவே பயன்படுத்தவேண்டுமென்று ஏற்பாடு செய்ததற்காக அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அறிஞர் அண்ணா நகரில் நடந்த உலகச் சந்தையில் அனைத்திந்திய உற்பத்தியாளர் சங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்ட போதிலும்கூட மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் அங்கு மூன்று அழகான பேருந்து வண்டிகளை விட்டதன் மூலம் அந்த வண்டிகளுக்கான செலவு போக லாபத்தை காட்டியிருப்பதற்காகப் பாராட்டுகிறேன். தனியார்களுக்குப் புதிய வழித் தடங்களைத் தருவது என்ற வகையில் காஞ்சிபுரம் வழியாக 32 புதிய வழித் தடங்களை இப்போது ஏற்படுத்தித் தந்திருப்பதற்காக என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை நகரக் கிளையைப் பொருத்தவரை 1966-67-ம் ஆண்டில் 62·27 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில்கூட நான் மத்திய அரசைக் குறை கூறுவதற்காக மாண்புமிகு காங்கிரஸ் அங்கத்தினர்கள் மன்னிக்கவேண்டும். மத்திய அரசின் சில நடவடிக்கைகள் காரணமாகத்தான் அந்த இழப்பின் ஒரு பகுதி ஏற்பட்டிருக்கிறது. கடுவிசை டீசல் எண்ணெயின் விலையை உயர்த்தியதால் 4·50 லட்சம் ரூபாய், டயர்கள், டியூப்கள் ஆகியவற்றின் விலையில் ஏற்பட்ட உயர்வின் காரணமாக 7·77 லட்சம் ரூபாய், நாணய மதிப்புக் குறைப்பின் காரணமாக 5·10 லட்சம் ரூபாய் ஆக 17·37 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக நாம் இந்த நஷ்டத்தை ஏற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நகரப் பகுதியில் ஏற்படுகின்ற நஷ்டத்தை ஓரளவு குறைப்பதற்கு நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். பிரயாண சட்டண நிலை மாறுவதற்கு முன்பாக ஏறி இருக்கின்ற பிரயாணிகளுக்கு டிக்கட் கொடுப்பதற்காக, அந்த நிலைக்கு

முன்னுலேயே வண்டியை நிறுத்தி டிக்கட் கொடுக்கிருர்கள். அதற்கு 10 நிமிடம், 15 நிமிடம் ஆளுலும் அவ்வளவு நேரமும் அந்த வலவர்கள் ஓடுகின்ற இயந்திரத்தை நிறுத்தாமல் அப்படியே ஓடுகின்ற நிலையிலேயே வைத்திருக்கிருர்கள். இதனுல் டீசல் எண்ணெய் வீணுகிறது. அந்த முறையில் நடந்துகொள்ளக்கூடாது என்று அந்த வலவர்களுக்குக் கண்டிப்பான ஒரு உத்தரவைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டண விகிதத்தை 1968-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 2½ காசாக மாற்றுகின்ற நேரத்தில் தனியார் துறையில் ஓட்டு பவர்களும் அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்துமாறு கேட்டுகொள்கிறேன். 1968-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் அவ்வாறு கட்டண விகிதத்தை மாற்றுகையில், காஞ்சிபுரத்தில் இருந்து சென்னைக்கு வருகின்ற வெவ்வேறு தூரமுள்ள மூன்று நான்கு வழித் தடங்களில் இரண்டரை காசு கட்டணம் என்று செய்யும்போது அதிலே வித்தியாசமில்லாமல் இருக்கச் செய்வது நலமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

நாட்டுடைமைக் கொள்கை மூலம் தனியார் துறை பாதிக்கப்படாமல் இருக்கிறது என்பதற்கு உதாரணம் காட்ட விரும்புகிறேன். 1966–67ல் 5395-ஆக இருந்த தனியார் துறை பேருந்துகளின் எண்ணிக்கை 1967–68-ல் 5681-ஆக உயர்ந்திருக்கிறது, அதாவது 286 பேருந்துகள் அதிகரித்திருக்கின்றன.

இந்தத் துறையில் இழப்பைக் குறைக்க சில சீர்திருத்தங்களைக் கூற விரும்புகிறேன். அரசுப் பேருந்துகளில் பக்கவாட்டில் வண்டி செல்கின்ற வழி குறித்து பெயர்ப்பலகை வைக்கவேண்டும் ..... (மணி அடிக்கப்பட்டு திரு ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் பேச அழைக்கப் பட்டார்கள்.)

*திரு ஆர், பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் பெயரால் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறுவதற்கு முற்படுகிறேன். முதல் முதலிலே தேசீயமயமாக்கப்பட்ட இந்த ஸ்தாபனத்திலுள்ள கணக்கைப் பற்றி ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவளுக இருக்கிறேன். அமைச்சர் அவர்கள் தந்த ஆய்வுரையிலே நல்ல புள்ளி விவரங்களைத் தந்திருக்கிருர்கள். ஸ்டேட்மெண்ட் மூன்றிலே 1959-60 முதல் 1962-63 வரை இந்த நாட்டுடமையாக்கப்பட்ட பஸ் போக்குவரத்திலே லாபம் காட்டப்பட்டிருக்கிறது. முதல் முதலாக நஷ்டம் 1963-64-ல் ஏற்பட்டிருக்கிறது 1963–64-ல் 28·09 லட்சம் ரூபாய் நஷ்டம். 1964–65-லே 18·24 லட்சம் ரூபாய் நஷ்டம். 1965-66-லே 14·39 லட்சம் ரூபாய் நஷ்டம். 1966-67-லே 61 லட்சம் ரூபாய் நஷ்டம். 1967–68-லே 37·35 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று காட்டப்பட்டிருக்கிறது. இந்த முறையிலே பார்க்கும்போது இந்தத் துறையானது ஆரம்ப காலத்திலே லாபம் காட்டி இருக்கிறது. ஆனல் மெல்ல, மெல்ல விலைவாசிகள் உயர்ந்ததன் காரணமாகவும், வேறு பல காரணங்களினுலும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, நகரத்திலே நடக்கின்ற இந்தப் போக்குவரத்துத் துறையிலேதான் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. அதற்கு உதாரணமாக ஆய்வுரையில் பம்பாயில் நடக்கின்ற ஸ்தாபனத்தையும், கல்கத்தாவில் நடக்கின்ற ஸ்தாபனத்தையும், டெல்லியில் நடக்கின்ற ஸ்தாபனத்தையும் சுட்டிக் காட்டியிருக்கிருர்கள். மேல் நாட்டிலே உள்ள ஸ்தாபனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, குறிப்பாக, அமெரிக்க நாட்டிலே உள்ள ஸ்தாபனங்களில் இந்த மாதிரி சிடி சர்வீஸ்கள் சரியான முறையில் லாபகரமாக இயங்கவில்லை என்பதை நிபுணர்கள் கூறியிருக்கிருர்கள். குறிப்பாக, இதைத்தான் முன்பு பெருமதிப்பிற்குரிய திரு. வெங்கட்ராமன் அவர்கள் பலமுறை இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னுர்கள்.



அன்று எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த மாண்புமிகு எம்.எஸ். மணி போன்றவர்கள் எல்லாம் 'இந்த நிர்வாகம் சரியான முறையில் இயங்க வில்லை' என்றெல்லாம் குற்றம் சாட்டினுர்கள். குறிப்பாக தொழிலாளர்க்குச் சரியான முறையில் ஊக்கம் அளிக்கவில்லை. தினப்படி கொடுக்க வில்லை என்றெல்லாம் சொன்னுர்கள். திரு. எம். எஸ் மணி அவர்கள் நாகர்கோயிலுக்கு ஒரிரு ஆண்டுகளுக்கு முன்னல் விஜயம் செய்தபோது தொழிலாளர்கள் சார்பில் நாகர்கோயிலில் ஆற்றிய சொற்பொழிவை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்று தினப் படியில் 10 காசு உயர்த்தியிருப்பதை பிச்சைக்காசு என்று எள்ளி நகையாடும் வகையில் ஒன்றும் சொல்லவில்லை. அரசாங்கத்திற்கு இன்று இருக்கும் நிதிநிலைமையில் பத்து காசு கொடுத்திருக்கிருர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் குறை காண வேண்டுமென்றோ, இழித்தோ பழித்தோ சொல்லவேண்டுமென்பதற்காகவோ சொல்லவில்லை. ஆனல், பத்து காசு கொடுப்பது போதுமானதா என்பதை நிதானமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சென்னைக்கும் கன்னியாகுமரிக்கும் இடையே உள்ள தாரதம்மியத்தைப் பார்க்கும்போது, புள்ளிவிவர அடிப்படையில் கொடுப்பது போதாது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே இன்று இருக்கிற வாழ்க்கைப்புள்ளி அடிப்படையில் இருக்கிற தினப்படியை இணைக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவோடு, பரிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவளுக இருக்கிறேன். அந்தப் பகுதியில் உள்ள மக்கள் கேரளத்தில் உள்ள நிலைமையோடு தங்களுடைய நிலைமையை ஒப்பிட்டுப்பார்த்து மேற்கோள்களைக் காட்டுவதால் கேரளத்துடன் மறுபடியும் சேர்ந்துவிடவேண்டுமென்று நினைக்கிருர்களோ என்ற நிலையில் எடுத்துக்கொள்ளாமல் நல்லமுறையில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டவளுக இருக்கிறேன். நாகர்கோயிலில் தொழிலாளர் தலைவராக இருக்கக்கூடியவர் திரு எம். சி. பாலன். தொழிலாளர் மத்தியில் செயல் பட்டுக்கொண்டிருக்கிறவர். அன்னருக்குத் தொழிலாளர்களைப் பற்றி நன்ருகத் தெரியும். அங்கிருக்கும் தொழிலாளர்களுக்கும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே, அவர்கள் எப்போதும் பல கோரிக்கைகளை பிரச்சினைகளை, நாம் மக்கள் மன்றத்தில் எடுத்துவைப்பதுபோல் அவர்கள் அதிகாரிகளிடத்தில் எடுத்துக் கூறுவது சாதாரணமாக நியதியாக இருக்கிறது. அதை நாம் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இன்று இருக்கிற நிலைமையில் அதற்கு ஏதாவது ஒரு முடிவு காணவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வருகிற 25-ம் தேதியன்று வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அவர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிருர்கள். அதைக் காங்கிரஸ்காரர்கள் தூண்டிவிட்டார்கள். இடதுசாரி கம்யூனிஸ்டுகள் தூண்டிவிட்டார்கள் என்ற பிரச்சினைக்குள் நுழையாமல் விஷயம் சரிதானு என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அந்தப் பகுதியில் தேசீயமயமாக்கப்பட்ட நிறுவனம் இது ஒன்றுதான் இருக்கிறது. ஆகவே ஸ்ட்ரைக் ஏற்படுமானல் மக்களுக்கு எவ்வளவு இன்னல்கள் ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அங்கு தனியார் துறையில் வழித்தடங்கள் இயங்கவில்லை. ஒன்றிரண்டு பேர்களுக்குத்தான் சிறிய ரூட்கள் இருக்கின்றன. ஆகவே ஒரு ஸ்ட்ரைக் ஏற்படுமானல் அதனல் விபரீதமான விபத்துக்கள் ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அங்கு இரண்டு தொழிலாளர்கள் சங்கம் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு தொழிற் சங்கம் இந்த ஸ்ட்ரைக் வேண்டாம் அதைத் தவிர்ப்பதற்கு நாங்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதற்குத் தயாராயிருக்கிருேம் என்று சொல்லக்கூடிய அளவில் இன்று தொழிலாளர்களிடையே ஒற்றுமை குலைந்த ஒரு மனப்பான்மை அங்கு இருக் இருக்கிறது. ஆகவே இந்தத் தொழிலாளர் பிரச்னையை நல்ல முறையில் அணுகிப் பார்க்கவேண்டும். இதைக் கட்சி மனப்பான்மையோடு பார்க்காமல், இது அந்தப் பகுதி மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை என்று பார்த்து அதற்கு ஒரு தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கூட்டு மாநாடு நடந்ததாகக் கேள்விப்பட்டு மகிழ்ச்சி அடைந்தேன். இன்னும் வேண்டுமானல் அத் தொழிலாளர் தலைவர்களையும், இலாகா

தலைவர் அவர்களையும் லேபர் இலாகா அதிகாரிகளையும், பெரியோர்களையும் அழைத்து அதற்கு ஒரு தீர்வு காண்பது என்பது சாலச் சிறந்ததாக இருக்கும். கன்னியாகுமரியில் இருக்கிற நிறுவனத்தில் ஏன் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்று தொழிலாளர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது 25-ம் தேதி நடந்த ஊர்வலத்தில் காங்கிரஸ்காரர்கள் எழுப்பிய கோஷம் அல்ல என்பதை மாண்புமிகு அங்கத்தினர் திரு பாலன் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்த ஸ்தாபனத்தில் இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த இழப்பைத் தவிர்க்க 1968–69-ல் 8 லட்சம் ரூபாய் லாபம் எதிர்பார்ப்பதாக, சிட்டி சர்வீஸில் எதிர்பார்ப்பதாக கணக்கில் கொடுத்திருப்பதாக எனக்கு முன் பேசிய திரு. காசிராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் 45 லட்சம் ரூபாய் ஆப்பரேஷன் சார்ஜஸ் என்று கூறப்பட்டிருக்கிறது. நம் வண்டிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. ஆனால் இந்த ஆப்பரேஷன் சார்ஜஸ் பெர் மைலேஜ் இன்னும் குறைந்தபாடில்லை. இப்போது ஸ்பேர் பார்ட்ஸை எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது ட்யூப், டயர், எண்ணெய் என்று எதை எடுத்துக்கொண்டாலும் சரி, அப்பொருள்களின் விலை குறைந்தபாடில்லை. இந்நிலையில் இந்த ஆப்பரேஷன் சார்ஜஸில் குறைவு ஏற்படுமா என்பதுபற்றி அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த எட்டு லட்சம் ரூபாய் எப்படி லாபம் வரும் என்பதைப் பற்றியும் அவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்னொரு விஷயம், இந்த ஆய்வுரையில் ஒன்றும் பக்கத்தில்

"Average collections per day as on 31st March 1967 are Rs. 1,50,000."

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது அடுத்தபடியாக,

"Average collections per day as on 31st March 1968 (anticipate) is Rs. 2,50,000."

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

"Average number of passengers carried per day as on 31st March 1967 is 8,50,000 and as on 31st March 1968 (anticipated) is 9,00,000."

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கைப் பார்க்கும்போது, 50,000 பேர்கள் அதிகமாகப் பிரயாணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் கலக்ஷன் ஒரு லட்சம் ரூபாய் அதிகமாக இருக்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சராசரி கணக்கு என்றுதான் போடப்பட்டிருக்கிறது. அதையும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சரிவர பார்த்தால் புரியும். 8,50,000 என்பது 9,00,000 என்றால் 50,000 தானே வித்தியாசம் என்று கேட்கிறார்கள். சென்னையோடு இணைக்கப்பட்ட கிளைகளில் 203 பேருந்துகள் அதிகமாகும்போது, அதையும் சேர்த்துத்தான் வகுக்க வேண்டும். அப்படி வகுக்கும்போது 50,000 என்பது அதிகமாகத் தெரியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** வருவாயையும் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதையும் மதிப்பீடு என்று உணர்ந்துதான் கூறினேன். அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. நாட்டுடைமையாக்குவதில் காங்கிரஸ்காரர்கள் தீங்கு செய்துவிட்டார்கள். முன்பிருந்த அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லை என்று எனக்கு முன் பேசிய ஆளும் கட்சி அங்கத்தினர் திரு. ஆலடி அருணா அவர்கள் குறிப்பிட்டார்கள் விவாதத்துக்குரிய பிரச்சினையாக்க நான் வரவில்லை.

தேசியமயமாக்கப்பட வேண்டுமென்பதில் காங்கிரஸ் கட்சிக்கு எந்தவிதமான மாற்று அபிப்பிராயமும் இல்லை. ஆனால் தேசியமயமாக்கப்பட்டிருக்கிற இந்த ஸ்தாபனத்தின் நிர்வாகம் சரியான முறையில் நடக்கிறதா என்பதை ஆய்ந்து பார்க்க வேண்டும். பொதுப் பணத்தில் விரயம் ஏற்படக்கூடாது. லாப நஷ்டக் கணக்கைப் பார்க்கிறபோது இதை ஒரு



இன்றியமையாத ஸ்தாபனம் என்பதை உணர்ந்து இதை ஒரு பப்ளிக் யூட்டிலிட்டி சர்வீஸ் என்ற முறையில் பார்க்க வேண்டுமே தவிர, லாப நஷ்டத்தை அதிகமாகப் பார்க்கவேண்டிய தேவையில்லை. ஆனால் இழப்பு அதிகமாக ஏற்படக்கூடாது. காங்கிரஸ் ஆட்சியின்போது 61 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்று ஒரு அபாண்டமான பழியைச் சுமத்தினார்கள். உண்மை நிலை என்ன என்று பார்க்க வேண்டும். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. அதில் ஒரு காரணம் டிவால்யுவேஷன். அப்போது ஸ்பேர் பார்ட்ஸ், எண்ணெய் இவற்றின் விலை கூடியது. இது அமைச்சர் அவர்களின் ஆய்வுரையிலேயே எடுத்துக்கூறப்பட்டிருக்கிறது. அப்படி கூறப்பட்டிருந்தும்கூட ஏதோ வேண்டுமென்றே பழி சுமத்தவேண்டுமென்று இந்த மாதிரிச் சொல்வது சரியல்ல. அடுத்தபடியாக, நான் வேறு சில காரியங்களைப்பற்றிக் கூறவேண்டும் என்று நினைக்கிறேன். சென்னை மாநகரில் ஃபார்கோ வெகிகிள்ஸ் வாங்கினதாகவும் அவை சரியான முறையில் இயங்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த வண்டிகள் எந்த அதிகாரியின் பரிந்துரையின்மீது வாங்கப்பட்டது என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஹெவி ட்யூட்டி வெகிக்கிள்ஸைத்தான் சாதாரணமாக இந்தமாதிரி நகரங்களில் போடுவது சிறப்பாகயிருக்கும்.

குறிப்பாக டவுன்களில் அதிகப்படியான ஜன நெரிசல் இருக்கும்போது அடிக்கடி நிறுத்தவேண்டியிருக்கிறது. கியர் சேஞ்ச் செய்யவேண்டியிருப்பதால் 137 மைல்தான் ஓட முடிகிறது என்று இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 147 மைல்கள் என்ற அளவில் ஓட்டினால் இது வயபிள் யூனிட்டாக இயங்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே நாம் என்னென்ன வெகிக்கிள்ஸை வாங்க வேண்டும் என்பதை ஒரு நிபுணர் குழுவிடம் விடவேண்டும். பொதுவாக ஹெவி ட்யூட்டி வெகிக்கிள்ஸ் இருப்பது [illegible] வண்டிகளுக்கானாலும் சரி. . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இப்போது இவ்விலாகாவால் லேலண்ட், பென்ஸ் வண்டிகளைத் தவிர வேறு எந்த வண்டிகளும் வாங்குவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 130 பழைய ஃபார்கோ வண்டிகள் இருக்கின்றன. அவை தீர்ந்த பிறகு அதை வாங்குவதாகயில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறியதற்கு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இலாகா சீரும் சிறப்புமாக அன்னாரின் நிர்வாகத்தில் இருந்துவருவதைக் காணும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது. நான் எதிர்கட்சித் தரப்பில் இருப்பதால், ஃபார்கோ வாங்குவதுபற்றிக் கூறும்போது நான் உள்நோக்கம் ஒன்றும் கற்பிக்கவில்லை என்பதை தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 1966-67-ல் ஆப்பரேஷனல் எஃபிஷியன்ஸி 90 சதவீதம் இருந்தது. 67–68-ல் 87 சதவீதம் ஆகியிருக்கிறது என்று அறிக்கையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த இலாகாவின்கீழ் சாலித் தோட்டத்தில் ஒரு பணிமனை இருக்கிறது, மற்றும் பணிமனை ஒன்று இருக்கிறது. இந்த நிர்வாகத்தில் இருப்பவர்கள் பழுது பார்ப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. குறிப்பாக ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குகிற அளவில் பலவித கஷ்டங்கள் இருக்கின்றன. வேண்டிய நேரத்தில் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. ஒரு வண்டியில் ஒரு பாகம் பழுதுபட்டுவிட்டால் அந்தப் பாகத்தை உடனடியாகப் பொருத்துவதற்குப் போதிய அவகாசம் கிடையாது. தொழிலாளர்களிடையே ஒரு ஆண்டுகள் செயலாற்றியவன் என்ற முறையில் கூறுகிறேன். ஒரு பழுதுபட்ட பாகத்தை பொருத்த ஸ்பேர் பார்ட்ஸ் சில வேளைகளில் அங்குள்ள ஸ்டோர்களில் இல்லை என்ற குறை இருக்கிறது. இந்தக் குறைகள் நீக்கப்படவேண்டும். ஆகவே ஸ்பேர் பார்ட்ஸை பல்க்காக வாங்கிவைத்து உரிய நேரத்தில் அவற்றைக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நாகர்கோவிலில் நடக்கும் சர்வீஸைப் பார்க்கும்போது அங்கு அதிகமான ப்ரேக் டௌன்ஸ் ஏற்படுகின்றன.

பிற்பகல் 2-00 கழிந்த பிப்ரவரி மாதம், 200-க்கும் மேற்பட்ட பிரேக் டௌன்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இம்மாதிரி பிரேக் டௌன்கள் அதிகமாக ஏற்படுவதால் பொதுமக்களிடையே ஒரு விதமான தப்பான அபிப்பிராயம், மனப்பான்மை ஏற்படுகிறது. ஜனங்கள் சொல்வார்கள். ஆட்சியின் கொள்கையால்தான் பஸ்கள் நின்றுவிடுகின்றன என்று. இது சரியல்ல என்று நமக்குத் தெரிந்திருந்தாலும் கூட அதை நல்லமுறையிலே கவனிக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளுகின்றேன்.

தேசிய உடைமையாக்கியிருக்கின்றது நாகர்கோயிலில். இதை நாங்கள் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். இதற்காக நாங்கள் முதலாளிகளுக்காகவும், ஆலை அரசர்களுக்காகவும் வக்காலத்து வாங்கிப் பேச வரவில்லை. தேசியமயமாக்கப்பட்டதால் ஒரு சிலர் இன்னும் வேலையிழந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குத் துரிதமாக வேலை வழங்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்வது என்னுடைய கடமையாகும். குறிப்பாக பயோனியர் நிறுவனத்திலிருந்து வேலையிழந்தவர்கள், எஸ்.ஐ. ஆர். அவுட் ஏஜென்ஸியில் வேலையிழந்தவர்கள் இருக்கிறார்கள். அந்த நபர்களையும் இந்த இலாக்காவின் கீழ் தகுந்த வேலையில் அமர்த்த வேண்டுமென்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நீண்டதூர பஸ்களிலே நமது அமைச்சரவர்கள் மகிழ்ச்சிக்குரிய ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அதாவது 5-வது எண், 6-வது எண்ணுள்ள இரண்டு வீட்டுகளும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பஸ் புறப்படுவதற்கு ஒரு மணி நேரம் வரை ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் என்றார்கள். இவ்வாறு 5-வது எண், 6-வது எண் உள்ள வீட்டுகளை பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கியிருப்பது சிறப்பான காரியம். இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கேரளாவிலே, அவர்கள் நடத்துகின்ற பஸ் டிரான்ஸ்போர்ட்டிலே எங்கு வேண்டுமானாலும் சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வதற்குப் பாஸ் இருக்கிறது. இவ்வாறு செய்வது கஷ்டமாயிருந்தாலும். கார் இல்லாத சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியைச் சுற்றிப் பார்த்து வருவதற்குச் சிறந்ததாக இருக்கும். என்போன்ற உறுப்பினர்கள் அடிக்கடி பிரயாணம் செய்யக்கூடியவர்கள். எனக்குச் சலுகை தரவேண்டுமென்ற முறையில் சொல்லவில்லை. தொகுதியைச் சுற்றிப் பார்த்துவர சிறப்பாக இருக்கும். ஆகவே, அவ்வாறு பாஸ் வழங்க முடியுமா? என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். நீண்டதூர பஸ்களிலே இந்தச் சலுகையை அளிப்பதனால் பெரிய இழப்பு ஏற்படாது என்று கருதுகிறேன். இவ்வாறு செய்வதால் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் நீண்ட நெடுந்தூரம் யாத்திரை செய்வார்கள் என்று நான் கருதவில்லை. நாங்களெல்லாம் பட்டணத்திலே குடியிருக்கின்றவர்கள். ஆனால் எங்கள் தொகுதியிலே கிராமப்புறங்கள் இருக்கின்றன. குறிப்பாக எங்கள் கிராமப்புறங்களுக்குப் போகவேண்டுமானால் இம்மாதிரி வசதி செய்ய வேண்டும். நெரிசலில் ஏறும்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களை அங்கிருக்கின்ற நிர்வாகிகளுக்குத் தெரியாது. அப்பொழுது பஸ்ஸில் ஏறுவதற்குப் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே நாங்கள் பஸ் ஏறிச்செல்வதற்கு ஏதாவது விதிமுறைகள் செய்யமுடியுமா என்பதை அரசாங்கம் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நீண்ட நெடுந்தூர பஸ்கள் பற்றி இப்பொழுது கணக்கு போடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 23,000 நபர்கள் பிரயாணம் செய்தவர்கள் 1967 மார்ச் மாதம் 31-ஆம் தேதி முடிய என்று கணக்கு போடப்பட்டிருக்கிறது. 31 மார்ச், 1968-இலே 23,700 நபர்கள் யாத்திரை செய்யப்போவதாக எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. வருவாயைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது முதல் தரப்பிலே 46,000 ரூபாய் என்றும், 2-வது தரப்பிலே 52,000 ரூபாய் என்றும் கூறப்படுகிறது. அதாவது சுமார் 6,000 ரூபாய் அதிகமாக வருவாய் வருமென எதிர்பார்ப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால்



டிரிப்புகளைப் பார்த்தால் 31 மார்ச் 1967-லே 154 டிரிப்கள் இப்பொழுது திட்டமிடப்பட்டிருப்பது 171 டிரிப். இம்மாதிரி கணக்குப் பார்த்தால் இவ்வளவு பெரிய வருவாய் வரக்கூடுமா என்பதைச் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஒருவேளை நீண்ட தூர பஸ்களிலே அதிக இழப்பு ஏற்படாது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதை எடுத்துக் கூறியிருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே அதையும் பரிசீலனை செய்யவேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன்.

மூலதனச் செலவு பற்றி இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. 1966–67-இல் மூலதனம் 201·15 என்று குறிப்பிட்டிருக்கிறது. 1967–68-இல் 152·98 என்று கூறப்பட்டிருக்கிறது. சுமார் 49 இலட்சம் மூலதனச் செலவிலே குறைவாகக் காணப்படுகிறது. தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கையை உடையவர்கள் இந்த மூலதனச் செலவிலே ஏன் குறைவாக ஒதுக்கவேண்டுமென்பதைத் தயவுசெய்து விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கன்னியாகுமரி நகரத்திலே 75 மைல்களுக்கு மேற்பட்ட தொலைவுள்ள வழித்தடங்களை தேசியமயக் கொள்கையால் அரசாங்கம் கைப்பற்றியிருக்கிறது. இதேபோல் இந்தக் கொள்கையை ஏனைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்தச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்வது என் கடமையாக இருக்கிறது. இம்மாதிரி விஸ்தரித்துக்கொண்டு போவதற்கு இன்னும் அதிகமாக இழப்பு ஏற்படாத முறையில் வழிவகைகளைக் கண்ட பிறகு மற்றப்பகுதிகளை மேற்கொள்ள வேண்டுமென்பது என் துணிச்சலான கருத்து.

தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் சில கூறவேண்டுமென்று கருதுகிறேன். கண்டக்டர்களுக்கும், டிரைவர்களுக்கும் பல ஆண்டுகளுக்கு முன்னதாக சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட்டது. இன்று படிகளெல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அன்று கொடுத்திருக்கும் சம்பள விகிதம் இன்றிருக்கும் வாழ்க்கைத் தரத்திற்கு ஒவ்வாதது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். எனவே அவர்களுக்குக் குறைந்தபட்சம் ஏதாவது சம்பளத்திலே உயர்த்திக் கொடுக்க முடியுமா என்பதை ஒரு நிபுணர் கமிட்டி மூலம் இல்லாவிட்டாலும் அந்த இலாக்கா மேல்மட்ட உத்தியோகஸ்தர்களைக் கொண்டாவது ஆராயவேண்டும். இம்மாதிரி ஊக்கம் அளித்தால் தொழிலாளர்கள் நல்ல முறையில் வேலை செய்வார்கள். சமீபத்தில் மண்டைக்காடு என்ற ஊரில் திருவிழா வந்தது. அந்தத் திருவிழாவிற்கு இந்த இலாக்காவிலிருந்து பல ஸ்பெஷல் பஸ்கள் விட்டார்கள். ஆனால் இந்த நிர்வாகத்திலே ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு ஓவர் டைம் வேஜஸ் கிடைக்கவில்லை என்று பலரும் என்னிடம் வந்து எடுத்துச் சொன்னார்கள். கேரளாவிலே அந்த இலாக்காவிலேயுள்ளவர்களுக்கு ஓவர் டைம் வேஜஸ் கொடுக்கிறார்கள். நமது இலாக்காவிலே செயல்படுபவர்களுக்கு ஓவர் டைம் வேஜஸ் இல்லை என்ற குற்றச்சாட்டை அன்று எடுத்துக் கூறினார்கள். இதற்கு ஏதாவது பரிகாரம் காண முடியுமா என்று ஆராய வேண்டும்.

இப்பொழுது பஸ்ஸிலே பிரயாணம் செய்பவர்களை செக்கிங் இன்ஸ்பெக்டர் வந்து பார்ப்பது பெரும்பாலும் கிடையாது. அவ்வாறு செக்கிங் இன்ஸ்பெக்டர் வந்து செக் செய்யாததால் பெரிய இழப்பு ஏற்படுகிறது. நான் பல தடவைகளில் பஸ்களில் பிரயாணம் செய்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் வருவது மிகவும் அரிதாக இருக்கிறது. உடனடியாக ஒவ்வொரு ரூட்டிலும் செல்லும் பஸ்களைக் கண்காணிக்க அதிகமாக செக்கிங் இன்ஸ்பெக்டர்களைப் போடுவது சிறந்த வழியாக இருக்கும். அவ்வாறு செய்தால் கள்ளத்தனம் செய்வதற்குத் தடையேற்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, 'ஃபேர் ஸ்டேஜ்' பற்றி ஒரிரு கருத்துக்களைக் கூற வேண்டுமென்று விரும்புகிறேன். ஏப்ரல் 1, 1964-இலிருந்து இருந்த நிலை, தூரித வண்டிகளிலே சமவெளிப் பகுதிகளுக்கு ஒரு மைலுக்கு 5 காசு என்றும் மலைப்பகுதிகளுக்கு 10 காசு என்றும் இருந்தது. அதற்குப் பிறகு 1, ஜனவரி 1966-இலிருந்து சமவெளிப்பகுதிக்கு 5 பைசாவாக இருந்ததை 6 பைசாவாகவும், மலைப்பகுதிக்கு 10 பைசாவாக இருந்ததை 12 பைசாவாகவும் கூட்டினார்கள். அவ்வாறு செய்து ஏதோ இழப்பு அதிகமாக ஆவதைத் தவிர்க்கலாம் என்று நடவடிக்கை எடுத்திருந்தார்கள். ஆனால் அவ்வாறு செய்து பிறகு பிரயாணிகள் அதிகமாக யாத்திரை செய்யவில்லை என்பதால் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து 6 பைசாவை 5 பைசாவாகவும், 12 பைசாவை 10 பைசாவாகவும் குறைக்கப்பட்டிருப்பதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கை முன்பிருந்த, 1964-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியிருந்த நடவடிக்கைகளுக்குச் சென்றிருக்கின்றது. இன்று நஷ்டம் வளர்ந்துகொண்டேயிருக்கிறது என்று ஒருபுறத்திலே சொல்லுகிறோம். இதையும் நாம் கவனிக்கவேண்டும்.

அதிலும் குறிப்பாக நீண்டதூரத்திலே பிரயாணம் செய்கின்றவர்கள் பல வழிகளுக்கு, பல இடங்களுக்குப் போகின்றவர்களாக இருப்பார்கள். சாதாரணமாக தொழிலாளர்களும், அன்றாட கூலி வேலைக்குப் போகின்றவர்கள் எல்லாம் நீண்டதூரத்திற்குச் செல்லவேண்டிய நிர்பந்த சூழ்நிலையிலே இருக்கிற மக்கள். அதிலும் குறிப்பாக எக்ஸ்பிரஸ் பஸ்ஸிலே இவர்கள் செல்லுகிறார்கள் என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து இதை நல்ல முறையிலே பரிசீலித்துப் பார்க்க வேண்டுமென்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்னும், இந்த மாதிரியான இழப்பு ஏற்படக்கூடாது. இலாபநஷ்டம் இல்லாத முறையிலே அந்த இலாகாவைப் பராமரித்தால் மிகவும் சிறப்பாக இருக்கும்.

அடுத்து, ஒரு விஷயத்தைப் பற்றிக் கூறவேண்டுமென்றே நினைக்கிறேன். பாஸஞ்ஜர்ஸ் அமெனிட்டீஸ் ஃபண்ட் என்று ஒரு ஃபண்ட் இருக்கிறது. அதிலே 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி வரையிலே 2·85 இலட்சம் ரூபாய் இருப்பு எதிர்பார்ப்பதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது—இந்த ஆய்வுரையிலே. பாஸஞ்ஜர்ஸ் அமெனிட்டீஸ் அதிகமாகத் தேவை. அந்தந்த வழிகளிலே பிரயாணிகள் இளைப்பாறுவதற்கும், அவர்கள் பஸ்ஸிலே இருப்பதற்கும், பஸ் வந்து நிற்கிற இடத்திலே தங்குவதற்கும் உள்ள வசதிகளை அரசு உடனடியாகச் செய்யவேண்டும். கடந்த ஓராண்டு காலமாக இந்த நிதியிலிருந்து ஒரு காசுகூட செலவழித்ததாகத் தெரியவில்லை. ஆதலால், இந்த நிதியிலிருந்து நல்லவிதத்தில் செலவழித்து முன்னேற்றம் காண வேண்டுமென்பதையும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, ஹவுஸிங் ஃபண்டிலே 9·27 இலட்சம் ரூபாய் இருப்பதாக இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. சென்னை மாநிலத்திலே இருக்கிற இந்த பஸ் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தங்குவதற்கு இடம் இல்லாமல் இருக்கிறது. ஆதலால், அவர்களுக்கும் உடனடியாக வீடு கட்டிக்கொடுக்க வேண்டும்.

அதே மாதிரி நாகர்கோவிலிலே நில ஆர்ஜிதம் செய்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த இடங்களெல்லாம் இப்பொழுது காலி மனைகளாக இருக்கின்றன. ஆகவே, அந்த இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்தபடியாக என் ஊரிலே உள்ள குறை. எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருக்கிற மலையாளம் தெரிந்தவர்கள் வேலை தேடிக் கொள்வதிலே பல கஷ்டங்கள், சங்கடங்கள் இருக்கின்றன என்று சுட்டிக் காட்டினார்கள். இதற்கு அமைச்சர் அவர்கள் முன்பொரு முறை அந்த



மாதிரியான கஷ்டங்கள் இருந்தால் அதை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பேன் என்று கூறினார்கள். அங்கு இருப்பவர்களுக்குத் தாய்மொழி தமிழாக இருந்தாலும் அங்கு இருந்த அரசியல் சூழ்நிலையின் காரணத்தினால் மலையாளம் படிக்கக்கூடிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. ஆதலால் அவர்கள் தமிழிலே போதிய பயிற்சி பெறுவதற்கு வேண்டுமானால் வகுப்புகள் நடத்தியாவது அவர்களுக்கு உடனடியாக வேலை தேடித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் பகுதியிலே கற்றறிந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஏதோ கண்டக்டர் வேலை கிடைக்கும் என்று சென்னைக்கு ஓடி வருகிறார்கள். ஆதலால் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். அதில் ஏதாவது கஷ்டங்கள் இருந்தால் அவற்றை நிவர்த்திப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த இலாகாவிலே பல கஷ்டங்கள் இருந்தாலும் அதை நல்ல முறையிலே உணர்ந்து அந்த இலாகாவை இன்னும் நல்ல முறையில் செயல்படுத்துகின்ற முறையிலே அதனுடைய டைரக்டர் அவர்கள் இருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் ஆனந்தவிகடனில் அவர் எழுதிய கட்டுரையை படித்து நான் மகிழ்ச்சியுடையவனாயிருக்கிறேன். மனிதாபிமானத்தைக் கடைப்பிடித்து அவர்களுக்கு ஏதாவது சலுகை கொடுக்கக்கூடுமா என்ற அளவிலே இந்தப் பிரச்சினையை அவர் அணுகியிருக்கிறார்கள். உடனடியாக 25-ஆம் தேதி அன்று வருகின்ற ஸ்டிரைக்கைத் தடுத்து அவர்களுடைய குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே அரசியல் புகக்கூடாது; இது மக்களுடைய பிரச்சினை என்ற முறையிலே இதை நல்ல முறையிலே பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றை இங்கே என் நண்பர் அவர்கள் கூறினார்கள். போக்குவரத்து லைசென்ஸ் வழங்கப்படுவதிலே கன்னியாகுமரி பகுதி வாலிபர்களுக்கு மிகவும் கஷ்டம் இருக்கிறது என்று கூறினார்கள். அதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் என்னுடைய கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டுள்ள மானியக்கோரிக்கைகளின் மீது எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய அரிய கருத்துக்களையெல்லாம் எடுத்துக்கூறி இருக்கிறார்கள். கூடுமானவரையில் இந்த மானியம் தகராறுகளுக்கு ஏதுவான வாக்குவாதங்கள் எதுவும் இல்லாமல் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் உட்பட அனைவருமே பல வேண்டுகோள்களை விடுக்கின்ற வகையிலே இன்றைய தினம் இந்த விவாதம் நடைபெற்றதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியையும், உறுப்பினர்களுக்கு நன்றியையும் கூறிக்கொள்ள பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

போக்குவரத்து வசதிகள், தேவைகள் மேலும் மேலும் நிறைவு செய்யப்படவேண்டும், விரைவு படுத்தப்படவேண்டும் என்பதில் யாருக்கும் எந்தவிதமான இருதன்மை கருத்துக்களும் இருக்கமுடியாது. அந்த வகையிலே இன்றைய தினம் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் இந்த போக்குவரத்துத் துறை பற்றிப் பேசிய நேரத்தில், நாம் உன்னிப்பாக கவனித்தால் அநேகமாக தேசியமயமாக்கப்பட்ட தமிழக அரசு போக்குவரத்தைப் பற்றியேதான் பெரிதும் பேசி இருக்கிறார்கள். தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளை இந்த அளவோடு நிறுத்திக்கொள்ளுங்கள் என்று கூறிய சுதந்திராக் கட்சியினுடைய தலைவர் உட்பட அனைவருமே நாட்டுடமை ஆக்கப்பட்ட பேருந்துகளைப் பற்றி பேசியதிலிருந்து அவர்களுடைய நாட்டம் அவர்களையும் அறியாமல்நான் இதன் பால் அதிகமாக இருக்கிறது என்பதை உணரமுடிகிறது.

இதை நட்டம் இல்லாமல் செய்யுங்கள்; இருக்கிற இழப்புகளை மேலும் குறைப்பதற்கு நிலையை சீர்படுத்துங்கள் என்ற அளவில்—தேசியமயக் கொள்கைக்கு எதிராக இருக்கிறோம் என்று மாத்திரம் இடையிலே கூறிவிட்டு—இன்றையதினம் அரசு ஏற்றிருக்கிற தேசியமயமாக்குகிற கொள்கை வெற்றி பெறுவதற்கு ஆக்கபூர்வமான கருத்துக்களை சுதந்திராக்கட்சி உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

தமிழகத்தில் போக்குவரத்துத் துறை எவ்வளவு வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு நான் என்னுடைய ஆய்வு உரையிலே எடுத்துக்கூறி இருக்கிற புள்ளி விவரத்தை மறுபடியும் உங்களுக்கு ஞாபகப்படுத்துவது நலம் என்று கருதுகிறேன்.

1966-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதிக்கும் 1967-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதிக்கும் இடையில் எந்த அளவு வேகமாகப் போக்குவரத்து வண்டிகள் பெருகியிருக்கின்றன என்றால் தனியார் பேருந்துகளைப் பொருத்த வரையில் 1966-ல் 5,395, 1967-ல் 5,681. அரசுப் போக்குவரத்தைப் பொறுத்த வரையில் புத்தகத்திலே தவறுதலாக 1,423 என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அது 1966-ல் 1,234-ம் 1967-ல் 1,638-ம். வாடகை லாரிகளைப் பொறுத்த வரையில் 1966-ல் 10,623-ம் 1967-ல் 10,738-ம், தனியார் லாரிகளைப் பொறுத்த வரையிலே மாத்திரம் 3,134–3,095 என்கின்ற அளவிலும், ஒப்பந்த வண்டிகள் 5,788 என்பது 7,087 என்கின்ற அளவிலும் உயர்ந்திருக்கிறது. பிற மோட்டார் வண்டிகள் 742-லிருந்து 1,016-ஆக உயர்ந்தும் ஆக 1966-ல் 27,105 வண்டிகளும் 1967-ல் 29,255 வண்டிகளும் ஆக இன்றைய தினம் இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிற நிலைமையைக் காண்கிறோம். இதிலே அரசாங்கத்தினுடைய பஸ்களை நான் டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி வரையிலே குறிப்பிட்டேன். இன்றைய அளவிலே 1,728 என்கின்ற அளவுக்கு அரசாங்க பஸ்கள் உயர்ந்திருக்கிறது. இதன் மூலமாக நமக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் அதிகப்பட்டிருக்கிறது என்பதை சொல்லத் தேவையில்லை. இந்த உயர் வரி வருமானம், நாம் சென்ற ஆண்டு ரூ. 35, ரூ. 40, ரூ. 45 என்ற மூன்று கட்டங்களிலிருந்த வரிகளை இரண்டு கட்டங்களுக்கு 200 மைல் வரையிலும் ரூ. 50 என்றும் 200-க்கு மேற்பட்ட மைல்களுக்கு ரூ. 55 என்றும் ஆக்கியதால் மாத்திரம் அல்ல; வண்டிகள் போக்குரத்துத் துறையிலே அதிகமாக ஆகியிருப்பதும் ஒரு காரணம். 1966–67-ல் நமக்கு இந்த வரிகள் மூலம் கிடைத்த மொத்தத் தொகை 14·96 கோடி ரூபாய்; 1967–68-ல் 16·31 கோடி ரூபாய். ஏறத்தாழ இரண்டு கோடியை நெருங்குகிற அளவுக்கு வரி அதிகமாகக் கிடைத்திருக்கிறது. இந்த அளவுக்குப் போக்குவரத்துத் துறையிலே ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே இந்த வரிகள் கொடுப்பதற்கு அதிகக் கஷ்டம் இல்லாத நிலைமையை தனியார் துறையினரும் பெற்றிருக்கிறார்கள் என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

தனியார் துறையினர் இந்த வரியினால் மெத்தவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சுதந்திராக்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால், அவர்கள் உள்ளபடியே இந்த வரியினால் பாதிக்கப்பட்டிருப்பார்களேயானால்; இந்த வரி அதிகமானது என்று கருதியிருப்பார்களேயானால், அதனால் தாங்கள் நொடித்துபோய்விடக்கூடும் என்று கருதியிருப்பார்களேயானால், வழித்தடங்களுக்கு விண்ணப்பங்கள் அதிகமாக வராது. ஆனால் ஒவ்வொரு முறையும் ஒருவழித்தடம் துவங்கப்படுகிற நேரத்தில் அதற்காக வருகிற விண்ணப்பங்களைப் பார்த்தால், அது நூற்றுக்கணக்கில் இருக்கிறது. ‘அந்த வழித்தடம் எனக்கு வேண்டும், எனக்கு வேண்டும்’ என்று கேட்கிற விண்ணப்பங்கள் ஏராளமாக வருகின்றன. ஆகவே, இந்த வரி அதிகமாகிவிட்ட காரணத்தினால் யாரும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ‘இந்த வரியையும் கொடுத்து, ஏன், இனிமேல் கேட்டாலும் கொடுத்து நாங்கள் இப்படிப்பட்ட ரூட்களைப் பெறுவதற்குத் தயாராக இருக்கிறோம்’ என்கின்ற அளவில் இன்றையதினம் வழித் தடங்களுக்கான விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன.



இந்த ரூட்கள் வழங்கப்படுவது பற்றி இங்கு பேசப்பட்டது. புதிய ரூட்களை பழைய பஸ் சொந்தக்கரரர்களுக்கு யாருக்கும் கொடுக்கக் கூடாது, புதியவர்களுக்குத் தான் தரவேண்டும் என்றும், 5 பஸ்கள் என்று உச்ச வரம்பு கட்டி வழித்தடங்கள் தரவேண்டுமென்றும், அதற்கு மேல் யாருக்கும் வழித்தடங்கள் தரக்கூடாது என்றும், இப்பேர்ப்பட்ட கருத்துக்களெல்லாம் இங்கே பேசப்பட்டன. இப்பொழுது வழித்தடங்கள், புதிய வழித்தடங்கள் வழங்குவது இன்றுள்ள சூழ்நிலையில் 15 மைல், அதாவது 24 கிலோ மீட்டர் என்ற அளவுக்கு நிர்ணயிக்கப்பட்டு, புதிய வழித்தடங்கள் புதியவர்களுக்குத் தான் தருகிறோம். பழைய பஸ் முதலாளிகள் யார் வந்தாலும் அவர்களை ஒதுக்கிவிட்டு, புதியவர்கள் தான் இந்த வழித்தடங்களைப் பெறலாம் என்ற அளவுக்கு இன்றைய சூழ்நிலை இருக்கிறது. 15 மைல் புதிய வழித்தடங்கள் என்று இருப்பதை, 25, 30 மைல் ஆக்கலாமா, ஆந்திராவிலும், கேரளத்திலும் உள்ளதுபோல 25 மைல், 30 மைல் என்று ஆக்கலாமா என்ற யோசனையும் இப்பொழுது இருக்கிறது.

அதேபோல, நடுத்தர வழித்தடங்கள் ஒன்று முதல் நான்கு வரையில் பஸ்களை வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம் ஐந்தாவது பஸ் வழித் தடம் தரப்படும். ஒன்று முதல் நான்கு பஸ் வைத்திருப்பவர்கள் யாரும் அந்த பஸ் ரூட்டைப் பெறுவதற்கு எந்தவிதமான தகுதியும் பெறாதிருக்கும் பட்சத்தில், அப்பொழுது தான் ஐந்துக்கு மேற்பட்ட பஸ்கள் வைத்திருப்பவர்களுக்கு இன்றைய தினம் ஆர்.டி.ஏ., மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்த வழித் தடங்களை வழங்கிவிடுகிறார். 5 ரூட்களுக்கு மேல் தரக்கூடாது என்ற கொள்கையை ஓரளவுக்கு சாத்தியக்கூறாக ஆக்குகின்ற வகையில் இன்றையதினம் ரூல்ஸ் பரிசீலனையில் இருந்து வருகின்றன. அதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு காசிராமன் அவர்கள் தொடக்கப் பேச்சில் எடுத்துக் கூறினார்கள். அந்த விதிமுறைகள் வந்துவிட்ட பிறகு, ஐந்துக்கு மேல் பஸ்களை யாரும் வைத்திருக்கக்கூடாது, பஸ்கள், வழித்தடங்களைப் புதியதாகப் பெறக்கூடாது என்ற அளவில் அந்த ரூல்ஸ் அமுல்படுத்தப்படுமானால், அது ஓரளவுக்கு சாத்தியக்கூறாகலாம். ஆனால் ஐந்து பஸ்கள் தான் வைத்திருக்கவேண்டும், ஐந்து பஸ்கள் வைத்திருப்பவர்களுக்கு மேலும் பஸ் ரூட் கொடுக்கக் கூடாது என்பது நாம் இங்கே விதிமுறைகளில் செய்வது அல்ல, சட்டத்தைத் திருத்தி, அதற்கு மத்திய அரசின் ஒப்புதலையும் பெறவேண்டியவர்களாகிறோம் என்பதை இங்கே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்தப் போக்குவரத்தில் பொதுவாக விபத்துக்கள் மலிந்துவிட்டதாகவும், ஆயிரக்கணக்கில் கடந்த சிலபல ஆண்டுகளில் உயிர் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிகவும் உருக்கத்தோடு எடுத்துத் தெரிவித்தார்கள். இந்த விபத்துக்களை தவிர்ப்பதில், நாம் சட்டம், அதிகாரம், விபத்து ஏற்பட்ட பிறகு வழங்கப்படுகிற தண்டனை, அதன் பேரில் வலவர்கள் அல்லது நடத்துனர்கள் இவர்கள் மீது எடுக்கிற நடவடிக்கைகள் இவைகள் மாத்திரம் அல்லாமல், மனிதாபிமான உணர்ச்சியின் அடிப்படையிலும், பொறுப்புணர்ச்சியின் அடிப்படையிலும், கடமை உணர்ச்சியின் அடிப்படையிலும் அவர்கள் இயங்குவார்களேயானால், இந்த விபத்துக்களைத் தடுப்பதில் அவர்கள் அரசாங்கத்தோடு மாத்திரம் அல்ல, பொதுவாக போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டிருக்கிற தனிப்பட்ட அதிபர்களாக இருந்தாலும், அவர்களோடும், பொதுமக்களோடும் ஒத்துழைத்தவர்களாவார்கள்.

இன்றைக்கு விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு மாநில ரீதியிலே அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவுக்கு மூன்று யோசனைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆலோசனைக் குழு அடுத்த திங்களில் கூட இருக்கிறது. அதில் போக்குவரத்து வண்டிகளில் மீட்டர், விசைமானிகள், எவ்வளவு வேகத்தில் இந்தப் போக்குவரத்து சென்றிருக்கிறது என்பதைக் காட்டு

கின்ற அந்தக் கருவிகளை அமைப்பது பற்றி ஒரு ஆணையிடலாமா என்று இந்த அரசு கருதிக்கொண்டிருக்கிறது. அதுவும் இந்த ஆலோசனைக் குழுவில் யோசிக்கப்பட இருக்கிறது. ஒரு லாரி 200 கிலோ மீட்டர் பயணம் செய்தால், அதிலே இரண்டு வலவர்கள் (குறுக்கீடு) பழகிவிடும், சொல்லச் சொல்ல—இரண்டு வலவர்கள் டிரைவர்கள் இருக்கவேண்டும் என்ற யோசனையும், நடைபெற இருக்கிற இந்த மாநில ஆலோசனைக் குழுவில் ஆய்வு செய்யப்பட்டு, அதனை ஆணையாகப் பிறப்பிக்கலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

அதைப் போலவே இரவு நேரங்களில் ஓடுகிற சரக்கு பேருந்துகளுக்கு மஞ்சள் வண்ணம் தீட்டலாமா, அப்படி மஞ்சள் வண்ணம் தீட்டுகின்ற காரணத்தினால் இப்பொழுது பச்சை நிறம் நீல நிறம் இருளோடு கலந்துவிடுகிற காரணத்தினால் விபத்துக்கள் அதிகமாவதற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கிறது, அதுவே காரணம் அல்ல என்றாலும் விபத்துக்களைத் தவிர்க்கலாமா என்று, அந்த அளவில் மஞ்சள் வண்ணம அவர்கள் பூசவேண்டும் லாரிகளில் என்ற யோசனையும் ஆலோசனைக்கு வைக்கப்பட இருக்கிறது. இவைகளைப்பற்றியெல்லாம் அடுத்த எப்ரல் திங்களில் ஒரு முடிவு செய்யப்பட்டு, விபத்துக்களைத் தடுப்பதற்குக் கூடுமானவரையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

போக்குவரத்தில், டாக்ஸிகளைப் பற்றியும், ஒப்பந்த வண்டிகளைப் பற்றியும் நான் இந்த அரசாங்கத்தினுடைய கருத்துக்களை, இந்த அரசு இப்பொழுது யோசித்துவைத்திருக்கிற கருத்துக்களை, அமுலாக்க இருக்கிற திட்டங்களை இங்கே கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். சென்னையிலே மாத்திரம் அல்லாமல், திருச்சி, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் மீட்டர்கள் டாக்ஸிகளில் பொருத்தப்படவேண்டும் என்ற ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு. ஆங்காங்கு இருக்கிற டாக்ஸி சொந்தக்காரர்களும், தொழிலாளர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க இரண்டு முறை தவணை கொடுக்கப்பட்டு, 30-4-1968 இறுதித் தவணையாக வழங்கப்பட்டிருக்கிறது. 30-1-1968-க்குள்ளாக திருச்சி, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் இருக்கிற டாக்ஸிகளில் மீட்டர்கள் பொருத்தப்பட்டுவிடவேண்டும். திருச்சியிலிருந்தோ, கோவையிலிருந்தோ, மதுரையிலிருந்தோ வெளியூர் செல்கிற வண்டிகளுக்கு மீட்டர்கள் தேவையில்லை, மீட்டர் கணக்கு தேவையில்லை, நகரத்திற்குள்ளே மாத்திரம் பயணிகளை ஏற்றிச் செல்கின்ற அளவுக்கு இந்த மீட்டர்கள் இருந்தால் பொது மக்களுக்கு மெத்தவும் பயனுள்ளதாகவும், அவர்களுக்கு சிக்கனமாகவும், முறையாகவும் இருக்கும் என்ற காரணத்தினால் இதனை அரசு அமுலாக்க விழைந்து 30-4-1968 என்ற அளவுக்கு காலகெடுவை நிர்ணயித்திருக்கிறது.

அதுபோலவே, சென்னையிலே டாக்ஸிகளில் எவ்வளவு பேர்கள் ஏறலாம் என்பதைப்பற்றி யோசிக்கப்பட்டு வந்தது. ஸ்டாண்டர்டு வண்டிகளில் இப்பொழுது இருப்பதுபோலவே மூன்று பயணிகள், டிரைவர் ஒருவர், அதாவது 3 ப்ளஸ் 1 என்ற அளவில் ஏறலாம். ஃபியட் வண்டிகளில் இப்பொழுது 3 ப்ளஸ் 1 அதாவது 4 பயணிகள் டிரைவரைத் தவிர என்று இருக்கிறது. இனிமேல் அது 4 ப்ளஸ் 1 என்று ஆகின்ற அளவுக்கு ஃபியட் வண்டிகளில் உயர்த்தப்படும். அம்பாசிடர் வண்டிகளில் 4 ப்ளஸ் 1 என்ற அளவில் இப்பொழுது இருக்கிறது. மான்யுபாக்சரிங் கம்பெனிக்கு எழுதிக்கேட்ட நேரத்தில் அவர்கள் மான்யுபாக்சரிங்கில் 4 ப்ளஸ் 1 என்று தான் இருக்கிறது என்று அறிவித்துவிட்ட காரணத்தினால், அம்பாசிடர் வண்டிகளில் எந்த மாற்றமும் இல்லை. இப்பொழுது இருப்பது போல் 4 ப்ளஸ் 1 என்ற அளவிலேதான் இருக்கும்.

வெளியூர்களில் உள்ளவர்கள் சென்னையிலே இருப்பதுபோலவே எங்களுக்கு நிலைமைகள் வேண்டாம் என்று கேட்கிறார்கள். சென்னையில் உள்ள டாக்ஸி சொந்தக்காரர்கள் ஃபியட் வண்டிகளில் நான்கு



பேர் கூட ஏற்றக்கூடாது என்று மறுத்துக்கொண்டிருக்கிற நேரத்தில், வெளியூரில் இருப்பவர்கள் அதிகம்பேர்கள் ஏற்றுவதற்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆகவே, ஸ்டாண்டர்டு வண்டிகளில் வெளியூர்களில் 4 ப்ளஸ் 1 என்று இருக்கலாம் என்றும், பியட் வண்டியில் சென்னையில் இருப்பது போலவே 4 ப்ளஸ் 1 என்று இருக்கலாம் என்றும், அம்பாசிடர் வண்டிகளைப் பொறுத்த வரையில் சென்னையில் இருப்பதுபோல் அல்லாமல், வெளியூர்களில் 5 ப்ளஸ் 1 என்று வைக்கலாம் என்றும் இருக்கிறோம். இம்மாதிரி அரசு தீர்மானித்து அது அநேகமாக 1-4-1968 முதல் அமலுக்கு வரக்கூடிய நிலைமையில் இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

1966 டிசம்பரில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, நம்முடைய தமிழக அரசில் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள், வண்டிகள் 1,234-லிருந்து இந்த ஓராண்டுக் காலத்தில் 1,728-ஆக உயர்ந்ததன் மூலம், 494 பேருந்துகளை நாம் இந்த ஓராண்டு காலத்தில் அதிகமாக ஆக்கியிருக்கிறோம். அதிலே தேசிய மயமாக்கும் கொள்கைப் படி, 236 வண்டிகள், 155 வழித்தடங்களில், புதிதாக விடப்பட்டிருக்கின்றன. 30—3—69-க்குள்ளாக இன்னும் 146 வண்டிகள் சேர்ந்து, தேசியமயக் கொள்கைப்படி 382 வண்டிகள் தமிழக அரசின் சார்பில் ஓடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுதந்திராக் கட்சித் துணைத் தலைவர் அவர்கள், 'இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்' என்று கேட்டுக் கொண்டார்கள். நிறுத்துவதாக இல்லை என்று சொல்லி, 1969-க்குள்ளாக 382 வண்டிகள் ஓடும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் அதிகமாகக் கூட ஓட்டப்படும். ஆனால், ரிட் மனுக்கள் பல இடையே குறுக்கிட்ட காரணத்தால், அதிகமான முன்னேற்றம் சற்று தடைப்படுத்தப்பட்டது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் உணருவார்கள். இப்பொழுது ரிட் மனுக்கள் நீதி மன்றத்திலே சென்றதன் காரணமாக, இன்றையதினம், வழித்தடங்களை நிர்ணயிப்பவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்கள் யாராக இருக்க வேண்டும் என்ற கருத்து அறிவித்த பிறகு, அதன் விளைவாக, அந்தத் தீர்ப்பிற்கு ஏற்ற வகையில், அவ்வாறு மாற்றத்தைச் செய்து வழித்தடங்களை தேசியமயமாக்குவதற்குக் காலந் தாழ்ந்து விட்டது என்பதைத் தெரிவிக்கிறேன். மற்ற வழித்தடங்கள் தனியார் பஸ் அதிபர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அப்பொழுதே சொன்னேன் 100-க்கு 90 இடங்களில் அநேகமாக மாற்றுத் தடங்கள் தரப்பட்டிருக்கின்றன. இதனால் தேசியக் கொள்கையை ஒரு பக்கத்தில் வைத்துக்கொண்டு, மறு பக்கத்தில் முதலாளிகளை வளர்க்கிறோமோ என்ற எண்ணம் ஏற்படலாம். 75 மைல் அளவிற்கு தேசியமயமாக்கும் சூழ்நிலையை உருவாக்கிய பிறகு, அப்படிப்பட்ட பஸ் வழித் தடங்களை ஏற்றுக் கொண்டபிறகு கொள்கையின் அடுத்த கட்டமாக எத்தனை மைல் என்பதை தமிழக அரசு அறிவிக்க வேண்டும். அந்த அடிப்படையில், அது 60 மைலாக இருக்கலாம், அல்லது 50 மைலாக இருக்கலாம். அது அப்பொழுது நிர்ணயிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை இங்கே தெரிவிக்கிறேன். பிற்பகல் 2–30

1966-67-ம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல ஏறத்தாழ 60 லட்ச ரூபாய் அளவில் பெருத்த நஷ்டம் வந்த நிலையிலும், இந்த அரசு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ரூ. 61 லட்சம் இழப்பு என்பதை, 1967-68-ல் 37 லட்சமாகக் குறைத்திருக்கிறோம். நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 60 லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணங்களைச் சொன்னார்கள். காரணங்கள் சரியா அல்லவா என்பதல்ல கேள்வி.

திரு. பாலன் நாகர்கோயிலில் நடைபெற்ற ஊர்வலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் '60 லட்சம் நஷ்டம், 60 லட்சம் நஷ்டம்' என்று பூதாகரமானேன் [illegible] கேட்டார்கள். புதிய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, [illegible] அ[illegible]முறை

61 லட்ச ரூபாய் என்பதை ரூ. 37·35 லட்சமாகக் குறைக்கின்ற அளவிற்கு நாம் மெத்த சிரமப்பட்டிருக்கிறோம். 1968–69-ல் இந்த இழப்பும் தவிர்க்கப்பட்டு, சில லட்சங்கள் லாபம் வரலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப் படுவதுதான். லாபத்தை நோக்கிப் போகிறோம். அது இந்தத் தமிழக அரசுப போக்குவரத்தில் தொழிலாளி கள், நிர்வாகிகள், மற்றவர்கள் அனைத்தும் ஒப்புக்கொண்டிருக்கிற ஒன்று நஷ்டம் ஏற்படுகிறது என்கிற ஒரே காரணத்திற்காக தேசிய மயமாக்கும் கொள்கை தவறானது என்று சொல்வதற்கில்லை. வேறு மாநிலங் களில் லாபம் வருகிறதே, இங்கே ஏன லாபம் வரவில்லை, எங்கே போயிற்று என்று இங்கே மன்றத்திலே கேட்கிறார்கள், வெளியிலே கேட்கிறார்கள். கோரிக்கை வைக்கின்ற தொழிலாளிகள் கூட கடுவேக மாகக் கேட்கிறார்கள். ஆனால், வேறு மாநிலங்களில் நகர பஸ்கள் குறைவு; வெளியிலே ஓடும் பஸ்கள் அதிகம். நான் இங்கே அந்தக் கணக்கைக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். சென்னையிலே ஓடும் பஸ்கள் 1,026. நான் முதலிலே குறிப்பிட்ட 1,234 பஸ்களிலே, சென்னை நகரத்திலே ஓடும் பஸ்கள். மாத்திரம் 1,026, அதிலே ஒரு ஆண்டுக்கு ஒரு பஸ்ஸுக்கு ஏற்படுகிற நஷ்டம் ரூ. 6 000. மொத்த நஷ்டம் 61 லட்ச ரூபாய். மைசூர் மாநிலத்தை எடுத்துக் கொண்டால், பங்களூர் நகரத்தில் மாத்திரம் ஓடுகிற பஸ 366. அதிலே ஒரு ஆண்டுக்கு ஒரு பஸ்ஸுக்கு ஏற்படுகிற நஷ்டம் ரூ. 7,500, மொத்தம் பங்களூர் நகரத்தில் நஷ்டம் ரூ. 27 லட்சம். கேரளத்தில், திருவனந்த புரத்தில் ஓடுகின்ற பஸ்கள் நகரத்தில் மாத்திரம் ஓடுகின்றவை 146; அங்கே ஒரு பஸ்ஸுக்கு ஒரு ஆண்டுக்கு ஏற்படும் நஷ்டம் ரூ. 21,000. மொத்தமாக நகரத்தில் ஏற்படுகின்ற நஷ்டம் ரூ. 30 லட்சம். ஆந்திர மாநிலத்தில், ஹைதராபாத் நகரத்தில் ஓடுகின்ற பஸ்கள் 312; அதிலே ஒரு ஆண்டுக்கு ஒரு பஸ்ஸுக்கு ஏற்படும் நஷ்டம் ரூ. 10,000 மொத்த நஷ்டம், ஹைதராபாத் நகரத்தில் மாத்திரம் ரூ 31 லட்சம் பம் பாயை எடுத்துக்கொண்டால், B.E.S.T. இருக்கிறது. அதிலே பம்பாய் நகரத் திலே ஓடும் பஸ்கள் 1,043; அதிலே ஒரு பஸ்ஸுக்கு ஒரு ஆண்டுக்கு ஏற்படுகிற நஷ்டம் ரூ. 9,000; மொத்த நஷ்டம் 125 லட்சம் ஆண்டு ஒன்றுக்கு. டெல்லி நகரத்திலே ஓடுகிற பஸ்கள் 1,024; அதிலே ஒரு பஸ்ஸுக்கு ஒரு ஆண்டுக்கு நஷ்டம் ரூ. 9,900; மொத்தம் ஒரு ஆண்டுக்கு ரூ. 100 லட்சம் இழப்பு. கல்கத்தாவில் ஓடுகிற பஸ்கள் 1,104, ஒரு பஸ்ஸுக்கு ஒரு ஆண்டுக்கு ஏற்படுகின்ற நஷ்டம் ரூ. 12,000. மொத்தம் ஒரு ஆண்டுக்கு இழப்பு ரூ. 131 லட்சம். ஆனாலும், இவ்வளவு இழப்புக்கு இடையில், மைசூர், கேரளா, ஆந்தரா போன்ற இந்த இடங்களில் கடைசியாக மொத்தக் கணக்கு வரும்போது சற்று லாபம் காட்டப்படுகிறது. அது சில லட்சங்கள், 30, 40, 20 லட்சம் லாபம் என்று காட்டப்படுகிறது. இப்படி லாபத்திற்குக் காரணம், அங்கெல்லாம் நகர பஸ்கள் குறைவு, வெளியூரிலே ஓடும் பஸ்கள் அதிகம். இங்கே நேர் மாறான நிலை. வெளியூர் பஸ்கள் குறைவு, நகர பஸ்கள் அதிகம். ஆகவே தான் புதிய பொறுப்பேற்ற பிறகு நகர பஸ்களைக் குறைப்பதற்கில்லை இந்த இழப்பை ஈடுகட்டும் அளவிற்கு வெளியூர் பஸ்களை அதிகப்படுத்தவேண்டும் என்று முனைந்து எடுத்த முயற்சியின் பயனாக அதிகமாக்கிக்கொண்டு வருகிறது.

அது மாத்திரமல்ல பஸ்கள் உழைக்கும் காலம் 1966-ல் இருந்தது வேறு; புதிய அரசு வந்த பிறகு அதை மாற்றியமைத்திருக்கிறது. 1966-ல் ஒரு லேலண்ட் பஸ் உழைக்கும் காலம் 5 வருஷம் என்று இருந்தது. ஒன்றரை லட்சம் மைல்கள் ஓடிவிட்டால், அதைத் தூக்கி ஏலத்தில் போடுவது என்பதுதான் நிலை. அது இப்பொழுது 5 வருஷத் திலிருந்து, 6 வருஷம் என்றும். 2½ லட்சம் மைல் ஓடிய பிறகு தான் ஏலத்திற்கு விடவேண்டும் என்றும் நிலைமைகளை உருவாக்கியிருக் கிறோம். அதே போல, பென்ஸ் வண்டிகளை எடுத்துக் கொண்டால் உழைக்கும் காலம் 5 வருஷம், ஒன்றரை லட்சம் மைல் ஓடவேண்டும் என்றிருந்ததை, 6 வருஷம், இரண்டேகால் லட்சம் மைல்கள் என்றும் மாற்றியிருக்கிறோம். இந்த வகையில் அவற்றை மாற்றி அமைத்திருக் கிறோம்.



ஃபார்கோ வண்டிகளைப்பற்றி நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் குறிப்பிட்டார்கள். அந்த வண்டிகள் இந்த அரசால் வாங்கப் பட்டவை அல்ல. 1963–64-ல் 120 வண்டிகளும், 1964–65-ல் 60 வண்டிகளும் ஆக மொத்தம் 180 வண்டிகள் வாங்கப்பட்டன. இப் பொழுது ஃபார்கோ வண்டி என்றாலே, டிரைவர்களும். கண்டக்டர்களும் ஏதோ அதைக்கண்டு ஒரு பீதியடைகிறார்கள். ஃபார்கோ, பெட்ஃபோர்ட் வண்டிகளெல்லாம் இன்றையதினம் விலை குறைவாக இருக்கின்றன என்றாலும், லேலண்ட், பென்ஸ் போன்ற வண்டிகள் கிட்டத்தட்ட 6,000, 10,000 ரூபாய் அதிகமாக இருந்தாலும், நீடித்து உழைப்ப வைகளாக, வலிவு உள்ளவைகளாக இருக்கும். இந்த இரண்டு வண்டி களை மாத்திரம் இப்பொழுது வாங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கிறேன்.

கட்டணம்பற்றிப் பேசப்பட்டது. கட்டணத்தை ஆறு காசிலிருந்து ஐந்து காசாகக் குறைத்தபோது, 1964-ல் என்ன நிலை என்பதைத் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். பின்னால் 1966-ல் உயர்வைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். நாங்கள் வந்த பிறகு மேலும் உயர்த்தவில்லை. அப்பொழுது 6 காசு என்றிருந்ததை 5 காசு என்று குறைத்த காரணத்தால், வருவாயும் அதிகமாயிற்று, பொது மக்களுக்கு நல்ல பயனும் ஏற்பட்டது. அதே நேரத்திலே இன்னொரு பிரச்சினையைப்பற்றியும் உறுப்பினர்கள் சொன்னார்கள். கிலோவிற்கு 2 காசு என்பதை 2½ காசு என்று மாற்றுகிறார்கள். அது ஏழை மக்களுக்கு கஷ்டத்தைத் தராதா என்றார்கள் ஆம், 2 காசை 2½ காசாக ஆக்குகிறோம், ஆனால் குறிப்பிட்ட ஒன்று இரண்டு மாவட்டங் களில்தான். அதே நேரத்திலே சர்க்கார் பஸ்களைப் பொறுத்த வரையில், 75 மைல் ஓடும் பஸ்களுக்கு, அல்லது வேறு மாவட்டங் களில் ஓடும் பஸ்களுக்கு 3 பைசாவிலிருந்து ½ பைசா குறைகிறது, அதையும் 2½ பைசாவாக ஆக்குகிறோம். இப்படிக் குறைவதைப்பற்றி யாரும் சொல்லாமல். 2½ பைசாவாக ஆக்குவதைப்பற்றி மட்டும் குறிப்பிடுகிறார்கள். இங்கே 3 பைசா என்பது 2½ பைசா என்று ஆகிறது. இனிமேல் சர்க்கார் ஆண்டுக்காண்டு எடுக்கின்ற, தேசியமயமாக்கப்படு கின்ற பேருந்துகளிலும், ஏற்கெனவே 3 பைசா என்று இருந்தாலும் அதையும் 2½ பைசாவாக ஆக்கும் அளவிற்கு குறைக்கப்படுகிறது என்கின்ற மகிழ்ச்சி தரும் செய்தியையும் மற்ற செய்திகளோடு கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களில் தனியார்த் துறைப் பேருந்துகளுக்கும் நம்முடைய அரசுப் பேருந்துகளுக்கும் இருக்கின்ற வேறுபாடுகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள் அந்த வேறுபாடுகளெல்லாம் விரைவிலே கவனிக்கப்பட்டு சம நிலைப்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

நிர்வாகத்திலே இருக்கின்ற சில குறைபாடுகளைக் கவனிப்பதற்காக இரண்டு மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே மிக முக்கியமாக, ஏலம் போடுகின்ற குழு இருக்கிறது. அதுபற்றி சென்ற சட்ட மன்றக் கூட்டத்திலே கூட, கேள்விக் கணைகளெல்லாம் பொழியப் பட்டன. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னாலேயே, ஏலம் போடுவதற்காக ஒரு தனிப்பட்ட கம்பெனியாரிடத்திலே பழைய அரசினர் ஒப்பந்தம் பேசி, அவர்கள் அந்த ஏலத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்த ஏலத்தில் பஸ்களை எடுத்தவர்கள் குறை பாடாக நடந்துகொண்டார்கள், அல்லது நிர்வாகம் குறைபாடாக நடந்து கொண்டது என்று ஜாடை தெரியும் விதத்தில் பல உறுப்பினர்கள் அப்போதும் பேசினார்கள். ஆகவே, அதையெல்லாம் மனத்திலே வைத்துக் கொண்டு அப்போதே நான் அளித்த வாக்குறுதிக்கேற்ப, 'ஏலக் கண் காணிப்புக் குழு' என்கிற குழுவில், அதிகாரிகளும், அதே நேரத்தில் சட்ட மன்ற உறுப்பினர்களும் நம்முடைய நண்பர் திரு. காசிராமன் அவர்கள் கூட இடம் பெற்றிருக்கிறார், அவரும், இந்த மன்றத்தைப்

பொறுத்தவரையில் திரு. அழகமுத்து அவர்களும், மேலவையைப் பொறுத்தவரையில் திரு. தாமோதரன் அவர்களும் இடம் பெற்றிருக்கின்றார்கள். இந்த ஏலக் கண்காணிப்புக் குழுவில் அதிகாரிகளும் இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற அளவில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, அவர்கள் அந்த ஏலத்தில் விடப்படுகின்ற பஸ்களுக்கு விலையை நிர்ணயிப்பதிலிருந்து, எந்த அளவுக்கு ஏலம் விடப்படலாம் என்று அஸெஸ்மெண்ட் நிர்ணயிப்பதிலிருந்து ஏலம் விடுகிற நேரத்தில் கூட இருந்து கண்காணிக்கும் வரையிலும் பொறுப்பேற்றுக் கொள்கின்ற, கண்காணிக்கிற குழுவாக அவர்கள் இயங்குவார்கள்.

'வல்லுநர் குழு' என்ற பெயரால் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்த யோசனை இன்றும் இரண்டு மூன்று நாட்களில் அமலாக்கப்பட இருக்கிறது. அந்த வல்லுநர் குழு ஆங்காங்கு இருக்கின்ற பணிமனைகளையும் ஆங்காங்கு இருக்கின்ற ஸ்டோர்கள். இவைகளிலே சென்று இருக்கின்ற நிலைமைகளை ஆராய்ந்து, நிர்வாகத்தில் இன்னும் எந்த எந்த நிலைமைகளைச் சீர்படுத்தலாம் என்பவைகளையெல்லாம் எடுத்துக் கூறும் அளவில் 'வல்லுநர் குழு' பணியாற்றும். அதற்கான அறிவிப்பும் வெகு விரைவில் வரும்.

நகரப் பேருந்துகளை நடத்துவதற்கு ஒரு அறிவுரைக் குழு (அட்வைசரி கமிட்டி) இருக்கிறது. இப்பொழுது நம்முடைய தேசீயமயக் கொள்கை விஸ்தரிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இந்த 'நகரப் பேருந்து அறிவுரைக் குழு' என்பதை பொதுவாக 'தமிழக அரசு பேருந்து அறிவுரைக் குழு' என்ற அளவுக்கு நீட்டி, அந்தக் குழுவிலே சில உறுப்பினர்களை மேலும் இணைத்து, அதை விரிவாக்கலாம் என்கிற அளவுக்கும் ஒரு யோசனை இருக்கிறது. அதுவும் விரைவில் அமலாக்கப்படும்.

அதற்கிடையே, 'உயர்மட்டக் குழு' என்று, தொழிலாளர்களுடைய பிரச்சினையைக் கவனிப்பதற்காக, அமைக்கப்பட வேண்டும் என்று எடுத்துக் கூறினார்கள் நான் தொழிலாளர்களுடைய பிரச்சினைக்கு வருவதற்கு முன்பு, தொழிலாளர்களுக்கு இந்த அரசு இந்த ஓராண்டுக் காலத்தில் என்னென்ன வகையிலே அவர்களுடைய பிரச்சினைகளை அணுகி அவர்களுக்குச் சாதகமான காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை மாத்திரம் இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(1) 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் பஞ்சப்படி (டியர்னஸ் அலவன்ஸ்) உயர்த்தியதன் காரணமாக அதிகப்படி செலவு மாத்திரம் இந்தத் துறைக்கு 19 லட்சம் ரூபாய்.

(2) நகர ஈட்டுப் படி ஒரு வருட மொத்தச் செலவு 9 லட்ச ரூபாய். இது புதிதாக வழங்கப்பட்டது.

(3) டெப்போக்களில் இருக்கும் தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸ் சம்பள அடிப்படையில் 10 சத வீதம் இருந்தது. அதை 15 சத வீதம் என்ற அளவுக்கு உயர்த்தியதன் காரணமாக அதிகச் செலவு 1·49 லட்ச ரூபாய்.

(4) பாடி பில்டிங் ஒர்க்ஷாப்பில்—குரோம்பேட்டையிலும், கன்னியாகுமரியில் உள்ள இராணித் தோட்டத்திலும்—இருக்கும் தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸ், சம்பள அடிப்படையில் 20 சத வீதம் என்று இருந்ததை 40 சத வீதம் என்கிற அளவுக்கு இந்த அரசு உயர்த்தியிருக்கிறது. அதன்மூலம் அதிகச் செலவு 1·9 லட்ச ரூபாய்.

(5) குரோம்பேட்டை பாடி பில்டிங் ஒர்க்ஷாப்பில் உள்ளவர்களுக்கு அடெண்டன்ஸ் போனஸ் என்று புதுத் திட்டமாக, முழுச் செலவையும் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு அதன் மூலம் ஏற்றுக்கொண்டிருக்கிற செலவு 1·15 லட்ச ரூபாய்.



(6) பயிற்சிபெறும் தொழிலாளர்களுக்கு 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் பயிற்சித் தொகை அதிகரிப்பு தலைக்கு மாதம் பத்து ரூபாய் அதிகரிக்கப்படுகிறது. இதிலே ஏற்படும் அதிகச் செலவு 18 ஆயிரம் ரூபாய்.

(7) தையற் கூலி பத்து ரூபாய் என்பதைப் பன்னிரண்டு ரூபாய் என்று அதிகமாக்கியிருக்கிறோம். இதிலே அதிகச் செலவு 27,000 ரூபாய்.

(8) தொழிலாளர் பிள்ளைகளைப் பயிற்சிக்கால இளைஞர்களாக எடுத்துக் கொள்வதில் தினக் கூலி 50 பைசாவாக இருந்ததை ஒரு ரூபாயாக ஆக்கி இருக்கிறோம். இதன் மூலம் அதிகச் செலவு 6,000 ரூபாய்.

(9) ஊட்டி, கொடைக்கானல் பகுதிகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு குளிர்காலப் படி உயர்வு தரும்படி புதிய அரசு உத்தரவிட்டிருக்கிறது.

(10) நாள் படி ரூ. 1·25 என்பதை ரூ. 1·35 ஆகவும், ரூ. 1·75 என்பதை ரூ. 1·85 ஆகவும், ரூ. 2·25 என்பதை ரூ. 2·35 ஆகவும் மாற்றப்பட்டுள்ளது. அதற்கு அதிகச் செலவு 2·3 லட்ச ரூபாய்.

(11) டெக்னிகல் ஒர்க்கர்ஸ்களுக்கு இரவுப் படி உயர்வு பத்து பைசா அளிக்கப்படுகிறது. அதற்கு அதிகச் செலவு 40,000 ரூபாய்.

(12) பதவி உயர்வு இருந்தும் ஊதிய உயர்வு அளிக்கப்படாமல் பல தொழிலாளர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து, அவர்களுக்கு உடனடியாக ஊதிய உயர்வு அளிக்க உத்தரவிடப்பட்டது.

(13) தொழிலாளர் கல்வித் திட்டத்தில் ஆசிரியர்கட்கு ஒரு நாளைக்கு 50 பைசா வேண்டும் என்று கன்னியாகுமரியில் கேட்டார்கள். இதை ஏன் ஐம்பது பைசா என்று கேட்கிறீர்கள்? ஒரு ரூபாயாக வைத்துக்கொள்ளுங்கள் என்று தாராளமாகச் சொன்னேன். இன்றைக்குக் கணக்குப் பார்த்தால் அதன் மூலம் பத்தாயிரம் ரூபாய் அதிகச் செலவு ஆகிறது.

(14) ஜீப் டிரைவர்களுக்கும் கார் டிரைவர்களுக்கும் ஓவர்டைம், ஆஃப் ட்யூடி சம்பளம் இல்லாமல் இருந்தது. அதற்காக மூவாயிரம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது.

(15) கதருக்குப் பதிலாக தங்களுக்கு மில் துணி வேண்டும் என்று கேட்ட தொழிலாளர்களுடைய கோரிக்கை கவனத்தில் கொண்டுவரப்பட்டது. அவர்களைச் சமாதானப்படுத்தி, கதரிலிருந்து மில் துணிக்குச் செல்ல வேண்டாம் என்று கூறி, கைத்தறித் துணி அளவுக்கு அவர்களுக்கு அளிக்கப்பட்டு, அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டது.

(16) மலைப் பகுதியில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வருடமுழுவதும் சிறப்புப் படி (ஸ்பெஷல் படி) தர உத்தரவிடப்பட்டிருக்கிறது.

(17) வாட்ச்மென், ஸ்வீப்பர்ஸ், தோட்டக்காரர்கட்கு, இரண்டு 'செட்' உடைதான் இதுவரையில் அளிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக மூன்று செட் உடை, மற்ற தொழிலாளர்களைப் போல், அளிக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஏற்படும் அதிகச் செலவு ஏழாயிரம் ரூபாய்.

(18) வலவர் பயிற்சியாளர்கட்கு இரண்டு செட் உடைகட்குப் பதில் மூன்று செட் உடைகள், பூட்ஸ்கள், தையற்கூலி, சலவைப் படி இவைகள் தரப் படவேண்டும் என்று முதன் முறையாக உத்தரவிடப்பட்டது. இதன் மூலம் ஏற்படும் செலவு மூவாயிரம் ரூபாய்.

(19) இரண்டு வருடத்துக்கு ஒரு செட் பூட்ஸ் கொடுத்ததற்குப் பதிலாக ஓராண்டுக்கு ஒரு ஜதை பட்டான் காலணி வழங்கப்படுகிறது. இதற்கு அதிகச் செலவு ஒரு லட்ச ரூபாய்.

(20) சென்னையில் உள்ளது போல, திருச்சியிலும் நியாய விலைக் கடை திறக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

(21) துயர் தணிப்புக் கருணை நிதி—கருணாநிதி அல்ல—1,500 ரூபாய் என்பதை 2,000 ரூபாய் என்று உயர்த்தப்பட்டது. ஆக மொத்தம் இந்த ஓராண்டுக் காலத்தில் தொழிலாளர்களுடைய வசதிகளுக்காக 37 லட்ச ரூபாய் செலவழிப்பதற்கு இந்த இலாக்கா முன்வந்திருக்கிறது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (ஆரவாரம்) ஆனால், இவைகளில் எப்படி தொழிலாளர்கள் இன்னும் திருப்தி அடையாமல் இருக்கிறார்களோ அதைப் போலவே நாங்களும் திருப்தி அடையாமல் இருக்கிறோம் என்பதை நான் தொழிலாளர்களுக்காக மெத்த அக்கறையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(22) நகர ஈட்டுப் படியை அம்பத்தூர், குரோம்பேட்டை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் விரிவாக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க, அம்பத்தூர், குரோம் பேட்டை, மதுரை ஆகிய இடங்களுக்கும் நகர ஈட்டுப் படி இப்பொழுது விரிவாக்கப்பட்டுள்ளது.

(23) தினக் கூலி தொழிலாளிகட்கு இதுவரையில் நகர ஈட்டுப் படி இல்லை என்ற நிலைமை இருந்தது. அவர்கள் வேண்டுகோளின்படி நகர ஈட்டுப் படியும் அவர்களுக்குத் தர உத்தரவிடப்பட்டிருக்கிறது.

(24) இதுவரையில் சிறிய தண்டனைகளுக்காக அடெண்டென்ஸ் போனஸ் கொடுக்காமல் இருந்தார்கள். சிறிய தண்டனை பெற்றாலும்கூட, தொழிலாளர்களுக்கு அடெண்டென்ஸ் போனஸ் கொடுக்காமல் இருந்தது. அதை மாற்றி, சிறிய தண்டனை பெற்றவர்களுக்கும் அடெண்டென்ஸ் போனஸ் கொடுக்கலாம் என்று இப்பொழுது உத்தரவிடப்பட்டிருக்கிறது.

(25) வீட்டு வசதித் திட்டம்—திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக் காட்டியபடி—1968–69-இல் குரோம்பேட்டை, தண்டையார்பேட்டை ஆகிய இரு இடங்களில் துறையின் மூலம் வீடுகள் கட்டுவதற்காக முயற்சிகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஆக, இப்படி 25 கோரிக்கைகளை—தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை—இந்த ஓராண்டுக் காலத்தில் நம்முடைய அரசு கவனித்து இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளுகிற அதே நேரத்தில், தொழிலாளர்களுக்கு இருக்கும் சில குறைபாடுகள் இன்னும் நிவர்த்திக்கப்பட வேண்டும் என்பதிலே நாம் அதிக அக்கறையாக இருக்கிறோம் என்று எடுத்துச்சொல்லத் தயங்கவில்லை.

இங்கே நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் செகண்டு கிரேடு டிரைவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் குறைவானது என்று எடுத்துச் சொல்லப்பட்டது. தமிழகத்தில் டிரைவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 80 ரூபாய், இரண்டு ரூபாய் இன்க்ரிமெண்ட் கொடுக்கப்பட்டு 100 ரூபாய் அளவிற்குப் போய் நிற்கிறது. கண்டக்டர்களுக்கு 70—2—90 என்ற அளவில் சம்பளம் கொடுக்கப்படுகிறது. மைசூரில் டிரைவர்களுக்கு 75—4—95—5—150—6—180 என்ற அளவில் போகிறது. கேரளாவில் அடிப்படைச் சம்பளம் 90 ரூபாய். இது 90—7½—135—8—175 வரையில் போகிறது. ஆந்திராவில் டிரைவர்களுக்கு 100—3—124—5½—132½ என்ற விகிதத்தில் சம்பளம் கொடுக்கப்படுகிறது. தமிழகத்தில் டி.வி.எஸ். பஸ்களில் அதிகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று உறுப்பினர்கள் பேசினார்கள். டி.வி.எஸ். கம்பெனியில் வேலை செய்யும் டிரைவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 50 ரூபாய். இது 50—3—80 என்ற விகிதத்தில் கொடுக்கப்படுகிறது. நாம் அவர்களைவிட அதிகமான சம்பளத்தைத் தருகிறோம். டி.வி.எஸ்.ஸில் நல்ல திறமையான டிரைவர்களுக்கு 80—5—200 என்று சம்பள விகிதம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் செகண்டு கிரேடு டிரைவர்களுக்கு 50—3—80 என்ற அடிப்படையில்



தான் சம்பளம் தரப்படுகிறது. அதேபோல திரு. மகாலிங்கம் அவர்கள் நடத்தும் ஏ.பி.டி. பஸ்களில் டிரைவர்களுக்கு 45—2—55—2½—67½—3—82½—3½—100—4—120—4½—142½ என்ற அளவில்தான் சம்பளம் தரப்படுகிறது.

டி.வி.எஸ். கம்பெனி மதுரை நகரத்தில் டிரைவர்களுக்குக் கொடுக்கும் படி 1 ரூபாய்தான். நான் இவைகளையெல்லாம் எடுத்துக் கூறுவதன் காரணம் தனியார் கொடுப்பதைப் போல் நாம் கொடுக்க முடியாது. கேரளாவில் கொடுப்பதைப்போல் கொடுக்க முடியாது என்று சிலர் பேசியதற்கு எடுத்துக்காட்டுவதற்காகத்தான். இந்த அரசு போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய குறைபாடுகளை, முறையீடுகளைக் கவனத்திலே கொண்டு அவற்றைக் களைந்தெறிவதில் பூரண கவனத்தைச் செலுத்தும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இந்த அரசு முழுக்க முழுக்க தொழிலாளர்களுடைய அரசு, தொழிலாளருக்காகப் பாடுபடுகிற அரசு, தொழிலாளர்களுடைய குறைகளை மனதிலே வைத்து அவ்வப்பொழுது களைந்தெறியும் என்று சபதம் எடுத்துக்கொண்டு பதவியில் அமர்ந்திருக்கிற அரசு, முதலாளித்துவ மனப்பான்மையோடு தொழிலாளர்களை அணுகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஓராண்டுக் காலத்தில் 25 கோரிக்கைகளை நல்ல முறையிலே ஏற்று செய்து முடித்திருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கன்னியாகுமரி வேலை நிறுத்தம் பற்றியும், சென்னை நகர வேலை நிறுத்தம் பற்றியும் நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். சென்னையிலே இரண்டு மூன்று தொழிற்சங்க யூனியன்கள் இருக்கின்றன. அங்கீகரிக்கப்பட்ட யூனியன் நண்பர் திரு. ராகவானந்தம் அவர்களுடைய தலைமையில் இயங்கி வருகிறது. அது ஒரு பெரிய யூனியனாகும். அவரும் சென்ற மாதத்தில், ஓர் உயர்மட்டக் குழுவை நிறுவ வேண்டும். அதன் மூலமாக தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் எல்லாம் ஆராய வேண்டுமென்று' கேட்டுக்கொண்டு சர்க்காருக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்.

கன்னியாகுமரியில் இருக்கும் யூனியன் தலைவர்களும் என்னைச் சந்தித்து சுமார் 5 மணி நேரம் உரையாடினார்கள். பிறகு மறுநாள் காலையிலே பத்திரிகையிலே 'அமைச்சர் அவர்கள் கையை விரித்துவிட்டார்' என்ற செய்தியைக் கொடுத்துவிட்டுப் போனார்கள். ஒருவேளை நான் கையைவிரிக்க வேண்டுமென்று அவர்கள் ஆசைப்பட்டார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது. கன்னியாகுமரி தொழிற்சங்கத் தலைவர்கள் ஸ்டிரைக் நோட்டீஸ் என்ற அளவில் தங்களுடைய அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். திரு. ராகவானந்தம் அவர்களுடைய தலைமையில் இருக்கும் பெரிய யூனியனும் உயர்மட்டக் குழுவை நிறுவி, சம்பளப் பிரச்சினை, படிப் பிரச்சினை போன்றவற்றைத் தீர்க்கலாம் என்று கூறியுள்ளது. உயர்மட்டக் குழுவை அமைப்பது பற்றி எல்லா யூனியன் தலைவர்களும் ஒருமுகமான எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு ஓர் உறுதிமொழியை அளிக்கின்றேன். இம் மன்றத்தின் வாயிலாக அந்த உறுதிமொழியை அளிக்கிறேன்.

"தொழிலாளர்களுடைய இன்றைய ஊதியம், வாய்ப்பு, வசதிகள் ஆகியவற்றை அவர்களை ஊக்கப்படுத்தும் அளவுக்குச் சீர்படுத்த அரசு போக்குவரத்துத் துறையில் இன்றுள்ள இழப்புக்களைத் தவிர்த்து இத்துறையில் அரசினர் செய்துள்ள முதலீட்டுக்கு ஏற்றவகையில் முன்னேற்றம் காண்பதற்கான கூறுகளை ஆய்வுசெய்து கூறுவதற்கு ஓர் உயர்மட்டக் குழுவினை அரசு அமைக்கிறது." இந்த உறுதிமொழியை ஏற்று, இப்பொழுது உயர்த்தப்பட்ட பத்து காசுதான் நிரந்தரமானது, இதற்கு மேல் கிடையாது என்று யாரும் கருதவேண்டாம். இல்லையென்று சொல்லப்படாமல் போகப் போக சம்பளம், படி போன்றவற்றை உயர்த்துவதற்குவழிவகை இருக்கிறதா என்று பார்த்துச் செய்யலாம். லாபம்

கூட வரத் தேவையில்லை, நஷ்டம் குறைந்தால் போதும். அந்த வகையில் தொழிலாளர் பிரச்சினையை பலமுறை இந்த மன்றத்தில் வலியுறுத்தி இந்த உறுதிமொழியை அளிக்கின்றேன். தொழிலாளர்கள் மன நிறைவு பெற்று தங்கள் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெறுவார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்த மானியக் கோரிக்கைக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளையெல்லாம் நீங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றம் இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் கண்டக்டர்கள் மலையாளம் படித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குக் கஷ்டம் இருந்தால் அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிக் கஷ்டங்கள் இருந்து, அவற்றை எங்களுக்குச் சுட்டிக்காட்டினால் தகுந்த நடவடிக்கை எடுக்கப் படும்.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister in his replay has referred to the speeches made by our Party Members as—
'தனியார் துறையில் இருப்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது'

Actually, three of our Party Members spoke and not even one Member held brief for the private companies and that has been made clear by them. The actual problem is about the loss to the poor people and it is the tax-payer's money that is being spent. In the case of the private companies the share-holders are spending money. Here it is the tax-payers who are affected. So, the anxiety expressed by our Party Members is that the extraordinary loss should be minimised as far as possible and they are alarmed at the rapidity with which it is advancing and it is a dangerous trend. Unless we know where we stand we cannot minimise the loss. Our primary concern is to the tax-payers and we want this Government to be taught a lesson not by this method but by the method of competition which my hon. Friend Thiru Authimoolam has made it clear.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இத்துடன் விவாதங்கள் முடிவுற்றன.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, நான் பேசும்போது, "பட்ஜெட் மானியத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் ஃபிகர்ஸுக்கும், 'கமர்ஷியல் அண்டர்டேக்கிங்'கில் கொடுக்கப்பட்டிருக்கும் ஃபிகர்ஸுக்கும் வித்தியாசம் இருக்கிறது" என்று சொன்னேன். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 'கமர்ஷியல் அண்டர்டேக்கிங்'கில் இருப்பதுதான் சரியான ஃபிகர்ஸ், பட்ஜெட் மானியத்தில் சில தவறுதல்கள் இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** இப்பொழுது நிதிக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் வாக்கெடுப்புக்கு விடப்படும். முதலில் வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்த உறுப்பினர்கள் அவைகளை வற்புறுத்துகிறார்களா என்ற கருத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.



திரு. சோ. அழகர்சாமி, திரு. எ. அ. சுப்பராஜா, திரு. நா. காசிராமன், திரு. என். வரதராஜன் ஆகியோர்கள் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால், அவைகள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் தன்னுடைய இருப்பிடத்தில் இல்லையாதலால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.

அவையின் முன்னுள்ள கேள்வி :—

"கோரிக்கை எண் 2.—'மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,64,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

திரு. எம். பூபதி, திரு. எ. அ. சுப்பராஜா ஆகியோர்கள் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால், அவைகள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

திரு. கரு. சீமைச்சாமி, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. எம். சுரேந்திரன், திரு. கே. விநாயகம் ஆகியோர்கள் தங்களுடைய இருப்பிடங்களில் இல்லையாதலால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொண்டனவாகக் கருதப்படும்.

அடுத்து, அவையின் முன்னுள்ள கேள்வி :—

"கோரிக்கை எண் 30.—'மோட்டார் போக்குவரத்துத் திட்டங்கள்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,96,02,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

திரு. நா. காசிராமன் அவர்கள் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லையாதலால், அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் தன்னுடைய இருப்பிடத்தில் இல்லையாதலால், அவருடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படும். பிற்பகல் 3-00

அடுத்து, அவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 43.—'மோட்டார் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு' என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,30,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை காலை (18-3-1968) 9 மணியளவில் கூடும். பிற்பகல் 3-10

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 6. பேரவையின் முன்வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

† 99. Notification issued with G.O. R. No. 1327, Revenue, dated the 24th November 1967, exempting from the liability to entertainments tax, the show of the film "Petralthan Pillaya" at Ganapathy Talkies, Chingleput, on 24th November 1967, organised by the Sub-Collector, Chingleput in connection with the special campaign for intensification of collections under Small Savings Scheme. [Laid on the Table of the House under section 16 (4) of the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939).]

† 100. Notification issued with G.O. P. No. 2022, Revenue, dated the 18th November 1967, making certain amendments to the Madras General Sales Tax Rules, 1959, published at pages 232–280 of the Rules supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959).]

101. Appropriation Accounts of the Government of Madras for the year 1966–67 and Audit Report, 1968. [Laid on the Table of the House under Article 151 (2) of the Constitution of India.]

102. Finance Accounts of the Government of Madras for the year 1966–67. [Laid on the Table of the House under Article 151 (2) of the Constitution of India).]

### B. *Reports, Notification and Other Papers.*

£ 51. Second Report by Thiru S. R. Kaiwar, I.C.S., First Members, Board of Revenue, Madras, on abolition of Land Revenue and State Trading in Agricultural Products (Tamil).

@ 52. Policy Note on Harijan Welfare, 1968–69 (Tamil).

@ 53. A Review on the Road Transport in Madras State, 1967–68 (English).

@ 54. The Madras Inams (Supplementary) Amendment Bill, 1968 (L.A. Bill No. 4 of 1968) with annexure.

† 55. A Review on Nationalized Transport in the Madras State, 1967–68 (English and Tamil).

56. Fourth Report of the Committee on Rules—March 1968.

† Circulated to Members on 14th March 1968.

@ Despatched to Members on 14th March 1968.

† Placed on the table of the House on 15th March 1968



## இணைப்பு.

[33-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## தமிழ்நாட்டில் மோட்டார் போக்குவரத்து, 1967–68
### (ஓர் ஆய்வுரை)

சமுதாய வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் போக்குவரத்து மிகவும் இணைப்பானதும் இன்றியமையாததும் ஆகும். உள்நாட்டுத் தொடர்பு வழிகளில் சாலைப் போக்குவரத்து முதன்மை பெற்றுள்ளது. நகரங்களிலும், நகர்ப்புறங்களிலும் நாட்டுப்புறங்களிலும் வளர்ந்து வரும் தொழில்–பொருளாதார முன்னேற்றத்திற்கேற்ப சாலைப் போக்குவரத்தும் சரி நிகராக வளர்ச்சியடைந்து வருகிறது. 1967-ம் ஆண்டில் வண்டிப் போக்குவரத்து நிலையாகப் பெருகி வந்துள்ளதைக் கீழ்க்காணும் விவர அட்டவணையிலிருந்து அறியலாம்.

| கீழ்க்காணும் நாட்களில் உள்ளவாறு. | பயண (பேருந்து) வண்டிகள். தனியார். | பயண (பேருந்து) வண்டிகள். தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறை. | சரக்கு வண்டிகள். வாடகை லாரிகள். | சரக்கு வண்டிகள். தனியார் லாரிகள். | ஒப்பந்த வண்டிகள். | பிறமோட்டார் வண்டிகள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1966 டிசம்பர் 31-ம் தேதி .. | 5,395 | 1,423 | 10,623 | 3,134 | 5,788 | 742 | 27,105 |
| 1967 டிசம்பர் 31-ம் தேதி .. | 5,681 | 1,638 | 10,738 | 3,095 | 7,087 | 1,016 | 29,255 |

### போக்குவரத்துத் துறை அமைப்பு.

கீழ்க்காணும் சட்டங்களையும் அவற்றின்கீழ் செய்யப்பட்டுள்ள விதிகளையும் செயல்படுத்துவது இத்துறையின் முக்கிய பணிகளாகும் :—

(1) மோட்டார் வண்டிகள் சட்டம், 1939.

(2) தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம், 1931.

(3) தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் (பயணிகள்–சரக்குகள் வரி விதிப்பு) சட்டம், 1952.

போக்குவரத்துத் துறை, போக்குவரத்துத் துறை ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ்ச் செயல்பட்டு வருகிறது. போக்குவாத்து ஆணையாளர் வருவாய்த்துறை வாரியத்தின் உறுப்பினராவார். மாநில நிலையில் போக்குவரத்துத் துறை ஆணையாளருக்கு இரண்டு துணை போக்குவரத்துத் துறை ஆணையாளர்களும் இரண்டு உதவிச் செயலாளர்களும் துணை செய்கின்றனர். மாவட்டங்களில் கலெக்டர்கள் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். இவர்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் செயலாளராக உதவி புரிகின்றனர். சென்னை மாநகரில் காவல்துறை ஆணையாளர் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாகச் செயல் படுகின்றார். இவருக்கு காவல்துறை துணை ஆணையாளர் (போக்குவரத்து

உரிமம் வழங்கல்) செயலாளராக உள்ளார். இத்துணை ஆணையாளர் மாவட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் எனைய பணிகளை மேற்கொள்கின்றாரோ அத்தகைய பணிகளை மேற்கொள்கின்றார்.

### அனுமதிச் சீட்டுகள் வழங்குதல்.

**பெருந்துகள்.**—பெருந்துப் போக்குவரத்து வசதிகளின் வளர்ச்சி கீழ்க்காணும் வழிமுறைகளில் எய்தப்படுகின்றன :—

(1) புதிய வழித்தடங்களுக்கும், கூடுதலான பெருந்துகளுக்கும் அனுமதிச் சீட்டுகள் வழங்குதல் மூலம் வண்டிகளின் எண்ணிக்கையைப் பெருக்குதல் ;

(2) பெருந்துகளின் பயண ஓட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்தலும், தற்போது உள்ளவற்றை விரிவுபடுத்தலும் ;

(3) தற்போதுள்ள வண்டிகளுக்குப் பதிலாக, பெரிய வண்டிகளை விடுவதன் மூலம் இருக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

பெருந்துகளின் எண்ணிக்கையிலோ அல்லது பெருந்து இருக்கைகளின் எண்ணிக்கையிலோ ஆண்டொன்றுக்கு 10 சத வீதம் உயர்வு ஏற்பட வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும். 1967-ம் ஆண்டில் 145 புதிய வழித்தடங்கள் 472 பெருந்துகளுடன் தொடங்கப்பட்டன. இதனால் கூடுதலாக 28,902 இருக்கைகளுக்கு வகை செய்யப்பட்டன.

### நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து.

பெருந்துப் போக்குவரத்தைப் படிப்படியாக விரிவுபடுத்தும் முறையில் இம்மாநிலத்தில் பயணிகள் பெருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்குவது குறித்த கொள்கையில் அரசாங்கம் மாற்றஞ் செய்துள்ளது. இக் கொள்கையின்படி அரசாங்கம் அடியிற்கண்ட வகையைச் சார்ந்த வழித்தடங்கள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென முடிவு செய்துள்ளது :—

(1) எழுபத்தைந்து மைல்களும் அதற்கு மேலுமுள்ள சாதாரணப் பெருந்துப் பணி—கடுவிசைப் பெருந்துப் பணிகளின் வழித்தடங்கள் ;

(2) நீளம் பற்றிய கருத்தின்றி சென்னை மாநகரிலிருந்து தொடங்கும் அல்லது முடிவடையும் வழித்தடங்கள் அனைத்தும் ;

(3) கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தொடங்கும் அல்லது முடிவடையும் வழித்தடங்கள் உட்பட கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வழித்தடங்கள் அனைத்தும்.

மேற்சொன்ன வகையைச் சேர்ந்த வழித்தடங்கள் குறித்து மோட்டார் வண்டிகள் சட்டத்தின் IV-A அத்தியாயத்தின்கீழ் அவசியமான திட்டங்கள் முடிவு செய்யப்பட்டு வருகின்றன. இவ்வழித்தடங்களில் தனியார் பெருந்துகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமங்கள் முடிவடையும் தறுவாயில் இவ்வழித்தடங்களில் தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறையின் பெருந்துகள் ஓட வகை செய்வதே இதன் நோக்கமாகும். உரிய மரபுகள் பின்பற்றப்பட்ட பின்னரே இந்த வழித்தடங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆந்திரப் பிரதேசம், கேரளம், மைசூர் மாநிலங்கள் வழியாகச் செல்லும் வழித்தடங்களையும் நாட்டுடைமையாக்குவதற்கு அந்தந்த மாநிலங்களுடன் ஏற்பு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டுள்ளன.

நாட்டுடைமைக் கொள்கையின் வண்ணம் மேற்கொள்ளப்பட்ட வழித்தடங்களில் இதுகாறும் பெருந்துகளை இயக்கிவந்த தனியார்களுக்கு மாற்று வழித்தடங்கள் வழங்குவதற்கான கோட்பாடுகளை அரசாங்கம் உருவாக்கி வருகின்றது.



நாட்டுடைமையாக்கப்பட்ட பெருந்துப் போக்குவரத்தின் செயல்முறை குறித்த விரிவான ஆய்வு, மன்றப் பேரவைமுன் தனியாக வைக்கப் பட்டுள்ளது.

### சரக்கு வண்டிகள்.

வளர்ந்துவரும் வாணிபத்திற்கும் வர்த்தகத்திற்கும் ஏற்ப பொது லாரிகளுக்கும் தனியார் லாரிகளுக்கும் மாநில முழுவதிலும் அனுமதிச் சீட்டுகள் தாராளமாக வழங்கப்படுகின்றன. பொது லாரிகளைக் கொண்டு வந்து காண்பித்தவுடன் முறையான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும் வரையில் அவற்றிற்கு தாற்காலிக அனுமதிச் சீட்டுகள் உடனடியாக வழங்கப்படுகின்றன. தென் மாநிலங்கள் முழுவதிலும் சரக்கு வண்டிப் போக்குவரத்து தடையின்றி நடைபெற வகை செய்யும் நோக்குடன் இம்மாநிலத்திலுள்ள பொது லாரிகளுக்குக் கூட்டு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இந்த அனுமதிச் சீட்டுகள் இம்மாநிலத்திலும் கேரளம், மைசூர், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலும் செல்திறன் உள்ளவையாகும். இதற்கு மற்ற மாநிலங்களின் போக்குவரத்து அதிகாரிகள் மேற்கையெழுத்திட வேண்டியதில்லை. 1967-ம் ஆண்டில் இத்தகைய 95 அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

### ஒப்பந்த வண்டிகள்.

இம் மாநிலத்தில் டாக்சிகளுக்கு வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் மாநில முழுவதிலும் தாராளமாக அனுமதிச் சீட்டு வழங்குகின்றனர். சுற்றுப்பயணிகளுக்கு (Tourists) உதவியாக சீர்ப்பெருந்துகளுக்கும் (Omni Buses) ஒப்பந்த வண்டிகளுக்கான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. மேலும் தனி வசதிப் பெருந்துகளுக்கும் (Luxury Coaches), சீர்ப்பயண டாக்சிகளுக்கும் ஒப்பந்த வண்டிகளுக்கான அனுமதிச் சீட்டுகள் மாநிலப் போக்குவரத்து அதிகாரியினால் வழங்கப்படுகின்றன. இந்த அனுமதிச் சீட்டுகள் தமிழ்நாடு முழுவதும் செல்திறனுடையனவாகும். தற்போது இம் மாநிலத்தில் 26 தனி வசதிப் பெருந்துகளும் (Luxury Coaches), 74 சீர்ப்பெருந்துகளும் (Omni Buses), 189 சீர்ப்பயண டாக்சிகளும் இயங்கி வருகின்றன.

சென்னை மாநகரிலும், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய நகராட்சிகளிலும் இயங்கிவரும் டாக்சிகளில் மட்டுமே அளவுப் பொறிகள் (Meters) கட்டாயமாகப் பொருத்தப்படவேண்டுமென விதிக்கப் பட்டுள்ளது. மேற்சொன்ன மூன்று நகராட்சிகளிலும் நகராட்சி எல்லைகளுக்குள் மட்டுமே அளவுப் பொறிகளின்படிக் கட்டணம் வசூலிக்கலாமென்று கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**ஆலோசனை மன்றங்கள்.**—(1) மோட்டார் போக்குவரத்தின் கோட்பாடு, நிர்வாகம் குறித்த முக்கிய பணிகளில் அரசிற்கு ஆலோசனை கூற, அரசு போக்குவரத்துத் துறையின் பொறுப்பு வகிக்கும் அமைச்சரைத் தலைவராகவும் சட்டப் பேரவை உறுப்பினர்களையும் பஸ் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட அரசாங்கப் போக்குவரத்துத் துறை ஆலோசனைக் குழு ஒன்று உள்ளது. முந்திய குழுவின் கால அளவு முடிவடைந்தவுடன இக்குழு மீண்டும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு விரைவில் கூடும்.

(2) மாவட்ட அளவில், மோட்டார்ப் போக்குவரத்து சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் வளர்ச்சி மன்றங்கள் அரசிற்கு ஆலோசனை கூறுகின்றன.

(3) போக்குவரத்துக் கட்டுப்பாட்டையும் போக்குவரத்துப் பாதுகாப்பையும் ஒட்டிய எல்லா நடவடிக்கைகளையும் செவ்வனே கவனிப்பதற்காகத் தமிழக சாலை மேம்பாடு-போக்குவரத்துத் திட்டக்குழு என்னும் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட நிலையில், மாவட்டச்

சாலை மேம்பாடு-போக்குவரத்துத் திட்டக்குழு, மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தனிப்பட்ட குழுவாகச் செயலாற்றி வருகிறது. சென்னை நகரில், இதை முன்னிட்டு, சென்னை நகரச் சாலை மேம்பாடு-போக்குவரத்துத் திட்டக்குழு என்ற தனிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(4) மாநிலத் தலைநகர் நிலையில் சென்னைப் பெருநகர் சாலை வளர்ச்சி-போக்குவரத்துத் திட்டக்குழு என வழங்கப்படுகின்ற குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## வரி விதிப்பு.

மாநிலங்களுக்கிடையே நடைபெறும் போக்குவரத்திற்கும் வாணிகத்திற்கும் ஊக்கமளிப்பதற்காக, போக்குவரத்து வண்டிகள் மீது ஒருமுனை வரி விதிப்பது குறித்து இம் மாநிலத்திற்கும் அண்டை மாநிலங்களான கேரளம், ஆந்திரா, புதுச்சேரி ஆகியவற்றிற்கும் இடையே ஏற்பு உடன்படிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. மைசூர் மாநிலத்தைப் பொறுத்தவரையில் இரு மாநில வழித்தடங்களில் பேருந்து அனுமதிச் சீட்டுகளை பங்கிட்டுக்கொள்வதற்கு ஏற்பு உடன்பாடு ஏற்படுகிறவரை இந்த உடன்பாடு சரக்குப் பேருந்துகளுக்கும், ஒப்பந்தப் பேருந்துகளுக்கு மட்டுமே பொருந்தும். மாநிலங்கள் ஒன்றோடொன்று செய்துகொண்ட ஒப்பந்த அடிப்படையின்கீழ் தமிழ்நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லுகின்ற பேருந்துகள் ஒருமுனை வரிச்சலுகையைக் கீழ்க்கண்டவாறு பெறுகின்றன.

| (1) | தமிழ்நாட்டுச் சரக்குவண்டிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| தமிழ்நாடு-ஆந்திரா .. .. | 1,760 |
| தமிழ்நாடு-மைசூர் .. .. | 700 |
| தமிழ்நாடு-கேரளம் .. .. | 800 |

அனுமதிச் சீட்டுகள் குறித்து இப்போதுள்ள ஏற்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | தமிழ்நாட்டினைச் சேர்ந்தவை. | | | ஏனைய மாநிலங்கள். | | |
|---|---|---|---|---|---|---|
| | பொது வண்டிகள். | தனியார் வண்டிகள். | ஒப்பந்த வண்டிகள். | பொது வண்டிகள். | தனியார் வண்டிகள். | ஒப்பந்த வண்டிகள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| தமிழ்நாடு-ஆந்திரா .. | 2,000 | 100 | 20* | 2,000 | 100 | 20* |
| தமிழ்நாடு-மைசூர் .. | 700 | .. | 20* | 700 | .. | 20* |
| தமிழ்நாடு-கேரளம் .. | 800 | 75 | 150† 20* | 800 | 75 | 150† 20* |

* சிறுலா வாடகை வண்டி, † சாதாரணமானவை.



இந்திய அரசு நிறுவிய சாலைப் போக்குவரத்து வரிவிதிப்பு விசாரணைக் குழுவின இறுதி அறிக்கை அண்மையில்தான் கிடைத்துள்ளது. இதை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. இந்திய அரசு அமைத்த கீழ்க்கண்ட குழுக்களின் அறிக்கை இன்னும் கிடைக்கப்பெறவில்லை :—

(i) ஆதாயம் பயக்கவல்ல வகையில் போக்குவரத்து வண்டிகள் குறித்த ஆயவுக்குழு.

(ii) போக்குவரத்து நிதிவசதி குறித்த ஆய்வுக்குழு.

போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்துவதற்கான வருங்காலத் திட்டங்களை வகுப்பதில் இவ்வறிக்கைகள் பெரிதும் பயனுள்ளவையாக இருக்குமென நம்பப்படுகிறது.

## பேருந்து நிலையங்கள்.

பேருந்து நிலையங்களில் தேவைப்படும் வசதிகள் உள்ளாட்சி மன்றங்கள் விதிக்கவேண்டிய கட்டணங்கள், பேருந்து நிலையங்களை நன்கு பேணி வருவதை உறுதிப்படுத்தும் பொருட்டு வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளிடம் இருக்கவேண்டிய பொறுப்பு முதலியவற்றை வரையறுத்து இந்த அரசாங்கம் தமிழ்நாடு மோட்டார் வண்டி விதிகளின் கீழ் விதிகள் இயற்றியுள்ளது. விதிகளுக்கிணங்க செய்து கொடுத்துள்ள வசதிகளுக்கேற்ப பேருந்து நிலையங்களை வகைப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகயினை வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் அனைவரும் எடுத்து வருகின்றனர்.

## வருவாய்.

தமிழ்நாடு மோட்டார் வண்டி விதிகளின்கீழ் விதிக்கத்தக்க கட்டண வீதங்கள் 1967 நவம்பர் திங்களிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளன. இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 7 இலட்சம் வருவாய் பெருகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1967–68-ம் ஆண்டில், 1—4—1967 முதல் 31—12—1967 வரையுள்ள 9 திங்களில் ரூ. 12·23 கோடி வருவாய் கிட்டியது. எனவே, 1—4—1967 முதல் 31—3—1968 வரை ரூ. 16·31 கோடி கிட்டுமென எதிர்பார்க்கலாம். 1966–67-ம் ஆண்டில் ரூ. 14·96 கோடி மட்டுமே வருவாய் கிட்டியது என்பதை இங்கு நினைவு கூர்வது நல்லது.

## செயற்குறிப்புகள்.

பேருந்து வழித்தட அனுமதிச் சீட்டு கேட்டு விண்ணப்பித்துள்ளோர்களிடையே தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் எந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைய வேண்டுமென வரையறுக்கும் விதிகளை வகுக்கும் பணி விரைவில் முடிவுறும்.

போக்குவரத்து வண்டிகளின் உரிமையாளர்கள் தங்களுடைய வலவர்களே கடுவிசையில் வண்டிகளை ஓட்டிச் செல்லும் குற்றத்தைச் செய்கிறார்கள் என்றும் இதற்குத் தாங்களும் பொறுப்பாளிகள் ஆக்கப்படுவதாகவும் முறையிட்டுள்ளனர். போக்குவரத்து வண்டிகளில் விசைமானிக் கருவிகள் பொருத்தப்பட வேண்டுமென ஆணையிடலாமா என்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. இந்தக் கருவி, பயணம் செய்த தொலைவினையும், சென்ற வேகத்தினையும் காட்டும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும்.

பெரும்பாலான சரக்குப் பேருந்து விபத்துகள் இரவிலேயே நிகழ்கின்றன. ஓய்வேதுமின்றி வலவர்கள் சரக்குப் பேருந்துகளை ஓட்டிச் செல்வதாலேயே இத்தகைய விபத்துகள் நிகழ்கின்றன. எனவே, ஓர்

இரவில் சரக்குப் பேருந்து ஒன்று 200 கிலோ மீட்டருக்குமேல் பயணம் செய்யுமானால் அதில் இரண்டு வலவர்கள் இருக்கவேண்டிய முறையில் விதி ஏற்படுத்தலாமா என்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

சரக்கு பேருந்துகளுக்கு மஞ்சள் வர்ணம் அடித்தால் அவை இரவில் நன்கு தெரியும் என்பதாலும், அவை ஒட்டப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் நன்கு தெரியும் என்பதாலும், அதனால் சரக்குப் பேருந்துகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் அபாயம் குறையும் என்பதாலும், சரக்குப் பேருந்துகளுக்கு மஞ்சள் வர்ணம் அடிக்கவேண்டும் என்று விதி ஏற்படுத்துவது குறித்தும் அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

## முன்னேற்றம்.

பேருந்துப் போக்குவரத்தினை நாட்டுடைமையாக்கும் பணியினைப் படிப் படியாக நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றாலும், தற்போது மோட்டார் வண்டிப் போக்குவரத்துப்பணியினைச் செய்து வருபவர்களுக்கு உள்ள இடர்ப்பாட்டினை அகற்றுவதிலும் அரசாங்கம் கண்ணும் கருத்துமாய் உள்ளது.

உழவர்களுக்கு வசதி செய்யும் நோக்கத்துடன் அரசாங்கம் புதிய ஏற்பாடு ஒன்றைச் செய்துள்ளது. டிராக்டரும் தொடர் வண்டியும், வெவ்வேறானவர்களுக்குச் சொந்தமாயிருப்பினும், டிராக்டர்களுக்கும் தொடர் வண்டிகளுக்கும் செல்திறனுள்ள, அனுமதிச்சீட்டு இருந்தா, அவை வேளாண்மை காரியங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டால், டிராக்டருடன், தொடர் வண்டியையும் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் இப்போது அனுமதி வழங்கியுள்ளது.

நகர்ப்பேருந்துப் பணிகளில் போக்குவரத்து கூட்டம் மிக்க நெரிசல் நேரங்களில் பேருந்துகள் விரைந்து செல்ல முடியாமல் இடர்ப்படுவதைக் குறைக்கும் பொருட்டு, அரசாங்கம் புதிய ஏற்பாடு ஒன்றைச் செய்துள்ளது. இதன்படி நெரிசல் நேரப் போக்குவரத்துக் காலம் நீட்டிக்கப் பட்டுள்ளது. சனிக்கிழமை உட்பட வேலை நாட்களில் நேரப் போக்கு வரத்துக் காலம் முன்னர் காலை 8 மணி முதல் 11 மணிவரையிலும் மாலை 4 மணி முதல் 7 மணி வரையிலும் இருந்தது. இக்கால அளவினை 1967 டிசம்பர் முதற்கொண்டு காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 8 மணி வரையிலும் அரசாங்கம் நீட்டித் துள்ளது.

சரக்குப் பேருந்துகளின் வலவர்கள் தாங்கள் பயணம் செய்யும் 70 மைலுக்கு ஒரு முறை அண்மையிலுள்ள காவல் நிலையத்திற்குச் சென்று, சரக்குப் பேருந்து போக்குவரத்துப் பதிவேட்டில் முன்பெல் லாம் கையெழுத்திடவேண்டி இருந்தது. இதற்காக காவல் நிலை யங்களில் சரக்குப் பேருந்து போக்குவரத்துப் பதிவேடு ஒன்று வைக்கப் பட்டு வந்தது. சரக்குப் பேருந்து உரிமையாளர்களுக்கு இதனால் ஏற்படும் தொல்லைகளைத் தடுக்கும்பொருட்டு, இந்த ஏற்பாட்டினை நிலையாகவே கைவிடுவதென இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

பேருந்துகள் தக்கவாறும் முழுமையாகவும் சிக்கனமாகவும் பயன் படுத்தப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, சாதாரண பேருந்துகள் ஒரு நாளில் பயணம் செய்யக்கூடிய பேரளவுத் தொலை வினை 200 மைலிலிருந்து 250 மைலாக உயர்த்துவதை அனுமதித்து அரசாங்கம் 1967 ஜூன் திங்களில் ஆணை பிறப்பித்துள்ளது.

## முடிவுரை.

சட்ட மன்றப் பேரவையில் விவாதம் நடைபெறும் இத்தருணத்தில் போக்குவரத்து ஒழுங்குமுறை விதிகளையும், போக்குவரத்து வசதிகளையும், மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளையும், கருத்துரைகளையும் அரசாங்கம் மகிழ்ச்சியோடு வரவேற்கும்.



# இணைப்பு.

[33-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துப் போக்குவரத்து.

## 1967-68.

# ஆய்வுரை

1. நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழ்நாடு அரசாங்கத்தின் பயணிகள் பேருந் துப் போக்குவரத்துப் பணி 1967-ல் தனது 21-வது ஆண்டினை எய்தியுள் ளது. அரசாங்கம் மேற்கொண்டு நடத்தும் ஒரு வணிக நிறுவனத்தின் திறமை, முதற்கண் பொதுமக்களுக்கு அது ஆற்றும் பணியைக் கொண்டும், இரண்டாவதாக, அந்த நிறுவனத்தின் நிதி நிலையைக் கொண்டும் பெரும்பாலும் முடிவு செய்யப்படுகிறது. இந்த நிறுவனம் இவ்வாண்டில் கூடுதலாகவும் சிறப்பாகவும் ஆற்றிய போக்குவரத்துப் பணி களின் விவரமும் அது குறித்த மறு ஆய்வும் இந்த ஆய்வுரையின் அடுத்து வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன. 1967-68-ம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் பற்றியும் 1967-68-ம் ஆண்டின் இறு தியில் இந்த நிறுவனம் ஆற்றுமென எதிர்பார்க்கப்பட்ட போக்கு வரத்துப் பணியின் அளவையும் காட்டும் புள்ளி விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | | சென்னைக் கிளை. | | நெடுந்தொலைப் போக்குவரத்துப் பணி. | |
|---|---|---|---|---|---|
| | | 1967 மார்ச் 31-ம் தேதி. | 1968 மார்ச் 31-ம் தேதி (எதிர்பார்க் கப்படுவது). | 1967 மார்ச் 31-ம் தேதி. | 1968 மார்ச் 31-ம் தேதி எதிர் பார்க்கப் படுவது). |
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) | பேருந்துகளின் மொத்தம் எண்ணிக்கை. | 1,026 | 1,327 | 174 | 188 |
| (2) | பேருந்துகளின் பணி எண்ணிக்கை. | 861 | 1,120 | 129 | 146 |
| (3) | வழித் தடங்களின் எண் ணிக்கை. | 185 | 370 | 46 | 55 |
| (4) | வழித்தடங்களின் மொத்த நீளம் (மைல்களில்). | 2,012 | 17,600 | 9,547 | 11,340 |
| (5) | பயணத்தடவைகள் அல் லது ஒற்றைப்பயணங்கள். | 16,743 | 21,780 | 154 | 171 |
| (6) | அன்றாடப் பயண மைல் கணக்கு. | 122,299 | 161,300 | 31,618 | 35,000 |
| (7) | அன்றாடச் சராசரி வசூல் (ரூபாயில்). | 150,000 | 250,000 | 46,000 | 52,000 |
| (8) | அன்றாடம் பயணம்செய்த பயணிகளின் சராசரி எண்ணிக்கை. | 850,000 | 900,000 | 23,000 | 23,700 |

பேருந்துப் போக்குவரத்துப் பிரிவின் இயங்கு திறனை மேம்படுத்தவும் பொது மக்களுக்கு அது ஆற்றும் பணியை மேலும் திறக்கச் செய்யவும் நடவடிக்கைகள் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. இத் துறையின் நிதிநிலை விவரங்கள் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | மூலதன முதலீடு. ஆரம்ப இருப்பு. | இந்த ஆண்டில் சேர்க்கைகள். | இறுதி இருப்பு. | மொத்த வருவாய். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் லட்சத்தில.) | | |
| 1966-67 .. | 1,002·02 | 201·15 | 1.203·17 | 968·15 |
| 1967-68 (எதிர் பார்க்கப்படுவது). | 1,203·17 | 152·98 | 1,356·15 | 1,147·73 |

| | மொத்தச் செலவு. | நிகர வருவாய். | பயணிகள் வசதி நிதி, வளர்ச்சி நிதி, தேய்மான நிதி, தொழிலாளர் வீட்டு வசதி நிதி ஆகியவற்றிற்குத் தொகை வழங்கல். | நிகர ஆதாயம். |
|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| 1966-67 .. | 896·55 | 71·60 | 132·60 | (—) 61·00 |
| 1967-68 (எதிர் பார்க்கப்படுவது.) | 1,039·72 | 108·01 | 145·36 | (—) 37·35 |

1966-67-ல் ரூபாய் 61 லட்சம் இழப்பு ஏற்பட்டதற்குப் பிரிவுவாரி விவரங்கள் வருமாறு:—

| | | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| (1) | அரசாங்கப் பேருந்துப் போக்குவரத்து, சென்னை கிளை. | (—) 62·27 |
| (2) | தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரி. | (+) 1·30 |
| (3) | அரசாங்கப் பேருந்துப் போக்குவரத்து கன்னியாகுமரிக் கிளை. | (—) 5·00 |
| (4) | நெடுந்தொலைப் போக்குவரத்துப் பணிகள் .. .. | (+) 4·64 |
| (5) | இராணித் தோட்டம் பணிக்களரி .. .. .. | (+) 0·33 |

அரசாங்கப் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த சென்னைக் கிளையிலும், கன்னியாகுமரிக் கிளையிலும் ஏற்பட்ட விரயமே துறையினருக்கு ஏற்பட்ட விரயத்திற்குக் காரணமாகும்.

**அரசாங்கப் பேருந்துப் பணி, சென்னைக் கிளை.**—அரசாங்கப் பேருந்துப் பணியைச் சேர்ந்த சென்னைக் கிளையில் முந்திய ஆண்டில் ரூ. 33·91 லட்சம் விரயம் ஏற்பட்டிருக்க, இவ்வாண்டில இந்த இழப்பு ரூ. 62·27 லட்சமாக அதிகரித்தது. இயங்கு செலவு உயர்ந்ததன் காரணமாகவே



விரயம் அதிகரித்துள்ளது. இயக்குவதற்கான செலவுக்கும் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கையின் அதிகரிப்புக்கும் தொடர்பில்லை. விரயம் மிகுந்ததற்கான காரணங்கள் வருமாறு.—

| | | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|
| (1) | 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டும், 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டும் தொழிலாளர்களின் அக விலைப்படி வீதங்களை உயர்த்தியது. | 10·00 |
| (2) | கடுவிசை டீசல் எண்ணெயின் விலையில் 1966-67-ல் ஏற்பட்ட உயர்வு. | 4·50 |
| (3) | நீள்தொலைப் போக்குவரத்துப் பேருந்துகளில் பயன்படுத்தப்பட்ட டயர்களில் ஒரு பகுதியை மாற்றியதின் காரணமாக, டயர்கள், ட்யூப்புகள் ஆகியவற்றின் விலையில் ஏற்பட்ட உயர்வு. | 7·77 |
| (4) | அகவிலைப்படி வீதங்கள் உயர்ந்ததன் விளைவாக, ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்த வேண்டிய பங்குத் தொகை அதிகரிப்பும், அப் பங்குத் தொகை 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு $6\frac{1}{4}$ சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக அதிகரித்ததும் | 1·70 |
| (5) | ரூபாய் மதிப்புக் குறைப்பிற்கு பின்னர் உதிரிப் பகுதிகள் விலை அதிகரித்தது. | 5·10 |
| | மொத்தம் .. | 29·07 |

போக்குவரத்துப் பணியில் ஓட்டப்படும் ஒவ்வொரு பேருந்து மூலமும் 1965-66-ல் திங்கள் ஒன்றுக்கு ரூ. 4,744 வருவாய் கிடைத்திருக்க, 1966-67-ல் இந்த வருவாய் ரூ. 4,965 ஆக அதிகரித்தது. போக்குவரத்துப் பணியில் பயன்படுத்தப்பட்ட பேருந்துகளின் மூலம் அதிக வருவாய் கிடைத்தது என்பது உண்மைதான். ஆனால், பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்கவில்லை. பேருந்துகளை இயக்குவதற்கான செலவு அதிகரித்தது. எனவே, பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை அதிகரித்த போதிலும் சென்ற ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1966-67-ல் விரயம் அதிகரித்துள்ளது.

சென்னை மாநகரப் பேருந்துப் போக்குவரத்துப் பணி போன்ற பெரிய நிறுவனங்களுக்கும் வெளியூர் பேருந்துப் போக்குவரத்துப் பணிக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. சென்னை மாநகரப் பேருந்துப் போக்குவரத்துப் பணிக்கென சிறப்பான சில கூறுகள் உண்டு. வெளியூர் பேருந்துப் போக்குவரத்துப் பணிகளுக்கு இச் சிறப்பான கூறுகள் இல்லை. அதற்குச் சில காரணங்கள் உள்ளன. அவையாவன :—

(1) பேருந்துகளை நிறுத்த வேண்டிய இடங்கள் ஏராளமாக உள்ளபடியாலும், போக்குவரத்து நெரிசல் காரணமாகவும், பேருந்துகளின் டயர்களும் உதிரிப் பகுதிகளும் அதிக அளவிற்குத் தேய்வடைகின்றன.

(2) ஆதாயம் தராத போக்குவரத்துப் பணிகளைப் பொது மக்களின் நலனை முன்னிட்டு நடத்த வேண்டியிருப்பது.

(3) நெரிசல் நேரங்களில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, ஆதாயம் தராத போக்குவரத்துப் பணிகளை நடத்த வேண்டியதன் அவசியம்.

(4) போக்குவரத்து மிகுந்த இடர்ப்பாடான சூழலில் சிக்கனச் செலவில் மைல்களைக் கடக்க இயலாமை காரணமாகவும், 1965-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து ஊழியர் விதிகளைச் சேர்ந்த விதித்துறைகளைக் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டியிருந்தாலும் பேருந்துகள் இயங்கிய அளவுக்கு ஆதாயம் கிடைக்கவில்லை.

பேருந்துகளை இயக்குவதற்கான செலவு அதிகரித்தபோதிலும் கட்டணங்களை அதிகரிக்க முடியாத ஒரு நிலையினாலும் சென்னை மாநகர் பேருந்துப் பணிக்குரிய தனிக் கூறுகளின் காரணமாகவும் சென்னை மாநகரப் பேருந்துப் பணி கடந்த சில ஆண்டுகளாக விரயத்தில் செயல்பட்டு வருகிறது. பம்பாய் மின்சார வழங்கும் போக்குவரத்து நிறுவனமும், டெல்லி போக்குவரத்து நிறுவனமும், கல்கத்தா சாலைப்போக்குவரத்துப் பொறுப்பாண்மைக் கழகமும் விரயத்திலேயே செயல்பட்டு வருகின்றன என்பதை இங்கே குறிப்பிடலாம்.

**அரசாங்கப் பேருந்துப் பணி, கன்னியாகுமரி கிளை.**—அரசாங்கப் பேருந்துப் பணியைச் சேர்ந்த, கன்னியாகுமரிக் கிளை முந்திய ஆண்டில் ரூ. 2·54 லட்சம் ஆதாயத்தில் செயல்பட்டிருக்க, இந்த ஆண்டில் அதில் ரூ. 5 லட்சம் விரயம் ஏற்பட்டுள்ளது. 1965–66-ல் ஆதாயம் ஏற்பட்டதற்கான காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) முந்திய ஆண்டுகளில் தேய்மானம் குறித்து அதிகப்படியாக வசூலிக்கப்பட்ட ரூ. 1·15 லட்சம் 1965–66-ல் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

(2) மூலதன வட்டி ரூ. 1·21 லட்சம் குறைந்தது. இராணித் தோட்டம் பணிக்களரிக்காகத் தனிப்பட்ட கணக்குகள் தயாரிக்கப்பட்டதும், அதன் காரணமாக இக் கணக்குகளுக்கு மூலதனம் மாற்றப்பட்டதும் இதற்குக் காரணமாகும்.

அடியிற்கண்ட இனங்களில் செலவு அதிகரித்ததனால் 1966-67-ல் விரயம் ஏற்பட்டது. பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை அதிகரித்தபோதிலும், பேருந்துகளை இயக்குவதற்கான செலவும் அதிகரித்து விட்டது :—

(1) 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டும், 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டும் அதிகரித்த வீதங்களில் அகவிலைப்படி வழங்கியது ;

(2) அகவிலைப்படி வீதங்கள் உயர்ந்ததன் விளைவாக ஊழியர்கள் வருங்கால வைப்புநிதிக்குச் செலுத்தவேண்டிய பங்குத்தொகை அதிகரித்ததும், அப்பங்குத் தொகை 6¼ சதவீதத்திற்கு 8 சத வீதமாக அதிகரிக்கப்பட்டதும் ;

(3) ரூபாய் செலாவணி மதிப்பு குறைக்கப்பட்டதன் காரணமாகவும் விற்பனை விலை முதலியவற்றின் காரணமாகவும் உதிரிப் பகுதிகளின் விலை அதிகரித்தது ;

(4) டயர்கள், ட்யூபுகள், உயவு எண்ணெய் ஆகியவற்றின் விலை அதிகரித்தது ;

(5) கடுவிசை டீசல் எண்ணெயின் விலை உயர்வு.

போக்குவரத்துப் பணியில் ஓட்டப்படும் ஒவ்வொரு பேருந்து மூலமும் திங்கள் ஒன்றில் 1965–66-ல் ரூபாய் 5,741 வருவாய் கிடைத்தது. இது 1966–67-ல் ரூ. 5,779 ஆக அதிகரித்தது. பேருந்து ஒன்றுக்கு, திங்கள் ஒன்றுக்கு ஆகும் சராசரிச் செலவு 1965–66-ல் ரூ. 5,888 ஆக இருந்தது. இது 1966–67-ல் ரூ. 6,062 ஆக அதிகரித்தது. வருவாய் அதிகரிப்பு மிகவும் குறைவாக இருந்தபோதிலும் முந்திய பத்தியில் குறிப்பிட்டுள்ள காரணங்களினால் செலவு அதிகரிப்பு மிகவும் அதிகமாயிருந்தது. இதனால் 1966–67-ல் அதிக அளவு விரயம் ஏற்பட்டது.



**நீள் தொலைப் பேருந்துப் பணி.**—

1966–67-ல் ரூ. 4·64 லட்சம் ஆதாயம் கிடைத்தது. அதற்கு முந்திய ஆண்டிலோ ரூ. 6·94 லட்சம் ஆதாயம் கிட்டியது. மொத்த வருவாய் ரூ. 31 இலட்சம் அதிகரித்தபோதிலும், செலவு ரூ. 33 லட்சம் அதிகரித்ததால நிகர ஆதாயம் ரூ. 2 இலட்சம் குறைந்தது.

1965–66-ல் பேருந்து ஒவ்வொன்றின் மூலமும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 8,023 வருவாய் கிடைத்தது. இது 1966–67-ல் ரூ. 8,464 ஆக அதிகரித்தது. 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு கட்டணங்கள் 20 சத வீதம் உயர்த்தப்பட்டபோதிலும் போக்குவரத்து குறைந்தபடியால் கட்டண உயர்வின் முழுப் பயனும் இத் துறைக்குக் கிடைக்கவில்லை.

மாதமொன்றுக்கு பேருந்து ஒன்றுக்காகும் செலவு 1965–66-ல் ரூபாய் 7,624 ஆக இருந்தது. இது அடியிற்கண்ட காரணங்களினால் 1966–67-ல் ரூ. 8,234 ஆக அதிகரித்தது :—

(1) 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 1 தேதி முதற்கொண்டும் 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டும் அதிகரித்த வீதங்களில் அகவிலைப்படி வழங்கப்பட்டது ;

(2) அகவிலைப்படி அதிகரித்ததன் காரணமாக ஊழியர்கள் வருங்கால வைப்புநிதிக்குச் செலுத்த வேண்டிய பங்குத்தொகை அதிகரித்ததும், அப் பங்குத் தொகை 6¼ சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக அதிகரித்ததும்;

(3) கடுவிசை டீசல் எண்ணெய் விலை உயர்வு;

(4) டயர்கள், ட்யூபுகள் ஆகியவற்றுக்கான செலவு அதிகரித்ததும் டயர்கள், ட்யூபுகள் விலை அதிகரித்ததும் ;

(5) உதிரிப் பகுதிகள் விலை, தொழிலாளர் செலவு முதலியவை அதிகரித்ததன் காரணமாகவும் ஆண்டுதோறும் செப்பனிடுவதற்காக ஏற்படும் செலவு அதிகரித்ததும்.

பேருந்துகளிலிருந்து கிடைத்த அதிகப்படி வருவாயைவிட பேருந்துகளை இயக்குவதற்கான செலவு உயர்வு மிகுந்திருந்த காரணத்தினால் ஆதாயம் குறைந்தது.

## 3. தமிழ்நாடு பேருந்துப் போக்குவரத்துத் துறையின் சேமநிதிகள்

**(1) தேய்மான சேமநிதி.**—

பேருந்துகள் ஓட்டுவதின் விளைவாக அவற்றில் ஏற்படும் பழுதுகளைச் சரிபார்க்கவும் பயனற்றுப்போன இயந்திரப் பாகங்களுக்குப் பதிலாக, புதியனவற்றை வாங்கவும் ஆகும் செலவைச் சரிக்கட்ட தேய்மான சேமநிதி ஒன்று உள்ளது. 1967–68-ல் மேற்படி நிதியில் சேர்க்கப்பட்ட தொகை மேற்படி நிதியிலிருந்து எடுக்கப்பட்ட தொகை ஆகியவற்றைக் குறித்த புள்ளிவிவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1967 ஏப்ரல் 1-ம் தேதியன்று மேற்படி நிதியில் இருப்பில் இருந்த தொகை. | 4,78·04 |
| 1967–68-ல் சேர்தத தொகைகள் .. .. .. | 145·36 |
| மொத்தம் .. | 623·40 |
| 1967–68-ல் இந் நிதியிலிருந்து எடுக்கப்பட்ட தொகை. | 81·69 |
| 1968 மார்ச் 31-ம் தேதியன்று இந்த நிதியில் இருப்பு (எதிர்பார்ப்பது). | 541·71 |

துறையினருக்குச் சொந்தமான பேருந்துகளின் காரணமாகத் தேய்மான சேமநிதிக்கு மிகுதியான தொகைகள் சேர்க்கப்பட்டன.

**(2) பயணிகள் வசதி நிதி.—**

தொடக்கத்தில் ரூபாய் 3 இலட்சம் தொகையுடன் இந்த நிதி 1960–61-ல் ஏற்படுத்தப்பட்டது. பேருந்துப் போக்குவரத்து நிறுவனம் விரிவடைந்து கொண்டே போகையில் பயணிகளின் வசதிகளை உயர்த்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவே இந்த நிதி வகை செய்யப்பட்டது. 1965-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் தேதி வரையில் இந்த நிறுவனத்தில் தனித்தனிப் பிரிவுகளிலிருந்து கிடைக்கும் நிகர ஆதாயத்திலிருந்து 5 சதவீதம் மேற்படி நிதிக்கு வழங்கப்பட வேண்டுமென்று இருந்தது. 1965–66-ல் முதல் துறை முழுவதற்கும், அதாவது பிரிவுகள் அனைத்தும் அடங்கிய துறை முழுவதற்கும் கிட்டுகிற நிகர ஆதாயத்தில் 5 சதவீதம் மேற்படி நிதிக்கு வழங்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

1967–68-ல் மேற்படி நிதியில் சேர்த்த தொகை, மேற்படி நிதியிலிருந்து வாங்கிய தொகை குறித்த புள்ளிவிவரம் வருமாறு :—

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1967 எப்ரல் 1-ம் தேதியன்று இருந்த இருப்பு .. | 2·67 |
| 1967–68-ல் சேர்த்த தொகை .. .. .. | 0·18 |
| மொத்தம் .. | 2·85 |
| 1967–68-ல் இதிலிருந்து வாங்கிய தொகை .. | .. |
| 1968 எப்ரல் 1-ம் நாளன்று இருப்பு (எதிர்பார்ப்பது). | 2·85 |

1964 அக்டோபர் திங்கள் 1-ம் தேதிக்கு முன்பு மேற்படி நிதிகளை நிர்வகிப்பதில் இயக்குநருக்கு உதவி செய்வதற்கென, சென்னை, கன்னியாகுமரி கிளைகளுக்குத் தனிச் சிறப்பு ஆலோசனைக் குழுக்கள் இருந்தன. சென்னை, கன்னியாகுமரி கிளைகளுக்கான பயணிகள் வசதி நிதிக்கான சிறப்பு ஆலோசனைக் குழுக்கள் கலைக்கப்பட்டதால் 1964, அக்டோபர் திங்கள் 1-ம் தேதி முதல் சென்னை, கன்னியாகுமரி கிளைகளின் போக்குவரத்து ஆலோசனைக் குழுக்கள் கலைக்கப்பட்ட குழுக்களின் அலுவல்களையும் கவனித்துக் கொள்கின்றன.

**(3) வளர்ச்சி நிதி.—**

போக்குவரத்துத் துறையின் பெருகிவரும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபாய் 22·5 இலட்சம் தொடக்கத் தொகையுடன் இந்த நிதி 1960–61-ல் நிறுவப்பட்டது. 1965, மார்ச் 31-ம் தேதி வரையில் இத் துறையின் தனித்தனிப் பிரிவுகளின் நிகர ஆதாயத்தில் 33⅓ சதவீதம் மேற்படி நிதிக்குச் செலுத்தப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தது. 1965–66 முதல் துறை முழுவதன் நிகர ஆகாயத்தில், அதாவது பிரிவுகள் அனைத்தும் அடங்கிய துறை முழுவதன் நிகர ஆதாயத்தில் 33⅓ சதவீதம் மேற்படி நிதிக்கு வழங்கப்படுமென்று வகைசெய்யப்பட்டது,



1968 எப்ரல் 1-ம் நாளன்று இந்த நிதியின் தோராய இருப்புக் குறித்த புள்ளி விவரம் வருமாறு :—

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1967-ம் ஆண்டு எப்ரல் திங்கள் 1-ம் நாளன்று இருப்பு. | 24·26 |
| 1967–68-ல் சேர்த்த தொகை .. .. .. | 1·64 |
| மொத்தம் .. | 25·90 |
| 1967–68-ல் இதிலிருந்து எடுத்த தொகை .. .. | .. |
| 1968 எப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு (எதிர்பார்ப்பது). | 25·90 |

**(4) வீட்டு வசதி நிதி.—**

தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறை தொழிலாளர் வீட்டு வசதி நிதி எனப்படும் நிதியை அரசாங்கம் 1962–63-ல் நிறுவியது. இத் துறையின் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதியையும், ஏனைய வசதியையும் செய்து கொடுப்பதற்கான செலவுக்கு வகை செய்வதே இந்த நிதியின் நோக்கமாகும். ஒவ்வோர் ஆண்டும் தனிப்பட்ட முறையில் தமிழ் நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறையின் நிகர வருவாயிலிருந்து இந்த நிதிக்குத் தொகை வழங்கப்படுகிறது. இவ்வாறு செய்கையில் தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறை ஏற்றுக்கொண்ட பொறுப்புகளும், வீட்டு வசதிக்கான அதன் வேலைத் திட்டமும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

1968 எப்ரல் 1-ம் தேதியன்று இந்த நிதியில் இருக்கக்கூடிய இருப்பைக் கீழ்க்கண்ட புள்ளிவிவரம் காட்டுகிறது :—

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1967 எப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு .. .. | 8·66 |
| 1967–68-ல் சேர்த்த தொகை.. .. .. .. | 0·61 |
| மொத்தம் .. | 9·27 |
| 1967–68-ல் இதிலிருந்து எடுத்த தொகை .. | .. |
| 1968 எப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு (எதிர்பார்ப்பது). | 9·27 |

தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக, தண்டையார்பேட்டையிலும், குரோம் பேட்டைக்கு அண்மையிலுள்ள நெமிலிச்சேரி கிராமத்திலும், நாகர் கோயிலில் நீண்டகரை கிராமத்திலும் நிலம் வாங்கியுள்ளது. தொழிலாளர்களின் நலனுக்காக இந்த இடங்களில் எல்லா வசதிகளுடன் குறைந்த செலவில் வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றி இத் துறை மும்முரமாக ஆய்வு செய்து வருகிறது.

**(5) விபத்து சேம நிதி.—**

இந்த நிதி 1951-ம் ஆண்டு நவம்பரில் ஏற்படுத்தப்பட்டது. பேருந்துகளில் செல்லுகையில் எதிர்பாரா வண்ணமாக ஏற்படும் விபத்துக்களின் வாயிலாக அவ் விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மற்றவர்கள் செய்துகொள்ளும் உரிமைக் கோரிக்கைகளுக்குச் சம்பந்தப்படுகிற செலவைச் சரிக்கட்டப் போதுமான நிதியை வைத்து வருவதே இந்த நிதியின் நோக்கமாகும். ஒவ்வோர் ஆண்டின் வருவாயிலிருந்து ஆண்டுதோறும் மொத்தமாக ரூபாய் 2,000 என்ற ஒரே மாதிரியான வீதம் அல்லது இதன்

செலவுகளைச் செய்த பிறகு மேற்படி நிதியில் ரூபாய் 2 லட்சம் தொகை எஞ்சியிருப்பதற்கு அவசியமான தொகை, இவற்றில் எது குறைவாய் உள்ளதோ அத் தொகை மேற்படி நிதிக்குச் செலுத்தப்படுகிறது.

ஆயினும், இழப்பீட்டுத் தொகை குறித்த செலவு அதிகரித்ததினால், அதனைச் சரிக்கட்ட மேற்படி நிதிக்குச் சென்ற ஆண்டில் ரூபாய் 2 லட்சம் தனிபட்ட முறையில் செலுத்த வேண்டுமென்று, முடிவு செய்யப்பட்டது. 1967-68-ல் இதில் சேர்க்க வேண்டிய தொகை ரூபாய் 3 லட்சம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

1968-ம் ஆண்டு எப்ரல் திங்கள் 1-ம் தேதியன்று மேற்படி நிதியில் இருக்கக்கூடிய இருப்புத் தொகையைக் கீழ்க்கண்ட புள்ளி விவரத்தில் காணலாம் :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1967 எப்ரல் மாதம் 1-ம் தேதியன்று இருப்பு .. | 0·58 |
| 1967–68-ல் சேர்த்த தொகை .. .. .. | 3·00 |
| மொத்தம் .. | 3·58 |
| 1967–68-ல் இதிலிருந்து எடுத்த தொகை .. .. | 3·00 |
| 1968 எப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு (எதிர் பார்ப்பது). | 0·58 |

1965-ல் இந்திய அரசினர் மோட்டார் வண்டிகளின் காப்புறுதி குறித்த விதிகளைத் திருத்தினர். இந்திய அரசினர் பிறப்பித்துள்ள திருத்தங் களையொட்டி ஒரு புதிய விபத்து சேமநிதி ஒன்றை நிறுவுவதற்கான செயற் குறிப்புகள் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகின்றன.

**(6) துயர் தணிப்புக் கருணை நிதி.—**

1960 ஜூன் திங்களில் இந்த நிதி ஏற்படுத்த அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது ஊழியர்களின் ஈமச் சடங்குகளுக்காகும் செலவைச் சரிக்கட்டு வதே இந்த நிதியின் நோக்கமாகும். மேலும் பெரும் விபத்துக்குள்ளான ஊழியர்களின் உடனடியான செலவுக்குப் பணம் வழங்கவும், போக்குவரத் துத் துறைப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துக்களில் சிக்கிய ஏழைகளுக்கு, ஆதரவற்றவர்களுக்கு அல்லது அவர்களது குடும்பத்தினருக்குப் பணம் வழங்கவும் இந்த நிதியிலிருந்து தொகை பயனபடுத்தப்படுகிறது. முதற் கண் இந்த நிதிக்கு ரூ 1,000 செலுத்தப்பட்டது. அரசாங்கம் முதலில் அனுமதித்த ரூ. 1,000 அளவிற்கு இந்த நிதியில் இருப்புத் தொகை இருக்கும்படிச் செய்வதற்கென ஆண்டு தோறும் தொகை சேர்க்கப் படுகிறது.

1968-ம் ஆண்டு எப்ரல் 1-ம் தேதியன்று இருக்கக் கூடிய இருப்புத் தொகையைக் கீழ்க்கண்ட புள்ளி விவரம் காட்டுகிறது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1967 எப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு .. .. | 0·01 |
| 1967–68-ல் சேர்த்த தொகை .. .. .. | 0·02 |
| மொத்தம் .. | 0·03 |
| 1967–68-ல் இதிலிருந்து எடுத்த தொகை .. | 0·02 |
| 1968 எப்ரல் 1-ம் தேதியன்று இருப்பு (எதிர் பார்ப்பது). | 0·01 |



## 4. பேருந்துப் பணியை நாட்டுடைமையாக்குதல்

உலகப் போருக்குப்பின் நாட்டினைச் சீர்படுத்துவது குறித்த மத்தியக் குழு பொதுப் போக்குவரத்து ஏற்பாடு அரசாங்கத்திற்குச் சொந்தமாகவும், அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுவதாகவும் இருகக வேண்டுமென 1944, டிசம்பர் திங்களிலேயே பரிவுரை செய்தது. இப் பரிவுரையினை யொட்டி, தமிழ் நாட்டில் உள்ள பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று 1946 டிசம்பரில் அரசாங்கம் முடிவு செய்தது. 1947 மார்ச் திங்களிலேயே, சென்னை மாநகரில் அப்போதிருந்த 239 தனியார்ப் பேருந்துகட்குக் கூடுதலாக, 30 பேருந்துகளை விடுவதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. நாட்டுடைமையாக்கும் திட்டம் 1947-ம் ஆண்டு அக்டோபரில் உறுதியாகச் செயலுக்குக் கொணரப்பட்டு, ஒவ்வொரு திங்களிலும் கூடுதலான பேருந்துகள் விடப்பட்டன. தனியார் பேருந்து உரிமையாளர்கள் தங்களது பேருந்துப் போக்குவரத்துக்களை நிறுத்திக் கொண்டு வரதனர். படிப்படியாக, 1948, ஜூலைத் திங்களில் சென்னை நகரில் உள்ள நகரப் பேருந்து போக்குவரதது முழுவதும் நாட்டுடைமை யாக்கப்பட்டது.

முதல் நெடுந்தொலை கடுவிசைப் போச்குவரத்து சீர் வசதியுடன் 1959 ஆகஸ்டில் தொடங்கப்பட்டது. 120 மைலுக்கு மேற்பட்ட எல்லா வழித் தடங்களிலும் போக்குவரத்துத் துறையின் விரைவுப் பேருந்துகளை விடப் படவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் அது தொடஙகப்பட்டது. அவ்வப்போது நெடுந்தொலை வழித்தடங்கள் பல தொடங்கப்பட்டன. தற்போது, இம்மாநிலத்தின் மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும்போக்கு வரத்துத் துறையின விரைவுப் பேருந்துப் போக்குவரத்துப பணியினால் இணைக்கப்பட்டுள்ளன.

பயணிகள் பேருந்துப் போக்குவரத்தைப் படிப்படியாக நாட்டுடைமை யாக்கும் நோக்கததுடன் தனியார்ப் பேருந்து உரிமையாளர்களின் உரிமங் களின் செல்திறன் கால அளவு முடிவடைகையில், அவர்களது கீழ்க் கண்ட வகை வழித்தடங்களை நாட்டுடைமையாக்கி, தமிழகப் போக்குவரததுத் துறையின் பேருந்துகளை அவற்றில் ஓட்டுவதென 1967 ஜூன் திங்களில அரசாங்கம் முடிவு செய்தது .—

(அ) 75 மைல்களும் அதற்கு மேற்பட்ட தொலைவும் உள்ள வழித் தடங்கள் அனைத்தும் சாதாரண, கடுவிசைப போக்குவரத்துக்கள் ;

(ஆ) சென்னை மாநகரிலிருந்து வெளிச் செல்கிற, சென்னை மாநகருச்குள் வந்து முடிவடைகிற வழித்தடங்கள் அனைத்தும்—(அவற் றின் நீளம என்னவாக இருபபினும் );

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வழித் தடங்கள் அனைத்தும்—அந்த மாவட்டத்திலிருந்து வெளிச் செல்கிற, அதற்குள் வந்து முடிவடைகிற வழித் தடங்கள உட்பட.

மேற்குறிப்பிட்ட வழித்தடங்களில் பேருந்துப் போக்குவரத்துப் பணியை மேம்படுத்தும் பணிகள் அனைத்தையும் போக்குவரத்துத் துறையே மேற் கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கம் முடிவு செய்தது.

மேற்சொன்ன கொள்கையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட முதல் வழித் தடம் சென்னை—ஆரணி வழித்தடமாகும். 1967 ஆகஸ்ட் ஒன்றுந்தேதி முதல் அதில் போக்குவரத்துத் துறைப் பேருந்துகள் ஓடுகின்றன. அப்போது முதல், வழித்தடங்கள் பல, துறையினரால் மேற்கொள்ளப்பட்டு, துறையினர்ப் பேருந்துகள் அவற்றில் ஓடுகின்றன. அத்தகைய வழித்தடங்களின் பட்டியல் ஒன்று இந்த ஆய்வுரையின் VIII-ம் விவர அறிக்கையில் கொடுக்கப் பட்டுள்ளது. துறையினர் இந்த வழித்தடஙகளை மேற்கொண்டதால் வேலை யிழந்த தனியார்ப் போக்குவரத்து பணியாளர்கள் விண்ணப்பம் செய்து கொள்வதன் மேல் போக்குவ்ரத்துத் துறையினர் அவர்களைத் தகுதியுடைய வர்களாகக் கருதுவார்களாயின், துறையின் பணியில் சேர்த்துககொளளப் படுகின்றனர்.

இந்தப் பணியாளர்கள வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் வர வேண்டியதில்லை.

## 5. துறையினர் மேற்கொண்ட வழித்தடங்களில் இடவசதியும் கட்டணங்களும்

எழுபத்தைந்து மைல்களும் அதற்கு மேற்பட்டும் தொலைவுள்ளவையும் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளவையுமான துறையினர்ப் பேருந்துகளில், இருக்கைகளின் எண்ணிக்கையை 52 என்று வரையறுத்ததன் மூலம், நல்ல இட வசதிக்கு வகை செய்யப்பட்டுள்ளது. எல்லா இருக்கைகளும் முன்நோக்கியே உள்ளன. பயணம் செய்யும் பொதுமக்களின் வசதிக்காக நீர்த் தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 75 மைல்களுக்குக் குறைவான வழித்தடங்களில், சாதாரணமாக 56 இருக்கைகள் கொண்ட வெளியூர் வகைப் பேருந்துகள் ஓட்டப்படுகின்றன.

வழித் தடங்கள் பலவற்றில் தனியார்ப் பேருந்துகளுடன் துறையினர் தங்கள் பேருந்துகளையும் ஓட்ட வேண்டியுள்ளதால், அந்த வழித்தடங்களை மேற்கொண்டவுடன் ஒரே மாதிரியான கட்டண வீதங்களை மேற்கொள்ள இயலாமற் போயிற்று. இந்த வழித்தடங்களை மேற்கொண்ட பிறகு உடனடியாக இவற்றிற்காக கீழ்க்கண்ட வகைக் கட்டண வீதங்கள் மேற்கொள்ளப்பட்டன :—

(அ) 1967 ஜூன் திங்களிலும், அதற்கடுத்த திங்கள்களிலும் தற்காலிக அனுமதிச் சீட்டுகளுடன் இயங்கிய வழித்தடங்கள்—மைல் ஒன்றுக்கு 2 காசு.

(ஆ) தனியார் பேருந்து உரிமையாளர்களிடமிருந்தது, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வழித்தடங்கள்—மைல் ஒன்றுக்கு 2·5 காசு.

(இ) ஏனைய தனியார் பேருந்து உரிமையாளர் இயக்கும் வழித்தடங்களுடன்கூட இயக்கப்படும் வழித்தடங்கள் தனியார் விதிக்கும் அதே கட்டண வீதங்கள். ஆயினும் இப் போக்குவரத்துகளில் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 2·5 காசு என்ற ஒரேபடித்தான கட்டண வீதம் பின்னர் மேற்கொள்ளப்பட்டது. இது குறித்த விவரங்கள் கீழே 9-வது பாராவில் கண்டுள்ளன.

## 6. நிருவனம் செயல்படுதல்

**(i) பேருந்துப் போக்குவரத்து.**—ஒரு போக்குவரத்து நிருவனத்தின் திறன் போக்குவரத்துப் பணிக்காக வழங்கப்படும் பேருந்துகளின் சதவீதத்தையும், சாலைகளில் போக்குவரத்துக்கு ஓட்டப்படும் பேருந்துகளின் சதவீதத்தையும் கொண்டு முடிவு செய்யப்படுகிறது. போக்குவரத்துக்காகவுள்ள வண்டிகளின் மொத்த எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, போக்குவரத்து இயக்கத்தின் சதவீதம், சாலைகளில் ஓடும் பேருந்துகளின் சதவீதம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை. | போக்குவரத்துப் பணிக்காக வழங்கப்பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1966-67 .. .. .. | 1,317 | 1,191 |
| 1967-68 .. .. .. | 1,572 | 1,367 |

| இயக்கத்திறன். | சாலைகளில் ஓடும் பேருந்துகளின் எண்ணிக்கை. | மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கையில் சாலைகளில் ஓட்டப்பட்டவற்றின் சதவீதம். |
|---|---|---|
| (4) | (5) | (6) |
| 90 ./· | 1,069 | 81 |
| 87 ./· | 1,321 | 84 |



1967-68ல் துறையின் இயக்கத்திறன் ஓரளவிற்குக் குறைந்துள்ளது
"லீபார்கோ" வகை வண்டிகள் நகரில் ஓடுவதற்குத் தகுதியற்றவை என்று
மெய்ப்பிக்கப்பட்டதே அதற்கு முக்கிய காரணமாகும். ஆயினும், சாலை
களில் விடப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இடைக்
கிற பேருந்துகளை முழுதும் பயன்படுத்திக் கொள்வதன் மூலம், அவ்வாறு
செய்யப்பட்டது.

இந்த ஆண்டில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை
அவை பயணம் செய்த மைல்கள், வசூல் முதலியவை குறித்த விவரங்
கள் கீழே உள்ள புள்ளி விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஆண்டுத் தொடக்கத்தில் வண்டிகளின் மொத்த எண்ணிக்கை. | ஆண்டில் சேர்க்கைகள். பழையனவற்றிற்குப் பதிலாக. | ஆண்டில் சேர்க்கைகள். புதியவை. | ஆண்டு முடிவில் மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1966-67 .. | 1,256 | 105 | 117 | 1,373 |
| 1967-68 .. | 1,373 | 174 (எதிர்பார்ப்பது). | 398 | 1,771 (எதிர்பார்ப்பது). |

| ஆண்டு. | ஏற்றிச் சென்ற பயணிகள் எண்ணிக்கை. | கட்டணம் வாங்கிய தூரம் (மைல் கணக்கில்). (Revenue) Mileage. | வசூல் (பயணச் சீட்டுகளின் விற்பனை). |
|---|---|---|---|
| | (6) | (7) | (8) ரூ. |
| 1966-67 | .. 34,23,11,981 | 602,29,000 | 8,'3,48,724 |
| 1967-68 | .. 42,30,00,000 | 703,00,000 | 10,37,00,000 |

1966-67-ல் சென்னை நகர, புற நகர், நீள்தொலை பேருந்துப் போக்கு
வரத்துக்களில் நாளொன்றுக்கு ஒரு பேருந்து ஏற்றிச் சென்ற பயணிகளின்
அன்றாட எண்ணிக்கை 906-ஆக இருந்தது. இது 1965-66-ல் 955 ஆக
இருந்தது.

**(ii) குரோம்பேட்டையிலும் நாகர்கோயிலிலும் உள்ள பட்டறைகள்—**
குரோம்பேட்டையிலும், நாகர்கோயிலிலும் உள்ள பட்டறைகளின் வேலை
முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு, | தமிழக அரசு போக்குவரத்துத் துறைக்கென துறையினரின் பட்டறைகளில் கட்டப்பட்ட வண்டி மேல் பகுதிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1966-67 .. .. .. | 224 |
| 1967-68 (எதிர்பார்ப்பது) .. | 572 |

| தனியார் நிறுவனங்களில் கட்டப்பட்ட வண்டி மேல் பகுதிகள். | மொத்தம். |
|---|---|
| (3) | (4) |
| .... | 224 |
| .... | 572 |

தமிழ் நாட்டில் பயணிகள் பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமை யாக்கியதன் மூலம், ஏற்பட்ட அதிகரித்த பணிகளை நிறைவேற்றுவதற்கென குரோம்பேட்டையிலும் நாகர்கோயிலிலும் உள்ள பட்டறைகளின் உற்பத்தித் திறன் இந்த ஆண்டு உயர்த்தப்பட்டது நாட்டத்திற்குரிய ஒன்றாகும்.

தற்போது குரோம்பேட்டையிலுள்ள அரசாங்கப் போக்குவரத்து மத்தியப் பட்டறையின் திறன் நாளொன்றுக்கு இரண்டு வண்டி மேல் பகுதிகள் அல்லது திங்களொன்றுக்கு 50 வண்டி மேற்பகுதிகள் கட்டுவதாகும். இராணித்தோட்டம் பட்டறையின் திறன் திங்களொன்றுக்கு 15 வண்டி மேல் பகுதிகள் கட்டுவதாகும்.

இந்திய உலகத்தொழில்—வாணிக சந்தைக்கு வருகிற பொது மக்களின் வசதிக்கென அந்த சந்தைக்கென ஓடவிடுவதற்காக தனிப்பட்ட முறையில் 3 வண்டிகள் அமைக்கப்பட்டன.

(iii) **பணியாளர்.**—1966–67, 1967–68 ஆண்டுகளில் இத் துறையைச் சேர்ந்த பணியாளர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| (1) | 1966–67 (31–12–1966 அன்றிருந்த படி.) (2) | 1967–68 (31–12–1967 அன்றிருந்த படி.) (3) |
|---|---|---|
| (a) தொழில் நுட்பப் பணியாளர்— | | |
| (i) மேற்பார்வைப் பணியாளர்கள் .. | 230 | 308 |
| (ii) மேற்பார்வைப் பணியாளர்கள் நீங்கலான ஏனைய பணியாளர்கள். | 4,306 | 5,109 |
| மொத்தம் .. | 4,536 | 5,417 |
| (b) போக்குவரத்துப் பணியாளர்— | | |
| (i) மேற்பார்வைப் பணியாளர்கள் .. | 531 | 623 |
| (ii) மேற்பார்வைப் பணியாளர்கள் நீங்கலாக ஏனைய பணியாளர்கள். | 5,758 | 6,734 |
| மொத்தம் .. | 6,289 | 7,357 |

ஆய்வு ஆண்டில் தொழில் நுட்பப் பணியாளர் எண்ணிக்கையில் 881 கூடுதலாகியது. போக்குவரத்துப் பணியாளர்களின் எண்ணிக்கையில் 1,068 கூடுதலாகியது.

## 7. நெரிசல் நேரமற்ற பிற நேரங்களில் போக்குவரத்துகளைக் குறைத்தல்

போக்குவரத்துகள் குறித்த விரைவு அட்டவணைகளைத் தயாரிப்பதற்கென 1967 ஜூலைக்கு முன் மேற்கொள்ளப்பட்ட முறையின்கீழ் காலைக் கறையிலிருந்து இரவு நெடுநேரம் வரை குறிப்பிட்ட இடைக்காலங்களில் போக்குவரத்துக்கள் இயக்கப்பட்டன. ஒரு நாளின் நெரிசல் நேரத்திற்கும் நெரிசலற்ற நேரத்திற்கும் இடையில் வேறுபாடு எதுவும் காட்டப்படவில்லை. நண்பகல் 12 மணிக்கும், பிற்பகல் 3 மணிக்கும் இடையில் நகரின் வழித்தடங்கள் பலவற்றில் பேருந்துகள் காலியாகவே ஓடிக்கொண்டிருந்தன. போக்குவரத்து இயக்கச் செலவைச் சிக்கனப்படுத்துவதன் பொருட்டு நெரிசலற்ற நேரங்களின் பொழுது, அதாவது நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 3 வரையில் நீண்ட இடைவெளிகளில்தான் பேருந்துகளை ஓட்டுவதென முடிவு செய்யப்பட்டது. 24—7—1967 முதல் மேல் குறிப்பிட்ட



இடைவெளிகளின் பொழுது விடப்பட்ட போக்குவரத்துகள் 623 குறைக்கப்பட்டன. அதன் விளைவாக நாளொன்றுக்கு ஏறத்தாழ, 3,000 மைல் மிச்சமாயிற்று. இரண்டாவது, உலகத் தமிழ் மாநாடு காரணமாகவும், 1968-ஆம் ஆண்டு இந்திய உலகத் தொழில்—வாணிகச் சந்தை காரணமாகவும் ஏற்பட்ட அதிகப் போக்குவரத்துச் சிக்கலைத் தீர்க்கும் பொருட்டு இந்த முறை 1—1—1968 முதல் நிறுத்தப்பட்டது. தொழில் சந்தை முடிந்த பிறகு இந்த முறை மீண்டும் கொண்டு வரப்படும்.

## 8. சென்னை கிளையில் கூடுதலான போக்குவரத்துக்களும் வழித்தடங்களும்

(அ) சென்னைக் கிளையில் கீழ்க்கண்ட புதிய வழித் தடங்கள் துவக்கப் பட்டன :—

### (i) நகர, புறநகர் வழித்தடங்கள்

| | | | | பேருந்துகள். |
|---|---|---|---|---|
| 1 | வழித்தடம் | 18 C | பாரிமுனை—சைதாபேட்டை (மேற்கு). | 4 |
| 2 | ஷை | 11 B | பாரிமுனை—தியாகராயநகர் .. | 4 |
| 3 | ஷை | 21 E | பாரிமுனை—பட்டினப்பாக்கம் .. | 2 |
| 4 | ஷை | 61 C | இ. பெ. தொழிற்சாலை—ஆவடி .. | 3 |
| 5 | ஷை | 61 D | ஆவடி புகைவண்டி நிலையம்—ஆவடி விமான தளம். | 1 |
| 6 | ஷை | 15 C | பாரிமுனை—நுங்கம்பாக்கம் புகைவண்டி நிலையம். | 4 |
| 7 | ஷை | 17 D | பாரிமுனை—அசோக் நகர் .. | 4 |
| 8 | ஷை | 27 B | ஷெனாய்நகர்—திருவல்லிக்கேணி | 4 |
| 9 | ஷை | 38 C | டி. வி. கே. நகர்—விவேகானந்தர் இல்லம், | 4 |
| 10 | ஷை | 48 A | இ. பெ. தொழிற்சாலை—பெரம்பூர் | 2 |
| 11 | ஷை | 51 B | பிராட்வே—சித்தலப்பாக்கம் .. | 2 |
| 12 | ஷை | 47 A | இ. பெ. தொழிற்சாலை—அடையாறு | 6 |
| 13 | ஷை | 11 D | பாரிமுனை—ரங்கராஜபுரம் .. | 2 |
| 14 | ஷை | 13 A | தியாகராயநகர்—திருவல்லிக்கேணி .. | 4 |
| 15 | ஷை | 27 C | ஷெனாய் நகர்—திருவல்லிக்கேணி .. | 2 |
| 16 | ஷை | 24 A | அரும்பாக்கம்—சிம்சன் .. .. | 2 |
| 17 | ஷை | 38 D | கலைக்கல்லூரி—மூலக்கடை .. .. | 2 |
| 18 | ஷை | 27 D | பட்டினப்பாக்கம்—தாக்கா சத்திரம் .. | 4 |
| 19 | ஷை | 4 G | மந்தவெளி—தங்கசாலை .. .. | 4 |
| 20 | ஷை | 64 A | உயர்நீதிமன்றம்—மூலக்கடை .. | 2 |
| 21 | ஷை | 71 A | அம்பத்தூர் தொழில்பேட்டை—எழும்பூர். | 2 |
| 22 | ஷை | 14 A | தங்கசாலை—அரும்பாக்கம் .. .. | 4 |
| 23 | ஷை | 5 E | மயிலை—அசோக் நகர் .. .. | 3 |
| 24 | ஷை | 5 C | சைதாப்பேட்டை—மயிலை .. .. | 4 |
| 25 | ஷை | 24 B | விவேகானந்தர் இல்லம்—ஷெனாய் நகர். | 2 |
| 26 | ஷை | 70 A | சென்னை—பழந்தாண்டலம் .. .. | 1 |

(ii) நெரிசல் நேரப் போக்குவரத்து.

| | | | | பேருந்து. |
|---|---|---|---|---|
| 1 | துணைப்போக்குவரத்து | 32 | தியாகராயநகர்—அமைந்தகரை .. | 1 |
| 2 | ஷை | 33 | எழும்பூர்—தண்டையார்பேட்டை .. | 1 |
| 3 | ஷை | 34 | சைதாப்பேட்டை—கௌரிவாக்கம் .. | 1 |

(ஆ) கீழ்க்கண்டுள்ள வழித்தடங்களில் போக்குவரத்து அதிகப்படுத்தப் பட்டுள்ளது :—

| | | | | பேருந்துகள். |
|---|---|---|---|---|
| 1 | வழித்தடம் | 43 | இ. பெ. தொழிற்சாலை—பட்டினப் பாக்கம். | 2 |
| 2 | ஷை | 47 | அடையாறு—இ. பெ. தொழிற்சாலை. | 2 |
| 3 | ஷை | 5 F | அடையாறு—மயிலை .. .. | 2 |
| 4 | ஷை | 21 A | துறைமுகம்—இந்திராநகர் .. .. | 2 |
| 5 | ஷை | 6 | எம்.யூ.சி.—சுங்கச்சாவடி .. .. | 4 |
| 6 | ஷை | 6 C | எம்.யூ.சி.—சுங்கச்சாவடி .. .. | 2 |
| 7 | ஷை | 18 C | பாரிமுனை—சைதாப்பேட்டை .. .. | 2 |
| 8 | ஷை | 4 D | தண்டையார்பேட்டை—எழும்பூர் .. | 2 |
| 9 | ஷை | 61 B | பிராட்வே—வீராபுரம் .. .. | 2 |
| 10 | ஷை | 4 E | தங்கசாலை—அடையாறு .. .. | 2 |
| 11 | ஷை | 29 B | பெரம்பூர்—தியாகராயநகர் .. | 2 |
| 12 | ஷை | 61 D | பூவிருந்தவல்லி—வீராபுரம் .. .. | 1 |
| 13 | ஷை | 21 | பாரிமுனை—மந்தவெளி .. .. | 6 |
| 14 | ஷை | 19 M | பிராட்வே—திருவான்மியூர் .. .. | 2 |

(இ) சென்னைக் கிளைப் போக்குவரத்தில் செய்துள்ள பிற மாறுதல்கள் பின்வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1 | வழித்தடம் | 43 | மந்தவெளியிலிருந்து, பட்டினப்பாக்கத்திற்கு நீட்டிக்கப்பட்டது. |
| 2 | ஷை | 47 | சர்மாநகரிலிருந்து, இ. பெ. தொழிற்சாலைக்கு நீட்டிக்கப்பட்டது. |
| 3 | ஷை | 14 | சர்மாநகரிலிருந்து, அரும்பாக்கத்திற்கு நீட்டிக்கப்பட்டது. |
| 4 | ஷை | 28 C | மலைச்சாலையிலிருந்து, கலைக்கல்லூரிக்கு நீட்டிக்கப்பட்டது. |
| 5 | ஷை | 44 | கொருக்குப்பேட்டையிலிருந்து, இந்திய எண்ணெய் கார்ப்பரேஷனுக்கு நீட்டிக்கப் பட்டது. |
| 6 | ஷை | 6 B | ராயபுரம் காவல் நிலையத்திலிருந்து, காசி மோட்டிற்கு நீட்டிக்கப்பட்டது. |
| 7 | ஷை | 21 A | பாரிமுனையிலிருந்து, துறைமுகத்திற்கு நீட்டிக்கப்பட்டது. |
| 8 | ஷை | 48 A | பெரம்பூரிலிருந்து, மூலக்கடைக்கு நீட்டிக்கப் பட்டது. |



| | | | |
|---|---|---|---|
| 9 | வழித்தடம் | 27 B | சர்மாநகரிலிருந்து, அரும்பாக்கத்திற்கு நீட்டிக்கப்பட்டது. |
| 10 | ஷை | 58 A | ஒரக்காட்டிலிருந்து, அரும்மந்தை கிராஸ் சாலைக்கு நீட்டிக்கப்பட்டது. |
| 11 | ஷை | 18 B | மலைச்சாலையிலிருந்து, பாரிமுனைக்கு நீட்டிக்கப் பட்டது. |
| 12 | ஷை | 10 B | சைதாப்பேட்டையிலிருந்து, கேசவபெருமாள் புரத்திற்கு நீட்டிக்கப்பட்டது. |
| 13 | ஷை | 23 C | கிள்ளியூரிலிருந்து, தாக்கர்சத்திரத்திற்கு நீட்டிக்கப்பட்டது. |
| 14 | ஷை | 32 A | பிரபாத்திலிருந்து, ஸ்டான்லி மருத்துவ மனைக்கு நீட்டிக்கப்பட்டது. |

(ஈ) காலையிலும் மாலையிலும் மாணவர்களுக்கென தனி வண்டிகள் தொடர்ந்து விடப்பட்டன. முக்கிய சந்தைகள், திருவிழாக்கள், கலை நிகழ்ச்சிகள், மாநாடுகள் முதலியவை சம்பந்தமாக ஏற்பட்ட கூடுதல் போக்குவரத்தைச் சமாளிக்க தனி வண்டிகள் ஓட்டப்பட்டன. கூட்டம் அதிகமாயுள்ள வண்டி நிற்குமிடங்களில் பயணச் சீட்டுகள் கொடுக்க தனி கண்டக்டர்களைப் போடும் முறை தொடர்ந்து செயல்பட்டது.

(உ) தற்போது 37 நெரிசல் நேரப் போக்குவரத்துக்கள் (தனிப் போக்கு வரத்துக்கள் உட்பட) நகரில் பல்வேறு வழித்தடங்களில் செயல்படுகின்றன. 130 வழித்தடங்களில் போக்குவரத்துக்கள் மூலம் உரிய ஆதாயம் கிட்டுவ தாயில்லை. அத்துடன், நெரிசல் நேரப் போக்குவரத்து அனைத்தும் தனிப் போக்குவரத்து அனைத்தும் உரிய ஆதாயம் அளிப்பனவாயில்லை. பயணம் செய்யும் பொது மக்களின் நலனை முன்னிட்டும், நெரிசல் நேரப் போக்குவரத்தைச் சமாளிக்கவும் உரிய ஆதாயம் தராத இந்தப் போக்கு வரத்துக்கள் இயக்கப்படுகின்றன.

(ஊ) தற்போது 665 நகரப் போக்குவரத்துக்கள், 37 நெரிசல் நேரப் போக்குவரத்துக்கள், 356 வெளியூர்ப் போக்குவரத்துக்கள், 48 நகர்—வெளியூர்ப் போக்குவரத்துக்கள் இயக்கப்படுகின்றன.

## 9. கட்டணங்களை மாற்றியமைத்தல்.

தமிழகப் போக்குவரத்துத் துறையின் கட்டண வீதங்கள் 1964-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் மாற்றியமைக்கப்பட்டன. எரிபொருள், உதிரிப் பகுதிகள் ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளதைச் சரிக்கட்டவும், வரி விதிப்புகளைச் சரிக்கட்டவும், தொழிலாளர்களுக்கு வசதிகள் வழங்குவதற்காகும் செலவை ஈடு செய்யவும் கட்டண வீதங்கள் மாற்றப்பட்டன. அது முதல் துறையின் பல்வேறு போக்குவரத்துக்களின் கட்டண வீதங்களில் மேற்கொண்டும் செய்யப்பட்ட மாறுதல் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) நீள் தொலைப் போக்குவரத்துக்கள்—மாநிலங்களுக்கிடையில் இயங்கும் விரைவுப் போக்குவரத்துக்கள், கன்னியாகுமரிக் கிளையின் விரைவுப் போக்குவரத்துக்கள் உட்பட.—இந்தப் போக்குவரத்துக்கள் குறித்து 1964-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் சம வெளிகளைப் பொருத்த வரையில் மைல் ஒன்றுக்கு 5 காசு என்ற வீதத்திலும், மலைப் பகுதிகளைப் பொருத்த வரையில, மைல் ஒன்றுக்கு 10 காசு என்ற வீதத்திலும் கட்டணங்கள் விதிக்கப்பட்டன. அவ்வாறு கணக்கிடப்பட்ட கட்டணங்கள் அடுத்துள்ள 25 காசுக்கு முழுமையாக்கப்பட்டன. பின்னர், போக்குவரத்தினை இயக்குவதற்கான செலவு மேலும் அதிகரித்ததைச் சரிக்கட்டும் பொருட்டு, இந்தப் போக்குவரத்துக்களின் கட்டணங்கள், சமவெளிகளைப் பொருத்த வரையில், மைல் 1-க்கு 5 காசு என்பதிலிருந்து 6 காசாகவும், மலைப்பகுதிகளைப் பொருத்த வரையில் மைல் ஒன்றுக்கு 10 காசு என்பதிலிருந்து 12 காசாகவும் உயர்த்தப்பட்டன. அவ்வாறு

கணக்கிடப்பட்ட கட்டணங்கள் அடுத்துவரும் 10 காசின் மடங்கிற்கு முழுமையாக்கப்பட்டன. கட்டணங்கள் உயர்த்தப்பட்ட பிறகு நீள் தொலைப் போக்குவரத்தில் மக்கள் பயணம் செய்வது குறைந்து விட்டது. ஏனென்றால், இரயில்வேக்களிடமிருந்து போட்டி கிளம்பியது பகல் நேரத்தில் கூடுதலான இரயில்கள் விடப்பட்டன. தனியார் பேருந்துப் போக்குவரத்தினரிடமிருந்தும் போட்டி கிளம்பியது. அதிகப்பயணிகள் நீள் தொலைப் போக்குவரத்துப் பேருந்துகளில் பயணம் செய்வதை ஊக்குவிப்பதற்கென, மாநிலங்களுக்கிடையில் இயங்கும் விரைவுப் போக்குவரத்து, கன்னியாக்குமரிக் கிளையின் விரைவுப் போக்குவரத்து உட்பட நீள் தொலைப் போக்குவரத்துக் கட்டணங்களை அரசாங்கம் குறைத்தது. அதாவது, சமவெளிகளைப் பொறுத்த வரையில் மைல் ஒன்றுக்கு 6 காசு என்பதிலிருந்து 5 காசாகவும், மலைப்பகுதிகளைப் பொறுத்த வரையில் 12 காசு என்பதிலிருந்து 10 காசாகவும் அரசாங்கம் 1967-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் கட்டணங்களைக் குறைத்தது. அவ்வாறு கணக்கிடப்பட்ட கட்டணங்கள் அடுத்த 10 காசுக்கு முழுமையாக்கப்பட வேண்டும் என்று ஆணை இடப்பட்டது.

(2) சென்னை மாநகரிலிருந்து 15 மைல் அல்லது 24 கிலோ மீட்டர் தொலைவிற்குள் சென்னை மாநகர்ப் போக்குவரத்துகளும் சென்னைக் கிளையின் புறநகர்ப் போக்குவரத்துக்களும்.—இந்த போக்குவரத்துக்களில் 1964-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் கீழ்க்கண்ட வீதங்களில் கட்டணங்கள் விதிக்கப்பட்டன :—

தோராயமாக, இரண்டு கிலோ மீட்டர் கொண்ட முதல் பயண நிலைக்கு —10 காசு.

தோராயமாக, இரண்டு கிலோ மீட்டர் கொண்ட அடுத்து வரும் ஒவ்வொரு பயண நிலைக்கும் கூடுதலாக—4 காசு.

மேலே குறிப்பிட்ட வீதங்களில் கணக்கிடப்பட்ட மடங்குகளில் கட்டணங்களைச் செலுத்துவதில் வசதிக் குறைவு ஏற்படுவதாகப் பொது மக்களிடமிருந்து முறையீடு வந்தது. பொது மக்களுக்குச் சில்லறைகள் வழங்குவதில் இடர்பாடுகள் உள்ளதாகப் பணியாளர்கள் தெரிவித்தனர். அதே சமயத்தில் சென்னை மாநகருக்குள்ளும், அதையடுத்துள்ள பகுதியிலும் நீள் தொலைப் பயணிகளுக்குச் சிறிது சலுகை அளிக்கப்பட வேண்டும் என்று முறையீடுகள் வந்தன. பேருந்துப் பணியாளர்களும் பயணிகளும் அனுபவித்து வந்த இடர்ப்பாடுகளை நீக்கும் பொருட்டும், நீள் தொலைப் பயணிகளுக்குச் சலுகை அளிக்கும் பொருட்டும், 1967-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் நாள் முதல் கீழே கண்டுள்ளபடி, போக்குவரத்துக்களின் கட்டண வீதங்களை அரசாங்கம் மாற்றியமைத்தது :—

| 1967-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதிக்கு முன்பு நடைமுறையில் இருந்த கட்டணங்கள். | 1967-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் நாள் முதற்கொண்டு மாற்றியமைக்கப்பட்ட கட்டணங்கள். |
|---|---|
| காசு. | காசு. |
| 10 | 10 |
| 14 | 15 |
| 18 | 20 |
| 22 | 20 |
| 26 | 25 |
| 30 | 30 |
| 34 | 35 |
| 38 | 35 |
| 42 | 40 |
| 46 | 45 |
| 50 | 45 |



| 1967 செப்டம்பர் 15-க்கு முன்பு நடைமுறையில் இருந்த கட்டணங்கள். | 1967 செப்டம்பர் 15-ம் நாள் முதற்கொண்டு மாற்றியமைக்கப்பட்ட கட்டணங்கள். |
|---|---|
| காசு. | காசு. |
| 54 | 50 |
| 58 | 55 |
| 62 | 60 |
| 66 | 65 |
| 70 | 70 |
| 74 | 70 |
| 78 | 75 |
| 82 | 80 |
| 86 | 85 |
| 90 | 90 |
| 94 | 90 |
| 98 | 95 |

இப் புதிய வீதங்களில் கட்டணங்களை விதித்து வசூலிப்பதற்காக, 15 கல் தொலைவு அல்லது 24 கிலோ மீட்டர் தொலைவிற்குள்ள புறநகர் பேருந்து வழித்தடங்களின் நீளத்தை, சந்தர்ப்பத்திற்கேற்ப சென்னை பிராட்வே பேருந்து நிலையத்திலிருந்தாவது சென்னை தங்கசாலைப் பேருந்து நிலையத்திலிருந்தாவது கணக்கிட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

(3) சென்னை மாநகரிலிருந்து 15 கல் தொலைவு அல்லது 24 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பாலும் சென்னைக் கிளை இயக்குகின்ற புறநகர்ப் போக்குவரத்து.—இந்தப் போக்குவரத்துக்களில் இப்போது தோராயமாக 2 கிலோ மீட்டர் தொலைவுள்ள முதல் நிலைக்கு 10 காசும் தோராயமாக 2 கிலோ மீட்டர் தொலைவுடைய அடுத்து வரும் நிலைக்கு கூடுதலாக 4 காசும் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது. அரசுத் துறையிலும் தனியார் துறையிலும் ஓட்டப்படுகின்ற மாநகர்ப் பேருந்துகளிலும் 15 கல்லுக்கு மேற்பட்ட தொலைவுடைய புறநகர்ப் பேருந்துகளிலும் விதிமுறை எதுமின்றி பலவாறுகக் கட்டணங்கள் விதித்து வசூலிக்கப்படுகின்றன. புறநகர்ப் பேருந்துகள், நாள்தோறும் தங்கள் வாழ்க்கைத் தொழிலுக்காக சென்னை மாநகர் வரைப் பயணம் செய்யும் பொதுமக்களாலேயே பெரும்பாலும் பயன்படுத்தப் படுகின்றன. எனவே, இவ்வழித் தடங்களில் கட்டண வீதங்களை தாறுமாறுக இல்லாமல் கட்டணங்களை ஐந்து காசின் மடங்குகளில் மாற்றியமைக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதுகின்றது. அதற்கேற்ப, சென்னை மாநகரிலிருந்து 15 கல் அல்லது 24 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட தொலைவுடைய வழித்தடங்களில் சென்னைக் கிளை ஓட்டுகின்ற புறநகர்ப் பேருந்துகளில் 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதற்கொண்டு மாற்றியமைத்த பின்வரும் வீதங்களில் கட்டணம் வசூலிக்க அரசு முடிவு செய்துள்ளது :—

| | |
|---|---|
| (அ) சென்னை மாநகரிலிருந்து 15 கல் தொலைவுடைய சுற்றுப்புறப் பகுதிக்குள். | மேலே (2) துணைப்பாராவில் குறிப்பிட்டுள்ள சென்னை மாநகரப் போக்கு வரத்துகளுக்குரிய கட்டணங்கள். |
| (ஆ) சென்னை மாநகரிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும். | கூடுதலாக 2·5 காசு வசூலிக்கப் படும். |

இக் கட்டணங்கள் 5 காசின் மடங்குகளாக விதிக்கப்படும்; 5 காசின் உயர்ந்த மடங்குகளுக்கு முழுமைத் தொகையாக அமைக்கப்படும். வழித்தடத்தின் தொலைவு சந்தர்ப்பத்திற்கேற்ப சென்னை பிராட்வே பேருந்து நிலையத்திலிருந்தாவது, சென்னை தங்கசாலை பேருந்து நிலையத்திலிருந்தாவது கணக்கிடப்படும்.

(4) சென்னைக் கிளையின் மாவட்டப் போக்குவரத்துப் பேருந்துகள்.—பேருந்துப் போக்குவரத்துப் பணியை நாட்டுடைமையாக்கும் கொள்கையை படிப்படியாகச் செயல்படுத்துவதையொட்டி இத்துறை இப்போது மாவட்டப் போக்குவரத்துக்கள் பலவற்றை இயக்கி வருகின்றது. இந்தப் பேருந்துகளில் வசூலிக்கப்படும் கட்டண வீதங்கள் மேலே 5-வது பாராவில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வேறுபட்டவையாக இருந்தன. பேருந்துக் கட்டணங்களை முடிவு செய்வதில் சரிநிகரான கட்டண விதங்களைப் பின்பற்ற வேண்டியது அவசியமென்றும் மாவட்டப் போக்குவரத்துக்கள் அவற்றிற்குரிய வருவாயை ஈட்டித்தருவதுடன் மாநகரப் பேருந்துகளில் ஏற்படக்கூடிய இழப்பை ஓரளவுக்குச் சரிகட்ட வேண்டுமென்றும் அரசாங்கம் கருதியது. அதற்கேற்ப, சென்னைக் கிளையின் மாவட்டப் போக்குவரததுகளில் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு 2·5 காசு வீதம் கட்டணம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கணக்கிடப்படும் கட்டணம் 10 காசின் உயர் மடங்கிற்கு முழுமையாக்கப்படுகிறது. இதனால் கண்டக்டர்கள் குறைந்த எண்ணிக்கையில் பயணச்சீட்டுக் கட்டுக்களை எடுத்துச் செல்ல வசதியாக இருக்கும். இந்த வண்டிகளில் குறைந்த அளவுக் கடடணம் 20 காசு வசூலிக்கப்படுகிறது. இல்லையென்றால் சென்னை மாநகரில் குருந் தொலைவிற்குப் பயணம் செய்கின்றவர்கள் நெடுந்தொலைப் பயணிகளுக்கு இடம் கிடைக்காதபடி அவற்றில் பயணம் செய்ய முற்படுவார்கள்.

(5) கன்னியாகுமரிக் கிளை.—நாகர்கோயில் நகரிலிருந்து 10 கல் சுற்றளவுக்குள் ஓட்டப்படுகின்ற பட்டணப் பேருந்துகளும் புறநகர்ப் பேருந்துகளும். (ஆ) நாகர்கோயில் பட்டணத்திலிருந்து 10 கல் சுற்றளவுக்கு அப்பாற்பட்ட தொலைவுடைய வழித் தடங்களில் ஓட்டப்படும் புறநகர்ப் பேருந்து போக்குவரதது. (இ) வெளியூர்ப் பேருந்துப் போக்குவரத்து, மாவட்டப் பேருந்துப் போக்குவரத்து, இடை மாநிலப் பேருந்துப் போக்குவரத்து.—இந்தப் பேருந்துப் போக்குவரத்துக்களிலும் தோராயமாக முதல் 2 கிலோ மீட்டர் தொலைவிற்கு 10 காசும், தோராயமாக அடுத்த ஒவ்வொரு 2 கிலோ மீட்டர் தொலைவிற்கும் கூடுதலாக 4 காசும் கட்டண வீதம் இருந்தது. கன்னியாகுமரிக் கிளையிலும் சென்னைக் கிளையில் உள்ளதற்கு நிகரான வீதங்களில் கட்டணங்களை மாற்றியமைக்க வேண்டும் என்று முறையீடுகள் வந்துள்ளன. மேலும், சென்னைக் கிளையில் எந்தக் காரணங்களுக்காக கட்டண வீதங்கள் மாற்றியமைக்கப்பட்டனவோ அவையே கன்னியாகுமரிக் கிளைக்கும் பொருந்தும். எனவே, மேலே குறிப்பிட்ட கன்னியாகுமரிக் கிளையின் கட்டண வீதங்களையும் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு பின்வருமாறு மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது—

(அ) நாகர்கோயில் நகரப் பேருந்துப் போக்குவரத்துகள், நாகர்கோயில் நகரிலிருந்து 10 கல் சுற்றளவுக்குட்பட்ட இடங்களுக்குச் செல்லும் புறநகர்ப் போக்குவரத்துகள்.

சென்னை மாநகரிலிருந்து 15 கல் தொலைவுச் சுற்றுப்புறப் பகுதிக்குள் ஓட்டப்படுகின்ற சென்னைக் கிளையின் மாநகரப் போக்குவரத்துகளுக்கும் புறநகரப் போக்குவரத்துகளுக்கும் மேலே (2) துணைப் பாராவில் கண்டுள்ளவாறு மாற்றியமைக்கப்பட்டு இப்போது நடைமுறையில் உள்ள கட்டண வீதங்களே நாகர்கோயில் நகரிலிருந்து 10 மைல் சுற்றளவுப் பகுதிக்குள் இயக்கப்படுகின்ற நாகர்கோயில் நகரப் பேருந்துப் போக்குவரத்துகளுக்கும் புறநகர்ப் பேருந்துப் போக்குவரத்துகளுக்கும் பின்பற்றப்படும்.

(ஆ) நாகர்கோயில் நகரிலிருந்து 10 கல் தொலைவுச் சுற்றளவிற்கு அப்பாற்பட்ட இடங்களுக்கு கன்னியாகுமரிக் கிளையினால் ஓட்டப்படுகின்ற புறநகர்ப் பேருந்துகள்.



மாற்றியமைக்கப்பட்ட கட்டண வீதங்கள் வருமாறு:—

| | |
|---|---|
| (i) நாகர்கோயிலிருந்து 10 கல் தொலைவுச் சுற்றளவிற்குள். | நாகர்கோயில் நகரப் பேருந்துகளில் வசூலிக்கப்படும் கட்டணங்கள். |
| (ii) நாகர்கோயில் நகரிலிருந்து 10 கல் தொலைவிற்கு அப்பால்—ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும். | கூடுதலாக 2·5 காசு வசூலிக்கப்படும். கட்டணங்கள் 5 காசின் மடங்குகளாக இருக்கும், இவை 5 காசின் உயர் மடங்கிற்கு முழுமையாக்கப்படும். |

(இ) கன்னியாகுமரிக் கிளையின் வெளியூர், மாவட்ட இடை மாநிலப் பேருந்துப் போக்குவரத்துகள்—

மாற்றியமைத்த கட்டணங்கள் ஒரு கிலோ மீட்டருக்கு 2·5 காசுகள். இக் கட்டணங்கள் குறைந்த அளவுக் கட்டணம் 20 காசு என்கிற கட்டணத்திற்குட்பட்டு 10 காசின் உயர்மடங்குகளாக முழுமையாக்கப்படும்.

### 10. விடுமுறை நாட்சலுகைப் பயணச் சீட்டுகள்.

இத் துறையினால் ஓட்டப்படுகின்ற நகரப் பேருந்துகளில் விடுமுறை நாட்சலுகைப் பயணச் சீட்டுகள் வழங்கப்பட வேண்டுமென்று பொது மக்களிடமிருந்து முறையீடுகள் வந்தன. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு 1967-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15-ம் தேதி முதற்கொண்டு விருப்பப் பயணச் சீட்டுகளைப் பயணிகளுக்கும் வழங்குவதற்கான திட்டமொன்றுக்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. இப்பயணச் சீட்டுகள் நகர வழித்தடங்கள் அனைத்துக்கும் செல்லுபடியாகும். இப்பயணச் சீட்டுகள் விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன. அவை எந்த நாளன்று விற்பனை செய்யப்படுகின்றனவோ அந்த நாளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இப்பயணச் சீட்டு ஒவ்வொன்றுக்குமுரிய மதிப்பு ரூ. 1·50 என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

### 11. குருடர்களுக்கும், ஊனமுடையோருக்கும் சலுகை.

இத்துறையின் பேருந்துகளில் பயணம் செய்வதற்கு குருடர்களும் ஊனமுடையோருக்கும் அரசாங்கம் சலுகை வழங்கியுள்ளது. வழங்கப்பட்டுள்ள சலுகை குறித்த விவரங்கள் வருமாறு :—

(அ) இத்துறையின் பேருந்துகளில் குருடர்களும் ஊனமுடையோரும் கட்டணமின்றிப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். இவர்களுக்குத் துணை வருவோருக்கு முழுக் கட்டணம் வசூலிக்கப்படும்.

(ஆ) தன் ஒரு காலைப் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள முடவர்களுக்கும் சலுகை உண்டு.

(இ) குருடர் அல்லது ஊனமுடையோர் துணையின்றித் தாமே பயணம் செய்வார்களானால், அவருக்குத் துணை எதும் தேவையில்லை என்று கருதப்பட்டு, அவருக்குச் சலுகை எதும் வழங்கப்படமாட்டாது.

(ஈ) இப் பேருந்தின் மூலம் பயணம் செய்கின்ற குருடர் அல்லது ஊனமுடைய ஒருவர் சிகிச்சை பெற்று வருகிறார் என்று மருத்துவர் ஒருவரின் சான்றிதழைக் காண்பிக்க வேண்டும் அல்லது மருத்துவமனைச் சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

(உ) இச் சலுகை நகரப் பேருந்துகளில் மட்டுமே அனுமதிக்கத்தக்கதாகும்.

(ஊ) இச் சலுகை சிகிச்சை பெறும் காலத்திற்கு மட்டுமே அனுமதிக்கத்தக்கதாகும்.

### 12. நீள் தொலைப் பேருந்துப் போக்குவரத்து.

(அ) இவ்வாண்டில் பின்வரும் நீள் தொலைப் பேருந்துப் போக்குவரத்துகள் தொடங்கப்பட்டன—

(1) வழித்தடம்—547—திருச்சி-கோடைக்கானல்—2 பேருந்துகள்.
(2) வழித்தடம்—548—சென்னை-நாகப்பட்டணம்—2 பேருந்துகள்.
(3) வழித்தடம்—549—கோயம்புத்தூர்-சேலம்—2 பேருந்துகள்.
(4) வழித்தடம்—550—சென்னை-நெய்வேலி—2 பேருந்துகள்.
(5) வழித்தடம்—551—நாகப்பட்டினம்-தூத்துக்குடி—2 பேருந்துகள்
(6) வழித்தடம்—552—சென்னை-சேலம்—2 பேருந்துகள்.
(7) வழித்தடம்—553—மதுரை-கோயம்புத்தூர்—2 பேருந்துகள்.
(8) வழித்தடம்—554—பழனி-குருவாயூர்—1 பேருந்து.
(9) வழித்தடம்—555—தஞ்சாவூர்-சேலம்—2 பேருந்துகள்.

(ஆ) பயணிகள் பேருந்துப் போக்குவரத்துகளை நாட்டுடைமையாக்கும் திட்டத்தை முன்னிட்டும், செலவைச் சிக்கனப்படுத்த வேண்டிய அவசியத்தைக் கருதியும் அடுத்த ஆண்டில் புதிதாக நீள் தொலை வழித்தடம் எதையும் தொடங்குவதற்கான சாத்தியக்கூறு குறைவே.

(இ) நீள் தொலைப் பேருந்துகளின் மூலம் கிடைக்கிற வருவாயைப் பெருக்கும் பொருட்டு, இப்பேருந்துகளில் 35 இருக்கைகளுக்குப் பதிலாக 39 இருக்கைகள் அமைத்திருக்க வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. இப்போது கட்டப்படும் நீள் தொலைப் பேருந்துகள் அனைத்திலும் 39 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. பழைய வண்டிகளில் படிப்படியே இருக்கைகளின் எண்ணிக்கை 39 ஆக உயர்த்தப்பட்டு வருகிறது. 1967-68-ம் ஆண்டில் இவ்வாறு இருக்கைகள் மாற்றியமைக்கும் வேலை முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) இப்போது, 55 நீள் தொலை வழித்தடங்களில் 146 சீர்வசதிப் பேருந்துகள் ஓட்டப்படுகின்றன.

### 13. கன்னியாகுமரிக் கிளையின் கூடுதல் பேருந்துகளும் வழித் தடங்களும்

(அ) கன்னியாகுமரிக் கிளையில் பின்வரும் புது வழித்தடங்கள் தொடங்கப்பட்டன.—

(i) நகர வழித்தடங்கள்—வெளியூர் வழித்தடங்கள்.

(1) வழித்தடம் 1-D—குருசடை—மகாராஜபுரம்—2 பேருந்துகள்.
(2) வழித்தடம் 15-C—குழித்துறை—கோதையாறு—1 பேருந்து.
(3) வழித்தடம்—17-C—நாகர்கோயில்-குறும்பனை—1 பேருந்து.
(4) வழித்தடம்—29—கொளச்சல்—குலசேகரம்—2 பேருந்துகள்.
(5) வழித்தடம்—23-A—நாகர்கோயில்-முப்பந்தல்—1 பேருந்து.
(6) வழித்தடம்-38-நாகர்கோயில்-கேசவன் புத்தன்துறை-1 பேருந்து.
(7) வழித்தடம்—61—நாகர்கோயில்-சிவகாசி—2 பேருந்துகள்.
(8) வழித்தடம்—62—நாகர்கோயில்-ஸ்ரீவல்லிப்புத்தூர்-2பேருந்துகள்.
(9) வழித்தடம்—63—நாகர்கோயில்-இராஜபாளையம்—2 பேருந்துகள்.
(10) வழித்தடம்-64-காளியாக்காவிளை திருநெல்வேலி-2 பேருந்துகள்.
(11) வழித்தடம்—16-B—தூற்றூர்-கரிங்கல்—1 பேருந்து.
(12) வழித்தடம்—30—குழித்துறை-தேங்கப்பட்டினம்—1 பேருந்து.



(13) வழித்தடம்—12-B—நாகர்கோயில்-மருதன்கோடு—1 பேருந்து.
(14) வழித்தடம்—10-E—துக்கலை-உதயமார்த்தாண்டம்—1 பேருந்து.
(15) வழித்தடம்—14-A—கொல்லங்கோடு-தோடுவெட்டி—1 பேருந்து.

(ii) நெரிசல் நேரப் போக்குவரத்து.

(1) குருசடை-மெக்கா மண்டபம்—1 பேருந்து.
(2) குருசடை-வேர்க்கிலம்பி—1 பேருந்து.
(3) தோடுவெட்டி-ஆலஞ்சோலை—1 பேருந்து.
(4) நாகர்கோயில்-மணக்குடி—1 பேருந்து.
(5) நாகர்கோயில்—பள்ளியாடி—1 பேருந்து.
(6) நாகர்கோயில்-வெள்ளிச்சந்தை—1 பேருந்து.
(7) நாகர்கோயில்-திங்கள்கடை—1 பேருந்து.
(8) குருசடி-திங்கள் சந்தை—1 பேருந்து.
(9) நாகர்கோயில்-மேலக்கிருஷ்ணன் புதூர்—1 பேருந்து.

(ஆ) ஆய்வுக்காலத்தின்போது கூடுதலாகப் பேருந்துப் போக்குவரத்து எதையும் இயக்கவில்லை.

### 14. தொழில் நுட்ப மேம்பாடுகள்.

(அ) **பணிமனைகள்.**—சென்னை மாநகர், சென்னை மாநகரில் இப்போதுள்ள பணிமனைகளில் ஒரு பணிமனையில் எத்தனை பேருந்துகளைத் திறம்பட வைத்துப் பேணுவதற்கு இயலுமோ அத்தனைப் பேருந்துகள் பேணிவரப்படுகின்றன. பயணிகள் பேருந்துப் போக்குவரத்துக்களை நாட்டுடைமையாக்குவதன் காரணமாக, தற்போதுள்ள பேருந்துகளின் எண்ணிக்கையுடன் ஏறத்தாழ 190 வண்டிகள் கூடுதலாகப்படுமென எதிர்பார்க்கப் படுவதைக்கருதி மாநகரில் புதிய பணிமனை ஒன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இதற்காக நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(ஆ) **பணிமனைகள்—வெளியூர்.**—(i) குமிலியில் பணிமனை ஒன்று கட்டப்பட்டுவருகிறது; இது முடிவுறும் தருவாயில் உள்ளது.

(ii) ஆய்வு ஆண்டின்போது தூத்துக்குடியில் ஒரு பணிமனை கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

(iii) பாபநாசம், கோவில்பட்டி, விருதுநகர், உதகமண்டலம், மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, சிதம்பரம், கடலூர், தருமபுரி, திருவண்ணாமலை, தஞ்சாவூர், வேலூர், ஆரணி, காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் புதிய பணிமனைகள் கட்டும் செயற்குறிப்புகள் உள்ளன. நீள்தொலை கடுவிசைப் பேருந்துப் போக்குவரத்துகளையும், மாவட்டங்களில் அரசு எடுத்துக்கொள்ளும் வழித்தடங்களில் இயக்கப்படும் பேருந்துப் போக்குவரத்துகளையும் நடத்தி வருவதற்கு வசதியளிக்கும் பொருட்டு இவ்விடங்களின் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

(இ) **பேருந்து நிலையங்கள்.**—பயணிகளுக்கான வசதிகளைக் கொண்ட பேருந்து நிலையம் ஒன்று பாரி முனையில் இருந்த பேருந்து நிலையத்திற்குப் பதிலாக உயர் நீதி மன்ற வளைவுக்குள் தென்மேற்கு மூலையில் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் தேதி முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது.

எல்லா வசதிகளும் பொருந்திய புதிய பேருந்து நிலையம் ஒன்று உதகமண்டலத்தில் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது.

1968-69-ம் ஆண்டில் புதிதாக எதும் பேருந்து நிலையம் கட்டுவதற்குச் செயற் குறிப்பில்லை. செலவைச் சிக்கனப்படுத்தவேண்டியதன் அவசியத்தை முன்னிட்டு, கிடைக்கும் நிதிகளை [பணிமனை-பேருந்து நிலையங்களாகப் பணியாற்றத்தக்கப் பணிமனைகளைக் கட்டுவதற்குச் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 15. டயர் புதுப்பிக்கும் பிரிவுகள்.

(அ) சென்னையில் உள்ள டயர் புதுப்பிக்கும் பிரிவில் ஐந்து வார்ப்படங்கள் உள்ளன. இப்பிரிவு மூன்று தொடர் முறைகளில் (Shifts) செயல்படுகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில் புதுப்பிக்கப்பட்ட டயர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு. | புதுப்பிக்கப்பட்ட டயர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1966-67 .. — — — .. | 10,094 |
| 1967-68 (31-1-1968 வரை) .. .. .. | 9,707 |

(ஆ) நாகர்கோயிலில் உள்ள தொழிற்சாலையில் இரண்டு வார்ப்படங்கள் உள்ளன. புதுப்பிக்கப்பட்ட டயர்களுக்கான தேவையைச் சரிக்கட்டவும் புதிய டயர்களுக்காகும் செலவைக் குறைக்கவும் இத்தொழிற்சாலை 1967 எப்ரல் முதல் தேதி முதல் மூன்று தொடர் முறைகளில் செயல்படுகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளில் புதுப்பிக்கப்பட்ட டயர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| ஆண்டு. | புதுப்பிக்கப்பட்ட டயர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1966-67 — .. — .. .. | 1,613 |
| 1967-68 (31-12-1967 வரை) .. .. .. | 3,486 |

டயர் புதுப்பிக்கும் பிரிவுகளில் டயர்கள் புதுப்பிக்கப்படுவதுடன், குழல்களும் (Tubes) டயர்களும் ஒட்டிச் செப்பனிடப்படுகின்றன.

## 16. தொழிலாளர் கல்வித் திட்டம்.

தொழிலாளர் கல்வித் திட்டத்தின் நலன்கள் இத்துறையினால் முற்றிலும் பயன்படுத்திக்கொள்ளப்படுகின்றன. இந்திய அரசின் திட்டத்தின்கீழ் தொழிலாளர்-ஆசிரியர்-பயிற்சியாளர் ஆகிய ஒவ்வொருவருக்கும் சுமார் மூன்று மாத காலமுடைய பயிற்சி வகுப்பு உள்ளது. பயிற்சியின் முடிவில், மாநிலத்திற்கு வெளியே உள்ள தொழில் நகரங்களுக்கு ஆய்வுச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்படும். இத்தகைய பயணங்களுக்கு தமிழ்நாட்டு பயணப்படி விதிகளின்கீழ் பயணப்படி வழங்கப்படுகிறது. தொழிலாளர்களின் பயிற்சிக்கால அளவானது, வருகை பூரிப்பூதியம், ஊக்கப் பூரிப்பூதியம் ஆகியவை உட்பட எல்லாக் காரியங்களுக்கும் பணிக்காலமாகவே கொள்ளப்படுகிறது. பயிற்சி பெறுகின்ற போக்குவரத்து நேரிடப் பணியாளர்கள் நாட்படி பெறுவதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர். பயிற்சி பெறுவதற்காக கன்னியாகுமரி கிளையிலிருந்து மதுரைக்கு அனுப்பப்படுகின்ற தொழிலாளர்களுக்கு நாள் படிக்குப்பதிலாக மாதத்திற்கு ரூ. 50 மாற்றுப் பணிப்படி (Deputation Allowance) வழங்கப்படுகிறது. இதைத் தவிர, நாகர்கோயிலிலிருந்து செல்லவும் திரும்பிவரவும் மேற்கொள்ளுகின்ற பயணங்களுக்காக பயணப்படிகளும் வழங்கப்படுகின்றன. இத்துறையின் பணிமனைகளில் பிரிவு நிலை வகுப்புகளை நடத்துவதற்கும் மூன்று மாதங்களுக்கு இத்துறையின்





தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கவும் தொழிலாளர்—பயிற்சி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். பயிற்சியின் முடிவில் தொழிலாளர் பயிற்சி ஆசிரியர்களும் பயிற்சியாளர்களும் தொழிற்சாலைகள் உள்ள இடங்களுக்கு ஆய்வுச சுற்றுப்பயணம் மேற்கொள்வர். இதற்காக இவர்களுக்கு தமிழ்நாட்டு பயணப்படி விதிகளின்படி பயணப்படி வழங்கப்படுகிறது.

பிரிவு நிலை வகுப்புகளில் பயிற்சி பெறுகின்ற தொழிலாளர்களுக்கு தேநீரும் சிற்றுணவுப் பண்டமும் வழங்குவதற்குப் பதிலாக பயிற்சி நாள் ஒன்றுக்கு 50 காசு படி வழங்கப்படுகின்றது. தொழிலாளர்-பயிற்சி ஆசிரியர்களுக்கு அவர்கள் வகுப்புகள் நடத்தும் ஒவ்வொரு நாளிற்கும் ரூ. 1 வீதம் வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பயிற்சியளிக்கப்பட்ட தொழிலாளர்-ஆசிரியர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | |
|---|---|
| 1966-67 .. .. .. .. .. .. .. | 14 |
| 1967-68 .. .. .. .. .. .. .. | 11 |

கடந்த இரண்டு ஆண்டுகளில் பயிற்சி பெற்ற பிரிவு நிலை வகுப்புப் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| 1966-67 .. .. .. .. .. .. | 222 |
| 1967-68 .. .. .. .. .. .. | 263 |

## 17. பயிற்சி

(அ) இந்த அரசாங்கம் பயணிகள் போக்குவரத்தை நாட்டுடமையாக்கும் கொள்கையை மேற்கொண்டுள்ளதையொட்டி, இத்துறை விரைவாக விரிவடைந்துள்ளது. எனவே பயிற்சி பெற்ற பணியாளர் தொழில் நுட்பப் பணியாளர்களும் மிகுதியாகத் தேவைப்படுகின்றனர். பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக முந்திய ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் பின்வரும் பாராக்களில் குறிப்பிட்டுள்ளவாறு பின்பற்றப்பட்டன.

(ஆ) இலேசான வண்டிகளை ஓட்டும் உரிமம் பெற்றுள்ளவர்களுக்கு கனரக வண்டிகளை ஓட்டுவதற்குப் பயிற்சியளிப்பதற்காக அமைக்கப்பட்ட ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி (வலவர் பயிற்சிப்பள்ளி) இவ்வாண்டிலும் தொடர்ந்து நடத்தப்பட்டது. கனரக வண்டி ஓட்டும் உரிமம் பெற்றுள்ளவர்களுக்கு வெவ்வேறான காலங்களுக்கு-பழக்கப் பயிற்சி அளிப்பதற்கான திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

(இ) போக்குவரத்துத் துறையின் சார்பில் திருச்சிராப்பள்ளியிலும் கோயம்புத்தூரிலும் தொடங்கப்பட்ட ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் (வலவர் பயிற்சிப் பள்ளிகள்) இவ்வாண்டில் தொடர்ந்து நடத்தப்பட்டன. பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு இலேசான வண்டிகளை ஓட்டுவதற்கு 30 நாட்களில் பயிற்சியளிப்பதற்காக தனியாக ஏற்படுத்தப்பட்ட ஓட்டுநர் பயிற்சி பள்ளியும் (வலவர் பயிற்சி பள்ளிகள்) ஆய்வாண்டில் தொடர்ந்து செயல்பட்டது.

(ஈ) கண்டக்டர்களாக நியமினம் செய்யப்படத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மூன்று வாரத்திற்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

(உ) 1961-ம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டத்தின்கீழ் தொழில் பழகுநர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான வேலைத் திட்டம் இவ்வாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற 140 பேர்களுக்கு 18 மாதங்களுக்கு இத்துறை பயிற்சியளிக்கின்றது. கன்னியாகுமரிக் கிளையில், 6 மாதக் குறுகிய கால அளவுப் பயிற்சி முறையில் 10 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. பயிற்சியாளர்களுக்கு

வழங்கத்தக்க பயிற்சி உதவித் தொகை 1-1-1967 முதற்கொண்டே பொருந்தும் வகையில் இவ்வாண்டு உயர்த்தப்பட்டுள்ளது; விவரம் வருமாறு :—

| | சென்னையில். | அரசாங்கப் போக்குவரத்து மத்தியப் பணிக் களரியில். | கன்னியாகுமரிக் கிளையில். |
|---|---|---|---|
| | (ரூபாய் மாதத்திற்கு.) | (ரூபாய் மாதத்திற்கு.) | (ரூபாய் மாதத்திற்கு.) |
| (i) பயிற்சியின் முதல் ஆறு மாதக் காலத்திற்கு. | 70 | 60 | 60 |
| (ii) பயிற்சியின் அடுத்த பன்னிரண்டு மாதக் காலத்திற்கு. | 80 | 70 | .. |

இப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்கள் இயன்றவரை இத்துறையின் பணியில் அமர்த்திக் கொள்ளப்படுகின்றனர். தொழில் பழகுநர் பயிற்சித் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டதையொட்டி, தொழிற் பயிற்சிப் பள்ளியில் ஓராண்டுப் பயிற்சியில் தேர்ச்சிப் பெற்றவர்கள் 1968 பிப்ரவரி முதற்கொண்டு இரண்டாண்டுப் பயிற்சிக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஊ) பொறியியல் பட்டம் பெற்றவர்களுக்கு, டிப்ளொமா பெற்றவர்களுக்கு, இந்திய அரசின் பயிற்சி உதவிப் பணம் வழங்குவதற்கான திட்டத்தின்கீழ் பயிற்சியளிக்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இத்துறை ஓராண்டில் பயிற்சி உதவித் தொகை பெறும் 10 முதுநிலைப் பயிற்சியாளர்களுக்கும் 15 இளநிலைப் பயிற்சியாளர்களுக்கும் பயிற்சியளிக்கின்றது.

(எ) இத் துறையின் தொழிலாளர்களுடைய பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் ஓராண்டுக்கால அளவிற்குப் பயிற்சி அளிப்பதற்கும் ஒரு திட்டம் உள்ளது. பயிற்சிக் கால அளவின்போது, பயிற்சியாளர்களுக்கு முதல் ஆறு மாதங்களில் ரூ. 1 வீதமும் அடுத்த ஆறு மாதங்களில் ரூ. 1·50 வீதமும் நாட்படி வழங்கப்படுகிறது.

## 18. தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பணி நலன்கள்.

தொழிலாளர்கள் திறம்படவும் மன நிறைவுடனும் பணியாற்றுவதற்கு ஏதுவாக அவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதில் அரசாங்கம் ஆர்வம் கொண்டுள்ளது. இந் நோக்கத்துடன் ஆய்வு ஆண்டில் பணமாகவும் வசதிகள் செய்து தருவதன் மூலமும் அவர்களுக்குப் பல்வேறு நலன்கள் செய்து தரப்பட்டுள்ளன. அவைகள் கீழே சுருக்கமாக விவரிக்கப் பட்டுள்ளன :—

(i) இம் மாநில அரசாங்க ஊழியர்களின் அகவிலைப்படி வீதங்கள் 1-11-1967 முதல் அதிகரிக்கப்பட்டன. இந்த அதிகரித்த வீதங்கள் இம்மாநில அரசாங்கப் போக்குவரத்துத்துறைத் தொழிலாளர்கள் அனைவருக்கும் பொருந்துவனவாகும். உயரிய அகவிலைப்படி வீதம் காரணமாக தமிழ்நாடு போக்குவரத்துத் துறையினருக்கு அதிகப்படியான செலவு தோராயமாக ஓராண்டிற்கு ரூ. 19 லட்சம் ஆகும்.

(ii) சென்னை மாநகரிலுள்ள எல்லா ஊழியர்களுக்கும் நகர ஈட்டுப்படி அளிக்க அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறையில் அன்றாட ஊதியம் பெறுபவர்கள் உட்பட, அதில் பணியாற்றும் சென்னை மாநகர் தொழிலாளர்கள் அனைவருக்கும் இச்சலுகை பொருந்தும். 1-10-1967 முதல் ஈட்டுப்படி அளிக்கப்படும். சில நிபந்தனைகளுக்குட்பட்டு இந்த ஈட்டுப்படி சம்பளத்தில் 8 சத வீதம், 10 சத வீதம் என்று கணக்கிடப்படும். தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறைக்கு, இதற்காக ஏற்படும் அதிகரித்த செலவு ஆண்டுக்கு ரூ. 9 லட்சம் ஆகும்.



(iii) சென்னை, கன்னியாகுமரிக் கிளைகளின் பணிமனைகளிலுள்ள பேருந்துகளைப் பேணுவதற்கு வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழில் நுட்பத் தொழிலாளர்களுக்கு ஊக்கப் பூரிப்பு ஊதியம் வழங்குவதற்குத் திட்டமுள்ளது. 1-10-1966 முதற்கொண்டு தொழிலாளர்கள் ஒரு திங்களில் ஈட்டக்கூடிய அதிக அளவு நலன்கள் 10 சத வீதத்திலிருந்து 15 சத வீதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன.

(iv) குரோம்பேட்டை பணிக் களரியிலும், இராணித் தோட்டம் பணிக் களரியிலும் மேற்சொன்ன இரண்டு பணிக்களரிகளின் டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலைகளிலும் சேர்க்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு உற்பத்தித் திறனின் அடிப்படையில் ஊக்கப் பூரிப்பு ஊதியம் வழங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அளிக்கத்தக்க பூரிப்பூதியத்தின் அதிக அளவு 1-10-1966 முதற்கொண்டு ஒரு திங்களுக்கு 20 சத வீதத்திலிருந்து 40 சத வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு ஏறத்தாழ 100 சத வீதமாகும்.

(v) வருகைப் பூரிப்பு ஊதியம் வழங்கும் திட்டம் தற்போது சென்னைக் கிளையின் போக்குவரத்து, தொழில் நுட்பத் தொழிலாளர்களுக்குப் பொருந்துகிறது. இப்பூரிப்பு ஊதியம் 1-10-1966 முதல் மாநில அரசாங்கப் போக்குவரத்து மத்தியப் பணி மனையின் தொழிலாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. சில நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்த ஆணைகளின் கீழ் ஆண்டொன்றுக்குத் தொழிலாளர் ஒருவர் ரூ. 90 பெறுவார்.

(vi) பயிற்சியாளர்கள் சட்டத்தின்கீழ், இத்துறையில் பல பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி உதவித் தொகை 1-1-1967 முதற்கொண்டு அதிகரிக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் திங்களொன்றுக்கு ரூ. 10 அதிக உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

(vii) பேருந்துத் தூய்மைப் படுத்தும் வேலை பயில்வோர் இத்துறையில் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். 1-4-1967 முதல் அவர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொழிலாளருக்கும் நாளொன்றுக்கு 50 காசுக்குக் குறையாமல் ஊதியம் உயர்த்தப்பட்டது.

(viii) இந்திய அரசின் தொழிலாளர் கல்வித் திட்டத்தின்கீழ் தொழில் புரிபவர்களாகவும் ஆசிரியர்களாகவும் உள்ளவர்கள், தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்க துறை அளவில் பிரிவு பிரிவாகத் தொழிலாளர்களுக்கு வகுப்புகள் மேற்கொள்ள வேண்டும். அண்மைக் காலம் வரையில், அவர்களுக்குப் படி எதுவும் அளிக்கப்படவில்லை. தொழில் புரிபவர்களாகவும் ஆசிரியர்களாகவும் உள்ள ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் படி, 17—9—1966 முதற்கொண்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ix) தமிழ்நாடு 1965-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் விதிகளின் விதித்துறைகளின் கீழ் ஓய்வெடுத்துக்கொள்ளும் நாளில் அலுவல் மேற்கொள்வதற்கு மிகைநேர ஊதியம், அதிகப்படி ஊதியம் அளிக்கும் நலன்கள் குறைந்த பார வண்டிகள் ஓட்டும் வலவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

(x) உதகமண்டலம், கோடைக்கானல் முதலிய மலை பகுதிகளைத் தலைமையிடங்களாகக்கொண்டுள்ள தொழிலாளர்களுக்கு குளிர்காலப்படியை அண்மையில் அரசாங்கம் அனுமதித்துள்ளது. இத்துறையில் பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களும் குளிர்காலப்படி பெறத் தகுதியுடையவராவர்.

(xi) தமிழ்நாடு சிறப்பு ஊதிய நடைமுறை நூலின் தொகுப்பு I, பாகம் I, 15-வது விதியினையொட்டி, உதகையில் வேலைக்கமர்த்தப்பட்ட பரிசோதனை ஆய்வாளர்களுக்கும் நேரக் கணகாணிப்பாளர்களுக்கும் மலைப்படி வழங்க அண்மையில் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1—2—1966 முதற்கொண்டே இந்தப் படியைக் கொடுக்குமாறு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(xii) தொழிலாளர்களுக்கு நிகராடை உடுத்தக் கதர்த்துணி அளிக்கப்பட்டு வந்தது. கதர்த்துணி நீடித்து உழைக்காமையால் அதற்குப் பதிலாக நிகராடைகள் தைத்துக்கொள்ள கைத்தறித் துணி வழங்கவேண்டுமென்று அவர்கள் முறையிட்டனர். தொழிலாளர்கள் விரும்பியவாறே நிகராடைகள் தைத்துக்கொள்ள கைத்தறித் துணி அளிக்க அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. போக்குவரத்து, தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் தையல் கூலித்தொகை தொழிலாளர் ஒருவருக்கு ரூபாய் 10-லிருந்து 12-ஆக அதிகரிக்கப்பட்டது.

(xiii) சில்லறைச் செலவு நிதியிலிருந்து சம்பளம் அளிக்கப்படும் காவலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஓராண்டுக்கு வழங்கப்பட்டு வந்த இரண்டு தொகுதி நிகராடைகளுக்குப் பதிலாக மூன்று தொகுதி நிகராடைகளுக்கான உடை வழங்க 1967 ஜூலையில் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(xiv) ஆண்டுதோறும் மூன்று தொகுதி நிகராடைகளும், இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை பூட்ஸ்களும் ஓட்டுநர் பயிற்சியளிப்பவர்களுக்கு வழங்க 1968, ஜனவரியில் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஆண்டு ஒன்றுக்குத் தையல் கூலி அளிக்க ரூபாய் 10-ம் மாதம் ஒன்றுக்குச் சலவைப் படியாக ரூபாய் 3-ம் ஓட்டுநர் பயிற்சியளிப்பவர்களுக்கு வழங்க அரசாங்கம் ஒப்பளித்தது.

(xv) இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை பூட்ஸ்கள் வழங்குவதற்குப் பதிலாக, போக்குவரத்து, தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு ஆண்டு தோறும் ஓரளவு மூடிய பத்தானி வகை செருப்புகள் வழங்க அரசாங்கம் ஒப்பளித்துள்ளது.

(xvi) தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்து ஊழியர்கள், பொதுத் தொழிலாளர்கள் சங்கத்தின் அலுவலகம் செயல்பட போக்குவரத்து இல்லத்தில் ஓர் அறை வாடகையின்றி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 19. மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனம்.

மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனம் தமிழ்நாடு அரசாங்கப் போக்குவரத்துத் துறை இயக்குநரின் மேற்பார்வையின் கீழ் தனிப்பிரிவாகச் செயல்பட்டு வருகிறது; இப்பிரிவு அரசாங்கத்தின் பெரும்பான்மைத் துறைகளின் மோட்டார் வண்டிகளைச் செப்பனிட்டும், பேணியும் வருகிறது. இந்த அமைப்பு முழுவதையும் மூன்று நிலைகளில் சீரமைப்பு செய்ய அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்தது; இதன் மூலம், மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனத்தை நம்பியுள்ள அரசாங்கத்தின் பல்வேறு துறைகளின் மோட்டார் வண்டிகள் சிக்கனமாகவும் திறம்பட பேணப்படுவதற்கும் இதனால் தனியார் பணிமனைகளை நம்பியிருக்கும் அவசியத்தைப் போக்கவும் வழி ஏற்படுகிறது.

கடந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்ட முதல் நிலைப்பணி கீழ்க்கண்ட வகைகளில் நிறைவேற்றப்பட்டுள்ளது :—

(அ) சென்னை, தஞ்சாவூர், மதுரை, சேலம் ஆகிய இடங்களிலுள்ள நான்கு பணிக்களரிகளுக்கான கருவிகளும் துணைக் கருவிகளும் வாங்கப்பட்டுள்ளன; பணிக்களரிகளின் பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றக் கூடுதல் பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) சென்னையில் மத்திய பண்டகசாலை சீரமைக்கப்பட்டுள்ளது.

(இ) சென்னை, தஞ்சாவூர், மதுரை, சேலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய ஆறு இடங்களிலிருந்து இயங்கும் ஆறு பரிசோதனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.



கீழ்க்கண்ட இனங்கள் அடங்கிய தற்போதைய பணிக்களரிகளுக்காகப் போதுமான இடவசதி அளிப்பது சம்பந்தமாய் ஒப்பளிக்கப்பட்ட இரண்டாம் நிலை, நிறைவேற்றப்பட்டு வருகிறது :—

(அ) சென்னை, மத்தியப் பணிக்களரிக்காகவும், சேலம் வட்டாரப் பணிக்களரிக்காகவும் நிலத்தைக் கையகப்படுத்தலும், புதிய கட்டிடங்கள் கட்டுதலும்.

(ஆ) தஞ்சாவூரிலும், மதுரையிலும் தற்போதுள்ள கட்டிடங்களை மேம்படுத்தல்.

தஞ்சாவூர், மதுரை, சேலம் ஆகிய இடங்களிலுள்ள வட்டாரப் பணிக்களரிகளைப் போன்று கோயம்புத்தூரிலும், கன்னியாகுமரியிலும் புதிய பணிக்களரிகளை ஏற்படுத்துவது குறித்தது மூன்றாம் நிலை அமைகிறது. இது 1968–69-ல் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சீரமைப்பின் இரண்டு நிலைகளும் நிறைவேற்றப்படும்போது மோட்டார் வண்டிகளைத் திறம்படவும் சிக்கனமாகவும் பேணுதல், சீர் செய்வதற்காகும் செலவுகளைக் குறைத்தல், அதிக எண்ணிக்கையுள்ள வண்டிகளைப் போக்குவரத்திற்குப் பயன்படுத்துதல் ஆகியவை சம்பந்தமாக அரசாங்கத்தின் பல்வேறு துறைகளின் தேவைகளை இந்த நிறுவனம் பூர்த்தி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகைகளில் ஆம் மாநில அரசாங்கத்திற்கு குறிப்பிடக்கூடிய தொகை மிச்சமாகும்.

## 20. பொதுமக்கள் தொடர்பு நடவடிக்கைகள்.

(அ) இத்துறையின் குறிக்கோள், பொதுமக்களுக்கு தொண்டாற்றுவதாகும். இக்குறிக்கோளை எய்த கீழே குறிப்பிடப்பட்ட துணைபாராக்களில் விவரிக்கப்பட்டுள்ள பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) இத்துறை நடத்தும் நீள்தொலைவு போக்குவரத்து, உல்லாசப் பயணம், தனி போக்குவரத்து இவற்றின் கால அட்டவணைகள் இந்த ஆண்டும் தொலைபேசி குறிப்பேடுகளில் (சென்னையிலும் வெளியூர்களிலும்) வெளியிடப்பட்டன.

(இ) ஞாயிற்றுக்கிழமைகளிலும், அரசாங்க விடுமுறை நாட்களிலும், இத்துறை நடத்தும் சிறப்புப் போக்குவரத்து விவரம் அடங்கிய கையேடு வெளியிடப்பட்டு இந்த ஆண்டும் வழங்கப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு அரசாங்கம், போக்குவரத்துத் துறை இயக்குநர், பொதுமக்கள், இத்துறையின் வலவர்கள், கண்டக்டர்கள் கலந்து கொண்டு இத்துறை செயல்படும் விதம் பற்றி விவாதிக்கும் நிகழ்ச்சி ஒன்று அனைத்திந்திய வானொலியில் இடம் பெற்றது.

(உ) பேருந்துகளில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இத் துறையின் பெயர் தற்போது தமிழில் எழுதப்பட்டுள்ளது.

(ஊ) இத்துறையின் எல்லாப் பேருந்துகளிலும் தற்போது வள்ளுவப் பெருந்தகையின் உருவப்படம் பொருத்தப்பட்டு, அவர் இயற்றிய உலகப் பொதுமறையாம் திருக்குறளிலிருந்து ஒரு குறட்பாவும் இடம் பெற்றுள்ளது.

(எ) இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, இத்துறை நடத்தும் வழித்தடங்களில் பல மாறுதல்கள் செய்யவேண்டியிருந்தது; தனிப் பேருந்துகள் இதற்கென விடப்பட்டன. பொது மக்களின் நலனை முன்னிட்டு செய்ய எண்ணிய மாறுதல்களும் செய்த சிறப்பு ஏற்பாடுகளும் அடங்கிய புத்தகம் ஒன்று ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டது. இது சம்பந்தமாக, இத்துறையின் பேருந்துகளில் தமிழ் எவ்வாறு புகுத்தப்பட்டுள்ளதென்பதை விளக்கித் தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் கொடுக்கப்பட்டது. பேருந்துகளில் திருக்குறட்பாக்கள் எவ்வாறு எழுதப்பட்டுள்ளன என்பது குறித்தும் அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டது.

(ஏ) நன்னடத்தைக்காக கண்டக்டர்களுக்கும் விபத்துக்களைத் தவிர்த்து திறம்பட ஓட்டுவதற்காக வலவர்களுக்கும் பணம் பரிசாக அளிக்கும் கோட்பாடு பின்பற்றப்பட்டது. ரூ. 240 இதுவரையில் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. பொது போர்மேன் ஒருவருக்கு அளிக்கப்பட்ட பரிசுத் தொகை

ரூ. 50 குறித்துச் சிறப்பாகக்குறிப்பிடலாம். அவர் பணிமுடிந்து ஓய்வில் இருக்கும்போது பேருந்து ஒன்றின் இயந்திரத்தில் கோளாறு இருப்பதைக் கண்டுபிடித்து விபத்தை தவிர்த்தார்.

(ஐ) 1968-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இறுதியில் துவக்கப்பட்டு, மார்ச் திங்கள் பதினோராம் நாள் வரை அறிஞர் அண்ணா நகரில் அனைத்திந்திய உற்பத்தியாளரால் நடத்தப்பட்ட இந்திய-உலக வர்த்தக மற்றும் தொழில் சந்தை, சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து மட்டுமின்றி, இம்மாநிலம் மற்றும் இந்திய நாட்டின் மற்றெல்லாப் பகுதிகளிலிருந்தும் கூட மக்கள் கூட்டத்தைப் பெருமளவில் தன்பால் ஈர்த்தது. முக்கியமாக, விடுமுறை நாட்களில் சந்தையைப் பார்க்க மக்கள் ஏராளமாக வந்தனர். இவ்வாறு வந்த மக்களுக்குத் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சில சமயங்களில் புறநகர் பகுதிகளிலிருந்தும் கூடத் தனி வண்டிகள் செலுத்திப் போக்குவரத்து வசதியளித்தது. இச் சந்தைக்காக அறிஞர் அண்ணா நகரில் உரிய காலத்தில் நிறுவப்பட்டத் தனி பேருந்து நிலையம் நன்கு பயன்படுத்தப்பட்டது. சந்தை அமைந்த நிலப்பரப்பு இருநூறு ஏக்கர்களுக்கு மேலிருந்ததால், மக்கள் மேல் நோக்காகச் சாலைகளைச் சுற்றிப் பார்க்க வசதியாகச் சந்தையின் பெரு வீதிகளில் பேருந்துகளைச் செலுத்துவது விரும்பத்தக்கதெனக் கருதப்பட்டது. இக்கருத்தை குறிக்கோளாகக் கொண்டு, நன்கு அலங்கரித்த மூன்று பேருந்து வண்டிகளை தனியாகப் படைத்து, போக்குவரத்துத் துறை சந்தையின் பெரு வீதிகளில் செலுத்தியது. இவ் வண்டியில் ஒரு தடவை செல்வதற்கு ஒரு நபருக்கு ஐம்பது காசு வசூலிக்கப்பட்டது. இத் தனி வண்டிகள் பெருங் கூட்டத்தை ஈர்த்தன. மக்கள் இவ் வண்டிகளில் செல்வதற்காகச் சில சமயங்களில் நீள் வரிசைகளில் காத்து நின்றனர். சந்தைக்கு வந்தவர்கள் இவ் வண்டிகளின் சிறப்பான அமைப்பையும், அவர்களுக்காக செய்த போக்குவரத்து வசதிகளையும் போற்றினர். இத் தனி வண்டிகளைப் படைக்கச் செய்த செலவைவிட இவைகளின் வருமானம் மிகுதியாகவே இருந்தது.

21. பொது.

பயணிகள் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கும் அரசாங்கத்தின் கோட்பாட்டினால் 1967–68-ம் ஆண்டில் பெருமளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. முன்னைய ஆண்டில் 117 வண்டிகள் கூடுதலாக வாங்கப்பட்டிருக்க தற்போது 398 புதிய வண்டிகள் வாங்கப்பட்டுள்ளன. போக்குவரத்தை அதிகப்படுத்துவதனால் திரப்பட பேருந்துகள் பேணப்படுவதற்குப் பணிமனைகள் கட்டுவது அவசியமாகிறது. கூடுதல் பணிமனைகள் கட்டும் திட்டம், சிக்கனம் காரணமாகக் குறைக்கப்பட வேண்டியதாயிற்று. பயணிகளின் வசதிகளைப் பெருக்கக்கூடிய வகையில் பேருந்து நிலையங்கள் கட்டுவதும் சிக்கனம் பற்றி மெதுவாகச் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளது. இடர்பாடுகள் இருப்பினும், ஆய்விலுள்ள இந்த ஆண்டில் இத்துறை பெரும் பணியாற்றியுள்ளது.

பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கும் திட்டத்தின் காரணமாக 1968–69-ல் இம்மாநிலத்தின் பல பகுதிகளில் போக்குவரத்துகள் நடத்தப்படுவது ஒருங்கிணைப்புச் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. முன்பு குறிப்பிட்டுள்ளதைப்போன்று, நாட்டுடைமையாக்கும் திட்டத்தின்கீழ் பெருமளவு எண்ணிக்கையுள்ள போக்குவரத்துக்கள், சில வேளைகளில் குறுகியகால அறிவிப்பில் போக்குவரத்துக்கு விடப்பட்டன. நாட்டுடைமையாக்கப்பட்டதனால் ஏற்படும் நலன்கள் பொது மக்களுக்குக் கிட்டத்தொடங்கும் வகையில் அரசாங்கப் போக்குவரத்துப் பேருந்துகள் விடப்பட்டதன் விளைவாக எழுந்துள்ள பல நடைமுறை இடர்பாடுகளையும் சிக்கல்களையும் விரைந்து தீர்க்கும் நோக்கத்தில் அரசாங்க இத்துறை கவனமுடன் ஆராய்ந்து வருகிறது. பேருந்துப் போக்குவரத்து நேரங்களையும், போக்குவரத்து அட்டவணைகளையும், கட்டண வீதங்களையும் மாற்ற வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் வந்துள்ள பல முறையீடுகளைக் கவனமுடன் இத்துறை ஆலோசிக்கிறது. 1968–69-ம் நிதி ஆண்டின் தொடக்கத்தில் மாவட்ட வழித்தடங்களில் இத்துறைப் போக்குவரத்துகளைச் சீரமைக்கும் நிலை ஏற்படும்.



## புள்ளி விவர அறிக்கை I.

பேருந்துகளின் மொத்த எண்ணிக்கையும் சாலையில் ஓட்டப்படும் பேருந்துகளின் சராசரி எண்ணிக்கையும்

| ஆண்டு. (1) | ஆண்டு இறுதியில் இருந்த பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை. (2) | ஆண்டில் சாலையில் ஓட்டப்படும் பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1959-60 .. .. .. | 561 | 386 |
| 1960-61 .. .. .. | 695 | 537 |
| 1961-62 .. .. .. | 770 | 569 |
| 1962-63 .. .. .. | 814 | 629 |
| 1963-64 .. .. .. | 950 | 690 |
| 1964-65 .. .. .. | 1,076 | 789 |
| 1965-66 .. .. .. | 1,256 | 937 |
| 1966-67 .. .. .. | 1,373 | 1,009 |
| 1967-68 (எதிர்பார்க்கப்படுபவை) | 1,771 | 1,420 |

## புள்ளி விவர அறிக்கை II.

ஆண்டொன்றில் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிதாக வாங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கையும் அதிகரித்த பேருந்துகளின் எண்ணிக்கையையும் காட்டும் புள்ளி விவர அறிக்கை.

| ஆண்டு. (1) | பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிதாக வாங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை. (2) | அதிகரித்த பேருந்துகளின் எண்ணிக்கை. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| 1959–60 .. .. | 114 | 10 | 124 |
| 1960–61 .. .. | 35 | 134 | 169 |
| 1961–62 .. .. | 11 | 75 | 86 |
| 1962–63 .. .. | 130 | 44 | 174 |
| 1963–64 .. .. | 43 | 136 | 179 |
| 1964–65 .. .. | 137 | 126 | 263 |
| 1965–66 .. .. | 113 | 180 | 293 |
| 1966–67 .. .. | 105 | 117 | 222 |
| 1967–68 (எதிர்பார்க்கப்படுபவை) | 174 | 398 | 572 |

[1968 மார்ச் 16

## புள்ளி விவர அறிக்கை III.

**1959-60-ம் ஆண்டிலிருந்து 1967-68-ம் ஆண்டு வரை கிடைத்த வருவாய், ஏற்பட்ட செலவு, நிகர வருவாய், ஆதாயம் ஆகியவற்றின் விவரம்.**

| ஆண்டு. | மொத்த வருவாய். | ஏற்பட்ட செலவு. | நிகர வருவாய். | நிதி. | நிகர ஆதாயம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1959-60 .. | 266·53 | 201·70 | 64·83 | 37·73 | 27·10 |
| 1960-61 .. | 316·27 | 239·67 | 76·30 | 61·37 | 15·23 |
| 1961-62 .. | 391·65 | 297·21 | 94·44 | 75·81 | 18·63 |
| 1962-63 .. | 468·96 | 378·72 | 90·24 | 77·82 | 12·42 |
| 1963-64 .. | 550·83 | 487·10 | 63·73 | 91·82 | (—)28·09 |
| 1964-65 .. | 675·82 | 589·43 | 86·39 | 104·63 | (—)18·24 |
| 1965-66 .. | 839·27 | 740·67 | 98·60 | 112·99 | (—)14·39 |
| 1966-67 .. | 968·15 | 896·55 | 71·60 | 132·60 | (—)61·00 |
| 1967-68 (எதிர்பார்க்கப்படுபவை) | 1,147·73 | 1,039·72 | 108·01 | 145·36 | (—)37·35 |



| செலவின் விவரம். | 1966-67 (கணக்குகள்). | 1967-68 (எதிர் பார்க்கப் படுபவை). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் லட்சத்தில்). | |
| **I. A. நேர்முகச் செலவு—தொடர்ச்சி.** | | |
| 9. அரசாங்கப் போக்குவரத்தைச் சேர்ந்த மத்தியப் பணிக்களரியில் ஏற்படும் நேர்முகச் செலவுகள். | 58·24 | 67·11 |
| 10. இராணித் தோட்டம் பணிக்களரியில் ஏற்படும் நேர்முகச் செலவுகள். | 25·77 | 29·64 |
| மொத்தம்—நேர்முகச் செலவுகள் .. | 819·51 | 952·87 |
| **B. மைல் ஒன்றுக்கு ஆகும் நேர்முகச் செலவு—** | ரூ. காசு. | ரூ. காசு. |
| 1. சென்னைக் கிளை .. .. .. | 1·25 | 1·24 |
| 2. கன்னியாகுமரி கிளை .. .. .. | 1·11 | 1·00 |
| 3. நீள் தொலை பெருந்துப்பணி .. .. | 1·22 | 1·30 |
| **II. A. மறைமுகச் செலவு—** | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1. விடுப்பும் ஓய்வூதியமும் .. .. | 16·52 | 19·41 |
| 2. தணிக்கைக் கட்டணம் .. .. | 0·92 | 0·96 |
| 3. மூலதனத்தின் மீது வட்டி .. .. | 50·94 | 56·50 |
| மொத்தம் .. | 68·38 | 76·87 |
| 4. அரசாங்கப் போக்குவரத்தைச் சேர்ந்த மத்தியப் பணிக்களரிக்காக ஏற்படும் மறைமுகச் செலவு. | 6·43 | 7·38 |
| 5. இராணித் தோட்டம் பணிக்களரிக்காக ஏற்படும் மறைமுகச் செலவு. | 2·23 | 2·60 |
| மொத்தம்—மறைமுகச் செலவு | 77·04 | 86·85 |
| **B. மைல் ஒன்றுக்கு ஆகும் மறைமுகச் செலவு—** | | |
| 1. சென்னைக் கிளை .. .. | 0·13 | 0·12 |
| 2. கன்னியாகுமரிக் கிளை .. .. | 0·06 | 0·07 |
| 3. நீள் தொலை பெருந்துப்பணி .. | 0·09 | 0·09 |

## பாகம் II.

| செலவின் விவரம். | 1966-67 (கணக்குகள்). | 1967-68 (எதிர்ப் பார்க்கப் படுபவை). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1. போக்குவரத்துப் பணிக்காகும் நேர் முகச் செலவுகள். | 735·50 | 856·12 |
| 2. அரசாங்கப் போக்குவரத்தைச் சேர்ந்த மத்தியப் பணிக்களரிக்கும், இராணித் தோட்டம் பணிக்களரிக்கும் ஆகும் நேர்முகச் செலவுகள். | 84·01 | 96·75 |
| 3. மொத்தம்—நிறுவனத்தின் நேர்முகச செலவு. | 819·51 | 952·87 |
| 4. போக்குவரத்தப் பணிக்காகும் மறை முகச் செலவு. | 68·38 | 76 87 |
| 5. அரசாங்கப் போக்குவரத்தைச் சேர்ந்த மத்தியப் பணிக்களரிக்கும், இராணித் தோட்டம பணிக்களரிக்கும் ஆகும் மறைமுகச் செல்வு. | 8·66 | 9·98 |
| 6. மொத்தம்—நிறுவனத்தின் மறை முகச செலவு. | 77 04 | 86·85 |
| 7. மொத்தம்—அரசாங்கப் போக்கு வரத் துத்துறை நிறுவனததுக்காகும் நேர் முகச் செலவும் மறைமுகச் செலவும். | 896·55 | 1,039·72 |

## பாகம் III.

| | சேர்க்கும் தொகை. 1966-67. | சேர்க்கும் தொகை. 1967-68 (எதிர் பார்க்கப் படுவது). | 1968 எப்ரல் 1-ம் தேதி நிலவரப்படி முன்னேற்ற இருப்பு, |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1. தேய்மானம் ஒதுக்க நிதி | 132·60 | 145·36 | 541·71 |
| 2. வளர்ச்சி நிதி | .. | .. | 25·90 |
| 3. பயணிகள் வசதி நிதி .. | .. | .. | 2·85 |
| 4. வீட்டு வசதி நிதி .. | .. | .. | 9·27 |
| மொத்தம் .. | 132·60 | 145·36 | 579·73 |



## புள்ளி விவர அறிக்கை V.

| மூலதன முதலீடு. | மொத்தம். | ஒவ்வொரு ஆண்டு சேர்க்கை. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| கீழ்க்கண்ட தேதிய நிலவரப்படி— | | |
| 1959, எப்ரல் 1-ந் தேதி .. .. | 301·84 | 25·66 |
| 1960, எப்ரல் 1-ந் தேதி .. .. | 368·08 | 66·24 |
| 1961, எப்ரல் 1-ந் தேதி .. .. | 433·66 | 65 58 |
| 1962, எப்ரல் 1-ந் தேதி .. .. | 496·05 | 62·39 |
| 1963, எப்ரல் 1-ந் தேதி .. .. | 511·06 | 15·01 |
| 1964, எப்ரல் 1-ந் தேதி .. .. | 688·54 | 177·48 |
| 1965, எப்ரல் 1-ந் தேதி .. .. | 848·86 | 160·32 |
| 1966, எப்ரல் 1-ந் தேதி .. .. | 1,002·02 | 153·16 |
| 1967, எப்ரல் 1-ந் தேதி .. .. | 1,203·17 | 201·15 |
| 1968, எப்ரல் 1-ந் தேதி (தாற்காலிக மானது). .. | 1,356·15 | 152·98 |

## புள்ளி விவர அறிக்கை VI.

**அரசாங்கப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரியில் கட்டப்பட்ட பேருந்து மேல்பகுதிகளின் எண்ணிக்கை.**

| கால அளவு. | கட்டப்பட்ட மேல் பகுதிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1958-59 .. .. .. .. | 66 |
| 1959-60 .. .. .. .. | 83 |
| 1960-61 .. .. .. .. | 97 |
| 1961-62 . .. .. .. | 127 (20 சீர்வசதிப் பேருந்துகள், 3 சரக்குப் பேருந்துகள் உட்பட.) |
| 1962-63 .. .. .. .. | 122 (28 சீர்வசதிப் பேருந்துகள் உட்பட.) |
| 1963-64 .. .. .. .. | 182 (37 சீர்வசதிப் பேருந்துகள், 7 சரக்குப் பேருந்துகள் உட்பட.) |
| 1964-65 .. .. .. .. | 292 (42 சீர்வசதிப் பேருந்துகள், சரக்குப் பேருந்துகளாக மாற்றப்பட்ட 60 பேருந்து கள், ஏனைய 15 பணிகள் உட்பட.) |

| கால அளவு. (1) | கட்டப்பட்ட மேல் பகுதிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1965-66 .. .. .. .. | 324 (23 சிர்வசதிப் பேருந்துகள், ஏனைய துறைகளுக்காகச் செய்யப்பட்ட 61 பணிகள் உட்பட.) |
| 1966-67 .. .. .. .. | 342 (15 சிர்வசதிப் பேருந்துகள், மத்தியப் பிரதேசத்திற்காக 7 பேருந்துகள், ஏனைய துறைகளுக்காகச் செய்யப்பட்ட 151 பணிகள் உட்பட.) |
| 1967-68 .. .. .. .. | 432 (5 கடுவிசைப் பேருந்துகள், 112 விசைப் பேருந்துகள், 2 சரக்குப் பேருந்துகள் உட்பட.) |

## புள்ளி விவர அறிக்கை VI

**இராணித் தோட்டம் பணிக்களரியில் கட்டப்பட்ட பேருந்து மேல் பகுதிகளின் எண்ணிக்கை.**

| கால அளவு. (1) | கட்டப்பட்ட மேல் பகுதிகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. 1964-65 .. .. .. .. | 44 (4 சிர்வசதிப் பேருந்துகள் உட்பட.) |
| 2. 1965-66 .. .. .. .. | 60 (21 சிர்வசதிப் பேருந்துகள் உட்பட. ஆனால் ஏனைய துறைகளுக்காகச் செய்யப்பட்ட 23 பணிகள் நீங்கலாக.) |
| 3. 1966-67 .. .. .. .. | 72 (7 சிர்வசதிப் பேருந்துகள், ஏனைய துறைகளுக்கான 32 பணிகள் உட்பட.) |
| 4. 1967-68 .. .. .. .. (எதிர்ப்பார்க்கப் படுபவை) | 129 (12 சிர்வசதிப் பேருந்துகள், அரசாங்கத்தின் மற்ற துறைகளுக்கான 12 பேருந்து மேல் பகுதிகள் உட்பட.) |



## புள்ளி விவர அறிக்கை VIII.

**1—8—1967 முதல் ஒட்டப்படும், நாட்டுடைமையாக்கப்பட்ட வழித்தடங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை. (11—2—1968 அன்று உள்ளபடி.)**

| வழித்தட எண். (1) | பேருந்து பயண எண்ணிக்கை. (2) | —லிருந்து—வரை. (3) | ஓட்டப்படும் தேதி. (4) |
|---|---|---|---|
| | | தருமபுரி மாவட்டம். | |
| 450 | 2 | பெங்களூர்—புதுச்சேரி .. | 10—1—1968 |
| 452 | 1 | ஹோசூர்—திருவண்ணாமலை .. | 10—1—1968 |
| 453 | 1 | ஹசூர்—அத்திபெல்லி (எல்லை) .. | 1—1—1968 |
| 454 | 1 | சேலம்—ஹோசூர் .. .. | 1—1—1968 |
| 455 | 1 | சேலம்—திருப்பத்தூர் .. .. | 1—1—1968 |
| 456 | 1 | பெங்களூர்—தருமபுரி .. | 1—1—1968 |
| 457 | 1 | மேட்டூர் அணை—ஜோலார்பேட்டை | 1—1—1968 |
| 458 | 1 | சேலம்—ஜோலார்பேட்டை .. | 1—1—1968 |
| 459 | 1 | பெங்களூர்—திருப்பத்தூர் .. | 1—1—1968 |
| 460 | 2 | தருமபுரி—பெங்களூர் .. | 1—1—1968 |
| 461 | 2 | கிருஷ்ணகிரி—வேலூர் .. | 1—1—1968 |
| 462 | 1 | சேலம்—அத்திபெல்லி (எல்லை) .. | 1—1—1968 |
| 463 | 2 | குமாரபுரம்—சேலம் .. | 1—1—1968 |
| 451 | 1 | சேலம்—சித்தூர் .. | 11—1—1968 |
| | | மதுரை மாவட்டம். | |
| 361 | 1 | திண்டுக்கல்—புதுக்கோட்டை .. | 1—1—1968 |
| 362 | 2 | விருதுநகர்—தேவாரம் .. | 1—1—1968 |
| 363 | 2 | விருதுநகர்—தேவாரம் .. | 1—1—1968 |
| 364 | 2 | மதுரை—பழனி .. | 1—1—1968 |
| 365 | 2 | திண்டுக்கல்—குமிளி .. | 1—1—1968 |
| 366 | 1 | விருதுநகர்—பெரியகுளம் .. | 1—1—1968 |
| | | ராமநாதபுரம் மாவட்டம். | |
| 351 | 1 | தேவகோட்டை—ராமநாதபுரம் .. | 1—1—1968 |
| 352 | 1 | மதுரை—கீழக்கரை .. | 1—1—1968 |
| 353 | 1 | காரைக்குடி—திருச்சி .. | 1—1—1968 |
| 354 | 1 | காரைக்குடி—காவல்காரன்பட்டி .. | 9—1—1968 |
| 355 | 1 | அழகாபுரி—செவல்பட்டி .. | 1—1—1968 |
| 356 | 1 | சாயல்குடி—மதுரை .. | 1—1—1968 |

| வழித்தட எண். | பெருந்து பயண எண்ணிக்கை. | —லிருந்து—வரை. | ஒட்டப்படும் தேதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | **சேலம் மாவட்டம்.** | |
| 401 | 2 | தருமபுரி—ஈரோடு .. | 1—1—1968 |
| 402 | 1 | தருமபுரி—ஈரோடு .. | 1—1—1968 |
| 403 | 2 | சேலம்—திருச்சி .. | 1—1—1968 |
| 404 | 1 | சேலம்—திருச்சி .. | 1—1—1968 |
| 405 | 1 | சேலம்—கடலூர் .. | 1—1—1968 |
| 406 | 2 | திருச்சி—கிருஷ்ணகிரி .. | 1—1—1968 |
| | | *மாநிலப் போக்குவரத்துத்துறை அதிகாரியின் அனுமதி.* | |
| 407 | 1 | சேலம்—அத்திபெல்லி .. | 1—1—1968 |
| 408 | 6 | சேலம்—பெங்களூர் .. | 19—1—1968 |
| 464 | 2 | ஹோசூர்—பெருந்துறை .. | 8—1—1968 |
| 254 | 2 | உதகமண்டலம்—கோழிக்கோடு .. | 26—1—1968 |
| 255 | 2 | உதகமண்டலம்—கோழிக்கோடு .. | 26—1—1968 |
| | | **திருச்சி மாவட்டம்.** | |
| 301 | 1 | புதுக்கோட்டை—பாளையம் .. | 9—1—1968 |
| 302 | 1 | புதுக்கோட்டை—ஈசாநத்தம் .. | 9—1—1968 |
| 303 | 1 | திருச்சி—தாராபுரம் .. | 8—1—1968 |
| 304 | 2 | கும்பகோணம்—துறையூர் .. | 8—1—1968 |
| 305 | 1 | வயல்பாடி—நாமக்கல் .. | 8—1—1968 |
| 306 | 2 | திருச்சி—நெய்வேலி .. | 8—1—1968 |
| 307 | 1 | திருச்சி—மதுக்கூர் .. | 8—1—1968 |
| 308 | 1 | திருச்சி—செந்துறை .. | 8—1—1968 |
| 309 | 1 | திருச்சி—காங்கேயம் .. | 8—1—1968 |
| 201 | 1 | ஆத்தூர்—பெருவளநல்லூர் .. | 11—8—1967 |
| | | **நீலகிரி மாவட்டம்.** | |
| 251 | 2 | உதகமண்டலம்—மைசூர் .. | 2—1—1968 |
| 252 | 1 | உதகமண்டலம்—குண்டலபேட்டை .. | 1—1—1968 |
| 253 | 1 | உதகமண்டலம்—வைத்திரி .. | 1—1—1968 |
| | | **வடஆற்காடு மாவட்டம்.** | |
| 203 | 2 | வேலூர்—திண்டிவனம் .. | 25—10—1967 |



| வழித்தட எண். | பெருந்து பயண எண்ணிக்கை. | —லிருந்து—வரை. | ஒட்டப்படும் தேதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | **செங்கற்பட்டு மாவட்டம்.** | |
| 93 | 1+2 | சென்னை—ஆரணி .. | 1—8—1967 |
| | | | 20—1—1968 |
| 94 | 1 | சென்னை—பெருநகர் .. | 1—8—1967 |
| 202 | 2 | காஞ்சீபுரம்—விழுப்புரம் .. | 16—8—1967 |
| 96 | 1 | சென்னை—மதுராந்தகம் .. | 26—8—1967 |
| 97 | 2 | சென்னை—திருத்தணி .. | 17—9—1967 |
| 102 | 1+1+4 | சென்னை—வேலூர் .. | 1—12—1967 |
| | | | 10—12—1967 |
| | | | 10—2—1968 |
| 205 | 1 | காஞ்சீபுரம்—திருவண்ணாமலை .. | 14—12—1967 |
| 100 | 1 | சென்னை—கடலூர் .. | 15—12—1967 |
| 207 | 1 | காஞ்சீபுரம்—திருவண்ணாமலை .. | 12—1—1968 |
| 115 | 2 | சென்னை—தண்டரை .. | 15—1—1968 |
| 116 | 1 | சென்னை—கொரட்டூர் .. | 15—1—1968 |
| 117 | 1 | சென்னை—அரண்வாயல் .. | 15—1—1968 |
| 118 | 1+1 | சென்னை—திருநின்றவூர் .. | 15—1—1968 |
| | | | 10—2—1968 |
| 119 | 1 | பூவிருந்தவல்லி—வாலாஜாபாத் .. | 18—1—1968 |
| 120 | 1 | படப்பை—பூவிருந்தவல்லி .. | 18—1—1968 |
| 121 | 1 | சென்னை—ஸ்ரீபெரும்புதூர் .. | 20—1—1968 |
| 76 | 1 | சென்னை—காஞ்சீபுரம் .. | 20—1—1968 |
| 59 | 2 | சென்னை—அகரம் .. | 20—1—1968 |
| 103 | 1+1+2 | சென்னை—நாயுடுபேட்டை .. | 20—1—1968 |
| | | | 10—2—1968 |
| 104 | 1+3 | சென்னை—வந்தவாசி .. | 20—1—1968 |
| | | | 10—2—1968 |
| 94எ | 2 | சென்னை—பெருநகர் ... | 20—1—1968 |
| | | .. | 20—1—1968 |
| 107 | 1 | சென்னை—அமரம்பேடு .. | 20—1—1968 |
| 108 | 1 | சென்னை—சதுரங்கப்பட்டினம் .. | 20—1—1968 |
| 88சி | 1+3 | சென்னை—குன்னத்தூர் .. | 20—1—1968 |
| | | .. | 10—2—1968 |
| | | .. | 20—1—1968 |
| 111 | 2+1 | சென்னை—நம்பாக்கம் .. | 20—1—1968 |
| | | | 10—2—1968 |
| 112 | 1 | சென்னை—வரதய்யபாளையம் .. | 30—1—1968 |
| 110 | 1 | சென்னை—செய்யாறு .. | 20—1—1968 |
| 113 | 1 | சென்னை—கண்ணம்பாக்கம் .. | 20—1—1968 |

| வழித்தட எண். | பேருந்து பயண எண்ணிக்கை. | —லிருந்து—வரை. | ஒட்டப்படும் தேதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | செங்கற்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி. | |
| 92 | 1 | சென்னை—ஊத்துக்கோட்டை .. | 3—2—1968 |
| 132 | 2 | சென்னை—பெரியபாளையம் .. | 3—2—1968 |
| 131எ | 1 | சென்னை—காடிப்புத்தூர் .. | 3—2—1968 |
| 131பி | 1 | சென்னை—முக்கரம்பாக்கம் .. | 3—2—1968 |
| 124 | 1 | சென்னை—நாகலாபுரம் .. | 3—2—1968 |
| 153 | 1 | சென்னை—ஆரணி .. | 3—2—1968 |
| 123 | 1+1 | சென்னை—பிச்சாட்டூர் .. | 3—2—1968<br>10—2—1968 |
| 88பி | 1 | சென்னை—குன்றத்தூர் .. | 3—2—1968 |
| 128 | 1 | சென்னை—நீர்வளூர் .. | 3—2—1968 |
| 76எ | 1 | சென்னை—காஞ்சிபுரம் .. | 10—2—1968 |
| 54 | 1 | சென்னை—பூவிருந்தவல்லி .. | 10—2—1968 |
| 122 | 1 | சென்னை—திருவண்ணாமலை .. | 10—2—1968 |
| 140எ | 1 | சென்னை—தேசூர் .. | 10—2—1968 |
| 208 | 1 | செங்கற்பட்டு—திருவண்ணாமலை .. | 10—2—1963 |
| 126 | 1 | சென்னை—பட்டாபிராம் .. | 10—2—1968 |
| 127 | 1 | சென்னை—திருவூர் .. | 10—2—1968 |
| 78 | 1 | சென்னை—காஞ்சிபுரம் .. | 10—2—1968 |
| 130 | 2 | சென்னை—வந்தவாசி .. | 10—2—1968 |
| 79எ | 1 | சென்னை—காஞ்சிபுரம் .. | 10—2—1968 |
| 134 | 1 | சென்னை—பெரும்பாக்கம் .. | 10—2—1968 |
| 135 | 2 | சென்னை—நெமிலி .. | 10—2—1963 |
| 136 | 1 | சென்னை—ஆரணி .. | 10—2—1968 |
| 93எ | 1 | சென்னை—ஆரணி .. | 10—2—1968 |
| 102எ | 2 | சென்னை—வேலூர் .. | 10—2—1968 |
| 90எ | 2 | சென்னை—சுண்ணாம்புக்குளம் .. | 10—2—1968 |
| 125 | 1 | சென்னை—புத்தூர் .. | 10—2—1968 |
| 129 | 1 | சென்னை—செங்கற்பட்டு .. | 10—2—1968 |
| 53 | 1 | சென்னை—பூவிருந்தவல்லி .. | 10—2—1968 |
| 51சி | 1 | சென்னை—சேலையூர் .. | 10—2—1968 |
| 105எ | 1 | சென்னை—கனகம்மாசத்திரம் .. | 10—2—1968 |
| 60 | 2 | சென்னை—அனகாபுத்தூர் .. | 10—2—1968 |
| 57எ | 2 | சென்னை—அம்மவாரிக்குப்பம் .. | 10—2—1968 |
| 105 | 2 | சென்னை—திருத்தணி .. | 10—2—1968 |
| 138 | 1 | சென்னை—பேரம்பாக்கம் .. | 10—2—19 8 |
| 77எ | 1 | சென்னை—எலப்பாக்கம் .. | 10—2—1968 |
| 140 | 1 | சென்னை—தேசூர் .. | 10—2—1968 |
| 111எ | 1 | சென்னை—சென்ராயன்பாளையம் .. | 10—2—1968 |



| வழித்தட எண். | பேருந்து பயண எண்ணிக்கை. | —லிருந்து—வரை. | ஒட்டப்படும் தேதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | செங்கற்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி. | |
| 104பி | 2 | சென்னை—கீழ்புத்தூர் .. | 10—2—1968 |
| 109 | 2 | சென்னை—குண்டுபெரும்பேடு .. | 10—2—1968 |
| 137 | 1 | சென்னை—பெரியபாளையம் .. | 10—2—1968 |
| 104எ | 2 | சென்னை—வந்தவாசி .. | 13—2—1968<br>.. 11—2—1968 |
| 55எ | 1 | சென்னை—பழவேற்காடு .. | 10—2—1968<br>11—2—1968 |
| 88எ | 1 | சென்னை—குன்றத்தூர் .. | 10—2—1968 |
| | | தென்னாற்காடு மாவட்டம். | |
| 206 | 1 | சேலம்—சிதம்பரம் .. | 15—12—1967 |
| 204 | 6 | கிளியனூர்—ஆத்துறை .. | 18—11—1967 |

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கட்டிடத்தைச் சென்று பார்த்துவிட்டு வருவார்களானால் அது தேவைதான என்பதை உணர்வார்கள்.

**திரு. சு. துரைசாமி :** தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கட்டடத்திற்கு மதிப்பீடு தயாரிப்பதற்கு முன்பே காண்டிராக்ட் விடப்பட்டுவிட்டதா? கட்டடம் கட்டுவதற்கு காண்டிராக்ட் விட்ட பிறகே மதிப்பீடு தயாரிக்கப் பட்டது என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1962-ம் ஆண்டு இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது 9 லட்சத்திற்கு மதிப்பிடப் பட்டது. பிறகு இந்தியப் போர் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டு பிறகு 1963 ஜூலையில் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது எல்லாப் பொருள்களுக்கும் இருக்கக்கூடிய விலைவாசிகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு மதிப்பீடு 9·90 லட்சத்திற்குப் போடப்பட்டது. அது 10 லட்சத்து 578 ரூபாய்க்கு முடிக்கப்பட்டு இருக்கிறது. இதற்கு முறையான வகையிலேயே சாங்ஷனைக் கொடுத்திருக்கிறார்கள். இது முறைப் படியே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, is it not a fact that the amount spent on the construction of this building is commensurate with the activities of the Director of Technical Education, especially as he is in charge of the Engineering College, Polytechnics and other technical institutes like the Industrial Technical Institute, etc.? Is it also not a fact that it is not a waste to have spent so much of money on this building?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த எண்ணத்தைத் தான் அரசு கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடம் மிக நல்ல முறையில் கட்டப்பட்டு இருக்கிறது. இதில் எவ்வளவு சிக்கன முறைகளைக் கையாள முடியுமோ அவற்றைக் கையாண்டிருக்கிறார்கள். கலை வேலைப்பாடுகள் குறைவாகவே இருக்கின்றன. சன்னல்கள் கூட இரும்புத் துண்டுகளைக் கொண்டே போடப்பட்டு இருக்கின்றன. தனித் தாழ்வாரம் போட்டிருந்ததைக்கூட நீக்கியிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் செலவு இந்த அளவோடு நின்றது.

**திரு. எம். பூபதி :** தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கட்டடம் கட்டப் பட்டதோடு அங்குள்ள அலுவலர்களுக்கு வசிப்பதற்கும் கட்டடம் கட்டப் பட்டதா? இல்லையெனில் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அலுவலர்களுக்கு கட்டடம் கட்டப்படவில்லை. கெஸ்ட் ஹவுசுக்குக் கட்டடம் இருக்கிறது. மற்ற அலுவலர்களுக்கு கட்டடம் கட்டவில்லை. கட்டுகிற உத்தேசம் இப்போது இல்லை.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் குறிப்பிட்ட நாஷனல் கம்பெனிக்கே காண்டிராக்ட் விடுகிறார் என்ற புகார் கவனிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** புகார் எந்த அளவில் இருக்கிறது என்று தெரியவில்லை. டெண்டர்கள் கோரப்படுகின்றன. அதுவும் 3 சீப் என்ஜினியர்கள் இருந்து பரிசீலித்து டெண்டர் பேரில் அனுமதிக்கப்படுகிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** நாட்டில் பொருளாதார நெருக்கடி இருக்கிற காலத்தில், பலன் தரும் திட்டங்களுக்குப் பணம் தேவைப்படும் இந்தக் காலத்தில், இது போன்ற ஆடம்பரமான கட்டடங்களைக் கட்டுவது தவிர்க்கப்படும் என்கிற கொள்கை ரீதியில் இந்த அரசாங்கம் முடிவு எடுக்குமா?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தேவையான கட்டடம் என்ற முறையில்தான் செய்யப்பட்டிருக்கிறது. இப்போதே கூட கல்வி இயக்குநர் அலுவலகத்திற்குச் சென்று பார்த்தால் தெரியும். தாழ்வாரத்தில் பலர் உட்கார்ந்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். 1921, 22-ம் ஆண்டு தேவையை ஒட்டி முன்பு கட்டப்பட்ட கட்டடம் தான். முன்பு 30 ஆயிரம் பேர் எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சை எழுதினார்கள் என்றால் இப்போது இரண்டு லட்சத்து இருபதாயிரம் பேர் பரிட்சை எழுதுகிறார்கள். அலுவலர்களுக்குப் போதுமான இடம் இருந்தால்தான் செயல்முறை நன்றாக அமையும். ஆகவே, இந்தக் கட்டடம் தேவையை ஒட்டிக் கட்டப்பட்டதே தவிர ஆடம்பரமான முறையில் அல்ல.

**திரு. மு. ச. சிவசாமி :** தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கட்டடத்தைக் கட்டுவதற்குக் காண்டிராக்ட் எடுத்தவர் யார்? கூடுதல் தொகைக்கு யார் ஒப்புதல் கொடுத்தார்கள்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதைக் கட்டியவர் யார் என்கிற விவரம் இல்லை. நான் முதலில் குறிப்பிட்டதுபோல் 9.90 லட்சத்திற்கு மதிப்பீடு தரப்பட்டது. 10 லட்சத்து 578 ரூபாய் அதைப் பூர்த்தி செய்வதற்கு ஆயிற்று. எப்போதுமே ஒரு திட்டத்திற்கு எஸ்டிமேட் தயாரித்தால் அந்தத் திட்டம் அதற்குள் முடியும் என்கிறது இல்லை. கொஞ்சம் கூடவும் போகும். கொஞ்சம் குறைந்தாலும் குறையும். போட்ட மதிப்பீட்டிற்கு 25 சதவீதத்துக்கு மேல் போகக் கூடாது. இதில் 10,578 ரூபாய்தான் அதிகமாக ஆகியிருக்கிறது. இதைச் சாங்ஷன் செய்வதற்கு டி.டி.இ. அவர்களுக்கே அதிகாரம் இருக்கிறது. அந்தச் செலவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## தொழிற்பேட்டைகள்

* 240 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) மதுரை மாவட்டத்தில் கப்பலூர் அருகே ஆரம்பிக்கவிருக்கும் தொழிற்பேட்டை எப்போது ஆரம்பிக்கப்படும்?

(இ) இதற்காக மொத்தம் எத்தனை ஏக்கர் நிலங்கள் அரசினால் வாங்கப்பட்டிருக்கின்றது?

(உ) இந்தத் தொழிற்பேட்டையில் கனரக இயந்திரங்கள் செய்யப் படுமா?

(எ) இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) கப்பலூரருகில் சுமார் 514 ஏக்கர் நிலத்தில் தொழிற்பேட்டை ஏற்படுத்த ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டு நில ஆர்ஜிதத்திற்காக 16.27 இலட்சம் ரூபாய்களும் ஒதுக்கப்பட்டுள்ளது. வேண்டிய நில உரிமை பெற்று, மனைப் பிரிவு முடிந்தவுடன் தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்படும்.

(இ) இதுவரை சுமார் 329 ஏக்கராக்கள் உரிமை பெறப்பட்டுள்ளது.

(உ) இத் தொழிற்பேட்டையில் கனரக இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் யோசனை ஒன்றும் இப்போது இல்லை.

(எ) வினாவுக்கு இடமில்லை.

**திரு. என். எஸ் வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டையை அரசாங்கம் இப்போது ஆரம்பிக்காது ஒத்தி வைக்க இருப்பதாக பேசப்பட்டு வருகிறதே, அப்படி ஒத்தி வைக்காது இதைத் துரிதமாக எடுத்து நிறைவேற்ற என்ன செய்ய இருக்கிறார்கள்? வாங்கப் பட்ட நிலம் கூட விவசாயம் செய்வதற்குக் குத்தகைக்கு விடப்பட்டதாக சொல்லப்படுவது உண்மையா? தொழிற்பேட்டை துவங்கப்படும்போது எலெக்ட்ரானிகல் தொழிற்சாலையை ஏற்படுத்த உத்தேசிக்கப்படுமா?

# தமிழக சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1968 மார்ச் 18.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினுக்கள்–விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலில் வினு 239 எடுத்துக்கொள்ளப்படும்.

### *Building of Directorate of Technical Education*

* 239 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the estimated and actual cost of the office building of the Directorate of Technical Education ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்னையிலுள்ள தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு நிலையான கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக 9·90 லட்சம் ரூபாய்க்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அக் கட்டிடத்திற்காகச் செய்யப்பட்ட செலவு ரூ. 10,00,578 ஆகும்.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவர் அவர்களே, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்காக கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் இப்போதுள்ள அலுவலர்களுக்கான இடம் போக அதிகமான இடம் இருக்கிறது. பெரும் தொகை செலவழித்துக் கட்டப்பட்ட இந்தக் கட்டடத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்தும் வகையில் வாடகைக் கட்டடத்தில் இருக்கும் வேறு பல துறைகளின் அலுவலகங்களையும் இந்தக் கட்டிடத்திற்கே கொண்டுவர அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்தக் கட்டிடத்தில் என்ன என்ன அலுவலகங்களை வைக்கலாம் என்பதுபற்றி முடிவு எடுத்து அதன்படி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அதிகமான இடம் இருக்கிறதா இல்லையா என்பது பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம். இப்போது ஒன்றும் கூறுவதற்கில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** இந்தக் கட்டிடத்திற்குப் போடப்பட்ட மதிப்பீட்டைவிட அதிகமாகச் செலவு செய்யப்பட்டிருக்கிறதே. இந்த வேலைக்கு டெண்டர்கள் கோரப்பட்டு விடப்பட்டதா ? அல்லது நாமினேஷன் வேலையாக விடப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தக் கட்டிடத்திற்கு 9·90 லட்சம மதிப்பிடப்பட்டது. செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் பத்து லட்சத்து ஐநூற்று எழுபத்தெட்டாகும். ஆக, பத்தாயிரத்து ஐநூற்று எழுபத்தெட்டு ரூபாய்தான் அதிகமாகச் செலவாகியிருக்கிறது. இது முறையாக டெண்டர்கள் கோரப்பட்டு—அதுவும் தலைமைப் பொறியாளர்கள் 3 பேர் உட்கார்ந்து அவற்றைப் பரிசீலனை செய்து அனுமதித்ததன் பேரில் விடப்பட்டதாகும்.

**திரு. ந. தருமலிங்கம் :** தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கட்டடத்திற்கு இவ்வளவு தொகையில் செலவழிக்கப்பட வேண்டியது அவசியம் தானா ? இவ்வளவு அதிகம் செலவழித்துக் கட்டடம் கட்டப்பட்டிருப்பதனால் தொழில் நுட்பக் கல்வித் துறையில் ஏற்படும் முன்னேற்றம் என்ன ?

திரு. சு. துரைசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் ஆரம்பிக்கப்பட இருக்கிற தொழிற்பேட்டையில் 100 பிரிவுகள் தனித்தனியாக ஆரம்பிக்கப் போவதாக அறிகிறேன். இதுவரை 20 தொழில் பிரிவுகள் தான் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே உள்ளவர்கள் சொல்கிறார்கள் கட்டடங்கள் கட்டுவதற்குப் பண வசதி கிடைக்கவில்லை என்று. பண வசதி கொடுத்தால் கட்டடங்கள் கட்டி தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே, அதற்கு அரசாங்கம் முயற்சியெடுத்து உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: முதலிலே 100 தொழிற்சாலைகள் கட்டப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு திட்டம் வகுக்கப்பட்டது. 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ம் தேதி அன்று அந்த டைரக்டர்களுடைய கூட்டத்தில் 60 கட்டிடங்கள் போதுமானவை என்று முடிவெடுக்கப்பட்டு அதற்காக 55 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. முதலில் 16 கட்டப்பட்டன. பிறகு 4 கட்டப்பட்டன. ஆக மொத்தம் 20 கட்டப்பட்டு இருக்கின்றன. மொத்தம் 48 லட்சம் ரூபாய் கடன் 4 தடவைகளில் வழங்கப்பட்டு 15 தவணைகளில் அந்தக் கடனைத் திருப்பித் தரவேண்டுமென்று ஏற்பாடாகியிருக்கிறது. இரண்டு தடவைகளில் 2 லட்சமும் 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ம் தேதி 10 லட்சமும் வழங்கப்பட்டிருக்கிறது. எல். ஐ. சி. யில் பத்து லட்சம் கடன் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு அவர்கள் தரவில்லை. அடுத்த ஆண்டு தரப்படும் என்று தெரிகிறது. அந்தக் கடனை வாங்கித் தருகின்ற முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

திரு டி. மார்டின்: தொழிற்பேட்டை சம்பந்தமாக தமிழக அரசு வந்ததற்குப் பிறகு இந்த மாநிலத்திலே பொதுத் துறையிலே ஏதாவது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா? ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பொதுத்துறையிலே எங்குமே ஆரம்பிக்கப்படவில்லை, தனியார் துறையிலே ஆரம்பிக்கும்பொழுது கட்டிடங்கள் தருகின்ற முறை ஒன்று, ப்ளாட் தருகின்ற முறை ஒன்று. இந்த இரண்டு முறைகளிலே கொடுக்கப்பட்டு வருகிறது. ஊட்டியில் ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்க்குப் பக்கத்தில் ஆன்சிலரி தொழிற்சாலையும் கடலூரில் ஒரு கன்வென்ஷனல் தொழிற்சாலையும் ஆரம்பிப்பதற்காகத் திட்டமிடப்பட்டு 1968–69-ஆம் ஆண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. வி.டி. அண்ணாமலை: கோவை குறிச்சி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டைச் சேர்த்து தமிழகத்தில் மொத்தம் எத்தனை இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்கள் இருக்கின்றன? அவற்றில் உற்பத்தியாகின்ற பொருள்கள் அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றனவா? மேனுபேக்சரிங் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் மாதிரி அக்ரிகல்சரல் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மொத்தம் எவ்வளவு இண்டஸ்டரியல் எஸ்டேட்டுகள் இருக்கின்றன என்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம். இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகள் கிண்டி, அம்பத்தூர் இவற்றில் உற்பத்தியாகின்ற பொருள்களை சிலபல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அண்மையில் நடந்த உலகக் கண்காட்சியில் எக்ஸ்போர்ட் புரமோஷன் என்ற பிரிவின் கீழே கிண்டி, அம்பத்தூர் இவற்றில் உற்பத்தியாவது எவ்வளவு, வெளிநாடுகளுக்கு எவ்வளவு ஏற்றுமதியாகிறது என்ற விவரங்கள் இருந்தன. அக்ரோ இண்டஸ்ட்ரிஸ் சில இடங்களில் வைத்து விவசாயத்திற்குத் தேவையான பொருள்களை உற்பத்திசெய்ய முயற்சிகள் நடந்து வருகின்றன.

திரு. எம். சுரேந்திரன்: தொழிற்பேட்டைகள் ஆரம்பிப்பதிலே ஏதோ ஜில்லாவுக்கு ஒன்று வேண்டும் என்றும், தாலுகாவுக்கு ஒன்று வேண்டும் என்றும் அந்த முறையிலே ஆரம்பிக்க இருக்கிறதே தவிர எந்த எந்தப் பொருள்கள் உற்பத்திசெய்யப்படும், என்ன என்ன முன்னேற்றம் தொழில்



துறையில் அடைய முடியும் என்ற அடிப்படையில் ஆரம்பிக்கப்படுவதாகத் தெரியவில்லை. தொழிற்பேட்டைகள் ஒன்றோடு ஒன்று இணைந்து சாமான்களை உண்டாக்குகின்ற முறையில் அமைவதாகத் தெரியவில்லை. இதைப் பற்றி அரசு ஆராய்ந்து நல்ல முறையிலே அமைக்க வேண்டியதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பல வகைகளிலே தொழிற்பேட்டைகளை உருவாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பை புராடக்ஸை வைத்து நெய்வேலிக்குப் பக்கத்திலே துணை பொருள்களை உண்டாக்கும் திட்டம் ஆராயப்பட்டு வருகிறது. அதேபோல மேட்டூர் கெமிக்கல் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஒன்று, கழிவைப் பொருள்களைப் பயன்படுத்தி ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. வேறு சில இடங்களில் சிறு சிறு பொருள்களை உற்பத்தி செய்து நடுவிலே பெரும் தொழிற்சாலை ஏற்படுத்தவும் ஆராயப்பட்டு வருகிறது. சில பல இடங்களில் இட நெருக்கடி இருப்பதன் காரணமாகக் கட்டடங்கள் கட்டித்தரப்பட்டு தண்ணீர் வசதிகளை செய்துகொடுக்க ஏற்பாடு நடைபெறுகிறது. சில இடங்களில் ப்ளாட் ஒதுக்கப்பட்டு அவர்கள் விரும்புகிறபடி கட்டிடங்களைக் கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆகவே, தொழில் ஏற்படுத்த வாய்ப்பு வசதி இருக்குமானால் அங்கேயெல்லாம் அவற்றைப் பரிசீலிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, whereas the object of starting such kind of Industrial Estates is to tempt the private enterpreneurs to invest their capital and whereas there is a general industrial recession and stagnation nowadays, will the Government think of the possibility of helping those private enterpreneurs by giving financial assistance and failing which, will they at least take up those Industrial Units and start their own industries instead of keeping them idle and thus preventing industrial production ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனியார் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க பல்வேறு வகைகளில் நிதி உதவி, கடன் வசதி போன்றவைகள் செய்வதற்கான பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில்தான் அம்பத்தூர் எஸ்டேட்டில் பழ வகைகள் செய்ய பத்து இடங்கள் ஒதுக்கப்பட்டன. இரண்டு பேர்கள்தான் வந்தார்கள். நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டாம் என்று மற்ற தொழில்களை ஆரம்பிப்பதற்காக ஒதுக்கலாம் என்று அந்த இடங்களை ஒதுக்கித் தர முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. கடன் வசதி போன்ற பல வசதிகளைச் செய்து தர பல நிறுவனங்கள் இருக்கின்றன. அதன் வழியும் ஊக்குவிக்க முயற்சிக்கிறது. தொழிற்பேட்டைகள், நர்சரிஸ் மாதிரி பயன்பட வேண்டுமென்று அவர்கள் தங்கள் காலிலே நிற்க வசதி பெற்ற பிறகு தனித் தொழிற்சாலை வைக்கச் சென்று இந்த இடத்தைத் தந்தால் வேறு புதிதாக ஆரம்பிக்க அது பயன்படும். வாடகைக்கு விடப்படுவது அந்த நோக்கத்தின் அடிப்படையில்தான், ஒதுக்கப்படுகிற இடங்களில் அவர்கள் சொந்தத்தில் தொழிற்சாலைகள் அமைத்துக் கொள்ளலாம்.

திரு. ஆர். நாகசுந்தரம்: தொழில் தெரியாத சில அரசியல் வாதிகள் தொழிற்பேட்டைகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டு பிறகு உள் வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். இது பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் இருக்கிறதா? அவற்றின் மீது அரசு நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட தகவல் எதுவும் இல்லை. உறுப்பினர் அவர்கள் அது பற்றி சுட்டிக் காட்டினால் ஆராயலாம்.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது 60 தொழிற்சாலைகள் துவக்க திட்டமிட்டதாகவும், 20 தொழிற்சாலைகள் தான் துவங்கியிருப்பதாகவும், மற்றவை இன்னும் துவங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்கள். இந்தத் தொழிற்பேட்டைகள் துவங்கப்பட்டு எட்டாண்டுகள் இருக்கும் என்று கருதுகிறேன். இதற்கு முன்னால் இருந்த அரசு தொழிற்சாலைகளைத் துவங்க வேண்டும் என்பதில் போதிய அக்கறை

[1968 மார்ச் 18

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்தத் தொழிற்பேட்டைக்கு மொத்தம் 514 ஏக்கரா தேவை என்று கருதப்பட்டது. இதில் 329 ஏக்கரா வாங்கப்பட்டுவிட்டது. இதை ஒத்தி வைக்கிற உத்தேசம் இல்லை. அங்கே என்ன என்ன தொழில்கள் ஆரம்பிக்கப்படும் என்பது வருபவர்களைப் பொறுத்தது. சிறு தொழில், நடுத்தரத் தொழில், பெரிய தொழில் ஆகிய மூன்று ரகத் தொழில்களையுமே ஆரம்பிக்கலாம். அது வருகிறவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கப்பலூரில் தொழிற்பேட்டை ஆரம்பிப்பது பற்றிய கேள்வி. ஆகவே, அதைப் பற்றிய கேள்விகளை மட்டும் கேட்க வேண்டும்.

**திரு. சே. அழகர்சாமி :** தொழிற்பேட்டைகள் எல்லா இடங்களிலும் கட்டப்படுகின்றன. பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்துக் கட்டியும்கூட அவை சும்மாதான் இருக்கின்றன. எந்தவிதமான தொழிலும் நடக்கவில்லை. ஆகவே, தொழிற்பேட்டைகளில் தொழில்களை அரசாங்கமே ஏற்று நடத்த உத்தேசம் உண்டா? புதிதாகக் கட்ட ஆரம்பிக்கும் தொழிற்பேட்டைகளை முந்திய தொழிற்பேட்டைகளில் தொழில் ஆரம்பித்த பிறகு கட்டுவதற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தொழிற் பேட்டைகளில் சில பல இடங்களில் காலியான அளவுக்குக் கட்டடங்கள் இருக்கின்றன. அவை மெள்ள மெள்ள நிரப்பப்பட்டுக் கொண்டு வருகின்றன. அவற்றில் யாருமே தனியார்கள் தொழில்கள் நடத்த வரமாட்டார்கள் என்ற நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அடிப்படையில் அந்த யோசனை பரிசீலிக்கப்படலாம்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இந்தக் கப்பலூர் திட்டத்திற்கு மத்திய அரசின் மானியம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மத்திய அரசிலிருந்து மானியம் எதுவும் வருவதாகத் தெரியவில்லை.

**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டை அமைப்பதற்கு 514 ஏக்கர் பரப்பளவுக்கு நிலம் தேவைதானா? எந்த அடிப்படையில் இவ்வளவு அதிகமான அளவுக்கு நிலம் ஆக்கிரமம் செய்யப்படுகிறது என்பதற்கு விளக்கம் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன்:** இந்த 514 எக்கர்களிலே எவ்வளவு பிளாட் தருகிறார்கள் என்பது தெரியவில்லை. அங்கு இருக்கிற சூழ்நிலை, தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான நிலைமைகள் இவற்றை ஆராய்ந்துதான் 514 ஏக்கரிலே எவ்வளவு தொழிற்பேட்டைகள் வரும் என்ற கணக்கெடுத்துத்தான் திட்டமிட்டு இருக்கிறார்கள். பல இடங்களில் இதைவிட அதிகமான இடங்களும் வாங்கப்படுகின்றன. சில இடங்களில் குறைவான இடங்களும் தேவைப்படுகின்றன. அங்கங்கே இருக்கின்ற தகுதியை உத்தேசித்து, அந்த அடிப்படையில் தான் குறிப்பிட்ட 514 ஏக்கர் வாங்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு அதில் முன்னூற்றுச் சில்லரை ஏக்கர் வாங்கப்பட்டிருக்கிறது. மேலும் வாங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. எம். எஸ். மணி :** தொழிற்பேட்டைகளிலே கட்டப்பட்டிருக்கும் கட்டடங்களுக்கு அதிக வாடகை இருக்கிற காரணத்தினாலே பலர் வருவதில்லை என்று கூறப்படுகிறது. எந்த அடிப்படையிலே வாடகை நிர்ணயிக்கப்படுகிறது ? வாடகையைக் குறைப்பதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** வாடகையைப் பொறுத்து தனியார்களுடைய வாடகையின் தன்மையை இதோடு ஒப்பிட்டுப் பார்த்தால் குறைவாகத்தான் தெரியும். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டு



1968 மார்ச் 18]

காசுகள் குறைப்பது என்ற தன்மையில் பேஸ்டு புரோகிராமில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அங்கங்கே ஏற்படுகிற சேவைகளை ஒட்டி வாடகைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. வாடகை நிர்ணயிக்கப்படுவதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் எந்த எந்த இடங்களில் எவ்வளவு வாடகை நிர்ணயிக்கப்படுகிறது என்பதைப் பற்றிய விவரங்கள் அளிக்கப்படும்.

**திரு. மு. கந்தசாமி படையாச்சி :** தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்கப் படும்பொழுது விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிற முறையில் டிராக்டர்கள் செய்யும் மெக்கானிக் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தொழிற்பேட்டைகளிலே தனிப்பட்டவர்கள் டிராக்டர் உற்பத்தி செய்வதற்கு முன்வருவார்களானால் இடம் அளிக்கப்படும்.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்:** இதுவரையில் தொழிற்பேட்டைகள் பெரிய பெரிய நகரங்களிலேதான் உருவாக்கப்படுகின்றன. சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், முன்னேறுவதற்கான முறையிலே வட்டத்திற்கு ஒன்று என்ற ரீதியிலோ அல்லது கோட்டத்திற்கு ஒன்று என்ற ரீதியிலோ ஆரம்பிப்பது நல்லது. அப்படிப்பட்ட யோசனை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தொழிற்பேட்டைகள் ஆரம்பிப்பதற்கு எங்கு எங்கே அவற்றின் வளர்ச்சிக்கான வாய்ப்பும் வசதியும் இருக்கின்றன, போக்குவரத்து வசதி, சாலை வசதிகள், ரெயில்வே வசதிகள் துறைமுக வசதிகள் இவற்றையெல்லாம் கணக்கெடுத்து தொழில்கள் விரிவடைவதற்கான வாய்ப்பு வசதிகள் உருவாகின்ற நிலையில் அமைக்கப்படுகின்றன. பெரிய பெரிய நகரங்களிலே அமைப்பதுபற்றிக்கூட ஊரைவிட்டுத் தள்ளி இருந்தாலும், விருதுநகர், கோயில்பட்டி போன்ற இடங்களிலே ஊரைவிட்டுத் தள்ளி இடங்களை இருப்பதினாலே வரவில்லை என்ற குறைகளும் இருக்கின்றன. கோட்டத்திற்கு ஒரு இடம் என்று சொன்னார்கள். எங்கு எங்கு தேவைப்படுகிறது, எவ்வளவு பேர்கள் அதை வைத்து நடத்துவார்கள் என்று பார்த்து ஆரம்பித்தால்தான் அதனால் அவர்களுக்கும் பயன்படும், தொழில்பேட்டைக்கும் நல்ல பலன் ஏற்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** கப்பலூர் தொழிற்பேட்டைக்கு நிலம் வாங்கும் வேலை பல மாதங்களாக நடந்துவந்தும் இன்னும் முடிவடையவில்லை. என் இந்த சுணக்கம் ஏற்படுகிறது? எந்த ஆண்டிலிருந்து அது செயல்படும் என்பதைத் திட்டவட்டமாக அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 1965-லே திட்டமிடப்பட்டு 514 ஏக்கர் வாங்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டு 1966-லே 16·27 லட்சம் அதற்காக ஒதுக்கப்பட்டு 497·62 ஏக்கர் வாங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு 329 ஏக்கர் வாங்கப்பட்டு இருக்கிறது. உரிமைகள் வழங்குவதில் பேச்சு வார்த்தைகள் நடப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. 1966-லே தான் நிலம் வாங்கும் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இதை விரைவுபடுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

*241 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை, குறிச்சியில் உள்ள தொழிற்பேட்டையில் வேலைகள் பூர்த்தி அடைந்து எல்லா தொழிற்சாலைகளும் உற்பத்தியை ஆரம்பித்துவிட்டனவா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** குறிச்சியில் உள்ள கோயம்புத்தூர் தனியார் தொழிற்பேட்டையில் 20 பிரிவுகள் கட்டி முடிக்கப்பட்டு, தொழிலதிபர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் பதின்மூன்று பிரிவுகளில் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள பிரிவுகளில் உற்பத்தி ஆரம்பிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நான்கு பிரிவுகளின் கட்டட வேலை நடந்து கொண்டிருக்கிறது.

எடுக்காத காரணத்தினால்தான் அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் துவங்கப் படவில்லை என்று அங்குள்ள மக்கள் பேசிக்கொள்கிறார்களே, இது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** எட்டாண்டுகள் அல்ல. 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் தேதியில் தான் திட்டமிடப்பட்டு பிறகுதான் முறைப்படி காரியங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிற்பேட்டைகளில் அக்கறை காட்டுவது இல்லை என்றில்லை. முடிந்த வரையில் அக்கறை காட்டியிருக்கிறது. தொடர்ந்து இந்த அரசும் அக்கறை காட்டி வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, while establishing Industrial Estates in our State, will the Hon. Minister for Industries be pleased to state whether preference will be given to the backward areas?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அரசாங்கமே ஒரு தொழிற்சாலையைப் பணம் போட்டு ஆரம்பிப்பதாகயிருந்தால் பிற்பட்ட பகுதி என்று ஆரம்பிக்கலாம். தொழிற்சாலைகள் வைக்க யார் யார் முன்வருகிறார்கள் என்பது பார்த்து அவர்கள் எங்கு வைக்கத் தயாராயிருக்கிறார்கள் என்று பார்த்து செய்யப்படுகிறது. தொழிற்பேட்டை கட்டி அது பிற்பட்ட பகுதி என்று யாரும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க முன்வராவிட்டால் கட்டடங்கள் காலியாக இருக்கும். இப்படிப்பட்ட நெருக்கடி சில இடங்களில் இருக்கின்றன. இப்போது மெல்ல மெல்ல அந்த இடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** இந்தத் தொழிற்பேட்டையில் தொழில்கள் நடத்த என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்? தொழில் நடத்தும் எண்ணம் உள்ளவர்கள் மொத்தம் அந்தத் தொழிலுக்கு கொடுக்கும் பணத்தில் எவ்வளவு சதவிகிதம் அவர்கள் முன்பணமாகக் கட்டவேண்டும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. எம். எஸ். மணி:** தொழிற்பேட்டைகளில் பல கட்டடங்கள் காலியாக இருப்பதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. உதாரணமாக ரெயில்வே ஸ்டேஷன், தபால் ஆபீஸ் இவை பக்கத்தில் இல்லை என்ற குறை ஒன்று தொழிற்பேட்டை அந்தந்த தொழிலுக்குத் தக்கவாறு கட்டப்படாதது ஒன்று. தொழிலாளர்களுக்கு சாப்பாடு வசதி போன்றவை இல்லாத குறை ஒன்று. இப்படி நான்கைந்து காரணங்கள் இருப்பதைப் பரிசீலிக்க ஒரு குழு அமைத்து தொழிற்பேட்டைகளில் நல்லமுறையில் வேலை நடக்க இந்தஅரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் பலயிடங்கள் காலியாக இல்லை. பல தொழிற்பேட்டைகள் முழுவதும் நிரம்பப் பெற்றிருக்கிறது. அம்பத்தூர், கிண்டி போன்ற யிடங்களில் அதிக கிராக்கி இருக்கிறதே தவிர காலியிடங்கள் இல்லை. வேறு பலயிடங்களும் நிரம்பப் பெற்றிருக்கின்றன. ஒரு சிலயிடங்களில், பத்து கட்டடங்களில் நான்கு, மூன்று, இரண்டு என்று காலியாக இருக்கின்றன. அவையும் நாளுக்கு நாள் நிரப்ப படுகிற சூழ்நிலையில்தான் இருக்கிறது. ஆகவே சிலபல வசதிகள், போஸ்ட் ஆபீஸ் போன்ற வசதிகள் செய்து தருவது, அம்பத்தூர், கிண்டி போன்ற இடங்களில் செய்யப்பட்டிருக்கின்றன. வேறு இடங்களில் அந்த வசதிகள் செய்யப்படுகின்றன. எங்கு வசதிக் குறைவு இருக்கிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறதோ அந்த வசதிகளைச் செய்து தர முயற்சிகள் முறைப்படி அரசாங்கம் மேற்கொள்ளும்.

THIRU K. VINAYAKAM : Sir, is it not a fact that the unsettled industrial policy and the niggardly labour policy of this Government are responsible for the private enterpreneurs not coming forward to utilise our vacant industrial units ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** உறுப்பினர் அவர்களின் கேள்வி அடிப்படையில் பொருத்தமுடையதல்ல. அன்செட்டில்ட் பாலிஸி என்பதற்கு ஆதாரம் இல்லை. தொழிலாளர் நிலை பற்றிக் கூறுவதிலும் ஆதாரம் இல்லை. சென்ற ஆண்டு அல்லது அதற்கு முந்திய ஆண்டு இவற்றின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நிலைமைகள் எதுவும் மாற வில்லை. இதை அகில இந்திய அளவில் ஏற்பட்டிருக்கிற புள்ளிவிவரங்களிலிருந்து காணலாம். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தொழில் துறை வளர்ச்சி இங்கு ஏற்கனவே இருந்துவரும் நிலைமையை விட வளர்ந்து வருகிற சூழ்நிலை இருந்து வருகிறது. ரெஸஷன் என்பது இந்தியா முழுமையிலும் இருக்கிறது. 1965–66-ஐ விட ½ சதவிகிதம், 1 சதவிகிதம் அதிகம் வளருகிற நிலை இருக்கிறது. தொழில் மானியக் கோரிக்கை வரும்போது இது பற்றி விரிவாகப் பேசலாம். ஏற்கெனவே உள்ள கொள்கை அடிப்படையில் விரைவுபடுத்த, தெளிவுபடுத்தத்தக்க முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கு நல்ல சீரான, ஒழுங்கான, அமைதியான நிலை இருந்து வருகிறது.

**திரு. எஸ். இ. இராமச்சந்திரன்:** இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் விருதுநகரில் ஆரம்பிக்க பட்ட தொழிற்பேட்டை சரியாகப் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. தொழிற்பேட்டைகளில் தொழில்கள் வளருமா வளாரதா என்று கூடப் பார்க்காமல் பலவேறு இடங்களில் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டவை பல இடங்களில் இன்னும் பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தனியார் துறையை ஊக்குவிக்கவோ அல்லது அரசாங்கமோ அதில் ஈடுபட முயற்சிக்குமா? இந்தத் தொழிற்பேட்டைகளுக்குப் பதில் டெவலப்ட் ப்ளாட்ஸ்,— தொழிற்பேட்டை என்றால் அதிகம் செலவாகிறது, எங்களால் வாடகை கொடுக்க முடியவில்லை என்று தொழில் அதிபர்கள் சொல்கிறார்கள்— மின்சார வசதி, தண்ணீர் வசதி, போன்ற வசதிகளுடன் கூடிய டெவலப்ட் ப்ளாட்ஸ் கொடுப்பது மட்டும் போதும் என்று அரசு கருதுகிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தொழிற்பேட்டை ஆரம்பிக்கும்போது தொழிற்சாலைகள் அங்கு அமைக்கப்பட்ட தக்க வசதிகள் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு ஆங்காங்கு துவக்கப்பட்டன. பல தொழிற்பேட்டைகளில் இடங்கள் முழுவதும் நிரப்பப்பட்டிருக்கிறது. சில தொழிற்பேட்டைகளில் சில இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதிலிருந்து பெற்ற அனுபவத்தை வைத்துக் கொண்டு, எவ்வளவு பேர்கள் தொழிற்சாலைகள் அமைக்க முன்வருகிறார்கள் என்று கணக்கிட்டு அதற்கேற்றாற்போல் தொழிற்பேட்டைகளை அமைப்பது, விரிவுபடுத்துவது என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சில இடங்களில் தொழிற்பேட்டை தேவைப்படுகிறது, சிலயிடங்களில் டெவலப்ட் ப்ளாட்ஸ் தேவைப்படுகிறது. இரண்டு முறையையும் கையாளுகிற போக்கைத்தான் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. தொழிற்பேட்டைகளை கை விட்டு விட்டு டெவலப்ட் ப்ளாட்ஸ் மட்டும் தருவது என்ற நிலையில்லாது இரண்டையும், இரண்டு கொள்கையையும், தேவை நிலைக்கேற்ப, ஆங்காங்கு தொழில் ஆரம்பிப்பவர்கள் விருப்பத்திற்கேற்ப ஆரம்பிக்கிற போக்கைத்தான் அரசு மேற்கொண்டிருக்கிறது.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, கோவை, குறிச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்பேட்டையில் எவ்வளவு தொழிற் பிரிவுகள் இருக்கின்றன? ஒவ்வொரு பிரிவிலும் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலை செய்யும் வாய்ப்பு இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா? முற்பக 9-30

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, முதலில் சொன்னபடி 20 இடங்களில் இப்போது ஆரம்பிக்கிற அளவுக்கு வந்திருக்கிறார்கள். மற்றவை கட்டப்பட்டு வருகின்றன. அதிலே 20 இடங்களில் எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்ற குறிப்பு இல்லை.

| Name of the occupant | Line of Manufacture |
| --- | --- |
| Electro Mekanico Engineering Corporation. | Ear wheels and allied products. |
| Subha Electrical Industries. | Manufacture of battery charging Meters used in the mines, Switch, knobs and switch bases. |
| Stanes Tyre and Rubber Products, Limited. | Moulds for tyre retreading. |
| The Nilgiri Chemical Soneware Company. | Unglazed ceramic products. |
| Sri S. Padmanabhan. | General engineering workshop. |
| Sri Paramahamsa Industries. | Manufacture of welding transformers and of repairing power transformers. |
| Revathi Machinery Traders (3 units). | Construction equipments and Calycone drills. |
| Rashmi Engineering Industries. | Pumps and Motors, Welding generators and domesic washing machines. |
| Tubus Industries. | Conduit pipes. |
| Anand Industries. | Motor and pump sets. |
| Sri A. S. Venkataraman. | Manufacture of bobbins—Production not yet commenced. |
| Repulsion Electronics Private, Limited. | Motors and pumpsets—Production not yet commenced. |
| Parvati Engineering Company. | Textile spare parts and accessories—Production not yet commenced. |
| Canara Trading Company. | Oxy Chloride cement—Additional constructions are taken up now to suit the industry. |



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள் 242, 243 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### தஞ்சை தொழில் ஒப்பந்தச் சங்கம்

* 244 **வினா.—திரு. ஆ. கு. சுப்பையா :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தொழிலாளர் கூட்டுறவுத் தொழில் ஒப்பந்த சங்கம் செயல்பட்டு வருகிறதா?

(இ) எந்தெந்த இலாகாவினர் இச் சங்கத்தினருக்கு வேலை ஒப்பந்தம் கொடுத்து வருகிறார்கள்?

(உ) அவ்வாறு கொடுக்கப்பட்டு வந்தால் அதன் விபரம்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) நெடுஞ்சாலைத் துறை, போலீஸ் துறை, ஹரிஜன நலத்துறை, பொதுப்பணித்துறை, கூட்டுறவுச் சங்கங்கள், நகராட்சி மன்றங்கள்.

(உ) பேரவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சார், இந்தத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் ஏழை அரிஜனங்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, வெள்ளை அடிக்கும் வேலைகளை எல்லாம் எல்லாத் துறையினரும் இவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒயிட் வாஷிங்குக்கு முன்டேம் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். எந்தெந்தத் துறையிலே என்று எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** சார், தற்போது தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கத் துறையில் உள்ள வேலைகளைக் கொடுக்க வேண்டுமென்று ஒரு ஜி.ஓ இருக்கிறது. அந்த ஜி.ஓ.-வில் 'டிபார்ட்மெண்ட் மே' என்று இருக்கின்ற காரணத்தால், அந்த 'மே' என்ற வார்த்தையைப் பயன்படுத்திக் கொண்டு பல துறையினரும் வேலைகளை இப்போது கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுப்பது இல்லை. ஆகவே 'மே' என்பதை மாற்றி 'ஷல்' என்று அமைத்தால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கத் துறையில் வேலைவாய்ப்பு இருக்கும். ஆகவே, அதனைக் குறித்து ஆலோசித்து அரசு வேண்டியதைச் செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கூட்டுறவு முறையில் அமைக்கப்படும் இந்தத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்ல வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. ஆனால், சட்டாயம் கொடுக்க வேண்டும் என்று ஏற்பட்டுவிட்டால் ஒரு இடத்தில் அந்தக் கூட்டுறவுச் சங்கம் சரியாக வேலை செய்யாவிட்டால் அரசாங்கத்தின் வேலைகள் தடைப்படும். இப்போது அரசாங்க அதிகாரிகள் எந்தெந்த இடத்தில் வசதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அவற்றைக் கொடுத்து வருகிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்கக் கூடிய தன்மையில் ஊக்குவிக்கக்கூடிய அளவுக்கு சர்க்கார் அதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான் இன்றைக்கு உள்ள நிலைமை. அப்படி இருக்க வெள்ளை அடிப்பது அல்லது தடுப்புச் சுவர் கட்டுவது, வண்ணம் பூசுவது என்று இந்த சின்னஞ்சிறு வேலைகள்தான், எந்த வருஷத்தில் இருந்து எந்த வருஷம் வரையில் என்று, இப்போது 9 வேலைகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, அது கட்டாயமாக கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் பொருத்தமாக இருக்கமுடியும்.

---

@ 534-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியாகப் போடுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பாதுகாப்பாக எஞ்சினியர்களை நியமித்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேலைகள் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஊக்குவிக்கக்கூடிய தன்மையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்.**—கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊக்கம் தர வேண்டும் என்பது நியாயமான கோரிக்கை. ஆனால் அங்குள்ள சங்கங்களின் அமைப்பைப் பொருத்துத்தான் எந்த வேலை கொடுக்கப்பட முடியும் என்பதை முடிவுகட்ட முடியும். இந்தச் சங்கத்தைப் பொறுத்த வரையில் இதன் பங்குத் தொகை ரூ. 1,505. அங்கத்தினருடைய எண்ணிக்கை 47 தான். இந்த எண்ணிக்கையைக் கொண்டு, இந்த முதலைக் கொண்டு, இந்தச் சங்கத்திற்கு அரசாங்கத்திலிருந்து ஒரு அதிகாரி போடப்பட்டு அவர்களுக்கு உதவியாக இருக்கிறார்கள். இது போன்ற நல்ல சங்கங்கள் முன்வந்து நிறைய வேலைகளை எடுக்கும் வாய்ப்பிருந்தால் நிச்சயமாக அரசாங்கம் பரிசீலிக்கும்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, அரிசன மக்களால் தொடங்கப்பட்டு இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரிசனங்களிலேயே ஒருவர் தலைவராக இல்லாமல் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த ஒருவரைத் தலைவராக ஏற்படுத்துவது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது ஹைபாதடிகல் க்வெஸ்டினாக இருக்கிறது. எந்தச் சங்கத்தில் எப்போது போடப்பட்டார், எந்தச் சங்கத்தில் எப்படித் தேர்தல் நடந்தது என்று விவரம் அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

## *Land Utilisation Order*

*242 Q.—THIRU K. VINAYAKAM :<br>THIRU A. K. SUBBIAH : } Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government propose to enforce strictly "Land Utilisation Order, 1961" fully; and

(*b*) the action proposed to be taken against such of those patta holders who would allow the lands fallow ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலப் பயன் பாட்டு ஆணையின்படிக்கான விதிகளைச் செயல்படுத்துமாறு கலெக்டர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதில் பயிர் விளைவிக்காமல் விடப்பட்டுள்ள பட்டா நிலங்களை அரசாங்கம் மேற்கொண்டு, அதில் பயிரிடும் உரிமையை பொது ஏலத்தில் குத்தகைக்கு விடும் நிதித்துறை உள்ளது.

**திரு. கே. விநாயகம் :** இந்த ஆர்டரின் அடிப்படையில் இது வரையில் எவ்வளவு நிலம் நம் மாநிலத்தில் வீணாகப் போடப்பட்டிருப்பதைத் திரும்பவும் விவசாயத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்? அப்படிச் சொல்லியும் அவர்கள் செய்யவில்லையென்றால், எவ்வளவு நிலத்தை அரசாங்கமே எடுத்து எப்பொழுது விவசாயத்திற்கு உள்ளாக்கி இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இது வரையிலும் 45,366·24 ஏக்கர் நிலம் இம்மாதிரி விவசாயத்திற்கு வராமல் விடப்பட்டிருக்கிறது. அதில் 1,263·30 ஏக்கர் நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுவது என்று தீர்மானித்திருக்கிறது. அதிக உணவு உற்பத்தி 621·73 டன். நிலம் விவசாயிகளுக்கு ஐந்தாண்டு காலத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது.



**திரு. ஏ. கு. சுப்பையா :** இம்மாதிரி சாகுபடி செய்யாமல் தரிசாகக் கிடைக்கக்கூடிய மொத்த நிலங்கள் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் என்பதை அரசினர் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 4,660·45 ஏக்கர். அதில் அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு உத்தரவிடப்பட்டது 802·72 ஏக்கர்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** இந்தச் சாகுபடி ஆகாத நிலங்கள் என்ன காரணத்தினால் அப்படி இருக்கிறது என்ற விவரம் சர்க்காரில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** தனிப்பட்ட விவசாயிகள் நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டு வராமல், வேண்டுமென்றே தரிசாகப் போடப்பட்டிருக்கிற நிலத்திற்கு மாவட்டக் கலெக்டர் மூலமாக அறிவிப்பு முதலியவை தெரிவிக்கப்படுகிறது. மாவட்டக் கலெக்டர் இல்லாத பகுதிகளில் ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் அந்த அறிவிப்பைத் தெரிவிக்கிறார். ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் இல்லாத பகுதிகளில் தாசில்தாரே கூட இந்த அறிவிப்பை நிலச் சொந்தக்காரருக்கு அறிவிக்கிறார். அவர்கள் அறிவித்தும் கூட நிலச் சொந்தக்காரர் இந்த நிலத்தைச் சாகுபடிக்கு, குறிப்பாக உணவு உற்பத்திக்கு கொண்டுவராத நிலை இருந்தால் அதை எடுத்துக் கொள்வது என்ற முறையில் 1961-ம் ஆண்டில் உத்தரவு போடப்பட்டது. அந்த அடிப்படையில்தான் நிலங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஐந்தாண்டுக்குக் குத்தகைக்கு விடுவதில் சில சங்கடம் இருக்கிறது. பத்தாண்டுக் குத்தகையாக இருந்தால் பலனுள்ளதாக இருக்கும். தரிசாகக் கிடக்கும் நிலத்தைப் பண்படுத்த, கிணறு வெட்ட நிறைய செலவு செய்ய வேண்டி இருக்கிறது. ஐந்தாண்டுக்குப் பிறகு அந்த நிலத்தைத் திருப்பி நிலச் சொந்தக்காரருக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதற்கிடையே அவர்கள் இந்த வரி பாக்கி போக, குத்தகை கொடுப்பதிலே மிச்சப்படுகிற தொகையை அரசாங்கம் எடுத்துக் கொண்டு, மிச்ச இழப்பீட்டை நிலச் சொந்தக்காரர்கள் கொடுக்கிறார்கள். ஐந்தாண்டுக்குத் தரிசாகப் போட்டுவிட்டு அதற்குப் பிறகு பலனை அடையலாம். அதை மாற்றியமைக்கும் முறையில் பத்து ஆண்டாக உயர்த்துவதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியும் கோரி வாங்கியிருக்கிறது.

**திரு. தொ. மு. நல்லசாமி :** தரிசாக கிடக்கிற நிலங்களில் விவசாயிகளுக்கு உற்சாகம் இல்லாத காரணத்தாலும் அல்லது தண்ணீர் வசதி இல்லாத காரணத்தாலும், சிவில் விவகாரத்திற்கு உற்பட்ட நிலங்களாக இருந்தாலும் தரிசாகக் கிடக்கின்றன. இவற்றை சாகுபடிக்குக் கொண்டு வர அரசாங்கந்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர கலெக்டர் அவர்கள் பொறுப்பில் விடுவது சரியல்ல. ஆகவே, அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கலெக்டரும் அரசாங்கத்தின் ஒரு அங்கம்தான். அரசாங்கத்தின் ஏவலராக இருந்து கலெக்டர் பணியாற்றுகிறார். கனம் அங்கத்தினர் சொல்லுகிறபடி இருக்கக்கூடிய நிலங்களை ஏழைக் குத்தகைதாரர்களிடம் கொடுத்துப் பயிரிடச் செய்வதில் ஆட்சேபம் இல்லை. பத்தாண்டுகளுக்குப் பிறகு எப்படியும் அந்த நிலச் சொந்தக்காரர்களுக்கு வந்து விடும். ஆகவே, ஏழைக் குத்தகைக்காரர்களுக்கு நிலத்தைக் கொடுக்க நிலச் சொந்தக்காரர்கள் முன்வர வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** உணவு நெருக்கடி இருக்கிற இந்த நேரத்தில் வேண்டுமென்றே, தண்ணீர் வரியை மட்டும் கட்டுவேன், என்னுடைய நிலத்தைத் தரிசாகப் போட்டுவிடுவேன் என்று தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம் தாலூகா, காரிமங்கலம் என்ற கிராமத்தில் 130 ஏக்கர் நிலங்கள் தரிசாகப் போடப்பட்டிருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தஞ்சை மாவட்டத்தில் மொத்தமாக 4,666·45 ஏக்கர் தரிசாகப் போடப்பட்டிருந்ததில் 802·72 ஏக்கர் விவசாயத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட கிராமத்தைப்பற்றிக் கலெக்டர் அவர்களுக்குத் தகவல் கொடுத்தால் அறிவிப்பு செய்து அதன் பிறகு எடுத்துக் கொள்ள வேண்டும். அறிவிப்பு செய்த பிறகு ஒரு சாகுபடிக்கு நிலத்தைத் தரிசாகப் போட்டிருந்தால் தான் நிலச் சொந்தக்காரரிடமிருந்து நிலத்தை எடுத்துக் கொள்ளமுடியுமே தவிர, கனம் அங்கத்தினர் சொன்ன உடனேயே எடுத்துக் கொள்ள முடியாது.

**திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ :** நெல்லை மாவட்டத்தில் தண்ணீர் வசதி தாராளமாக இருக்கிற சூழ்நிலை இருந்த போதிலும், பலர் நஞ்சை நிலங்களில் வாழை போன்ற கமர்ஷியல் கிராப்ஸ் பயிரிடுகிறார்கள். இந்த அடிப்படையில் நஞ்சை நிலங்களில் கமர்ஷியல் கிராப்ஸ் பயிரிட்டால் அந்த நிலங்களையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையில் சட்டத்தைத் திருத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** நெல்சாகுபடி செய்ய வேண்டிய நிலங்களில் கமர்ஷியல் கிராப்ஸ் பயிரிட்டால் அந்த நிலங்களையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையில் இப்போது அரசாங்கம் ஆலோசிக்கவில்லை. பிறகு வேண்டுமானால் அதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** நில உச்ச வரம்புச் சட்டத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக வேண்டுமென்றே விளைகின்ற நிலங்களைக் கூடத் தரிசாகப் போட்டு மேய்ச்சல் நிலங்கள் என்று கூறி நில உச்ச வரம்புச் சட்டத்தில் இருந்து விதிவிலக்கு வாங்கிக் கொள்கிறார்கள். இந்த நிலையைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் அவர்களுடைய பகுதியில் மேய்ச்சல் காடுகள் என்று சொல்லி தள்ளப்பட்ட ஒருவருடைய நிலம் அதிக அளவில் கால்நடைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கால் நடைகளுக்குத் தீவனம் அவசியம். ஆகவே, மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குற்றம் சாட்ட முடியாது. இந்தச் சட்டம் வந்த போதே மேய்ச்சல் தரைக்கு விதிவிலக்குக் கொடுத்த காரணத்தால் அதைப் பயன்படுத்தி விதிவிலக்குப் பெறும் சூழ்நிலை இருந்து வருகிறது.

**திரு. சி. நஞ்சன் :** நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில், மரவள்ளி கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, உருளைக்கிழங்கு போன்றவற்றை விவசாயம் செய்வதற்கான பூமி இருந்தும் எம்.ஜி.எஸ். ஆக்ட் என்ற ஆக்டின் காரணமாக விவசாயம் செய்வதற்கு கஷ்டமாக இருக்கிறது. இதை அரசாங்கம் பரிசீலனை செய்து அந்த பூமியைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ கோவிந்தசாமி:** நான் கொடுத்த தகவல் 31-3-67 தேதிக்கு உட்பட்டது. அப்படிப் பார்க்கும்போது நீலகிரி மாவட்டத்தில் தரிசாகப் போடப்பட்ட நிலங்கள் இருப்பதாகத் தகவல் கிடையாது. கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற பகுதி ஜமீன் பகுதியாக இருக்கலாம். ஜமீன் பகுதி குறித்து ஒன்றும் தகவல் கொடுப்பதற்கில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** அடுத்து, கேள்வி எண் 243 எடுத்துக் கொள்ளப்படும்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இந்த கேள்விக்கு மேஜை மீது அறிக்கை வைக்கப்பட்டிருந்தாலும் முழுத் தகவல் இல்லை. ஒரு மாவட்டத்தைப் பொறுத்துத்தான் தகவல் இருக்கிறது. திரு. கோதண்டராமன் அவர்கள் மற்ற மாவட்டங்களைப் பற்றியும் கேட்டிருப்பதால் நான் துணைக் கேள்விகளுக்கு விரிவாகப் பதில் சொல்ல முடியாது. ஆகவே, நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் வேண்டுகோள்படி இந்தக் கேள்வியை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.





THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. I put the main question (Q. No. 242) and I should be given an opportunity to put one more supplementary question.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அங்கத்தினர் அவர்கள் கேட்பது பாயிண்ட் ஆப் ஆர்டரா அல்லது துணைக் கேள்வி கேட்க விரும்புகிறாரா?

THIRU K. VINAYAKAM : What else can it be? This question is a very important question and I would even go to the extent of requesting the Hon. Deputy Speaker to allow a half-hour debate over this matter but I want to save this House from such a kind of catastrophy. Now, with the consent of the Chair, I would put one more supplementary question.

இந்தச் சட்டம் 1961-ம் ஆண்டிலேயே கொண்டு வந்து ஏழு ஆண்டுகளுக்குப் பிறகும்கூட இன்னும் அதிலே எந்த விதமான நல்ல காரியங்களும் காண முடியாமல் போனதால், 45,000 ஏக்கர் நிலங்கள் தரிசாக இருந்தும் ஆயிரம் ஏக்கர்தான் உங்கள் பார்வைக்கு வந்து அதுவும் 600 ஏக்கர்தான் குத்தகைக்கு விடப்படுகிற நிலையில் இருப்பதால் அந்தச் சட்டத்தை ரத்து செய்துவிட்டு, ஸ்ட்ரின்ஜெண்ட் மெதட்ஸைக் கடைப்பிடிக்கும் வகையில், எந்தக் காரணத்தைக் கொண்டும் தரிசு நிலங்கள் இருக்கக் கூடாது என்ற வகையில் புதிய சட்டத்தைக் கொண்டு வந்து அப்படிப்பட்ட நிலங்களை அரசாங்கம் ஏற்று விவசாயம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட வகையில் புதிய சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நிலச் சொந்தக்காரர்கள் வேண்டுமென்றே நிலங்களைத் தரிசாகப் போட்டிருப்பதை நல்ல முறையில் கவனித்து நடவடிக்கை எடுப்பதற்குக் கடுமையான சட்டம் கொண்டுவரப் படவேண்டும், அந்த நிலங்களை சர்க்காரே மேற்கொள்ள வேண்டும் என்று கூறிய யோசனை வரவேற்கத்தக்கது. அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

**ஹாஜி ம. மு. பீர் முகம்மது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிலபேருக்குப் பாரம்பரியமாக நிலம் கிடைத்து, பண்படுத்தி விவசாயம் செய்ய வேண்டுமென்று நினைக்கிற நேரத்தில் பொருளாதார பலஹீனம் காரணமாக அவர்களால் பண்படுத்தி விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருப்பதால் அரசு அவர்களுக்கு உதவி செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** அரசாங்கம் விவசாயிகளுக்கு பலதரப்பட்ட உதவிகளைச் செய்து வருகிறது. நிலத்தைச் சீர்திருத்தம் செய்வதற்குக் கடன் கொடுக்கிறது. கிணறு வெட்ட கடன் கொடுக்கிறது. பூச்சி மருந்துகள் மலிவான விலையில் கொடுக்கப்படுகின்றன. பம்பு செட் வைக்க கடன் கொடுக்கப்படுகிறது. இவ்வளவு சலுகைகள் கொடுத்தும் தரிசாகப் போடும் நிலைமை இருக்கிறது என்றால் அது வசதி இன்மை காரணமாக அல்ல, இங்கே கிடைத்திருக்கும் தகவலை வைத்துக் கொண்டு பார்க்கும் போது வேண்டுமென்றே விவசாயம் செய்யாமல் போட்டிருக்கிற நிலை இருக்கிறதே தவிர, அதனால் குத்தகைக்காரர்கள் பாதிக்கப்படுகிற நிலை தான் இருக்கிறதே தவிர, வசதி இல்லாததன் காரணமாக தரிசாகப் போடப்படவில்லை. பல பெரியவர்கள், ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களே, நெல் கொள்முதல் செய்வதற்குக் குந்தகம் ஏற்பட வேண்டுமென்ற முறையில் நிலங்களை வெறுமனே போடுங்கள் என்று சொல்லி வந்ததையும் நாம் பார்த்திருக்கிறோம்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவரவர்களே, இதன் கீழ் மாவட்ட வாரியாக எவ்வளவு நிலங்கள் எடுக்கப்பட்டிருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

[1968 மார்ச் 18

greater chances to the Home Guards so that the boys in Madras State can get more chances in the Army at least ? Now there is difficulty about our getting admission in the Army. The whole thing is monopolised by certain States in the North. Will the Government give full scope by increasing the strength of Home Guards and giving them military training ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I have again to say that the function of the N.C.C. is different from the function of the Home Guards. As for the apprehension expressed by the hon. Member about N.C.C. I see the possibility that my reasonable request to the Central Government will be conceded and that the N.C.C. will start functioning. As for the fact that military training should be given to the Home Guards, they are being given Police training. They are not expected to learn military training because we need Home Guards as much as we need the Army.

**திரு. பி. எம். முனுசாமி கௌண்டர் :** தலைவரவர்களே, ஊர்க்காவல் படைக்கு ஏதாவது ஊதியம் தரப்படுமா? அப்படி ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :**—ஊர்க்காவல் படையிலே சேர்பவர்களுக்குச் சர்க்கார் செலவில் உடைகள் தரப்படுகின்றன. பணி புரியும் நாட்களுக்கு இரண்டு ரூபாய் ஐம்பது காசுகள் அலவன்ஸ் தரப் படுகிறது.

**திரு. எம். ஆர். கண்ணன் :** தலைவரவர்களே, இந்த ஊர்க்காவல் படைக்கு எந்த அளவிற்குப் பணம் செலவழிக்கப்படுகிறதோ அதே அளவு பணத்தைக் கொண்டு நிரந்தரமாக எத்தனை போலீஸ்காரர்களை வைத்துச் செலவழிக்க முடியுமோ அப்படிச் செலவழித்தால் நல்லதாக இருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஊர்க்காவல் படைக்கு ஆகும் செலவைக் கொண்டு, அதே செலவில் போலீஸ் வைக்க முடியுமானால் என்னைவிட இன்னும் மகிழ்ச்சியடையவர்கள் யாரும் இருக்க முடியாது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், ஊர்க்காவல் படை எல்லாப் பகுதிகளிலேயும் பரவலாக இருக்கிறதா? அதன் கொள்கை என்ன? ஊர்க் காவல் படை சிலவிடங்களில் வேலை நிறுத்தம் நடைபெறும்பொழுதும் பயன்படுத்தப்படுகிறதே, அதையும் அவர்களது கடமையாக வைத்திருக் கிறார்களா?

**மாண்புமிகு திரு. சி என். அண்ணாதுரை :** வேலை நிறுத்தம் செய் யும் தொழிலாளர்களின் தலைவர்களிலே சிலர் போலீஸ் வருவதைவிட ஊர்க்காவல் படை வந்தால் வரவேற்பார்கள் என்று எண்ணிக்கொண் டிருந்தேன். நம்முடைய தொழிலாளர் தலைவர் ஊர்க்காவல் படை ஏன் வருகிறது என்று நினைக்கிறார் போலிருக்கிறது. ஊர்க்காவல் படை முக்கியமான நகரங்களில் அமைக்கப்பட்டு அவர்கள் பொது அமை தியைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் வேறு சமுதாயப் பணிகளிலும் ஈடு படுகிறார்கள். குறிப்பாகச் சென்னை நகரத்திலே ரேஷன் கார்டுகள் தவறான முறையில் பயன்படுத்தப்படுகின்றன என்று அறிந்த நேரத்தில் ரேஷன் கார்டுகளைப் பரிசீலனை செய்யும்பொழுது மற்ற அதிகாரிகளுக்குத் துணை யிருந்து பணியாற்றியுள்ளது.

முற்பகல் 10.00

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்:** ஐயா, ஊர்க் காவல் படைக்கு ஏற்படக் கூடிய செலவுகளில் மத்திய அரசு ஏதாவது ஒப்புக்கொள்ளுகிறதா என அறிய விரும்புகிறேன்.



1968 மார்ச் 18]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஊர்க்காவல் படைக்கு மாநில அரசு செலவு செய்வதில் பாதி அளவுக்கு இந்திய அரசிடமிருந்து நாம் திரும்பப் பெறுகிறோம்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இந்த ஊர்க்காவல் படையினுடைய நோக்கமே யுத்தகாலங்களில் யுத்த முனையில் துருப்புகள் ஒரு பாகம் போராடிக் கொண்டிருக்கும் பொழுது, இங்கே உள்ள நாட்டிலே "ஏர் ரெய்டு கள்" போன்றவைகள் வருகின்றபொழுது இங்கே காரியங்கள் செய்வது தான். இங்கேயே, சென்னை நகரத்திலே கூட "ஏர் ரெய்டு பிரிகாஷன்ஸ்", "ஃபயர் ஃபைட்டிங்" போன்றவைகளில் பயிற்சி நடத் தினார்கள். இப்பொழுது அவைகளையெல்லாம் நிறுத்திவிட்டார்கள். திரும் பவும் இந்த "ஏர் ரெய்டு பிரிகாஷன்ஸ்", "ஃபயர் ஃபைட்டிங்" போன்ற வற்றில் அவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு இந்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** ஏற்கனவே ஒரு முறை பயிற்சி பெற்றிருக்கின்ற ஊர்க் காவல் படையினர் திரும்பவும் இந்தப் பயிற்சி பெறத் தேவையில்லை. அந்தப் பயிற்சி அவர்களுக்குப் போதுமா னதாக இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி யுத்த நெருக் கடி வந்த நேரத்தில் அதிகமான அளவுக்கு எல்லைகளையும் அதிகமான செலவுகளும் இருந்தன. அந்த வருஷத்திலே மட்டும் 13 லட்சம் ரூபாய் கள் செலவாகியிருக்கின்றன. இப்பொழுது நாட்டுக்கு வரக்கூடிய ஆபத்து கொஞ்சம் தணிந்திருக்கக்கூடிய காலத்திலே 13 இலட்சம் ரூபாய் செலவிலிருந்து [illegible] லட்சம் ரூபாய்க்குக் குறைக்கப்பட்டிருக்கிறது.

### பின்தங்கிய மாவட்டங்கள்

*** 237 வினா—திரு. கரு. சீமைசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் இராமநாதபுரம், வட ஆற்காடு போன்ற பின் தங்கிய மாவட்டங்களை, தொழில் வியவசாயத் துறைகளில் முன்னேற்றமடைய திட்டங்களை வகுப்பதற்கு ஒரு கமிஷனை அமைப்பதற்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இல்லை.

DR. H. V. HANDE : Sir, it is a well-known fact that the Ramanathapuram district is unfortunately a most backward district. Just as we have got backward class and the most backward class, North Arcot district is a backward district and the Ramanathapuram district is the most backward district. In view of the backward nature of the Ramanathapuram district and in view of the recent notification by the Centre declaring certain areas in the Madras State as backward areas and also in view of the fact that the Central Government are going to help these areas financially, will this Government reconsider the tragic position in which the Ramanathapuram district is placed and see that they give a little more encouragement than what has been given hitherto ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, the question is about the constitution of a Commission and for that my answer was 'No', because already a Study Team has gone into the

[1968 மார்ச் 18

question and we have had enough correspondence with the Centre about it. There is only a difference of opinion or difference in the point of view between the Centre and the State Government. They have given a classification and we are pressing upon the Central Government to be more liberal in its classification.

THIRU K. VINAYAKAM : Sir, whereas there is a reasonable and potential possibility of exploiting the agricultural and industrial resources in our State especially in the backward areas like Chingleput, Ramanathapuram, Thanjavur and North Arcot, what harm will the Government have, if they constitute—not exactly a commission—a Study Group to go into the question. Also, the object of this Government is to produce more and that being the case, why not the Government re-think over this matter ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The Government consider re-thinking unnecessary because they have spent enough thought over it. A Study Team has gone into the matter.

**திரு. வி. டி. அண்ணாமலை :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்திலே ஜவ்வாது மலை என்ற பெரிய மலை ஒன்று இருக்கிறது. அது பழைய காலத்து மலை. அங்கே இண்டஸ்ட்ரியலும் இன்னும் சுரங்கங்களும் தேவைப்படுகின்ற நிலையிலே இருக்கின்றது. அது மட்டுமின்றி வடார்க்காடு மாவட்டத்திலே காய்ந்த பாலாறு, தண்ணீர் இல்லாத பாலாறு ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையிலே வடார்க்காடு மாவட்டத்தைப்பற்றிப் பரிசீலிப்பதற்கு ஒரு கமிஷனை அவசியம் நியமிக்க வேண்டுமென்பதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யோசனை செய்வாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் வடார்க்காடு மாவட்டத்தினுடைய நிலைமையை விளக்கியதற்கு நன்றி.

**திரு. பி. எம். முனுசாமி கௌண்டர் :** சார், தமிழகத்தில் பல மாவட்டங்கள் பிற்போக்கானவை என்றும் பல மாவட்டங்கள் முற்போக்கானவை என்றும் பல்வேறாகச் சொல்லப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த எந்த மாவட்டங்கள் பிற்போக்கானவை, எந்த எந்த மாவட்டங்கள் முற்போக்கானவை, எந்த அடிப்படையில் இவை பிரிக்கப்படுகின்றன என்ற விவரத்தைத் தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இதிலே, நான் முன்பு சொன்ன பதில் குறிக்கப்பட்டிருக்கிறது. நமக்கும் மத்திய அரசுக்கும் இதிலே ஒரு சிறு வித்தியாசம். அவர்கள் மாவட்ட வாரியாக எது பிற்படுத்தப்பட்ட வட்டம் என்று பாகுபடுத்த வேண்டுமென்கிறார்கள். அப்படி எடுத்துக் கொண்டாலும் எந்த மாவட்டத்திலேயும் சில பகுதிகள் வளமான பகுதியாக இருக்கும். சில வளமில்லாத பகுதி என்று சொல்ல நேரிடும். ஆகையால், எந்தப் பகுதி பிற்படுத்தப்பட்ட பகுதி என்பதை தாலூகா அளவிலே பிரிக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு மத்திய அரசும் அதற்கு ஒத்துக்கொண்டு அப்படி தாலூகா வாரியாக வரக்கூடிய பட்டியல் மட்டும் கொடுத்திருக்கிறோம். மழையே இல்லாததால் போதிய வளர்ச்சி இல்லாத நிலங்கள் உள்ள பகுதிகள் :—

வடார்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர்; தென்னார்க்காட்டில் விருத்தாசலம்; சேலத்தில் ஓமலூர், சங்ககிரி, திருச்செங்கோடு, நாமக்கல்; கோயம்புத்தூரில் தாராபுரம், பல்லடம், அவனாசி; இராமநாதபுரத்தில்



1968 மார்ச் 18]

திருப்பத்தூர், திருவாடானை, பரமக்குடி, இராமநாதபுரம், முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை, சாத்தூர்; மதுரையில் திண்டுக்கல், பழனி, திருமங்கலம்; திருச்சிராப்பள்ளியில் பெரம்பலூர், உடையார்பாளையம், கரூர், குளத்தூர், ஆலங்குடி; திருமயம்; திருநெல்வேலியில் சங்கரன்கோவில், கோவில்பட்டி, நாங்குனேரி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம்.

*Buses held up by students at Boothapandi*

*238 Q.—THIRU K. M. RAMASWAMI GOUNDER : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any of the State Transport buses were held up by students at Boothapandi in Nagercoil on 5th July 1967 ; and

(b) if so, the steps taken by the Government to prevent such occurrences?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) இதுபோன்ற நிகழ்ச்சி, பூதபாண்டியில் 4–7–67-ல் நிகழ்ந்தது ; 5–7–67-ல் அல்ல.

(இ) தேவை ஏற்படும்பொழுது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** சார், 6–7–67-க்குப் பின்னாலும் போக்குவரத்துத் துறையிலே பல இடங்களிலே இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு விட்டது—இந்தி எதிர்ப்பின் காரணமாக. கோவை மாவட்டத்திலே இரண்டு மாணவர்கள் உயிர் இழக்கும் நிலையம் ஏற்பட்டுவிட்டது; இவ்வித சட்டவிரோதமான செயல்களை தடுப்பதற்கு 'prevention is better than cure' என்ற முறையிலே ஏதாவது ஒரு கமிஷன் ஏற்படுத்துவதோ அல்லது வேறு நடவடிக்கைகளை எடுப்பதோ அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இவைகளுக்கெல்லாம் கமிஷன்கள் நியமிப்பதைவிட எல்லாக் கட்சிகளிலும் உள்ள பொறுப்புள்ள தலைவர்கள் இப்படிப்பட்ட செயல்களிலே யாரும் ஈடுபடவேண்டாமென்று அறிவுரை வழங்குவது சாலப் பொருத்தமானது என்று நான் கருதுகிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, பூதபாண்டியில் நிறுத்தப்பட்ட பேருந்துகள் மாணவர்களால் மாத்திரம் நிறுத்தப்படவில்லை. மாணவர்கள் பெயரை வைத்துக்கொண்டு பல தீய சக்திகள் பின்னாலிருந்து இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுவதாக அரசாங்கத்திற்கு தகவல் வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சர்க்கார் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் எல்லாம் தொடர் நடவடிக்கைகள் அதிகமாக இல்லாத வகையிலே அமையவேண்டுமென்பது இந்த சர்க்காரினுடைய கொள்கை. ஆகையால் இது மாணவர்களாலே மட்டும் என்று கூட அல்ல; தீய சக்திகள் எல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற புகார்கள் சர்க்காருக்குக் கிடைத்துள்ளன. ஆனால் அவைகளிலே உள்ள அரசியல் சூழ்நிலை, ஒரு அரசியல் கட்சி இன்னொரு அரசியல் கட்சியை தீய சக்தி என்று குறிப்பிட்டு—ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு அரசியல் கட்சி, இன்னொரு

அரசியல் கட்சி இவர்கள் பின்னால் நிற்கிறார்கள் என்று சொல்வதையெல்லாம் குறிப்பிட்டு—அதன்பேரில் நடவடிக்கைகள் எடுத்து, அதன் மூலம் நிலைமையை மோசமாக்கக்கூடாது என்பது இந்த சர்க்காரினுடைய கொள்கையாக இருந்து வருகிறது.

**திரு. வ. ஜார்ஜ்:** அவைத் தலைவர் அவர்களே, இந்தக் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாணவர்களுக்கும் டிரான்ஸ்போர்ட் பஸ் தொழிலாளர்களுக்கும் அடிக்கடி கடந்த வருஷம் சண்டைகள் நேரிட்டன. அதற்குக் காரணம் பீக் ஹவர்ஸில் மாணவர்களுக்குப் போதுமான பஸ்கள் விடுவதில்லை. விடுகின்ற பஸ்களில்கூட ஒரு குறிப்பிட்ட அளவு பாஸஞ்சர்ஸ் மட்டும் ஏற்றிக்கொள்ளலாம் என்ற அளவில் ரூட் நடத்துகிறார்கள். எனவே அரசாங்கம் இந்த பீக் ஹவர்ஸில் கொஞ்சம் நியாயமான அளவு ஓவர்லோடுக்கு வழிவகை செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினர் சொல்வது சரியான தகவலாக இருக்குமானால் அது கவனிக்கப்படும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டிருக்கிற ஊழியர்கள் மாணவர்களிடமும், மற்றவர்களிடமும் போதிய அளவு மரியாதையோடு நடந்து கொள்ளாத சூழ்நிலை பரவலாக இருப்பதைப் பார்க்கிறோம். அதற்காக பிற துறைகளிலே 'மரியாதை வாரம்' கொண்டாடுவதைப்போல இந்தத் துறையினரும் 'மரியாதை வாரம்' கொண்டாடவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இந்த மரியாதை நிரந்தரமாக இருக்கவேண்டுமென்பது இந்த அரசினுடைய கொள்கை. வாரத்தில் ஒருநாள் மரியாதையாக இருந்துவிட்டு மற்ற நாட்களிலே வேறு மாதிரியாக இருப்பது உகந்ததல்ல.

**திரு. கே. விநாயகம்:** பூகபாண்டியில் நடந்த நிகழ்ச்சிகளைப்போல மாநிலம் முழுவதும் ஆங்காங்கு போக்குவரத்து தடைபடுத்தப்பட்டது, சிலர் அப்படி செய்ய தூண்டிவிடக்கூடிய சூழ்நிலை இருந்தால் என்று சொல்லப்படுகிறது. அப்படி தூண்டி விட்டவர்கள் தீய சக்திகளா, மாணவர் சக்திகளா என்பதைததவிர, போக்குவரத்தைத் தடுத்தவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்று யோசித்து, அவர்களை தக்க முறையிலே தண்டிப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இந்த அரசாங்கம் வேண்டுமென்றே எடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த அரசாங்கமே தூண்டிவிட்டதாக பலரால் சொல்லப்படுகிறதே, இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன நினைக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இவைகளையெல்லாம் இந்த அரசாங்கம் தூண்டிவிட்டது என்ற தவறான கருத்தை கனம் உறுப்பினர் அவர்கள் கொண்டிருப்பதை நீக்குவதற்கு அவர்களுக்கு ஒரு தகவல் தர விரும்புகிறேன். போக்குவரத்தைத் தடைப்படுத்துகிற இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இந்த மாநிலத்தில் மட்டும் அல்ல, இந்தியா முழுவதுமே நடந்துகொண்டிருக்கின்றன. அது இப்பொழுது மட்டுமல்ல, பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கம் தூண்டிவிட்டு இவைகளைச் செய்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் தவறான எண்ணத்தை வைத்திருப்பதை முதலில் அவர் நீக்கிக் கொள்ளவேண்டும். தூண்டிவிட்டதற்கு தக்க தண்டனை கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னபடி, சர்க்கார் எடுத்துக் கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் வேறுபல தொடர் நடவடிக்கைகளைத் தூண்டிவிடத்தக்கதாக இருக்கக்கூடாது என்பதுதான் இந்த சர்க்காருடைய கொள்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.



[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அரசினர் மசோதா

### 1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** 1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** 1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதாவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

## 3. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,58,80,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

**திரு. வி. கே. கோதண்டராமன்:** விவசாயத்திற்குத் தேவையான பொருள்களின்மீதும் உபயோகப் பொருள்களின்மீதும் விற்பனை வரி போடாமல் விதிவிலக்கு அளிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்கூற—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,58 80,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** விற்பனை வரி வசூலிப்பதில் சிறு வியாபாரிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ 1 58 80,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** ஐயா, ஏழைகள் உபயோகிக்கும் எல்லா உணவுப் பொருள்களையும், விற்பனை வரி விதிப்பிலிருந்து நீக்குவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,58,80,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss the increased incidence of Sales Tax and the levy of Sales Tax on the sale of jaggery, I move the cut motion standing in my name—

"That the allotment of Rs. 1,58,80,700 under Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration—be reduced by Rs. 100".

THIRU K. M. RAMASWAMI GOUNDER : Sir, to insist that multipoint tax should be abolished, I move—

"That the allotment of Rs. 1,58,80,700 under Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration—be reduced by Rs. 100."

### கோரிக்கை எண் 1—நிலவரித் துறை

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,60,26,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. செ. பாலசுப்பிரமணியன்**: கொள்கைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,60,26,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. அ. கு. சுப்பையா**: "நஞ்சை நிலவரி முழுவதும் நீக்கிவிட வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்த—

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,60,26,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss the failure of the Government to abolish Land Revenue on wet lands, I move—

"That the allotment of Rs. 1,60,26,600 under Demand No. 1—Land Revenue Department—be reduced by Rs. 100".

THIRU K. M. RAMASWAMI GOUNDER : Sir, to point out that the abolition of Land Revenue to dry lands has not afforded real redress to ryots, I move—

"That the allotment of Rs. 1,60,26,600 under Demand No. 1—Land Revenue Department—be reduced by Rs. 100".

**திரு. ஏ. அ. சுப்பாராஜா**: பருவமழை தவறியதால் இராமநாதபுரம் மேல்பகுதியில் நிலவரி வஜா செய்ய வேண்டியதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,60,26,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



**திரு. எம். சுரேந்திரன்**: "புறம்போக்கு நிலங்களில் நிரந்தரமாக விவசாயம் செய்துவரும் விவசாயிகளிடம் தண்டதீர்வை வசூலிக்கும் பழக்கத்தை நிறுத்த வேண்டுவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 1—நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,60,26,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்**: "பருவமழை தவறிய காரணத்தால் விளைச்சல் பாதிக்கப்பட்ட குத்தகை வார சாகுபடிதாரர்களிடம் ஏற்படும் பாக்கி நெல்லை பாக்கி என்று கொள்ளாமல் வஜா செய்ய வேண்டுமென்பது" பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 1—நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,60,26,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### கோரிக்கை எண் 31—பஞ்சத் தணிப்பு.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்**: ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 31—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,72,80,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

**திரு. எ. பாலசுப்பிரமணியன்**: "தமிழ்நாட்டில் பருவமழை தவறிய பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கவேண்டியது" பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 31—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,72,80,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. RAMAMOORTHI : Sir, to discuss the general policy with special reference to Tindivanam Municipal area, I move the cut motion standing in my name—

"That the allotment of Rs. 1,72,80,800 under Demand No. 31—Famine Relief—be reduced by Rs. 100".

**திரு. செ. பாலசுப்பிரமணியன்**: "இவ்வருடம் கோவை மாவட்டத்தைப் பஞ்சப் பிரதேசமென அறிவித்து நிவாரண வேலைகள் மேற்கொள்ள வேண்டியது" பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 31—பஞ்சத்தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,72,80,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி**: "பல்லடம் தாலுக்காவில் பருவமழை தவறிவிட்டதால் பஞ்சம் ஏற்பட்டு அங்குள்ள மக்களுக்கு வேலை இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதால், அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதுபற்றியும், கால்நடைகளுக்கு தீவனக்கடன் கொடுப்பதுபற்றியும், ஏழைமக்களுக்கு அரிசி வினியோகிப்பதுபற்றியும்" விவாதிக்க.

"கோரிக்கை எண் 31—பஞ்சத்தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,72,80,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: நிதிக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு விடப்படுகின்றன.

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை வருமானவரி நிர்வாகம், நில அளவை, நிலவரி ஏற்பாடு, நில ஆவண வேலைகள், முன்னாள் ஜமீன்தாரி எஸ்டேட்டுகளின் நிர்வாகம் ஆகியவற்றிற்காக, "மானியக் கோரிக்கை—1 நிலவரி" என்பதன்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நிலவரி வசூல்—நிர்வாகச் செலவில் பெரும்பகுதி "9. நிலவரி" என்னும் பெருந்தலைப்புக்குப் பற்றாக எழுதப்படுவதில்லை. இவ்வேலை வருவாய்த் துறையின் மாவட்டப் பணியாளர்களால் செய்யப்படுகிறது. இதற்காகும் செலவு "19. பொது நிர்வாகம்—மாவட்ட நிர்வாகம்" என்னும் தலைப்பிற்குப் பற்றாக எழுதப்படுகிறது. இது 9-வது மானியக் கோரிக்கையில் சேர்ந்துள்ளது. நிலவரி நிர்வாகம் குறித்துச் செய்யப்படும் செலவு மட்டுமே இத் தலைப்பிற்குப் பற்றாக எழுதப்படுகிறது.

முன்னாள் ஜமீன் எஸ்டேட்டுகள் நிர்வாகத்திற்கான "செலவு" என்பதன்கீழ், இது குறித்து நியமிக்கப்பட்ட பணியாளர், நிலம் பட்டா செய்து தருதல், இழப்பீடு, ஜமீன் ஒழிப்பு நிதிக்கு மாற்றப்பட்ட தொகை ஆகியவற்றிற்காக வகை செய்யப்பட்டுள்ளது.

இன்றையதினம் இங்கே கோரப்பட்டிருக்கிற கோரிக்கைகளின்கீழ் பொது விற்பனை வரி, வருவாய்த்துறை, பஞ்சத் தணிப்புத் துறை ஆகிய துறைகளுக்காக, கோரப்பட்டிருக்கும் மானியங்களின் பேரில், அன்புமிக்க உறுப்பினர்கள் விவாதித்து, நல்ல சுவையும், பயனும் உள்ள வகையில் கருத்துக்களைக் கொடுக்க, கொள்கையளவில் முக்கிய பிரச்சினைகளைக் கோடிட்டுக்காட்ட வேண்டும் என்பதற்காக நான் சில வார்த்தைகள் முதலாவதாகப் பேச விரும்புகிறேன். கொள்கை விவரங்கள், சாதனைகள் பற்றி உறுப்பினர்கள் முன்னால் அறிக்கை * வைத்திருக்கிறதென்றாலும், எதிர்கால வேலைத் திட்டங்களைத் தெரிந்துகொள்ள, அதன் மேல் ஆலோசனைகளைக் கொடுக்க உதவியாக இருக்கும் என்ற முறையில் சில வார்த்தைகளைச் சொல்ல முன் வருகிறேன். அந்த வகையில் முன்னுரையாகச் சில வார்த்தைகளை மட்டும் மாமன்றத்தின் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

பொது விற்பனை வரித் துறையைப் பொறுத்தவரையில், இந்த மாநிலத்தினுடைய விற்பனை வரியின் வசூல் தன்மை பற்றிக் குறிப்பிடும் போது, 10 கோடி ரூபாய்க்கு அதிகமாக இந்தத் துறையில் வருமானம் வரவேண்டும் என்று நான் கடந்த மானியக் கோரிக்கை விவாதத்தின்போது குறிப்பிட்டதாக எனக்கு ஞாபகம். இன்றைய தினம், மாநில பொது விற்பனை வரிகளின் மூலமாக கடந்த ஆண்டுகளுக்கு எவ்வளவு வசூல் ஆயிற்றோ, அதைக் காட்டிலும், இந்த பிப்ரவரி மாதம் முடிய, இந்த ஆண்டில் அதிகமான வருமானம் ரூ 8,13,00,000 வந்திருக்கிறது. இது பிப்ரவரி முடிய வந்திருக்கிறது என்பது மிகுந்த பெருமையோடு குறிப்பிடக் கூடியது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடந்த வருஷத்திலே, எல்லா விதமான வரிகளின் மூலமாகவும் நம்முடைய மாநிலத்திற்கு பிப்ரவரி முடிய வந்துள்ள வருமானம் ரூ. 49 கோடியே 56 லட்சம். இந்த ஆண்டிலே, நடப்பு ஆண்டில், பிப்ரவரி வரையில் 57 கோடி ரூபாய் வசூல் செய்திருக்கிறோம். அதன் விளைவாக ஏறக்குறைய—இன்னும் ஒரு மாத கணக்கு வரவில்லை—8 கோடி அதிகமாக வருமான வரி மூலம் வந்திருக்கிறது. இந்த ஆண்டில் அதிகமாக வருமானம் பெற்றிருக்கிறோம் என்கிற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பெரியதொரு சந்தேகம் வரக்கூடும். விற்பனை வரியை ½ சதவிகிதம் என்று ஆடம்பரப் பொருள்கள்மீது ஏற்படுத்தியிருப்பதால், ஆண்டு அதிக வருமானம் என்று தோன்றக்கூடும். ஆனால், புதிய வரிகள் மூலம் கிடைக்கும் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால், இரண்டு

* 535–551ம் பக்கங்களில் இரண்டாவது; மூன்றாவது இணைப்புகள் ஆக அச்சிடப்பட்டுள்ளன.





கோடியே, முப்பத்தெட்டு லட்சம்தான் புதிய வரிகள் மூலம் கிடைத்திருக்கிறது என்பது தெரியும். ஆனாலும், இந்த அதிகமான வருமானத்திற்குக் காரணம் வேறு. இந்த மாநிலத்தில் இந்த நிர்வாக அமைப்பை, இந்தத் துறையை ஒழுங்குபடுத்தியதன் காரணமாக, ஒரு புதிய விறுவிறுப்பும் சுறுசுறுப்பும் ஏற்பட்டு, வரிகளை ஏமாற்றி, தப்பித்துக் கொண்டு, சாப்பிட்டு ஏப்பம் விடும் செயல் தவிர்க்கப்பட்டு, வியாபாரிகள் ஆட்சேபணையில்லாமல், அந்த அந்தக் காலத்தில் கொடுத்திருக்கிறார்கள். அப்படி வசூல் செய்யப்பட்ட 9 கோடி ரூபாயில், கிட்டத்தட்ட 7 கோடி ரூபாய் விற்பனை வரித் துறையில் தலைமை தாங்குகிறவர்கள், அந்த இலாகா செம்மையாக, நன்றாக வேலை செய்ததன் காரணமாக வசூல் செய்யப்பட்டது. அவர்களுடைய நல்ல பணியால் இந்தத் தொகை வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கேட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள், பாராட்டுத் தெரிவிப்பார்கள் என்பதிலும் எனக்கு கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை. (குறுக்கீடு) பாராட்டு எனக்குத் தெரிவித்தாலும், தெரிவிக்காவிட்டாலும், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எக்ஸம்ஷன் லிமிட்டை 10,000 லிருந்து 15,000 என்று அதிகப்படுத்தினோம். 50,000 லிருந்து 75,000 என்று கம்பௌண்டிங்குக்கான விகிதத்தை உயர்த்தினோம். இந்த அனுகூலங்கள் செய்யப்பட்ட பிறகும், தமிழ்நாட்டில் தொழில் மந்தம் ஏற்பட்ட பிறகும், 'ரிஸெஷன்' ஏற்பட்ட பிறகும், பல ஆலைகள், தொழிற்சாலைகள் மூடிக்கிடந்த நிலையிலும், அத்தனை நிலைகளுக்குப் பிறகும், சரியான முறையில் வரி வசூல் நடந்திருக்கிறது என்றால், இந்த நிர்வாகத்திற்கு தலைமை தாங்கி நடத்திய வருவாய் போர்டு மெம்பராக இருந்து திரு. பாலசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கிய பெருமையால், அவருடைய ஆற்றலினால், அந்த இலாகாவினர் இந்த அளவிற்குச் செய்தார்கள். எல்லா மானியங்களும் செலவு செய்வதைப் பற்றி பேசுகிறோம். ஆனால் இந்த மானியத்தில் 10 கோடியளவிற்கு புதிதாக வருமானம் வந்திருக்கிறது என்கிற ஒரே காரியத்தைக் கண்டு இந்த மாமன்றம் மகிழ்ச்சி அடையும் என்பதில் கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை. முன்னால், இந்தத் துறையில் 2 கோடி, 3 கோடி ஏமாற்றுகிறார்கள் என்பதைக் கண்டு தக்க நடவடிக்கை எடுக்க, முன்பு போர்டு மெம்பராக இருந்து திரு. ராயப்பா அவர்கள் முற்பட்டார்கள். ஆனாலும், அவர்களுடைய செயல் கண்டனத்திற்கும், ஏச்சலுக்கும், பழிக்கும் அளவிற்கும் காரியங்கள் நடந்தன. இப்பொழுது நல்ல பணி செய்திருப்பதற்கு காரணமாக இருந்து அந்தத் துறையைத் தலைமை தாங்கி நடத்திய, இப்பொழுது மின்சார வாரியத்திற்கு தலைமை தாங்கக் கூடிய, திரு. பாலசுந்தரம் அவர்களுக்கும், அந்த இலாகாவினருக்கும் என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொரு மகிழ்ச்சியான செய்தி. நம்முடைய விற்பனை வரி சட்டத்திலே, 42-வது செக்ஷனின்கீழே இருக்கிற, சோதனை செய்தல், கைப்பற்றல், ஸீஷர், ஸர்ச், இவற்றிற்கு, ஹைகோர்ட்டில் தாவா கொடுத்த காரணத்தால், அவை செல்லுபடியாகாது என்று தெரிவித்ததன் பேரில், அது சரியானதல்ல, நியாயமானதல்ல என்று சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்ற வகையில் நமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. ஆகவே, இப்பொழுது ஸீஷர், ஸர்ச் இவைகளுக்கெல்லாம் நமக்கு அதிகாரம் இருக்கிறது என்று சாதகமான வகையில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு செய்திருக்கிற காரணத்தால், வரியிலிருந்து ஏய்க்கும் முறைக்கு பாதுகாப்புக் கிடைத்திருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், கோயம்புத்தூர் நகரத்தில் சேல்ஸ்டாக்ஸ் அபலேட் ட்ரைப்யூனல் நிறுவப்பட்டு தொடர்ந்து வேலை செய்வதால் பல சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதே மாதிரி உதகமண்டலம், தர்மபுரி இவற்றை கமர்ஷியல் டாக்ஸ் மாவட்டங்களாகச் செய்திருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு கே. ஏ. மதியழகன்] [1968 மார்ச் 18

அடுத்து, இந்தத் துறையில் வியாபாரிகளும், மற்றவர்களும் நல்ல வகையில் ஒத்துழைத்திருக்கிறார்கள். பொது விவாதத்தின் போது, நம்முடைய மாண்புமிகு மேலப்பாளையம் உறுப்பினர் ஒன்றைச் சொன்னார்கள். ஆடுகளுக்கு வரி போடுவது பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த விஷயம் போர்டின் ஆலோசனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விரைவாக ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல தலையணை உறைகளுக்கு, பில்லோ கவர்களுக்கு, வரி பற்றிக் குறிப்பிட்டார்கள். பத்தாண்டு காலமாக இந்த வரி நியாயமானதல்ல என்று சொல்லப்பட்டு வந்திருக்கிறது. பல இடங்களிலும் சொல்லியிருக்கிறார்கள். அதற்குச் சலுகை கொடுக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். இப்பொழுது அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு, ஜீ.ஓ.வும் போடப்பட்டிருக்கிறது. அதன்படி இனிமேல் அந்த வரி தலையணை உறைகளுக்குக் கிடையாது என்பதையும் தெரிவிக்கிறேன். அதேபோல்தான், பொரிக்கும், அவலுக்கும்—பஃப்டு ரைஸ் அண்ட் ஃப்ரைடு ரைஸ்—வரியிலிருந்து விலக்கு அளிக்கப் படவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதையும் விலக்கியிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மற்றபடி இந்தத் துறையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுக்கும் முறையான யோசனைகளுக்குப் பிறகு நான் பதில் சொல்லலாம் என்றிருக்கிறேன்.

நில வரித் துறை பொருத்த வரையில், முக்கியமான சில அம்சங்களை மட்டும் இந்த மாமன்றத்திற்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நிலவரித் துறையைப் பொருத்த வரையில் அதிலுள்ள பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்ட பிரச்சினை அல்ல. நீண்ட நெடுங்காலமாக, காரன்வாலிஸ் காலத்திலிருந்து, ராமைய்யா காலம் வரையில், எவ்வளவோ கட்டங்கள் மாறி மாறி இன்றைக்கு இருக்கும் கட்டத்திற்கு வந்திருக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நம்மை அடிமைப்படுத்தியிருந்த ஆங்கிலேயர்கள் வரி வசூல் செய்ய ஜமீந்தாரி முதலிய முறைகளை ஏற்படுத்தியிருந்தது. அதற்குப் பிறகு, சுதந்தரம் பெற்ற பிறகு, கடந்த 20 வருஷ காலமாக, குடியானவர்களுக்கும் உழவர்களுக்கும், நிலச் சொந்தக்காரர்களுக்கும் இடையே நிலவ வேண்டிய உறவு முறைகளைப் பற்றி.............

**திரு. வ. ஜார்ஜ்:** தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த நில வரிக் கோரிக்கை சம்பந்தமாக ஒரு அறிக்கைத் தாள் கொடுத்திருக்கிறார்கள். "அவைமுன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள்" என்ற பட்டியலிலும்,

' Speech by Hon. Thiru K. A. Mathialagan, Minister for Food, while moving the Demand No. 1—Land Revenue (English and Tamil)" என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் மேலாக இப்பொழுது விரிவாகப் பேசவேண்டியது முறையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர்களுக்கு கோரிக்கைகளின் துவக்க நேரத்தில் விளக்கம் கூற உரிமை இருக்கிறது. அவர்கள் பேசுவது சரிதான்.

முற்பகல் 10-30.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினர்களுக்கு அந்தந்தத் துறைபற்றி அளிக்கப்படும் குறிப்புகள் அந்தந்தத் துறை சம்பந்தப்பட்ட செயலாளர்களால் தயாரிக்கப்படுபவை. அவை அமைச்சர்களுடைய பேச்சு அல்ல. கனம் உறுப்பினர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும் விவரங்களோடு, இன்னும் கொஞ்சம் விவரங்கள் தரவேண்டும் என்ற நோக்கத்தில், அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கும் விளக்க குறிப்புகளே தவிர, அவை அமைச்சர்களுடைய பேச்சு அல்ல.



1968 மார்ச் 18] [திரு கே. ஏ. மதியழகன்]

நில உறவு முறையைப் பொறுத்த வரையில், இருபதாண்டுக் காலமாகப் பல நிலைமைகளை ஏற்படுத்தியும், பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்ற நிலைமையில், இன்றைக்கு தமிழக மக்களுடைய பெரிய ஏகோபித்த நம்பிக்கையைப் பெற்றிருக்கிற நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசாங்கம், மூன்றரை, நான்கு கோடி மக்களுடைய பெரிய ஜீவாதாரமான, நூற்றாண்டுகளாகத் தீர்க்கப்படாத, பிரச்சினையில் மிகத் தெளிவான, திட்டவட்டமான, ஊசலாட்டமற்ற முடிவுகளை எடுக்க முனைந்திருக்கிறது. என்ன காரணத்திற்காக இந்த ஒரு பெரிய அரசாங்கத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே இன்றைக்கு இந்த நாட்டு மக்கள் ஏற்படுத்தினார்களோ, அதை நிறைவு செய்யும் வகையில், பிரச்சினைகளில் தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டிய பெரிய விவகாரங்கள் இந்த மானியத்தில் அடங்கியிருக்கின்றன என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்தாகும். பல நூற்றாண்டுகளாகவும், சென்ற இருபது ஆண்டுக் காலமாகவும், இருந்த ஆட்சிகளின் மாற்றத்திற்குப் பிறகு ஏற்பட்டிருக்கிற ஒரு கட்சியின் பல்வேறு மாதிரியான உறவு முறைகள் எப்படியிருக்கின்றன, நிர்வாக முறைகள் எப்படியிருக்கின்றன என்பதை எதிர்நோக்கும் சில நிலைமைகள் தமிழகத்தில் இன்றைக்கிருக்கும் காரணத்தினாலே, பழைய காலத்தில் ஏற்பட்ட நிலைமைகளுக்கெல்லாம் ஒரு பரிகாரம் தேடுகிற ஒரு பெரிய மானியமாக இந்த நில வரித்துறை இருக்கிறது என்று நான் சொன்னால், அதை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ளும் என்பதில் எனக்குக் கொஞ்சங்கூட சந்தேகம் கிடையாது. நில உறவு முறை, நம்மை அலைக்கழிக்கும் உணவுப் பிரச்சினையோடு தொடர்பு கொண்டிருக்கிறது. உணவு உற்பத்தியை அதிகமாக்கவேண்டும், உணவு நெருக்கடியைத் தீர்க்கவேண்டும், வயிறார உணவு கொடுக்கவேண்டும் வாழும் மனிதருக்கெல்லாம் என்ற பெரிய தத்துவத்தின் அடிப்படையில் இன்றைக்கு, கடன் வசதிகள், உயர்தர விதைகள், ரசாயன உரங்கள் இவைகளெல்லாம் அளித்தால் மட்டும் போதாது என்று சொல்லி, யார் நிலத்தில் பாடுபடுகிறார்களோ, எந்த உழவர்கள் இன்றைக்கு உணவுப் பொருள்களை விளைவித்து மற்ற மக்களுக்குக் கொடுக்கிறார்களோ, அந்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய உரிமைகள், சாகுபடி உரிமைகள், அவர்களுடைய மற்ற பாதுகாப்புகள் இவைகளுக்கெல்லாம் உத்தரவாதம் அளிக்கப்படுகின்றனவா என்ற பெரிய பிரச்சினை, இதன் பின்னாலே தொக்கி இருக்கும் காரணத்தினாலே, இன்றைக்கு நில வரி கூடாது என்று சொல்லுகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இயங்குகிற, தமிழகத்தினுடைய இந்தப் புதிய அரசு கடந்த ஆண்டில் புஞ்சை நிலத்திற்கு வரியை எடுத்தது. ஏறக்குறைய 1 கோடி 37 லட்சம் ஏக்கர் நிலம் இதனால் பயன்பெற்றது. தமிழ்நாட்டில் எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறதோ, அந்த நிலத்தில் ஐந்தில் நான்கு பகுதிக்கு இன்றைக்கு இதனால் வரி இல்லாத நிலைமை ஏற்பட்டது. இன்றைக்கும் பல பேர் வெட்டுத் தீர்மானங்கள், நஞ்சை நிலத்தில் வரியை எடுக்க வேண்டும் என்று கொடுத்திருக்கிறார்கள். எந்த வரிகளுமே கூடாது என்று சொல்லுகிற அளவுக்கு இருக்கிற ஒரு அத்தியாவசியமான ஒரு பெரிய பிரச்சினையாக இன்றைக்கு இந்த விவாதம் அமைந்திருக்கிறது.

தமிழக அரசைப் பொறுத்த வரையில், இன்றைக்கு நஞ்சை நிலங்களுக்கு ஏன் நில வரியை எடுக்கவில்லை என்பதற்கான ஆதாரங்களை இந்த மாமன்றத்தில் விவாதிப்பதற்குப் பயன்படும் என்பதற்காக நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்காக நியமிக்கப்பட்ட ரெவின்யூ போர்டினுடைய முதல் மெம்பர் திரு. கெய்வார் அவர்களுடைய இரண்டாவது அறிக்கை இந்த மாமன்றத்தில் இரண்டு நாட்களுக்கு முன்னால் வைக்கப்பட்டது கனம் உறுப்பினர்களுக்குக் கவனம் இருக்கலாம். இந்தத் தமிழக அரசைப் பொறுத்தவரையில், புஞ்சை வரி, நஞ்சை வரி மட்டுமல்ல, எல்லா வரிகளைக் குறித்தும் எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சர்வதேச தொழில் சந்தையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசிய வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு

[திரு. கே. ஏ. மதியழகன்] [1968 மார்ச் 18

பேச்சில், விவசாய மக்களிடத்திலே எந்த வரியும் வசூல் செய்யக் கூடாது, அந்தப் பணமெல்லாம் அங்கேயே இருக்கவேண்டும் என்று கூறியுள்ளார். அதைத்தான் இந்த அரசு வரிக் கொள்கையின் மைய மாகக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். குடியானவர்கள் நிலத்திலே உழைப்பவர்கள், அவர்கள் உழைத்து நாட்டு மக்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருள்களைத் தருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வரிப் பளுவைக் குறைத்து, தேவையானால் விற்பனை வரி போன்ற சில இனங்களில் சற்று அதிகமான வருவாயைத் தேடிக்கொள்ளவேண்டும் என்பதுதான் அவருடைய உள்ளக்கிடக்கை. ஆனால், இந்த நில வரி சம்பந்தமான ஒரு காரியத்தில் இன்றைய தமிழக அரசு தெளிவான, திட்டவட்டமான ஒரு கட்டத்தில் இருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், மற்ற கட்சி உறுப்பினர்களும் நஞ்சை நிலத்திற்கு இருக்கும் வரியையும் எடுக்கவேண்டும் என்று சொல்லக்கூடும். மதிப்பிற்குரிய திரு. கெய்வார் அவர்களுடைய அறிக்கையில் சில கேள்வி கணைகளை அரசுக்கும் இந்த மாமன்றத்திற் கும தொடுத்திருக்கிறார்கள். அதிலே இந்த மன்ற உறுப்பினர்களுடைய யோசனைகளையெல்லாம் நான் வரவேற்க இருக்கிறேன். திரு. கெய்வார் அவர்கள் சொல்லுகிற மிக முக்கியமான காரணம் என்ன என்பதைப் பார்ப்போம். இந்த நில வரியிலே இன்றைக்கு, நஞ்சை நிலங்களைப் பொறுத்தவரையில, நீர்த் தீர்வையும் நிலத தீர்வையும் ஒன்றாக இணைந்திருக்கிறது. 'கன்சாலிடேடெட் வெட் அஸெஸ்மெண்ட்' என்ற வகையில, இந்த நிலத் தீர்வையோடு நீர்த் தீர்வையும் ஒன்றாக இணைந்திருக்கிறது. இப்பொழுது நாம் பேசிக் லாண்டு டாக்ஸை எடுக்க லாம் என்று வைத்து இருக்கிறோம். பேஸிக் லாண்டு டாக்ஸை மட்டும் கழித்துவிட்டால், ஒரே ஊரில, ஒரே ஊற்றுக்காலில், ஒரே வாய்க்காலில் பாய்கிற இரண்டு தனித் தனியான துண்டான நிலங்களில் ஒன்றுக்கு நிலத தீர்வை ரூ. 1·50 என்று இருக்கிறது. தண்ணீர்த் தீர்வை ரூ. 7 என்று இருக்கிறது. ஆக மொத்தம் ரூ 8·50 ஆகிறது. இன்னோர் இடத்தில் பேஸிக் லாண்டு டாக்ஸ் ரூ. 1 25 என்று இருக்கிறது. தண்ணீர்த் தீர்வை ரூ. 4·00 என்று இருக்கிறது. ஆக, ரூ. 5 25 ஆகிறது. ஓரிடத்தில் ரூ. 8·50 ஆகவும், இன்னோரிடத்தில் ரூ. 5·25 ஆகவும் இருக்கிறது. பேஸிக் லாண்டு டாக்ஸை எடுத்துவிட்டால் வாட்டர் செஸ் மட்டும் இருக்கும். ஒரு நிலத்திற்கு ஏழு ரூபாயும் இன்னொரு நிலத் திற்கு நான்கு ரூபாயும் நீர்த் தீர்வையாக அமையும். இந்த நீர்த் தீர்வை இப்படி அமைகிற காரணத்தினாலே, இது பாரபட்சமாகும், டிஸ்க்ரிமினேஷன் ஆகும், தாரதம்மியம் இருக்கிறது. வழக்கு மன்றத் திற்குப் போனால் அடிபடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. 'ஃபண்டமெண்டல் ரைட்', அடிப்படை உரிமை பாதிக்கப்படும். ஒரு குடிமகனுக்கும் இன் னொரு குடிமகனுக்கும் பேதம் காட்டப்படுகிறது என்று வாதாடக்கூடும் என்று சொல்லப்படுகிறது. சட்டத்தின் சன்னிதானத்தில் எல்லோரும் சமம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, இப்படிப் பிரித்து இந்தக் காரியம் மேற்கொள்ளும்படியான ஒரு வாய்ப்பு இல்லை என்பதை அவர்கள் மிகத் தெளிவாக வெளியிட்டிருக்கிறார்கள். நேரம் அதிகமாக இல்லாத காரணத்தால், இந்த மன்றத்தில் மிகச் சுருக்க மாகக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். திரு. கெய்வார் அவர் களுடைய முதல் ரிபோர்ட்டில் 18-வது பக்கத்தில் அவர்கள் மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது

'In this exercise of separating the notional dry assessment from the consolidated wet assessment, leaving behind the residual figure and calling it a water rate, different parcels and pieces of land under the same source of irrigation in a village will come under different rates of water charge. The implications and the



1968 மார்ச் 18] [திரு. கே. ஏ. மதியழகன்]

scope and effect of the settlement and resettlement notifications have been the subject matter of authoritative judgments of the Courts. The latest of such authoritative pronouncements have been made in connection with the Manimuthar Project where the reclassification of irrigation sources was challenged. In effect, the settlement and resettlement notifications have now been given a status almost equivalent to a Statute. . . .

சட்டத்திற்கு என்ன மரியாதை இருக்கிறதோ, அதே மரியாதை இந்த செட்டில்மெண்ட், ரீ-செட்டில்மெண்ட் நோடிபிகேஷனுக்கும் இருக்கிறது.

'and so long as Government take action under cover of these notifications they will stand judicial challenge and scrutiny. It is true that the settlement and resettlement notifications provide for conversion of dry land to wet, and wet land to dry, and the levy of appropriate wet or dry assessment according to the rates already prescribed for the particular soil classification and taram. I believe, in some cases when conversion of dry to wet is done the wet rate is lower by one taram, and this is achieved by lowering the soil classification one step. But, charging different rates for supply of water for the same crop of the same duration under the same source to different pieces of land is likely to be challenged on grounds of discrimination and therefore violative of the Fundamental Rights guaranteed by the Constitution . . . .'

ஒரே ஊரில், ஒரே வாய்க்காலின்கீழ் ஒரே மாதிரியான போகத்திற்கு ஒரே பயிருக்கு இரண்டு மாதிரியான விகிதத்தில தண்ணீர் தீர்வை இருப்பதனால், சில நிலமைகள் ஏற்படும் என்று சொல்லியது மட்டுமல்ல, அவர் இன்னொரு பேராபத்தையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இப்பொழுது சில நிலம் இருக்கிறது. கோபிசெட்டிப்பாளையம் அல்லது பவானி இப்படிப்பட்ட இடங்களில் சில நிலம் இருக்கிறது. பழைய ஆயக்கட்டில் சில நிலம் இருக்கிறது. அந்த நிலத்திற்கு அடிப்படை வரி ஒரு விகிதத்தில் இருக்கிறது. அத்துடன் வாட்டர் செஸ் என்று ஒன்று இருக்கிறது. புதிதாக சில நிலம் பாசனத்திற்கு வந்திருக்கிறது. அதிலே நீர்த் தீர்வையும் நிலத் தீர்வையும் சேர்ந்தால் நான்கு அல்லது ஐந்து ரூபாய் இருக்கும். புதிதாக ஆயக்கட்டுக்கு வந்த இடங்களில் இப்பொழுது இருக்கும் அடிப்படைத் தீர்வையும் நீர்த் தீர்வையும் சேர்ந்து ஐந்து ரூபாய் வருகிறது. பழைய நிலங்களில் நீர்த் தீர்வை யிலிருந்து அதிகமாக வரும். 15 ரூபாய், 20 ரூபாய் வரும். பவானி பகுதியிலும் இன்னும் வேறு இடங்களிலும் அப்படி வருகிறது. நிலத்திலே சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியும். இப்பொழுது அடிப் படைத் தீர்வையை எடுத்துவிட்டால், 4 ரூபாய் வாட்டர் செஸ் வருகிறது. நிலத்திற்கு அதிகமாக நீர்த் தீர்வை வந்துவிடும். உதாரணத்திற்கு பவானிப் பகுதியை எடுத்துக்கொள்ளலாம். அதிலே பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு என்று இரண்டு ஆயக்கட்டுகள் இருக்கின்றன. புதிய ஆயக்கட்டில் இருக்கும் நிலத்திற்கு சாதாரணமாக 4 ரூபாய் அல்லது 5 ரூபாய்தான் இருக்கும்.

நான் கூற விரும்புவது இரண்டு. முதலாவதாக, நிலத் தீர்வையும், நீர்த் தீர்வையும் சிலவிடங்களில் 8 ரூபாய் என்று இருக்கிறது. இரண்டாவதாக, சில இடங்களில் புதிய தரமில்லாத நிலத்திற்கு பழைய முறையிலேயே தீர்வை போடுகிறோம். நிலச் சொந்தக்காரர்கள் தங்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதாகச் சொல்லுகிறார்கள். நாம் இந்தத் தீர்வை முறைகளில் தாரதம்மியங்களைப் பார்த்து, நிலத்தின் தன்மையைப் பார்த்து வரி போடவேண்டும்.

அடுத்து, உணவு நெருக்கடி மிகக் கடுமையாக இருக்கும் இந்தக் காலத்தில் யாராவது தங்கள் நிலங்களை தரிசாக 6 மாதங்களுக்குமேல் போட்டிருந்தால் அவற்றை அரசாங்கமே எடுத்து ஒரு பகிரங்க ஏலத்தின் மூலம் சாகுபடிக்கு குத்தகைக்கு பிறரிடம் விடுவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. இந்த அதிகாரத்தின்கீழ் இந்த அரசு ஒரு அங்குல நிலம்கூட சாகுபடி செய்யப்படாமல் தரிசாகப் போடுவதை சகித்துக்கொண்டிருக்காது என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பஞ்சப் பிரதேசம் பற்றிய நிலை. பஞ்ச நிலை என்பது பெரிய பிரச்சினையாக அலைத்துக்கொண்டிருக்கிறது. பலவிடங்களில் இன்றைக்கு பருவ மழை தவறியிருக்கிறது. கிணறுகள் வற்றியிருக்கின்றன. பயிர்கள் தீய்ந்துபோய் இருக்கின்றன. ஆனால் பெரிய பஞ்சம் என்பது நமக்கு வரவே கூடாது. அப்படிப்பட்ட நிலையும் இல்லை. பஞ்சப் பிரதேசம் என்பதற்கு பாமின் கோடில் சில விதிமுறைகள் இருக்கின்றன. அதில்,

Apart from the failure of rain the following symptoms demand attention as being warnings of possible distress :—

(1) contraction of private charity indicated by the wandering of paupers ;

(2) contraction of credit;

(3) feverish activity in the grain trade;

(4) restlessness indicated by an increase of crime;

(5) unusual movements of flocks and herds in search of pasturage;

(6) unusual migration of people;

(7) rapid rise in prices of common foodstuffs;

(8) great decrease in travelling by rail and attendance at festivals. We have now to add cinemas also.

(9) abnormal unemployment;

(10) abnormal sale by ryots of gold, silver and jewels at inadequate prices.

என்பதாக எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றை எல்லாம் உங்களுக்குச் சொல்வதற்குக் காரணம் இந்தவிதமான நிலை தமிழகத்தில் எங்கும் இல்லை என்பதற்குத்தான். தீ விபத்து, வெள்ளம் போன்றவற்றினால் வரக்கூடிய சேதங்களைக் கூட பஞ்ச நிவாரணம் என்ற அடிப்படையில்தான் கவனிக்க வேண்டியிருக்கிறது. பழைய அரசாங்கம் 30 ரூபாய் தீயினால் தங்கள் உடைமைகளை இழந்தவர்களுக்குக் கொடுத்தது. துணிமணிக்காக 10 ரூபாய் கொடுத்து வந்தார்கள். நாம் 60 ரூபாய் குடிசைக்கும், 20 ரூபாய் துணிமணிகளுக்கும் ஆக 80 ரூபாய் கொடுத்து வருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டிலே அக்டோபர், டிசம்பர் மாதங்களில் இராமநாதபுரம், திருச்சி மாவட்டங்களில் பெரு மழையினால் ஏற்பட்ட சேதங்கள் உங்கள் எல்லோருக்கும் தெரியும். எனது அருமை நண்பர் சட்டத் துறை அமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அதிகாரிகளும் நேரில் அந்த மாவட்டங்களுக்குச் சென்று பார்த்து வந்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 10 ஆயிரம் குடிசைகள் சேதம் அடைந்தன. இராமநாதபுரம் மாவட்டத்தில் 5 ஆயிரம் குடிசைகள் சேதம் அடைந்தன. இவைகளுக்கு தஞ்சை மாவட்டத்திற்கு 4 லட்சம் ரூபாயும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 2 லட்சம் ரூபாயும் நிவாரணப் பணிகளுக்கு வழங்குவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்





கொள்கிறேன். அதேமாதிரி தஞ்சை மாவட்டத்தில் 50 ஆயிரம் ஏக்கரா தாளடிப் பயிர் பாழ்பட்டிருக்கிறது. (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கடிகாரத்தைச் சுட்டிக்காட்டினார்கள்) மாண்புமிகு துணைத்தலைவர் அவர்கள் நான் உறுப்பினர்களுடைய நேரத்தை எடுத்துக் கொள்வதாக நினைக்கக் கூடாது. அரசின் நடைமுறைகளை முன் கூட்டியே எடுத்து விளக்கிவிட்டால் உறுப்பினர்கள் எடுத்துக்கொள்கிற நேரமே கூட மிச்சமாகும் என்பதற்காகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 26 உறுப்பினர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினருக்கு ஐந்து நிமிடம், 6 நிமிடம் என்று கொடுத்தால்கூட..

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் மிகவும் வருத்தப் படுகிறேன். மார்ச் 8-ஆம் தேதிக்கு லேண்டு ரெவின்யூ, பாமின் ரிலீப் ஆகிய இரண்டு டிமாண்டுகளும் இருந்தன. அவற்றை எடுத்து இன்றைக்கு ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் டிமாண்டோடு சேர்த்து பிஸினஸ் அட்வைசரிக் கமிட்டியில் போட்டுவிட்டார்கள். கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய மானியத்தைப்பற்றி பலரும் பல கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த மானியங்களுக்கு இரண்டு நாள், 3 நாள் என்று ஒதுக்கி விவாதிக்க வேண்டிய முக்கியத்துவம் இருப்பினும் இப்படி பிஸினஸ்அட்வைசரிக் கமிட்டியில் செய்திருப்பதற்கு நான் வருந்துகிறேன். சட்ட சம்பிரதாயத்தையே மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். நானும் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் ஓர் உறுப்பினர் என்றாலும் இப்படி மாற்றப்பட்டதை ஆட்சேபிக்கிறேன். முடித்துவிடுவகள் என்றால் மிகப் பொறுப்புவாய்ந்த துறைகளை வற்றிருக்கிற நான் அதைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பை விட்டுவிடுவதற்கில்லை. அவர்கள் செய்துவிட்டார்கள். நான் மாண்புமிகு சபாநாயகர் அவர்களிடமே என் ஆட்சேபணையைத் தெரிவித்திருக்கிறேன். ஆளுங்கட்சி உறுப்பினர்களும் மற்றவர்களும் பேசவேண்டு மென்பதற்காக ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். முற்பகல் 11–00

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள்தான் முதலில் இருந்ததை 18-ஆம் தேதிக்கும் 18-ஆம் தேதியிருந்ததை முதலிலும் போடச் சொன்னார்கள். அவர்கள் சொல்லித்தான் மாற்றப்பட்டிருக்கிறது. பொறுப்பில்லாமல், பொறுப்பில்லாமல் என்று பேசிக்கொண்டே இருக்கிறார்கள். முதலிலே அவர்கள் தான் இப்படி மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள், நாங்களும் அதை ஏற்றுக்கொண்டோம். நாங்கள் பொறுப்பில்லாமல் செய்கிறோம் என்று அடிக்கடி சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன் பிஸினஸ் அட்வைசரி கமிட்டி பொறுப்போடுதான் இருக்கிறது. இன்னும் இரண்டு நாட்களுக்கு நீடிக்க வேண்டுமென்றால் நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. உதவி சபாநாயகர் அவர்கள் சொன்னதற்கு அமைச்சர் அவர்கள் எல்லோரும் பேச வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் ரொம்ப சந்தோஷப்படுகிறோம். அப்படித்தான் இருக்கவேண்டும். ஆனால் இப்படிப் பட்ட மாறுதல் ஏற்பட்டதற்கு அடிப்படையான காரணம் அமைச்சர் அவர்கள் தான் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே ஒரளவுக்கு இதைப்பற்றி முடிவுசெய்யப்பட்டு எந்த எந்த மானியங்களுக்கு எத்தனை நாட்கள் ஒதுக்க வேண்டு மென்று ஒதுக்குகிறோம். கூடுமானவரையில் $1\frac{1}{2}$ மணிவரை நேரம் ஒதுக்கப் படுகிறது. அதற்கேற்றாற்போல் திட்டமிடப்பட்டு விவாதம் நடைபெறுகிறது. நேரம் போதாது என்று உறுப்பினர்கள் கருதினால் அந்த நேரத்தை மேலும் நீட்டிக்கிறோம். அந்த வகையில்தான் அரிசன நலத் துறையைப் பற்றிய மானியத்தைப்பற்றி பல உறுப்பினர்கள் பேச வேண்டியிருந்ததன்

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், சில திட்டவட்டமான கொள்கைகளைப் பின்பற்றத் தயாராக இருக்கிறது. கடந்த வருடத்தில் புன்செய் நிலங்களுக்கான தீர்வையை எடுத்துவிட்டோம். புன்செய் நிலத்திற்கு மட்டுமல்லாமல், நன்செய் நிலத்திற்கும் வரி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள், தரிசு நிலங்களாக இருப்பவை விளைநிலங்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமராவதி நீர்த்தேக்கம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம், வைகை நீர்த்தேக்கம், லோயர் பவானி நீர்த்தேக்கம், கட்டளை உயர்மட்டக்கால்வாய் நீர்த்தேக்கம், மேட்டூர் நீர்த்தேக்கம், பரம்பிக்குளம்—ஆளியாறு நீர்த்தேக்கம், புள்ளம்பாடிக் கால்வாய் நீர்த்தேக்கம், சாத்தனூர் நீர்த்தேக்கம், வீடூர் நீர்த்தேக்கம் போன்ற பத்து இடங்களில் இந்த நீர்த்தேக்கங்களை அடுத்துள்ள பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் புதிதாக அபிவிருத்தி செய்ய கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது விவசாய வருமான வரியைப்பற்றிச் சொன்னார்கள். புன்செய் நிலத்திற்கு வரி எடுத்ததை 'தப்பு' என்று சொன்னார்கள். விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் பெருநோக்கத்தின் காரணமாக, இந்த வரிகள் எல்லாம் கூடாது என்பதே எங்களுடைய தெளிவான, திட்டவட்டமான கருத்தாக இருக்கிறது. திட்டக் கமிஷனில் வேலை செய்யும் பெரிய மேதைகளும், "விவசாயத்திலேதான் ஏராளமான வருமானம் வருகின்றது. விவசாயத்திற்கு வரி போடாமல் பெரிய பெரிய அபிவிருத்தித் திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற முடியாது. புன்செய் நிலத்திற்கு வரியை எடுத்துவிட்டதால் சுமார் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் நஷ்டம் வருகிறது" என்று சொல்கிறார்கள். திரு. கெய்வார் கமிஷனும் இதைப்பற்றிக் கூறியிருக்கிறது. இதைப்பற்றி இன்றைக்கு விவாதிக்க முடியாவிட்டாலும் பின்னர் இதைப்பற்றி விவரமாக விவாதிக்கலாம், ஆராயலாம். அப்படி நாம் ஆராயும்போது இருக்கக்கூடிய நிலைமைகள், சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் இவற்றை மனதிற்கொண்டு, ஏற்கெனவே இருந்து கொண்டிருப்பவைகளை மறுசிந்தனை செய்வதற்கும் நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். நிலவரி என்பது மட்டுமல்ல, உணவுப் பிரச்சினை, உணவு உற்பத்தி, வரி உரிமை போன்ற எல்லாவற்றையும் தீவிரமாகப் பரிசீலனை செய்யலாம். அதன்மூலம் தேவையான உரிமைகளை, தேவையான பாதுகாப்புகள் பெறுகிறதால்தான் நாம் இலட்சியத்தில் ஈடேற முடியும். விரிவான நிலச்சீர்திருத்தம் வரும் என்று இங்கே சொல்லப்பட்டது. அதற்கு முன்னதாக, சாகுபடிதாரர்களின் உரிமைகளைப்பற்றிய மசோதா ஒன்று வெகு விரைவிலே இந்த மன்றத்தில் முன்னோடியாக வரவிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இருபதாண்டுக் காலத்திற்குப் பிறகு, இந்த மாநிலத்தின் 4 கோடி மக்களுடைய இதயத்தில் வீற்றிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. ஆண்டாண்டுக் காலமாக அனுபவித்த கஷ்டங்களைப்பற்றிச் சொல்ல நான் விரும்பவில்லை. மக்களின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காகவே இந்தக் காரியங்களைச் செய்ய நாங்கள் முன்வந்திருக்கிறோம். குறிப்பாக விவசாய மக்களின் சார்பிலே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, விவசாயிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயருவதற்குப் பாடுபட நாங்கள் முனைந்து நிற்கிறோம்.

அடுத்தபடியாக, தரிசு நிலங்களைப்பற்றிச் சொன்னார்கள். நாங்கள் பொறுப்பேற்றுக்கொண்ட ஓராண்டுக் காலத்திற்குள் ஏறக்குறைய 30 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் ஏழை மக்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலமாக 17,500 குடும்பங்கள் நன்மை பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடைமுறை





ஆண்டில் சுமார் 50 ஆயிரம் தரிசு நிலங்கள் பட்டா செய்துகொடுப்பதற்கான முயற்சிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தரிசு நிலங்கள் ஏழை நிலமற்ற விவசாய மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக தென் ஆர்க்காடு மாவட்டம், வட ஆர்க்காடு மாவட்டம், சேலம் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், மதுரை மாவட்டம் போன்ற இடங்களில் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோவை மாவட்டத்தில், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, தாராபுரம், பல்லடம் தாலுக்காக்களிலும், பரம்பிகுளம்—ஆளியாறு பகுதிகளிலும் உள்ள தரிசு நிலங்களைப் பட்டா செய்யக் கூடாது என்ற தடை உத்தரவு போடப்பட்டிருந்தது. அதை நீக்குவதற்கு வேண்டிய எல்லாவித முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். கோயம்புத்தூர் கலெக்டர் அவர்கள் அனுப்பியுள்ள பரிவுரையின்மேல் ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்க தக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் நிலம் பட்டா செய்துகொடுப்பதற்கான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வளவு வருஷங்களாக அரிஜன மக்கள், தரிசு நிலங்களைப் பெற முடியாமல் பின்தள்ளப்பட்டிருந்தார்கள். ஆகவே, அரிஜன மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கவேண்டிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. விரைவில் அரிஜன மக்கள் நிலம் பெற்று தங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்வார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இது வேடிக்கையான விவகாரம். கூட, போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரில் ஒருவிதி இருக்கிறது.—

Grazing grounds and porambokes shall not be assigned unless there is sufficient grazing ground other than panchayat and reserve forest available to serve the needs of cattle at the rate of one acre of pasture per head of cattle.

என்பதாக ஒரு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் நிலம்கூட இல்லை. ஒரு கேட்டிலுக்கு ஒரு ஏக்கர் மேய்ச்சல் தரை என்பதாக வகுக்கப்பட்டிருக்கிறது. போனவருடம் கூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. எப்படி 20 வருட காலமாக இந்த விதி அவர்கள் கண்ணில் படவில்லை, ஏன் இதை எடுத்துவிட முன்வரவில்லை என்று தெரியவில்லை. இந்த அரசு இந்த விதியை எடுத்துவிட உத்தரவு போட்டிருக்கிறது. இதனால் மேய்ச்சல் தரை என்ற பெயரிலே வீணாக நிலங்கள் விட்டுவைக்கப்படமாட்டாது. அவையும் கூட உணவு உற்பத்தி அடிப்படையில் கொண்டுவரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு "அன்-அசெஸ்டு வேஸ்ட்" என்று பஞ்சாயத்து போர்டுகளில் இருக்கிறது. பஞ்சாயத்து போர்டில் இருப்பதன் காரணமாக அவற்றைச் சாகுபடிக்குக் கொண்டுவருவதில் பல தடங்கல்கள் இருக்கின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே "அன்—அசெஸ்டு வேஸ்ட்" நிலங்களையும் அரசாங்கமே எடுத்துக்கொண்டு நிலமில்லாதவர்களுக்கு வழங்க யோசனை செய்துகொண்டிருக்கிறது.

அடுத்து ஜாயிண்ட் பட்டா நிலங்களை தனிப் பட்டாவாக மாற்ற புதுக்கோட்டை நீங்கலாக திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் இங்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதை மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, வீட்டு மனை 10 சென்ட் என்று கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

காரணமாக மாலைப் பொழுதையும் வைத்துக்கொண்டோம். ஆகவே பேசுவதற்கு இதிலும் அதிகமான உறுப்பினர்கள் விரும்புவார்களானால் அவையின் நேரத்தை $1\frac{1}{2}$ மணியோடு முடித்து மீண்டும் 3 மணிக்குத் தொடங்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: On a point of order. The main difficulty is that the Business Advisory Committee meets just on the day the session starts or the next day, even though they have got about twenty or thirty days. The principle is that all the Demands and the Appropriation Bill should be passed before the end of March. Just as in some other States, we can start earlier To suddenly declare that we will have an evening session will put all employees out of gear and they have no lunch allowance. Just like in Andhra State, we can meet one week earlier. We can have even three days. I fully endorse the demand of the Hon. Minister.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், . . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். நான் சொல்கிறேன். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே இந்த மானியங்களுக்கு எவ்வளவு நாட்கள் ஒதுக்குவது என்பதுதான் முடிவு செய்யப்படுகிறது. எந்த எந்த நாட்களில் எந்த எந்த மானியங்களை எடுத்துக்கொள்வது என்பது அமைச்சர்கள் கருத்தையும் விப்-உடைய கருத்துக்களையும் ஒட்டி முடிவு செய்யப்படுகிறது. இதுதான் இப்பொழுது நடந்து வருகிற ஏற்பாடு ஆகும். முதலில் 8-ஆம் தேதியன்று லேண்ட் ரெவின்யூவும் ஃபேமின் ரிலீஃப்பும், 18-ஆம் தேதியன்று ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் அண்ட் அதர் டாக்ஸஸ் அண்ட் டியூட்டிஸ்-அட்மினிஸ்டிரேஷனும் கேபிடல் அவுட்லே ஆன் ஸ்கீம்ஸ் ஆப் கவர்ன்மெண்ட் டிரேடிங் (புட்) என்றும் போட்டிருந்தார்கள். பிறகு அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க 8-ம் தேதி யன்று கேபிடல் அவுட்லே ஆன் ஸ்கீம்ஸ் ஆப் கவர்ன்மெண்ட் டிரேடிங் 18-ஆம் தேதியன்று லேண்ட் ரெவின்யூவும் ஃபேமின் ரிலீஃப்-ம் என்ற அளவிலே மாற்றப்பட்டது. இதுதான் நடந்த நிகழ்ச்சியாகும். நான் எதற்காக அமைச்சர் அவர்களை நான் எழுவதற்கு முன் பார்த்தேன் என்றால் 25 பேர்கள் பேசவேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். பகல் நேரத்திலேயே முடித்துவிடலாமா அல்லது $1\frac{1}{2}$ மணிக்கு முடித்து, மீண்டும் 3 மணிக்குத் தொடங்கலாமா என்ற அடிப்படையிலே நேரத்தைப் பற்றி அமைச்சர் அவர்களுடைய கருத்தை அறிந்துகொள்ள விரும்பினேன். அவர்கள் இப்படிப்பட்ட கருத்துக்களைக் கூறியிருக்க வேண்டாம். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே இப்படிப்பட்ட கருத்துக்களைக் கூடிப்பேசி முடிவுசெய்வதுதான் பொருத்தமாக இருக்கும். அமைச்சர் அவர்கள் வேண்டிய நேரத்தைப் பேசுவதற்கு எடுத்துக்கொள்ளலாம். ஆகவே இந்த விவாதம் $1\frac{1}{2}$ மணிவரை நீடித்து பிறகு மூன்று மணிக்குத் தொடங்கி இரவு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இதற்காக எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அமைச்சர் அவர்கள் கூறியதை நான் வரவேற்கிறேன் . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதற்காக எழுந்திருக்கிறீர்கள்?

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அஜண்டா பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அறையிலே வந்து சொல்லலாம்.





**திரு. வி. கே. கோதண்டராமன்:** அறையிலே சொன்னால் ஒன்று மில்லை. மற்ற அமைச்சர்களுக்கும் தெரியவேண்டும். இந்த சபை மாலையில் நடைபெறும்பொழுது சபையைக் கண்காணிக்கின்ற ஊழியர்கள் எல்லாம் இருக்கிறார்கள், அவர்களைக் கவனிக்க வேண்டும். வருகிற 21-ஆம் தேதியன்று கூட்டுறவு, அது ஊழல்கள் நிறைந்தது. ஆகவே அதற்கு அதிக நேரம் கொடுத்து தனியாக வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவையெல்லாம் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே தலைவரைக் கலந்து அவையின் முதல்வரைக் கலந்து முடிவு செய்துகொள்ளலாம், அதற்காக மன்றத்தின் நேரத்தை எடுத்துக்கொள்வது அவசியமல்ல.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அனாவசியமாக நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. 5 நிமிடம், 10 நிமிடத்தில் சொல்லி விடுகிறேன் . . . . . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் எது எதற்கு எவ்வளவு நாட்கள் ஒதுக்கவேண்டுமென்பது பற்றி உறுப்பினர்களுக்குத் தனிக் கருத்துக்கள் இருக்குமானால் அவர்கள் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் அவர்களுடைய கட்சியின் சார்பாக யார் பிரதிநிதியாக போகிறாரோ அவரிடம் அந்தக் கருத்துக்களை முன்கூட்டியே சொல்லி இருப்பார்களானால் அந்தக் கட்சியின் பிரதிநிதி பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் அவற்றைச் சொல்லியிருக்கலாம், அப்படிச் செய்திருந்தால் இப்படிப்பட்ட குழப்பங்களுக்கு இடமில்லை. உறுப்பினர் திரு. கோதண்டராமன் கட்சியைச் சேர்ந்தவர் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் இருக்கிறார். அவர்களையும் கலந்துதான் தேதிகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அப்பொழுது கூட்டுறவு மானியத்தின் விவாதத்திற்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்று முன்கூட்டியே சொல்லியிருக்கலாம். அடுத்து நடக்கிற பிஸினஸ் அட்வைசரி கமிட்டி கூட்டங்கள் அந்த அந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய கட்சியின் பிரதிநிதியாக யார் செல்கிறார்களோ அவர்களை முன்கூட்டியே சந்தித்து எந்த எந்தக் கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லவேண்டுமென்று சொல்லிவிடுவார்களானால் அதைப்பற்றியும் முடிவுசெய்து பிறகு அந்த முறையில் பேசச் செய்வதுதான் முறையாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் இந்த நிதி நிலை அறிக்கையை எப்படியும் மார்ச் 31-ஆம் தேதிக்குள் முடிவடையவேண்டும் என்று முறையில் அந்தக் கணக்குப்படிதான் நிர்மாணித்து பொது விவாதம் எடுத்துக் கொள்ளப்பட்டது. $1\frac{1}{2}$ மணி வரை பேரவை நடக்கலாம், அதன்பிறகு நீடிக்க வேண்டுமானால் அதிகமான உறுப்பினர் பேசுவதற்கான சூழ்நிலை இருக்குமானால் மாலையில் வைத்துக்கொள்ளலாம் என்ற கருத்துத்தான் பேசப்பட்டது. ஆகவே, எந்த எந்த மானியங்களை $1\frac{1}{2}$ அல்லது $2\frac{1}{2}$ மணியோடு முடித்துக்கொள்ள முடியுமோ அவற்றை முடித்துக்கொள்ளலாம். ஆனால் முடிக்க முடியாமல் இருந்தால் அன்றைடம் பேசுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மாலையில் வைத்துக்கொள்ளலாம் என்பதற்கு இசைவு தெரிவிக்கப்படுகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நேரத்தை நான் அதிகமாக எடுத்துக் கொள்ளவில்லை, விளக்க விரும்புகிறேன். முக்கிய எதிர்க்கட்சி எங்களுடைய கட்சி. சர்க்கார் சொல்வதைக்கூட ஒத்துக்கொண்டு அதற்கு இணங்கி சுமுகமான முறையிலே நடத்த வேண்டுமென்று விரும்புகிற கட்சியைச் சேர்ந்தவன் நான். 10 வருடங்களுக்கு முன்னால் ஏதோ குறிப்பிட்ட 10 டிமாண்டுகளைப் பொறுத்துத்தான் தீவிரமாக 1, 2 நாட்களுக்கு விவாதம் நடத்தி பாக்கியுள்ள டிமாண்டுகளையெல்லாம் கில்லட்டினில் விடுவார்கள். நாங்கள் பார்லிமெண்டுக்குப் போனதற்குப் பிறகு இங்கே எல்லா

டிமாண்டுகளையும் விவாதித்துப் பேசவேண்டுமென்ற முறை பழக்கத்திற்கு வந்திருக்கிறது. $1\frac{1}{2}$ மணி வரை முடியாமல் இருந்தால் $2\frac{1}{2}$ மணி வரை நீடித்துக்கொள்ளவேண்டுமென்றால் நீடித்துக் கொள்கிறோம். உதவி சபாநாயகர் அவர்கள் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் மாற்றிக் கொள்ளலாமா என்று கேட்டார்கள். சரி என்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் நாங்கள் தப்புக கருத்து சொல்வதைபோல் சொல்கிறார்கள், வெளியே உள்ளவர்கள் பார்த்தால் அவர்தான் அக்கறை உள்ளவர்கள், நாங்கள் எதிர்க்கட்சியினர் பொறுப்பில்லாமல் இருக்கிறோம் என்று நினைக்கும்படியான நிலையிலே அவர்கள் இதைப் பல தடவைகள் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களும், லீடர் ஆப் தி ஹவுஸ் அவர்கள் சொல்லுவதற்கு முன்னாலேயே நான் மாலை, சபைக் கூட்டத்தை மாலையிலும் வைத்துக் கொண்டால் அதிலே கலந்து கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்று கூறிவிட்டேன். ஆகவே, இன்று $1\frac{1}{2}$ மணிக்குக் கூட்டத்தை முடித்துவிட்டு மீண்டும் மாலை 3 மணிக்கு இந்தக் கூட்டத்தை வைத்துக் கொண்டால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, கடந்த பிஸினஸ் அட்வைசரி கமிட்டிக் கூட்டத்தில் நான் கலந்து கொள்ளாததால் என்னுடைய நிலையைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதிலே, நடைமுறை அனுபவம் எதைக் காட்டுகிறது என்றால், நாம் எடுக்கும் பிரச்சனைக்கு நியாயம் வழங்க முடியாமல், அமைச்சர் அவர்கள் பேச வேண்டும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டும், மற்றபடி உறுப்பினர்கள் 3 நிமிஷம், 5 நிமிஷத்திற்குள்ளாக விவாதத்தை நடத்தி ஒரு ஜனநாயக ரீதியான ஒரு தோற்றத்தை ஏற்படுத்தும்போது சங்கடமான நிலை ஏற்படுகிறது. அடுத்த பிஸினஸ் அட்வைசரி கமிட்டி கூட்டத்தில் இந்தக் காரியங்களைப் பற்றி விவாதித்து முடிவை மேற்கொள்ளலாம். கடந்த பிஸினஸ் அட்வைசரி கூட்டத்தில் நான் கலந்து கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நானும் பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் மெம்பர்தான். ரெவின்யூ, சேல்ஸ்டாக்ஸ் இரண்டும் முக்கியமானவை என்ற காரணத்தால் தனியாகவே ஒருநாள் கொடுத்தார்கள். இந்தப் பொறுப்பான காரியத்திலே ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் நல்ல முறையில் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையிலேதான் விளக்க முற்பட்டேன். இன்னும் ஐந்து நிமிஷங்கள் பேச விடுங்கள் என்ற முறையிலேதான் துணைச் சபாநாயகர் அவர்களிடம் சொல்ல முற்பட்டேன். கொள்கைகளைக் கோடிட்டுக் காட்டுவதற்காக மேலும் ஐந்து நிமிஷங்கள் வேண்டுமென்று தான் சொன்னேன். அதற்காகத்தான் முக்கியமான மானியம், அனைவரும் பேச வேண்டுமென்று சொன்னேன. அதை வைத்துக் கொண்டு எதிர்க் கட்சித் தலைவர்கள் ஒரு குழப்பத்தையே ஏற்படுத்தி விட்டார்கள். துணைச் சபாநாயகர் அவர்களும் இப்படிச் செய்திருக்க வேண்டியதில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் நிழலை வைத்துக் கொண்டு போராடி இருக்க வேண்டியதில்லை. நான் இரண்டு மூன்று நிமிடங்களில் முடித்து விடுகிறேன.

தஞ்சை மாவட்டத்தில் 50,000 எக்கரில் 20,000 எக்கர்கள் நாசமாகிவிட்டன என்ற காரணத்தால் பஞ்ச நிவாரண காரியங்களுக்காக ஒரு லட்சம் ரூபாய் தஞ்சை மாவட்ட கலெக்டர் அவர்களிடம் தரப்பட்டிருக்கிறது. உரம் வாங்குவதற்குக் கடன் வழங்குவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 4,000 எக்கர்களிலும், தஞ்சை மாவட்டத்தில் 5,000 எக்கர்களிலும் மண் அடிப்பதற்காக எக்கர் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் கடன் வழங்கும் வகையில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் கடன் வழங்க 5 லட்ச ரூபாயும், குடும்பங்களுக்காக $2\frac{1}{2}$ லட்ச ரூபாயும் அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. இராமநாத





புரம் மாவட்டத்தில் 424 ஏரிகளும், தஞ்சை மாவட்டத்தில் 324 ஏரிகளும் உடைபட்டுவிட்டன. இவற்றைப் பழுது பார்ப்பதற்காக தஞ்சை மாவட்டத்திற்கு 5,50,000 ; இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 10 லட்ச ரூபாயும் கொடுக்கும் வகையில் செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறது. பாசன ஏரிகளைப் பழுது பார்ப்பதற்காக தஞ்சை மாவட்டத்திற்கு 26 லட்ச ரூபாயும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 70 லட்ச ரூபாயும் வழங்கும் செயற்குறிப்புகள் பொதுப் பணித்துறையின் ஆய்வில் உள்ளன. இந்தக் காரியத்திற்காக மத்திய அரசு கடனாக $4\frac{1}{2}$ கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். போன புயலின் போது ஆறு, ஏழு கோடி ரூபாய் கேட்டதற்கு $2\frac{1}{2}$ கோடி ரூபாய்தான் கொடுத்தார்கள். இந்த வகையில் மத்திய அரசு நல்ல முறையில் மானியமாகவும், கடனாகவும் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. பாரபட்சம் இல்லாத முறையில் கொடுக்க வேண்டுமென்று கோரி அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் நிதித்துறைச் செயலாளர் அவர்களை அங்கு அனுப்பி அதிகமான உதவித் தொகை பெற்று வர வழி செய்யப்பட்டிருக்கிறது. இந்த மானிய விவாதத்தில் நல்ல கருத்துக்களை எல்லாம் உறுப்பினர்கள் எடுத்துரைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய நன்றியைத் துணைச் சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : On a point of information before the discussion starts. This is budget session, I know that. I am not going to hold up the discussion on the budget. This report submitted by Mr. Kaiwar happens to be a very important document containing revolutionary ideas and methods for revitalising our Revenue Department and thus getting more finance from the back door instead of the front door. Such being the case may I request the Chair and the Government to be good enough to set apart one day for the discussion of this report. This is a good report. How best are we to implement it. What implications it will have on the people, agricolture and revenue? All these aspects will have to be gone through. We are not going to hold up the Demands, we are not going to affect the budget. The cut motions are there for what they are worth and we are not going to press them. Still a day may be set apart for a discussion on this report so that pertinent points may be made from the Opposition as well as the Government side. What is the reaction.

THE HON. THIRU C. N. ANNADURAI : First I want to give a clarification to the hon. Member. A report is not a proposal. As for the hon. Member's request that a day may be set apart for disrussion, before saying that there should be a discussion in the House I would request the hon. Member to meet his partymen and discuss the report in the party machinery and then come with a unified opinion so that we can discuss it when we find time. A day can be set apart only when all political praties discuss, decide and come to a unified opinion.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நிதிநிலை அறிக்கை பற்றி விவாதம் நடக்கிற நோக்கில் இப்படிப்பட்ட விவாதங்களுக்கு இடம் இல்லை. இரு முடிந்தவுடன் உறுப்பினர் அவர்கள் தனி நபர் தீர்மானமாகக் கூடக் கொண்டு வரலாம். அந்த நிலையிலே இதைப்பற்றி யோசித்துக் கொள்ளலாம்.

THIRU K. RAMAMOORTHY : I have already given notice of a motion.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1968 மார்ச் 18

தமிழ்நாட்டில் நாசம் அடைந்து வருகின்றன. நேற்று முன் தினம் பத்திரிகையில் பார்த்தேன். திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு பால் வியாபாரி 15,000 ரூபாய்க்கு டிக்கட்ஸ் வாங்கி பந்தயத்தில் தோற்றுப் போனதால் தற்கொலை செய்துகொண்டார்கள் என்று. ஆயிரக்கணக்கானவர்களில் ஒருவருடைய சோகக் கதை இது. இதுபோல் எவ்வளவோ நடக்கிறது. இப்போது ஜாக்பாட் என்ற முறை அமலில் இருக்கிறது. இதனால் பல இன்னல்கள் ஏற்படுகின்றன மக்களுக்கு. அண்டை மாநிலங்களில் என்ன செய்கிறார்கள் என்று பார்க்காது இந்த குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டும், எவ்வளவு வருமானம் அரசுக்கு இதனால் கிடைத்தாலும். சுதந்திரா கட்சி உபதலைவர் அவர்கள் நினைவூட்டுகிறார், தேர்தல் அறிக்கையில்கூட சொல்லப்பட்டிருக்கிறது என்று. இந்த குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டும்.

குறைவான செலவில் அதிகப்படியான வருவாயைத் தேடித் தருகிறது இந்தத் துறை. இப்போது நம் தமிழ்நாட்டில் இந்த வணிக வரி மூலம் 65 கோடி ரூபாய் கிடைக்கிறது. ஆனால் இந்த வரியை வசூலிப்பதற்காகும் செலவு ரூ. 1,48,00,000 தான். ஆனால் குறைந்த செலவில் அதிக வருவாய் கிடைக்கும் இத்துறையில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு என்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று பார்க்கவேண்டும். வணிக வரி அலுவலகத்திற்குச் சென்றால் அங்கு பணியாற்றுகிறவர்களுக்கு உட்கார போதுமான நாற்காலி, மேஜைகள் கிடையாது. கணக்குக் காட்ட வரும் வியாபாரிகள் உட்காருவதற்கு நாற்காலிகள் இல்லாத நிலைதான் இருக்கிறது. பல அலுவலகங்களில் டைப்ரைட்டர்ஸ் கூட இல்லாத நிலையிலுள்ள இடங்களும் இருக்கின்றன. ஆகவே இந்தத் துறையில் உள்ளவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பல வசதிகள் செய்து தரப்படவேண்டும். இந்தத் துறை அதிகாரிகளுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்குள் இவ்வளவு கணக்குகளைப் பார்க்கவேண்டுமென்ற முறை இருப்பதால் கணக்குகளை சரியாகப் பார்க்கக்கூடிய நிலைமை இல்லாமல் மாதக் கடைசியில் கணக்குகளை கொண்டு வா என்று சொல்லிக் கணக்குகளை முடித்துவிடுகிறார்கள். ஆகவே அதிகம் அதிகாரிகளைப் போடவேண்டும். சர்க்கார் அலுவலகங்களில் எவ்வளவோ துறைகளில் தேவைக்கு அதிகமான அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்களை இந்தத் துறைக்கு மாற்றி கணக்குகளை விழிப்புடன் பரிசீலிக்க வேண்டும். வரியின் விகிதத்தைக் கூட்டுவதினால் வருமானம் உயர்ந்து விடாது. ஒழுங்காக வரி வசூலிக்கப்படவேண்டும். 3% என்று உயர்த்துவதைவிட $2\frac{1}{2}\%$ என்று வைத்து விழிப்புடன் வரி வசூலிக்கப்பட்டால் நான் கூறுகிறேன், நமக்கு 100 கோடி ரூபாய்கூட கிடைக்கும். ஆகவே, அந்த அளவிற்கு விழிப்புடன் வசூல் செய்யவேண்டும்.

வியாபாரிகளை நன்கு மதிப்பதில்லை என்ற குறை சொல்லப்படுகிறது. வியாபாரிகளில் நாணயமாகவும் நேர்மையாகவும் நடக்கக்கூடியவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் அவர்கள் எவ்வளவு நேர்மையான முறையில் கணக்கு கொடுத்தாலும் அதிகாரிகள் அவற்றை பெரும்பாலும் ஏற்றுக்கொள்வதில்லை. எனக்குத் தெரிந்த ஒரு 'கண்ணி' வியாபாரி இருக்கிறார். அவர்கள் மிகவும் நாணயமானவர், அவர் ஒரு தேசபக்தர். அவர்கள் சென்ற ஆண்டுக் கணக்கை முடித்துவிட்டு 14 சதவீதம் லாபம் கிடைத்திருப்பதாக கணக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதிகாரி அதைப் பார்த்துவிட்டு 14% என்பது குறைவாக இருக்கிறது என்று கூறி அதிகமாகப் போட்டிருக்கிறார்கள். அந்த வியாபாரி மிகவும் மனம் புழுங்கிப் போனார் வியாபாரிகள் எவ்வளவுதான் நேர்மையாக நடந்துகொண்டாலும் அதிகாரிகள் அதை ஏற்க மறுக்கிறார்கள். ஒரு அதிகாரி போட்ட கணக்கின்மீது அப்பீல் செய்ய அப்பெலட் கமிஷனர் இருக்கிறார். பொதுவாக அப்பெலட் கமிஷனர் கீழ் உள்ள அதிகாரிகள் என்ன வரி போடுகிறார்களோ அதை அப்படியே ஒத்துக்கொள்கிறார்கள். 90% கீழே இருக்கும் அதிகாரிகள் போடும் கணக்குகளைத்தான் ஒத்துக்கொள்கிறார்கள் கீழே உள்ள அதிகாரி செய்யும் காரியத்தை சரி என்று சொல்வதற்கு மேலே ஒரு அதிகாரி தேவை இல்லை. அப்பலெட் கமிஷனர் என்ற அலுவலரையே



1968 மார்ச் 18] [திரு. என். எஸ். வி. சித்தன்]

எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக டெபுடி கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸர் அல்லது அஸிஸ்டெண்ட் கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர் அப்பெலட் ட்ரிப்யூனலுக்கு போகவேண்டும் என்ற முறையை அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சில அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், "நாங்கள் கணக்கைப் பார்த்தோம், நல்லமுறையில் எழுதி இருக்கிறீர்கள், ஆனால் என்ன செய்வது? எங்களுக்கு மேல் இருக்கிற அதிகாரிகள் வரியை அதிகமாக வசூலிக்கவேண்டும் என்று உத்திரவிடுகிறார்கள். ஆதலால் அதிகமாகவே வரியை போட்டுவிடுகிறேன். நீங்கள வேண்டுமானால் அப்பீலுக்கு போய்ப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி அதிகமான வரி போட்டு விடுகிறார்கள். இம்மாதிரி பல கஷ்டங்கள், தொல்லைகளுக்கு வியாபாரிகள் ஆளாகவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் நல்லமுறையில் பரிசீலனை செய்து நியாயமான முறையில் அதிகாரிகள் செயல்படுமாறு பார்த்துக்கொள்ள வேண்டுகிறேன்.

மதுரை, சென்னை போன்ற இடங்களில் ட்ரிப்யூனல்கள் இருக்கின்றன. உணவு அமைச்சரவர்கள் பேசும்போது கோவையிலும் ஒரு ட்ரிப்யூனல் தொடங்கியதாகத் தெரிவித்தார்கள். திருச்சி, நெல்லை போன்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி அங்கும் ட்ரிப்யூனல்களை ஏற்படுத்தி மிக விரைவாக வழக்குகளை பைசல் செய்ய வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக பைசல் செய்யப்படாத வழக்குகள் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. அதிக அளவில் ட்ரிப்யூனல்களை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வணிக வரித் துறையைப் பொறுத்தவரையில் ஒரு புகார் இருக்கிறது. குறிப்பிட்ட மாதத்தில் வணிக வரி வசூல் குறைவாக இருக்கிறதென்றால் வியாபாரிகளை அழைத்து இந்த மாதத்தில் வரி குறைவாக இருக்கிறது, அடுத்த மாதம் கட்டவேண்டியதில் ஓரளவை இந்த மாதமே அட்வான்ஸ் டாக்ஸ் முன்பணமாக கொடுத்துவிடுங்கள், ரசீது கொடுத்துவிடுகிறோம் என்று சொல்கிறார்கள். இம்மாதிரியான முறை இருக்கக்கூடாது.

செக்போஸ்ட்களில் லாரிகளில் கணக்கை சரிபார்க்கிறார்கள் என்றால் பில் இருக்கிறதா, அதன்படி மூட்டைகள் சரிவர இருக்கின்றனவா என்று சரிபார்க்கவேண்டும். ஓரிரு அலுவலர்களை வைத்துக்கொண்டு இதை சரியாகப் பார்த்துவிட முடியும் என்று நான் நினைக்கவில்லை. செக்போஸ்ட்க்கு லாரி வந்ததும் அதிலுள்ள சரக்குகளை கீழே இறக்கி பில்லில் குறிப்பிட்டுள்ள சரக்குதான் இருக்கிறதா என்று ஒவ்வொன்றையும் செக் பண்ணவேண்டும். இப்படி செக் செய்வதற்கு அதிக காலதாமதம் ஆகாமல் அதிக ஆட்களை வைத்து பரிசோதித்தால் கள்ளக்கடத்தலை மிக அதிகமான அளவுக்கு தவிர்க்கமுடியும், அரசாங்கத்துக்கும் நல்ல வருவாய் கிடைக்கும்.

கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில் இது தமிழக அரசுக்கு மிக அதிக வருவாயைக் கொடுக்கக்கூடிய வரியாகும். வணிகவரி அதிகாரிகள் சினிமாக் கொட்டகைகளில் சென்று சரிபார்க்கிறார்கள் என்றாலும் அவர்களுக்கு அதிக அளவு வேலை இருப்பதால் சரியானபடி பார்க்க முடிவது இல்லை. கேளிக்கை வரியை செலுத்தியிருக்கிறார்களா, சினிமா பார்க்கிறவர்கள் டிக்கட் வைத்திருக்கிறார்களா என்பதை எல்லாம் பரிசோதிப்பதற்கு தனி அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சினிமா டிக்கட்டைப் பார்த்தால் பின்பக்கத்தில் இருக்கும் வணிகவரி அதிகாரியின் முத்திரை சரியாக தெரிவது இல்லை. எந்த முத்திரையென்று தெரிவது இல்லை. இதெல்லாம் சாதாரண விஷயம்தான். ஆனால் பெரிய ஊழல்களுக்கு இடம் கொடுக்கிறது. முத்திரை தெளிவாக இருக்கும் அளவுக்கு கவனம் செலுத்தப்படவேண்டும்.

மதுரை, சென்னை போன்ற இடங்களில் வணிக வரி அலுவலகங்கள் பல இடங்களில் சிதறுண்டு இருப்பதால் கணக்கு கொடுக்கும் வியாபாரிகளுக்கு இன்னல்கள் ஏற்படுகின்றன. வருமான வரி அலுவலகங்கள் எப்படி ஒரே கட்டிடத்தில் இருக்கிறதோ அதேமாதிரி வணிக வரி அலுவலகங்களும் ஒரே கட்டிடத்தில் இருக்கவேண்டும்.

விற்பனை வரி ஆலோசனைக் குழு ஒன்றை இந்த அரசு நியமித்திருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு விற்பனை வரி ஆலோசனைக் குழு எத்தனை முறை கூடியது, அதில் யார் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்ற விவரம் தெரியவில்லை. இன்னும் ஒரு முறைகூட அது கூடவில்லை என்று நினைக்கிறேன். பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் இருக்கும் கஷ்டங்களை எடுத்துச் சொல்வதற்கு இதுமாதிரியான......

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினரவர்கள் அவ்வாறு சொல்லக்கூடாது. விவரங்களைத் தெளிவாக தெரிந்து சொல்வது நல்லது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** அந்தக் குழு எத்தனை முறை கூடியிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அது இரண்டு முறை கூடி விவாதித்து பல காரியங்கள் கூட விசிக்கப்பட்டு, இன்னும் புதிய கமிட்டி போடுகிற நிலையும் இருக்கிறது என்பதை கனம் உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** நன்றி. இந்த வணிக வரி ஆலோசனைக் குழுவை மாநில அளவில் அமைப்பதோடு மாவட்ட அளவிலும் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு வணிக வரி ஆலோசனைக் குழு ஏற்படுத்தி, மக்களுக்கு என்னென்ன கஷ்டங்கள் ஏற்படுகின்றன, வியாபாரிகளுக்கு என்னென்ன கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பதை எல்லாம் ஆராய வேண்டும்.

வணிக வரியிலே சிக்கல்களைப்பற்றி ஆராய்வதற்கு டாக்டர் லோகநாதன் தலைமையில் மூவர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் லோகநாதன் குழு என்னென்ன பரிந்துரைகளைச் செய்திருக்கிறது, அதில் எதை எதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது என்ற விவரங்களை இந்த சபைக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நில வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில் எங்களுடைய அரசு பொறுப்பேற்று இருக்குமானால் நன்செய் நிலங்கள் அத்தனைக்கும் நில வரியை ரத்து செய்திருக்கும். இந்த அரசு புன்செய்க்கு மட்டும் நில வரியை ரத்து செய்திருக்கிறது. நன்செய்க்கும், புன்செய்க்கும் நில வரியை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிற அரசு நில வரியை ரத்து செய்து, இந்த கெய்வார் அறிக்கையின்படி வசூல் செய்யவேண்டும் என்ற இரண்டையும் ஒன்றாக இணைத்து யோசனை வைத்திருந்தது. இப்போது உறுப்பினர் அவர்களுடைய யோசனை என்ன?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** நன்செய் நிலங்களுக்கு விதித்த வரியை ரத்து செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** நன்செய் நிலங்களுக்கு நிலவரியை ரத்து செய்துவிட்டு தண்ணீர்த் தீர்வையை திருத்தி அமைக்கவேண்டுமென்ற இரண்டும் இணைந்த யோசனையைப்பற்றி உறுப்



பினரவர்களின் அபிப்பிராயம் என்ன? இந்தத் தண்ணீர் தீர்வையைப் பற்றிய விவரம் கெய்வார் அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை உறுப்பினரவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** திருத்தி அமைக்கப்படுவதால் வரி அதிகமாகக் கூடுவதாகவோ குறைவதாகவோ நான் நினைக்கவில்லை. அந்த முறைதான் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கெய்வார் அறிக்கையின்படி தண்ணீர்த் தீர்வையை திருத்தி அமைத்துக்கொண்டு நில வரியை ரத்து செய்துவிடலாம். அது ஒரு யோசனை. அந்த யோசனையை உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இதைப்பற்றி ஒரு வரியிலே பதில் சொல்ல முடியாது. விரிவாகச் சொல்லவேண்டும். எங்களுடைய தலைவர் அவர்கள் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அதற்காகத்தான் சொல்கிறேன், நிலவரியை ரத்து செய்துவிடவேண்டும் என்பதை மட்டும் பொதுப்படையாக பேசாமல் இருப்பது நல்லது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** கூட்டுப் பட்டா முறையினால் விவசாயிகளுக்கு மிக அதிகமான தொல்லை ஏற்படுகிறது. அரசாங்கத்திடம் கடன் போன்ற வசதிகளைப் பெற முடிவது இல்லை. சர்வேயர்களை அதிகமாக நியமித்து, பட்டாக்களைப் பார்த்து விரிவாக வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டா மாறுதலுக்காக தாலுகா அலுவலர்களுக்கு மனு செய்திருந்தால் மிக விரைவாகக் கிடைப்பது இல்லை. பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்தால் குறிப்பிட்ட சில மாதங்களுக்குள் மாறுதல் செய்து கொடுக்கவேண்டுமென்ற வரையறையை ஏற்படுத்த வேண்டுகிறேன்.

பஞ்சத் துயர் தணிப்பைப் பொறுத்தவரையில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தில் பல பகுதிகள் பஞ்சப்பிரதேசங்களாக இருந்தும் போதுமான வேலைகளுக்கு நடவடிக்கை எடுக்கவில்லை. உணவு அமைச்சரவர்கள் பேசும்போது கலெக்டருடைய அறிவிப்பு கிடைத்திருக்கிறது, ஆவன செய்யப்படும் என்று சொன்னாலும்கூட பல இடங்களில் இந்த பஞ்சத் துயர் தணிப்பு வேலைகள் நல்ல முறையில் நடைபெறவில்லை. ஒன்றிரண்டு இடங்களில் சிறாக நடைபெறுகிறது. திருமங்கலம் தாலுக்காவில் பல இடங்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளுக்கான நிவாரண வேலைகளை விரைவில் ஏற்படுத்தவேண்டும்.

தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அரசாங்கம் அதிகமான மானியத்தொகை கொடுக்கிறது. புயலினால் பாதிக்கப்பட்ட சில இடங்களில் பண மேடிட்டு இருக்கிறது. அவைகளை சீர்திருத்துவதற்கு, ரிக்ளமேஷன் செய்வதற்கு அரசாங்கம் கடனாகக் கொடுக்கிறது. அந்தப் பணத்தை கடனாகக் கருதாமல் மானியமாகக் கொடுக்கப்படவேண்டும் என்று கூறிக்கொண்டு என உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சித்தன் அவர்கள் சோளம், கம்பு இவைகளுக்கு விற்பனை வரியை எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். சோளம், கம்பு இவைகளுக்கு எல்லாம் விற்பனை வரி கிடையாது. கோதுமை, கோதுமைப் பண்டங்களுக்குத்தான் இருக்கிறது. கோதுமை இப்போது அவ்வளவாக வடக்கேயிருந்து கிடைப்பது கிடையாது அதை அதிகம் உபயோகிப்பதும் கிடையாது. சோளம், கம்பு, ராகி தினை, சாமை இவைகளுக்கு விற்பனை வரி கிடையாது.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை) [1968 மார்ச் 18

* **திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது உணவு அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் விற்பனை வரி மானியத்தைக் குறித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது சென்னை அரசு வருமானத்தில் கிட்டத்தட்ட நாலில் ஒரு பங்கு வருமானம் இந்த வரித் துறையிலிருந்து வருகிறது என்பது எல்லோரும் பெருமை அடைய வேண்டிய விஷயம். உணவு அமைச்சரவர்கள் இந்த ஆண்டு 65 கோடி ரூபாய் வரி வசூலிக்கப் படுகிறது என்ற நல்ல செய்தியை அவைக்கு அறிவித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு 65 கோடி ரூபாய் வரையில் ஒரு பெரிய தொகையை விற்பனை வரியாக செலுத்தியதற்காக வியாபாரிகளுக்கு இந்த அரசாங்கம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். குறைந்த செலவில் $1\frac{1}{2}$, கோடி ரூபாய் செலவில் 65 கோடி ரூபாய் வரையில் வரியை எந்தவிதமான காலதாமதமும் இன்றி குறிப்பிட்ட தேதிக்குள்ளாக அதிகாரிக்குப் போய் சேரவேண்டிய வகையில் வியாபாரிகள் ஒத்துழைப்பு கொடுத்திருப்பது குறித்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். வியாபாரிகள் எடுத்துக்கொண்ட அரிய முயற்சிகள் காரணமாக விலைவாசிகள் இறங்கியிருக்கின்றன என்று சொல்வது மிகையாகாது. ஒரு ஊரில் ஒருவரிடம் உள்ள பொருளை நான்கு வியாபாரிகள் வாங்கி வந்து திடீர் என்று அதன் விலையைக் குறைத்துவிடுகிறார்கள். இந்த விலை குறைந்திருப்பதற்குக் காரணம் உற்பத்தி மட்டுமல்ல, வியாபாரிகளின் நல்ல எண்ணமும் கூட விலைகள் குறைவதற்கு வகை செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி 65 கோடி வரையிலும் விற்பனை வரி செலுத்தக்கூடிய வியாபாரிகளுக்கு கடந்த கால அரசு கொடுத்திருந்த பட்டம் திருடர்கள், கணக்கை மறைப்பவர்கள் என்பதாகும். இந்த ஓர் ஆண்டு காலமாக வியாபாரிகள் ஓரளவு மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் காணப்படுகிறார்கள். காரணம், தமிழகத்தில் இருக்கக் கூடிய வியாபாரிகள், பல்வேறு துறைகளில் இருப்பவர்கள், அந்தந்த மாவட்டத்தில் இருக்கும் வர்த்தகக் குழுக்கள், வணிகத்துறை அமைச்சரவர்களைக் காண வரும்போது அவர் அவர்களை அன்போடு வரவேற்று, அவர்கள் குறைகளைக் கேட்டு, கூடுமான வரை அவைகளை சரியாக்க ஆவன செய்வதாகச் சொல்லுவது வியாபாரிகள் சமுதாயத்துக்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கிறதென்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த விற்பனை வரியைப் பொறுத்தவரையில் 65 கோடி ரூபாய் அல்ல, என்னைப் பொறுத்தவரையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பதால் கூற விரும்புகிறேன், இந்த விற்பனை வரியின் சட்டத்தை மாற்றியமைத்தால் கிட்டத்தட்ட 80 கோடி ரூபாய் வரைகூட வசூலாகக்கூடிய வகையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். விற்பனை வரி என்று சொன்னால் வியாபாரிகள் என்னவோ ஏதோ என்று பயப்படுகிறார்கள். விற்பனை வரிச் சிக்கல்களில் மாட்டிக்கொண்டால் என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்று அஞ்சுவதால் வியாபாரிகள் பெரும்பாலும் தன்னை விற்பனை வரி செலுத்தக்கூடியவர் என்று பதிவு செய்துகொள்ளப் பயப்படுகிறார்கள். கடந்த கால அரசு அந்தச் சட்டத்தை மிகக் கொடூரமான முறையில், தவறான முறையில் பயன்படுத்தியதால் அப்படிப் பயப்படுகிறார்கள். ஆகவே, விற்பனை வரியைக் கட்டுவதற்கு எதுவான முறையிலும், வசூலிப்பதற்குச் சுமுகமான முறையிலும் மாற்றி அமைக்க குழு ஒன்றினை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அறுபத்தைந்து கோடி ரூபாய், கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் அதிகமாக வசூலிக்கின்ற நிலையைப்பற்றிப் பாராட்டினாலும் சில விற்பனை வரி அதிகாரிகளால் வியாபாரிகளுக்கு அதிகத் தொல்லைகள் ஏற்படுகின்றன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். பலவிடங்களில் வியாபாரிகள் நேர்மையாக ஆண்டுக் கணக்கை முடித்துக்கொடுத்தாலும் "அஸெஸ்மெண்ட்" "பெஸ்ட் ஆப்



1968 மார்ச் 18] [திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்]

ஜட்ஜ்மெண்டை"ப் பயன்படுத்தி விற்பனை வரித் தொகையைக் கூட்டி விடுகிறார்கள். அப்படிக் கூட்டாமலிருக்கும்படி அதிகாரிகளுக்கு உத்திர விடும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். அந்த முறையிருந்தால் நிச்சயமாக வியாபாரிகள் உண்மையிலேயே நல்லமுறையில் கணக்குகளைக் காட்ட வழிவகையேற்படும். ஆகவே, "பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்டை"ப் பயன்படுத்தி ஏ.ஸி.டீ.ஓ.–வானாலும், டி.ஸி.டீ.ஓ.–வானாலும், ஜே.ஸி.டீ.ஓ.–வானாலும் அதிகமாகத் தொகையைக் கூட்டாமல் இருக்கும்படி வழி செய்யவேண்டுமென இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்த அரசு ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு பொறிக்கும், அவலுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களித்திருப்பதைப் பாராட்ட வியாபாரிகள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதோடு நீண்ட நாட்களாக வியாபாரிகளுக்கிருந்த 10,000 ரூபாய் வரை விதிவிலக்கிருந்ததை 15,000 ரூபாய்க்கு உயர்த்தியிருப்பதையும் வியாபாரிகள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மேலும், 50,000-இலிருந்து 75,000 ரூபாய் வரை கம்பவுண்டிங்க்கு உயர்த்தியிருப்பதையும் வியாபாரிகள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும், வியாபாரிகளுக்கு நீண்ட காலமாக இருந்து வரும் குறைகளையும், கஷ்டங்களையும் கவனித்து அந்தச் சங்கடங்களை நீக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். கலப்படத் தடைச் சட்டத்தின் காரணமாக நிரபராதி வியாபாரிகள்கூட சிறைத் தண்டனை பெறும் நிலையிருக்கிறது. இந்தச் சட்டம் மத்திய அரசாங்கத்திற்கு உட்பட்ட சட்டம். அந்தக் கலப்படத் தடைச் சட்டத்தை உடனடியாக மாற்றியமைத்து ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழுவில் அதிகாரிகள், வியாபாரிகள், மற்ற கூட்டுறவுத் துறையிலிருப்பவர்கள், நிபுணர்கள் ஆகிய இவர்களை இடம் பெறச் செய்து, அதன்மூலம் கலப்படத் தடைச் சட்டத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரியை விசாரிக்கச் செய்து பிறகு தீர்ப்பு கூற வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு யோசனை கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இரண்டாண்டு காலத்திற்கு முன்பு காங்கிரஸ் அரசு "சென்னை இராஜ்ய கட்டட லைசென்ஸ்" என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவந்ததால பெருவாரியான சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். உடனடியாக இந்த "சென்னை இராஜ்ய கட்டட லைசென்ஸை" ரத்து செய்ய வேண்டுமென்று இந்த அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வியாபாரிகளுக்கு இருக்கக்கூடிய குறைகளைப் போக்க வியாபாரிகள், அதிகாரிகள், அமைச்சர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்படவேண்டும். இதை அமைப்பதுபற்றி முதலமைச்சரவர்களும், விற்பனை வரி இலாக்கா அமைச்சரவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குழுவை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதோடு 15,000 ரூபாய் வரை விலக்கு அளித்திருப்பதானது போதுமானது அல்ல என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விற்பனை வரியை 10,000-இலிருந்து 15,000-க்கு உயர்த்தியிருப்பதைப் பாராட்டினாலும் இது போதாது, குறைந்தபட்சம் 25,000 ரூபாய் வரையாவது விலக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தேங்காய் நாரை உற்பத்தி செய்து கயிறு தயாரித்து வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் அனுப்பப்படுகிறது. நம்முடைய மாநில அரசு அதற்கு வரி விதித்திருக்கிறது. ஆனால் அண்டை மாநிலமான கேரளாவிலே இதற்கு எம். ஜி. எஸ். டி., சி. எஸ். டி. இடையாது. அவர்களும் வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறார்கள். ஆனால் இங்கே நமது வியாபாரிகள் வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் அனுப்பும்பொழுது இரு வரியினங்கள் ஆறு சத விகிதம், $6\frac{1}{2}$ சத விகிதம் வசூலிப்பதால்

[திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்] [1968 மார்ச் 18

அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் பெரும்பாலும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அந்த தேங்காய் நாருக்கான வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதோடு தேங்காயை அழுகும் பொருள்களோடு சேர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஒரு லாரி தேங்காயை 15 நாட்களில் விற்பதற்குள் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு 20 அல்லது 30 தேங்காய்கள் அழுகுகின்றன. அந்த லாரி முழுவதும் விற்பனையாவதற்குள் சுமார் 500, 1,000 தேங்காய்களாவது அழுகிவிடுகின்றன. ஆகவே, தேங்காய்க்கு விற்பனை வரி விலக்குக் கொடுக்க அதை அழுகும் பொருள்களோடு சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கிராமங்களிலே உற்பத்தி செய்யும் விவசாயிகள் போதுமான சரக்குகளை வைத்துக்கொண்டு மீதியை விற்பனைக்கு அனுப்பும்பொழுது விற்பனை வரி அதிகாரிகள் பாதைகளின் குறுக்கே நின்றுகொண்டு நிறுத்தி விவசாயிகளிடமிருந்து வரி வசூல் செய்கிறார்கள். ஒரு ரூபாய் வரி என்றால் மூன்று ரூபாய், நான்கு ரூபாயாகக்கூட அதிகமாக வரி வசூல் செய்கிறார்கள். அது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். விவசாயிகள் தங்கள் சொந்தச் சரக்கு என்று கிராம அதிகாரிகள் மூலம் அத்தாட்சி பெற்றிருந்தாலும் கூட வரி வசூலிக்கும் அதிகாரிகள் அதை ஒப்புக்கொள்வதில்லை. வரி வசூலித்து விடுகிறார்கள். இந்த நிலைமைகளை மாற்றியமைத்து, கிராம அதிகாரி அல்லது ஊராட்சித் தலைவர் அல்லது சட்டமன்ற உறுப்பினரோ அன்றி பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் உறுப்பினரோ அது விவசாயிகளின் சரக்கு என்று அத்தாட்சி கொடுத்திருந்தால் விற்பனை வரி அதிகாரிகள் அதை ஒப்புக்கொண்டு வரி வசூலிக்காமல் இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

செலவிடங்களில் "இன்வாய்ஸ்"களில் டெலிவரி நோட்டுகளில் சரியாக இருந்தாலும் ஏதாவது குறை காணச் செய்து 500, 1,000 என்று அபராதம் வசூலிக்கிறார்கள். "அட்வான்ஸ் டாக்ஸ்" என்று வசூலிக்கிறார்கள். அதைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நீண்ட நாட்களாக, 30 ஆண்டு காலமாக கொள்முதல் வரியில்லாமல் இருந்தது. கடந்த காலத்திலே கொள்முதல் வரி போட்டார்கள். கடந்த 25, 30 ஆண்டுக் காலமாக இல்லாத வரியை வசூலிப்பதால் வியாபாரிகள் அவலநிலைக்காளாகிறார்கள். அதனால் பெரும்பாலான தொல்லைகளுக்காளாகிறார்கள். அதற்கு 61–62-ஆம் ஆண்டு, 62–63-ஆம் ஆண்டில் தடை வாங்கப்பட்டிருக்கிறது. நமது தமிழக அரசு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இந்த வரியை வசூலிக்க வேண்டாமென்று கூறி, இந்த வரியை ரத்து செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அது மட்டுமல்ல மேலும் நான் விற்பனை வரியை அதிக அளவில் பெறக்கூடிய அளவிற்கு சில யோசனைகளைக் கூற ஆசைப்படுகிறேன். சில பொருள்களுக்கு ஒருமுனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. லோகநாதன் குழுவில்கூட எல்லாப் பொருள்களுக்கும் ஒருமுனை வரி விதிப்பது சாத்தியமல்ல என்று கூறியிருக்கிறார்கள். இன்று தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களுக்கும் பல கட்ட விற்பனை வரி போடுவது தவறு அல்ல. அந்தப் பொருள்களுக்கு பல கட்ட விற்பனை வரி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். நகராட்சி மன்ற எல்லைகளிலும் மாவட்ட எல்லைகளிலும் நிரந்தர சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தி, எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் உறுப்பினர் மாண்புமிகு திரு. சித்தன் அவர்கள் சொல்லியபடி எல்லாப் பொருள்களுக்கும் பட்டியல், "இன்வாய்ஸ்" இருக்கிறதா, என்று பார்த்து தணிக்கை செய்து அனுப்பினால் நிச்சயமாக



1968 மார்ச் 18] [திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்]

65 கோடி ரூபாய் மட்டுமல்ல, இந்த அரசுக்குத் தேவைப்படுகின்ற பணத்தில் மூன்றில் ஒரு பகுதி இந்த விற்பனை வரித் துறையிலே கிடைக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் கம்பு, ராகி, சோளம், தினை, அரிசி, நெல் போன்றவைகளுக்கு விற்பனை வரி இல்லை. அதற்கு, ஒரு இலட்சம் ரூபாய் வரை விற்பனை செய்தால் இவ்வளவு லைசென்ஸ் கட்ட வேண்டும், ஒரு இலட்சத்திலிருந்து மூன்று இலட்சம் வரை விற்பனை செய்தால் வியாபாரிகள் இவ்வளவு லைசென்ஸ் கட்ட வேண்டும், மூன்று இலட்சத்திற்கு மேலே விற்பனை செய்யும் வியாபாரிகள் இவ்வளவு லைசென்ஸ் கட்ட வேண்டும் என்று கட்டணங்களை விதித்தால் அதனால் சில கோடி கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே நான் சொன்னேன், வரி விலக்குக் கொடுக்க வேண்டும், சிலவற்றிற்கு வரியைக் குறைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் வருமானம் அதிகமாகக் கிடைக்கக்கூடிய வகை ஏதாவது இருக்கிறதா என்றால் நான் சொன்ன அயிட்டங்களின் மூலம் அதற்கு நல்ல வழிவகை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, விற்பனை வரி மூன்று சத விகிதமாக இருப்பதை தாராளமாக இரண்டு சத விகிதமாகக் குறைக்கலாம். அவ்வாறு குறைப்பதினாலே இந்த 80 கோடி ரூபாய் குறைந்துவிடாது. விற்பனை வரியை எளிதாகக் கொடுக்கவும், சுமுகமாக வசூலிக்கவும் கூடிய முறையிலே விற்பனை வரிச் சட்டத்தை மாற்றி சில பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுத்து, சில பொருள்களுக்கு ஒருமுனை விற்பனை வரியை பலமுனை வரியாகப் போட்டு, முனிசிபல் எல்லைகளிலும், மாவட்ட எல்லைகளிலும் நிரந்தர செக் போஸ்டுகளை அமைத்து பரிசோதனை செய்தால் நிச்சயமாக 80 கோடி ரூபாய் வரையிலும் வரும். அதற்காகத்தான் இதை காமதேனு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், கற்பக விருட்சம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த காமதேனுவும், கற்பக விருட்சமும் இலேசான முறையிலே வசூலிக்கப்படக்கூடியதாக இருக்கவேண்டும். வியாபாரிகளுக்கு தொல்லை கொடுக்கக் கூடியதாக இருக்கக்கூடாது. விற்பனை வரி செலுத்துகிறவர்களுக்கு ஆபத்து தரக்கூடியதாக இருக்கக்கூடாது.

விவசாயிகள் கரும்பு பயிர் செய்து அதை வெல்லமாகவும் வெல்லச் சர்க்கரையாகவும் மாற்றி அதை விற்பதற்கு பஜாருக்குப் போகிறார்கள். பெருந்துறை போன்ற பல பகுதிகளில் விற்பனை வரி அதிகாரிகள் விவசாயிகளிடமிருந்து வரிகளைக் கேட்கிறார்கள். அந்த நிலையை மாற்றியமைத்து, கரும்பு உற்பத்தி செய்கின்ற, கரும்பு பயிரிடுகின்ற அந்த விவசாயிக்கு, ஏக்கருக்கு இவ்வளவு வரி என்று அங்கேயே அந்த வரியை வசூலித்துவிட வேண்டும். விவசாயிகளிடமிருந்து எந்தவிதமான விற்பனை வரியையும் எந்த அரசும் வாங்குவது நல்லதல்ல என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிக அளவு விவசாயம் செய்யக்கூடியவர்களிடமிருந்து வரி அதிகம் வரும் என்று கருதுவார்களேயானால் ஏக்கர் கரும்புக்கு இவ்வளவு வரி என்று எடுத்துக்கொள்ளுவோமேயானால் அந்த வரியை விவசாயிகள் சுலபமாக செலுத்த முடியும். அவர்கள் பயிர் செய்கின்ற கரும்பிலிருந்து உற்பத்தி செய்கின்ற அச்சு வெல்லமாக இருந்தாலும், உருண்டை வெல்லமாக இருந்தாலும், வெல்லச் சர்க்கரையாக இருந்தாலும் அதை விற்பனை செய்வதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கடந்த அரசு வியாபாரிகளினுடைய நிலையைப்பற்றி கொஞ்சம்கூட எண்ணவில்லை. ஆனால் இந்த அரசு பாராட்டக்கூடிய அளவு வியாபாரிகளினுடைய நலனெண்ணத்தை உணர்கிறது. வியாபாரிகளினுடைய கஷ்டங்களை உணர்ந்து அவ்வப்பொழுது

அதற்கு நிவாரணம் செய்ய முன்வந்திருக்கிறது. அதற்காக அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே பாராட்டி, பாராட்டுகிற நேரத்திலே நான் சொன்ன குறைபாடுகளையெல்லாம் அவசியம் கவனிக்கவேண்டுமென்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, நில வரி மானியக் கோரிக்கை, பஞ்சத் துயர் துடைப்பு மானியக் கோரிக்கை இவைகளின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த சர்க்கார் முதன்முதலிலே அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட உடனே அவர்கள் செய்திருக்கிற முக்கிய காரியம் புன்செய் நிலங்களுக்கு வரி விலக்கு—புன்செய நிலங்களுக்கு உள்ள வரியை நீக்கியதாகும். இதற்கு சர்க்காரை நான் பாராட்டுகிறேன். இந்த நில வரியை எடுத்துவிட வேண்டும்; இந்த நில வரி இருக்கக்கூடாது என்ற கொள்கை பல ஆண்டுகளாக, நாடு விடுதலை அடைவதற்கு முன்னதாகவே பல பொது மேடைகளில் பேசப்பட்ட விஷயம். எல்லாக் கட்சிகளும் நில வரியை ஒழித்துவிட வேண்டுமென்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் 20 வருட ஆட்சியாலே, ஆட்சி செய்த கட்சியினாலேயே இந்த நில வரியை விலக்க முடியவில்லை. அது மாத்திரம் அல்ல; நில வரியை ஒட்டி, அந்த நில வரியின் மேலே பல புதிய வரிகளை, சர்சார்ஜ் போன்றவைகளை நிறைய போட்டுக் கொண்டே வந்தார்கள். இந்த வருவாய்த் துறை மானியக் கோரிக்கை—1 கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே பல வரிகள் வசூலிக்கப்படுகின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. நில வரியில் ஒவ்வொரு ரூபாய்க்கும் 12 காசு வீதம் நில செஸ் வரியும், 20 காசு வீதம் கல்வி செஸ் வரியும் வசூலிக்கப்படுகின்றன. நில வரியில் ஒவ்வொரு ரூபாய்க்கும் 13 காசு வீதம மேல் வரி என்றும் வசூலிக்கப்படுகின்றது. அது மாத்திரமல்ல; ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்களுக்கும் வரி இப்படி 100-க்கு 150 சதவிகிதம் கூடுதல் வரி இருந்துகொண்டு வருகிறது. "ஆடு அரைப்பணம் சுமைக்கூலி முக்கால பணம்" என்றபடி இன்றையவரி நிலைமை இருக்கிறது. நிலவரி மாத்திரம்தான ஒழிக்கப்பட்டிருக்கிறது, இது புன்செய் நிலக்காரர்களுக்குப் பெரிய ஆறுதலாக இல்லை. இப்பொழுதுள்ள சூழ்நிலையிலே சிறுநில விவசாயியாவது எல்லா வரித் தொல்லையிலிருந்தும விடுபட்டிருக்கவேண்டும். அவர்கள் இந்த வரி வசூலிலிருந்து விடுபட வேண்டுமென்பதுதான் எல்லோருடைய ஆசை. நடைமுறையிலே இது சாத்தியமா? இல்லையா? எப்படியும் எல்லா வரிகளையும் ஒரு குறிப்பிட்ட உச்சவரம்புள்ள சிறு உழவர்களுக்காவது ஒழிப்பதுதான் சரியானமுறை. தேர்தல் காலத்தில் சொல்லிவிட்டோம் என்பதற்காக அரைகுறையாக வரி ஒழிப்பதில் அர்த்தம் இல்லை. நேருஜி கொள்ளை லாபம் சம்பாதிப்பவர்களையும், கள்ளமார்க்கெட்காரர்களையும் தூக்கிலிடவேண்டுமென்று சொன்னார். அதேமாதிரி மத்திய அரசிலே உள்துறை அமைச்சர் பதவி வகித்த திரு. நந்தா இலஞ்ச ஊழலை ஓராண்டிலே ஒழிக்காவிட்டால் நான மந்திரி பதவியை ராஜிநாமா செய்வேன் என்றார். ஆனால் அந்தக் காரியங்கள் சித்தமாகாமல் போய்விட்டன. அவ்வாறு பல காரியங்கள் பல்லாண்டு காலம் நடைமுறைக்கு வராமல் போய் விடுவது உண்டு. அதேமாதிரிதான் நில வரியை ஒழித்துவிட்டோமென்பதும். அதில் உள்ள உண்மை நிலைமைகளைப் பரிசீலிக்காமல் அவசரப்பட்டு நிலவரியில் முடிவு எடுத்து விடுவதில் பலன இல்லை. ஆகையினாலே நிலவரியை ஒழிக்கிறபொழுது நன்செய் நிலங்களுக்கும் ஒழித்துவிடமுடியுமா? அல்லது புன்செய் நிலங்களுக்கு ஒழிப்பதோடு நின்றுவிடலாமா? அல்லது சிறு நிலக்காரர்களுக்கு மட்டும் ஒழித்துவிடலாமா? எல்லோருக்கும் ஒழித்துவிட்டால் நிலவரி வருவாய் இழப்பை எவ்வகையில் ஈடுசெய்வது என்பதைத் தீவிரமாகச் சிந்தித்து அவசரப்படாமல் காரியம் செய்யவேண்டும். நிலவரிபற்றி திரு. கெய்வாருடைய அறிக்கையாகட்டும், வேறு அனுபவமிக்க ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்கள் அறிக்கைகளாகட்டும், அவைகளையெல்லாம் அப்படியே



நடைமுறைப்படுத்தக் கூடாது, முடியாது. நடைமுறையிலே, நம்முடைய மாநிலத்திலேயுள்ள நிலவரத்திற்கேற்றவாறு அவைகள் செயல்படுத்தப் படவேண்டும். அவர் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் பயிர்வாரியான வரி போடவேண்டுமென்று இருக்கிறது. பயிர் வாரியான வரியே இருக்கக் கூடாது. நிலத்தின் விஸ்தீரணத்தின் மேல்தான் வரி இருக்கவேண்டும். பயிர்வாரி வரி வரும்போது கணக்குப்பிள்ளைகளிடம் நிலக் கிழார்களும், மற்றவர்களும் சிக்கி அதிகமான வரி செலுத்தி இதுவரை அல்லல் பட்டது போதும். ஆகவே, ஒரு அதிகாரி கொடுத்திருக்கிற இந்த அறிக்கையினை சிறந்த அறிக்கை என்றும் அந்த அடிப்படையிலேதான் வரி இருக்க வேண்டுமென்றும் எண்ணிவிடக் கூடாது. சர்க்காருக்கு வேண்டியது பணம். அது குறையக்கூடாது. வரியை ஏமாற்றுகிறவர்களிடம் அதிகமாக வரி வசூலிக்கவேண்டும். சிறுநிலச்சுவான்தாரர்களுக்கு வரிச் சலுகை வேண்டுமென்ற நிலையே சரியான நிலை. ஆதலின் எல்லா நிலங்களுக்குமோ அல்லது நஞ்சை நிலங்களுக்கோ, அல்லது புஞ்சை நிலங்களுக்கோ விலக்கு அளிக்கும்பொழுது அவசரப்பட்டு எதுவும் செய்யக் கூடாது. சிந்தித்துப் பார்க்கவேண்டும். மக்களும் இதன்மூலம் அல்லல் படாத முறையை நாம் அனுஷ்டிக்கவேண்டும். ஆகையினாலே எந்த வரியை நாம் எவ்வளவு கூடுதலாக, எவ்வளவு அதிகமாக விதிக்க முடியுமோ அவ்வளவு கூடுதலாக, யார்மேல் வரி விதித்தால் தாங்குவார்களோ அவர்கள்மேல் மாத்திரம் விதிக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிச் சொன்னார்கள். இது உணவுப் பிரச்சினையை, கொள்முதல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உள்ள ஒரு அம்சமாகவும் இருக்கும் என்று சொன்னார்கள். உண்மையிலேயே வரவேற்கத்தக்கதுதான். ஆனால், சாதாரணமாக நான பார்த்தவரையில் இதுவரை சிறு விவசாயிகள் இன்னும் எந்த கஷ்டத்திலிருந்தும் அல்லலிலிருந்தும், தொல்லையிலிருந்தும் நீங்கியதாகத் தெரியவில்லை. ஏனென்றால் நில வரி இல்லை என்றாலும், மேல் வரிகளைக் கொடுப்பவர்களாயிருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பெரும் நன்மை செய்கிறோம் என்ற முறையிலே விவசாயிகளுக்குச் சிறப்பாக, சிறு நிலக்கிழார்களுக்கு இன்னும் நம் வரிச் சலுகை தரவேண்டும். இன்றைய வரிக்கொள்கை நடைமுறையிலே நன்கு செயல்படவில்லை; மற்ற கஷ்டங்களுக்கும் நிவர்த்தி அளிப்பதாகயில்லை. தங்களுக்கு நிலம் சொந்தமில்லாத உழவர் பலர் இருக்கிறார்கள். தாங்களே உழுகிற நிலச்சொந்தக்காரர்களும் இருக்கிறார்கள். நிலம் இல்லாததால் வேளாண்மை செய்ய முடியாதவர்களும் இருக்கிறார்கள்.

இதுகாலை, மிக முக்கியமான விஷயம் பஞ்ச நிவாரணம் பற்றியது. சென்ற ஆண்டு மழை இல்லாத நிலை நம்முடைய மாநிலத்திலே ஏற்பட்டது. இங்கே பல இடங்களிலே வரட்சிநிலை இருந்தது. ஏன், ஒரு இடம்கூட வறட்சி இல்லாத நிலையில் இல்லை என்று சொல்வதற்கில்லை. இப்பொழுது கோவையை எடுத்துக்கொண்டால், பல்லடத்திலே பஞ்சாயத்து தலைவர்கள் 60 பேர் அடையாள உண்ணாவிரதம் இருந்தார்கள். பல்லடம் உடுமலை வட்டங்கள், கோபி தாலுகா நம்பியூர் உள் வட்டத்திலேயெல்லாம் மக்கள் மிகக் கஷ்டப்படுகிறார்கள். நம்பியூர் நகரப்பஞ்சாயத்திலே உணவு தானியம் குடும்பக் கார்டுகளுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் அதைவிட மிகவும் கஷ்டத்திலே இருக்கிற பக்கத்துக் கிராம பஞ்சாயத்துக்களுக்கு அது விஸ்தரிக்கப்படவில்லை. காரணம், போதிய அளவு உணவுப்பொருள் ஸ்டாக் இல்லையென்று சொல்லுகிறார்கள்.

இப்பொழுது கொள்முதல் நல்ல நிலையிலே இருக்கிறது. பஞ்ச நிவாரணம் என்ற முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும். தர்மபுரியில் ஹோசூர், கிருஷ்ணகிரியில் வேப்பனபள்ளி ஆகிய இடங்களில் பஞ்சநிலை காரணமாக மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சென்ற வருஷம் மழை பெய்யாததைப்பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் வரவு செலவுப் பேச்சிலே குறிப்பிட்டார்கள். தென்மேற்கு பருவக்காற்றினால் 289 மில்லிமீட்டர் மழையும், வடகிழக்கு பருவக்காற்றினால் 496 மில்லி மீட்டர் மழையும் சராசரியாக பெய்தது என்று சொல்லியிருக்கிறார்கள். நண்பகல் 12–00

இந்த மழையளவு, 1966–67-ம் மழையளவைக் காட்டிலும் 23 சதவிகிதம் குறைந்துள்ளதாகக் கூறினார்கள். எல்லா இடங்களிலும் மழை பெய்யவில்லை. இராமநாதபுரம், தஞ்சாவூர் போன்ற இடங்களில் பெரும் புயல் வந்து, ஒரே நாளில் அதிக அளவு 15 இன்ச், 10 இன்ச் மழை பெய்ததை வைத்துக்கொண்டு சராசரியாகக் கணக்குப் போட்டு பார்க்கக் கூடாது. ஆற்றின் கரையோரத்தில் ஒரு அடி ஆழம் இருக்கலாம், ஆற்றின் நடுவே 7 அடி ஆழம் இருக்கலாம், எல்லாவற்றையும் சேர்த்து சராசரி ஆழம் 4 அடி என்று ஆற்றைக் கடக்க முயல்வது எவ்வளவு ஆபத்தோ அவ்வளவு ஆபத்து தான் சராசரியாக மழையைக் கணக்கில் கொள்வது. சில இடங்களில் ½ இன்ச் கூட மழையே பெய்யவில்லை. நான் சொல்லிய பகுதிகளிலுள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கு டிஸ்டிரிக்ட் டெவலப்பெண்டு கவுன்சில் அல்லது மாவட்ட ஆளுநரிடம் சொன்னால், இன்னும் கொஞ்சம் நாட்கள் போகட்டும், மார்ச்சு போகட்டும், ஏப்ரல் வரட்டும், நிவாரண வேலைகளைத் துவக்கலாம் என்று சொல்கிறார்கள். அங்கெல்லாம் பல பேர்கள் பட்டினியும், பசியுமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். உணவு அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி எந்த ஒருவனும் உணவு இல்லாமல் கஷ்டப்படக் கூடாது.

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்ற பாரதியாரின் இலட்சிய சகாப்தத்தில் இருக்கிற நாம் தனி ஒருவன் உணவு இல்லாமல் இருக்கக்கூடாது என்பது மட்டுமல்ல, இந்த மாநிலத்தில் எந்தப் பகுதியில் இருக்கிற மக்களும் உணவு இல்லாமல் கஷ்டப்படக் கூடாது. ஆகவே, கலெக்டர் அவர்கள் அனுப்பிய அறிக்கையை மாத்திரம் வைத்துக்கொண்டுப் பாராமல், அந்தந்த பஞ்சாயத்து யூனியன் சேர்மன், அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களையும் எடுத்துக்கொண்டு, நிவாரண வேலைகளை உடனடியாக கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. ஆர். நாகசுந்தரம் :** மதிப்பிற்குரிய மாற்றுத்தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது விற்பனைவரியைப் பொறுத்தவரையிலே ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மத்திய அரசு படி அரிசி திட்டத்திற்கு மானியம் தராத நிலையிலும், இன்று குறிப்பாக கற்பக விருக்ஷம், காமதேனு என்று சொல்லக் கூடிய விற்பனை வரிதான் ரூ. 10 கோடி உபரியாகக் கொடுத்து, இந்த மானியத்தை உதவி செய்கிறது. எனவே, நமது மாண்புமிகு அண்ணா அவர்கள் தீர்க்க ஆலோசனை செய்துதான் இந்த இரண்டு துறைகளையும் ஒரே அமைச்சரிடம் கொடுத்துள்ளார் என்று நினைக்கிறேன். இந்த அரசு விற்பனை வரித் துறையிலே பல நன்மைகளை இந்தக் குறுகிய காலத்தில் செய்திருப்பதை இந்த மாநிலம் அறியும். வரிவிதிப்பு வரம்பை ரூ. 15,000 ஆக உயர்த்தியது, கம்பவுண்டிங் முறை வரம்பை ரூ. 75,000 ஆக உயர்த்தியது, இன்னும் அவல் பொறி மீதுள்ள விற்பனை வரியை ரத்து செய்திருக்கிறார்கள். இப்படி பல சலுகைகளை இந்த அரசு செய்ததைப் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். அது மட்டுமல்ல, குஜராத்தி மொழியில் கணக்கு வைத்திருக்கும் வியாபாரிகள் இந்த மாநிலத்தில் ஒரு கணிசமான அளவுக்கு இருக்கிறார்கள். அவர்களுடைய கணக்குகளை குஜராத்தி மொழியில் தேர்ச்சி பெற்றவர்கள் கண்காணிக்கவேண்டுமென்பதற்காக, இந்த அரசு சிப்பந்திகளை ஊக்கு வைத்து அந்த மொழியைப் பயில்கிறவர்களுக்கு இரண்டு உபரி இன்கிரிமெண்டு அல்லது ரூ 500 ரொக்கம் என்று கொடுத்து அவர்களை ஊக்குவித்து வருவது பாராட்டத்தக்கது ஆகும்.

வாணிப வரித்துறை நமது அரசின் நிதிநிலைக்கு ஒரு கேந்திரம். இந்த கண்ணீரற்ற வரி என்ற அளவில் (டாக்ஸ் வித்தவுட் டியர்ஸ்) மாற்றுவதற்கு ஒருசில யோசனைகளை நான் கூற விரும்புகிறேன்.





இதற்காக மூன்று வகையான சீரமைப்பு செய்யவேண்டும். முதலாவதாக தற்போதுள்ள சட்டங்களைச் சீர்திருத்தி அமைக்கவேண்டும். இரண்டாவதாக நிர்வாக முறையை மாற்றவேண்டும். மூன்றாவதாக நிர்வாகக் குழுவினை சீர்திருத்தி அமைக்கவேண்டும். இந்த மூன்றையும் கவனிப்பதற்காக ஒரு "ஹை பவர் கமிட்டி" உயர்மட்ட கமிட்டி, வாணிபர்களையும், அதிகாரிகளையும், மற்றவர்களையும் கொண்டதாகப் போட்டு இந்த முறையை சீர்படுத்தவேண்டும்.

சட்ட சீரமைப்பைப் பொறுத்தவரையிலே, விற்பனை வரிகள் சம்பந்தமாக மூன்று சட்டங்கள் இருக்கின்றன. அந்த மூன்று சட்டங்களையும் ஒரே சட்டமாக்கவேண்டும். அதேபோல கேளிக்கை வரியைப் பொறுத்த வரையில், இரண்டு சட்டங்கள் இருக்கின்றன. அவற்றை ஒன்றாக இணைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதனால் வியாபாரிகள் அனுபவிக்கவேண்டிய பற்பல நடைமுறைகள் குறையும், கடமையும் குறையும், நிர்வாகத்தினருக்கு வேலைப்பளுவும் குறையும். மதராஸ் கேளிக்கை வரிச்சட்டம் (மெட்ராஸ் எண்டர்டைன்மெண்டு டாக்ஸ்), ஸ்தல ஸ்தாபன உபரி வரிச்சட்டம் (மெட்ரூஸ் லோகல் அதாரிடீஸ் பினான்ஸ் ஆக்ட்) இரண்டுமே மாகாண அரசினரைச் சேர்ந்தது. இரண்டிலிருந்து வரக்கூடிய வருமானங்களும் ஸ்தலஸ்தாபனங்களுக்குத்தான் செல்கின்றன. எனவே, இரண்டையும் ஒன்றாக இணைப்பதில் சிக்கல் எதுவும் இருக்க முடியாது.

பெட்ரோலுக்கு விற்பனைவரிச் சட்டத்தின் கீழ் லிட்டர் முறையில் வரி விதிப்பதால் கஷ்டங்களும், சிக்கல்களும் இருக்கின்றன. ஒரு லிட்டருக்கு 10 பைசா என்ற அளவில் தற்பொழுது விதிக்கப்படுகிறது. அதே சமயத்தில் பெட்ரோல் அல்லாத மற்றவைகளுக்கு 2 பைசா விதிக்கப்படுகிறது. இதை மாற்றி அமைத்து ஒரேயடியாக பெட்ரோல், டீசலுக்கு 15 சதவிகிதம் என்ற அளவில் விற்பனைத் தொகையின் மீதும் 5 சதவீதம் மற்ற மோட்டார் எண்ணெய் மீதும் வரி விதித்தால் வியாபாரிகளுக்கு மிகவும் சுலபமாகவும், சௌகரியமாகவும் இருக்கும். அண்டை மாநிலமாகிய கேரளாவில் இந்த முறை பின்பற்றப்படுகிறது.

மத்திய விற்பனைவரிச் சட்டத்தின் கீழ் மத்திய அரசு வரி விதிக்கிறது. ஆனால், விதிகளை மாகாண அரசு செய்கிறது. நடைமுறையையும் இந்த மாகாண அரசு தான் செய்கிறது. இந்த இரட்டை முறை தேவையில்லை, இவைகளை ஒழித்துவிட்டு, மாகாண அரசே இந்த வரியை விதிப்பதற்கு சட்டம் செய்யவேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிர்வாகக் குழு சீரமைப்புப் பிரச்னை, அதாவது எஸ்டாப்ளிஷ்மெண்டு. சர்வீஸ் கமிஷனை விட்டு மொத்தமாக எல்லா கிளார்க்குகளையும் பொறுக்கிவிடுகிறார்கள். இந்தத் துறையில் எழுத்தர்கள் தான் படிப்படியாக மேலே உயர் அதிகாரிகளாக வருகிறார்கள். எனவே பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தனித் தேர்வு முறை வைத்து, பி.காம்., சட்டப்படிப்பு, பி.ஏ. (பொருளாதாரம்) போன்ற பட்டங்களைப் பெற்றவர்களில் வல்லவர்களை முறையாக தேர்ந்தெடுப்பார்களேயானால், எதிர்காலத்தில் இந்த அமைப்பு நல்லபடியாக இயங்கும். அதே சமயத்தில் அப்பெலட் அஸிஸ்டெண்டு கமிஷனர், மேல் முறையீட்டு அதிகாரிகள், சட்டப் படிப்பு பெற்றவர்களாக இருக்கவேண்டும். ஏனென்றால், வியாபாரிகள் இந்தப் பிரிவு நீதி இலாகாவுக்குச் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்கள். இன்கம் டாக்ஸ் துறையில் கூட, அந்தத் துறையிலே உள்ளவர்கள் தான் அந்த வேலையைச் செய்கிறார்களே தவிர, அந்த வரிவிதிப்பை கவனிக்கிறார்களே தவிர நீதித்துறையிலிருப்பவர்கள் அதைச் செய்வதில்லை. அதேபோல் இங்கேயும் சட்டப் படிப்பு உள்ளவர்களை, சட்டம் படித்த பட்டம் பெற்றவர்களை அப்பெலட் அஸிஸ்டெண்டு கமிஷனர்களாக நியமித்துவிட்டால், மிகச் சுலபமாக இருக்கும். அதே சமயத்தில் நீண்ட நாட்களாக வியாபாரிகளுக்கு இருக்கும் குறையும் தீரும். ஆகவே, சர்வீஸ் கமிஷன்

அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும்பொழுது இத்தகைய தகுதிபெற்ற அதிகாரிகளை தேர்ந்தெடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உத்தியோக உயர்வு கொடுக்கப்படும்பொழுதும், இப்படிப்பட்ட சட்டப் படிப்பு உள்ளவர்களை தேர்ந்தெடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறைக் கழகம் (போர்டு ஆஃப் ரெவின்யூ) வரி ஏய்ப்புகளை ஆராய்ந்து கண்டுபிடிக்கும் வேலையைச் செய்து வருகிறது. அதற்காக ஒரு துணை ஆணையாளரைக் கொண்ட ஒரு பகுதியே இயங்குகிறது. இந்த வேலையை போர்டு ஆஃப் ரெவின்யூதான் செய்கிறது என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் மக்களிடையே இருக்கிறது.

Deputy Commissioner of Intelligence to be separated from Board of Revenue.

அதாவது அந்தத் துறையை தனித்து இயங்கக்கூடிய ஒரு நிலைமையில் மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வரி ஏய்ப்புகளைத் தடுக்க, அந்தந்த மாவட்ட துணை ஆணையாளரை நியமித்துவிட்டால் மிகவும் சுலபமாக இருக்கும். பல பிரச்னைகள் இதனால் தீர்ந்துவிடும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்றாவதாக. நிர்வாக முறை சீரமைப்பு (அட்மினிஸ்டிரேடிவ் ப்ரொவிஜர்) வருமான வரியைப் பொறுத்தவரையில் பலவிதமான ஆண்டு கோர்ப்புகளை பலர் வெளியிட்டு வருகிறார்கள் அதைப்போல விற்பனை வரிக்கு ஒன்றும் கிடையாது. ஆகவே, விற்பனை வரியைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டும் ஏற்படக்கூடிய சட்ட மாறுதல்கள், அவைகளுடைய விளைவுகள், அரசாங்க உத்தரவுகள், முக்கியமான வருவாய்த்துறை கழக உத்தரவுகள், உயர்நீதி மன்ற தீர்ப்புகளின் சுருக்கங்கள், டிரிப்யூனலின் தீர்ப்புச் சுருக்கங்கள், ஏனைய முக்கிய அம்சங்கள் இவைகளை ஆன்யுவல் மானயுவலாகத் தயாரித்து ஒவ்வொரு ஆண்டும் கொடுத்தால், மிகச் சுலபமாக நிர்வாகத்தை நடத்துவதற்கு அதிகாரிகளுக்கு வாய்ப்பாக இருக்கும், இதற்காக ஒரு தகுதிமிக்க அதிகாரியைத் தேர்ந்தெடுத்து உடனே செயலாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் நம்முடைய அரசு சினிமாத் துறைக்கு மிகுந்த ஊக்கம் கொடுத்து வருகிறது. நல்ல படங்களுக்கு பரிசுகளும், உற்பத்தியாளர்களுக்கும், டைரக்டர்களுக்கும் பரிசுகளும் தரப்படும் என்று அறிவித்து, இந்த சினிமாத்தொழிலை நல்ல முறையில் ஊக்குவித்து வருகிறது. ஆனால் இதற்கு முன்னாலிருந்த அரசு இந்த சினிமாத் துறையினால் தான் திராவிட முன்னேற்றக் கழகம் வளர்கிறது என்ற தவறான கண்ணோட்டத்தோடு சினிமாத் துறையை அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்று பல சட்டங்கள் போட்டு, நூற்றுக்கணக்கான சினிமாக் கொட்டகைகளை ஒழித்து, தானும் ஒழிந்துவிட்டது. ஆனால், இந்த அரசு அதற்கு நேர் மாறாக, இப்பொழுது சினிமாத் துறையை ஊக்குவிக்கிறது. அதிலே உள்ள ஒரு பிரச்சினை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பல இடங்களில் பர்மனெண்ட் தியேட்டருக்கும், டூரிங் டாக்கீஸ் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றால், இரண்டு கொட்டகைகளுக்கு நடுவில் ஒரு மைல் தூரம் இருக்கவேண்டும் என்ற ஒரு விதி இருக்கிறது. அந்த விதியின் காரணமாக எகப்பட்ட டாக்கீசுகள் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. சாதாரணமாக பர்மெனண்ட் தியேட்டர்களின் எண்ணிக்கை குறைவு. அதே சமயம், டூரிங் டாக்கீசுகளின் எண்ணிக்கை அதிகம். ஏனென்றால், குறைந்த செலவில் கிராம மக்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு அவர்களிருக்கும் இடத்தில் அங்கேயே கொண்டு போய் படங்களை வினியோகம் செய்யும் அளவில் இருக்கின்றன. ஆனால், இந்த ஒருமைல் தூரம் என்கிற விதி இருப்பதால் அவைகளுக்கு மிகுந்த கஷ்டம். ஏற்படுகிறது ஜவுளிக் கடைகள், ஹோட்டல்கள், மளிகைக் கடைகள்,



இவற்றிற்கு இடையே இப்படியெல்லாம் கட்டுப்பாடுகள் இருக்கவில்லை பர்மனெண்ட் கொட்டகைகளுக்கு பாதுகாப்பு தர வேண்டும் என்று பழைய ஆட்சியாளர் இந்த ஒரு மைல் தூரம் என்கிற விதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த விதியை இப்பொழுது நம்முடைய சர்க்கார் எடுத்துவிட்டால், நூற்றுக்கணக்கான கொட்டகைகள் வரும், பல குடும்பங்களும் பிழைக்கும், நமக்கும் ஆதாயம் வரும். ஆகவே அன்புகூர்ந்து, இந்த ஒரு மைல் தூரம் என்கிற விதியை எடுத்துவிட்டு, சாதாரணமாக எந்த இடத்தில் வேண்டுமானாலும் படங்களைக் காட்ட வசதி இருக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு ஆண்டு முழுதும் வெளியிடும் அத்தனை படங்களும் இப்போது இருக்கும் கொட்டகைகளில் காண்பிக்க முடியவில்லை. அதே நேரத்திலே, சென்னையிலே பார்க்கிறோம், நாலைந்து தியேட்டர்கள் ஒரே இடத்தில் இருக்கின்றன. சாந்தோம், கெயிட்டி, சித்திரா, நியூஎல்ஃபின்ஸ்டன், வெலிங்டன், சாந்தி இவைகள் மவுண்ட் ரோடில் ஒருமைலுக்குள் இருக்கின்றன. இன்னும், ஸஃபயர், ப்ளூடையமண்ட் எமரால்ட இந்த மூன்று தியேட்டர்களும் ஒரே கட்டடத்தில் இருக்கின்றன. டூரிங் டாக்கீசுகள் மட்டும் ஏன் அருகருகே இருக்கக் கூடாது என்று தெரியவில்லை. முன்னால் இருந்த அரசு, ஒரு மைல் தூரம் என்று வைத்து, ஒருசில பணக்காரர்களுக்கு சலுகை காட்டவேண்டும் என்று இப்படிச் செய்து, பல டூரிங் சினிமாக் கொட்டகைகளைத் தீர்த்துக் கட்டி விட்டார்கள். அதனால் பல ஊர்களில் ஏழை மக்கள் வாழ்விழந்து, அவர்களுடைய குடும்பங்களும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த விதியை ரத்து செய்துவிட வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அந்த ஒரு மைல் தூரம் என்கிற விதியை அன்புகூர்ந்து கைவிட்டு விடவேண்டும் என்றும், அந்த முறையில் நசித்து வரும் சினிமாத் தொழிலை ஊக்குவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. கோ. பாரமோகன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசும்போது, பலமுனை விற்பனை வரியை ரத்து செய்து, ஒருமுனை வரியாக வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சிறப்பாக கடலைப் பிண்ணாக்குக்கு இருக்கக்கூடிய வரியை ரத்து செய்துவிட்டு, விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப்படுகிற உரம் என்ற காரணத்தால், அதையும் உரத்தோடு சேர்த்து, ஒரு முனை வரியை விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, திரு கெய்வார் அவர்களுடைய அறிக்கைப்படி பார்க்கும்போது, தண்ணீர் தீர்வைப் பிரச்சினைகளை அணுகும்போது. பெரிய பெரிய நிலச் சொந்தக்காரர்களை விட சிறு நிலக்காரர்களுக்கு சாதகம் அளிக்கும் முறையில் நில வரியை அணுக வேண்டும் என்று கருதுகிறேன். அதை சகட்டுமேனிக்கு ஒரே விதத்தில் அணுகக் கூடாது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த முறையில் கெய்வார் அறிக்கையையும் பரிசிலிக்கலாம் என்று விரும்புகிறேன்.

விற்பனை வரியானது சிறு சிறு வியாபாரிகளையும் பாதிக்கிறது. அதற்கு மாறாக, மொத்த வியாபாரிகளிடத்தில், அதிகமான வரிகள் வசூலிக்கப்படலாம் என்று கருதுகிறேன். அப்படி பெரிய, மொத்த வியாபாரிகளிடத்தில் வசூலித்து விட்டால் சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படாமல், அதிகாரிகள் தொந்தரவும் இல்லாமல், வரிவசூல் செய்ய முடியும். அந்த முறையில் விற்பனை வரியை அணுகவேண்டும் என்று கருதுகிறேன். ரூ. 10,000-லிருந்து ரூ. 15,000 வரையில் என்று வருமானம் வரக்கூடிய சிறு வியாபாரிகளுக்குக் கொடுக்கும் சலுகை போதியதாக இல்லை. அதைப் பரிசிலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலவெளியேற்றத் தடுப்புச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் 1968-ம் ஆண்டு எப்ரல் மாதம் 19-ந் தேதி அன்று முடிவடைகிறது. அந்த சட்டத்தை நீடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கூட, விவசாயிகளும், சாகுபடிதாரர்களும், தஞ்சை மாவட்டத்தில்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு குத்தகை, வாரத்தில் தள்ளுபடி செய்துகொடுக்க வேண்டும். இல்லையென்றால், தவணை தவணையாக கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

தஞ்சை மாவட்ட முன்சீப் கோர்ட்டுக்களில் ஏராளமான வழக்குகள் போட்டு, உழவு மாடுகள் ஜப்தி ஆகும் நிலைமைகளும் இருக்கின்றன. வரக்கூடிய பசலியில் விவசாயம் செய்ய முடியாது, கடன்காரனாகி நிர்க்கதியாகிய நிலையில் இருக்கிறான் விவசாயி. இந்தப் பிரச்னையை நம்முடைய அரசு உடனடியாகக் கவனிக்கவேண்டும் என்று விரும்புகிறேன். இந்த அரசாங்கத்திற்கு வருமானம் வேண்டும், பணம் தேவைதான். நம்முடைய திட்டங்களை அமுல்படுத்த, நம்முடைய நோக்கங்களை நிறைவேற்ற பணம் தேவைப்படுகிறது. அதே நேரத்தில் நம்முடைய செல்வங்கள் பறி போகாமல் இருக்கவேண்டும் என்பதையும் கவனிக்கவேண்டும். ஜனங்களிடமிருந்து வரிகள் நமக்கு வருகின்றன. அதே நேரத்தில் நம்முடைய சொத்துக்களும் சரியாக இருக்கின்றனவா என்பதையும் கண்காணிக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்லப்போனால், கொடைக்கானலில் இருக்கக்கூடிய சர்க்கார் நிலங்கள் பிறர் கையில் இருக்கின்றன. சர்வே நம்பர்களோடு என்னால் சொல்ல முடியும். பி. டி. ராஜன் அவர்களிடம் சர்வே நம்பர் 818-ல் 401 ஏக்கரா நிலம், சர்க்கார் நிலம் இருக்கிறது. பட்டா வாங்க முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அதே போல. ராஜா சிதம்பரம் செட்டியாருக்கு 116 ஏக்கரா அவர்கள் கையில் இருக்கிறது. சாதாரணமாக, சின்னஞ்சிறு நில சொந்தக்காரர்கள் 50 செண்ட், 35 செண்ட் வைத்திருக்கும் ஜமால் ராவுத்தர், முத்துசாமி போன்றவர்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை. ஆனால் பெரியவர்களுக்கு பட்டா வழங்க முயற்சிகள் செய்யப்படுகின்றன. வழங்கியும் இருக்கிறார்கள். இன்னும் கடமலைக் குண்டு, கண்டமனூர் ஜமீன் பகுதிகளிலும் இப்படிப்பட்ட நிலைகள் இருக்கின்றன. மேல் அவை உறுப்பினர் திரு. தியாகராஜன் டி. என். அவர்கள் 200 ஏக்கரா நிலத்தை சுவீகரித்துக் கொண்டிருக்கிறார்கள். பி. எஸ். கங்கா நாயுடு 1,000 ஏக்கரா நிலங்களை சுவீகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல, ரா. கி. நாயுடு 200 ஏக்கராக்களை சுவீகரித்துக் கொண்டிருக்கிறார்கள். போடிநாயகனூர் ராணி வீரலக்ஷ்மி அம்மாள் 1,000 ஏக்கரா நிலத்தை வைத்திருக்கிறார்கள். புதுக்கோட்டை மகாராஜா ராஜகோபாலத் தொண்டைமான் சர்வே 1135-ல் 98 ஏக்கர் நிலத்தைச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அது போன்ற நிலைமைகள் நம்முடைய தமிழகத்தில் இருக்கின்றன. சாதாரணமாக கொஞ்ச நிலம் வைத்திருப்பவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கப்படுவதில்லை. ஆனால், பெரும் பெரும் நிலங்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு கொடைக்கானல் போன்ற வளம் மிகுந்த இடங்களில் ஏன் பட்டாக்கள் கொடுக்கிறார்கள் என்பதைக் கேட்க விரும்புகிறேன். இதையெல்லாம் ஏன் கூறுகிறேன் என்றால், இந்த நிலங்களையெல்லாம் ரீ-சர்வே செய்து..............

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் கொடைக்கானல் பகுதியிலே சில சர்க்கார் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்த நிலங்கள் எந்த எந்த வருஷத்தில் ஆக்கிரமிக்கப்பட்டன என்பது பற்றியும், அப்படி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு, இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு யார் யாருக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியும் விளக்கம் அளிப்பது நல்லது என்று கருதுகிறேன்.

**திரு. கோ. பாரதிமோகன் :** இப்படி வழங்கப்பட்டதெல்லாம் காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோது. இன்றைய தினம் பட்டா வாங்க முயற்சி எடுக்கிறார்கள். எந்த எந்த ஆண்டுகளில் என்று மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் கேட்கிற படியால், விவரம் எழுதிக் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறேன். எழுதியும் கொடுக்கிறேன் என்பதைத் தெரிவிக்கிறேன்.



அடுத்து, ஜமீன் இனாம் பிரச்சினைகள். சட்ட அமைச்சருக்குத் தெரியும். புதுக்கோட்டையில் இந்த இனாம் பிரச்சினைகள் தீவிரமாக இருக்கின்றன. அங்கே விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளுக்குக் கோர்ட் மூலமாக உரிமை வழங்கப்படிருக்கிறது. ஆனால், மேல் கோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போகிறார்கள் என்ற காரணத்தால், அவர்கள் அளக்க வேண்டிய குத்தகை நெல்லை நேரடியாக அளக்கவேண்டும் என்று இன்றையதினம் கூறப்படுகிறது. அவைகளையெல்லாம் பார்த்து, முன்னாலே அளிக்கப்பட்டிருக்கக் கூடிய கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில் இருக்கவேண்டும். அப்பீலுக்குப் போனாலும், இப்பொழுது அமுலில் இருக்கும் முறை இருக்கவேண்டும் என்று கருதுகிறேன். அவசரமாக மிகத் தீவிர உணர்வோடு உடனடியாக புதுக்கோட்டையில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குச் சலுகை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையைப் பார்க்கும்போது, 1960-61-ம் ஆண்டில் ஆரம்பித்து 1966-67-ம் ஆண்டு முடிய வரி வாங்கட்டவேண்டிய இனங்களைப் பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வரவர நிலுவை அதிகமாகிக்கொண்டே வருகிறது. நிலுவை வசூலைச் சரியாகச் செய்யவில்லை. அப்படிப் பல வீனம் இருப்பதாகப் பார்க்கிறேன். நிலுவையாக உள்ளதைச் சரியாக வசூல் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், உடனடியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறவர்களுக்கு அதிகமான கடன் வசதிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குத்தகை பாக்கி என்ற பெயரால், விவசாயிகள் பூராவும் தங்களுடைய மாட்டை இழந்துவிட்டார்கள். விவசாயிகள் பூராவும் மகசூலை இழந்துவிட்டார்கள். நிலச்சுவான்தார்களுக்குச் சேரவேண்டிய பகுதியை மட்டும் அவர்கள் ஜப்தி செய்யவில்லை. விவசாயிகளுக்குச் சேரவேண்டிய பகுதியையும் சேர்த்து ஜப்தி செய்கிறார்கள். இரண்டையும் ஜப்தி செய்து விட்டு அதுவும் போதாது என்று பழைய பாக்கிக்கு சின்ன வீடு இருந்தால் அதையும் ஜப்தி செய்கிறார்கள். இப்பொழுது நான் தொகுதிக்குப் போன போது ஏராளமான நிலைமை ஏற்பட்டிருப்பதைப் பார்த்தேன். ஆகவே, அவசர உணர்வோடு அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய அளவுக்கு, குத்தகை பாக்கி விஷயத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் தஞ்சை மாவட்டத்தில் உணவு உற்பத்தி நிச்சயமாக பாதிக்கும். தஞ்சை மாவட்ட உழவர்கள், சாதாரண விவசாயிகள் உழவு வேலை செய்யவில்லை யென்றால், அங்கே நிலைமை சிக்கலாகிவிடும், வாழ்க்கை நாசமாய்விடும். ஆகவே, குத்தகை வாரசாகுபடி செய்யும் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். மூன்று ஆண்டு நான்கு ஆண்டு குத்தகை பாக்கி இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் குத்தகை பாக்கியையெல்லாம் ரத்து செய்ய வேண்டும். இல்லாவிட்டால், அதை ஒத்திவைக்கவேண்டும். தவணை அடிப் படையில் அதைக் கட்டலாம் என்ற ஏற்பாட்டையாவது செய்யவேண்டு மென்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கம் அறிய விரும்புகிறேன். மதுரை வர்ஷநாடு பகுதியில் குறிப்பிட்ட பலருடைய பெயர்கள் அவர்களால் குறிப்பிடப்பட்டு, அவர்களெல்லாம் நிலத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. உறுப்பினர் சார்ந்திருக்கிற கட்சியைச் சேர்ந்த ஒரு தலைவருக்கும் இந்த ஆக்கிரமிப்பு நிலம் இருப்பதாகப் பேசுகிறார்கள். அது உண்மையா, என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. கோ. பாரதிமோகன் :** அதுபற்றி எனக்குத் தகவல் இல்லை.

**திரு. ஏ. பாலசுப்பரமணியன்:** பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் சார். 'தலைவர்' என்று முதலமைச்சர் அவர்கள் யாரைக் குறிப்பிட்டார் என்று எனக்குத் தெரியாது. சட்டமன்றக் கட்சியைச் சார்ந்த தலைவர் என்றால், நான் தலைவன். எனக்கு எங்கும் அப்படி நிலம் இல்லை. வர்ஷநாட்டிலும் இல்லை. தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் தாலூக்காவில் அகரமாங்குடி கிராமத்திலும், புரசக்குடி கிராமத்திலும் எனக்கு ஆறு ஏக்கர் நிலம் இருப்பதாக என் தகப்பனார் சொல்லித் தெரியும்.

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1968 மார்ச் 18

இருப்பதால் யாருக்கும் ஒன்றும் புரிவதில்லை, கணக்குப்பிள்ளையிடம் சென்று இப்போது கேட்டால் ஒரு தொகை சொல்கிறார். சில நாட்கள் கழித்துக் கேட்டால் இன்னொரு தொகை சொல்கிறார். இவற்றை எல்லாம் ஒருமுகப்படுத்தி நிலத்தின் மீது இவ்வளவுதான் வரி என்று போட்டு விட்டால்தான் படித்தவர்கள், படிக்காதவர்கள்—ஆக எல்லா விவசாயிகளுக்கும் சுலபமாகப் புரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கும். இப்போதுள்ள வாசனை ஒருமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நில உச்சவரம்பு பற்றி நல்லமுறையில் பரிசீலனை செய்து சட்டம் கொண்டுவர வேண்டும். ஏற்கெனவே கொண்டு வரப்பட்ட சட்டம் நம்முடைய எண்ணத்தை ஈடேற்றுவதாக இல்லை. ஆகவே நல்ல முறையில் அதற்குச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. வி. டி. அண்ணாமலை: வணக்கத்திற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, நமது தமிழக அரசின் 1968–69-வது ஆண்டின் மானியக் கோரிக்கைகளை ஆதரித்துச் சில வார்த்தைகளைக் கூற ஆசைப்படுகிறேன்.

விற்பனை வரி மானியத்தை எடுத்துக்கொண்டால் வெல்லத்தின் பேரில் தற்சமயம் நம்முடைய அரசு வரி விதித்திருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தில் உற்பத்தியாகக் கூடிய வெல்லத்தில் 20 சதவீதம்தான் நம்முடைய மாநிலத்திலேயே உபயோகப்படுத்திக் கொள்ளப்படுகிறது. பாக்கி 80 சதவீதம் வெல்லம் அந்நிய மாநிலத்தில் தான் விற்கப்படுகின்றன. ஆகவேதான் இன்றைக்கு நாம் விதிக்கக்கூடிய விற்பனை வரி நம்மை வருமானமில்லாமல் ஆக்கிவிடுகிறது. ஆகவே வெல்லத்திற்கு பர்ச்சேசர் டாக்ஸ் வாங்குகிறவர்கள் வரி என்ற முறையில் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி வாங்குகிறவர்கள் வரி என்று ஏற்படுத்த முடியாவிட்டாலும் புகையிலைக்கு விதிப்பதுபோல கரும்புத் தோட்டங்களுக்கே வரி போட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவைப்படுகிற கால் நடைத் தீவனங்கள், அவர்களுக்குத் தேவையான உரவகைகள், மற்ற விவசாய உபகரணங்களுக்கு விற்பனை வரியில் இருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல ரெவின்யூ வருவாய்த் துறையை எடுத்துக்கொண்டால் அது தமிழகத்தில் இருக்கிற அத்தனை விவசாயப் பெருங்குடி மக்களையும் ஒருங்கிணைத்துச் செயல்படுகின்ற ஒரு ஸ்தாபனமாகும். ஆகவே தான் முதல் அமைச்சர் அவர்கள் கூட வருவாய்த்துறையின் தலைவர்கள் என்ற முறையில் கலெக்டர்களை எல்லாம் இரண்டுமுறை அழைத்துக் கூட்டி கலந்து பேசுகின்ற இருக்கக்கூடிய சங்கடங்களை எல்லாம் தெரிந்து கொள்ள உறவாடுகின்ற நிலைமையை ஏற்படுத்தினார்கள். காரணம் இந்தத் துறை மிகவும் முக்கியமான துறையாகும். ரெவின்யூ இலாகாவில் இருப்பவர்கள் இன்னமும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குள்ள கஷ்டங்களை நன்கு தெரிந்து செயல்படுவதாக இல்லை. நிலத்தில் நெல் விளைகிறதென்றால் சாதாரணமாக விளைவதில்லை. பெரியவர்கள் எப்படியோ நிலத்தைச் சம்பாதித்து வைத்துவிட்டார்கள். ஆனால் இன்றைக்கு நிலத்தில் பயிர் வைக்கிறவர்களுக்குத்தான் அதில் உள்ள சங்கடங்கள் தெரியும். இன்றைக்கு நிலத்தோடு சம்பந்தப்பட்டவர்களை ஐந்துவிதமாகப் பிரிக்கலாம். 1. பெருநிலக்கிழார்கள்—அதாவது அதிகமான நிலத்தைச் சொந்தமாக உடையவர்கள். 2 நிலக்கிழார்கள்—அதாவது கொஞ்ச நிலம் சொந்தமாக வைத்திருப்பவர்கள். 3. உழவர்கள், குத்தகைக்காரர்கள், வாரசாகுபடிக்காரர்கள். 4. விவசாயக் கூலிகள், 5. விவசாயப் பண்ணை சம்பளக்காரர்கள். இவர்கள் அனைவரும்தான் நாட்டு மக்களைக் காப்பாற்றுகிறவர்கள். ஆகவே இந்த ஐந்து பேர்களையும் திருப்திப்படுத்துகின்ற அளவுக்கு நிலச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். அவர்கள் நிலைமையை யோசிக்கின்ற வகையில் காரியங்களைச் செய்யவேண்டும். அதற்குமாறாக இன்றைக்கு அந்த விவசாயப் பெருங்குடி மக்களிடத்தில் வரி வசூல் செய்கின்ற ரெவின்யூ



1968 மார்ச் 18] [திரு. வி. டி. அண்ணாமலை]

அதிகாரிகள் நடந்துகொள்ளுகின்ற முறை மிகவும் பயங்கரமானதாக இருக்கிறது. எந்த ஆட்சியாக இருந்தாலும்—தலைமை ஆட்சியாளர்கள் மாறுகிறார்களே தவிர அதிகார இனம் மாறவில்லை. ரெட்டேபிசம் போகவில்லை. இன்றைக்கு பட்டா மாறுதல் செய்ய வேண்டுமானால் ஒருவருக்கு நிலத்தை அடைமானம் செய்வதாக இருந்தால் கிராமக் கர்ணம் பார்க்கிறார். தாசில்தார் பார்க்கிறார். ஆர். டி. ஓ. பார்க்கிறார். கலெக்டர் பார்க்கிறார். இவ்வளவு பேர்களும் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. இதனால் வீணாக் காலதாமதமும், அலைச்சலும்தான் ஏற்படுகிறது. தாசில்தார், ஆர். டி. ஓ. வுக்கே அந்த அதிகாரம் நில அடைமானம் செய்கின்ற வேலையை ஒப்படைத்துவிட்டால் சீக்கிரமாகக் காரியம் நடப்பதற்கு வழியேற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல் உற்பத்தி செய்கின்ற விவசாய மக்களுக்கும், நமக்குத் தேவையான உணவுப் பொருளை உற்பத்தி செய்கின்ற விவசாய மக்களுக்கும் ஊக்கத்தை ஏற்படுத்துவதற்கு, அவர்களுடைய உள்ளத்தைத் தொடுகின்ற முறையில் அன்புசெய்கின்ற முறையில் நஞ்சைக்கும் நிலவரியை ரத்து செய்துவிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். திரு. கெய்வார் திட்டத்தையோ வேறு எந்த முறையையோ ஏற்படுத்தி விவசாய மக்களுடைய உள்ளத்தில் புது ஊக்கத்தை ஏற்படுத்த சமுதாயத்தின் ஆணிவேரைப் போல இருக்கின்ற அவர்கள் நல்லமுறையில் வாழுவதற்கு அடிகோல வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் அவ்வளவு பேர்களும் ஆர். டி. ஓ. கண்காணிப்பிலும், கலெக்டர் கண்காணிப்பிலும் நியமிக்கப்படுகிறார்கள், ரெவின்யூத் துறையில் இன்றைக்கு இருக்கிற வேலைகள் அதிகம். பஞ்சாயத்து அதிகாரிகள் இருக்கிறார்கள், டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்து அதிகாரிகள் இருக்கிறார்கள், இவர்களை எல்லாம் ஒருங்கிணைத்து தனியாகவே ஒரு அமைப்பை ஏற்படுத்தி விடவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் இன்றைக்கு ஒரு பஞ்சாயத்து யூனியன் அதிகாரி சரியாக நடந்து கொள்ளவில்லை என்று பெரும்பாலானோர் பஞ்சாயத்து யூனியனில் இருப்பவர்கள் ஒரு தீர்மானத்தைநிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். மாதம் நான்காகியும் நடவடிக்கை எடுக்கவில்லை. கலெக்டர் ஆர். டி. ஓ.-வை விசாரிக்கச் சொல்ல, அவர் பஞ்சாயத்து ஆபீசரை விசாரிக்கச் சொல்ல, அவர் ரெவின்யூ அதிகாரியை விசாரிக்கச் சொல்ல—இப்படி அவர்பேரில் யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அடுத்தாற்போல தமிழகத்தில் உள்ள நிலங்களைப் பொறுத்தவரையில் சர்வே நடந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. 30 ஆண்டுகளுக்கு ஒரு முறை சர்வே நடத்த வேண்டுமென்று இருக்கிறது. 1920-ஆம் ஆண்டுக்குப் பிறகு சர்வே நடக்கவில்லை, ஆகவே தமிழகத்தில் உள்ள விளை நிலங்கள் அனைத்தையும் சர்வே செய்ய நம் ஆட்சியினர் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்கள் வடஆற்காடு மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். கிழக்கு மேற்காக 120 மைல். வடக்குத் தெற்காக அரக்கோணத்தில் இருந்து செங்கம் வரை 150 மைல். இவ்வளவு பெரிய மாவட்டத்தைக் கலெக்டர் பரிபாலனம் செய்ய வேண்டியிருப்பதாலேயே அது மிகவும் பின் தங்கிய மாவட்டமாக ஆகிவிட்டது. இதன் காரணமாகவே அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும். கூட்டுறவுத்துறையை எடுத்துக்கொண்டால் நிர்வாக வசதியை ஒட்டி திருவண்ணாமலை வட்டம். ராணிப்பேட்டை வட்டம், வேலூர் வட்டம் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால் 4 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வடஆற்காடு மாவட்டத்தை திருவண்ணாமலை மாவட்டம். வேலூர் மாவட்டம் என்று இரண்டாகப் பிரிக்க வேண்டும். அல்லது வந்தவாசி, செய்யார் இவற்றை எடுத்து செங்கல்பட்டில் இருந்து பிரிகிற காஞ்சீபுரம் மாவட்டத்தோடு இணைத்து இதைச் சிறியதாக்குவதன் மூலம் ரொம்ப நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்

கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் நிலங்கள் சீர் செய்யப்பட ஒரு கமிஷன் அமைக்கப்பட வேண்டும். வட ஆற்காடு மாவட்டம் தமிழகத்திலேயே இரண்டாவது மாவட்டமாக நெல்லை அதிகமாகத் தருகின்ற மாவட்டமாக இருக்கிறது. அங்கேயிருக்கின்ற உழவர்கள் எல்லாம் பாட்டாளிகள், அவர்களுடைய உழைப்பின் பயனாக அதிகமாக உற்பத்தியாகிறது.

நீர்ப்பாசனம் என்பதன்கீழ் சுமார் 10 கோடி ரூபாய்த் தேவைப்படுகிறது என்று உணவு இலாக்கா எஞ்சினியர் என்னிடம் புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். அதை அந்த மானியத்தின்மீது பேசும்பொழுது தெரிவிக்க இருக்கிறேன். ஜவ்வாது மலை, ஏலகிரி மலை தாகாணப் பிரதேசத்தின் தொடர்ச்சியாக இருக்கிறது. அங்கே கனி வளங்கள் இருக்கின்றன. அவற்றை ஆராய்ச்சி செய்யவேண்டும். பாலாறு இருக்கிறது, அங்கே பாலும் இல்லை, தண்ணீரும் இல்லை. மைசூர் மாநிலத்திலே தடங்கல் செய்ததால்தான் அங்கே தண்ணீர் வரவில்லை. பழைய என்ஜினியர்கள் பம்பிங் ஸ்டேஷன் வைத்து ஏற்பாடு செய்வதன்மூலம் பாலாற்றில் சதா தண்ணீர் வர ஏற்பாடு செய்யலாம் என்று ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். நிதி வசதியில்லாததால் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை இப்பொழுது செய்யவேண்டும். லெவின்யூ இலாகாவின் வருவாய் நல்ல முறையில் வரக்கூடிய வகையில் பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடைசியாக ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களிலே பணியாற்றுகின்ற உத்தியோகஸ்தர்கள் மணியக்காரர், கிராமக் கர்ணங்கள் இவர்களுடைய சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது, அவர்களுக்கு ஏதாவது சலுகைகள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே. இந்த விவாதத்தில் உள்ள மானியக்கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன். பஞ்சத் துயர் தணிப்பு என்ற மானியத்தின்கீழ் கடந்த வருஷம் பெருமழை பெய்ததன் காரணமாக ராமநாதபுரம் தஞ்சை ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய பிரதேசத்தில் நெல் வயல்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன, விவசாயிகளுடைய குடிசைகளும் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குடிசையிழந்தவர்களுக்குப் போதுமான நிவாரணம் கொடுக்கப்படவில்லையென்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும். குடிசையிழந்தவர்களுக்கு 30 ரூபாயும் 10 ரூபாயும் நிவாரணம் கொடுக்கப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். அவ்வாறு கொடுக்கிற காலத்திலே அதிகாரிகள் விருப்பு வெறுப்பு ஆக யாரோ சிலருக்குக் கொடுத்துக் கணக்கைச் சரிக்கட்டக் கூடிய நிலையைக் கையாண்டார்களே தவிர உண்மையிலேயே குடிசை இழந்தவர்களுக்குப் பரிகாரம் காணக்கூடிய வகையில் கொடுக்கப்படவில்லை. இதையும் அரசினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நெல் வயல்களும் பெருமளவுக்குச் சேதமடைந்திருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் 50 ஆயிரம் ஏக்கர்கள் நீரிலே மூழ்கி 15 தினங்கள் கடல்போல் காட்சியளித்தது. மதிப்பிற்குரிய கூட்டுறவு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் வந்துகூடப் பார்வையிட்டார்கள். தாளடிப் பயிர்கள் நாசமடைந்துவிட்டன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அம்மாதிரி பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலங்களுக்கு நில வரியிலிருந்து வஜா கொடுப்பது மட்டுமல்ல, நிலங்களைக் குத்தகை விவசாயம் செய்து கொண்டிருக்கிற குத்தகைக்காரர்களுக்கு குத்தகை தள்ளுபடி செய்து கொடுக்கவேண்டும். கடன் தொகைகளையும் தள்ளிவைக்க வேண்டும். பெருமழை ஏற்படுகின்ற காலத்தில் பெருமளவுக்கு ஏரிகள், குளங்கள், ஆற்றின் கரைகள் இவை வருஷா வருஷம் தொடர்ந்து உடைந்து கொண்டே இருக்கின்றன. இது பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்ற சம்பவமாக இருக்கின்றது. இதிலே



அரசினர் அக்கறை எடுத்துக் கொண்டு அம்மாதிரி உடைவதற்குக் காரணம் ஏரிகளின் கரைகள், ஆற்றின் கரைகள் இவை போதுமான பலமில்லாமல் பலவீனமாக இருப்பதால்தான் ஒரு மழை பெய்தவுடனே உடைந்து விடுகின்றன என்பதை உணர்ந்து கரைகளை உயர்த்திக் கட்டுவதற்கும் அகலப்படுத்துவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் பொதுப்பணித் துறையின் ஆய்விலே இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பொதுப்பணித் துறை இவ்வேலைகளையெல்லாம் செய்து உடனடியாக அரசாங்கத்திற்கு ரெவின்யூ இல்லையென்றால் உடனடியாக எவ்வளவு ரூபாய்கள் செலவில் முடிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட இலாகாக்களைக் கேட்டு துரிதமாக முடிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். என்னுடைய மாவட்டத்திலே உடைக்கப்பட்ட ஆற்றுக் கரைகள் இன்னும் சீர் செய்யப்படவில்லை. இரண்டாவதாக தாளடிப் பயிர்கள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது, தண்ணீர்ப் பற்றுக்குறையின் காரணமாக. இன்றைய தினம் அம்மாதிரி பாதிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சையில் மாத்திரம் என்று சொல்ல முடியாது, ராமநாதபுரம், திருச்சி, நெல்லை இந்த மாவட்டங்களில் சில பிரதேசங்களிலே பாதிக்கப்பட்டு இருக்கிறது. இவர்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இன்று குத்தகை பாக்கிகளை வசூல் செய்வதற்கு நடவடிக்கைகள் சிவில் கோர்ட் மூலம் எடுக்கப்பட்டிருக்கிறது. குத்தகை பாக்கிக்காக நில வெளியேற்றம் கூடாது என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சமீபத்திலே காலாவதியாகப் போகிறது அந்தச் சட்டம். அந்தச் சட்டத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்கிற நேரத்திலே, விவசாயிகள் குத்தகை பாக்கி அளந்தாக வேண்டும், காணாத பாக்கியை அளப்பது கஷ்டமான நிலை, ஆனால் குத்தகைதாரர்களுக்குக் குத்தகையும் விளையாத நிலத்திற்குத் தள்ளுபடியும் கொடுக்க வேண்டும், இந்த வகையில் என்னுடைய யோசனையைச் சொல்ல விரும்புகிறேன், விளையாமல் இருக்கக்கூடிய நிலங்களாக இருந்தால் அவற்றிற்கு வரி வஜா செய்ய வேண்டும், அந்த நிலங்களின் குத்தகையை ரத்து செய்ய வேண்டும்; அரைகுறையாக விளைந்திருந்தால் அந்த விவசாயிகளுக்கு 50 சதவீதம் தள்ளுபடிசெய்து, மிச்சம் கொடுக்கவேண்டியதைப் பல தடவைகளில் வசூலிக்கச் செய்வதற்கான முறையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும். அம்மாதிரி மழை காலங்களில் சாலைகள் உடைந்துவிடுகின்றன, அவற்றையும் உடனடியாகச் சீர்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்த வேளாண்மை வரியும், வருமானமும் என்ற தலைப்பின் கீழ் பல ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தே வெள்ளைக்காரன் காலத்திலிருந்தே நிலவரி போட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது. புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டு புஞ்சை நிலத்திற்கு மாத்திரம் வரியை ரத்து செய்துவிட்டு நஞ்சை நிலத்திற்குச் செய்யாமல் இருப்பது நஞ்சை நிலத்தை நம்பி விவசாயம் செய்யக்கூடியவர்களுடைய மனத்தைப் புண்படுத்துவதாக இருக்கிறது. அடிப்படை நிலவரியே இருக்கக் கூடாது. அதற்குப் பதில் அரசாங்கத்தினுடைய வருவாயைப் பெருக்கவேண்டுமென்றால் விவசாய வருமான வரியை வசூலிக்க வேண்டும். அவ்வாறு முன்னால் இருந்த சர்க்கார் ஒரு வருமான வரியை நிறைவேற்றிருந்தார்கள். கடந்த 8 ஆண்டுகளில் 33 லட்சத்திலிருந்து 66 லட்சம் வரை விவசாய வரி நிலுவை பாக்கியிருக்கிறது. என்ன காரணம் வசூல் செய்ய முடியவில்லை, வருமான வரியைத் தள்ளுபடி செய்துவிட்டார்களா, வசூல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1961-ஆம் ஆண்டு முதல் 1967 வரையில் கணக்குப் பார்க்கின்ற பொழுது $2\frac{1}{2}$ கோடி ரூபாய் வரை பாக்கியிருப்பதாகத் தெரிகிறது.

அடுத்து, சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட விவசாய வருமான வரித் திருத்தச் சட்டத்தின் காரணமாக நஞ்சை பயிரிடக்கூடியவர்களுக்குப் பெரிய அளவு பாதகம் ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. விவசாயத்தில் அதிக வருமானம் வரக்கூடியவர்களுக்கு வருமான வரி விதிக்க வேண்டுமென்று நான் கூறிய கருத்துக்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. நெல் விவசாயம் செய்வதைக் காட்டிலும் கரும்பு, நிலக்கடலை ஆகியவற்றிலிருந்து அதிக வருவாய் வருகின்ற காரணத்தால், நெல்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1968 மார்ச் 18

விவசாயம் செய்கிறவர்களும் பணப் பயிர்களை விவசாயம் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் அந்த நிலைமை வளர்ந்து கொண்டே வருகிறது. அங்கு 16,000 எக்கரில் கரும்பு விவசாயம் செய்கிறவர்கள் அனைவரும் பெரிய புள்ளிகள். அவர்களுக்கு ஒரு எக்கருக்கு ஐயாயிரம் ரூபாய் வருகிறது. அவர்களெல்லாம் தப்பித்துவிட்டார்கள். விவசாய வருமான வரி பயிர் அடிப்படையில் வரி விதிப்பதுதான் நியாயமாக இருக்கும். அந்த முறையைக் கையாள வேண்டும்.

பிற்பகல் 1-00

ஜமாபந்தி முறை என்று இருப்பது ரெவின்யூ அதிகாரிகளின் ஒரு பெரிய தர்பாராகத்தான் இருக்கிறது. மூன்று மாத காலத்திற்கு எந்தவித வேலையும் நடக்காமல் கணக்குப் பிள்ளைகளும் கிராமாதிகாரிகளும் மூட்டை கட்டிக்கொண்டு வந்து தாலூகா அலுவலகத்தில் உட்டுவதும் பேசுவதுமாக இருக்கிறதே தவிர ஜமாபந்தியில் விவசாயிகள் கூறுகின்ற குறைகள் தீர்த்து வைக்கப்படுகின்றன என்று சொல்வதெல்லாம் நடக்காத காரியங்களாக இருக்கின்றன. விவசாயிகள் மனு கொடுப்பார்கள், அதை வாங்கிக் கொண்டு கவனிக்கப்படும் என்று சொல்வார்கள். அதற்குப் பிறகு அதைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இந்த முறையில் 3 மாத காலத்திற்கு எந்தவித வேலையும் நடக்கவொட்டாமல் செய்து விவசாயிகளுடைய குறைகளும் தீர்க்கப்படாமல் இருக்கும் நிலையில் இந்த ஜமாபந்தி முறையே தேவையில்லையென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஜமீன் ஒழிப்புச் சட்டம் அமுலில் இருக்கும் பிரதேசங்களில், குறிப்பாக இராமநாதபுரம் போன்ற இடங்களில் ஜமீன் ஒழிந்து 20 ஆண்டுகள் ஆகியும், அப்போது விவசாயிகள் கொடுக்க வேண்டிய பாக்கிகளை எல்லாம் இப்போது கெடுபிடி செய்து வசூல் செய்வதாகத் தகவல் வந்திருக்கிறது. அந்தப் பாக்கியை ரத்து செய்ய வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இனாம் ஒழிப்பைப் பொருத்தவரை 1,316 எஸ்டேட்டுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 154 எஸ்டேட்டுகளைப் பொறுத்தவரை கோர்ட்டில் ஸ்டே வாங்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசாங்கம் அந்தக் காரியத்தைக் கொஞ்சம் துரிதப்படுத்தி விடுபட்ட அந்த நிலங்களையும் எஸ்டேட் ஒழிப்பில் கொண்டு வந்து ரயத்துவாரி நிலங்களாக மாற்றி விவசாயிகளுக்குச் சாதகமான நிலைமையை ஏற்படுத்த வேண்டும். ஐந்து எக்கர் வரையுள்ள இனாம் நிலங்களை எஸ்டேட் ஒழிப்பின் கீழ் கொண்டு வந்து விவசாயிகளுக்குச் சீக்கிரமாக நிலங்கள் கிடைக்கத் துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் இவை பற்றிய கொள்கை விளக்கத்தை அளிக்கும் வகையில் மானியத் தொகையை அளிக்க வேண்டுமென்பதன் அவசியத்தைக் குறித்துக் கருத்துரையாற்றினார்கள். முன்னாலே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நிலவரி விதிப்பதைப் பற்றிய கருத்தைச் சொன்னார்கள். நம்முடைய நாட்டைப் பொருத்தவரை உழவர் குடியினர் நிலத்திற்கு வரி தருவதை ஒரு நல்ல மரபாகவும், மிகச் சிறந்த தருமமாகவும் ஏற்றுக் கொண்டிருப்பதை நாம் நன்கு உணர முடியும். அதுவும் அண்மைக்காலமாக, நிலத்திற்குக் குறிப்பிட்ட அளவு வரி தருவது 'நிலத்திற்கும் தனக்குமுள்ள உரிமைக்குச் சாதகமாக அமையும் என்ற காரணத்தால் அவர்களும் அதைக் கொடுத்து வருகிறார்கள். அந்த வகையில் பார்க்கும்போது, நம்முடைய அரசு நிலங்களுக்குத் தீர்வை வரி என்ற பெயரால் விதிப்பதையெல்லாம் முழுவதும் ரத்து செய்ய வேண்டுமென்று பரவலாகக் கருதி வருவதை உழவர் பெருங்குடியினர் ஏற்கவில்லை என்பதை நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



1968 மார்ச் 18] [திரு. ந. தருமலிங்கம்]

வரி விதிப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வரி அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது—'வானம் பொழியுது, பூமி விளையுது, உனக்கேன் வரி' என்று வெள்ளைக்காரத் துரையைப் பார்த்துக் கட்டபொம்மன் கூறியதாகக் கூறுவார்கள். துரதிருஷ்டவசமாக இந்தக் காலத்தில் வானம் பொழிவதில்லை. மேட்டூரில் தண்ணீர் நிரம்பவில்லை. நம்முடைய அரசு இறைவைப் பாசனத் திட்டங்கள் மூலமும், கேணிகளை வெட்டிக் கொடுப்பதன் மூலமும், பம்ப் செட்களை வைத்துக் கொடுப்பதன் மூலமும் நீர் தர வேண்டிய நிர்பந்தமான சூழ்நிலையில் இருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது வரி விதிப்பு அதிகம் என்று சொல்லி அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்கத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது நல்ல மரபாகாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் தந்த விவசாய வருமானக் குறிப்பில், 'கேட்பு, வசூல், நிலுவை' என்று மூன்று வகையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1967-68-ல் ரூபாய் 62 லட்சத்திற்கு அதிகமான அளவுக்கு வர வேண்டி இருக்கிறது என்று காணப்படுகிறது. இன்றையதினம் இருக்கும் சங்கடமான சூழ்நிலையில் 62 லட்சத்திற்கும் அதிகமாக நிலவுடைமையாளர்கள் வரி பாக்கி வைத்துக் கொண்டிருப்பதை எந்த வகையிலாவது வசூல் செய்ய அரசு முயல வேண்டும்.

பஞ்சத் துயர் தணிப்புக் கொள்கை விளக்கக் குறிப்பை அமைச்சர் அவர்கள் தந்தார்கள். சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் வாரத்தில் கடுமையாகப் பெய்த பேய் மழையின் காரணமாக முகவை மாவட்டமும், தஞ்சை மாவட்டமுந்தான் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைக் குறிப்பாக பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி ஆகிய மூன்றும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று வட்டங்களிலும் குறிப்பாக கடற்கரையையொட்டியுள்ள திருத்துறைப்பூண்டி வட்டத்தில்தான் ஆண்டுதோறும் ஆறுகள் உடைபடுவதும் அதன் காரணமாகப் பயிர்கள் 20 நாட்களுக்கும் மேலாக தண்ணீரில் மூழ்கிக் கிடக்கும் நிலைமையும் ஏற்படுகிறது. கடந்த ஆண்டு தாளடிப் பயிர் 20 நாட்களுக்கும் மேலாக தண்ணீரில் மூழ்கிக் கிடந்தது. அந்த இடத்திற்குச் சுற்றுப் பயணம் வந்த சட்ட அமைச்சர் அவர்களுக்கும், ரெவின்யூ போர்டு செக்ரடரி அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இது போன்ற நிலைமைகள் ஏற்படும்போது நிவாரணம் அளிக்க வேண்டுமென்று அந்தந்தப் பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை முறைப்படி வழங்கப்பட்டது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் காலதாமதமாக வழங்கப்பட்டது. இனிமேல் இதுபோன்ற தொகைகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதைக் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். திருத்துறைப்பூண்டி தாலூகாவைப் பொருத்தவரை வந்த பணம் தீர்ந்து விட்டது என்று தாசில்தார் சொல்லி கோட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டபோது கலெக்டரைக் கேளுங்கள் என்று சொல்ல கலெக்டரைக் கேட்டபோது அரசாங்கத்திற்கு எழுதுங்கள் என்று சொன்னார்கள். நம்முடைய அரசாங்கம் மெத்த கருணை மனத்தோடு நிவாரணம் வழங்குவதற்காகத் தொகையை வழங்கியிருக்கிறது. தேவைப் பட்டவர்களுக்குத் தொகை வழங்கப்படாமல் போனதோடு மட்டுமல்லாமல் 50 கிராம மக்களுக்குத் தொகை கிடைக்கவே இல்லை.

இன்றொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொருத்தவரை அண்மைக் காலங்களில் வங்காள விரிகுடாவில் அடிக்கடி புயல் சின்னம் உருவாகிற காரணத்தால் ஒவ்வொரு ஆண்டும் பெய்கிற பெரு மழையும், ஏற்படுகின்ற வெள்ளமும் குறிப்பாக அந்த மாவட்டத்திலுள்ள கடற்கரைப் பகுதிகளைப் பெரிதும் பாதிக்கின்ற காரணத்தால், ஒவ்வொரு ஆண்டும் புயல் வருகிறது, வெள்ளம் வருகிறது என்பதை மனத்தில் கொண்டு அதிகமான தொகையை வழங்க நம்முடைய அரசு ஆவன செய்ய வேண்டும். அப்படிக் கொடுக்கப்படுகின்ற நிவாரணத் தொகை அந்தச் சந்தர்ப்பத்திலேயே தாமதம் இல்லாமல் வழங்குவதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறி மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. மார்டின்:** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, நில வரி மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையிலே வைக்க விரும்புகிறேன்.

ரெவின்யூ இலாக்கா என்று சொன்னவுடன் அந்த இலாக்காவில் மேல் மட்டத்திலிருந்து பணியாற்றக்கூடிய கலெக்டரை வைத்துத்தான் கருதப்படுகிறதே தவிர, அந்த இலாக்காவில் கீழ் மட்டத்தில், அடி மட்டத்தில், இருந்து வேலை செய்துகொண்டிருக்கிற கிராம அதிகாரிகளைப் பற்றி இந்த இலாக்கா கருதியதாகத் தெரியவில்லை. உழவர் பெருங்குடி மக்களை அதிகமாகக்கொண்ட தமிழகத்தின் முன்னேற்றம், கிராம மக்களின் நலனில்தான் இருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். ஆனால், அதே நேரத்தில், கிராமங்களில், கிராம மக்களோடு தங்கியிருந்து பணியாற்றும் கிராம அதிகாரிகளாகிய, வில்லேஜ் முனசிப், கர்ணங்கள், தலையாரி, வெட்டி, இவர்களெல்லாம் மிகவும் குறைந்த வருமானத்தோடு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசு எந்தவிதமான நல்ல ஒரு முடிவையும் இந்த மானியக் கோரிக்கையில் சொல்லாமலிருப்பதைப்பற்றி வருத்தப்படுகிறேன். மேலும், இந்த அதிகாரிகளுக்குச் சில சமயங்களில் அச்சிட்ட பாரங்களும், நமூனாக்களும் காகிதங்களும் கிடைக்காத நிலையில், தங்களுடைய சொந்த பணத்திலிருந்து காகிதம் வாங்கிக்கொள்ளுகிறார்கள். எனவே அந்தக் குறையும் அவர்களுக்கு நீக்கிக் கொடுக்கவேண்டும். ஓரிடத்தில் கொலை நடந்தால், முதலில் ரிப்போர்ட் எழுதுவது அந்தக் கிராம முன்சிப். கொலை நடந்த இடத்திற்கு அவர் வருவதற்கு நேரம் அதிகமானால் நீதி மன்றத்தில், அந்தத் தாமதத்தைக் காரணமாக வைத்து, கொலை வழக்கு சம்பந்தப்பட்டவர்களை விடுதலை செய்து விடுகிறார்கள். கொலை நடந்த இடத்திற்குக் கிராம முன்சிப் வருவதற்காக ஒரு டாக்ஸியோ அல்லது ஜீப்போ ஏற்பாடு செய்துகொண்டு வந்தால், அதற்கான ஒரு தொகையை அரசு அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று நான் கூறிக்கொள்ளுகிறேன்.

நில வரியைப் பொறுத்த மட்டில், உயர்திரு கெய்வார் அவர்களுடைய ரிப்போர்ட்டைப்பற்றி இங்கே பேசப்பட்டது. நான் என்னுடைய தனிப்பட்ட கருத்தைக் கூறுகிறேன். கெய்வார் அவர்களுடைய ரிப்போர்ட் ஒரு பக்கம் இருக்கட்டும். தேர்தல் அறிக்கையில் 6-வது பக்கத்தில், 18-வது பாராவில் சொல்லியிருப்பதைப் போன்று உடனடியாக இந்த அரசு செய்ய வேண்டியது என்னவென்றால், ஐந்து ஏக்கருக்கு உட்பட்ட நிலத்திற்கெல்லாம் நில வரியையும் அதற்குத் தொடர்பாக உள்ள மற்ற வரிகளையும் நீக்கிவிடவேண்டும். அதற்குப் பின்பு கெய்வார் ரிப்போர்ட்டைப்பற்றிப் பரிசீலனை செய்துகொள்ளலாம் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

மேலும், கெய்வார் அவர்களுடைய ரிப்போர்ட்டில் நீர் வரியைப்பற்றிக் கூறும்போது, ஒரேயடியாக ஒரே விதமான அளவுகோல் கொண்டு அது செய்யப்படுகிறது. அடுத்தபடியாக ஒரேவிதமான அளவுகோல் நீர் வரி விதிக்கும்போது ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். மேலும் நில வரி வேண்டாம் என்று விவசாயப் பெருமக்கள் இருக்கின்ற நேரத்தில் அவர்கள்மீது சுமத்தப்பட்டிருக்கிற பளு குறையவேண்டும் என்று இருக்கின்ற நேரத்தில் இன்னும் நீர் வரி என்ற முறையில் அதிகமான பளுவை அவர்கள்மீது ஏற்றுவதை அவர்கள் விரும்பவில்லை. அந்த விதமான ரிப்போர்ட் கொடுப்பதை இன்று விவசாயப் பெருங்குடி மக்கள் விரும்பவும் இல்லை என்பதை என்னுடைய தொகுதியின் சார்பில் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளுகிறேன்.

பஞ்ச நிவாரண வேலையைப்பற்றிக் கூறும்போது, என்னுடைய நெல்லை மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்யாத காரணத்தால், திருச்செந்தூர் தாலூக்காவில், சாத்தான்குளம் சப்-தாலூக்காவிலும் நாங்குனேரி தாலூக்காவிலும் அதற்குப் பக்கத்திலுள்ள கோயில்பட்டியிலும், கிராமங்கள் வரட்சியாக இருக்கின்றன. பஞ்ச நிலைமை தாண்டவமாடுகிறது. பஞ்சம் வந்தபிறகு பஞ்ச நிவாரண நடவடிக்கைகள் எடுப்பது வேறு. பஞ்சம் வருவதற்கு முன்பு சில முன்ஜாக்கிரதையான நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு முன்வரவேண்டும்.



மணிமுத்தாறு பகுதியில் நீர்க்கட்டு உள்ள நிலங்களில் பயிர் வைக்கும்போது தண்டத் தீர்வை அங்கு வசூலிக்கப்படுகிறது. நீர்க்கட்டுதலினால் அவர்கள் பயிர் வைக்கும்போது, அதில் ஏற்படுகிற தண்டத் தீர்வை முழுவதையும் நீக்கமுடியாவிட்டாலும், அதைக் குறைக்கலாம். தண்டத்தீர்வையைக் குறைத்து, விவசாயிகளுக்கு நன்மை செய்ய முடியும் என்று நான் கூறிக்கொள்ளுகின்றேன்.

என்னுடைய அண்டை மாவட்டமான கன்யாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை அணையில் உள்ள தண்ணீர் குறைவுபட்ட காரணத்தால் சுமார் 20,000 ஏக்கர் நிலங்களில் இருந்த பயிர்கள் காய்ந்து போய்விட்டன. இதைப்பற்றி அங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர் அவர்களிடம் கூறியிருந்தார்கள். பேச்சிப்பாறை தரை மட்டத்தில் உள்ள தண்ணீரை மின்சார விசை ஏற்றங்களை வைத்து இறைத்து, அந்தப் பயிர்களுக்குக் கொடுத்திருந்தால், அந்தப் பயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். இதேபோன்று ஒரு நிலை, அந்த மாவட்டம் திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் இருந்த நேரத்தில், ஏற்பட்டபோது, அங்குள்ள அரசு அந்தக் கன்யாகுமரி மாவட்டத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்தினாலும், விசை ஏற்றங்கள் வைத்து தண்ணீர் இறைத்து பயிர்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கன்யாகுமரி மாவட்ட மக்கள் இன்று தமிழகத்தோடு சேர்ந்த பிறகு, இன்று சுமார் இருபதாயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் பயிர்களெல்லாம் வாடியிருக்கின்றன. இந்த அரசு நினைத்திருந்தால் அந்தப் பயிர்களுக்குத் தண்ணீர் கொடுத்திருக்கலாம். அதற்கு அதிகமாகச் செலவு ஏற்பட்டிருக்காது. ஏற்கனவே விசை ஏற்றங்கள் வைப்பதற்கு இடங்கள் அந்த அணையில் கட்டப்பட்டவை அப்படியே இருக்கின்றன. மின்விசை ஏற்றங்கள் கொண்டுவந்து தண்ணீர் இறைத்து பயிர்களைக் காப்பாற்றத் தவறியிருக்கிறது இந்த அரசு. எனவே, இந்த மக்களுக்கு ஆதாரம் கட்டவேண்டும் என்று கூறவில்லை. ஆனால், அவர்களுக்கு ஏற்பட்ட ஒரு பெரும் இழப்புக்காக மானியங்களோ, கடனுதவியோ அந்த மாவட்ட மக்களுக்கு அரசு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில் கோமானேரி, நெடுங்குளம், கலுங்குவிளை போன்ற கிராமங்களில் நிலம் சர்வே செய்யப்பட்டு, இன்னும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப்படாத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்து விவசாய மக்களுக்கு துரிதமாகப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிற்பகல் 12-30

அடுத்தபடியாக, இராமநாதபுரம் மாவட்டத்திலும், தஞ்சாவூர் மாவட்டத்திலும் வாழ்கின்ற மீனவர்கள் புயலால் பாதிக்கப்படுகின்ற நேரங்களில் அவர்களுக்கு அரசாங்கம் தக்க உதவிகளைச் செய்து வருகின்றது. அதே போல மற்றப் பகுதிகளில் வாழ்கின்ற மீனவர்களுக்கும் தக்க உதவிகளைச் செய்ய வேண்டும். என்னுடைய தொகுதியில் கடற்கரையோரமாகவுள்ள மணப்பாடு, பெரியதாழை போன்ற இடங்களில் மீனவர்களுடைய குடிசைகள், திடீர் திடீரென்று வீசுகின்ற புயல் காற்றினால் பாதிக்கப்படுவதனால், அப்பகுதிவாழ் மீனவர்கள் மிகவும் அவதிக்காளாகிறார்கள். ஆகவே, இந்தப் பகுதியில் வாழும் மீனவர்களுக்கும் அரசாங்கம் தக்க உதவிகளை அளித்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாத்தான்குளம் வட்டாரத்திலும், உடன்குடி வட்டாரத்திலும் பனைமரத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இன்னும் குடியிருப்பு நிலங்கள் வழங்கப்படவில்லை. குடியிருப்பு நிலங்களை வழங்கும்போது, இந்த பனைமரத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, நிலங்களைத் துரிதமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நில வரியைப் பொறுத்தமட்டில், திரு. கெய்வார் அவர்களுடைய ரிப்போர்ட்டைப் பரிசீலனை செய்வதற்கு முன்பாக, திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் கொடுத்துள்ள, 5 ஏக்கர்

[1968 மார்ச் 18

*திரு. எம். வில்லியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சபை முன் வைத்திருக்கும் இந்த மானியக் கோரிக்கை மீது நான் ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் குறிக்கோளாக இருக்கிறது. அதை எல்லாக் கட்சிக் காரர்களும் ஆதரிக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதன்முதலாக வேளாண்மை விற்பனை வரி சுமத்தப்பட்டது. இந்த வருட ஆரம்பத்தில் அதைச் சற்று அதிகமாக கூட்டாக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதே சமயத்தில் இந்தக் கைவாரா அறிக்கையும் வந்திருக்கிறது. இதன் அடிப்படையில் நாம் உற்பத்தியைப் பெருக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். இதனால் நிச்சயமாக உற்பத்தி பாதிக்கப்படும் என்பதில் சந்தேக மில்லை.

முதன் முதலாக இயற்கைக் கோளாறுகள் உற்பத்தியைப் பெருக்குவதில் இடையூறாக இருக்கிறது. வர வர பருவ மழை பொய்த்து வருகிறது. இந்தச் சமயத்தில் எவ்விதம் ஊக்குவிப்பது என்பதைப் பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும். வேளாண்மை விற்பனை வரியினால் விவசாயிகள் சற்று பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். புன் செய்த் தீர்வையைக் குறைத்து விட்டது ஒரு வரப்பிரசாதம் என்று சொல்ல முடியாது. இதனால் 80 லட்சம்தான் வருமானத்தில் குறைகிறது. ஒருவேளை நன்செய் நிலத்தின் அடிப்படை வரியைக் குறைத்தாலும் ஒரு கோடி குறையக் கூடும். நீர்த்தீர்வை ஏழு ரூபாய் கொடுத்து வந்த நிலங்களுக்கு இந்த அறிக்கைப்படி நடைமுறைக்குக் கொண்டு வந்தால் ரூ. 25 கொடுக்க வேண்டி வரும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 59,000 ஏக்கர் நன்செய் நிலங்கள் இருக்கிறது. அங்கு ஏக்கர் ஒன்றுக்கு ஏழு ரூபாய் கரம் கொடுக்கிறோம். அதை 25 ரூபாயாக மாற்றினால் அங்குள்ள விவசாயிகள் எவ்வண்ணம் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்போது நடைமுறையில் இருக்கிற ஏற்பாடு 87 பைசா முதல் கூடுதல் கரம் ரூ. 15 என்ற அளவில் இருக்கிறது இந்த கைவாரா அறிக்கைப்படி முதல் வகுப்பு நிலங்களுக்கு ரூ. 25, 20, 15 என்று படிப்படியாக பல கிரேடுகளில் நீர் வரியை நீட்டிக்க வேண்டுமென்று ஆலோசனை கூறி இருக்கிறார்கள். இது ஒரு ஆலோசனைதான். இதை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதற்கில்லை. நன்செய் நிலங்களின் மீதுள்ள வரியை எந்த அளவிற்குக் குறைக்கப் போகிறோமோ அந்த அளவிற்குத்தான் நீர் வரியை ஈடாக்கவேண்டும். அவ்வண்ணம் செய்தால்தான் விவசாயி களுக்கு ஊக்கமளித்து, உற்பத்தியைப் பெருக்க முடியும்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டம் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அங்கு பருவ மழை தவறிவிட்டது என்று அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். அங்கு 25,000 ஏக்கர்களுக்கு மேல் நாஞ்சில் நாட்டில் கரிந்து போய்விட்டது. பருவத்தில் இரைத்திருந் தால் ஒருவேளை பாதுகாத்திருக்க முடியும். அந்தக் குறைபாடுகள் பற்றி நான் இப்போது கூற விரும்பவில்லை. அங்கு கரிவு அதிகமாக ஏற்பட்டது. விளவங்கோடு தாலூகாவில் நெய்யார் இடதுகரைச் சானல் நீர்ப் பாசனத் தின்கீழ் வருகிற பிரதேசங்கள் தவிர மற்ற இடங்கள் கரிந்து போய்விட்டது. கல்குளத்தில் தென் பகுதியும், வட பகுதியும் கரிந்து போய்விட்டது. அவர்களுக்குப் பரிகாரம் அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஆகவே அந்தப் பகுதிகளில் வரி வஜா செய்து தீரவேண்டும். அவர்கள் கொடுக்க வேண்டிய கடன்களை காலம் தாழ்த்தி வசூல் செய்யவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, ஸ்ரீபண்டாரவகை ஒழிப்புச் சட்டம், ரயத்துவாரிச் சட்டம் என்றெல்லாம் சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு பகுதி நிலங்களுக்கு ஒரு சட்டம் ஏற்படுத்த வேண்டும். ஸ்ரீபாத உஸ்துக்கள் என்று இருக்கிறது. அவை திருவிதாங்கூர் அரசினரின் குடும்பச் சொத்துக்கள். அவை சம்பந்தமாக ஒருவிதச் சட்டமும் ஏற்பட



1968 மார்ச் 18] [திரு. எம். வில்லியம்]

வில்லை. அதையும் கூடிய விரைவில் ஏற்படுத்த வேண்டும். வேளாண்மை வருமான வரிச் சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தற்போது நீட்டப் போவதில்லை என்று சொல்கிறார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் உயர் வரம்புச் சட்டம் வரப் போகிறது நம் நாட்டில் என்று சொல்கிறார்கள். அது சரியான சமாதானம் அல்ல. உயர் வரம்புச் சட்டம் வந்தால் அது கன்னியாகுமரிக்கு மட்டுமல்ல, சென்னை ராஜ்யம் முழு மைக்கும் அது வரும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே வேளாண்மை வருமான வரிச் சட்டத்தை மற்ற இடங்களில் அமுல் படுத்தும்போது ஏன் கன்னியாகுமரியில் அமுல்படுத்தக் கூடாது? அதையும் சற்று கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, லான்ட் டாக்ஸ். 1967-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதி முதல் அது ரத்தாக்கப்படுகிறது. கன்னியாகுமரியில், ரயத்துவாரி கரத்தை ஏற்படுத்திய பிறகுதான் அது செல்லுபடியாகும் என்று சொல்கிறார்கள். அது பொருத்தமான சமாதானம் அல்ல. ரயத்துவாரி கரத்திற்கும் இந்த நிலவரிச் சட்டத்திற்கும் சம்பந்தமில்லை. நிலவரியை இங்கு எப்படி ரத்து செய்கிறோமோ அதேபோல அங்கும் எளிதில் செய்துவிடலாம். ஆகவே அதற்காக குமரி மக்கள் காத்திருக்கவேண்டிய தில்லை. அதைப்பற்றியும் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ரீ சர்வே. நாலைந்து ஆண்டுகளாக அது நடந்து வருகிறது. முன்பு ஊடுகூர் ப்ராசளமேஷன் இருந்தது. அது நடை முறைக்கு வந்தபோது ஆயிரக்கணக்கான வியாஜ்யங்கள் நடந்தன. இப்போது ரீ சர்வே நடந்தச் சொல்லி ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. ரீ சர்வே செய்யும் பார்ட்டி நிலச் சொந்தக்காரர்களுக்கு முன் அறிவிப்பு கொடுப்பதில்லை. அவர்கள் தங்கள் இஷ்டப்போல் சிறு சிறு கல்லை மாட்டிவிட்டுப் போய்விடுகிறார்கள். அடுத்துள்ள நில உடமஸ்தன் அந்தக் கல்லை மாற்றி அதை அக்கிரமித்து விடுகிறான். இவ்விதம் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இந்த ரீ சர்வே மூலம் மக்களுக்கு நன்மை கிடைக்கும் வகையில் அதை நடத்த வேண்டும். அங்குள்ள லாண்ட் ரிக்கார்ட்ஸ் நல்ல முறையில் இல்லை. விளவங்கோடு தாலூகாவில் ஊடுகூர் செட்டில்மென்ட் வந்தது, பிறகு சர்வே வந்தது. மருமக்கத்தாயம்லா அங்கிருப்பதால் வில்லை ஆதாரம் வாங்கினால்கூட பட்டா கிடைப்பதில்லை. ஆகவே உடனடியாகப் பட்டா கொடுக்கும்படிச் செய்ய வேண்டும். லான்ட் ரிக்கார்ட்ஸ் நல்ல முறையில் வைக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, ஃபாலின் ரிலீஃப் இப்போது தீ விபத்து ஏற்படுகிறவர் களுக்கு 80 ரூபாய் வரை உதவி அளிக்கிறார்கள். அது நல்ல விஷயம். கோதையாறு ஹைட்ரோ எலெக்ட்ரிக் ப்ராஜெக்ட் பகுதியில் 400 வீடுகள் தீக்கிரையாகியது. அவர்களுக்கு 20 ரூபாய் வீதம்தான கொடுத்திருக் கிறார்கள். இங்கு நடைமுறையில் இருப்பதுபோல் அங்கும் 80 ரூபாய் நன்கொடை அளிக்க சர்க்கார் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஆ. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆத ரித்து எனது கருத்துக்கள் சிலவற்றை இங்கு வழங்கு வதற்கு அனுமதி தந்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையில் புன்செய் நிலங்களுக்கு வரி விலக்கு அளித்திருப்பது கண்டு உண்மையில் விவசாயிகள் மகிழ்ச்சி அடைகிறார்கள். இங்கு பேசும்போது நன்செய் நிலங்களுக்கும் வரி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்கப்படுகிறது. ஆனால் நன்செய் நிலங்களுக்கு வரி விலக்கு அளிப்பதை பெரும்பாலும் ஏழை விவசாயி கள் விரும்பவில்லை. ஏனென்றால் இரண்டு ஏக்கர்கள், ஒரு ஏக்கர், அரை ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள்கூட இந்த நன்செய் நிலங்களுக்குத் தீர்வை கட்டுவதை பெருமையாகக் கருதுகிறார்கள். எனக்கும் நிலம் இருக்கிறது, நானும் சர்க்காருக்குத் தீர்வை கட்டுகிறேன் என்று அவர்கள் பெருமையோடு சொல்லிக்கொண்டு அதை ஒரு பெருமையாகக் கருதுகிறார்களே தவிர இந்தத் தீர்வையை ஒழிக்கவேண்டு மென்று அவர்கள் நினைக்கவில்லை.

அடுத்து, இந்தத் தீர்வையை வசூலிக்கும்பொழுது ஒரு சில சங்கடங்கள் அங்கே ஏற்படுகிறது. கூட்டுமுறை பட்டாக்கள் நீண்ட நாட்களாகயிருந்து வந்திருக்கிறது. ஏழை விவசாயிகளுக்கு 2 எக்கர், 1 எக்கர், ½ எக்கர் என்று இருக்கிறது. நீண்ட நாட்களாகப் பட்டா மாற்றிக் கொடுக்காமலும், சர்வே செய்து கொடுக்காமலுமிருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறை தணிக்கைக்கு முன்னால் பணத்தை வசூலிக்க வேண்டுமென்பதால் யார் முன்னால வருகிறார்களோ அவர்களிடமே பணத்தை வசூலித்துவிடுவது என்ற நிலை இருக்கிறது. அதனால் ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள், அவர்களுக்குப் பட்டாக்களை மாற்றிக் கொடுக்கவும், நிலங்களைச் சர்வே செய்யவும் இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த ஆண்டு பஞ்ச நிவாரண வேலைகளுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல குளங்கள் உடைந்திருப்பதை நாம் அறிவோம். ஆண்டுக்காண்டு இந்த மராமத்து வேலைகளுக்காக ஏகப்பட்ட பணம் செலவழித்தும்கூட பெரிய விபத்துக்கள் ஏற்படக் காரணம், முன்பிருந்த அரசாங்கம் சரியான முறையில் குளங்களைக் கட்டாததால்தான். ஆகவே இந்தப் பஞ்ச நிவாரண வேலைகளைப் பெரும்பாலும் குளங்களை ஆழப்படுத்துவதிலும், கரைகளைச் செப்பனிடுவதிலும் செலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். என்னுடைய தொகுதியில், கங்கைகொண்டானில் பராக்கிரம பாண்டியன் பெருங்குளம் உடைப்பெடுத்திருக்கிறது. உடனடியாக அதை அடைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கங்கைகொண்டானில் வட பகுதி முழுவதிலும், மழையை நம்பி வாழக் கூடிய முறையில், சித்ரா நதிப்பகுதி இருந்து வருகிறது. ஆண்டாண்டுகளாக அதைப் பஞ்சப் பிரதேசமாகக் கருதிக் கொண்டு வருகிறது. அதை நிவர்த்தி செய்ய பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆலங்குளம், தென்காசி போன்ற இடங்களிலும் இதே நிலைதான் இருந்து வருகிறது. எனவே, இந்தப் பஞ்ச நிவாரண வேலையைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்தப் பஞ்ச நிவாரண வேலைகள் குளங்களை மராமத்து செய்வதற்காக இருக்க வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகின்றேன். ஏனென்றால், அவைகள் ஆண்டுக்காண்டு உடைப்பெடுத்துக் கொள்ளக் காரணம் மராமத்து இல்லாததுதான். எனவே அதை ஆழப்படுத்தவும், கரைகளைச் செப்பனிடவும் அதிகமான பணத்தைச் செலவிட வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ரயத்துவாரி பட்டா பற்றி இந்த அரசு எடுத்திருக்கும் முடிவை நான் பாராட்டுகிறேன். 1963-இலேயே அந்தச் சட்டம் இயற்றப்பட்டாலும்கூட இந்த அரசு வந்து பொறுப்பேற்கும் வரையில் அதைப்பற்றி யாரும் எடுத்துப் பார்க்காமல் இருந்த நிலையிலிருந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் இந்த நிலைக்கு வருகிறது என்றால் விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கங்கைகொண்டான் தொகுதியைப் பொறுத்த வரையில் இந்த இனாம் நிலங்கள் அதிகப்படியான அளவில் இருந்து கொண்டிருக்கின்றன. இதற்குச் சர்க்கார் எடுத்திருக்கும் முடிவை நான் பாராட்டுவதோடு, இதைத் துரிதமாகச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நிலத்தீர்வைகள் பெரும்பாலும் வசூலிக்கப்படாமல் இருக்கிறது. இந்த ஜமீன் இனாம் நிலங்களுக்குத் தீர்வை செலுத்தாமல் இருக்கிறார்கள். 1963-யிலே இந்தச் சட்டம் இயற்றப்பட்டதால் நிலம் நம்மிடத்தில் இல்லாமல் விவசாயிகளுக்குப் போய்விடுமோ என்று சர்க்காருக்குத் தீர்வை செலுத்தாமல் இருக்கிறார்கள். உடனடியாகப் பட்டா மூலம் விவசாயிகளுக்கு வழங்கிவிட்டால் அவர்கள் ஒரே ஆண்டில் நிலத்தீர்வையைக் கட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை விவசாயிகள் சார்பில் கூறிக்கொள்ளுகின்றேன்.



அடுத்ததாக இந்த ரயத்துவாரி பட்டாக்கள் வழங்குவதில் கோயில் மடத்து நிலங்களுக்கு, 1963-க்குப் பின்னால் அவர்கள் பயிர் செய்திருந்தாலும் அங்கேயுள்ள மடத்துச் சொந்தக்காரர்கள் நினைத்தால் அவர்களே பயிர் செய்து கொள்ளலாம் என்ற ஒரு நிலை இருந்து வருகிறது. அந்தச் சட்டத்தை உடனடியாகத் திருத்தி, விவசாயிகளுக்குப் பயன்படும் வழி செய்யக்கூடிய நிலையில் செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

முந்திய அரசு காலத்தில் நீர்ப்பிடிப்புள்ள குளம் புறம்போக்குகளை அபகரிப்பு என்ற முறையில் அபகரித்துச் சென்றிருக்கிறார்கள். எனவே இப்பொழுது யார் அபகரிப்பு செய்திருந்தாலும் எந்தவிதமான தயக்கமும் காட்டாமல நீர்ப்பிடிப்பு உள்ள இடம் விவசாயிகள் எல்லோருக்கும் பயன்படும் என்ற காரணத்தால், அபகரிப்புச் செய்து வந்திருப்பவர்களை உடனடியாகக் காலி செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த அளவிற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு உரையை முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

***திரு. எஸ். ராமசாமி நாயுடு:** உதவி சபாநாயகரவர்களே, இந்த மானியத்தின்மீது சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். வரிவஜா சம்பந்தமாக முதலில் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். வரிவஜா புஞ்சை நிலங்களுக்குச் செய்தாகி விட்டது. நஞ்சை நிலங்களுக்குச் செய்வதிலே கஷ்டமிருக்கிறது என்று கனம் அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒரு கால்வாயில் பயிராகும் நிலங்களுக்குப் பல தரப்பட்ட தீர்வைகள் இருப்பதால் சட்ட விரோதமாகக் கருதப்படும் என்று அவர்கள் சொன்னார்கள். அதை நிவர்த்தி செய்ய சுலபமாக வழியிருக்கிறது. மிகக் குறைந்த தீர்வையும், மிக அதிகமாக உள்ள தீர்வையும் சேர்த்து இரண்டையும் சரி செய்து, ஒரு சமனம் செய்து அதிலே பாதியாக ஒரே தீர்வையாக விதித்து விடலாம். அதை விட்டு விட்டு ஏதோ சில சிரமங்கள் இருக்கின்றன என்பதற்காகப் புதிதாக வரிகளைப் போட ஏதாவது செய்ய வேண்டுமென்று ஸ்ரீ கெய்வார் அறிக்கையிலே காட்டப்பட்டிருக்கிறது. அதிலே சொல்லி இருக்கிற பாயிண்டுகளைப் பார்த்தால், இந்த அரசாங்கமானது ஜமீன் ஒழிப்புக்கு முன்னால் நிலத்தில் உழைப்பவர்கள் எந்த நிலையில் வைக்கப்பட்டிருந்தார்களோ அதே நிலைக்கு அவர்கள் திருப்பிக் கொண்டு போகப்படுகிறார்கள் என்று கூறுகிறேன். ஜமீன்தார்கள் இருந்த காலத்தில் பயிர்த் தீர்வை போட்டார்கள், தண்ணீர்த் தீர்வை போட்டார்கள், பயிருக்குத் தகுந்த மாதிரி ஒவ்வொரு தீர்வை போட்டார்கள். அதுபோல் வருஷத்திற்கு வருஷம் மாறினால் நிச்சயமற்ற நிலைமை ஏற்படும். அவ்வாறில்லாமல் ஒருங்கிணைத்து வரி செலுத்த வேண்டிய நிலைமையிருக்க வேண்டும். இரண்டாவது, நிச்சயம் இன்னதுதான் செலுத்த வேண்டுமென்று அவர்களுக்கிருக்க வேண்டும். அதை விட்டு விட்டு அப்போதைக்கப்போது கூடுதலாகவும், குறைவாகவும் ஒவ்வொரு வருஷமும் மாறிமாறியும் வந்தால் அதிகாரிகளின் கையிலே அவர்களைப் பிடித்துக் கொடுப்பதாக அது அமையுமே தவிர, சகாயம் செய்வதாக ஆகாது. சகாயம் செய்ய வேண்டுமென்று சொன்னால் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரே மாதிரியான தீர்வையை நிச்சயித்து கூட்டியோ அல்லது குறைத்தோ ஒரு தொகையை நிர்ணயம் செய்ய வேண்டுமே தவிர ஒவ்வொன்றுக்கும் மாறிமாறிப் போடுவது என்பது பொருத்தமானதாக இருக்காது. கரும்பு, வாழை, சேனைக்குத் தீர்வை யென்றால் புஞ்சைப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்ற சந்தேகம் என்னைப் போன்றவர்களுக்கு உண்டாகிறது. அவ்வாறு செய்ய வேண்டாம். அவ்வாறு செய்வது சரியல்ல. அதனால் வருமானம் வருகிறது என்று யாராவது குறிப்பிட்டுக் கொடுத்தால் அதைப் பின்பற்ற வேண்டுமென்பது அவசியமில்லை. மக்களுக்கு நன்மை செய்யத்தான் இருக்கிறோமே தவிர சர்க்காருக்கு அதிக வருமானம் தேட அல்ல. வருமானத்தைப் பெருக்கி மக்களுக்கு நன்மை செய்யப் போகிறோம்

[திரு. எஸ். ராமசாமி நாயுடு] [1968 மார்ச் 18

என்றால், நூற்றுக்கு எண்பது பேர்கள் விவசாயிகளாக உள்ளவர்களிடத்தில் அதிக வரியை வாங்கி திருப்பி நன்மை செய்கிறோம் என்றால் "வெல்லப் பிள்ளையாரைக் கொஞ்சம் கிள்ளி வெல்லப் பிள்ளையாருக்கே நைவேத்தியம்" செய்வதைப் போலத்தான் இருக்கும். ஆகவே அவ்வாறு கூடாது என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு கட்சியும் ஆட்சிக்கு வருவதற்கு முன் வரியை எடுத்து விடுவோம், வரியை எடுத்து விடுவோம், வரியைக் குறைப்போம் என்று சொல்லிவிட்டு ஆட்சிக்கு வந்த பிறகு எந்தக் கட்சியும் வரியைக் குறைக்கவில்லை. மாதங்களிலுள்ள ஜனவரி, பிப்ரவரி என்பதிலுள்ள வரிகளை எடுத்து விட்டால் மக்கள் பயமற்று வாழ்வார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வரி என்பது அவ்வளவு பயப்பட வேண்டிய காரியம். விவசாயிகளின் நிலைமை அவ்வளவு மோசமாக இருக்கிறது. ஆகவே புஞ்சைத் தீர்வையை வஜா செய்ததை நஞ்சை தீர்வைக்கும் விஸ்தரித்து நிலைமையை மிகச் சுலபமாக செய்யலாம். அதைச் செய்வதை விட்டுவிட்டு என்னென்னவோ செய்வது சரியல்ல என்று நான் சொல்லிக்

பிற்பகல் 1-30 கொள்ள விரும்புகிறேன். தண்ணீர்த் தீர்வையை வஜா செய்யாமல் இருப்பதும் இந்த நிலைமையை நிவர்த்திக்க வழியல்ல. ஆகவே, தண்ணீர் தீர்வையை வஜா செய்ய வேண்டியது முக்கியமான ஒரு காரியம். இந்த நிலச்சுவான்தாரர்களிடம் தண்ணீர் தீர்வையை ஏக்கருக்கு ரூ. 8 கொடுங்கள், அல்லது ரூ. 15 கொடுங்கள், எதை நீங்கள் விரும்புவீர்கள் என்று அவர்களைக் கேட்டால் அவர்கள் என்ன சொல்லுவார்கள் என்பதை நாம் நிச்சயமாகச் சொல்லலாம். நிச்சயம் குறைவாக வரி கொடுப்பதைத்தான் அவர்கள் விரும்புவார்கள். ஆகவே, இந்த கெய்வார் அவர்கள் கொடுத்திருக்கும்படியான அறிக்கையின் மூலம் அதிகமாகப் பணம் வரும். ஆனால் அந்தப் பணம் யாருக்கு பயன்படும் என்று நினைக்கிறோமோ அவர்களுக்கு கஷ்டம் கொடுக்கக் கூடிய பணமாகத்தான் இருக்கும் என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, வரி விஷயத்திலே புஞ்சைக்கு வரி வஜா செய்திருப்பதை நாம் வரவேற்கிறோம். ஆனால் அதற்குப் பதிலாக பல வரிகளை நாம் போட்டிருக்கிறோம். ஆகவே, ஒட்டகத்திலே பெரும் பாரம் இருக்கிறது என்று பின்னாலே ஒரு துணியை எடுத்து விட்டால் அந்த ஒட்டகம் சந்தோஷப்படுவதைப் போல, நில வரியை வஜா செய்வதன் மூலம் எங்களை சந்தோஷப்படுத்துகிறார்கள். மற்ற, பாக்கிச் சுமையை நாங்கள் சுமந்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்த வரிக்காக அதிக சுமையைப் போட வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக பஞ்ச நிவாரணம். கனம் அமைச்சர் அவர்கள், மேய்ச்சல் புறம்போக்கு நிலம் ஒரு மாட்டிற்கு ஒரு ஏக்கர் இருக்க வேண்டுமென்பது ஆங்கிலேயர் காலத்திலே தெரியாத்தனமாகக் கொண்டு வந்த சட்டம் என்று சொன்னார்கள். இருக்கலாம், ஒப்புக்கொள்ளலாம். ஆனால் ஒரு மாடு மேய்வதற்கு ஒரு ஏக்கர் போதாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அந்த மேய்ச்சல் பகுதியிலே மழை பெய்வதில்லை; அதன் காரணமாகப் புல் முளைப்பதில்லை. ஆகவே, மாட்டை வீட்டிலே வைத்து வைக்கோலை கொடுத்துக் காப்பாற்றுகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, மேய்ச்சலைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

இந்த பஞ்ச நிவாரணத்தைப் பற்றி நினைக்கும்போது, மழை வளம் குன்றி நிலம் வறட்சி அடைய வேண்டும்; பஞ்சத்தால் மக்கள் சாக வேண்டும்; பிச்சை எடுத்துக் கொண்டு அலைய வேண்டும்; கொலை களவு ஏற்பட வேண்டும்; நாட்டில் அராஜகம் ஏற்பட வேண்டும்; அப்பொழுதுதான் பஞ்சம் ஏற்பட்டதற்கு அடையாளம் என்று அவர்கள் படித்தார்கள். தயவுசெய்து அவர்கள் இதை மாற்றி அமைக்க வேண்டும். வேறு ஒரு துறையைப்போல அவர்கள் இந்தப் பஞ்ச நிவாரணத் துறையையும்



1968 மார்ச் 18] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

மாற்றி நாட்டிலே நாம் எல்லோரும் வாழ வழி செய்ய வேண்டும். இன்றைக்குப் பசித்தவன்....................

"ஆவிற்கு நீரென்று இரப்பினும்
நாவிற்கு இரவின் இழிவந்தது இல்"

என்ற பரம்பரையில் வந்தவர்கள். ஆகவே பிச்சை எடுப்பவர்களுக்கு நாம் போஜனம் போடுவோம் என்ற முறையிலேதான் அவர்கள் சாகும் வரைக்கும் காத்திராமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்கெல்லாம் மழையில்லாமல் பஞ்சம் ஏற்படுகிறதோ அந்த இடங்களுக்கெல்லாம், விரைந்து சென்று பஞ்ச நிவாரணம் செய்வது மிக மிக அவசியம். இந்த மானியக் கோரிக்கையிலே சில குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கூலியைக் குறைவாகப் பெற்று கடின வேலையைச் செய்ய ஒப்புக் கொண்டால் அங்கு பஞ்சம் கடுமையாக இருக்கும் என்று அறியலாம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மழையின்மையின் காரணமாக இன்றைக்குப் பஞ்சம் தாண்டவமாடுகிறது. புரட்டாசி, ஐப்பசி மாதங்களிலே பல பயிர்கள் இடப்படும். தை, மாசி மாதங்களிலே பஞ்சம் தீரும். மீதி மாதங்களிலே பஞ்சம் கடுமையாக இருக்கும். ஆகவே, மீதி 10 மாதங்களில் பஞ்ச நிவாரண வேலைகள் செய்ய வேண்டியது மிக மிக அவசியம். அந்தப் பகுதியிலே இருக்கும் மக்களுக்கு சாசுவதமான, பிரயோஜனமான, அனுகூலமான காரியங்களைச் செய்து, அவர்களுக்கு நல்ல கூலியையும் கொடுத்து அவர்கள் பஞ்சத்தினாலே வாடாமல், சாகாமல், அவர்களைக் காப்பாற்ற வேண்டியது சர்க்காரினுடைய கடமை என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளினுடைய நிலையைப்பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும். தூரிகையை எவ்வளவு வேண்டுமானாலும் இஷ்டப்பட்ட அளவுக்கு ஏற்றலாம் என்று சொல்லுவார்கள். அதைப் போல விவசாயிகளிடத்திலே எவ்வளவு பளு வேண்டுமானாலும் ஏற்றலாம் என்ற நம்பிக்கை சர்க்காரிடத்திலே இருக்கிறது; பொதுவாகப் பொது மக்களிடத்திலேயும் இருக்கிறது. காரணம் என்னவென்றால் வேறு எந்த தொழிலைச் செய்கிறவனாக இருந்தாலும் அவனுக்கென்று ஒரு சங்கத்தை அமைத்துக் கொண்டு கூப்பாடு போடுகிறான். அந்தக் கூப்பாட்டைப் போட்டு இது வேண்டும், அது வேண்டும் என்று சொன்ன அளவிலே அவனுக்குத் தேவையானதைப் பெற்றுக் கொள்கிறான். ஆனால் விவசாயிகள் அம்மாதிரி ஒரு சங்கத்தை அமைத்துக் கொள்ள முடியாத ஒரு நிலையில் இருக்கிறோம். ஆகவே விவசாயிகளுக்குப் பல இடைஞ்சல்களை உண்டு பண்ணுவதை யாரும் தவறாகக் கொள்ளுவதில்லை. இங்கே பேசியவர்களை நான் மிக உன்னிப்பாகக் கவனித்தேன். அவர்கள் சொன்னதெல்லாம் விவசாயிகளுக்கு வரும் கெடுதல்களைப் பற்றித்தான். நிலத்தை உழுபவனே நிலத்தை கைப்பற்ற வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள், ஒன்று சொல்ல விரும்புகிறேன்; இன்றைக்கு 4 ஏக்கர், 10 ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கும் என்னைப் போன்றவர்களெல்லாம் எங்கிருந்தோ எடுத்துக் கொண்டவர்கள் அல்ல; என்னுடைய பெற்றோர்களும் நானும் பாடுபட்டு அதற்கு வேண்டிய தொகைகளையெல்லாம் கொடுத்து வாங்கினோம் என்பதை மறந்துவிடக் கூடாது. ஏதோ சும்மா கிடைத்ததை உழுகிறான் என்றெல்லாம் நினைத்தால் அது மிக மிகத் தவறாகும். ஊருக்குள்ளே உள்ள மருந்து மரத்தை எடுத்துக் கொண்டால் அதனுடைய பட்டையை எல்லோரும் மருந்துக்காக உபயோகித்துக் கொள்ளுவார்கள். எல்லோரும் அதனுடைய பட்டையை எடுத்து விடுவதால், கடைசியிலே அது காய்ந்து போவது போல பலருக்கும் மருந்தாக இருக்கும் விவசாயியை காய வைத்துவிடக் கூடாது என்று நான் இந்த தொழிலரசை கேட்டுக் கொள்கிறேன். விவசாயிதான் இந்த நாட்டிற்கு அடிப்படை. விவசாயி என்ற முறையிலே, யார் விவசாயி என்பதிலே பலவிதமான சர்ச்சைகள் செய்து கொண்டு ஒரு முடிவான கருத்துக்கு வராமலிருக்கிறோம். அதை யோசிக்க வேண்டும். ஒரு முடவனுக்கு ஒரு நிலமிருந்தால் அதை அவன் உழ முடியாது. ஆகவே, அதைக் குத்தகைக்குக் கொடுக்கிறான்; அல்லது ஆளை வைத்து உழுகிறான்; உழுபவன்தான் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரன் என்றால், அந்த முடவனுக்கு ஒரு

நல்ல பிள்ளை பிறந்தால் அவன் அதை உழ முடியாமல் போய்விடும். ஒரு விதவை இருக்கிறாள்; அவள் தன்னுடைய நிலத்தைக் குத்தகைக்கு விடுகிறாள். நிலம் உழுகிறவனுக்கே சொந்தம் என்றால் அந்த விதவையினுடைய பிள்ளைகளுடைய கதி என்ன ஆவது என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். பேசிக் கொண்டு போக வேண்டுமென்றால் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொண்டே போகலாம். விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காக இந்தச் சர்க்கார் இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய நாட்டிலே 100-க்கு 75 பேர் விவசாயிகளாக இருக்கிறோம். ஆகவே, அவர்களுடைய நிலையைப் பார்க்கிறபொழுது தீர ஆலோசித்து என்ன செய்தால் அவர்களுக்கு நன்மை பிறக்கும் என்பதை மனதிலே கொண்டு காரியங்களைச் செய்வது மிகமிக அவசியம். **விவசாயி இன்றைக்கு எல்லாரிடமும் சீரழிந்து கொண்டிருக்கிறான். அந்த மானக்கேடான விஷயத்தை நிலையை மாற்றி, திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் விவசாயிகளுடைய நன்மையை மனதில் கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

ஒவ்வொரு சர்க்காரும் ஒவ்வொருவர் பெயரைச் சொல்லிக் கொண்டு தான் விவசாயிகளைக் கஷ்டப்படுத்திக் கொண்டு வருகிறது. அவர்களைச் சீரழித்துக் கொண்டே வருகிறது. காந்தியடிகளுடைய பெயரைச் சொல்லிக் கொண்டு காங்கிரஸ்காரர்கள் ஜனநாயக சோஷலிஸத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு வாடிய பயிரைக் காணும் போதெல்லாம் வாடினேன் வாடினேன் என்று இருக்கும் அண்ணா அவர்கள் பெயரைச் சொல்லிக் கொண்டு விவசாயிகளை இன்னும் கஷ்டப்படுத்திக் கொண்டே முன்னேற்றக் கழக சர்க்கார் நடக்கிறது. இது சரியல்ல. பெரியவர்களுடைய பெயரைச் சொல்லி விவசாயிகளைத் துன்புறுத்த வேண்டாம். விவசாயிகள் நல்ல முறையிலே வாழ்ந்தால்தான் இந்த நாடு செழிக்க முடியும். வீட்டை பார்த்து, விவசாயிகளுடைய நிலங்களைப் பார்த்து அந்தச் சர்க்கார் அவர்களுக்கு வசதி செய்து கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள் நன்றாக இருந்தால்தான் படி அரிசித் திட்டம் கோயம்புத்தூரிலும், சென்னையிலும் நடப்பதற்கு எந்தவிதமான சிரமமும் இல்லாமல் இருக்கும் என்று நினைக்கிறேன். அதை மற்ற இடங்களுக்கும் நீட்டிக்கவும் முடியுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சம் பல இடங்களிலே ஏற்பட்டிருக்கிறது. மேற்கு இராமநாதபுரம் ஜில்லாவிலே மழையில்லாமல் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. கிழக்கே மழையால் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. மேற்கே மழையிலலாமையால் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்பது இதிலே குறிப்பிடப்படவில்லை. அதே போல தஞ்சாவூரிலே கோயம்புத்தூரிலே எங்கெல்லாம் நிவாரணம் அவசியம் வேண்டுமோ அங்கெல்லாம் அந்த வேலைகளை அவசியம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் தீர்வையை வஜா செய்யுங்கள் என்று கேட்டால் ஜமாபந்தியிலே பார்ப்போம் என்று சொல்கிறார்கள். இந்தக் கஷ்டமான நிலையிலே அவர்கள் கடன் வாங்கி, இருக்கிற நிலத்தை அடைமானம் வைத்து தீர்வையைக் கட்ட வேண்டிய நிலைமையிருக்கிறது. ஆகவே தீர்வையை எவ்வளவு தூரம் ஒத்திப் போட முடியுமோ அவ்வளவு தூரம் ஒத்திப் போட வேண்டும். ஏப்ரலுக்குப் பின்னாலே ஜூன், ஜூலையிலே வசூலிக்கலாம் என்று நான் சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஏழை விவசாயிகளைப் பற்றி யாருமே எடுத்துப் பேசுவதில்லை; எங்களை யாருமே காப்பாற்றுவதில்லை. ஆகவே, நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். விவசாய அமைச்சர் என்று ஒருவர் பெயர் வைத்துக் கொண்டு இந்த மன்றத்திலே உட்கார்ந்து கொண்டிருப்பதாலே, உங்களிடம் (விவசாய அமைச்சரிடம்) அடைக்கலம் புகுவதற்கு வருகிறேன். மற்ற அமைச்சர்களிடமிருந்து நீங்கள் எங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

** பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுது உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது * * * * * என்ற வாக்கியத்தைச் சொன்னார்கள். அதை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று நான் கட்டளையிடுகிறேன். பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து பேரவை மீண்டும் மாலை 3 மணிக்குக் கூடும். பிற்பகல் 1–4

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

(இடைவேளைக்குப் பிறகு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமையில் பிற்பகல் மூன்று மணிக்குப் பேரவை மீண்டும் கூடியது.

**திரு. டி. இராசரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியத்தை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். குறிப்பாக, இந்த மானியத்தின் மூலமாக ஏற்கனவே புஞ்சை நிலங்களுக்கு சிறப்பான முறையில் வரி வஜா கொடுத்தது பற்றி விவசாயிகள் பெரு மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். இங்கே பேசிய எதிர்க்கட்சி நண்பர்கள் நாங்கள் வந்திருந்தால் நிச்சயமாக நஞ்சை நிலங்களுக்கு வரியை வஜா செய்திருப்போம் என்று சொன்னார்கள். ஆனால் 1965 டிசம்பர் இறுதியில் வந்த பில்லில் நிலவரியை ஒரு ரூபாய்க்கு 4 அணா வீதம் உயர்த்த வேண்டும் என்று முயற்சி எடுத்துக் கொண்டபொழுது, முன்னால் இங்கிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் நில வரியை உயர்த்துவது கூடாது என்று சொல்லியும் நிச்சயம் உயர்த்தியே தீருவது என்று ரூபாய்க்கு 4 அணா உயர்த்தினார்கள். ஆனால் அதற்கு பின்னாலே 1966-ல் நவம்பர் திங்களில் ஏற்கனவே உயர்த்திய 4 அணா வரியை மீண்டும் குறைத்தார்கள். இப்பொழுது 'நாங்கள் வந்திருந்தால் நிச்சயம் நஞ்சை நிலங்களுக்கு வரியைக் குறைத்திருப்போம்' என்று சொல்கிறார்கள்.

குறிப்பாக சில குறைபாடுகளையும், என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட சில விஷயங்களையும் பற்றிச் சொல்ல விழைகிறேன். ஆவடி நகரத்தில் ஏற்கனவே பட்டா வழங்கப்பட வேண்டும் என்று கேட்டபொழுது, புஞ்சை நிலங்களில் தாங்கள் வீடு கட்டுவதற்காக அதிலே பயிரிடப் போகிறோம் என்று சொல்லி, அதற்காக முன்னிருந்த அரசாங்கத்திடமிருந்து ரூ. 90-க்கு மதிப்பிட்டு, விலைக்கு வாங்க [illegible] செய்து, முன்னாலிருந்த அரசும் அந்த விலைக்குக் கொடுப்பதாகத் [illegible]த்தது. ஏற்கனவே அந்தப் பகுதியில் ரூ. 90-க்கு நிலத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் இப்பொழுது ரூ. 1,000-க்கு ஒரு செண்டு நிலத்தை விற்கிறார்கள். அதை விட நாமே அந்த நிலத்தை எடுத்து, எளியோர்களுக்கு, ஏழைகளுக்குக் கொடுக்கலாம், அல்லது நாமே நேரிடையாக யாருக்கு விற்றாலும் அதன் மூலம் ஒரு செண்டுக்கு ரூ. 1,000 வருமானம் வரும். புஞ்சை பயிரிடுவதற்கு என்று ரூ. 90-க்கு வாங்கிய நிலத்தை ரூ. 1,000-க்கு விற்பதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆவடி நகரத்தில் காமராஜ் நகரத்தில் வசிக்கின்ற நண்பர்களுக்கு 5,000 பேர்களுக்கு மேல் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. 7, 8 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக முறையிட்டும், இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. அந்த ஏழை எளிய மக்கள், மத்திய அரசாங்கத்திலும், மாகாண அரசாங்கத்திலும் பணி செய்பவர்கள். ஏதாவது கடன் உதவி பெற்று, எப்படியாவது முயற்சித்து வீடு கட்டிக்கொள்ளலாம் என்றால், பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. இப்பொழுது தான் 1966-ம் ஆண்டின் இறுதியில் தற்காலிகப் பட்டா என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நிரந்தர பட்டாக்கள் வழங்குவதற்கு வேண்டிய துரித நடவடிக்கைகளை எடுத்தால், அந்தப் பகுதி வாழ் மக்களுக்குச் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

* * * பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

அடுத்து, களம் புறம்போக்கு எந்தப் பகுதியில் இருந்தாலும் அதை ஆக்கிரமித்து விடுகிறார்கள். அதனால் ஏழை, எளிய விவசாயிகளுக்கு களம் இல்லாமல் போய்விடுகிறது. அதைப்பற்றி கேட்பதற்கும் அவர்களால் முடியவில்லை. களம் புறம்போக்கு எங்கே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற அந்த நிலத்தை நேரடியாக பஞ்சாயத்துக்கள் கண்காணிக்க முடிகிறதா என்றால், நிச்சயமாக முடியவில்லை. அது பற்றி ரெவின்யூ இலாகாவினரிடம் சென்று குறைகளைச் சொன்னால், உடனடியாக நிவாரணம் காண்கிற சூழ்நிலையும் இல்லை. ஆகவே, எந்தப் பகுதியில் களம் புறம்போக்கு இருந்தாலும் சரி, பாட்டைப் புறம்போக்கு இருந்தாலும் சரி, அதை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களை ரெவின்யூ இலாகா உடனடியாக அகற்றி, காலி செய்து கொடுத்தால் விவசாயிகளுக்கு நன்மை பயக்க ஏதுவாக இருக்கும். அது மட்டுமல்ல ஜமீன் நிலங்களை இது வரையில் பட்டா செய்து கொடுக்காமல், பல பகுதிகளில் அதனால் பல சர்ச்சைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் இருக்கிற நிலம் அநாதீனம் என்று சொன்னால், புறம்போக்கு என்று நினைத்து ஒரு சிலர் அதை ஆக்கிரமித்துக் கொள்வதும், வேறு சிலர் அந்த ஆக்கிரமிப்பைத் தடுக்க முற்படுவதும், இப்படி பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. 8 ஆண்டு காலமாகப் பட்டா வழங்கப்படாமல் நிலைமை அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்னைக்கு உடனடி நிவாரணம் காண வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

விற்பனை வரியைப் பார்க்கிறபொழுது ஏழை விவசாயிகள் வைக்கோல் வண்டிகளை ஓட்டிக் கொண்டு செல்கிற நேரத்தில், வைக்கோல் வண்டிகளை தடுத்து நிறுத்தி, செக்போஸ்டுகளில் ரூ. 2 வசூல் பண்ணக்கூடிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ரூ 2 கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்தமாக செக்போஸ்டுகளில் வசூலிக்கிறார்கள். அது முறையாகாது என்பதை அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஏழை எளிய விவசாயிகள் வைக்கோலை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு சென்னையில் வந்து விற்க வந்தால், அந்த செக்போஸ்டுகளில் வண்டிகள் தடுத்து நிறுத்தப்பட்டு ரூ. 2 நிர்ப்பந்தமாக வசூலிக்கப்படுகிறது. இது நிச்சயமாகத் தடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், மணல் லாரி. கூவம் ஆற்றிலிருந்து மணல் அடிக்கும் உரிமையைக் குத்தகைக்கு விடுகிறார்கள். குறிப்பாக மணலை லாரியில் ஏற்றிக் கொண்டு சென்னைக்கும் பிற பகுதிகளுக்கும் அதை எடுத்துக்கொண்டு செல்லும் நேரத்தில், அவர்கள் அதை விற்பதுகூட இல்லை வாடகைக்கு ஏற்றிக் கொண்டு வருகிற நேரத்தில், அவைகளை மடக்கி ரூ. 2 கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள், செக்போஸ்டுகளில். மணலை ஏற்றிக் கொண்டு வருவதற்கு குத்தகையாக, அல்லது வாடகையாக ரூ. 1·50 அல்லது ரூ 2 கொடுக்கிறார்கள் என்றால், விற்பனை வரிக்காக மேலும் ரூ 2 கொடுக்க வேண்டும் என்று கேட்கப்படுவது சரியல்ல. அப்படிப் பார்க்கும்பொழுது கொள்முதல் விலையே ரூ. 1·50 அல்லது 2 என்றால், அதற்கு 6 காசு வரி விதிக்கப்பட வேண்டும். குறிப்பாகச் சொன்னால் ஏற்கெனவே மணல் எடுக்கும் உரிமையை கண்டிராக்டர்களுக்கு குத்தகைக்கு விட்டு விடுகிறார்கள். மணல் எடுக்கும்பொழுது இவர்கள் ரூ. 2 குத்தகைக்காரர்களுக்குச் செலுத்தி வருகிறார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு நிச்சயமாக இந்த செக்போஸ்டுகளில் ரூ. 2 வரியாக வசூலிப்பதை தடைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியத்தின் மீது சிறப்பான ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. செ. பாலசுப்பிரமணியன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிலவரி வருவாய்த்துறை, பஞ்சத் தணிப்பு ஆகிய மானியங்களின் மீது எனது சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





காலையிலே பேசிய நமது நிலவரி வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஒரு புதிய சிந்தனைப் போக்கு இப்பொழுது அரசின் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நமது 'முதல் அமைச்சர் அவர்கள் சமீபத்தில் சாவகேச வர்த்தகக் கண்காட்சியில் பேசுகிறபொழுது, விவசாயிகளுக்கு இப்பொழுதுதான் கணிசமாக வருமானம் வர ஆரம்பித்திருக்கிறது, உடனே வரி போட்டு வாங்கக்கூடாது, கொஞ்ச நாட்களுக்கு அவர்கள் சேமித்து வைக்கவேண்டும், அவர்களுக்கு சுபிட்சம் ஏற்படவேண்டும், ஆகவே, வரிக் கொள்கை விவசாயிகளைப் பாதிக்காத அளவுக்கு இருக்க வேண்டும்' என்று பேசியதையெல்லாம் குறிப்பிட்டார்கள். அந்தச் சிந்தனைப் போக்கை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். சமீபத்தில் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். 'இந்த வருஷம் அமோக விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. அமோக விளைச்சல் காரணமாக ஒருவேளை விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களின் விலை கீழே இறங்குமானால், அதை உத்தேசித்து டெபிஸிட் பினான்ஸின் பற்றுக்குறை பட்ஜெட் போட்டு, அதிகப்படியான நோட்டுகளை அச்சடித்து மார்க்கெட்டில் புழங்கவிடுகிறேன். அதன் காரணமாக விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களின் விலை கீழே இறங்காமல் பார்த்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும்' என்று மொரார்ஜி தேசாய் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அதன் மூலம் அந்த விவசாயிகளுடைய உற்பத்திப் பொருள்களின் விலை இறங்காமல் செய்ய முடியுமா முடியாதா என்பதைச் சொல்ல முடியாவிட்டாலும், அவருடைய நோக்கம் விவசாய உற்பத்திப் பொருள்களின் விலை இறங்கக் கூடாது, அவர்களுக்கு சுபிட்சம் வரவேண்டும் என்பதுதான் என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நம்முடைய அரசிடமும் அந்த நோக்கம் இருக்கிறது. காலையில் பேசிய அமைச்சரும், புஞ்சைக்குத் தரம் தீர்வையை எடுத்து விட்டோம் என்பதையெல்லாம் பற்றிக் குறிப்பிட்டார்கள். இது சம்பந்தமாக கெய்வார் கமிட்டி ரிப்போர்ட்டைப் பார்க்கும்போது, அதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைகளை நான் எடுத்துக் கூற விரும்புகின்றேன். அது எந்த எந்த விதங்களில் விவசாயிகளுக்கு பயன் உள்ளதாகவும் பயன் இல்லாததாகவும் இருக்கும் என்பதையும் சொல்ல விரும்புகின்றேன். இன்றைக்கு புஞ்சைக்கு எடுக்கப்பட்டுள்ள வரி, தரம் தீர்வை ஏக்கருக்கு ஒரு ரூபாய், அல்லது பனிரண்டு அணாக்கள் தான் இருக்கும். அது போக, இப்பொழுது இருக்கின்ற செஸ்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. நிலத் தீர்வை ஒவ்வொரு ரூபாய்க்கும் 20 காசு கல்வி செஸ் என்றும், 13 காசு மேல் வரி என்றும் 195—-ம் ஆண்டு சட்டப்படி வசூலிக்கப்படுகிறது. ஆகவே, அப்படிப் பார்க்கும்போது, ஏறக்குறைய ரூபாய்க்கு 10 அணா வரை செஸ்களாகவும் ஸர்சார்ஜ்களாகவும் கொடுக்க வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. அது தவிர 45 காசு பஞ்சாயத்து யூனியன் செஸ் வேறு இருக்கிறது.

ஆகவே, இப்பொழுது இருக்கும் வரிகளை எடுத்துப் பார்த்தால், சலுகை கிடைப்பதைவிட அதிகமாகவே கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலை இருக்கிறது. அதோடு, பஞ்சப் பகுதி, விவசாய மக்கள் இருக்கிறார்கள். இவர்கள் நிலைமை இன்னும் மோசமானது. இந்த அரசாங்கம் இவைகளையெல்லாம் எடுத்துவிட்டு, கெய்வார் ரிப்போர்ட்டின் அடிப்படையில் புதிய முறையில், பாசனத்தின் அடிப்படையில், பாசனத் தீர்வை என்று போட்டால் மிக நன்றாக இருக்கும். கெய்வார் கமிட்டியின் ரிப்போர்ட்டில் குறைபாடுகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டேன். அவர் நிலத்தை, பாசனத்திற்குத் தக்கவாறு நாலு ஐந்து வகைகளாகப் பிரிக்கிறார்கள், 8 மாதம் பாசனம் பெறும் நிலங்கள், 6 மாதம் பாசனம் பெறும் நிலங்கள், 4 மாதம் பாசனம் பெறும் நிலங்கள் என்றெல்லாம் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொன்றிற்கும் இத்தனை ரூபாய் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மிகவும் நல்ல யோசனை. காலையிலேகூட அமைச்சர் குறிப்பிட்டார்கள், ஒரே பாசனத்தில் பயன் பெறும் பலவேறு நிலங்களுக்கும் வேறு வேறு வகையான வரிவிகிதங்கள் இருக்கின்றன என்று. ஒன்றுக்கு ரூ. 9 என்றும், மற்றொன்றுக்கு ரூ. 4 என்றும், எங்கே பார்த்தாலும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன, என்பதெல்லாம் கெய்வார் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது, ஒன்று சொல்ல விரும்பு

ரிப்போர்ட்டை மட்டுமே நம்பிக் கொண்டிராமல், அதிகாரிகளுடைய ரிப்போர்ட்டை மட்டுமே நம்பிக்கொண்டிராமல், ரூபாய்க்கு நான்கணா சாகுபடி காணப்பட்டிருக்குமானால். அப்பொழுது அடியோடு விதிகளையெல்லாம் கவனிக்காமல், அங்கேயிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய சிபாரிசின் பேரில், நிலைமை எப்படியிருக்கிறது என்று நிலைமையை அறிந்து, பஞ்ச நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டும். பஞ்ச நிவாரணத்திற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது போதாது. அதை அதிகப்படியாக ஒதுக்கிக் காரியங்கள் செய்யவேண்டுமென்று கேட்டு உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*திரு. பி. எம். முனுசாமி கௌண்டர்: மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம், நிலவரித்துறை பஞ்சத்துயர்த் தணிப்பு (Famine relief) ஆகிய மானியக் கோரிக்கைகளின் பேரில் எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நிலவரித் துறையைப் பொறுத்தவரையில், இப்பொழுது மட்டுமல்ல, இருபதாண்டுகளாக, நிலவரி நிலவரி என்று பேசப்பட்டு வருவது எல்லோருக்கும் நன்கு தெரியும். சுதந்திரம் அடைவதற்கு முன்பே கூட, நில வரியை எடுத்துவிட வேண்டும் என்று காங்கிரஸ் சொல்லிக் கொண்டு வந்தது. பின்பு காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த காலத்தில், ஓரளவு எந்த எந்த முறையில் நில வரியைக் குறைக்க வேண்டுமோ அதைக் குறைத்து, அவர்களுக்கு நல்ல முன்னேற்றப் பாதையில் கொடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்திக் கொண்டு வந்ததோடு கூட, அவர்கள் 1967-இல் மீண்டும் பதவிக்கு வருவார்களானால், அவர்கள் நில வரி நஞ்சை, புஞ்சைத் தீர்வை பூராவையுமே எடுத்துவிடுவதாகத்தான் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக காங்கிரஸ் ஆட்சிக்கு வராவிட்டாலும், நம்முடைய புதிய அரசு பதவி ஏற்ற பிறகு அவர்கள் விவசாயிகளின் பேரில் அக்கறை கொண்டு, நில வரி என்பதையே எடுத்துவிட வேண்டும் என்று அவர்கள் எந்த எந்த வழியில் உதவி செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும் என்ற அக்கறையோடு, அவர்கள் 1-7-1967 முதல் புஞ்சை நிலத்திற்கு அடிப்படை வரியை மாத்திரம் நாங்கள் நீக்கிவிடுகிறோம் என்ற அறிக்கை வெளியிட்டார்கள். அதுமட்டுமல்லாமல், அவர்கள் அந்த வரி வசூலிக்கக் கூடிய மற்ற செஸ்களையும் விலக்கியிருப்பார்களானால் மிக மிக வரவேற்கத் தக்கதாக இருக்கும். ஒரு பக்கம் நிலத் தீர்வை அடிப்படையில் நாங்கள் வரியை எடுத்துவிட்டோம் என்று சொல்லிக் கொண்டு, 12 காசு நில செஸ் என்றும், 20 காசு கல்வி செஸ் என்றும், மேல்வரி (சர்ச்சார்ஜ்) 13 காசு என்றும், இம்மாதிரியான வகையில் நாம் அவர்களிடம் வசூலிக்க வேண்டும் என்று சொல்லி, மணியக்காரர்கள், கிராமக் கருணீகர்கள் போகும்போது, கிராம மக்கள் படும் துயரம் மிகவும் பரிதாபத்துக்குரியது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இவர்கள் கிராம மக்களிடம் வரி வசூலிக்கப் போகும்போது, 'சர்க்கார் வரியை எடுத்துவிட்டார்களே, மறுபடியும் ஏன் இந்த வரி?' என்று கேட்டு, இவர்கள் பதில் சொல்ல முடியாமல் ஒரே குழப்பமாக இருக்கிறது. இந்த செஸ், சர்ச்சார்ஜ் போன்றவற்றினால் அதிகமாக வருவாய் கிடைப்பதாகவும் சொல்ல முடியாது. அப்படிப் பார்க்கும்போது, இந்த செஸ், சர்ச்சார்ஜ் ஆகியவற்றையும் ஏன் எடுத்துவிடக் கூடாது என்றுதான் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

1958-ம் ஆண்டு ஊராட்சிச் சட்டத்தின் கீழ் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தில் ரூபாய்க்கு 45 காசு வீதம் லோகல் சர்ச்சார்ஜ் வசூலிக்க வேண்டும் என்பது உத்தரவு. நீங்கள் வரி போட்டால்தான் மாட்சிங் கிராண்ட் கொடுக்க முடியும், அப்பொழுதுதான் நீங்கள் வேறு புதிய அபிவிருத்தி வேலைகளை எடுத்துச் செய்ய வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சொல்லி அவர்கள் ரூபாய்க்கு 45 காசு லோகல் சர்ச்சார்ஜ் விதித்து வசூலிக்கக்கூடிய நிலை இருக்கிறது. கிருஷ்ணகிரி தாலுக்காவில் வேப்பனப்பள்ளி யூனியனை



எடுத்துக் கொண்டால், அது மிகவும் வறண்ட பிரதேசம். அங்கிருக்கும் மக்களெல்லாம் மானாவாரி நிலத்தைக் கொண்டவர்கள். அங்கு எந்த விதமான தொழில்களோ மற்ற வசதிகளோ இல்லை. அப்படிப்பட்ட வறண்ட பிரதேசங்களில் ஒரு பைசா உயர்த்தினாலும்கூட, அங்குள்ள ஜனங்கள் மத்தியில் நாம் தலைகாட்ட முடியாது. அந்த நிலைகளையெல்லாம் அரசாங்கம் கவனத்தில் கொண்டு, இந்த நில வரி, சர்ச்சார்ஜ் முதலியவற்றையெல்லாம் எடுத்துவிட வேண்டும். பஞ்சாயத்து யூனியன் லோகல் சர்ச்சார்ஜ் போட வேண்டும் என்று இருப்பதையும் எடுத்துவிட்டு மாட்சிங் கிராண்ட் கொடுக்க வேண்டியதை அந்தந்தப் பஞ்சாயத்துக்கு ஜனத்தொகைக்குத் தகுந்தாற்போல் சர்க்காரிலிருந்து பணம் கொடுத்தால் நன்றாக இருக்கும். அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

புஞ்சை நிலத்திற்கு அடிப்படை வரியை எடுத்துவிட்டோம் என்று சொல்லும்போது, நஞ்சை நிலம் மாத்திரம் என்ன பாவம் செய்தது என்றுதான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். பணம் அதிகமாக வருகிறது என்று ஒரு நண்பர் குறிப்பிட்டார், உண்மைதான். அதற்கும் ஒரு வரம்பு இருக்கிறது. யார் யாரிடத்தில் எப்படிப் பணம் வசூலிக்க வேண்டும் என்பதையும் நாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்து பவானிசாகர், கிருஷ்ணகிரி நீர்த் தேக்கங்களைக் கட்டி, அவற்றின் மூலம் நீர்ப்பாசன வசதிகள் செய்யப்படுகின்றன. அம்மாதிரி சர்க்காராலேயே நிரந்தரமான நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்திருக்கக்கூடிய இடங்களில் அவர்கள் எவ்வளவு அதிகமான வரி போட்டாலும் அதை அங்குள்ளவர்கள் தாங்கிக் கொள்ள முடியும் என்பதை அவர்கள் நல்லதொரு நிபுணர் கமிட்டி போட்டு வசூலிப்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால், அந்த சந்தர்ப்பத்தில், கிணறுகளிலிருந்து ஏற்றம், பம்பு செட்கள் போன்று வைத்து, இறைத்துப் பாசன வசதியைத் தாங்களே செய்து கொண்டு விவசாயம் செய்பவர்களும், சர்க்காரின் நிரந்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் பாசனம் பெற்று விவசாயம் செய்பவர்களுக்கும் ஒரே விதமான நஞ்சைத் தீர்வை போடுவதுதான் பரிதாபத்திற்குரிய நிலையாகும். அதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, கிணற்றுப் பாசன வசதி யார் யார் எங்கெங்கு அவரவர்களே செய்துகொண்டு விவசாயம் செய்கிறார்களோ, அவர்களுக்கு நிலவரி முழுவதையும் அறவே எடுத்துவிட வேண்டும். அப்பொழுதுதான், நாம் மிகத் தீவிரமாகச் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். அவர்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளித்து வரிச் சுமையைக் குறைத்தால்தான் தமிழகத்தில் உணவு உற்பத்தியை அதிகமாகச் செய்யும் நிலை ஏற்படும். ஒரு கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கும்போது, கிணறு வெட்டி, ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து பம்ப் செட் வைத்து சாகுபடி செய்வதற்கும் ஒரேமாதிரியான வரி, நீர்ப்பாசன வசதி செய்யப்பட்ட ஆயக்கட்டுக்கு உட்பட்ட நிலத்திற்கும் அந்த வரி என்று சொல்லும்போது, குடியானவர்களுக்கு அதிகமான கஷ்டத்தை விளைவிக்கிறது. தாங்களே பாசன வசதி செய்து கொண்டு, அதற்காகப் பணம் செலவழித்துக்கொண்டவர்கள் இந்த வரி விதிப்பினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை மாத்திரம் நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதை நன்றாக ஆலோசித்து, எங்கெங்கு நீர்ப்பாசன அணைக்கட்டு மூலமாகத் தண்ணீர் கிடைக்கிறதோ அவர்களுக்கு மாத்திரம் தீர்வை விதித்து, மற்றவர்களுக்கு முழுவதையும் எடுக்கக்கூடிய நிலைமையைச் செய்தால், உண்மையிலேயே உணவு உற்பத்தி அதிகமான அளவுக்கு ஏற்படும். வரியும் நமக்கு எந்தக் கட்டத்தில் வரும் என்பதை நிர்ணயித்துக் கொள்ள முடியும். கைவார் ரிப்போர்ட்டில் பார்க்கும்போது, ஐந்து கட்டங்களில் நீர் வரி வசூல் செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதல்ல. அது பற்றிய ஆராய்ச்சிக்கு இப்பொழுது நாம் போக வேண்டிய அவசியம் இல்லை. இந்த ஒரே ஒரு நிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கிறேன். உதாரணமாக காளிங்கராயன் வாய்க்கால் பகுதியில் மூன்று போகம் நஞ்சை சாகுபடி செய்கிறார்கள். அங்கே நிலவரி ரூ. 12 தான் ஒரு ஏக்கருக்கு. அதே சமயத்தில், கீழ் பவானி பாசனப் பகுதியில், தண்ணீர் ஒரு போகத்திற்குதான் கிடைக்கிறது, அதுவும் ஒரு வருஷத்திற்குக் கிடைக்கிறது, மற்ற வருஷத்திற்கு இல்லை, இந்த நிலையில் ஒரு ஏக்கருக்கு வரி சாதாரணமாக ரூ 15 வசூல் செய்கிறார்கள். இப்படியே தமிழ்நாடு பூராவிலும் பார்த்தால், பழைய காலத்தில இப்படியெல்லாம் வரிபோட்டிருந்தார்கள். பிறகு புதிய பாசனத் திட்டங்களில் வரும் நிலங்களுக்கு ஒரு முறை என்று இப்படி வேறு வேறு முறைகள் இருக்கின்றனவே தவிர, விஞ்ஞான அடிப்படையில் இருக்கிறதா என்றால் இல்லை.

கெய்வார் அவர்கள் பிரச்சினையை அணுகும் விதம், எங்கெங்கே வித்தியாசம் இருக்கிறது என்பதெல்லாம் மிகவும்பாராட்ட தக்கதுதான். இருந்தாலும், கெய்வார் அவர்கள் ஒரு ஐ.ஸி.எஸ். அதிகாரி எப்படி அறிக்கை தயாரிப்பாரோ அந்த மாதிரிதான் தயாரித்திருக்கிறார்கள். அதை எப்படித் தயாரித்திருக்க வேண்டும் என்றால், சில நிபுணர்களையும் சேர்த்திருந்தால் இன்னும் நன்றாகப் பயனளிக்கக் கூடியதாக இருந்திருக்கும். 'ரேஷனல் பேஸிஸ்' என்று சொல்லக்கூடிய அளவில் இருந்திருக்கும். இப்பொழுது பாசனத் திட்டங்கள் பல இருக்கின்றன தஞ்சாவூர் டெல்டா, லோயர் பவானி இப்படிப் பல திட்டங்கள் இருக்கின்றன. இவற்றிலெல்லாம் பாசன முறைகளைப் பார்த்தால், சிலவற்றில் ஒரு க்யூஸெக்ஸ் 20 ஏக்கருக்குப் பாய்கிறது. இன்னும் சிலவற்றில், ஒரு க்யூஸெக்ஸ் தண்ணீர் 30 ஏக்கருக்குப் பாய்கிறது. மற்றும் சில இடங்களில் 60 ஏக்கருக்குப் பாய்கிறது. எஞ்ஜினியரிங் பாஷையில் சொல்ல வேண்டுமானால், அதை 20 ஏக்கர் ட்யூடி, 30 ஏக்கர் ட்யூடி, 60 ஏக்கர் ட்யூடி என்று குறிப்பிடுவார்கள். இப்படி 6 மாதம், 8 மாதம் என்று பாசனம் பெறும் அடிப்படையை வைத்துக்கொண்டு, கெய்வார் ரிபோர்ட் இவ்வளவு தண்ணீர் நிலத்திற்குக் கிடைக்கிறது என்ற அந்த அடிப்படையில், வரிவிகிதத்தின் அடிப்படையைச் சிந்தித்து, அறிக்கைத் தயாரிக்கப்படவில்லை. சில நிலங்கள் மோசமாக இருக்கின்றன. வேறு சில நிலங்கள நல்ல தரமான நிலங்களாக 'ஃபொடைல்' நிலங்களாக இருக்கின்றன. அந்த மாதிரித் தரத்தின் அடிப்படையில், தரத்தைக் கவனத்தில் கொண்டு அறிக்கை தயாரிக்கப்படவில்லை. இந்த கெய்வார் ரிபோர்ட்டில் அணுகும் முறை நன்றாக இருக்கிறது. ஆனால் ஆராய்ந்து பார்த்து, தெள்ளத் தெளிவாக கண்டாராய்ந்து சமர்ப்பித்திருக்கிறார்களா என்றால் இல்லை. ஒரு நிர்வாக அதிகாரியின் ரிபோர்டைபோல, வரியின் அளவு பாதிக்கப்படக் கூடாது என்ற அடிப்படை நோக்கத்தில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கெய்வார் ரிபோர்ட்டின், 'ஸ்பிரிட்' என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அந்த அடிப்படைத் தத்துவத்தை வைத்து, இன்னும் விவசாய நிபுணர், எஞ்ஜினியரிங் நிபுணர் இவர்களை வைத்துக் கொண்டு, எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது நிலத்தின் வளம் என்ன, இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு நிர்ணயிக்க வேண்டும். அதற்கு—நான் நினைக்கிறேன் கமிஷன் என்றாலே அது ஒரு வியாதியாகப் போய்விட்டது—ஒரு நிபுணர்கள் கமிட்டி என்று போட்டு, அதைபற்றி விரிவாக, நன்றாக ஆராய்ந்தால் நலமாக இருக்கும். அவர்கள் கொடுத்திருப்பது நல்ல யோசனை என்று சொல்ல விரும்புகிறேன். எப்படியோ விவசாயிகளின் பளுவைக் குறைக்க வேண்டும் என்கிற நோக்கத்தைப் பாராட்டுகிறேன்.

நில வருவாய்த் துறைக்கு பல பணிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மைனர் இர்ரிகேஷன் டாங்க்ஸ் இதையெல்லாம் வருவாய் டிபார்ட்மெண்டில் இருக்கிறது. பாசனத் திட்டங்களிலே, 50 ஏக்கருக்குக் கீழே ஏதாவது சிறிய விவசாயத் தகராறு ஏற்பட்டால், அதை முடிவு செய்யும் பொறுப்பும் இந்த லாண்ட் ரெவினியூ டிபார்ட்மெண்டிடம் தான் இருக்கிறது. அந்த அதிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். வரியை அஸெஸ் பண்ணும் பொறுப்பை வரியை வசூலிக்கும் பொறுப்பை மட்டும் அவர்களுக்குக் கொடுத்து



விட்டு, மற்றபடி தண்ணீர் எப்படி பாய்ச்ச வேண்டும், அதில் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைப்பது, இன்னும் தொழில் நுணுக்கப் பிரச்சினைகளை அது சம்பந்தப்பட்ட இலாகாவின் கையில் கொடுத்தால், விவசாயிகளுக்கும் கஷ்டம் ஏற்படாமல் இருக்கும். தயவு செய்து இந்த விவரத்தை கவனத்தில் எடுத்துக் கொண்டு, பராமரிப்பு, மேற்பார்வை, பெரிய பாசனத் திட்டங்களில், லோயர் பவானி போன்றவற்றில் ஏற்படும் முறைத் தகராறுகள் இவையெல்லாம் இப்பொழுது ரெவின்யூ டிபார்ட்மெண்டில் இருக்கிறது. அந்த அதிகாரங்களை பொதுப்பணித் துறைக்குக் கொடுத்து, அந்த வகையில மாற்றம் செய்யப்பட்டால், விவசாயிகளுக்கு விமோசனம் கிடைக்க வாய்ப்பாக இருக்கும். ரெவின்யூ டிபார்ட்மெண்டிடம் இருக்கும் காரணத்தால, தொழில் நுணுக்க தகராறு பற்றிக் கேட்டால், அவர்களுக்குத் தெரியவில்லை. பப்ளிக் ஒர்க்ஸ டிபார்ட்மெண்டைக் கேட்டால், எங்களிடம் அது இல்லை என்று சொல்லுகிறார்கள். அதையும் அமைச்சர் கவனிக்க வேண்டும்.

பஞ்சத்தணிப்பு பற்றிக் குறிப்பிடும் போது, சில பிரதேசங்கள் தமிழ் நாட்டில் என்றைக்கும் பஞ்சப் பிரதேசங்களாகவே இருந்து வருகின்றன. அன்றொரு நாள்கூட அமைச்சர் பல்லடம் பகுதி, உயரமான பகுதி, காங்கயம் பகுதி, சேலத்தில் சில பகுதிகள், இன்னும் ராமநாதபுரத்தில் சில பகுதிகள், மிக மிகக் குறைந்த சராசரி வருஷ மழையை அடைந்து பற்றாக்குறைப் பிரதேசங்களாக இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட பற்றாக்குறை பிரதேசங்களைக் கவனிக்கும் போது, இன்றைக்கு இருக்கும் ஃபேமின் கோட், ஹைதர் காலத்தது என்று சொல்லாவிட்டாலும், இங்கிலீஷ்காரன் 100, 150 வருஷங்களுக்கு முன், அன்றைக்கு இருந்த நிலையையில் இந்த 'ஃபேமின் கோட்' நிர்ணயிக்கப் பட்டது. கண்டிப்பாக அதன் அடிப்படை மாற்றப்பட வேண்டும். இன்றைக்கு இருக்கும் பிரச்சினைகள் எவ்வளவோ மாறியிருக்கின்றன. இன்றைக்குக் கிராமம், நகரம் என்பது அந்த அளவோடு நின்று விடாமல், எங்கேயோ ஏதாவது ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டால், அதனுடைய எதிரொலி உலகம் பூராவும் கேட்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் இருக்கிறோம்.

இன்றைக்கு லண்டனில் கோல்ட் மார்க்கெட்டில் ஏதோ ஒன்று நடக்கிறது, அதனால் வெளிநாடுகளில் நெருக்கடி ஏற்பட்டு அது மற்ற தேசங்களையும் பாதித்து, அதன் காரணமாகப் பலதேச மாநாடு கூட்டி நிலைமைகளை ஆராய்ந்து, செயல்களை நிர்ணயிக்கும் அளவிற்குப் பொருளாதார நிலைமைகள் வளர்ந்திருக்கின்றன. ஆகவே, அன்றைக்கு நிர்ணயிக்கப்பட்ட விதிகளைக் கொண்ட இந்த 'ஃபேமின் கோட்' இன்றைக்குள்ள நிலைமைகளுக்கு, இந்தக் காலத்திற்கு ஒவ்வாதது. ஆகவே, அதை எடுத்தெறிந்து விட்டு புதிய பஞ்ச நிவாரண விதிகளை, முறைகளை வகுத்தாக வேண்டும். அன்றைக்கு நிர்ணயித்த கோடில் என்ன சொல்கிறார்கள், ஆடுமாடுகள் இடம் விட்டுப் போக வேண்டும், மேய்ச்சலுக்கு அலைய வேண்டும் விவசாயிகளுக்கு கூலிக் குறைவு இருக்க வேண்டும், அதிகப்படியாக வேலையில்லா நிலைமை ஏற்பட்டிருக்க வேண்டும், இன்னும் எத்தனையோ கட்டுப்பாடுகள், இவைகளெல்லாம் இருந்தால்தான் பஞ்சப் பிரதேசம் என்று தீர்மானிக்கலாம். அப்பொழுதுதான் நிவாரணம் கொடுக்கலாம் என்று அந்தக் கோடில் இருக்கிறது. எந்த நிலை இருந்தால் பஞ்சம் என்று நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதற்கு விதி முறைகள் இருக்கின்றன. பஞ்ச நிலைமை என்று நிர்ணயம் செய்ததற்குப் பிறகு, எந்த விதமான நிவாரண வேலை மேற்கொள்வது என்றும் வரையறுக்கப் பட்டிருக்கிறது. பஞ்ச நிவாரணம் சம்பந்தமான விதிமுறைகளெல்லாம் காலத்திற்கு ஒவ்வாதனவாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து புனரமைக்க வேண்டும், கோவை மாவட்டம் மிகவும் பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது. சென்ற இரண்டு வருஷங்களாகவே மழை இல்லாததால் அந்த மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஹோசூர் பற்றி நண்பர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். அங்கே பெரிய அளவுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது, உத்தனபள்ளியில் 235 குளங்கள் வற்றிவிட்டன என்று சொன்னார்கள். ஆகவே கலெக்டருடைய

[திரு. பி. எம். முனுசாமி கௌண்டர்] [1968 மார்ச் 18

வேளாண்மை வருமான வரியைப் பொறுத்தவரையில், 1965-ம் ஆண்டில் காபி, டீ, ரப்பர், ஏலம், சின்கோனா போன்றவற்றுக்கு வருமான வரி விதிக்கப்பட்டது. பிறகு, மூன்று ஆண்டுகள் சென்ற பிறகு, எல்லா நஞ்சை தானியங்களுக்கும், 12½ ஏக்கருக்கு மேற்பட்டு நிலம் வைத்திருப்பவர்களெல்லாம் வருமான வரி போடக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது. தற்போது 7½ ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களும் அத்தகைய தானியங்களுக்கு வருமான வரி கட்டவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் தற்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். கமர்ஷியல் க்ராப் என்று சொல்லக்கூடிய, நிலக் கடலை, மா, தென்னை, புகையிலை போன்றவைகளுக்குத்தான் அந்த நிலை இருக்க வேண்டும். நெல் போன்றவற்றிற்கு வருமானவரி இருக்கக்கூடாது. அப்பொழுதுதான் நாமெல்லோரும் முக்கியமாகக் கருதிக்கொண்டிருக்கக்கூடிய உணவு உற்பத்தியில் அதிகக் கவனமும் அக்கறையும் செலுத்தி, உற்பத்தியைப் பெருக்கி, பற்றாக்குறை நிலைமையைப் போக்க முடியும். அப்பொழுதுதான் தமிழக அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும். இல்லாவிட்டால் நிலத்தில் உழைப்பவர்கள் அதிலே அக்கறை கொள்ளாமல், வேறு லாபகரமான தொழில்களுக்குப் போகக்கூடிய நிலை ஏற்பட்டு விடும். அரசுக்குத்தான் கெட்ட பெயர் ஏற்படும். அதன் மூலம் அதிகமான வரி இல்லை என்பதும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கும் புள்ளி விவரங்களிலிருந்தும் நன்கு தெரிகிறது. 1960–61-இல் ரூ. 1·76, 1966–67-இல் ரூ. 1·68 என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் அதிகமான வருவாய் இல்லை என்று தெரிகிறது.

பஞ்சத் துயர் தணிப்பைப்பற்றி சில வார்த்தைகள் கூறி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று இருக்கிறேன். முக்கியமாக எங்கள் பகுதி ஹோசூர் தாலூகா, கிருஷ்ணகிரி தாலூகாவைச் சேர்ந்த வேப்பனப்பள்ளி பஞ்சாயத்து யூனியன் பகுதியில் வருஷா வருஷம் பஞ்சம் பஞ்சம் என்ற நிலைமை இருந்துகொண்டு வருகிறது. வருஷா வருஷம் நிவாரணங்களும் ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இந்த வருஷத்தில் அந்த நிலை இல்லை என்று சொல்வதற்கில்லை. சராசரியாக வருஷா வருஷம் இதே நிலை இருந்து வருகிறது. இனியும் அந்த நிலை ஏற்படாமல், நடவடிக்கைகள் எடுப்பதோடு கூட, நிவாரண வேலைகளை ஏற்படுத்தித்தரவேண்டும் என்றும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதிலும் சிறிய நீர்ப் பாசனம், பெரிய நீர்ப்பாசனம் செய்யலாம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். சிறிய நீர்ப்பாசனத் திட்டம் வேப்பனப்பள்ளி பஞ்சாயத்து யூனியனில் ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. அங்கே மார்க்கண்டேய நதியில் தீர்த்தம் என்ற இடத்தில், பாலனப்பள்ளி அணைக்கட்டு கட்ட வேண்டும். இது பத்து வருஷங்களாக பரிசீலனையில் இருந்து வருகிறது. பத்து லட்ச ரூபாய் செலவழித்துக் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. இதை உணவு உற்பத்தி இலாகா மூலமாகவோ, எஸ். எம். ஐ. பி. மூலமாகவோ செய்தால், சுமார் ஐந்து ஏரிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்பட்டு, சுமார் ஒரு ஆயிரம் ஏக்கராக்களுக்குப் பாசன வசதி ஏற்பட்டு அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு நல்ல நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அந்தப் பகுதிக்குப் பஞ்ச நிவாரண வேலையாகச் செய்துதர வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதைச் செய்துகொடுத்தால், அந்தப் பகுதியில் ஒவ்வொரு வருஷமும் பஞ்சம் பஞ்சம் என்று சொல்லக்கூடிய நிலைமாறி நமக்கு உணவு உற்பத்தி அதிகமாக ஏற்படக்கூடும். பஞ்சத் தணிப்பு வேலையாகவும், உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டமாகவும் பாலப்பள்ளி அணைக்கட்டுத் திட்டத்தை எடுத்துக் கொண்டு நிறைவேற்றித் தரவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிக் கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடிக்கின்றேன். வணக்கம்.

*திரு. ஏ. அ. சுப்பராஜா : கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
பிற்பகல் 3–30 இன்றைய மானியத்தின் மீது நான் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விற்பனை வரியைப் பொருத்தமட்டில் ஒரு முனை வரி, பலமுனை வரி என்று இருக்கின்றன. பலமுனை வரியினால் நல்ல ஆதாயம் கிடைக்கும் என்று அபிப்பிராயம் வைத்திருக்கிறார்கள். உண்மையிலே பலமுனை



1968 மார்ச் 18] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

விற்பனை வரியிலே கிடைக்கக்கூடிய வருமானத்தில் பாதிதான் இப்பொழுது கிடைக்கிறது. ஒரு முனை வரியைப் போடுவதால் நம்முடைய பளு குறைந்து, வியாபாரிகளுக்கு பல கணக்குகள் வைத்துக் கொள்கின்ற நிலைமை மாறிவிடும் என்பது என்னுடைய கருத்தாகும். இதைப்பற்றி கொஞ்சம் விளக்க விரும்புகிறேன்.

பொதுவாக ஒரு வியாபாரி கடலைக் கொட்டையை எடுத்துச் சென்றால் வாங்கும்போது பர்சேஸிங் டாக்ஸ் கொடுக்க வேண்டும். அதை வேறு ஒருவருக்கு விற்கும்போது விற்பனை வரி கொடுக்கவேண்டும். அந்தக் கடலைக்கொட்டையை அந்த காம்பவுண்டுக்குள்ளிருக்கும் மில்லிலே கொண்டு போய் எண்ணெய் எடுத்தால் அதற்கு ஒரு டாக்ஸ்—இப்படியாக பல முனைகளிலும் அவன் வரி கொடுக்கவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது வியாபாரி நாம இத்தனை இடங்களிலும் வரி கொடுக்க வேண்டியிருக்கின்றதே என்று எண்ணுகிறான். கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் சேர்ந்து 10 சதவிகிதம் வரைக்கும் வரி கொடுக்கும் நிலை ஏற்படுகிறது. சாதாரணமாக நாட்டுச்செக்கிலிட்டு எண்ணெய் பிழிந்தால் அதற்கு டாக்ஸ் கொடுக்கவேண்டியதில்லை. அதைவிட்டு, மில்லிலே எண்ணெய் பிழியும்போது அதற்கும் டாக்ஸ் போடுகிறார்கள். இதற்காக வியாபாரி பலவிதமான கணக்குகளை ஏற்படுத்திக்கொண்டு அரசாங்கத்திற்கு காட்டிக்கொண்டிருக்கிறான்.

என்னுடைய தொகுதியான ராஜபாளையத்தில் கூட்டுறவு முறையில் ஒரு மருந்துக்கடை இருக்கிறது. தனியார் துறையிலும் மருந்துக்கடைகள் வைத்து நடத்துகிறார்கள். கூட்டுறவு முறையாக இருந்தாலும் எல்லாவற்றிற்கும் சேல்ஸ் டாக்ஸ் போட்டாக வேண்டும். ஆனால் யாராவது தனியார் கடைக்குப் போய் எந்தச் சரக்காவது வேண்டுமென்று கேட்டால், பில் போடாமல் சரக்கு கொடுக்கட்டுமா என்று கேட்கிறார்கள். பில் போட்டால் அதற்கு சேல்ஸ் டாக்ஸ் போடவேண்டுமென்ற காரணத்தால் பில் போடாமல் சரக்கு கொடுக்கட்டுமா என்று கேட்கிறார்கள். ஆகவே ஒரேயடியாக சரக்கு எங்கு உற்பத்தியாகிறதோ அங்கேயோ அல்லது முதலில் யார் வாங்குகிறார்களோ அவர்களிடமோ I ஷெட்யூல், II-வது ஷெட்யூலில் போடுவதுபோல முதலிலேயே 10 சதவிகிதம் வரி போட்டுவிடுவது நல்லது என்று கருதுகிறேன். திரு. லோகநாத முதலியார் ரிப்போர்ட்டில் சிக்கரி, காப்பிக்கு 5 பர்சென்ட், பெர்ட்டிலைஸர்ஸ் 3 பர்சென்ட் என்று போடப் பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு ஏதோ உதவி செய்யவேண்டுமென்ற எண்ணத்தினால் 3 பர்சென்ட்டை 2 பர்சென்டாக்கி 5 பர்சென்ட்டை 6 பர்சென்டாக்கி 'ஆட்டைத் தூக்கிக் குட்டியில் போட்டு, குட்டியைத் தூக்கி ஆட்டில் போட்டு' இப்படி ஏதேதோ செய்திருக்கிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும்.

விற்பனை வரி விஷயத்தில் கீழே இருக்கக்கூடிய ஏ.சி.டி.ஓ.விலிருந்து எல்லோரும் கண்டிப்பாக இருக்கத்தான் வேண்டும். சமீபத்தில் அதிகாரிகள் கீழே உள்ளவர்களுக்கு ஒரு சர்க்குலர் அனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது. அதாவது இருபது பர்சென்ட் கூடுதலாக இருக்க வேண்டுமென்று தெரிய வருகிறது. அதாவது இராஜபாளையத்தைப் பொறுத்தமட்டில, சேல்ஸ் டாக்ஸ் 3 லட்சம் ரூபாய் என்றால் சிமெண்டில் ஒரு லட்சம், பலசரக்குகளில் ஒரு லட்சம், மற்ற காட்டன் போன்றவற்றில் ஒரு லட்சம் என்று கணக்கு வைத்துக்கொண்டு வசூல் செய்கிறார்கள். சிமெண்டில் கூடுதலாக ஒன்றும் கிடைக்கவில்லை. விற்பனை வரி வசூலில் எங்கு பார்த்தாலும் கெடுபிடிதான் அதிகமாக இருக்கிறது. அந்தக் காலத்தில் 'ஏதோ எமன்தான் எழுதிவைத்தான், இது என் தலையெழுத்து' என்று சொல்வார்கள். அதேமாதிரி அதிகாரிகள் கெடுபிடி செய்து வசூலிக்கிறார்கள். அரசாங்கம் இதை உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். அதிகாரிகளில் எல்லோரும் ஒரேமாதிரி என்று சொல்லவில்லை. ஒரு சிலர் ரொம்ப மோசம். இன்றைக்கு 4 லட்சம் ரூபாய் கட்டித்தான் ஆகவேண்டுமென்று வியாபாரியிடத்தில் சொல்லும்போது அவர்கள் ஜாமீன் எழுதிக் கொடுத்தால், எழுதி வாங்கிக்கொள்ளலாம். தற்போது அந்த 4 லட்சம்

ரூபாயை கட்டிவிட்டுத்தான் மறுவேலை பார்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அவனுடைய சொத்தை ஜாமீன் எழுதி வாங்கிக்கொண்டால், அவன் மேலே சென்று தீர்ப்பளித்தபிறகு வசூல் செய்தால் நன்றாக இருக்கும். இந்த நிலைமையில் அசெஸிங் அதாரிடி, டி. சி. டி. ஓ., ஜே. சி. டி. ஓ., அப்பலேட் கமிஷனர், மேலே ரெவினியூ போர்டு இவைகள் எல்லாம் இருக்கின்றன. இவைகள் எல்லாம் சர்க்காருக்கு வருவாயைப் பெருக்கித் தரவேண்டுமென்ற நிலையில்தான் செயல்படுகின்றன.

இன்றைக்கு வியாபாரிகளிடத்தில் ஒரு பயம் மிகுந்திருக்கிறது. ஏ. சி. டி. ஓ., டி. சி. டி. ஓ. யார் வந்தாலும் பயம். தப்பு செய்கிறவர்களுக்குத்தான் பயம் அதிகம். வியாபாரிகள் பயத்தை விட்டு, தங்களுடைய எண்ணத்தைத் தைரியமாக எடுத்துச் சொல்வதற்கு முன்வர வேண்டும். அரசாங்கத்திற்கும் வியாபாரிகளுக்கும் உறவு கொள்ளும் வகையில், இடையில் பப்ளிக் ரிலேஷன் ஆபீசர் அல்லது பப்ளிக் லையஸான் ஆபீசர் ஏதாவது ஒரு பெயரில் ஐ. ஏ. எஸ். அளவில் ஒருவரைப் போட்டால், நமக்குக் கிடைத்திருக்கும் இந்த காமதேனுவை, கற்பக விருட்சத்தைக் காப்பாற்ற முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். வியாபாரிகள் தங்களுடைய குறைகளை எடுத்துச்சொல்ல, தங்களுடைய கஷ்டங்களை எடுத்துச்சொல்ல வாய்ப்பு அளிக்கவேண்டும். இதன் மூலம் அதிகாரிகளுக்கும் சில நல்லவைகளை எடுத்துச்சொல்ல முடியும். எல்லா அதிகாரிகளையும் கூட்டிவைத்து இதற்கு வழி என்ன என்பதைப் பற்றிச் சிந்தித்து நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்ச நிவாரணம் பற்றி எல்லோரும் பேசினார்கள். வெள்ளைக்காரன் காலத்தில் கொடுத்த அதே டெபனிஷன்தான் இந்த நவநாகரீகமான காலத்திலும் இதற்கு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் படிக்கும்போதுகூட இதைக் கொஞ்சம் மனம் கூசிக்கொண்டுதான் படித்தார்கள். ஒரு பக்கத்திலே மோசமான பஞ்ச நிலைமையென்றால் அடுத்த ஜில்லாவில் நல்ல மழை பெய்து இருக்கும். இந்தியா பூராவிலும் பஞ்சம் ஏற்படும்போதுதான் பஞ்சம் என்று கொள்ளக்கூடாது. எந்தெந்த இடங்களில் பஞ்சம் இருக்கிறது, அல்லது வரும் என்பதை யோசித்து முன்கூட்டியே நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கூட எங்கள் ராஜபாளையம் பகுதியைப் பார்த்தால் தெரியும். அது பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டார்கள். ஆனால் இன்னமும் அங்கே கடன் வசூல் மிகக் கெடுபிடியாக இருக்கிறது. கொஞ்சம் அடுத்த அறுவடை வரைக்குமாவது வசூல் செய்வதை நிறுத்திவைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. சி. கே. சின்னராஜி :** உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மானியத்தை வரவேற்று பொது விற்பனை வரி மானியத்தின் மீது எனது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக விற்பனை வரி எல்லா தானியங்களுக்கும், சரக்குகளுக்கும் விதிக்கப்பட்டு வருவது தெரிந்த விபரமே. இப்போது புதிதாக ஜனவரி முதல் தேதியில் இருந்து வெல்லத்திற்கு விற்பனை வரி விதித்திருக்கிறார்கள். அதுவும் 3 சதவிகிதம் பலமுனை வரியாகக் கட்ட வேண்டுமென்று சர்க்கார் விதித்திருக்கிறது. வெல்லத்தின் மீது விற்பனை வரி போடப்பட்டிருப்பது அதிக பளுவாய்த் தெரிவதாக தமிழகம் எங்கும் வியாபாரிகள் சொல்லி வருகிறார்கள். இது நமது அரசாங்கத்திற்கும் தெரிந்த விஷயமே. இருந்தபோதிலும் 3 சத விகிதம் என்று போடப்பட்டிருக்கிற வரியை $1\frac{1}{2}$ சதவிகிதம் என்றாவது அல்லது 2 சத விகிதம் என்றாவது போடுவார்களானால் அது மிகவும் நன்றாக இருக்கும். வியாபாரிகளும் வரவேற்பார்கள், ஒத்துழைத்து வரியை பாக்கி இல்லாமல் கட்டிவருவார்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக சர்க்கார் எழுப்பும் எல்லாக் கடன் பத்திரங்களையும்—குறிப்பாக வருடாவருடம் மின்சாரத்துறை எழுப்புகின்ற கடன் பத்திரங்கள், மற்ற சர்க்கார் கடன் பத்திரங்கள் இவற்றை எல்லாம் வாங்குகிறவர்கள் வியாபாரிகள். அந்தக் கடன் பத்திரங்களை வாங்கி



பூர்த்தி செய்து வருகிறவர்கள் வியாபாரிகள்தான். விவசாய மக்களுக்கு அனுகூலம் செய்ய சர்க்கார் எப்படி புஞ்சை நிலத்திற்கு வரியை எடுத்தார்களோ அதுபோல வியாபாரிகளுக்கும் அனுகூலம் செய்ய நான் சொல்கிற இந்தக் கோரிக்கையை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்கள் வடாற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் தாலுகா பஞ்சப் பிரதேசமாக ஆக்கப்படவேண்டும். இதுபற்றி உயர்தரக் கமிட்டியும் சுற்றுப்பயணம் செய்து இந்தத் தாலுக்காவைப் பார்த்தார்கள். இங்கு இருக்கிற சூழ்நிலையைப் பார்த்து குறிப்பு எழுதி வந்திருக்கிறார்கள். இன்று காலையில் பஞ்சப் பிரதேசமாகக் கருதப்படவேண்டிய இடங்களை முதல் அமைச்சர் அவர்கள் படித்தபோது திருப்பத்தூரும் குறிக்கப்பட்டிருப்பதற்கு நன்றி. இதைப்பற்றி மத்திய அரசாங்கத்திற்கு பஞ்சப் பிரதேசமாகக் கருதுவதற்கு சிபார்சு செய்திருப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு திரு அண்ணா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் நான் முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எ. பாலசுப்பிரமணியன் :** துணைத் தலைவர் அவர்களே, சுருக்கமாக ஒன்றிரண்டு விவரங்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். முதலில் வேளாண்மை வருமான வரியிலே வருடா வருடம் கொடுக்கப்பட்டிருக்கும் கணக்கைப் பார்த்தால் வரி விதிப்புக் கேட்பு குறைந்து வருகிறது. வசூலும் குறைந்து வருகிறது. நிலுவை இரண்டு மடங்காகி நிற்கிறது. குறிப்பாக 1960–61-ல் 33 லட்சமாய் இருந்த நிலுவை 1966-67-ல் 62 லட்சமாக நிற்கிறது. புதிய அரசு பொறுப்பேற்றவுடன் இந்த நிலுவையை இப்படியே அதிகரித்துக்கொண்டு போக விடாது என்று நினைத்தேன். இந்த நிலுவையைக் குறைத்து, வசூல் செய்வதற்கு தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

ஏற்கனவே வேளாண்மை வருமான வரியில் செய்யப்பட இருந்த மாற்றத்தை பெரிய நிலக்காரர்கள் எதிர்த்தார்கள் என்ற காரணத்தினால் தற்காலிகமாக அரசு ஓராண்டுக்கு ஒத்திவைத்திருக்கிறது. அடுத்த ஆண்டிலாவது நாம் போட்ட வரி விகிதத்தை மாற்றாது அதை விதிப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விற்பனை வரி சம்பந்தமாக ஏற்கனவே பலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் சிறு கடைக்காரர்களுக்கு வேதனை இருக்கக்கூடாது. அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் இந்த அரசு 10 ஆயிரத்திற்கு மேல் வரி என்று இருந்ததை பதினைந்தாயிரத்திற்கு மேல் வரி என்று உயர்த்திற்று. ஆனால் நிலைமை என்ன? முன்பு பத்தாயிரத்து ஒன்று என்று நிர்ணயிக்கப்பட்டது. இன்றைக்கு பதினைந்தாயிரத்து ஒன்று என்று வைத்து வரி விதிக்கப்படுகிறதே தவிர சிறு கடைக்காரர்கள் யாரும் விலக்குப் பெறவில்லை என்பதான தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு அரசு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தரகுக் கடைகள், கமிஷன் மண்டிகள் இங்கே சரக்குகள் கொண்டு வந்து வைக்கப்படுகின்றன. சில சமயம் உடனே விற்பனை ஆகிவிடுவதும் உண்டு. விற்பனையாகமல் கிடப்பதும் உண்டு. இந்தக் கணக்குகளைப் பார்ப்பதில் உண்மையாகவே சிரமங்கள் ஏற்படும். இதில் கொஞ்சம் நீக்குப்போக்குகள் இருக்கவேண்டியது அவசியம். அதிகாரிகள் கையில் எல்லா அதிகாரங்களும் இருப்பதால் பல சமயங்களில் எதேச்சாதிகாரமாக அவர்கள் நடந்துகொள்வதையும், வரி விதிப்பதையும் கண்டிப்பாக தவிர்ப்பதற்கு முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடிக்கடி ஒரு முனை விற்பனை வரி பற்றிச் சொல்லப்படுகிறது. ஏதனால் அது சாத்தியம் இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் எடுத்து விளக்கி இந்தப் பக்கம் இருப்பவர்களை கன்வின்ஸ் செய்யவேண்டும். கொஞ்சம் வரி கூடுதலாக இருந்தாலும் பரவாயில்லை, ஒரு முனை வரி கொண்டுவரப் படவேண்டுமென்ற கருத்து பரவலாக எல்லோரிடத்திலும் இருக்கிறது.

மொத்த வியாபாரிகளிடத்தில் வரியை வாங்கிவிடலாம். இதனால் சிறு கடைக்காரர்களுக்குத் தொந்தரவு இருக்காது, லஞ்ச ஊழலும் தவிர்க்கப்பட வாய்ப்பிருக்கிறது என்று கருதப்படுகிறது. ஆகவே இதுகுறித்து அரசு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ரெவின்யூ இலாக்காவை எடுத்துக்கொண்டால் 'வேலியே பயிரை மேய்ந்ததாம்' என்கிற பழமொழி உண்டே – அதுபோலவே சில இடங்களில் இருக்கிறது. நேரிடையாக எனக்கு ஒன்றிரண்டு விபரம் தெரியுமாதலால் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆங்காங்குள்ள கிராம அதிகாரிகள் இருக்கிற சர்க்கார் நிலத்தை ஒன்று தாங்களே அனுபவித்து வருகிறார்கள். அல்லது வேண்டியவர்கள் பேரில் போட்டு அதன் வருமானத்தைப் பெற்று வருகிறார்கள். இதைப்பற்றி மேலதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி, அதை வெக்கே செய்யவேண்டுமென்று அவர்கள் உத்தரவு போட்டு இன்னமும் அப்படியே இருக்கிறது எனக்குத் தெரியும். இதுபற்றி ஒரு புகார் கூடச் செய்தேன். வருடம் ஒன்றாகியும் நிலைமை அப்படியே இருக்கிறது. இதுபோல பல கிராமங்களிலும் இருக்கும் என்று நினைக்கிறேன். இதைத் தடுத்தால்தான் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். சர்க்காரைச் சேர்ந்தவர்களே இப்படிச் செய்கிறார்களே, நாமும் ஏன் செய்யக்கூடாது என்கிற அவர்களது மனப்பான்மையில் மாற்றம் ஏற்படும். இதையும் அருள்கூர்ந்து அவசியம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, துயர்தணிப்புப்பற்றி. அதிலே பருவ மழை தவறியதன் காரணமாக இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் பஞ்ச நிலைமையைப் பற்றியது. இதுபற்றி ஒரு கவன ஈர்ப்புக் கொண்டுவந்த நேரத்தில் அப்படி ஒன்றும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னது எனக்குச் சங்கடமாக இருந்தது. அவர் பேசியது அந்தத் தோரணையிலேதான இருந்தது என்று நினைக்கிறேன். தவறாக இருந்தால் திருத்திக்கொள்ளத் தயார்.

"ஓரிடத்தில் பயிர் சாவியாய்ப் போனால், குறுநிலக்கிழார்களும், பண்ணையாட்களும், கிராமத் தொழிலாளிகள் போன்ற நிலமற்றவர்களும் மிகத் துன்பத்திற்குள்ளாகிறார்கள். இத்தொழிலாளிகளுக்கு தானியம் இருப்புக் கிடையாது. கூலி வேலை செய்து பிழைப்பவர்களுக்குக் கூலி வேலையும் எப்போதும் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை. அக்காலங்களில் குடியானவர்களுக்குத் துன்பம் நேரிடாமல் காப்பது அரசின் கடமையாகும்" என்று கொள்கை விளக்க குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. அதைத்தான் நினைவூட்ட விரும்புகிறேன். நான்கைந்து மாதங்களாக எந்த விதமான மழையும் இல்லாமல் புன்செய்ப் பிரதேசங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சோளம் போன்ற சாதாரணப் பயிர்கள்கூடக் கிடையாது. அதன் விளைவாக அங்கே கூலிக்காரர்களுக்கு வேலை கிடையாது. மதுரை மாவட்டத்திலே திண்டுக்கல், பழனி, திருமங்கலம் போன்ற பகுதிகளிலும் கோவை மாவட்டத்தில் பல்லடம் போன்ற இடங்களிலும் உண்மையிலே மகாகஷ்டமான பயங்கரமான நிலைமை வெறிச்சென்று தோன்றுகிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு சோளம் போன்ற தானியங்களை அனுப்பி அங்கே கஷ்டப்படுகின்ற கூலிக்காரர்களுக்கு சாப்பாடு போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட இடங்களுக்கு விஜயம் செய்வது உதவியாக இருக்கும். அமைச்சர் அவர்கள் உண்மையான நிலையைப் பார்க்கவேண்டுமென்றால் நேரடியாகச் சென்று பார்க்கலாம் என்பதை சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. மு. ச. சிவசாமி: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, வணிக வரி, வருவாய்த் துறை மானியங்களின் மீது ஒரு சில வார்த்தைகள் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறுவதற்கு விரும்புகிறேன். பொதுவாக இன்றைய தினம் நம்முடைய தமிழக அரசுக்கு வருகின்ற மொத்த வருமானத்தில் நாலில் ஒரு பங்கு விற்பனைவரி துறையின் மூலம் வந்தாலும்கூட இன்னும் அரசு கொஞ்சம் கவனம் செலுத்துமானால் அதிகமான வருவாய் பெறமுடியும் என்பதை இந்தச்



சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்திற்கு வட மாநிலங்களிலிருந்து ரயில்வே வேகன்களில் பல்ஸஸ் அண்டு கிரெய்ன்ஸ் ஏராளமாக வருகிறது. அவற்றில், உண்மையான கணக்கு வைத்து வருகின்ற வியாபாரிகள் எடுத்த புள்ளிவிவரக் கணக்குப் பிரகாரம் சென்னை நகரிலேயும் ஏனைய தமிழகமெங்கும் இருக்கிற வியாபாரத் தலங்களிலேயும் நாள் ஒன்றுக்கு 200 வேகன் நவ தானியங்கள் கணக்கில் சேர்க்கப்படாமல், விற்பனைவரி செலுத்தப்படாமல் இரண்டு மூன்று கை மாறிக்கொண்டு இருக்கிறது என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைய உணவுப் பொருள்களின் விலை அடிப்படையில் துவரை, உளுத்தம் பருப்பு போன்ற பல்ஸஸ் ஒரு வாகனில் வரும் சரக்கு 42 ஆயிரம் ரூபாய்க்கு வருகிறது. இருநூறு வேகன்கள் கணக்கில் சேர்க்கப்படாமல் கைமாறுவதால் 84 லட்ச ரூபாய் வரை நாள் ஒன்றுக்கு வியாபாரம் நடக்கிறது. இதன் மூலம் நாளொன்றுக்கு அரசுக்கு ஒரு முனை விற்பனை வரியாக இருந்தால்கூட 2½ லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. ஆண்டுக்கு ஏறக்குறைய 9 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. அதுவே இருமுனை விற்பனை வரியாக இருந்தது என்றால் 18 கோடி ரூபாய்வரை சர்க்காருக்கு கிடைக்கவேண்டிய வரி கிடைக்காமல் போகிறது. இது ஒழுங்காகக் கணக்கு வைத்து வியாபாரம் செய்கிறவர்களை அதிகமாகப் பாதிக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதில் அதிகமான கஷ்டமில்லை. மத்திய அரசின் உதவியோடு ரெயில்வே இலாகாவில் தொடர்பு கொண்டு ரெயில்வே வேகன்களில் உள்ள சரக்குகளை டெலிவரி எடுக்கிற நேரத்தில் முன்னதாக விற்பனை வரி டிபார்ட்மெண்ட் அதற்கு அட்வான்ஸ் டாக்ஸ் போட்டு சீல் வைத்துவிட்டால் போதும். அப்படிச் செய்தால் 1968-69-ம் ஆண்டில் 18 கோடி ரூபாய் கிடைக்க முடியும் என்பதை என்னால் உறுதியாகத் திடமாக நிச்சயமாகக் கூற முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு அதிகாரிகள் தேவையில்லை. கிளார்க்குகள் தேவையில்லை. அதிகமாக எஸ்டாப்ளிஷ்மெண்ட் தேவையில்லை. மத்திய சர்க்காருடைய உதவியுடன் அவர்களோடு தொடர்புகொண்டு ரெயில்வே இலாகாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு ஒவ்வொரு ரெயில்வே வேகன் பாஸுக்கும் அட்வான்ஸ் டாக்ஸ் குறைந்தபட்சம் இவ்வளவு என்று கட்டிவிட்டு சீல் வைத்துவிட்டு டெலிவரி எடுக்கவேண்டுமென்று தாக்கீது கொடுத்தால் போதும் அதன்மூலம் 18 கோடி ரூபாய் வருவாய் வரும்.

உப்புக்கு இதுவரை விற்பனைவரி இல்லாமல் இருந்தது. என்னிடத்தில் உப்பு இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். நான் அதை 'ஏ'-க்கு விற்றால் வரி இல்லையாம், அதையே 'பி'-க்கு விற்றால் வரி என்று போட்டிருக்கிறார்கள் அதிகாரிகள். இதைப்பற்றி நான் அமைச்சர் அவர்களிடம் கூறிய நேரத்தில் அவர்கள் கூறினார்கள், வியாபாரிகளுக்கு பல நன்மைகள் செய்யவேண்டுமென்பது என்னுடைய ஆசை, அதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். இப்படி வந்து இருக்கிறதே என்று சொன்னார்கள். உப்பு அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய எங்களுடைய தொகுதியில் உள்ள வியாபாரிகள் குமுறி எழுந்தார்கள். அந்தக் குமுறலையெல்லாம் ஐஸ்கட்டியாக ஆக்கி தற்காலிகமாக திருப்தி செய்திருக்கக்கூடிய பெருமை ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்குத்தான் சேரும். அதற்காக நான் என்னுடைய நன்றியை செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். தூத்துக்குடியிலிருந்து மேட்டூர் கெமிகல் கம்பெனிக்கு உப்பு வியாபாரம் செய்தால் வரி உண்டாம்; அதே உப்பை சென்னையிலே உள்ள வியாபாரிக்கு விற்றால் வரியில்லையாம். இப்படிச் சட்டத்திற்குப் புறம்பாக விதியைப் போட்டிருக்கிறார்கள். உப்புக்கு வரியில்லை என்று விதிவிலக்கு அளித்துவிட்டு திடீரென்று 1962-ம் ஆண்டிலிருந்து 1966-ம் ஆண்டுவரை ஐந்து ஆண்டுகளுக்கு வரியைக் கட்டு என்றால் அவர்கள் அந்தக் காலத்தில் உப்பு வியாபாரத்துக்கு வரி வசூல் செய்யாத நிலையில் எப்படிக் கட்டமுடியும்? கட்டமுடியாது. நம்முடைய அமைச்சர் அவர்கள் வியாபாரிகளுக்கு பக்கபலமாக இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய தொல்லைகளை நீக்கியிருக்கிறார்கள். நிரந்தரமான உத்தரவை 1968-69-லிருந்து அல்லது 1969-70-லிருந்து உப்புக்கு வரி போட்டால் நான் வரவேற்பதற்கு தயாராக இருக்கிறேன்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். தமிழக அரசுக்கு காமதேனு போல் இருக்கிறவர்கள் வியாபாரிகள்தான். நாலில் ஒரு பங்கு வருமானம் வியாபாரிகள்தான் கொடுக்கிறார்கள். நாலில் ஒரு பங்கு வருமானத்தைத் திரட்டிக் கொடுக்கின்ற வியாபாரிகள் விற்பனை வரி அலுவலகங்களில் தங்கள் வருடாந்திரக் கணக்கை முடிக்கச் செல்கின்ற நேரத்தில் எனக்கு முன்பு பேசியவர் குறிப்பிட்டதுபோல் மணிக்கணக்கில் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. அதாவது பரவாயில்லை. அவர்களுக்கு மரியாதையாவது கிடைக்கிறதா என்றால் இல்லை. நீ நான், போ, என்று தான் அவர்களுக்கு மரியாதை கிடைக்கிறது. அதையும் சகித்துக்கொண்டால்கூட அவர்கள் உண்மையாக கணக்குகள் வைத்துக்கொண்டாலும் கூட—20 ஆயிரம்தான் அவுட்டர்ன் என்றாலும் 6,000 கூடத்தான் போடுவேன் என்று சொல்லி—கூடப் போட்டும் விடுகிறார்கள். இதைத் தடுக்கவேண்டும்.

ரெவின்யூ இலாகாவைப்பற்றிக் கூற விரும்புகிறேன். தமிழகம் எங்கும் சொந்த இடங்களைக் காட்டக்கூடிய எல்லைக் கற்கள் (Survey stones) இல்லை. அவற்றை உடனடியாகக் கவனிக்கவேண்டும். இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஜாயிண்ட் பட்டாவாக ஆக்கப்பட்டவை அப்படியே இருக்கின்றன. அவற்றை சர்வே செய்து ஒவ்வொருவருக்கும் தனிப் பட்டாவாகக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும். ஜமீன் செட்டில்மெண்ட் கிராமங்களை எடுத்துக்கொண்டால் புறம்போக்கு நிலங்களை பட்டா நிலங்களாக மாற்றியிருக்கிறார்கள். பட்டா நிலங்களை புறம்போக்கு நிலங்களாக மாற்றியிருக்கிறார்கள். இவற்றை ரீசர்வே செய்து ஒழுங்குமுறைப்படுத்தவேண்டும். ஜமீன் ரீசெட்டில்மெண்டில் பனைக்கு பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. பனை மரத்திற்கு ஒரு பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. பனை முளைக்கின்ற நிலத்திற்கு பட்டா இல்லை. அதை இன்னொருவருக்கு அசைன்மெண்ட் கொடுக்கிறார்கள். நிலம் யாருக்கு, பனை யாருக்கு என்ற நிலை இருக்கிறது.
பிற்பகல் 4-00 இவற்றை வரையறை செய்யவேண்டும். என்னுடைய தொகுதியிலே கொளியன்கரிசலில் நஞ்சையை செகண்ட் கிரேடு ஆக ஆக்கியிருக்கிறார்கள் அதற்கு 18 ரூபாய் வரி போட்டிருக்கிறார்கள். ஆறுமுகமங்கலத்தில் நஞ்சையை முதல் கிரேடு (first grade) ஆக ஆக்கியிருக்கிறார்கள். அதற்கு இரண்டு போகம் தண்ணீர் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு 15 ரூபாய் வரி போடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வரிவிகிதாசார வித்தியாசங்களைக் குறைப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கிராமத்தில் கடந்த ஏழு ஆண்டுகளாக வரி வசூல் செய்யாமல் ஸ்டே கொடுத்துவிட்டு இன்றைய தினம் ஏழு ஆண்டுகளுக்கும் சேர்த்து ஏக்கர் ஒன்றுக்கு 600 ரூபாய், 700 ரூபாய் வீதம் கட்டினால்தான் நெல்லை அறுக்கலாம், இல்லையென்றால் நெல்லை அறுக்கக்கூடாது என்ற நிலையை உண்டாக்கியிருக்கிறார்கள் நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் அதற்கு விதிவிலக்கு அளித்து நிவாரணம் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன்.

இறுதியாக, எந்தக் கட்சி அரசாங்கமானாலும் உணவு இலாகாவின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள யாரும் கஷ்டப்படுவார்கள். மிகக் கஷ்டமான இலாகா அது.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்று வள்ளுவர் கூறியிருப்பது போல், சிக்கலான உணவு இலாகாவை, சர்க்கார் இயங்குவதற்குரிய வருவாய்த் துறையை, இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அவர்களிடம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதிக வரி இல்லாமல், புதிய வரிகள் போடாமல் நல்லமுறையில் நடத்தி வருகின்ற அமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்டி, மானியக் கோரிக்கைகளை வரவேற்று முடித்துக்கொள்கிறேன்.



*திரு. க. முருகேசன்: மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நான் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல வாய்ப்பு அளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பல முனை விற்பனை வரியினால் பொதுமக்களுக்குத்தான் அதிகச் சிரமம் ஏற்படுகிறது. மக்கள் அதிகமாக உபயோகிக்கும் பொருள்களுக்கு ஒருமுனை விற்பனை வரி கொண்டுவரப்பட வேண்டும். சர்க்கரை, வெல்லம் செய்யும் கரும்புக்கு வரியை விதித்து (அதாவது புகையிலையைப் போன்று) ஒரே தடவையில் வரியை விதிப்போமேயானால், விவசாயிகளுக்குக் கஷ்டம் எதுவும் இருக்காது. தேங்காய்க்கு வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும். ஏனென்றால், அது அழுகும் பொருள். அதாவது, ஒரு லாரி லோடு விற்கும் வரையில் பலநூறு தேங்காய்கள் அழுகிவிடும் அதனால் நஷ்டம் ஏற்படும். அதுமாதிரி நஷ்டத்தைத் தவிர்க்க வியாபாரம் செய்யும் கொள்முதல் விற்பனையின் மீது வரி விதித்தால் நன்றாக இருக்கும்.

1958 பஞ்சாயத்துச் சட்டத்தினால் பஞ்சாயத்துகளுக்கு புறம்போக்கு நிலங்களும், தரிசு நிலங்களும் கொடுக்கப்பட்டிருந்தும் அவைகள் பல பஞ்சாயத்துகள் வசம் இன்னும் பெறப்படாமலேயே இருக்கிறது அதற்குக் காரணம், இந்த நிலங்கள் யார் அனுபவத்தில் இருந்து வந்ததோ அவர்களிடமிருந்து திரும்பப் பெற அரசு எந்த நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்தால் பழத்தோட்டம் போன்றவற்றைப் போட்டு பஞ்சாயத்துக்கு வருமானம் வரத்தக்க காரியங்கள் செய்யலாம்.

என் தொகுதியில் கிக்கிபோப்பனப்புள்ளி என்னும் இடத்தில் பல ஆண்டு காலமாக சுமார் 300 ஏக்கர் நிலம் மேய்ச்சல் புறம்போக்கை ஏழை விவசாயிகள் பயிர் செய்தும், கிணறு வெட்டியும், கால்நடைகளை மேய்த்தும் ஜீவனம் செய்து வருகிறார்கள். இப்போது அந்த நிலத்தில் காட்டிலாகா அதிகாரிகள் ஃபார்ம் ஃபாரஸ்ட் ஏற்படுத்தி வருகிறார்கள். அதனால் விவசாயிகள் அனைவரும் வெளியேற வேண்டியுள்ளது. இதை அரசு தடுத்து அவர்களுக்கு அந்த நிலத்தைப் பட்டா செய்து தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று கரகூர் கிராமத்திலும் ஆடு மாடுகளை வளர்க்க மேய்ச்சல் தரை கிடையாது. அங்கேயும் காட்டிலாகாவால் கால்நடைகளை காட்டிற்குக் கொண்டுபோவது தடுக்கப்பட்டு வருகிறது. இதையும் அரசு கவனிக்க வேண்டுகிறேன்.

பஞ்சாயத்துக்களுக்கு ஒரு நல்ல வருமானம் சினிமா. சினிமா லைசென்ஸ் வழங்குவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு சாதாரண ஊரில் இரண்டு இடங்களில் சினிமா கொட்டகை போட்டு, போட்டியினால் சினிமாவே நடைபெறாமல் போகிறது. இது தவிர்க்கப்படவேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுபோல் குறிப்பிட்ட ஜனத்தொகை உள்ள இடத்தில் ஓர் நிரந்தர கொட்டகையோ அல்லது ஒரு டூரிங் சினிமாவோ இருக்கலாம் என நிர்ணயிக்கப்பட வேண்டும். இந்த உத்தரவை பேரூராட்சிகளிலும் கிராமப் பஞ்சாயத்துக்களிலும் கட்டாயப்படுத்த ஓர் முறை உருவாக்கப்படவேண்டும். அது பஞ்சாயத்திற்கு ஓர் நல்ல வருமானமாக அமையும்.

மாரண்டஹள்ளியை அடுத்துள்ள சின்னாற்றின் குறுக்கே சந்திராபுரம் அணை ஒன்று நீண்ட நாட்களாகப் பழுதடைந்துள்ளது. அது நீர் பெருகி வரும் காலத்தில் உடைத்துக்கொண்டு போய்விடுகிறது. அதை அங்குள்ள மக்கள்தான் வேலை செய்து தண்ணீரைத் திருப்பவேண்டியுள்ளது. அரசுக்கு பல முறை தெரிவித்தும் நிரந்தரமாக அதற்கு ஓர் தடுப்பை ஏற்படுத்த முன்வரவில்லை. அதன்மூலம் பலநூறு ஏக்கர் பயன்பெறும். பழுதடைந்திருக்கும் அந்த அணையை, அந்தச் சிறு திட்டைக் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது நீர்க்கூலி வசூலிப்பது நிறுத்தப்படவேண்டும்.

நெசவாளர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் பஞ்ச நிவாரண வேலையை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நூல் விலை ஏறிக்கொண்டு போகும் இந்தக் காலத்தில் மில்களுடன் போட்டி போட முடியாத நிலையில் இருப்பதாலும், தேக்க நிலை காரணமாக தொழில் கிடைப்பது கஷ்டமாகவும், அதற்குக் கிடைக்கும் ஊதியம் குறைந்தும் இருப்பதனாலும், அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதே கஷ்டமாக இருக்கிறது. ஆகையால், அரசு பஞ்ச நிவாரண நடவடிக்கையை அவர்கள் வாழும் இடங்களில் விஸ்தரிப்பதன் மூலம் அவர்கள் நன்மை அடைவார்கள் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தாங்கள் 15 நிமிடங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். தங்கள் கட்சியில் திரு. ராமசாமி நாயுடு அவர்கள் 20 நிமிடங்கள் எடுத்துக் கொண்டார்கள்.

*** திரு. டி. எஸ். ஆதிமூலம்:** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இரண்டு மூன்று தலைப்புகளுள்ள இந்த மானியத்தில் முதல் முதலாக சேல்ஸ் டாக்ஸைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 1959-60-ம் ஆண்டில் 16,74,00 000 ரூபாயாக இருந்த வருமானம் தற்போது ரூ. 65 54 00,000 அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இதைக்கூட குறைத்துக் காட்டியிருப்பார்களோ, ரிவைஸ்டு பட்ஜட் வரும்போது இன்னும் நிறைய வருமோ என்று கருதுகிறேன். நிறைய டாக்ஸ்கள் போட்டிருக்கிறார்கள். வருவாயைக்காட்டுவதில் கொஞ்சம் மறைத்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. இதைப் பார்த்தால் "The goose that lays the golden egg" என்பது போல, வாத்து பொன்முட்டை இடுகிற கதையாகத்தான் இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் என்னவென்று பார்க்கும்போது ஒரு வருஷமாக உள்ள ஆட்களைப் பற்றிச் சொல்லமாட்டேன். புண்ணியவான் ஆரம்பித்து வைத்தார். அவர் ஆரம்பித்தபோது பழைய பைசாவிற்கு ஒரு பைசா, அதாவது இப்போதைய பைசாவுக்கு அரை பைசா என்று நினைக்கிறேன். படிப்படியாக ஒவ்வொரு மந்திரிசபையும் கூடுதலாகப் போட்டுப் போட்டு இன்று 3 சதவிகிதம் வரை போட்டிருக்கிறார்கள். லக்சுரி பொருள்களுக்கு 7 சதவிகிதம் வரை போட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு: 11 சதவிகிதம், 11 சதவிகிதமா? எப்படியோ நீங்கள் வரியை வசூல் செய்து விடுங்கள். ஒரு படி அரிசி போன்ற பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆனால், இந்த வரியை மொத்த வியாபாரிகளிடத்தில் மட்டும் வாங்கிக்கொள்ளலாம். சில்லரை வியாபாரிகளிடம் வரி வசூலிக்கப் போகவேண்டாம் என்ற முறையை அரசாங்கம் யோசித்து முடிவு செய்தால் நலம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சிறு வியாபாரிகளை இந்தத் தொல்லையிலிருந்து விடுவித்தால் முக்கியமாக இந்த மந்திரிசபையை வாழ்த்துவார்கள். இந்த இலாகாவிலிருந்து எதிர்பார்க்கக் கூடிய வருமானம் குறையக்கூடாது என்ற வகையில் மொத்த வியாபாரிகளிடமிருந்து வாங்கிக்கொள்வது பற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரெவின்யூ போர்டு ஃபர்ஸ்ட் மெம்பர் கெய்வார் ரிப்போர்ட்டைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே சர்க்காருடைய கொள்கையாக நில வரியை ரத்து செய்கிறோம் என்று விளம்பரப்படுத்தி விட்டார்கள். இப்போது நடைமுறைக்குக் கொண்டுவரும்போது கஷ்டமாக இருக்கிறது. என்ன பண்ணுவது என்று உங்களுக்குத் தெரியவில்லை. காங்கிரஸ் சர்க்கார் முன்பு ஒரு வாக்குறுதி கொடுத்து அவர்கள் ஒரு ரிப்போர்ட்டுக்கு ஏற்பாடு செய்து விட்டுப் போய்விட்டார்கள். நீங்கள் வந்து அதை continue பண்ணுகிறீர்கள். எலக்ஷன் பிராமிஸ் அப்படி இருக்கிறது. லாண்ட் டாக்ஸ் அபாலிஷன் தேவையில்லையென்று என்னுடைய சொந்தக் கருத்தாகச் சொல்லுவேன். ஒரிஸாவில் சுதந்திரக் கட்சி சர்க்கார் லாண்ட் டாக்ஸை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்திருந்தாலும் என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேன். இப்போது பண மதிப்புக் குறைந்திருக்கக்கூடிய நிலையில் நிலவரியைத் தள்ள வேண்டியதில்லை. இந்த ரிப்போர்ட்டில் என்ன இருக்கிறது என்று





ஒன்றுமே தெரியவில்லை. வலது கையால் கொடுத்துவிட்டு இடது கையால் பிடுங்கிக்கொள்வதுபோல்தான் இருக்கிறது. இந்த வகையில் 6½ கோடி ரூபாய் வருமானம் வருகிறது. 'land tax including irrigation dues எல்லாம் சேர்ந்து 6½ கோடி ரூபாய் வருமானம் என்று போட்டிருக்கிறது இந்த பட்ஜெட்டில். ஆனால் இந்த முறைகளை பற்றி உடைக்கச் சொல்லி கெய்வார் அவர்களைக் கேட்கவும் அவர்கள் எட்டுக் கோடி ரூபாய்க்கு வழி காண்பித்து விட்டார்கள்.

He is playing to the tunes of the Ministry. வேறு என்ன பண்ண முடியும்? எட்டு கோடி ரூபாய் வசூல் செய்யும் வழிகள் என்று அவர்கள் சொல்லி விட்டார்கள். இதனால் பிரயோசனமில்லை. லாண்ட் டாக்ஸை எடுத்து விட்டோம் என்று சொல்ல உங்களுக்குப் பயன்படுமே தவிர இதனால் விவசாயிகள் உண்மையான பலனை எதிர்பார்க்க முடியாது. விவசாயிகளுக்கு உண்மையில் உதவி செய்ய வேண்டுமென்றால் ஒரு ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்று வைத்து உங்களுக்கு இன்னமும் நிறைய நன்மை செய்திருக்கிறோம், உங்களை ஏழைகளின் பட்டியலில் சேர்த்திருக்கிறோம் என்று "straight forward dealings" இல் ஒரு ஆர்டர் போடுங்கள். அதிலிருந்து வாட்டர் டாக்ஸ், செஸ் சார்ஜ் என்று இப்படியெல்லாம் கணக்குப் போட்டு ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? கவர்ன்மெண்ட் மனியம் ஜோலியைப் பார்க்கவேண்டும்.

Men may come and men may go, but Government exist for ever. ஆகவே, இருக்கிற ஜோலியைச் சுருக்கமாகப் பார்த்துவிட்டுப் போக வேண்டும். புதிதாக மந்திரிசபை வருகிறது, பட்ஜட் வருகிறது என்றெல்லாம் மக்கள் கவலைப்படுவதில்லை. அவர்களைத் துன்பப் படுத்தாமல் இருந்தால் போதும் என்று தான் தற்போது மக்கள் நினைக்கிறார்கள். புதிதாக வருகிற மந்திரிசபை, புதிதாக வரும் பட்ஜட் இவைகளினால் பிரமாதமான ரிலீப் கிடைக்குமென்று மக்கள் எதிர்பார்க்கவில்லை. ஆகவே லாண்ட் டாக்ஸை எடுக்கவும் வேண்டாம், தண்ணீர் தீர்வை முறையை மாற்றியமைக்கவேண்டிய அவசியமும் இல்லை. இந்த ரிப்போர்ட்டை நீங்கள் கேட்கவில்லை. முன்பு இருந்தவர்கள் தான் first report-ஐ வாங்கினார்கள். நீங்கள் இரண்டாவது ரிப்போர்ட்டை வாங்கியிருக்கிறீர்கள். நான் சொல்வது இந்த இரண்டையும் மூலையில் தூக்கிப் போட்டுவிடுங்கள். இதுதான் என் அபிப்பிராயம். டெனெண்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்ட் (Tenants Protection Act), பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் என்றிருக்கிறது. இந்தச் சட்டம் சென்ற காங்கிரஸ் ஆட்சியில் விவசாயிகளுக்கு, பாடுபடக்கூடிய வர்களுக்கு, சில நன்மைகளைச் செய்யவேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் போடப் பட்டது. அப்படி நல்ல நோக்கத்தோடு போடும்போது தைரியமாக சிறு நிலவுடைமையாளர்களுக்கு, இரண்டு ஏக்கர்கள், அதற்குக் குறைந்த நிலம் உள்ளவர்களுக்கு அதிலிருந்து விதிவிலக்குக் கொடுத்து சட்டம் எழுதத் தவறிவிட்டார்கள். வசதி படைத்த நிலப் பிரபுக்கள், பெரிய நிலச் சொந்தக்காரர்கள் இவர்கள் நிலத்தை யாருக்காவது குத்தகைக்குக் கொடுத்துவிட்டால் அதிலுள்ள விவசாயிகளை வெளியேறக் கூடாது என்று சட்டம் செய்யவேண்டியது அவசியந்தான். சமுதாயத்தின் தேவைக்கு ஏற்ப, அப்போதைக்கப்போது ஏற்படும் மாறுதலுக்கு ஏற்ப, ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டியது அவசியந்தான். உதவி செய்கிறேன் என்று சொல்லி பொதுவாக சட்டம் எழுதியதால் சிறு நில உடைமையாளர்கள் நம் ராஜ்யத்தில் லட்சக்கணக்கானவர்கள் இன்று பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஐம்பது அல்லது நூறு சென்ட் நிலம் வைத்திருப்பவர்கள் பிழைப்பு தேடி சென்னை அல்லது பம்பாய்க்குச் சென்றுவிட்டு அங்கும் தகுந்த வேலை கிடைக்காமல் திரும்பி ஊருக்கு வந்து தன் சொந்த நிலத்தில், 100 சென்ட் நிலத்திலாவது பயிர் செய்து கிடைத்ததைக் கொண்டு அரை வயிற்றைக் கழுவலாம்

என்றால் இப்போதுள்ள சட்டச் சிக்கலால் அந்த நிலத்தை அவன் பயிர் பண்ணி எடுத்துக்கொள்ள முடியாததொரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய குறைபாடு. இந்தக் குறையைக் கூட்டுறவு மந்திரி சபை காலத்தில் கவனிக்கவில்லை. இந்த மந்திரிசபை காலத்திலாவது இந்தக் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் ஏழைகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற முறையில் இந்த ஏழைகளை கைவிட்டுவிடாதீர்கள். உழைப்பவர்களுக்கு நிலம் கிடைக்க வேண்டும், அதே நேரத்தில் குறைந்த நிலம் உள்ளவர்களுக்கு இந்தச் சட்டத்தில் இருந்து விதிவிலக்குக் கொடுத்தால் அந்த தர்மம் உங்களைப் பாதுகாக்கும்.

"முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்"

அரசாங்கம் தப்பு செய்தால் அதனால் பருவ மழை காலாகாலத்தில் பெய்யாமல் அந்த நாட்டு மக்கள் எல்லோருக்கும் கஷ்டம் வரும். அந்த முறையில் காங்கிரஸ்காரர்கள் அதைச் செய்யாமல் போனார்கள். ஜவஹர்லால் நேரு அவர்கள் காலத்திலேயே பெரிய பண்டிதர், காந்திஜி இவர்கள் பெயர்களை வைத்துக்கொண்டு ஏன் அவர்களால் ஜெயிக்க முடியவில்லை? ஏழைகளை வாட்டியது அவர்களை விரட்டி விட்டது. நீங்கள் உங்கள் கட்சியில் உள்ள மெம்பர்களிடம் ஏழைகளின் கஷ்டங்களைப்பற்றி விசாரியுங்கள். அப்படிக் கேட்டு இந்தச் சட்டத்திலிருந்து ஏழைகளுக்கு விலக்குக் கொடுங்கள். அவர்கள் நினைத்த நேரத்தில் குத்தகைக்குக் கொடுக்கலாம், நினைத்த நேரத்தில் வந்து பயிரை எடுத்துக்கொள்ளலாம் என்று சீர்திருத்தம் செய்யவேண்டும். அடுத்தபடியாக, மாரடோரியம். விவசாயக் குத்தகை பாக்கியிருந்தால் அதைக் கேட்கவே கேட்காதே என்று மூன்று வருடங்களுக்கு முன்னால் மாரட்டோரியம் கொண்டுவரப்பட்டது. அதை வருடந்தோறும் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். மாரட்டோரியம் ஏப்ரல் மாதத்தோடு காலாவதி ஆகிறது. அதைப் புதுப்பிக்கப் போகிறீர்கள். நான் சொல்கிறேன். ஒரு மாதம் சட்டசபைக் கூட்டம் நடைபெறுகிறது. நீங்கள் அதை என்ன மாதிரிப் புதுப்பிக்கப் போகிறீர்கள் என்பதை நியாயமாக நீங்கள் இந்த சபையில் கொண்டு வந்திருக்கவேண்டும். என்னவோ கொண்டுவரப்படவில்லை. இந்த சபை முடிந்து நாங்கள் ஊருக்குத் திரும்பிச் சென்ற பிறகு, 'This moratorium has been extended for one more year.' என்று ஒரு ஆர்டரைப் போட்டுவிட்டு உட்கார்ந்துவிடுவீர்கள். என்னைக் கேட்டால் நான் சிறு நிலவுடைமையாளர்களுக்காக, அவர்களின் நலனுக்காகத்தான் சொல்லப் போகிறேன். பத்து ஏக்கர், இருபது ஏக்கர் என்று நிலம் உள்ளவர்கள் தொலைந்துபோகட்டும், அவர்கள் என்ன சுதந்திராப் பார்ட்டிக்கு காசா கொடுக்கிறார்கள்; நாங்கள் போய்க் கேட்டால் நாமம் சாத்துகிறார்கள். இந்த மாரட்டோரியத்தை நீங்கள் புதுப்பிக்கப்போகிறீர்கள். சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு குத்தகை பாக்கியில்லாமல் கொடுத்து விடுங்கள் என்று ஒரு உத்தரவைப் போடுங்கள். அடுத்தபடியாக "Fair Rent Court". ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் டெபாசிட் கட்டி, குத்தகை பாக்கி இருந்தால் நியாய வாரச் சட்ட ரெண்ட் கோர்ட்டிற்குச் சென்று வாதாடுவதற்கு இலகுவாக இருந்தது. அந்தக் கோர்ட்ஸ் இப்போது ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கோர்ட்டுகளை பழையபடி புதுப்பிக்கவேண்டும். இந்த இரண்டு விஷயங்களையும் சிறு நிலவுடைமையாளர்கள் சார்பாக இந்த மந்திரி சபையை நான் தீவிரமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக நிலவரி பற்றி, கெய்வார் அவர்கள் ரிப்போர்ட் பற்றி ஏற்கனவே விரிவாகச் சொல்லிவிட்டேன். அதனாலே அந்த ரிப்போர்ட்டை நீங்கள் எந்தவிதத்திலும் அமல் நடத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, ஸ்டேட் டிரேடிங் பற்றி சில வார்த்தைகள் சொல்லப் போகிறேன். சர்க்காரிலே வியாபாரம் பண்ணினால் நஷ்டம்தான். பஞ்சாபில ஒரு மூட்டை பருப்பை 85 ரூபாய் வீதம் வாங்கி இங்கே 280 ரூபாய்க்குக் கொண்டுவந்துவிட்டார்கள். ஆகவே ஸ்டேட் டிரேடிங் என்ற காரியத்தில், வியாபாரத்தில சர்க்கார் தலையிடாதீர்கள். இப்பொழுது சிவில் சப்ளைஸ் இலாக்கா வைத்திருப்பதனாலேயே எவ்வளவு துன்பங்கள் இருக்கின்றன என்பது தெரிகிறது. ஆகவே, ஸ்டேட் டிரேடிங் கெய்வார் அறிக்கை, இந்தக் காரியங்களையெல்லாம் விட்டுவிடவேண்டுமென்று ஏழைகளின் பெயரால் கேட்டுக்கொள்ளுகின்றேன். சிறு நில சுவான்தார்களுக்கு விதிவிலக்கு செய்து சட்டங்களைச் செய்யுங்கள். இலட்சக்கணக்கான ஏழைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொண்டு வணக்கத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என் கட்சியின் சார்பாக கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அமைச்சரவர்கள் முதலாவதாக இந்த மானியத்தை ஆரம்பிக்கும் பொழுது சில விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். வரிகளெல்லாம் மிகவும் நியாயமான முறையில், நேர்மையான முறையில் அதிகமான அளவில் வசூலிக்கப்படுகிறது, அதற்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கிற சர்க்கார் தான் காரணம் என்றெல்லாம் சொன்னார்கள். அத்துடன் இப்பொழுதிருக்கும்படியான நிலச் சீர்திருத்தத்தில் புரட்சிகளைக் கண்டிருக்கிறோம் என்றார்கள். இது ஏற்கனவே செய்யப்பட்ட வரி வசூல் திட்டமா? ஏற்கெனவே இருந்த பழைய சர்க்கார் கொண்டுவந்த நிலச்சீர்திருத்தச் சட்டமா? புதிதாகக் கொண்டுவந்த சட்டமா? என்று ஆராய்ந்து பார்த்தால் தெரியும். திரு. ஆதிமூலம் அவர்கள் பேசும்பொழுது அங்கேயிருக்கும்படியான இராஜாஜி படத்தைக் காட்டி "சேல்ஸ் டாக்ஸ்"-க்கு மூலகர்த்தா என்றார்கள். இப்பொழுது சேல்ஸ் டாக்ஸ் விரிந்து, பரந்து வந்தது என்றால் அதற்குக் காரணம் ஏற்கெனவே போடப்பட்ட திட்டங்கள், திட்டங்களினால் வந்த வருமானம், விற்பனை வரி வசூல் முறைகள் ஆகியவைதான். ஆனால் இந்த வருஷம் பொருளாதார மந்தம் என்றிருந்தாலும்கூட இவ்வளவு ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்கு நான் விளக்கம் சொல்லத் தேவையில்லை. சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் எவ்வளவு தூரம் கசக்கிப் பிழிந்து வசூல் செய்திருக்கிறார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு கூற இந்த வருஷத்திலே எனக்கு வந்த புகார்களிலே, மதிப்பீட்டை அதிகமாகப் போட்டு, வரியைக் கட்டிவிடுங்கள், பின்னால் வேண்டுமானால் அப்பீல் செய்து குறைத்துக்கொள்ளலாம் என்று கூறி வசூல் செய்திருப்பதாக இருக்கிறது. அப்பீலுக்குப் போக வேண்டுமென்றாலும்கூட வரியைக் கட்டிவிட்டு அதற்கு மேலே அப்பீல் செய்யும்படியான துரப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்பீல் செய்பவர்கள் "டிபெண்டென்ஸி" இருந்தாலும் வரியைப் பூராவும் கட்டிவிட்டு மீண்டும் அப்பீல் செய்யவேண்டுமென்ற நிலையில் பலபேர் கஷ்டங்களுக்காளாகிறார்கள். இவ்வாறு கேஸ் என்று அலைந்து கஷ்டப்படுவதை விட, "சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலிலேயே விழலாம்" என்றபடி விற்பனை வரியைக் கட்டிவிடுபவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையிலே சபிட்சம் என்பது இருக்கிறதா என்று பார்க்க வேண்டுமானால் வருஷக் கடைசியிலே பட்ஜெட் ஆக்சுவலைப் பார்த்தால் எவ்வளவு வரி போட்டார்கள். எவ்வளவு வசூல் செய்யப்பட்டது, எவ்வளவு அதிகப்படியான வரி வசூலிக்காமல் இருக்கிறது என்பதெல்லாம் தெரியும்.

வியாபாரிகள் வரி கொடுப்பவர்கள். அப்படி வரி கொடுக்கும்படியானவர்களிடத்திலே வரி வசூலிக்கும்படியான அதிகாரிகள் கண்ணியமாக, நேர்மையாக, நியாயமாக நடந்துகொள்வதில்லை என்ற புகார்கள் இருந்து வருகின்றன. அதிகாரிகள் மக்களிடத்திலேயும் வியாபாரிகளிடத்திலேயும் கண்ணியமாக, நேர்மையாக நடக்காமல் அதிகார

சக்தியைப் பிரயோகப்படுத்துகிறார்கள் என்னும்படியான புகார்கள் இப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதும் இருந்து வருகிறது. இப்பொழுது அவர்கள் ஆளுங்கட்சியிலே இருக்கிறோம் என்பதால சொல்லலாமே தவிர, அதை ஆதரிக்க வேண்டுமென்று சொல்லலாமே தவிர, இவர்கள் எதிர்க்கட்சியிலேயிருந்தபொழுது பேசிய பேச்சுக்களின் குறிப்புக்களைப் பார்த்தால் தெரியும். அதிலும் குறிப்பாக அமைச்சரவர்கள் அப்பொழுது பேசிய பேச்சுக்களைப் பார்த்தால் தெரியவரும். இப்பொழுது பதவியிலிருப்பதால் அவர்கள் இவ்வாறு பேசுகிறார்களே தவிர ஆட்சிப் பொறுப்பிலேயிருப்பதால் இவ்வாறு பேசுகிறார்களே தவிர வேறொன்றுமில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்ன? அரிசியைப் பற்றிக்கூட விட்டுவிடுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி வருகிறார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள்.? "வரிகளைக் குறைப்போம், வசதிகளைப் பெருக்குவோம்" என்றார்கள். ஆனால் என்ன செய்தார்கள்? வரிகளை அதிகப்படுத்தியதோடு, வேதனையையும் அதிகப்படுத்தினார்கள். வசதிகளைப் பெருக்குவது ஒருபுறமிருக்கட்டும். போட்டிருக்கும்படியான வரிகளினால் உண்டாகும் வேதனைகளைச் சொல்லி முடியாது. இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்திருக்கிறது. நாளுக்கு நாள் அதிகமாக உச்சக்கட்டத்திலே நிச்சயமாக வரும்.

சட்டசபை நடக்கும்பொழுது வரியைப்பற்றிச் சொல்லாமல், சர்க்கார் உத்தரவிலேயே வரியைப் போட்டுவிட்டு, "வரியில்லாத பட்ஜெட், வரியில்லாத பட்ஜெட்" என்று கூறுகிறார்கள். இது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போலிருக்கிறது. இவ்வாறு முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களைவிட வேறு யாரும் சிறந்தவர்களாக இருக்க முடியாது. வரிகளை உத்தரவிலே போட்டுவிட்டு, வரியில்லாத பட்ஜெட் பார்த்தீர்களா என்கிறார்கள். சேல்ஸ் டாக்ஸ் 48 கோடியாக இருந்தது 54 கோடியாக எப்படி வந்தது என்று கேட்டால் வியாபாரிகளெல்லாம் இந்த ஆட்சியை ஆதரித்துக் கொடுத்ததாகச் சொல்லிக்கொள்வார்கள். (குறுக்கீடு) வசூல் செய்து வந்திருக்கிறார்கள். நிலுவையிருந்தது என்றால் தேர்தல் காலத்தில் சில சமயங்கள் ஏற்பட்டிருக்கலாம். அதே நிலையில் எவ்வளவு தூரம் நிலைமை போகக்கூடும் என்பது போகப் போகத் தெரியும். கடைசியிலே 72-க்கு முன்னால் நீங்கள் இருப்பது எப்படி என்பது தெரியவரும்.

வரி வசூல்களை நியாயமான முறையில் நடத்துகிறோம் என்பதற்குக் காரணமாக 15,000 ரூபாய் வரையில் விதிவிலக்கு அளித்திருக்கிறோம் என்று சொன்னால் அது சாதாரண விஷயம். விற்பனை வரியிலே 'கம்பவுண்டிங்' கொடுப்பதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 'லேண்ட்
பிற்பகல் 4–30 ரெவினியூ' சேர்ந்திருப்பதைப் பாராட்டுகிறேன். 75,000 ரூபாய் வரை கம்பவுண்டிங் (குறுக்கீடு), . . . அதைத்தான் சொல்கிறேன். 'டர்ன் ஓவரில்' விவசாயிகள் பருவமழையைப் பார்க்கவேண்டிய நிலையில்லாமல் எத்தனையோ நிலையிருக்கிறது. ஒரு ஏக்கரிலே சாகுபடி செய்தது போக மிச்சம் வருவது 200 ரூபாய். அதன்படி ரூ. 4,000 வரை எக்ஸம்ஷன் உண்டு என்று சொன்னார்கள். அப்படியென்றால் 20 ஏக்கராவுக்கு எக்ஸம்ஷன் கொடுக்கவேண்டும். அப்படி கொடுத்தால் விவசாயிகளுக்கு வசதியாகயிருக்கும். இன்று ஒரு ஏக்கருக்கு ரூ. 200 வருமானம் என்று சொல்லுகிற நேரத்தில், ரூ. 4,000-க்கு எக்ஸம்ஷன் கொடுக்கிறேன் என்று சொன்ன அதே நேரத்தில் 7½ ஏக்கராவுக்குத் தான் எக்ஸம்ஷன் என்று சொல்லுகிறார்கள். அதை நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். அதை அன்றைக்கே நான் பொறுக்குக் குழுவிலே ஒத்துக்கொண்டேன். சலுகை பெறக்கூடிய நிலையில் இன்று இருப்பவர்கள் விவசாயிகள் தான். அந்த நிலையிலே நாம் பார்ப்போமானால் காங்கிரஸ் சர்க்காரிலே நாங்கள் அப்பொழுது இந்த நிலவரியை ரத்துசெய்யவேண்டுமென்று



முடிவு எடுத்தோம். நிலவரியை ரத்து செய்யவேண்டுமென்று நாம் கூறுவோமானால் அதற்கு என்ன என்ன காரணம் என்பதை பக்தவத்சலம் அவர்கள் ஒரு ரிப்போர்ட்டிலே சொல்லியிருக்கிறார்கள். அதற்காக, ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. சர்க்காரே தானிய வர்த்தகம் பூராவையும் எடுத்து நடத்தினால் அதிலே கிடைக்கும் இலாபத்திலே இந்த சரிக்கட்டலாம் என்று அதிலே சொல்லப்பட்டிருந்தது. நெல் விவசாயிகள் டாக்ஸ் கொடுக்கும்படியான நிலையிலே 2 கோடி ரூபாய் வருமானம் வந்தது. அதுமட்டுமல்ல, குவிண்டாலுக்கு ரூ. 2, ரூ. 3 கூட இன்செண்டிவ் கொடுத்தார்கள். ஆனால் இப்பொழுது அதையெல்லாம் கணக்கெடுத்துப் பார்க்காமல் நிலவரியை ரத்து செய்யவேண்டுமென்று சொன்னால் பொருத்தமாக இல்லை. அன்றைக்கே நாங்கள் சர்க்கார் எடுக்கிற நடவடிக்கையின் காரணமாக எவ்வளவு தூரம் வருவாய் கிடைக்கும் என்ற திட்டத்தை சொன்னோம். ஆனால் இவர்கள் சொல்லுகிறார்கள், வரியை எடுத்துவிடுவோம், வரியை எடுத்துவிடுவோம் என்று. எந்த வரியையும் எடுத்துவிடுவேன் என்று சொல்வது சுலபம். ஆனால் அதற்கு மாற்றுக் கண்டுபிடிக்க வேண்டும். அந்த வருவாய்க்கு மாற்று வருவாய்க் கண்டு பிடிக்கவேண்டும். சர்க்காரை நடத்துவதற்கு இந்த சமுதாயத்திற்கு முற்போக்கான நன்மைகளைச் செய்வதற்கு வேண்டிய பணத்தைப் பெருவதற்காக வரிகள் அவசியம் இருந்தாக வேண்டும். அதன் காரணமாகத்தான் அப்பொழுதிருந்த அரசு நில வரியை எடுத்துவிட்டால் வருமானம் குறையக் கூடாது என்று சொல்லும் நிலையில் ஸ்டேட் டிரேடிங் தானிய போக்குவரத்தை நடத்துமானால் பூரணமாக வருவாயைப் பெருக்க முடியும். அதை நல்ல முறையில் நடத்துமானால் 5 கோடி, 6 கோடி ரூபாய்கள் இலாபம் கிடைக்கும். அத்துடன், ரெவினியூ டிபார்ட்மெண்டிலே சிக்கன நடவடிக்கையை பின்பற்றுவதன் மூலம் 2 கோடி ரூபாய் மிச்சப் படுத்த முடியும் என்றுதான் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது செய்வார் அவர்கள் இந்த ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். சுதந்திராக் கட்சி உறுப்பினர் ஆதிமூலம் அவர்கள் வெகு அழகாகச் சொன்னார்கள். நீங்கள் இப்படித்தான் அளக்கவேண்டுமென்று அவர்களிடம் சொன்னால் அவர்கள் அது மாதிரி அளித்துவிடப் போவார்கள் என்று சொன்னார்கள், அப்பொழுது எங்களுக்கு அனுகூலமாகத்தான் ரிப்போர்ட் கொண்டு வந்திருப்பார்கள். இப்பொழுது இதை மாற்றி, அதை மாற்றி இந்த ரிப்போர்ட்டை கொடுத்திருக்கிறார்கள். அதாவது, தலைவலி போய் திருகு வலி வந்தமாதிரி இருக்கிறது. ரூ. 25, ரூ. 20, ரூ. 15 ரூ. 10, என்று கொடுக்கப்பட்டிருப்பதெல்லாம் பார்ப்பதற்கு நிரம்ப அழகாக இருக்கிறது. ஆனால் யார் கொடுக்கப் போகிறார்கள்? அதுவும், இது பயிரினுடைய அடிப்படையில். இது பெரிய ஆபத்து. விவசாய வருமானம் வாயிலே 2½ பங்காகக் கொடுத்துத் தொலைத்து விடுகிறோம். தயவு செய்து இந்த பயிர் அடிப்படையை வைத்து, அதிகாரிகளிடம் எங்களை குற்றவாளிகளாக ஆக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களிடத்திலே நாங்கள் போய் நிற்கமுடியாது. அவர்களிடத்தில் எங்கள் தொல்லைகளை நிரூபிக்க முடியாது. இந்த இந்த பயிர் என்று அவர்களிடத்திலே சொல்லி நிரூபிக்கமுடியவில்லை, முடியாது. பொறுப்புள்ள எந்த மனிதனும் அவர்களிடம் போய் நிற்கமுடியாது என்பதைத்தான் நாங்கள் சொன்னோம்.

இந்த செய்வார் ரிப்போர்ட்டிலே ஓரளவு பார்த்தால் கஷ்டமாக வசூலிப்பதை விட்டுவிட்டு மிகவும் சுலபமான முறையில் வசூலிக்கலாம் என்று எல்லாவற்றையும் சேர்த்து ரூ. 25-க்கு வைத்து விட்டார்கள். இந்த நில வரியிலே ஒரு சிறு வித்தியாசம் இருக்கிறது. அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். பழைய பட்ஜெட்டிலே சொன்னார்கள். இந்த பட்ஜெட் தொடரிலே கூடச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் சொன்ன ஒரு பகுதியை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். இந்த மண் வளத்தை வைத்து ஏக்கருக்கு ரூ. 15, ரூ 6, ரூ. 9 என்று வைத்திருக்கிறார்கள். இது பழைய காலத்திலேயிருந்து இருந்துவருகிற நிலையாக இருக்கிறது. சாயில் டெஸ்ட் வைத்து, மண்வளப் பகுதிவாரியாக வரி கேட்கிறார்கள். ஏழை மக்களுக்கு இந்த மண் விளைவைப்பற்றி ஒன்றும் தெரியாத காரணத்தால் சில படித்தவர்கள் இது மட்டமான மண் என்று வளமான மனையையும்,

உயர்ந்த மண் என்று மட்டமான மண்ணையும் சொல்கிறார்கள். இது எங்கள் ஊரிலே நடந்து கொண்டிருக்கிறது. அக்ராக்கரை என்ற ஒரு காட்டிலே ஏக்கருக்கு ரூ. 6 வசூலிக்கிறார்கள். அதே நேரத்தில் நஞ்சம் புளியம்பட்டி என்ற பகுதி ஒருவரும் பார்க்காத பகுதி. அந்த இடத்திலே ரூ. 15 என்று வசூலிக்கிறார்கள். அது மிக மட்டமான பூமி. சில படித்தவர்கள் அக்ராக்கரை பக்கத்திலே இருக்கிற பூமி மட்டமான பூமி என்று சொல்லியதன் காரணமாக ரூ. 6 ஆக கொடுக்கிறார்கள். அதே நேரத்தில் நஞ்சம்புளியம்பட்டியிலே யாரும் பார்ப்போரும் கிடையாது. கேட்போரும் கிடையாது. (குறுக்கீடு) அங்கே ரூ. 15 இருக்கிறது. இன்னொரு இடத்திலே இன்னொரு தொகை. ஆகவே, அந்த நிலையிலே பார்ப்போமானால் நெல் சாகுபடிக்கு ஒரேவிதமாக ரூ. 10, ரூ. 15 என்று இருக்க வேண்டும். அது எந்த இடமாக இருந்தாலும் சரி. இது மண்வள பூமி, இது திட பூமி, இது மிருதுவான பூமி என்று இவைகளுக்கு தனித்தனியாக பிரிக்கும்படியான நிலை இருக்கவேண்டாம். அதிலேயும் 1008 கிளாஸ்: ஒன்றாம் தரம், இரண்டாம் தரம், மூன்றாம் தரம், ஃபர்ஸ்ட், செக்கண்ட், ஏ.பி.சி, என்று எல்லாம், பிரித்து வைத்திருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் வரியை எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் இவர்கள் போட வேண்டுமென்று சொல்கிறார்கள் என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாது. நஞ்சைப் பயிருக்குத் தண்ணீர் தீர்வை தரவாரியாக இருக்கக் கூடாது, ஒரே மாதிரியாக இருக்கவேண்டும்

எங்களுடைய கட்சியினுடைய இலட்சியம், நாங்கள் போட்ட தீர்மானம் நில வரியை ரத்து செய்யவேண்டுமென்பதுதான், நில வரியை ரத்து செய்தால் அதற்குப் பதிலாக வேறு வருமானமும் பார்க்கவேண்டும். நில வரியை ரத்து செய்துவிட்டு வேறு விதமான முறையிலே ஒரு வரியைக் கண்டுபிடித்தாகவேண்டும். தானிய வர்த்தகத்தைப் பூராவும் சர்க்கார் எடுத்துக்கொள்வதன் மூலம், அதை விநியோகப்படுத்துவதன் மூலம், இந்த நிலவரியை ரத்து செய்வதால் உண்டாகும் நஷ்டத்தை நிச்சயமாக சரிசெய்துகொள்ளமுடியும் என்ற முறையிலே அதை சர்க்காரே எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது எங்களுடைய திட்டம், இலட்சியம் என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது இங்கே வைக்கப்பட்டிருக்கும்படியான கெய்வாருடைய இரண்டு ரிப்போர்ட்டிலேயும் இப்போதுள்ள சர்க்காருக்கு ஏற்ற முறையில், அவர்களோடு ஒத்துப்போகிறமுறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கிற சர்க்காரை ஆதரித்துத்தான் அவர்கள் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கும் தெரியும், இது அமைச்சர்களுக்கும் போதும் என்பது. இப்பொழுது கொண்டு வந்திருக்கும்படியான ரிப்போர்ட்டை பார்த்தால் பழைய ராஜாவே நல்ல ராஜா என்று சொல்லும்படியான நிலையிலே தான் இருக்கிறதே தவிர, இந்த ரிப்போர்ட்டை வைத்து விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்பட முடியாது என்பதை நான் திட்டவட்டமாக சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரெவினியூ டிப்பார்ட்மெண்டை எடுத்துக் கொண்டால், சேல்ஸ் டாக்ஸை புகுத்த ஆரம்பித்ததாலே, ஒரு ஆர்மி ஆஃப் ஆஃபீஸர்ஸ் அங்கே வந்து விட்டார்கள். ஆனால் ரெவின்யூ டிப்பார்ட்மெண்டிலே இன்னும் பழைய காலத்திலேயிருந்த முறை, பிரிட்டிஷ்காரன் காலத்திலேயிருந்த முறை தான் இருந்து கொண்டிருக்கிறது. ரெட் டேப் தான் இன்னும் இருக்கிறது. ரெட் டேப்பிஸத்திலே அவர்கள் ஊறிப் போய், திளைத்துப் போய் மாற்ற முடியாத நிலையிலே இருக்கிறார்கள். இந்த ரெவினியூ டிப்பார்ட்மெண்டிலே இருக்கும் போர்ட் ஆஃப் ரெவினியூவுக்கு நிச்சயமாக ** அவசியமே கிடையாது. அப்பொழுது வெள்ளைக்காரன் காலத்திலே, அவன் அதிகமாக பயந்து, எவ்வளவு தூரம் ஒரு காரியத்தைத் தள்ளிப் போட முடியுமோ அவ்வளவு தூரம் தள்ளிப் போடுவதற்காக ரெவினியூ போர்டை வைத்திருந்தான்—அது அதற்காகத்

** பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



தான் இருந்தது. ஆனால் இப்பொழுது போர்ட் ஆஃப் ரெவினியூ அங்கே மத்திய சர்க்காரிலே எப்படி ஒரு பிளானிங் கமிஷன் சூப்பர் காபினட் மாதிரி இருக்கிறதோ அதே மாதிரி நமது மாநில சர்க்காருக்கு இது ஒரு சூப்பர் காபினெட்டாக, சூப்பர் செக்ரடேரியட்டாக இருக்கிறது. போஸ்ட் ஆபிஸில் ஒரு மணிக்குள் எதுவும் போய்விடுகிறது. ரெவினியூ டிப்பார்ட்மெண்டிலே போனாலே எதுவுமே நகருவதில்லை. ரெவின்யூ டிப்பார்ட்மெண்டிலிருந்து ஒரு பேப்பர் அமைச்சரிடத்திற்கு செல்வதற்கு 3, 4 மாதங்கள் ஆகின்றன. அவ்வளவுதூரம் காலதாமதம் ஆகிறது. இந்த ரெவினியூ போர்டை எடுப்பதன் மூலம் பல இலட்சக்கணக்கான ரூபாய் இலாபம் வருவதோடு மக்களுடைய குறைகளையும் தீர்க்க முடியும். அமைச்சரவர்கள் சொல்வார்கள், மக்களோடு தொடர்பு கொள்ள வேண்டுமே அதற்காகத்தான் இது என்று. அவர்களே நேரடியாக மக்களோடு தொடர்பு கொள்கிறார்கள். நேரடியாக, கலெக்டரிடத்திலிருந்து 2, 3 ஜில்லாவுக்கு ஒரு கமிஷனரைப் போட்டு, அவரிடம் அந்தப் பொறுப்பை விடவேண்டும். ஆகவே, இந்த ரெவின்யூ போர்டை * * * * மூடிவிட்டால் நல்லது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். இது என்ன செய்கிறது என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம். என்றாலே இது சரியான நடவடிக்கை எடுக்கிறது என்று சொல்ல முடியவில்லை. ஒயிட் எலிஃபெண்ட், வெள்ளை யானை சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் போல இது நடந்து கொண்டிருப்பது இந்தக் காலத்திலே பொருத்தமில்லாத காரியம். இதை உடனடியாக மூடட்டும். அதை புரட்சிகரமாகச் செய்யட்டும். ரெவின்யூ போர்டை எடுத்துவிட வேண்டும். சாதாரணமாக என்னுடைய ஒரு எலிக்ஷன் பேப்பர் பைசல் ஆவதற்கு 4, 5 வருடங்கள் ஆகின்றன. அவர்களுக்கு என்ன சக்தி இருக்கிறது என்று இவர்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ரெவின்யூ போர்டை மூடிவிட வேண்டுமென்று சொல்லுங்கள். * * * * என்பவற்றை நிகழ்ச்சிக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட வேண்டும்.

**திரு. பி. ஜி கருத்திருமன் :** சரி, மூடிவிடுங்கள். மூடிவிடுங்கள் என்பது மிகவும் நல்லது என்று நான் சொல்லிக் கொள்கிறேன. அந்த வார்த்தையை எடுத்துவிடுங்கள். அதை எடுத்துவிட்டு மூடிவிடுங்கள் என்று நான் சொல்லிகொள்கிறேன்.

அடுத்து, அமைச்சர் அவர்கள் இந்த புறம்போக்கு நிலங்களையெல்லாம் கொடுத்துவிட்டோம், அதையெல்லாம் பட்டா செய்து விட்டோம் என்று சொன்னார்கள். ஏற்கனவே, நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கவேண்டுமென்ற திட்டங்கள் போடப்பட்டு இருந்து வருகின்றன. அமைச்சர் அவர்கள் இந்த புறம்போக்கு நிலங்களையெல்லாம் கொடுக்கிறேன், கொடுக்கிறேன் என்று சொன்னதன் காரணமாக பல இடங்களிலே ரோடுப் புறங்களில உள்ள நிலங்களில வீடு கட்ட ஆரம்பித்துவிட்டார்கள். அமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார், அவரிடம் நானே சொல்லிவிட்டேன் என்று சொல்லி வீடுகட்ட ஆரம்பித்துவிட்டார்கள். ஃபாரஸ்டிலே மரங்களையெல்லாம் அழித்துவிட்டு வீடு கட்ட ஆரம்பித்துவிட்டார்கள். திட்டத்தை போடுங்கள், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. வீட்டை கட்டி அங்கே கொடியைக் கட்டி விடுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை யார் பிரித்துவிடுவார்கள் என்றெல்லாம் அங்கே சொல்லுகிறார்கள். என்னுடைய கிராமத்திலே சில கணக்குப்பிள்ளைகள் ஹைவேஸ் ரோடிலே வீடுகள் கட்டிக்கொண்டு, வீட்டுக்கு முன்னாலே கொடியைக் கட்டிக்கொண்டு, கலெக்டரிடத்திலே போய் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். கலெக்டரே வந்தாலும் அதை அவர்களிடமிருந்து வாங்க முடியாத நிலை இருக்கிறது. பல இடங்களிலே ஆக்கிரமிப்பு இருக்கிறது. எந்த இடத்திலே பார்த்தாலும் ஆக்கிரமிப்பு இருக்கிறது. சுடுகாட்டிலே கூட கொடியைக் கட்டிக்கொண்டு வீடு கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

**** பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டுவிட்டது.

வெற்று இடங்களிலே வீடுகள் கட்டிக்கொள்ளுவதிலே எந்த விதமான முறையும் கிடையாது. அந்த நிலைமைதான் இருக்கிறது. உத்தியோகஸ்தர்கள் அவர்களிடம் போக பயப்படுகிறார்கள். ஆகையினால் என்ன நிலை ஆகுமோ, எந்த அமைச்சருக்கு போன் பண்ணிச் செய்வார்களோ, என்ன நிலையோ என்று நூற்றுக்கணக்கான போகள் நினைக்கும்படியான சூழ்நிலையை நாம் கண்கூடாகப் பார்க்கலாம். அமைச்சர் அவர்கள் எங்கூட வந்தால்கூட நான் காட்டுவதற்கு தயாராக இருக்கிறேன். புறம்போக்கு நிலங்களை யாரும் ஆக்கிரமித்துக்கொள்ள அனுமதிக்கக்கூடாது. சாகுபடி செய்ய நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு, அரிஜனங்களுக்குத்தான் அப்பேர்ப்பட்ட நிலங்கள் கொடுக்கப்படவேண்டுமே தவிர, ஏற்கனவே நிலம் உள்ளவர்களுக்கு, செல்வாக்கு உள்ளவர்களுக்குக் கொடுப்பது என்ற நிலை ஏற்படுமேயானால், பலபேர்கள் அந்த நிலங்களை ஆக்கிரமித்துக்கொள்ளக்கூடிய நிலைமைதான் ஏற்படும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சர் அவர்கள் பேசுகிற சமயத்தில் 'இந்த 20 வருட காலத்தில் விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யப்படவில்லை, நாங்கள் இப்பொழுது வந்திருக்கிறோம், ஏழை விவசாயியை கவனிப்பதற்கு' என்றெல்லாம் சொன்னார்கள். இவர்கள் வந்து என்ன செய்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 20 வருட காங்கிரஸ் ஆட்சியில் நாங்கள் 10, 12 சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம், ஏழை விவசாயிகளின் பாதுகாப்பிற்காக. குத்தகைதாரர் பண்ணையாள் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம், நிலத்தைவிட்டு வெளியேற்றக்கூடாது என்ற சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம், நியாய வாரச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம், நில உச்சவரம்புச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். இவர்கள் நாங்கள் நிறைவேற்றிய சட்டங்களை ஒழுங்கான முறையில் அமுல் படுத்தப்படுகிறதா என்று பார்த்துக்கொண்டாலே போதும், அதுவே பெரிய புண்ணியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சட்டங்களில் ஏதாவது தவறு இருக்கிறதா, சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் சுற்றுக்கு இருக்கிறதா, அதில் ஏதாவது தவறு ஏற்படுமா என்ற நிலையால், அரசியல் நிர்ணயச் சட்டத்தையே கூட மாற்றி, 142 சட்டங்களை நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம்: அந்தப் பெருமை எங்களைச் சார்ந்தது என்று மிகப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படியிருந்தும் நாங்கள் 20 வருட காலமாக விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் அமைச்சர் அவர்களுக்கு ஒரு சவால் விடுகிறேன். நாங்கள் செய்த சட்டங்களை ஒழுங்காக நீங்கள் அமல்படுத்தினால் அதுவே போதும். நாங்கள் நிலச் சீர்திருத்தச் சட்டம், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், 60—40 வாரச் சட்டம், கடன் நிவாரணச் சட்டம், அதாவது கடன் ஒத்திவைப்பு சட்டம் (மாரடோரியம் ஆக்ட்) போன்ற பல சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். அதிலே இருக்கும்படியான பிரச்சினைகள் எல்லாவற்றையும் நாங்கள் ஆராய்ந்து, ஏற்பட்டு சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். அப்படியிருக்கும்பொழுது, "20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் ஒன்றுமே செய்யவில்லை, நாங்கள் வந்த பிறகுதான், முதல் அமைச்சர் அண்ணா அவர்களின் ஆட்சியில்தான் சாதித்துவிட்டோம்" என்று சொல்வது, முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போலாகும் என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். விவசாயிகளுடைய கஷ்டங்களை நன்றாக உணர்ந்து நாங்கள் இப்படிப்பட்ட சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம் என்பதை நன்றாக உணர்ந்து, அவைகளை சரியான முறையில் அமல் படுத்தவேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. ஏதோ புதியதாக சட்டங்களைக் கொண்டுவரப்போவதாகச் சொல்கிறார்கள். அந்த சட்டங்களைக் கொண்டுவர வேண்டும்.

அடுத்தபடியாக, மேய்ச்சல் நிலத்தைப்பற்றி சொன்னார்கள். ஒரு ஏக்கருக்கு ஒரு மாடு என்றெல்லாம் சொன்னார்கள். நிலை என்னவென்றால் ஒரு ஏக்கரில் அதிகமான மாடுகளை மேய்ப்பதற்கு நாம்



வசதிகள் செய்யவேண்டும். ஒரு ஏக்கருக்கு ஒரு மாடு என்பது இல்லாமல், மூன்று மாடுகள் மேயும்படியான நிலைக்கு நாம் அபிவிருத்தி செய்து, முன்னேற்றம் செய்யும்படியான நிலையில்தான் நான் சொன்னேன். மேய்ச்சல் நிலங்களை எடுத்துவிடவேண்டுமென்ற நிலை அல்ல. எதற்காக மேய்ச்சல் நிலங்கள் ஏற்படுத்தப்படுகின்றன என்றால், அது ஒரு லக்ஸரி அல்ல, ஆடம்பரம் அல்ல. கிராமத்தில் புறம்போக்கு நிலங்கள் அவசியம் இருந்தாகவேண்டும். ஜன நெருக்கம் பெருகிக் கொண்டே போகிறது. ஒரு ஊரில் ஆயிரம்பேர் இருந்தால், 10 வருடங்களில் 1,200-ஆக ஜனத்தொகை பெருகிவிடுகிறது. சட்டம் போட்டு இருக்கிற புறம்போக்கு நிலங்களிலெல்லாம் சாகுபடி செய்யலாம் என்று உத்தரவு போடுவதாக வைத்துக்கொள்வோம். வளர்ந்து வருகிற சமுதாயத்தில் மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு இடம் எங்கே, மாடுகள் இருப்பதற்கு இடம் எங்கே, மாடுகள் மேய்வதற்கு இடம் எங்கே என்பதையெல்லாம் பற்றி, கொஞ்சம் எதிர்காலத்தையும் பற்றி சிந்திக்கவேண்டும். 10 லட்சம் ஏக்கரில் 50,000 ஏக்கர் கொடுத்து விட்டோம் என்றெல்லாம் சொல்லிக்கொள்ளலாம். ஆனால், எதிர் காலத்தில் வளர்ந்துவரும் சமுதாயத்தில் வீடு கட்டிக்கொள்ள மனைக் கட்டுகளுக்கு எங்கே போவது, மாடுகள் இருப்பதற்கு இடத்திற்கு எங்கே போவது, மாடுகள் மேய்வதற்கு எங்கே போவது, எல்லாவற்றையும் கொடுத்துவிட்டோம் என்று சொன்னால், ஒரு வீட்டில் இன்னொரு வீடு கட்டிக்கொள்ளவேண்டிய நிலைமைதான் ஏற்படும், மாடுகள் வீட்டிலேயே தான் நிற்கவேண்டியதாக இருக்கும். எதிர்காலத்தில் வளர்ந்துவரும் சமுதாயத்தை மனதில் கொண்டு, எதிர்காலத்தில் பெருகிவரும் ஜனத் தொகைக்கு வேண்டிய வசதிகளை செய்வதற்கு, அவர்களுக்கு கஷ்டம் இல்லாதபடி இன்றைக்கு ஏற்பாடு செய்யவேண்டுமே தவிர, எல்லா நிலத்தையும் கொடுத்துவிடுவது என்பது சரியல்ல. எதிர்காலத்தில் ஏற்படும்படியான நிலைகளையும் யோசனை செய்து புறம்போக்கு நிலங்களைக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்ச நிவாரணத்திற்காக அதிகமான தொகையை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதை நான் பாராட்டுகிறேன். நிச்சயம் பஞ்சம் வரும் என்று நினைத்து போன வருஷம் ரூ. 222 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். கோவையில் பஞ்சத்தைப்பற்றி, அதாவது பல்லடம், தாராபுரம், காங்கேயம் ஆகிய பகுதிகள் பற்றி உறுப்பினர் நண்பர் சேனாபதி கவுண்டர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஒரு குடம் தண்ணீர் 15 பைசா என்று சொன்னார்கள். மாடுகள் மேய்வதற்கு இடம் கிடையாது. பல்லடம், தாராபுரம் பகுதிகளில் மனிதன் தனக்கு வேண்டிய உணவை வாங்கிச் சாப்பிடும்படியான நிலைதான் ஏற்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்லாமல், கால்நடைகளுக்கு வேண்டிய உணவுகளையும் வாங்கித் தரவேண்டிய கஷ்டமான நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு சொல்லும்படியான நிலையில், அவர்களுக்கு சௌகர்யம் செய்து கொடுக்கக்கூடிய நிலையில் மானியங்களை அதிகமாக ஒதுக்கி, நிவாரண வேலைகளை செய்துதர வேண்டும். கோவையில் மட்டுமல்ல, எங்கு இந்த நிலைமை இருந்தாலும் சரி, எங்கெங்கு இடங்களில் பயிர்கள் தீய்ந்து போய்விட்டனவோ, மழை பொழியாமல் இருக்கிறதோ, அங்கு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு அதிக உதவி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து நான் முடிக்கிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றிருக்கிற மூன்று மானியங்களின் விவாதத்தில் பல மணி நேரங்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களைத் தெரிவித்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். நில வரித்துறை மானியத்தைப்பற்றி விவாதம் நல்ல வகையில்

நடைபெற்றதற்காக, பல்வேறு வகையான கருத்தோட்டங்களைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பு கிடைத்ததற்காக நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி செலுத்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இந்த விற்பனை வரி மானியத்தைப் பொறுத்தவரையிலே ஒரு வகையிலே நான் பெரிய வெற்றி அடைந்திருக்கிறேன் என்றுதான் சொல்ல விரும்புகிறேன். அதிலே நான் காலையிலிருந்து ஒன்றைத்தான் கவனித்துக்கொண்டிருந்தேன். இன்றைக்கு நம்முடைய நண்பர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் இவ்வளவு வசூல் செய்துவிட்டார்களே, இவர்களுக்கு பெருமை வந்துவிடப்போகிறதே என்று நினைத்து, ஏதோ அதிகாரிகள் முதலில் மதிப்பீட்டை அதிகமாகச் செய்து வசூல் செய்திருக்கிறார்கள் என்றெல்லாம் பேசினார்கள். டெல்லியில்கூட நேற்று முன்தினம் ஒருவர் அம்மாதிரி இன்கம் டாக்ஸ் அதிகாரிகள் முதலில் அதிகமாக பணத்தை வசூல் செய்வதை ஒரு ஆதாரமாக வைத்துச் சொன்னார்கள். ஸேல்ஸ் டாக்ஸ் ரூ. 10 கோடி அதிகமாக வசூல் ஆகியிருக்கிறது என்றால், பலபேர்கள் வரி கொடுக்காமல் ஏமாற்றி வந்ததை அதிகாரிகள் திறமையாக தங்களுடைய பணிகளைச் செய்து கண்டுபிடித்து வசூலித்திருக்கிறார்கள் என்று சொல்வோம் என்பதற்காக, அதிகாரிகள் துன்புறுத்தினதால் கொடுத்துவிட்டார்கள், எஸ்டிமேட்டை அதிகமாகப் போட்டு வசூலித்துவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களும் எங்கேயும் போய்விடமாட்டார்கள். நானும் எங்கேயும் போய்விடப்போவதில்லை. பொதுவாக சில உறுப்பினர்கள் சொன்னார்கள். இன்னும் பலகோடி ரூபாய் வசூலாகலாம் என்று சொன்னார்கள். உண்மையில் வர்த்தக சமூகத்தினர், குறிப்பாக மொத்த வியாபாரிகள் எல்லாவற்றிற்கும் பில் கொடுப்பது என்று வைத்துக் கொண்டால் ரூ. 18 கோடிகூட அதிகமாக வசூலாகலாம் என்று நண்பர் தூத்துக்குடி உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் சொன்னார்கள். இதிலிருந்து அதிக வரி வசூலாவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பது தான் மிகத் தெளிவாகத் தெரிகிறது. வர்த்தக சமூகத்தினருடைய மனப்பான்மைகூட இப்பொழுது மாறிக்கொண்டு வருகிறது என்பதில் கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை. விற்பனை வரி விதிவிலக்கு லிமிட்டை ரூ. 10,000-லிருந்து ரூ. 15,000-க்கு உயர்த்தியிருப்பது, கம்பவுண்டிங் லிமிட்டை ரூ. 75,000 க்கு உயர்த்தியிருப்பது சாதாரண விஷயம், விவசாயிகளுக்கு ரூ. 4,000 வரையில்தான் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் பொதுக்கூட்டத்தில் பேசுவது போல் சொன்னார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பொறுப்போடு பேசவேண்டுமென்றும், பொதுக்கூட்டத்தில் பேசுவதுபோல் பேசுகிறார் என்றும் அடிக்கடி சொல்கிறார்கள். உதவி சபாநாயகர் அவர்கள் எங்களைக் காப்பாற்றவேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்களுக்குப் பொறுப்பு அதிகரிப்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். விவசாயிகளுடைய வருமானத்திற்குக் கொடுக்கிற பணத்தை....

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பொறுப்போடு பேசவேண்டும் என்றெல்லாம் பொதுவாக கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தனியாகப் பேசுகிறபொழுது பேசுவதைப் பார்க்கிறேன். இருவரும் கோவை மாவட்டம்தான்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வேண்டாம் என்றால் விட்டுவிடுகிறேன். அவர்கள் சொன்னார்களே என்று சொல்கிறேன். விவசாயி என்றால் 7½ ஏக்கர், ரூ. 5,000 அதே சமயத்தில் வியாபாரிகள் என்றால், ரூ. 75,000 என்றார்கள். அது அவனுடைய பணம் அல்ல. 15,000 லிருந்து 75,000 வரையில் டர்ன்-ஓவர் தான். தமிழ்நாட்டில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வியாபாரிகளில், 20,000 அல்லது 25,000 சிறு வியாபாரிகள் அதனால் அனுகூலம் அடைகிறார்கள். வியாபாரிக்கு மட்டுமல்ல, 3 சதவீதம் வரியை கம்பவுண்டிங் செய்யலாம் என்பதன் மூலமாக, வரி 1¾ சதவீதம்தான் ஆகிறது.





இந்த வாய்ப்பையும் அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதே மாதிரி, மாண்புமிகு முதல் அமைச்சர் குறிப்பிட்ட கொள்கை அடிப்படையில்தான், அதை வழிகாட்டியாக வைத்துத்தான் செயல்படுகிறோம். அவர்கள் சொன்னார்கள், "pat the poor and tap the rich என்று. வரியை யார் தாங்குவார்களோ, அவர்கள் மீதுதான் போடப்படுகிறது. அந்த முறையில் இந்தத் துறை நிர்வாக இயந்திரம் இயங்கி வருகிறது. காலையிலிருந்து உற்று கவனித்துக் கொண்டிருக்கிறேன். அந்தத் துறை அதிகாரிகளுக்கு எவ்வளவு துன்பங்கள், தொந்தரவுகள் ஏற்படுகின்றன என்பதையெல்லாம் விவாதத்தில் குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்கள், அவற்றை தொல்லைகள் என்று கருதாமல், சேவையாகவும் உணர்ந்திருக்கிறார்கள். புதிய அரசுடன் நல்ல வகையில், நல்ல தன்மையில் ஒத்துழைத்துச் செயல்படுகிறார்கள். அது வெளிப்படையாகத் தெரிகிறது. அதேமாதிரி அதிகாரிகள் தவறாக இருந்தால், அதை இந்த அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்காது. யாராவது வேண்டுமென்றே இடைஞ்சல் செய்தால், அரசாங்கம் அப்படிப்பட்டவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும். வியாபாரிகளோ, மற்றவர்களோ சட்டப்படி சேராத பணத்தைக் கொடுக்கவில்லை. சட்டப்படி சேரவேண்டிய பணத்தைத்தான், சர்க்கார் கஜானாவிற்கு வரவேண்டிய பணத்தைத்தான் செலுத்தியிருக்கிறார்கள், அதனால் தான் அதிகமான வருவாய் வந்திருக்கிறது. அதற்காகப் பெருமைப் படவேண்டியதுதான். மாண்புமிகு உறுப்பினர்கள் சினிமாக் கொட்டகை வரி பற்றிச் சொன்னார்கள். என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் மூலம் வரும் வரிப்பணம், அந்த அந்த ஊர்களுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும், 90 சதவீதம் போகிறது. அவை மாநில அரசுக்குச் சேருவதில்லை. ஏற்படும் இடைஞ்சல்களைக் களையக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்னும் பல கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். திருச்சி உறுப்பினர் திரு. நாகசுந்தரம் பேசும்போது, ஏற்பட்டிருக்கிற சட்டங்கள், முடிவுகள் இவைகளையெல்லாம் தொகுத்து ஒரு அறிக்கையாகக் கொடுக்கவேண்டும் என்றார்கள். இப்பொழுதே, மூன்று மாதத்திற்கு ஒரு முறை, கமர்சியல் டாக்ஸ் கெஸட் என்று ஒன்றை வெளியிடுகிறார்கள். அதில் சட்டப் பிரச்சினைகள், ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டுகள், இன்னும் ரூல்கள் இவை பரிசீலிக்கப் படுகின்றன. அதை வெளியிடுவது எல்லாம் டைரக்டர் ஆப் ஸ்டேஷனரி அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே வாங்கிக் கொள்ளலாம். அதிகாரிகளுக்கும் கொடுக்கப்படுகிறது.

ராஜபாளையம் உறுப்பினர் திரு, சுப்பராஜா அவர்கள் நிலக்கடலை பற்றிக் குறிப்பிட்டார்கள். நிலக்கடலைக்கு ஒரு முனை வரிதான். அதே வரியை இரண்டு மூன்று தடவைகள் போடுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் அதையே எண்ணெயாக்கும்போது, அது இரண்டாகிறது, எண்ணெயாகவும், பிண்ணாக்காகவும். அப்பொழுது பல முனை ஆரம்பமாகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் உப்பு வரி பற்றிச் சொன்னார்கள். அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சொன்ன முறைபாடுகளைப் பற்றி வாரியத்தினுடையவும் என்னுடையவும் பரிசீலனையில் இருக்கிறது. அதைப் பற்றி உறுப்பினருக்கும் தெரிவித்திருக்கிறேன்.

இன்னும் விற்பனை வரித் துறையில் குஜராத்தி மொழியில் நம் மாநிலத்தில் கணக்கு வைத்து இருக்கிறார்கள். அது பற்றி விவரம் நமக்குப் புரிவதில்லை. ஆகவே, ஒரு விசேஷ ஏற்பாடாக குஜராத்தி மொழியை கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர்கள் படிக்கவேண்டும் என்றும், அப்படிப் படிப்பதற்கு வாத்தியார் வைத்துக்கொள்ள ஆகும் செலவைக் கொடுத்தால் சர்க்காருக்கு வருமானம் அதிகம் வரும் என்பதால், அதற்காக அப்படிப்பட்ட உத்யோகஸ்தர்களுக்கு இரண்டு அட்வான்ஸ் இன்க்ரிமெண்டுகள் அல்லது வயதானவர்களாக இருந்தால், ரூ. 500 என்று குஜராத்தி மொழியைப் பயில என்று ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது, என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1968 மார்ச் 18

புதிதாக அட்வைசரி கமிட்டி போடவில்லை என்று சொன்னார்கள். சில பேர்களை உறுப்பினர்களாகப் போட்டார்கள். அட்வைசரி கமிட்டியாகப் போடவில்லை என்றாலும், வர்த்தக சங்கங்களை, மற்றவர்களைக் கலந்து, அவர்களோடு தொடர்பு கொண்டு, அப்படிப்பட்ட சங்கங்களின் ஒத்துழைப்பைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அந்த வகையில் அவர்களெல்லாம் ஒத்துழைப்புக் கொடுத்ததற்காக இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நில வரியைப் பொறுத்தவரையில், நஞ்சை நிலங்கள் பற்றிச் சொல்லப்பட்டது. அமராவதி பாசனத்தில், பவானிப் பாசனத்தில், வைகைப் பாசனத்தில், பரம்பிக்குளம் பாசனத்தில் நஞ்சையாகிவிட்டது. இதற்கு மத்தியில் கெய்வார் அவர்களுடைய அறிக்கை அடிப்படையில் இன்றைக்கு ஒரு கட்டத்தில் நிற்கிறோம். பல கருத்துக்களும் எடுத்துக் கூறப்பட்டன. இவையெல்லாம் அமைதியாகச் செய்யவேண்டிய காரியங்கள். அவசர அவசரமாக வேகமாகச் செய்யக்கூடியவை அல்ல. அது பற்றிக் குறிப்பிடும்போது இன்னொரு கருத்தையும் குறிப்பிட்டார்கள். திரு. சுப்பராஜா என்று கருதுகிறேன், சரியாக யார் என்று ஞாபகமில்லை. எனக்கு மிக்க வருத்தமாக இருந்தது. ரெவின்யூ போர்டு மெம்பர்கள் இவர்களெல்லாம் ஏதோ அரசாங்கத்திற்குத் தக்க மாதிரி, ஜாடை காட்டுவதற்குத் தக்கபடி நடக்கிறார்கள் என்று சொன்னார்கள். பொதுவாகப் பெரிய இடத்தில், பொறுப்பான உத்தியோகத்தில் உள்ளவர்களை, அவர்கள் மீது தப்புகள் இருந்தால் சொல்லலாம். ஆனால், நோக்கம் கற்பிப்பது நம் மன்றத்திற்குச் சரியானது அல்ல என்பதுதான் என்னுடைய அழுத்தமான எண்ணம். விற்பனை வரியைப் பொறுத்தவரையில் அப்பீலேட் அஸிஸ்டெண்ட் கமிஷனருக்குப் போகிறது. அதன் பேரில் ட்ரிப்யூனலுக்குப் போகலாம், போர்டுக்கும் போகலாம். விரும்பினால்தான் போர்டுக்குப் போவார்கள். அல்லது ட்ரிப்யூனலுக்கே போகலாம். அதன் மேல் ஹைகோர்ட்டுக்குப் போகிறது. போர்டு மெம்பர்கள் ஏதோ தனிப்பட்டவர்களுக்குச் செய்கிறார்கள் என்பதெல்லாம் அவர்கள் ஆற்றும் பணிக்கு ஊறு விளைவிக்கும் வகையில்தான் அமையும். குற்றம் குறைகள் இருந்தால் தவிர்க்க வேண்டியதுதான்.

திரு. கெய்வார் அவர்களுடைய அறிக்கையைப் பற்றிப் பல உறுப்பினர்களும் விமரிசனம் செய்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் சில கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். அவற்றை நல்ல வகையில் பரிசீலனை செய்யலாம். ஆனாலும் சில உறுப்பினர்கள், அதிகாரிகள் என்றால், எந்த அரசாங்கம் இருக்கிறதோ, அதன் போக்குப்படி செய்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் சொல்வது நமக்குப் பெருமை அல்ல. நாம் தமிழ் நாட்டில் ஒரு பெரிய மரபை ஏற்படுத்தியிருக்கிறோம். தப்பான வகையில் நடக்கும் அதிகாரிகளைக் கண்டிப்பாகத் தண்டனைக்கு உட்படுத்த வேண்டும். ஆனால், நியாயமாக, தன் கடமைகளைச் செய்கிறவர்களுக்கு விலங்கிடுவது போல, எந்த அதிகாரியையும் பற்றிச் சொல்வது முறையாகாது. அப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : சபாநாயகர் அவர்களே, தயவு செய்து அமைச்சரவர்கள் ஏதோ குற்றச் சாட்டாகச் சொன்னது போல பேச வேண்டாம். அவர்கள் போகும் போக்கில் அதிகாரிகள் போகிறார்கள் என்றால், அது கூட நியாயம் தானே? சர்க்காருடைய போக்கில் அவர்களும் போகிறார்கள் என்று சொன்னேன். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி "அப்படித்தான் எங்களைக் கெடுத்தார்கள் அதிகாரிகள் என்று சொன்னீர்கள்") ஆம், நீங்கள் கெடவேண்டாம் என்று சொன்னேன்.

பிற்பகல் 5-00 **மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : சென்ற அரசினுடைய கோரிக்கையின் பேரில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்த அரசினுடைய நோக்கத்தை அறிந்துகொண்டு அந்த அறிக்கையில் அதிகாரி எதையாவது சேர்த்திருப்பாரோ என்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எண்ணத் தேவை இல்லை.



1968 மார்ச் 18]

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : துணைச் சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. முதல் அறிக்கை தயாரித்தது எங்கள் சர்க்கார் இருந்தபோது. இரண்டாவது அறிக்கை நீங்கள் வந்த பிறகு. பார்த்தால் [illegible] இருக்கும்படியான எண்ணத்தைத் தூண்டுகிறது என்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : நான் சொல்ல வந்தது அது கூட அல்ல. ஒரு அரசாங்கத்தில் இருக்கும் உத்தியோகஸ்தர்களும், ஊழியர்களும் சுதந்தரமாகச் செயல்படக்கூடிய சூழ்நிலை இருக்கவேண்டும். இன்று முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கலாம். நாளை வேறொரு கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கலாம். எந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும், அரசாங்க அதிகாரிகள் அவர்களுடைய கடமைகளைச் சட்ட வரம்புக்கு உட்பட்டு சுதந்தரமாகச் சிந்தித்து முடிவுகள் எடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கவேண்டும். அதிலே "என் [illegible]" என்று சொல்வது போல, எந்த விதமான அக்கிரமமும் இருக்கக்கூடாது. அப்படி இருக்குமானால், அது நம்முடைய ஜனநாயக மரபுக்கு உகந்ததாக இருக்க முடியாது. திரு. கெய்வார் அவர்களைப்பற்றி இங்கு பேசப்பட்ட கருத்துக்களுக்காக நான் மிகுந்த ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு பெரிய அதிகாரி அளித்திருக்கும் அந்த அறிக்கையில் உள்ள கருத்துக்களைக்கூட நான் விமர்சனம் சொல்லவில்லை. இன்னொன்று கூடத் தெளிவாகச் சொல்லவேண்டுமென்றால், திரு கெய்வார் ரிப்போர்ட்டில் ஆளுங்கட்சிக்குத் தகுந்த மாதிரி கூட கருத்துக்கள் இல்லை. மதிப்பிற்குரிய ரெவின்யூ போர்டு மெம்பர் திரு. கெய்வார் அவர்கள் இன்னொரு காரியத்துக்காக இந்த அரசாங்கம் ஒரு அறிக்கை தயாரிக்கும்படி [illegible]யிருந்தது. அவரும் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார். அந்த அறிக்கையை வெளியிடவில்லை. அரசாங்கத்தின் கருத்து ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் என்ன என்பதை அவர்கள் தெரிந்திருந்தும் கூட, அதற்கு முற்றிலும் நேர்மாறான ஒரு கருத்தை அவர்கள் கொண்டார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவருடைய மனோபாவம் சரியானதுதான். அறிக்கை அதிகாரி என்றால் ஆளுங்கட்சியின் அபிப்பிராயத்தைத்தான் அறிக்கையில் சொல்லவேண்டும் என்பது அல்ல. ஆளுங்கட்சி ஒரு காரியத்தில் ஒரு அபிப்பிராயத்தை வைத்திருந்தால் அந்த அபிப்பிராயத்திற்கு முற்றிலும் நேர்மாறான ஒரு அறிக்கையைத் திரு. கெய்வார் அவர்கள் சமர்ப்பித்தார்கள் என்பதை நான் உதாரணத்திற்குச் சொன்னேன். பொதுவாகச் சொல்லவேண்டுமானால், நம்முடைய தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் நிர்வாக இயந்திரம் லட்சக்கணக்கான ஊழியர்களைக்கொண்டு அமைந்திருக்கிறது. யார் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் அவர்கள் நல்ல முறையில் வழிநடத்திச் செல்வார்கள். சுதந்தரமாகவும் தங்களுடைய காரியங்களைச் செய்யும் அளவுக்கு [illegible]. ஆக, அத்தகைய பாரம்பரியம் உள்ள அதிகாரிகளைப்பற்றி விமர்சனங்கள் குறைவாக இருப்பது நல்லது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : மீண்டும் ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். நான் எந்த அதிகாரியையும் பொறுத்தும் குற்றம் சொல்லவில்லை. குற்றம் சொல்லவும் மாட்டேன். ஒரு ரிப்போர்ட் வந்திருக்கிறது. அதிலே அவருடைய பெயர் இருக்கிறது. ரிப்போர்ட்டில் கண்டுள்ளதைத்தான் தவறு என்று சொன்னேனே தவிர, அதிகாரியின் எந்த எண்ணத்தைப் பற்றியும் நான் சொல்லவில்லை. அமைச்சருக்கு இருக்கும் எந்த எண்ணத்தையும் நான் குறிப்பிடவில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : விற்பனை வரியைப் பொறுத்தவரையில், முக்கியமான ஒன்றை, நம்முடைய சம்யுக்த [illegible] கட்சித் தலைவர் திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்களும், மற்றவர்களும் சொன்னார்கள். "சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ்" போடுங்கள் என்ற வாதம் இருந்து வருகிறது. சிங்கிள் பாயிண்ட் வரி என்றால், ஏதோ பார்ப்பதற்குச் சௌகரியமாக இருக்கும்போல் வேடிக்கையாகத் தோன்றலாம். முதலில் 63 பொருள்களுக்கு சிங்கிள் பாயிண்ட் வரிதான் இருந்தது. அதில் இருக்கும் கஷ்ட நஷ்டங்களையும் நிலைமைகளையும் வியாபாரிகள் சங்கத்தின்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1968 மார்ச் 18

மூலமாகவும், அட்வைசரி கமிட்டி மூலமாகவும், டாக்டர் லோகநாதன் கமிட்டியில் தெரிவித்து, 49 பொருள்களுக்குத்தான் சிங்கிள் பாயிண்ட் வரி என்று அந்த அளவுக் க் குறைந்து வந்தது. சிங்கிள் பாயிண்ட் டாக்சில் சில இடைஞ்சல் இருக்கிறது. "ஈஸிலி ஐடென்டிஃபையபிள டைடிஸ்க்ரிப்ஷன்" என்ற வகையில் பார்த்தவுடனே தெரிவதாக இருக்க வேண்டும். நிலக்கடலை அந்த வகையில் வராது. காரணம், அது பல இடங்களில் உற்பத்தியாகி மூட்டைகளில் வரும். ஆனால், அம்பாசடர், பியட் கார்கள் போன்றவைகளைப் பொறுத்த வரையில், அவை ஒரு உருவம் உடையனவாக இருக்கின்றன. அதே மாதிரியாக, "ஸோர்ஸ் ஆஃப் ப்ரொடக் ஷன் ஆஃப ஸச் குட்ஸ் ஷுட் பி ஐடென்டிஃபையபிள்" எனனும் வகையில், எங்கே உற்பத்தியாகிறது என்பது ஐடென்டிஃபையபிளாக இருக்க வேண்டும். பெட்ரோல் என்றால், அது பர்மா ஷெல், எஸ்ஸோ, கால்டெக்ஸ், இந்தியன் ஆயில் போன்ற நான்கு கம்பெனிகள்தான் தயாரிக்கின்றன என்பது தெளிவாகத் தெரிந்துவிடுகிறது. ஆகவே, ஒரே இடத்தில் வரி போட்டு வாங்கி விடலாம். அதனால், 'ஸோர்ஸ் ஆப் ப்ரொடக்ஷன் ஆப் ஸச் குட்ஸ் ஷுட் பி ஐடென்டிஃபையபிள்' என்று இருக்கிறது. மோட்டார் கார்கள்—பியட், அம்பாசடர் போன்றவை குறிப்பிட்ட ஒரே இடத்தில் உற்பத்தியாவதால் அங்கே வரி போட்டு, ஒரே பாயிண்டில் வரியை வாங்கிக் கொள்ளலாம். ஆனால், மற்ற சில பொருள்களைப் பொறுத்தவரையில், கை மாறும்போது, யார் வாங்கினார்கள், எங்கே போனது என்று தெரியாமலிருக்கும். அதனால், சிங்கிள் பாயிண்ட் விதிப்பதில் கஷ்டம் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், சிங்கிள் பாயிண்ட் என்றால், அதற்காகக் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும் சம்பவண்டிங் முறையினால் ஏற்படும் அனுகூலங்களெல்லாம் சிங்கிள் பாயிண்ட்டிலே இல்லை. சிங்கிள் பாயிண்ட் என்றால், எவ்வளவு டர்ன்-ஓவர் செய்தாலும் கணக்கு வைத்து கொள்ளவேண்டும். அதெல்லாம் சிறிய வியாபாரிகளால் முடியாது.

எண்ணெயைப்பற்றிச் சொன்னார்கள், திருமங்கலம் தொகுதி உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள். கணக்குப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு போவது போன்ற காரியங்களில் கஷ்டமான நிலைமை பற்றியெல்லாம் சொல்லப்பட்டது. சிங்கிள் பாயிண்ட் போட்டால் கணக்கு வைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் வருகிறது. ரிஜிஸ்டர் செய்யவேண்டியிருக்கிறது. இடைஞ்சல் ஏற்படுகிறது. அந்தந்தப் பொருள்களினுடைய குண உறவு நிலைமைக்குத் தகுந்தமாதிரி நிர்ணயிக்கப்படுகிறது. வியாபார சமூகத்தினரே இப்பொழுதுள்ள நிலையை ஒத்துக்கொண்டுவிட்டார்கள். அவர்களிடமிருந்து இப்பொழுது அவ்வளவு பெரிய கோரிக்கை இல்லை. ஆனால், வசோ ஒருமுனை வரி என்றால் சுலபமாக இருக்கும் என்று கருதிக்கொள்ளுகிறோம். சில பொருள்களுக்குத்தான் சிங்கிள் பாயிண்ட்டில் வரி போடமுடிகிறது.

நில வரியைப் பொறுத்த வரையில் நல்ல கருத்துக்களையெல்லாம் உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பொதுவாக, இந்த ஆண்டில் ஐம்பதாயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு மாவட்டங்களில் தீவிரமான நிலைமைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனக்ரோச்மெண்டினால் பல இடைஞ்சல்கள் இருக்கின்றன. அவற்றையும் நிவர்த்தி செய்து இன்னும் பலபேர்களுக்கு உரிமை ஆக்குவதற்கான காரியங்கள் மேற்கொள்ளப்படும்.

இந்த விவாதத்தின்போது, விவசாயிகள், உழவர் பெருமக்கள் இவர்களுக்கெல்லாம் காங்கிரஸ் கட்சி ரொம்பக் காரியங்கள் செய்ததாக சிலர் பெருமைபட்டுக்கொண்டார்கள். அவர்கள் பெருமைப்பட்டுக்கொள்வதில் எனக்குக் கோபம் இல்லையாது, சந்தோஷம்தான். குடியானவர்கள் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரால் பல நிலைமைகள் ஏற்பட்டதைப் பற்றியும் எத்தனையோ வழக்குகள் இருக்கின்றன என்றும் திரு. ஆ. ரு. சுப்பையா போன்றவர்கள் சொன்னார்கள். மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் பல நிலைமைகள் ஏற்பட்டு வழக்கு மன்றங்களுக்குப் போகின்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. குத்தகைதாரர்கள், சாகுபடியாளர்கள் பாதுகாப்புச் சட்டம், நியாய வாரச் சட்டம் இவையெல்லாம் மிராசுதார்கள்



1968 மார்ச் 18] [திரு கே. ஏ. மதியழகன்]

பாதுகாப்புச் சட்டங்களாக எப்படி உருவெடுத்தன என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனாலும், இந்த அரசு விவசாயப் பெருங்குடி மக்களை வாழ்விக்க வேண்டும் என்ற கருத்தில், பெரும் அக்கறைகொண்டு இருக்கிறது. அந்த வகையில் இந்தக் காரியங்களை நிறைவேற்றுவதற்காக இந்த மாமன்றத்தில் நல்ல ஆக்கபூர்வமான யோசனைகளைத் தெரிவித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பஞ்சத்தைப்பற்றி உருக்கமாக இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. பல இடங்களில் உள்ள நிலைமைகள் நமக்கு நன்றாகத் தெரிகிறது. அதற்கான என்ன என்ன காரியங்கள், சாத்தியக்கூறான காரியங்கள் செய்யவேண்டுமோ, அந்தக் காரியங்களைச் செய்யுமாறு கலெக்டர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சில இடங்களைப் பொறுத்து மிகைப்படுத்திக் கூறப்பட்டது. அப்படிச் சொன்னால் ஏதாவது நடக்காதா என்பது கருத்தாக இருக்கலாம். பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் பல இடங்களில் உள்ள நிலைமைகளை அறிந்து கருத்து தெரிவிக்க வேண்டியதுதான். பல்லடம் தொகுதியைக் குறித்து ஒத்துக்கொண்டோம் சில இடங்களில் நன்றாக வயல் விளைந்திருக்கும் என்றாலும், பஞ்சமாக இருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமையும் இருக்கிறது. தமிழகத்தில் எந்த இடத்தில் பஞ்ச நிலைமை இருந்தாலும், அங்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதில் எல்லோருக்குமே அக்கறை இருக்கிறது. தஞ்சை, இராமனாதபுரம் மாவட்டத்தில் புயல் ஏற்பட்டு, அங்கு எவ்வளவோ சிரமங்கள் ஏற்பட்டன. அப்பொழுது துயர் தணிப்பு வேலைகளுக்காக 70 லட்ச ரூபாய் இராமனாதபுரம் மாவட்டத்திற்குச் செலவு செய்தோம். 50 லட்ச ரூபாய் தஞ்சையிலே செலவு செய்தோம். இப்படியெல்லாம் செய்வதற்குக் கடந்த ஆண்டு ஆறு கோடி ரூபாய் செலவானதற்கு இரண்டு கோடி ரூபாய்தான் மத்திய அரசு கொடுத்தார் கள். சென்ற வருஷம் இந்த வருஷம் இரண்டுக்கும் சேர்த்து இரண்டரை கோடி ரூபாய்தான் கடனாகக் கொடுத்தார்கள். ஆனால், அஸ்ஸாம், பீகார் ஆகிய மாநிலங்களில் வெள்ள நிலைமை ஏற்பட்டபோது, ஐந்தாண்டுத் திட்டங் களில் 100 கோடி ரூபாய், 150 கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்தில் ஏற்படும் உற்பாதங்களைப் பொறுத்த வரையில், இன்னும் அதிகமான தொகை மத்திய அரசு ஒதுக்கும் வகையில், இங்கே எதிர்க்கட்சியில் இருக்கும் உறுப்பினர்கள் இந்த ஆட்சிக்கு வலியுறுத்துவார்களானால், மேலும் பெற வசதியாக இருக்கும். இயற்கையினால் ஏற்படுகிற கொடுமைகளுக்குப் பரிகாரம் வேண்டுமென்று கேட்கும்போது, இந்த மாநிலம் புறக்கணிக்கப்படக்கூடாது, பாரபட்சம் காட்டப்படக்கூடாது. இன்னும் உதவி தேவைப்படும்போது, அதைப் பெற வாய்ப்பு இருக்கவேண்டும். இந்த விவாதத்தில் நல்ல முறையில் ஆக்க பூர்வமான பல கருத்துக்களைத் தெரிவித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அர்பன் லாண்டு டாக்ஸ் பற்றிக் குறிப்பிடப்பட்டது. அது வழக்கு மன்றத்தில் தாவாவில் இருப்பதால், அதைக் குறித்து சபையில் பேசக் கூடாது. அதைக்குறித்து உறுப்பினர்களும் கேட்கக்கூடாது, நானும் பேசக்கூடாது. வழக்கு முடிந்த பின்பு, வாய்ப்பு நேரும்போது, அர்பன் லாண்டு டாக்ஸ் பற்றிப் பேசிக்கொள்ளலாம். இப்பொழுது நான் அதைப் பேச விரும்பவில்லை. அதனால்தான் இதுவரையிலும் அதைப்பற்றிப் பேசவில்லை என்று கூறிக்கொண்டு, இந்த மானிய கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தவர்கள் எல்லோரும் அவற்றை வற் புறுத்தாமல், தயவு செய்து திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு எல்லாத் தரப்பினரையும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. எம். ராமசாமி கவுண்டர், திரு வி. கே. கோதண்டராமன். திரு ஏ. அ. சுப்பராஜா, திரு என். எஸ். வி. சித்தன் ஆகிய உறுப்பினர்கள் வெட்டுத் தீர் மானங்களை வற்புறுத்தவில்லையாதலால், அவை பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

திரு. சோ. அழகர்சாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லையாதலால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொண்டதாகக் கருதப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, அவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 3—'பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும—நிர்வாகம்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,58,80,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து கோரிக்கை எண் 1. திரு செ. பாலசுப்பிரமணியன், திரு. என். எஸ். வி. சித்தன், திரு. கே. எம். ராமசாமி கவுண்டர், திரு எ. அ. சுப்பாராவ், திருமதி கே. பி. ஜானகியம்மாள் ஆகியோர்கள் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்த வில்லையாதலால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

திரு ஆ. கு. சுப்பையா, திரு எம். சுரேந்திரன் ஆகிய உறுப்பினர்கள் தங்களுடைய இருப்பிடங்களில் இல்லையாதலால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொண்டன வாகக் கருதப்படும்.

அவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 1—'நிலவரித் துறை' என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,60,26,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து கோரிக்கை எண் 31. திரு எ. பாலசுப்பிரமணியன், திரு க. ராமமூர்த்தி, திரு செ. பாலசுப்பிர மணியன் ஆகியோர்கள் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாத லால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் படுகின்றன.

திரு. கே. என். குமாரசாமி அவர்கள் தன்னுடைய இருப்பிடத்தில் இல்லையாதலால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனு மதியுடன் திரும்பப் பெற்றுக்கொண்டதாக் கருதப்படும்.

அவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 31—'பஞ்சத் தணிப்பு' என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,72,80,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

பகல் 13

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.



## 4. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

* 103. Notification issued with G.O. Ms. No. 3427, Home, dated the 19th December 1967, making an amendment to the Madras Cinemas (Regulation) Rules, 1957, published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957, as subsequently amended. [Laid on the Table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955).]

* 104. Notification issued with G.O. Ms. No. 2885, Agriculture, dated the 6th October 1967, regarding market area and notified market areas to the regulated market at Ethamoly in Kanyakumari district for the purpose of the said Act in respect of coconut and cashewnut. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]

$ 105. Madras Government's Review and Twenty-third Annual Report of the Fertiliser and Chemicals, Travancore Limited, Alwaye, for the year 1966-67. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

### B. *Reports, Notifications and other papers.*

£ 57. A Review on the Road Transport in Madras State 1967-68 (Tamil).

* 58. Speech of Hon. Thiru M. Karunanidhi, Minister for Public Works while moving the Demands Nos. 30 and 43 on Nationalised Transport (English and Tamil).

@ 59. Note on the policy underlying "Demand XXXI" under "Famine Relief" (English and Tamil).

@ 60. Policy Note on Demand No. 1—Land Revenue (English and Tamil).

61. Speech by Hon. Thiru K. A. Mathialagan, Minister for Food, while moving the Demand No. 1—'Land Revenue' (English and Tamil).

---

* Placed on the Table of the House on 16—3—1968.

£ Despatched to Members on 15—3—1968.

@ Despatched to Members on 16—3—1968.

$ Copies placed in the Legislature Library with reference to the proviso under rule 21 (5) of the Legislative Assembly Rules.

## APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 244 on page 437]

***Answer to clause* (c)—**

(1) Constructing culvert at Thiruppoonthuruthy-Thillaisthanam Road at an estimated cost of Rs. 4,000.

(2) White washing work in the Raja Mirasdar's Hospital, Thanjavur at an estimated cost of Rs. 200.

(3) White washing work in Thanjavur Police Line at an estimated cost of Rs. 2,944.

(4) Painting work at Thanjavur Medical College at a cost of Rs. 283.

(5) Laying of a road and construction of a compound wall at the premises of Thanjavur Co-operative Milk Supply Union, Limited, at an estimated cost of Rs. 5,287.

(6) Construction of a side retaining wall at the junction of Pampatti Street and Vedanarayanan Street at an estimated cost of Rs 7,688.

(7) Construction of retaining wall in old Nallumanai Road at an estimated cost of Rs. 6,953.

(8) Repairing work of Pillaiyarpatti Harijan School building at an estimated cost of Rs. 750.

(9) White-washing work at Raja Mirasdar's Hospital's Out-patient Ward, Thanjavur.

விடை. (உ)—

(1) திருப்பூந்துருத்தி-தில்லைஸ்தானம் சாலையில் 4,000 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் சிறுபாலம் ஒன்று கட்டுதல்.

(2) தஞ்சாவூர் ராஜா மிராசுதாரர் மருத்துவ மனையில் 200 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் வெள்ளையடித்தல்.

(3) தஞ்சாவூர் போலீஸ் குடியிருப்புகளில் 2,944 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் வெள்ளையடித்தல்.

(4) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் 283 ரூபாய் செலவில் வண்ணம் பூசுதல்.

(5) தஞ்சாவூர் கூட்டுறவு பால்வழங்கு ஒன்றிப்பு நிறுவனத்தின் வளவுகளில் 5,287 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் சாலை போடுதலும் சுற்றுமதில் கட்டுதலும்.

(6) பாம்பாட்டி தெருவும், வேதநாராயணன் தெருவும் கூடுமிடத்தில் 7,688 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பக்கத் தடுப்புச்சுவர் கட்டுதல்.

(7) பழைய நல்லுமனைத் தெருவில் 6,953 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் தடுப்புச்சுவர் கட்டுதல்.

(8) பிள்ளையார்பட்டி ஹரிஜனப் பள்ளிக்கட்டிடத்தை 750 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பழுது பார்த்தல்.

(9) தஞ்சாவூரிலுள்ள ராஜா மிராசுதாரர் மருத்துவமனையில் வந்து போகும் நோயாளி வார்டுக்கு வண்ணம் பூசுதல்.



## இணைப்பு II.

(452-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**மானியக் கோரிக்கை XXXI—பஞ்சத் துயர் தணிப்புக் கொள்கை விளக்கக் குறிப்பு.**

“பஞ்சம்” என்பது, மழை, வளம் குன்றி நிலம் வறட்சி அடைவதாலும், வெள்ளம், புயல் தீ, கொள்ளை நோய், நில நடுக்கம் போன்ற இயற்கையின் ஏனைய சீற்றத்தாலும் ஏற்படும் துன்பமாகும். இத் துன்பங்களைப் போக்கும் முயற்சியில் ஏற்படும் செலவினை இத் தலைப்பில் பற்றாக எழுதுகிறோம். பஞ்சக் கொடுமையைத் தணிப்பதற்காக அரசு நேரிடையாகச் செலவிடும் எல்லாச் செலவும் “64. பஞ்சத் துயர் தணிப்பு” என்கிற தலைப்பின்கீழ்ப் பொருத்தமான சிறு தலைப்புகளுக்கு பற்றாக எழுதப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, காவல்படை பெருக்கம், மருத்துவ உதவி, உள்ளாட்சி மன்றங்களுக்குத் தரும் மானியங்கள் போன்ற மறைமுகச் செலவு “பஞ்சத் துயர் தணிப்பு” என்பதன் கீழ்ப் பற்றெழுதப் படாமல், உரிய பணித் தலைப்பிற்குப் பற்றாக எழுதப்படும். “64. பஞ்சத் துயர் தணிப்பு” என்பதன்கீழ்ப் பொது உள் தலைப்புகளுக்குப் பற்றெழுத வேண்டிய செலவு விவரங்கள் நிதி நிலைக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

2. ஓர் இடத்தில் பயிர் சாவியாய்ப் போனால், குறு நிலக்கிழார்களும், பண்ணையாட்களும், கிராமத் தொழிலாளிகள் போன்ற நிலமற்றவர்களும் மிகத் துன்பத்திற்குள்ளாகிறார்கள். இந்த தொழிலாளிகளுக்குத் தானியம் இருப்புக் கிடையாது; கூலி வேலை செய்து பிழைப்பவர்களுக்குக் கூலி வேலையும் எப்போதும் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை. அக் காலங்களில் குடியானவர்களுக்குத் துன்பம் நேரிடாமல் காப்பது அரசின் கடமையாகும். இதற்காக, முன்கூட்டியே ஒரு வேலைத் திட்டத்தைத் தயாரித்துக் கைவசம் வைத்துக்கொண்டால், பஞ்ச காலத்தில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஐயமோ, தயக்கமோ இருக்காது. அத்தகைய பஞ்ச காலங்களில் பின்பற்றவேண்டிய கோட்பாடுகளைக் குறித்துத் தமிழகப் பஞ்சச் சட்டக் கோவையில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் நன்றாக ஆலோசித்து பஞ்சத் துயர் தணிப்பு வேலைத் திட்டங்களை வகுத்திருக்கின்றோம். அந்தந்த மாவட்டத்தில் இத் திட்ட வேலைகள் எல்லாம் எந்த நிலையில் உள்ளன, ஒவ்வொன்றிற்கும் ஆகக்கூடிய செலவு என்ன, ஒவ்வொன்றிலும் எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும் என்கிற தகவல்களை இத் திட்டங்கள் காட்டும். பொதுவாக, இந்த வேலைகள் மக்கட் தொகையில் சுமார் 20 சதவீதத்தினருக்கு ஆறு மாதங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

4. பஞ்சத் தணிப்பு வேலைகளை மேற்கொள்ளும் அளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாக இருப்பதாகவும், ஆனால் அடுத்த வேளாண்மைப் பட்டத்தின் போது வேளாண்மைப் பணிகளுக்கு ஆக சாதாரணமாகப் பண்ணையாட்கள் தேவைப்படுவார்களாதலால், அப் பட்டத்திற்கு முன்பு கடுந்துயர் ஏற்பட்டுவிடாது என்றும் கலெக்டர் கருதினால், அந்த ஊரில் நடைபெறும் சாதாரண பொதுப் பணிகளை விரிவுபடுத்த நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ளலாம்; மற்றும் உள்ளாட்சி மன்றங்களும் தங்கள் பொதுப் பணி வேலைகளை விரிவுபடுத்த வேண்டுமென அவற்றையும் கேட்கலாம். அந்த முயற்சிகள் பலனளிக்காவிட்டால், வேலை செய்ய முடிந்தவர்களுக்குத் துயர் தணிப்பு தேவைப்படும் அளவிற்குத் துயர் ஏற்பட்டுள்ளதா என்று அறிய (சாலை வேலைகள், ஏரி வேலைகள் போன்ற) வேலைகளை முன்னோடி வேலைகளாகத் தொடங்கலாம். ஆதரவற்றவர்கள் பட்டினியால் மாளாது தடுக்க உதவியளிக்கலாம்.

5. பண்ணையாட்கள் குறைந்த கூலிபெற்று கடின வேலையைச் செய்ய ஒப்புக்கொண்டால், உண்மையிலேயே பஞ்ச நிலைமை கடுமையாக இருக்கிறது என்று கருதலாம். அத்தகைய ஒரு நிலைமை இருக்கிறதா என்பதை அறிய அரசு "குறைந்த கூலியில் பஞ்சத் துயர் தணிப்பு வேலைகள்" என்று சொல்கிற வேலைகளைத் தருகிறார்கள். துயர்த் தணிப்பு வேலைகளைத் தொடங்கும்படி இடைவிடாமல் கேட்கும் பகுதிகளில் பஞ்சத் தணிப்புச் சட்டக் கோவையில் சொல்லியுள்ள "முன்னோடி வேலைகளைப்" போன்றவை இந்த வேலைகள். தொழிலாளிகள் தங்கள் வேளாண்மைப் பணிகளைப் புறக்கணித்துவிட்டு இந்த வேலைகளையே தங்கள் தொழிலாகக் கொண்டுவிடக்கூடாது என்பதற்காகவே குறைந்த கூலி கொடுக்கப் படுகிறது.

6. பஞ்சக்காலத்தில் இறந்த முன்பு சாலைகளுக்குக் கல் திரட்டி சல்லி உடைப்பது போன்ற பயனற்ற வேலைகளுக்குச் செலவு செய்து வந்தார்கள். (இந்தச் சல்லி சாலை போடுவதற்குப் பயன்பட்டாலும் பயன்படும். அல்லது சாலை மழையில் அடித்துக் கொண்டு போனாலும் போய்விடும்.) ஆனால் இப்போது என்றென்றும் பொது மக்களுக்குப் பயன் தரும் வேலைகளான பெரிய, சிறிய பாசன வேலைகள், உணவு உற்பத்தி வேலைகள், போர்ப் பிற்கால சாலைத் திட்டத்தில் சேர்ந்த சாலை வேலைகள், கிராம நீர் வழங்கும் திட்டங்கள் போன்ற வேலைகளில் பணத்தைச் செலவழிக்கிறார்கள். அந்தந்த இடங்களில் பஞ்ச நிலைமை சீர் திருந்தியதும், இந்த வேலைகளை முடித்தாலும் முடித்துவிடுகிறார்கள் அல்லது குறித்த ஒரு கட்டத்தில் நிறுத்திவிடுகிறார்கள்.

7. துயர் தணிப்புத் திட்டத்தின்கீழ், இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும், அவர்களுடைய வீட்டைத் திரும்பக் கட்டிக்கொள்வதற்கு அல்லது பழுது பார்ப்பதற்கு ரொக்க மானியமாக ரூ. 30-ம் இழந்த துணிகளையும், பாத்திரங்களையும் திரும்ப வாங்குவதற்கு உடை மானியமாக ரூ. 10-ம் அளிக்கப்படுகிறது. தீ விபத்துகளைப் பொறுத்தவரையில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள உதவித்தொகை போதாது என்று அரசாங்கம் கருதுகிறது. எனவே, தீ விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் 1967 ஜூலை 1-ம் தேதி முதல் ரொக்க மானியத்தை ரூ. 30-லிருந்து ரூ. 60 ஆகவும் உடை மானியத்தினை ரூ. 10-லிருந்து ரூ. 20 ஆகவும் அரசாங்கம் உயர்த்தியுள்ளது.

8. 1967 அக்டோபரில், 1967 அக்டோபர் 17-ம் தேதி முதல் 1967 அக்டோபர் 22-ம் தேதி வரையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை, முதுகுளத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம் வட்டங்களில் பலத்த மழை பெய்தது. மேலே குறிப்பிட்ட கால அளவில் 200-லிருந்து 300 மில்லி மீட்டர் வரையில் மழை பெய்தது. 416 பாசன ஏரிகள் உடைப்பெடுத்தன. 3,296 குடிசைகள் சேதமடைந்தன. தங்கள் உறைவிடங்களை இழந்து அல்லல்பட்ட ஏழைக் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் வழக்கமாக அளிக்கப்படும் ரொக்க மானியமாகிய ரூ. 40-ஐ (குடிசையை செப்பனிட ரூ. 30-ம், இழந்த துணிகளுக்கும் பாத்திரங்களுக்கும் பதிலாக புதியனவற்றை வாங்க ரூ. 10-ம்) வழங்க கலெக்டர் ஒப்பளிப்பு வழங்குகிறார். நில மேம்பாட்டுக் கடன் சட்டத்தின்கீழ்க் கடன் வழங்குவதற்காக கலெக்டருக்குத் தனியாக ரூ. 1 லட்சம் ஒதுக்குவதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. மேலும், வருவாய்த்துறை பணியாளர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தக்காவிக் கடன் வழங்குவதற்கு வகை செய்வதற்காக திருவாடானை, முதுகுளத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம் ஆகிய வட்டங்களில் முழு நிதி உதவித் திட்டத்தின் விதித் துறைகளை அரசாங்கம் தளர்த்தியது. ஏரிகளின் உடைப்புகளையும், சேதமடைந்த சாலைகளையும் செப்பனிடும் வேலை அரசாங்கத்தின் ஏற்பளிப்பை எதிர்பார்த்து உடனடியாக மேற்கொள்ளப்பட்டது.



9. மறுபடியும், 1967 டிசம்பர் இரண்டாவது வாரத்தில், இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில், புயலும், பலத்த மழையும் பெய்தன. இராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக, இராமநாதபுரம், திருவாடானை வட்டங்களில் 18 மணி நேரத்தில் பெய்த மழை அளவு 26 சென்டி மீட்டர் ஆகும். அதே நேரத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி வட்டங்களின் கடற்கரைப் பகுதிகளில் 28 சென்டி மீட்டர் மழை பெய்தது. மக்கள் உறையும் குடிசைகள், கால்நடை, பாசன ஏரிகள், சாலைகள் ஆகியவற்றிற்குப் பெருத்த அளவில் சேதம் ஏற்பட்டது. புயலினாலும், வெள்ளத்தினாலும் ஏற்பட்ட சேதத்தினைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளுவதற்காக, மாண்புமிகு கூட்டுறவு அமைச்சரும், வருவாய்த்துறைச் செயலாளரும் இந்த இரண்டு மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் இடர் தணிப்பு வேலைகளையும், மறுவாழ்வு அளிக்கும் பணியும், மேற்கொள்வது பற்றி விவாதிப்பதற்காக துறைத் தலைவர்கள், அரசாங்கச் செயலாளர்கள் மாநாடு ஒன்றை வருவாய்த் துறைச் செயலாளர் கூட்டினார். மாநாட்டில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. புயல் முதலியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடர் உதவி அளிப்பதற்காக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மேற்கொள்ளப்பட்ட இடர் தணிப்பு நடவடிக்கைகள் கீழே விளக்கப்பட்டுள்ளன:—

(1) **பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொக்க மானியம்.**—புயல் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் 5,000 குடிசைகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 10,000 குடிசைகளும் சேதமடைந்தன. புயலினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும், முறையே ரொக்க மானியமாக ரூ. 30-ம், உடை மானியமாக ரூ. 10-ம் அளிப்பதற்கான செலவிற்காக இராமநாதபுரம் கலெக்டருக்கு ரூ. 2,00,000-ம், தஞ்சாவூர் கலெக்டருக்கு ரூ. 4,00,000-ம் அளிப்பதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவளிப்பதற்கான செலவிற்காக ரூ. 27,200-க்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் இலவசமாக உணவளிப்பதற்கான செலவிற்காக ரூ. 16,000-க்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(2) **நெற்பயிருக்காகக் கடன் வழங்குதல்.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் 50,000 எக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த தாளடிப் பயிர் நீரில் மூழ்கிவிட்டது. 20,000 எக்கரில், காலங் கடந்து பயிரிடப்பட்ட தாளடிப் பயிர் நாசமாகிவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப் பரப்பளவில் திரும்பவும் பயிரிட வேண்டியிருப்பதால் தஞ்சாவூர் மாவட்டக் கலெக்டருக்கு ரூ. 1 லட்சம் ஒதுக்க அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. தாளடிப் பயிரைத் திரும்பவும் பயிரிடுவதற்காக, ஒவ்வொரு எக்கருக்கும் ரூ. 60-க்கு மேற்படாத வட்டியில்லாக் கடனை விதையாகவும் இரசாயன உரங்களாகவும் அளிப்பதற்காக அந்தப் பணம் வழங்கப்பட்டது.

(3) **நிலங்களைப் பண்படுத்துவதற்காகக் கடன் வழங்குதல்.**—ஏறத்தாழ இராமநாதபுரம் மாவட்டத்தில் 4,000 எக்கர் பரப்பளவும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 500 எக்கர் பரப்பளவும், புயல் காரணமாக மணல்மேடிட்டது. மண்ணடிக்கப்பட்ட நிலங்களைப் பண்படுத்துவதற்காக ஒவ்வொரு எக்கருக்கும் ரூ. 200-க்கு மேற்படாத கடன் அளிப்பதற்காக, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 4,00,000-ம் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ரூ. 50,000-ம் வழங்குவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சில வட்டாரங்களின் முழு நிதி உதவித் திட்டம் செயலில் உள்ளதாலும், பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு உடனடியாக இடர் உதவி அளிக்க வேண்டியுள்ளதாலும், முழு நிதி உதவித் திட்டத்தில் விதித்துறைகளைத் தளர்த்துவதன் மூலம், பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலமேம்பாட்டுக் கடன் வழங்கு சட்டம், வேளாண்மைக் கடன் சட்டம் ஆகியவற்றின்கீழ்க் கடன் வழங்க வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கும், வருவாய்த் துறை பணியாளர்களுக்கும் அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. புயலில் இழந்து கால்நடைகளைத் திரும்ப வாங்குவதற்காக கடன் வழங்கும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் வேளாண்மைத் துறையின் ஆலோசனையில் உள்ளது.

[1968 மார்ச் 18

(4) **வருவாய்த் துறை சிறப்புப் பணியாளர்களை நியமித்தல்.**—இடர் தணிப்பு பணியின் எல்லாக் கூறுகளையும் கவனித்துக் கொள்வதற்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு தாசில்தார்கள், நான்கு வருவாய்த் துறை ஆய்வாளர்கள், ஆறு ஏவலர்கள் ஆகியோரை நியமிப்பதற்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் மூன்று தாசில்தார்கள், மூன்று வருவாய்த் துறை ஆய்வாளர்கள், மூன்று ஏவலர்கள் ஆகியோரை நியமிப்பதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(5) **மீனவர்களுக்கு இடர் உதவி.**—இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில், புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 50 : 50 என்ற விகிதத்தில் கடனும், உதவித் தொகையும் வழங்குவதற்காக ரூ. 4,95,095 செலவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. சேதமடைந்த மீன்பிடி படகுகளையும், கட்டுமரங்களையும், பருத்தி வலைகளையும், நைலான் வலைகளையும் திரும்ப வாங்குவதற்காக அல்லது சீர்படுத்துவதற்காக நிதி உதவி வழங்கப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 4,600 மீனவர் குடும்பங்களுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 500 குடும்பங்களுக்கும், ஒரு குடும்பத்திற்கு ரூ. 50 வீதம் ரொக்க மானியம் அளிப்பதற்காக ரூ. 2,55,000 தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. சேதமடைந்த படகுகளையும், வலைகளையும் மீன் பிடிப்பதற்கு உடனடியாகப் பயன்படுத்த இயலாத குடும்பங்களுக்கும் மட்டுமே இந்த ரொக்க மானியம் வழங்கப்படும்.

(6) **உடைப்பெடுத்த ஏரிகளையும், கால்வாய்களையும் செப்பனிடுதல்.**—இராமநாதபுரம் மாவட்டத்தில் 6-4 ஏரிகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 324 ஏரிகளும் உடைப்பெடுத்து விட்டன. ஏரிகள், ஆறுகள், கால்வாய்களின் உடைப்புகளை உடனடியாக அடைப்பதற்காக தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ரூ. 5,50,000-ம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ 10,00,000-ம் வழங்குவதற்கான செயற்குறிப்பும், பாசன ஏரிகளை முறையாகப் பழுது பார்ப்பதற்காக தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ரூ 26,50,000-ம், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 70,00,000-ம் வழங்குவதற்கான செயற்குறிப்பும் அரசாங்கத்தின் பொதுப்பணித் துறையின் ஆலோசனையில் உள்ளது. இச் செலவிற்கான சரியான மதிப்பீடு, தலைமைப் பொறியாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. தேவகோட்டையைத் தலைமை நிலையாகக் கொண்டு ஒரு பிரிவு அலுவலகமும், ஐந்து துணைப் பிரிவு அலுவலகங்களும், தஞ்சாவூரில் ஒரு துணைப் பிரிவு அலுவலகமும் திறக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இவ்வலுவலகங்கள், மேற்சொன்ன ஏரிகளைப் பழுது பார்க்கவும், 1967-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஏற்பட்ட புயலின் காரணமாகப் பழுதடைந்த ஏரிகளைச் செப்பனிடவும் அமைக்கப்பட்டுள்ளன.

(7) **நெடுஞ்சாலைத் துறையினால் பேணிவரப்படும் சாலைகள்.**—இராமநாதபுரம் மாவட்டத்தில் சேதமடைந்த மாநில நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த சாலைகளைத் திரும்பப் போடுவதற்காக அரசாங்கத்தின் ஒப்புதலை எதிர்பார்த்து நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியாளர் ரூ. 9 இலட்சம் அளவில் ஒப்பளிப்பு வழங்குகிறார். நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த சேதமடைந்த சாலைகளைப் பழுதுபார்ப்பதற்கென ரூ. 20 இலட்சம் ஒதுக்குவதற்கான செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில், பழுதடைந்த சாலைகளைச் செப்பனிடுவதற்காக, இரண்டு துணைப் பிரிவு அலுவலகங்கள் ஏற்படுத்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

(8) **ஊராட்சி ஒன்றியச் சாலைகளும் ஊராட்சிச் சாலைகளும்.**—இராமநாதபுர மாவட்டத்தைச் சார்ந்த ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், ஊராட்சிச் சாலைகளையும் பழுதுபார்ப்பதற்காக தலைமைப் பொறியாளரின் விரிவான அறிக்கை வரப்பெற்றதும் நடப்பு ஆண்டில் ரூ. 1 இலட்சம் ஒதுக்குவதென்றும், இதேபோல தனி மானியம் அடுத்த ஆண்டிற்கும் ஒதுக்குவதென்றும் முடிவெடுக்கப் பெற்றுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, செயற்குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன.



1968 மார்ச் 18]

(9) **இராமேஸ்வரம் ஊராட்சி.**—புயலினாலும், மழையினாலும் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக தருவை வாய்க்காலில் வந்த உபரி நீரை வெளியேற்றுவதற்காக இராமேஸ்வரம் நகரியத்திற்கு ரூ. 3,000 மானியமாக அளிக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(10) **மத்திய உதவி.**—இந்த அரசாங்கத்தின் சீர்கேடான நிதி வழி வகைகளின் காரணமாக, இடர் தணிப்பு வேலைகளுக்குத் தொடர்பான செலவினை மேற்கொள்ளும் பொருட்டு மானியமாக ரூ. 36 74 இலட்சமும் கடனாக ரூ. 159 74 இலட்சமும் அளிக்கும்படி இந்திய அரசினை வேண்டியுள்ளோம். இந்திய அரசு ரூ. 250 இலட்சம் கடனுக்கு மட்டுமே ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேற்கொண்டும் நிதி உதவி வழங்குமாறு இந்திய அரசினை வற்புறுத்தியுள்ளோம்.

## இணைப்பு III

[45?-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பினைக் காண்க.]

## மானியக் கோரிக்கை 1.

**கொள்கை விளக்கக் குறிப்பு.**

### தமிழ்நாடு 1955-ம் ஆண்டு வேளாண்மை வருமானவரிச் சட்டம்

வேளாண்மை வருமானவரிச் சட்டம் தமிழ் நாட்டில் முதற்கண் 1955-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி அன்று செயலுக்குக் கொணடுவரப் பட்டது. காப்பி, தேயிலை, ரப்பர், ஏலம், சின்கோனா மலைத் தோட்டப் பயிர்களிலிருந்து கிடைக்கும் வருவாய் குறித்து இச்சட்டம் இயற்றப் பட்டது. ஏனைய பயிர்களுக்கும் இவ்வரியை நீட்டித்து மேற்படி சட்டம் 1958-ல் திருத்தியமைக்கப்பட்டது. 1961, ஏப்ரல் 1-ம் தேதியன்று இச் சட்டம் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து இம்மாநிலத்திற்கு மாற்றப்பட்ட பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டம் ஆகிய மாற்றப்பட்ட பகுதிகளில் 1950-ம் ஆண்டு திருவாங்கூர் கொச்சி வேளாண்மை வருமான வரிச் சட்டம் தொடர்ந்து செயலிலிருந்து வருகிறது.

2. விலக்கு அளிக்கப்பட்ட 12·50 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு அதிகமாக நிலங்கள் வைத்திருப்போர் ஒவ்வொருவருக்கும் இப்போது வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுகிறது. 12·50 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு மேற்பட்டு நிலம் வைத்துள்ள ஒருவரது மொத்த வேளாண்மை வருமானம் ரூபாய் 3,600 என்ற விலக்கு வரையறைக்கு மேற்பட்டால் அந்த வேளாண்மை வருமானத்தின்மீது வரி விதிக்கப்படுகின்றது. வரி விதிப்பு ரூபாய்க்கு 5 காசு என்ற வீதத்தில் தொடங்கி ரூபாய்க்கு 45 காசு வரையில் பல படிகளில் உயருகிறது. ஆனால், வணிக நிறுவனத்தைப் பொறுத்த வரையில் மொத்த வேளாண்மை வருமானத்தின் மீதும் ரூபாய்க்கு 45 காசு என்ற அதிக அளவு விதத்தின்படி வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுகின்றது. சட்டத்தின் விவர அட்டவணையைக் காண்க—வேளாண்மை வருமான வரியை உடன்பட்டுச் செலுத்துவதற்கான ஏற்பாடு கீழ்க்கண்டவற்றில் செயலில் உள்ளது:—

(1) ஒருவர் வைத்துள்ள நிலத்தில் மலைத்தோட்டப் பயிர் விளைவிக்கப் பட்டாலும் ஏனைய பயிர் விளைவிக்கப்பட்டாலும் அவர் வைத்துள்ள நிலத்தின் அளவு 50 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு மேற்படாவிட்டால், அவர் அந்த வரியை குறிப்பிட்ட வீதங்களில் உடன்படடுச் செலுத்தலாம் ;

(2) ஒருவர் வைத்துள்ள நிலத்தில் மலைத்தோட்டப் பயிர் விளைவிக்கப் பட்டாலும் ஏனைய பயிர் விளைவிக்கப்பட்டாலும் அவர் வைத்துள்ள நிலத்தின் அளவு 50 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு மேற்பட்டிருந்து,

அவரது நிலத்தில் மலைத் தோட்டப் பயிர் விளைவிக்கப்படும் பரப்பளவு 50 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு மேற்படா விட்டால், அவர் அந்த வரியை குறிப்பிடப்பட்ட விதங்களில் உடன்பட்டுச் செலுத்தலாம்;

(3) ஒருவர் வைத்துள்ள நிலத்தில் மலைத்தோட்டப் பயிர் விளைவிக்கப்பட்டாலும் ஏனைய பயிர் விளைவிக்கப்பட்டாலும், அவர் வைத்துள்ள நிலத்தின் அளவு 50 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு மேல்பட்டிருந்து அவரது நிலத்தில் மலைத்தோட்டப் பயிர் விளைவிக்கப்படும் பரப்பளவு 50 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு மேற்பட்டிருந்தால், அந்த நிலத்தில் விளைகிற மலைத் தோட்டப் பயிரில்லாத ஏனைய பயிர்கள் மூலம் கிடைக்கிற வருமானத்தின்மீது அவர் செலுத்தத்தக்க வரியை உடன்பட்டு முடிவு செய்து கொண்டு, அவர் செலுத்தத் தக்க வரிக்கு பதிலாக குறிப்பிடப்பட்ட மொத்தத் தொகையைச் செலுத்தலாம்.

3. அடியிற்கண்டவற்றிற்கு வகை செய்வதற்காக தமிழ்நாடு 1955-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தைத் திருத்த அரசாங்கம் சட்டம் இயற்ற முனைந்துள்ளது:

(i) விலக்களிக்கப்பட்ட பரப்பளவாகிய 7·50 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு மேற்பட்டு நிலம் வைத்துள்ள ஒவ்வொருவருக்கும் வேளாண்மை வருமான வரி வசூலிக்கப்பட,

(ii) வேளாண்மை வருவாய் குறித்த விலக்களிக்கப்பட்ட வரையறை ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 3,600 ஆக இருப்பதை ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 4,000 ஆக அதிகரிக்க ;

(iii) வேளாண்மை வருமான வரியை உடன்பட்டுச் செலுத்துவதற்கான வீதத்தைத் தற்போதுள்ள வீதம் போல 2½ மடங்கு வீதமாக்குதல் ;

(iv) வேளாண்மை வரியை உடன்பட்டுச் செலுத்துவதற்கான ஏற்பாடு எல்லா நிலைகளிலும் எல்லாப் பயிர்களுக்கும் அனுமதிக்கப்படலாம். ஆனால் உடன்பட்டுச் செலுத்துவது குறித்த விதித்துறை முதல் 50 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு வரையறுக்கப்படும் மலைத் தோட்டங்களுக்கு.

மேற்சொன்ன சட்டம் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதற் கொண்டு செயலுக்கு வரத் தொடங்கும்.

4. 1950-ம் ஆண்டு திருவாங்கூர்–கொச்சி வேளாண்மை வரிச் சட்டம்.—இச் சட்டம் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தைப் போலவே உள்ளது. ஆனால், அச்சட்டத்தில் வரியை உடன்பட்டுத் தீர்த்துக் கொள்வதற்கு வகை செய்யப்படவில்லை. அச் சட்டத்தின்படி மொத்த வேளாண்மை வருமானம் ரூ 3 000 என்ற வரையறைக்கு மேற்பட்டிருந்தால், அதற்கு மட்டுமே வரி விதிக்கப்படுகிறது; வரி வீதங்களும் வேறுபடுகின்றன. இச் சட்டத்தின்படி வரி வீதங்கள் ரூபாய்க்கு 5 காசு முதல் 25 வரை செல்கின்றன. 25,000 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானத்தின் மீது மேல்வரியும் விதிக்கப்படுகிறது. அது ரூபாய்க்கு 10 காசிலிருந்து 40 காசுவரை உயர்ந்து கொண்டு போகிறது. வணிக நிறுவனத்தைப் பொறுத்தவரையில், வேளாண்மை வருமானவரி ரூபாய்க்கு 25 காசு என்ற வீதத்திலும், மேல்வரி ரூபாய்க்கு 12½ காசு என்ற வீதத்திலும் விதிக்கப்படுகின்றன. இச் சட்டத்தை நீக்கிவிட்டு மாநில முழுவதையும் தமிழ்நாட்டுச் சட்டத்தின்கீழ் கொண்டு வரலாமா என ஆராயப்பட்டது. நில உச்சவரம்புச் சட்டம் நிறைவேற்றப்படும் வரையில் பொறுத்திருப்பதென முடிவு செய்யப்பட்டது.

5. வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் நிர்வாக அமைப்பு.—1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன்னர் வேளாண்மை வருமானவரி ஆணையர் இச் சட்டத்தின்கீழ் இத்துறையின் தலைவராக இருந்து வந்தார். இவர் முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தார். இவர் வருவாய்த்துறை வாரியத்தின்கீழ் நேரடியாகப் பணியாற்றி வந்தார். 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் வேளாண்மை வருமான வரி ஆணையர் பதவி தமிழக நிலவரி ஏற்பாட்டு நெறியாளரின் பதவியுடன் இணைக்கப்பட்டது. இப்போது இவர் ஏற்பாட்டு நெறியாளர் நிலவரி வேளாண்மை வருமான வரி ஆணையர் என அழைக்கப்படுகிறார். இவர் வருவாய்த்துறை வாரியத்தின்கீழ் நேரடியாகப் பணியாற்றுகிறார்.



வருவாய்த்துறை வாரியத்தில் இசன் பொறுப்பு வகிக்கிற உறுப்பினர் சட்டப்படிக்கான பொறுப்புகளைக் குறித்தும் கோட்பாடுகளை குறித்தும் ஒப்புதல் அளிக்கிறார். இந்த நெறியாளர் ஆணையருக்கு நேர்முக உதவியாளர் ஒருவர் இருக்கிறார். அந்த உதவியாளர் துணை கலெக்டர் தரத்தில் உள்ளவர். அந்த உதவியாளருடன் தேவையான நிலைப்பணியாளர்களும் இருக்கின்றனர். மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், விழுப்புரம், உதகமண்டலம், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய தலைமையிடங்களில் உதவி ஆணையர் ஐவர் வரிவிதிப்பு அதிகாரிகளின் வேலையை மேற்பார்வையிடுவதற்காக துணை கலெக்டர் தரத்தில் உள்ளனர். உதவி ஆணையர் ஒவ்வொருவரின் அதிகார வரம்பு ஒரு மாவட்டமாக அல்லது அதற்கு சிறிது கூடுதலாக இருக்கும். உதவி ஆணையரின் கீழ் வரிவிதிப்பு ஆணையைச் செய்வதற்காக தாசில்தாரரின் தரத்தில் வேளாண்மை வருமான வரி அதிகாரிகளும் துணைத்தாசில்தாரரின் தரத்தில் வேளாண்மை வருமானவரி உதவி அதிகாரிகளும் உள்ளனர். நேரடி வேலையில் இவர்களுக்கு ஆய்வாளர்கள் உதவி செய்கின்றனர்.

6. தாசில்தாரர் தரத்திலுள்ள வேளாண்மை வருமானவரி அதிகாரியும் துணை தாசில்தாரர் தரத்திலுள்ள வேளாண்மை வருமானவரி உதவி அதிகாரியும் வரிவிதிப்பு நடவடிக்கைகளை முடிவு செய்கின்றனர். இவர்களுடைய முடிவுகளுக்கு எதிராக மேல் முறையீடு செய்து கொள்ளலாம் ; அல்லது மறு விசாரணை செய்து மாற்றியமைக்கும்படி ஆணையருக்கு நேரடியாக விண்ணப்பித்துக் கொள்ளலாம். மேல் முறையீட்டில் உதவி ஆணையர் பிறப்பித்த ஆணைக்கு எதிராக நடுவர் மன்றத்திற்கு மேல முறையீடு செய்து கொள்ளலாம் ; அல்லது மறு விசாரணை செய்து மாற்றியமைக்கும்படி ஆணையருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். மேல்முறையீட்டில் நடுவர் மன்றம் பிறப்பித்த ஆணைக்கெதிராகவும் ஆணையரின் மறுவிசாரணை நடவடிக்கைக்கெதிராகவும் உயர்நீதிமன்றத்திற்கு சிவில் மறு ஆய்வு மனு கொடுக்கலாம். சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இச் சட்டத்தின் கீழும், விதிகளின் கீழும் சார்நிலை அதிகாரிகளுக்கு அவசியமான அறிவுரைகள் வழங்க பெருவாரியத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

7. சிக்கனம்–நிர்வாகச் சீரமைப்பு உயர்நிலைக்குழு செய்த முடிவினையொட்டி சென்னையிலுள்ள வேளாண்மை வருமான வரி ஆணையர் அலுவலகத்தில், அதிகாரிகளே பணி செய்யும் திட்டமொன்றினை 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம 1-ம் தேதி முதல் அரசு செயலுக்குக் கொண்டு வந்தது. வேளாண்மை வருமானவரித் துறையும் 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் சீரமைக்கப்பட்டது. இச் சீரமைப்பின் விளைவாக, ஏழு மாவட்டங்களிலுள்ள 58 வட்டங்களில் வேளாண்மை வருமானவரி வேலை முறையான தாசில்தாரர்களிடம் மாற்றப்பட்டுள்ளது. ஏனைய வட்டங்களில் இந்த வேலையைச் சிறப்புப் பணியாளரே தொடர்ந்து செய்து வருகின்றனர்.

8. 1960 61 முதல் 1966-67 வரை வேளாண்மை வருமான வரி வகையில் கேட்பு—வசூல்—நிலுவை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | | கேட்பு. | வசூல். | நிலுவை. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1960-61 | .. | 1,76,25,630·71 | 1,42,94,976·46 | 33,30 654·25 |
| 1961-62 | .. | 1,75,41,931·09 | 1,47,44,492·94 | 27,97,43[illegible]·15 |
| 1962-63 | .. | 1,65,48,595·06 | 1,35,38,155·23 | 30,10,439·83 |
| 1963-64 | .. | 1,72,42,792·75 | 1,38,57,235·73 | 33.85,557·02 |
| 1964 65 | .. | 1,72,60,197·39 | 1,38,62,217·54 | 33,97,979·85 |
| 1965-66 | .. | 1,64,82,660·94 | 1,28,80,338·45 | 36.02,322·49 |
| 1966-67 | .. | 1,68,96,223·40 | 1,06,93,129·03 | 62,03,094·37 |

## கொள்கை விளக்கக் குறிப்பு.

### நில அளவை நில ஆவணத்துறை வேலைகள்.

சென்னையிலுள்ள நில அளவை-நில ஆவணத் துறையிலுள்ள பணியாளர்களுக்கு ஆகும் செலவு, 1-வது மானியக் கோரிக்கையின் கீழ் " நிலவரி என்ற பெருந் தலைப்பிற்குப் பற்றாக எழுதப்படுகிறது,

மாநில அரசாங்கம் நில அளவைத் துறையைச் சீரமைத்துள்ளது. சீரமைப்பில் முக்கிய கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

(1) **மீண்டும் நில அளவைப் பணியை மேற்கொள்ள வேண்டிய பரப்பு.**—மறு நில அளவை மேற்கொள்ளப்பட்டுள்ள பகுதிகளில் நில அளவை வேலை கணிசமான பகுதியில் ஏற்கனவே செய்து முடிக்கப் பட்டுள்ளதாலும் நீலகிரி மாவட்டத்திற்கும் கோடைக்கானல் வட்டத்திற்கும் நில அளவை பதிவேடுகள் இராததாலும், நீலகிரி மாவட்டம். தென்னாற்காடு மாவட்டத்தின் கடலூர் வட்டம், வட ஆற்காடு மாவட்டத்தின் திருவண்ணாமலை வேலூர் வட்டங்களிலும் மதுரை மாவட்டத்தின் கோடைக் கானல் வட்டத்திலும் எஞ்சியுள்ள 1.817 சதுர மைல் பரப்புள்ள பகுதியில் மறு நில அளவைப் பணி தொடர்ந்து நிறைவேற்றி முடிக்கப்படும். மறு நில அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ள கீழ் பவானி திட்டப் பகுதியின் கீழ் வருகிற கோயம்புத்தூர் மாவட்டத்தின் பவானி, கோபிச்செட்டிப் பாளையம், ஈரோடு, தாராபுரம் ஆகிய நான்கு வட்டங்களிலும் இப் பணி அடி—ராத்தல் முறையின் கீழ் நிறைவேற்றப்படுகிறது.

(ii) மேலே குறிப்பிட்டுள்ள பகுதிகள் நீங்கலாக உள்ள ஏனைய பகுதிகளைப் பொறுத்தவரை, பழைய அமைப்பு முழுதும் சீர் குலைந்து விட்டது எனத் தெரிய வந்தால் கலெக்டரின் அல்லது மாவட்ட வருவாய் அதிகாரியின் நில அளவைத் துணை இயக்குனரின் அறிக்கையின் மீது அத்தகைய கிராமங்களில் மறுநில அளவைச் செய்யுமாறு வருவாய்த் துறை வாரியம் ஆணை பிறப்பிக்கும், ஆனால் இவ்வாறு செய்வதற்குக் கூடுதல் செலவு ஆகக்கூடாது.

(iii) தமிழ்நாடு ஜமீன்ஒழிப்புச் சட்டம், இனாம் ஒழிப்புச் சட்டம், ஆகியவற்றின் கீழ் உள்ள பகுதிகளில் அண்மையில் நில அளவை செய்யப் பட்டது. இப்பகுதி குறித்த ஆவணங்களும் அடி ராத்தல் முறையின்கீழ் மறு அளவை செய்யப்பட்ட பகுதிகளைக் குறித்த ஆவணங்களும்; தசாம்ச முறைக்கு மாற்றப்படும்.

(2) **நில அளவைப் பேணுதல் பிரிவைச் சீரமைத்தலும் நில அளவைக் குழுக்களும்.**—(i) சென்னை செங்கற்பட்டு மாவட்டங்கள் நீங்கலாக ஒவ்வொரு வருவாய் மாவட்டமும் நில அளவை மாவட்டப் பிரிவாக இயங்கும்; நில அளவை—நில ஆவண உதவி இயக்குனர் (பிரிவு அதிகாரி சுற்றி இயங்கும் நில அளவைப் பணியும் தனிப்பட்ட பணிகளும் நில ஆவணங்களைப் பராமரித்து வருவது உட்பட முறையான நில அளவைப் பணிகள் அனைத்திற்கும் பொறுப்பு வகிப்பர். மாவட்டத்திலே நில அளவைப் பணி, நில ஆவணங்கள் பராமரிப்பு ஆகியவை அனைத்தும் குறித்து கலெக்டரின் நேர்முக உதவியாளர் என்ற முறையில் இவர் தனக்குள்ள கடமைகளையும் பொறுப்புகளையும் கவனிப்பார்.

(ii) சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களுக்கு இணைப் பிரிவு ஒன்று உதவி இயக்குனரின் பொறுப்பில் இருக்கும்.

(iii) தென்னாற்காடு, கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களிலே நில அளவை உதவி இயக்குனர் ஒருவர் கூடுதலாக இருப்பார். இவர் மறுநில அளவைப் பணியைக் கவனித்துக் கொள்வார். சென்னை செங்கற்பட்டு பிரிவிலுள்ள இந்த அதிகாரி சென்னை மாநகரப் பகுதியில் முக்கியமாக நகர நில அளவைப் பணியைக் கவனித்துக் கொள்வார்.



(iv) ஒவ்வொரு பிரிவு அதிகாரிகளின்கீழும் ஒவ்வொரு பிரிவிலும் நில அளவை மேற்பார்வையாளர் இருவர் இருப்பர். சுற்றி இயங்கும் பணியாளர் பணியினை ஒருவரும் பராமரிப்புப் பணியினை மற்றொருவரும் கவனித்துக் கொள்வர். ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும் தலைமை நில அளவையாளர் ஒருவர் இருப்பார். ஒவ்வொரு வட்டத்திற்கும் துணை நில அளவையாளர் ஒருவர் இருப்பார்.

(v) தனிப்பட்ட வேலை இனங்களுக்கு வேண்டியிருக்கிற நில அளவை பணியாளர் வருங்காலத்தில் இத்துறையிலுள்ள மொத்த பணியாளர்களில் இருந்து பெறப்பட வேண்டும்.

(3) **நில அளவை நில ஆவணத் துறையின் தலைமை அலுவலகத்தை மாற்றியமைத்தல்.**—நில அளவை-நில ஆவணத் துணை இயக்குநர் நில அளவைப் பிரிவின் தலைவராவார். இந்த அலுவலகம் இப்போது வருவாய்த் துறை வாரியத்துடன் இணைந்துள்ளது. இனி இந்த அதிகாரி தனிப்பட்ட அலுவலகத்துடன் தனியாகச் செயலாற்றுவார். ஆனால், நில அளவை இயக்குநருக்கும் வருவாய்த் துறை வாரியத்திற்கும் இவர் மீது மேற்பார்வை அதிகாரம் உண்டு. துணை இயக்குநரின் தலைமை அலுவலகம் சென்னையிலேயே தொடர்ந்து இருக்கும்.

(4) மாவட்டப் பிரிவின் தலைமை இடம் அந்தந்த மாவட்டத் தலைமை இடமாக இருக்கும். ஆனால், இராமநாதபுரம் மாவட்டப் பிரிவிற்கும், கோயமபுத்தூர் கூடுதல் பிரிவிற்கும் மாவட்டத் தலைமை இடங்களில் தக்க இட வசதி கிடைக்கிறவரைக்கும் இந்த இரண்டு பிரிவுகளின் தலைமை இடங்கள் முறையே சிவகங்கையிலும், ஈரோட்டிலும் இருக்கும்.

## கோரிக்கை 1—நிலவரி:

### கொள்கை விளக்கக் குறிப்பு.

தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட நிலச் சீர்திருத்தங்களின் முதலாவது இனம் இடைநிலையாளர்களை ஒழித்ததாகும்.

I. 1947-ம் ஆண்டு தமிழக எஸ்டேட் நிலங்கள் (குத்தகைக் குறைப்பு) சட்டம் (தமிழகச் சட்டம் 30/1947).—ஜமீன் கிராமங்களையும் கீழ்க்குடிவார முறை எஸ்டேட்டுகளையும் (Under tenure Estates) மற்றும் முழு இனாம் கிராமங்களையும் கொண்ட எஸ்டேட்டுகள் தமிழகத்தில் இருந்தன. இந்த எஸ்டேட்டுகளின் நிர்வாகம் 1908-ம் ஆண்டு தமிழக எஸ்டேட் நிலச் சட்டத்தின் (தமிழகச் சட்டம் 1/1908) விதித் துறைகளால் முறைப்படுத்தப்பட்டு வந்தன.

அரசாங்கத்திற்கும் உண்மையில் பயிர் செய்கின்ற உழவர்களுக்கும் இடையே உள்ள இடைநிலையாளர்களை ஒழிப்பதற்கு சிலகாலம் செல்லும் எனக் கருதப்பட்டதனால், தொடக்க நடவடிக்கையாக எஸ்டேட்டுப் பகுதிகளில் நிலவிய உயர்ந்த வீதக் குத்தகையை ஏறத்தாழ அண்டையிலிருந்த ரயத்துவாரி பகுதிகளில் நிலவிய குத்தகை வீதங்களின் அளவிற்குக் குறைக்க அரசு விரும்பியது. அதன்படி 1947-ம் ஆண்டு தமிழக எஸ்டேட்டுகள் நில (குத்தகை குறைப்புச்) சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டம் 1948-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஏழாம் தேதியன்று செயலுக்கு வந்தது. இச் சட்டம், 1908-ம் ஆண்டு தமிழக எஸ்டேட்டுகள் நிலச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள எஸ்டேட்டுகள் அனைத்துக்கும் பயன்படும். மேற்படி சட்டத்தின் படிக்கான குறைந்த குத்தகை வீதங்கள் பெரும்பாலும் எல்லா எஸ்டேட் பகுதிகளிலும் அறிக்கையிடப்பட்டன. குறைக்கப்பட்ட குத்தகைகளை வசூலிக்கும் பொறுப்பையும் வசூலிப்பதற்கான செலவிற்காக 10 சதவீதம் கழிவுத் தொகையை எடுத்துக்கொண்டு நில உடைமையாளர்களுக்கு அவற்றைக் கொடுக்கும் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டது.

## மானியக் கோரிக்கை 1—நிலவரி

### கொள்கை விளக்கக் குறிப்பு.

நிலவரியே அரசாங்கத்தின் தொன்மையான வரிவாயிலாகும். நிலவரியின் பெரும்பகுதி நிலத்திலிருந்து கிடைக்கிறது. நிலவரி வருவாயில் மிகச் சிறு பகுதி தண்ணீர் தண்டத் தீர்வை, நில விற்பனை காரணமான வருவாய், ஏனைய பலவகை வருவாய் போன்ற பல இனங்களிலிருந்து கிடைக்கின்றது. நிலவரி ஆண்டு தோறும் ஜனவரி திங்கள் முதல் மே திங்கள் வரையில் செலுத்தப்படத்தக்கதாகும். அப்பொழுது பயிர் விளைவிக்கும் வேலை இருக்காது. பொதுவாக அறுவடையும் முடிந்திருக்கும்; எனவே, நிலவரியையும் ஏனைய நிலுவைகளையும் அப்போது செலுத்துவது கடினமாக இருக்காது.

2. நிலவரி ஏற்பாடுகளின் மூலம் நிலத்தீர்வை முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்தீர்வை மறு நிலவரி ஏற்பாட்டின்போது தக்க வகையில் திருத்தப்படுகின்றது. 1930-ம் ஆண்டு முதல் மறுநிலவரி ஏற்பாடு செய்வதில்லை என்பது அரசாங்கக் கொள்கையாக இருந்து வருகிறது. நிலவரி ஏற்பாட்டின்போது அடியிற்கண்ட வகையில் நிலவரி முடிவு செய்யப்படுகிறது.

நிலத்தின் மண் இயல்புக்கு ஏற்றபடி, நிலம் வகைப்படுத்தப்படுகிறது. ரசாயன, பௌதிக இயல்புகளுக்கும் மண் வளத்திற்கும் தக்கபடி, நிலங்கள் பல பிரிவுகளாகவும், தரங்களாகவும் மீண்டும் வகைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு நிலப்பகுதியிலும் நன்செய் புன்செய் நிலங்களில் விளையும் முக்கியப் பொருள் அல்லது தானியம் எதுவென்பதும் வரையறுக்கப்படுகிறது. மண் வளத்தின் ஒவ்வொரு பிரிவிலும் அல்லது தரத்திலும் விளையக்கூடிய பொருளின் அல்லது தானியத்தின் அளவும் மதிப்பிடப்படுகிறது. பருவ நிலைக் கோளாறுகளுக்கும், நில உடைமைகளில் ஆதாயமற்ற பகுதிகளுக்கும் சலுகை அளிக்கும் வகையில் மொத்த விளைச்சலில் குறிப்பிட்ட சதவீதம் கழித்துக் கொள்ளப்படுகிறது. அதன்பின் நிகர விளைச்சல் மதிப்பீட்டு வீதத்தின்படி பணமாகக் கணக்கிடப்படுகிறது. இதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. நிலவரி ஏற்பாட்டுக்கு அடுத்து முந்திய பஞ்சமற்ற 20 ஆண்டுக் காலஅளவில் அந்த முக்கிய பொருளின் சராசரி விலையைக் கணக்கிட வேண்டும். வண்டிச் சத்தம், வணிகர்கள் ஆதாயம் ஆகியவற்றிற்காக இதிலிருந்து ஓரளவு தொகை கழிக்கப்பட வேண்டும். பயிர் விளைச்சல் செலவைக் கணக்கிட்டு மேற்சொன்ன ரொக்க மதிப்பீட்டிலிருந்து கழித்துவிட வேண்டும். அதன் பின் நிகர ரொக்க மதிப்பில் பாதிக்கு மேற்படாத வகையில் தீர்வை வீதம் முடிவு செய்யப்படுகின்றது. புன்செய் நிலங்களைப் பொறுத்தவரையில் இந்தத் தீர்வை வீதம் அந்த நிலங்களில் இருக்கும் கிராமத்தின் நிலையையொட்டி மேலும் கொண்டு மாற்றியமைக்கப்படுகின்றது. நன்செய் நிலங்களைப் பொறுத்தவரையில் பாசன வாயிலின் திறனைப் பொறுத்து இத்தீர்வை வீதம் மேலும் கொண்டும் மாற்றியமைக்கப்படுகின்றது.

3 தீர்வை வீதங்களை முடிவு செய்வதற்கு முதலில் மேற்கொள்ளப்பட்ட கோட்பாடு இதுவேயாகும். எனினும், பயிர் விளைச்சல் செலவும் வேளாண்மை நிகரக்கண்டு முதலும் அதன்பின் பெரிதும் வேறுபட்டுள்ளன. மறு நிலவரி ஏற்பாடு கைவிடப்பட்டதால், நிலத்திலிருந்து கிடைக்கும் நிகர விளைச்சலுக்கும், பெறப்படும் நிலவரிக்கும் எற்ற தொடர்பு இல்லாது இருக்கிறது. அதாவது நிலத்திலிருந்து கண்டு முதல் அதிகம் கிடைத்திருந்தும், அதன் காரணமாக வருமானம் பெருகியிருந்தும், நிலவரி மட்டும் மாறாமல் அப்படியே இருக்கிறது. 1967–68-ம் ஆண்டுக்குரிய முன் மானியக் கோரிக்கைகளின் மீதான வாக்கெடுப்பின்மீது 3—3—1967 தேதியன்று பதிலளிக்கையில் முதலமைச்சர் கீழ்க்கண்ட உறுதி மொழி கொடுத்தார் என்பதையும் ஈண்டுக் குறிப்பிடலாம். பன்னெடுங்காலத்திற்கு முன்னர் செய்யப்பட்ட நிலவரி ஏற்பாட்டின் வகைப்பாடு மாற்றியமைக்கப்படலாமா கூடாதா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமென முதலமைச்சர் உறுதிமொழி கொடுத்தார். இது பின்னர் பரிசீலனை



செய்யப்பட்டு பின்வருமாறு முடிவு செய்யப்பட்டது. வருங்காலத்தில் வருவாய் ஆதாயத்தில் நிலவரியை நாம் மிகவும் குறைக்கவே நம்பி இருப்போம். ஆதலால், மறு நிலவரி ஏற்பாடு செய்யவேண்டிய தேவையில்லை என்று, நில அளவைப் பதிவேடுகளும், வருவாய்ப் பதிவேடுகளும சரிவர வைத்து வரப்படுவதே போதுமானதாகும் என்று முடிவு செய்யப்பட்டது. கொடுத்த உறுதி மொழிக்கு இவ்வாறான பதில் அனுப்பப்பட்டது அரசாங்க உறுதி மொழிகள் பற்றிய ஆய்வுக்குழு இந்த உறுதிமொழி முடிவடைந்ததாகக் கருதுவதென முடிவு செய்தது.

4. நிலம் நன்செயா புன்செயா என்பதற்கு ஏற்ப நிலவரித் தீர்வை வீதம் வேறுபடுகின்றது. தண்ணீர் தண்டத் தீர்வை செலுத்தாமல் அரசாங்க பாசன வாயிலிலிருந்து தண்ணீர் பெற உரிமையுள்ள நிலங்கள் நன்செய் நிலங்களாகும். இம்மாநிலத்தில் புன்செய் நிலத் தீர்வை வீதம் 19 காசிலிருந்து நான்கு ரூபாய் வரை இருக்கிறது. நன்செய் நிலத் தீர்வை வீதம் ஏக்கருக்கு 87 காசிலிருந்து ரூ. 15 வரையுள்ளது. நன்செய் நிலவரியில தண்ணீர் தீர்வையும் ஓரளவு சேர்ந்துள்ளது. எனவே நிலவரியில் ஒரு பகுதி பாசன வருவாயாக வரவு செலவுத் திட்டத்தில் காட்டப்படுகின்றது.

5. நிலத்தீர்வை மட்டுமின்றி வசூலிக்கப்படும் நிலவரியில் ஒவ்வொரு ரூபாய்க்கும் 12 காசு வீதம் நிலசெஸ் வரியும், 20 காசு வீதம் கல்வி செஸ்வரியும் வசூலிக்கப்படுகின்றன. நிலவரியில் ஒவ்வொரு ரூபாய்க்கும் 13 காசு வீதம் மேல்வரி ஒன்று தமிழ்நாடு 1955-ம் ஆண்டு நிலவரி கூடுதல் (மேல்வரி) சட்டத்தின் விதித் துறைகளையொட்டி வசூலிக்கப்படுகின்றது. 1961-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் நாள் முதற்கொண்டு தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிச் சட்டத்தின்கீழ் ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் ரூபாய்க்கு 45 காசு வீதம் ஒருங்கிணைந்த உள்ளாட்சி செஸ்வரி விதித்து வாங்கப்படுகின்றது மேற்சொன்ன 45 காசில், 1920-ம் ஆண்டு மாவட்டக் கழகச் சட்டத்தின்கீழ், விதித்து வாங்கப்படும் நிலசெஸ்வரியாகிய 12 காசும், தமிழ்நாடு 1920-ம் ஆண்டு தொடக் கல்விச் சட்டத்தின்கீழ் விதித்து வாங்கப்படும் கல்விசெஸ் வரியாகிய 10 காசும், தமிழ்நாடு 1950-ம் ஆண்டு நிலவரி கூடுதல் (மேல்வரி) சட்டத்தின்கீழ் நிலவரியின்மீது விதிக்கப்பட்ட கூடுதல் மேல் வரியாகிய 38 காசும், அடங்கும். உள்ளாட்சி செஸ் மேல்வரி விதித்து வாங்கவும் ஊராட்சி ஒன்றியங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த வருவாயினங்களெல்லாம் உள்ளாட்சி மன்றங்களுக்கு மட்டுமே கிட்டும். ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்துமே பெரும்பாலும் உள்ளாட்சி செஸ் மேல்வரி விதித்து வாங்குகின்றன. பெரும்பாலான ஒன்றியங்களில் நிலவரியில் இது 25 சதவீதமாக இருக்கின்றது. சில ஊராட்சி ஒன்றியங்களில் இது நிலவரியில் 100 சதவீதமாக இருக்கின்றது. கூடுதல் மேல் வரிக்கு நிகராக இணை மானியம் அளிக்கப்படுவதால் இது கூடுதல் மேல் வரி விதிக்கத் தூண்டுதலாய் இருக்கிறது. வளங்குன்றிய பின்நிலை வட்டாரப் பகுதிகளில் இந்த இணை மானியம் மேல் வரியில் 150 சதவீதமாய் இருக்கிறது. வளமான வட்டாரப் பகுதிகளில் இது மேல் வரியில் 75 சதவீதமாய் இருக்கிறது.

6. நிலவரியை ரத்து செய்வது குறித்து இம்மாநில அரசாங்கம் ஆலோசித்துப் பார்த்தது. இம் மாநிலத்திலே, கன்னியாகுமரி மாவட்டமும் திருநெல்வேலி மாவட்டத்திலே செங்கோட்டை வட்டமும் நீங்கலாக உள்ள ஏனைய பகுதிகளில் இருக்கும் நிலங்களுக்கெல்லாம் அடிப்படைப் புன்செய் தீர்வையை 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் அரசாங்கம் ரத்து செய்து ஆணையிட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தையும், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தையும் பொறுத்த வரையில், இந்த ஆணை 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் நிறைவேற்றப்படும். தமிழ் நாடு 1964-ம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதி) ரயத்துவாரி நிலவரிச் சட்டத்தின்கீழ் இப்பகுதிகளில் ரயத்துவாரி நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பின்னர் இந்த ஆணை செயலுக்குக் கொண்டு வரப்படும். நன்செய் நிலங்கள் மீதுள்ள ஒருங்கிணைந்த தீர்வையை ரத்து செய்வதைக்கருதி நன்செய் நிலங்கள் மீதான தண்ணீர் தீர்வையை சீரமைப்பது குறித்தும் அரசாங்கம் தனியே ஆலோசித்து வருகிறது.

**II. 1948-ம் ஆண்டு தமிழக எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழகச் சட்டம் 26/1948).**—1948-ம் ஆண்டு தமிழக எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம், முக்கியமாக இம்மாநிலத்தில் உள்ள ஜமீன்தாரி முறையை ஒழிப்பதற்காகவே இயற்றப் பட்டது. இச்சட்டம், ஜமீன் கிராமங்கள் கீழ்க்குடிவாரமுறை எஸ்டேட்டுகள் மேல்வார முறை மட்டுமே உடைய முழு இனாம் கிராமங்கள் ஆகிய அனைத்துக்கும் பயன்படும். அதாவது, இருவாரம், எஸ்டேட்டுகள் அவை, 1936-ம் ஆண்டு தமிழக எஸ்டேட்டுகள் நில (மூன்றாவது திருத்தச்) சட்டத்தின்படி எஸ்டேட்டுகளாக மாற்றப்பட்ட முழு இனாம் கிராமங்கள். இந்த ஒழிப்புச் சட்டத்தின் அதிகார வரம்பிலிருந்து விலக்கப்பட்டன. இச்சட்டம் 1949, ஏப்ரலில் செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் விதித்துறைகள் பொருந்துகிற எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை 4,998. இதில் இதுவரை 4,987 எஸ்டேட்டுகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. எஞ்சிய 11 இனாம் எஸ்டேட்டுகளையும் மேற்படி சட்டத்தின் கீழ் அறிக்கையிடுவதை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பிற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த எஸ்டேட்டுகள் மாவட்ட வருவாய் அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த எஸ்டேட்டுகளில் மொத்தம் சுமார் 11,374·43 சதுர மைல் பரப்பு நில அளவை செய்யப்பட்டுள்ளது. நிலவரி ஏற்பாடு செய்யப்பட வேண்டிய மொத்தப் பரப்பளவு 11,578·79 சதுர மைல் ஆகும். 1376-ம் பசலி வரையில் 11,358·85 சதுர மைல் பரப்பளவு நிலவரி ஏற்பாடு செய்யப் பட்டது. 1377-ம் பசலியில் 17·50 சதுர மைலுக்கு நிலவரி ஏற்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிலவரி ஏற்பாடு செய்வதில் மேற்கொள்ளப்படும் விதிமுறையை அக்கறையோடு பின்பற்ற வேண்டியிருப்பதால் பல நிலைகளில் இதனைச் செய்ய வேண்டியுள்ளது. எஸ்டேட் முதலில் சுற்றிப் பார்வையிடப்படுகிறது. இந்த எஸ்டேட்டுப் பகுதிகளுக்கு எந்த மாவட்டத்தின் மறு நிலவரி ஏற்பாடு அறிவிப்பிலிருந்து தீர்வை வீதங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமோ அந்த மாவட்ட மறு நிலவரி ஏற்பாட்டைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஓர் எஸ்டேட்டின் தனிப்பட்ட இயல்புக்கு ஏற்புடைய கோட்பாடுகளை வகுக்க வேண்டும். 22-வது பிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட வேண்டிய அறிவிப்பைத் தயாரிக்க வேண்டும். நில வகைப்பாடு செய்யும் வேலையானது நிலவரி ஏற்பாடு ஆய்வாளர்கள் முதற்கொண்டு நில வரி ஏற்பாட்டு அதிகாரிகளால் சரிபார்க்கப்படுவது வரை எல்லா நிலைகளிலும் செய்து முடிக்கப்பட வேண்டியுள்ளது. கணக்குகளை சரி செய்யவேண்டும். தோராயப் பட்டாக்களை தயாரித்து வழங்க வேண்டும். பதிவு விசாரணைகள் நடத்தி முடிக்கப்பட்ட பின்னர், நிறைவேற்றப்பட்டுள்ள ஆணைகள் அனைத்தையும் இணைத்து திருத்தமான கணக்குகளை எழுதி வருவாய்த் துறையிடம் கொடுக்க வேண்டும். திருத்தமான பகுதி பட்டியல் முடிவான நிலவரி ஏற்பாட்டின்படிக்கான கேட்பு ஆகியவற்றின் அடிப்படையிலும் சம்பந்தப்பட்ட மூன்று பசலிகளில் எஸ்டேட்டு மேலாளர்களால் நிகரமாய் வசூலிக்கப்பட்ட பலவகை வருவாயின் அடிப்படையிலும் ஒவ்வொரு எஸ்டேட்டிற்கும் முடிவான இழப்பீட்டைக் கணக்கிட வேண்டும்.

அரசினால் எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் உடைமையாளர்கள் அனைவருக்கும் இழப்பீடு அளிக்கப்பட வேண்டும். நில உடைமையாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய இழப்பீடானது எஸ்டேட் ஒழிப்புச் சட்டத்தின் விதித் துறைகளில் கூறியுள்ளவாறு கணக்கிடப்பட வேண்டும். ஓர் எஸ்டேட்டிற்கான மொத்த ஆண்டு ரயத்துவாரித் தீர்வைக் கேட்பு, அந்த எஸ்டேட்டின் ஏனைய எல்லா ஆதாரங்களிலிருந்தும் பெறப்படும் நிகர ஆண்டு வருமானம் ஆகியவற்றைக் கணக்கிட்டு இவற்றையொட்டியே ஒவ்வொரு எஸ்டேட்டிற்கும் "அடிப்படை ஆண்டுத் தொகை" அறுதி செய்யப்படுகிறது. எஸ்டேட் ஒழிப்புச் சட்டத்தின் விதித் துறைகளையொட்டி கணக்கிடப்பட்ட "அடிப்படை ஆண்டுத் தொகை" யின் மூலதனமாக்கப் பட்ட மதிப்பே ஒரு எஸ்டேட் சம்பந்தமாக கொடுக்கப்படவேண்டிய இழப் பீட்டுத் தொகையாகும். நில ஆய்வு நடவடிக்கைகளும் நிலவரி ஏற்பாட்டு நடவடிக்கைகளும் முடிவெய்திய பின்னரே சரியான இழப்பீட்டுத்





தொகையை அறுதியிட முடியும். இந்த நடவடிக்கைகள் முடிவெய்துவதற்குச் சில ஆண்டுகள் செல்லுமாதலால், இழப்பீட்டின் ஒரு பகுதியை முன் பணமாகக் கொடுக்க இச்சட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது. ஒவ்வொரு எஸ்டேட்டிற்காகவும் கொடுக்கப்பட வேண்டிய இழப்பீட்டை தோராயமாக மதிப்பிடுவதன் மூலமாகவும் ஓர் எஸ்டேட் குறித்து அறிக்கையிடப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் எஸ்டேட் ஒழிப்பு தனி வழக்கு மன்றத்திடம் மேற்படி இழப்பீட்டுத் தொகையின் சரிபாதித் தொகையை வைப்பீடு செய்வதன் மூலமாகவும் மேற்கூறியவாறு இழப்பீட்டு முன் பணம் வழங்கப்படுகிறது.

இழப்பீட்டு முன் பணம் வழங்கப்படுவதுடன், அறிக்கையிட்ட தேதிக்குப் பிறகு இழப்பீட்டுத் தொகை முடிவாக அறுதி செய்யப்பட்டு கொடுக்கப் படும் வரை அரசு ஆண்டுதோறும் அந்த எஸ்டேட்டின் முதன்மையான நில உடைமையாளர்களுக்கும் பற்றுள்ள ஏனையோருக்கும் கொடுக்கப் படுவதற்கான இடைக் காலத் தொகைகளை வைப்பீடு செய்கிறது. இடைக் காலத் தொகையானது தோராயமான கணக்கின்படி, அந்த எஸ்டேட்டின் அடிப்படை ஆண்டுத் தொகையில் அரை பங்குத் தொகைக்குச் சமமான தொகையாகும்.

இழப்பீட்டு முன் பணத் தொகைகளும் இடைக்காலத் தொகைகளும் எஸ்டேட் ஒழிப்பு தனி வழக்கு மன்றத்திடம் வைப்பீடு செய்யப்படுகின்றன. இந்த மன்றங்களிடம் மேற்படித் தொகைகளை வைப்பீடு செய்து வைப் பதனுடன் அரசின் பொறுப்பு முடிகின்றது. அதற்குப் பின்னர், அந்த எஸ்டேட்டில் பற்றுடையவர்கள் செய்துகொள்ளும் உரிமைக் கோரிக்கைகளை இம்மன்றங்கள் ஆராய்ந்து பார்த்து தொகைகளை வழங்குகின்றன.

இழப்பீட்டு முன் பணம் முடிவான இழப்பீடு, இடைக்காலத் தொகை ஆகியவற்றிற்காக ஏற்படும் செலவு விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| இழப்பீட்டு முன் பணமும் முடிவான இழப்பீடும். | ரூ. | 6,28,04,538 |
| இடைக்காலத் தொகை .. .. .. | ரூ. | 2,01,19,716 |

சமய நிறுவனங்களும் கல்வி நிலையங்களும் அறநிலையங்களும் எஸ்டேட்டு முழுவதையும் அல்லது அதில் ஒரு பகுதியை உடைமையாகக் கொண்டுள்ள இனாம் எஸ்டேட்டுகளைப் பொறுத்தவரை, மொத்த இழப்பீடு எதும் வழங்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக இந்த நிறுவனங்களுக்கு அந்த எஸ்டேட்டிற்கான "அடிப்படை ஆண்டுத் தொகைக்குச்" சமமான ஆண்டு தஸ்திக்படி வழங்கப்படுகிறது. அந்த எஸ்டேட்டை அரசு எடுத்துக்கொள் வதற்கு முன்பு ஐந்து முழுமையான பசலிகளில் அந்த நிறுவனத்திற்குக் கிடைத்த சராசரி வருமானத்தைக் காட்டிலும் அடிப்படை ஆண்டுத் தொகை குறைவாக இருக்குமானால், இரண்டிற்குமிடையேயுள்ள வித்தியாசத் தொகையும் அந்த நிறுவனத்திற்குக் கூடுதல் படியாக வழங்கப் படுகிறது.

நில வரி ஏற்பாடு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அந்த எஸ்டேட்டுப் பகுதிகள் அமைந்துள்ள அரசாங்கத் தாலுகாக்களுடன் இணைத்துவிடப்பட்டு உசிதமான இடங்களில் அதிகாரிகளின் அதிகார வரம்பு மாற்றியமைக்கப்படுகின்றது.

**III. 1963-ம் ஆண்டு தமிழக இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழகச் சட்டம் 26/1963).**—மேல்வாரம் குடிவாரம் ஆகிய இரு வகை வாரமும் வழங்கப்படும் கிராமங்களடங்கிய இரு வாரம் இனாம் எஸ்டேட்டு முறையை ஒழிப்பதும் அவைகளை ரயத்து வாரியாக மாற்றுவதும் இச்சட்டத்தின் நோக்கமாகும். மேலும், இச்சட்டம் இனாம் எஸ்டேட் பகுதி கிராமங்களுக்கும் புதுக்கோட்டை இனாம் எஸ்டேட்டு களுக்கும் பயன்படும். இச்சட்டம் 1-1-1964-ம் தேதியன்று செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் 1(4) பிரிவின்கீழ் தொகுதி தொகுதியாக இது வரை 1,296·03 சதுர மைல் பரப்பைக்கொண்ட 1,970 எஸ்டேட்டுகள்

**II. 1948-ம் ஆண்டு தமிழக எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழகச் சட்டம் 26/1948).**—1948-ம் ஆண்டு தமிழக எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம், முக்கியமாக இம்மாநிலத்தில் உள்ள ஜமீன்தாரி முறையை ஒழிப்பதற்காகவே இயற்றப்பட்டது. இச்சட்டம், ஜமீன் கிராமங்கள் கீழ்க்குடிவாரமுறை எஸ்டேட்டுகள் மேல்வார முறை மட்டுமே உடைய முழு இனாம் கிராமங்கள் ஆகிய அனைத்துக்கும் பயன்படும். அதாவது, இருவாரம், எஸ்டேட்டுகள் அவை, 1936-ம் ஆண்டு தமிழக எஸ்டேட்டுகள் நில (மூன்றாவது திருத்த) சட்டத்தின்படி எஸ்டேட்டுகளாக மாற்றப்பட்ட முழு இனாம் கிராமங்கள். இந்த ஒழிப்புச் சட்டத்தின் அதிகார வரம்பிலிருந்து விலக்கப்பட்டன. இச்சட்டம் 1949, செப்டம்பரில் செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் விதித்துறைகள் பொருந்துகிற எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை 4,998. இதில் இதுவரை 4,987 எஸ்டேட்டுகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. எஞ்சிய 11 இனாம் எஸ்டேட்டுகளையும் மேற்படி சட்டத்தின்கீழ் அறிக்கையிடுவதை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பிற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த எஸ்டேட்டுகள் மாவட்ட வருவாய் அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த எஸ்டேட்டுகளில் மொத்தம் சுமார் 11,374·43 சதுர மைல் பரப்பு நில அளவை செய்யப்பட்டுள்ளது. நிலவரி ஏற்பாடு செய்யப்பட வேண்டிய மொத்தப் பரப்பளவு 11,578·79 சதுர மைல் ஆகும். 1376-ம் பசலி வரையில் 11,358·85 சதுர மைல் பரப்பளவு நிலவரி ஏற்பாடு செய்யப்பட்டது. 1377-ம் பசலியில் 17·50 சதுர மைலுக்கு நிலவரி ஏற்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிலவரி ஏற்பாடு செய்வதில் மேற்கொள்ளப்படும் விதிமுறைகளை அக்கறையோடு பின்பற்ற வேண்டியிருப்பதால் பல நிலைகளில் இதனைச் செய்ய வேண்டியுள்ளது. எஸ்டேட் முதலில் சுற்றிப் பார்வையிடப்படுகிறது. இந்த எஸ்டேட்டுப் பகுதிகளுக்கு எந்த மாவட்டத்தின் மறு நிலவரி ஏற்பாடு அறிவிப்பிலிருந்து தீர்வை வீதங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமோ அந்த மாவட்ட மறு நிலவரி ஏற்பாட்டைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஓர் எஸ்டேட்டின் தனிப்பட்ட இயல்புக்கேற்புடைய கோட்பாடுகளை வகுக்க வேண்டும். 22-வது பிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட வேண்டிய அறிவிப்பைத் தயாரிக்க வேண்டும். நில வகைப்பாடு செய்யும் வேலையானது நிலவரி ஏற்பாடு ஆய்வாளர்கள் முதற்கொண்டு நில வரி ஏற்பாட்டு அதிகாரிகளால் சரிபார்க்கப்படுவது வரை எல்லா நிலைகளிலும் செய்து முடிக்கப்பட வேண்டியுள்ளது. கணக்குகளை சரி செய்யவேண்டும். தோராயப் பட்டாக்களை தயாரித்து வழங்க வேண்டும். பதிவு விசாரணைகள் நடத்தி முடிக்கப்பட்ட பின்னர், நிறைவேற்றப்பட்டுள்ள ஆணைகள் அனைத்தையும் இணைத்து திருத்தமான கணக்குகளை எழுதி வருவாய்த் துறையிடம் கொடுக்க வேண்டும். திருத்தமான பகுதி பட்டியல் முடிவான நிலவரி ஏற்பாட்டின்படிக்கான கேட்பு ஆகியவற்றின் அடிப்படையிலும் சம்பந்தப்பட்ட மூன்று பசலிகளில் எஸ்டேட்டு மேலாளர்களால் நிகரமாய் வசூலிக்கப்பட்ட பலவகை வருவாயின் அடிப்படையிலும் ஒவ்வொரு எஸ்டேட்டிற்கும் முடிவான இழப்பீட்டைக் கணக்கிட வேண்டும்.

அரசினால் எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் உடைமையாளர்கள் அனைவருக்கும் இழப்பீடு அளிக்கப்பட வேண்டும். நில உடைமையாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய இழப்பீடானது எஸ்டேட் ஒழிப்புச் சட்டத்தின் விதித் துறைகளில் கூறியுள்ளவாறு கணக்கிடப்பட வேண்டும். ஓர் எஸ்டேட்டிற்கான மொத்த ஆண்டு ரயத்துவாரித் தீர்வைக் கேட்பு, அந்த எஸ்டேட்டின் ஏனைய எல்லா ஆதாரங்களிலிருந்தும் பெறப்படும் நிகர ஆண்டு வருமானம் ஆகியவற்றைக் கணக்கிட்டு இவற்றையொட்டியே ஒவ்வொரு எஸ்டேட்டிற்கும் "அடிப்படை ஆண்டுத் தொகை" அறுதி செய்யப்படுகிறது. எஸ்டேட் ஒழிப்புச் சட்டத்தின் விதித் துறைகளையொட்டி கணக்கிடப்பட்ட "அடிப்படை ஆண்டுத் தொகை" யின் மூலதனமாக்கப்பட்ட மதிப்பே ஒரு எஸ்டேட் சம்பந்தமாக கொடுக்கப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகையாகும். நில ஆய்வு நடவடிக்கைகளும் நிலவரி ஏற்பாட்டு நடவடிக்கைகளும் முடிவெய்திய பின்னரே சரியான இழப்பீட்டுத்





தொகையை அறுதியிட முடியும். இந்த நடவடிக்கைகள் முடிவெய்துவதற்குச் சில ஆண்டுகள் செல்லுமாதலால், இழப்பீட்டின் ஒரு பகுதியை முன் பணமாகக் கொடுக்க இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு எஸ்டேட்டிற்காகவும் கொடுக்கப்பட வேண்டிய இழப்பீட்டை தோராயமாக மதிப்பிடுவதன் மூலமாகவும் ஓர் எஸ்டேட் குறித்து அறிக்கையிடப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் எஸ்டேட் ஒழிப்பு தனி வழக்கு மன்றத்திடம் மேற்படி இழப்பீட்டுத் தொகையின் சரிபாதித் தொகையை வைப்பீடு செய்தவன் மூலமாகவும் மேற்கூறியவாறு இழப்பீட்டு முன் பணம் வழங்கப்படுகிறது.

இழப்பீட்டு முன் பணம் வழங்கப்படுவதுடன், அறிக்கையிட்ட தேதிக்குப் பிறகு இழப்பீட்டுத் தொகை முடிவாக அறுதி செய்யப்பட்டு கொடுக்கப்படும் வரை அரசு ஆண்டுதோறும் அந்த எஸ்டேட்டின் முதன்மையான நில உடைமையாளர்களுக்கும் பற்றுள்ள ஏனையோருக்கும் கொடுக்கப்படுவதற்கென இடைக் காலத் தொகைகளை வைப்பீடு செய்கிறது. இடைக் காலத் தொகையானது தோராயமான கணக்கின்படி, அந்த எஸ்டேட்டின் அடிப்படை ஆண்டுத் தொகையில் அரை பங்குத் தொகைக்குச் சமமான தொகையாகும்.

இழப்பீட்டு முன் பணத் தொகைகளும் இடைக்காலத் தொகைகளும் எஸ்டேட் ஒழிப்பு தனி வழக்கு மன்றத்திடம் வைப்பீடு செய்யப்படுகின்றன. இந்த மன்றங்களிடம் மேற்படித் தொகைகளை வைப்பீடு செய்து வைப்பதனால் அரசின் பொறுப்பு குறைகின்றது. அதற்குப் பின்னர், அந்த எஸ்டேட்டில் பற்றுடையவர்கள் செய்து கொள்ளும் உரிமைக் கோரிக்கைகளை இம்மன்றங்கள் ஆராய்ந்து பார்த்து தொகைகளை வழங்குகின்றன.

இழப்பீட்டு முன் பணம் முடிவான இழப்பீடு, இடைக்காலத் தொகை ஆகியவற்றிற்காக ஏற்படும் செலவு விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| இழப்பீட்டு முன் பணமும் முடிவான இழப்பீடும். | ரூ. | 6,28,04,538 |
| இடைக்காலத் தொகை .. .. .. | ரூ. | 2,01,19,716 |

சமய நிறுவனங்களும் கல்வி நிலையங்களும் அறநிலையங்களும் எஸ்டேட்டு முழுவதையும் அல்லது அதில் ஒரு பகுதியை உடைமையாகக் கொண்டுள்ள இனாம் எஸ்டேட்டுகளைப் பொறுத்தவரை, மொத்த இழப்பீடு எதும் வழங்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக இந்த நிறுவனங்களுக்கு அந்த எஸ்டேட்டிற்கான "அடிப்படை ஆண்டுத் தொகைக்குச்" சமமான ஆண்டு தஸ்திக்படி வழங்கப்படுகிறது. அந்த எஸ்டேட்டை அரசு எடுத்துக்கொள்வதற்கு முன்பு ஐந்து முழுமையான பசலிகளில் அந்த நிறுவனத்திற்குக் கிடைத்த சராசரி வருமானத்தைக் காட்டிலும் அடிப்படை ஆண்டுத் தொகை குறைவாக இருக்குமானால், இரண்டிற்குமிடையேயுள்ள வித்தியாசத் தொகையும் அந்த நிறுவனத்திற்குக் கூடுதல் படியாக வழங்கப்படுகிறது.

நில வரி ஏற்பாடு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அந்த எஸ்டேட்டுப் பகுதிகள் அடுத்துள்ள அரசாங்கத் தாலுகாக்களுடன் இணைத்துவிடப்பட்டு அவசியமான இடங்களில் அதிகாரிகளின் அதிகார வரம்பு மாற்றியமைக்கப்படுகின்றது.

**III. 1963-ம் ஆண்டு தமிழக இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழகச் சட்டம் 26/1963).**—மேல்வாரம், குடிவாரம் ஆகிய இரு வகை வாரமும் வழங்கப்படும் கிராமங்களடங்கிய இரு வாரம் இனாம் எஸ்டேட்டு முறையை ஒழிப்பதும் அவைகளை ரயத்துவாரியாக மாற்றுவதும் இச்சட்டத்தின் நோக்கமாகும். மேலும், இச்சட்டம் இனாம் எஸ்டேட் பகுதி கிராமங்களுக்கும் புதுக்கோட்டை இனாம் எஸ்டேட்டுகளுக்கும் பயன்படும். இச்சட்டம் 1-1-1964-ம் தேதியன்று செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் 1(4) பிரிவின்கீழ் தொகுதி தொகுதியாக இதுவரை 1,296·03 சதுர மைல் பரப்பைக்கொண்ட 1,970 எஸ்டேட்டுகள்

*How to use the Index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are intended from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bills (s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee (s), 'Council (s)', 'Corporation (s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | | |
|---|---|---|
| **A.M./Ad. Motion** | ... | Adjournment Motion. |
| **Ann** | ... ... | Announcement. |
| **B. O. H.** | ... ... | Business of the House. |
| **C. A.** | ... ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| **C. A. St.** | ... ... | Calling Attention Statement. |
| **Consid.** | ... ... | Consideration stage of a Bill. |

This stage includes :

(i) Motion to refer to Select/Joint Select Committee.

(ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D. E. E. | ... ... | Demands for Excess Expenditure. |
| Dis. S. D. or D. S. D. | . | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D. S. G. | ... ... | Demands for Supplementary Grants. |
| G. A. | ... ... | Governor's Address. |
| G. D. | ... ... | General Discussion |
| H. A. H. Dis./ H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... ... | Introduction stage of a Bill. |
| L. A. | ... ... | Legislative Assembly. |
| L. C. | ... ... | Legislative Council. |
| M. | ... ... | Motion. |
| P. M | ... ... | Privilege Motion. |
| R/Res. | ... ... | Resolution. |
| St. | ... ... | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates,

THIRD SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**14th to 16th, 18th and 19th March 1968.**

**Volume XI (Nos. 1 to 5).**

## A

PAGES

ACCIDENTS—
Fire—loss due to ... ... ... ... ... 144–146
Lorry ... ... ... ... ... ... ... 13–18

AGNI RAJU, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Labour including Factories ... ... ... ... 602–605

AGRICULTURE—
Crop Insurance Scheme, introduction ... ... 146–149
Pumpsets, power supply in Madurai and Ramanathapuram districts ... ... ... ... ... 279–282
Pumpsets, power supply in Madurantakam taluk ... 275–279
Ryots of Kadambuliyur Firka, postponement of collection of loans granted for soil conservation schemes (C.A.) ... ... ... ... ... 28–30

ALADI ARUNA, THIRU V.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Adiministration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 347–349

ALAGIRISAMY, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital outlay on Agriculture ... 31–33

PAGES

A—*cont.*

ALAGIRISAMY, THIRU S.—*cont.*
Budget 1968-69, Voting—*cont.*
General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department Famine Relief ... ... ... ... ... 449
Labour including Factories ... ... ... 619-621
Motor Vehicles Acts, Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 304
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 158, 219-220

ALANGARAM, THIRU M.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 102-104

ANIMAL HUSBANDRY—
Exotic breeds of cocks, rearing ... ... ... 289-291

ANNADURAI, THIRU C. N.—
A. V. M. and other studios, shifting from Madras State (A.M.) ... ... ... ... ... 27-28
Budget, 1968-69, Voting—
Labour including Factories ... ... ... ... 618-619, 630-638
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 194-195
'Thamizhar Padai', posters in Coimbatore and Erode (A.M.) ... ... ... ... ... 28

ANNAMALAI, THIRU V. D.—
Budget, 1968-69, Voting—
General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 488-490

AUTHIMOOLAM, THIRU D. S.—
Budget, 1968-69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... 516-519



PAGES

A—*cont.*

AUTHIMOOLAM, THIRU D. S.—*cont.*
Budget, 1968-69—Voting—*cont.*
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... 353-357

B

BALAKRISHNAN, THIRU A. G.—
Government Press employees confirmation ... 566-568

BALAN, THIRU M. C.—
Budget, 1968-69, Voting—
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 338-342

BALARAMAN, THIRU L.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 76-78
Hotels, reduction of price of foodstuffs ... ... 285-289

BALASUBRAMANIAN, THIRU S.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 31, 83-84, 31
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... ... 450, 451, 502-506
Labour including Factories ... ... ... 574
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 158
"Thamizhar Padai", posters in Coimbatore and Erode (A.M.) ... ... ... ... 28

BALASUBRAMANYAN, THIRU A.—
Budget, 1968—69, Voting—
General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 451, 511-512
Labour including Factories ... ... ... 610-614

PAGES

B—*cont.*

BHARATHI MOHAN, THIRU G.—
Budget, 1968-69, Voting—
General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... ... 481-483

BHOODAN MOVEMENT—
Chidambaram taluk, lands donated ... ... ... 442-443

BHUPATHY, THIRU M.—
Budget, 1968-69, Voting—
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... 305, 328-331
Spinning Mills, decision of Mill owners for closure (A.M.) ... ... ... ... 26

BHUVARAHAN, THIRU G.—
Budget, 1968-69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... ... 237-242

BILLS—
City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968 ... ...
Int. ... ... ... ... ... ... ... 449

BOJAN, THIRU K.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 31, 81-82

BRIDGES—
Periyaruvi River, construction near Sanipatti ... 142

BUILDING (S)—
Directorate of Technical Education ... ... 427-429

C

CALLING ATTENTION—
Coimbatore Engineering Textool Company, Lock-out 301-304
Failure of monsoons in West Ramanathapuram district, famine relief measures ... ... 153-154
Ryots of Kadambuliyur Firka, postponement of collection of loans granted for Soil Conservation Schemes ... ... ... ... ... 28-30



PAGES

C—*cont.*

CHAIR—
ANNOUNCEMENTS :
Adjournment Motions, decision postponed ... 153
Estimates Committee, election ... ... ... 155-156
Public Accounts Committee, election ... ... 156
Privilege Committee, election ... ... ... 30

RULINGS AND OBSERVATIONS:
ADJOURNMENT MOTIONS :

*Inability to release Hindi films in the State and shifting of studios from Madras to places outside the State.*

Consent withheld under Rule 50 (iii), as the matter was not one which had already occurred and there was only an apprehension of its occurrence ... 28

*Mill-owners' decision to close the cotton mills in Coimbatore.—*

Consent withheld under Rule 50 (viii) as the matter was not of urgent public importance and involved only the ordinary day-to-day administration of the Government ... ... ... ... ... 207

*Pasting of objectionable posters by 'Tamil Sena' in Coimbatore and Erode.—*

Consent withheld, as the pasting of certain wall posters could not be considered to involve more than the ordinary administration of the law ... ... ... 28

*Reference to Motions disposed of in Speaker's Chamber.—*

A member, rising on a point of order, complained that though the Chair announced in the House the previous day that the motion given notice of by him would be taken up the next day, unexpectedly he had received a communication from the Secretary that morning that the Speaker had withheld his consent to the Motion. No opportunity was given to him as was the practice followed in he House in the past, to raise the matter in the House and explain how it came under Rule 50.

The Chair referred the member to a previous ruling in 1960 and observed that it was not proper to discuss in the House the ruling given by the Speaker

PAGES

B—*cont.*

BHARATHI MOHAN, THIRU G.—
Budget, 1968-69, Voting—
General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... ... 481–483
BHOODAN MOVEMENT—
Chidambaram taluk, lands donated ... ... ... 442–443
BHUPATHY, THIRU M.—
Budget, 1968-69, Voting—
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... 305, 328–331
Spinning Mills, decision of Mill owners for closure (A.M.) ... ... ... ... 26
BHUVARAHAN, THIRU G.—
Budget, 1968-69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... ... 237–242
BILLS—
City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968 ... ...
Int. ... ... ... ... ... ... ... 449
BOJAN, THIRU K.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 31, 81–82
BRIDGES—
Periyaruvi River, construction near Sanipatti ... 142
BUILDING (S)—
Directorate of Technical Education ... ... 427–429

C

CALLING ATTENTION—
Coimbatore Engineering Textool Company, Lock-out 301–304
Failure of monsoons in West Ramanathapuram district, famine relief measures ... ... 153–154
Ryots of Kadambuliyur Firka, postponement of collection of loans granted for Soil Conservation Schemes ... ... ... ... ... 28–30



PAGES

C—*cont.*

CHAIR—
ANNOUNCEMENTS :
Adjournment Motions, decision postponed ... 153
Estimates Committee, election ... ... ... 155–156
Public Accounts Committee, election ... ... 156
Privilege Committee, election ... ... ... 30
RULINGS AND OBSERVATIONS :
ADJOURNMENT MOTIONS :
*Inability to release Hindi films in the State and shifting of studios from Madras to places outside the State.*
Consent withheld under Rule 50 (iii), as the matter was not one which had already occurred and there was only an apprehension of its occurrence ... 28
*Mill-owners' decision to close the cotton mills in Coimbatore.*—
Consent withheld under Rule 50 (viii) as the matter was not of urgent public importance and involved only the ordinary day-to-day administration of the Government ... ... ... ... ... ... 207
*Pasting of objectionable posters by 'Tamil Sena' in Coimbatore and Erode.*—
Consent withheld, as the pasting of certain wall posters could not be considered to involve more than the ordinary administration of the law ... ... ... 28
*Reference to Motions disposed of in Speaker's Chamber.*—
A member, rising on a point of order, complained that though the Chair announced in the House the previous day that the motion given notice of by him would be taken up the next day, unexpectedly he had received a communication from the Secretary that morning that the Speaker had withheld his consent to the Motion. No opportunity was given to him as was the practice followed in he House in the past, to raise the matter in the House and explain how it came under Rule 50.
The Chair referred the member to a previous ruling in 1960 and observed that it was not proper to discuss in the House the ruling given by the Speaker

அறிக்கையிடப்பட்டுள்ளன. இந்த அறிவிப்புகளின் செல்லுபடித் தகுதியை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் இனாம்தாரர்களால் "ரிட்" மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. உயர் நீதி மன்றம் மேற்படிச் சட்டம் செல்திறன் உள்ளது என்று தீர்ப்புகூறி ரிட் மனுக்களைத் தள்ளுபடி செய்தது. சில இனாம்தாரர்கள் தலைமை நீதி மன்றத்திற்கு மேல் முறையீடுகள் செய்து கொண்டுள்ளனர். தலைமை நீதி மன்றம் இடைக்காலத் தடை ஆணையைப் பிறப்பித்தது. உயர் நீதி மன்றத்தின் தடை ஆணைகளும் தலைமை நீதி மன்றத்தின் தடை ஆணைகளும் 154 வழக்குகளுக்குப் பொருந்துகின்றன. எஞ்சியுள்ள 1,816 எஸ்டேட்டுகள் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப் பட்டன. 22 இனாம் எஸ்டேட்டுகளின் நில உரிமை முறை குறித்து, நிலவரி ஏற்பாட்டு அதிகாரிகள் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகளுடன் கலந்து பரிசீலித்து வருகின்றனர்.

எடுத்துக்கொள்ளப்பட்ட 1,816 எஸ்டேட்டுகள் அனைத்தும் குறித்து நில அளவைப் பதிவேடுகள் பெறப்பட்டுள்ளன. தடை ஆணைகள் பொருந்துகிற 12 எஸ்டேட்டுகள் குறித்த நில அளவைப் பதிவேடுகளும் பெறப்பட்டன. ஏனெனில், இந்த எஸ்டேட்டுகளில் நில அளவை வேலைகள் முடிந்த பின்னரே தடை ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. எஞ்சியுள்ள 142 எஸ்டேட்டுகள் குறித்த நில அளவை வேலை முடிக்கப்பட்டு, தடை நீங்கியவுடன் பதிவேடுகள் நிலவரி ஏற்பாட்டுத் துறைக்கு வழங்கப்படும்.

1,296·03 சதுர மைல் அடங்கிய 1,970 இனாம் எஸ்டேட்டுகளில் 1,040·45 சதுர மைல் அடங்கிய 1,687 எஸ்டேட்டுகள் குறித்து நிலவரி ஏற்பாட்டுக் கணக்குகள் முடிக்கப்பட்டன.

**IV. தமிழக 1963-ம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு—ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழகச் சட்டம் 30/1963).**— பெரும்பாலான இடங்களில் வேறொரு தொண்டு புரிய வேண்டுமென்பதற்காக அல்லது கடந்த காலத்தில் செய்த தொண்டிற்காகப் பரிசாக வழங்கப் பட்டுள்ள நிலங்களை அல்லது நிலத் தொகுதிகள் சிறு இனாம்களில் அடங்கியுள்ளன. அரசினர்க்கும் உழவர்க்கும் இடையில் உள்ள இடையாட்கள் அனைவரையும் நீக்கும் கொள்கையை ஒட்டி, சிறு இனாம்களை ஒழித்து ரயத்துவாரியாக மாற்றுவதே இச்சட்டத்தின் நோக்கமாகும். தமிழகத்தில் உள்ள சிறிய இனாம்களில் இனாம்தார்களின் உரிமைகளை கையகப்படுத்துவதற்கும், அத்தகைய இனாம்களில் ரயத்துவாரி நிலவரி ஏற்பாட்டைக் கொண்டு வருவதற்கும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி சட்டத்தின் 1 (4) பிரிவின்கீழ் மாற்றப்பட்ட ஆட்சிப்பகுதி நீங்கலாக தமிழகம் முழுவதிலும் மேற்படி சட்டத்தின் விதித் துறைகள் 15—2—1965-ல் செயலுக்கு வரவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலும் இச்சட்டம் 1—3—1965-ல் செயலுக்கு வந்தது. 1,58,947 உரிமைப் பத்திரங்கள் கொண்டுள்ள, 1,587·11 சதுர மைல் பரப்பளவு உள்ள 13,524 கிராமங்களில், 1,546·87 சதுர மைல் பரப்பளவுள்ள 13,268 கிராமங்கள் குறித்து நடவடிக்கைகள் முடிக்கப் பட்டன.

617·03 சதுர மைல் பரப்பளவு கொண்ட 6,315 கிராமங்கள் குறித்து சட்டப்படிக்கான விசாரணை முடிக்கப்பட்டது.

மோகினி மானியங்கள் (ரொக்க மானியங்கள்) நீங்கலாக, இச்சட்டம் செல்திறன் உள்ளது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மோகினி மானியங்களைப் பொறுத்தவரையில், அவை மேற்படி சட்டத்தின் விதித் துறைகளின்கீழ் வரவில்லை என்று உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்தது. மோகினி இனாம்களை நீக்கிவிடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

400-ம் அதற்கு மேற்பட்டும் உள்ள சிறு இனாம்கள் தமிழக 1963-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) கீழ் வகைப்படுத்தப்பட வேண்டும் என்று புதுக்கோட்டை இனாம் எஸ்டேட்டுகளைச் சேர்ந்த குடியானவர்கள் தொடர்ந்து முறையீடுகள் செய்து கொண்டனர். அதன்மேல், புதுக் கோட்டை இனாம்களின் நில உரிமை குறித்து மறு பரிசீலனை செய்வதற்கென துணைக் கலெக்டர் தரத்தில் தனி அதிகாரி ஒருவரை அரசாங்கம் நியமித்துள்ளது. அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.





**V. தமிழக 1963-ம் ஆண்டு குத்தகைக் கிராமங்கள் (ஒழிப்பு—ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழகச் சட்டம் 27/1963).**—இம்மாநிலத்தில் இன்னொரு வகையைச் சேர்ந்த இடையாட்கள் உள்ளனர். குத்தகை கிராமங்களைச் சேர்ந்த குத்தகைதாரர்களே அவர்கள். இம்மாநிலத்தில் அத்தகைய கிராமங்கள் 12 உள்ளன. அவற்றில் இரு கிராமங்களின் குத்தகைக் காலம் 99 ஆண்டுகளாகும். இவற்றின் குத்தகைக் காலம் 1994, 1999 ஆண்டுகளில் முடியும். ஏனைய 10 கிராமங்கள் நிலையாகக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இந்தக் கிராமங்களில் உள்ள நிலங்கள் குறித்து ஏற்கெனவே நிலவிவரும் அனுபோக உரிமைகள் இந்தக் குத்தகை காரணமாக பாதிக்கப்படமாட்டா. அரசினர்க்கும் உழவர் களுக்கும் இடையில் உள்ள எல்லா வகை இடையாட்களையும் நீக்கும் கொள்கையை ஒட்டி, தமிழக 1963-ம் ஆண்டு குத்தகை கிராமங்கள் ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தப் பன்னிரண்டு கிராமங்களிலும், அரசின் நாட்டத்திற்குக் கொண்டு வரப்படக் கூடிய ஏனைய குத்தகைக் கிராமங்களிலும் செயலில் உள்ள குத்தகை உரிமை முறையை நீக்கி, அங்கு ரயத்துவாரி நிலவரி ஏற்பாட்டைக் கொண்டு வருவதே இச்சட்டத்தின் நோக்கமாகும். கிராமங்கள் அனைத்தும் இச்சட்டத்தின்கீழ் அறிக்கையிடப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டன. நில அளவை வேலையும் நிலவரி ஏற்பாட்டு வேலைகளும் நடந்தேறி வருகின்றன. இச்சட்டம் செல்திறன் உள்ளது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆனால் குத்தகைக்காரர்களில் ஒருவர் [செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள கிராண்ட் லையன் கிராமம் (Grant Lyon)] இச்சட்டத்தின் செல்திறனை மறுத்து தலைமை நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்துள்ளார். வழக்கு விசாரணையில் உள்ளது.

**VI. தமிழ்நாடு 1963-ம் ஆண்டு இனாம் (துணை) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1963).**—இம் மாநிலத்திலுள்ள ரயத்துவாரி அல்லாத பகுதி புதுக்கோட்டையிலுள்ள ஒரு இனாம் எஸ்டேட்டா, இல்லையா, ஒரு சிறு இனாம் கிராமமா, இல்லையா என்பதை முடிவு செய்வதற்கான அமைப்பு ஒன்றுக்கு இச்சட்டம் வகை செய்கிறது.

1971-ம் ஆண்டு ஜூன் 30-ந் தேதிக்கு முன் 1963-ம் ஆண்டு இனாம்கள் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் நிலவரி ஏற்பாட்டு நடவடிக்கைகள் முடிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டது. தேவையான பணியாளர்கள் அவ்வப்போது நியமிக்கப்பட்டனர். இணைந்த புதுக்கோட்டை பகுதியில் சட்டம் ஒழுங்கு நிலைமை கடுமையாக இருப்பதால் நிலவரி ஏற்பாட்டு நடவடிக்கைகளை இப் பகுதியிலும் செயல்படுத்தக் கருதியுள்ளது. புதுக்கோட்டையில் உள்ள துணைக் கிளை நிலவரி ஏற்பாட்டு அலுவலகத்தை மேனிலைப்படுத்துவதற்குத் தேவையான கூடுதல் பணியாளர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப் பகுதி நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்காக தனிப்பட்ட நிலவரி ஏற்பாட்டு உதவி அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

**VII. மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதியில் உள்ள நில உரிமை முறை குறித்த சட்டங்கள்.**—கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டமும் அடங்கிய மாற்றப்பட்ட பகுதிக்குப் பொருந்தும் புதிய சட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(i) **தமிழ்நாடு 1964-ம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதி) ரயத்து வாரி நிலவரி ஏற்பாட்டுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1964).**—தமிழ் நாட்டில் எஞ்சிய பகுதியில் ரயத்துவாரி வரி விதிப்பு முறையைக் கொண்டு வர இச்சட்டம் வகை செய்கிறது. 18—11—1964-ல் இச்சட்டம் செயலுக்கு

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS :

ADJOURNMENT MOTIONS :

*Reference to Motions disposed of in Speaker's Chamber*—cont.

in his Chamber, and if so desired, the Member might discuss the same with the Speaker in his Chamber itself. Consent given in the House, and not that given in the Chamber, was consent. The Secretary had sent him the communication by way of implementation of the orders passed under the signature of the Speaker .... 299-301

BUSSINESS OF THE HOUSE :

Suggestions and questions about the Agenda or Business of the House are to be made in the Business Advisory Committee in consultation with the Leader of the House and the Chair and it is not necessary to take up the time of the House to discuss the same ... 462-463

CALLING ATTENTION :

After a Minister's statement, only the Members who called the attention of the Minister could put one or two questions to the Minister by way of seeking clarification and the other Members did not enjoy that privilage ... ... ... ... ... ... 155

DEBATE :

*Members should address the Chair*—

Members should address the Chair while speaking lest they failed to notice the 'warning light' ... 179

*Time-limit*—

Members should finish their speeches within the time allotted to them ... ... ... ... ... 589

Decorum :

*Reference to Central Government*—

Shortcomings of the Central Government need not be referred to in the House. ... ... ... 554

DEMANDS FOR GRANTS :

In the course of the discussio on a Demand for Grant a member enquired whether a day would be set apart for the discussion on a report submitted by a Member of the Board of Revenue and the Chief



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

DEMANDS FOR GRANTS—*cont.*

Minister also replied to it. Thereupon the Chair observed that when the Demands were under discussion, a debate on the matter referred to by the member was out of place and after the Budget discussions were over, that member may bring forward his suggestion as a non-official resolution with the consent of the Speaker according to the procedure laid down in this regard. ... ... ... ... ... ... 465-466

*Introductory speech by Minister*—

A Minister moved a Demand and spoke on it by way of introductory remarks. Interrupting the Minister, a member rose on a point of order and enquired whether it was proper for the Minister to speak in detail at that stage inasmuch as a printed speech of the Minister in regard to that particular Demand had been laid on the Table of the House. Thereupon the Chair ruled that the Minister had the right to make certain introductory remarks and he was in order in doing it. ... ... ... ... ... 454

*Relevancy*—

Members should confine their remarks to the Demand under discussion. ... ... ... ... 216

EXPRESSIONS USED IN THE HOUSE :

*Objectionable expressions.*

" Bad law " மோசமான சட்டம் in the expression " In North Arcot as there is a bad law called the Palar Basin Rules "—Deprecated. ... ... ... ... 563

MATTER PRIVILEGE—

*Publication in " Silamboli "*—

On 16th March 1968, a member raised a matter of privilege regarding the publication in the weekly SILAMBOLI, namely, "Is this a Legislative Assembly or a market? Are the Members sleeping?"

The Leader of the House pointed out that this publication contained misrepresentation of facts, and the remarks about the House and the Members were quite unwarranted and hence there was a *prima facie* case of breach of privilege. However, as the paper did not enjoy so much publicity as to refer the matter to the Committee of Privileges it would suffice

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—

PRIVILEGE MATTER :

*Publication in " Silamboli "*—(cont.)

if the paper was let off with a warning. The Chair endorsed the suggestion of the Leader of the House and the matter was dropped with a warning to the paper. ... ... ... ... ... ... 152, 298

QUESTIONS :

*Supplementary questions—*

*Admissibility —*

After a supplementary about the increase of the price of cotton or the reduction of the price of cloth was answered by the Minister concerned, a member rose on a point of order and enquired whether questions which should be asked in Parliament could be allowed in the House. The Chair observed that the Ministers might be permitted to give the information available with them in their reply. ... ... 557

*Clarification—*

No clarification could be asked when there was no reply from the Minister to a Supplementary Question. ... ... ... ... ... ... ... 560

*Putting—*

A supplementary question should be put by the member who was called by the Chair and not by another who was not called. ... ... ... 280

*Reference to names of Companies—*

When a member referred to names of certain companies, the Chair drew his attention to Rule 31 (2) and observed that as far as possible it would be better to put supplementary questions without mentioning names. ... ... ... ... ... ... 25

*Reference to Officers by name—*

When a member mentioned the name of a Police Officer, the Chair held that members should not mention names as per rule 31 (2) and ordered expunction of the reference. ... ... ... ... ... 11

*To be in the form of questions and not statements—*

During a debate, statements might be made but not during question hour when members are to put their questions only. ... ... ... ... ... 20–21



CHAIR—*cont.*

*Rulings and Observations* : (cont.)

QUESTIONS :

*Supplementary questions*—cont.

Should be brief ... ... ... ... ... 278

Should be in the form of a question ... ... 438

Should be put for seeking elucidation to the answer given by the Minister to the main question and not based on the statement made by another member. ... ... ... ... ... 19, 20

Should relate to the main question ... ... 430, 559

SPEAKER.

*Putting question—*

After the Minister read his reply to a starred question, the Chair asked the Minister to clarify what was meant by a particular term, namely " மோஹினிப்படி (Mohini padi). A member rose on a point of order and said that the Chair could never put a question. Thereupon the Chair observed that he only wanted the Minister to clarify the meaning of the term. ... ... 143

CHEEMAICHAMY, THIRU K.

Backward District, constitution of a commission ... 445–447

Budget, 1968-69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 89–91

Transport Schemes Capital Outlay on Road Transport Schemes ... ... ... 304–305

Crop Insurance Scheme, introduction ... ... 146–149

Prime Minister—Chief Minister meet at Madurai ... 571–572

Pump-sets, power supply in Madurai and Ramanathapuram districts ... ... ... ... 279–282

CHINNARAJEE, THIRU C. K.

Budget, 1968–69, Voting—

General Sales Tax and Other Taxes and Duties —Administration ... ... ... ... ...

Land Revenue Department ... ... ...

Famine Relief ... ... ... ... 510–511

PAGE

C—*cont.*

CHITHAN, THIRU N. S. V.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—
Administration ... ... ... ....
Land Revenue Department ... ...
Famine Relief ... ... ... ... 450
466-471
Government Hospital, Tirumangalam, Quarters for employees ... ... ... ... ... 568
Industrial Estate near Kappalur ... ... 429–431
S.S.L.C. Examination, results in 1965–66 and 1966-67 ... ... ... ... ... 1–5

COMMITTEE (S)—
Estimates report on 'Police', presentation ... 574
Estimates, election (M) ... ... ... ... 155
Public Accounts, election (M) ... ... ... 156
Privileges, election (M) ... ... ... ... 30

CO-OPERATIVES—
Hand Pounding Rice Co-operative Societies, particulars ... ... ... ... ... 150–152
Labour Contract Society, Thanjavur ... ... 437–438
Muthupet Co-operative Urban Bank, misappropriation ... ... ... ... ... 292–294

D

DHANUSHKODI, THIRU P. S.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture .... 73–75

DHARMALINGAM, THIRU N.—
Alleged Publication in 'Silamboli' (Privilege Matter) ... ... ... ... ... ... 152, 298
Budget, 1968–69, Voting—
General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 492–493



PAGES

D—*cont.*

DISTRICTS—
Backward—Constitution of a commision ... 445–447

DORAIRAJ, THIRU S. M.—
Budget, 1968–69, Voting :
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 205–207

DRAINAGE—
Scheme for Thanjavur district ... ... ... 559–560

DURAIRAJ, THIRU P.—
Budget, 1968–69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 181–183

DURAISAMY, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Labour including Factories ... ... 621–624
Industrial Estate, Kurichi ... ... ... 431–436

E

ELLAPPAN, THIRU P. S.—
Budget, 1968–69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... ... 203–205

EXAMINATIONS—
S.S.L.C., results in 1965-66 and 1966-67 ... 1–5
6–10

EXPUNCTIONS—
11,500, 501
522, 523

F

FACTORIES—
Coimbatore Engineering Texttool Company, lockout (C.A.) ... ... ... ... ... 301–304
Confectionery, Sirkali ... ... ... ... 25

FAMINE RELIEF—
Failure of monsoons in West Ramanathapuram district, measure to be taken (C.A.) ... 153–154

PAGES

F—*cont.*

FINANCIAL BUSINESS—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 31-126
General Sales Tax and Other Taxes and Duties Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 449-532
Labour including Factories ... ... ... 574-648
Motor Vehicles Act,—Administrations Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 304-379
Welfare of Scheduled Tribes, Castesand Other Backward Classes ... ... ... ... 156-254

G

GANESAN, THIRU S.—
Budget 1968-69, Voting—
Agriculture—
Capital Outlay on Agriculture ... ... ... 72-73
GNANASAMBANDAN, THIRU K. R.—
Budget 1968-69, Voting.—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 207-210
Text books, publication ... ... ... ... 130-136
GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU G.—
Deputy Commissioner of Police, Madras City ... 10-12
Police Officers deputed to border Police ... ... 12
GOPAL, THIRU M.—
Budget 1968-69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 201-203
GOVINDARAJAN, THIRU C.—
Budget, 1968-69, Voting—
Labour including Factories ... ... ... 575, 586-589, 647
Lorry accidents ... ... ... ... 13-18



PAGES

G—*cont.*

GOVINDARAJAN, THIRU V. S.—
Budget, 1968-69, Voting—
Labour including Factories ... ... ... 614-617
GOVINDASAMY, THIRU A.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 31, 32, 33-68, 114-124, 125-126
Ryots of Kadambuliyur Firka, postponement of collection of loans granted for soil conservation schemes (G.A. St.) ... ... ... ... 29-30

H

HANDE, DR. H. V.—
Budget, 1968-69, Voting—
Labour including Factories ... ... ... 574, 597-602
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 378
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 157, 221-223
HOME GUARDS—
Continuance ... ... ... ... 443-445
HOSPITALS AND DISPENSARIES—
Primary Health Centres, functioning ... ... 149
Tirumangalam, quarters for employees ... 568
HOSTELS—
Government Hostel for students, Sendurrai ... 22-23
HOTELS—
Foodstuffs, price reduction ... ... ... 285-289
Hotels and catering establishments, weekly holiday ... ... ... ... ... 282-285

I

INDUSTRIES—
Industrial Estate, Kurichi ... ... ... 431-436
Industrial Estate near Kappalur ... ... ... 429-431

PAGES

K—*cont.*

KOTHANDARAMAN, THIRU V. K.—*cont.*

Lorry accidents ... ... ... ... 13–18
Percolation tanks, particulars ... ... ... 561–563
Prime Minister-Chief Minister meet at Madurai 571–572
Regulated markets, Thanjavur district ... ... 563–566
Spinning Mills' decision of mill owners for closure (A.M.) ... ... ... 26
Wages Committees, constitution ... ... 23–24

KRISHNAN, THIRU E. R.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 472–476

KRISHNAN, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... 358–360

KRISHNASAMY GOUNDER, THIRU R.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 33
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 349–351

KUMARASAMY, THIRU K. N.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 31, 106–108
General Sales Tax and Other Taxes and Duties—
Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 451
Labour including Factories ... ... ... 617–619
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 157
Spinning Mills, decision of Mill owners for clouse (A.M.) ... ... ... ... ... 26



PAGES

K—*cont.*

KUPPAMMAL, THIRUMATHI S.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 86–87

L

LABOUR—
Wages Committees, constitution ... ... 23–24

LANDS—
Dry—, Melur taluk ... ... ... ... 560–561
Land Ceiling Act, surplus lands, Chidambaram taluk ... ... ... ... ... 572–573
Land Utilisation Order, 1961, enforcement ... 438–442

M

MADHAVAN, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Labour including Factories ... ... ... 574, 582,583, 638–647
Coimbatore Engineering Textool Company, lock-out (C.A. St.) ... ... ... ... 301–303, 304

MAHADEVAN, THIRU B.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes 335–337

MALAICHAMY, THIRU P.—
Bridge across Periyarvi river near Sanipatti ... 142
Dry lands, Melur taluk ... ... ... 560–561
Government Hostel for students, Sendurai ... 22–23
Home Guards Unit, continuance ... ... 443–445

MANI, THIRU K. B. S.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 32, 33, 100–102

PAGES

I—*cont.*

IRAJARATHINAM, THIRU D.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 501–502

J

JAMES, THIRU J.—
Budget, 1968–69, Voting—
Labour including Factories ... ... ... 594–597

JANAKIAMMAL, THIRUMATHI K. P.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 88–89
General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... ... 451
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 157–158

JAYARAMAN, THIRU P.—
Budget, 1968–69, Voting—
Labour including Factories ... ... ... 593–594

K

KARUNANIDHI, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... 304, 305, 306, 307–311, 319, 334, 367–378
Privileges Committee, election (M) ... ... 30

KARUPPIAH, THIRU A.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 495–497

KARUPPIAH, THIRU R.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 94–96
Crop Insurance Scheme, introduction ... ... 146–149



PAGES

K—*cont.*

KARUTHIRUMAN, THIRU P. G.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 110–114
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 519–525
Labour including Factories ... ... ... 624–630

KASIRAMAN, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... 304, 306, 311–319
Mohini allowance to certain temples, revision ... 143–144

KITTAPPA, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 210–213

KOLATHUR KOTHANDAM, THIRU.—
Primary Health Centres, functioning ... 149
Pumpsets, power supply in Madurantakam taluk ... ... ... ... ... 275–279

KOTHANDARAMAN, THIRU V. K.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 32, 33
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 449
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 306
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 187–189
Cloth, incentive bonus for export ... ... 553–556
Fire accidents, loss due to ... ... ... 144–146
Hotels and Catering establishments, weekly holiday ... ... ... ... ... ... 282–285
Hotels, reduction of price of foodstuffs ... ... 285–288

M—*cont.*

MANI, THIRU K. B. S.—*cont.*
Budget, 1968–69, Voting—*cont.*
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 157, 191–195

MANI, THIRU M. S.—
Budget, 1968–69, Voting—
Labour including Factories ... ... ... 589–591
Motor Vehicles Act—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes ... 319–325

MARIMUTHU, THIRU A. R.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration
Land Revenue Department
Famine Relief ... ... ... ... 486–488
Motor Vehicles Acts—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes ... 337–338
Spinning Mills, decision of Mill Owners for closure (A.M.) ... ... ... ... ... 26

MARIMUTHU, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 104–106

MARKET(S)—
Regulated—, Thanjavur district ... ... ... 563–566

MARTIN, THIRU T.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... ... 484–486
Tourist Homes, Tirunelveli district ... ... 391

MARUDACHALAM, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 97–99



M—*cont.*

MARUDACHALAM, THIRU N.—*cont.*
Budget, 1968–69 Voting—
Labour including Factories ... ... 592–593
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... 157, 226–228

Coimbatore Engineering Textool Company, lock-out (C.A.) ... ... ... ... ... 301, 303

MATHIALAGAN, THIRU K. A.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 124–125
General Sales Tax and Other Taxes and Duties—Administration
Land Revenue Department
Famine Relief ... ... ... ... 449, 450, 451, 452–461, 464–465, 471, 525–531

Failure of monsoons in West Ramanathapuram district, famine relief measures (C.A. St.) ... 153–154

MEIYAPPAN, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 93–94

MILLS—
Rice Mills in Thanjavur and Tiruchirappalli districts ... ... ... ... ... 18–22

MOTION(S)—
Adjournment Motions—
A.V.M. and other studios, shifting from Madras State ... ... ... ... ... 27–28
Spinning Mills, decision of Mill Owners for closure ... ... ... ... ... 26–27
'Thamizhar Padai' posters in Coimbatore and Erode ... ... ... ... ... 28
Estimates Committee, election ... ... ... 155
Privileges Committee, election ... ... 30
Public Accounts Committee, election ... ... 156

PAGES

M—*cont.*

MUNISWAMY GOUNDER, THIRU P. M.—
Budget, 1968-69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... ... 506-508

MURUGESAN, THIRU K.—
Budget, 1968-69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... ... 515-516

MUTHIAH, THIRU M.—
Budget, 1968-69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... ... 183-186

MUTHULINGAM, THIRU S.—
Budget, 1968-69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 186-187

MUTHUSAMY, THIRU M.—
City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968 ... 449

N

NACHIMUTHU, THIRU N.—
Budget, 1968-69, Voting—
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes, Capital Out lay on Road Transport Schemes ... ... ... ... 327-328

NAGALINGAM, THIRU P.—
Budget, 1968-69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 228-230

NAGASUNDARAM, THIRU R.—
Budget, 1968-69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—
Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... ... 478-481



PAGES

N—*cont.*

NALLASWAMY, THIRU T. M.—
Budget 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 32, 68-72

NANJAN, THIRU C.—
Budget, 1968-69, Voting—
Labour including Factories ... ... ... 607-610

NEDUNCHEZHIYAN, THIRU V.R.—
Alleged Publication in 'Silamboli' (Privilege Matter) ... ... ... ... ... 298
Estimates Committee, election (M) ... ... 155
Public Accounts Committee, election (M) ... 156
Spinning Mills, decision of Mill Owners for closure (A.M.) ... ... ... ... ... 26-27

O

OFFICES—
Government Press employees, confirmation ... 566-568

P

PACHAIYAPPAN, THIRU S. P.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 75-76

PANNEERSELVAM, THIRU M.—
Budget, 1968-69 Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 235-237

PAPERS LAID ON THE TABLE—
Abolition of Land Revenue and State Trading in Agricultural Products (Tamil); Second Report by Thiru S. R. Kaiwar, I.C.S. ... ... 380
Agricultural Produce Markets Act, 1959, Notification ... ... ... ... ... 533
Appropriation Accounts for 1966-67 and Audit Report, 1968 ... ... ... ... 380

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Cinemas (Regulation) Act, 1955, Notification ... 533

Committee on Estimates, Third report on the action taken by Government on the recommenrations contained in the Report on 'Police' ... ... ... ... 648

Committee on Rules—March 1968, Fourth Report ... ... ... ... 380

Community Development and Panchayat Development, Note (English and Tamil) ... ... 127

Demand—Community Development, Financial Supplement (English and Tamil) ... ... 127

Demand No. XXXI—Famine Relief, Note on Policy (English and Tamil) ... ... ... 533

Demand No. I—Land Revenue, Policy Note (English and Tamil) ... ... ... ... 533

Demand No. 1—Land Revenue, speech of Minister (English and Tamil) ... ... ... ... 533

Demand No. 16, Policy note ... ... ... 255

Demand No. 29, Policy Note ... ... ... 255

Demand Nos. 30 and 43 Nationalised Transport, Speech of Minister (English and Tamil) ... 533

Entertainments Tax Act, 1939, Notification ... 380

Factories Rules, 1950, Notification ... ... 254

Fertilisers and Chemicals, Travancore, Ltd., Madras, Government's Review and Twenty-third Annual Report ... ... ... ... 533

Finance Accounts for 1966–67 ... ... 380

General Sales Tax Act, 1959, Notification ... 380

Harijan Welfare, 1968–69, Policy Note (Tamil). 380

Inams (Supplementary) Act, 1963, Notification. 648

Inams (Supplementary) Amendment Bill, 1968, with Annexure ... ... ... ... 380

Indian Stamp Act, 1899, Notification ... ... 255

Nationalized Transport, Review 1967–68, (English and Tamil) ... ... ... ... ... 380



PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Prohibition Act, 1937, Notifications ... ... 251, 648

Road Transport, 1967–68, Review (English and Tamil) ... ... ... ... ... 380, 533

Speech by Minister for Local Administration (Tamil) ... ... ... ... ... ... 127

POLICE—

Deputy Commissioner of Police, Madras City .. 10–12

Officers deputed to border Police ... ... ... 12

PONNAPPA NADAR, THIRU R.—

Budget, 1968–69, Voting—

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 360–367

PRIVILEGE MATTER—

Alleged Publication in 'Silamboli' ... ... 152, 298

R

RAJA, THIRU A. M.—

Budget, 1968–69, Voting—

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... 352–353

Directorate of Technical Education, building ... 427–429

Government servants, retiring age ... ... 294–296

Hotels, reduction of price of foodstuffs ... ... 285–289

I.A.S. Officers, corruption charges ... ... 296–297

RAJANGAM, THIRU M.—

Budget, 1968–69, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classess ... ... ... ... 190–191

RAMACHANDRAN, THIRU S.—

Budget, 1968–69, Voting—

Labour including Factories ... ... ... ... 583–586

R—*cont.*

RAMACHANDRAN, Thiru S.—*cont.*

Estimates Committee, Report on 'Police' presentation ... ... ... ... ... ... 574

Hotels, reduction price of foodstuffs ... ... 285–289

Ryots of Kadambuliyur Firka, Postponement of collection of loans granted for Soil Conservation Schemes (C.A.) ... ... ... ... ... 28–29

RAMALINGAM, Thiru S.—

Budget, 1968–69, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 174–180

RAMAMOORTHY, Thiru K.—

A.V.M. and other studios, shifting from Madras State (A.M.) ... ... ... ... ... 27

Budget, 1968–69, Voting—

Agriculture Capital Outlay on Agriculture ... 32

General Sales Tax and Other Taxes and Duties—Administration Land Revenue Department, Famine Relief ... ... ... ... ... 451

Labour including Factories 574, 575–582, 583

Crop Insurance Scheme, introduction ... ... 146–149

Hotels, reduction of price of foodstuffs ... ... 285–289

RAMAN, Thiru M.—

Budget, 1968–69, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 213–215

RAMASAMI, Thiru E.—

Budget, 1968–69, Voting—

Labour including Factories ... ... ... 605–607

RAMASWAMI GOUNDER, Thiru K. M.—

Budget, 1968–69, Voting—

Agriculture—Capital Outlay on Agriculture ... 32





R—*cont.*

RAMASWAMI GOUNDER, Thiru K. M.—*cont.*

Budget, 1968–69, Voting—*cont.*

General Sales Tax and Other Taxes and Duties Administration, Land Revenue, Department, Famine Relief ... ... ... ... ... 450, 476–478

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 325–327

State Transport Buses, holding up by students at Boothapandi ... ... ... ... ... 447–448

RAMASWAMI NAIDU, Thiru S.—

Budget, 1968–69, Voting—

General Sales Tax and Other Taxes and Duties—Administration Land Revenue Department Famine Relief ... ... ... ... 497–500

RAMASWAMY, Thiru S. J.—

State Transport Department, loss incurred ... 139–142

ROAD(S).—

Puthur—M. Kothangudi, formation ... ... 294

S

SAHADEVA KANDER, Thiru K.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 87–88

SAMINATHAN, Thiru K. N.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture .. 91–93

SATYAVANIMUTHU, Dr. (Thirumathi)—

Budget, 1968–69, Voting :—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 157, 158–174, 242–253

SERVICES—

Government Servants, retirement age ... ... 294–296

I.A.S. Officers, Corruption charges ... ... 296–297

PAGES

S—*cont.*

SHANMUGAM, THIRU V. S.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 80-81

SIL FARM—
Eachankottai village, Thanjavur district ... 136-139

SIVASAMI, THIRU M.S.—
Budget, 1968-69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 512-514

SIVASUBRAMANIAN, THIRU S.—
Bhoodan Movement, lands donated in Chidambaram taluk ... ... ... ... ... ... 442-443
Budget, 1968-69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 197-201
Hand Pounding Rice Co-operative Societies, particulars ... ... ... ... ... 150-152
Land Ceiling Act, Surplus lands, Chidambaram Taluk ... ... ... ... ... 572-573
Puthur—M. Kothangudi Road, formation ... 294
S.S.L.C. examination result in 1967 ... ... 6-10

SLUMS—
Vigilance Committees for slum areas in City ... 568-570

SOMASUNDARAM, THIRU N.—
Budget, 1968-69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 223-226

SOUNDARARAJA MOOPANAR, THIRU R.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 108-110

SUBBARAJA, THIRU A. A.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 31
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 508-510
Famine Relief ... ... ... ... 508-510



PAGES

S—*cont.*

SUBBARAJA, THIRU A.A.—*cont.*
Budget, 1968-69, Voting—*cont.*
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... 304, 306, 342-346, 347
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... 158
Failure of monsoons in West Ramanathapuram district, famine relief Measures (C.A.) ... 153

SUBBIAH THIRU A. K.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 32, 78-80
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 459, 490-492
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 305
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... 157
Confectionary factory, Sirkali ... ... ... 25
Drainage Schemes for Thanjavur district ... 559-560
Labour Contract Society, Thanjavur ... ... 437-438
Land Utilisation Order 1961, enforcement ... 438-442
Muthupet Co-operative Urban Bank, misappropriason ... ... ... ... ... ... 292-294
Silk farm at Eachankottai village, Thanjavur district ... ... ... ... ... 136-139
Spinning Mills decision of Mill Owners for closure (A.M.) ... ... ... ... ... 26

SUBBIAH MUDALIAR, THIRU A. R.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 84-86

SUBRAMANIA GOUNDER, THIRU M.—
Budget, 1968-69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 96-97

PAGES

S—*cont.*


SURENDRAN, THIRU M.—
Budget, 1968-69, Voting—
General Sales Tax and other Taxes and Duties Administration Land Revenue Department Famine Relief ... ... ... ... 575
Labour including factories ... ... ... 575
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes Capital Outlay on Road Transport Schemes ... 305
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 195-197

SWAMINATHAN, THIRU V.—
Exotic breeds of cocks, rearing ... ... ... 289-291
S.S.L.C. Examination, result in 1967 ... ... 6-10
Text-books, publication ... ... ... 130-136


T


TANKS—
Percolation—, particulars ... ... ... 561-563

TEXTILES—
'Mohini allowance', revision ... ... ... 143-144

TEXT-BOOKS—
Publication ... ... ... ... ... 130-136

TEXTILES—
Cloth, incentive bonus for export ... ... 553-556
Mill-made, price ... ... ... ... 556-559
Workers, payment of bonus ... ... ... 129-130

THEERTHAGIRI, THIRU N.—
Budget, 1968-69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... .. 215-216

THIPPIAH, THIRU T. T. S.—
Budget, 1968-69, Voting—
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes Capital Outlay on Road Transport Schemes 351-352

TOURISM—
Tourist Homes, Tirunelveli district ... ... 291




PAGES

T—*cont.*


TRANSPORT AND COMMUNICATIONS—
State Transport, advisory committee of private operators, constitution ... ... ... ... 12-13
State Transport Buses, holding up by students at Boothapandi ... ... ... ... 447-448
State Transport Department, loss incurred ... 139-142


V


VARADARAJAN, THIRU N.—
Budget, 1968-69, Voting—
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes Capital Outlay on Road Transport Schemes 305
357-358

VEERAMANI, THIRU C.—
Budget, 1968-69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... ... 216-219

VEERASWAMY, THIRU N.—
Budget, 1968-69, Voting—
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes Capital Outlay on Road Transport Schemes ... 331-334

VINAYAKAM, THIRU K.—
Budget, 1968-69, Voting—
Motor Vehicles Acts—Administration Road Transport Schemas Capital Outlay on Road Transport Schemes ... 306
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... 158, 231-235
Crop Insurance Scheme introduction ... ... 146-149
Hotels and Catering Establishments, weekly holiday ... ... ... ... ... 282-285
Hotels, reduction of Price of foodstuffs ... 285-289
Land Utilisation Order 1961, enforcement ... 438-442
Mill-made textiles, price ... ... ... 556-559
'Mohini allowance' to certain temples, revision. 143-144

PAGES

S—*cont.*

SURENDRAN, THIRU M.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and other Taxes and Duties Administration Land Revenue Department Famine Relief ... ... ... ... 575
Labour including factories ... ... ... 575
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes Capital Outlay on Road Transport Schemes ... 305
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... 195–197

SWAMINATHAN, THIRU V.—
Exotic breeds of cocks, rearing ... ... ... 289–291
S.S.L.C. Examination, result in 1967 ... ... 6–10
Text-books, publication ... ... ... 130–136

T

TANKS—
Percolation—, particulars ... ... ... 561–563

TEXTILES—
'Mohini allowance', revision ... ... ... 143–144

TEXT-BOOKS—
Publication ... ...... ... ... ... 130-136

TEXTILES—
Cloth, incentive bonus for export ... ... 553–556
Mill-made, price ... ... ... ... 556–559
Workers, payment of bonus ... ... ... 129–130

THEERTHAGIRI, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... .. 215–216

THIPPIAH, THIRU T. T. S.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes Capital Outlay on Road Transport Schemes 351–352

TOURISM—
Tourist Homes, Tirunelveli district ... ... 291



PAGES

T—*cont.*

TRANSPORT AND COMMUNICATIONS—
State Transport, advisory committee of private operators, constitution ... ... ... ... 12–13
State Transport Buses, holding up by students at Boothapandi ... ... ... ... 447–448
State Transport Department, loss incurred ... 139–142

V

VARADARAJAN, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes Capital Outlay on Road Transport Schemes 305, 357–358

VEERAMANI, THIRU C.—
Budget, 1968–69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... ... ... 216–219

VEERASWAMY, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes Capital Outlay on Road Transport Schemes ... 331–334

VINAYAKAM, THIRU K.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration Road Transport Schemas Capital Outlay on Road Transport Schemes ... 306
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes ... ... ... 158, 231–235
Crop Insurance Scheme introduction ... ... 146–149
Hotels and Catering Establishments, weekly holiday ... ... ... ... ... 282–285
Hotels, reduction of Price of foodstuffs ... 285–289
Land Utilisation Order 1961, enforcement ... 438–442
Mill-made textiles, price ... ... ... 556–559
'Mohini allowance' to certain temples, revision. 143–144

PAGES.

**V**—*cont.*

VINAYAKAM, THIRU K—*cont.*

Rice mills in Tiruchirappalli and Thanjavur districts ... ... ... ... ... 18–22

State Transport, advisory committee of private operators, constitution ... ... ... 12–13

Textile workers, payment of bonus ... ... 129–130

Vigilance Committees for slum areas in city ... 568–570

VISITS—

Prime Minister—Chief Minister meet at Madurai ... ... ... ... ... 571–572

**W**

WILLIAM, THIRU M.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 99–100

General Sales Tax and Other Taxes and Duties—

Administration, Land Revenue Department, Famine Relief ... ... ... ... 494–495

61437